வெளியீடு—5—1—1972]
Issued—5—1—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

# OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1971 ஜூலை 1

**Thursday 1st July 1971**

தொகுதி V—எண் 1

**Volume V—No. 1**

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9,

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

3859

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

*1st, 2nd, 3rd and 5th July* 1971.

---

Volume V (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS

*Thursday, the* 1st *July* 1971.


| | *Pages* |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | vi-xii |
| 1. Obituary reference— | |
| Rajagopalaswamy Naicker, Thiru R. ... ... | 1 |
| 2. Questions and Answers ... ... ... | 1–25 |
| 3. Privilege matter— | |
| Wrong statement of Thirumathi T. N. Anandanayaki in the House ... ... ... ... | 26–33 |
| 4. Adjournment motions— | |
| (i) Attack on women workers of Sangari Cement Factory ... ... ... ... ... ... | 33–35 |
| (ii) Police interference and lathi charge on striking workers of Coimbatore Chandra Mill ... ... | 35–38 |

63259

PAGES

5. Voting on Demands for Grants for 1971-72—*cont.*
(i) Demand No. 26—Irrigation ... ... ...
(ii) Demand No. 27—Public Works—Works ...
(iii) Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ...
(iv) Demand No. 41—Capital Outlay on Irrigation ... ... ... ... ...
(v) Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... 38-91

6. Announcement—
Arrest of Thiru S. Alagarswamy ... ... ... 87

7. Papers laid on the Table of the House ... ... 92

*Friday, 2nd July* 1971.

1. Obituary reference—
Russia's three Soyuz-II Cosmonauts ... ... 205

2. Questions and Answers ... ... ... 205-233

3. Government Motions—
Election to Board of Management of Agricultural University ... ... ... ... ... 233

4. Announcements—
(i) Election to Board of Management of Agricultural University ... ... ... ... 233-234
(ii) Release of Thiru S. Alagarsamy ... ... 288

5. Voting on Demands for Grants for 1971-72—*cont.*
(i) Demand No. 26—Irrigation ... ...
(ii) Demand No. 27—Public Works—Works ...
(iii) Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant ... ... ...
(iv) Demand No. 41—Capital Outlay on Irrigation ... ... ... ... ... ...
(v) Demand No. 42—Capital Outlay on Public Works ... ... ... ... ... 234-305

6. Papers laid on the Table of the House ... 306-307



PAGES

*Saturday, 3rd July* 1971.

1. Questions and Answers ... ... ... ... 309-333

2. Calling Attention—
(i) Denial of employment and non-payment of salary to workers of Ennore Thermal Boiler Construction ... ... ... ... 333-335
(ii) Lay-off and threatened closure of one shift in certain Mills in Madurai ... ... ... 335-337

3. Announcements—
(i) Message from the Chairman of the Legislative Council *re* Bills passed in the Legislative Council ... ... ... ... 337
(ii) Election to the Senate of the Madras University ... ... ... ... 337-338

4. Government Bill—
The Tamil Nadu Industrial Establishments (National Festival Holidays) Amendment Bill, 1971 ... ... ... ... ... 338

5. Voting on Demands for Grants for 1971-72—*cont.*
(i) Demand No. 14—Medical ... ... ...
(ii) Demand No. 15—Public Health ... ...
(iii) Demand No. 38—Capital Outlay on Public Health ... ... ... ... 338-418

6. Papers laid on the Table of the House ... ... 419

*Monday, 5th July* 1971.

1. Questions and Answers ... ... ... ... 475-500

2. Voting on Demands for Grants for 1971-72—*cont.*
(i) Demand No. 23—Community Development Projects ... ... ... ... ...
(ii) Demanl No. 29—Public Works—*Grants-in-aid* ... ... ... ... ... 501-570

3. Papers laid on the Table of the House ... ... 571

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

### திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம்.

2. **மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, நகராட்சி நிர்வாகம் சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழிலாளர், எழுது பொருள், அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப்பதிவு.

5. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்த வர்கள்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த்துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, வாணிக வரிகள், வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில்துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும், பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித்துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ் சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

**9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத்துறை அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்பு திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

**10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (வேளாண்மைத்துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி.

**11 மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைசச்ர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி இட வசதிக் கட்டுப்பாடு.

**12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சிட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சிங்கோனா.

**13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

**14. மாண்புமிகு திரு. எம். கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான, கிராமதான இயக்கங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU KODARDAS KALIDAS SHAH

---

THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passport, Newsprints Control, Prices and supplies of goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Miister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Miister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistical and Registration.

5. THE HON. THIRU DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. PA. ADITANAR (Minister for Co-operation) : Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Agriculture) : Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Backward Classes) : Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O.P. RAMAN (Minister for Electricity) : Minister in-charge of Electricity, Legislation on Money Lending Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport) : Minster in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments). Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.



**தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.**

**பேரவைத் தலைவர் :**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.**

**பேரவைத் துணைத்தலைவர் :**

**மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்.**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

திரு. மா. வெ. கரிவேங்கடம்.
திருமதி ஜோதி வெங்கடாசலம்.
திரு. நா. வீராசாமி.
திரு. அன்புச்செழியன்.
திரு. என். கே. பழனிசாமி.
திரு. எம். ஏ. லத்தீப்.

**சட்டப் பேரவைச் செயலாளர்.**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்:**

திரு. கு. புஜங்கராவ், பி.ஏ., எல். எல்.பி.

**உதவிச் செயலாளர்:**

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமை கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்) .. | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். செ. வ. |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா, எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. செ. வ. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர். செ. வ. |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி. செ. வ. |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு. செ. வ. |
| 33 இராமன், திரு. மு. .. .. .. | கண்டமங்கலம். செ. வ. |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி. செ. வ. |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வி. கே. .. | கன்னியாகுமரி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 48 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 49 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 50 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 51 கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை |
| 52 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர். [செ. வ.] |
| 53 கருணைநாதன், திரு. சோ. .. .. | சூலூர். |
| 54 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 56 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 57 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 58 கார்த்தீசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 59 காவேரி மணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 60 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 61 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 62 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு. [செ. வ.] |
| 63 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 65 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 66 குப்பல், ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 68 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 69 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 70 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 71 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 72 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர். [செ.வ.] |
| 73 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 74 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 81 சங்கமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி. [செ. வ.] |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ.வ.). |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.). |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 107 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ.வ.). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 113 சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. ஏ. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வி. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. ஏ. | பத்மநாபபுரம் |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ.வ.). |
| 120 செயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம், |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 125 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ.வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை (மேற்கு.) |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்) | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித் தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ரம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி, திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கிடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம், |
| 153 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 154 | நாச்சியப்பன், திரு. ந. | சங்காரபுரம். |
| 155 | நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 | நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 157 | நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 158 | பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 | பத்மாவதி, திருமதி எ. கோ. | முகையூர். |
| 160 | பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 | பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 162 | பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 | பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 | பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துரை. |
| 165 | பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 | பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.). |
| 167 | பழனியப்பன், டாக்டர், ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 | பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 | பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 | பழனிவேலு, திரு. வி. | ஆத்தூர். |
| 172 | பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 | பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 174 | பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 175 | பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 | பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 | பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 178 | பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 | பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 180 | பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 | பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 | பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 183 | பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 | பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 | பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 | பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 187 | மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 | மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 | மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 | மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 191 | மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 | மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 | மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 194 | மாணிக்கம், திரு. என். | பெண்ணாகம். |
| 195 | மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 | மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 | மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 | மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 199 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 | முகமது காதர் மூகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 | முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 | முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 203 | முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 | முத்துச் செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 | முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 206 | முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 | முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 | முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 | முனியாண்டி திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 210 | முனு ஆதி திரு. மு. | திருப்போரூர். |
| 211 | முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 | மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 | மோசஸ், திரு. ம. | நாகர்கோவில். |
| 214 | ரங்கனாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 | ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 | ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 217 | ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 | இராஜா திரு. எ. எம். | பவானி. |
| 219 | ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 | ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 | லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 | வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 | வடிவேலு, திரு. சீ. க. | தோட்டியம். |
| 224 | வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 225 | விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 | வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 | வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 | வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 | வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 திரு. கோவிந்த சுவாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

*வியாழக்கிழமை, 1971 ஜூலை 1.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். ராஜகோபால சுவாமி நாயக்கர் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையில் 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த திரு. ஆர். ராஜகோபாலசுவாமி நாயக்கர் அவர்கள் 29—6—1971 அன்று மறைந்ததைக்குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

### 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 96, 97 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

*Wine factory for Dharmapuri district*

98 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to start a wine factory in Dharmapuri district; and

(b) if so, when it will be started?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in view of the fact that grapes are largely grown in Krishnagiri and Hosur taluks in the Dharmapuri district, may I request the Hon. Minister for

[1971 ஜூலை 1

Industries to take this favourable factor into consideration and give preference to Dharmapuri district in the matter of starting a Wine Factory there?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டு பல பேர் மனுச் செய்திருக்கிறார்கள். அந்த மனுக்களின் மீது இறுதியான முடிவு செய்வதற்கு முன்னால் எந்த இடத்தில் வைக்கலாம் என்பது யோசிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** திராட்சையிலிருந்து ரசம் எடுத்து மது தயாரிப்பதற்குப் போதுமான திராட்சைகள் நம்முடைய மாநிலத்தில் பயிரிடப்படுகின்றனவா? நம் மாநிலத்தில் எவ்வளவு உற்பத்தியாகின்றது? அம்மாதிரியான தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படிப்பட்ட வாய்ப்பு இருப்பதாகத்தான் பல பேர் மனுச் செய்திருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் இருப்பதாகவும், தருமபுரி மாவட்டத்தில் இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி நாம் முடிவு செய்யும்பொழுது எந்த இடத்தில் என்பதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுரை மாவட்டத்தில் திராட்சை அதிகமாக உற்பத்தி ஆகிறது என்றும், ஒரு ஒயின் பாக்டரியை ஆரம்பிக்க வேண்டும் என்றும் லைசன்ஸுக்காக கோரியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அப்படியானால் அது சம்பந்தமாக நமது அரசு எப்போது முடிவு எடுக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்வதற்காக தொழிற்சாலைகளை அனுமதிக்கிறோம், என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இப்பொழுது நாம் மதுவிலக்கை எடுத்துவிட இருக்கிற காரணத்தினாலே இந்தப் புதிய சட்டம் வந்ததற்குப் பின்னால், புதிய சட்டத்தின் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். அனுமதி வழங்கும்போது எந்த இடம் என்பதை முடிவு செய்யலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தமிழகத்தில் உற்பத்தி ஆகின்ற திராட்சையில் ஒரு பகுதி ஒயின் தயாரிப்பதற்குத் திருப்பி விடப்படும்போது அதனால் மக்கள் உட்கொள்ளுவதற்குக் கிடைக்கும் திராட்சையின் அளவு குறையாதவகையில் திராட்சை உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் உறுதிசெய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படித் தொழிற்சாலை வருகின்ற காரணத்தினாலேயே திராட்சை உற்பத்திப் பெருகும் என்று தான் எதிர்பார்க்கிறோம்.



1971 ஜூலை 1]

**வடாற்காடு மாவட்டத்தில் புது சர்க்கரை ஆலைகள்.**

***99 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கும் இரண்டு சர்க்கரை ஆலைகளையும் வெவ்வேறு வட்டத்தில் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த வட்டங்களில்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) இடம் தெரிந்தெடுக்கும் குழு, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ வடாற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் அம்முண்டி கிராமத்தில் உள்ள திருவலம் என்ற இடத்தையும், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம் கேதண்டபட்டி என்ற இடத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது.

**திரு. கே. ஏ. வகாப்:** அமைச்சரவர்கள் இரண்டு இடங்கள் குறிப்பிட்டார்கள். இந்த இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு வாலாஜாவில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவேண்டும் என்று முதன்முதலில் முடிவு செய்யப்பட்டிருந்ததா? அதற்குப் பிறகு இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நீண்ட நாட்களுக்கு முன்னால் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கலாம் என்று அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தத்திற்குப் பக்கத்தில் பிரம்மபுரம் என்ற இடத்தில் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை அமைக்கலாம் என்ற முடிவை அவர்கள் எடுத்திருந்தார்கள். திருப்பத்தூர் தாலுக்காவில் ஆம்பலூர் என்ற இடத்தையும் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ஆனால், அனுமதி வந்ததற்குப் பின்னர் அந்த இடங்களை மறுபரிசீலனை செய்து, ரொம்பதூரம் தள்ளிவிடாமல்—பக்கத்திலேயே—அந்த மாவட்டத்திலேயே இருக்கவேண்டுமென்று இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். முருகையன்:** இந்த இரண்டு ஆலைகளுக்கும் இதுவரையில் எவ்வளவு பங்குத்தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது? அவை எப்பொழுது வேலை செய்யத் துவங்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விவரங்களை வெளியிட்டால், மாண்புமிகு உறுப்பினர் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாக ஒத்துழைக்கவில்லையோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிடும். ஆகவேதான் மிகக்குறைவாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உருவாவதற்கு ஏராளமாகப் பணம் வசூலித்துக்கொடுக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சந்தர்ப்

பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட முயற்சி எடுக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : குறிப்பிட்ட இடங்களில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருந்தால், அந்த மாவட்டத்திலேயே வேறுபகுதிகளில் பங்குத்தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டால் அந்த இடங்களுக்கு, குறிப்பாக வந்தவாசி போன்ற தாலுக்காக்களில் வசூலித்துத்தருகிறார்கள் என்றால் அங்கே மாற்றித்தருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பங்குத் தொகையை மட்டும் நாம் கணக்கிட முடியாது. குறைந்தபட்சம் 5,000 முதல் 8,000 ஏக்கர் வரை பரப்புள்ள கரும்பு பயிரிட வாய்ப்புள்ள இடமாக இருக்க வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு 'ஏரியா' என்று நிர்ணயிக்கிறோம். அதிலே நல்ல பொருத்தமான இடத்தை நாம் தேர்ந்தெடுக்கிறோம். அந்தப் பகுதியில் தொழிற்சாலை இருந்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அக்கறை ஏற்படும், அவர்கள் தொடர்ந்து கரும்பு பயிரிட்டு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கவும் வாய்ப்பு இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. அந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் இதற்கு முன்வரவேண்டும்.

பேரூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* 100 வினா—திரு. என் மருதாசலம், திரு. சு. துரைசாமி, } மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை—மேட்டுப்பாளையம் சாலையில் அவினாசி வட்டத்திலுள்ள காரமடையில் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

திரு. என். மருதாசலம் : கோவை மாவட்டத்தில் பேரூரில் பெரும்பாலும் கரும்பு சாகுபடி செய்யக்கூடிய இடங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலில் அறிக்கை தயாரித்தபோது பேரூரில்தான் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், மறுபரிசீலனை செய்ததில், முக்கியமாகத் தண்ணீர் தேவைப்படுகிற காரணத்தால், போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டுமானால் பவானி ஆற்றுக்குப் பக்கத்தில் உருவாக்கலாம் என்று, இரண்டு இடங்களைப் பார்க்கும்போது, ஓரிடம் காரமடையில் வைக்கலாம் என்று கருதப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் வேறு இடத்தில் வைக்கல





என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் அறநிலைய அமைச்சர் அவர்களும் இந்த இடங்களை மீண்டும் பரிசீலித்து ஒரு முடிவு எடுப்பார்கள்.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் இருக்கும் காரமடையில் வைப்பதால் பிற்காலத்தில் போக்குவரத்துச் செலவு அதிகமாவதோடு மற்றக் காரியங்களுக்கும் ஏது குறைவாக இருக்குமென்பதை அமைச்சர் அறிவாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு இடங்களையும் நானே சென்று பார்த்தேன். இரண்டு இடங்களுக்கும் இடையே உள்ள தூரம் இரண்டு மைல்தான் என்று சொல்கிறார்கள். இரண்டு மைல் இருப்பதால் ஒரு இழப்பு ஏற்பட்டுவிடும் என்று நான் கருதவில்லை. பெரியநாயக்கன்பாளையத்துக்குப் பக்கத்தில் சென்று பார்த்தபோது கட்டடம் கட்ட இலாயக்கில்லாத இடமாக, மேடு பள்ளம் நிறைந்த இடமாக—பக்கத்திலே கிணறு தோண்டப்பட்டும் கிணற்றில் தண்ணீர் இல்லாத சூழ்நிலையையும் நான் பார்த்தேன். இதையெல்லாம் சொல்லுகிற காரணத்தால் அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாக நினைத்துவிடக் கூடாது. அவர்கள் மீண்டும் பரிசீலித்து எது நல்ல இடமோ அதைப் பார்க்க வேண்டும். போக்குவரத்துச் செலவைப்பற்றி ஆராய்ந்தோம். இரண்டு மைல் தூரம் மட்டுமல்லாமல், நமக்கு முதலில் 15 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவு வருகிறது, தண்ணீர் எடுத்துச்செல்ல. அந்தச் செலவைக் குறைப்பதற்கு, காரமடைக்குப் பக்கத்தில் வேறு தண்ணீர் வசதி உள்ள நல்ல இடமாகக் கொடுத்தால் மாற்றுவதில் ஆட்சேபணை இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தக் காரமடையிலே அமைக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் கோவை பேரூர் பகுதிக்கும், அதே நேரத்தில் கோவையின் தென் பகுதியிலே ஏராளமான கரும்பு உற்பத்தியாகிறது. ஆனால் அதற்கும் இதற்கும் 8 மைல், 10 மைல் தூரம் இருப்பதால் அதை மீண்டும் புனர் பரிசீலனை செய்து பேரூரில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 8 மைல், 10 மைல் என்பது ரொம்ப சாதாரணம். ஒரு ஆலைக்கு அது பெரிய பளு அல்ல. ஆனால் பேரூரிலே பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டும். அதற்கு ஏராளமான செலவு வரும் என்று கணக்கிடப்படுகிறது. வேறு தண்ணீர் வசதி உள்ள இடம் கிடைத்தால் ஆட்சேபணை இல்லை. வைக்கவேண்டுமென்று இந்த ஏரியாவை அலாட் செய்திருக்கிறோம். அந்தப் பகுதியிலே வைக்கவேண்டுமென்பதுதான் உண்மை. அதிலேயும் இந்த இடம் நடுமையமாக இருப்பதால் போக்குவரத்துச் செலவும் பெருகும் என்பது உண்மை. ஆனால் தண்ணீர் வசதி இல்லாவிட்டால் ஆலையே நடைபெறாமல் போகக்கூடும்.

[1971 ஜூலை 1

திரு. சோ. கருணாநாதன் : தலைவரவர்களே, ஏற்கனவே அமைக்கப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இலாபத்தோடு நடைபெறுகிறதா, அல்லது நஷ்டத்தில் நடைபெறுகிறதா என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் 6 ஆலைகளை இப்பொழுது நடத்தி வருகிறோம். அந்த 6 ஆலைகளிலே கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல முன்னேற்றத்தைக் கண்டு வருகிறோம். அதுவும் கடந்த ஆண்டுதான் நம்முடைய சர்க்கரை ஆலைகளிலே பொதுவாக ரெக்கவரி கிட்டத்தட்ட 9 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இதே அளவில் ரெக்கவரி கிடைத்தால் லாபத்தோடு நடைபெற வாய்ப்பு உண்டு. அதுமட்டுமல்ல, மத்திய சர்க்கார் விலையை நிர்ணயிக்கும்பொழுது ரெக்கவரியின் அடிப்படையில் இருக்கிறது. ரெக்கவரியைக் குறைத்து அதன்மேல் விலையை நிர்ணயித்தால் லாபம் இருக்கும். ஆனால் அதனால் மராட்டிய மாநிலத்திற்கு நஷ்டமாகும். ரெக்கவரியைக் குறைவாக வைத்து விலையை நிர்ணயம் செய்தால் நம்மைப்போன்ற மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளை லாபத்தோடு நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கும். இதையெல்லாம் நாம் எடுத்துக் கூறி வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சர்க்கரை உற்பத்தியாகித் தேங்கிக் கிடப்பதாகவும், கரும்பு விவசாயிகளுக்கு சரியாக சர்க்கரை ஆலை நிர்வாகிகள் பணம் தரவில்லை என்றும் நேற்று முன்தினம் இங்கே கூறப்பட்டது. அப்படியிருக்கும்பொழுது மேலும், மேலும் இதுபோன்ற ஆலைகளை உண்டாக்குவது நம்முடைய மாநிலத்திற்கு உதவிகரமாக இருக்குமா என்பதை அரசு சிந்திக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சர்க்கரை உற்பத்தி எவ்வளவு தேவை, நம்முடைய நாட்டிற்கும், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் எவ்வளவு தேவை என்று கணக்குப்பார்த்து மத்திய சர்க்கார் அதற்கு அனுமதி தருகிறார்கள். சர்க்கரை ஆலைகள் தேவை என்பதில் ஆட்சேபணை இல்லை. இடைக்காலத்தில் இப்படிப் பட்டதொரு கஷ்டமான நிலை சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்பட்டது. மத்திய சர்க்கார் பிடிவாதமாக மராட்டிய மாநிலத்திற்குச் சலுகை காட்டும் நோக்கத்தோடு செய்து வருவதாக நாங்கள் குற்றம் சாட்டுகிறோம். மராட்டிய மாநிலத்தில் ஏராளமான ரெக்கவரி இருப்பதால் விலை குறைவாகயிருந்தாலும் அவர்கள் ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆனால் தமிழ்நாடு போன்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால் ரெக்கவரி குறைவாக இருக்கிறது. நல்லவேளையாக இந்தக் கண்ட்ரோலை எடுத்துவிட்டால் அலாட் செய்தயிடத்தில்தான் விற்க வேண்டுமென்ற நிலையில்லாமல் அதை ஓரளவு தளர்த்தியிருப்பதால் எங்கே வேண்டுமானாலும் விற்க வாய்ப்பிருக்கிறது. எக்சைஸ் ட்யூட்டியையும் ஒரேமாதிரியாக்கியிருக்கிறார்கள். ஓரளவிற்கு அந்தப் பளு இல்லாமல் குறைந்து வருகிறது.



1971 ஜூலை 1]

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply was saying that the position has eased after the controls had been removed and the whole country had been made into one area for free sale or sugar. May I know from the Hon. Minister the number of days since this particular rule had come into operation, large amounts of stock of sugar had been lying idle in several godowns and when there had been increased sale of these things? Had the position eased and may I know the details from the Hon. Minister?

* மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அதனுடைய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறையானாலும்சரி, தனியார் துறை சர்க்கரை ஆலைகளின் சொந்தக்காரர்களை நான் சந்தித்துப் பேசியதிலே அவர்கள் இந்த உத்தரவு வந்ததற்குப் பிறகு—சில நாட்களுக்கு முன்பு வந்தது—வந்ததற்குப் பிற ஏராளமான சர்க்கரையை விற்க முடிந்தது என்று சொல்கிறார்கள். அதில் உண்மை இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதற்குக் காரணம், இதற்கு முன்னாலே சென்னையிலிருந்து ஆந்திராவிற்கு—ஆந்திராவில் ஏற்கனவே சர்க்கரை இருக்கிறது, இருந்தாலும்—சென்னையிலிருந்து ஆந்திராவிற்குக் கொடுக்கவேண்டுமென்று, பீஹாருக்குக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டதால் அவர்கள் இந்தச் சர்க்கரையை வாங்க மறுப்பார்கள். அப்படி மறுத்துவிட்டால் அதை என்ன செய்வது என்பதுபற்றி மத்திய சர்க்காரிடத்திலிருந்து பதில் இல்லை. இப்பொழுது அந்த நிலை மாற்றப்பட்டிருக்கிறது எங்கே வேண்டுமானாலும் விற்பதற்கு வாய்ப்பிருக்கிறது. நான் முன்னாலே சொன்னபடி எக்சைஸ் வரியும் குறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, சர்க்கரை ஆலைகளைப் பெரிய ஆலைகளாக அமைப்பதற்குப் பதிலாக சிறு சிறு அளவில் கண்டசாரி சர்க்கரையை உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளை ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகளைப் பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி நடத்தியதா? அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லோரும் எடுத்துக் காட்டியதுபோல இப்பொழுதுள்ள பிரச்னை உற்பத்தியாகும் சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான். கண்டசாரி சர்க்கரையிலே, பொருளாதாரக் கண்ணோட்டத்தில், எக்கனமிக் வயபிலிட்டியைப் பொறுத்தவரையிலே சரியாக வரவில்லை. இந்த அரசாங்கம் கண்டசாரி விஷயத்தைக் கூடிய அளவிற்குக் கடைப்பிடிக்காமல் இருப்பதுதான் நல்லது என்று கருதுகிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே; நம்முடைய மாநிலத்தில் பல ஆலைகள் இருக்கும் பகுதிகளில் ரெக்கவரி குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ரெக்கவரியை அதிகப்படுத்த கரும்பு ஆராய்ச்சிப் பிரிவிலே ஏதாவது அராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படியானால் அதன் முடிவு என்ன என்று அறிவிப்பார்களா?

[1971 ஜூலை 1

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதை நம்முடைய விவசாய அமைச்சரவர்கள் பார்த்துக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது நாம் அந்த ஆராய்ச்சியை வேளாண்மைத் துறையின் மூலமாக நடத்துகிறோம். அதன் விளைவாகத்தான் சென்ற ஆண்டு தமிழகத்தில் ரெக்கவரி 9 சதவிகிதம் வரை சென்றிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த ரெக்கவரி குறைவதற்குக் காரணம் இயந்திரங்களின் பாகங்கள் தேய்ந்துவிடுவதால் அப்படியிருப்பதாக ஒரு கருத்து இருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கப்படும் ஆலைகளில் 11%, 12% வரை ரெக்கவரி வருகிறது என்று தெரிகிறது. பழைய ஆலைகளில் 5½%, 6% தான் வருகிறது. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே இதை அடிப்படையாகக் கொண்டு வருஷா வருஷம் இயந்திரங்களைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெரும்பாலான புதிய ஆலைகளிலே நான் கேள்விப்பட்டவரையிலே கிளைமேட்டிக் கண்டிஷன்ஸ், இந்த கண்டென்ட் ஆஃப் ஷுகர் அதிகப்படுத்தவும் அத்தகைய பருவநிலை அமைய வேண்டுமென்று சொல்வது உண்மை. ஆனால் தமிழ்நாடுப் பருவநிலையிலே புதிய கரும்பு ரகங்களை அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்வதுதான் நம்முடைய முதல் முயற்சியாக இருக்க வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், தமிழ்நாட்டில் ரெக்கவரி குறைவாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் அதைவிடக் குறைவாகத்தான் பீஹாரிலே, உத்திரப்பிரதேசத்திலே இருக்கிறது. தமிழ்நாடு, ஆந்திரா, மராட்டியத்தில் ஓரளவு ரெக்கவரி அதிகமாக இருக்க, இம்மாதிரிக் குறைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும் இந்தத் தனியார் நிர்வாகத்தை அரசு ஏற்று நடத்த ஏதாவது முயற்சியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியார் மட்டும் சொல்லவில்லை, கூட்டுறவுத்துறையும் அதையேதான் சொல்லுகிறது. இதில் தனியார் ஆலையா, கூட்டுறவுத்துறை, அரசுத்துறையா என்ற போராட்டம் எழவில்லை. அது உண்மையாக இருக்கலாம், ஏராளமான அளவில் உற்பத்தி செய்கிறார்கள், அது சரியாக விற்கப்படாமல் போகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, புதிய புதிய சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவதால் அதிகமான கரும்பு, வணிகப்பயிராகிய கரும்பு, பயிரிடப்படுவதால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பதை இந்த அரசு அறியுமா? அதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்படாத வகையில் இந்த வணிகப் பயிர்களைக் கட்டுப்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டிலே கடந்த நான்காண்டுக் காலமாக உணவு உற்பத்தியும் பெருகி, கரும்பு



1971 ஜூலை 1]

உற்பத்தியும் பெருகியிருந்த காட்சி இப்படிப்பட்டதொரு கூற்று சரியல்ல என்பதை நிரூபிக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த ரெக்கவரிக் குறைவைப்பற்றிப் பல காரணங்களைச் சொன்னார்கள். ஆனால் உண்மையான காரணம் விவசாயிகளிடத்தில் பதிவு செய்யப்படும்பொழுது 12 மாதங்கள் என்று பதிவு செய்துவிட்டு, 13, 14 மாதங்களிலே ஆலைகள் எடுத்துக்கொள்ளும் தாமத நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட தாமத நிலை போக்கப்படுமா? வட நாடுகளில் கரும்பு ரெக்கவரி குறைவாகயிருந்தாலும் டன் ஒன்றுக்கு 100 ரூபாய்வரை கிடைக்கக் கூடிய அளவிலே இருக்கிறது. இங்கே அதிகமாக ரெக்கவரியிருந்தாலும் குறைவான விலையைக் கொடுக்கிறார்கள். எனவே விலையை அதிகரித்து விவசாயிகளுக்கு அதிக விலையை வாங்கிக்கொடுக்க இந்த அரசு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஆலைகளுக்குக் கரும்பு கொடுப்பதைப்பற்றி விதிமுறைகளெல்லாம் அமைந்திருக்கிறது. அதன்படி எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் சில நேரங்களில் பதிவு செய்தவர்கள் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள், பதிவு செய்யாதவர்கள் கொடுக்கவிரும்புகிறார்கள். இந்த மாற்றம் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளும், ஆலைகளும் சீரிய முறையிலே ஆண்டுதோறும் விடாது கூட்டு மனப்பான்மை கொண்டிருந்தால் நல்லது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் வெல்லத்திற்கு விலை உயரும்பொழுது கரும்பைக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, கூட்டு மனப்பான்மையிருந்தால் சிக்கல் அகற்றப்படும்.

மற்ற மாநிலங்களில் விலை கூடுதலாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். எனக்கு அந்த விவரம் இல்லை. பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும் விலை நிர்ணயிக்கப்படுகிறது. அதிலே சில மாநிலங்களில் அதிகமாக ரெக்கவரியிருந்தால் சுலபமாக விற்பதற்கு வாய்ப்பிருக்கிறது. நம்முடைய மாநிலம் அந்தச் சூழ்நிலையில் இல்லை. ஆகவே விலையைப்பற்றி நம்முடைய மாநிலத்திலே சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டுகூட 90 ரூபாய், 95 ரூபாய் என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் 20 ரூபாய், 25 ரூபாய் கிடைக்கக்கூடிய நிலை இருந்திருக்கிறது. எப்பொழுது எப்பொழுது இலாபம் வரக்கூடுமோ அப்பொழுது இந்த அரசு அமைச்சரவை அளவிலே கூடிப் பேசி விலையை ஏராளமாக விவசாயிகளுக்கு வாங்கிக்கொடுப்பதில் முயற்சி எடுத்து வருகிறது.

**திரு. கா. காளிமுத்து:** தமிழகத்தில் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் எவ்வளவு இருக்கின்றன? அவற்றை அரசு ஏற்றுக் கொள்ளும் நிலை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியார் துறை சர்க்கரை ஆலைகள் எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் இல்லை.

[1971 ஜூலை 1

## Cigarette unit in Tamil Nadu.

* 101 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a State owned Cigarette Unit in the State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழக அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மத்திய அரசு சிகரெட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை தமிழ் நாட்டில் நிறுவுவதற்கு பூர்வாங்க அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நேற்று இந்த மானியத்தில் விவாதம் நடந்தபோது நமக்குக் கொடுத்த புத்தகத்திலே—

"The Tamil Nadu Industrial Development Corporation has made application to the Government of India for issue of letters of intent for setting up of fourteen industries in Tamil Nadu. Letter of intent has since been received for setting up this cigarette factory".

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிகரெட் பாக்டரி அமையும் என்னும்போது அது பொதுத் துறையில் அமைக்கப்படுகிறதா? எந்த இடத்தில் என்று நிச்சயம் செய்து விட்டார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சிகரெட் உற்பத்தியைப் பொறுத்தவரை வியாபாரம் நடக்க வேண்டும். பிராண்ட்தான் முக்கியம். யார், யார் ஏற்கனவே பிராண்ட் வைத்திருக்கிறார்களோ அவர்களோடு சேர்ந்து செய்தால் விற்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்னும் கருத்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலுள்ள இரண்டு பெரிய கம்பெனிகள் அப்படிப்பட்ட முயற்சிக்கு ஒத்துழைப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். என்ன அடிப்படையில் ஒத்துழைப்புத்தர வருகிறார்கள் என்பதையெல்லாம் பரிசீலித்ததற்குப் பிறகு முடிவு செய்யப்படும். எந்த இடம் என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யவில்லை. சில மாவட்டங்களில் சிகரெட் தயாரிப்பதற்கான உயர்தர புகையிலை பயிரிட வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கு தருமபுரி மாவட்டம் பொருத்தமாக இருக்குமென்று தெரிகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** சமீபத்தில் மத்திய அரசு இந்த சிகரெட்டுகளுக்கு அதிகமான வரி விதித்து விட்டதால் சிகரெட் உபயோகிப்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, புதிய சிகரெட் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் அரசு விலை மலிவான சிகரெட்டுகளை உற்பத்தி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எனக்கு இதில் அனுபவம் இல்லை. பத்திரிக்கையில் பார்க்கும்போது ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கை வரும்போது இப்படி ஒரு பிரசாரம் செய்யப்படும். அறிக்கை வந்த பிறகு பிரசாரத்திற்குப் பலன் இல்லாமல் போய் விடும். சிகரெட் பிடிக்கின்றவர்கள் வரி போட்டதால் அதை நிறுத்திவிட்டதாக எனக்குத் தெரியவில்லை.



1971 ஜூலை 1]

**திரு. பெ. மலைச்சாமி:** தமிழ்நாட்டில் சிகரெட் பிடிப்பவர்களை விட பீடி பிடிப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே பீடித் தொழில் வளர்ச்சியில் சர்க்கார் அதிகமான அளவு அக்கறை காட்டுமா? திரைப்பட அரங்குகளில் புகை பிடிக்கக் கூடாது என்று போட்டிருந்தாலும் அது தோல்வியுற்றது அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்டத்தைத் தளர்த்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திரைப்பட அரங்குகளில் புகை பிடிப்பதை குறிப்பிட்ட நோக்கில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அங்கு இருப்பவர்களுடைய சௌகரியத்திற்காக இது செய்யப்பட்டிருக்கிறது. பீடித் தொழிலைப் பொறுத்த அளவில் தமிழ்நாட்டில் நல்ல வளர்ச்சி இருக்கிறது. என்ன வகையில் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமோ அந்த வகையில் உற்சாகப் படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. நா. வீராசாமி:** தமிழ்நாடு அரசு சிகரெட் தொழிற்சாலை துவக்குவதற்கான ஒப்புதல் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு மூலதனத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறார்கள்? அந்தத் தொழிற்சாலையில் ஏழைகள் பயன்படுத்தும் மலிவான சிகரெட்டுகள் தயாரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 4,500 மிலியன் பீஸஸ் ஆஃப் சிகரெட் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 240 லட்சம் ரூபாய் அதற்குத் தேவைப்படலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன்:** சிகரெட் பிடிப்பதால் புற்று நோய் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி ஒரு கருத்து பரவலாக இருந்து வருவது உண்மை. ஆனால் சிகரெட் பிடிப்பதால்தான் புற்று நோய் வருகிறது என்று யாரும் அறுதியிட்டுக் கூறவில்லை. உண்டென்பாரும் உண்டு. இல்லையென்பாரும் உண்டு.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** சிகரெட் தயாரிப்பதற்கான மூலப் பொருள் புகையிலை எந்தெந்தப் பகுதியில் மிகுதியாகப் பயிரிடப் படுகிறது? கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் புகையிலையை அதிகமாகப் பயிர் செய்து வந்தார்கள் இப்போது அதற்கு விலை கட்டுபடியாகக் கிடைக்காத காரணத்தாலும் உற்பத்திச் செலவு அதிகமாகும் காரணத்தாலும் புகையிலை பயிரிடுவது குறைந்திருக்கிறது. அதை ஊக்குவிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சாதாரணமாக உற்பத்தியாகிற புகையிலை சிகரெட் தயாரிக்கப் பயன்படாது. இதற்கு உயர்ந்த ரகப் புகையிலை தேவைப்படுகிறது. ஆகவே, அதற்குத் தகுந்த நிலமாகப் பார்க்க வேண்டும். அரசுக்குக் கிடைத்திருக்கும் தகவல் படி தர்மபுரி மாவட்டத்தில் வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. அரசு பூரணமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** சிகரெட் பிடிப்பதால் லங் கான்சர் வரும் என்று அமெரிக்காவில் சிகரெட் பெட்டிகளில் எச்சரிக்கை செய்யும் அறிவிப்புக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அப்படி சிகரெட் பிடிப்பதால் உடல் நலம் கெடுகின்ற நிலையில் இருந்து இந்த மாநிலத்தின் மக்களைப் பாது காக்கும் வகையில் சிகரெட் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் எண்ணத்தைக் கைவிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அப்படி ஒரு தகவல் நானும் கேள்விப்பட்டேன். குடிப்பதால் எற்படும் கெடுதல் வேறு, அதனை உற்பத்தி செய்வது வேறு. நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தி செய்தால் பணமாவது நமக்குத் தங்கும். குடிப்பது வேறு, தொழிற்சாலை வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்வது வேறு.

THIRU K. S. KOTANDARAMIAH : Sir, Virginia tobacco of the highest quality which is required for the manufacture of cigarettes is grown in Hosur Taluk of Dharmapuri District Recently the Director of Tobacco who came to Hosur has also stated that Hosur taluk has a bright future in this regard. Further, a tobacco research-sale unit has been started in Hosur. Considering these advantageous factors that Hosur taluk commands, will the hon. Minister for Industries give preference to Hosur taluk in the matter of starting a cigarette factory?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கருத்தாக்கனை ஏற்றுத்தான் முதலிலேயே சொன்னேன். அதுபற்றிப் பரிசீலனை செய்யப் படுகிறது.

**மாநில கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

* 102 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநில கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகாரப்பற்றற்றவர்களுக்குப் பதிலாக அதிகாரிகளை நிர்வாகிகளாக போட்டிருக்கிறார்களா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) அதிகாரப் பற்றற்றவர்கள் சென்னை மாநில கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையக் கூட்டுறவுச் சங்கத்தை சரிவர நிர்வகிக்கவில்லை. அவர்களை மாற்றியமைக்க தக்க தகுதியுடையவர்களும் முன்வரவில்லை. அந்த சங்கத்தின் நஷ்டம் ரூ. 4 லட்சத்திற்கு மேல் போய்விட்டது. சங்கத்தை சீர்படுத்த அதிகாரிகளை நிர்வாகிகளாக அரசு நியமித்திருக்கிறது. இது ஒரு இடைக்கால அமைப்பு. நிலைமை சீர்படுத்தப்பட்ட பின் அதிகாரப்பற்றற்றவர்களும் நிர்வாகிகளாக நியமிக்கப்படுவார்கள்.





**திரு. கே. ஏ. வகாப் :** அரசு தனியாக கைவினை விற்பனைப் பொருள்கள் கூடம் நடத்துவதால் கூட்டுறவுத் துறையில் நடத்தப் பெறும் இந்த விற்பனை நிலையம் நஷ்டத்தில் நடக்கிறது என்பதை அரசு அறியுமா ? இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவுத் துறையில் நடத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழக அரசைப் பொறுத்த வரை மாநில அளவில் இது ஒன்றைத் தவிர வேறு அமைப்பு கிடையாது. மாவட்ட அளவில் டிப்பார்ட்மென்டல் எம்போரியம் வைத்திருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற பொருள்களை விற்பதில் தலைமைச் சங்கம் ஈடுபட்டு செயல்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். கனம் அங்கத்தினர் சொன்னதுபோல் இதிலுள்ள சிரமங்களைப் பரிசீலித்து ஹாண்டிகிராப்ட்ஸ் பொறுத்த அளவில் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் என்ன மாற்று முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று ஆராய்ந்து வருகிறது.

திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

* 103 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள சேல்ஸ் சொசைட்டி எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) 15—6—1967-ம் தேதி வரை இந்த சொசைட்டி எத்தனை முறைகள் தணிக்கையும் சோதனையும் (Audit and Inspection) செய்யப்பட்டுள்ளது ?

(உ) இந்தச் சோதனைகளின் மூலமாக குற்றங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) திருப்பூரில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1921-ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

(இ) தொடங்கப்பட்ட நாள் முதல் 15—6—1967 வரை இக்கழகம் 46 முறை தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கழகத்தைப் பார்வையிடும் பணி குறித்த காலத்திற்கு ஒரு முறை செய்யப்பட்டதா என்று தெரியவில்லை.

(உ) ஆம்.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, மேற்படி கூட்டுறவுச் சங்கத்திலே ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் வரையில் பொது மக்களின் பணத்தை எடுத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பணம் இதுவரையில் வசூல் செய்யப்படவில்லையே. அதற்கு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அதற்கு முன்னால் இருந்த நிர்வாகிகள் பொறுப்பு என்று கண்டுபிடிக்கப்பட்டு, இப்போது ஏறத்தாழ ரூ. 15,000 வரையில் வசூலாகி இருக்கிறது. பழைய தலைவரின் சொத்துக்களின் மேல் நடவடிக்கை எடுத்ததில் இவ்வளவு தொகை வசூலாகி இருக்கிறது. மேலும் கிரிமினல் நடவடிக்கைகள் பீனல் கோடு 403, 406 பிரிவின் கீழ் எடுக்கப்பட்டு, இப்போது பல்லடம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு நடைபெறுகிறது.

*திரு. கே. ஏ. வகாப் :* தலைவர் அவர்களே, இதே மாதிரி கடைய நல்லூரிலே உள்ள கூட்டுறவு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. இது திருப்பூரைப் பற்றிய கேள்வி.

**திரு. கே. ரங்கநாதன் :** கடந்த பத்து ஆண்டுக் காலமாக கோவையில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. திருப்பூரைப் பற்றித்தான் கேட்கவேண்டும்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள அதிகாரிகள் சரியாக வேலை செய்யவில்லை என்பதால் இப்போது புதிய அதிகாரிகள் போட்டு இருக்கிறார்கள். தனி அதிகாரி போட்டு தற்போது இன்னமும் அந்த ரூ. 2 லட்சம் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. அதைத் துரிதப்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

*Building for Tamil Nadu Co-operative Union*

* 104 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Registrar of Co-operative Societies has written a letter to the Tamil Nadu Co-operative Union on or about May 1963 pointing out several irregularities in the matter of the construction of the building of the Tamil Nadu Co-operative Union; and

(*b*) if so, the action taken by the Registrar against those responsible for the mismanagement?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளரால் சுட்டிக்காட்டப்பட்ட மறுப்புரைகளில் ஒன்றைத்தவிர மற்றவை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட்டது. நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையிலும், அந்தக் குற்றச்சாட்டுகளைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



Dr. H. V. HANDE: Sir, may I know whether it is not a fact that the Registrar has pointed out that the unauthorised advance of over Rs. 2 lakhs to the contractor was irregular and that a supplementary contract has not been entered into with the contractor which is highly irregular and this has also led to a heavy loss to the Union and if so, whether the whole thing has been regularised and what is the action taken by the Government ?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: Several irregularities were pointed out by the Registrar on the basis of the Audit Report. Then, action was taken and explanations were called for. Several of these matters were found to be not real irregularities. Some of them were not material.

With regard to the supplementary agreement mentioned by the hon. Member it was entered into actually in 1963 and further enquiries were also pursued. It related to the construction of a safe vault in the Union building. As I have stated, further enquiries were conducted and the matter has been closed. The matter arose in 1962 or 1963 and it is now eight years since the matter was raised. It has been decided that no further action is necessary.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்தக் கட்டடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு ? இந்த இர்ரெகுலாரிடீஸ்-ஆல் எவ்வளவு நஷ்டம் ? அப்படி நஷ்டம் ஏற்பட்டு இருந்தால் அதற்குப் பொறுப்பாளர்கள் பேரில் ரெஸ்பான்சிபிலிடி பிக்ஸ் செய்யப்பட்டு இருக்கிறதா ? காலதாமதம் ஆனாலும் இப்போதாவது அப்படிச் செய்வதற்கு அரசு முன்வருமா ?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: The irregularities did not relate to any loss. What was alleged was that advance was given and that it has been adjusted in the final settlement. The only objection which was outstanding until last year related to a sum of Rs. 6,600 which was claimed by the contractor and paid to him on account of the additional work done by him.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்டுவதற்கு எஸ்டிமேட் போட்டதாகவும், எஸ்டிமேட் தொகை ஒரு குறிப்பிட்ட தொகை என்றும், கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட உடனே, பொருள்கள் விலை ஏறிவிட்டது என்று சொல்லி, பர்சென்டேஜ் இன்க்ரீஸ் செய்து கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதே, அது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இரண்டாவது ஒப்பந்தம் 1964-ல் செய்யப்பட்டது. தொகை கொஞ்சம் அதிகப்படுத்தப்பட்ட காரணம், அதிகப்படியான வேலை செய்வதற்காக, அதாவது, ஒரு சுரங்க அறை கட்டுவதற்கும், தண்ணீர் ஊறாமல் இருப்பதற்காகவும் அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதுபற்றி தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை தேவை இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது.

[1971 ஜூலை 1

Dr. H. V. HANDE: Sir, is it not a fact that last year in reply to a similar question put by me, the Hon. Minister had stated that there had been an excess in the cost per square feet paid by the Union? Also, is it not a fact that for a similar construction, the cost paid by the Housing Board is low? So, there is disparity in the rate per square feet. What action have the Government taken to see that this irregularity is properly remedied? Also, may I know what are the further steps taken by this Government to see that such irregularities do not occur hereafter?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: Last year when I answered the hon. Member, I did mention that all the irregularities pointed out by the Registrar had been enquired into except the one relating to Rs. 6,600 which was still pending. A further enquiry was made and it was found that this Rs. 6,600 related to the additional amount claimed by the contractor for constructing a vault underneath the building. I think the hon. Member knows the position of the building. It is situated on the side of the canal where the Cooum Reclamation work is now going on. A great deal of sand has to be used so that the foundation for the vault may not be weakened. For the additional work, the sum of Rs. 6,600 was paid. It is now eight years since the original charge was made. As I have stated earlier, a further enquiry was made and it has been found that there is no real irregularity for which further action should be taken.

Dr. H. V. HANDE: Sir, may I know whether the explanation was given by the Union after probing by the Government or was it given after the receipt of the orders of the Government regarding rate per square feet?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: The question is not regarding any cost per sq. feet. The question is regarding an issue relating to construction of a vault. It was alleged that there was use of some extra red cement. Before using that cement, permission of the Government was not asked for. At best it was an irregularity but it did not result in any loss either to the society or the Government, and particularly to the society. Further enquiry was however made. I did not keep quiet eventhough there were some enquiries made before the hon. Member raised this question. The hon. Member was keen that further inquiries should be made and I did make further inquiries. I find we cannot proceed either in the civil manner or criminally because there was ample explanation for the irregularity.

*Demonstration by Central Government Employees*

*96 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there was a demonstration by the Central Government Employees in Madras Ciy about the 6th October 1970; and

(b) if so, the details thereof?



1971 ஜூலை 1]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.**

(இ) சென்னை நகரிலுள்ள, மத்திய அரசின் பல்வேறு அலுவலகங்களைச் சேர்ந்த பணியாளர்கள், மத்திய அரசு அறிவித்த "சொற்ப" இடைக்கால நிவாரணத்துக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு, 6—10—1970 அன்று மாலை தத்தம் அலுவலகங்களிலிருந்து முழக்கம் செய்து கொண்டு ஊர்வலமாக சென்னை அஞ்சல் துறைத் தலைவர் அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இம்மாதிரி சர்க்கார் ஊழியர்கள் இடைக்கால நிவாரணம் கேட்டு, ரூ. 70 என்று கேட்டும், குறைந்த பட்சம் ரூ. 15 முதல் 40 வரையில் என்று கொடுத்தார்கள். ஆகவே, அவர்களுடைய மகஜரின் பேரில் மத்திய சர்க்காருக்குத் தமிழக அரசாங்கம் ஏதாவது 'நோட்' அனுப்பியிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாம் மத்திய சர்க்காரின் இந்தமாதிரியான விவகாரங்களில் தலையிட்டுப் பரிந்துரைகள் செய்வது முறையல்ல. ஆனால், வேலை நிறுத்தத்தின் போது பாதுகாப்பு அளித்து, அவர்கள் மீது போட்ட வழக்குகள் போன்றவைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்ற வகையில் சில உதவிகளைச் செய்ய இந்த அரசு முயற்சி மேற்கொண்டு இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இப்பொழுது கூட, நேற்றையதினம் கூட மத்திய சம்பளக் குழு தன்னுடைய அறிக்கையை இந்த ஆண்டுக்குள்ளாக சமர்ப்பிக்காது என்பதற்குக் கண்டனம் தெரிவித்து, ரெயில்வே தொழிலாளர்கள் 'தரணா' செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான நிலையில் மனிதாபிமானம் ஒருபுறம் இருக்க, மாநிலத்தின் சட்ட அமைதி பாதிக்கப்படுவதால், மாநில அரசு மத்திய அரசிடம் அதன் சம்பளக் குழு அறிக்கையை விரைவில் வழங்கவேண்டும் என்று பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட பரிந்துரைகளை, மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்வது முறையாக இல்லை என்று முதல் கேள்விக்கே பதில் அளித்தேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், மத்திய சர்க்காரின் கீழ் பணியாற்றும் எம்ப்ளாயிஸ் பிராவிடெண்ட் பண்ட் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்தபோது, தமிழக அரசு தலையிட்டதால், வேலை நிறுத்தம் வாபஸ் வாங்கப்பட்டு, மத்திய சர்க்கார் வாக்குறுதியும் அளித்து, அதை நிறைவேற்றாமல் இருப்பதால் அதிருப்தி எற்பட்டிருக்கிறது என்பது நம் அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதனால்தான், சட்டபூர்வமாகச் செய்ய முடியாது, பேச்சுவார்த்தைகள் மூலம் செய்யலாம் என்ற அளவில் செய்யப்பட்டது.

[1971 ஜூலை 1

**திரு. நா. வீராசாமி :** மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் அகில இந்தியாவிலும் நடைபெற்றது. அப்போது தமிழகத்தில் மட்டும் எந்த விதமான அராஜகச் செயல்களும் நடைபெறாமல் போராட்டம் அமைதியாக நடந்ததற்கு அடிப்படைக் காரணம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிவிக்கமுடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எப்பொழுதும் தமிழகம் அமைதியைப் பாதுகாப்பதில் கூடுமானவரையில் முன் நிற்கிறது என்பதுதான் அடிப்படைக் காரணம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மத்திய சர்க்காரின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தின் போது, நாட்டில் அராஜகம் ஊழியர்கள் தரப்பிலிருந்து எதுவும் நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தமிழகத்தைப் பொறுத்த வரையில் சொல்லலாம். இந்தியா முழுவதிலும் அப்படி என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. டெல்லியில் அமளிகள் நடைபெற்றதாகத் தகவல் வந்தது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இவர்கள் மத்திய சர்க்காரில் ஊழியர்களாக இருந்தாலும், பெரும்பாலும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்கள் மீது அக்கறை கொண்டு இதில் தலையிடமுடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய சர்க்கார் ஊழியர்கள் என்கின்ற நிலையில் சட்டப்படி நாம் அவர்களுக்காக எந்தப் பரிந்துரையும் செய்ய முடியாது என்றும், அதே நேரத்தில் பேச்சு வார்த்தைகள் மூலமாக உதவிகளைச் செய்வதில் இந்த அரசு முன் நிற்கும் என்றும் முதலிலேயே எடுத்துச் சொன்னேன். அந்த அடிப்படையில் தான் எந்தக்காரியத்தையும் அணுகமுடியும்.

THIRU K. M. SUBRAMANIAM : Are this Government aware that many of the defence department clerks are Tamilians and they are being unscrupulously transferred to far off places because the officers are mostly belonging to North India? The poor clerks are being transferred from one place to another far off place. Has that come to the notice of this Government? Have they received any representations from the Defence Department Clerical Service people?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தத் தரப்பிலிருந்தே இது போன்ற கேள்வி வந்ததை நான் வரவேற்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : That is not an answer, Sir.

MR. SPEAKER : The question should be put to the Hon. Minister, Mr. Jagjivan Ram, Defence Minister of the Central Government.



1971 ஜூலை 1]

### *Chief Minister's State Relief Fund*

*97 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the amount accrued upto 31st March 1971 in the Chief Minister's State Relief Fund; and

(b) the amount of expenditure incurred from the fund during the year 1970-71?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (1) 1971 மார்ச்சு திங்கள் முடிய சேர்ந்துள்ள நிதி ரூ. 15,14,885.64.

(2) 1970-71-ல் மட்டும், அதாவது 31—3—1971 வரையில் செலவானது ரூ. 1,49,306.31.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த முதல் அமைச்சர் நிதியிலிருந்து எந்தெந்த இனங்களுக்குத் தொகைகள் கொடுக்கப்படுகின்றன? பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு இதிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறியலாமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி என்பது தனியாகத் திரட்டப்பட்டு வருகிறது. அது இதோடு இணைக்கப் படவில்லை. எந்த எந்த இனங்களுக்காக என்பதற்கு, அந்த விவரங்கள் மொத்தமாக வேண்டும் என்றால், எல்லா இனங்களையும் பற்றிச் சொல்வதற்கு ஒரு தனிக் கேள்வி கொடுத்தால். அதற்கான விவர அறிக்கை ஒன்று மேசையில் நிச்சயமாக வைக்கப்படும். பொதுவாக, வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கும், தீயால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கும், துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்படுகிறவர்களுடைய குடும்பத்தினருக்கும், இன்னும், கடமையாற்றுகிற நேரத்தில் அகால மரணம் அடைந்தவர்களுடைய குடும்பத்தினருக்கும் பணம் இந்த நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கழிந்த மார்ச்சுத் திங்களில் ஏற்பட்ட மழையின் காரணமாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் கன்யாகுமரி மாவட்டத்திலிருந்து உதவிகோரி மனுப் போட்டார்களா? ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மொட்டைத்தாதன் குட்டையில் விழுந்தான் என்று கேட்டால் என்றால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? எந்தப் பெண்மணி, எப்பொழுது கேட்டார்கள், எதற்காக, என்பது போன்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால், அதில் அக்கறை செலுத்த முடியும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மாநில முதல் அமைச்சர் நிதியிலிருந்து ஒவ்வொரு காரியத்திற்கும் வழங்கப்படும் தொகைகள் மற்றவர்களைக் கலந்து செய்யப்படும் காரியமா, அல்லது முதல் அமைச்சரே தன் இஷ்டம்போல் செய்யப்படும் காரியமாக நடத்தப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அது ஆங்காங்கே ஏற்படு கின்ற நிலைகளையும், நிகழ்ச்சிகளையும் ஒட்டி முதல் அமைச்சரே தனித்து முடிவு எடுத்து வழங்குகிற நிதியாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** முதல் அமைச்சர் நிதியிலிருந்து ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. அதே மாதிரி ஆலைகள் மூடப்பட்டு, நீண்டகாலமாகக் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து உதவி கொடுக்கப்படுமா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஏற்கனவே ஒரு முறை கோவையில் நூற்பாலைகளின் தொழிலாளர்களுக்கு இந்த நிதியிலிருந்து இரண்டு இலட்சம் கொடுக்கப்பட்டது. அவ்வப் பொழுது நிலைமைகளை அனுசரித்து நிதி வழங்கப்படும்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் நிதிக்கு அரசாங்கம் பணம் தருகிறதா? அல்லது பொது மக்களிட மிருந்து நிதி திரட்டப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** முதல் அமைச்சர் நிதி என்பது பொது நல நிதி என்ற பெயரில் இருக்கிறது. பொது மக்களிடமிருந்து நிதி திரட்டப்படுகிறது. ஒரு இனம் தவிர.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் நிதி யிலிருந்து அகால மரணம் அடைகிறவர்களின் குடும்பங்களுக்கு உதவி அளிப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் அடிக்கடி ரயில் விபத்துக்களில் உயிரிழக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ரயில் விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்கு மத்திய அரசு உதவி செய்து வருகிறது.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** சேலத்தில் ஏற்பட்ட லாரி விபத்தில் 20 பேர் இறந்தார்கள். அப்படி இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு முதல் அமைச்சர் நிதியிலிருந்து தொகை வழங்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 7—4—71-இல் சேலம் லாரி விபத்தில்—திருவிழா பார்த்துவிட்டு வந்தவர்கள்—உயிரிழந்தவர் களின் குடும்பத்தார்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் முதல் அமைச்சர் நிதியில் இருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன்:** முதல் அமைச்சர் நிதியில் இருந்து பங்களா தேஷ் அகதிகளுடைய நிவாரணத்திற்காக ஏதாவது தொகை வழங்கப்பட்டிருக்கிறதா?





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 25 ஆயிரம் ரூபாய் முதல் கட்டமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். குமாரசாமி:** முதல் அமைச்சர் நிதியில் இருந்து கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஒரு முறை உதவி வழங்கப்பட்டதாகக் கூறினார்கள். அதேமாதிரி தொடர்ந்து மூன்றாண்டு, இரண்டாண்டாக வேலையில்லாமல் இருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு முதல் அமைச்சர் நிதியில் இருந்து உதவி யளிக்க அரசாங்கம் யோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தொடர்ந்து இதே கேள்வி ஒரே இடத்தில் இருந்து கேட்கப்பட்டால் நிலைமைகள் ஆராயப் பட்டு, ஏற்றவாறு முடிவு எடுக்கப்படும்.

**திரு. கோவைச் செழியன்:** அகால மரணமடைகின்ற, மேலவை, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு முதல் அமைச்சர் நிதியில் இருந்து உதவி அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உறுப்பினருடைய பதவிக் காலம் முடிவதற்குள் உயிரிழந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு பதவிக்காலம் முடிய உதவி செய்வது என்பதாக சட்டமன்றத்திலேயே தீர்மானம் கொண்டுவரப்பட்டு உதவிப் பணம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் நிதியில் இருந்து பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு உதவி அளிக்கப்படுகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு முதல் அமைச்சரே நிதி திரட்டுகிறாரே தவிர முதல் அமைச்சர் நிதியில் இருந்து எதுவும் மாற்றப்படவில்லை.

THIRU K. M. SUBRAMANIAN: Mr. Speaker, Sir, when there are many accidents because of State Transport in Madras City, has any financial assistance been given for the increasing number of victims in the accidents in Madras City from the Chief Minister's Relief Fund?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட விவகாரங்கள் போக்குவரத்துத் துறையால் கவனிக்கப்படுகின்றன. முதல் அமைச்சர் நிதியிலிருந்து அதற்கு உதவ வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** கேரளத்தில் பெருவெள்ளத்தால் பாதிக் கப்பட்டு உயிரிழந்த குடும்பத்தார்களுக்கு உதவி கோரி அந்த அரசு நமது அரசைக் கேட்டிருக்கிறதா? அப்படியானால் அவர் களுக்கு முதல் அமைச்சர் நிதியில் இருந்து உதவி செய்யப் பட்டிருக்கிறதா?

[1971 ஜூலை 1

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேரளத்தில் இருந்து அப்படி ஒன்றும் தகவல் இல்லை. ஆந்திராவில் 1969-ம் ஆண்டில் வெள்ளம் கடுமையாக ஏற்பட்டு மக்களைப் பாதிக்கப்பட்டபோது அவர்கள் கேட்காமலேயே தமிழ்நாட்டு முதல் அமைச்சர் நிதியில் இருந்து 10 ஆயிரம் ரூபாய் அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சேலத்திலே லாரி விபத்துக்குள்ளானவர்கள் குடும்பங்களுக்கு முதல் அமைச்சர் நிதியில் இருந்து உதவி அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இதுபோல சாலை விபத்துக்களின்விளைவாக வாழவகையற்றுப் போகும் குடும்பங்களுக்கெல்லாம் முதல் அமைச்சர் நிதியில் இருந்து உதவி வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த அந்த நிகழ்ச்சிகளின் தன்மை, அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலைமை ஆகியவை ஆராய்ந்து அந்தக் காரியங்கள் செய்யப்படும்.

*Tamil Nadu Cycle Rickshaw Pullers' Association*

*105 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have received requests from the Tamil Nadu Cycle Rickshaw Pullers' Association to abolish the licensing system, during 1970; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் வண்டிகளைப் பிறரிடம் இருந்து வாடகைக்கு வாங்கித்தான் ஓட்டுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு அரசாங்கமே நேரிடையாக வட்டி இல்லாக் கடன் வழங்கி, சொந்தமாக வண்டிகள் வாங்கிக்கொள்ளத் துணை புரியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் : அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

DR. H. V. HANDE : Sir, some time back there was a proposal for reduction in the licensing fee statutorily. May I know whether the Government propose to reduce the licensing fee? Will the Hon. Minister tell us the details about this?

THE HON. THIRU S. RAMACHANDRAN : There is no such proposal to reduce the licensing fee.

திரு. எம். சுரேந்திரன் : டாக்ஸிக்காரர்களுக்கு உதவி செய்ய அவர்களைக் கொண்டே ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு கடன் உதவி அளிக்கப்படுவதைப்போல, ரிக்ஷாக்காரர்கள் கூட்டுறவு சங்கம் என்று ஏற்படுத்தி, அதன்மூலம் அவர்கள் சொந்தமாகவே ரிக்ஷாக்கள் வாங்கி வைத்துக்கொள்ள அரசாங்கம் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 1]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நல்ல கருத்தையொட்டியே சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று அமைத்து அவர்களுக்கு நிதி உதவி வழங்கும் யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : சைக்கிள் ரிக்ஷாக்காரர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்கிற நல்ல கருத்தோடு தயாரிக்கப்பட்டுள்ள "ரிக்ஷாக்காரன்" என்ற படத்திற்கு அரசாங்கம் கேளிக்கை வரியில் இருந்து விலக்கு அளிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உறுப்பினரைப் போன்றவர்கள் அதிகமாக அந்தப் படத்தைப் பார்த்துப்பாராட்ட முன்வந்தால் கேளிக்கை வரியினால் அது பாதிக்கப்படாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.நா. வீராசாமி : ரிக்ஷாக்காரர்கள் அசோஷியேஷனில் இருந்து கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அந்தக் கோரிக்கைகள் என்ன என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ரிக்ஷாத் தொழிலாளர்கள் கோரிக்கையில் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்பதுதான் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். 1964-ஆம் ஆண்டு இதற்கு முந்தி இருந்த சர்க்கார் சைக்கிள் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையைப் பெருக்குவது இல்லை என்ற முடிவை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நெரிசல் பகுதிகளிலும், நெரிசல் நேரங்களிலும் சின்னஞ்சிறு தெருக்களில் எல்லாம் போவதற்கு பொதுமக்களுக்கு மலிவான, போக்குவரத்து சாதனமாக அது இருப்பதால் ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமா என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மே மாதம் 4-ந் தேதி தெரிவித்த விருப்பப்படி கூடுதலாக 250 ரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்குவது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்தத் தொழிலாளர்கள் வற்புறுத்துவார்களானால் மேலும் 250 ரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. பெ. மலேச்சாமி : இந்த ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும் மேலும் பல உதவிகளைச் செய்யவேண்டுமென்று எம். ஜி. ஆர். அவர்களைக் கேட்டுக்கொள்ள இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாம் கேட்டுக்கொண்டுதான் புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ரிக்ஷாக்காரர்களுக்கு உதவி செய்துவருகிறார்கள் என்று சொல்ல முடியாது. அவராகவே மேலும் பற்பல தன்மைகளைச் செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே டாக்ஸி ட்ரைவர்களுடைய லைசென்சு ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கும்போது 13 ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. அதைக் குறைக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நான் ஏற்கனவே சொன்னதுபோல குறைக்கும் உத்தேசம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை ஆள் மிதிப்பதைக் காட்டிலும் சிறுவிசை இயந்திரங்களைப் பொருத்தி ஓட்ட வேண்டும் என்பதை அரசாங்கம் வற்புறுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சிறிய இயந்திரங்களைப் பொருத்தி சைக்கிள் ரிக்ஷாக்களை ஓட்ட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. மனிதர்களை வாகனமாக உபயோகப்படுத்தக்கூடாது என்பதில் இந்த அரசுக்கு உறுதியான எண்ணம் உண்டு. ஆனால் சமுதாயம் வளர வளரத்தான் அந்த நிலை உருவாகும். ஆட்டோ ரிக்ஷாக்களுக்கே அதிக அளவு அனுமதி வழங்குவதில்லை என்று முடிவு செய்திருக்கிற சூழ்நிலையில் இந்த நிலைமையை நாம் மேற்கொள்வதற்கில்லை. யாரேனும் இயந்திரங்களைப் பொருத்தி அந்த வசதியை அவர்களுக்குச் செய்து தர முன்வந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவர் அவர்களே, இந்த உரிமங்கள் வழங்குவதில் நகரம், பெருநகரம் என்று பிரிவுபாடு செய்து, எண்ணிக்கையில் கட்டுப்பாடு இருக்கிறதா? மதுரை நகரம் மாநகராட்சியாக ஆகியிருக்கிற காரணத்தால், இந்த எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, கட்டுப்பாடு இருந்த காலம் ஒன்று உண்டு. இப்போது கட்டுப்பாட்டைத் தளர்த்தி வருகிறோம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, பொதுமக்கள் சைகிள் ரிக்ஷாக்களை பயன்படுத்துகின்ற இந்த நேரத்தில், கையால் இழுக்கின்ற ரிக்ஷாக்களை நிறுத்தி விடுவதற்கான யோசனை அரசாங்கத்திற்கு உண்டா? மனிதனை உட்கார வைத்து, மனிதன் இழுப்பது பாவம் செய்யக்கூடிய செயல் என்பதற்காக கையால் இழுக்கின்ற ரிக்ஷாக்களை அரசு அடியோடு ரத்து செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மனிதர்கள் கையால் இழுக்கின்ற ரிக்ஷாக்களை மனிதர்கள் பயன்படுத்துவதை விட்டு விட்டால், அந்த ரிக்ஷாக்கள் தானாகவே போய்விடும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, மனிதனை உட்கார வைத்து, மனிதன் ரிக்ஷா இழுக்கிறார்கள் என்றால் ஏதோ ஜனங்களுக்கு உதவி பண்ண வேண்டுமென்ற காரணத்தினால் செய்வது அல்ல. அவனுடைய வயிற்றின் கொடுமையால்தான் இழுக்கிறான். ஆகவே, கையால் இழுப்பதை மாற்றி, அவர்களுக்கு சர்க்கார் வேறுவகையான ரிக்ஷாக்களைத் தருவதுதான் முதலில் மனித உணர்வோடு காட்டிய மரியாதையாகும் என்று நான் நினைக்கிறேன். அதற்கு அரசாங்கத்திடம் திட்டம் ஏதாவது உண்டா?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கார் மனிதாபிமானத்தோடுதான் நடந்துகொள்ளுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (3) அவையுரிமைக் கேள்வி.

### அவைக்குத் தவறான தகவலை அளித்ததாக திருமதி த. ந. அனந்த நாயகி அவர்கள் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை

MR. SPEAKER : The hon. Member, Thiru S. Kandappan, has given notice of his intention to raise a matter of privilege against the hon. Member, Thirumathi T. N. Anandanayaki, for having made the following statement on 30th June 1971 :—

நேற்று இரவு சங்ககிரி சிமெண்ட் ஆலையில் முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் நடந்த சச்சரவில் போலீசார் தலையிட்டு ஃபயரிங் நடந்திருக்கிறது என்று திருமதி அனந்தநாயகி பேசியதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது என்ற உரிமைப் பிரச்சினையை திரு. செ. கந்தப்பன் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இது எப்படி உரிமைப் பிரச்சினையாகும் என்பதை விளக்குமாறு திரு. செ. கந்தப்பன் அவர்களை அழைக்கிறேன்.

* **திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், நேற்றுக்கு முன்தினம் சங்ககிரி சிமெண்ட் ஆலையில் ஃபயரிங் நடந்ததாக இங்கே அவையிலே பேசப்பட்டு, அந்தச் செய்தி அப்படியே பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. இப்படிப்பட்ட தவறான காரியம் அங்கே நடைபெறவில்லை. அமைதியான முறையில் வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்தப் பேரவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் அமைச்சரவையிலே, அமைச்சரவை பொறுப்பிலே இருக்கிறவர்களுக்கு தொடர்பு உள்ள காரணத்தால் இப்படி நடைபெறுகிறது என்ற தவறான தகவலைத் தந்து, அவருக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் பேசியிருக்கிறார். அப்படித் தவறான உள்நோக்கம் கற்பிக்கிற காரணத்தினாலும்,

[திரு. செ. கந்தப்பன்] [1971 ஜூலை 1

நான் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவருகிறேன். May's Parliamentary Practice-ல் 115-வது பக்கத்தில் The house may treat the making of a deliberately misleading statement as a contempt.' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த பக்கத்தில், 117-வது பக்கத்தில் 'Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated, or equivalent to reflections on the House.' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அம்மையார் அவர்களுடைய நேற்றைய பேச்சில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்ற தவறான செய்தியைத் தந்தார்கள் என்பது மட்டுமல்ல.

(திருமதி த. ந. அனந்தநாயகி எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு வாய்ப்புத் தரும் போது பதில் சொல்லலாம்.

திரு. செ. கந்தப்பன் : அமைச்சரவையிலே இருக்கும் ஒருவருக்கும் தொடர்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். வேறு பல கருத்துக்களையும் உள்நோக்கத்தோடு பேசியிருக் கிறார்கள். அவருடைய பேச்சு இவைகளையெல்லாம் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஒரு அனுபவம் வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்படிப் பேசியிருப்பது சரியாகாது. நாங்கள் கல்லூரியில் படித்த நாளிலிருந்து அவர் ஒரு பழுத்த அரசியல் வாதியாக எங்கள் கண்ணுக்குப் படுகின்ற நிலையில் இருந்தார். அவர் அப்படிப் பேசியதெல்லாம் நவசக்தியில் வெளிவந்திருக் கிறது. சட்டசபையில் பேசுகின்ற நேரத்தில் செய்தியைத் தவறாகக் குறிப்பிட்டிருக்கிறார். நவசக்தியில் 'மனிதாபிமானத் துடன் நடந்துகொள்ள அரசுக்கு அனந்தநாயகி அறைகூவல்' என்று தலைப்பிட்டு வந்திருக்கிறது. இப்படி வந்திருப்பது, இந்த அரசு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டு உடையதாகத்தான், தவறான எண்ணத்தோடுதான் வெளியிட்டதாகத் தெரிகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அடுத்த வரியில், 'ஒரு அமைச்சருக்கு அந்தத் தொழிற்சாலை யுடன் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது' என்று வந்திருக்கிறது. அங்கு நடக்கும் செயல்களுக்கு அவரும் சேர்ந்து பொறுப்பு என்கிற மாதிரி, அந்த வார்த்தைகளை மேற்கோளாகக் காட்டியிருக் கிறார்கள். திருமதி அம்மையார் அவர்கள் இரண்டு வகையான உரிமைப் பிரச்சினைக்கு ஆளாகிறார்கள். தவறான ஒரு செய்தியை, திட்டமிட்டு, அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத் துடன் கூறியிருக்கிறார்கள். இரண்டாவது, அமைச்சரவையில் உள்ள ஒருவர்மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற உள்நோக் கத்தோடு கூறியிருக்கிறார். பொதுவாக வேலைநிறுத்தம் போன்ற காரியங்கள் நடக்கும்போது அரசு தக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டு ஆவன செய்து வருகிறது. மாண்புமிகு தொழில்



1971 ஜூலை 1] [திரு. செ. கந்தப்பன்]

அமைச்சர் அவர்கள் பலமுறை பேச்சுவார்த்தை நடத்திவிட்ட பிறகு, பல கட்சியினுடைய தலைவர்களையெல்லாம் அழைத்து பேசிய பிறகு, பெரும் கூட்டங்கள் எல்லாம் கூட்டப்பட்டும்கூட, நிலைமை துப்பாக்கிச் சூடு நடைபெறுகின்ற அளவுக்குச் செல்லாமலும், அத்துமீறி நடக்காமலும் காவல் துறையினர் திறமையாகச் சமாளித்திருக்கும் நிலைமையில், தொழிலுக்குக் குந்தகம் நேராத வகையில் உற்பத்தி நடந்துகொண்டிருக்கிற நிலைமையிலும் நிலவரம் இருக்கும்போது, இப்படி அரசுக்கும் மாசு கற்பிக்கின்ற எண்ணத்தோடு அம்மையார் அவர்கள் சொல்லியிருப்பது உரிமைப் பிரச்சினைக்கு உகந்ததாகும். இந்த அமைச்சரவையி லுள்ள ஒருவருக்கு உள்நோக்கம் கற்பித்து, அவர் இருப்பதால் தான் அரசு இப்படி நடந்துகொள்கிறது என்று கூறியிருக்கிறார்.

எத்தனையோ வேலை நிறுத்தங்கள் பல்வேறு இடங்களிலே நடந்திருக்கின்றன. அந்த நேரத்தில் எல்லாம் வேலைநிறுத்தம் ஏற்படுகின்ற இடங்களிலுள்ள முதலாளிகள், தொழிலாளர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நோக்கத்தோடு இந்த அரசு நடந்து கொண்டது இல்லை. அப்படிப்பட்ட ஒரு குற்றச் சாட்டை யாரும் நிரூபிக்க முடியாது. அங்குள்ள நிலைமைகளை யொட்டியும், நியாயத்தையொட்டியும் அரசு சட்டத்தை முறை யாக ஆராய்ந்து, எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அப்படி எடுத்து வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள் கிறேன். எனவே, இந்த உரிமைப் பிரச்சினையை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கந்தப்பன் அவர்கள் எழுப்பியிருக்கிற உரிமைப் பிரச்சினையில் சில முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. இந்த உரிமைப் பிரச்சினைக்கு மட்டும் மல்ல, பொதுவாக, எல்லா உரிமைப் பிரச்சினைகளுக்கும் உள்ள பொதுவான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திருமதி அம்மையார் அவர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படும். திரு. கந்தப்பன் அவர்கள் எழுப்பியுள்ள உரிமைப் பிரச்சினையில் சில மேலோட்டமான அடிப்படை அம்சங்கள் இருக்கின்றன. பொதுவாக இந்த அவையில் ஒரு Wrong Statement தவறான ஒரு செய்தியைக் கூடச் சொல்லலாம். அமைச்சர்கள்கூட சில சமயங்களில் தவறான புள்ளிவிவரங்களைச் சொல்கிறார்கள். அவை தவறு என்று தெரிந்த பிறகு திருத்திக்கொள்ள உரிமை உண்டு. இது எப்போது உரிமைப் பிரச்சினையாகிறது என்றால், தவறு என்று தெரிந்திருந்தும், இந்த அவையைத் திசைத் திருப்ப வேண்டு மென்ற நோக்கத்தோடு செய்யப்படும்போதுதான்.

'Statement must not be deliberate and must not aim at misleading the House.'

அப்படி இருக்கக்கூடாது. தவறான செய்தியைக் கொடுக்கக்கூடாது என்பதல்ல. மேலெழுந்தவாரியான தவறான செய்திகளாக

இருந்தால், அது சரியானதுதான், அல்லது வேண்டுமென்றே தெரிந்திருந்தும் இந்த அவையைத் திசைத் திருப்ப வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருந்தால் அது, இந்த அவையை அவமதித்த குற்றமும் ஆகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எந்த ஒரு உறுப்பினரையோ அல்லது குறிப்பிட்ட அமைச்சரையோ பற்றிச் சொல்லும்போது, அவர்களை "ரிஃப்ளெக்ட்" பண்ணுகிற மாதிரி, அவர்களை அவமரியாதை செய்கிற மாதிரி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதுதான் அடிப்படையான அம்சங்கள்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் நேற்றைய தினம் சங்ககிரி துர்கில் உள்ள சிமெண்டு தொழிற்சாலை ஒன்றில் நடந்த சர்ச்சையில் போலீஸ் ஃபயரிங் நடந்து இருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். அப்படி ஒரு ஃபையரிங் நடைபெறவில்லை. ஆகவே, அப்படி நடைபெறாத ஒன்றை நடைபெற்றதாக ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் தெரிந்திருந்தும் இந்த அவையை திசைத் திருப்புவதன் மூலம், அவர் வேண்டுமென்றே, தெரிந்த ஒன்றை டெலிபரேட் ஆகச் சொல்லி இருக்கிறார்கள் என்பதுதான். அவர்கள் சொல்லும் வகையில் இப்படிப்பட்ட ஃபயரிங் நடந்தது, அதற்குக் காரணம் இதில் ஒரு அமைச்சருக்குத் தொடர்பு உண்டு. இந்த இரண்டு வகையான ஆதாரங்களைச் சொல்லி இருக்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு. இப்போது கவனிக்க வேண்டியது முதலில் அங்கு ஒரு ஃபயரிங் நடைபெறாமல் இருந்து இருக்குமானால் அவர்கள் அதை சொல்லி இருப்பார்களேயானால் அது வேண்டுமென்றே தவறான deliberate ஆக இந்த அவையை mislead பண்ணி செய்யப்பட்ட ஒரு கூற்றாகத்தான் அமைய முடியும். It is misleading the House. இதைப் பற்றி எல்லோரும் அறிந்த ஒரு பிரபலமான ஒரு வழக்குகூட இந்த மன்றத்தில் பல நேரங்களில் விவாதத்துக்கு வந்திருக்கிறது. May's Parliamentary Practice- -ல்

"The House may treat the making of a deliberately misleading statement as a contempt.

In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former Member had been guilty of a grave contempt (Profurmo's case). முதலில் அது தப்பு என்று தெரிந்திருந்தும், ஒரு தவறான வாக்கு மூலத்தை மன்றத்திற்கு அறிவித்துவிட்டு, பிறகு நான் சொன்னது தவறு என்று சொன்னபோது, இது ஒரு கன்டெம்ப்ட் என்று கருதப்படுவதற்கு ஆதாரங்கள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே அம்மையார் அவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்பதற்கு இந்த சட்ட சபையின் நடவடிக்கைக் குறிப்பை வரவழைத்துப் பார்த்ததில் அதில், "நேற்று இரவு சங்ககிரிதுர்க் சிமெண்ட் தொழிற்சாலையில் முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கும் நடந்த சச்சரவில் போலீஸ் தலையிட்டு ஃபயரிங் நடத்தி இருக்கிறது. தொழிலாளர்கள் அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். சங்ககிரி தொழிற்சாலையில் ஒரு முக்கியமான அமைச்சருக்கு அக்கறை உண்டு என்பதின் காரணமாக அங்கே கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதற்காக எடுத்தார்கள். ஆதாரம் உண்டு. அதற்கும் ஆதாரமாக மேனேஜ்மெண்டைத் திருப்தி செய்வதற்காக போலீசை ஏன் பயன்படுத்த வேண்டும் என்று கேட்கிறேன், "மக்களிடத்தில் நம்பிக்கை இருக்கும் இந்த அரசாங்கம்" என்று இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் ஒரு பத்திரிக்கையிலே இப்படி செய்தி தரப்பட்டு பிரசுரித்து இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இது Breach of privilege தான். அவர்கள் ஏற்கெனவே நடைபெறாத விஷயத்தை, அறிந்து, தெளிவாக அறிந்து, அழுத்தம் திருத்தமாக வேண்டுமென்றே சொல்லி இருந்தால் தவறுதான். ஆனால் அவர்கள் இப்படி சொன்னதற்கு அவர்கள் என்ன சமாதானம் சொல்ல இருக்கிறார்கள் என்பதைக் கேட்கவேண்டும். உண்மையிலேயே அவர் தெரியாமல் சொன்னால்கூட தவறுதான். Contempt தான். இருந்தாலும், இதுகுறித்து அவரது விளக்கத்தைக் கேட்டு, அதற்குப் பின்னால் இதற்கு முடிவு சொல்ல இருக்கிறேன்.





THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of explanation, Sir, regarding the privilege motion I would like to make the following statement:—

So far as police firing is concerned, I do not know whether I have mentioned the word 'firing'. If I had done it, it may be due to some slip of the tongue. So far as Sankaridurg incident is concerned, I received a telegram from the INTUC AND DMK Unions that labourers were beaten. Now it has become the fashion in labour disputes for Police to interfere. That is not good at all from the point of view of labour. That is what I stated. That is what I understood and I cited Sankaridurg as example. I stated I received a telegram from the INTUC and DMK Union that Police had interfered, beaten women labourers there and treated them very harshly. That is what I wanted to bring to the notice of the House. There was also a motion under Rule 41 brought about by another colleague Thiru K. T. K. Thangamani on the floor of the House. This was not an incident which had not happened. About the connection of an Hon. Minister, I would like to state my stand. . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் இடையிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அம்மையார் பேசும்போது துப்பாக்கிப் பிரயோகம் என்று தன் வாயால் அவரே சொல்லி இருக்கிறார். ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் இந்தச் சபைக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில் குறிப்பிட்டு இருக்கிறார். அது உண்மையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: May be, I had misunderstood it as firing.

[1971 ஜூலை 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரின் மேல் தெளிவான, திட்டவட்டமான உரிமைப் பிரச்னை எழுப்பி, குற்றம் சாட்ட வேண்டுமென்பது இந்த அவையின் நோக்கம் அல்ல. இந்த அவையின் மரபும் அதனுடைய உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாலும் இந்த அவை இவ்வளவு அமைதியாக விவாதிக்கிறது. பொதுவாக, இதில் "பிரைமா பேசி" கேஸ் இருக்கிறது. ஃபயரிங் நடைபெருமல் இருக்கும் பொழுது நடைபெற்றதாக இந்த அவையில் உறுப்பினரவர்கள் கூறியிருக்கிருர்கள். அது பத்திரிகையில் வந்து இருக்கிறது என்பது தெரிந்தும் திசை திருப்புவதற்கு அப்படிச் சொன்னல் பிரிவிலேஜ் கமிட்டிக்கு ரெபர் பண்ண வேண்டிய நிலை ஏற்படும். அம்மையார் அவர்கள் இப்பொழுது சொன்னதை வரவேற்கிறேன். ஆனல் ஏதோ தகவலின்பேரில் சொன்னதாகச் சொன்னல் அது போதுமானது அல்ல. தகவல் சரியானதா என்று உறுதி செய்து கொண்டுதான் அவையில் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அம்மையார் சொன்னது துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இருக்கிறது என்று. ஆனல் வாய் தவறிச் சொல்லியதாகச் சொல்கிருர்கள் இப்பொழுது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எனக்குத் தந்தி வந்தது. இது துப்பாக்கிச் சூடு அளவுக்குப் போனதா, அல்லது அடிக்கும் அளவிற்கு நடந்து இருக்கிறதா என்பது வந்த தந்தி தகவல்தான், ஃபயரிங் அளவுக்குப் போகவில்லை என்ருலும் அடிதடி அளவுக்குப் போலீஸ் தலையிட்டது உண்மை. எனக்குத் தகவல் கிடைத்ததை சபைக்குக் கொண்டு வந்தேன். பொதுமக்களின் பிரதிநிதி என்ற காரணத்தாலே எனக்கு வந்த தகவலில் திடீர் என்று சங்ககிரி துர்க்கா தொழிற்சாலையில் ஒரு தொழிலாளர் தகராறு ஏற்பட்டது. தொழிலாளர்கள் தகராறில் ஏன் போலீஸை அனுப்ப வேண்டும். தொழிலாளர்களை ஏன் அடிக்க வேண்டும், அதற்கு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கொண்டு வந்தேன். சொல்ல வேண்டியது அங்கத்தினர்கள் கடமைதான். நான் சொன்னது எனக்குக் கிடைத்த தகவலின் பேரில்தான். இப்படிப்பட்ட பிரச்சினையை கிளப்பி விட்டு அதை அரசாங்கத்தின் கவனத்துக்கு எடுத்துச் சொல்வதற்குத்தான். அதன் காரணமாக உங்கள் அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டியதற்காக அல்ல. As a member of the House I have every right to say and I enjoy to some extent immunity also to make. . . . .

MR. SPEAKER : That is not correct.

THIRU N. VEERASAMI : On a point of order—

THIRUMATHI T. N. ANANDANAYAKI : One more explanation I would like to make. I was told that the Hon. Minister Thiru Adithan had got substantial interest in the India Cement



1971 ஜூலை 1] [Thirumathi T. N. Anandanayaki]

Company. Sankaridrug is a branch of that company. That was the statement made by labourers. How much shares he had in that concern and whether he had transferred them to some others. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம் அங்கு ஒரு பயரிங் நடைபெறவில்லை. அதை நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்கள். ஆனல் இங்கு சொல்லப்படுகிற ஒவ்வொரு வாக்கு மூலத்திற்கும் பயங்கர விளைவுகள் உண்டு. அது அரசாங்கத்தை எப்படி பாதிக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிச் சொல்வதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்புண்டு. உரிமை இருக்கிறது என்பதற்காக இப்படிப் பேசக் கூடாது. உண்மையின் அடிப்படையில்தான் பேச வேண்டுமே தவிர யாரோ சொன்னர்கள் என்பதற்காக இப்படிச் சொல்ல உரிமையில்லை. நான் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்புவது எப்படித் தவறு நடந்து விட்டது என்பதைத்தான். அதைத் தெரிந்துகொள்ள இந்த மன்றத்திற்கும் உரிமையுண்டு.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் என்ன சொன்னேன் என்ருல் எனக்கு "மாலபைடி" கிடையாது With a bona fide intention. சொன்னேனே தவிர திசை திருப்ப வேண்டும், இந்த அவையில் தவருன கருத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னல் இல்லாத நிகழ்ச்சியைக் கொண்டு வந்திருப்பேன். போலீஸ் தடியடிப் பிரயோகம் நடந்தது என்பது உண்மை. அப்படி வரையரைமீறி இருந்தால் அதற்காக இந்த அரசின் மேல் குற்றம் கற்பிக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. நான் சொன்னது தவறு என்று சொன்னல் அதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இன்னும் சொல்வது என்னவென்ருல் அம்மையார் அவர்கள் இப்படிச் சொன்னர்களா இல்லையா என்பதைத்தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய அவையிலும், முன்பிருந்த நம்முடைய சபாநாயகர் அவர்கள் " Members should be sure of the facts whenever they make a statement on the floor of the House ". என்று தீர்ப்பு வழங்கி இருக்கிருர்கள். அம்மையார் அவர்கள் இப்படி துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது என்று எழுதிக் கொடுத்திருக்கிருர்களா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு அம்மையார் அவர்கள் இதுவரை பதில் சொல்லவில்லை. 29-6-1971 அன்று இந்த அவைக்கு திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள்

" Under Rule 41 of the Assembly Rules, I would like to call the attention of the Hon. Chief Minister to the following matter of urgent public importance;

" The police firing on the labourers of a Cement factory at Sankaridurg on 28th June 1971 ".

என்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவையிலும், சட்டமன்றத்திலும் இருக்கிற உறுப்பினர் அவர்கள் 28—6—1971-ல் போலீஸ் ஃபயரிங் நடந்திருக்கிறதென்றும் ஒரு ஆதாரம் இல்லாத ஒரு அடிப்படையில் அவர்களெல்லாம் இந்த சட்டமன்றத்தில் இப்படிப் பேசுவது இந்தச் சட்டமன்றத்தில் அவர்களின் உரிமையின் அடிப்படையில் வேண்டுமென்றே தெரிந்து இப்படிச் செய்திருக்கிறார்கள் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். ப்ரைமா பேசி கேஸ் மாதிரிதான். காட்டகேரிகல் பாக்ட்ஸ் என்று சொல்வார்களே அதைப் போன்று அம்மையார் அவர்கள் தெரிந்திருந்தும் இப்படிச் செய்திருக்கிறார்கள்.

I hold that there is a *prima facie* case of breech of privilege.

ஆனால் அம்மையார் அவர்களின் விளக்கங்களுக்குப் பிறகு இதை இப்படியே விட்டு விடலாம் என்று கருதி அம்மையார் அவர்களின் விளக்கங்களை ஏற்றுக் கொண்டு இதைத் தள்ளுபடி செய்து இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

THIRU DURAI MURUGAN : On a point of order, Sir......... I am raising a point of order.

MR. SPEAKER : Point of order about the ruling of the Speaker ?

THIRU DURAI MURUGAN : On a point of clarification, Sir...

MR. SPEAKER : The hon. Member will please resume his seat.

### (4) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சங்ககிரி சிமெண்ட் தொழிற்சாலை பெண் தொழிலாளர் தாக்கப்பட்டது குறித்து.

MR. SPEAKER : Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, Thiru K. T. K. Thangamani has given notice of the following Adjournment Motion, namely,

"The attack on women workers of Sangari cement factory in Salem district, resulting in serious injuries".

இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான விதிகளின் கீழ்வரும் என்று திரு. தங்கமணி அவர்களைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, சேலம் சங்கரியில் இருக்கிற சிமிண்ட் தொழிற்சாலையில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே பலகாலமாகத் தகராறு இருந்து ஒரு ஐந்து தொழிலாளர்கள் ஏற்பட்ட சச்சரவின் காரணமாகத் தண்டனை அடைந்தார்கள் என்பதற்காக நீக்கப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து வேறு சில பிரச்னைகளெல்லாம் வைத்து வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்து வேலை



நிறுத்தம் அமைதியாக நடந்து கொண்டு வந்தது. ஆனால் இந்த வேலை நிறுத்தத்தில் வேறு எங்கேயும் இல்லாத அளவிற்கு போலீசார் தலையிட்டு இருக்கிறார்கள். தினசரி எனக்கு தந்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. நானும் கடந்த ஐந்து தினங்களாக சபையின் கவனத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்திருக்கிறேன். நேற்றைய முன் தினம் வந்த தந்தியில் பெண்கள் எல்லாம் தாக்கப் பட்டிருக்கிறார்கள், காயம் ஏற்பட்டு மருத்துவ மனையில் இருக்கிறார்கள் என்று வந்தது. சாதாரணமாக சில நடவடிக்கைகளை அரசும் எடுத்துக் கொண்டு இருக்கிறது. இருந்தாலும் இம்மாதிரி போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து தொழிலாளர்கள் தகராறில் தலையிட்டு 400, 500 தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் வைப்பதும், அது மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் மட்டும் அல்லாமல் கிராம மக்கள்கூட வெளியே வர முடியாது என்கிற அளவிற்கு இப்படி அரசாங்கம் சுற்றி இருக்கிற பகுதியிலும் 144 போட்டு எந்த வித ஊர்வலமோ, கூட்டமோ, ஆர்ப்பாட்டமோ நடக்கவிடாமல் செய்திருக்கிறார்கள் என்ற வெறுப்பும் மனக் கசப்பும் மக்களிடம் இருக்கிறது. ஒன்று தொழிலாளர்கள் இப்படி வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்பதற்காக இப்படிப் போட்டார்கள் என்றால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் யாருமே எந்தக் காரணம் கொண்டும் கூட்டமே போடக் கூடாது என்று உத்தரவு போடுவது என்பது அந்தக் காலத்திலே பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தது. தொடர்ச்சியாக காங்கிரஸ் ஆட்சியிலும் அப்படி இருந்தது. அப்போதெல்லாம் மக்கள் கொந்தளித்திருந்தார்கள். இப்போது இப்படிப் போடுவது சரியல்ல என்ற காரணத்தாலே போலீசார் இதில் தலையிடக் கூடாது என்பதை வற்புறுத்துவதற்காகவும், இம்மாதிரி சம்பவங்கள் நடக்கக் கூடாது என்பதற்காகவும் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சேலம் சங்கரி சிமெண்ட் தொழிற்சாலையில் 533 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். அங்குள்ள யூனியனைச் சேர்ந்தவர்கள் 10-5-1971 அன்று தொழிலாளர்களின் 31 கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை நிர்வாகம் ஏற்கவில்லை என்றால் வேலை நிறுத்தம் செய்யப் படும் என்பதை 'வேலை நிறுத்த நோட்டீஸ்' மூலம் அறிவித்தார்கள். அதைத் தொடர்ந்து அந்த யூனியன் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி 17-5-1971 முதல் 29-5-1971 வரை 'ரிலே' உண்ணாவிரதம் (தொடர் உண்ணாவிரதம்) இருந்தனர். அது பயனளிக்கவில்லை என்பதால் 8-6-1971 முதல் கால வரம்பின்றி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் தொடங்கினார்கள். இந்த ஆலையுடன் இணைந்துள்ள சங்கரி ஸ்டார் கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் பணி புரியும் யூனியனைச் சேர்ந்த

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 1

தொழிலாளர்கள் 18-6-1971 முதல் வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்புத் தரும் வகையில் மேற்கொண்டு தங்களுக்கான சில கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன் வைத்து கால வரம்பின்றி உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தைத் தொடங்கினார்கள். ஆனால் நிர்வாகத்தினர் 19-6-1971 காலை 4 மணி அளவில் ஸ்டார் கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் 'கதவடைப்பை' அறிவித்தனர். அந்தக் கம்பெனியில் 1,335 நிரந்தரத் தொழிலாளர்களும் 500 தொழிலாளர்களும் பணியாற்றுகின்றனர். அதன் விளைவாக இந்த இரண்டு கம்பெனிகளின் தொழிலாளர்களின் நடவடிக்கைக் குழு 17-6-1971 தேதியிட்ட அறிவிப்பு ஒன்றில் 21-6-1971 காலை 8 மணி முதல் இரண்டு கம்பெனிகளுக்கும் முன்னால் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல் செய்வார்கள் என்று அறிவித்தது. சங்கரி கோட்டாட்சித் தலைவர் (ஆர்.டி.ஓ.) 18-6-1971 மாலை 8 மணி முதல் 15 நாட்களுக்கு செக்ஷன் 144 (இ.பி.கோ.) உத்தரவை இரண்டு கம்பெனிகளுக்கும் அவைகளின் 5 மைல் சுற்றளவிற்கும் அமுல்படுத்தினார். ஏற்கெனவே அறிவித்தபடி தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தை விட்டுவிட்டு 21-6-1971 காலை 8 மணி முதல் மறியல் செய்யத் தொடங்கினார்கள். 24-6-1971 முதல் ஸ்டார் கன்ஸ்ட்ரக்ஷன் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களும கலந்து கொண்டனர்.

மறியலை 28-6-1971 முதல் கோட்டாட்சித் தலைவர் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு முன்னால், தாலுகா அலுவலகங்களுக்கு முன்பும் நடத்தத் தொடங்கினர். வண்டிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததற்காக கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் ஆக்டின் கீழ் 510 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். 29-6-1971 அன்றும் 30-6-1971 அன்றும் எவரும் கைது செய்யப்படவில்லை. பெண் தொழிலாளர்கள் எவரும் கைது செய்யப்படவோ, காயமடையவோ கிடையாது. லத்தி சார்ஜ் எதுவும் நடைபெறவில்லை. சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தமும், ஸ்டார் கன்ஸ்ட்ரக்ஷன் அண்ட் ட்ரான்ஸ்போர்ட் கம்பெனி கதவடைப்பும் தொடர்கின்றன. அமைதிக்கு எந்தவிதக் குந்தகமும் விளைந்திடா வண்ணம் காவல் துறையினர் நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். நாற்பது சதவிகித தொழிலாளர்களுடன் சிமெண்ட் ஆலையில் வேலை நடந்து வருகிறது. ஆகவே, இதில் ஒத்திவைப்புப் பிரேரணைக்குரிய முக்கியத்துவம் எதுவும் இல்லை என்பதால் இதை அனுமதிக்கத் தேவை இல்லை என்பதைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.



1971 ஜூலை 1]

## (ஆ) கோவை சந்திரா மில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் காவல் துறை தலையீடும், தடியடி நடத்தியதும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டப்பேரவை 42-ஆம் விதியின் கீழ் இன்னும் ஒரு அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்கக் கோரி திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. என். மருதாசலம், திரு. க. சுப்பு அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை கொடுத்து இருக்கிறார்கள்.

"கோயம்புத்தூர் சந்திரா மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் போலீஸ் தலையிட்டு தடியடி நடத்தியதால் பலரும் படுகாயமுற்று மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டும், இருபத்தைந்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டும் மிகவும் கொந்தளிப்பான நிலைமை எழுந்துள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைப் பற்றி விவாதிப்பதற்காக சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும்" என்று அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான விதிகளின் கீழ்வரும் என்பதை விளக்குமாறு திரு. தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தப் பிரச்னை சம்பந்தமாக நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஏற்கெனவே சங்கரியில் எம்மாதிரியாக போலீசார் தலையிட்டார்களோ அம்மாதிரியான தலையீடுதான் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தலையீட்டின் விளைவாக ஒருவருக்கொருவர் மோதல் ஏற்பட்டிருக்கிறது. இதை ஒட்டி இதில் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதை அறிந்து எங்களுடைய குழுவைச் சேர்ந்த , கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மருதாசலம் அவர்களை நாங்கள் கோயம்பத்தூருக்கு அனுப்பி வைத்தோம். அவரும் நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று மேற்கொண்டு கைது செய்யப்படாமல் இருப்பதற்காகவும் அமைதி நிலவுவதற்காகவும் ஏற்பாடுகள் செய்து இருக்கிறார்கள். இப்போது சர்க்கார் அனுப்பிய விசேஷ தொழில் அதிகாரி அவர்கள் சமாச அதிகாரி அவர்கள் அங்கு பேச்சு வார்த்தை நடத்தினர். 120 பேருக்கு மேல் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தையில் தொழில் அதிகாரி எதைச் சொல்லுகிறார்களோ அதை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்கள் சார்பாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை நிர்வாகத்தினரும் ஏற்றுக் கொண்டால் உடனடியாக அமைதி நிலவுவதற்கு வகை இருக்கிறது. இப்போது இங்கே இருந்து சட்டமன்ற உறுப்பினர் சென்ற காரணத்தாலேயும் அங்கே இருக்கிற ஜில்லா கலெக்டர் அவர்கள் போலீஸ் அதிகாரி அவர்களும் தலையிட்டதன் காரணமாக மேற்கொண்டு நடவடிக்கை, கைது செய்யப்படுவது நிறுத்தப்பட்டதாக இருந்தாலும் அந்தத் தகராறைத் தீர்க்க வேண்டும்

என்றால் மத்தியஸ்தராக சென்று இருக்கின்ற ஸ்பெஷல் டெபுடி லேபர் கமிஷனர் விசாரணையை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு வற்புறுத்தினால்தான் அங்கு அமைதி தொடர்ந்து இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கோவை பீளமேடு பகுதியிலுள்ள சந்திரா டெக்ஸ்டைல் ஸ்தாபனத்தில் சுமார் 480 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதில் பணியாற்றுபவர்களில் தி.மு.க., ஐ.என்.டி.யு.சி., இந்திய கம்யூனிஸ்டு முதலிய கட்சியைச் சார்ந்தவர்களாகும். இதில் சுமார் 200 பேர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களாவர். 3—6—1971 இரவு மூன்றாவது ஷிப்டு வேலைக்காக 78 தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர். இதில் 32 கம்யூனிஸ்டு யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் இரவு 9 மணிக்கு உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்தனர். இந்த உள்ளிருப்பு வேலைநிறுத்தத்திற்குக் காரணம் இந்த நிறுவனத்தில் வேலை செய்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோபால், வேலுசாமி என்ற இரு பையன்களை ஒரு செக்ஷனிலிருந்து இன்னொரு செக்ஷனுக்கு மாற்றியதை எதிர்த்தும், இதன் தொடர்பாக இரு பையன்களும் மாறுதலை ஏற்க மறுத்ததால் அவர்களுக்கு 'ஷோகாஸ் நோட்டீஸ்' கொடுத்ததை எதிர்த்தும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த 133 தொழிலாளர்களுக்கு 'சஸ்பென்ஷன்' கொடுக்கப்பட்டது. 8—6—71 முதல் சஸ்பென்ஷன் செய்யப்பட்ட தொழிலாளர்கள் தங்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென மறியல் போராட்டம் செய்து கொண்டிருந்தனர். கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் மட்டுமே இதில் ஈடுபட்டிருந்தனர். மற்ற தொழிலாளர்கள் வேலைக்கு சென்று கொண்டிருந்தனர். 25—6—71 இரவு ஒரு மணிக்கு மூன்றாவது ஷிப்ட் முடிந்த பின்னால் தொழிற்சாலையில் ஒழுங்காக பணியாற்றிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் தங்கள் வேலை முடிந்து தங்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். அதே நேரத்தில் சஸ்பென்ஷன் செய்யப்பட்டு வெளியில் வேலைநிறுத்தம் செய்து கொண்டிருக்கும் கம்யூனிஸ்டு தொழிலாளர்களில் எட்டு பேர்களும், வெங்கடேசன், ராமசாமி, ஜகதீசன், சின்னசாமி, மயில்சாமி, காளியப்பன், பழனிசாமி, எஸ். பழனிசாமி மற்றும் பலரும் அவனாசி ரோட்டில் இருக்கும் அவர்கள் யூனியன் ஆபிசுக்கு எதிராக சட்ட விரோதமான முறையில் கூடி நின்றிருந்தனர். இவர்கள் வேலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த தொழிலாளர்களில் சின்னக்குட்டி, ராஜமாணிக்கம், பழனிசாமி, துரைசாமி, கந்தசாமி நாராயணசுவாமி, தேவராஜன், ரங்கநாதன் இன்னும் பலரையும் அபாயகரமான ஆயுதங்களால் தாக்கி காயப் படுத்தினர். திரு. சின்னக்குட்டி கொடுத்த புகாரின் பேரில் பீளமேடு காவல் நிலையத்தில் குற்ற எண் 320/71 வழக்காக பதிவு செய்து. இ.பி.கோ. 147, 148, 326 பிரிவுகளின் கீழ் விசாரணை நடந்து



கொண்டிருக்கிறது. காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். பழனிசாமி, நாரயணசாமி, கந்தசாமி இம்மூவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். இதுவரையிலும் மேற்படி தாக்குதலில் ஈடுபட்ட வெங்கடேசன் உட்பட எட்டுப் பேர்களும் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த எட்டு பேர்களில் ஒருவராகிய காளியப்பன் தன்னை அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் அடித்ததாகப் போலீசார் கைது செய்த நேரத்தில் கூறினார். இவரையும் ரிமாண்ட் செய்வதற்கு முன் மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். போலீசார் தலையீடு எதுவும் இல்லை. எந்தவிதமான லத்தி சார்ஜும் நடத்தப்படவில்லை. போலீஸ் பாதுகாவல் வேண்டிய அளவுக்குப் போடப்பட்டுள்ளது. தற்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறுகிற மாதிரி அல்லாமல் நிலைமை சாதாரணமாக உள்ளது.

இந்த இரண்டு ஒத்திவைப்பு பிரேரணைகளைப் பற்றி பேசுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஏதோ தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு போலீசைப் பயன்படுத்துகிறது என்ற கருத்துப்பட சில வார்த்தைகளைச் சொன்னார்கள். போலீசார் இது போன்ற போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் என்றால் அவர்கள் ஈடுபடுவது பொதுவாக அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவும் வன்முறைச் செயல்கள் எதுவும் நடைபெறக் கூடாது என்பதற்காகவும் ஈடுபடுகிறார்களே தவிர முதலாளிகளுக்குச் சாதகமாகத் தொழிலாளர்களுக்கு விரோதமாகப் போலீஸ் தலையிடுவதாகக் கற்பித்துக் கொண்டு அரசுக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கமணி அவர்கள் பேசியது வருந்தத்தக்கதாகும். அப்படிப் போலீசைப் பயன்படுத்தி முதலாளிகளுக்கு ஆதரவாகச் சங்கம் அல்லது தொழிலாளர் தோழர்களுக்கு எதிராக எந்த விதமான காரியத்திலும் அரசு ஈடுபடவில்லை. முதலாளிகள் தொழிலாளிகள் தகராறுகளைக் கூடுமானவரை பேசித் தீர்ப்பதில் தான் இந்த அரசு நம்பிக்கை கொண்டு அந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறது. சில தவிர்க்க முடியாத காரணங்களால் அசம்பாவிதங்கள் நடக்கின்ற தருணத்திலும் கூட அரசு மனிதாபிமானத்தோடு விவரங்களை ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. ஆகவே. ஒரு தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் என்றால் அந்தப்பக்கம் போலீசே வரக் கூடாது, அந்த முதலாளிகளை என்ன வேண்டுமென்றாலும் செய்வோம் என்றால் அதை அரசு பார்த்துக் கொண்டு இருப்பதற்கு ஒப்பாகிவிடும். அதைப் போலவே அடியாட்களைத் தயார் செய்து வைத்துக் கொண்டு முதலாளிகள் தொழிலாளர்களை மிரட்டக் கூடிய முயற்சிகள் நடைபெறக்கூடும். ஆகவே முதலாளிகளால் தொழிலாளர்களுக்கும், தொழிலாளர்களால் நிர்வாகத்தினருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும்

[திரு மு. கருணாநிதி] [1971 ஜூலை 1

தேவையும் ஒரு அரசுக்கு இருக்கிறது என்ற அளவில்தான் இந்த போராட்டங்களில் போலீஸ் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் அத்துமீறி போலீசார் நடந்துக்கொள்ளவில்லை என்பதை நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் பொள்ளாச்சியில் தங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று ஐ.என்.டி.யு.சி-யைச் சார்ந்த தொழிலாளர்களே கேட்டிருக்கிறார்கள். ஒரு ஆலையில் கிளர்ச்சியை ஒட்டி அங்கே இருக்கிற தொழிலாளர்களே போலீஸ் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே போலீஸ் தலையீடு என்று பேசுவது, எதை வேண்டுமென்றாலும் எழுதுவது என்கிற அளவு மாண்புமிகு உறுப்பினர்கள் அரசு மீது களங்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை அனுமதிக்கத் தேவை இல்லை என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் விளக்கத்திற்கு பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே இதற்கான அனுமதி மறுக்கப் படுகிறது.

### (5) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 26 பாசனம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல்—

"கோரிக்கை எண் 26-ம்—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,96,10.900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 10.96,10,900 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 10,96,10,900 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100'.

**திரு.கே. டி. கே. தங்கமணி :** "சிறு பாசனக் கண்மாய்கள் பாரமரிப்பு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி விவாதிக்க"—"கோரிக்கை எண் 26. பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 10,96,10,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** பாலமலை, தோணி மடுவு தண்ணீர் தேக்கத் திட்டத்தை எடுத்துக் கொள்ளாமலிருப்பது குறித்து விவாதிக்க— "கோரிக்கை எண் 26 பாசனம் என்ற தலைப்பின்கீழ்



1971 ஜூலை 1] [திரு. எம். சுரேந்திரன்]

ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,96,10,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss about the medium irrigation schemes that are needed for Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 10,96,10,900 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100".

### (ஆ) கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல்—"கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,32,30,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை ஹைவேஸ் ரோடுகளாக மேற்கொள்வது குறித்து விவாதிக்க—"கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,32,30,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சாவூர் மாவட்டம், நாகை துறைமுகத்தை சிறு துறைமுகத் திட்டத்தில் எடுத்துக்கொள்வது குறித்து விவாதிக்க—"கோரிக்கை எண் 27 பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,32,30,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சென்னை மூர் அங்காடிக் கெதிரிலுள்ள பொது மருத்துவமனை பணியாளர் விடுதியில் சாலை போடவும், கூவத்திலிருந்து ஏற்படும் தொல்லையைத் தடுக்க ஒரு தடுப்புச் சுவர் எழுப்புவது பற்றியும் நீண்ட நாட்களாக உள்ள திட்டம் பற்றி எடுத்துக் கூற—"கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,32,30,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்க—"கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,32,30,600-ல் ரூ. 10 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 13,32,30,600 under Demand No. 27. Public Works—Works be reduced by Rs. 100."

**(இ) கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,68,49,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 5,68,49,600 under Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant—be reduced by Rs. 100."

**திரு. என். மருதாசலம் :** பெருவழித்துறை கேங் மஸ்தூர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கக் கோரி விவாதிக்க—

"கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்— பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,68,49,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**(ஈ) கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,83,81,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

என்று கோருகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,83,81,800 under Demand No. 41—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss about early completion of Krishna Nathi, Rama Nathi Dam schemes in Ambasamudram taluk, I move—

"That the allotment of Rs. 9,83,81,800 under Demand No. 41—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, to discuss policy I move—

'That the allotment of Rs. 9,83,81,800 under Demand No. 41—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, பாண்டியாறு, புன்னம்புழா பாசனத் திட்டத்தை கேரள அரசின் ஒப்புதலோடு விரைவில் செயலாக்குவதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,83,81,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்",

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



**(உ) கோரிக்கை எண் 42— பொதுப்பணிகள் மூலதனச் செலவு**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு * என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,92,93,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 11,92,93,600 under Demand No. 42—Capital Outlay on Public Works be reduced by Rs. 100'.

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss the need for completing the railway over-bridge, Madurai, before the end of this year, I move—

'That the allotment of Rs. 11,92,93,600 under Demand No. 42—Capital Outlay on Public Works be reduced by Rs. 100'.

DR H. V. HANDE : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 11,92,93,600 under Demand No. 42—Capital Outlay on Public Works be reduced by Rs. 100'.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, கோவை, பல்லடம் வட்டங்களில் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக நெல்லித்துறைத் திட்டத்தை உடனே செயலாக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 11,92,93,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவையின் முன் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இன்றைக்கு 20 உறுப்பினர்கள் பங்கு கொள்ளவேண்டும். எல்லா உறுப்பினர்களும்—234 உறுப்பினர்களும்—பங்குகொள்ள விரும்புகிறார்கள். ஆனால் அனுமதித்த நேரத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு நிமிடமும் அவையின், உறுப்பினர்களின், உரிமையைப் பாதிப்பதாகும், அதை ஒரு 'என்குரோச்மென்ட்' என்று கூட சொல்லலாம். இந்த அவையின் நேரம் ரொம்பவும் முக்கியமானது. ஆகவே, அவரவர்களுக்குக் கொடுத்திருக்கின்ற நேரத்திற்குள் ஒவ்வொருவரும் 7 நிமிடங்கள் என்று வரையறுத்துக்கொண்டு, அதிமாகப் போனால் 8 நிமிடங்களுக்குமேல் போகாமல், தம்முடைய

---

* பாசன மானியக் கோரிக்கை, பாசன வசதிகள், சிறு துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் குறித்த அமைச்சர் உரை, ஆய்வுரைகள், அறிக்கை ஆகியவை முறையே இணைப்புகள் 1,2,3,4 ஆக 93-203-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

உரையை முடித்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அழைக்கப்படுவர் என்று சொல்ல வேண்டிய அப்படிப்பட்ட ஒரு சங்கடமான நிலையை அவைத் தலைவருக்குக் கொடுக்க வேண்டாம் என்றும் இந்த அவையை அமைதிகரமாக நடத்துவதற்கு இதில் முழு ஒத்துழைப்பு வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா**: பெருமதிப்பிற்குரிய அவைத்தலைவரவர்களே, மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்தைச் சொல்லுவதற்கு விழைகிறேன். நாகை துறைமுகத்தை சிறுதுறைமுகத் திட்டத்தில் எடுத்துக்கொண்டு அந்த துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். நாகை ஒரு பழைய நகரமாகும். நாகை துறைமுகத்தில் நல்ல அபிவிருத்தி செய்வதன் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அபிவிருத்திப் பணிகளுக்கும், இதர வளர்ச்சிற்குரிய வாய்ப்புகளுக்கும் வசதிகள் இருக்கிறது. அந்த முறையிலே இருக்கும் இந்த நாகை துறைமுகத்தை அரசு ஏற்று அந்த அபிவிருத்திப் பணிகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக கிராமப்புறச் சாலைகளை பஞ்சாயத்து யூனியன்களும் கிராம பஞ்சாயத்துக்களும் செப்பனிட்டு வருகிறார்கள். கிராமப்புற சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வதன் மூலமாக ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பஞ்சாயத்துக்கும் அல்லது பல்வேறு இனமாகக்கொண்டு சாலைகளை செப்பனிடலாம். அரசாங்கம் ஏற்று அந்த சாலைகளை அபிவிருத்தி செய்து அந்த சாலைகளுக்கு அபிவிருத்தி பணிகள் செய்வதன் மூலமாகத்தான் கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு நல்ல வசதிகள் ஏற்பட முடியும். அந்த முறையிலே சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது மிக மிக அவசியமாகிறது

அதுமாத்திரமல்லாமல், இன்றையதினம் கிராமப் பஞ்சாயத்துக்கள் வருவாயே இல்லாமல் இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் யூனியன்கள் அந்தச் சாலைகளைச் செய்ய வேண்டுமென்றாலும் விதிமுறைகள் அதற்கு இடம் கொடுக்கவில்லை. குறைவாக நிதி ஒதுக்குகிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பராமரிக்க வேண்டுமென்று தல மானியம் என்ற பெயரால் 40 காசுகள் கொடுக்கப்பட்டு வந்தது. அது, தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்துக்களின் கோரிக்கைகளை ஏற்று மைல் கணக்கிலே வேலை செய்ய வேண்டுமென்று சொல்லி 600 ரூபாய், 800 ரூபாய், 1,500 ரூபாய் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அம்மாதிரி பிரித்திருப்பதுகூட, தஞ்சாவூர் மாவட்டம் அல்லது கடற்கரையோரப் பிரதேச மாவட்டங்களை எடுத்துக்கொண்டால் 1,500 என்று இருப்பது மாவட்டவாரியாகப் பிரிக்க வேண்டுமே தவிர, பகுதி பகுதியாகப் பிரித்திருப்பது சில





நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த உத்தியோகப் பற்றற்றவர்கள் வட்டாரங்களுக்கு அதிகமாகவும், சில வட்டாரங்களுக்குக் குறைவாகவும் இருக்கும் பாரபட்சமான போக்கை இன்றையதினம் பார்க்க முடிகிறது. ஆகவேதான் அதிகமான தொகையை ஒதுக்கி அந்தச் சாலைகளையெல்லாம், உள்ளூர்ச் சாலைகளையெல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே கால்வாய்கள், ஆறுகள் நிறைய ஓடுகின்றன. அந்தக் கால்வாய்கள், ஆறுகளில் பாலங்கள் அமைப்பதன் மூலமாகத்தான் கிராமங்களை ஒன்றோடொன்று இணைத்து, ஒரு கிராமத்திலுள்ள மக்கள் மற்றொரு கிராமத்திற்குச் செல்லவும், வண்டி வாகனங்களை ஓட்டிச் செல்லவும் வசதியாக இருக்க முடியும். அந்த வகையிலே பாலங் விதிமுறைகளைச் சொல்லி அந்தப் பாலங்களைக் கட்ட முடியாத நிலைகளைக் கட்ட வேண்டும். ஆனால் அதற்குத் தடையாக பல்வேறு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் யூனியன் என்ஜினியர் என்றும், அசிஸ்டெண்ட் என்ஜினியர் என்றும், டி.ஈ. என்றும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. அந்த அதிகாரம் போதுமானதல்ல. அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு உள்ளேதான் அந்தத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றமுடியுமென்ற நிலையிருக்கிறது. அதை மாற்றிக் குறைந்தபட்சம் ஒரு யூனியன் என்ஜினியராக இருப்பவருக்கு 15,000 அல்லது 20,000 ரூபாய் வரையில் செலவு செய்ய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அதைப்போலவே அசிஸ்டெண்ட் என்ஜினியராக இருப்பவர்களுக்கு 40,000 முதல் 50,000 ரூபாய் வரையில் செலவு செய்ய அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும். அதேபோல கோட்டப் பொறியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவு செய்ய அங்கீகாரத்தை, அதிகாரத்தை வழங்குவதன் மூலமாகத்தான் தடையில்லாமல் அந்த வேலைகள் நடக்க முடியும். இல்லையென்றால் கறுப்பு நாடா என்று சொல்லுவார்களே, அதைப்போல பல்லாண்டுகளாகியும் நடத்த முடியாமல் இருக்கிறது. ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிகப்பு நாடா!

**திரு. ஆ. கு. சுப்பையா**: பெருவழித்துறையிலே பல்லாண்டுக் காலமாக தினக்கூலிகளாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அமைச்சரவர்களின் குறிப்பிலே பார்க்கும்பொழுது ஒருசில ஆயிரம் பேர்களைத் தினக் கூலிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் 10 ஆண்டு, 15 ஆண்டுக் காலமாக கேங்குகளாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கூலிகளைத் தினக்கூலிகளாக

[திரு. ஆ. கு. சுப்பையா] [1971 ஜூலை 1

இருப்பவர்களை மாற்றி நிரந்தரக் கூலிகளாக அவர்களை அமர்த்த வேண்டும். அவர்களுக்கு அரசாங்கத்தினுடைய சலுகைகள் அத்தனையும் கிடைக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் மதுக்கரையைச் சேர்ந்த பாலக்கரை என்ற அணையை விரைவில் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாண்டுக்காலமாக நீர்ப்பாசனத்துறையை எடுத்துக் கொண்டால் இந்த ஆண்டு பருவமழை மிகக் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநில முழுவதும் நீர்ப்பாசனத்திட்டத்தை. சிறுபாசனத்திட்டத்தைக் கொண்டு வருவதால் ஏரிகள், குளங்கள், கால்வாய்களைத் தூர் எடுத்து அந்தக் கால்வாய்கள் தூர்ந்திருப்பதாலே புதிதாக வெட்டி அந்த நீர்ப் பாசனத்திட்டத்தை மாநிலம் முழுவதும் கொண்டுவரவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே குளங்கள் ஏரிகள் போன்றவைகளெல்லாம் தனி நபர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது, அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கின்றன. அதையெல்லாம் தூர் எடுத்து அந்தக் குளங்களை அரசாங்கத்தின் செலவிலே வெட்டிக் கொடுப்பதன் மூலமாக அவர்கள் காலத்திலே விவசாயம் செய்யத் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொண்டு விவசாயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ள முடியும். அந்தக் காரியங்களையெல்லாம் சிறுபாசனத்திட்டத்திலே கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் சில மாவட்டங்களிலே, இராமநாதபுரம், புதுக் கோட்டை, தஞ்சை போன்ற மாவட்டங்களிலே கிணறுகள் வெட்டக்கூடிய திட்டத்தை, சமுதாயக் கிணறு திட்டமாக, அரசாங்கத்தினுடைய திட்டமாகக் கொண்டு வருவது, அதற்கென்று ஏற்படுத்துவது, சமுதாயக் கிணறுகளை வெட்டுவதற்கென்று பிரிவுகளை ஏற்படுத்துவது, அதற்காக ஒரு டிபார்மெண்டையும் அரசாங்கம் ஏற்படுத்துவது போன்றவற்றைச் செய்ய வேண்டும். அவ்வாறு ஏற்படுவதால் அந்தக் கிணறுகளின் மூலமாக கீழ் ஊற்று நீர்களை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இன்றையதினம் காவேரி விவகாரம் நம்முடைய தலைக்குமேலே இருக்கிறது. அந்தக் காவேரி விவகாரம் முடியவில்லை என்றால் இன்றையதினம் காவேரி ஆற்றுப் பாசனத்தில் இருக்கும் பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கான முறையிலே இந்தக் கீழ் ஊற்றுக்கான ஆதாரங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நாற்பத்தொன்பது கோடி ரூபாயில் தஞ்சாவூர் டெல்டாப் பகுதியில் பாசனத்தைப் புதுப்பிக்கும் திட்டத்தைத் தயார் செய்து உலக வங்கியிடம் ஒப்புதல் வாங்கியிருப்பதாகக் கூறுகிறார்கள்.



1971 ஜூலை 1] [திரு. ஆ. கு. சுப்பையா]

இதை ஒவ்வொரு ஆண்டும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். உலக வங்கி ரூபாய் தருவதாகச் சொல்லுகிறார்களா, இல்லையா? இல்லையென்றால் நம்முடைய அரசாங்கம் எந்த வழியிலேயாவது இந்தத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் இந்தப் பாசனத்தைப் புதுப்பிக்க ஏற்பாடுகள் செய்ய முடியும்.

மற்றொன்று இறைவைப் பாசனத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவது மிகவும் மந்தமாக இருக்கிறது. அதற்குக் காரணம், விவசாயிகள் விரும்பும் நல்ல திட்டம் நிறைவேற்றப்பட்டு ஆனால் இன்றைக்கு சகட்டுமேனிக்கு வரிவிதிப்பதன் மூலம் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். நீர்ப்பாசன வரிக்கும், இறைவைப் பாசன வரிக்கும் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கிறது. சாதாரணமாக தண்ணீர்ப் பாசனத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு 10 ரூபாய் என்றால் இறைவைப் பாசனப் பிரதேசங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 30 ரூபாய் வரை தீர்வை விதிக்கப்படுகிறது. அதிகமான தீர்வை விதிப்பதன் மூலம் விவசாயிகள் தங்களுக்கு இந்தத் திட்டம் தேவையில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு வருகிறார்கள். அந்தத் தீர்வையைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு ரெவின்யூ அதிகாரிகள் அவர்களது சொத்து சுகங்களை ஜப்தி செய்து வசூல் செய்யக்கூடிய ஆபத்தான நிலை இருக்கிறது. ஆகவே, சமமாக இருக்க வேண்டும். அம்மாதிரி வரியை விதிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த காண்டிராக்ட் முறை ஒழிக்கப்பட வேண்டும். காண்டிராக்ட் முறை இருப்பதால் அரசாங்கம் எவ்வளவு வேகமாக வேலைகளைச் செய்ய வேண்டுமென்றாலும், அதற்குரிய ரூபாய்களை ஒதுக்கினாலும் காண்டிராக்டாரர்கள் அந்த வேலையைச் செய்ய முன்வரவில்லை. அவர்கள் அதிகச் செலவாகிறது என்ற காரணத்தைக் கூறி டெண்டர் கேட்க மறுத்துவிடுகிறார்கள். ஒரு சமயத்தில் அவர்களெல்லாம் சேர்ந்து கட்டுப்பாடாகயிருந்து வேலைகளையே முடக்குகின்ற முறையிலே அவர்கள் ஒன்று சேர்ந்து வருகிறார்கள். ஆகவே, அந்த வேலைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கப் பொறுப்பிலே அந்த வேலைகளை, நிர்வாகப் பொறுப்பிலே செய்வதன் மூலமாகப் பல்வேறு நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும். அரசாங்கத்தின் அதிகாரியின் நேரடிப்பார்வையிலே வேலைகள் நடக்க உதவிகரமாக இருக்க முடியும், வேலைகளும் நல்ல முறையில் நடக்கும். காண்டிராக்டர்கள் அடிக்கும் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி வேலைகளை நல்ல முறையிலே செய்ய முடியும்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே வடிகால் நவீன பாசனத்திட்டம் என்ற முறையிலே கால்வாய்களையும் மாடர்னிசேஷன் ஸ்கீம் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு என்று வேலை செய்து வருகிறார்கள். ஆற்றுக்கரைகளிலே உள்ள இரண்டு பக்கங்களிலே ரிவெட்மெண்ட் கட்டுகிறார்கள். அவ்வாறு கட்டும்

பொழுது காண்டிராக்டர்கள் 20 மூட்டை மணலுக்கு ஒரு மூட்டை சிமெண்ட் கலந்து சிலாப் போட்டு அடிக்கிறார்கள். அது விரைவிலேயே உடைந்துவிடுகிறது, தண்ணீரிலே கரைந்துவிடுகிறது. இம்மாதிரி அவர்களுடைய ஒரே நோக்கத்தோடு. தாங்கள் சம்பாதிக்க வேண்டுமென்று ஒரே நோக்கத்தோடு செய்கிறார்களேயொழிய அக்கறையோடு செய்யவில்லை. ஆகவே, இம்மாதிரி மராமத்து வேலைகளுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் விரயமாகிறது. அதைத் தடுக்கும் முறையிலே அரசாங்கத்தின் நிர்வாகப்பொறுப்பிலே அந்த வேலையைக் கொண்டுவர வேண்டும். அந்த முறை வந்தால்தான் நம்முடைய நாட்டிலே ஒதுக்கும் பணம், பல கோடி ரூபாய் மிச்சப்படுத்த முடியும். நாட்டு மக்களுக்கு உதவிகரமாக இருக்க முடியும். விவசாயிகளுக்கு உதவி செய்வதாக இருக்க முடியும் என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய தொகுதியில் பல பாலங்களைக் கட்ட வேண்டும், பல சாலைகளைச் செப்பனிட வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று என்னுடைய வெட்டுத்தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். நான் 15 வருஷங்களாகச் சட்டமன்றத்தில் இருக்கிறேன். காங்கிரஸ் ஆட்சியிலேயிருந்து இன்று வரையிலே அந்தத் தீர்மானத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். அதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு வருஷத்திற்கு ஒன்றிரண்டு வேலைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*** திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் பொதுப் பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாசனம், மற்றும் பொதுப்பணி பற்றிய மானியக் கோரிக்கைகள் அளித்திருப்பதை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பசிப் பிணியைப் போக்க இந்த அரசு பொதுப்பணித் துறை மூலமாக எடுத்திருக்கும் மிகப் பெரிய பணிகள், நடவடிக்கைகள் மூலமாகத்தான் இன்றைக்குத் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். அந்தத் தன்னிறைவுக்கு மூலகாரணமாக இருப்பது பொதுப்பணித் துறையின் மிகச் சிறப்பான பணிகள்தான். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் கலைஞர் அவர்கள் சில முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அன்றைக்கு அதிகாரிகளை வைத்துக் கொண்டு நீர்ப்பாசன மாநாடுகளை நடத்தி நாட்டில் எப்படியெல்லாம் பொதுப்பணித் துறை வேகமாகச் செயல்பட வேண்டுமென்பதற்கான திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். கடைமடையில் தண்ணீர் வரவில்லை என்றால், அவர்கள் இங்கிருந்து அந்தப் பகுதிக்கே போய் நீர்ப்பாசனத்திற்கு வழி வகை செய்தார்கள். அதே வழியில் இன்று பொதுப்பணி அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு சாதிக் பாட்சா





அவர்கள் அமைதியோடும், அக்கறையோடும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இன்றைக்கு அரசாங்கம் தன்னுடைய அறிக்கையில் ஒரு சிறப்பான, பூரிப்பான செய்தியை வெளியிட்டிருக்கிறது. 'தமிழ் நாட்டில் இருக்கும் ஆறுகளையும், ஏரிகளையும், குளங்களையும் நீர்ப் பாசனத்தைப் பொறுத்த அளவில் முழுக்க முழுக்க நாம் பயன்படுத்தி விட்டோம். இனிமேல் நீர் வளங்களை பயன்படுத்த வேண்டுமானால் பூமிக்கடியில் தோண்டி கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கும் நீர் வளத்தைத்தான் பயன்படுத்த வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்றி இருக்கும் பொதுப்பணித் துறையை இந்த மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கெங்கு ஊற்று நீரைப் பயன்படுத்தவில்லையோ அதிலே குறிப்பாக கவனம் செலுத்தி வட செங்கற்பட்டு மாவட்டப் பகுதியில் ஊற்று நீரைக் கண்டுபிடித்து இயந்திர வசதிகள் மூலம் வெளிக் கொணர்ந்து வறண்டு கிடைக்கும் பிரதேசங்களை வளம் கொழிக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு இன்று சரித்திரத்தில் மறக்க முடியாத பணிகளைப் பொதுப்பணித் துறை மூலமாகச் செய்து வருகிறது. தஞ்சாவூரிலே காவேரி இன்று ஓடிக் கொண்டிருக்கிறது. காவேரித் தண்ணீரை சென்னை நகர மக்களும் குடித்து தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற வகையில் 21 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடத் திட்டமிட்டு செம்மையாக முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் நெடி அடிக்கிற நிலையில் இருந்த கூவம் இன்றையதினம் மணக்கின்ற கூவமாக மாறியிருக்கிறது. எதிர்காலத்திலே, இந்த ஆட்சி பொறுப்பேற்றிருந்த காலத்திலேதான் கூவம் எழிலான ஆறாக மாறிற்று என்று சொல்லும் நிலை நிலைத்து நிற்கப் போகிறது. இங்கிலாந்துக்குச் சென்றவர்கள், இலண்டனைப் பார்த்தவர்கள், தேம்ஸ் நதியில் படகில் செல்லும் காட்சியைப் பார்த்து வந்தவர்கள், சென்னையில் அந்தக் காட்சியைப் பார்க்க முடியுமா என்று கனவு கண்டார்கள். வெகு விரைவில் கூவத்தில் படகுகளில் பயணம் செய்யும் அந்த எழிலான காட்சியைக் காணுகின்ற நிலைமையை உருவாக்க இருக்கும் பொதுப்பணித் துறை அமைச்சரையும், துறையின் பணிகளையும் நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதை ஆழப்படுத்தும் திட்டத்தில் எங்களுடைய பொன்னேரி வட்டத்தில் இருக்கும் பகுதியில் இருந்து செங்கற்பட்டின் தென்கோடி வரையில் மிகச் சிறப்பாகப் பயணம் செய்கிற அளவுக்கு, போக்குவரத்து நடைபெற படகுகளை விடுகின்ற

[திரு. கா. வேழவேந்தன்] [1971 ஜூலை 1

அளவுக்கு, லாஞ்சுகளை விடும் அளவுக்கு செம்மையாகச் செயற் படுத்த வேண்டும். கல்கத்தா, ஹவுரா போன்ற பகுதிகளில் போக்குவரத்தைச் சமாளிக்க, போக்குவரத்துத் துறை அமைச் சரைக் காப்பாற்ற, இந்தப் படகுப் போக்குவரத்து தொழிலாளர் களுக்கும், மற்றவர்களுக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஹவுரா போன்ற மற்றப் பகுதிகளில் எல்லாம் கடைப்பிடிக்கும் முறையில் பழவேற்காட்டில் இருந்து என்னூர் போன்ற இடங் களுக்குத் தொழிலாளர்கள் போகும் அளவுக்கு, அவர்கள் பஸ் களை நம்பிக்கொண்டிராமல் லாஞ்சுகளில் சென்னைக்கு வரவும், தென் சென்னைப் பகுதிக்கு வரவும் வழிவகைகளைச் செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு சிறப்பான பணிகளைச் செய்து வரும் நம்முடைய அரசாங்கம் இன்னொரு காரியத்தையும் செய்து நல்ல பெயரைத் தேடிக் கொள்ள வேண்டும். இன்று தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புகள் அளிக்கப்பட்டிருக் கின்றன. அதே போன்று இணைப்புச் சாலை இல்லாத கிராமங்களே இல்லை என்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்ற அளவுக்கு வெகு விரைவில் நெடுஞ்சாலை பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் முன்னோடியாக இருக்கும் முதலமைச்சர் அவர்கள் இதிலும் கவனம் செலுத்தி கிராமங்களை இணைக்கும் வகையில், அரிசன காலனிகளை இணைக்கும் வகையில் சாலைகளை ஏற்படுத்தித் தர தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு ஒன்றியச் சாலைகளைப் பெருவழித் துறை எடுத்துக் கொள்ளுவது அவசியமாக வேண்டுமென்று சொன்னோம். அமைச்சர் அவர்கள் கொஞ்சம் மகிழ்ச்சியான செய்தியை அளித் திருக்கிறார்கள். இந்த ஆண்டு ஆயிரம் மைல்கள் அளவுக்கு ஒன்றியச் சாலைகளைப் பெருவழித் துறை எடுத்துக் கொள்ளப் போகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். இது மிகுந்த மகிழ்ச்சிக் குரிய ஒன்று. என்றாலும் நாட்டில் பஸ் ஓடும் வழித் தடங்களை எல்லாம் எப்படியும் பெருவழித் துறை எடுத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. எங்களுடைய பகுதியைப் பொறுத்த வரையில் சில கோரிக்கைகளைக் கூற விரும்புகிறேன். சென்னை யிலிருந்து நெல்லூர் செல்லும் சாலையில் பேசின் பிரிட்ஜை அகலப்படுத்தும் வேலையை விரைவுபடுத்த வேண்டும். அந்த வேலையை அரசாங்கமே தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறது என்று கூறவில்லை. மற்ற வழக்குகளும் வந்தன. அந்த வேலையை விரைவாக முடித்துத் தரவேண்டும்.

வட சென்னைக்கும், சென்னையின் வட மாவட்டங்களுக்கும், ஆந்திரத்திற்கும் போக்குவரத்திற்கு முக்கியமான நிலையாக பேசின் பிரிட்ஜ் இருப்பதால் அதனை விரைவுபடுத்தி முடித்துக்



1971 ஜூலை 1] [திரு. கா. வேழவேந்தன்]

கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குடதலை யாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலம் விரைவாகக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நன்றி தெரிவித்துக் கொள்ளு கிறேன். மழைக் காலத்திற்கு முன்பாக விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நன்றி தெரிவித்துக் கொள்ளு ஆற்றின் குறுக்கே புதுவாயிலுக்குப் பக்கத்தில் மேம்பாலம் புதுப் பிக்கப்படவிருக்கிறது. அதை விரைவாகச் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்தவரை சிறப்பான பணிகளை என்னுடைய தொகுதியில் செய்திருப்பதற்காக மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரூ. 12½ லட்சம் திட்டத்தில் அன்னப்பநாயக்கன் குப்பம் அணைக்கட்டுத் திட்டத்தைக் கட்டி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற வழி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தேக்கப்பட்ட தண்ணீர் கும்மிடிப் பூண்டி ஈசா ஏரிக்குப் பாய்ச்ச முடியாத நிலைமை இருக்கிறது. அதை நிறைவேற்றி கும்மிடிப்பூண்டி ஏரிக்கும் இத்தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும். நான் இந்தச் சிறு சிறு வேலைகளைப் பற்றி எல்லாம் சொல்லுவதற்குக் காரணம் இந்த முறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு புரட்சிகரமான அறிவிப்பைச் சொல்லியிருப்பதுதான். சட்ட மன்ற உறுப்பினர்கள் எந்தெந்தக் கருத்தைச் சொல்லுகிறார்களோ, அதைப் பரிசீலித்து அடுத்த ஆண்டு அதைப் பற்றி, முடிவு எடுக்கின்ற நடவடிக்கை களைப் பற்றிச் சொல்ல இருக்கிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

கும்மிடிப்பூண்டித் தொகுதியில் பல்வேறு இடங்களில் தரைப் பாலங்கள் கட்டப்படாமல் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக் கிறது. பொன்னேரி வட்டத்தில் புதுவாயல்-பெரியபாளையம் சாலையிலிருந்து புதுப்பாளையத்திற்கு ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றை உடனடியாக அமைக்கவேண்டும். திருவள்ளூர் வட்டத்தில் பெரியபாளையத்தில் ஆற்றின் குறுக்கே போக்குவரத்து தடைப்படும் அளவுக்குச் சிறிய தரைப்பாலமாக இருக்கிறது. தண்ணீர் வரும்போது அரசுப் பேருந்துகள்கூடக் கவிழ்ந்துவிடுகின்றன. அதை மேம்பாலமாகக் கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி வட்டம் பாலவாக்கத்தில் ஆரணியாற்றை இணைக்கும் பகுதியில் தண்ணீர் தேங்கி இருக்கிறது. அந்தப் பகுதி கிராமங்களில் இருந்து ஆரணிக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. பொன்னேரி வட்டத்தில் ஆரணிக்கும் பாலவாக்கத் திற்கும் இடையே ஆரணியாற்றின் குறுக்கே தரைப் பாலமாவது கட்டிக் கொடுக்க வேண்டும். நெடுஞ்சாலையைப் பொருத்தவரை கும்மிடிப்பூண்டித் துணைவட்டத்தில் ஈகுவார்பாளையம் அருகே ரோஸ்வே ஒன்று கட்டித் தரவேண்டும். ஏற்கெனவே நான் பொதுப் பணித் துறை அமைச்சரிடத்தில் எழுத்து மூலமாகக் கொடுத் திருப்பதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இன்று இந்த நாட்டின் பெரிய பிரச்சினையாக காவேரி நீர்ப் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. காவேரித் தாய் குடகில் தோன்றுகிற நேரத்தில் நேரே அரபிக் கடலில் கலந்திருக்கலாம். இயற்கையிலேயே நம்மீது அருள்கூர்ந்து தமிழ்நாட்டில் நீண்ட பயணமாக வந்து வங்கக் கடலில் காவேரி கலக்கிறது. காவேரித்தாய் இவ்வாறு உதவி செய்கின்ற நிலையில் மைசூர்காரர்கள் காவேரி நீரை அடைக்கும் வகையில் மத்திய அரசையும் மதிக்காது அணை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே நாம் எல்லோரும் இணைந்து நிற்க வேண்டும். இது பற்றித் தனித் தீர்மானம் வரப்போகிறது. அதிலே கட்சித் தலைவர்கள் பேச இருக்கிறார்கள்.

ஆகவே நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், விரோதிகளாயிருந்தவர் காலத்திலேதான் நமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், சுதந்திர காலத்திலும் நமக்கு தர்மம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அவையை ஒருங்கிணைந்து நின்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கரத்தையும், தமிழகத்தின் முதல்வர் கலைஞர் அவர்கள் கரத்தையும் பலப்படுத்த வேண்டுமென்று இறுதியாகக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*** திரு. அ. சின்னசாமி :** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது பேசுகிற வாய்ப்பு கொடுத்ததற்கு உள்ளபடியே நான் மிகவும் பெருமையடைகிறேன். இந்த மான்யத்தின் மீது பேசுவதற்கு முன்னால் மூன்றாவது முறையாக திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினரையே இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்த ஜெயங்கொண்டான் தொகுதி மக்களுக்கு நன்றி கூறி நம்மையெல்லாம் ஆளாக்கி விட்டு, இன்று வங்கக் கடலிலே துயிலும் அண்ணாவின் காலடியில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

இந்த மான்யத்தின் மீது கேட்கப்பட்டிருக்கும் தொகை, முன்னோடித் திட்டங்களையும் தேர்ந்தெடுத்துத் தந்து இருக்கும் இந்த அரசாங்கத்தை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். வானம் பொய்த்த காலத்திலேயே தமிழ்நாடு வறட்சிக்கு ஆளாகக் கூடாது என்ற நிலையில் பல முன்னோடித் திட்டங்களை ஆற்றித் தந்து, திட்டங்கள் முடிவுறும் சிறப்புகளை நினைத்தால் உள்ளபடியே பெருமையடைகிறேன், பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்த மான்யத்தில் எங்கள் உடையார்பாளையம்-ஜெயம் கொண்டான் தொகுதிக்கு ஏதாவது ஒரு வகையில் சாலை அமைப்போம் தண்ணீர் பாசன வசதி செய்வோம் என்று இருக்குமா என்று துருவித் துருவிப் பார்த்தேன். அது இதிலே காணாதது கண்டு உள்ளபடியே கவலையடைகிறேன். கடந்த நான்கு முறையாக ஜெயம்கொண்டம்--உடையார்பாளையத்து மக்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்து பெருமையடைந்து இருக்கிறார்கள். முன்னாலே





இருந்த காங்கிரஸ் நண்பர்கள் எங்கே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு வந்து விடுமோ என்று பயந்து அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவிதமான திட்டங்களும், நீர்ப்பாசன வசதிகளும் செய்யாமல் இருந்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் ஆட்சி பீடம் ஏறியதற்குப் பின்னால்தான் மெதுமெதுவாக சாலை அமைப்புகளும், பாசன வசதிகளும் ஏற்பட்டு வருகிறது. செய்த வசதிகள் போதாது. அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கள் தொகுதிக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் வந்து பார்வையிட்ட நேரத்தில், சில பணிகளுக்காக உடனடியாக சாங்ஷன் செய்கிறேன் என்று சொன்னார்கள். இதுவரையில் எந்தத் திட்டமும் அமுல் நடத்தப்படவில்லை. மார்க்கெட்டிங் காம்பெலக்ஸ் திட்டத்தின் கீழ் தீப்பளூர்-விளாங்குடி சாலை சேர்க்கப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அந்தத் திட்டம் சேர்க்கப்படவில்லை. இந்த தாபளூர் விளாங்குடி ரோட்டை அந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாப்பாக்குடி, ஸ்ரீபுரந்தான் ஆகிய ஊர்களில் உள்ள மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கள் பகுதியில் முந்திரிக் காடுகள் அதிகமாக இருக்கிறது. சாலை வாய்ப்பு ஏற்பட்டால்தான், அந்தப் பகுதி மக்கள் வசதியாக வாழமுடியும். அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் வசதி கிடையாது. சாலை வசதி கிடையாது, மின்சார வசதி கிடையாது. இப்படி எல்லாக் குறைபாடுகளுக்குமிடையே வாழும் அந்தப்பகுதி மக்களுக்கு சாலை வசதியாவது செய்து கொடுத்தால், நிம்மதியாக இருப்பார்கள். அதை உடனடியாக செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாசன வசதியின் கீழ் ஏற்கெனவே ஒரு திட்டம், மருதையாறு திட்டம் என்ற பெயரில் காங்கிரஸ் காரர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டு, பரிசிலனை செய்யப்பட்டது. மீண்டும் என்ன காரணத்தாலோ தெரியவில்லை, திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்கு பெற்றுவிடுமோ என்ற காரணத்தால் அதை கைவிட்டு விட்டார்கள். அந்தத் திட்டத்தை தயவு செய்து இந்த அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருதையாறு திட்டம் நிறைவேற்றப்படுமானால் தாபளூர் யூனியன் பகுதியில் உள்ள மக்கள் பாசன வசதி பெற்று, பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் விளைச்சல் பெற வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெண்ணங்குழி ஏரியை ஆழப்படுத்தும் திட்டம் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இன்னும் ஏரியை ஆழப்படுத்த தொகை ஒதுக்கித்தந்தால் இன்னும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குப் பயன்படும். இந்த ஏரியிலிருந்து செல்லும் வடிகால் நீர் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்களைப் பாழ்படுத்தி விடுகிறது என்று ஏற்கெனவே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அங்கே உள்ள பல கால்வாய்கள் தூர் வாரப்படாமல் இருப்பதால்

பாசன வசதி கெட்டு விடுகிறது. ஆகவே, அந்தக் கால்வாய்கள் தூர் எடுக்கப்பட்டு, ஆழப்படுத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை அமைப்பதைப் பொறுத்தவரையில், இந்த தா.பழூர்-விளாங்குடி சாலையை உடனடியாக அரசு ஏற்றுக்கொண்டு அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தையும், திருச்சி மாவட்டத்தையும் இணைக்கும் ஈச்சம்பட்டி, கொல்லாவரம் வழியாகச் செல்லும் பாதையில் ஒரு பாலத்தை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகள் தான்யங்கள், மற்றும் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். அந்தப் பாலத்தை வேறு ஒரு இடத்தில் கட்டுவதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைக் கான்சல் செய்து விட்டு, இந்த இடத்தில் அந்தப் பாலத்தைக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் பகுதியில் இருக்கும் பெரியம்மா பாளையம் ஏரியைச் சீர்படுத்தினால் பாசன வசதி பெருகும்.

பெரம்பலூர் பகுதியில் இருக்கும் இன்னொரு ஏரி, கள்ளப்பட்டி கடம்பூரைச் சேர்த்து ஏரித் திட்டம் கட்டித்தரவேண்டுமென்று ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மிக மிக நல்ல திட்டம். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை பெறுவார்கள், பல ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி பெறும். பூலாம்பாடி—வீரகனூர் ரோடு அமைத்துக் கொடுத்தால் வியாபாரம் பெருகும் என்று சொல்லிக்கொண்டு, எங்கள் மக்களுக்கு சாலை வசதி, நீர்ப் பாசன வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, பாசனம் மற்றும் பொதுப்பணி ஆகிய மான்யங்கள் மீது என் கட்சியின் சார்பில் கொடுத்து இருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி சில வார்த்தைகளைக் கூறவிரும்புகிறேன்.

முதல் மூன்று ஐந்தாண்டு திட்ட காலங்களில் இந்த மாநிலத்தில் சிறப்பாக பல பெரிய பாசன திட்டங்களை அன்று இருந்த அரசாங்கம் நிறைவேற்றி இருக்கிறது. இதை யாரும் மறுக்க இயலாது. 1966-ம் ஆண்டுக்கு பிறகு, இனிமேல் இந்த மாநிலத்தில் அணைகள் கட்டுவதற்கு ஆறுகள் இல்லை என்ற அளவில் எல்லா ஆறுகளின் குறுக்கேயும் அணைகளைக் கட்டியது, அன்று இருந்த அரசாங்கம். இதை நாம் எல்லோரும் அறிவோம். அதற்குப்பின்வரும் அரசாங்கத்திற்கு விட்டுச் சென்ற பணிகள் சிறு பாசனத் திட்டம்தான் என்று சொன்னால் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். இப்போது இருக்கும் நிலையில் இந்த அரசாங்கம் சிறு பாசனத்திட்டங்களை எந்த அளவுக்கு நாட்டுக்குப் பயன்படத்தக்க அளவுக்கு செய்து முடித்து இருக்கிறது என்று பார்க்கும்போது வேதனைப்படக் கூடிய நிலையில் இருக்கிறது.





குறிப்பாக, நான் சார்ந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிக் கூறவிரும்புகிறேன். பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் புரட்டிப் புரட்டி பார்த்தாலும் கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதிலும் குறிப்பாக பொதுப்பணித்துறைச் சார்ந்த பாசனம் போன்ற காரியங்களில்கூட புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். ஒருவேளை அமைச்சர் கூறலாம், சித்தார்—பட்டணம்கால் திட்டத்திற்காக 14 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று. அந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டே தொடங்கப்பட்டு இன்னும் முடியவில்லை. அந்தத் திட்டத்தைத் தவிர வேறு யாதொரு திட்டத்தையும் அந்தப் பகுதிக்கு ஏற்படுத்தவில்லை என்று கூறும்போது, நான் அமைச்சரை தனிப்பட்ட முறையில் குறைகூற விரும்பவில்லை, இந்த அரசுக்கு ஒரு அரசியல் நோக்கம் இருக்குமோ என்று ஐயப்படுகிறேன். அவ்வாறு அரசியல் நோக்கம் இருந்தால், ஜனநாயக அமைப்பில் அது சரியல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1968-ம் ஆண்டு அன்றிருந்த முதலமைச்சர் திரு. அண்ணாதுரை கூட இந்த மாமன்றத்தில் வைத்த நிதிநிலை அறிக்கையில் சீர்பாப்பு கால்வாய் மறுபரிசீலனை செய்யப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அது மறுபரிசீலனை செய்யப்பட்டதாகவோ, ஏன் கைவிடப்பட்டது என்றோ தகவல்கூட இதுவரையில் எனக்குக் கிடைக்கவில்லை. நான் அந்த இலாகாவிற்கு பல மனுக்கள் பேரில் சென்று கொண்டிருக்கிறேன். இதுவரையில் மறுபரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. இது உண்மையிலேயே ஒரு முக்கியமான திட்டம். இதனால் அருமனை கிராமத்தில் சிதறால், வெள்ளாங்கோடு பகுதி மக்கள் பயனடைவார்கள். அதேபோன்று நெய்யாறு இடது கரை கால்வாயில் முல்லையாறு ப்ராஞ்ச் இருக்கிறது. அது பூர்த்தியாகவில்லை. ஒரு சில வேலைகள் நடந்திருந்தாலும், பராமரிப்பு வேலை இல்லாததால், எந்த நோக்கத்தோடு அது நிறைவேற்றப்பட்டதோ அது கைவிடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அருவிக்கரை இடது கரை கால்வாய் ஆந்தார் வரையில் வந்திருக்கிறது. அதை இன்னும் நீட்டவேண்டும். அது பற்றி மனுக் கொடுத்திருக்கிறோம். அது இந்த அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. அதைக் கவனிக்க வேண்டும். இன்னும் மாம்பழத்துறையாறு திட்டம் இருக்கிறது. அது திரு-கொச்சி அரசாங்கம் இருந்த காலத்திலேயே எஸ்டிமேட் எடுக்கப்பட்டு அந்த சமயத்தில் மாநிலங்கள் பிரிக்கப் பட்டன, அதன் காரணமாக வேலை தொடங்கவில்லை. இதனால் கொளச்சல் பத்மநாபபுரம் நகராட்சி பிரதேசங்களுக்கும், இரணியல் பஞ்சாயத்துக்கும் குடிநீர் வசதியும், அப்பிரதேசங்களுக்கு பாசனவசதியும் கிடைக்கும்.

இன்றைக்கு திருநெல்வேலி ஜில்லாவில் நாகர்கோவில்வரை உள்ள மணிமுத்தாறு கால்வாயில் எப்பொழுதாவது தண்ணீரைப் பார்த்திருக்கிறோமா என்றால், நிச்சயமாக நான் அதிகமாகப்

பார்த்ததில்லை. அதற்குக் காரணம் மணிமுத்தாறு டாக் 80 அடிக்கு மேல் பெருகினால்தான் தண்ணீர் வரும். இல்லை என்றால் அந்தக் கால்வாயில் தண்ணீர் விடும் நிலை இல்லை. அதனால் அந்தப் பிரதேசம் மிகவும் வறட்சியாக இருக்கிறது. இந்தக் கால்வாய் திருநெல்வேலி ஜில்லாவில் பிற்போக்கான பிரதேசத்திற்கு உதவுகிறது. இதை மறுபரிசீலனை செய்து, அந்த அணையில் இருக்கும் மடையின் உயரத்தைக் குறைத்து மணிமுத்தாறு கால்வாயில் தண்ணீர் விட வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தச் சாலைத் திட்டத்தின்படி, நீண்ட நாளாக கிழக்குக் கடலோரச் சாலை வெளிப்படுத்தப்பட்டு வைத்திருக்கிறது. மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறது. ஆனால் வேலை செவ்வையாக நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். சென்னையிலிருந்து, கன்னியாகுமரி வரையில் அங்கிருந்து மேற்குக் கடலோர வழியாக மாநில எல்லைவரையில் செல்லும் இந்தச் சாலை மக்களுக்கு அதிகமாகப் பயன்படக் கூடியது. சிறந்த சாலை. ஆகவே இதைத் துரிதமாக நிறைவேற்றுதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முதல் மூன்று திட்டங்களில் கன்யாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அதற்குப் பின்னால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஏதாவது ஒரு பாலத்தைக் கட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. எந்த மாவட்டத்திலும் எந்தப்பாலம் கட்ட வேண்டும் என்கிற தேவையை அமைச்சர் அறிவார்கள். கழிந்த நான்கு ஆண்டுகளில் ஒரு பாலத்தைக் கூடக் கட்ட முன்வரவில்லை என்பதை வேதனையோடு சொல்லுகிறேன். இந்த அறிக்கையிலும் எந்தப் பாலம் கட்டும் திட்டமும் இல்லை. ஞாரான்விளை-திக்குறிச்சி பாலம் பாகோட்டில் கட்ட திரு-கொச்சி அரசாங்க காலத்திலேயே எஸ்டிமேட் போட்டு வேலை தொடங்கும் சமயத்தில் மாநிலங்கள் பிரிந்த நிலை காரணமாக அந்த வேலை நடைபெறவில்லை. அதைப் பற்றி முன்பே இந்த மன்றத்தில் வெளிப்படுத்தியிருக்கிறேன். அமைச்சருக்கும் தெரியும். பொதுமக்கள் மனுக்களும் அனுப்பியிருக்கிறார்கள். இதுவரையில் அதை நிறைவேற்றித்தர இந்த அரசாங்கம் முன்வரவில்லை. அதேபோன்று திருவொட்டாற்றில் மூவாற்றுமுகம் அருமனையில் மாடப்பட்டி போன்ற இடங்களில் பாலம் கட்டத் தேவையிருக்கிறது. அதைப்பற்றி பொதுமக்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல் சாமியார் மடத்துக்கு அருகில் பருத்திவாய்க்காலில் ஒரு பாலம் வேண்டும்.

கன்யாகுமரி மாவட்டத்தில் பள்ளிகளெல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக இருக்கின்றன. அதை இந்த அரசாங்கம் அறியும். அந்தப் பள்ளிக்கூடங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்றால், அவைகள் இருக்கும் கட்டடங்களைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். கூரையில்லை, சுவர் இல்லை என்ற கட்டடங்களே இருக்கின்றன. கவலைக்கிடமான நிலை. ஒரு வேளை கூறலாம்,





அதற்காக ஒரு இலாகாவை வைத்திருக்கிறோம், அவர்கள் கொஞ்சம், கொஞ்சமாகக் கட்டடங்களைக் கட்டுகிறார்களே என்று. அந்த நிலையில் மெதுவாகப் போனால், எத்தனை ஆண்டுகளாகும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆகவே, துரிதமாக வேலைகளைச் செய்து அதிக கால தாமதம் இல்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொது மராமத்து இலாகா ஓர்க் சார்ஜ் எஸ்டாப்ளிஷ்மெண்ட் ஊழியர்கள் பற்றி ஒரு வார்த்தை. அவர்கள் நிலை எல்லா அரசியல் கட்சிகளாலும் இந்த மன்றத்திலே எடுத்துக் கூறப்பட்டு வந்திருக்கிறது. அவர்களை ரெகுலரைஸ் செய்து அவர்களும் நிரந்தர அரசாங்க சிப்பந்திகள் ஆக்கப்படவேண்டும் இவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க வேண்டும். அந்தப் பணியை எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு துரிதமாகச் செய்யவேண்டும். ஒருவேளை எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் தகுதி உள்ளவர்களாக இருப்பவர்கள் என்ற அளவில் இதைச் செய்ய வேண்டும்.

கடைசியாக கூவம் சீரமைப்புத் திட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை. இது ஒரு நல்ல திட்டந்தான். அது எந்த அளவுக்கு பலன் கொடுக்கும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதை ஆரம்பித்த சமயத்தில், இந்த மன்றத்தில் இதன் மதிப்பீடு ரூ. 110 லட்சம் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்று தந்திருக்கும் அறிக்கையில் ரூ. 190 லட்சம் என்று உயர்த்தப் பட்டிருக்கிறது. ஒரு வேளை நிர்வாகம் எஸ்டிமேட் போடும்போது விவரம் இல்லாமல் செய்தார்களோ என்றால், நிச்சயமாக நம்முடையது சிறந்த நிர்வாகம். உத்தியோகஸ்தர்கள் மிகச் சிறந்தவர்கள். ஆகவே, அரசாங்கம் அன்றைக்கு குறைந்த எஸ்டிமேட்டாக எடுத்து, நன்றாகத் தெரிந்தும், பிற்பாடு இந்த முறையில் அதிகப் படுத்திக் கொள்ளலாம் என்று செய்திருப்பார்கள் என்றால், அது வேதனை தரும் விஷயம். இன்றைக்கு குறைந்த அளவில் காட்டிவிடுவோம். பின்னால் அதிகத்தைக் காட்டலாம் என்று செய்வது நியாயமானது அல்ல.

ஆக, இந்த நிலையில் ஒரு வேளை இதுவரையில் எங்கள் ஜில்லா புறக்கணிக்கப்பட்டிருந்தாலும், இனிமேலாவது, அதை அமைச்சர் மறு பரிசீலனை செய்து, வருகிற ஆண்டில் எந்தெந்த வேலைகளை எடுக்க முடியுமோ அவற்றை எடுத்து நடத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

* **திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, இந்த 1971-72-ம் ஆண்டுக்கான, பொதுப்பணித் துறை அமைச்சரால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் அவைக்குப் புதியவன். நான் அவைக்குள்ளே வருவதற்கு முன்னே, கட்டப்பட வேண்டிய அணைகளும், பாலங்களும், போடப்பட வேண்டிய சாலைகளும் எழுப்பப் படவேண்டிய கட்டடங்களும்

[திரு. துரை முருகன்] [1971 ஜூலை 1

இல்லை, எல்லாம் முன்பே கட்டி முடித்துவிட்டார்கள் என்று வெளியே பேசிக் கொண்டிருந்தார்கள். நம்முடைய கலைஞருடைய காலத்துக்கு வந்த பிறகும், அதற்குப் பின்னாலே, இன்றைய பொதுப்பணி அமைச்சர் காலத்துக்கு வந்த பிறகும், பொதுப்பணித் துறை எத்தகைய சிறப்புப் பெற்று இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளே நுழைந்த பின்னர் தான், இந்த குறிப்பு ஏடுகளை பார்க்கும் போது தான், இந்த அரசு வந்த பிறகு எத்தனை அணைகள் கட்டப் பட்டிருக்கின்றன, எத்தனை சாலைகள் போடப்பட்டிருக்கின்றன, எத்தனை கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்தேன். வெளியிலே பேசினார்கள் எல்லாம் ஆறுகளுக்கும் அணைகள் கட்டிவிட்டோம், 'எம்.ஜி.ஆர்.', 'எஸ்.எஸ்.ஆர்.' போன்ற ஆறுகளுக்குத்தான் அணை போட முடியவில்லை என்று கூறிய காங்கிரஸ் சர்க்காருக்கு மட்டுமின்றி, அப்படிப் பேசியவர்கள் வாய்க்கும் அணை போட்டிருக்கிறது இந்த முன்னேற்றக் கழகம், அதுவும் இந்த பொதுப் பணித் துறை என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

இந்த இலாகா ஏற்கனவே முதல்வர், கலைஞர் கையில் இருந்து சீரும் சிறப்பும் பெற்றது. அவர் கையில் இருந்ததால் ஒரு தனி மகத்துவம் ஏற்பட்டது இந்தத் துறைக்கு. இதிலே பொறுப்புக் கொண்டவர்கள் சளைக்காமல் காரியங்களை துரிதமாகவும், வெகு திறமையாகவும் செய்யக்கூடிய அளவுக்கு இப்போது பொதுப் பணித்துறை அமைச்சர் பொதுப்பணித்துறையை நிர்வகித்து வருகிறார்கள் என்பதிலே நான் பட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கும் நிலைமையை நான் இப்போது சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய தொகுதி காட்பாடி தொகுதி. இது வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. இந்தத் தொகுதி ஆந்திர மாநிலத்தில் முன்னால் இருந்த காரணத்தினால் அது முன்னேற்றம் அடையவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு வந்த பிறகும் அதன் மீது கவனம் திரும்பாத காரணத்தால் அது மிக பிற்பட்ட நிலையில் இருக்கிறது. நான் வெளிப்படையாக சொல்ல வேண்டுமானால் காட்பாடி தொகுதி ஒரு தாய் இல்லாப் பிள்ளைபோல் இருக்கிறது. அது மிகுந்த வரட்சியான பிரதேசம். குடி-நீர் வசதி கிடையாது. குடிக்க நீர் இல்லை. என்னுடைய தொகுதி மிகுந்த வளம் நிறைந்த பகுதி—நிலவளம் உண்டு, ஆனால் நீர்வளம் இல்லை. அங்கு நீர்வளம் இல்லாததால், வளர்ச்சி இல்லை. ஐ. நா. சபை உதவியுடனும் பொதுப்பணித் துறையின் உதவியுடன் ஊற்றுக் கிணறுகள் அமைக்கப்போவதாக இந்த அறிக்கையின் மூலமாக அறிகிறேன். அதை அமைக்கிறபோது கொஞ்சம் அருள்கூர்ந்து காட்பாடி தொகுதிக்கு அதிக கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படி செலுத்துவார்களேயானால், விவசாயம் பெருகவும், வியாபாரம் தழைக்கவும் செய்யும், வளம் கொழிக்கும் தொகுதியாக மாறும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1971 ஜூலை 1] [திரு. துரை முருகன்]

அதேபோல் என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கும் லத்தேரி என்ற ஊருக்கு அருகில் ராஜா தோப்பு என்று ஒரு இடம் இருக்கிறது. ஏறத்தாழ 300, 400 ஏக்கர் நிலப்பரப்புப் பெற்று இருக்கிறது. இதற்கு இரண்டு பக்கமும் மலைதான். நடுவிலே நீர் வருகின்ற கானாறுகள். அவற்றின் மீது சிறு சிறு அணை கட்டினால் நிச்சயமாக 15,000, 20,000 ஏக்கர் அங்கே பாசன வசதி பெருகும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய கொஞ்சம் கருணை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, இன்றையதினம் இந்த அறிக்கையில் குறிப்பு தந்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும், எல்லா ஏரிகளும் நிறைந்து வழிகின்றன என்று இங்கே அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். செம்பரம்பாக்கம் ஏரி செங்கற்பட்டிலே உள்ளது. அதிலே கோடி போகிறதா? தாமல் ஏரியில் நீர் வழிகிறதா? காட்பாடி ஏரியில் கயல் துள்ளுகிறதா? லத்தேரி ஏரியில் கரை உயர்த்தப்படுகிறதா? காவனூர் ஏரிக்கு கரை கட்டப்படுகிறதா? இல்லை. கட்டப் போகிறதா? தூர் வாரப்படாத ஏரிகள் நிறைய உண்டு. மேல் மாயல் ஏரியில் பன்னெடுங்காலமாக தூர் வாரப்படவில்லை. இப்படிப் பட்ட நிலைமைகளை அருள் கூர்ந்து மாற்றி அமைக்க வேண்டும்.

குடிப்பதற்கு ஒரு சொட்டு கூட தண்ணீர் இல்லாத நிலையில், ஏரி நிரம்பி வழிகிறது என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற பொன்னை ஆற்றின் மீது பாலம் கட்ட வேண்டும் என்ற பன்னெடுங்காலமாக இருந்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய பொதுப்பணி அமைச்சரை நான் நேரில் அழைத்துச் சென்று அவரிடத்திலே எல்லாவற்றையும் விளக்கி இருக்கிறேன். இந்த அறிக்கையில் சேர்த்து இருப்பார் என்று எதிர்பார்த்தேன். அது கொடுக்கப் படவில்லை. ஒரு தனி நிதி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதிலே இந்தப் பாலத்தைக் கட்டுவதனால் மக்கள் போக்கு வரத்துக்கு ஏதுவாக இருக்கும். இது மிக அத்தியாவசியம் என்று அமைச்சர் அவர்களைக் கண்டு விளக்கி இருக்கிறேன்.

பிறகு என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பெரிய நகரம் காட்பாடி. இந்த காட்பாடியின் குடி நீர் பிரச்சினைப் பற்றி சொல்லவேண்டுமானால் பரிதாபத்துக்குரியதாக இருக்கும். நான் வெளிப்படையாக சொல்வேன். என்னுடைய தொகுதியில், காட்பாடி டவுன்ஷிப்பில் இன்றையதினம் ஒரு குடம் நீர் 10 பைசா, 5 பைசா என்று கொடுக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்திலே இருப்பவர்களை மிக பணிவோடு கேட்டுக் கொள்வேன். என்னுடைய தொகுதி வாழ் மக்களின் தண்ணீருக்காக இந்த மன்றத்திலே கண்ணீர் விட்டு கேட்டுக்கொள்கிறேன். தாகத்துக்கு தண்ணீர் கேட்கிறார்கள். அந்த பிரச்சினையை அருள் கூர்ந்து கொஞ்சம் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் இருக்கும் காட்பாடி ரெயில்வே மேம்பாலம் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஒரு வண்டிதான் போகலாம், மறு வண்டி வந்தால் அந்தப் பக்கத்தில் தான் இருக்கலாம். அப்படிப்பட்ட பாலத்தை அகலப்படுத்தவேண்டுமென்று திட்டத்தை அருள் கூர்ந்து சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் 230, அரிஜன காலனிகளுக்குமேல் இருக்கின்றன. இன்றையதினம் அந்தக் காலனிகளுக்கு ரோடு வசதி கிடையாது. ஆகவே, அத்தகைய நிலைமையை மாற்ற சாலைகள் போடவும், கட்டிடங்கள் அமைக்கவும், அணைகள் கட்டவும், ஏரிகளை ஆழப்படுத்தவும் இந்த அரசு கருணை உள்ளம் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோயினால் நலிந்துள்ள குழந்தைக்கு சத்துள்ள உணவு கொடுப்பது போல், மிகவும் பிற்பட்ட, காய்ந்த, வறண்டு போன நிலையில் உள்ள என் தொகுதிக்கு கொஞ்சம் கருணை காட்டுங்கள், அதிக அக்கறை செலுத்துங்கள் என்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவை கூறி இந்த மானியத்தின் மீது கேட்கப்பட்டுள்ள தொகைக்கு எனது ஆதரவை அளித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படி அரிசிக்காக மணிக்கணக்காக கியூ வரிசையில் நின்று அவதிப்பட்டதை கடந்த கால சரித்திரமாக்கி உணவுப்பொருள்கள் குக்கிராமங்களில் கூட வேண்டிய அளவு கிடைக்க கூடிய முறையில் நல்ல பாசன திட்டங்கள் பல தீட்டி நாட்டிலே நல்ல நிலைமையை உண்டாக்கிய இந்த பொதுப்பணித் துறையை நான் பாராட்டுகிறேன். என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் என்னுடைய தொகுதி பற்றியும் அங்கே என்ன நிலைமை என்பதைப்பற்றி திரு. துரை முருகன் சொல்லக்கூடிய வகையில் இல்லாவிட்டாலும், அவர்கள் தொகுதியை விட 3 மடங்கு வருமை நிலையில், வரட்சி நிலையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நீண்டகாலமாக என்னுடைய தொகுதியிலுள்ள நொய்யல் நதி திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று குரல் கிளப்பி வருகின்றோம். ஆனால் இது வரையில் ஒன்றும் செய்யவில்லை. அந்தத் திட்டம் இன்று வரையிலும் நிறைவேற்றப்படாமலேயே இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சுமார் 25,000 ஏக்கர் பாசன வசதி பெற்று நஞ்சை நிலங்களாக மாறும். குறிப்பாக, இந்த பிரச்சினை கடந்த 20 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. 1959-ம் ஆண்டு



மாண்புமிகு கக்கன் அவர்கள் காலத்தில் பொதுப்பணித்துறை ஸ்பெஷல் டிவிஷன் ஏற்படுத்தி பெரும் தொகையை செலவு செய்து செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டும், 29 மைல் நீள கால்வாய்களை வெட்ட அடையாள கற்கள் நடப்பட்டதோடு வேலை நின்று விட்டது. தேர்தல் வரும்போது பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, பிறகு கைவிடப்படுகின்றது. இந்தத் திட்டத்தை மிக துரிதத்துடன் நிறைவேற்றவேண்டுமென்று இந்த அமைச்சர் அவையை கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் வகுத்து அதனால் நல்ல பயனை கோவை மாவட்டம் பெற்று இருக்கின்றது. கோவை மாவட்டத்திலுள்ள தாராபுரம் போன்ற தொகுதிகளுக்கு இது ஒரு மறுமலர்ச்சி திட்டம். லோயர் பவானி திட்டத்தால் தண்ணீர் அளவு அதிகமாக கிடைத்தால் அந்தப் பகுதி நிலங்களுக்கு நன்மையாக இருக்கும். ஆங்காங்கு உள்ள சிறு ஓடைகளில் அணைக்கட்டுகள் (செக்டாம்) அங்கே வெள்ளம் வரும் காலத்தில் ஏரிகளிலும், குளங்களிலும், நீரை நிரப்பிக் கொண்டு, பாசனத்திற்கு வசதியாக இருக்கும். ஆகவே என் தொகுதியில் பல இடங்களிலும் ஏரிகளையும், குளங்களையும் அமைக்க அரசு திட்டம் தீட்ட வேண்டும்.

ஊற்று நீர்வள இயக்குனர்கள் ஊற்றுகள் இருப்பதைக் கண்டு பிடித்தால் விவசாயிகள், ஊற்று இல்லாத இடத்தில் கிணறுகள் தோண்டி நஷ்டம் அடையாமல், இருப்பதை தவிர்க்கலாம். நல் காஞ்சி நதியிலும் பள்ளப்பட்டி அருகாமையில் ஒரு தடுப்பு அணை கட்டி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வரக் கூடிய தண்ணீரை தேக்கி நிறுத்தினால் சுற்றுப்புறத்திலுள்ள கிணறுகளுக்கும், போர் பைப்புகளுக்கும் குடி நீர் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். குடகனாறுத் திட்டம் ஒன்று அமைச்சரவையின் ஆலோசனையில் இருக்கிறதென்று தெரிகிறது. இதைத் [illegible] தொகுதிக்கு மட்டும் தரப்போவதாக அறிந்தேன். அது நியாயமில்லை. ஒரு பகுதி தண்ணீர் கட்டாயமாக எங்களுக்கும் தரப்படவேண்டும். காரணம் எங்களின் தொகுதி ரொம்ப வரட்சி மிக்க தொகுதி. ஆங்காங்கு சிறிய ஓடைகள் உள்ளன. அவைகளிலெல்லாம் தடுப்பு 'செக் டாம்' ஏற்படுத்தினால் நீர்வளம் ஏற்படும்.

ஊற்று நீர்வள இயக்குனர் ஒருவர் ஏற்படுத்தப்பட்டு அவர் நல்லபல ஆராய்ச்சிகளை செய்வதாக அறிகிறேன். அப்படி ஒருவர் இருக்கிறாரா? அவரின் பணி எந்தத் தொகுதிக்கு இருக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து இந்த ஊற்று நீர்வள இயக்குனரை எங்களின் தொகுதிக்கு அனுப்பி பல பகுதிகளுக்கு ஆராய்ச்சி செய்யச் சொல்லி எங்களின் தொகுதியை வளப்படுத்த உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ராசபுரம்—அரவக்குறிச்சிக்கிடையில் அமராவதி நதியின் மேல் ஒரு அணை கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக

ஒரு வார்த்தை. என்னுடைய தொகுதிக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை. சாந்தாப்பாடி கிராமத்தின் அருகே சண்முக செட்டியாற்றில் குறுக்கே ஏரி ஒன்று அமைப்பதற்காக ரூ. 5,78,700 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால் ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் இருந்து நடக்கிறபோது வெளியில் நிற்கிற பிச்சைக்காரனுக்கு எச்சில் இலை சோறு மட்டும் கிடைப்பது போல இருக்கின்றது. அதாவது மற்ற தொகுதிகளுக்கெல்லாம் பலகோடிக் கணக்கான ரூபாய் பாசன திட்டங்கள் கிடைத்து அவைகள் செழுமையடைந்திருக்க எங்களுக்கு ஒரு சில லட்ச ரூபாய் கொண்ட ஒரு சிறு திட்டம் தான் கிடைத்திருக்கிறதென்று குறைப்பட்டுக்கொள்கின்றேன். நீங்கள் இதை எல்லாம் அன்புகூர்ந்து கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு [illegible] அவைத் தலைவர் அவர்களே, 1971-72-க்கான நீர்ப்பாசன மானிய கோரிக்கையின் மீது பேசுவதற்கு முன்னால் என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்த என் தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லி, அதற்கு அடுத்து நான் இங்கு வருவதற்கு வழி வகுத்துக் கொடுத்த எங்கள் கழகத் [illegible] அவர்களுக்கு அஞ்சலி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். 1971-72 மானிய கோரிக்கையை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். கழக அரசுப் பொறுப்பேற்ற பிறகு ஏழை எளிய விவசாயிகளின் வாழ்வில் அக்கறை செலுத்தி, பாசன வசதிகளைப் பெருக்கியும், கிராமப் பாதைகளைச் செப்பனிட்டும் வருகிற இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கிற நிலைமைகளையும் இங்கு சொல்ல விரும்புகிறேன். இப்போதுப் பொதுப்பணித் துறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிர்வாக பொறியாளர் என்று இருக்கிறார்கள். வட்டத்திற்கு ஒரு உதவிப் பொறியாளர் என்றிருக்கிறார்கள். இப்படி இருக்கிற நிலைமையில் சரிவர அவர்களெல்லாம் செயல்பட முடியாமல் வேலைப் பளு அதிகமாக இருக்கின்றதென்பதை அறிவீர்கள். எனவே, துரிதமாக வேலை நிறைவேறுவதற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்குள் இருக்கிற பாசன ஏரிகளைப் பராமரிப்பதற்கு ஒரு உதவிப் பொறியாளர் என்றும், டிவிஷனுக்கு ஒரு நிர்வாகப் பொறியாளர் என்றும் வைத்தால் துரிதமாக வேலை நடைபெறும் என்று குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பொதுவாக சிறிய நீர்ப்பாசன ஏரிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை. ஒன்றியங்களில் உள்ள சிறிய ஏரிகளுக்கு சில ஆயிரம் ரூபாய்கள் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் எந்த வேலையும் சரிவர நிறைவேற்றப்பட முடியவில்லை. அதை மாற்றி ஏரிகளை எல்லாம் பொதுப் பணியின் கீழ் கொண்டு வந்தால் நல்ல முறையில் செப்பனிடப்பட்டுப் பராமரிக்கப்படும் என்று கருதுகிறேன்.





என்னுடைய தொகுதியில் மணி, முத்தா, கோமுகி, ஆகிய மூன்று நதிகள் ஓடுகின்றன. 1920-ம் ஆண்டு இந்த நதிகளில் அணை பெரிதாக கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டது. அதில் முத்தா நதியின் மேல் 1968-ல் அணைக் கட்ட ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கோமுகி நதியில் அணைக் கட்டப்பட்டு உள்ளது. மணி நதியின் குறுக்கேயும் அரசு அணைக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ராமராசாபுரம் அருகில் வாய்க்கால் வெட்ட 10,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 67-ம் ஆண்டுக்கு முன்பு துவக்கப்பட்டது. அணைக்கு கீழே வாய்க்கால் லெவல் சரியாக எட்ஜு வெட்டப்படாமல் சரிவர அந்த வாய்க்கால் அமையவில்லை. வாய்க்கால்கள் நீண்டகாலமாக வேலைகள் சரியான முறையில் செய்யப்படாமல் இருந்து வருகிறது. இந்த மணி நதியில் அணை கட்டப்பட்டால் அந்த வாய்க்கால்கள் நல்ல முறையில் செயல்படுத்தலாம் அதைப் போலவே ஏரிகள் இல்லாத அரசம்பட்டு போன்ற இடங்களுக்கும் சுமார் 5,000 ஏக்கர் பாசனவசதி பெறும்.

அடுத்ததாக, பெருவழித் துறையில் இன்றையதினம் ஊராட்சி ஒன்றிய சாலைகளெல்லாம் லோகல் கிராண்ட் கிராம வேலைத் திட்டம் என்ற அடிப்படையில்சாலைகளுக்கெல்லாம் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் ஒதுக்கப்படுகிறது. இவ்வளவு சிறிய தொகையை வைத்துக் கொண்டு எந்த வேலைகளையும் சரிவரச் செய்ய முடியாததால் இந்தச் சாலைகளெல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறது. ஆகையால் ஐந்து மைல்களுக்கு மேலே இருக்கிற சாலைகளெல்லாம் நெடுஞ்சாலை இலாகா எடுத்து செயல்பட்டால் கிராமங்களில் சாலைகள் நல்ல முறையில் செப்பனிடப்பட்டு அங்கே பஸ்கள் செல்ல வசதி ஏற்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக சங்கராபுரம் தொகுதியில் மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலைக்கு லாரிகள் வருகிறது. சாலைகள் பள்ளமும், படுகுழியுமாக மிகவும் மோசமாக இருப்பதால், இந்த லாரிகள் செல்ல கஷ்டமாக இருக்கிறது. கரும்பு ஏற்ற லாரிகள் வர மறுக்கிறார்கள். எனவே, சங்கராபுரம்-மூங்கில்துறைப்பட்டு சாலை செப்பனிடப்பட வேண்டும். அதைப் போல திருக்கோவிலூர்-சங்கராபுரம் சாலை 15 அடி அகலம் உள்ள சிறுபாலங்கள் உள்ளதை அகலப்படுத்தப்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். கரும்பு செஸ் நிதியிலிருந்து சில சாலைகள் புதிதாக போடப்படவேண்டும் என்று திட்டமிட்டு ஏற்கனவே பல சாலைகள் சர்வே போட்டார்கள். சாலைகள் இன்னும் போடப்படாமல் நிற்கிறது. எனவே அதையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, தியாகதுருகம்-சங்கராபுரம் சாலை போன்ற சாலையை கரும்பு செஸ் நிதியிலிருந்து போட வேண்டுமென்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் திட்டமிட்டார்கள். அதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் உள்ள மக்கள் நகரங்களுக்கு வர பஸ் வசதிகள்

செய்து தர வேண்டுமென்று சொல்லி, கிராமங்களில் ஐந்து மைல் தூரத்திற்கு மேல் உள்ள சாலைகளையும் ஏரிகளின் பராமரிப்புப் பொறுப்பை சர்க்கார் சார்பில் பொதுப்பணி பெருவழித் துறை இலாக்காக்கள் மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நீர்ப்பாசன ரோடு வசதி மானியத்தின் பேரில் எனது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நமது தமிழ் நாட்டிலே பாசன வசதிக்கான எல்லா காரியங்களையும் செய்து விட்ட பிறகு ஆறுகளின் மூலம் எல்லா வசதிகளையும் ஏற்படுத்திவிட்ட பிறகு இனிமேல் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை பயன்படுத்துவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பெரும் அணைக்கட்டு திட்டங்கள் நாம் ஓரளவு நிறைவேற்றிவிட்டோம் என்று இருந்தாலும் கூட கிராமப் புறங்களில் உள்ள பல காட்டாறுகளின் தண்ணீரை மிகுதியாக பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் பாண்டியாறு, புன்னம்புழா ஆறுகளைப் பற்றி நேற்றைய தினம் பத்திரிகையில் பார்க்கிறபோது கேரள அதிகாரி ஒருவர் அந்தத் திட்டத்திற்கு எந்த சம்மதமும் கொடுக்க முடியாது என்று கூறி இருக்கிறார். இதை அரசு தீவிரமாக பரிசீலித்து கேரள அரசோடு கலந்து பேசி அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நேற்றைய தினம் ஒரு பத்திரிகை குறிப்பில் பார்க்கிறபோது மேட்டூரிலிருந்து வருகின்ற நீர்பகுதியில் பல தொழிற்சாலைகளிலிருந்து விடப்படுகின்ற கழிவு நீர் கலக்க விடுவதால் நாளடைவில் இந்தத் தண்ணீர் குடிநீருக்கும் நீர்ப்பாசனத்திற்கும் கூட தகுதியற்ற நிலையில் ஆகிவிடுமோ என்று அச்சப்படக்கூடிய நிலையில் இருப்பதாக. இதை நம் அரசு கவனமாகப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக மேட்டூர் பகுதியில் சுற்றி உள்ள பகுதிகளில் பூமிக்கு அடியிலிருந்து எடுக்கப்படும் கிணற்று நீர் கூட குடிப்பதற்கும் நீர்ப்பாசன வசதிக்கும் லாயக்கு அற்ற நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அங்கே கெமிக்கல் தொழிற்சாலைகளில் இருந்து விடப்படுகின்ற கழிவு நீர் கிணற்று நீரை எல்லாம் கூட பாதித்து இருப்பதை பார்க்கிறோம். காவிரியை நம்பி இருக்கும் நாம் இம்மாதிரி பாதகங்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

அடுத்து, காவிரி பாய்ச்சல் பகுதியை நவீனப்படுத்தக் கூடிய திட்டம் நீண்ட காலமாக சொல்லப்பட்டு வருகிறது. உலக பாங்கில் நமக்கு உதவி அளிப்பது இதற்காக வழங்கப்பட





இருப்பது ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதை நவீனப்படுத்தும் வேலையை இந்த உலக பாங்கியின் உதவியை எதிர்பாராமலேயே செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

அடுத்து, வடிகால் வசதியைப் பற்றி ஓரளவு கவனம் செலுத்தப் பட்டு இருந்தாலும், இன்னும் வேகமான முறையில் அந்த வடிகால் வசதியை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கல்லணைக் கால்வாய் பாசன வசதி என்பது பழைய காலத்தில் போடப்பட்ட திட்டமாக இருப்பதால் அங்கே ஆறுகளில் விடப் படும் தண்ணீர் பூமியில் உறிஞ்சப்பட்டு கடை மடை பகுதிகளில் போதிய தண்ணீர் வசதி கிடைக்கமுடியாத நிலை இருப்பதால், இப்பகுதியை நவீனப்படுத்தும் திட்டத்தில் ஜி.ஏ. மெயின் கானல் பிராஞ்சு கனல் எல்லாவற்றையுமே சிமெண்ட் லைனிங் போடப்படும் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வாய்க்கால்களுக்கு சிமெண்ட் லைனிங் போடுவதால் பின்னால் பல வகைக்கு அது பயன் உள்ளதாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

காட்டாறுகளில் கிடைக்கும் நீரைப் பாசன வசதிக்கு கிடைக்கச் செய்ய திட்டங்கள் போடப்பட வேண்டும் என்பதற்காக அரசின் கவனம் தேவை என்று குறிப்பிட்டேன். அக்னி ஆறு, திருமணஞ்சேரி என்ற இடத்தில் பல நாட்களுக்கு முன்னாலேயே ரிசர்வாயர் கட்டுவதற்கு திட்டம் இருந்தது. அது வேண்டாம் என்று படுக்கை அணை கட்டும் திட்டம் அனுமதிக்கப்படாமல் பரிசீலனையில் இருந்து வருகிறது. பல ஆண்டுகள் இப்படியே இருக்கின்ற காரணத்தால், அப்பகுதியில் உள்ள மக்கள் பாசனத்திற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அத்திட்டத்தை உடனடியாக அனுமதிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நசுகினி ஆறு திட்டம் வேதபுரி ஆறு அணை போன்ற திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பல இடங்களில் மேடான காட்டாறு பகுதிகளில் பம்பிங் முறை மூலம் பாசன வசதி ஏற்படுத்துவது என்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் பொய் குண்டாகுடி, கோழகுடிகாடு போன்ற இடங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் ஏற்படுவதற்கான நிலைமை பரிசீலனையில் இருக்கிறது. இதையும் சீக்கிரமாக அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில கரம்பக்குடி, நெரிங்குளம், நெய்வேலி, பலாவிடுதி குளத்திலிருந்து காடுவெட்டி விடுதி வரை உள்ள இடங்களுக்கு பாசன வசதி செய்து

தரவேண்டும், இங்கு உள்ள ஊற்றுவசதிகளை கண்டுபிடித்து பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ஊற்றுகள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்க யூ. என் டி. பி. போன்ற வற்றின் மூலம் அரசு பல சௌகரியங்கள் செய்து வருகிறது. எங்கெங்கு யார் யார் கிணறு போட முன் வருகிறார்களோ, அவர்களுக்கு அங்கே நீர் ஊற்று இருக்கிறது என்பதை கண்டு பிடித்துத் தர அரசாங்கம் சாதனங்களை ஏற்படுத்தித் தரவேண்டும். நீர் ஊற்று ஒரு இடத்தில் இருக்கிறது என்றால் அதற்கு பக்கத்தில் 10 அடி தள்ளி கூட ஊற்று இல்லாமலே இருக்கிறது. ஆகவே, எந்த இடத்தில் ஊற்று கிடைக்கும் என்பதை கிணறு எடுக்கும் விவசாயிகளுக்கு கண்டுபிடித்துக் கொடுத்தால், அவர்களுக்கு பல நஷ்டங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து, சாலை வசதி பெருக்கும் திட்டத்தில பல காரியங்களை நாம் செய்ய வேண்டி இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ரோடு வசதி போதாது மிகவும் மோசமான நிலை என்று அரசாங்கத்துக்கு தெரியும். சில நாட்களுக்கு முன் நடந்த கருத்தரங்கில் கூட வருடம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் தனி மான்யமாக ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். முன்பு தஞ்சை மாவட்டத்திலிருந்து ரோடு வசதிக்காக 30 கோடி ரூபாய்கள் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் வருடத்திற்கு 6 கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்டிருந்தோம். அது வழங்கப்படவில்லை என்றாலும் வருஷத்திற்கு மூன்று கோடி ரூபாய்களாவது ஒதுக்கப்பட்டு நம் சாலை வசதிகளைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து. யூனியன் சாலைகளை நம்பிவயல்-அலிவலம் சாலை, அணைக்காடு- பழஞ்சூர் சாலை, துவரங்குறிச்சி-மறவக்காடு சாலை விக்கிரமம்-தாமரங்கோட்டை, கீழக்குறிச்சி- வடசேரி சாலை, பாப்பாநாடு-சோழகங்கரை ஆகிய சாலைகளும் மிக மோசமான நிலையில் உள்ளதால் அவற்றையும் செம்மைப்படுத்தி சீரமைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*** திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, இன்று 1971-72-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையோடு நமது சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பொதுப்பணித் துறையின் மானியக் கோரிக்கையின் மீது ஆதரவு தெரிவித்து சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தில் நமது பொதுப்பணி துறையை ஒட்டியும் நெடுஞ்சாலை துறையை ஒட்டியும் சிறந்த ஒரு மானியக் கோரிக்கையை நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதிலே நல்ல





பல புதிய திட்டங்களை குறிப்பாக அணைக்கட்டு திட்டங்களை இந்த நிதி ஆண்டில் சொத்து இருப்பது வரவேற்கத்தக்கது. அதோடு நல்ல பல புதிய சாலைகளையும் மேற்பாலங்களையும் அமைத்து போக்குவரத்து வசதியை நல்ல முறையில் ஏற்படுத்தி தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மத்திய அரசு உதவியோடு மாநில அரசு நல்ல பல வேலைகளில் இறங்கி இருப்பது நாம் எல்லாம் வரவேற்கத் தகுந்ததாகும். நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் முதுகுளத்தூர் தொகுதியானது நீண்டகாலமாக எல்லாத் துறையிலும் ஒதுக்கி வைக்கப்பட்ட பின்தங்கிய பகுதியாகும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு ஏனைய அமைச்சர் களுக்கும் தெரிந்த உண்மை என்று கருதுகின்றேன்.

அந்தத் தொகுதியிலே நீர்பாசன வசதிகள் நீண்டகாலமாக இருந்ததில்லை. அங்கே பல ஆறுகள் ஓடுகின்றன. ஆனால் ஜீவ நதிகளாக எந்த ஆறும் இல்லை காட்டாறுகள் மலட்டார் போன்றவை சிறிய ஆறுகளாக ஓடி கடலிலே வீணாகப் போய் விடுகின்றன. அந்த நீரைத்தேக்கி வைத்து விவசாயத்திற்கு நல்ல பல வசதிகளை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே புதிய திட்டங்களுக்குக் கணக்கு எடுக்கின்ற நேரத்திலே பொதுப்பணித் துறை பெரிய திட்டங்களை எடுக்கும் ஆய்வுக் கோட்டங்கள் அவர்களுடைய கணக்கிலேயே அந்த பகுதியிலே வருகிற ஈட் ஆப் வாட்டர் கணக்கெடுத்து விவசாயத்திலே உணவு உற்பத்தி டன் ஒன்றுக்கு எவ்வளவு தொகை செலவழிக்க வேண்டும் என்ற நியதியை வைத்திருக்கிறார்களோ அந்த கணக்கைப் பார்த்தால் அந்த தொகுதியிலே வளமான வாய்ப்புக்கு ஆறுகள் இல்லாத காரணத்தினாலே பாசன வசதி இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அந்த முதுகுளத்தூர் வட்டத்தில் ஒரு பொதுப்பணித் துறை ஆய்வுக்கோட்டம் ஒன்றை நிறுவவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் சில கோரிக்கைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தொகுதியிலே கிருதமால் திட்டம் நீண்டகாலமாக அரசின் கவனத்திலே இருக்கிறது. கிருதமாலுக்கு வருகின்ற நீர் சொந்தகை கண்மாயின் மாறுகால் மூலமாக வருகிறது. அந்த நீர் அருப்புக்கோட்டை-முதுகுளத்தூர் ஆகிய வட்டங்களிலுள்ள பல கண்மாய்களின் பாசனத்திற்கு வருகிறது. ஆனால் கொந்தகை கண்மாய்க்குத் தண்ணீர் வந்தால்தான் அங்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்கு ஒரு மாற்று யோசனையாக வைகையிலே இருக்கிற தண்ணீர் வெள்ளம் வருகிறபோது வருகின்ற தண்ணீரைப் பெரும்பனூர் சப்ளை கால்வாய் வழியாக கட்டனூர் டாங்க்குக்கு வரும் திட்டத்தை ஆரம்பித்து நடத்தினால் அதனால் தண்ணீர் வந்து விவசாயம் பெருக வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே எங்களுக்கு வைகை நீரில் உரிமை கொண்டாட உரிமை வேண்டும் என்று கூறவில்லை. மழை காலங்களில் அந்த கிருதமால் வழியாக பாசனத்திற்கு தண்ணீர் வருவதற்கு வழி செய்யவேண்டும்.

[திரு. காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி] [1971 ஜூலை 1

முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை பகுதி பின் தங்கிய மக்கள் வாழும் பகுதி. அந்த நல்ல மக்களுக்கு நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையிலும் இருப்பதாக அறிகிறேன். நாராயணக்காவேரி அணைகட்டும் திட்டம் கட்டப்படவில்லை. ஆனால் கால்வாய்கள், மதகு கால்வாய்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. அந்த திட்டம் நிறைவேறினால் மண்டலமாணிக்கம் பகுதி சாயல்குடி வரையிலும் நீர்ப்பாசன அபிவிருத்தி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இன்னும் மலட்டார், கூத்தன்கால், நாராயணைக் காவேரி திட்டம் கஞ்சம்பட்டிகால் திட்டம், பரளையார் திட்டம் இன்னும் பல சிறு சிறு பாசன கால்வாய்கள் திட்டங்கள் இருக்கின்றன. கிருதமால், கள்ளிக்குளம் என்ற திட்டம், பரிசீலனையில் இருந்து வருகிறது. முதுகுளத்தூர் பகுதியில் நீர்பாசன திட்டங்களுக்கு அதிக செலவுகள் செய்தால் நல்ல முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த அதிக அளவு நீர்ப்பாசன வசதி செய்து வந்தால் நல்ல உணவு உற்பத்திக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இதற்கான போதுமான நிதி வசதி இந்த நடப்பு ஆண்டில் ஒதுக்கப்படவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் மற்ற திட்டங்களுக்குச் செலவு செய்யக்கூடிய தொகையை இந்த நீர்ப்பாசனத்திற்கு அதிகமாக செலவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு சில கோரிக்கைகளை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நெடுஞ்சாலை துறையினரால் கடந்த 1957 ஆண்டு ஒரு நேரத்தில் எங்கள் பகுதியிலே கலவரத்தின் காரணமாக மத்திய அரசின் உதவியோடு பல சாலைகளை அங்கு அமைத்திருக்கிறார்கள். அந்த சாலைகள் 1957 முதல் இன்றைய 1971 வரையிலும் மேம்பாடு செய்யாமலும் பழுது பார்க்கப்படாமலும் அந்த சாலைகள் இருக்கின்றன. "செக்யூரிட்டி மெசர்ஸ்" திட்டத்தில் அமைக்கப்பட்ட சாலைகள் பழுது அடைந்திருக்கின்றன. அந்தச் சாலைகளைச் சீர்திருத்தி அதற்கு மானியம் அளித்து தமிழக அரசு அந்தச் சாலைகளை மேம்பாடு செய்யவேண்டும்.

பரமக்குடி கீரந்தைசாலை, உத்திரகோசமங்கைசாலை பழுதடைந்திருக்கின்றன. நடப்பு ஆண்டில் அந்த சாலைகளை சீர்திருத்தி போக்குவரத்து வசதி ஏற்பட வாய்ப்பு ஏற்படுத்தி வசதியை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய சாலைகள் அதிகமாக ஏற்கலவே அமைக்கப்பட்டு இருக்கிறது. அதைப் பழுது பார்ப்பதற்காக நிதி வசதி செய்து தரவேண்டும். அதற்கு செலவுக்கு 40 பைசா தலசாலை மான்யமாக இருக்கிறது. ஆகையால் நடைமுறையிலே சாலைகள் அபிவிருத்தி இல்லாமல் இருக்கிறது. அரசினுடைய மானியத்தை அதிகப்படுத்தி அந்த பின் தங்கிய பகுதியிலே சாலைகள் முன்னேற்றத்திற்கு வழி செய்யவேண்டும்.



1971 ஜூலை 1] [திரு. காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி]

புதிய சாலைகள் அமைக்க மக்களுடைய பங்கு ஏ.பி.சி.டி. என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ' ' பிரிவுக்கு 30 சத விகிதம் பங்குத் தொகை மக்கள் அளிக்க முன்வந்தால் என்று இருப்பதை, அந்தப் பகுதியின் பின்தங்கிய நிலைமை மனத்தில் கொண்டு அந்த பங்கை 5 சத விகிதம் அல்லது 10 சத விகிதமாக வரையறுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அந்தப் பகுதியில் நல்ல பல முன்னேற்றங்கள் செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த அளவுக்கு அரசின் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன்.

£ THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, today I am going to speak in Telugu, my mother tongue and thank you for permitting me to speak in that language.

Now, I wish to say a few ideas on the two demands, namely, Irrigation and Public Works.

I am glad to say that this Government, now and also during their previous four years' administration have been giving great attention to medium sized and minor irrigation works in the interest of the poor ryots. The Government that ruled this State previous to the present Government, gave their attention only to big and gigantic irrigation schemes, but neglected the small schemes and thus the small farmers became poorer.

I am also glad to state that this Government recommended to the Central Government to declare certain districts as very backward and on their recommendation, the Union Government have declared about 8 districts as backward in this state. In the brochure that was given to us yesterday it is stated as follows :—

"The following districts in the State have been identified by the Government of India as backward areas"

Eight districts are given in the list and n that Dharmapuri district tops the list.

With regard to Dharmapuri district, I wish to say that except Krishnagiri taluk which has some irrigational projects, other taluks like Harur, Hosur and Denkanikota taluks have been neglected with regard to irrigational facilities.

When the present Hon. Chief Minister was in charge of irrigation, Doddaballa project was sanctioned and people became glad. Then the amount was raised to one crore and it was definitely expected that this scheme would be sanctioned, before sanctioning the Chinnar Scheme in the same district. No doubt the Chinnar Scheme is also in the Dharmapuri district. We want these Two Schemes. Properly speaking the Doddaballa Scheme ought to have got the priority. Unfortunately, it has not yet been sanctioned. But I am glad that the Hon. Minister has stated that this scheme is also under consideration and I request him to give his special attention to this scheme early.

£ English translation of the speech made by the member in Telugu

[Thiru K. S. Kothandaramiah] [1971 ஜூலை 1

Then, I am glad that this Government has sanctioned three minor schemes to Hosur and Denkanikota taluks. They are (1) Akkathangi Scheme; (2) Bairagondapalir Scheme and (3) Kodayalam Scheme. The total amount set apart for these three schemes is about 14 lakhs, and if finished they will irrigate about 4 to 5 hundred acres of land.

Further, complete investigation to construct a dam across South Pennar, near the villages of Kelavarapalli and Chennesandram has been completed. The engineers have stated that this dam work can be taken up. It will irrigate about 4,000 acres. Some twenty-five days back, myself and the Assistant Collector, Hosur visited the place, and I learn that he has recommended the scheme. Last year the Hon. Minister for Irrigation stated that the strict yardstick will be relaxed with regard to backward areas, for irrigational projects. So, I request him to keep this in mind and sanction th eproposed Kelavarapalli dam. Similarly investigation has been completed with regard to Dalavai Cheruvur dam and the Vempalli dam, in Sulagiri Block. I request the Hon. Minister to kindly sanction them early.

There are a number of tanks which are silted and arrangements have to be made to desilt them and improve them soon.

With regard to roads in Dharmapuri district, I wish to state that this is not only a neglected area, but an area of distances. There is a great paucity of roads in rural areas, and special interest has to be shown to provide rural roads in this district, and especially in Hosur and Denkanikota taluks. The following roads are important and long pending. They have to be completed soon. They are (1) Sulagiri-Mysore State Border Road; (2) Sulagiri and Uddanapalli Road; (3) Kelamangalam-Barandur Road. More inter-state roads have to be provided for Hosur and Denkanikota taluks. As the time is short I will close my speech.

[திரு. நா. வீராசாமி தலைமை]

*திரு. டி. கணபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீர்ப் பாசனப் பொதுப்பணித் துறை மானியத்தின் மீது பேசும் வகையில் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் குமரி மாவட்டத்திற்குப் பக்கத்தில் உள்ளவன். குமரி மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு 1957-62 வரை பிரதிநிதித்துவம் வகித்தவன். எனவே நமது உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு தமிழக சர்க்காரால் எந்தவித நன்மையும் செய்யப்படவில்லை என்று சொன்னதை ஏற்க முடியாது. என்னைப் பொறுத்தவரை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அடிக்கடி சென்று வருகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்டத்தைவிட —நாங்குநேரி வட்டத்தைவிட கூடுதலாக பல நன்மைகளை, உதவிகளை இந்த அரசு செய்து வருகிறது. சர்க்கார் செய்கிற நல்ல காரியங்களுக்கு நாம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமே தவிர அதை வேறுவிதமான கண்ணோட்டத்தோடு பார்த்தால் ஒன்றும் கிடைக்காது. அமைச்சரையோ, மேலதிகாரிகளையோ சந்திப்பதில்லை.



1971 ஜூலை 1] [திரு. டி. கணபதி]

ஆனால் சொந்தக் காரியங்களுக்குச் சந்தித்திருக்கிறார்கள். கட்சி வேறு, சர்க்கார் வேறு. செய்கிற நல்ல காரியங்களை வரவேற்க வேண்டும். ஒன்றிரண்டு குறைபாடுகள் அங்கங்கே காணப்படத் தான் செய்யும். அதை மேலதிகாரிகளிடம், அமைச்சர்களிடம் சொல்லுகிற முறையில் எடுத்துச் சொன்னால் அந்தக் குறைபாடுகளும் நீங்கிவிடும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரையோரம் கடல் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் முறையில் சுவர் கட்டியிருக்கிறார்கள். திருச்செந்தூர் வட்டம் மணப்பாட்டில் கடல் அரிப்பைத் தடுக்க சுவர் கட்டியிருக்கிறார்கள்.

THIRU J. JAMES: Sir, I have raised a matter of privilege My learned Friend is saying that this Government have constructed a preventive wall throughout the Kanyakumari district. That is not true and that is a misleading statement. So, I say that it is a breach of privilege . . . . .

திரு. டி. கணபதி : குறைகள் இருக்கலாம். ஒன்றிரண்டு விடப்பட்டு இருக்கும்.

THIRU J. JAMES: Sir, I have raised a matter of previlege and I would like to have a ruling from the Chair.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : திருத்திக் கொள்ளுங்கள்.

திரு. டி. கணபதி : திருத்திக் கொண்டேன். கடல் அரிப்பைத் தடுக்க சுவர் கட்டி வருகிறார்கள். நாங்குநேரி வட்டத்தில் உவரிக் கடற்கரையைப் பற்றி குறிக்கப்படவில்லை. உவரிக் கடற்கரையில் அடிக்கடி கடல் அரிப்பு ஏற்பட்டு பல வீடுகள் இடிந்து வருகின்றன. ஆகவே நாங்கள் அரசு இதையும் கவனித்து உவரிக் கடற்கரையில் அடிக்கடி ஏற்படுகிற கடல் அரிப்பைத் தடுக்க இங்கும் சுவர் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் கீழ் கடற்கரைச்சாலை சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி வரை போவதற்கு அந்த கீழ்க்கடற்கரைச்சாலையைப் போன்ற நல்ல சாலையே கிடையாது என்பது என் அபிப்பிராயம்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர் சொல்லாத கருத்தைச் சொன்னதாகச் சொல்லிக் கொண்டு போவதன் மூலம் அவருக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்றே முயல்வதாக இருப்பதனால் அவ்வாறு ஒரு உறுப்பினர் பேசாதிருக்கும்படி கண்காணித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1971 ஜூலை 1

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. டி. கணபதி :** ஆகவே நீர்க் கடற்கரையோர ரோடுகள் எல்லாம் நல்லவிதமாக இருக்கின்றன. ஆனால் ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்டலாம். கடற்கரை ஓரத்தில் உள்ள கன்னங்குளம், கூட்டப்புளி, கூத்தங்குளி, இடிந்தகரை, பெருமணல் ஆகிய இடங்களில் உள்ள இணைக் குறுக்குச் சாலைகளை எல்லாம் நல்ல தார் ரோடாகப் போட்டுக் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். எல்லா மருப்பாரும் அங்கே வசிக்கிறார்கள். அதைச் செய்து தருவது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நமது முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை 28-ஆம் பக்கம், 50-வது பாராவில், மேற்குமலைத் தொடரிலே விழுகிற நீரை ஒருங்கிணைப்புத் திட்டம் மூலம் பயன்படுத்தி அவற்றைக் கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறண்ட நிலங்களுக்குப் பயன்படுமாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்கள் நெல்லை மாவட்டத்திலுள்ள கோரிக்கைகளை மறக்காமல் வறண்ட பிரதேசத்திற்கு உதவ வந்த முதல்வரைப் பாராட்டுகிறேன். அங்கே மூன்று நதிகள் இருக்கின்றன. பச்சையாறு என்பது களக்காடு மலையில் உற்பத்தி ஆகிறது. குடமாடி அணை திருக்குறுங்குடி மலையில் உள்ளது. அறத்தலையாறு, பணகுடி மலையில் உள்ளது. இந்த மூன்று நதிகளுக்கும் அணை கட்டித்தர வேண்டும்.

பணகுடி மலையில் அறத்தலையாறு அணைத்திட்டம் ஆய்விலேயே காலதாமதமாகி வருகிறது. அதற்கு சில லட்சங்களேயாகும். அதைப்போல திருக்குறுங்குடி மலையில் குடமாடி அணை ஒன்று கட்டும் திட்டமும் ஆய்வில் இருக்கிறது. ஒரு தனிப்பட்ட முதலாளியின் எஸ்டேட்டிக்குப் பாதுகாப்பு அளிக்கும்முறையில் இத்திட்டம் தள்ளிப்போடப்படுவதாக மக்கள் பேசுகிறார்கள். இத்திட்டத்திற்கும் சில லட்சங்களே ஆகும். ஏர்வாடி, வள்ளியூர், தளபதிசமுத்திரம் போன்ற பல கிராமங்களில் உள்ள வயல்களுக்கு இத்திட்டங்களால் நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்க வழியேற்படும். மேலும் இறவைக் கிணறுகளின் நீர்மட்டமும் ஆங்காங்கே உயர்வதற்கு வழியுண்டாகும்.

மூன்றாவதாக களக்காட்டு மலையிலுள்ள பச்சையாறில் வற்றாத நீருள்ளது. தண்ணீர் பலவழியாக சிதறுகிறது. இதனைத் தடுத்து பச்சையாறு அணையைக் கட்டிக்கொடுத்தால் மேலப்பாளையம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகள் எல்லாம் மிக்க பயன் அடையும். இத்திட்டத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வரை மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆய்வில் உள்ள இந்த மூன்று அணைக் கட்டுத் திட்டங்களையும் நான் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வறண்ட பிரதேசம்





செழிக்கச் செய்ய இந்த மூன்று அணைக்கட்டுத் திட்டங்களையும் நிறைவேற்றித்தரவேண்டும். ஆகவே, 3 அணைகளையும் நல்லவிதமாக பாசனம் செய்யக் கூடிய சீக்கிரம் அணையைக் கட்டினால் அந்தப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு இறைவைப் பாசனத் திறக்கும் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தப் பகுதிகள் எல்லாம் 4, 5 வருடங்கள் மழை இல்லாததால் வறண்டு கிடக்கின்றன. பஞ்சப் பிரதேசமாக இருக்கின்றது. ஆகவே, சர்க்கார் மூன்று அணைகளையும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏர்வாடி பக்கமுள்ள வட்டிலையான் வாய்க்காலை விரைவில் செப்பனிடவும் கோருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்தபடியாக, தாமிரவருணி நதியில் உள்ள கால்வாய்களில் சீர்திருத்தப் பணி நடந்து வருவதைப் பாராட்டுகிறேன். பழந் தொழிலான சாகுபடித் தொழிலுக்கு திருச்செந்தூர் வட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், மேலும் அம்பாசமுத்திரம் வட்டத்திலும் உள்ள விவசாயிகள் எதிர்க்கிறார்கள். ஆகவே தண்டத்தீர்வை போடுகின்ற குறைபாடுகள் இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் சற்று மனக்கசப்பு அடைந்து வருகிறார்கள். அரசு தக்க நடவடிக்கை எடுத்து எல்லாக் கால்வாய்களிலும் சீர்திருத்தப் பணி நடத்தினால் அந்தக் குறைபாட்டைப் போக்கலாம். அம்பாசமுத்திரம் ராம நதி, கடனா நதித் திட்டங்களை துரிதப்படுத்தினால் விவசாயிகளுக்கு நல்ல நன்மை கிடைக்கும். கீழ்ப் பகுதியிலுள்ள தண்டத்தீர்வையை பழந்தொழில் விவசாய கசப்பைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வள்ளியூர் பகுதியிலுள்ள வள்ளியூர் பெரியகுளத்தில் தூர் எடுக்க வேண்டும். அதற்குள்ள எஸ்டிமேட் சர்க்காரிடம் இருக்கிறது. அதைச் சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலியில் ஒரு மேம்பாலம் கட்டுகிறார்கள். பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் போக்குவரத்தால் பாதிப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தைத் துரிதப்படுத்தினால் போக்குவரத்து துரிதப்படும். ஆகவே, அந்தப் பாலத்தைத் துரிதமான முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியான நாங்குநேரி தொகுதியில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் கண்ணநல்லூருக்கு அருகில் சித்தூர் என்ற பெரிய கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு நெல்லை மாவட்டத்திலுள்ள மக்களும், கேரளாவிலுள்ள மக்களும் வருகிறார்கள். அந்த 7, 8 மைல் ரோட்டை, வழித்தடத்தை பெருவழித்துறை ரோடாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை சர்க்கார் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1971 ஜூலை 1

**திரு. நா. வெ. குருசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனது தொகுதியிலுள்ள மஞ்சளாறு அணைக் கட்டினால் ஆண்டிப்பட்டி தொகுதியில் சில இடங்களுக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. ஏ. வாடிப்பட்டி, டி. வாடிப்பட்டி என்ற கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்க இந்த மஞ்சளாறு ஏதுவாக இருக்கிறது. மதுரை மாவட்டத்திலுள்ள அதிகமான நிலங்கள் சாகுபடியடைந்து வருகிறது. மேலும் சில புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் கொடுத்தால் அந்தப் புஞ்சை நிலங்களையும் நஞ்சை நிலங்களாக மாற்றி உணவுத் தானியங்களைப் பயிரிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாவூத்து ஓடையில் பல கண்மாய்களுக்கும் தண்ணீர் வருகிறது. முன்காலத்தில் சரியானபடி தண்ணீர் கொடுக்கப்படாத காரணத்தால், அந்தக் கண்மாய்களுக்குத் தண்ணீர் வரவில்லை. கோவில்பட்டிக் கண்மாய்க்கு தண்ணீர் வரவில்லை. மண் ஏராளமாக இருக்கிறது. தூர் வாரினால் நல்லது. ஆகவே அரசு அதில் முழுக்கவனம் செலுத்தி, தூர் எடுத்து தண்ணீர் விட்டால் விவசாயத்திற்கு வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, பெரியகுளம் வட்டத்தில் சோத்துப்பாறைக்கு அருகில் அணை கட்டும் திட்டம் இருப்பதாக அறிகிறேன். அதை விரைவில் கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டும். பெரியகுளம் வட்டத்தில் நீர்ப்பாசனத்திற்காக 7 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அணை கட்டப்போவதாக அறிவிக்கப்பட்டது. 9 கண்மாய்களுக்கும் தண்ணீர் வரும் என்று விவசாயிகள் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். ஆனால் பெரியகுளம் எக்சிக்யூடிவ் என்ஜினியரிடம் போய்க் கேட்டதற்கு நான்கு கண்மாய்களுக்குத் தான தண்ணீர் வரும், 5 கண்மாய்களுக்குத் தண்ணீர் வரவில்லை யென்று சொல்கிருர்கள். சக்கிலிச்சி கண்மாயையும் சேர்த்து, 5 கண்மாய்களிலும் தண்ணீர் வந்து பயனடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி தொகுதியில் பல மலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. குறிப்பாக வருஷநாடு, கடமலைக்குண்டு பகுதி களில் சரியான ரோடு வசதி இல்லை. ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட ஊரை அடைய முடியாது. பத்து மைல், பதினைந்து மைல் நடந்து மறு நாளைக்குத்தான் அடுத்த ஊர் போய் சேர முடியும். ஆகவே, போக்குவரத்துக்கான சாலை வசதிகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டியிலிருந்து புளிமான் கோம்பைக்கு ரோடு வசதி கிடையாது. அதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இது குறித்து மதுரை மாவட்டக் கலெக்டரிடமும் கூறியிருக்கிறோம். இந்த ரோடு வசதியை உடனடியாகச் செய்து தர வேண்டும்.



1971 ஜூலை 1] [திரு. நா. வெ. குருசாமி]

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டியிலிருந்து வத்தலகுண்டு, திண்டுக்கல் வழியாக பெரியகுளம் சுற்றிக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. வைகையாற்றில் குள்ளப்புரம் அருகில் ஒரு பாலத்தைக் கட்டினால், 15 மைல் குறைவாக குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர முடியும். ஆகவே, மராமத்து அமைச்சர் அவர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி இந்தப் பாலத்தைக் கட்டி தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. தொ. க. சிறைமீட்டான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பு ஏற்ற பின்னர் பல புதிய திட்ட வேலைகள் நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்கு இராமநாதபுரம் பகுதி முன்னேறும் வகையில் வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் நல்ல முறையில் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, 1971-72-ம் ஆண்டுக் கான நிதியில் 55 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியிலுள்ள கண்மாய்கள், கால்வாய்கள் எல்லாம் மராமத்து செய்யாமல் இருந்தவைகளை, மராமத்து செய்வதற்காக பரமக்குடியில் ஒரு புதிய கோட்டப் பொறியாளர் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக கூத்தன் கால்வாய்க்கு பன்னிரெண்டு லட்சமும், மேல்நாட்டார் கால்வாய் மேம்பாட்டிற்காக ஏழு லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

கூத்தன் கால்வாய்க்கு குறுக்கே கமுதக்குடிக்கு அருகாமையில் ஒரு பாலமும், மேலநாட்டார் கால்வாய்க்கு குறுக்கே அரியாங் கோட்டைக்கு அருகாமையில் ஒரு பாலமும், களரிக் கால்வாய்க்கு குறுக்கே சத்திரக்குடிக்கு அருகாமையில் ஒரு பாலமும் அமைத்துத்தர வேண்டுகிறேன். மழைக்காலங்களில் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கால்வாயைக் கடந்து செல்ல வேண்டி இருக்கிறது. மேலநாட்டார் கால்வாய், கீழநாட்டார் கால்வாய் இணைந்து செல்கின்ற இடம் அரியான்கோட்டை கிராமத்திற்கு அருகாமையில் உள்ளது. இக்கால்வாயில் நீர் நிறைந்து செல்லும் போது இளையான்குடி இராஜசிங்கமங்கலம் ரஸ்தாவிற்கு வருவதற்கு மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கால்வாய்களில் தண்ணீர் நிறைந்திருக்கும்போது பல கிராம மக்கள் ரோடுக்கு வர முடியாமல் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். மேலநாட்டார்

[திரு. தொ. க. சிறைமீட்டான்] [1971 ஜூலை 1

கால்வாய் மராமத்து செய்வதற்குப் பின்னாலும் பாலம் கட்டா விட்டால் மக்கள் ரோடுக்கு வரமுடியாத நிலைமை ஏற்படும். எனவே, அங்கு ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

களரிக் கால்வாய் சுமார் 50 கண்மாய்களுக்குப் பாசன வசதி யளிக்கக்கூடிய பெரிய கால்வாயாகும். இதற்கு தென்பகுதியில் சுமார் 20 கிராம மக்கள் கால்வாயை கடந்து சத்திரக்குடி வந்து மதுரை, பரமக்குடி, முகவை போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டும். மேலும் சத்திரக்குடியில் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. சுமார் 400 மாணவர்கள் தென்பகுதியிலிருந்து பள்ளிக்கு வருகிறார்கள். அவர்கள் கால்வாயைக் கடந்து பள்ளிக்கு வரவேண்டியிருக்கிறது. மழைக்காலங்களில் கால்வாயைக் கடக்க முடியாமல் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் விவசாயிகளுக்கு விவசாயப் பொருள்கள் மற்றும் ... களுக்கு கால்வாயைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மேற்காட்டிய மூன்று கால்வாய்களும் இவ்வாறு இருக்கின்றன. மேற்காட்டிய கால்வாய்களுக்குக் குறுக்கே பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பல கால்வாய்கள் மராமத்து செய்யப் பட்டாலும் இன்னும் ஒரு சில கால்வாய்கள் மராமத்து செய்யப் படாமல் இருக்கின்றன. பார்த்திபனூர் கால்வாயைச் செப்பனிட்டால் சுமார் 3,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதியை அது அளிக்கும். அது மராமத்து செய்யப்படாமல் போடப்பட்டிருக் கிறது. அதையும் உடனடியாக நடவடிக்கை எடுத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டில் செயல்பட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] நாட்டார் கால்வாயைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரியும். அது சுமார் 10,000 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதியை அளிக்கும். இதுவரையில் அது மராமத்து செய்யப்படாமல் இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனித்து மராமத்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை பெய்தாலும் புயலோடு தான் பெய்யும், மழையில்லையென்றாலும் வறட்சி நீடிக்கும். இந்தநிலையை—நீண்ட நெடுங்காலமாக சந்தித்து வருகிறோம். இந்த நேரத்தில் எங்கள் பகுதியில் நல்ல தண்ணீர் குடிப்பதற்குக்கூட தண்ணீரேயில்லாமல் இருக்கிறது. மழைக் காலங்களிலே மட்டும் அங்கே மழை பெய்கிறது. அதுவும்கூடச் சுருக்கமாகத்தான் பெய்யும். அதிகமாகப் பெய்தால் புயலோடு பெய்யும். இந்த நிலை தொடர்ந்து இருக்கிறது. இந்த நேரத்தில் விவசாயிகள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு கிராமத்திற்கு 2, 3 குளங்கள் இருக்கின்றன. அதுவும் தூர்ந்து போயிருக்கின்றன. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எல்லாக்



1971 ஜூலை 1] [திரு. தொ. க. சிறைமீட்டான்]

குளங்களையுமே பாசனக் குளங்களாக ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ்ச் செய்தால் விவசாயிகளுக்கு அது வரப்பிரசாதமாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஊற்று வசதியில்லாத பல பகுதிகள் இருக்கின்றன. முதுகுளத்தூர், பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற கிழக்கு இராமநாதபுரம் பகுதிகளில் ஊற்று வசதி யில்லாமல், ஊற்று எத்தனை அடி ஆழத்தில் இருக்கிறது என்று கூட விவசாயிகளுக்குத் தெரிய வசதியில்லை. ஆகவே, அரசாங்கமே பொறுப்பேற்று எந்தெந்த இடத்தில் எத்தனை அடி ஆழத்தில் ஊற்று கிடைக்கிறது என்று பரிசோதனை செய்தால் நில வள வங்கிகள் மூலம் கிணறுகள் அமைப்பதற்கு விவசாயிகளுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பரமக்குடி நகரத்தின் ஒரு பகுதியான எமனேஸ்வரமும் பரமக்குடியும் இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. அங்கே இணைக்கும் வகையில் வைகையில் ஒரு தரைப்பாலத்தை அமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நயினார்கோவில் தேவிபட்டணம் சாலைக்கு இந்த ஆண்டு 12 இலட்சம் ரூபாய் அளவில் ஒதுக்கியிருப்பதற்கு நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், இந்த அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த மதிப்பீடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடாகும். கடந்த ஆண்டு பொறியாளர்கள் இச்சாலையை ஆய்வு செய்து, சுமார் 30 இலட்சம் தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள முக்கியமான ரோடு அது என்பதை அமைச்சரவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஒருநாள் 5 மணிக்குச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டு 8 மணிக்குத்தான் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதை அமைச்சரவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஆகவே எவ்வளவு ரூபாய் செலவழித்தாகிலும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வளர்ச்சி ஏற்படுத்த, நயினார்கோவில் தேவிப்பட்டணம் சாலையையும் நல்லமுறையில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பணித்துறை, பாசனத்துறை மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்துள்ள வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1971 ஜூலை 1

இங்கு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்களும், அவர்களுடைய தோழமைக் கட்சி உறுப்பினர்களும் பேச்சின் தொடக்கத்தில் இந்த அரசு எல்லாத் துறைகளிலும் கணிசமான அளவிற்குச் செய்திருக்கிறது என்று பாராட்டிவிட்டு தத்தம் தொகுதிகளுக்கு என்று வரும்பொழுது ஒன்றுமே செய்யவில்லை, குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, அங்கே கிணறு வெட்டிக்கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கிறார்கள். இதிலிருந்து எல்லாவற்றையும் இந்த அரசு செய்துவிட்டது என்று பெருமைப்பட முடியாது. பலப்பல இன்னும் செய்யப்பட இருக்கின்றன என்பதை அனைவரும் ஒத்துக்கொண்டுதானாக வேண்டும்.

பாசனத்துறை தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய திட்டமாக செயல்பட்டுக் கொண்டிருப்பது சித்தாறு பட்டணங்கால் திட்டமாகும். அது ஏறக்குறைய முடியும் தருவாயில் இருக்கிறது. இருப்பினும் அங்கு பல கிளைக் கால்வாய்கள் வெட்ட வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். அதைத் துரிதமாகக் கட்டி முடிக்க இந்தத் துறை முன்வரவேண்டும். அப்படிக் கட்டிக்கொடுத்தால் அவர்கள் நிலங்களின் துரிதப்பாசனத்திற்குப் பயனுடையதாக இருக்க முடியும்.

இன்னும் அங்கேயிருக்கும் நீர்த்தேக்கங்களிலே மழை பெருவாரியாக இருக்கும் காலத்தில் நீர் செழிப்பாகக் கிடைக்கிறது. பல காலங்களில் மழை செழிப்பாக பெய்வதில்லை. அப்படியிருக்கும் நேரங்களில் தேக்கி வைத்த தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த அந்தத்துறை முற்படவேண்டும். அதற்கு முதலாவதாகச் செய்ய வேண்டியது, கால்வாய்களையெல்லாம் செப்பனிட வேண்டும், கான்க்ரீட் போட்டு வைக்க வேண்டும். அதிலே கோவாளைக் கால்வாய் முழுவதும் கான்க்ரீட்டு வேலை ஓரளவு முடிந்துவிட்டது. ஆனாலும் அதை நன்றாகச் செய்யவில்லை. இருப்பினும் ஓரளவிற்குச் செய்திருக்கிறார்கள். எல்லாக் கால்வாய்களையும், கிளைக் கால்வாய்களையும் அவைகளில் நீர் வீணாகாமல் தடுக்க முதலாவதாக வழி செய்ய வேண்டும், கான்க்ரீட் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, கால்வாய்களில் அப்பர் ரீச்சஸில் இருக்கும் மடைகளையெல்லாம் ஒரு கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும். இப்பொழுது பல மடைகளில் ஷட்டர்கள் கிடையாது. ஒரு சில இருந்தாலும் விவசாயிகள் ஆத்திரத்தில் ஷட்டர்களை மனம்போல் தூக்கிவிட்டுப்போகிறார்கள். கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, நல்ல ஷட்டர்ஸ் போட்டு கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்தால், மேலேயிருந்து கடைவாய் வரையிலுள்ள எல்லா விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்கும். அதற்காக நல்முறையிலே எங்கெங்கெல்லாம் ஷட்டர்ஸ் இல்லையோ அங்கெங்கெல்லாம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தக்



1971 ஜூலை 1] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

கோரிக்கை நீண்ட நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது, இதை அந்தத் துறை கொஞ்சம் கவனித்துச் செய்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்வாய்க் கரைமேல் போக்குவரத்துக்கு வசதியாக ரோடுகளை திருவிதாங்கூர்-கொச்சியிலே இருக்கும்பொழுது நீர்ப்பாசனத் துறையினரே செப்பனிட்டு வந்தார்கள். இப்பொழுது அதுவும் செய்வதில்லை. அந்தப் பாதையில் வண்டிகள் போகக் கூடாது என்று தடுக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்குத் துன்பமாக இருக்கிறது. கட்டை வண்டிகளை அந்தப் பாதைகளில் கொண்டு வந்தால்தான் தாழைகள், உரத்தைக் கொண்டுபோக முடியும். எனவே அவைகளைச் செப்பனிட வேண்டும். நல்ல ரோடுகள் இருந்தால், செப்பனிடப்பட்டிருந்தால் அவைகளில் அதிகாரிகளும் ஜீப்பிலே போக முடியும்.

இன்னொன்று, அலுவல்களை நேரடியாகக் கண்காணிக்க துரிதமாகச் செல்ல வேண்டிய நிலையில் செக்ஷன் ஆபீசர்கள் இருக்கிறார்கள். ஆங்காங்கே நீர் பாழாகுமானால் வேகமாகச் சென்று பார்க்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஜீப் இல்லை, ஜீப் கொடுக்கவும் முடியாது. எனவே, அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு மோட்டார் பைக்காவது வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்தால் அவர்கள் ஓடோடிச்சென்று வேலைகளைப் பார்க்க முடியும். எனவே அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் கட்டாயம் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் இரவு பகல் என்று பாராமல் வேலைகளைப் பார்க்க முடியும். அதையும் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வருஷம் பேச்சிப்பாறை அணையிலே 28 அடி நீர் இருந்தும் ஜூன் 1-ஆம் தேதி அது திறக்கப்படவில்லை. அதனால் விவசாயிகளுக்குச் சிரமம் ஏற்பட்டது. எங்களைத் திட்டத் தொடங்கிவிட்டார்கள், பிரதிநிதிகள் என்ன தூங்குகிறார்களா என்று. காலா காலத்தில் தண்ணீர் கொடுத்தால்தானே விவசாயிகள் காலா காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் செய்து, பயிரிட்டு நல்ல பயன் பெறுவார்கள். இதுவரை அவ்வாறு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது அப்படி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் 'ஆன்யுவல் மெயின்டெனன்ஸ் ஒர்க்ஸ்' காலா காலத்தில் செய்யவில்லை. காண்ட்ராக்டர்ஸ் கிடைக்கவில்லை என்று ஒரு காரணம் சொல்லுகிறார்கள், அல்லது மழை பெய்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட சாக்குப்போக்குகளைச் சொல்லாமல் கட்டாயம் ஜூன் மாதம் 1-ஆம் தேதி அணைகளைத் திறந்துதான் ஆகவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகளுக்குப் பயனுடையதாக இருக்கும். காலா காலத்தில் திறக்காமையால் பெரும் நஷ்டம் ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1971 ஜூலை 1

அடுத்தபடியாக, பாசனக் குளங்கள், கன்னியாகுமரி மாவட்டமாகிய எங்கள் மாவட்டத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பாசனக் குளங்களைத் தூர் வாங்கிச் செப்பனிட வேண்டும். இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஹரிஜன்ஸ் என்று சொல்லிக்கொண்டு பாசனக் குளங்களின் நிலத்தில் குடியேறி விடுகிறார்கள். இல்லையென்றால் குளங்களை ஆக்கிரமித்து பயிர் செய்துவிடுகிறார்கள். அவர்களை அந்த இடங்களைவிட்டு அப்புறப் படுத்த முடியவில்லை. அப்புறப்படுத்தாமல் இருந்தால் பாசனக் குளங்களே இல்லாமல் போய் கடைசியிலே விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும். எனவே, அதிலே கண்டிப்பாக இருக்க வேண்டும். தாட்சண்யம் இல்லாமல், யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும், கட்சிக் கண்ணோட்டத்திற்கு இடம் கொடுக்காமல் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றினால் நிச்சயமாக இந்தச் சிறு சிறு குளங்கள், கண்மாய்கள் நல்ல பாசனத்திற்கு வழிவகுக்கும், 3 போகம்கூடப் பயிர் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது அப்படி முடியவில்லை, பேச்சிப்பாறை அணையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால் பத்து வருஷத்திற்குப் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் ரோடுகள் செப்பனிடப்படாத நிலையிலேதான் இருந்துகொண்டிருக்கின்றன. நாகர்கோவில் ஆரல்வாய் மொழி வரையிலுள்ள ரோட்டைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கும். ரோடு போட்டு நாலே நாளில் சிதைந்து விடுகிறது. முன்னால் இருந்த சிமெண்ட் ரோட்டைத் தவிர்த்து அகலப்படுத்தப்பட்டிருக்கும் தார் போட்ட பகுதி அலைகள் அடிப்பது போல் மேடுபள்ளமாக இருக்கிறது. காரில் வேகமாகப் போனால் நிச்சயமாகப் பள்ளத்தில்தான் விழவேண்டும். பார்வதிபுரத்தில் இருந்து போடப்பட்ட சாலை மிகவும் பழுது பட்டிருக்கிறது. அதைச் சற்றுக் கவனிக்க வேண்டும்.

எங்கள் பகுதியில் பஞ்சாயத்து ரோடுகள், யூனியன் ரோடுகள் ஏராளமாக இருக்கின்றன. அவை எல்லாம் சிறு சிறு ரோடுகள். ஐந்து மைல் நீளத்திற்கு மேல் கிடையாது. அவற்றை எல்லாம் பெருவழித் துறை தன்னுடைய கண்காணிப்பில் எடுத்துக் கொண்டு செப்பனிட வேண்டும். வளர்ந்து வருகிற சமுதாயத்தில் எல்லா இடங்களுக்கும் பேருந்துகள் விடவேண்டுமென்று கோருகின்ற நிலையில் அந்த சாலைகளை எல்லாம் பெருவழித் துறை எடுத்துக் கொள்ளுவது நல்லது.

பெரிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றும்போது, அணைகளைக் கட்டும்போது இயந்திர சாதனங்கள், டிராக்டர்கள் எல்லாம் அங்கே பயன்படுத்தப்படுகின்றன. வேலை முடிந்த பிறகு அந்தப் பகுதியில் பார்த்தால் எண்ணற்ற வண்டிகள் அப்படியே நிற்கும். இதைப்பற்றி நான் பல தடவை எஞ்சினியரிடத்தில்



1971 ஜூலை 1] [திரு. எ. சுவாமிதாஸ்]

கேட்டதுண்டு. உடனடியாக இவற்றை ஏலத்தில் போட்டால் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் பணமாவது கிடைக்கும். இதைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

கோதையாறு ப்ராஜக்ட் என்ற பெரிய திட்டத்தை ஆரம்பிக்கும் போது ஏழு அணைக்கட்டுத் திட்டங்களைக் குறிப்பிட்டிருந்தார்கள். ஐந்து முடிந்துவிட்டன. சிற்றாறு, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, முக்கூடல் முடிந்துவிட்டன. இன்னும் மாம்பழத்துறை, பொய்கையாறு பாக்கி இருக்கின்றன. இதைக் கட்டினால் விவசாயத்திற்குப் பயனுடையதாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்குப் போக எஞ்சிய நீரை திருநெல்வேலி மாவட்டத்தில் இராமநாதபுரத்திற்கும் கொடுக்க முடியும். அதை மனத்தில் வைத்து அந்தத் திட்டத்தை நிறை வேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழையாற்றில் மழைக் காலத்தில் கிட்டத்தட்ட ஒருமாத காலம் பெருவெள்ளம் பெருகி அரபிக் கடலில் போய்ச் சேருகிறது. மழைக் காலத்தில் அந்தத் தண்ணீரைத் திருநெல்வேலி மாவட்டத்திற்குக் கொண்டு செல்ல வழிசெய்ய வேண்டும். லிப்ட் இரிகேஷன் கூட அமைக்க வேண்டுமானாலும் செய்ய வேண்டும். அதனால் நிச்சயமாக திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தாலூகாவில் இருக்கும் கண்மாய்கள், குளங்கள் எல்லாம் நிரம்ப முடியும். அதற்கு ஏற்றவாறு தனியான ஒரு திட்டத்தை அமைத்து செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். முத்தையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான நீர்ப்பாசனம், நெடுஞ்சாலைத்துறை மானியங்களை ஆதரித்துப் பேச எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி ஆரம்பிக்கிறேன்.

முன்னை மூதாட்டி கூறினார்—'கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்' என்று. தமிழக அரசு அதை எப்படிச் செய்ய வேண்டுமென்றால், சாலை இல்லாத, குளம் இல்லாத, குடி தண்ணீர் வசதி இல்லாத ஊர் இருக்கக் கூடாது என்ற வகையில் திருத்தி அமைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஒட்டப்பிடாரம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்பதை மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு பயனும் பெற்றதாக இல்லை. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு பேசியதெல்லாம் ஏட்டிலே போய் விட்டாலும் இப்போது நடைமுறைக்கு வரும் என்று சொன்னதால்தான் இதை மீண்டும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் சேர்ந்து கோவில் பட்டி தாலூகாவில் ஆங்காங்கு குளம் அமைப்பது பற்றியும், சிறு

ஓடைகளைத் திருத்திப் பாசன வசதி செய்வதைப் பற்றியும் கூட்டம் நடத்தினார்கள். அதிலே நானும் கலந்துகொண்டேன். என் தொகுதியைப் பொறுத்தவரை 13 புதிய குளங்களை அந்தத் திட்டத்திலே சேர்ப்பதாக இருந்தது. இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக எப்போதுவென்றான், அதற்கு அருகாமையில் மலட்டாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அது வீணாக சமுத்திரத்தில் கலக்கிறது. அங்கு ஒரு குளம் அமைப்பதாக இருந்தது. அதைப்பற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு எஸ்டிமேட் ரூ. 21,83,000 செலவாகும் என்று சீஃப் எஞ்சினீயர் குறிப்பிட்டு சர்வே எல்லாம் முடிந்தும் அது வெறும் ஏட்டளவில் இருக்கிறது. அதனை உடனடியாகச் செய்யவேண்டுமென்று அரசையும், அதிகாரிகளையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ரோடு சம்பந்தமாகப் பேசும்போது பேசிய உறுப்பினர்களில் சிலர் பசிக்குப் பால் வேண்டுமென்றார்கள். சிலர் கூழ் வேண்டுமென்றார்கள். எனக்கு கூழ் தந்தாலே போதும். எங்கள் தொகுதியில் கயத்தாரிலிருந்து தேவர்குளம் வரை பஸ் ஓடுகிறது. குறுக்கே ஓடுகின்ற உப்போடையில் ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டோம். அதிகச் செலவு கூட ஆகாது. 20,000 ரூபாய் செலவழித்தால் பாலம் முடிந்துவிடும். அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட இரண்டு சாலைகளை நெடுஞ்சாலைத் துறையில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று எவ்வளவோ மனுப்போட்டும், வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பல தடவை எடுத்துச் சொல்லியும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதாவது கடம்பூரிலிருந்து புளியம்பட்டி ரோடு ஒன்று. இரண்டு, ஒட்டப்பிடாரத்திலிருந்து கோயில்பட்டி ரோடு பஸ் போக்குவரத்து ரோடுகள். அவற்றை அதிக விரைவில் நெடுஞ்சாலைத் துறையில் சேர்க்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக் கூடிய எஞ்சினியர்களுக்கு ரூ. 3,000-க்கு மேற்பட்ட வேலைகளுக்கு எஸ்டிமேட் தயார் செய்யவும் நிறைவேற்றவும் முடியாது. அதற்கு ஹைவேஸ் ஏ.இ. தான் செய்யவேண்டும். வேலை முடிந்ததா இல்லையா என்பதை எல்லாம் ஏ.இ. தான் சரிபார்க்க வேண்டும். ஆகவே, அவர்கள் யூனியனிலுள்ள ஜீப்பைக் கொடுத்தால்தான் அப்படி வேலைகளை முடிக்கிறார்கள், இல்லை என்றால் முடிவதில்லை. சில சந்தர்ப்பங்களில் யூனியனில் ஜீப் இல்லை என்றால் ஹைவேஸ் ஏ.இ.-க்களுக்கு ஜீப் கொடுக்கமுடியவில்லை. ஆகையால் யூனியனிலுள்ள அநேக வேலைகள் நடைபெறாமல் போய் விடுகின்றன. ஆகவே, ஹைவேஸ் ஜீப்பிலே வந்து வேலைகளை சரிபார்த்து முடிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்யவேண்டும்.





பஞ்சாயத்து ரோடுகள், பழைய புதிய ரோடுகள் அனைத்தையும் ஹைவேஸ் எடுத்துக்கொண்டு வேலை செய்வது நல்லது. இந்த அவையிலே சொல்லலாமா வேண்டாமா என்று நினைத்தேன். ஆனாலும் அமைச்சர்களுக்கு முன்னால் சொல்லுகிறேன். ஒட்டப்பிடாரத்திலிருந்து பசுமந்தனை செல்லும் கிளை ரோடு கீழமங்கலம் சில்லாங்குளம் வரை செல்லுகிறது. அதற்கு 3,000 ரூபாய்க்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டது. அங்கே 300 ரூபாய்க்கு கூட வேலை செய்யவில்லை.

மண் அள்ளிப் போட்டார்களோ என்னவோ, வெறும் மண்ணாகப் போயிருக்கிறது. அதைப்பற்றி ஒட்டப்பிடாரம் யூனியன் ஏ. இ. மேல் புகார் ஏ.இ., டி.இ., எஸ்.இ., அவ்வளவு பேரிடமும் சொல்லியாயிற்று. இதற்காக ஒட்டப்பிடாரத்திலிருந்து வந்து சீஃப் எஞ்சினியர் ஆபீசில் ரிப்போர்ட் பண்ணினேன். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியாது. இப்படிப் பட்ட வேலைகளை யூனியனில் செய்யாமல் ஹைவேஸ் மூலமாகச் செய்வது உத்தமம். அதற்கு சமாதானம் இதுவரை ஒன்றும் கிடையாது. நான் யாரையும் குறை கூற இதையெல்லாம் சொல்லவில்லை. அங்கே இருந்து இங்கே வந்து புகார் செய்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் இதை இங்கே சொல்ல வேண்டுமென்று சொல்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, ரோடுகளைப் போடுவதற்காக நிலங்களை எடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு நிலச்சுவான்தார்கள் ஒப்புதல் கொடுக்கவில்லை என்றால் பஞ்சாயத்து யூனியனிலே ரோடுகள் போடவேண்டுமென்று அரசாங்கத்திற்கு தீர்மானம் போட்டவுடன், அரசு அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்துதர வேண்டும். அப்போதுதான் கிராமங்களில் ரோடு வசதி ஏற்படும். எங்கள் பதியில் அநேகக் கிராமங்களுக்கு ரோடு கிடையாது. குடி தண்ணீர் வசதி கிடையாது. இதற்குப் பரிகாரம் காணும் வகையில் ஆங்காங்கு கிணறுகள் வெட்டி தண்ணீர் சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓசநூத்து, புதியம்புத்தூர் என்ற இடத்தில் இரு கிணறுகள் வெட்டி, வாட்டர் டேங்க் மூலமாக பல கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து தர வேண்டும். அநேகக் கிராமங்களில் இப்போது குடி தண்ணீர் எடுத்துத் வருவதற்காக மக்கள் 4-5 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் நிதியிலிருந்து என்னென்ன காரியங்களோ செய்கிறார்கள். இந்தத் தண்ணீர் பிரச்சினைக்காகப் பணம் கொடுத்து, கிராமங்களில் லாரி மூலமாக தண்ணீர் சப்ளை செய்ய மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மா. மீனாட்சிசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72-வது ஆண்டுக்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று நான் இங்கே ஒரு சில

கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நான் வேதாரண்யம் தொகுதியிலிருந்து பல தேர்தலுக்குப் பிறகு கழகத்தின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்று சொல்லிக் கொண்டு என் உரையைத் துவங்குகிறேன்.

வேதாரண்யம் தஞ்சை மாவட்டத்தின் கடைகோடிப்பகுதி, கடற்கரைப்பகுதியை ஒட்டியுள்ள தொகுதி. அந்த தொகுதி பன்னெடுங்காலமாக பல வகையிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இந்த தமிழக அரசு வந்ததற்குப் பின்னால்தான் கொஞ்சம் கவனிக்கப்படுகிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாக கவனிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி மிகவும் மணற்பாங்கான தொகுதி. இதனால் அங்கே போக்குவரத்து வசதிகள், நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் வறண்டுப் போன நிலையில் இருக்கிறது. ஆகவே போக்குவரத்து வசதிகளும் நீர்ப்பாசன வசதிகளும் அவசியமாக முதலில் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொகுதியில் கிட்டதட்ட 60–65 கிராமங்கள் இருக்கின்றன, 2 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 15–16 கிராமங்கள் தவிர மற்ற கிராமங்களில் நீர்ப்பாசன வசதி அறவே இல்லை. இந்த அரசு நீர்ப்பாசன வசதிகளை அந்த 50 கிராமங்களுக்கும் உடனடியாக செய்து தரும் என்று நம்புகிறேன். தலைஞாயிறு, வேதாரண்யம் பிர்க்காக்களை இணைக்கும் வகையில் ஒரு சாலை வசதி கூட இல்லை. இதை இணைக்கும் வகையில் பல முக்கியமான சாலைகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடினல்வயல், கருப்பம்பலம், கத்தரிப்புலம், வண்டலில் பாலம் கட்டி தலைஞாயிறு வரை ஒரு சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆயக்காரன்புலம், கரியாபட்டினம், உம்பலச்சேரி, வாட்டாக்குடி வழியாக தலைஞாயிறு வரை பாலங்கள் கட்டி, ரோடு போட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச்சாலை, இந்தப் பகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு நல்ல உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதேபோல், தோப்புத்துறை, புஷ்பவனம் வழியாக வெட்டாற்றில் பாலம் அமைத்து, கோவில்பத்து வரையில் சாலை அமைத்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வசதி இல்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆயக்காரம் புலம், சம்போடை, வெள்ளப்பள்ளம் ஆகிய ஊர்களிலும் இன்னும் பல ஊர்களில் உள்ள பள்ளிகளுக்கும் கட்டிட வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பக்கிங்காம் கால்வாயுடன் வேதாரண்யம் கால்வாயை இணைக்கவேண்டும். வேதாரண்யம் கால்வாய் என்று ஒன்று இருக்கிறது. இதில் 2,000–3,000 மக்கள் படகு மூலம் வியாபாரம் செய்கிறார்கள். இப்படி பல மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் அந்தக் கால்வாயை செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்தத் தொகுதி மீனவர்கள் அதிகமாக வாழும் தொகுதி, ஆகவே, மீனவர் வாழும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள், குடி தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

தென்னம்பலம், கத்திரிப்பள்ளம், செட்டிபலம் ஆகிய கிராமங்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறுதலைக்காடு, கோடியக்கரை, கோடியக்காடு, வாய்க்கால் வெட்டித்தர வேண்டும். மீனவர்கள் கடலுக்கு போகவேண்டுமானால் 4–5 மைல் நடந்து போகவேண்டிய நிலை இருக்கிறது. அந்த கிராமங்களுக்குச் சாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மிகக் குறைவான செலவுதான் ஆகும். தோப்புத்துறை துறைமுகத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசினார்கள். அந்தத் தோப்புத்துறை துறைமுகத்தை அரசு கவனத்தில் வைத்து சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதி மணற்பாங்கான பிரதேசமாக இருப்பதால் சாலைகள் அமைப்பது கடினமாக இருக்கிறது. செலவு அதிகமாகிறது. திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர் போன்ற யூனியனில் ரோடு போட ஆகும் செலவை விட இரண்டு மடங்கு செலவு இந்த வேதாரண்யம் தலைஞாயிறு யூனியனில் சாலை அமைக்க செலவு ஆகிறது. ஆகவே, வேதாரண்யம்–தலைஞாயிறு யூனியன்களுக்கு ரோடு அமைக்க அரசு கிராண்டை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட வசதிகள் ஏற்படுத்தினால்தான் வாக்களித்த மக்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று கூறி, சர்க்கார் விரைவிலே அப்பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாமினி, கன்னிமேடு சாலை பல வருஷமாக அமைப்பதில் தாமதமாகி வருகிறது. அதை அமைக்க அரசு உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடி, ஆலத்தம்பாடி வழியாக தலைஞாயிறுக்கு ஒரு சாலை அமைப்பதை துரிதமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதி பஞ்சப்பிரதேசமாக அறிவிக்கும் அளவுக்கு பின் தங்கிய பகுதி, தஞ்சை மாவட்டத்திலேயே மிகவும் பின் தங்கிய பகுதி என்றால், வேதாரண்யம் பகுதி என்று சொல்ல வேண்டும். ஆகவே, அந்தத் தொகுதி மக்களுக்கு பல வசதிகளை செய்துதர இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த 1971–72-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. வெள்ளத்துரை : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக்கோரிக்கையை ஆதரித்து

[திரு. அ. வெள்ளத்துரை] [1971 ஜூலை 1

என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன். என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில், செண்பகவல்லி அணைத்திட்டம் இருக்கிறது. அது நான்கு ஆறுகள் ஒன்று கூடி, தலையணை என்ற இடத்திலே இணைகிறது. அந்த இடத்திலே 2 பி.டபிள்யூ.டி. குளங்கள் இருக்கின்றன. 20,000 ஏக்கர் அளவுக்கு பாயக்கூடிய
பி. ப. 1-00 வகையில் அந்த நீர்த் தேக்கம் இருக்கிறது. இந்தத் தலையணையில் ஒரு நீர்த் தேக்கம் கட்டினால், இன்றைக்கு 20,000 ஏக்கர் பாசன வசதி உள்ளது, 60,000 ஏக்கர் பாசன வசதி உள்ளதாக அமையும் தலையணையில் இரண்டு, மூன்று குளங்கள் இருக்கின்றன. அதனால் அந்த கிராமத்தார் இடையே தகராறுகள் ஏற்படுகிறது. அதில் இரண்டு மூன்று கிராமங்களுக்கும் பாத்தியம் இருக்கிறது. அடிக்கடி தகராறு ஏற்பட்டு, மழை காலங்களில் பல விளைவுகள் ஏற்படுகின்றன. அங்கே நம்முடைய அரசு கூட ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அதுவும் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது, இடிந்திருக்கிறது. அரசாங்கத்தில் மறுபடியும் கட்டச் சொல்லி ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலேயும் கிராம மக்கள் தகராறு செய்து, அந்தக் கட்டடம் கட்டாமல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே நான்கு ஆறுகள் வரக்கூடியதாக இருப்பதால், மழைக் காலங்களில் அங்கே ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டினால், 60,000 ஏக்கர் பாசனவசதி பெற்று விளைச்சல் ஏற்பட்டு, விவசாயத்திற்குக் கொண்டு வரமுடியும். ஆகவே. தயவுசெய்து அமைச்சர் அவகள் தலையணையில் ஒரு நீர்த் தேக்கம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

புளியங்குடி கீரியாறு அணைத்திட்டம் இருக்கிறது. அமைச்சர் அந்தத் தொகுதிக்கு வந்திருந்தபோது, மக்கள் அவர்களிடம் சொன்னார்கள், அவர்களும் ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். அந்த அணைத்திட்டத்தையும் விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோடுகளைப் பற்றிச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய ரோடுகள் 15, 20 மைலிலே கிராமங்களில் இருக்கின்றன. பல பாலங்கள் கட்டவேண்டும். பஞ்சாயத்து யூனியனிலே போதுமான பணம் கிடையாது. ஆதலால் பாலங்கள் கட்ட காலதாமதம் ஏற்படுகிறது. கிராமங்களில் உள்ள மக்கள் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக இருப்பதால், விவசாயத்திற்குத் தடை ஏற்படுகிறது. பாலம் இல்லாததால், தண்ணீரில் இறங்கிக் கூட போக முடியாத நிலை ஏற்படுகிறது. ஆடு, மாடுகளையும் அடித்துக் கொண்டு போகும் நிலைகள் இருக்கின்றன. அங்கே உள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதால், பஞ்சாயத்து யூனியன் ரோடுகளைச் சரிவரச் செய்ய முடியவில்லை.

என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 15, 16 பாலங்கள் இருக்கின்றன. ஓடைகளில் தண்ணீர் வரும்போது, மக்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்த பஞ்சாயத்து யூனியன் ரோடுகளையெல்லாம், ஹைவேஸில் சேர்க்க வேண்டும்



1971 ஜூலை 1] [திரு. அ. வெள்ளத்துரை]

என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில், தலைவர்களுக்குள் நல்ல உறவு இல்லாததால், ரோடுகளைச் செவ்வனே போடவோ, பாலங்களைக் கட்டவோ முடியாமல் இருக்கிறது. ஆகவே, அமைச்சரவர்கள் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கீரியாறு பிரச்சினை 1952-லிருந்து, ' கீரியாறு, கீரியாறு ' என்று பேசப்பட்டு வருகிறது. ஆனாலும், காங்கிரஸ் ஆட்சியில், அதைக் கொண்டுவரமுடியவில்லை. அதை இன்வெஸ்டிகேஷன் செய்யும் போது, யானைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆதலால் அந்த இடத்தையே பார்க்க முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள் காங்கிரஸ் அங்கத்தினர்கள். இன்வெஸ்டிகேஷன் செய்த அதிகாரி களும், யானைக் கூட்டம் அதிகம் என்று சொல்லிவிட்டதால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கீரியாறு திட்டம், சங்கரன்கோவில் தாலுகா, கோவில்பட்டி தாலுகாகளுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கிறது. ஆகையினால், கீரியாறுத் திட்டத்தை அமைச்சரவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மீண்டும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரோடுவசதிகளைப் பற்றிச் சொல்லும்போது, ராஜபாளையத்தில் ஐயனார்கோவில் என்ற இடம் இருக்கிறது. அங்கிருந்து குமிழி கம்பம் போகவேண்டும் என்றால் 26 மைலில் போகலாம். குறுக்கு வழி ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு கம்பம் குமிழிக்குப் போக 150 மைல் சுற்றி போகவேண்டிய நிலை இருக்கிறது. அங்கே உள்ள தோட்டத் தொழிலாளர்கள், கம்பம், குமிழி வழியாகச் சென்றால் போக்குவரத்துக்குச் சாதகமாக இருக்கும். இப்பொழுது தூத்துக்குடி துறைமுகம் ஏற்படுவதால், அங்கிருந்து கொச்சிக்குப் போகத் தக்க வழியாக இது அமையும். ஆகவே, அந்தச் சாலையைப் போட்டுத் தரும்படி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் சமர்ப்பித் திருக்கிற கோரிக்கை குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கொடைக்கானலையும், பழனியையும் இணைக்கும் மலைப்பகுதியில் 75 லட்ச ரூபாயில் ஒரு சாலை அமைக்கத் திட்டம்போட்டிருப்பதை மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் நன்றி தெரிவிக்கிறேன். அதேபோல கம்பத்தையும், ராஜபாளையத் தையும் இணைத்து மலைப்பகுதியில் ஒரு சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று ஒரு சாலையை அமைத்தால், இப்போதுள்ள 160 மைல் தூரத்தை 40 மைலுக்குக் குறைத்து, ராஜபாளையம் செல்ல முடியும். சுருளியாறு மின்சாரத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. சுருளியாறு மணலாறு சாலையை அமைக்க வழி இருக்கிறது. அந்தச் சாலை

மேலும் தொடர்ந்தால், ராஜபாளையம் சென்றுவிடும். கம்பம் ராஜபாளையம் தொடர்பு 40 மைலில் கிடைக்கும். அதைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொண்டால் சுருளியாறு, தேக்கடி செல்லும் உல்லாசப் பயணிகளுக்கு குற்றாலம், கன்னியாகுமரி போக வசதியாக இருக்கும். அதைப்போல் கன்னியாகுமரி குற்றாலம் பிரயாணிகளுக்கு சுருளிஸ்தலத்தையும், தேக்கடியையும் பார்க்க வசதியாக இருக்கும். சுருளிஸ்தலத்தை ஒரு டூரிஸ்ட் சென்டராக ஆக்கலாம்.

எனக்கு முன்பு பேசிய நண்பர் குறிப்பிட்டது போல், பச்சை குமாட்சி மலையில் உள்ள தேயிலைத் தோட்டத்திற்குத் தொழிலாளிகள் ராஜபாளையம், சாத்தூர் போன்ற இடங்களிலிருந்து, ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வருகிறார்கள். 120 மைல் பிரயாணம் செய்ய வேண்டியது இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து, செயல் படுத்தினால், 20 மைலில் பச்சைகுமாட்சி தேயிலைத் தோட்டத்திற்கு வரமுடியும். இராமநாதபுரம் ஒரு பிற்பட்ட மாவட்டம். கம்பம், உத்தமபாளையம் சற்று செழிப்பான பகுதி என்பதை ஒத்துக் கொள்கிறேன். இதுபோன்ற சாலைகள் அமைப்பதால், விளைபொருள்களைக் கொண்டு போக வசதியாக இருக்கும். கிராம நகர்ப்புறங்களில் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சாலை முக்கியமானது என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஆனால் முறையாக ஒதுக்கீடு செய்வதில் கவனம் செலுத்தவில்லை. கம்பம், குமிழி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட பஸ் விபத்தை அங்கத்தினர்கள் மறந்திருக்கமுடியாது. கம்பம்-குமிழி சாலையை விரிவு படுத்தும் திட்டத்தை அமைச்சர் எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்று சென்ற ஆண்டில் அடிக்கல் நாட்டினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த ஆண்டுத் திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை. அடுத்த ஆண்டிலாவது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூருக்கும் அடுத்த இரண்டு கிராமங்களையும் சுருளிஸ்தலத்தோடு இணைக்க ஒரு சாலை அமைக்க வேண்டும் என்று அதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. பல ஆண்டுகளாகியும் வேலை நடைபெறவில்லை. நேரிடையாக சுருளிஸ்தலத்தை இணைத்தால், பெரியாற்றில் ஒரு பாலம் கட்டி, நடவடிக்கை எடுத்தால் அங்கே உள்ள உல்லாசப் பயணிகளுக்கு அது உதவியாக இருக்கும். இந்தக் கோரிக்கையில் ஏற்கெனவே கம்பம் தொகுதியில் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஒரு சில கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேக்கடியில் குறைந்த வருமானம் பெறும் உல்லாசப் பயணிகள் தங்குவதற்காக ஓய்வு விடுதிகள் அமைப்பதும் கூடலூரில் காவல்துறைக்கு 20 வீடுகள் கட்ட இடம் பெற்று





இருக்கிறது. ஆனால் அது இன்றுவரை கட்டப்படவில்லை. அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெரியார் பகுதியில் மேம்பாட்டுத் திட்டம் சேர்க்கப்படவில்லை. மேலும் இதற்கு முன் பேசியதுபோல் ஒரு சில திட்டங்களை கால தாமதம் இல்லாமல் நிறைவேற்றவேண்டும். கம்பத்தில் ஒரு மருத்துவ மனை கட்டுவதற்கு 1970–71-ல் திட்டம் தீட்டப்படும் அதற்காக ஒரு வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அதற்கான அடிக்கல் நாட்டினார். பெரியார் ஏரியில் 30 சதவிகிதம் நீர் குறைந்து இருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். மேலும் பருவ நிலை உறுதியற்றதாக இருக்கின்றது. கிடைக்கும் தண்ணீரை, நீர்க்கசிவு, மண் அரிப்பு, ஆக்கிரமிப்பு போன்றவற்றை தவிர்க்கும் பொருட்டு எல்லாக் கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக எனது தொகுதியில் வைரவன் கால்வாய். மேத்நலை மண்ணுடிகும் கால்வாயில் இந்த சிமெண்ட் லைனிங் முறையை அமுல்படுத்த வேண்டுகிறேன். இயற்கையின் ஒத்துழைப்பும், அரசின் ஒத்துழைப்பும், எங்கள் பகுதி விவசாயிகளுக்கு கிடைத்தால், அரசின் திட்டங்களையும், அதிகாரிகளின் அறிவுரைகளையும் ஏற்று மிக்க உற்சாகத்துடன் எங்கள் பகுதி விவசாயிகள் செயல்படுவர். பூமியின் ஆழ்பகுதியில் தண்ணீர் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள முடியாமல் பல விவசாயிகள் கிணறுகளை வெட்டி பெரும் நஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அறிவுரை வழங்க ஊற்றுநீர் நிபுணர்களை என்னுடைய பகுதிக்கு ஏற்பாடு செய்தால் எனது தொகுதி விவசாயிகள் மிகவும் பயன் அடைவர் என்று கூறி, எனக்கு இந்த அளவு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

### 6. அறிவிப்பு.

#### உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் கைதானது குறித்து

MR. SPEAKER : I have to announce to the House that I have received a communication from the Inspector of Police, Tirunelveli Town, that Thiru S. Alagarswami, Member of the Tamil Nadu Assembly representing Kovilpatti Constituency, has been arrested under Section 151 Criminal Procedure Code today (1st July 1971) at 10-15 a.m. at Tirunelveli.

### (5) 1971-72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, பொதுப்பணி மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். முதற்கண் முக்கியமாக இன்று கோளா சம்பந்தமாக ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது நாம் ஒப்பந்தம் செய்த சிறுவாணி தண்ணீர்

சம்பந்தமாக, பரம்பிக்குளம்-அளியார் சம்பந்தமாக நாம் செய்த ஒப்பந்தம்பற்றி கேரள அரசின் சரியான பதில் கிடைக்கவில்லை. அதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்., ஒப்பந்தத்தை நாம் மீறினதாக சொல்லப் படுகிறது. அது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இதுபற்றி விளக்க கடமைப்பட்டு இருக்கிறேன். எந்த அடிப்படையில் இது வந்தது என்று புரியவில்லை. கோவையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய நண்பர்கள் சிறுவாணி குடிநீர் திட்டத்தைப் பற்றியும், பரம்பிக்குளம் ஆளியார், பரம்பிக்குளம் புன்னம்புழா திட்டத்தைப் பற்றியும் சில பிரச்னைகளைக் கிளப்பினார்கள். பதில் சொல்கிற வகையிலே ஏற்கெனவே 1969-ம் ஆண்டு கேரள அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கோவை மாநகருக்குக் கிடைக்க வேண்டிய குடி தண்ணீர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஏற்கெனவே கேரள அரசுக்கு திட்டங்களைத் தந்திருக்கிறோம்.

Regarding design particulars of the dam and revised estimates based on the latest schedule of rates the Tamil Nadu Government have already replied to Kerala on 18th May 1971. Revised estimates are also being sent to Kerala at the request of the Kerala Government.

அதன்படி விவரங்கள் எல்லாம் ஏற்கெனவே கேரள அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன. பரம்பிக்குளம்-புன்னம்புழா திட்டத்தைப் பற்றி ஒரு தவறான செய்தி பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தம் செய்யப் பட்டது. பாசனத்திற்காக உபயோகப்படுத்த முடியும். அது பற்றி பரிசீலிக்கப்பட்டு கேரள அரசாங்கத்திடமிருந்து சம்மதம் வில்லை. கேரள அரசாங்கத்தின் செய்தி பத்திரிக்கையில் வந்தது போல் தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கு நாங்கள் தரப்போவதால் இல்லை என்று நமது முதலமைச்சர் கேரளாவுக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியார் திட்ட ஒப்பந்தத்தின் காரணமாக கிடைக்க வேண்டிய தண்ணீர் சரியாகக் கொடுக்கப்பட வில்லை என்று குற்றம் சாட்டி அது பத்திரிகையின் மூலம் தெரிவிக் கப்பட்டு இருக்கிறது.

As regards water supply to Chithurpuzha basin the Government of Tamil Nadu had already informed the Government of Kerala that during 1970–71 seasonal conditions during the north-east monsoon in the PAP were very bad, that the total utilisable yield in the Aliyar so as to give Kerala 7,250 million cubic feet of water was not realised and the total shortfall against the total supply of 7,250 million cubic feet of water was only about 225 million cubic feet which would be made available to Kerala during May and June 1971.



Regarding supply to Kerala Sholiyar the total overall quantity of water 12,300 million cubic feet had already been supplied last year. In fact Kerala Sholiyar had surplused by a sizable quantity of 1,900 million cubic feet of water last year, though Kerala had falled to give adequate notice to this Government. The shortage of power production complained of is not due to any shortage of supply of water at the Kerala Sholayar, but due to Kerala's failure to run the ge nerator to full capacity which has resulted in the avoidable spillover. Though all these aspects have time and again been taken to the explicit notice of Kerala Government, it is indeed surprising that these baseless allegations about the so-called breach of the PAP agreement are being bandied about by Kerala from time to time. It is hoped that Kerala will not mix up irrigation issues with the Siruvani drinking water schemes affecting the day-to-day welfare of the citizens of Coimbatore.

இந்த விளக்கத்தைத் தந்து இருக்கிறேன். நம்முடைய அரசு இந்தப் பிரச்னையில் ஆர்வத்தோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : அரசு இதை விளக்கியதற்கு நன்றி கூறி என்னுடைய சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். திட்டங்களை நிறைவேற்ற ஒரு சர்க்கிள் ஸ்பெஷல் பிராஜெக்டுக்குப் போட வேண்டும். அது வந்தால் அது திறமையாக கவனிக்க நலமாக இருக்கும். அதைப்போல இன்று நடுத்தரத் திட்டங்கள் 8 திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு வழி வகுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பணம் ரொம்பவும் குறைவாக ஒதுக்கப் படுகிறது. ஒரு கோடியே 45 லட்ச ரூபாய்த் திட்டத்திற்கு 15 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு திட்டத்திற்கு இந்த நிலைமையில் போனால் 10 ஆண்டுகள் ஆகும். இந்த திட்டத்திற்கு அமைச்சரவர்கள் வந்துதான் கல் நாட்டி இருக்கிறார்கள். விரைவாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அதிகமான பணம் ஒதுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். 4 மாதம் ஆகிறது. ஒரு ஜீப் கூட கொடுக்கப்படவில்லை. அதனை அமைச்சரவர்களிடமும், அதிகாரிகளிடமும் முறையிட்டேன். ஆனால் இதுவரை ஜீப் வழங்கப்படவில்லை. ஆகையால் ஒரு திட்டம் துரிதமாக நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்னால் எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று சொல்லி, ஜீப் விரைவாகக் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன் ஏன் என்று சொன்னால் 5 மைல், 10 மைல் நடந்து போய் எதையும் செய்யமுடியாது. ஆகையால் இது உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

அதுபோக, கிரௌண்ட் வாட்டர் செல்ஸ் சம்பந்தமாக நல்ல வழிவகைகளைச் செய்யவேண்டும். அந்தத் திட்டத்திற்காக யூனிடெட் நேஷன் டெவலப்மெண்ட் ப்ரோகிராம்மின் கீழ் தஞ்சையில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. அது முடியக்கூடிய நிலையில் இருக்கிறது. அதில் எக்யூப்மெண்ட்கள் நிறைய இருக்

இன்றன. அதைக் கொண்டு வாட்டர் வெல்லுக்கு கொடுத்துப் பல இடங்களுக்கு அதை உபயோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இருப்பு மதுரையில் ஒரு எக்சிகியூடிவ் எஞ்சினியர் போடப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பதவிதான் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதே தவிர இன்னும் யாரும் வந்து சேரவில்லை. ஸ்டாபுகளைப் நிறைய சாங்ஷன் செய்ய வேண்டும். இந்த வருடம் டி.ஆர். திட்டத்திற்கு 12 லட்ச ரூபாய் தான் ஒதுக்கியிருக்கின்றார்கள். அதற்கு நிறைய தொகை ஒதுக்கப்பட வேண்டும்.

என்னுடைய பகுதியில், [illegible] என்ற பகுதியில் அந்தப் பணம் சரியாக ஒதுக்கப்படவில்லை. ஆதலால் எந்த வேலையும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. முக்கியமாக வெஸ்ட் ப்ளோயிங் ரிவர்ஸ் சம்பந்தமாக இந்த வருடமே தூதுக் குழு அனுப்பி வேண்டியதைச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள அச்சன்கோயில் சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வரட்டாறுத் திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போக புன்னியாபுரம் பக்கத்தில் உள்ள ரிசர்வாயர் வேலையை கவனிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோக, ரூரல் சம்பந்தமாக லிங்க் ரோட்ஸ் அண்ட் வில்லேஜ் ரோட்ஸ் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதாவது பல பஞ்சாயத்துக்குள் சாலைகள் அமைப்பது ரொம்ப முக்கியம். அதற்காக வருடந்தோறும் நிதி ஒதுக்கப்படுகிறது. அதை நல்ல முறையில் செய்யவேண்டுமென்று சொல்லி, இத்துடன் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. நாகலிங்கம்:** சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 1971–72-க்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். குறைகளே இல்லை என்று பேசப்பட்ட இந்த சர்க்கார் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரே குறைகளைச் சொல்கிறார்கள் என்று இங்கே சில உறுப்பினர்கள் பேசினார்கள்.

உள்ளபடியே குறைகளை எல்லாவற்றிலும் சொல்லவேண்டும் என்று நான் வாதிடவில்லை. என்னுடையத் தொகுதியில் மீனவர்கள் வாழ்கிற பகுதியில் பஸ் போக்குவரத்திற்கு சாலை போட வேண்டுமென்று சொல்லி 1¼ லட்ச ரூபாய் பஞ்ச நிவாரணத்திற்குக் கொடுக்கப்பட்டதைச் செலவழித்திருக்கிறார்கள். அப்படி செலவழித்தும் அந்தச் சாலையை மீனவ மக்கள் பயன்படுத்த முடியவில்லை. அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரியை அணுகி கேட்டபோது அரசாங்கம் மேலும் பணம் ஒதுக்கவில்லை அதனால் வேலையைத் தொடரமுடியவில்லை என்று கூறுகிறார். ஆகையால் அந்தப் பாதையை பஸ் போக்குவரத்திற்கு உரிய சாலையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, மாப்பிளை மேம்பாலம் அமைப்பதற்கு நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மழைக் காலங்களில் என்னுடைய மக்கள் பட்டணம் வந்து தொழில் பார்க்கிறார்கள். ரயில் ஓடவில்லை, பஸ் ஓடவில்லை. இந்த ஒரு மேம்பாலத்தைக் கட்டினால் அந்த மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல புன்னாருக்கும் மாத்தூருக்கும் ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லி, ஒரு வயதான கிழவி அமைச்சர் அவர்களிடம் நேரடியாகவே சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காரோடை மேம்பாலம் மத்திய ஆட்சியால் கட்டப்பட்டது. தேர்தல் காலத்தில் அதை ஒரு பிரச்சனையாகப் பேசினார்கள். கலைஞர் ஆட்சியைப் பார், காரோடை வேலையைப் பார் என்று பேசினார்கள். அவர்களைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. ஒரு பொதுப்பணி என்று இருந்தாலும் அது ஒரு சர்க்காரின் கடமை என்று எந்த அளவிற்கு இருக்கும் என்பது புரியும்.

எம்.கே.டி. சாலையில் பஞ்செட்டிச் சாலைக்கு 2¼ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தப் பணத்தைக் கொண்டு இதுவரை பணி துவக்கப்படவில்லை. இன்னும் இரண்டு மாதங்களில் மழை வந்து விட்டால், ஆந்திராவிலிருந்து வருகிற பஸ்கள் எல்லாம் வரவேண்டும். அதை நல்லமுறையில் செய்யவேண்டுமென்று, பெருவழித்துறையினர் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவரவர்களுக்கு என்று கொடுக்கப்பட்டு இருக்கின்ற ஒரு குறிப்பிடப்பட்ட கணக்கு இருக்கிறது. அந்த வகையில் அடிவரையில் மண் எடுக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. 12–13 அடி ஆழம் தான் எடுக்கிறார்கள். பொதுப்பணித்துறையில் உள்ளவர்கள் கரையோரங்களில் மண்ணை வெட்டிவிடுகிறார்கள். எங்கள் பகுதியில் பல ஏரிக்கரைகள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல் பல நாட்களாக இருக்கிறது. அதை எல்லாம் நல்ல விதத்தில் பழுது பார்க்கவும் இதை நினைவில் கொண்டு இதற்காக ஏலங்கள் விடப்படுவதை முறையாக விடவேண்டும் என்பதையும் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்கள் பழவேற்காடு—எண்ணூர் பக்கத்தில் பக்கிங்காம் கால்வாய் பற்றி சொன்னார்கள். அதிலிருந்து அனல் மின்சாரத்திற்காக தண்ணீர் எடுத்து விடுகிறார்கள். இதனால் மீனவ பெருங்குடி மக்கள் எல்லாம் சமீபத்தில் ஒரு மாத காலமாக கஷ்டப்பட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து என் பேச்சை முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பேரவையின் இன்றைய** அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

132. Notification issued with G.O. Ms. No. 931, Rural Development and Local Administration, dated the 16th April 1971, in regard to an amendment to the Tamil Nadu Khadi and Village Industries Board, (Accounts and Audit) Rules, 1968. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

133. Notification issued with G.O. Ms. No. 1097, Agriculture, dated the 3rd April 1971 in regard to regulation of trade in maize in Coimbatore district. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

134. Notification issued with G.O. Ms. No. 977, Agriculture, dated the 23rd March 1971 in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959.)]

135. Notification issued with Roc. No. 17954/69-P1, dated the 7th February 1970 in regard to exclusion of certain areas from the existing Sithalingamadam Panchayat in Tirukoilur taluk of South Arcot district for constitution into a separate panchayat by name "Edapalayam". [Laid on the table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

136. Notification issued with G.O. Ms. No. 3274, Home, dated the 27th November 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the Ambulance van bearing registration number MDA 5460 belonging to Skippo Mobile Medical Unit, Kodaikanal. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

*B. Reports, Notifications and Other Papers.*

*73. The Performance Budget of the Industries Department for the year 1971-72.

† 74. Review of the Irrigation in Tamil Nadu 1970-71 (English)

---

* 73. Laid on the Table of the House on 30th June 1971.

† Despatched to Members on 30th June 1971.





**இணைப்பு 1.**

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**பொதுப்பணித் துறை**

**பாசன மானியக் கோரிக்கைகள் 1971-72**

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரைக் கிணங்க "கோரிக்கை 26—பாசனம்" என்பதன்கீழ் ரூ. 10,96,10,900-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைகிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கு இணங்க, "கோரிக்கை 41—பாசனத்திற்கான மூலதன முதலீடு" என்பதன்கீழ் ரூ. 9,83,81,800-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்படவேண்டு மென்று நான் முன்னுரைக்கிறேன். ஏற்கெனவேயுள்ள பாசனத் திட்டங்களை விரிவுபடுத்தவும் அவற்றை மேம்படுத்தவும் ஆகிற செலவும், அவற்றிலிருந்து உயர்ந்த அளவு பயனைப் பெறும் வண்ணம் அவற்றைச் சரியான நிலையில் வைத்திருக்கச் செய்யப் படும் இயல்பான பேணுதல் செலவும், மற்றும் வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் சேதங்களைப் பழுது பார்த்தல்களுக்காகும் செலவும், நடப்பு வருவாயிலிருந்து, "கோரிக்கை 26—பாசனம்" என்பதன்கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும். ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகின்ற, அல்லது இவ்வரவு செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிற புதிய பாசனத் திட்டங்களின் மீதான செலவின் பெரும் பகுதி, "கோரிக்கை 41—பாசனத்திற்கான மூலதன முதலீடு" என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து ஈடு கட்டப்படும். கோரிக்கை 26-இன்கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கத்தில், வருவாய்த் துறையின் ஆளுகையில் உள்ள சிறுபாசனப் பணிகள் மீதான செலவிற்கான ரூ. 81,36,500 தொகையும் இதில் அடங்கும். பணியாளர்கள், பாசனப் பணிகளுக்குச் சாதாரணமாகக் கட்டுதல், பேணுதலுக்குரிய கருவிகள், தளவாடங்கள் ஆகிய இவற்றின் மொத்தச் செலவும் கோரிக்கை 28-ன் கீழ் வருகின்றன; பாசனத் தொடர்பான செலவில் ஒரு பகுதி அதாவது ரூ. 1,46,96,300 கோரிக்கை 26—பாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, 1971-72-இல் பாசனத்துக்காகச் செலவிடக் கருதப் பட்டுள்ள, அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 20,79,92,700 ஆகும்.

நடப்பாண்டில், பருவ நிலைகள் பொதுவாக மன நிறைவளிப்பவை யாயிருந்தன. காவிரி, அமராவதி, பவானி, பெரியாறு, தாமிர வருணி, கோதையாறு முதலிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில், சாதாரணமாக ஜூன் இரண்டாவது வாரத்தில் தொடங்கக் கூடிய தென் மேற்குப் பருவ மழை, சற்றுக் காலங்கடந்தே தொடங் கியது. காவிரி நீர்கோள் பகுதியில் மழையளவு 16 சதவிகிதம் குறைந்தது; பவானி நீர்கோள் பகுதியில் 45 சதவீதமும், பெரி

[1971 ஜூலை 1

யாறு நீர்க்கோள் பகுதியில் 17 சதவீதமும், மழையளவு குறைந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 29 சதவீதமும், பவானி சாகரத்தில் 50 சதவீதமும், பெரியாறு ஏரியில் 31 சதவீதமும் அமராவதி நீர்த் தேக்கத்தில் 35 சதவீதமும், பேச்சிப்பாறை பெருஞ்சாணி நீர்த் தேக்கங்களில் 31 சதவீதமும், பாபநாசம் அணையில் 9 சதவீதமும், நீர் வரவு குறைந்தது. தென் மேற்குப் பருவ மழை காலந்தாழ்ந்து தொடங்கியதால், மேட்டூர் அணை, புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய், மேட்டூர் கால்வாய், பவானி சாகர், முதல் முறையுரிமைப் பாசன ஆயக்கட்டு, கோடையாறு பாசன ஏற்பாடுகள் ஆகியவற்றைப் பாசனத்துக்கு திறந்து விடும் தேதி தள்ளிப் போட வேண்டியதாயிற்று. காவிரி கயவாய் பகுதியில் இரு போகம் பயிரிடும் திட்டத்தின்கீழ் கூடுதல் பகுதிகளைக் கொண்டு வரும் குறிக்கோளுடைய திருத்தப்பட்ட பயிரிடுமுறை இந்த ஆண்டு முதல் பின்பற்றப்பட்டது. கிருஷ்ணகிரி, சாத்தனூர், நீர்த் தேக்கங்களில், கூடுதல் பயிர் விளைவிக்க, சிறப்பாக நீர்வழங்கப்பட்டது.

வடகிழக்குப் பருவ மழை, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, மொத்தத்தில் சாதகமாகவே இருந்தது. பவானியிலும், பெரியாற்றிலும் கூட ஏறக்குறைய 18 சதவீதம் மழையளவு குறைந்தது. காவிரி நீர்கோள் பகுதியில், இயல்பான அளவை விட 45 சதவீதம் அதிகமாக இருந்தது. பவானியில் 30 சதவீதமும், பெரியாற்றில் 26 சதவீதமும், அமராவதி நீர்த் தேக்கத்தில் 21 சதவீதமும், பாபநாசத்தில் 20 சதவீதமும் நீர்வரவு குறைந்தது. மேட்டூரில் 50 சதவீதமும், பேச்சிப்பாறை பெருஞ்சாணி நீர்த் தேக்கங்களில் 46 சதவீதமும் நீர்வரவு சாதாரண அளவைவிட அதிகரித்திருந்தது.

கன்னியாகுமரி, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. வடாற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஏறக்குறைய எல்லா ஏரிகளும் நிரம்பின. இந்த ஏரிகளின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களில் கோடைப் பயிர்கள் விளைவிக்க முடியும்.

பவானி சாகரில், நீர்த்தேக்க அளவு மிகவும் குறைந்திருந்ததால், இரண்டாவது பாசன முறை உரிமை ஆயக்கட்டுகளுக்கு நீர் வழங்க இயலவில்லை. மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திற்கும் போதுமான நீர்வரவு கிட்டவில்லை. அணை மதகின் தலைப்பலகைக்கு மேல் உள்ள நீர் மதகின் வழிக் கால்வாய் திறந்துவிடப்பட்டு அவ்வணையின் முதல் பாசனப் பகுதியிலுள்ள ஏரிகளை நிரப்புவதற்கு அனுமதிக்கப்பட்டது. இவ்வணையின் ஆயக் கட்டிற்கு முறையான பாசனம் எதுவும் வழங்கப்படவில்லை. அணை மதகின் தலைப்பலகை மட்டத்திற்குக்கீழ் உள்ள நீர் தாமிரவருணி பாசன ஏற்பாட்டில் பயிராகி வரும் பிசாணப் பயிர்களுக்குப் பாசனம் அளிப்பதற்காக பயன் படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறது.



1971 ஜூலை 1]

ஏறத்தாழ தமிழ்நாட்டிலுள்ள ஆறு, ஏரி போன்ற நீர்வளங்கள் அனைத்தும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுவிட்டன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். எனவே, நமது ஊற்று நீர் வளத்தைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்வதற்காக நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு ஊற்று நீர்வளம் குறித்த அறிவியல் ஆய்வினை இரு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன. அவையாவன: (அ) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஊற்றுநீர் ஆய்வுத்திட்டம், (இ) பொதுப் பணித் துறை ஊற்றுநீர்க் கோட்டங்கள். இவ்விரு நிறுவனங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஊற்று நீர் ஆய்வு உற்பத்தி திட்டத்தின் விளைவுகளைச் சார்ந்து, ஊற்று நீர் மட்டுமே நீர் வாயிலாக இருக்கக்கூடிய வற்றி வறண்டுபோன பகுதிகளுக்குப் பயனளிக்கவும், ஏனைய பகுதிகளில் ஆறு, ஏரி போன்ற பாசன வாயில்களுக்குத் துணையாக பயன்படவும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனம் தனது திட்ட ஆய்வில் முதல் கட்டத்தை முடித்துள்ளது. மதிப்பீட்டு ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. மதிப்பீட்டு ஆய்வு அறிக்கை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அதிகாரிகளால் ஏற்பளிக்கப்படவிருக்கின்றது. காவிரி கயவாய்ப் பகுதியில் ஊற்று நீர்வள வாயில்களை விரிவாக மதிப்பிட்டு ஆய்வு செய்தலை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 1969-ல் தொடங்கப்பட்டது. இத் திட்டம், ஏறக்குறைய 1971, நவம்பர்வரை தொடரும். 55,000 அடிகளுக்கு மேல் நிலத்தில் துளைகள் இறக்கப்பட்டு, நிலத்திற் கடியிலுள்ள பல நீரோட்டப் பகுதிகள் கண்டறியப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளன.

பழைய காவிரி கயவாய் பாசனப் பகுதியைப் புதுப்பித்தலுக்கான விரிவான ஒரு திட்டம் ரூ. 49 கோடி மதிப்பீட்டுச் செலவில் தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் ஒப்புதலுக்கு வைக்கப் பட்டது. நீரைச் சிறப்பாகப் பயன்படுத்தவும், கட்டுப்படுத்தவும், ஆறு, ஏரி போன்ற நீர் வளங்களையும் ஊற்று நீரையும் இணைத்துப் பயன்படுத்திக் கொள்ளவும் தஞ்சாவூர் கயவாய்ப் பகுதியில் ஏற்கனவே உள்ள பாசன ஏற்பாட்டினை முற்றிலும் பழுது பார்க்கவும், புதுமைப் படுத்தவும், இத்திட்டம் வகுக்கப்பட்டது. ஏறத்தாழ 3.5 லட்சம் ஏக்கர் கூடுதல் பரப்பில் 2-வது போகப் பயிர் பயிரிடுவது இதன் மூலம் இயலும். இதுவரை, ரூ. 117 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் முன்னோடித் திட்டங்களாக 63 கால்வாய்களுக்குரிய மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த திட்டங்கள் முக்கியத் திட்டத்துடன் பின்னால் ஒருங்கிணைக்கப்படும். இக் கால்வாய்களில் 30 கால்வாய்களின் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின் கீழ், நாம், நடப்பாண்டில் ரூ. 252 லட்சம் செலவிட இருக்கிறோம்; இதன் மூலம் ஏற்கனவே உள்ள ஆயக் கட்டுகளில் 97,350 ஏக்கர்களுக்கு இடையறாத பாசன

[1971 ஜூலை 1

வசதி வழங்கப் பெறும் ; 8,680 ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கி விடாமல் காக்கப்படும் ; இவற்றுக்குமேல் புதிதாக 25,314 ஏக்கர் களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தித் தரப்படவேண்டும்.

## பழைய கால்வாய்களைப் புதுப்பித்தல்

### (1) அமராவதி கால்வாய்.

இத் திட்டத்தின் கீழ் நாம் பல பணிகளை மேற்கொள்ளக் கருதி யுள்ளோம் ; அவற்றிலொன்று, அமராவதி அணைக்கட்டுத் திட்டத் தின் முக்கியக் கால்வாயின் இருமருங்கிலும் காரை பூசுவதாகும். அணைக்கட்டின் கொள் அளவை அதிகரிக்காமலேயே 6,622 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்கியும், புதிதாக 3,752 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை விரிவுபடுத்தியும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதே இதன் நோக்கமாகும். மொத்தம் ரூ. 101.60 லட்சம் செலவில், இதன் ஏழு பாசனப் பகுதிகளிலு முள்ள மொத்தப் பணிகளுக்கும் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன ; இப்பணி, படிப்படியாக, நிறைவேற்றப்படக் கருதப் பட்டுள்ளது.

### (2) காளிங்கராயன் கால்வாய்

காளிங்கராயன் கால்வாயின் வடிவமைப்பைத் திருத்தி யமைக்கும் செயற் குறிப்புகளில் கால்வாய்ப் படுகையின் அகலம் மிகுந்திருக்குமிடங்களில், தேவைப்படும் அளவுக்குள் இருக்குமாறு குறைக்கப்படும். பெருமளவு நீர்க்கசிவு இழப்பு ஏற்படுவதாகக் காணப்படும் பாசனப் பகுதிகள் சிலவற்றில் கால்வாய்க்குக் கரை கட்டப்படும். மதகுகளின் பாசனத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்குப் பொருந்தும் வகையில் மதகு நீர்க் கண்களின் வடிவமைப்பு திருத்தியமைக்கப்படும். ஆயக் கட்டுகளைத் தொகுதிப்படுத்துவதன் மூலம் இயன்றவிடங்களில் எல்லாம் மதகுகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். இத்தகைய ஏற்பாடுகளால், தற்போது கால் வாயில் விடப்படும் நீரில் சேமிப்புக்கு இடமுண்டு என நியாயமாக எதிர்பார்க்கலாம். இவ்வாறு சேமிக்கப்படும் நீர், கால்வாயின் வலது பக்கத்தில் விசையேற்றங்களால் பாசனம் பெறும் ஆயக் கட்டுக்குப் பயன்படுத்தக்கூடும். வடிவமைப்பைத் திருத்தி யமைக்கும் செயற்குறிப்புகளுக்குத் தோராயமாக ரூ. 40 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின், கால் வாயில் விடப்படும் நீரால், தற்போது பாசனம் பெறும் 15,000 ஏக்கர் களுக்குப் பதிலாக, 17,750 ஏக்கர்கள் பாசனம் பெறமுடியும்.

எனது ஆளுகையிலுள்ள மாநகரக் குடி நீர் வழங்கல் திட்டம், உள்நாட்டு நீர் வழிகள் திட்டம் தொடர்பான சில பணிகள் குறித்தும் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.



1971 ஜூலை 1]

## சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல்—வீராணம் திட்டம்.

குடிநீர் தேவைகளுக்கு மிகவுயர்ந்த முதலிடம் அளிப்பதே அரசின் கொள்கையாகும். அதனையொட்டி, நாளொன்றுக்கு 4 கோடி காலன் நீர் வழங்கும் வண்ணம் மாநகரக் குடிநீர் வழங்கு வசதியை மேம்படுத்தும்பொருட்டு ரூ. 21.30 கோடி செலவில் வீராணம் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தென்னார்க்காடு மாவட்டம் வீராணம் ஏரியில் புதிய தலை மதகு ஒன்றைக் கட்டுவதன்மூலம் அங்கிருந்து நீர் கொண்டுவரப்படும். நெய்வேலிக்கருகில் உள்ள வடக்குத்து என்னும் கிராமத்தில் உள்ள நீர் தூய்மைப்படுத்தும் இடத்துக்கு, ஏரி நீர் விசையேற்றத்தின் மூலம் கொண்டு செல்லப்படும். தூய்மைப்படுத்தப்பட்ட நீர் அங்கிருந்து 5 அடி 6 அங்குலம் விட்டமுள்ள முன்னரே அழுத்தப்பட்ட கற்கலவைக் குழாய்கள் கொண்டு அமைக்கப் பட்ட 223 கி.மீ. குழாய் பாதை வழி வந்து, தியாகராய நகர் பிரகாச முதலி தெருவில் உள்ள தெற்குத் தலைப்பணிகள் பகுதியை அடையும். பல்வேறு இனங்களைச் சேர்ந்த பணிகளுக்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன; பணிகளும் நிறைவேற்றி வைக்க மேற் கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் துணைப் பணிகளிற் சில பல்வேறு கட்டங்களில் நடந்தேறி வருகின்றன.

## கூவம் சீரமைப்புத் திட்டம்

கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு ரூ. 110.45 லட்சம் செலவாகு மென 1967-ல் மதிப்பிடப்பட்டது. மாநகர் எல்லைக்குள் கூவம் ஆற்றுக்குக் கரைகள் கட்டுதலும், ஆற்றைத் தூய்மைப்படுத்திக் கடல் நீர்ப் புகவழி செய்து படகு விடத்தக்கதாக மாற்றுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். கீழே காட்டியுள்ளவாறு, திருத்த மதிப்பீட்டுச் செலவுடன், இத் திட்டம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றிவைக்க மேற்கொள்ளப்பட்டுள்ளது :—

(ரூபாய் லட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| முதல் நிலை | — — — — | 32.00 |
| இரண்டாம் நிலை | — — — | 62.00 |
| மூன்றாம் நிலை | — — — — | 16.45 |
| | | 1,10,45 |

முதல் நிலைச் சீரமைப்புப் பணிகளின்கீழ் பொறி மதகு ஒன்று கட்டுதலும், தோணித்துறை ஒன்று கட்டுதலும் பெரும்பாலும் முடிவடைந்து விட்டன. வாயில்கள் அமைப்பதும், மண்வாரி இயந்திரத்தை நிறுவுவது மட்டுமே எஞ்சியுள்ளது. தேவைப் படுகின்ற மண்வாரி இயந்திரம் விரைவில் வந்துவிடும். அது வந்தவுடன் முகத்துவாரத்தில் அது நிறுவப்படும். இது கடல் நீர் எளிதில் ஆற்றில் செல்ல வசதியளிக்கும் ; அதன்மூலம் ஆறு சிறப்பாகப் பேணி வருவதற்கு வழிகோலப்படும். என்னூர் அளல்

மின்சார நிலையத்தில் பயன்படுத்தி விடப்பட்ட கழிவு நீரை வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகக் கொண்டுவந்து பயன்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இது கூவத்தில் படகு அமிழ்வதற்கான நீர் மட்டத்தை உயர்த்திடப் பயன்படும். ஆற்றின் இரு கரைகளையும் கட்டுதல், பூங்காக்களும் புல் வெளிகளும் அமைத்தல், நீச்சல் குளம் கட்டுதல், படகுத்துறை கட்டுதல் ஆகிய இரண்டாவது நிலையில் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கரை கட்டுவதில் சுமார் 70 சதவீதம் பணி முடிவுற்றுள்ளது. நீச்சல் குளம் கட்டுதல், படகுத் துறை கட்டுதல் ஆகிய பணிகள் முடியுந்தறுவாயிலுள்ளன.

இத்திட்டத்தின் மூன்றாவது நிலைப் பணிகளின்கீழ், குடிசைப் பகுதிகளில் வாழ்வோரை வேறிடத்தில் கட்டப்பட்டுள்ள தீப் பிடிக்காத வீடுகளில் குடியமர்த்தும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. கட்டக் கருதியுள்ள 941 வீடுகளில் இதுவரை 842 (தீப்பிடிக்காத) வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடந்தேறி வருகின்றன. 1970-71-ல் கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு ஆகியுள்ள செலவு ரூ. 75.77 லட்சமாகும். இதுவரை ஆகியுள்ள மொத்தச் செலவு ரூ. 120.17 லட்சம் ஆகும். இத் திட்டத் திற்கு சுமார் 190 லட்சம் செலவாகுமென்கிற திருத்த மதிப்பீடு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

### பக்கிங்ஹாம் கால்வாய்

1967 இல் ரூ. 40 லட்சம் செலவில், மாநகர எல்லைக்குள் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயினைச் சீரமைப்பதற்கான திட்டமொன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தில், படகுத் துறை வசதிகளும், சாலை இணைப்புகளும் அமைத்துக் கொடுத்தல், கூவத் தையும், பக்கிங்ஹாம் கால்வாயையும் பேணுவதற்காக யந்திரங்கள் வாங்குதல் ஆகியவை அடங்கும். இப்போது மேற்கொண்டுள்ள பணிகள் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. 1970-71-ஆம் ஆண்டு முடிவு வரை இத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 18.03 லட்சம் செலவாகியுள்ளது. ... ... ...

### பொறியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள்

பொறியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கும் கருத்துடன் 1969 நவம்பரில், அரசு 10 கோட்டங்களுக்கும் 40 துணைக் கோட்டங்களுக்கும் ஒப்பளிப்பு வழங்கியது. தமிழ் நாட்டில் பாசனத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக இந்திய அரசு 1970-71-ம் ஆண்டுக்கு ரூ. 30.73 லட்சம் கடன் உதவி வழங்க ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டம் 1971-72-ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுகிறது.





### வேலை நிதி ஊதியப் பணியாளரை மாநில அரசுப் பணியாளராக மாற்றுதல்

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை, கிராமப்பணிகள் துறை இவற்றைச் சேர்ந்த வேலை நிதி ஊதியப் பணியாளர்களின் நெடு நாளைய கோரிக்கைகளில் ஒன்று அவர்கள் பணிகளை மாநில அரசுப் பணிகளாக மாற்ற வேண்டும் என்பதாகும். பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறை இவற்றின் வேலை நிதி ஊதியப் பணியாளர்களில், 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் அன்று ஐந்தாண்டுகளுக்குமேல் பணி புரிந்துள்ள வர்கள் பணி அந்த நாளிலிருந்து மாநில அரசுப்பணிக்கு மாற்றப்பட வேண்டுமென்று அரசு தற்போது உத்தரவிட்டுள்ளது. அதன் விளைவாக, அவர்கள் காலக்கிரமச் சம்பள ஏற்ற முறை யில் சம்பளமும், அரசு பங்குத் தொகை அளிக்கும் வருங்கால வைப்பு நிதி நலனும் ஏனைய நலன்களும் பெறுவதற்கு உரியவரா வர்கள்.

### நெடுஞ்சாலைத் துறை

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தொடக்கத்தில் அதாவது 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று சாலைகளின் மொத்த நீளம் 40,398 மைல்களாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கருதப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்று வதன்மூலம் தமிழ் நாட்டில் சாலைகளின் மொத்த நீளம், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 48,434 மைல்களாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969-70, 1970-71 ஆகிய இரு ஆண்டு களில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களின் விளைவாக, சாலைகளின் மொத்த நீளம் சுமார் 2,000 மைல்கள் அதிகரித் துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் கீழும் ஊராட்சிகளின் கீழும் உள்ள பேருந்து வழித்தடங்கள் உள்ள சாலைகளை அரசு மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 1971 மார்ச் முடிய மேற்கொள்ளப்பட்டுள்ள சாலைகளின் மொத்த நீளம் 5,440 மைல்களாகும். 1971-72-ஆம் ஆண்டின்போது மொத்தம் 1,000 மைல் நீளச் சாலைகளை மேற் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் பணித் திட்டங்களில் சேர்க்கப் பட்டுள்ள முக்கியத் திட்டங்களிற் சில :—

(1) மைசூர் மாநில எல்லை தொடங்கி சேலம் முடியவுள்ள தேசிய 7-வது நெடுஞ்சாலைக்கு ரூ. 5 கோடி செலவில் மேம்பாடு செய்தல்.

(2) ரூ. 6.52 கோடி மதிப்பீட்டுச் செலவில் பாம்பன் பாலம் கட்டுதல் ; இது தேசிய நெடுஞ்சாலைகளின்கீழ் இதனை மேற்கொள் வதற்கு இந்திய அரசு இசைவளிப்பதற்கு உட்பட்டதாகும்.

(3) ரூ. 75 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கோடைக்கானலி லிருந்து பழனிக்குச் சாலை அமைத்தல்.

## கட்டிடங்கள்

மருத்துவமனைகள், ஏனைய மருத்துவ நிறுவனங்களுக்கான கட்டிடங்கள், கல்வி நிறுவனக் கட்டிடங்கள் ஆகியவை பொதுப் பணித் துறை மேற்கொள்ளும் கணிசமான பணிகளில் அடங்கும். முடிக்கப்பட்டுள்ள அல்லது முடிவுறும் நிலையிலுள்ள பெரும் பணிகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| (1) கோயம்பத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு விடுதித் தொகுதி ஒன்று கட்டுதல். | 8.75 |
| (2) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் நோய்க் குறியியல் தொகுதி கட்டுதல். | 5.00 |
| (3) சென்னை, அரசு மருத்துவ மனையில் இருதய நோய் இயல் பிரிவு. | 17.70 |
| (4) ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் முட நீக்கியல் பிரிவு, எக்ஸ் கதிர் பிரிவு முதலியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டுதல். | 9.85 |
| (5) அரும்பாக்கத்தில் இந்திய முறை மருத்துவத்திற்காக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டுதல். | 8.18 |
| (6) திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ராசிபுரம் ஆகிய இடங்களில் அரசு கலைக் கல்லூரி கட்டுதல். | |
| (7) சட்டக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | [illegible] |
| (8) அரசினர் கலைக் கல்லூரி, திருவாரூர் | — |
| (9) அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமார பாளையம். | |

குடும்ப நலத் திட்ட நிலையங்கள் துணை நிலையங்கள் முதலியவற்றுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான பெருந் திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மதுரையில் பல நீதிமன்றங்களுக்குரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 35 லட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இப்பணி முடிவுற்றுள்ளது.

திருச்சியில் குற்றவியல் நீதி மன்றங்கள் அனைத்தையும் நிறுவக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 5.62 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. சென்னையில் வழக்குரைஞர்களுக்காகக் கூடுதல் அறைகள் கட்டுவதற்கு ரூ. 9.86 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது ; இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

V211,31 N7 31N71-532 63259



## மைசூர் அரசு காவிரியின் குறுக்கே பாசனத்திற்காக அணைக் கட்டுதல்

பாசனத்திற்காக, காவிரியின் குறுக்கே மைசூர் அரசு அணை கட்டுதல்—மைசூரிலுள்ள காவிரியின் கிளை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சுவர்ணவதி ஆகியவற்றில் பாசனத்திற்காகச் சில அணைக்கட்டுகளைக் கட்ட மைசூர் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுபற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட பணியை மத்திய அரசின் தொழில் நுட்ப அனுமதியின்றியே மைசூர் அரசு தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. தமிழ் நாட்டுக்கும் மைசூர் அரசுக்குமிடையே ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தமும், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தமும் இத்திட்டங்களுக்குப் பொருந்துகின்றன. எனவே, இது இரு மாநில முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்வாறிருக்க இத்திட்டங்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து கண்டிப்பாகப் பெறப்பட வேண்டிய இசைவு பெறப்படவில்லை. இந்த அரசின் முறையான சில மறுப்புரைகளுக்கு மைசூர் அரசு பதிலளிக்கவும் இல்லை. இந்திய அரசின் முயற்சி வாயிலாக, 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க, மைசூர் அரசுடன் இணக்கமான தீர்வுக்கு வர நாம் முயன்று வந்தோம்; ஆனால், இந்தப் பேச்சு வார்த்தைகள் பலனளிக்கவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது தீட்டப்பட்டுள்ள மைசூர் திட்டங்கள், காவிரியின் கீழுள்ள பாசன நலனுக்குப் பெரிதும் தீங்கிழைக்கும் என அஞ்சுகிறோம். ஏனென்றால், மாநிலங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விதித்துறைகளுக்கு உட்பட்டு, இத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று உறுதியளிக்க மைசூர் அரசு இணங்கவில்லை. மேலும், இத்தகராறுகளுக்குத் தீர்வு காணப்படும் வரையில் தங்களது திட்டங்களை நிறுத்தி வைக்குமாறு நாம் செய்துகொண்ட வேண்டுகோளையும் மைசூர் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையில், தமிழ் நாட்டில் காவிரி ஆற்றின் கீழ் தொன்றுதொட்டு கிட்டி வந்த பாசன நலன்களையும் மைசூர் அரசின் ஒருதலைப் பட்சமான நடவடிக்கையால் எழுந்த பாதகமான சூழ்நிலையையும் கருத்தில்கொண்டு தமிழ்நாடு, மைசூர், கேரள மாநிலங்களில் அமைச்சர்களும் முதலமைச்சர்களும் இச்சிக்கலுக்கு இணக்கமான தீர்வு காண்பதெற்கென பல முறை கூடி உரையாடல்கள் நடத்தினர். ஆனால், தமிழ்நாடு மேற்கொண்ட நிலைக்கும் மைசூர் மேற்கொண்ட நிலைக்கும் ஒரு சிறிதும் ஒற்றுமை இராததால், உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. உருப்படியான தீர்வு எதுவும் காணமுடியாததால், 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ஆம் நாளன்று இரு மாநிலங்களுக்கிடையே நடந்த உரையாடல்களில் டாக்டர் ராவ் அவர்கள் தெரிவித்த முடிவையொட்டி. நடுவர் மன்றம் ஒன்றை அமைக்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கும் தலைமை அமைச்சருக்கும் கடிதங்கள் வரைந்தது. தலைமை அமைச்சருக்கு நேர்முகக் கடிதம் அனுப்பப்பட்டது. இச்சிக்கலை உடனடியாக நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு

[1971 ஜூலை 1

விடுமாறு 23-12-1970, 1-4-1971, 5-6-1971 ஆகிய நாட்களில் நேர்முகக் கடிதங்கள் தலைமை அமைச்சருக்கு எழுதப்பட்டன. இதற்கிடையில் ஹேமாவதி திட்டத்தையும், பிற திட்டங்களையும் நிறைவேற்றும் பணியில் மைசூர் அரசு விரைந்து முற்பட்டுள்ளது. காவிரியைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டிலுள்ள பாசன உரிமையின் பெரு முக்கியத்துவத்தையும் அளவையும், இச்சிக்கலை நடுவர் மன்றத்தின் முடிவிற்கு அனுப்புமாறு நாம் விடுத்த வேண்டுகோளின்மேல் இந்திய அரசு பதினெட்டு திங்களுக்கு மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காததையும் கருத்திற்கொண்டு, இச்சிக்கலுக்கு உரிய காலத்தில் திறம்படத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள்பற்றி விவாதிப்பதற்காக நமது முதலமைச்சர் சட்டமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை 15—6—1971 அன்று கூட்டினர்.

தமிழ்நாட்டின் உழவர்கள் பெறுவதற்குரிமையுடைய, சட்டத்தில் விதித்துள்ள பாசன உரிமைகளையும் காவிரி ஆற்றின் கீழ்ப்பகுதியில் அவர்கள் பன்னெடுங்காலமாக அனுபவித்து வரும் பாசன உரிமைகளையும் பாதுகாப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்படுமென்று இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

### குடிநீர் வழங்கும் திட்டங்களும் கழிவு நீரகற்றுத் திட்டங்களும்

குடி நீர் வழங்கும் திட்டங்களையும் கழிவு நீரகற்றுத் திட்டங்களையும் தீட்டி ஆய்வு செய்தல், நிறைவேற்றுதல் ஆகிய பணி ஒரே நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவேண்டுமென 1969 செப்டம்பர் திங்களில் அரசு முடிவு செய்தது. அதற்கேற்ப தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம் 1970-71-ஆம் ஆண்டில் 52 புதிய குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அடங்கல் திட்டம் ஒன்றைத் தயாரித்தது; (இரண்டாவது தொகுதியாகிய ) இந்த 52 புதிய திட்டங்களையும் (முதல் தொகுதியின்கீழ்), எஞ்சி நின்ற 22 பணித் திட்டங்களையும் நிறைவேற்ற ரூ. 2,96.29 லட்சம் கடன் வழங்குமாறு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை 1970-ஜூலையில் இவ்வாரியம் அணுகியது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் 50 உள்ளாட்சி மன்றங்களுக்கு 50 நீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டங்களுக்காக ரூ. 2,70.78 லட்சம் கடன் வழங்கியது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய நிதி உதவியைக்கொண்டு 1970–71-ம் ஆண்டில் 28 புதிய குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டன. 1970–71-ல் முதலாவது, இரண்டாவது தொகுதித் திட்டங்களுக்காக முறையே ரூ. 366.25 லட்சமும், ரூ. 1,77.56 லட்சமும் செலவிடப்பட்டது. இவ்வாறு இத்திட்டங்களுக்கான மொத்தச் செலவுத் தொகை ரூ. 5,43.81 லட்சமாகும்.



1971 ஜூலை 1]

இவ் வாரியம் 14—4—1971 முதற்கொண்டு சட்டப்பூர்வமான அடிப்படையில் அமைக்கப்பட்டது. 1970–71-ம் ஆண்டிற்கான நகர்ப்புற குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக ரூ. 10.25 கோடி செலவாகும் செயற்குறிப்புகளை வாரியம் வகுத்துள்ளது. இச் செயற்குறிப்புகள், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தைச் கலந்துகொண்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

திட்டப்பணிகளின் முன்னேற்றம்பற்றிய விவரங்களை பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரையில் காணலாம்.

## இணைப்பு 2

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ்நாட்டின் பாசன வசதிகள்—ஆய்வுரை, 1970-71.

வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் ஆண்டுத் திட்டங்கள் மூன்றுக்கும் பிறகு, இந்த ஆய்வுரை ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டாகும். 1970–71-ம் ஆண்டு இறுதிவரை பாசனத் திட்டங்களின் முன்னேற்றம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய மூன்று ஆண்டுகளுக்கான வேலைத் திட்டமும் இதில் விளக்கப்படுகிறது.

### முதல் இரண்டு—ஐந்தாண்டுத் திட்டங்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் 22.00 லட்சம் ஏக்கர் நிலம் பெரும் பாசனத் திட்டங்களின் கீழ் பாசன வசதி பெற்றது. முதலாவது திட்டக் காலத்தில் ஒன்பது புதிய பாசனத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. 1.32 லட்சம் ஏக்கர் பரப்புள்ள ஆயக்கட்டுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இது தவிர 124 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்கும் இடையறாத பாசன வசதி அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 1.77 லட்சம் ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது ; 1.15 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கப்பட்டது. முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது பாசனத் திட்டங்களுக்கென முறையே ரூ. 20.15 கோடியும், ரூ. 14.45 கோடியும் செலவிடப்பட்டன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும், 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுத் திட்டங்களும்.

பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டத்தைத்தவிர, 9 வேலைத் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இந்த 9 திட்டங்களில், மூன்றாவது திட்டக்காலத்தில் [illegible] திட்டங்கள் தான் அரசினால் ஒப்பளிக்கப்பட்டன. அவையாவன: பாலாறு அணைக்கட்டு—கால்வாய்களை மேம்படுத்தும் பணி, சாத்தனூர் திட்டம், II-ம் நிலை, கோமுகி நதித் திட்டம், சித்தாறு-

பட்டணங்கால் திட்டம், மஞ்சளாறு திட்டம் என்பன. இவற்றில் முதல் மூன்று திட்டங்களின் பணியும் முடிவுற்று அவற்றின் பயன்களும் பெறப்பட்டன. மஞ்சளாறு நீர்த்தேக்கத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு திட்டத்தில் சேராத பணியாக நிறைவேற்றப்பட்டது. சித்தாறு-பட்டணங்கால் திட்டம் முடியும் நிலையில் உள்ளது. இத் திட்டம் 1970-71-ல் திறக்கப்பட்டுப் பாசனத்துக்கு நீர் வழங்கப்பட்டது.

மணிமுத்தா நதித் திட்டமும், கடானா நதி திட்டமும், இராம நதித் திட்டமும், 1966-67-ல் தொடங்கப்பட்டன. மணிமுத்தா நதித் திட்டம் முடிவடைந்து பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கடானா நதி, இராமநதித் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் இவை கட்டி முடிக்கப்படும். வைகைக் கால்வாயைப் புதுப்பிக்கும் திட்டம் 1967-68-ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது நடந்தேறி வருகிறது.

மூன்றாவது திட்டத்திலும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பெரும் பாசனப் பணித் திட்டங்களுக்கு ரூ. 41.10 கோடி ஒதுக்கப்பட்டது. செலவிடப்பட்ட தொகை ரூ. 44.00 கோடியாகும்.

1. பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| வேலைத்திட்டத்திற்கான செலவு— | |
| மூலத்தொகை .. .. .. .. .. .. | 3,508·00 |
| திருத்தப்பட்ட தொகை .. .. .. .. .. | 6,753·00 |
| பாசனப் பகுதி .. .. .. .. .. .. | 4,849·00 |
| இரண்டாவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு .. | 426·71 |
| மூன்றாவது திட்டத்தில் செய்யபபட்ட செலவு .. .. | 2,621 16 |
| 1966-67-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. .. | 312·84 |
| 1967–68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 354·80 |
| 1968–69-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 264·27 |
| 1969–70-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 277·74 |
| 1969-70-ம் ஆண்டு முடிய செய்த மொத்தச் செலவு. | 4,157·61 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 1,124·00 |
| 1970–71-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு .. | 240·00 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. | 232·65 |
| 1971–72 திட்ட மதிப்பீடு .. .. .. .. | 178·49 |

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் பலநோக்குத் திட்டமாகும். இப்பணித் திட்டம் இரண்டாவது திட்டக்காலத்தில் தொடங்கப்பட்டதாகும். இது மூன்றாவது திட்டக்காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பெற்று, நான்காவது திட்டக் காலத்தில் எல்லா வகையிலும் முடிந்துவிடும். இத்திட்டத்திற்கு ரூ. 67.53 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் வட்டங்களில் 2.40 லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்கும் பாசன





வசதி கிடைப்பதற்காகவும் தமிழ்நாடு கேரளா மாநிலங்களில் பாலாறு, ஆளியாறு திட்டத்தின்கீழ் தற்பொழுதுள்ள பழைய ஆயக்கட்டுப்பகுதி 50,000 ஏக்கருக்குப் பாசன வசதியை அதிகரிப்பதற்காகவும் நான்கு மின் நிலையங்களில் 185 மெக வாட் உற்பத்தித் திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையிலும் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு மாநிலங்களின் நன்மைகளுக்காக இரு மாநில எல்லைக் கோடுகளுக்கிடையே ஓடும் ஆறுகளின் நீரைப் பயன்படுத்துவதற்கு வகை செய்கிறது எனவே கேரளா மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்வது அவசியமாகிறது. கேரள மாநிலம் அளித்த ஒத்துழைப்பு காரணமாக இத்திட்டத்தின்கீழ் நாம் தொடங்கக் கருதியுள்ள எல்லாப் பணிகள் குறித்தும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுக்கும், கேரள அரசுக்கும் இடையில் 29—5—1970 அன்று ஏற்பட்ட மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தின்படி, (i) நீராற்றின் மேல் பகுதியில் அதற்குக் குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டுவதற்கும், சோலையாறு பள்ளத்தாக்கிற்குச் செல்லும் சுரங்கப்பாதை ஒன்றை அமைக்கவும், (ii) தேக்கடி நீர்த் தேக்கத்தில் ஏற்பட்ட நீர்க் குறைவை ஈடு செய்வதற்காக நீராற்றின் கீழ்பகுதியில் ஒரு சிற்றணை கட்டவும் இதை அடுத்தாற்போலுள்ள ஆனைமலையாறு நீர்ப்பள்ளத்தாக்கிற்கு அருகிலிருந்து தமிழ்நாட்டிற்கு 2,500 மி. கனஅடி நீரை ஒரு தனி உடன்படிக்கைமூலம் முடிவு செய்து திருப்பி விடுவதற்கும் தமிழ்நாடு அரசுக்கு உரிமை உள்ளது.

முகாம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும், முகாமிற்குச் செல்லும் சாலைகள் போடப்பட்ட பின்னரும், சிற்றணை, சுரங்கப்பாதை ஆகியவை கட்டுவதுகுறித்த பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிற்றணையின் வலது பக்கத்தில் கான்கிரீட் போடும் பணி முடிக்கப்பட்டு, கட்டுவேலை நடந்தேறி வருகிறது. வெளியேறும் பகுதியிலிருந்து சுரங்கப் பாதையமைக்கும் பணியும் சுரங்கப்பாதையின் நுழையும் பகுதி வரையில் கால்வாய்ப் பணிகளும் நடந்தேறி வருகின்றன.

கீழ்நீராறு அணை, சுரங்கப்பாதை ஆகியவை குறித்த விரிவான ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. கீழ்நீராறு சுரங்கப்பாதை அணை கட்டுவதற்கான வடிவமைப்பும், அமைப்பிடமும், இம் மாநிலத்தின் தொழில் நுட்ப அதிகாரிகளின் கூட்டு ஆய்வுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும்.

படிப்படியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுவரும்போது இது செயலுக்குக் கொண்டுவரப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படும் வகையில் செயல்படுத்தப்பட்டது, இத்திட்டத்தின் சிறப்புக்கூறு ஆகும்.

ஆளியாறு அணை, பரம்பிக்குளம் அணை, தூணக்கடவு அணை, சர்க்கார்பதி மின்நிலையம், திருமூர்த்தி அணை, தண்ணீரை எடுத்துச் செல்வதற்கான இடை இணைப்பு ஏற்பாடுகள் நிகரான

பாசனக் கால்வாய் ஏற்பாடுகள் ஆகியவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 345 அடி உயரமுள்ள சோலையாறு அணை (இதுவே தமிழ் நாட்டிலுள்ள மிக உயரமான அணையாகும்) முற்றும் முடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கிணங்க, 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் நாளிலிருந்து கேரள சோலையாறு நீர்த்தேக்கத்திற்கு இந்த அணையிலிருந்து நீர்விடப்படுகிறது. மேலும் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் நாள் முதற்கொண்டு முதன் முறையாக பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்திற்கு இந்த அணையிலிருந்து நீர் திருப்பிவிடப்படுகிறது.

கேரள வனத்துறையினர் நீரில் மூழ்கிவிடக்கூடிய பகுதியிலுள்ள காட்டை அழித்துக் கொடுக்காத காரணத்தால் பாதியிலேயே நிறுத்தி விடப்பட்ட பெருவாரிப்பள்ளம் அணைக்கட்டு சம்பந்தமான வேலை அவர்களின் இசைவைப் பெற்ற பின்னர் திரும்ப நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பணியை இந்த ஆண்டின் மத்தியில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப்பகுதியில் 1970-ம் ஆண்டில் பருவ மழை அவ்வளவு செம்மையாக பெய்யவில்லை. எனினும், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட நீர்த்தேக்கங்களில் உள்ள நீரையும் சேமிப்பு நீரையும் கொண்டு, புதிய ஆயக்கட்டுப்பகுதியில் 1,53,555 ஏக்கர் பரப்பளவிற்கு, பாசனம் கீழ் கண்டவாறு அளிக்கப்பட்டு வருகிறது :—

| தொடர் எண்ணும், கால்வாயின் பெயரும். | நீர் விடப்பட்ட நாள். | பாசனம் அனுமதிக்கப்பட்ட பரப்பளவு. ஏக்கர். | பாசனம் நீடிக்கப்பட்ட கால அளவுப்படி பாசனம் மூடப்பட்ட நாள். | பாசனம் செய்யப்பட்ட பகுதி. ஏக்கர். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பொள்ளாச்சிக் கால்வாய் .. .. .. .. .. | 15- 4-1970 | 23,700 | 30- 9-1970 | 7,770 |
| 2 வேட்டைக்காரன்புதூர் கால்வாய் மண்டலம் I .. .. | 15- 4-1970 | 5,891 | 30- 9-1970 | 1,514 |
| 3 பரம்பிக்குளம் தலைக்கால்வாய் 13/7 மைல் முதல் 30/3 மைல் வரை. | 1- 8-1970 | 42,000 | 7- 1-1971 | 21,963 |
| 4 பரம்பிக்குளம் தலைக்கால்வாய் 30/3 மைல் முதல் 34/7 மைல் வரை. | 1- 9 1970 | 36,864 | 15- 1-1971 | 18,707 |
| 5 பரம்பிக்குளம் தலைக்கால்வாய் 54/7 மைல் முதல் 70/5 மைல் வரை. | 1-10-1970 | 28,641 | 15- 3-1971 | 6,771 |
| 6 ஆளியாறு நீர் வழங்கு கால்வாய் .. .. .. | 1-10-1970 | 4,662 | 15- 2-1971 | 885 |
| 7 சேதுமடைக் கால்வாய் .. .. .. .. .. | 1-10-1970 | 5,603 | 15- 2-1971 | 1,076 |
| 8 மேல் நீர்த் தேக்கம் .. .. .. .. .. | 1-11-1970 | 6,064 | 28- 2-1971 | 988 |
| 9 திருமூர்த்தி அணையில் உயர்மட்டக் கால்வாய் .. .. .. | 9- 8-1970 | 730 | 7- 1-1971 | 601 |
| | | 153,555 | | 60,275 |

[1971 ஜூலை 1

இவற்றுடன்கூட, தமிழ் நாடு, கேரள மாநிலங்களில், ஆழி யாற்றின்கீழ் சுமார் 26,400 ஏக்கர் பழைய ஆயக்கட்டிற்கு (அதாவது, தமிழ் நாட்டில் 6,400 ஏக்கர்களும், கேரளாவில் 20,000 ஏக்கர்களும்) பாசன வசதியளிக்கப்பட்டது. உடுமலைப்பேட்டை கால்வாயின் கீழுள்ள ஆயக்கட்டு 1970-ஆம் ஆண்டில் பாசனத் திற்கு அனுமதிக்கப்படவில்லை.

2. சித்தாறு-பட்டணங்கால் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டத்தின் மொத்த செலவு .. .. .. .. | 6,84·00 |
| மூன்றுவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு .. | 2,05·35 |
| 1966-67-ம் ஆண்டில் செய்யப்பட்ட செலவு .. | 1,05·37 |
| 1967-68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 90·49 |
| 1968-69-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 77·10 |
| 1969-70-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 71·70 |
| 1969-70-ம் ஆண்டு முடிவு செய்த மொத்தச் செலவு | 5,50·01 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. | 2,22·00 |
| 1970-71-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 50·26 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. .. | 41·56 |
| 1971-72-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 14·01 |

பேச்சிப்பாறை அணைக்கு கீழ் கோதையாற்றில் கலக்கும் இரு சிற்றாறுகளின் குறுக்காக 2 சிறிய நீர்த்தேக்கங்களை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்போதுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் முழு நீர்த் தேக்க மட்டங்கள், அவற்றின் கொள் அளவுகளைக் கூடுதல் ஆக்குவதற்காக உயர்த்தப்படும். பட்டணங்கால் கால்வாய் எனப்படும் புதிய கால் வாய் ஒன்றையும் வெட்ட திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம். இராதாபுரம் தாலுகாவில் 17,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென தற்போதுள்ள நிலப்பாறை கால்வாயிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் வெட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் (நன்செய்) இருபோகப் பாசனமும் (மொத்தப் பரப்பு— 30,000 ஏக்கர்) திருநெல்வேலி மாவட்டத்தில் 17,000 ஏக்கராவும் புன்செய் பயிரிடுவதற்கென இத்திட்டத்தின்மூலம் பாசன வசதி பெறும். நடப்பு ஆண்டில் திட்ட முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் சிறு பணிகள், முடிவுறும் நிலையிலுள்ள இனங்களும் தவிர, ஏறத்தாழ மற்றெல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. பட்டணங்கால் திட்டமும் இந்த ஆண்டு பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது.



1971 ஜூலை 1]

1966-67-ஆம் ஆண்டில் மூன்று புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவையாவன: (1) மணிமுக்தா நதித் திட்டம், (2) ராம நதித் திட்டம், (3) கடானா நதித் திட்டம். இவற்றின் சுருக்க விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

மணிமுக்தா நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டத்திற்கான செலவு .. .. .. .. | 1,06·00 |
| 1966-67-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 20·61 |
| 1967-68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 37·28 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. .. | 34·63 |
| 1969-70-ல் செய்த செலவு .. .. .. .. | 6·40 |
| 1969-70 முடிய செய்த மொத்தச் செலவு .. | 98·92 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. | 18·00 |
| 1970-71-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு .. | 2·84 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. .. | 2·73 |
| 1971-72-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. .. | 1·74 |

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் மணி முக்தா நதியின் குறுக்கே 72 கோடியே 80 லட்சம் கன அடி கொள் அளவு உள்ள ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதும், வலப்புறத்தில் 7½ மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். தற்போது பாசனம் பெறும் சுமார் 250 ஏக்கருக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், 4,000 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றவும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்து பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

ராம நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. | 1,80·00 |
| 1966-67-ல் செய்த செலவு .. .. .. .. | 0·11 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. .. | 9·47 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. .. | 0·75 |
| 1969-70-ல் செய்த செலவு .. .. .. .. | 29·07 |
| 1969-70 முடிய செய்த மொத்தச் செலவு .. | 39·40 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 75·00 |
| 1970-71-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 45·03 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. .. | 54·90 |
| 1971-72-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 38·21 |

[1971 ஜூலை 1

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரவருணியின் கிளை நதியாகிய ராம நதியின் குறுக்கே 15 கோடி கன அடி கொள் அளவு உள்ள நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதும், புதிய கால்வாய் ஒன்று வெட்டுவதும், இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டத்தின் மூலம் பாசனம் பெறும் 4,170 ஏக்கர் தற்போதைய ஆயக்கட்டு நிலங்களில் 30 சதவீத நிலங்களுக்கு இடையறாத பாசன வசதி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 500 ஏக்கர் புதிய நிலப்பரப்பும் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். ஆனால், இந்நிலங்களில் அக்டோபர்-பிப்ரவரி பருவத்தில் ஒரு போகம் மட்டும் பயிரிடப் படுவதற்குப் பாசன வசதி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு 1966 நவம்பரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அணுகு பாலம் தவிர தென்கால் மதகுக்கான அடித்தளம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. நீர் வழிந்தோடுவதற்கான அணைச்சுவர் கட்டும் பணி உயர் மட்டம் வரை முடிக்கப்பட்டுள்ளது. மண் அணை, நீர் வழிந்தோடும் கால்வாய், மதகுகள் கட்டும் பணி நடந்தேறி வருகின்றன.

### கடானா நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. | 190·00 |
| 1966-67-ல் செய்த செலவு .. .. .. .. | 0·11 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. .. | 14·33 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. .. | 15·81 |
| 1969-70-ல் செய்த செலவு .. .. .. .. | 38·25 |
| 1969-70 முடிய செய்த மொத்த செலவு .. .. | 68·50 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 154·00 |
| 1970-71-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 66·17 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. .. | 77·55 |
| 1971-72-க்கான திட்ட மதிப்பீடு .. .. | 36·78 |

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பான்குளத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் கடானா நதியின் (தாமிரவருணியின் கிளை நதி) குறுக்கே 380 மில்லியன் கன அடி நீர் கொள்ளும் நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டி, மேற்படி ஆற்றின் உபரி நீரைத் தேக்கி வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றினால் பாசனம் பெறும் 7,112 ஏக்கர் கொண்ட தற்போதைய ஆயக்கட்டு நிலத்திற்கு இடையறாத பாசன வசதியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இரண்டு பருவங்களில் கூடுதலாக 1,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்தின் கீழ்க் கொண்டுவருவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கு 1967-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மண் அணை, நீர் வழிந்தோடும் கால்வாய்களுக்குப் பூச்சு வேலை, மதகுகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலையில் நடந்தேறி வருகின்றன.



1971 ஜூலை 1]

வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு 1967-68-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் விவரம் நான்காவது திட்டத்தில் இத்திட்டத்திற்கான ஆண்டுவாரி நிதி ஒதுக்கம் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. | 483·00 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. .. | .. |
| 1968-69-ல செய்த செலவு .. .. .. | 5·41 |
| 1969-70-ல் செய்த செலவு .. .. .. .. | 11·41 |
| 1969-70 முடிய செய்த செலவு .. .. .. | 16·82 |
| நான்காவது திட்ட ஒதுக்கீடு .. .. .. | 393·00 |
| 1970-71-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 11·86 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. | 8·83 |
| 1971-72-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 55·58 |

விரகனூரில் ஒன்றும், பார்த்திபனூரில் மற்றொன்றும் ஆக இரண்டு பொறி மதகுகளை வைகையாற்றின் குறுக்கே கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பொறி மதகுகளின் இரு பக்கங்களிலும் பொது வாய்க்கால்கள் அமைக்கப்படும். இதனால் தற்போதுள்ள பல ஏரிகளும், கால்வாய்களும், நீர் பெறும். தற்போது பாசனம் பெறும் சுமார் 95,882 ஏக்கர் நிலங்களுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கப்படும். இதுவரை பாசன வசதி பெறாத 13,900 ஏக்கருக்குக் கிட்டும் 1968 மார்ச் திங்களில் இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. பார்த்திபனூர் பொறி மதகிலிருந்து பிரிந்து செல்லும் இடது கால்வாய், தலைக் கால்வாய் ஆகியவற்றை வெட்டும் பணி நடந்தேறி வருகிறது. தலைக் கால்வாய்களில் தணிவு அமைப்புகளை (drops) கட்டும் பணியும் நடந்தேறி வருகிறது.

### தஞ்சாவூர்க் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. | 4,900·00 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. .. | 3·52 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. .. | 9·84 |
| 1969-70-ல் செய்த செலவு .. .. .. .. | 12·69 |
| 1969-70 முடிய செய்த மொத்தச் செலவு .. .. | 26·05 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. | 500·00 |
| 1970-71-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 22·59 |
| 1970-71-ல் செய்த செலவு .. .. .. | 17·88 |
| 1971-72-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. | 21·02 |

[1971 ஜூலை 1

இத்திட்டத்தின் முக்கியக் கூறுகள் (i) வெள்ளக் காலங்களில் திறமையாகச் சமாளிக்க தலைப் பகுதிப் பணிகளை மேம்பாடு செய்தல்; (ii) தூர் எடுத்தல், கரைகளை உயர்த்துதல், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு, கால்வாய்ப் பகுதிகளில் கசிவு ஏற்படுவதால் விரயம் ஏற்படும் பகுதிகளில் காரை பூசுதல்; (iii) முக்கிய ஆறுகளிலும், கிளை ஆறுகளின் குறுக்கேயும், பொறி மதகு கட்டுதல், படுகை அணைகளைப் பொறி மதகுகளாக மாற்றுதல்; (iv) தேவையான இடங்களில் எல்லாம் "A" வகுப்புக் கால்வாய்களின் தரத்தை உயர்த்துதல், நீர் பிரிக்கும் அணை கட்டுதல், சுவர்கள் கட்டுதல், திறந்த மடைகளில் மதகுகள் அமைத்தல், 50 ஏக்கர் அளவுவரை கண்ணிவாய்க்கால் அமைத்தல், முறிவு உள்ள பகுதிகளை நேராக வெட்டிவிடுதல், மறுமுறை தரம் பிரித்தல், தூர் எடுத்தல்; (v) பாசனம்-வடிகால் ஆறுகளுக்கு கூடுதலாக நீர் வழங்குதல்; (vi) கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டை மேம்பாடு செய்தல்.

வடிகால் நீரை விரைவில் வெளியேற்றுவதற்காகத் தற்பொழுதுள்ள வடிகால் ஆறுகளை நேராக வெட்டிவிடுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. நீரில் மூழ்கிய பகுதிகளுக்கு நிவாரணமளித்தல், காவிரியின் மருங்கில் வெள்ளம் புகுவதைத் தடுக்க காவிரியின் குறுக்கே மேல் அணைக்கட்டில் குறுக்கு அணை ஒன்றையும் கட்டுதல் ஆகிய பணிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேற்பரப்பு நீரையும், ஊற்று நீரையும் ஒருங்கே பயன்படுத்தும் பொருட்டு, 5,000 வடிமுனைக் குழாய்களும், 1,000 ஆழமான துளைக் கிணறுகளும் தோண்டுவது திட்டமிடப்பட்டுள்ளது. முனைப்புத் திட்டமாக நிறைவேற்றுவதற்காக காவேரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30 வாய்க்கால்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

## சிறப்புச் சிறு பாசனத் திட்டம்.

விரைவான பலனளிக்கக்கூடியவையும் ஒவ்வொன்றும் ரூ. 25 லட்சத்திற்குக் குறைந்த செலவில் சிறு பணிகளைக் உள்ளடக்கியவையுமான பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

1. உடைப்பு எடுத்த அல்லது கைவிடப்பட்ட ஏரிகளைச் சீரமைத்தல்.

2. ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் பழைய ஊற்று வாய்க்கால்கள் அல்லது வெள்ள வாய்க்கால்களைத் தூர் எடுத்துப் புதுப்பித்து புதிய ஏரிகளை அமைத்தல்.

3. பாசன ஏரிகளுக்குப் போகும் நீரைப் பெருக்குவதற்கு ஆற்றுக்குக் குறுக்கேயும் ஓடைகளுக்குக் குறுக்கேயும் முறையே அணைக்கட்டு கட்டுதல்,, திசை திருப்பும் சாதனங்களை ஏற்படுத்துதல், ஏற்கனவே உள்ள அணைக்கட்டுகளையும், பாசனப் பணிகளையும் புதுப்பித்தல்.



1971 ஜூலை 1]

4. உப்பங்கழியால் பாதிக்கப்படும் கடற்கரை அருகில் உள்ள சதுப்பு நிலங்களுக்குத் தக்க வடிகால் வசதி ஏற்படுத்திப் பண்படுத்துதல்.

5. ஆற்று நீரிறைக்கும் திட்டம்.

6. ஊற்றுநீர் மட்டத்தை உயர்த்தும் பொருட்டு, குளங்கள் அமைத்தல்.

கடந்த திட்டக் காலங்களில் சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவும், அடைந்த பலன்களும், முடிந்த வேலைகள் முதலியவையும், கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| (1) | முடிக்கப்பட்ட வேலைகள். (2) | செலவு. (3) | புதிய பரப்பளவு இடைவெளி. (4) | பலன்கள் இடையறுத பாசனவசதி பெற்றவை. (5) | மூழ்கிய நிலங்களை மீட்டல். (6) | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்படுத்தப் பட்ட வளம். (7) |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபாய் லட்சத்தில். | | | | |
| முதலாவது திட்டம் .. .. .. — .. | 2,458 | 382·60 | 32,000 | 4,30,000 | .. | 69,7̇0 |
| இரண்டாவது திட்டம் .. .. .. .. .. | 2,250 | 498·95 | 65,328 | 1,22,272 | .. | 47,948 |
| மூன்றுவது திட்டம் .. .. .. .. .. | 4,286 | 1,168·19 | 1,35.402 | 4,10,581 | .. | 1,19,024 |
| ஆண்டுத்திட்டம். | | | | | | |
| 1966–67 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 935 | 324·91 | 23,059 | 73,909 | 3,416 | 21,110 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 751 | 307·74 | 18,022 | 51,544 | 691 | 15,524 |
| 1968-69 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 661 | 213·70 | 22,402 | 68,378 | 8,192 | 20,567 |
| நான்காவது திட்டம்— | | | | | | |
| 1969–70 .. .. .. .. .. .. | 1 009 | 232·61 | 26,278 | 95,514 | 5,187 | 25,597 |

நடப்பாண்டில் 25,750 எக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்கவும், இப்போதுள்ள 25,250 எக்கர் நிலத்திற்கு இடையறுத பாசன வசதி அளிப்பதற்கும், 715 பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 300·00 லட்சமாகும்.

சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் 1971–72-ம் ஆண்டுத் திட்டத்தை பொறுத்த வரையில் 61,750 எக்கர் புதிய பரப்பளவும் இப்போதுள்ள 61,250 எக்கர் ஆயக்கட்டுக்கு இடையறுத பாசன வசதி அளித்து விளைச்சலுக்குக் கொண்டு வரவும், 725 பாசன வேலைகள் முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. 1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 252 லட்சமாகும்.



## தூர் வாறுதல்—நிலம் பண்படுத்துதல்.

முழுமையாகவும், பகுதியாகவும் தூர் ஏறிவிட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும், முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன் மூலம் இழந்த முழு சேமிப்பு அளவில் ஒரு பகுதியை அல்லது முழு அளவையும் மீட்க இத்திட்டத்தின் கீழ்க் கருதப்பட்டுள்ளது. முந்திய திட்டக் காலங்களில் தூர் எடுத்தல்—நிலம் பண்படுத்தல் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட செலவும், முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையும் பலன்கள் முதலியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டம். (1) | முடிக்கப்பட்ட வேலைகள். (2) | செலவு. (3) | பாசனவசதி அளிக்கப்படாத பகுதிகள். (4) | பலன்கள் ஏரி எதிர்வாயில் நிலம் பண்படுத்துதல். (5) | கூடுதல் உணவு உற்பத்தி, ஏற்பட்டவளம். (6) |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் லட்சத்தில். | | | |
| இரண்டாவது திட்டம் .. .. .. .. .. | ?8 | 30·68 | 2,208 | 604 | 21,55 |
| மூன்றுவது திட்டம் .. .. .. .. .. | 53 | 85·65 | 2,039 | 1,038 | 1,279 |
| 1966-67 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 5 | 21·14 | 174 | 45 | 98 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 15 | 15·43* | 489 | 209 | 297 |
| 1968–69 ஆண்டுத் திட்டம் .. .. .. .. | 10 | 17·75 | 488 | 163 | 285 |
| நான்காவது திட்டம்— | | | | | |
| 1969–70 .. .. .. .. .. | 7 | 7·21 | 249 | 179<br>1,421 * * | 347 |

* * (இடையறுத பாசன வசதி அளித்தல்).

* (மற்ற கோட்டங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்ட யந்திரங்களுக்கு வாடகைக் கட்டணங்கள் பெருமளவிற்கு வசூலிக்கப்பட்டதால் செலவு குறைந்துள்ளது.) நடப்பாண்டில் 1970–71 ஆயக்கட்டில் கொடுக்கப்பட்டு பாசன வசதி அளிக்கப்படாத 200 எக்கா நிலத்திற்குப் பாசனமளிப்பதற்கும், 250 எக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் பண்படுத்துவதற்கும் பத்து வேலைகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. 1970–71-ம் ஆண்டுக்கான செலவு ரூ. 16·50 லட்சமாகும்.

1971-72-ம் ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசனம் அளிக்கப்படாத 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவும் 250 ஏக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் பண்படுத்தவும் 10 வேலைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 12.00 லட்சம் ஆகும்.

## பெரிய—நடுத்தரத் திட்டங்கள்.

### 1971–72-ம் ஆண்டுக்கான திட்டம்.

1971–72-ஆம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டாகும். இந்த ஆண்டில் பாம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், ராம நதி,கடனா நதி முதலிய முந்திய திட்டங்களில் விடுபட்ட வேலைத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட 13 புதிய திட்டங்களில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது :—

(1) பாலாறு-புரந்தலாறு திட்டம்.
(2) பரப்பலாறு திட்டம்.
(3) சின்னாறு திட்டம்.
(4) தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.
(5) நந்தன் கால்வாய்களை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல்.
(6) கருப்பாநதித் திட்டம்.
(7) பொன்னணியாறு திட்டம்.
(8) பிளவுக்கால் திட்டம்.

கீழ்வரும் திட்டங்கள் பரிசீலனையிலுள்ளன :—

(1) தஞ்சாவூர் கால்வாய்களைப் புதுப்பித்தல்.
(2) பெரியாறு கால்வாய்களை மேம்படுத்துதல்.
(3) மருத நதித் திட்டம்.
(4) தொட்ட ஹள்ளா திட்டம்.
(5) கொல்லி மலைகள் அருகில் அய்யாறுக்குக் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்.

## திட்டத்தில் சேராத பணிகள்.

திட்டப் பணிகள் தவிர, திட்டத்தில் சேராத பல பணிகளும், எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமான பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டத்தின் பெயர். | மதிப்பிட்ட செலவு. | தற்போதைய நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3 |
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| 1) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 அமராவதி கால்வாய்களைப் புதுப்பித்தல். | 30·08 | பணி விரைவில் நடந்தேறி வருகிறது. |





| திட்டத்தின் பெயர். | மதிப்பிட்ட செலவு. | தற்போதைய நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| (2) 9 தாமிர வருணி கால்வாய்களைப் புதுப்பித்தல். | 24·56 | ஐந்து வாய்க்கால்களின் பணி முடிவடைந்தது. எஞ்சிய 4 கால்வாய்கள் வேலை நல்ல நிலையில் முன்னேறி வருகிறது. |
| (3) மஞ்சளாறு திட்டம். | 109·00 | மண அணையின் மேல் பகுதியில் தார் போடுதல் அவசரக் காலங்களில் பயன் படுத்தும் கதவைப் பொருத்துதல், முடிக்கும் தருவாயிலுள்ள இனங்கள் ஆகியவை நீங்கலாக, மற்ற எல்லாப் பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன. |
| (4) நெய்யாறு இரண்டாவது நிலை. | 2·5 | 45 கூடுதல் மதகுகள் கட்டுவதற்கும், 50 ஏக்கர் வரையிலும், 25 ஏக்கர் வரையிலும் கண்ணி வாய்க்கால்களை வெட்டவும், ரூ. 2·5 லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள 45 மதகுகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கண்ணி வாய்க்கால்களில் 19 வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒரு கண்ணி வாய்க்காலில் பணி நடந்தேறி வருகிறது. |

### ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஊற்று நீர் ஆய்வு.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68-ல் செலவானது .. .. .. | 10·61 |
| 1968–69-ல் செலவானது .. .. .. | 20·65 |
| 1970–71-ல் எதிர்பார்க்கப்படும் செலவு .. .. | 21·12 |
| 1971–72-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 11·62 |

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ஊற்று நீர் ஆய்வுத் திட்டத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. கீழ்க்கண்ட பகுதிகள் ஊற்றுநீர் வளங்களை ஆய்வு செய்வதும், இந்த வளங்களை

மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப, பொருளாதார வாய்ப்புக் கூறுகளை மதிப்பிடுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் (1) சென்னை மாநகரம் அதன் சுற்றுப் புறங்கள், (2) பாலாறு வடிநிலப் பகுதி, (3) நெய்வேலிப் பகுதி, (4) காவிரி கயவாய்ப் பகுதி (**Delta**) ஆகிய பகுதிகள் அடங்கும். இத்திட்டம், 1966-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் தேதி செயல்படத் தொடங்கியது. இத்திட்ட ஆய்வுப் பணியின் முதல் நிலை 1963-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளில் முடிக்கப்பட்டது. மூல திட்டத்தில் காவிரி கயவாய்ப் பகுதிக்கு போதிய இடமளிக்க முடியாததால், இரண்டாவது நிலை பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்தச் செயல் திட்டத்தின் தலைமையிடம் தஞ்சாவூருக்கு மாற்றப் பட்டது. செயல் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணி 1969-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாளிலிருந்து தொடங்கப்பட்டது. இரண்டாம் நிலை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இது 1971, நவம்பர் திங்களுக்குள் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

### ஊற்று நீர்வள இயக்குநரகத்தினால் மேற்கொள்ளப்படும் ஊற்று நீர்வள ஆய்வு.

தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் ஒரே சமயத்தில் ஊற்று நீர் வளம் குறித்த, பரிசிலனை—ஆய்வு மேற்கொள்ள ஊற்று நீர்வள இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் இவ்வலுவலகத்தின் கோட்டங்கள் அமைந்துள்ளன. இதுவரை இராமநாதபுரம், சென்னை, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள பகுதிகளில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், தேவையானபோது, தேவையான அளவு, வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத் திட்டங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்படுகிறது.

### உற்பத்தித் திட்டங்கள்.

சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மீஞ்சூர்—பஞ்செட்டி—தாமரைப்பாக்கம் ஊற்றுநீரோட்டத்திலிருந்து ஊற்று நீரைக் கொண்டு வருவதற்கான கீழ்க்கண்ட உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

1. ரூபாய் நூற்று அறுபத்து மூன்று லட்சம் செலவில் தனியார், பொதுத் துறையிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் மணலியிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட வீட்டுவசதிக் குடியிருப்புக்கும், தாமரைப்பாக்கம் ஊற்று நீரோட்டத்திலிருந்து ஊற்று நீரை வழங்குவதற்கான திட்டம். இப் பணி நிறைவேற்றப் பட்டு வருகிறது.



(c) ரூ. 181.55 லட்சம் செலவில் சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனத்திற்கு, நாள் ஒன்றுக்கு 6 மில்லியன் காலன் நீர் வழங்கும் பணி நிறைவேற்றப்பட்டு, நீர் வழங்கப்பட்டு வருகிறது.

(b) ரூ. 101.69 லட்சம் செலவில் சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் நிறுவனத்திற்கு நாள் ஒன்றுக்கு 3.75 மில்லியன் காலன் நீர் வழங்கும் பணி முடிக்கப்பட்டு, நீர் வழங்கப் பட்டு வருகிறது.

(a) கீழ்க்கண்ட அரசுத் துறைகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் நீர்த் தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன :—

| | | மில்லியன் காலன் நீர் நாள் ஒன்றுக்கு. |
|---|---|---|
| (1) | எண்ணூர் அனல் மின்சக்தித் திட்டம் (மின்சார வாரியம்). | 1·00 |
| (2) | நாக்பால் பெட்ரோ கெமிக்கல் கார்ப்பரேஷன் | 1·00 |
| (3) | ஐ.டி.ஐ. மருந்துப் பொருள்கள் நிறுவனம் | 0·20 |
| (4) | தென்பிராந்திய ரயில்வேயும், இரயில் பெட்டித் தொழிற்சாலையும். | 1·20 |
| (5) | இந்திய எண்ணெய்க் கழகம் . .. | 0·06 |
| (6) | ஈ ஐ.டி. பாரி & கோ .. .. .. | 1·05 |

### வீராணம் நீர்வழங்குத் திட்டம்.

1. 1968 நவம்பர் திங்களில் ரூ. 21.3 கோடி செலவில் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் வழங்குவதற்கு வகை செய்வதன்மூலம் மாநகரின் குடி நீர் வழங்கு வசதியைப் பெருக்குவதற்காக வீராணம் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம் தற்போது மும்முரமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட இனங்கள் இதில் அடங்கும் :—

(i) ரூ. 1,697 லட்சம் செலவில் 1,676 மி. மீட்டர் விட்டமுள்ள (5' 6") "முன்னரே அழுத்தப்பட்டுள்ள கற்கலவைக் குழாய்களை" உற்பத்தி செய்தல், வழங்குதல் வீராணம் ஏரியிலிருந்து தியாகராயநகர் பிரகாச முதலி தெரு வரையிலுள்ள நீர்த்தேக்கம் வரை 218.62 கிலோ மீட்டர் நீளத்திற்கு அக்குழாய்களை அமைத்து இணைத்தல்.

(ii) ரூ. 66 லட்சம் செலவில் தூய்மைப்படுத்தப்படாத நீரை தூய்மைப்படுத்துவதற்காக நீர்த்தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்று கட்டுதல். இது நெய்வேலிக்கருகில் வீராணம் ஏரியிலிருந்து சுமார் 21 கி. மீட்டர் தூரத்திலுள்ள வடக்குத்து என்று அழைக்கப்படும் இடத்தில் அமைக்கப்படும்.

(iii) வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகரத்துக்கு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் நீரை இறைப்பதற்காக, அதிகத் திறனுள்ளப் பொறிகளையும், குழாய்களையும் ரூ. 75 லட்சத்தில் வாங்கி, நிறுவுதல்.

(iv) குழாய்களை அமைப்பதற்காக பள்ளம் வெட்டுதல், சாலைகளையும் ரயில் பாதைகளையும் கடந்து செல்லுமிடங்களில் படுகைப் பாலங்கள் கட்டுதல், வீராணம் ஏரியில் நீரை வெளிக்கொண்டு வருவதற்காக அந்த இடத்தில் செய்யப்படும் தலைப்பகுதிப் பணிகள் முதலிய பிற தொடர்பான பணிகளை ரூ. 100 லட்சம் செலவில் செய்தல்.

2. மேற்கூறிய பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெரும்பாலும் முடிவு செய்யப்பட்டு, பணிகள் உரிய காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இது வரையில், நம் திட்டத்திற்குத் தேவையான அளவு கொண்ட "முன்னரே அழுத்தப்பட்ட கற்கலவைக் குழாய்கள்" (Pre-stressed concrete pipes) இது வரையில் இந்தியாவில் தயாரிக்கப்படவில்லை. எனவே உலக நாடுகள் அனைத்திலிருந்தும் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. இந்த முக்கியமான பணி வெளிநாட்டு உதவி பெற்ற காண்டிராக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய குழாய்கள் தயாரிப்பதற்குத் தேவைப்படும் நவீன இயந்திரங்கள் ஐக்கிய நாடுகள், மேற்கு ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. "டைலக்ஸ்—ஆர்—ரப்பர் காஸ் கட்டுகளைத்" தயாரிப்பதற்கென ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்காக, வெளிநாட்டு நிறுவனத்தின் உடனுழைப்பைப் பெறுவதற்கும், அவசியமான நேரங்களில் அந்நியச் செலாவணியையும் இறக்குமதி உரிமங்களையும் பெறவும், 15,000 டன் என்ற மொத்த தேவையில் 7,500 டன் அளவிற்கு உயர் இழுவலி திறனுள்ள உருக்குக் கம்பிகளை இறக்குமதி செய்வதற்கான அந்நியச் செலாவணியைப் பெறவும், இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது . . . .

இத்திட்டத்தின்கீழ், திருக்கழுக்குன்றத்தில் ஒன்றும், பண்ருட்டியில் ஒன்றுமாக இரண்டு தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, 1971 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. வடக்குத்து என்னுமிடத்தில் நீர் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலை நிறுவும் பணி, காண்டிராக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணியை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது.

4. அதிகத் திறன் வாய்ந்த; பொறிகள், குழாய்கள் போன்றவற்றை வாங்கி, நிறுவுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிராக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5. குழாய்கள் அமைப்பதற்காக பள்ளம் தோண்டும்பணி துறையால் ஏற்கெனவே தொடங்கப்பட்டு, பணி மும்முரமாக நடந்தேறி வருகிறது. இப்பணியில் ஏற்கெனவே சுமார் 1,500 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். குழாய்கள் அமைப்பதற்குத் தேவைப்படும் 140 கி. மீட்டர் நீளமுள்ள நிலம் வருவாய்த் துறையால் கையகப்படுத்தப்பட்டு, பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



6. சேத்தியா தோப்பு, வடக்குத்து ஆகிய பணித் தொடக்க பணிபுரியும் பணியாளர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கட்டிடங்களில் பணியாளர்கள் குடியேறியுள்ளனர். திட்ட அதிகாரிகளின் நன்மைக்காக ஆய்வு மாளிகை ஒன்று வடக்குத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு ஆய்வு மாளிகையும் திண்டிவனத்தில் கட்டப்பட்டுள்ளது.

7. வீராணம் திட்டம் குறித்த பணிகள், பணியாளர் தொகுதி தொடர்பாக 1971-72-ம் ஆண்டில் ரூ. 7.88 கோடி செலவு ஆகுமென்று கருதப்படுகிறது.

**உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து—கூவம் சீரமைப்புத் திட்டம்.**

சென்னை மாநகரில் ஓடும் கூவம் ஆற்றை எழில் மிகுந்ததாகவும், தூய்மையானதாகவும், நீர்ப் போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் அமைக்கும் பொருட்டு, மூன்று நிலைகளில் நிறைவேற்றப்படக் கூடிய ரூ. 118.50 லட்சம் செலவாகும் பணித் திட்டத்திற்கு 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் அரசு ஒப்பளித்துள்ளது,

ரூ. 32 லட்சம் செலவிற்கு ஒப்பளிக்கப்பட்ட முதல் நிலை பணியின்கீழ், கூவம் முகத்துவாரத்தில் பொறிமதகு ஒன்றும், மணல்வாரி குழாய்க்கான தோணித்துறை ஒன்றும் கட்டும் பணியும் நேப்பியர் பாலம் முதல் பொறி மதகு வரை இரு பக்கங்களிலும் செய் கரையமைக்கும் பணியும் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பொறிமதகு, தோணித்துறைப் பணிகள் முடிவடையும் தறுவாயிலுள்ளன.

முதல் நிலைப் பணிக்கு 1967-68-ம் ஆண்டில் ரூ. 1.24 லட்சம் செலவானது. 1968-69-ல் ரூ. 5.24 லட்சம் செலவாகியது. 1969-70-ல் செலவு ரூ. 24.08 லட்சம் ஆகியது. முதல் நிலைப் பணிக்கு 1970-71-ல் ரூ. 19.49 லட்சம் செலவாகும்.

இரண்டாம் நிலை.

இரண்டாவது நிலைப் பணியின்கீழ், கூவம் முகத்துவாரத்திலிருந்து சேத்துப்பட்டு இரயில் பாலம் வரை கால்வாய் வெட்டுதல், சிமிட்டி கற்கலவைக்கற்கள் பரப்பப்பட்ட நடைபாதைகளுடன் ஆற்றின் வடக்குப் பக்கத்தில் கால்வாய் வெட்டுதல், படகு குழாம் ஒன்றையும் நீச்சல் குளம் . ஒன்றையும் கட்டுதல், பூங்காக்கள், புல்வெளிகள் அமைத்தல் ஆகிய பணிகளை ரூ. 62.00 லட்சம் செலவில் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

முக்கிய ஆற்றில் ஏறத்தாழ 3½ மைல்களும், கூவம் ஆற்றின் வடபிரிவும் கால்வாய் வெட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணி விரைவாக நடந்தேறி வருகிறது. சிமிட்டிக் காரை பூசிய கரையமைக்கும் பணியின் 60 சதவீதம் முன்னரே அமைக்கப்பட்டு விட்டது. பூங்காக்களும், புல்வெளிகளும் அமைக்கப்பட்டு போர்

நினைவுச் சின்னத்திற்கெதிராகப் பேணப்பட்டு வருகின்றன. நீச்சல் குளம், படகு குழாம் இவை முடிவடையும் தறுவாயி லுள்ளன.

1969-70-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைப் பணிக்காக ரூ. 13.84 லட்சம் செலவாகியது. 1970-71-ஆம் ஆண்டுக்காக ரூ. 44.83 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைப் பணிக்கு ரூ. 56.28 லட்சம் செலவாகியது.

### மூன்றும் நிலை.

மூன்றும் நிலையின்கீழ் ஆற்றின் இருமருங்கிலும் வசித்து வரும் குடிசைவாழ் மக்களின் 941 குடும்பங்கள் சிந்தாதிரிப்பேட்டை யிலும், கிண்டி பொறியியல் கல்லூரிக்குப் பின்புறம் கோட்டூரிலும் கட்டப்பட்டு வரும் நியினல் பாதிக்கப்படாத குடியிருப்புகளில் குடியேற்றப்படுவர். சிந்தாதிரிப்பேட்டையில் 242 குடியிருப்பு களும், கோட்டூரில் 600 குடியிருப்புகளும் கட்டும் பணி முடிவடைந்து விட்டது. எஞ்சிய குடியிருப்புகள் 1971 ஜூன் திங்களுக்குள் முடிவடைந்துவிடும்.

### பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டம்.

சென்னை மாநகர் எல்லைகளுக்குள் பக்கிங்காம் கால்வாயை மேம் படுத்தும் சிறு அளவுப் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்திற்கு 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் இப்பணிக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 44 லட்சம் ஆகும்.

1969-70 இறுதி வரையில் இத்திட்டத்திற்கான செலவு ரூ. 12.42 லட்சமாகும். 1970-71-ஆம் ஆண்டுக்காக இத்திட்டத்திற்கான செலவு ரூ. 5.61 லட்சமாகும். 1971-72-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### பருவ நிலைகள்.

1970-71-ஆம் ஆண்டில் தென் மேற்குப் பருவமழை காலந் தாழ்த்துப் பெய்யத் தொடங்கியதுமன்றி, காவிரி, பவானி, அமராவதி, பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு ஆகிய ஆறுகளின் நீர்க்கோள் பகுதிகளில் சாதாரணமாகப் பெய்யும் அளவைவிடக் குறைவாகவே பெய்தது. காவிரி, கோதையாறு நீங்கலாக மேற்படி நீர்கோள் பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழையும் குறைவாகவே பெய்தது. வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததால், மணிமுத்தாறு கால்வாயை முறையான பாசனத் திற்காகத் திறந்துவிட முடியவில்லை. கீழ்ப்பவானித் திட்டக் கால்வாயின்கீழ் இரண்டாவது முறை ஆயக்கட்டுக்கான நீரும் விடப் பெற இயலவில்லை.

பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலிருந்தே மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே நீர் தேங்கி இருந்த காரணத்தினாலும், தென் மேற்குப் பருவ மழை காலங்



கடந்து பெய்ததாலும், நீர்த் தேக்கம் 1970 ஜூன் 24-ஆம் நாளன்றுதான் பாசனத்திற்குத் திறக்கப்பட இயன்றது. இதன் விளைவாகக் காவிரி கயவாய்ப் பகுதியில் பெரும்பாலான நிலப் பரப்பில் குறுகிய கால அல்லது நடுத்தரக் கால வகையைச் சேர்ந்த இரண்டே பயிர்களை விளைவிப்பதற்காக இயல்பான பயிர் முறையை மாற்றி வேறு முறை பின்பற்ற வேண்டியதாயிற்று. மெர்க்காராவில் காவிரி நீர் வரவுப் பகுதியில் தென் மேற்குப் பருவ மழைக் காலத்தின்போது 16 சதவிதம் குறைவாகவே மழை பெய்தது. பாசனத்திற்கு நீர் விடுவதை விவேகமுடனும், விழிப்போடும் முறைப்படுத்தியதன் மூலமாகக் குறுவையும் ஆடுதுறை 27 ரக நெல்லும் செவ்வனே விளைவிக்கப்பட்டன. மெர்க்காராவில் வட கிழக்குப் பருவமழைக் காலத்தின் போது சாதாரண அளவை விட 47 சதவிதம் அதிகமாகவே மழை பொழிந்தது. ஆயக்கட்டுப் பகுதியிலும் நல்ல மழை பொழிந்தது. சம்பாப்பயிர்கள் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டன. தாளடிப் பயிர்களுக்கு 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ஆம் நாளுக்குப் பிறகும் 28-2-1971 வரையும் நீர் வழங்கப்பட்டது. தாளடிப் பயிர்களும் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டது.

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயும், புள்ளம்பாடிக் கால் வாயும், மேட்டூர் கால்வாயும் 1-9-1970 அன்று பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டன. மேட்டூர் கால்வாயில் 15—2—1971 வரையிலும், புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயிலும், புள்ளம்பாடிக் கால்வாயிலும் 28—2—1971 வரையிலும் நீர் வழங்கப் பட அனுமதி வழங்கப்பட்டது.

கீழ்ப் பவானிக் கால்வாயின்கீழ் முதல் முறைப் பாசன ஆயக் கட்டிற்கும் 1—9—1970 முதற்கொண்டு நீர் வழங்கப்பட்டது. இக் கால்வாய் 16-1-1971-ஆம் நாளன்று பதினைந்து நாட்களுக்குக் கூடுதலாக நீர்வழங்க அனுமதிக்கப்பட்ட பின்னர் பாசனத்திற்கு மூடப்பட்டது. பவானி நீர்த் தேக்கத்தில் குறைந்த அளவு நீர் தேக்கப்பட்ட காரணத்தால் இரண்டாவது முறை பாசனத்திற்கு நீர் வழங்கப்படவில்லை.

அமராவதி கால்வாய், வழக்கமான நாளான 1970-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ஆம் நாளன்று பாசனத்திற்காக திறந்துவிடப் பட்டது. தென் மேற்கு, வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் இந்த நீர்த் தேக்கத்தில் இயல்பான அளவைவிட முறையே 35 சத வீதமும், 21 சதவீதமும் குறைவாகவே நீர் ஏறியது. குறைந்த அளவு நீர் ஏறியபோதிலும், பழைய, புதிய ஆயக்கட்டு நிலங் களுக்கு விவேகத்துடன் நீர் பகிர்ந்தளிக்கப்பட்டது. அமராவதி கால்வாயில் 28-2-1971 வரை நீர் வழங்க அனுமதி அளிக்கப் பட்டது.

கம்பம், பெரியாறு இவற்றின் இருபோகப் பயிர் விளையும் பகுதிகளில் முதல் போகப் பயிருக்கு 1970 ஜூன் 1-ம் நாள் முதற் கொண்டு நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. தென் மேற்குப்

பருவ மழையின்போதும், வடகிழக்குப் பருவ மழையின்போதும் இந்நீர்த் தேக்கத்தில் சேர்ந்த நீரின் அளவு வழக்கமான அளவுக்குக் குறைவாகவே இருந்தது. பெரியாறு, வைகை நீர்த் தேக்கங்களில் குறைந்த அளவே நீர் இருந்தமையால, ஒருபோகப் பயிர் விளையும் பகுதிக்கு வழக்கமான நாளான ஆகஸ்டு 15-ஆம் நாளன்று விடப்படவேண்டிய நீர், 1971 செப்டம்பர் 5-ஆம் நாள் முதற்கொண்டே விடப்பட்டது. திருமங்கலம் கால்வாய்க்கும் வழக்கமாக ஜூன் 1-ஆம் நாள் விடப்படும் நீர், 1970 செப்டம்பர் 15-ஆம் நாள் முதற்கொண்டு விடப்பட்டது. பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கும் 1970 நவம்பர் 5-ஆம் நாள் முதற்கொண்டு நீர் வழங்கப்பட்டது. தென் மேற்குப் பருவ மழையும், வட கிழக்குப் பருவ மழையும் பெய்தமையால் பெரியாறு, வைகை நீர்த் தேக்கங்களில் உள்ள நீர் இருப்பு பாசனப் பருவம் முழுவதும் மிகக் குறைவாகவே தொடர்ந்து இருந்து வந்தது. பெரியாற்றுப் பகுதிக்கு 21-1-1971 வரை போதுமான அளவு நீர் விடப்பட்டது. அதன் பின்னர் மட்டுமே ஆயக்கட்டு நிலங்களுக்கு இடையிடையில் நீர் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில், ஆயக்கட்டு முழுவதிலும் குறுவைப் பயிர் விளைவிப்பதற்காக, முன்னதாகவே 1970 ஜூலை 1 ஆம் நாள் முதற்கொண்டே நீர் வழங்குவது அனுமதிக்கப் பட்டது. முதலாம் பயிர் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் இரண்டாம் போகப் பயிர் விளைவிப்பதற்காகவும் நீர் வழங்கப் பட்டது. நீர் வழங்கல் 1971 மே 23-ம் நாள்வரை நீட்டிக்கப் பட்டது. 8,910 ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் பயிரிடு வதற்காக 1970 ஜூலை 7-ஆம் நாளிலிருந்து சாத்தனூர் நீர்த்தேக் கத்தில் நீர் வழங்கப்பட்டது. 1970 நவம்பர் 30-ஆம் நாள் வரையில் நீர் வழங்கப்பட அனுமதி அளிக்கப்பட்டது. 1971 ஜனவரித் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு 1971 ஜூன் 15-ம் நாள் வரை 21,000 ஏக்கர் பரப்பளவு முழுவதிலும் முறையான பயிருக்கென நீர் வழங்கப்பட அனுமதிக்கப்படுகின்றது. திருக் கோயிலூர் அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் 5,000 ஏக்கர் நிலத்தில் இரண்டாம் போகப் பயிருக்காக நீர் வழங்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

வீடூர் நீர்த்தேக்கம் வழக்கமாகப் பாசனத்திற்காக விடப்படும் நாளாகிய 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் அன்று திறந்து விடப்படாமல், 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள் அன்று திறந்து விடப்பட்டது. 1971 மார்ச் 2-ஆம் நாள் வரையில் நீர் வழங்குதல் நீட்டிக்கப்படும்.

தாமிரவருணி அமைப்பில், பாபநாசம் நீர்த்தேக்கத்தில் பாசனப் பருவத் தொடக்கத்தில் நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்தது. தென் மேற்குப் பருவ மழைக் காலத்தின் போதும் சேர்ந்த நீர் வழக்கமான அளவுக்கு மிகவும் குறைவே. எனவே, குறுவைப் பயிருக்காக மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர்



விடப்பட்டது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்திலும் வழக்கமான அளவுக்குக் குறைவாக மழை பெய்ததால் இந்த நீர்த் தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்தது. எனவே தாமிரவருணித் திட்டத்தின்கீழ் விளைந்து வரும் பயிர்களைக் காப்பதற்காக 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18-ஆம் நாள் முதற்கொண்டு மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் அதிகப்படியாக நீர் சேமிக்கப் பட்டது. மீன் வளர்க்கத் தேவைப்படும் குறைந்த அளவு நீரை இந்த நீர்த்தேக்கத்தில் விட்டு வைத்து, எஞ்சிய நீர் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

தென் மேற்குப் பருவ மழை, வடகிழக்குப் பருவ மழைக் காலங்களிலும் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் அதிக அளவிற்கு நீர் ஏறவில்லை. மணிமுத்தாறு கால்வாய்க்கு உரிய மதகின் தலைப்பகுதி மட்டத்திற்கு மேல் மணிமுத்தாறு நீர்த் தேக்கத் திலுள்ள நீர் அக்கால்வாயின் முதற் பாசனப் பகுதியில் 16 மைல் வரையுள்ள ஏரிகளை நிரப்புவதற்கு 1971 ஜனவரி 8-ஆம் நாள் முதல் 1971 ஜனவரி 20-ஆம் நாள் வரை பயன்படுத்தப்பட்டது. எனவே, எல்லா ஆயக்கட்டுகளுக்கும் முறையான பாசனம் செய்ய இயலவில்லை.

கோதையாறு நீர்த்தேக்கம் வழக்கமாகத் திறக்கப்படும் ஜூன் முதல் நாளுக்குப் பதில் 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாள் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. தென் கிழக்குப் பருவக்காலத்தில் சேர்ந்த நீரின் அளவு மிகக் குறைவாக இருந்தது. எனவே, பட்டணங்கால் பாசனத்திற்காக வழக்க மாகத் திறந்து விடப்படும் 1970 ஜூன் திங்கள் முதல் நாளுக்குப் பதிலாக 1970 நவம்பர் முதல் நாள் அன்று திறந்து விடப்பட்டது. வட கிழக்குப் பருவ மழைக்காலத்தில் பேச்சிப்பாறை, பெருஞ் சாணி நீர்த்தேக்கங்களில் பெருமளவில் நீர் ஏறியது. எனவே, அதன் பாசனக்காலம் முழுவதும் நீர் வழங்குவதற்குத் தடை யேதும் ஏற்படவில்லை. கோதையாறு திட்டத்திற்காக 1971 மார்ச் 15-ஆம் நாள் வரையிலும் பட்டணங்காலுக்காக 1971 மார்ச் 31-ஆம் நாள் வரையிலும் நீர் வழங்கல் நீட்டிக்கப்பட்டது.

கோமுகி நீர்த்தேக்கம், பாசனத்திற்காக வழக்கமாக நீர் விடப் படும் 1970 செப்டம்பர் முதல் நாளுக்குப் பதிலாக 1970 செப்டம்பர் 20-ம் நாள் திறந்து விடப்பட்டது 5,000 ஏக்கர் பரப்பளவு நிலம் முழுவதற்கும் பாசனத்திற்காக நீர் விடப்பட்டது. 1971 பிப்ரவரி 21-ஆம் நாள் அன்று பாசனத்திற்குக் கால்வாய் மூடப் பட்டது.

மஞ்சளாறு நீர்த்தேக்கம் வழக்கமாகப் பாசனத்திற்காகத் திறக்கப்படும் செப்டம்பர் 15-ஆம் நாளுக்குப் பதிலாக, 1970 அக்டோபர் முதல் நாள் அன்று திறந்து விடப்பட்டது. 2,000 ஏக்கர் நிலம் நீர் வழங்கப்பட்டது. நீர் வழங்குதலை நீட்டிப்பது 1971 பிப்ரவரி 15-ஆம் நாளுக்குப் பின்னர் 1971 ஏப்ரல் 20-ஆம் நாள் வரை அனுமதிக்கப்பட்டது. விளைந்து வரும் பயிரின்

பயனுக்காக 1971 மே 2-ஆம் நாளிலிருந்து 1971 மே 31-ஆம் நாள் வரை வரையறுக்கப்பட்ட நீர் வழங்கல் முறை அனுமதிக்கப் பட்டது.

மணிமுக்தா நதி நீர்த்தேக்கம் அதன் 4,250 ஏக்கர் பரப்பளவு நிலம் முழுவதற்கும் வழக்கமாக நீர் விடப்படும் செப்டம்பர் முதல் நாளுக்குப் பதிலாக 1970 செப்டம்பர் 15 முதற்கொண்டு பாசனத் திற்காகத் திறந்து விடப்பட்டது. நீர் வழங்கல் 1971 பிப்ரவரி 14-ஆம் நாளுக்குப் பின்னர் 1971 ஏப்ரல் 7-ஆம் நாள் வரை நீட்டிக்க அனுமதிக்கப்பட்டது.

நெய்யாறு திட்டத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி கிளைக் கால் வாய் பாசனத்திற்காக 1970 மே 22-ஆம் நாள் அன்று திறந்து விடப்பட்டது. 1971 பிப்ரவரி 23-ஆம் நாள் வரை நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது.

## விவர அறிக்கை I.

ரூபாய் 5 லட்சமும் அதற்கு மேலும் செலவாகும் முக்கிய சிறு பாசன சிறப்புப் பணித் திட்டங்களின் பட்டியல்.

### தஞ்சாவூர் மாவட்டம்

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|
| 1 | தென்பாரை வடிகாலுக்கான மேம்பாடுகள் .. | 5,60,000 |
| 2 | நற்பவழக்குடி ஏரிக்கும் ஏனைய 11 ஏரிகளுக்கும் நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 5,05,000 |
| 3 | பூவானம் கிராமத்தில் அக்னியாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 14,41,000 |
| 4 | ஒக்கநாடு கீழையூர் நீர் இறைக்கும் திட்டம் .. | 23,40,000 |
| 5 | பாமணியாற்றிலிருந்து கடலுக்கு நேர்வழி வெட்டுதல். | 13,42,000 |
| 6 | வெள்ளையாற்றிலிருந்து கடலுக்கு நேர்வழி வெட்டுதல். | 13,95,000 |
| 7 | வளவனாற்றிலிருந்து கடலுக்கு நேர்வழி வெட்டுதல். | 5,72,000 |
| 8 | செல்லக்கோன் ஆறு-மனன்கொண்டனாறு ஆகியவை களுக்கான மேம்பாடுகள். | 9,40,000 |

### திருநெல்வேலி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1 | கோரம்பள்ளம் ஏரியின் முழு ஏரி மட்டத்தை உயர்த்துவது. | 5,17,470 |
| 2 | அலந்தாகிராம எல்லையில் காட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதலும் சாம்பக்குளம் ஏரி முதலிய வற்றிற்கு நீர் வழங்கிடக் கால்வாய் வெட்டுதலும். | 5,22,000 |

### இராமநாதபுரம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1 | சிவகங்கை ஏரியில் சேக்களத்தூர் அணைக்கட்டுத் திட்டம். | 10,92,700 |
| 2 | மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. | 10,16,000 |
| 3 | ஆர்.எஸ். மங்கலம் ஏரித் திட்டம் .. .. | 26,40,000 |
| 4 | சிறுகாம்பியூர் அணைக்கட்டுத் திட்டம் .. .. | 6,40,000 |



| தொடர் எண். | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 5 | சங்கர நத்தம் கிராமத்தருகே வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 11,14,000 |
| 6 | திருவந்தாள்புரம் கிராமத்தருகே புதிய ஏரி அமைத்தல். | 5,32,000 |
| 7 | பரமகுடி வட்டத்திலுள்ள கூத்தன்கால்வாய் புதுப்பித் தல். | 12.30,000 |
| 8 | மேல் நாட்டாறுகாலுக்கான மேம்பாடுகள் .. | 7,70,000 |

### வடஆற்காடு மாவட்டம்

| | | |
|---|---|---|
| 9 | சத்ய விஜய நகரத்தில் கமண்டலநாக நதியின் குறுக்கே அணை கட்டுதல். | 6,32,500 |

### செங்கற்பட்டு மாவட்டம்

இல்லை.

### தென்ஆற்காடு மாவட்டம்

| தொடர் எண் | திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | இராமராஜபுரம் அணையினின்று சிறுபாசன ஏரி களுக்கு அதிக அளவு நீர் வழங்குவது குறித்த பணிகள். | 10.12,562 |
| 2 | செல்வபுரி கிராமத்திற்கு வனக நதிக்கு குறுக்கே அணை கட்டுதல். | 13,54,000 |
| 3 | ஆலந்துறைப்பட்டின் குறுக்கே அணை கட்டுதல் .. | .. |

### மதுரை மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1 | பெரியகுளம் வட்டத்தில் நரசிங்கபுரம் அருகில் வைகை ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் | 7,07,000 |
| 2 | வெங்கடாசலபுரம் பகுதிக்கு பாசன வசதி வழங்கிட மரிகாட்டு ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். | 6,69,000 |
| 3 | பழனி வட்டத்தில், நல்கனி கிராமத்தருகே ஏரி அமைத்தல். | 5,39 000 |

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | | |
|---|---|---|
| | முசிறி வட்டத்தில் கொப்பம்பட்டிப்புதூர் அருகே ஏரி அமைத்தல். | 12,60,000 |

### கன்னியாகுமரி மாவட்டம்

இல்லை.

### கோயமுத்தூர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 1 | உக்கரம் கிராமத்தைச் சேர்ந்த அளவை எண் 208, 115 ஆகியவற்றிலுள்ள வடிகாலை மீண்டும் பயன்படும் நிலைக்குக் கொணர்தல். | 5,23,800 |
| 2 | புளியம்பட்டி கிராமத்தில் கோயில்புதூர் அருகே, பெரியபள்ளத்தின் குறுக்கே ஏரி அமைத்தல். | 5,55,000 |

[1971 ஜூலை 1

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) |
|---|---|---|
| 3 | வேமாந்த பாளையம் கிராமத்தில் களத்தூர் பள்ளம் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 6,00,000 |
| 4 | சென்னம்பட்டி கிராமத்தில் ஏரி ஒன்று அமைத்தல் | 7,65,000 |

**நீலகிரி மாவட்டம்.**

இல்லை.

**சேலம் மாவட்டம்.**

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு.) (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேறபட்ட செலவு. |
|---|---|---|
| 1 | சங்கரி வட்டம், பூலம்பட்டி கிராமம். மதுரை காளியம்மன் கோயில் ஓடையின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 7,20 000 |
| 2 | ஆத்தூர் வட்டம், மணிவிழுந்தான் கிராமத்தின் அருகே கள்ளாற்றின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 7,00,000 |
| 3 | அயமன்பாளையம் அருகே கள்ளாற்றின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 8,93.000 |
| 4 | பனியநாயக்கன்பட்டி கிராமத்தில் ஏரி ஒன்று அமைத்தல். | 5 40 000 |

**தர்மபுரி மாவட்டம்.**

| | | |
|---|---|---|
| 1 | கரூர் வட்டத்தில், வச்செட்டி கிராமம். வரட்டாற்றின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 8,42 450 |
| 2 | ஹோசூர் வட்டத்தில், அக்கா தங்கை கொரக்கள்ளி ஆற்றின் குறுக்கே ஏரி அமைத்தல். | 9,13 000 |
| 3 | மூங்கில் மதுகு அச்சன்பள்ளி கிராமத்தின் அருகே கோணம் பள்ளம் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 7.27,100 |

## விவர அறிக்கை II

**1970–71**-ல் அரசு ஒப்புதல் அளித்த சிறு பாசன சிறப்புப் பணித் திட்டங்கள், தூர் எடுத்து செப்பனிடும் பணித் திட்டங்கள் (உரிய ஆதாயம் அளிப்பவை) ஆகியவற்றின் பட்டியல்.

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | திட்டத்திற்கான செலவு. (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவு.) |
|---|---|---|
| | **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| 1 | மாயூரம் வட்டம், 67—1—330 மைலில் வீரசோழன் குறுக்கே பொறி மதகு ஒன்று கட்டுதல். | 1,48,000 |
| 2 | வெள்ளாறு, 97/0-லிருந்து கடலுக்கு நேர் வழி வெட்டுதல் வெள்ளாறு வடிகால் திட்டம் நாகப்பட்டிணம் வட்டம். | 12,70,000 |



1971 ஜூலை 1]

| தொடர் எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீட்டுச் செலவு (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவு.) |
|---|---|---|
| | தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி | |
| 3 | ஒரத்தநாடு வட்டத்தைச் சேர்ந்த நெப்புகை கிராம எல்லைகளில் வள்ளிப்பட்டிவாரி குறுக்கே அணை கட்டுதல். | 4,45,000 |
| 4 | திருத்துறைப்பூண்டி வட்டம் தாகத்தூர் முதலிய கிராமங்களிலுள்ள நிலங்களுக்கு வடிகால் வசதிகள். | 8,90,000 |
| 5 | பட்டுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய வட்டங்களிலுள்ள அமரசிம்கேநதிரபுரம் கிராமத்தருகே, மருதங்குடையாறு குறுக்கே அணை கட்டுதல். | 4,10,000 |
| 6 | பட்டுக்கோட்டை வட்டத்தில், பழைய நகரம் கிராம எல்லையில் பூனைக்குட்டியாறு குறுக்கே அணை கட்டுதல். | 5 17,000 |
| 7 | தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், தென் பேரை கிராமம், தென் பேரை வடிகாலுக்கான மேம்பாடுகள். | 5,11,000 |
| 8 | மன்னார்குடி வட்டம், பாமணியாறு குறுக்கேயுள்ள பண்டிதகுடி படுகை அணையை பொறிமதகுசாலைப் பாலமாக மாற்றுதல். | 3,42,300 |
| 9 | மேல்பகுதிகளில் வல்லம் வாரி வடிகாலுக்கான மேம்பாடுகள். | 2,14,000 |
| 10 | நன்னிலம் வட்டம் நளியகுடி. நெடுங்குலம் ஆகிய கிராமங்களில் வட இடயார் வடிகாலுக்கான மேம்பாடுகள். | 1,36,000 |
| 11 | திருத்துறைபூண்டி வட்டம், பிச்சன் கொட்டகம் கிராமத்திற்கான வடிகால் வசதிகள். | 1,13,000 |
| 12 | நாகப்பட்டினம் திருத்துறைப்பூண்டி ஆகிய வட்டங்கள் சக்களியன் வாய்க்காலுக்கான மேம்பாடுகள். | 8,11,800 |
| 13 | பட்டுக்கோட்டை மன்னார்குடி ஆகிய வட்டங்களில், பாமணியாற்றிலிருந்து கடலுக்குத் தொடர்ச்சியாக நேர்வழி வெட்டுவதான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கூடுதல் பணியாளர் தொகுதி. | 58,000 |
| 14 | மாயூரம் வட்டத்திலுள்ள சேத்தூர் வடிகாலுக்கான மேம்பாடுகள். | 1,20,000 |
| 15 | மாயூரம் வட்டத்திலுள்ள அய்யானவயனாறு வடிகாலுக்கான மேம்பாடுகள். | 5,30,000 |
| 16 | சீர்காழி வட்டத்திலுள்ள குப்புடுவான் உப்பனாற்றிற்கு மேம்பாடுகள் ஏற்படுத்துதல். | 2.04,000 |
| 17 | சீர்காழி வட்டத்தில் வடிகால் வசதிகள் வழங்கிட பிட்டனே உப்பனாற்றிற்கான மேம்பாடுகள். | 4,65,000 |

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவு.) ரூ. |
|---|---|---|
| | **இராமநாதபுரம் மாவட்டம்** | |
| 18 | பரமக்குடி வட்டம், மேல் நாட்டாற்று காலிக்கால் மேம்பாடுகள். | 7,00,000 |
| 19 | அருப்புக்கோட்டை வட்டம் திருவிளாங்குளம்புரம் கிராமம் அருகே புதிய ஏரி அமைத்தல். | 4,84,000 |
| 20 | சிவகங்கை வட்டம், அரசனூர் தொகுதி ஏரிகளுக்கு நேரடி நீர் வழங்கும் வசதி. | 1.43,000 |
| 21 | பரமக்குடியில் புதியகோட்டம் அமைத்தலும் சிவகங்கையில் கூடுதல் புலனாய்வு உட்கோட்டம் அமைத்தலும். | 5.05,880 |
| 22 | குமாரலிங்கபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தலும், சேத்தூர் வட்டம் கல்யாணகுளம் ஏரிக்கு அதிக அளவு நீர் வழங்குவது குறித்த பணிகளும். | 1.62,000 |
| 23 | திருவாடானை வட்டம். கல்லடியூர், இலகாத்தான் வயல் முதலிய ஏரிகளுக்கு நீர் வழங்க தேனாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 1,83,000 |
| 24 | சேத்தூர் வட்டம் படந்தால் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல். | 1,40,000 |
| 25 | சேத்தூர் வட்டம், புதுக்கோட்டை, பெரியகுளம் நல்லவன் குளம் முதலிய ஏரிகளுக்குப் பாசன வசதிகள் வழங்கிடுதல். | 1.74,000 |
| 26 | திருப்பத்தூர் வட்டம், சின்ன கண்மாய் மற்றும் ஏனைய ஏரிகளுக்கு நீர் வழங்கிட சருகணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 3,13,150 |
| 27 | சிவகங்கை வட்டம், கடம்பன்குடி, வேலன்குடி முதலிய ஏரிகளுக்கு நீர் வழங்க நட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 2,53,000 |
| | **சேலம் மாவட்டம்.** | |
| 28 | திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் ஏரிக்கு நீர் வழங்கிட ஒரு நீர் வழங்கும் கால்வாயை வெட்டுதல். | 3,80,000 |
| 29 | இராசிபுரம் வட்டம், சின்னசேக்கடி கிராமத்தில் சேக்கடி ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 1,65,000 |
| 30 | சங்கரி வட்டம், பூலம்பட்டி கிராமத்தில் மதுரை காளியம்மன் கோயில் ஓடையின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 7,20,000 |



| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவு.) ரூ. |
|---|---|---|
| | **சேலம் மாவட்டம்—தொடர்ச்சி** | |
| 30-A | நாமக்கல் வட்டத்தைச் சேர்ந்த காஜாகொம்பி கிராமத்தில் புங்கல் ஓடையின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 3,60,000 |
| | **தர்மபுரி மாவட்டம்** | |
| 31 | ஹோசூர் வட்டம், பனை கிராமம், அக்காதங்கை கொண்டஹள்ளி ஆற்றின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 8,30,000 |
| 32 | ஹூசூர் வட்டம், சங்கரனஹள்ளி கிராமத்தில் பெரும் பள்ளம் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 1,83,400 |
| 33 | தருமபுரி வட்டம், வெள்ளோலை கிராமத்தில் கோடைமப்பள்ளம் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 4,32,000 |
| 34 | கிருஷ்ணகிரி வட்டம், பழத்தோட்டம் கிராமத்தின் சிற்றூராகிய பொக்கம்பட்டி கிராமம் அருகே காட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 1,04,000 |
| 35 | தருமபுரி வட்டம், வேட்டுவனஹள்ளி கிராமத்தில், தாசம்பட்டி அருகே வரட்டுப்பள்ளம் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 4,03,500 |
| 36 | ஹசூர் வட்டம், வச்செட்டி கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 8,42,450 |
| 37 | தருமபுரி வட்டம், அச்சனஹள்ளி கிராமத்தில் மூங்கில் மதகின் அருகே பொன்னம்பள்ளம் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 7,27,000 |
| 38 | ஹோசூர் வட்டம், பைரகொண்டபள்ளி கிராமத்தின் அருகே சின்னாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 2,49,000 |
| 39 | கரூர் வட்டம், வீரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் காட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல், | 1,21,525 |
| 40 | தருமபுரி மாவட்டம், ஹோசூர் வட்டம், கொடியாளம் கிராமத்தின் அருகே பொன்னையாற்றின் குறுக்கேயுள்ள அணையைப் புதுப்பித்தல். | 3,01,000 |
| 41 | கரூர் வட்டம், வேலம்பட்டி கிராமத்தில் வண்ணான் பள்ளம் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 1,75,000 |

[1971 ஜூலை 1

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட செலவு.) ரூ. |
|---|---|---|
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 42 | அரியலூர் வட்டம், கீழவானம் கிராமம். சுக்காரம் ஏரிக்கு நீர் வழங்கும் கால்வாயை சிறப்பாகப் பழுது பார்த்தல். | 1,70,000 |
| 43 | அமராவதி ஆற்று திட்டத்தின் கீழ் கால்வாய்களைப் புதுப்பித்தல். | 4,47,000 |
| 44 | பெரம்பலூர் வட்டம், எழுமூர் கிராமத்தில் ஓடையின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 9,59,300 |
| 45 | கரூர் வட்டம், சாந்தப்பாடி கிராமத்தின் அருகே சண்முக செட்டியாற்றின் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 5,78,700 |
| 46 | லால்குடி வட்டத்தில் கீழரசு ஓடையின் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 3,99,000 |
| | **கோயமுத்தூர் மாவட்டம்.** | |
| 47 | கோபி வட்டம், உக்கரம் கிராமத்தைச் சேர்ந்த எஸ். எ.்.ப். எண். 208,115 ஆகியவற்றிலுள்ள வடிகாலை மீண்டும் பயன்படும் நிலைக்குக் கொணர்தல். | 4,76,200 |
| 48 | பவானி வட்டம், முரளி கிராமம், காட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 4,60,000 |
| 49 | நரசிம்ம நாயக்கன் பாளையம் கிராமத்தில் புதுப் பாளையம் அருகே எஸ். எ.்.ப். எண். 226/2-யில் குளம் ஒன்று அமைத்தல். | 1,17,000 |
| 49-A | அணைக்கட்டி கிராமத்தின் அருகிலுள்ள செம்புகட்டி பள்ளம் அருகே ஏரி ஒன்று அமைத்தல். | 8,85,000 |
| | **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 50 | கோவில்பட்டி வட்டம், அருணசலபுரம் அருகே ஏரி ஒன்று அமைத்தல். | 2,28,500 |
| 51 | கோவில்பட்டி வட்டம், ஆத்தங்கரை கிராமத்தின் அருகே வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 22,26,000 |



1971 ஜூலை 1]

| தொடர் எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூபாய் ஒரு லட்சம்திற்கும் மேற்பட்ட செலவு.) ரூ. |
|---|---|---|
| | **மதுரை மாவட்டம்.** | |
| 52 | திருமங்கலம் வட்டம், கீழவநேரி–சிறுகுளம் வரவுகாலின் எல்லைப்பகுதியில் உள்ள மண் கொரம்பையைக் கல் அணைக்கட்டாக மாற்றுதலும் சிறுகுளத்துக்குச் செல்லும் வரவு காலியிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாயைப் பழுது பார்த்தலும். | 1,25,000 |
| 53 | பெரியகுளம் வட்டம், வெங்கடாசலபுரம் பகுதிக்கு நீர் வழங்குதல். | 6,09,000 |
| | **தென்ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 54 | சிதம்பரம் வட்டம், உப்பனாற்றுக்கு வெள்ளக்கரை அமைத்தல். | 1,12,000 |
| | **வடஆர்க்காடு மாவட்டம்.** | |
| 55 | செங்கம் வட்டம், பாட்டாறு குறுக்கே அணை கட்டுதல். | 1,84,600 |
| 56 | போளூர் வட்டம், மேலசோழன்குப்பம் கிராமத்தில் ஏரி ஒன்று அமைத்தல். | 10,64,000 |

# விவர அறிக்கை III

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கீழும் திட்டச் சாதனைகளையும் பிற விவரங்களையும் காட்டுகிற விவர அறிக்கை.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர்வரவு பெறுவது. | திட்டம் அமைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு: புதிய பரப்பளவு. | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு: பழைய ஆயக்கட்டு நிலைப்படுத்தல். | 1970-71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு: புதிய பரப்பளவு. | 1970-71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு: பழைய ஆயக்கட்டு நிலைப்படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்.) | (ஏக்கர்.) | | (ஏக்கர்.) | | |
| **முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எடுத்துக் கொண்ட பாசனத் திட்டங்கள் (1951-56)** | | | | | | | | | | |
| 1 கீழ் பவானி | பவானி | கோயம்புத்தூர், திருச்சி. | 1949 | 1956 | 1,034.00 | 2,07,000 | .. | 1,95,000 | .. | நெற் பயிருக்குப் பாசன வசதி அதிகரிப்பதால் 1,95,000 ஏக்கர் நிலங்கள் தான் முடிவாகப் பயன் படும். |
| 2 கோதையாறு திட்டம். | கோதை யாறு | கன்னியாகுமரி | 1949 | 1956 | 146·74 | ... | 1,17,400 | .. | 1,17,400 | இரு போகம் பயிரிடுவதால் மொத்தப் பரப்பு கொடுக்கப்பட்டுள்ளது. |
| 3 மேட்டூர் கால்வாய்த் திட்டம். | காவிரி .. | கோயம்புத்தூர், சேலம். .. | 1949 | 1957 | 1,92·91 | 45,000 | .. | 45,000 | .. | .. |
| 4 மணிமுத்தாறு நீர்த் தேக்கம். | மணிமுத்தாறு. | திருநெல்வேலி .. | 1950 | 1958 | 5,05·00 | 20,000 | 83,000 | 20,000 | 83,000 | .. |
| 5 அமராவதி நீர்த் தேக்கம். | அமராவதி | கோயம்புத்தூர் .. | 1953 | 1958 | 3,34·14 | 21,500 | 32,000 | 21,500 | 32,000 | .. |
| 6 வைகை நீர்த் தேக்கம். | வைகை | மதுரை, ராமநாதபுரம். | 1954 | 1959 | 3,30·00 | 22,800 | .. | 22,020 | .. | .. |
| 7 கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், | பொன்னியாறு. | தர்மபுரி .. | 1955 | 1959 | 2,02·43 | 9,000 | .. | 9,000 | .. | |
| 8 சாத்தனூர் நீர்த் தேக்கம். | பொன்னியாறு. | வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு. | 1954 | 1958 | 2,58·00 | 21,000 | .. | 21,000 | .. | .. |
| 9 ஆரணியாறு நீர்த் தேக்கம். | ஆரணியாறு | செங்கல்பட்டு .. | 1951 | 1957 | 1,05·89 | .. | 6,066 | .. | 6,066 | இத் திட்டத்தின் தலைப்புப் பகுதி ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, தமிழ் நாட்டிலுள்ள பரப்பளவு 6,066 ஏக்கர்கள் மட்டுமே. |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர் வரவு வாயில். | ஆதாயம் அடைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு: புதிய பாசனப் பரப்பளவு. | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு: பழைய பாசனக் கட்டுகளை நிலைப்படுத்தல். | 1970-71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு: புதிய பாசனப் பரப்பளவு. | 1970-71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு: பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்) | (ஏக்கர்) | | (ஏக்கர்) | | |
| **இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் (1956–61)** | | | | | | | | | | |
| 10 புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாய். | காவிரி | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். | 1957 | 1960 | 2,24·58 | 20,622 | .. | 20,622 | .. | .. |
| 11 புள்ளம்பாடிக் கால்வாய். | காவிரி | திருச்சிராப்பள்ளி. | 1957 | 1960 | 2,05·88 | 22,114 | .. | 22,114 | .. | .. |
| 12 வீடூர் திட்டம் | வராக நதி | தென் ஆர்க்காடு, புதுச்சேரி. | 1958 | 1959 | 88·94 | 3,200 | .. | 3,200 | .. | .. |
| 13 நெய்யாறு திட்டம். | நெய்யாறு | கன்னியாகுமரி .. | 1958 | 1966 | 1,09·06 | 5,800 | .. | 5,800 | .. | .. |
| 14 பரம்பிக் குளம்-ஆழியாறு திட்டம். | பரம்பிக் குளம்-ஆழியாறு. | கோயம்புத்தூர் .. | 1959 | நடந்தேறி வருகிறது. | 6,753·00 | 2,40,000 | .. | 72,000 | .. | .. |
| **மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் (1961–66)** | | | | | | | | | | |
| 15 பாலாறு அணைக் கட்டு — கால் வாய்களை மேம்பாடு செய்தல். | பாலாறு | வட ஆற்காடு, செங்கற்பட்டு. | 1961 | 1966 | 63·00 | 3,285 | .. | 3,285 | .. | .. |
| 16 சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலை. | பொன்னி யாறு. | தென் ஆர்க்காடு | 1961 | 1966 | 60·00 | 5,000 (இரு போகம்) | .. | 5,000 | .. | .. |
| 17 கோமுகி நதித் திட்டம். | கோமுகி | தென் ஆர்க்காடு | 1963 | 1965 | 1,21·00 | 5,000 | .. | 5,000 | .. | .. |
| சித்தாறு-பட்டணங் கால் திட்டம். | கோதையாறு | கன்னியாகுமரி, திருநெல்வேலி. | 1963 | நடந்தேறி வருகிறது. | 684·00 | 32,320 | 14,680 | 19,000 | 5,000 | .. |
| **1966–67 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள்.** | | | | | | | | | | |
| 19 மணிமுக்தா நதித் திட்டம். | மணிமுக்தா நதி. | தென் ஆற்காடு .. | 1966 | 1969 | 106·00 | 4,000 | 250 | 4,000 | 250 | .... |
| 20 கடானா நதித் திட்டம். | கடானா நதி .. | திருநெல்வேலி .. | 1966 | நடந்தேறி வருகிறது. | 190·00 | 1,000 | 7,112 | .. | .. | .... |
| 21 ராம நதித் திட்டம். | ராம நதி .. | திருநெல்வேலி .. | 1966 | ௸ | 180·00 | 500 | 1,500 | .. | . | ... |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர் வரவு வாயில். | ஆதாயம் அடைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. (ரூபாய் லட்சத்தில்). | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு. புதிய பரப்பளவு. (ஏக்கர்). | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு. பழைய ஆயக் கட்டுகளை நிலைப்படுத்தல். | 1970–71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. புதிய பரப்பளவு. (ஏக்கர்) | 1970–71 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| **1966–67 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதுத் திட்டம்.** | | | | | | | | | | |
| 22 வைகை கால்வாய்க் களைப் புதுப்பித் தல். | வைகை .. | மதுரை .. | 1967-68 | நடந்தேறி வருகிறது. | 3,95.00 | 13,900 | 95,882 | .. | .. | .... |

1968–69 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதுப் பணித் திட்டங்கள் ஒன்றுமில்லை.



## விவர அறிக்கை IV

மேல் எண்: புதிய பரப்பு; கீழ் எண்: பழைய ஆயக்கட்டுகளுக்கு இடையறாத பாசனம்.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | 1971–72-க்கான நிதி ஒதுக்கம். (ரூபாய் லட்சத்தில்.) | திட்டக் குறிக்கோள் அளவு பாசன வளம். (அலகு: ·000 ஏக்கர்கள்.) | திட்டக் குறிக்கோள் அளவு பயன் படுத்துதல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் .. .. .. | 178·49 | 140 | 89.00 |
| 2 சித்தாறு–பட்டணங்கால் திட்டம் .. .. .. | 14·01 | 32·32<br>14·8 | 28·00<br>14.68 |
| 3 மணிமுக்தா நதித் திட்டம் .. .. .. | 1·74 | 4·00<br>0·25 | 4.00<br>0·25 |
| 4 இராம நதித் திட்டம் .. .. .. .. | 38·21 | ..<br>1·50 | ..<br>1·50 |
| 5 கடனா நதித் திட்டம் .. .. .. .. | 36·78 | ..<br>3·00 | ..<br>3·00 |
| 6 வைகை கால்வாய்களை புதுப்பித்தல் .. .. .. | 55·58 | .. | .. |
| 7 கோமுகி நதித் திட்டம் .. .. .. .. | 0·50 | 5·00 | 5·00 |
| 8 பரப்பலாறு நதித் திட்டம் .. .. .. .. | 20·00 | .. | .. |
| 9 பாலாறு—பொருந்தலாறுத் திட்டம் .. .. .. | 0·00 | .. | .. |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | 1971–72-க்கான நிதி ஒதுக்கம். | திட்டக் குறிக்கோள் அளவு. பாசன வளம். | பயன் படுத்துதல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | (அலகு: ·000 ஏக்கர்கள்.) | |
| 10 சின்னாறுத் திட்டம் .. .. .. .. .. | 28·52 | .. | .. |
| 11 தண்டரைத் திட்டம் .. .. .. .. | 21·07 | .. | .. |
| 12 பொன்னியாறுத் திட்டம் .. .. .. .. | 25·00 | .. | .. |
| 13 பிழவுக்கால் திட்டம் .. .. .. .. | 15·00 | .. | .. |
| 14 நந்தன் கால்வாய்களை சீரமைத்தல் .. .. .. | 20·00 | .. | .. |
| 15 கருப்பா நதித் திட்டம் .. .. .. .. | 15.00 | .. | .. |
| 16 தஞ்சாவூர் கால்வாய்களை புதுப்பித்தல் .. .. .. | 21·02 | .. | .. |
| 17 காவேரி கழிமுகத்தில் வடிகால் திட்டம் .. .. | 15·00 | .. | .. |
| 18 வெள்ளத் தடுப்பு .. .. .. .. | 5·00 | .. | .. |
| 19 கடல் அரிப்பைத் தடுத்திடுவதற்கான பணித் திட்டம் .. | 1·17 | .. | .. |
| 20 பெரியாறு கால்வாய்களுக்கான மேம்பாடுகள் .. .. | .. | .. | .. |
| 21 மருத நதித் திட்டம் .. .. .. .. | .. | .. | .. |
| 22 தொட்டகள்ளா திட்டம் .. .. .. .. | .. | .. | .. |
| 23 கொல்லி மலைகளின் அருகே அய்யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | .. | .. | .. |
| மொத்தம் .. | 602·09 | | |



## இணைப்பு 3.

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேது** சமுத்திரத் திட்டம் உட்பட சிறு துறைமுகங்களின் 1970-71-ம் ஆண்டுப் பணி பற்றிய ஆய்வுரை.

தமிழ்நாட்டில், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மூன்று நடுத்தரத் துறைமுகங்கள் உள்ளன. இவை தவிர பரங்கிப்பேட்டை, தொண்டி, பாம்பன், ராமேஸ்வரம், கீழக்கரை, குலசேகரப்பட்டினம், கொளச்சல், வேப்பலோடை, கன்னியாகுமரி ஆகிய ஒன்பது இடங்களில் சிறு துறைமுகங்கள் உள்ளன.

2. மாநிலத் துறைமுகத் துறையின் செலவு, மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில ஏற்றுமதி, இறக்குமதிச் கட்டண நிதி, மாநிலக் கப்பல் வழிகாட்டுக் கட்டண நிதி ( State Pilotage Fund ) ஆகியவற்றிலிருந்து சரிக்கட்டப்படுகிறது. சிறு துறைமுகங்கள் நிதி, இம்மாநிலத் துறைமுகங்களுக்குப் பொதுவானதாகும். இத்துடன் ஒவ்வொரு துறைமுகத்திற்கும் தனித் தனியாக ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டண நிதிகள் உள்ளன. கடல், துறைமுக நிதிகளை இம் மாநிலத் தொகுதி நிதியுடன் இணைக்க வேண்டுமென்று கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது. இதைச் செயல்படுத்த அவசியமான சட்டம் கொண்டு வரப்படும்.

3. தூத்துக்குடியில் தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகம் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள வாரியத்தினால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டுவரும். தூத்துக்குடியில் பெரிய துறைமுகம் ஒன்று உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகிறது. புதிய துறைமுகம் செயல்படத் தொடங்கும்போது, தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகத்தின் நிர்வாகம் புதிய பெரிய துறைமுகத்தின் நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டு, புதிய துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும்.

ஏற்றுமதி, இறக்குமதிக்கு ஏற்றதும், படகுகள் நிற்பதற்குரிய வசதியுடனும் உள்ள அலை தாங்கிகளால் நன்கு பாதுகாக்கப் படுவதுமான 500 அடி நீளம் உள்ள ஒரு துறைமுகம் மாநில அரசின் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு வருகிறது. இதில் 13 அடி மீன்பிடி இழு படகுகள் வந்து தங்க முடியும். இந்தத் துறைமுகம் தற்பொழுதுள்ள துறைமுகத்தின் அளவிற்குத் தெற்கே கட்டப்பட்டு வருகிறது. இது முக்கியமாக மீன்பிடிக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படும். இது 1972 இறுதிக்குள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கென்று துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நிலத்திலிருந்து 4.73 ஏக்கர் நிலத்தை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் ஒதுக்கியுள்ளது.

[1971 ஜூலை 1

4. வளர்ச்சித் திட்டங்கள்.—தமிழ் நாட்டிலுள்ள சிறு துறை முகங்கள் சம்பந்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் பொதுப்பணித் துறையுடன் இணைக்கப்பட்ட கடல் துறைப் பணிகள் சரகத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவுறாத வேலைத் திட்டங்களின் தொடர்ந்த முன்னேற்றம்.

**கடலூர் துறைமுகம்.**—இது மத்திய அரசுத் திட்டமாகும். இதில் இருவித பணிகள் அடங்கும். ஒன்று ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி, இரண்டாவது அலைதாங்கிகள் கட்டுதல், ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. அலைதடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கான வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, கான்கிரீட் கடற் பாலம் ஒன்றின்மீது மணிக்கு 350 டன் இணைந்த கொள்ளளவு கொண்ட இரண்டு மணல்வாரி பம்புகளை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. கான்கிரீட் கடற்பாலம் இப்போது கட்டப்பட்டு வருகிறது. இருப்பில் ஒரு மணல்வாரி பம்பு இருக்கும்படியாக இரண்டு மணல்வாரி பம்புகள் பெறப்பட்டுள்ளன. மின்விசை மாற்றி வாங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 139.24 லட்சம். 1971 மார்ச் 31-ம் நாள் வரையில் ஏற்பட்ட செலவு ரூ. 100.50 லட்சம். பின் இணைப்பில் விவரிக்கப் பட்டுள்ள கடலூர் சம்பந்தப்பட்ட திட்டங்கள் 1971-72-ல் நிறை வேற்றப்படும்.

**தூத்துக்குடித் துறைமுகம்.**—தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள சரக்குத் துறை தற்பொழுதுள்ள வசதிகளுடன் ஆண்டு ஒன்றுக்கு, 8 லட்சம் முதல் 10 லட்சம் டன் கப்பல் சரக்குகளைக் கையாளுவதற்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது. சரக்கு ஏற்றிச் செல்வதற்கான சிறு படகை கடற்கரைக்கும் கப்பலுக்கும் இடையில் இழுத்துச் செல்வதற்காக மூன்று இயந்திர இழு படகு களும், பயணிகள் ஏற்றிச் செல்வதற்காக புதிய மர இயந்திரப் படகு ஒன்றும் வணிகர்களின் பயனுக்காக கிடைக்கின்றன. படகுகளிலிருந்து தூறு அகற்றிய வண்டலைப் பம்பு மூலம் வெளி யகற்றுவதற்கென துறைமுகத்தில் ஒரு இயந்திரம் செயல்பட்டு வருகின்றது. படகு செல்வதற்கான கால்வாயை ஆழப்படுத்து வதற்காகத் துறைமுகத்திற்கு இறைப்புத் தூறு வாரும் இயந்திரம் ஒன்றைப் புதிதாக வாங்கும் செயற்குறிப்பு ஒன்றும் உள்ளது.

**தூத்துக்குடி துறைமுகத் திட்டம்—பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுரை.—1. பொது.**—தற்பொழுதுள்ள தூத்துக்குடி துறை முகத்தின் தென்கிழக்கில் "முயல் தீவிற்கு" அப்பால் ஆழ்கடல் துறைமுகம் ஒன்று ரூ. 24.40 கோடி செலவில் கட்டுவதற்கு இந்திய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தால் நிர்வாக ஏற்ப ளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள கப்பல் தங்குமிடம் கட்டுவதற்கும்



1971 ஜூலை 1]

துணைவசதிகளைச் செய்வதற்கு மட்டும் ரூ. 21.76 கோடி செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டம் மத்திய அரசுத் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வேலைத் திட்டத் தைத் தமிழ் நாடு அரசு, அரசியலமைப்பின் 258- பிரிவின்கீழ் இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது.

**II. முன்னேற்றம்—(a) கடற்கரைப் பணிகள்.**—நிலம் கையகப் படுத்துதல், துறைமுக எஸ்டேட்டில் சாலைகள் அமைத்தல், பணி யாளர்கள் குடியிருப்புகள் கட்டுதல். கள அலுவலகங்கள், துறைமுக எஸ்டேட்டில் நீர்வழங்கு வசதிகள், கழிவுநீர் அகற்றும் வசதிகள், மின்சக்தி வழங்கல், துறைமுகத்திற்கும், பாறை வெட்டும் பகுதிக்கும் ரயில் பாதை அமைத்தல் போன்ற எல்லா தொடக்கப் பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

**(b) கரைக்கு அப்பால் செய்யும் பணிகள்—**

**1. வடக்கு அலை தடுப்புச் சுவர்.**—வடக்கு அலை தடுப்புச் சுவர் எல். எஸ். 1775 மீட்டர் நீளம் வரை எல்லா வகையிலும் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் எல்.எஸ். 1775 மீட்டரிலிருந்து எல்.எஸ். 4142 மீட்டர் வரை அதாவது கடைசி வரையுள்ள பணிகள் நடந் தேறி வருகின்றன. எல்.எஸ். 2051 மீட்டர் வரை மையப் பகுதிப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**2. தெற்கு அலை தடுப்புச் சுவர்.**—தெற்கு அலைதடுப்புச் சுவர் எல். எஸ். 1830 மீட்டர் நீளம் வரை எல்லா வகையிலும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்.எஸ். 1830 மீட்டரிலிருந்து எல். எஸ். 3797 மீட்டர் வரை (அதாவது கடைசி வரை) மேற் கொண்டும் பணிகள் நடந்தேறி வருகின்றன. எல். எஸ். 2330 மீட்டர் வரை மையப் பகுதி அமைப்புப் பணி முடிக்கப்பட் டுள்ளது.

**3. அணுகு சாலை சீரமைத்தல்.**—தெற்கு அலைத்தடுப்புச் சுவருக்கு அடுத்துள்ள அணுகுசாலை, கடற்கரையிலிருந்து 31 மீட்டர் அகலத்திற்கு எல்.எஸ். 666 மீட்டர் நீளத்திற்கும் 61 மீட்டர் அகலத்திற்கும் எல்.எஸ். 666 மீட்டரில் இருந்து எல்.எஸ். 1327 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. எல்.எஸ். 1327 மீட்டருக்கு அப்பால் எல்.எஸ். 2632 மீட்டர் நீளத்திற்கும் (சரக்குத் துறைப்பகுதியின் ஆரம்பம்), உள்ள பகுதியை, சரக்குத் துறைக்கு சாலைகள் அமைத்தல், ரயில் பாதை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகப் பண்படுத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. ஒப்பந்தப் புள்ளிகளை இந்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறை முடிவு செய்த பின்னர் இப்பணி நிறைவேற்றப்படும்.

1971 மார்ச் திங்கள் முடிய இதுவரை இந்தத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 16.20 கோடியாகும் (மொத் தத்தில்). 1970-71-ஆம் ஆண்டிற்கு மானியமாக ரூ. 4.25 கோடி தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 1

1972-ம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இரண்டு கப்பல் தங்குமிடங்களையும். 1973 மார்ச் திங்களுக்குள் மற்ற இரண்டு கப்பல் தங்குமிடங்களையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, தெற்கு அலை தடுப்புப் பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 3,000 டன் கற்களும், வடக்கு அலை தடுப்பு பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 டன் கற்களும் போடப்படுகின்றன. திட்டமிட்ட நாளுக்கு முன்பாக இத் திட்டத்தை முடிப்பதற்காக கற்கள் போடுவதன் அளவை நாள் ஒன்றுக்கு 5,000 முதல் 6,000 டன் வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மாநில அரசு நிறைவேற்றும் பணிகள்.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் சம்பந்தமான ஆயத்த முன் பணிகளை நிறைவேற்றுவதில் மாநில அரசு குறிப்பிடத்தக்க அளவுக்கு உதவியளித்துள்ளது. சாலை போடுதல், நீர் வழங்குதல், மின்சார வசதி செய்து தருதல் முதலிய வசதிகள் உட்படத் துறைமுகப் பகுதிக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் தன் செலவிலேயே செய்து தரவும் அது தொடக்கத்திலேயே ஒப்புக் கொண்டது.

துறைமுக வேலை முடிவதில் ஏற்படும் முன்னேற்றத்துடன் துறைமுகத்தையொட்டி தொழிற் பிரிவுகள் திட்டமிட்ட முறையில் அமையும் வகையில் சுமார் 5,000 ஏக்கர் தொழிற்சாலைத் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பண்படுத்திச் சீர்படுத்தும் காரியத்திற்காக மண் எடுப்பதற்கென 1,049.47 ஏக்கர் நிலப் பரப்பை அவர்கள் கையகப்படுத்தியுள்ளனர். நிலம் கையகப் படுத்தும் வேலையை விரைவாக முடிப்பதற்கென தமிழ்நாடு அரசு, நிலம் கையகப்படுத்தும் பணியாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளது. இப் பணியாளர் குறித்த விகிதாச்சார செலவு துறைமுக நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

துறைமுகத்திற்குள் செல்லவும் துறைமுகத்திலிருந்து வெளி யேறவும் போக்குவரத்து எளிதாக நடைபெறும் நோக்கத்துடன், தமிழ் நாடு அரசு தனது செலவில் துறைமுக எல்லைக்கு வெளியே முக்கிய பாதைகளை அமைத்துள்ளது. இவை யாவும் முடிக்கப் பட்டுள்ளன.

முக்கனிக்கு அருகில் வாழவல்லானில் உள்ள தாமிரவருணி ஆற்றிலிருந்து மூன்று மில்லியன் காலன் அளவுள்ள நீரை வழங்குவதற்கான திட்டத்தை தமிழ் நாடு அரசு தொடங்கி யுள்ளது. துறைமுகத்திற்காக மட்டும் ஒரு மில்லியன் காலன் நீரையும் துறைமுகப் பகுதிக்கு அடுத்து வளர்ந்துவரும் தொழில் களுக்கு வழியிலுள்ள கிராமங்களுக்கு எஞ்சிய இரண்டு மில்லியன் காலன் நீரையும் வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் தொடங்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 76.50 லட்சம். இத்திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. துறைமுகத் திட்டத் திற்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கப்பட்டு வரு கிறது. தூத்துக்குடி தொழில் பகுதிக்குத் தேவைப்படும் நீர்த்



1971 ஜூலை 1]

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாள்தோறும் இருபது மில்லியன் காலன் நீரை வழங்குவதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. முதலில் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 470 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட் டுள்ளது. திட்டப் பணிகளை பேணுதற்காக ஆண்டுதோறும் ரூ. 19.60 லட்சம் செலவாகும். ரூ. 10 லட்சம் செலவில் தூத்துக்குடி-திருச்செந்தூர் சாலையின் 3/3 மைலில் மூழ்கு பாலம் ஒன்று கட்டு வதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கோரம்பள்ளம் உபரி நீர்க்காலில் ரூ. 72,000 செலவில் இடது கரைகளில் வெள்ளத் தடுப்பு அணைகளைக் கட்டவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 7,14,500 மதிப்பீட்டுச் செலவில் எல்.எஸ். 21,000-லிருந்து எல்.எஸ். 28,000 வரை கோரம்பள்ளம் உபரி நீர்க்காலின் வலது பக்கத்தில் வெள்ளத் தடுப்பு அணைகள் கட்டுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காகும் செலவில் 50 சதவீதத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ள இசைவளித் துள்ளது. எஞ்சிய மறுபாதி செலவு தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தால் மேற்கொள்ளப்படும்.

சேது சமுத்திரத் திட்டம்—இந்தியாவின் மேற்குக் கரையை யும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையின் நீளத் தைக் குறைக்கும் பொருட்டும் மேம்படுத்தும் நோக்கத்திலும் மன்னார் வளைகுடாவை பாக் விரிகுடாவுடன் இணைப்பதே சேது சமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள கப்பல்கள், இலங்கையைச் சுற்றியும் அதன் தென் முனையைச் சுற்றியும் வளைந்துப் போவதைத் தவிர்ப்ப துடன், சுற்றி வளைத்துக்கொண்டு போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும், புயலும் வீசுவதால் இக்கடற்பாதையை அபாயமின்றிப் பயன்படுத்தவும் முடியும்.

இத் திட்டத்தில் வளம் பெறக்கூடிய தன்மை பற்றி இறுதி ஆய்வுகள், இந்தக் காரியத்திற்காக 1965-ம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் திரு. சி. வி. வெங்க டேஸ்வரன் அவர்களால் நடத்தப்பட்டன. அவர் சிறப்புப் பொறியியல் சரகம் ஒன்றுடன் ஆய்வுகளை முடித்து, 1968-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்கு அவரது அறிக்கையை பணிந்தனுப்பினார். இத்துடன், இத்திட்டத்தின் பொருளாதார ஒப்பேறு நிலை குறித்து தனியான அறிக்கை ஒன்றை சேது சமுத்திரத் திட்ட, திட்ட அதிகாரி திரு. ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ் அவர்களது அறிக்கையும் அனுப்பட்டது.

அந்த அறிக்கையில், சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார வகையில் ஏற்புடையதெனவும் தொழில் நுட்ப வகையில் சாத்திய மானதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கால்வாயின் பல்வேறு இணைப்புகள் குறித்துக் கருதப்பட்டன. இரண்டு இணைப்புகள் அதாவது—(1) மண்டபம் இணைப்பு, (2) இராமேஸ்வரம் ஆகிய இரண்டும் சாத்தியமாகுமெனக் கண்டறியப்பட்டது. இந்த

[1971 ஜூலை 1

இரண்டு இணைப்புகளில் இராமேஸ்வரம் இணைப்பு மண்டபம் இணைப்பைக் காட்டிலும் குறைந்த தொலைவுடையதும் குறைந்த செலவுடையதும் ஆகும். (மண்டபம் அமைப்பின் நீளம் 144,400 அடி, இராமேஸ்வரம் அமைப்பின் நீளம் 43,700 அடியாகும்.) இதற்கு மதிப்பீட்டுச் செலவு முறையே ரூ. 55.60 கோடி, ரூ. 37.50 கோடியாகும். எனவே, இராமேஸ்வரம் இணைப்புத் திட்டமே இந்த அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தக் கால்வாய் திறக்கப்பட்ட பின்னர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் ரூ 162 லட்சம் நிகர வருவாய், பெரும்பாலும் அன்னியச் செலாவணியில் கிடைக்கலாமென எதிர்பார்க்கப் படுகிறது.

ஆலோசகரால் அளிக்கப்பட்ட புலன் ஆய்வுகள், கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வழி கோலுகின்றன---

(i) இந்தத் திட்டம் தொழில் நுட்ப முறையில் ஏற்புடைத்த ஒன்றாகும்.

(ii) மண்டபத்தில் ஒன்றும், இராமேஸ்வரத்தில் ஒன்றுமாக இரண்டு மாற்று இடங்கள் குறுக்கு வழிகளுக்காக ஆலோசனையில் இருந்தன. இவை இரண்டு பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் கீழ்க் கண்டவாறு அறியப்பட்டது—

(a) மணல் திட்டில் கடல் கொந்தளிப்பு காரணமாக மண்டபம் வழியை அமைப்பது கடினமானதாகும். ஆனால் இராமேஸ்வரம் வழியில் இத்தகைய இடர்பாடுகள் ஏதும் இல்லை.

(b) இராமேஸ்வரம் வழியைப் பொறுத்தவரையில், அமிழ் ஆழம் 30 அடி அளவுள்ள கப்பல் செல்வதற்கு வகை செய்யும் ஒரு திட்டத்திற்கு மதிப்பீட்டுச் செலவு ரூ 37.50 கோடி; மண்டபம் வழியைப் பொறுத்த வரையில் சுமார் ரூ 55.60 கோடியாகும். இராமேஸ்வரம் வழிக்கு வகை செய்தால் ரூ. 18.10 கோடி மிச்சப் படும்.

(c) அமிழ் ஆழம் 32 அடி, 35 அடி உள்ள கப்பல்களுக்கு வகை செய்யப்பட்டால், இராமேஸ்வரம் வழியைக் காட்டிலும் மண்டபம் வழிக்காகும் அதிகப்படியான செலவு இன்னும் அதிக மாயிருக்கும்.

செலவு, தொழில்நுட்பக் கோணங்களில் இருந்து நோக்கினால், ராமேஸ்வரம் வழியே ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும் என்பது தெரிய வரும்.

(iii) மேற்கிலிருந்து வரும் எல்லாப் போக்குவரத்திற்கும் பொது மையமாக அமைந்துள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து சென்னை, விசாகப்பட்டிணம், கல்கத்தா ஆகிய இடங்களுக்கு முறையே 353, 295, 259 கடல் மைல்களைக் குறைக்கிறது. தூத்துக் குடி துறைமுகம் வழியாகச் செல்லும் கப்பல்களுக்குக் கூடுதலாக 81 மைல் தொலைவு குறையும்.



1971 ஜூலை 1]

(iv) தற்போது 30 அடி அமிழ் ஆழம் அமைக்கப்பட்டால் போதுமானதென்று தெரிகிறது. பின்னர் இது 32 அடிக்கு அதிகப் படுத்தப்படலாம். நாளாவட்டத்தில் அனுபவத்தின் மூலம் அமிழ் ஆழத்தை அதிகப்படுத்துவது பற்றி தீர்மானிக்கலாம்.

(v) நிகர ஆதாயம் படிப்படியாக உயரும். காலம் செல்லச் செல்ல ஆதாயம் பெருகும்.

சேது சமுத்திரத் திட்டத்தின் ஆலோசகராலும், திட்ட அதிகாரியாலும் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை 1968-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்குப் பணிந்தனுப்பட்டது. அது முதல் அந்த அறிக்கை மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வேலைத் திட்டத்தைச் சேர்க்குமாறு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இந்த அறிக்கை திட்ட ஆணைக் குழு, மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் ஆய்விலுள்ளதெனவும், அவர்களது பரிவுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றனவெனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இத் திட்டத்திற்குக் கூடிய விரைவில் ஒப்பளிப்பு வழங்க கோரி அவ்வப்போது இந்த அரசு இந்திய அரசிற்கு நினைவூட்டி வருகிறது.

ராமேஸ்வரம் துறைமுகம்—இலங்கையிலிருந்து அகதிகள் இங்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் இந்திய-இலங்கை வழித் தடத்தில் பாம்பனிலிருந்து தனுஷ்கோடிக்கு ரயில் பாதை மீண்டும் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தென்னக ரயில்வே தலைமை நிர்வாகியுடன் மாநில அரசு அதிகாரிகளின் குழு ஒன்று இந்திய-இலங்கை வழித் தடத்தில் மீண்டும் ரயில் பாதை அமைப்பது பற்றி இலங்கை அரசு அதிகாரிகளுடன் கலந் தாலோசித்தது.

இந்த அரசு கேட்டுக்கொண்டதன் மேல், இந்திய அரசின் போக்குவரத்து அமைச்சகம், தனுஷ்கோடி, ராமேஸ்வரம், ரெட்டத் தாழை அல்லது மண்டபம் வடக்கு ஆகியவற்றில் ஏதாவதொன்றில் நிலையான இந்தியா-இலங்கை கடைக்கோடிக் கப்பல் துறை ஒன்றை அமைப்பது குறித்த ஒரு ஆய்வினை மேற்கொண்டுள்ளது. கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் (துறைமுகங்கள்) மேம் பாட்டு ஆலோசகரைத் தலைவராகவும், பொதுப் பணித்துறை தலைமைப் பொறியாளரை உறுப்பினராகவும், தமிழ் நாடு அரசின் மாநிலத் துறைமுக அதிகாரியை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு நிலையான கடற் பாலத்தை தனுஷ் கோடிக்குப் பதிலாக ராமேஸ்வரத்தையே அமைத்துக் கொள்ள லாமென முடிவு செய்தது. இந்த அரசால் செப்பனிட்டுச் சீரமைக்கப்பட்ட தனுஷ்கோடியிலுள்ள கடற் பாலம் கடற்படை யால் எடுத்துக் கொள்ளப்பட நேரிடலாம். ராமேஸ்வரத்தில் நிலையான கடற்பாலத்தை அமைப்பது குறித்து எடுக்கப்பட்ட முடிவு குறித்து குழுத் தலைவரின் இறுதி அறிக்கை இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படுகிற வரையில், இந்திய அரசு, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும்

[1971 ஜூலை 1

அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் ராமேஸ்வரம் துறைமுகத்தில் தாற்காலிக தோணித் துறை, சுங்கச் சாவடி முதலியவற்றை ரூ. 5.50 லட்சத்திற்கு மேற்படாத செலவில் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இந்த அமைப்புப் பணிகள், 1972-ஆம் ஆண்டுத் தொடக்கத்திற்குள் முடிக்கபடலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ரயில் நிலையத்திலிருந்து புதிய மரத்தோணித் துறைக்கு ரயில் பாதை அமைக்கும் பணி தனது சொந்தச் செலவிலேயே மேற்கொள்ளப்படுமென்றும், பணிகள் யாவும் மூன்று அல்லது நான்கு திங்களுக்குள் முடிக்கப்படுமெனவும் ரயில்வே அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.



1971 ஜூலை 1]

இணைப்பு 3-அ

1971-72-ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். | தொடர் எண்ணும், வேலையின் பெயரும். | செலவு மதிப்பீடு. | 1971 மார்ச் திங்கள் வரை எதிர் பார்க்கப் படும் செலவு. | 4-ஆவது திட்ட முதலீடு. | 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | 4 | (5) | (6) |
| | | (ரூ. லட்சத்தில்.) | | | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் துறைமுகம் வளர்ச்சித் திட்டங்கள். | அலைத்தடுப்பு அமைப்புகளைக் கட்டுதலும் ஆற்றுப் பயிற்சிப் பணிகளும். | 1,39·24 | 98·34 | 89·00 | 40·90 |
| | மொத்தம் .. | 1 39·24 | 98·34 | 89·00 | 40·90 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் .. .. .. | (1) தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர் வாரி இயந்திரத்திற்குப் பதிலாக நீருக்கடியில் 12 அங்குல அளவு உறுஞ்சு வாய் அமைப்புடையதும், குழாய்த் தொடர் உடையதும் ஆகிய தூர் வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 15·00 | 4·25 | 15·00 | 10·75 |
| | (2) மரக்கலங்களை இழுப்பதற்காக 300 குதிரைத் திறனுடைய இழு படகு ஒன்றை வாங்குதல். | 7·00 | இல்லை. | 7·00 | 4·00 |
| | மொத்தம் .. | 22·00 | 4·25 | 22 00 | 14·75 |

## இணைப்பு 3-அ

மத்திய அரசின் மேலுள்ள வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காகத் தமிழகத் துறைமுகத் துறையினர் (மூன்றாவது திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படாது விடுபட்ட வேலைத் திட்டங்கள்) செலவு விவரங்களைக் காட்டும் அறிக்கை.

| தொடரெண்ணும், வேலைத் திட்டத்தின் பெயரும். | மூன்றாவது திட்டக் காலத்தில் நிதி ஒதுக்கம். | 1969-70 வரை ஏற்பட்ட மொத்தச் செலவு. | 1970-71-ல் எதிர் பார்க்கப் பட்ட செலவு. | 1971-72-க்கான நிதி ஒதுக்கம். | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூ. லட்சத்தில்.) | | | | |
| கடலூர் துறைமுகம்— | | | | | |
| அலைத்தடுப்பு அமைப்புகளைக் கட்டுதல், ஆற்றுப் பயிற்சிப் பணிகள் (மதிப்பீடு ரூ. 139·24 லட்சம்). | 50·00 | 64·00 | 24·31 | 40·90 | வேலை நடந்து கொண்டிருக்கிறது. |



### இணைப்பு 3-இ.

### எஞ்சிய வேலைத் திட்டங்கள்.

### கடலூர் துறைமுகம்.

அலைத் தடுப்பு அமைப்புகளைக் கட்டுதலும், ஆற்றுப் பயிற்சிப் பணிகளும்.

(ரூ. லட்சத்தில்.)

1969-70-ஆம் ஆண்டுக்கான கணக்குகள் — — இல்லை.
1970-71-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு — 48.10
1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. 40.90

ஆற்றுப் பயிற்சிப் பணி 1965-ஆம் ஆண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டது. 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முடிவுக்குள் எல்லாப் பணிகளும் முடிவடையுமென எதிர்பார்க்கப் படுகிறது. 1,200 அடி நீள உறுதிப்படுத்தப்பட்ட காங்கிரீட் கடற் பாலத்தில், 416 அடி நீளம், முடிக்கப்பட்டது. மேலும் பிற பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன. தெற்கு அலைத் தடுப்பு அமைப்புகளும் அமைக்கத் தொடங்கி பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### புதிய திட்டங்கள்.

### கடலூர் துறைமுகம்.

மரக்கலங்களை இழுப்பதற்காக 300 குதிரைத் திறனுடைய இழு படகு ஒன்றை வாங்குதல்.

(ரூ. லட்சத்தில்.)

1969-70-ஆம் ஆண்டுக்கான கணக்குகள் — — இல்லை.
1970-71-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு — 4.25
1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 10.75

தற்போதுள்ள ஏறத்தாழ 30 ஆண்டுப் பழக்கமுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக நீருக்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறுஞ்சு வாயுடையதும், குழாய்த் தொடர் உடையதும் ஆகிய தூர்வாரி இயந்திரம் ஒன்றை வாங்கக் கருதப்பட்டுள்ளது. டச்சுப் பொது நோக்குக் கடனின்கீழ் தூர்வாரி இயந்திரங்களை வாங்குவதற்கு அந்நியச் செலாவணி வேண்டப்படுகிறது. தூர்வாரி இயந்திரத்தின் பகுதி ஒப்படை ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. அதன் உடற்பகுதி அமைப்புப் பணி சென்னை திருவாளர்கள் பின்னிக் கம்பெனி லிமிடெட்டால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தூர்வாரி இயந்திரத்திற்கான M.A.N. பொறி கல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச் பணிக் களரியின் மூலம் பெறப்படுகிறது.

### நாகப்பட்டினம் துறைமுகம்.

(ரூ. லட்சத்தில்.)

சரக்குக் கொட்டகை ஒன்று அமைக்க 1.11
1969-70-ஆம் ஆண்டுக்கான கணக்குகள் — இல்லை.
1970-71-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு — 0.75
1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. இல்லை. பணி முடிவு பெற்றுள்ளது.

## இணைப்பு 3-ஏ

1960-61 முதல் 1969-70 முடியத் தமிழ் நாட்டில் உள்ள துறைமுகங்களின் மூலமாகச் சென்ற மொத்தக் கப்பற் சரக்குகளின் அளவு (டன்கணக்கில்).

| துறைமுகங்களின் பெயர். | 1961-62. | 1962-63. | 1963-64. | 1964-65. | 1965-66. | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 தூத்துக்குடி | 8 42,533 | 10,25,173 | 9,34,893 | 10,50,272 | 9,93 734 | 9,53,[illegible] | 10.80,207 | 9,24,295 | 8,00,595+15 யூனிட் எண்ணெய்+1 மோட்டார் வண்டி. |
| 2 கடலூர் .. .. | 4,66,550 | 4,67,811 | 4 98,478 | 5,45,494 | 4.16,440 | 3 97 375 | 2,40,370 | 1,96,455 | 1,53,051·5+400 கோணிப் பைகள். |
| 3 நாகப்பட்டினம் .. | 40,757 | 57,619 | 52,340 | 71,929 | 72 162 | 91,179 | 1,11,331 | 1,55,890 | 44,621·5 |
| 4 பரங்கிப்பேட்டை .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5 தொண்டி .. | .. | .. | .. | .. | .. | 2 | 15 | .. | .. |
| 6 பாம்பன் .. .. | 1,420 | 1,478 | 6,129 | 2,094 | 8,152 | 7,436 | 10,245 | 9,806 | 8,106 |
| 7 தனுஷ்கோடி .. .. | 7,753 | 7,221 | 7,430 | 3,581 | .. | துறைமுகம் மூடப்பட்டது. | | | |
| 8 இராமேஸ்வரம் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1,600 | 1,227 |
| 9 கீழக்கரை .. .. | 1,302 | 1.058 | 1 538 | 1 243 | 4,795 | 436 | 922 | 12,492 | 11 494 |
| 10 குளச்சல் .. .. | .. | .. | 14,455 | 25,598 | 26,900 | 29,230 | 39,413 | 36,600 | 36,200 |
| 11 குலசேகரப்பட்டினம் .. | 644 | 252 | 800 | 150 | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | 13,61,259 | 15,60,612 | 15,16,063 | 17 00 361 | 5,22,183 | 14,79,538 | 14,82,503 | 13,36,638 | 10,55,894 |
| தூத்துக்குடி நீங்கலாக மொத்தம். | 5,18,726 | 5 35,439 | 5,81,170 | 6,[illegible]0,089 | 5,28,449 | 5,28,658 | 4,02,296 | 4,12,343 | 2,52,299+ |

+15 யூனிட் எண்ணெய், 1 மோட்டார் வண்டி, 400 கோணிப் பைகள்.

[1971 ஜூலை 1

## இணைப்பு 4.

[41-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாடு நெடுஞ்சாலை—கிராமப் பணித் துறையின் 1970-71-ம் ஆண்டுக்குரிய சாலை வளர்ச்சித் திட்டம் பற்றிய அறிக்கை.

பசுமைப் புரட்சியோ, தொழிற் புரட்சியோ, சமூகப் புரட்சியோ எது வாயினும் அதன் வெற்றிக்கும் முன்னேற்றத் திட்டங்கள் அனைத்திற்கும் முன் தேவையாகவும் நன்கு இணைந்த ஒரு சாலை அமைப்புத் திட்டம் அடிப்படையாக அமைகிறது. ஏனெனில் எல்லா வகைகளிலும் பொருளாதார வளர்ச்சியையும் கிராமப்புற மாற்றத்தையும், தொடங்கவும் நிலை நிறுத்தவும், ஊக்குவிக்கவும் இத் திட்டம் உதவுவதோடு நிறைந்த அளவில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்குகிறது. புதுநோக்கம் கொண்ட ஒரு சாலை முன்னேற்றத் திட்டமே, பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் இடையே அவசியமாகத் தேவைப்படும் ஒரு இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்து தன்னிறைவு பொருளாதார நிலைகளை, மற்ற எந்த ஒரு சக்தியைக் காட்டிலும் உயர்வான முறையில் அமைக்க வல்லது. மாநில நெடுஞ்சாலைகளை நிர்வகிக்கும் நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை இதற்குரிய சாலை அபிவிருத்தித் திட்டங்களைக் கிடைக்கக் கூடிய நிதி ஒதுக்கீடுகளின் அளவுக்கு உட்பட்டு வகுத்தும், உற்சாகத்துடன் செயற்படுத்தியும் இயன்ற அளவு திறமையுடன் பேணியும் வருகிறது.

இம் மாநிலத்தின் முந்தைய திட்ட சாதனைகளில் சாலை அமைப்புத் துறையில் கணிசமான அளவு முன்னேற்றம் காணப்பட்டிருந்தாலும் இன்னும் செய்து முடிக்க வேண்டியவைகளாக, இப்போதுள்ள முறைகளில் உள்ள குறைகளைச் சீர்ப்படுத்தியும், வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளைக் கூடுதலான வசதிகளால் சமாளித்தும், செயற்படுத்த வேண்டிய நிலையைக் குறிப்பிடலாம். தற்போது உள்ள வசதிகளின் நடைமுறை முழுப் பயன் தரவேண்டுமானால் தொடர்பு இல்லாத இடங்களில் புதிய சாலை இணைப்புகளை அமைக்கவும் பாலங்களைக் கட்டவும் போதுமான அளவு உறுதி இல்லாத பாலங்களுக்குப் பதிலாகப் புதிய பாலங்களைக் கட்டவும் நாம் முற்பட வேண்டும்.

நமது போக்குவரத்து இன்று பெரிதும் வளர்ந்துவிட்டது. அதன் தன்மையிலும், அமைப்பிலும், வியக்கத் தருந்த வேகத்திலும், அளவிலும் தோன்றியுள்ள வளர்ச்சியை ஏற்க, புதிய கூடுதலான வசதிகளை நாம் அமைத்துக் கொடுத்தாக வேண்டும். இவை, சாலைகளை அகலப்படுத்தல், புறவழிச் சாலைகளை அமைத்தல், சமநிலை மட்டத்தில் உள்ள இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக, சுரங்கப் பாதைகளை அல்லது மேம்பாலங்களை அமைத்து தடை இன்றிக் கடந்து செல்லக்கூடிய வசதிகளை ஏற்படுத்திப் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் அமைத்துக் கொடுத்தல் ஆகியவையாகும்.



1971 ஜூலை 1]

பொருளாதார முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இருக்கும் வளங்களை தடையின்றிப் பயன்படுத்தவும், மலைப் பகுதிகளின் வளர்ச்சி குறைந்த நிலையை நீக்கவும், பசுமைப் புரட்சியின் முழுப் பயன்களைப் பெறவும், பெருகிவரும் தொழிற்பேட்டைகள், நகர்ப்புறப் பகுதிகள் ஆகியவற்றின் போக்குவரத்துத் தேவைகளைச் சமாளிக்கவும் புதுமையான நன்கு இயங்கக் கூடிய திட்டங்களின் மூலம் இப்போதுள்ள சாலைகளின் இணைப்பையும் தொகுப்பையும் நாம் சீர்படுத்தியாக வேண்டும்.

மேற் கூறப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக, தற்போதைய தேவைகளைத் திட்டங்களின் முக்கியத்துவத்திற்கேற்பவும், அளவான நிதி ஒதுக்கீடுகளுக்கும் பெரிதும் கூடிவரும் செலவினங்களைச் சரிக்கட்டுவதற்கும் ஏற்ற வகையில் ஈடு கொடுத்து வகைப்படுத்தவும் தொகுக்கவும் வழி செய்தாக வேண்டும். இந்தப் பின்னணியில் நெடுஞ்சாலை-கிராமப் பணித் துறை நிறைவேற்றி வரும் பணிகளை இங்கே விரிவாக ஆய்வுரை செய்வோம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டுச் சாலைகளின் மொத்த நீளம் 21.198 மைல்களாக (34.115 கிலோ மீட்டர்களாக) இருந்தது. முதல் திட்ட முடிவில் இந்த நீளம் 24,045 மைல்களாக (38,697 கிலோ மீட்டர்களாக) உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலும் 1,822 மைல்கள் (2,932 கிலோ மீட்டர்கள்) கூடிற்று. மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் சாலைகளின் மொத்த நீளம் 25,867 மைல்களாக (41.629 கிலோ மீட்டர்களாக) இருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் மூலம் ஊராட்சிகள். ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட 10.889 மைல்கள் (17,524 கிலோ மீட்டர்களாக) சாலை அமைக்க முடிந்தது. 1965-66-ம் ஆண்டு முடிவில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறையின் பொறுப்பிருந்த சாலைகளின் நீளம் 36,756 மைல்கள் (59,153 கிலோ மீட்டர்கள்) ஆகும். 1969 எப்ரல் 1-ல் (அதாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் துவக்கத்தில்) அவைகளின் மொத்த நீளம் 40,398 மைல்களாக (65,014 கிலோ மீட்டர்களாக) இருந்தது. 1970 எப்ரல் 1-ல் அவைகளின் மொத்த நீளம் 67,488 கிலோ மீட்டர்களாக (41,936 மைல்களாக) இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ல் 1,430 மைல்கள் (2,500 கிலோ மீட்டர்கள்) புதிய சாலைகள் போடப்படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டுச் சாலை பற்றிய புள்ளி விவரம், இந்தியாவின் சாலைகள் பற்றிய விவரங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை உள்ளதென்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சாலையின் நீளம் (கிலோ மீட்டர்களில்). |
|---|---|
| இந்தியா முழுவதும் — — | 191 |
| தமிழ் நாடு — — — — | 193 |

[1971 ஜூலை 1

சாலை வளர்ச்சித் திட்டங்கள் கீழ்காணும் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன:—

(அ) மத்திய அரசுத் திட்டம்—தேசிய நெடுஞ்சாலைகள்.

(ஆ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும் மத்திய அரசுத் திட்டங்களும்.

(அ) மத்திய அரசுத் திட்டம்—தேசிய நெடுஞ்சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகளென அழைக்கப்படும் முக்கிய நீளப் பெருஞ்சாலைகளை அமைக்கும் பொறுப்பையும், பேணி வரும் பொறுப்பையும் இந்திய அரசு ஏற்றுள்ளது. ஆயினும், அப்பணிகளை இந்திய அரசின் சார்பில் மாநில நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறையே நிறைவேற்றி வருகிறது. நகரங்களுக்கு வெளியே 20,000-ம் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகை உள்ள இடங்களில் அமைந்துள்ள இத்தகைய சாலைப் பகுதிகளின் மூலச் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கிறது. நகரங்களில் அமைந்துள்ள இச் சாலைகளில் புதிய அமைப்புகளுக்கான செலவை மாநில அரசும் உள்ளாட்சி மன்றமும் பகிர்ந்து கொள்கின்றன. இவற்றைப் பேணி வருவதற்காகும் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. நகா எல்லைக்குள் உள்ள இத்தகைய சாலைகளைப் பேணி வருவதற்காகும் செலவை இந்திய அரசு கொடுக்கிறது. இவ்வாறு கொடுக்கப்படுகிற செலவுத் தொகை மைல் ஒன்றுக்கு ரூபாய் 5.000 அல்லது நடைமுறையில் ஆகும் செலவு இவற்றுள் எது குறைந்ததோ அதுவேயாகும்.

முதலாவது, இரண்டாவது திட்டக் கால அளவுகளில் தேசிய நெடுஞ்சாலை மேற்பரப்பை மேம்படுத்தவும், சாலைகள் போடவும் பெரும்பாலங்கள் சிறு பாலங்கள் ஆகியவற்றிற்காகவும் முறையே ரூ. 151 லட்சமும், ரூ. 182 லட்சமும் செலவிடப்பட்டன. மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 200 லட்சம். ஆனால் இந்திய அரசு ஒதுக்கிக் கொடுத்தது ரூ. 152 லட்சம் மட்டுமே. செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 152 லட்சமாகும்.

தமிழ் நாட்டில் இத்தகைய நெடுஞ்சாலைகள் அனைத்தும் அநேகமாக இரு அணிப் பாதைகள் கொண்டவை. முக்கிய நகரங்களின் நெரிசலான போக்குவரத்தைத் தவிர்த்து அந்த நகரங்களுக்கு வெளியே புறச் சாலைகள் அமைக்க வேண்டியது தற்போது அவசியமாகியுள்ளது. மதுரை மாநகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் புறச்சாலை, வைகை ஆற்றின் பாலம் திருச்சி நகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் சுமார் 7 மைல் நீள புறச்சாலை காவிரிப் பாலங்கள் ஆகியவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்பட்டவையாகும். புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தைச் சட்டத்தின்படி அரசு கையகப்படுத்துவதற்குப் பல ஆண்டுகளாகும். எனவே, புறச்சாலை அமைக்கத். தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும் பணியை மேற்கொள்வதுடன் இரண்டாவது திட்டத்தில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத வேலைகளை முடிப்பதற்கு மூன்றாவது திட்டக் காலத்தில்



1971 ஜூலை 1]

நாட்டம் செலுத்தப்பட்டது. கீழ்க்காணும் நகரங்களுக்கான புறச்சாலைகளுக்குரிய நிலப் பகுதியைக் கையகப்படுத்தி சாலை அமைப்பினை வகுக்கும் வேலைகள் பல நிலைகளில் நடந்து வருவதுடன் ஆய்விலும் இருந்து வருகின்றன. ஸ்ரீபெரும்புத்தூர், பூவிருந்தவல்லி, வாணியம்பாடி, விஷாரம், வேலூர், கோவில்பட்டி திருநெல்வேலி, ராமநாதபுரம், சென்னை ஆகியவையே அந்த நகரங்களாகும். சுமையேற்றிய நிலையில் 12 டன் வரை எடையுள்ள வண்டிகள் செல்வதற்கு ஏற்ற முறையிலே சிறு பாலங்கள் பலவற்றை வலுப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

நான்காவது திட்டம்.

இப்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காகவும் வளர்ச்சிக்காகவும் மத்திய அரசு ரூ. 41 கோடியில் ஒரு நான்காவது திட்டம் வகுத்துள்ளது. 1969-70-லும், 1970-71லும் மத்திய அரசு முறையே ரூ. 168 லட்சம், ரூ. 336 லட்சம் மதிப்புத் தொகையில் வேலைகளை ஒப்புதல் அளித்துள்ளது. 1971-72-க்காக ரூ. 1,807 லட்சம் மதிப்புள்ள வேலைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த நான்காண்டுகளில் ஏற்பட்ட செலவினங்களும் 1970-71-ல் எதிர்பார்க்கும் திருத்த மதிப்பீடும் 1971-72-ம் வருடத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீடும் வருமாறு :—

| திட்டம். | கணக்கு. 1966–1967 | 1967–1968 | 1968–1969 | 1969–1970 | 1970–71-ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| முதலீட்டுச் செலவினம் | 20·31 | 12·64 | 50·12 | 49·80 | 151·30 |
| பழுது பார்த்தல் .. | 53·41 | 52·00 | 68·54 | 74·61 | 79·32 |

நிறைவேறிவரும் பெரிய வேலைகளாவன :

| வரிசை எண். | வேலையின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு. | பணியின் நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. லட்சத்தில்). | |
| 1 | (செங்கற்பட்டு மாவட்டம்) தாம்பரத்திற்கு அருகில் 16/7-வது மைலில் தற்போதுள்ள சாலை இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக 17/4 வது மைலில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்திற்கு அணுகு சாலை அமைப்பதற்காக நிலம் கையகப் படுத்தல். | 6·10 | நிலம் கையகப் படுத்துவது வருவாய்த்துறையினால் முடிவு செய்யப் படாமல் உள்ளது. |
| 2 | (செங்கற்பட்டு மாவட்டம்) தாம்பரத்திற்கு அருகில் தெற்கு நீள பெருஞ்சாலையின் 17/3-வது மைலில் உள்ள மேம்பாலத்திற்கு அணுகு சாலைகள் அமைத்தல். | 8·82 | பணி முடிவடையும் நிலையிலுள்ளது. |

[1971 ஜூலை 1

| வரிசை எண். | வேலையின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு. | பணியின் நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூ. லட்சத்தில்) |
| 3 | (செங்கற்பட்டு மாவட்டம்) 5-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் [illegible]/8-வது மைலில் உள்ள பாலங்களுக்கு அணுகுசாலைகள் அமைத்தல். | 2·62 | பணி நிறைவேறி வருகிறது. |
| 4 | (செங்கற்பட்டு மாவட்டம்) 5-ம் எண் தேசிய நெடுஞ்சாலையான சென்னை-கல்கத்தா சாலையில் 16/[illegible]-4 மைலில் கொறுதலையாற்றின் குறுக்கே உள்ள வலுவற்ற பாலத்தைப் புதுப்பித்தல். | 19·60 | பணி நிறைவேறி வருகிறது. |
| 5 | (செங்கற்பட்டு மாவட்டம்) 5-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 32/2-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 6·33 | பணி மேற்கொள்ளப்பட்டது. |
| 6 | (மதுரை மாவட்டம்) மதுரை-போடி நாயக்கனூர் ரெயில்வே எல்லைகளுக்காக தெற்கு நீள பெருஞ் சாலையின் 295/4-301/3-வது மைலில் மதுரை புறச்சாலையில் மேம்பாலங்களுக்கு அணுகு சாலைகள் அமைத்தல். | 3·24 | பணி நிறைவேறி வருகிறது. |
| 7 | (மதுரை மாவட்டம்) திண்டுக்கல்லில் 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலைக்கும் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலைக்கும் புறச்சாலை ஒன்று கட்டுதல். | 7·66 | நிலம் கையகப் படுத்துவது முடிய வில்லை. |
| 8 | (தென்னாற்காடு மாவட்டம்) 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலையாகிய சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் மைல் 63-ல் இருந்து 90 வரை உள்ள இரு அணிகள் பாதைகளை வலுப்படுத்தல். | 29·84 | பணி நிறைவேறி வருகிறது. |
| 9 | (இராமநாதபுரம் மாவட்டம்) பாம்பன்-இராமேஸ்வரம் சாலையை மேம்படுத்தல். | 9·42 | பணி நிறைவேறி வருகிறது. |

பாம்பன் குறுக்கே பாலம் கட்டவும், குமாரபாளையம் அருகே காவிரி ஆற்றில் பாலம் கட்டவும் தேசிய நெடுஞ்சாலைகள் எண் 7-ம் 47-ஐயும் மேம்படுத்துவதற்கும் விரிவான ஆய்வுகள் நடந்து வருகின்றன. தேசிய நெடுஞ்சாலை நெ. 7-ல் அதாவது மைசூர் எல்லையிலிருந்து சேலம் வரை உள்ள சாலையின் பகுதிகளை ரூ. 5 கோடி செலவு மதிப்பிட்டுள்ள மேம்பாடு வேலைக்கு அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவன நிதி உதவியை மத்திய அரசு பயன் படுத்தவிருக்கிறது. தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் ரூ. 2·50 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு வேலை தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



1971 ஜூலை 1]

### (இ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும் மத்திய அரசுத் திட்டங்களும்.

மூன்றாவது திட்டக் காலத்திலும் அடுத்து வந்த ஆண்டு திட்டக் கால அளவுகள் மூன்றிலும் அதாவது 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுகளில் வேளாண்மை பாங்கான மாவட்டங்களிலே சாலை வளர்ச்சிப் பணியை எத்துணை விரைவாக மேற்கொள்ள வேண்டுமோ, அத்துணை விரைவாக மேற்கொள்ள முடியவில்லை. தொழிற் சாலைப் பகுதிகளுக்குப் பயன்படுகிற சாலைப் பணிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்பதாலும். (1) வேளாண்மைப் பகுதிகள், (2) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள், பின்னிலைப் பகுதிகள், (3) தொழிற்சாலைப் பகுதிகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் சாலைகளை மேம்பாடுறச் செய்வதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 37 கோடிக்குத் திட்டம் அனுப்பப்பட்ட புதிய நான்காவது திட்டம் (1969-74) முனைப்பாக ஆராயப்பட்டு வருகின்றன. இவற்றுள் மத்திய சாலைத் திட்டங்களும், பொருளாதார வகையில் முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங்களும், கிராமத்து மக்களைச் சாலைத் திட்டங்களும் அடங்கும். புதிய நான்காவது திட்டத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டால் நான்காவது திட்டத் தொடக்கத்தில் அதாவது 1-4-1969 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் சாலைகளின் நீளம் 40,398 மைல்களாக (65,014 கிலோ மீட்டர்கள்) இருந்தது. நான்காவது திட்ட முடிவில் மொத்தம் 48,434 மைல்களாக (77,947 கிலோ மீட்டர்களாக) உயரும்.

நான்காவது திட்டத்தின் தொடக்கத்தில் அதாவது 1-4-1969 அன்று ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 0.500 கிலோ மீட்டர் சாலை இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 0.59 கிலோ மீட்டர் சாலையாக அமையும்.

தனித்தனி திட்டங்களில் சுருக்க விவரம், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு (1969-74), 1966-67, 1967-68, 1968-69 ஆகிய மூன்று ஆண்டுத் திட்டங்களின்போது எய்திய சாதனை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டாகிய 1969-70-ம் ஆண்டின் சாதனை, 1970-71-ம் ஆண்டில் எதிர்பார்க்கப் படும் சாதனை, 1971-72-ம் ஆண்டில் வேலைத் திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

#### மாநில நெடுஞ்சாலைகள்—அரசுச் சாலைகள்—மத்திய உதவி பெறுபவை.

(ரூ. லட்சத்தில்)

| | |
|---|---|
| முதல் திட்டக்கால அளவு (1951–56) செலவு (கணக்கு) .. | 163·00 |
| இரண்டாவது திட்டக்கால அளவு (1956-61) செலவு (கணக்கு) | 296·00 |
| மூன்றாவது திட்டக்கால அளவு (1961-66) செலவு (கணக்கு) | 572·19 |

#### ஆண்டு திட்டக் கால அளவு (செலவு)

(ரூ லட்சத்தில்)

| | |
|---|---|
| 1966–67 (கணக்கு) .. | 65·30 |
| 1967–68 (கணக்கு) .. | 52·24 |
| 1968–69 (கணக்கு) .. | 41·84 |

[1971 ஜூலை 1

(ரூ லட்சத்தில்)

| | |
|---|---|
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கீடு (1969-74) .. | 900·00 |
| 1969-70 நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு (கணக்கு). | 54.20 |
| 1970-71 நான்காவது திட்டத்தின் இரண்டாம் ஆண்டு திருத்த (மதிப்பீடு). | 75·00 |
| 1971-72 நான்காவது திட்டத்தில மூன்றும் ஆண்டு (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | 105·00 |

மாநில அரசால் பேணி வரப்படும் சாலைகளின் வளர்ச்சிக்குத் திட்டம் வகை செய்கின்றது. மூன்றுவது திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட பிறகு, நிதி வசதி இடர்ப்பாடாக இருந்த காரணத்தால் ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவுகளில் அதாவது 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுகளிலும் நான்காவது திட்டக் காலத்தில் முதல் ஆண்டிலும் அதாவது 1969-70 ஆண்டிலும் இதுவரை 49 பணிகள் ரூ. 277.05 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டன. மேலும் 1970-71-ல் ரூ. 218.92 லட்ச மதிப்பீட்டில் 37 வேலைகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரத்தை 1-ம் அட்டவணையில் காணலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் எய்திய சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | வகை. | அலகு. | சாதனை [1969-70 அதாவது 4-வது திட்டக் காலத்தின் முதல் ஆண்டு (கணக்கு)]. | சாதனை [1970-71-ல் அதாவது 4-வது திட்டக் காலத்தின் 2-ம் ஆண்டு எதிர்பார்க்கப் படுகிறது]. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | தார்போடுதல் .. .. | மை. பர். .. | 1-0 | .. |
| 2 | மேம்பாடுகள் .. | எண்ணிக்கை | 3-84 | 1·44 |
| 3 | பெரிய பாலங்களும் படுகைப் பாலங்களும். | எண்ணிக்கை | 2-81 | 4·94 |
| 4 | சிறிய பாலங்களும், மதகு பாலங்களும். | எண்ணிக்கை | 4-98 | 4·24 |
| 5 | புதிதாக சாலைக் கற்கள் பரப்புதல். | மை. பர். .. | 8-1 | 2·2 |

தற்போது வேலை மேற்கொள்ளப்பட்டு கட்டப்பட்டு வரும் பெரிய பாலங்களாவன :—

(1) வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வடஇலுப்பை என்னும் ஊரையும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெரும்பாக்கம் என்னும் ஊரையும் இணைக்கும் வகையில் பாலாற்றின்



1971 ஜூலை 1]

குறுக்கே படுகைப் பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 6.00 லட்சம்). (2) தென்னார்க்காடு மாவட்டத்தில் பாப்பனப்பட்டி-வழுதாவூர் சாலையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 12.00 லட்சம்), (3) திருநெல்வேலி நகர எல்லையில் திருநெல்வேலி-செங்கோட்டை சாலையில் 1/4 மைலில் சாலை இருப்புப் பாதை கடவிற்குப் பதிலாக மேம்பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 35.00 லட்சம்), (4) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை-குமாரலிங்கம் சாலையில் 9/8-வது மைலில் அமராவதி நதியின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 6.00 லட்சம்). (5) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் 12/4 மைலில் அக்னியாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 10 லட்சம்), (6) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை-மீமிசல் சாலையில் 7/4 மைலில் நசுவினியாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 4.50 லட்சம்). (7) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை—மீமிசல் சாலையில் 21¾ மைலில் அம்புலியாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 10 லட்சம்). (8) தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தோட்டம்-காரைக்கால் சாலையில் 4¾ மைலில் அரசலாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 5 லட்சம்), (9) திருச்சி மாவட்டத்தில் தஞ்சாவூர்—திருச்சி சாலையில் 28/6 மைலில் ரயில்வே மேம்பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 9.37 லட்சம்), (10) திருச்சி மாவட்டத்தில் தஞ்சாவூர்—திருச்சி சாலையில் 32/6 மைலில் உள்ள இருப்புப்பாதை சாலைக் கடவிற்குப் பதிலாக மேம்பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 8.80 லட்சம்).

அண்மையிலே மேற்கொள்ளவிருக்கும் சில மேம்பாடு வேலைகளாவன :—

(1) திருச்சிக்கருகாமையில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் காவிரி பாலத்தைப் புதுப்பித்தல் (செலவு மதிப்பீடு ரூ. 70.00 லட்சம்), (2) உளுந்தூர்பேட்டை-சேலம் சாலையில் மைல் 36-லிருந்து மைல் 73/5 வரையுள்ள பகுதியை 22 அடி தார் சாலையை அகலப் படுத்துதல் (செலவு மதிப்பீடு ரூபாய் 10 லட்சம்). (3) திருச்சி—விராலிமலை—மதுரை சாலையில் மைல் 199-லிருந்து 259/4 வரை 22 அடி தார் சாலையை அகலப்படுத்துதல் (செலவு மதிப்பீடு ரூ. 16.50 லட்சம்), (4) கோயம்பத்தூர் மாவட்டத்தில் திம்பம்-தாளமலை சாலையில் மைல் 0/0-லிருந்து 14 வரை மேம்பாடு வேலைகள் (செலவு மதிப்பீடு ரூ. 8.00 லட்சம்), (5) இராமநாதபுரம் மாவட்டத்தில் நாயினார் கோவிலிலிருந்து தேவிப்பட்டினத்திற்கு பொட்டகவயல் வழியாக சாலை அமைத்து சரளை பரத்தல் (செலவு மதிப்பீடு ரூ. 12.00 லட்சம்).

[1971 ஜூலை 1

1970–71-ல் நிறைவேற்றப்பட்ட சில பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை-திருப்பூர் சாலையில் மைல் 38/4-ல் பாலம் கட்டல். | 5·75 |
| 2 | தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர்-சிதம்பரம் சாலையில் மைல் 0-லிருந்து 4/2 வரை சாலையமைப்பினை 32 அடியாகவும், தார் சாலையை 22 அடியாகவும் அகலப்படுத்துதல். | 1·79 |
| 3 | தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தோட்டம்-காரைக்கால் சாலையில் மைல் 4/7-8-ல் அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்டல். | 4·82 |
| | தஞ்சாவூர் மாவட்டத்தில் மாயூர்-சத்யகுடி சாலையில் மைல் 0-லிருந்து 4/5 வரை புதிதாக சரளைக் கற்கள் பரப்பி தார் போடுதல். | 4·20 |
| 5 | தஞ்சாவூர் மாவட்டத்தில் கருங்கண்ணி-கோலப்பாடு சாலையில் மேம்பாடு வேலைகள் (தார்போடுதல் உட்பட). | 2·55 |
| 6 | மதுரை மாவட்டத்தில் கோடை-கொச்சி சாலையில் மைல் 25/7-ல் உள்ள பாலத்தை புதுப்பித்தல். | 1·50 |
| 7 | மதுரை மாவட்டத்தில் கோடை—கொச்சி சாலையில் மைல் 26/8-ல் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 0·78 |
| 8 | வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர்-நாட்றாம்பள்ளி சாலையில் மைல் 4/8-ல் (அதாவது கிலோ மீட்டர் 7/8-10-ல்) பாலம் கட்டல். | 0·60 |

1971-72-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 100 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் தொடர்ந்து வரும் வேலைகளுக்கும் புதிய வேலைகளுக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் அரசு அனுமதி அளிக்கும்.

ஏனைய சாலைகள் (ஊராட்சி-ஊராட்சி ஒன்றியச் சாலைகள்).

மத்திய அரசின் உதவி பெறுபவை.

| | (ரூ. லட்சத்தில்). |
|---|---|
| முதல் திட்டக்கால அளவு (1951-56) செலவு (கணக்கு) .. | 159·00 |
| இரண்டாவது திட்டக்கால அளவு (1956-61) செலவு (கணக்கு). .. | 205·00 |
| மூன்றாவது திட்டக்கால அளவு (1961-66) செலவு (கணக்கு). | 170·00 |
| ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு)— | |
| 1966-67 (கணக்கு) .. .. .. .. .. | 13·51 |
| 1967-68 (கணக்கு) .. .. .. .. .. | 23·41 |
| 1968-69 (கணக்கு) .. .. .. .. .. | 32·46 |



1971 ஜூலை 1]

நான்காவது திட்டக் காலத்தில் தற்காலிக நிதி ஒதுக்கம்—

| | (ரூ. லட்சத்தில்). |
|---|---|
| 1969-74 .. .. .. .. .. .. .. | 190·00 |
| 1969-74 நான்காவது திட்ட முதல் ஆண்டு (கணக்கு) .. | 33·21 |
| 1970-71 நான்காவது திட்ட இரண்டாவது ஆண்டு (திருத்த மதிப்பீடு). | 30·00 |
| 1971-72 நான்காவது திட்ட மூன்றாம் ஆண்டு (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 32·00 |

ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் பேணி வருகின்ற முன்னால் மாவட்ட வாரியச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளுக்கென "ஏனைய சாலைகள்" என்பதன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. நிதி நிலைமை சாதகமாக இராத காரணத்தால் ரூ. 169.63 லட்சம் செலவில் 47 வேலைகளுக்கு மட்டுமே மூன்று ஆண்டுத் திட்டக் காலமாகிய 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுகளிலும் நான்காவது திட்ட முதலாண்டாகிய 1969-70 ஆண்டிலும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டன. மேலும் 1970-71-ல் ரூ. 88.91 லட்ச மதிப்பீட்டில் 25 வேலைகளுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் விவரத்தை 2-ம் அட்டவணையில் காணலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் எய்திய சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | வகை. | அலகு. | சாதனை 1969-70-ல் அதாவது 4-வது திட்டக் காலத்தின் முதல் ஆண்டு (கணக்கு) | சாதனை 1970-71-ல் அதாவது 4-வது திட்டக் காலத்தில் இரண்டாம் ஆண்டு எதிர்பார்க்கப் படுவது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | புதிய சாலைகள் அமைத்தல். | மை. பர். | 6·7 | 4·5 |
| 2 | புதிதாக சரளைக் கற்கள் பரப்புதல். | மை. பர். | 8·5 | 16·0 |
| 3 | பெரிய பாலங்கள் .. | எண்ணிக்கை. | 4·72 | 3·29 |
| 4 | சிறிய பாலங்கள் மற்றும் மதகு பாலங்கள். | எண்ணிக்கை. | 0 45 | 2·62 |
| 5 | மேம்பாட்டு வேலைகள் .. | எண்ணிக்கை. | 0·11 | 0·43 |
| 6 | தார் போடுதல் .. | மை. பர். | .. | 1·00 |

[1971 ஜூலை 1

கீழ்க்கண்ட பெரிய வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன :—

(1) செங்கற்பட்டு மாவட்டத்தில், வாலாஜாபாத்-திருப்புளிவனம் சாலையில் 61/–5 மைலில் வாலாஜாபாத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே படுகைப்பாலம் (செலவு மதிப்பீடு ரூ 7·00 லட்சம்).

(2) வடாற்காடு மாவட்டத்தில், விரிஞ்சிபுரம் ரயில்வே கிளை சாலையில் 1/5–6 மைலிலும் 2/4 6 மைலிலும் பாலாற்றின் குறுக்கே படுகைப்பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 4·10 லட்சம்).

(3) திருநெல்வேலி மாவட்டத்தில் சுந்தரபாண்டியபுரம்-மேலப்பாவூர் சாலையில் 1/2 மைலில் சித்தாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 5·25 லட்சம்).

(4) திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலடியூரின் அருகே தாமிரவருணி ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 8·25 லட்சம்).

(5) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேடம்பூரின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 7·50 லட்சம்).

(6) தஞ்சாவூர் மாவட்டத்தில், கோபாலசமுத்திரம்-வாய்மேடு சாலையில் 6/7 மைலில் வளவனூற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 4·65 லட்சம்).

(7) தஞ்சாவூர் மாவட்டத்தில் சிக்கில்-ஒட்டத்தட்டை சாலையில் மைல் 3/7-ல் கடுவையாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 4·90 லட்சம்).

(8) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆலங்குடி-தலைஞாயிறு சாலையில் 20/2 மைலில் அரிச்சந்திர நதியின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 3·60 லட்சம்).

(9) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், சங்கரியாறு-கள்ளிகுடி சாலையில் கூழையூர் ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 3·73 லட்சம்).

(10) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அன்பில்-திண்ணியத்திற்கு இடையில் கூழையாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 3·50 லட்சம்).

(11) மதுரை மாவட்டத்தில் பித்தளைப்பட்டி-பழைய கண்ணிவாடி சாலையில் 1/2 மைலில் அனுமந்தராயன் கோட்டையின் அருகே கொடுவனூற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 3·00 லட்சம்).

(12) தருமபுரி மாவட்டத்தில் கல்லாவி-செம்மந்தஹள்ளி சாலையில் 4/8 மைலில் பொன்னியாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 6·75 லட்சம்).

மேற்கொள்ளப்படவிருக்கும் சில மேம்பாடு வேலைகளாவன :—

*(1) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையின் வன்னி வாய்க்காலிலிருந்து பாண்டிக்கண்மாய் ரயில்வே நிலையத்திற்குச் சாலை அமைத்தல் (செலவு மதிப்பீடு ரூ. 14.70 லட்சம்), (2) தஞ்சாவூர் மாவட்டத்தில் செங்கதலை பாலத்திலிருந்து தோப்புத்துறைக்குச் செல்லும் சாலையை மேம்பாடு செய்து சாலைக் கற்கள் பரப்புதல் (செலவு மதிப்பீடு ரூ. 7.50 லட்சம்), (3) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கன்னியூர்-கடத்தூர் சாலையில் 1/1 மைலில், அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு*



1971 ஜூலை 1]

*ரூ. 9.00 லட்சம்), (4) தஞ்சாவூர் மாவட்டத்தில் சத்தியகுடியிலிருந்து திருக்கோவணைக்குச் செல்லும் சாலையில் குறுக்கு வடிகால்கள் உட்பட தார் போட்டு மேம்பாடு வேலைகள் செய்தல் (செலவு மதிப்பீடு ரூ. 5.00 லட்சம்), (5) தஞ்சாவூர் மாவட்டத்தில், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மேகளத்தூர் அருகாமையில் வெண்ணாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 8.00 லட்சம்), (6) தஞ்சாவூர் மாவட்டத்தில் இரகுநாதபுரம் அருகாமையில் வெட்டாற்றின் குறுக்கே பாலம் (செலவு மதிப்பீடு ரூ. 8.00 லட்சம்).*

1970–71-ல் நிறைவேற்றப்பட்ட சில பெரும் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) |
| 1 | சேலம் மாவட்டத்தில் நல்லூர்-வீரபாண்டி சாலையில் 5/4 மைலில் கண்ணறை படுகைப் பாலம் கட்டல். | 1·00 |
| 2 | திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம்-நெட்டூர் சாலையில் சித்தாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டல். | 3·50 |
| 3 | சேலம் மாவட்டத்தில் ஓடப்பள்ளி-பாப்பம்பாளையம் சாலையில் மைல் 1/7 முதல் 6/1 வரை புதிதாக சாலைக் கற்கள் பரப்புதல். | 0·98 |
| 4 | திருச்சி மாவட்டத்தில், பேட்டைவாய்தலை-பெருகமணி சாலையில் கிலோமீட்டர் 0/0 முதல் 3/2 வரை தார் போடுதல். | 0·50 |
| 5 | வடாற்காடு மாவட்டத்தில் பிலாசூர்-பாடகம் மன்சுராபாத் சாலையில் கி. மீ. 13·6 வரை மேம்பாடு வேலைகள் செய்தல். | 2·30 |
| 6 | தஞ்சாவூர் மாவட்டத்தில் வடுககுடி கிராமத்தில் அரசலாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டல். | 3·45 |
| 7 | தஞ்சாவூர் மாவட்டத்தில் கோபாலசமுத்திரம்-வாய்மேடு சாலையில் மைல் 6/7-ல் வளவனூற்றின் குறுக்கே பாலம் கட்டல். | 4·87 |
| 8 | திருச்சி மாவட்டத்தில் வி. களத்தூர்-கைகளத்தூர் சாலையில் 9/7 மைலில் படுகைப் பாலம் கட்டல். | 1·50 |
| 9 | தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை-கோவிந்தகுடி சாலையில் சேரி கிராமத்துக்கருகாமையில் வெட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டல். | 5·86 |
| 10 | தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவைகாவூர் அருகாமையில் மண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்டல். | 2·50 |

[1971 ஜூலை 1

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11 | தஞ்சாவூர் மாவட்டத்தில் பாப்பநாடு-சோழகன் கரை சாலையில் 1/3 மைலில் இடிந்துபோன பாலத்தைப் புதுப்பித்தல். | 2·50 |
| 12 | இராமநாதபுரம் மாவட்டத்தில் சிங்கம்புணரி-திருக்கோஷ்டியூர் சாலையில் கி. மீ. 0-0 முதல் 6/2 வரை புதிதாக சரளைக்கற்கள் பரப்புதலும். உப்பாறு-பாலாறு குறுக்கே பாலங்கள் கட்டுதல். | 5·08 |

1971–72-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டப் பட்டியலில் ரூபாய் 69.48 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 25 வேலைகள் மட்டுமே அரசால் சேர்க்கப்பட்டுள்ளன. பிற சாலைகள் திட்டத்தின் கீழ் 1971-72-ம் ஆண்டில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதிய வேலைகளை எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக ரூபாய் 3 லட்சம் 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. தொடர்ந்து செய்யப்படும் பணிகளுக்கும் புதிய பணிகளுக்கும் 1971-72 வரவு-செலவு திட்டத்தில் ரூ. 32 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சாலைகளைப் பேணுதல்.

1960–61 முதல் செயலுக்கு வந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமான புதிய அமைப்பின்கீழ், முன்னாள் மாவட்ட வாரியத்தின் பொறுப்பில் இருந்த ஏனைய மாவட்ட சாலைகளின் கீழ் உள்ள சாலைகளும் கிராமச் சாலைகளும் இடத்திற்கேற்றவாறு ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகவும், ஊராட்சி சாலைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இச் சாலைகள் அவற்றால் வருங்காலத்தில் பேணி வரப்படுவதற்குரியவை. பின்னர் பேருந்துகள் செல்லும் சாலைகள் அனைத்தும் அரசுக்குப் படிப்படியாக மாற்றுவதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் ஓரளவு பொறுப்பு குறைக்கப்படும். நிதி வசதியைப் பொறுத்து, படிப் படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் இப்பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கேற்ப 1960-61 முதல் 1970-71 வரையிலுள்ள 11 ஆண்டு காலத்தில் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்ட பேருந்து வழித்தடங்களின் மொத்த நீளம் 5,440 மைல்களாகும். 1970-71-ல் பேருந்து வழித்தடச் சாலைகளில் மொத்தம் 321 மைல்கள் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற் காகவும், பிற்காலத்தில் அவற்றைப் பேணி வருவதற்காகவும் ஆன செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி நிலவரப்படி அரசினால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டி எஞ்சி நிற்கும் சாலைகளின் மொத்த நீளம் 3,820 மைல்களாகும். 1971-72-ஆம் ஆண்டுக்கு 356 மைல் 7 பர்லாங் நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை மேற்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்விலிருக்கிறது.



1971 ஜூலை 1]

1971–72-ல் மாநிலச் சாலைகள் (அரசுச் சாலைகள்) பலவற்றையும் பேணி வருவதற்கு தேவைப்படும் நிதி அளவு ரூ. 6·62 கோடியாகும் 1970–71 திருத்த மதிப்பீட்டில் இது ரூ. 6·55 கோடியாக இருந்தது.

### கருவிகளும் பொறிகளும் (மத்திய அரசு) உதவி பெறுபவை.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவு (1951–56) செலவு (கணக்கு). | 99·00 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவு (1956–61) செலவு (கணக்கு) | 46·09 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவு (1961–66) செலவுத் (கணக்கு). | 69·00 |
| **ஆண்டுத் திட்டக் கால அளவு (செலவுத் தொகை).** | |
| 1966-67 (கணக்கு) .. .. .. .. | 13·09 |
| 1967–68 (கணக்கு) .. .. .. .. | 27·22 |
| 1968 69 (கணக்கு) .. .. .. .. | 5·23 |
| தாற்காலிக நான்காவது திட்டநிதி ஒதுக்கீடு .. .. | 50·00 |
| 1969-70 நான்காவது திட்ட முதல் ஆண்டு (கணக்கு) .. | 1·44 |
| 1970 71 நான்காவது திட்ட இரண்டாம் ஆண்டு (திருத்த மதிப்பீடு). | 3·44 |
| 1971 72 நான்காவது திட்ட மூன்றும் ஆண்டு (வரவு செலவுத் திட்ட மதிப்பீடு). | 4 87 |

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்குத் தேவைப்படும் விஞ்ஞான கருவிகளும், சாலைகள், பால வேலைகளுக்குத் தேவைப் படும் பொறிகளும், கருவிகளும் ஒவ்வோர் ஆண்டும் வாங்கப்படு கின்றன. தொடர்ந்துவரும் வேலைகளுக்கு 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 4.87 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

### மத்தியச் சாலை நிதி (ஒதுக்கீடும் இருப்பும்)
### மத்திய அரசுத் திட்டம்.

| | | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (கணக்கு). | (1951–56) | செலவு | 166·00 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (கணக்கு). | (1956–61) | செலவு | 239·00 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (கணக்கு). | (1961–66) | செலவு | 189·00 |

[1971 ஜூலை 1

## ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு).

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1966-67 (கணக்கு) .. .. .. .. .. | 32·73 |
| 1967–68 (கணக்கு) .. .. .. .. .. | 23·03 |
| 1968–69 (கணக்கு) .. .. .. .. .. | 21·12 |
| தற்காலிக நான்காவது திட்டநிதி ஒதுக்கீடு (1969–74) .. | 31·72 |
| 1969-70 நான்காவது திட்டத்தில் முதலாண்டுச் செலவு (கணக்கு). | 27·94 |
| 1970-71 நான்காவது திட்டத்தில் இரண்டாவது ஆண்டு (திருத்த மதிப்பீடு). | 29·21 |
| 1971-72 நான்காவது திட்டத்தில் மூன்றாமாண்டு (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 76·41 |

இத்திட்டத்தின்கீழ் அரசாங்க சாலைகளிலும் மற்ற சாலைகளிலும் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்தியச் சாலை நிதி (இருப்பு நிதி)யிலிருந்து மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு இந்திய அரசு முழுமையாகவோ, ஓரளவோ சாலை இருப்பு நிதியிலிருந்து மானியம் வழங்கச் செலவு செய்ய அனுமதி வழங்குகிறது. மூன்றாவது திட்டத்தின் எஞ்சிய வேலைகளை ரூபாய் 76,10 லட்சம் மதிப்புள்ளவை தவிர மத்திய சாலை நிதியின் (ஒதுக்கீடு) கீழ் செயல் படுத்துவதற்காக மேற்கொள்ள கீழ்க் கண்ட இரண்டு பணிகளுக்கு மட்டுமே இந்திய அரசு 1966–67-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

| தொடர் எண். | பணியின் பெயர். | மதிப்பீடு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் திருமானூரில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் ஒன்று அமைத்தல் (தஞ்சாவூர்-திருச்சி மாவட்டம்). | 52·00 |
| 2 | கிழக்குக் கடற்கரைச்சாலை (செங்கற்பட்டு மாவட்டம்) கோவளம் அருகே சிற்றோடைமீது பாலம் கட்டுதல். முதலாவது பணி நிறைவேறி வருகிறது. இரண்டாம் பணி முடிவடைந்துள்ளது. | 25·00 |

மேலும் 1970-71-ல் மத்தியச் சாலை நிதி (நான்காவது திட்டம்) கீழே குறிப்பிட்டுள்ள 7 பணிகளை வேலைக்கு எடுத்துக் கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்). | பணியின் நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மதுரை மாவட்டத்தில், பண்ணைப்பட்டி பாச்சலூர் சாலையிலுள்ள ஆட்டூரிலிருந்து 12/0-வது மைல் அருகே தாண்டிக்குடி மலைச்சாலையை இணையும் வகையில் சாலை அமைத்தல். | 26·00 | ஆய்வு நடந்து வருகிறது. |



1971 ஜூலை 1]

| தொடர் எண். | பணியின் பெயர். | செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | பணியின் நிலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2 | மதுரை மாவட்டத்தில் பாச்சலூரிலிருந்து வடக்காட்டுக்கும் அங்கிருந்து ஒட்டன் சத்திரத்துக்கு சாலை அமைத்தல். | 25.00 | ஆய்வு நடந்து வருகிறது. |
| 3 | வடார்க்காடு மாவட்டத்தில் போளூர்-செங்கம் சாலையில் 29/6 மைலில் செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 8·00 | பணி நிறைவேறி வருகின்றது. |
| 4 | கோயமபுத்தூர் மாவட்டத்தில் கொள்ளேகால் செல்லம்பாளையம் சாலை 34/0 மைலிலிருந்து 59/6-வது மைல் வரை கருங்கல்சல்லி பரவித் தார் போட்டு மேம்படுத்தல். | 10·00 | பணி நிறைவேறி வருகின்றது. |
| 5 | இராமநாதபுரம் மாவட்டத்தில் குறுக்கு வடிகால் பகுதிகளை மேம்படுத்துவது உட்பட எமனேசுவரம்-நாயனூர் கோவில் சாலையில் கருங்கல் பரவித் தார்போட்டு மேம்படுத்தல். | 5·00 | பணி நிறைவேறி வருகிறது. |
| 6 | மதுரை மாவட்டத்தில் கோடைக்கானலைப் பழனியுடன் இணைப்பதற்கான சாலை அமைத்தல். | 75·00 | மதிப்பீடு ஒப்பளிப்பு பெற்றுள்ளது. |
| 7 | கோயம்புத்தூர் மாவட்டத்தில் கருத்த ரெட்டிபாளையம், பங்களப்புதூர் சாலையில் மைல் 0/0 முதல் 41/1 வரை மேம்பாடு வேலைகள் செய்தல். | 1·40 | . |
| | மொத்தம் .. | 150·40 | |

நான்காவது திட்டத்தின் முதலிரு ஆண்டுகளில் அடைந்த திட்டச் சாதனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண். | வகை. | அலகு. | சாதனை 1969–70 அதாவது 4-வது திட்ட காலத்தில் முதலாண்டு (கணக்கு) | சாதனை 1970–71-ல் அதாவது நான்காவது திட்ட காலத்தின் 2-ம் ஆண்டு (எதிர்பார்க்கப்படுவது). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பெரிய பாலங்கள் .. | எண்ணிக்கை | 0·69 | 0·62 |
| 2 | மேம்பாட்டு வேலைகள் .. | எண்ணிக்கை | 0·39 | 0·31 |
| 3 | தார் போடுதல் . | மை. பர்லாங். | .. | .. |
| 4 | சிறிய பாலங்களும் மதகுப் பாலங்களும். | எண்ணிக்கை | .. | .. |
| 5 | புதிதாக சரளைக்கற்கள் பரப்புதல். | மை. பர்லாங். | 1·5 | .. |

[1971 சூலை 1

1970-71-ல் நிறைவேற்றப்பட்ட இரு பெரிய பணிகளாவன:—

| தொடர் எண். (1) | பணியின் பெயர். (2) | செலவு மதிப்பீடு. (3) (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்லையில் மைல் 49/5 முதல் 50/6-ல் புறச்சாலை அமைத்தல். | 2·95 |
| 2 | செங்கற்பட்டு மாவட்டத்தில், கோவளம் அருகே சிறோடை மீது பாலம் கட்டுதல். | 25·00 |

இத்தலைப்பில் எஞ்சிய வேலைகளும் புதிய வேலைகளும் 1971–72-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 76·41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெருநகரத்தின் சாலை மேம்பாட்டுத் திட்டம் (சென்னை நகர சாலைகள் மேம்பாடு உட்பட) (மத்திய அரசு உதவி பெறும் திட்டம்).

(ரூ. லட்சத்தில்).

| | | |
|---|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவு (1951—56) செலவு (கணக்கு). | | முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இத்தகைய திட்டம் எதுவும் இல்லை. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அளவு (1956—61) செலவு (கணக்கு). | | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவு (1961—66) செலவு (கணக்கு). | 91·15 | (சென்னை நகரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மட்டுமே ஒப்புதல் அளிக்கப்பட்டது). |

ஆண்டுத் திட்டக் காலங்கள் (செலவு)—

(ரூ. லட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1966–67 (கணக்கு) .. .. .. .. | 35·19 | |
| 1967–68 (கணக்கு) .. .. .. .. | 22·38 | |
| 1968–69 (கணக்கு) .. .. .. .. | 21·33 | |
| நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கீடு (1969—74). | 600·00 | |
| 1969–70 நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதலாண்டுக்கு (செலவு) (கணக்கு–நெடுஞ்சாலைத்துறை சம்பந்தப்பட்ட வரை 13·81 லட்சம்). | 37·96 | |



1971 சூலை 1]

| | | |
|---|---|---|
| 1970–71 நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இரண்டாம் ஆண்டு (திருத்த மதிப்பீடு) நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட வரை ரூ. 19·80 லட்சம். | 84·85 | இந்தச் செலவினத்தில் சென்னைமாநகராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டிய தொகையும் சேர்ந்துள்ளது. |
| 1971–72 நான்காவது ஐந்தாண்டுத் திட்ட மூன்றாம் ஆண்டு (வரவு–செலவு திட்ட மதிப்பீடு) நெடுஞ்சாலைத்துறை சம்பந்தப்பட்ட வரை ரூ. 31·00 லட்சம். | 110·75 | |

சென்னை மாநகரம் விரைந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. நேர் போக்குவரத்து இடையீடின்றி இயங்க வேண்டும். சென்னை மாநகரில் 17 மைல்கள் 5 பர்லாங் தொலைவுள்ள 3 தேசிய நெடுஞ்சாலைகளையும் 1964-ஆம் ஆண்டில் அரசு எடுத்துக் கொண்டது. சென்னை மாநகரத்தில் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் பல உந்துகள் அணி அணியாகச் செல்லுவதற்குரிய வசதிகளுடன் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்டு வாரியான செலவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண்ணும், ஆண்டும். (1) | செலவு. மாநகரச்சாலை மேம்பாடு. (2) | பெருநகரச்சாலை மேம்பாடு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்). | | |
| **மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம்—** | | | |
| (1) 1964-65 .. .. .. | 35·13 | .. | 35·13 |
| (2) 1965-66 .. .. .. | 56·02 | .. | 56·02 |
| மொத்தம் .. | 91·15 | | 91·15 |
| **ஆண்டுத் திட்டக் காலங்கள்—** | | | |
| (3) 1966-67 .. .. .. | 35·19 | .. | 35·19 |
| (4) 1967-68 .. .. .. | 12·39 | 9·99 | 22·38 |
| (5) 1968-69 .. .. .. | .. | 21·73 | 21·73 |
| மொத்தம் .. | 47·58 | 31·72 | 79·30 |
| **நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலம் (1969—74)—** | | | |
| (6) 1969-70 (முதலாண்டு) .. .. | .. | 37·96* | 37·96 |
| (7) 1970-71 (இரண்டாம் ஆண்டு) திருத்த மதிப்பீடு .. | .. | 84·85 | 84·85 |
| (8) 1971-72 (மூன்றாம் ஆண்டு) (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) | .. | 110·75* | 110·75 |

*இந்த செலவினத்தில் சென்னை மாநகராட்சி மற்றும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தொகையும் சேர்ந்துள்ளது.



1971 ஜூலை 1]

பெருமுக்கியத்துவம் அளிக்கப்படுகிற பல திட்டங்களின் பெருநகர் சாலைகள் வளர்ச்சித் திட்டமும் ஒன்றாகும். சென்னை மாநகரில் உள்ள மக்கள் தொகை 1941-ம் ஆண்டில் 7.75 லட்சமாக இருந்தது. 1961-ம் ஆண்டில் 17.29 லட்சமாகப் பெருகியுள்ளது. 1940-ல் 30 சதுர மைல் பரப்பிலிருந்து சென்னை மாநகர் தற்போது 50 சதுர மைல்களாக விரிவடைந்துள்ளது. இவ்வாறு வெகு வேகமாக வளர்ந்து வரும் நகரத்தில், சிறந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித்தர திட்டமிட்ட முறையில் சாலைகள் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். நகரின் சாலை மேம்பாட்டுக்கென முந்திய திட்டங்களில் தனிப்பட்ட வேலைத் திட்டம் எதும் தீட்டப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையும் சென்னை மாநகராட்சியும் நிறைவேற்றும். ரூ. 100 லட்சம் செலவில் 33 மைல்களுக்குத் தார் போடுதல், தற்போதுள்ள 15 சாலைகளை ரூ. 143 லட்சம் செலவில் மேம்பாடு செய்தல், ரூ. 100 லட்சம் செலவில் 7 பெரிய பாலங்களையும் படுகைப் பாலங்களையும் கட்டுதல், ரூ. 256.56 லட்சம் செலவில் 14 மேம்பாலங்களும் சுரங்கப் பாலங்களும் கட்டுதல் ஆகியவை அனைத்தும் இத்திட்டத்தில் அடங்கும்.

1969-70-ம் ஆண்டில் பின்வரும் இரண்டு பணிகளும் நிறைவேற்றப்பட அரசு அனுமதி அளித்துள்ளது :—

| தொடர் எண்ணும், பணியின் பெயரும். | செலவு மதிப்பீடு. (ரூபாய் லட்சத்தில்.) | பணியின் நிலை. |
|---|---|---|
| 1 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் ஜெமினி சந்திப்பின் அருகில் விரைவு மேம்பாலம் ஒன்றை அமைத்தல் (சென்னை மாநகர எல்லை). | 45·00 | இப்போது வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 2 அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு எதிரிலிருந்து அடையாறு கழிமுகப் பகுதிக்கு அண்மையில் முடிவடையும் வரையில் ஓசியானிக் ஹோட்டல் எதிரே தென் கடற்கரை சாலையுடன் சேரும் வகையில் விரிவுச் சாலையை அமைத்தல். | 19·00 | நிறைவேறி வருகிறது. |

ரூபாய் 50 லட்சம் செலவில் (1) புதிய வாலாஜா பாலம் ஒன்றை அமைத்தல், (2) வெலிங்டன் பாலத்தை விரிவுபடுத்துதல் பணிகளை 1970-71-ம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த வேலைகள் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் "பெருஞ் சென்னையில்" போக்குவரத்து ஆய்வை நடத்துவதற்காக சென்னை மாநகரத்திற்கான விரிவான பெருந் திட்டத்தை தயாரிக்கத் தனிப்பட்ட போக்குவரத்துப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது. இந்த பிரிவு நகர அமைப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்கனவே ஆய்வு நடத்திக்கொண்டு வருகிறது.

[1971 ஜூலை 1

**தற்போதுள்ள சாலை—இருப்புப்பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலம், சுரங்கப்பாதை கட்டுதல்.**

**மத்திய அரசு உதவி பெறும் திட்டம்.**

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டகால அளவு (1951–56) செலவு (கணக்கு). | இந்தத் திட்டக் காலங்களில் இத்தகைய திட்டம் எதுவும் இல்லை. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகால அளவு (1956–61) செலவு (கணக்கு). | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகால அளவு (1961–66) செலவு (கணக்கு). | 100.57 |
| ஆண்டுத் திட்டக் காலங்கள் (செலவு)— | |
| 1966–67 (கணக்கு) .. .. .. .. | 15·18 |
| 1967–68 (கணக்கு) .. .. .. .. | 0·55 |
| 1968–69 (கணக்கு) .. .. .. .. | .. |
| நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கீடு (1969–74). | 120·00 |
| 1969–70 நான்காவது திட்டத்தின் முதலாண்டுச் செலவு (கணக்கு). | .. |
| 1970–71 நான்காவது திட்டத்தின் இரண்டாம் ஆண்டு (திருத்த மதிப்பீடு). | 5·00 |
| 1971–72 நான்காவது திட்டத்தின் மூன்றாம் ஆண்டு (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 21·00 |

மதுரை மாநகராட்சி எல்லைகளுக்குள் அடியிற்கண்ட இரண்டு மேம்பாலங்களுக்கு அரசாங்கம் 1968–69-ம் ஆண்டில் ஒப்புதலளித்தது.

| | 1968-69-ம் ஆண்டில் செலவு மதிப்பீடு. (ரூபாய் லட்சத்தில்) | பணியின் நிலை. |
|---|---|---|
| 1 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் மைல் 300/2-ல் தற்போதுள்ள சாலை இருப்புப்பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் கட்டுதல் (சுப்ரமணியபுரத்தில் 1/1-2 கி. மீட்டர் ரயில் பாதைத் தொலைவு). | 37·00 | பணி நிறைவேறி வருகின்றது. |
| 2 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் மைல் 300/7-ல் தற்போதுள்ள சாலை-இருப்புபாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்று மீனாக்ஷி ஆலைக்கு அருகில் கட்டுதல் (ரயில்பாதைத் தொலைவு 496/5–6 மைல்) | 31·00 | ஒப்பந்த விவரம் அரசினரால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. |

செங்கற்பட்டு நகராட்சி எல்லைக்குள் (45-வது தேசிய நெடுஞ்சாலை) சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் 34/3 ஆவது மைலில் மேம்பாலம் ஒன்றை ரூ. 15 லட்சம் செலவில் கட்டும் வேலையை



1971 ஜூலை 1]

நிறைவேற்ற 1969-70 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையினர் இவ்வேலையில் தனது பகுதியை 1971–72 ஆண்டு வேலைத் திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளது.

மேலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளைத் தவிர, 1970–71-ம் ஆண்டில் அரசு, கீழே குறிப்பிட்டுள்ள 3 வேலைகளைச் செயல் படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

| தொடர் எண்ணும், பணியின் பெயரும். | செலவு மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | பணியின் நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 கோயம்புத்தூர் நகராட்சி எல்லைகளுக்குள், 47-ம் எண் தேசிய நெடுஞ்சாலையாகிய சேலம்-கொச்சி சாலையில் மைல் 325/7-ல் மேம்பாலம் கட்டுதல். | 10·00 | மதிப்பீடுகளுக்குத் தொழில் நுட்ப ஏற்பு அளிக்கப் பட்டுள்ளது. ஒப்பந்த விவரம் கேட்கப்படும். |
| 2 தஞ்சாவூர் மாவட்டத்தில் மயூரம் நகராட்சி எல்லைகளுக்குள் கும்ப கோணம்-சீர்காழி சாலையில் மைல் 20/7-ல் மேம்பாலம் கட்டுதல். | 40·00 | ஷை |
| 3 தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்ப கோணம் நகராட்சி எல்லைகளுக் குள் கும்பகோணம்-நீடாமங்கலம் சாலையில் மைல் 0/7-ல் மேம்பாலம் கட்டுதல். | 15·00 | ஷை |

மேலே உள்ள முதலிரண்டு வேலைகளும் 1971-72-ம் ஆண்டிற்கான ரயில்வே வேலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

45-வது தேசிய நெடுஞ்சாலையில் 197/6-வது மைலில் திருச்சி நகர எல்லைக்குள் பாலக்கரையில் ஒரு மேம்பாலம் கட்டும் வேலைக்கு இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

எஞ்சிய வேலைகளுக்கும் புதிய வேலைகளுக்கும் 1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 21 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**பொருளாதார பல மாநில முக்கியத்துவத் திட்டம்**
**(மத்திய அரசு ஆதரவு பெற்றது).**

(ரூபாய் லட்சத்தில்.)

| | |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951–56) செலவு (கணக்கு). | 15·69 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–61) செலவு (கணக்கு. | 83·59 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961–66) செலவு (கணக்கு). | 44·84 |

[1971 ஜூலை 1

ஆண்டு திட்டக் காலங்களில் செலவு—

| | | (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1966–67 | (கணக்கு) .. .. .. | 7·48 |
| 1967–68 | (கணக்கு) .. .. .. | 5·00 |
| 1968–69 | (கணக்கு) .. .. .. | 20·98 |
| நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கீடு (1969–74). | | 185·00 |
| 1969–70, நான்காவது திட்டத்தின் முதலாண்டுச் செலவு (கணக்கு). | | 16·14 |
| 1970–71, நான்காவது திட்டத்தின் இரண்டாம் ஆண்டு (திருத்த மதிப்பீடு). | | 4·76 |
| 1971–72, நான்காவது திட்டத்தின் மூன்றாம் ஆண்டு (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | | 30·16 |

பொருளாதார, பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் சாலை அமைப்பு வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசின் ஆதரவுள்ளவை. இந்தச் சிறப்புத் திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் இந்திய அரசினால் தொடங்கி வைக்கப்பட்டது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி குன்றுகளுக்கு மலைச்சாலை அமைத்தல், அரக்கோணம்-திருவள்ளூர் சாலை, பண்ணைக்காடு மங்களம்கொம்பு சாலை ஆகியவற்றை மேம்படுத்தல் உட்பட பழைய வேலைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 31.50 லட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட இரு புதிய வேலைகளுக்கு மூன்றாம் திட்டக் காலத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்திய அரசு இத்திட்டத்தின்கீழ் மான்யமாக வழங்க ஒப்புக்கொண்ட தொகை ரூ. 31.50 லட்சம். இந்த இரு வேலைகளும் எஞ்சிய வேலைகளாக முடிக்கப்படுவதற்காக 1966-67 முதல் எடுத்துக்கொள்ளப்பட்டன.

| | | செலவு மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | தமிழ் நாட்டின் எல்லையில் உள்ள மேட்டுமை மைசூர் பகுதி மாநிலத்தில் உள்ள மாதேசுவரத்துடன் குளத்தூர் வழியாக இணைக்கும் சாலையில் தமிழ் நாட்டுப் பிரிவுக்கு மேம்பாட்டு வேலைகள் செய்தல். | 17·00 |
| 2 | தீர்த்தம்—பேரிகை சாலையை அமைத்தலும், பாலங்கள் கட்டுதலும். | 14·50 |

இந்த இரண்டு பணிகளும் முடிவடைந்தன.

1966–67-ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசு கீழ்க்கண்ட ஒரு வேலையை மட்டுமே அனுமதித்துள்ளது. சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலிருந்து மரக்காணம் வரை தென்னார்க்காடு மாவட்ட எல்லை வரை இணைக்கப் பெறாத பகுதிகளில் சாலை



1971 ஜூலை 1]

அமைத்தல். இந்த வேலையின் செலவு மதிப்பு ரூ. 32 லட்சம். மத்திய அரசு இவ் வேலைக்கான செலவில் பாதிப் பங்கை ரூ. 16 லட்சத்திற்கு மேற்படாமல் மானியமாக அளிக்க முன் வந்துள்ளது. மீதியை மாநில அரசு அரசாங்கம் ஏற்க வேண்டும். இவ்வேலை முடிவடையும் நிலையில் உள்ளது.

திருத்தி அமைக்கப்பட்ட உதவியின்படி, பொருளாதார, பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் இப்போதிருந்து இவ்வேலைகளுக்கு மத்திய அரசிரிடமிருந்து 100 சதவீதம் கடனுகை பெறப்படுகின்றது.

1970–71-ம் ஆண்டில் மாநில அரசு திருச்சி மாவட்டத்தில் குளித்தலையையும் முசிறியையும் இணைக்க காவிரியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிக்கு ரூ. 80 லட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பணிக்கான ஆய்வு நடந்து வருகிறது.

நான்காவது திட்டக் காலத்தில் முதல் இரண்டாண்டுகளில் எய்திய சாதனைகள் பின்வருமாறு :—

| தொடர் எண், வகை. | அளவு. | சாதனை 1969–70-ல் (நான்காவது 4-வது திட்டக்காலத்தின் முதலாண்டில் கணக்கு). | சாதனை 1970–71 (நான்காவது திட்டக் காலத்தின் இரண்டாம் ஆண்டில் பார்க்கப்பட்ட எதிர்பார்ப்பது.) |
|---|---|---|---|
| 1 மேம்பாட்டு வேலைகள் .. | எண்ணிக்கை. | 0·10 | .. . |
| 2 புதிதாக சாலை அமைத்தல் | மை. பா. | 11·1 | . .. |
| 3 சிறிய பாலங்களும் மதகுப் பாலங்களும். | எண்ணிக்கை. | 54 | .... |
| 4 பெரிய பாலங்கள் .. | எண்ணிக்கை. | .. | 1 |

மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 261 லட்ச மதிப்பீட்டில் கிழக்குக் கடற்கரை சாலையில் பெரிய பாலங்கள் கட்டும் வேலைகள் கொண்ட ஒரு பட்டியலைச் செயற்படுத்த அனுப்பியுள்ளது. எஞ்சிய வேலைகளுக்கும் புதிய வேலைகளுக்கும் 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 30.16 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்.

நெடுஞ்சாலைத்துறையின் மற்றொரு முக்கியமான பணி, சாலைகளை அமைக்கவும், பராமரிக்கவும், மேம்பட்ட வழிகளைக் காணவும், சிக்கல்களைத் தீர்க்கவும், அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்களாகும். இந்தியா முழுவதிலும் இவ்வகையில் மாநில அளவில் செயற்படும் ஒரே நிலையம், இது மட்டுமே ஆகும்.

*[1971 ஜூலை 1*

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் வெவ்வேறு பகுதிகள் வருமாறு :—

(1) மண் சோதனைப் பகுதி, (2) நிலக்கல், சரளைக் கற்கள் ஆராய்ச்சிப் பகுதி, (3) சிமிட்டி கற்கலவை—கட்டிட ஆராய்ச்சிப் பகுதி, (4) போக்குவரத்து ஆராய்ச்சிப் பகுதி. இங்கு வெவ்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் சிக்கனமான முறையிலும் உறுதியும் பாதுகாப்பும் குறையாமலும், சாலைகளை அமைக்கும் மேம்பட்ட வழிகளும், அந்த நடைமுறைகளைக் கண்காணித்து செய்திறன், தன்மை இவை கெடாமல் பார்த்துக் கொள்ள வகைகளும், வகுக்கப்படுகின்றன. வெவ்வேறு சாலை அமைப்புப் பொருட்களை அட்டவணை இடவும், புதிய சாலைத் தளங்களைத் திட்டமிடவும், சாலைத் தளங்களை உறுதிப்படுத்தவும் இங்கே ஆய்வுகள் நடைபெறுகின்றன. உலகத்தில் பல்வேறு நாடுகளில் செய்யப்படும் ஆராய்ச்சிகளைத் தொகுத்து, நமது நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப, அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை இந்த நிலையம் வகுத்துக் கொடுக்கிறது. சாலைகளை அமைப்பதில், தரம் குறையாமல் இருக்கச் செய்முறைக் கட்டுப்பாடுகளை இது வலியுறுத்துகிறது. போக்குவரத்துக் கணக்கீடுகளைத் தொகுத்துச் சேகரித்து, எதிர்காலப் போக்குவரத்துத் தேவைகளை இது மதிப்பிட்டுக் கூறுகிறது. உள்நாட்டில் கிடைக்கும் பொருள்களைத் தேர்ந்து சோதித்து, மேம்படுத்திப் பயன்படுத்த வழிகளை வகுப்பதன் மூலம் கணிசமான அளவு செலாவணி மிச்சப்படுத்தப்படுகிறது. ஆயினும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளை விரிவடையச் செய்ய, இன்னும் பற்பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.



*1971 ஜூலை 1]*

1970-71-ம் ஆண்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், வெவ்வேறு பகுதிகளில், நடைபெற்ற ஆராய்ச்சிப் பணிகளின் தொகுப்பைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்:—

| தொடர் எண். | சோதனைச் சாலையின் பெயர். | வந்துசேர்ந்த சோதனைப் பொருட்களின் எண்ணிக்கை. | செய்து பார்க்கப் பட்ட சோதனைகளின் எண்ணிக்கை. | செய்து பார்க்கப் பட்ட நேரிடப் பரிசோதனைகளின் எண்ணிக்கை. | பிற துறைகளிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் பெறப் பட்ட தகவல் கேட்பு விவரங்களின் எண்ணிக்கை. | ஆராய்ச்சித் திட்டங்கள். எடுத்துக் கொள்ளப் பட்டவை. | ஆராய்ச்சித் திட்டங்கள். நிறை வேற்றப் பட்டவை. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | மண்சோதனை | 2,006 | 10,262 | 523 | 27 | 6 | 2 |
| 2 | நிலக்கல், சாலைக்கற்களின் சோதனை. | 276 | 5,063 | 106 | 20 | 10 | 2 |
| 3 | சிமிட்டி கற்கலவை கட்டிட அமைப்புச் சோதனை. | 1,772 | 625 | 4 | 201 | 15 | 5 |

[1971 ஜூலை 1

### போக்குவரத்து—கருவிகள் பிரிவு.

நிலக்கீல், உருளைக் கலவை இயந்திரம், பல அளவைகளில் தார் காய்ச்சுதல், கலன்கள், கையால் தள்ளிடும் கருவிகள், இழு வண்டிகள், குளிர்ந்த அஸ்பால்ட் தார் கலவை இயந்திரங்கள், நெடுஞ்சாலை ஆய்வுக்கூடத்துக்குத் தேவையான கருவிகள், கற்கலவை இயந்திரங்கள் ஆகியவை இந்தப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. தவிர, உள்ளாட்சிமன்றங்களுக்காகவும், அரசாங்கத்தின் ஏனைய துறைகளுக்காகவும், உருளைக் கலவை இயந்திரம், தார் காய்ச்சும் கலன்கள், கையால் தள்ளும் சிறு வண்டி, கழிவுப் பொருள் எடுத்துச் சேர்க்கும் கலன்கள் ஆகியவை போன்ற பிறர்க்கான பணிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

### போக்குவரத்துப் பொறியியல் பகுதி.

இப்பகுதியில் சென்னை மாநகரின் வெவ்வேறு சாலைச் சந்திப்புகளிலும், முக்கிய சாலைகளிலும், நடைபெறும் போக்குவரத்தினைப் பார்வையிடுவது நடத்தப்படுவதுடன் மாநகராட்சி, காவல்துறை ஆகியோரின் துணைகொண்டு தகுந்த செய்முறைகளும் போக்குவரத்தை வழிப்படுத்தும் அமைப்புகளும் போக்குவரத்துப் பொறியியல் கோட்டப் பொறியாளரால் திட்டமிடப்பட்டன.

### ஆய்வு வட்டம்.

மாநிலத்தின் முக்கியமான சாலைத் திட்டங்களையும், பாலங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளுமுன் அவற்றிற்குரிய மதிப்பீடுகளையும் வரைமுறைகளையும் தயார் செய்ய முன்னோடியான ஆய்வுகளை அவற்றிற்குரிய தலத்தில் நிகழ்த்திக் கணக்கிடுதல் இவ்வட்டத்தின் முக்கிய பணியாகும். கரும்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வேலைகளுக்காகத் தனியே ஒரு கோட்டம் இருக்கிறது. இதுவும் துறை ஆய்வு வட்டப் பொறுப்பிலுள்ளது. 1970–71-ம் ஆண்டில் இவ்வாறு ஆய்வுகள் நடத்தி ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும் அவற்றின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | இனத்தின் விவரம். | பணிகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பீடு. (ரூ. லட்சத்தில். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்புகள். | 66 | 3,343 |
| 2 | தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட விரிவான மதிப்பீடுகள். | 90 | 1,107 |
| 3 | தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகள். | 30 | 479 |



1971 ஜூலை 1]

### தேசிய வேலைகளுக்காக " சிறப்பு ஆய்வு வட்டம் " சேலம்.

1970–71-ம் ஆண்டில் இவ்வட்டத்தால் ஆய்வுகள் நடத்தி ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும் அவற்றின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | இனத்தின் விவரம். | பணிகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | உருவாக்கப்பட்ட செயற்குறிப்புகள் .. | 306 | 1,278 |
| 2 | தயாரிக்கப்பட்ட விரிவான மதிப்பீடு .. | 208 | 774 |
| 3 | தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகள். | 24 | 115 |

### பாம்பன் வட்டம்.

பாம்பன் பால ஆய்வுக்காக ஒரு சிறப்பு ஆய்வு வட்டம் 28–8–1970-ல் அமைக்கப்பட்டது. மண் மாதிரிகள் எடுத்து நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ரூபாய் 6.52 கோடி மதிப்புள்ள விரிவான மதிப்பீடு மத்திய அரசின் நிதி ஒப்பளிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### நகராட்சிச் சாலைகள் பாலங்கள்.

நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள நகரங்களில் நெருக்கடி நிறைந்த பகுதிகளில் வசிக்கின்ற மக்களின் நலனைக் கருதி மேற்படி நகரங்களில் உள்ள சாலைகளுக்குத் தாசுபடியா மேற்பரப்பை அமைப்பதற்காக, நகராட்சி மன்றங்களுக்கு கடன்கள், மானியங்கள் வழங்க ஒவ்வோர் ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ஒதுக்கி வருகிறது. ஒவ்வோர் நகராட்சியும் தாசுபடியா மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. நகராட்சிமன்றங்கள் ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்திலிருந்து இரண்டு பணிகளை பாதி மானிய பாதி கடன் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளலாம். சிறப்பு நேர்வுகளில் நகராட்சிப் பகுதிகளில் பாதி மானிய பாதி கடன் அடிப்படையில் பாலங்கள் கட்ட நகராட்சிமன்றங்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. கடுமழை, பெருவெள்ளம் காரணமாகச் சேதமடைந்த சாலைகள், பாலங்கள் ஆகியவற்றைச் செப்பனிடுவதற்கு அவசியமான நேர்வுகளில் மானியங்களும் கடன்களும் வழங்கப்படுகின்றன.

1968–69 முதற்கொண்டு நகராட்சிமன்றங்கள் அனைத்திற்கும் சாலைகளைப் பேணி வருவதற்காகத் தனிப்பட்ட மானியங்களை அரசு அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1971 ஜூலை 1]

நகராட்சிச் சாலைப் பணிகள் திட்டத்தின்கீழ் மூலதனப் பணிகளை மேற்கொள்வதற்காக நகராட்சிமன்றங்களுக்கு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன.

சாலைகள், பாலங்கள் குறித்து 1970-71-ல் செய்யப்பட்ட செலவு விவரங்களும், 1971–72-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### மானியங்கள்

| | திட்டம் (திட்டத்தின்கீழ் வாராத வேலைத் திட்டம்). | 1970–71 கணக்கு. | 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | தூசுபடியா மேற்பரப்புள்ள சாலைகளை அமைத்தல். | 10,00,000 | 10,00,000 |
| 2 | சாலைகளைப் பேணி வருவதற்காகத் தனிப்பட்ட மானியங்கள். | 10,00,000 | 10,00,000 |
| 3 | மழை முதலியவற்றால் சேதமடைந்த சாலைகளைச் செப்பனிடுதலும், பாலங்களை அமைத்தலும். | 5,20,000 | 1,00,000 |

### கடன்கள்

| | திட்டம் (திட்டத்தின்கீழ் வாராத வேலைத் திட்டம்). | 1970–71 கணக்கு. | 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | தூசுபடியா மேற்பரப்புள்ள சாலைகளை அமைத்தல். | 9,80,000 | 13,50,000 |
| 2 | பாலங்கள் அமைத்தல் .. .. .. | 3,71,150 | |
| | | 13,59,150 | |
| 3 | நகராட்சிச் சாலைப் பணிகள் (ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வருபவை). | 10,00,000 | 10,00,000 (II-ஆம் பகுதியாகக் கருதப்பட்டுள்ளது.) |

### ஊராட்சி ஒன்றியங்களில் இணைப்புச் சாலைகள்.

கிராமப் பகுதிகளில் நல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன், கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிராமப் பணிகள் திட்டத்தின்கீழ் இணைப்புச் சாலைகளுக்கு அரசு மானியம் அளிப்பது தவிர, வட்டாரங்களின் வகைப்பாட்டினை



[1971 ஜூலை 1

யொட்டி இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணியை மேற்கொள்வதற்காக கீழ்க்காணும் விதங்களில் பொது மக்களிடமிருந்து நன்கொடை பெற முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| வட்டார வகைப்பாடு. | பொது மக்கள் நன்கொடை விதம். |
|---|---|
| | சதவிதம். |
| A .. .. .. | 50 |
| B .. .. .. .. | 40 |
| C .. .. .. .. | 30 |
| D .. .. .. .. | 20 |

1969-70-ஆம் ஆண்டுக்கு ரூபாய் 80 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. 1970–71-ல் ரூ. 110 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டுக்கு ரூ. 110 லட்சம் தாற்காலிகமாக ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

### உள்ளூர் சாலைகள் மானியம்.

கிராமப்புற சாலைகள் அனைத்தும் ஊராட்சிமன்றங்களினால் அல்லது பேரூராட்சிமன்றங்களினால் அல்லது ஊராட்சி ஒன்றியங்களினால் பேணி வரப்படுகின்றன. சாலைகளை அமைத்தல், பாலங்கள் கட்டுதல், அவற்றைப் பேணி வருதல் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிமன்றங்களின் தலையாய பொறுப்பாகும். எனினும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிவாயில்கள் போதுமானவையாக இராமையாலும் அவற்றைப் பெருக்குவதற்கு இடமில்லையாதலாலும் உள்ளாட்சிமன்றங்களுக்கு இயன்றவரை அரசு உதவி செய்து வருகிறது. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சாலைகளைப் பேணி வருவதற்காக உள்ளூர் சாலை மானியம் வழங்குவதும் ஓர் உதவியாகும்.

தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 131-வது பிரிவின்படி ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் மக்கள் தொகை கணக்குப்படி, தலைக்கு 40 காசு என்ற விதத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும். உள்ளூர் சாலை மானியம் அப்பகுதியிலுள்ள சாலைகளைப் பேணி வருவதற்காகச் செலவிடப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தினால் பேணிவரப்படும் சாலைகளின் நீளத்தையோ அல்லது இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள நிலப்பாங்கினையோ கருத்தில் கொள்ளாமல், ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படுகிற மானியத்தை மேற்கண்ட முறையில் கணக்கு இடுவதால் மானியத் தொகை ஒரே சீராக இல்லை என்று பல முறையீடுகள் வந்தன.

இப்பிரச்சினைகளைப் பரிசீலித்ததன் மேல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அதன் மக்கள் தொகையில் தலைக்கு 18 காசு என்ற விதத்திலும், ஊராட்சி ஒன்றியங்களால் பேணி வரப்படும் சாலைகள் கடற்கரை கழிமுகப் பகுதியா, மலைப்பகுதியா அல்லது சாதாரணப் பகுதியா என்பதைப் பொறுத்து முறையே மைல்

ஒன்றுக்கு ரூ. 800 அல்லது ரூ. 1,500 அல்லது ரூ. 600 என்ற வீதத்திலும் உள்ளூர் சாலைகள் மானியத்தைக் கணக்கிட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1-4-1967 அன்றுள்ளபடி ஊராட்சி ஒன்றியங்களால் பேணி வரப்படும் சாலைகளின் நீளத்தின் அடிப்படையிலேயே மானியங்கள் கணக்கிடப்பட வேண்டும். கணக்கிட்டுப் பார்த்ததில், மொத்த மானியம் ரூ. 119.32 லட்சமாகும். 1970-71 ஆம் ஆண்டில் இத்தொகையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கணக்குத் தலைப் பின்கீழ் 1970-71-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு ரூ. 1,19,31,500 என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. 1971-72 வரவு-செலவுத் திட்டத்திலும் இதே தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறையின் கட்டிடப் பிரிவு.

மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டித்தருவதே பொதுப்பணித் துறையிலுள்ள கட்டிடப் பிரிவின் தலையாய அலுவலாகும்.

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப திட்டம் வகுத்து, வடிவமைத்துக் கட்டிடம் கட்டுவது கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். இவற்றைத் தவிர மத்திய அரசு துறைகளுக்காகவும் ஓரளவு அரசுச் சார்புள்ள நிறுவனங்களுக்காகவும் அவ்வப்பணிகளின் சிறப்புக் கருதி, முகவராகச் செயற்பட்டு அக்கட்டிடப் பணிகளை நிறைவேற்றித் தருகிறது. மாநில அரசின் கட்டிடங்களைப் பேணிவரும் பொறுப்பும் பொதுப் பணித்துறையையே சாரும்.

27-வது கோரிக்கையில் ரூ. 1 லட்சம் வரையில் மதிப்புள்ள புதிய கட்டிடப் பணிகள் அனைத்தும் அடங்கியதாகும். மத்திய உதவி பெறும் திட்டங்களுக்குக் கிடைக்கும் மத்திய நிதி உதவியைக் கணக்கில் கொண்டு, இவற்றிற்கு ஆகும் செலவுத் தொகை மூலதனக் கணக்கிலிருந்து வருவாய் கணக்கிற்கு எடுத்தெழுதப்படுகிறது. பொதுப்பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்கு ஏற்படும் செலவும் அவற்றிற்குரிய சொத்து வரியும் இக்கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

"50. d. மராமத்துக்கள்" என்ற தலைப்பின்கீழ்ச் செய்யப்படும் ஒதுக்கீடு கட்டிடங்களைப் பேணும் செலவு, சிறப்பு மராமத்துக்கள், சொத்து வரி ஆகியவற்றை ஈடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும்.

1. மருத்துவம்.

மருத்துவ மனைகளுக்கும், ஏனைய மருத்துவ நிலையங்களுக்கும் வேண்டியுள்ள கட்டிடங்களைக் கட்டுவதே பொதுப்பணித் துறையின் பெரும் பகுதிப் பணியாக அமைகின்றது. இக்கட்டிடங்களுக்காக 1970-71-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி முதலீடு செய்துள்ள தொகை சுமார் ரூ. 404 (நானூற்று நான்கு) லட்சங்களாகும்.





செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட மூன்று மருத்துவக் கல்லூரிகள் படிப்படியான திட்டத்தின் கீழ் மேம்பாடு அடைந்து வருகின்றன. இந்த படிப்படியான திட்டத்தின்படி இக்கட்டிடப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள் முறையே ரூ. 8.75 லட்சம், 5.35 லட்சம் செலவிலும், கோயம்புத்தூர் மருத்துவ மனையில் நோய்குறியியல் பிரிவிற்கான கட்டிடத்தின் இரண்டாவது மாடி ரூ. 5.00 லட்சத்திலும் கட்டி முடிக்கப்பெறும் தருவாயில் உள்ளன.

புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தவிர, இப்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளும் அவற்றுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளும், பல்வேறு நிலையங்களின் அதிகரித்தத் தேவையை ஈடு செய்வதற்காக விரிவாக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் அரசுப் பொது மருத்துவ மனையில் இதயநோய் சிகிச்சைப் பிரிவிற்காக ரூ. 17.70 லட்சம் மொத்தச் செலவில் ஒரு எட்டு அடுக்குக் கட்டிடம் இவ்வாண்டு கட்டி முடிக்கப்பட்டது. சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் ரூ. 17.00 லட்சம் மொத்தச் செலவில் நரம்பியல் மருத்துவப் பிரிவிற்கான பல அடுக்குக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது.

இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் முடநீக்கப்பிரிவு, எக்ஸ்ரே பிரிவு முதலானவை அமைவதற்கான ஐந்து அடுக்குக் கட்டடமொன்று ரூ. 9.85 லட்சம் மொத்தச் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவ முறைக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் பொருட்டு அரும்பாக்கத்தில் இந்திய மருத்துவமுறை மருத்துவ மனை 100 படுக்கைகளுடன் ரூ. 8.18 லட்சம் செலவில் இவ்வாண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் நோய்க்குறியியல் பிரிவும், நுண்ணுயிரியல் பிரிவும் ரூ. 6.60 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கீழ்ப்பாக்கத்திலுள்ள மனநோய் மருத்துவ மனையில் ரூ. 6.00 லட்சம் செலவில் புற நோயாளிகளுக்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை கண்நோய் மருத்துவ மனையில் ரூ. 6.75 லட்சம் செலவில் அறுவைச் சிகிச்சை பிரிவிற்கான கட்டடமும், சென்னை எழும்பூரிலுள்ள தாய்-சேய் நல மருத்துவ மனையில் ரூ. 2.78 லட்சம் செலவில் கட்டடமும், தஞ்சை இராமசாமி மிராசுதார் மருத்துவ மனையில் ரூ. 4.50 லட்சம் செலவில் மகப்பேறு மற்றும் அறுவைச் சிகிச்சைக்கான கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

[1971 ஜூலை 1

கீழே குறிப்பிட்ட கட்டடப் பணிகளுக்கு 1970-71-ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலையைத் துவக்குவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன :—

1. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மாணவியர் விடுதியின் இரண்டாவது மாடி (ரூ. 2.50 லட்சம்).

2. சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையில் தொத்து நோய்ப் பிரிவு கட்டடம் (ரூ. 2.80 லட்சம்).

3. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் நோய்க்குறியியல் நுண்ணுயிரியல் பிரிவுகள் கட்டடத்தின்மேல் மூன்று மாடி கட்டுதல் (ரூ. 8.50 லட்சம்).

4. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் மாணவியர் விடுதி கட்டுதல் (ரூ. 2.70 லட்சம்).

5. தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் 104 படுக்கைகள் கொண்ட கட்டடங்கள் கட்டுதல் (ரூ. 5.36 லட்சம்).

6. சென்னை மன நோய் மருத்துவ மனையில் பெண் நோயாளிகளுக்காகத் தொழுநோய் பிரிவுக் கட்டடம் கட்டுதல் (ரூ. 3.96 லட்சம்).

7. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் (ரூ. 7.50 லட்சம்).

8. 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை, கம்பம் (ரூ. 6.00 லட்சம்).

9. உடுமலைப்பேட்டை மருத்துவ மனையில் ரூ. 7.50 லட்சம் செலவில் கூடுதல் கட்டடம்.

மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நடப்பு ஆண்டில் புதிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டு வருவதுடன் இப்போதுள்ள மருத்துவ மனைகள் விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றன.

சிங்கம்புணரியில் 32 படுக்கைகள் கொண்ட அரசாங்க மருத்துவ மனை ரூ. 9.90 லட்சம் செலவிலும், திருப்பெரும்புதூரில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 9.70 லட்சம் செலவிலும், செயங்கொண்டான் மருத்துவ மனையை வட்டத் தலைமையிட மருத்துவ மனையாகத் தரம் உயர்த்துவதற்கான கட்டடங்கள் ரூ. 3.70 லட்சம் செலவிலும் நடப்பு ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட முடிவு பெற்ற வேலைகள் தவிர, பவானியில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 7.73 லட்சம் செலவிலும், உதகை மருத்துவ மனையில் 30 படுக்கைகள் கொண்ட பிரிவு ரூ. 3.80 லட்சம் செலவிலும், தாம்பரத்தில் 104 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவ மனை ரூ. 11.965 லட்சம் செலவிலும், தேனியில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 8.645 லட்சம் செலவிலும், தேவகோட்டையில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 10.00 லட்சம் செலவிலும், கடையநல்லூர்



1971 ஜூலை 1]

மருத்துவ மனையில் ரூ. 5.00 லட்சம் செலவில் கூடுதல் கட்டடங்களும், போரூரணியில் 32 படுக்கைகள் கொண்ட கட்டடப் பிரிவு ரூ. 2.00 லட்சம் செலவிலும் கட்டி முடிவுபெறும் தருவாயில் உள்ளன.

காஞ்சீபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் சிகிச்சை நிலையம் ரூ. 5 லட்சம் செலவிலும், ஆம்பூர் அரசாங்க மருத்துவ மனையில் ரூ. 4.30 லட்சம் செலவில் கூடுதல் கட்டடங்களும், திருவாரூரில் 70 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 10.90 லட்சம் செலவிலும், திருப்பத்தூரில் 38 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 10.10 லட்சம் செலவிலும், நாமக்கல் மருத்துவ மனையில் ரூ. 4.30 லட்சம் செலவில் கூடுதல் கட்டடங்களும், கரையில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ரூ. 9 லட்சம் செலவிலும் கட்டப்பட்டு வருகின்றன.

## 2. குடும்பக் கட்டுப்பாடு மருந்தகமும் ஆரம்பச் சுகாதார நிலையங்களும்.

1968-ம் ஆண்டில் 45 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் (ஒவ்வொன்றும் ரூ. 92,000) கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 30 இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றும் 11 இடங்களில் வேலைகள் பல்வேறு நிலைகளில் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் அவை முடிவுறும்.

78 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் 1969-ம் ஆண்டில் ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் ரூ. 75,000 மதிப்புள்ளது. இவைகளில் 9 இடங்களில் வேலைகள் முடிவு பெற்றும், 62 இடங்களில் நடந்துகொண்டும் இருக்கின்றன. 1970-ம் ஆண்டில் அரசு 251 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களுக்கு (ஒவ்வொன்றும் ரூ. 75,000 மதிப்புள்ளது) ஒப்புதல் அளித்திருக்கிறது. நான்கு இடங்களில் கட்டடங்கள் முடிவு பெற்றுள்ளன. 144 இடங்களில் கட்டடங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ரூ. 28.92 லட்சங்கள் மதிப்புள்ள 241 குடும்பக் கட்டுப்பாடு துணை நிலையங்கள் 1970-ல் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 61 இடங்களில் கட்டடங்கள் முழுமைபெற்று இருக்கின்றன. 104 நிலையங்களில் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ரூ. 109.32 லட்சம் செலவில் 911 குடும்பக் கட்டுப்பாடு துணை நிலையங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கின்றது.

1970-ம் ஆண்டில் ரூ. 72 லட்சம் செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 40 நிலையங்களில் 3 நிலையங்கள் முடிவுற்றும் 23 இடங்களில் வேலைகள் நடந்தேறியும் வருகின்றது.

வெற்றுடன் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக பெண்கள், ஆண்களுக்கான அறுவை சிகிச்சைப் பகுதிகள், அரசினர் பெண்—சிறுவர் மருத்துவ மனை, சென்னை, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அரசினர் தலைமையிட

[1971 ஜூலை 1

மருத்துவ மனை, அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை, அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை, சென்னை, அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனை, தஞ்சை அரசினர் இராசா ஸர். இராமசாமி முதலியார் மருத்துவ மனை, சென்னை, பேராவூரணி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவமனைகள் ஆகிய இடங்களில் ரூ. 18.06 லட்சங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கின்றன.

குடும்பக் கட்டுப்பாடுப் பயிற்சி நிலையங்கள் சென்னையிலும், சேலத்திலும், ரூ. 10.50 லட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கின்றன. சென்னையில் உள்ள நிலையத்தின் கட்டடப் பணிகள் முடியும் தருவாயிலிருக்கின்றன.

### 3. வேளாண்மை.

மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரிக்கான இரண்டாவது மாணவர் விடுதிக் கட்டடம் ரூ. 13.90 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ரூ. 5.65 இலட்சம் செலவில் வாயு இல்லமும் Gas House ரூ. 2.02 இலட்சம் செலவில் மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆசிரியர் குடியிருப்புகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் இருக் கின்றன.

கோவை வேளாண்மைக் கல்லூரிக்கு ரூ. 1 இலட்சம் செலவில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுப் பெற்றுள்ளன. கோவை வேளாண்மைக் கல்லூரிக்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கண்ணாடி இல்லம் ( Glass House ) ஒன்று கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றது. கோயம்புத்தூரில் மண்வள ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவுவதற்காக ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டும் பணி ரூ. 3.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது.

ரூ. 1.10 இலட்சம் செலவில் குடியாத்தத்தில் மண்வள ஆராய்ச்சி ஆய்வுக்கூடமும், நல்லாத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் விவசாயிகள் பயிற்சி நிலையம் ஒன்றும். சிவகங்கையில் ரூ. 1.54 இலட்சம் செலவில் அலுவலகக் கட்டடமும் பட்டறையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவாரூரில் ரூ. 1.40 இலட்சம் செலவில் வேளாண்மைக் கருவிகள் பட்டறை கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. பெரியகுளம் வட்டம் பண்ணைக்காட்டில் ரூ. 1.07 இலட்சம் செலவில் மலைவாழைப்பழ ஆராய்ச்சி நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. கோவையில் விவசாயிகள் பயிற்சி நிலையம் ரூ. 1.64 இலட்சம் செலவில் நிறுவுவதற்கான கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வரு கின்றது.

### 4. கால்நடை வளர்ப்பு.

நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளில் சில வருமாறு :—

1. சுமார் ரூ. 1.57 இலட்சம் செலவில் ஓசூரில் கால்நடைக் கான கொட்டகைகளைத் திருத்தியமைக்கும் வேலை.



1971 ஜூலை 1]

2. சுமார் ரூ. 1.25 இலட்சம் செலவில் செங்கற்பட்டில் கால் நடை மருத்துவ மனை அமைக்கும் பணி.

3. சுமார் ரூ. 2.72 இலட்சம் செலவில் கொருக்கையில் உள்ள கால்நடைப் பண்ணையை மேம்படுத்தும் பணி.

4. சுமார் ரூ. 71,500 செலவில் உதகமண்டலத்திலுள்ள ஆட்டின் வளர்ப்பு ஆய்வுக்கூடத்தில் உரோம ஆராய்ச்சிக் கூடத்திற்கான கட்டடப் பணி.

5. சுமார் ரூ. 1.79 இலட்சம் செலவில் ஓசூரிலுள்ள கால் நடை ஆராய்ச்சி நிலையத்தில் கோழி அடைகாக்கும் இல்லம் கட்டும் பணி.

பின்வரும் பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு விட்டது :—

1. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிறுவனத்தில் ரூ. 15 இலட்சம் செலவில் அம்மைப்பால் உற்பத்தி மற்றும் ஆய்வுப் பகுதிக்கான கட்டடம் கட்டும் பணி.

2. சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் சுமார் ரூ. 90,000 செலவில் செயற்கை இனவளர்ச்சிமுறை ஆய்வுக் கூடத்திற்கான கட்டடம் கட்டும் பணி. இப்பணிகளை நிறை வேற்றுவதற்கான முகவுரை முடிவு செய்த பிறகு, இப்பணிகள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் ரூ. 1.58 இலட்சம் செலவில் உயர்மின் அழுத்த நிலையம் அமைக்கும் பணி முடிவடையும் தருவாயிலுள்ளது.

### 5. மீன் வளம்.

வீடூர். சாத்தனூர், கிருஷ்ணகிரி, மஞ்சளாறு, மணிமுத்தாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு மீன் பண்ணைகளில் ரூ. 14.00 இலட்சம் செலவில் கட்டடங்களும் மீன் பண்ணை அமைக்கும் வேலைகளும் முடிவு பெற்றுள்ளன. கோமுகி, பவானிசாகர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மீன் பண்ணைகளில் ரூ. 4.00 இலட்சம் செலவில் கட்டடங்களும் மீன் பண்ணை அமைப்பு வேலைகளும் முடிக்கப்பெற்றுள்ளன. இந்த இரு மீன் பண்ணைகளிலும் மேலும் சில புதிய வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. திருமூர்த்தி நீர்த்தேக்கம், வைகை அணை ஆகிய இடங்களில் ரூ. 1.01 இலட்சம் செலவில் புதிய மீன் பண்ணைகள் அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. அமராவதி, உப்பாறு அணை, திருச்சி ஆகிய இடங்களில் ரூ. 1.46 இலட்சம் செலவில் புதிய மீன் பண்ணைகள் அமைக்கும் வேலை நடந்து வருகின்றது.

கல்பாக்கம் அணுமின் திட்டப்பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டத்திற்கு ரூ. 2.715 இலட்சம் செலவில் 181 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீனவர்களுக்கு அளிக் கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டம் அம்மாபட்டினத்தில் இரண்டாவது நிலையாக ரூ. 2.629 இலட்சம் செலவில் மீனவர் களுக்கு 70 வீடுகள் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளன.

[1971 ஜூலை 1

மெரினா படகு கட்டும் தளத்தை ராயபுரத்திற்கு மாற்றுவதற்கு ரூ. 4.215 இலட்சம் செலவில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, ராயபுரத்தில் படகு கட்டும் தளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### 6. கல்வி.

அரசு அனுமதித்த கீழ்க்காணும் கல்லூரிகளுக்கான கட்டடங்கள் 1970-71-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன :—

1. அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை (கீழ்த்தளம் மட்டும்).
2. அரசினர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி.
3. அரசினர் கலைக் கல்லூரி, ராசிபுரம்.
4. அரசினர் கலைக் கல்லூரி, நாமக்கல்.
5. அரசினர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர் (மகளிர்).
6. சென்னை சட்டக் கல்லூரிக்கான கூடுதல் கட்டிடங்கள்.
7. அரசினர் மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரிக்கான கூடுதல் கட்டடங்கள், மதுரை.
8. திருச்சி ஈ.வே.ரா. கல்லூரியில் ரசாயனப் பகுதியில் முதல் மாடிக் கட்டடம்.

கீழ்க்காணும் அரசினர் கல்லூரிக்கான கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

1. அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை (முதல் மாடி).
2. சென்னை ராணி மேரி கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள்.
3. அரசினர் பயிற்சிக் கல்லூரி, காட்பாடி.
4. அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம்.
5. அரசினர் கலைக் கல்லூரி, திருவாரூர்.
6. அரசினர் கலைக் கல்லூரி, முசிரி.
7. அரசினர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை.
8. அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி.

கீழ்க்காணும் அரசினர் கலைக் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கான கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

1. அரசினர் மாணவர் விடுதி, குடியாத்தம்.
2. அரசினர் மாணவர் விடுதி, கும்பகோணம் (மகளிர்).
3. அரசினர் மாணவர் விடுதி, கரூர்.

அரசினர் மீனாட்சி கலைக் கல்லூரி மாணவர் விடுதி, மதுரை, ஈ.வே.ரா. பெரியார் கலைக் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சி ஆகியவை முடிவுற்றன.



[1971 ஜூலை 1

செய்யாறு அரசினர் கலைக் கல்லூரி விடுதிக்கான கட்டிட வேலைகளும், சென்னை கர்நாடக இசைக் கல்லூரி விடுதிக்கான கட்டிட வேலைகளும் முடிவுறும் நிலையில் இருக்கின்றன.

அரசினரின் ஒப்புதல் கீழ்க்காணும் கட்டிடங்களுக்குக் கிடைக்கப்பெற்று ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன:—

1. அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரிக்கு விஞ்ஞானப் பகுதிக் கட்டடங்கள், செய்யாறு.
2. ராணி அண்ணாதுரை கலைக் கல்லூரி, திருநெல்வேலி.
3. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, கும்பகோணம்—கூடுதல் கட்டிடங்கள்.

கீழ்க்காணும் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன :—

1. அரசினர் உயர்நிலைப் பள்ளி, உளூர், அடையாறு.
2. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கரிங்கல்.
3. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வாலாஜாபாத்.
4. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குன்றத்தூர்.

கீழ்க்காணும் பள்ளிகளுக்கான கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன :—

1. அரசினர் உயர்நிலை மற்றும் பயிற்சிப் பள்ளி, வேலூர்.
2. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பவானிசாகர்.
3. அரசினர் உயர்நிலைப் பள்ளி, எழும்பூர்.
4. ஆதார பயிற்சிப் பள்ளி, பேரையூர்.
5. அஞ்சுகம் முத்துவேலர் உயர்நிலைப் பள்ளி, திருக்குவளை.

### 7. அரிசன வகுப்பினர் நலன்.

இத்திட்டத்தின் கீழ் அரிசன மாணவ, மாணவிகள் இல்லக் கட்டடங்கள், பாடசாலைக் கட்டடங்கள் ஆகியவை பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாளையங்கோட்டையில் ரூ. 2.75 இலட்சம் செலவில் மாணவியர் விடுதியும், வட ஆர்க்காடு அதனூரில் மலைச் சாதியினருக்கான விடுதி கட்டடம் ரூ. 1.18 இலட்சம் செலவிலும், சேலம் அரசினர் கல்லூரியில் அரிசன மாணவர்களுக்கான விடுதி ரூ. 2.65 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

வால்பாறையில் பெண்களுக்கான அரசினர் விடுதி ஒன்று ரூ. 2.05 இலட்சம் செலவிலும், திருச்சி திருத்தலையூரில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று ரூ. 3.03 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டு முடிவுறும் தருவாயிலிருக்கின்றன.

[1971 ஜூலை 1

சேலம் மாவட்டம், முல்லுக்குரிச்சியில் அரசினர் மலைச்சாதி மாணவர் விடுதி ரூ. 2.15 இலட்சம் செலவில் கட்டும் பணி நடந்து கொண்டுள்ளது. அரும்பாவூரில் அரசினர் மலைச் சாதி மாணவிகளுக்கான விடுதி ரூ. 1.97 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கின்றது.

புதுக்கோட்டையில் மறவர் வகுப்பு மாணவர் இல்லக் கட்டிடமும் ரூ. 1.80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மறவர் வகுப்பு மாணவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் விடுதி கட்டும் பணி ரூ. 2.27 இலட்சம் செலவில் விரைவில் மேற்கொள்ளயிருக்கின்றது.

### 8. காவலர் வீட்டு வசதித் திட்டம்.

காவல் துறையினர் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், இதுகாறும் சுமார் 7,500 குடியிருப்புகள் காவல் துறை சார்நிலை அலுவலர்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்டுக் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1970-71-ம் ஆண்டில் மட்டும் சுமார் 240 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 750 குடியிருப்புகள் கட்டும் பணி பல நிலைகளில் நடந்து வருகின்றன.

1970-71-ம் ஆண்டுக்கு காவல் துறையினர் வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ. 47.174 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் சுமார் ரூ. 45 இலட்சம் செலவழிக்கப்பட்டிருக்கின்றது.

### 9. பொது நிர்வாகம்.

வருவாய்த்துறை வாரியத்திற்கு வேண்டிய பதிவேடுகள் வைப்பதற்கான அறைகள் ரூ. 2.50 இலட்சம் செலவில் சென்னையில் கட்டி முடிக்கப்பட்டது. கன்னியாகுமரி, திருச்செந்தூர் ஆகிய இரு இடங்களில் சுற்றுலா மாளிகைகள் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டன. ஏற்காட்டில் ரூ. 2.25 இலட்சம் செலவில் தங்கும் விடுதி கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி இந்த நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

### 10. நீதி நிர்வாகம்.

கரூரில் முனிசிப் நீதிமன்றக் கட்டிடத்தை ரூ. 4.18 இலட்சம் செலவில் திருத்தியமைக்கும் பணி முடிவடைந்தது. மதுரையில் ரூ. 35 இலட்சம் செலவில் நீதிமன்றங்களுக்கான கட்டிடங்கள் முடிவடைந்தன. திருச்சியில் கிரிமினல் நீதிமன்ற கட்டிடத்தை ரூ. 5.62 இலட்சம் செலவில் கட்டும் வேலையும், சென்னையில் அரசாங்க வக்கீல்களுக்கான கூடுதல் கட்டிடம் ரூ. 9.86 இலட்சம் செலவில் கட்டும் வேலையும் துவக்கப்பட வேண்டியுள்ளது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக்குறிப்பு.

**சோவியத் நாட்டு விண்வெளி வீரர்கள் மூவர் மறைவு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோவியத் நாட்டின் மூன்று விண்வெளி வீரர்கள், சோயஸ்-11 என்னும் விண்வெளிக் கப்பலில், தம் கடமையை ஆற்றிவிட்டுப் புவிக்குத் திரும்புகையில், 30—6—1971 அன்று இயற்கை எய்திய துயரமான செய்தியை இப் பேரவைக்கு நான் மிக வருந்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விண்வெளி ஆராய்ச்சியின் மூலம் நம் அறிவை வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருந்த இம்மூவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். விண்வெளி வீரர்களின் மறைவால் சோவியத் நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் ஏற்பட்டுள்ள இழப்பிற்கு நம் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்களை ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்).

### 2. வினாக்கள்—விடைகள்.

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**Kudumiamalai Agricultural Research Station.**

* 34. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the [illegible]on. the Minister for Agriculture be pleased to state the details of [illegible] Kudumiamalai Agricultural Research Station to be set up in [illegible]uchirappalli District?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குடுமியாமலையிலுள்ள [illegible] பண்ணையில் வேளாண்மையில் பயிர்வள ஆராய்ச்சிக்காக க[illegible]ஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம் ( Ka'aignar Ka[illegible]nanidhi Centre for Adaptive Research in Agriculture) என்று அ[illegible]க்கப்படும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவது குறித்த ப[illegible] 6—5—1971 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

[illegible] நிலவளம், நீர்வளம் பற்றி குறிப்பாக அவற்றைக் [illegible]வது பற்றிய நடைமு[illegible]ஆராய்ச்சி.

[1971 ஜூலை 2

(b) முன்னோடி நவடிக்கையாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மேம்பாட்டிற்கான வளர்ச்சிப்பணிகள், நடைமுறைப் பணிகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற வேலை இனங்களில் இந் நிலையம் கருத்தூன்றிச் செயல்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ஆராய்ச்சி நிலையம் ஆரம்பித்த பிற்பாடு இந்த ஆண்டு எவ்வளவு தொகை செலவழிப்பதென்று அரசு நிச்சயித்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்தக் குடுமியாமலைப் பண்ணையில் ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவுவதற்கான செயற்குறிப்பை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் அனுப்பியதற்கிணங்க இதுபற்றிய செலவுக்குறிப்புகளை ஆய்வு செய்து, 3.18 லட்ச ரூபாய் செலவில் தேவையான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. வேளாண்மைப் பயிர் வள ஆராய்ச்சிக்கான 'கலைஞர் கருணாநிதி நிலையம்' என்று அழைக்கப்படும் பயிர் வள ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதற்கான செலவு இந்த ஆண்டு 2.65 லட்ச ரூபாயாகும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த ஆராய்ச்சி நிலையத்தில் எவை எவை எப்படி எப்படி ஆராய்ச்சி செய்யப்படும்? பழத் தோட்டம், தென்னந்தோப்பு இப்படிப் பல வகைகள் இருக்கின்றனவே அவைகளில் எந்தெந்த வகைகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நில வளம், நீர் வளம் பற்றி இந்த ஆண்டு ஆராய்ச்சி துவங்குகிறது. அது திருச்சி மாவட்ட மேம்பாட்டுக்காக ஐ.ஏ.ஏ.பி. திட்டத்தின்கீழ் முதலில் வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்துவது பற்றி ஆராயும். அதற்குப் பிறகு மற்றவைபற்றி ஆராயும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அண்ணா பண்ணை ஆராய்ச்சி நிலையத்தில் என்னென்ன விதைகள் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன? இதுவரையிலும் அந்த ஆராய்ச்சி செய்யப்பட்ட விதைகள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** குடுமியாமலை அண்ணா பண்ணையில் இதுவரை பயிர்கள்தான் பயிர் செய்யப்பட்டு வந்தன. 6—5—1971 முதல் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அது என்னென்ன செய்யும் என்பதைத் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Yesterday there was a film show in the Children's Theatre regarding this research station. The Hon. Minister for Agriculture was also present there. It was an interesting and an ideal film. May I know from the Hon. Minister whether an opportunity would be given for Members of the Legislature to visit this farm ?



1971 ஜூலை 2]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதை மாண்புமிகு அங்கத்தினர்கள் பார்க்கவேண்டும் என்று விரும்புவதை நான் வரவேற்கிறேன். அதற்காகத் தனியாக அவர்கள் சொன்னால் நான் ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. பெ. மலைச்சாமி :** இத்தகைய ஆராய்ச்சி நிலையங்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்று எல்லா மாவட்டங்களிலும் இருக்கும் விவசாயப் பெருமக்களும் விரும்புகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இதை எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆராய்ச்சிப் பண்ணைகள் மட்டுமல்லாது எல்லா மாவட்டங்களிலும் வேளாண்மைக் கல்லூரிகள் துவக்க வேண்டுமென்று அனைவரும் கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது திருச்சியில் அறிஞர் அண்ணா விவசாயப் பண்ணை துவங்கப்பட்டிருக்கிறது. அங்கேயே கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையமும் துவங்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்ட நல நிதியிலிருந்து 14 லட்ச ரூபாய் அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 லட்ச ரூபாய் அங்கே கொடுப்பார்களானால் அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி துவக்கலாம் என்று அப்பொழுது அமைச்சரவை முடிவு செய்து அது முன்னோடித் திட்டமாக 14 லட்சம் ரூபாய் கட்டி அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட எங்காவது சாத்தியக்கூறுகள் இருந்தால் அவைபற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்படுகிற ஆராய்ச்சிகளினால் ஏற்படும் நன்மைகளை விவசாயிகள் அனுபவிக்கத்தக்க முறையில் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு 'ரிகரிங் எக்ஸ்பெண்டிசர்' என்ன ஆகிறது என்று அரசாங்கத்திடம் கணக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் முதலில் சொன்னேன். தொடரா இனச் செலவு 2.65 இலட்சம் ரூபாய் ஆகும். தொடரும் செலவு 53 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**திரு. கே. ஏ. வகாப் :** நேற்றைய தினம் காண்பிக்கப்பட்ட திரைப்படத்தில் குடுமியாமலைப் பண்ணையைப்பற்றிக் காண்பிக்கப்பட்டது. அதில் காய்கறிகள், மற்றும் பழங்களெல்லாம் கூட பயிரிடப்பட்டு சேகரிப்பது போல் செய்திகளெல்லாம் பார்த்தோம். ஆனால், அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, இனிமேல்தான் அவற்றை உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அவை காய்கறிகள் அங்கே பயிர் செய்யப்படுகின்றனவா? ஐ.ஆர். 8 போன்று இன்னும் புதுமையான நெல் ரகங்கள் அங்கே ஆராய்ச்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அங்கே திரையிடப் பட்ட படத்தில், காடாக இருந்ததையெல்லாம் திருத்தி கழனியாக ஆக்கப்பட்டிருக்கிறது என்று காண்பிக்கப்பட்டது. இந்தப் பண்ணை வேலை துவங்கிய காலத்திலிருந்து இப்பொழுது வரை லாபகரமாக தமிழ் நாட்டில் நடைபெறுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பண்ணையில் இப்பொழுது விதை மற்றும் ஆராய்ச்சிகள் நடைபெறவில்லை. இப்பொழுது விவசாயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காய் கறி மாத்திரம் அல்ல, எம்.சி.யு. 5 பருத்தி விவசாயம் செய்யப் பட்டிருக்கிறது. சோளம் அமோக விளைச்சல் திட்டத்திலும் விவ சாயம் செய்யப்பட்டிருக்கிறது. ஐ.ஆர். 8 போன்றவைகளெல்லாம் அங்கே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், முக்கியமாக புஞ்சைப் பயிர்களுக்கு அதிலே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். தேவராசன் :** இத்தகைய ஆராய்ச்சி நிலையம் சமீபத்தில் உதகையில் நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி கரமாக நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் மற்ற மாவட்டங் களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நீலகிரியில் துவக்கப் பட்டிருக்கிற மேம்பாட்டுத் திட்டத்திற்கும் குடுமியாமலையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திட்டத்திற்கும் வேறுபாடுகள் இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** குடுமியாமலையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் விவசாயப் பண்ணையைப்போல், நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக இருக்கும் நிலங்களையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு எங்கெங்கே அதிகமாக இருக்கின் றனவோ அங்கே கூட்டுப் பண்ணை முயற்சியில் அரசாங்கமே விவசாயப் பண்ணைகளை ஆரம்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்படிப்பட்ட பண்ணை கள் துவங்க ஏறத்தாழ 8,000 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. சேர்ந்தாற்போல் ஒரே இடத்தில் 3,000 ஏக்கர் நிலப்பரப்பு இருந்து, அதை எடுக்கக்கூடிய சாத்தியக்கூறு இருந்தால் அவை பற்றி கவனிக்கப்படும்.

**திரு. ஆ. கருப்பையா :** தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பண்ணையை குற்றாலத்தில் வைக்க வசதி இருப்பதால் திருநெல் வேலியில் அமைக்கும் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போதைக்கு இல்லை.

**திரு. கே டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, குடுமியா மலைப் பண்ணையில் எம்.சி.யு. 5 என்ற ரக பருத்தி விதைக்கப்படு கிறது என்று சொன்னார்கள். இன்றைக்குப் பல இடங்களிலும் எம்.சி.யு. லாங்ஸ்டேபிள் காட்டன் உற்பத்தி செய்கிறார்களே, அந்த





விவசாயிகளுக்கெல்லாம் வித்துக்கள் சப்ளை செய்யப்படுகிறதா? இப்போது சப்ளை செய்வதைவிட இன்னும் அதிகமான அளவில் பல பகுதிகளிலும் சப்ளை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போது பருத்தி சாகுபடிக்கேற்றவகையில், சாகுபடித் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு, திருநெல்வேலியில் 1 லட்சத்து 35 ஆயிரம் சொச்சம் ஏக்கர்களிலும், கோவை மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கர்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் மணப்பாறையில் 50 ஆயிரம் ஏக்கர்களிலும் முன்னோடித் திட்டமாக, விரைவுத் திட்டமாகச் செயல்படுத்த அரசாங்கம் முன் வந்திருக்கிறது. இப்போது வேலைகள் தொடங்கியிருக்கின்றன.

### *Building for Namakkal Primary Health Centre.*

* 86 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether the construction of building for the Primary Health Centre at Namakkal in Salem District is to be undertaken shortly; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, மொத்தம் நமது மாநிலத்திலுள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்களில் எத்தனை பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது? இன்னும் எத்தனை சென்டர்களுக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே இந்தக் கேள்வியைத் தனிக் கேள்வியாகக் கேட்டிருக்க வேண்டும். நமது மாநிலத்தில் இருக்கிற ஏறத்தாழ 374 ஆரம்ப சுகாதார நிலையங் களிலே, மூன்றிலொரு பங்கு இடங்களுக்குத்தான் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. மற்றவை, பஞ்சாயத்து யூனியனால் வழங் கப்பட்டிருக்கிற இடங்களிலும், சில சென்டர்கள் வாடகைக் கட்டடங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, கட்டடம் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உடனடியாக கட்டடம் கட்டு வதற்காக "பேஸ்டு புரோக்ராம்" திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகவே தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு 10, 20 என்ற அளவில் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. கடந்த ஆண்டிலே 20, 30 இடங்களிலே கட்டடம் கட்டுவதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 2

ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக பஞ்சாயத்து யூனியன் ஒரு ஊரைத் தேர்ந்தெடுத்து அதற்காக 5 ஏக்கர் நிலமும் தந்து 10 ஆயிரம் ரூபாய் நிதியும் முன்தொகையாக கட்ட முன்வர வேண்டும். நாமக்கல் ஒன்றியத்தில் முன்தொகை இன்னும் கட்டப்படவில்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை உச்சிப் பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நாம் இன்னும் நிலத்திலே இருக்கிறோம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலை உச்சிக்குப் போகிறார். அதைப்பற்றிப் பின்னர்தான் கவனிக்கவேண்டும்.

*Homeopathic Colleges.*

* 87 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal to start Homeopathic Colleges in this State; and

(*b*) if so, the details of the same ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஓமியோபதி கல்லூரியை ஆரம்பிப்பதற்கான நிலைமை, ஓமியோபதி முறையை இந்த அரசு ஏற்றுக்கொண்டது என்பதற்கான சட்டம் இன்னும் கொண்டு வராததால், அதை நடைமுறைப்படுத்துவதற்கு வழி இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, ஓமியோபதி கல்லூரியை அமைத்து, ஓமியோபதி முறையை உற்சாகப்படுத்துவது, இப்போது ஏற்கெனவே ஓமியோபதி முறையில் டிப்ளமா வாங்கிக்கொண்டிருப்பவர்களை ரெகுலரைஸ் பண்ணுவது போன்ற காரியங்களுக்காக ஏதாவது மசோதாவைக் கொண்டு வருவதற்கு இந்த அரசுக்கு நோக்கம் உண்டா? அப்படியானால், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மசோதா கொண்டுவரப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஓமியோபதி, சித்தவைத்தியம், ஆயுர்வேதம், யுனானி வைத்திய முறைகளைச் சட்டபூர்வமாக்குவதற்காக சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு, இடையில் இந்திய அரசு வேறு ஆலோசனைகளைச் சொன்ன காரணத்தினால் அது கைவிடப்பட்டது. ஓராண்டுக்கு முன்னாலே ஓமியோபதி முறையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்பதற்கான மசோதா கொண்டுவரப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தால், அந்த மசோதா



1971 ஜூலை 2]

தானாகவே செயலற்றுவிட்டது. இப்போது மறுபடியும் விரைவில் இந்த மசோதாவைக் கொண்டு வருவதாக அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, போஸ்டல் ட்யூஷன் மூலம் ஓமியோபதியைப் படித்துவிட்டு, தங்களை டாக்டர்கள் என்று சிலர் அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மக்களுக்கு வைத்தியம் செய்யும்போது சரியான முறையில் வைத்தியம் செய்கிறார்களா என்பது சந்தேகத்திற்கிடமாக இருக்கிறது. சில சமயங்களில் தவறுகள் நேருகின்றன. இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடவாதிருக்க சட்டத்தைத் துரிதமாகக் கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தபால் மூலமாகப் படிப்பது குற்றம் அல்ல. தபால் மூலமாகப் படிக்கும்போது ஒழுங்காகப் படித்தால் பயன் உண்டு, எதிர்காலத்தில் இது மலிவான மருத்துவ முறை என்ற காரணத்தால் அதற்குத் தகுந்த முக்கியத்துவம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யூனானி வைத்தியக் கல்லூரி பாளையங்கோட்டையில் அமைக்கலாம் என்று இருந்தது. அது எந்த நிலைமையில் இருக்கிறது? சித்த, ஆயுர்வேத, யுனானி வைத்தியத்தில் மருந்துகளைத் தயார் செய்வதில் வசிய மருந்து என்று ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்திற்கு இந்திய மருத்துவக் கல்லூரி ஒன்று, பாளையங்கோட்டையில் நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற, ஆண்டு ஒன்றுக்கு 30 மாணவர்கள் தேறி வருகிற நிலைமை இருக்கிறது. இந்த ஆண்டுகூட 30 மாணவர்கள் சேர்க்கப்படவிருக்கிறார்கள். வசிய மருந்து பற்றி அக்கறை கொள்ள வேண்டிய வயது எனக்கு இல்லை. நண்பர் ஆறுமுகம் அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமான மசோதா முன்பே கொண்டுவரப்பட்டு, அதற்காக 'ஜாயின்ட் செலக்ட் கமிட்டி" போடப்பட்டு, அந்தக் கமிட்டியில் அதற்கான விதிமுறைகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. சட்டசபை கலைக்கப்பட்டதனால் மசோதா செல்திறனற்று விட்டது. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க தக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் முடிந்தால், இந்த மசோதா பேரவை முன் வைக்கப்படும்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவர் அவர்களே, தமிழ் மருத்துவ முறையில் நல்ல பற்றும், நம்பிக்கையும் வைத்திருக்கிற அமைச்சரவை, தமிழ் மருத்துவத் துறையிலே ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு, ஆங்கில மருத்துவத் துறையிலே உள்ளவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற பட்டத்தையும், நல்ல வாய்ப்பையும் வசதியையும் அளிக்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்போது சித்த வைத்தியத்தைப் பயிலுகின்ற மாணவர்கள் பி.ஐ.எம். என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள். இந்தப் பட்டம் எம்.பி.பி.எஸ். க்கு சமத்துவமாக இருக்கிறது. வேலைவாய்ப்பிலே சில இடையூறுகள் இருக்கின்றன. எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் சித்த வைத்தியத்திற்கு ஒரு பிரிவு அமைக்கவேண்டும் என்னும் முயற்சி இருப்பதாக இருக்கிறது. மேலும், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் எல்லாம் மக்களின் நன்மைக்காக சித்த வைத்திய மருத்துவ மனையை அமைத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் எல்லாம் விரைவில் செயல்படுத்தப்பட முடியும் என்று நம்புகிறேன்.

**திரு. சே. சதாசிவம் :** தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையில் வருஷந்தோறும் வெளிவருகிற 30 ஆயுர்வேத டாக்டர்களுக்கு கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பளித்து, வைத்திய வசதி செய்ய வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்துகொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முதலிலே இந்த சித்த மருத்துவத்தின் தகுதியை மக்கள் உணரும்படிச் செய்ய வேண்டும். கிராமங்களில் இதை அமல் செய்தால், இது ஏதோ 'ஒதுக்கப்பட்ட வைத்தியம்' என்ற நினைப்பு ஏற்பட்டுவிடும். ஆகவேதான், சென்னை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் இதை அமல்படுத்துகிறோம். இன்னும் முக்கியமான நகரங்களில் ஏற்படுத்துவதற்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, தஞ்சையில் இருக்கிற சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில், இந்த வைத்திய முறைகளைப் பற்றிய விளக்கக் குறிப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, தமிழக அரசு அவற்றையெல்லாம் எடுத்து, தொகுத்து வெளியிட முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் இப்போது அங்கேயுள்ள மருத்துவ ஏடுகளைப் படித்து ஆராயும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மருத்துவ ஏடுகளுக்குக் குறிப்புரை எழுதுவதும் ஓரளவு நடைபெற்று வருகின்றன. இன்னும் அதிகமாகத் தேவைப்படுமானால் அதை மேலும் விரிவுபடுத்தலாம்.



**திரு. க. உரோ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, எம்.பி.எஸ். டாக்டர்கள் வேலையில்லாத காலத்தில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் அளிக்கப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டையில் சித்த வைத்தியம் படித்து, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் இந்தத் தொகை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அரசாங்கம், அவர்கள் எல்லோருக்குமே தகுந்த வேலைவாய்ப்பு தர வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறது. எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு வேலையில்லாத காலத்தில் கொடுக்கும் உதவியே 'இவர்களுக்கும்' போதும் என்று அங்கத்தினர் அவர்கள் தெரிவித்தால், அந்தக்கருத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியம் படித்தவர்கள் பயன்படுத்திக்கொள்ளப்படக்கூடிய முறையில் இப்பொழுதுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பக்கத்தில்—சித்த வைத்தியத்தைப் பற்றி இன்னும் மக்கள் அறிந்துகொள்ளாத நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே—தமிழ் நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பக்கத்தில் சித்த வைத்தியத் துறையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள், முழுவதும் சித்த வைத்திய முறையைக் கொண்டு நடத்தப்படக்கூடியவையல்ல. ஏனென்றால் வேறு பல பணிகளையும்—பிரிவென்டிவ் என்ற முறையிலே நோய்கள் வராமல் முன்னாலேயே தடுப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபடவேண்டிய பொறுப்பு அவற்றிற்கு இருக்கின்றன. அதனால்தான் அங்கே எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் பணியாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. பெரிய மருத்துவ மனைகளில் அலோபதி முறையைப் பயன்படுத்தி மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறக்கூடிய நடைமுறை இருந்து வருகிறது. அலோபதி சித்தம், ஹோமியோபதி இப்படிப்பட்ட வெவ்வேறு வகையான மருத்துவ முறைகள்யாவும் ஒன்றுக்கொன்று துணையாக இயங்கச் செய்வதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ஹோமியோபதி முறையில் டிப்ளமா பெற்றவர்கள் தமிழ்நாட்டிலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்பொழுது சொல்லக்கூடிய பதில் "ஏராளமாக இருக்கிறார்கள்" என்பது தான்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, ஹோமியோபதி கல்லூரிகளை யார் வேண்டுமானாலும் ஆரம்பித்துக் கொள்கிறார்கள். 20, 25 ரூபாய் கொடுத்து யார் வேண்டுமானாலும் டாக்டர் என்ற

போர்டை மாட்டிக்கொள்கிறார்கள். பெனிசிலின், ஸ்ட்ரப்டோமைசின் போன்ற ஊசி மருந்துகளை தைரியமாக மக்களுக்குப் போடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அவ்வாறு டாக்டர்களாவது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது அல்ல. அவர்கள் தைரியமாகப் போடுவதில் ஆச்சரியம் இல்லை. மக்கள் தைரியமாக அவர்களிடம் ஊசி போட்டுக்கொள்வதுதான் ஆச்சரியம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சித்த, ஆயுர்வேத, யுனானி போன்றவற்றில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் மத்திய அரசின் ஒத்துழைப்புடன் வட மாநிலங்களிலே ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அதேமாதிரி மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்று ரிசர்ச் செய்வதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே திருக்குற்றாலம் பகுதியில் மூலிகைகள் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. பாளையங்கோட்டையில் ஒன்றிரண்டு பகுதிகளில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இவற்றை விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

சென்னை மாநகரிலுள்ள சிலைகள்.

* 106 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. என். கே. பழனிசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் உள்ள அந்நியர் சிலைகளை அகற்றிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். அந்தச் சிலைகள் உள்ள இடங்களில் வேறு சிலைகளை வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யும் வரையில், அவை இருந்த இடத்திலேயே இருக்கலாம் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், அன்னிய ஏகாதிபத்தியம் நம்முடைய நாட்டை ஆண்டபொழுது ஏற்பட்ட சின்னங்களாக இந்தச் சிலைகள் இருப்பதால் அவற்றையெல்லாம் சீக்கிரத்திலே காட்சிப் பொருளாகக் கூடத்தில் வைக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இது பற்றி ஒரு விளக்கமான பதிலை அளிக்க விரும்புகிறேன். 1952-ஆம் ஆண்டிலே இந்திய அரசின் கல்வி அமைச்சகம் மாநிலங்களிலுள்ள அன்னியர் நினைவுச் சின்னங்கள். சிலைகள் இவைகளை என்ன செய்வது என்பதுபற்றி முடிவு எடுப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள அன்னியர் சிலைகள், சின்னங்கள் இவைகளைப்பற்றித் தகவல் கோரியது. இது குறித்து 6—3—1951-ல் மாநில அமைச்சரவை





ஆலோசித்தது. அக்கூட்டத்தில் மாநில ஆளுநரும் கலந்து கொண்டார். அன்னியர் சிலைகள், சின்னங்கள் இவற்றைப் பாதுகாப்பதில் அனைத்திந்தியாவுக்கும் ஒரே கொள்கையில் முடிவு எடுக்கவேண்டும் என்ற கருத்தையும் தெரிவித்தது. மாநிலத்தில் உள்ள அன்னியர் சிலைகள், சின்னங்கள் பற்றிய பட்டியலும் இந்திய அரசுக்குத் தரப்பட்டது. இதன்மீது பிரிட்டிஷ் காலச் சிலைகள், சின்னங்கள் இவைகளைப் பொருட்காட்சியில் காட்சிப் பொருட்களாக வைக்கலாம் என்று இந்திய அரசு முடிவு தெரிவித்தது. அதன்படி மாநிலத்தில் உள்ள அன்னியர் சிலைகள், சின்னங்கள் இவைகளை கோட்டையிலுள்ள பொருட்காட்சி மண்டபத்தில் வைப்பது என்று மாநில அரசும் முடிவு எடுத்தது. 1957 மே திங்களில் நாடாளுமன்றத்தில் அன்னியர் சிலைகள், சின்னங்கள், ஓவியங்கள் இவைகளை அகற்ற வேண்டுமென்ற ஒற்றிவைப்புப் பிரேரணை வந்தபோது பொதுவாகப் படிப்படியாக இச்சிலைகள் அகற்றப்பட வேண்டும் என்றும், தேசீய உணர்ச்சியைப் புண்படுத்தக்கூடிய சிலைகள் சின்னங்கள் இருந்தால் அவை உடனே அகற்றப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்போதைய பிரதம அமைச்சர் நேரு தனது கருத்தைத் தெரிவித்தார்.

நமது மாநிலத்தைப் பொறுத்தவரை நேப்பியர் பார்க் அருகே இருந்த காரன்வாலிஸ் சிலையும், மௌன்ட் சாலை வெல்லிங்டன் பாலத்தின் அருகே இருந்த வெல்லிங்டன் சிலையும் அகற்றப்பட்டன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய சிலை வைக்க மூன்றாண்டுகளுக்கு முன்பு முயற்சி எடுத்துச் சிலை செய்யப்பட்டு, முதல்வர் அவர்களுடைய ஒப்புதல் கிடைக்காத காரணத்தினாலே வைக்கப்பட முடியவில்லை. தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்தில் அரும்பெரும் சாதனைகளைப் புரிந்து வருகின்ற கலைஞர் அவர்களுக்குப் பொது மக்கள் விருப்பத்திற்கிணங்கச் சிலை வைக்க அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்பொழுது எந்தக் கருத்தைச் சொன்னேனோ அதே கருத்திலேதான் இப்பொழுதும் இருக்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே. உலகத் தமிழ் மாநாட்டிலே பல தமிழர்களுக்குச் சிலைகள் வைக்கப்பட்டன. அதற்கான பீடங்கள் கட்டுவதற்கான செலவை யார் கொடுத்தது என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டிச் சென்னையில் 11 சிலைகள் நிறுவப்பட்டன. அவை குறித்த விவரங்கள் பின்வருமாறு :

1. **அண்ணா**—இச்சிலை திரு. எம். ஜி. ஆர். அவர்களின் சொந்தச் செலவில் நிறுவப்பட்டது. பீடம் கட்டிய செலவையும் அவர் கொடுத்து விட்டார். வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டுவிட்டது.

2. வீரமாமுனிவர்—இச்சிலையை, சென்னை—மயிலை ஆர்ச்பிஷப் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பீடம் கட்டியதற்கான செலவை அவர் கொடுத்து விட்டார். வெண்கலச் சிலையும் நிறுவப்பட்டு விட்டது.

3. வ.உ.சி.

4. ஔவையார்.

5. பாரதிதாசன்.

6. பாரதியார்—சென்னை மாநகராட்சி தன் செலவிலேயே நிறுவியுள்ளது. அவற்றிக்குப் பீடம் கட்டுவதற்கான செலவுகளையும் மாநகராட்சியே கொடுத்துவிட்டது. வெண்கலச் சிலைகளும் நிறுவப்பட்டு விட்டன.

7. கண்ணகி—இச்சிலையின் செலவு முழுவதையும் தமிழக மாணவர், ஆசிரியர் ஆகியோரிடமிருந்து மாநாட்டுக் கொடி விற்பனை மூலம் வசூலாகும் தொகையிலிருந்து அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

8. கம்பர்—இச்சிலை கோவை மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் செயல்பட்ட குழுவின் வசூல் தொகையிலிருந்து நிறுவப்பட்டது. சிலையின் பீடம் கட்டுவதற்கு ரூ. 2,500 கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு கொடுக்கப்படவேண்டிய ரூ. 6,400-ஐக் கொடுக்க இயலாதெனக் குழு தெரிவித்ததால் மாநாட்டு நிதியிலிருந்தே இத் தொகை அளிக்கப்பட்டுவிட்டது. வெண்கலச் சிலை நிறுவப்பட்டு விட்டது.

9. போப்.

10. கால்டுவெல். இவ்விரண்டு சிலைகளைச் செய்து நிறுவும் பொறுப்பினை சென்னை பிஷப் நியூபிகின் ஏற்றுக்கொண்டார். இச்சிலைகளுக்குப் பீடம் கட்ட ரூ. 14,000 செலவாகியுள்ளது. இச்செலவை சிலைகளை வழங்கியவர் ஏற்க இயலாதெனத் தெரிவித்ததால் பீடங்கள் கட்டும் செலவு மாநாட்டு நிதியிலிருந்து அளிக்கப்பட்டுவிட்டது.

11. திருவள்ளுவர்—இச்சிலை நிறுவுவதை திரு. சிவாஜி கணேசன் ஏற்றுக்கொண்டார். சிலை கல்லால் செய்யப்பட்டது. சிலைக்குப் பீடம் கட்டியமைக்க ரூ. 6,300 செலவழிக்கப்பட்டது. இதை திரு. சிவாஜி கணேசன் ஏற்க இயலாததால் மாநாட்டு நிதியிலிருந்து அத்தொகை செலுத்தப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, அன்னியர் சிலைகளை அகற்றவேண்டுமென்று சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி தீர்மானம் போட்டு அரசிற்கு அனுப்பியிருக்கிறது. அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : அந்தக் கட்சியின் தீர்மானத்திற்கு முன்னமேயே நாடாளுமன்றத்திலே பண்டித நேரு அவர்கள் எடுத்துக்கூறிய கருத்தின்படி இந்த அரசு செயல்பட்டு வருகிறது.





**திரு. ஏ. சுப்பிரமணியம்** : அன்னியர் சிலைகள் அகற்றப்பட்டால் அங்கே வேறு சிலைகள் வைக்கப்படுவதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்குச் சிலைகள் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முன்பிருந்த அரசு படிப்படியாக ஒவ்வொரு அன்னியர் சிலையையும் அகற்றலாம் என்று முடிவெடுத்தது. அந்த வகையிலேதான் அன்னியர் சிலைகளை அகற்றலாம் என்று கருதப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, அன்னியர் சிலைகள் அகற்றப்படுவதுபோல், தமிழ்நாட்டில் உள்ள வட நாட்டுத் தலைவர்களுடைய சிலைகளை அகற்றிவிட செயற்குறிப்பு இருக்கிறதா? ஏனென்றால் தமிழர்களுடைய சிலைகள் வடநாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : வட நாட்டைச் சேர்ந்தவர்களுடைய சிலைகளை நாம் அன்னியர் சிலைகளாகக் கருதுவது இல்லை. பொதுவாக அன்னியர்கள் சிலை என்று சொன்னால்—வீரமா முனிவர், போப், கால்ட்வெல் போன்றவர்களின் சிலைகளும் இருக்கின்றன—அந்தப் பட்டியலிலே இவர்களுடைய சிலைகளைச் சேர்த்து விட முடியாது.

**திரு. எம். தேவராசன்** : தலைவரவர்களே, சிறந்த ஜனநாயகவாதியான முதலமைச்சரவர்கள் மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்து தன்னுடைய நிலையை மறுபரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : இது என்னுடைய சிலையைப் பொறுத்த விவகாரம். ஆகவே, நானேதான் தீர்மானித்துக் கொண்டேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : சார், சிலைகள் வைத்து விட்டால் மட்டும் போதாது, அவற்றைப் பாதுகாப்பதிலேயும் அக்கறை காட்ட வேண்டும். ஆந்திரகேசரி பிரகாசம் அவர்களின் சிலையை வைத்திருக்கிறார்கள். அதன் தலையில் காக்கை எச்சமிட்டு, எச்சமிட்டு முகமே மறைந்து விடுகிறது. ஆகவே அவைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : சிலைகளைப் பாதுகாப்பது, பராமரிப்பது என்பது இரண்டு வகை. பாதுகாப்பது எதிரிகளிடமிருந்தும், சமூக விரோதிகளிடமிருந்தும் சிலைகளைப் பாதுகாப்பது என்று பொருள்படும். ஆனால் காக்கை எச்சமிடுவதிலிருந்து பாதுகாப்பதற்கு அங்கே துப்பாக்கி வீரர்களை வைத்து அவைகளை விரட்டியடித்துக்கொண்டு இருக்க முடியாது. ஆகவே, பொதுவாகப் பொதுப்பணித்துறை சிலைகளைப் பராமரிக்கின்ற காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது. எங்கேயாவது குறை கண்ட

[1971 ஜூலை 2

மாத்திரத்திலே திடுக்கிடும் உறுப்பினர்கள் யாராகயிருந்தாலும் உடனடியாக அந்தத் துறைக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்து, பார்த்தேன், மனம் துணுக்குற்றேன். உடனடியாக அந்தச் சிலையைப் பராமரித்து சீர்திருத்துங்கள் என்று சொல்வதுதான் முறை.

* 107 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether Police Guards have been sanctioned for guarding all the statues in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. எம் சுரேந்திரன்: சார், நம் மாநிலத்தில் பலவிடங்களில் பல சிலைகள் இருக்கின்றன. ஒரு நினைவுச் சின்னமாகவும், பெரிய அறிஞர்கள், மற்றவர்கள் என்ற முறையிலே இந்தச் சிலைகளை நாம் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இம்மாதிரி வைக்கும்பொழுது சில இடங்களில் அந்த இடங்கள் வைப்பதற்கு லாயக்கில்லை என்ற ஆட்சேபனைகள் கிளம்புகின்றன. ஆகவே சிலை வைக்கத் தகுதியான இடங்கள் எவை எவை என்று மாநில அரசு சர்வே செய்து நிச்சயப்படுத்துவது நல்லதாக அமையும் அல்லவா? அத்துடன், இந்தச் சிலைகளை வைத்தவுடன் பின்பு வாரம் ஒரு முறையாவது பராமரிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது நல்லது அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முன்கூட்டியே எங்கெங்கு சிலைகள் வைக்கலாம் என்று அப்படி வரையறை செய்வது என்பது இயலாத காரியம். முக்கியமானவர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும், விடுதலை வீரர்களுக்கும் சிலைகளை வைக்க வேண்டுமென்று எண்ணும்பொழுது அது எந்த இடத்திலே அமைய வேண்டுமென்று நினைப்பவர்கள் அந்த இடத்தைக் குறித்துக் கேட்பார்களேயானால், அதை அந்தத் துறையினர் ஆலோசித்து அந்த இடம் இல்லாவிட்டாலும், வேறு எந்த இடத்திலே வைக்கலாம் என்ற அளவிற்கு அதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுப்பார்கள். வாரம் ஒருமுறை பராமரிப்பது என்பது அல்ல. ஏனென்றால் வாரம் ஒருமுறை பராமரிக்க வேண்டுமென்றால், இடையிலேகூட அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏதாவது தவறுகள் அந்தச் சிலைகளின் மீது நடைபெறக்கூடும். அடிக்கடி பராமரித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் முறை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, போலீசார் காவல் காக்கும் அளவிற்கு இந்த நாட்டில் குற்றம் புரிந்தவர்கள், புரிகின்றவர்களுடைய சிலைகள் ஏதாவது சென்னையிலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 2]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குற்றம் புரிந்தவர்களுடைய சிலை மீதுதான யாரும் பாயகூடியவர்கள் என்று அல்ல. 27—4—1970 அன்று சென்னை கோட்டைக்கு அருகிலுள்ள 7-ஆம் எட்வர்ட் சிலை மீது தார் ஊற்றப்பட்டிருந்தது. அதையொட்டி சில முக்கியமான தலைவர்களின் சிலைகளுக்கு அந்த நேரத்தில் பாதுகாப்புப் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, சென்னை நகரத்திலுள்ள சிலைகளுக்குக் காவல்துறையின் காவல் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு, மவுண்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருக்கும் சிலைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் பங்கம் விளைவிக்க காங்கிரஸ்காரர்கள் முயற்சித்தது பற்றி இந்த மன்றத்திலே பல முறை எழுப்பப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் உயிரோடு இருக்கும்பொழுது ஊர்வலம் நடத்தி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைப் போடுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எனவே அதற்குப் போலீசாரின் காவல் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மூலக்கேள்வி சென்னை மாநகரிலுள்ள சிலைகளனைத்தையும் காவல் புரிய காவலர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதாகும். அதனால் தான் இல்லை என்று, அனைத்திற்கும் இல்லை என்று சொன்னேன். மதுரையிலே அண்ணா சிலை வைத்தபொழுது ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளையொட்டி அதன் விளைவாக நடக்கக்கூடாத நிகழ்ச்சி எதுவும் நடந்து விடக்கூடாது என்பதற்காகச் சென்னையில் திரு. காமராஜர் அவர்களின் சிலைக்கும், அண்ணா அவர்களின் சிலைக்கும் சிறப்புக் காவல் போடப்பட்டது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படிச் சிலைகள் வைத்து அவற்றிற்கு நாம் பாதுகாப்பும் ஏற்படுத்த வேண்டியிருப்பதாலும், சிலைகளெல்லாம் ஒரு காலத்தில் போற்றப்பட்டு, மறு காலத்தில் அதனால் பல சிக்கல் ஏற்படுவதாலும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிந்தித்து, மற்றவர்களுடைய அபிப்பிராயம் எப்படியிருப்பினும், அவர்கள் தனிப்பட்ட அபிப்பிராயத்தில் சிந்தித்து சிலைகள் வைக்கும் கொள்கையைக் கைவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முஸ்லீம் மதத்தில் சிலைகள் வைப்பது மரபு அல்ல. ஆகவே அதையொட்டி மற்ற மதக்காரர்களும் நடந்து கொள்வது இயலாத காரியம்.

திரு. அ. சின்னசாமி: தலைவரவர்களே, 1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாண்ட இராஜேந்திரனுக்குச் சிலை வைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு எதிரே மாணவர்கள் நன்கொடை திரட்டி அந்தச் சிலையை வைத்திருக்கிறார்கள்.

[1971 ஜூலை 2

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, கம்பர் சிலையை நாங்கள் வைக்கிறோம் என்று யாராவது முன்னுக்கு வந்து, பின் வாங்கினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வாங்கினார்கள்.

*Tube wells for rural areas.*

* 108 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have decided to implement a programme with UNICEF assistance for provision of drinking water in scarcity and cholera affected villages in the State;

(*b*) if so, the details of the programme;

(*c*) the number of tube-wells that are proposed to be sunk and the number to be located in cholera affected areas and in scarcity areas during the period 1971 to 1976 and the rate per year; and

(*d*) the depth of each well ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) & (உ) 22—9—1970-ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அரசாணை எண். 1827-இல் குடிநீர்த்தட்டுப்பாடுள்ள கிராமங்களிலும், காலராவால் பாதிக்கப்பட்ட கிராமங்களிலும் 8,850 குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான ஒரு திட்டத்துக்கு இவ்வரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது இத்திட்டத்திலுள் கடினமான பாறைகள் அமைந்த பகுதிகள் அனைத்தும் அடங்கியுள்ளன; இத்திட்டம், 'யுனிசெஃப்' நிறுவனம் வழங்கும் உதவியை கொண்டு ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும. 'யுனிசெஃப் நிறுவனத்தின் உதவி துளையிடுக் கருவிகள், மற்றும் ஏனைய இன்றியமையாச் சாதனங்களின் வடிவில் கிடைக்கும். 8.850 குழாய்க் கிணறுகளை இறக்கி அவற்றைப் பேணுவதற்கு ஆகும் செலவு ரூ. 2.71 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ரூ. 2.71 கோடி தொகையில், பணியாளர் செலவும் வண்டிகளைச் செலுத்தி வருவதற்கான கட்டணமும் அடங்காது. (நெடுஞ்சாலைகள், கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளரிடம் மேற்படி திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1971-72-லிருந்து ஆண்டொன்றுக்கு 1.770 குழாய்க் கிணறுகள் வீதம் இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

**குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 8850**

| | | |
|---|---|---|
| காலராவால பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில இறக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிணறுகள் .. .. .. .. .. | 528 | 8836 அல்லது |
| குடிநீர்த் தட்டுப்பாடுள்ள பகுதிகளில் இறக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிணறுகள் .. .. .. .. .. | 8310 | 8850 (சுமாராக) |

(எ) தரைமட்டத்துக்குக் கீழ் 150 அடி.



1971 ஜூலை 2]

Dr. H. V. HANDE : May I know whether any assessment has been made by Government with regard to the total number of villages affected by scarcity in the State and may I also know whether a survey has been made regarding places chronically affected by cholera? Can the Hon. Minister give us exact figures?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, காலராவால் பாதிக்கப்பட்ட பகுதிகள் எவை எவையென்ற விவரக் குறிப்புகள் இப்பொழுது இல்லை. ஆனால் பாதிக்கப்படுவது தொடர்ந்து வருகிறதா என்று கணக்கெடுத்து, எந்தெந்த இடங்களிலே இப்படிப்பட்ட நல்ல தூய்மையான நீர் கிடைக்காத வகையிலே காலரா ஏற்படுகிறது என்று கண்டறிந்து, அந்த வகையில் காலராவால் பாதிக்கப்படும் பகுதிகள் என்று 528 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 528 குழாய்க் கிணறுகள் இறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** தலைவரவர்களே, இந்த ஆண்டு, அதாவது 1971-72-லிருந்து ஆண்டொன்றுக்கு 1,770 குழாய்க் கிணறுகள் வீதம் முடிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அது எந்தெந்தப் பகுதிகள், எந்தெந்த இடங்கள் என்ற விவரத்தைக் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பைத் தலைமைப் பொறியாளர் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். தனிப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. 11—2—71-இல் அதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, இதற்கு ஒரு டிவிஷனும், 4 துணைக் கோட்டங்களும் அமையும். தலைமைக் கோட்டம் ஈரோட்டிலும், ஈரோடு. திருச்சி, சேலம், மதுரை ஆகிய இந்த இடங்களில் துணைக்கோட்டங்கள் அமையும். அவர்கள் ஆராய்ந்த பிறகு முடிவெடுக்கப்படலாம்.

**திரு. சு. துரைசாமி :** இப்படி தோண்டப்படுகின்ற குழாய்க் கிணறுகள் கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதியான பல்லடம், திருப்பூர், அவனாசி பகுதிகளில் அமைக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கூறப்பட்ட இடங்கள் எல்லாம் ஆராய்ச்சிக்குட்பட்ட இடங்களாக வருமானால் அங்கு துளைக் கிணறுகள் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தைப் பற்றிய விவரங்கள் வந்த பிறகு தான் விவரக் குறிப்பைக் கொடுக்க முடியும்.

**திரு. மு. இரத்தினசபாபதி :** தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளிலும், தண்ணீர் வசதி இல்லாத பகுதிகளிலும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க யூனெஸ்கோ மூலம் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** யூனிசெஃப் மூலம் செய்யப்படுவது குழாய்க் கிணறுகள் போடும் திட்டம். குடிநீர் வழங்கும் திட்டம் தனியாக நடைபெற்று வருகிறது. நகரங்

[1971 ஜூலை 2

களுக்கும், பேரூர்களுக்கும், சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் தனியாக நடைபெற்று வருகிறது. யூனெஸ்கோ தரும் உதவியின் அடிப்படையில் இரண்டு கோடி ஒரு லட்சம் ரூபாய் அளவில் எட்டாயிரத்துக்கு மேற்பட்ட துளைக் கிணறுகளைத் தோண்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முழு விவரமும் ஆராய்ச்சி செய்து முடிந்த பிறகுதான் கிடைக்கும்.

**திரு. மா. வெ. கரிவேங்கடம்** : யூனிசெஃப் எந்தெந்த வகையில் இந்த உதவியை அளிக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : அவர்கள் பெரும் பாலும் துளைக் கருவிகளாகவும், இன்றியமையாத சாதனங்களாகவும்தான் தருவார்கள்.

**திரு. சே. சதாசிவம்** : இந்தத் திட்டத்தின்கீழ் கிராமங்களில் குழாய்க் கிணறுகள் போடும்போது 4 அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள்தான் போடப்படும் என்று சொல்லப்படுகிறது. தேர்ண்டப்பட வேண்டிய குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கையைக் குறைத்தாவது அந்தக் குழாய்களின் குறுக்கு அளவை அதிகப்படுத்துவதுபற்றி பரிசீலனை செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : நான்கு அங்குலம் குழாய்கள் போட வேண்டுமா, இரண்டு அங்குல குழாய்கள் போட வேண்டுமா என்பதை எல்லாம் அந்தத் துறையில் வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவு செய்வார்கள். 150 அடியில் இருந்து 300 அடி வரை போக வேண்டிய நிலை இருப்பதால் அதற்குத் தக்கபடி தனித்திட்டம் போட்டு 4 அங்குலம் இருக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister has stated in his reply that they get Rs. 2.71 crores from UNICEF. In view of the fact that it is a very important scheme and as it is going to give a lot of satisfaction to the number of villages, will the Hon. Minister let us know that even if they are going to give only implements and not extra funds, whether the State Government will come forward to put some sort of a matching grant along with this and see that these implements are immediately utilised by this Government? If there is such a proposal, may I know from the Hon. Minister what exactly is the method by which he is going to distribute during the next five years, what is the commitment for the first year, what is the commitment of the UNICEF, what is the commitment of the State Government in this regard as far as the first year is concerned and also subsequent years ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆண்டுக்கு 1,750 குழாய்க் கிணறுகள் போடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மாநில அரசுக்கு எவ்வளவு தொகை செலவாகும் என்ற குறிப்புகள் இல்லை. இதைப் பற்றிய முழு விவரங்களை எல்லாம் பின்னால்தான் தர முடியும்.



1971 ஜூலை 2]

**திரு. கே. டி. கே. தங்கமணி** : தமிழகத்தைப் பொறுத்தவரையில் பேராவூரணியில் இருந்து புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரம், கோயில்பட்டி தாலுகா வரை தொடர்ந்து வறண்ட பிரதேசங்களாகவே இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட 1,750 குழாய்க் கிணறுகளை முதலில் இந்தப் பகுதிகளில் ஆரம்பிக்க திட்டம் இருக்கிறதா ? எந்த இடங்களில் முதலில் இந்தப் பணியைத் துவங்குவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : 11—2—1971 அன்று தான் கோட்டம் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் கோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திருச்சியில் அமைக்கப்படும் கோட்டத்தில் உள்ள பணியாளர்களும், அலுவலர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் அத்தகைய பகுதிகளை ஆராய்ந்து எந்தெந்த இடங்களில் குழாய்க் கிணறுகளை இறக்க முடியும் என்ற திட்டத்தை ஆராய்ந்து அனுப்பிய பிறகு எந்தெந்த வகையில் நிறைவேற்றப்படும் என்று குறிப்பாகத் தகவல் தர முடியும். அவர்கள் அது பற்றித் தெரிவித்த பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

### *Kothwall Market.*

*109 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to shift the Kothawall Market in Madras to some other place; and

(b) if so, when it will be done?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** :

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that even a few years ago this Kothawall bazaar had been properly examined by the previous Government and also the Government had come to some decision as to the reorganisation of the whole thing, if not shifting it elsewhere? Is it not a fact that hygienic conditions there are very bad and that the persons who are conducting their business are finding it difficult, and also there is a lot of traffic obstruction? May I know from the Hon. Minister whether any survey or investigation has been made in this regard, if it is not going to be shifted, what steps are the Government taking to improve the conditions there, whether alternative steps are going to be taken by this Government at least to relieve the suffering of the people there?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : இப்போது கொத்தவால்சாவடி கன்னிகா பரமேஸ்வரி அறநிலையப் பொறுப்பாட்சிக் குழுவின் மேற்பார்வையில் இருக்கிறது. தனியார் துறைதான்

கொத்தவால்சாவடியை நிர்வகித்து வருகிறார்கள். ஆகவே, அதை வேறு இடத்திற்கு மாற்றுவது என்பதை மேற்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமென்ற வகையில், போக்குவரத்தைச் சுலபமாக ஆக்க வேண்டுமென்ற வகையில் பரவலாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் பெரிய, பெரிய மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பகுதிகளில் ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்க முடியும். அந்த வகையில் வட சென்னையில் குளைக்கு அருகே கேசவப் பிள்ளை பூங்கா பகுதியில் 40 லட்சம் ரூபாய் செலவில் மொத்த வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் மார்க்கெட் கட்டப்பட இருக்கிறது. அரசு 20 லட்சம் ரூபாய் செலவு செய்ய அனுமதித்து இருக்கிறது. மீதியை கார்ப்பரேஷன் ஏற்றுக் கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAN : Has the market construction started in Kesava Pillai Park, and is there any proposal to construct a similar market in South Madras because of the expansion of the Madras City and the huge crowd that has to go to the Kesava Pillai Park market? Is there any proposal to decentralise the wholesale market and construct one somewhere in the centre of South Madras?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கேசவப் பிள்ளை மார்க்கெட் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக 20 லட்ச ரூபாய் செலவு செய்ய அரசு அனுமதியளித்திருக்கிறது. தென் சென்னையிலும் அப்படிப்பட்ட ஒரு மார்க்கெட் அமைக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதற்கான இடத்தைத் தேடும் முயற்சியில் மாநகராட்சியினர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There was a proposal to start one at Arumbakkam. If any such market is started in the outskirts of the City, it will relieve the congestion of the lorry traffic in the City. Therefore, will the Government take quick steps to do it.?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.

### புத்தூர் சீனிவாசா சுப்பராயா பல்தொழில் பயிற்சிப்பள்ளி.

*110 **திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி அருகே அமைந்துள்ள புத்தூர் சீனிவாசா சுப்பராயா பாலிடெக்னிக்கை அரசு எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆமெனில், எப்போது?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளியை அரசு எடுத்து நடத்தலாம் என தற்காலிக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான நிலங்கள் கட்டிடங்கள் இதர சொத்துக்கள் யாவற்றையும் அரசுக்கு மாற்றிக் கொடுத்தவுடன் இது பற்றிய முடிவான ஆணை வெளியிடப்படும்.

### *Starting of Dry-farming in Hosur*

*111 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal to start intensive dry farming in Hosur taluk, Dharmapuri district; and

(b). if so, when it will be started?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :**

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Not only Hosur Taluk, but the entire Dharmapuri District provides ample opportunities and ideal conditions for improving the dry cultivation and also it provides good response. So, may I request the Hon. Minister to state whether the Government are going to have special schemes to improve the dry cultivation there?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம் ஒரு மத்திய அரசுத் திட்டமாகும். வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்றின் அருகில் இத்திட்டத்தின் முன் மாதிரிப் பகுதி அமைந்திருத்தல் வேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும். அப்போதுதான், புன்செய்ப் பண்ணை குறித்த ஆராய்ச்சி முடிவுகளையும் புன்செய்ப் பயிர் விளைச்சல் தொடர்பாக எழும் பிரச்சினைகளையும்முறையே ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அதன் அருகிலுள்ள திட்டப் பகுதிக்கும், திட்டப் பகுதியிலிருந்து ஆராய்ச்சி நிலையத்திற்கும் தெரிவித்துப் பயனுற இயலும். இந்தத் திட்டம் குறித்து, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 8,000 ஏக்கர் மொத்தப் பரப்பளவுள்ள நிலம் பயனடைய இந்த முன்னோடித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் இச்சாதனை கிட்டும். முன்னோடித் திட்டம் ஒவ்வொன்றுக்காகவும் இந்திய அரசு சுமார் 25 லட்சம் செலவழிக்கும். மானியங்களும் கடன்களும் இத்தொகையில் அடங்கும்.

[1971 ஜூலை 2

பெரும்பாலும் கரிசல் மண் நிறைந்த கோவில்பட்டியில் சுமார் 8,000 ஏக்கர் நிலம் இறுதியில் பயனடையும் பொருட்டு, ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த 1970-71-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அந்த ஆண்டில் தாமதித்து ஒப்பளிப்பு வழங்கப்பட்டதாலும், திட்டம் காலங்கடந்து செயல்படுத்தப்பட்டதாலும், 860 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில்தான் நடவடிக்கை மேற்கொள்ள இயன்றது. நடப்பு ஆண்டு 1971-72-ல் சென்ற ஆண்டில் செயல்படுத்தாமல் விடப்பட்ட சுமார் 1,200 ஏக்கருக்கு மேல் கூடுதலாக 2000 ஏக்கர் குறிக்கோள் அளவை எய்த வகை செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள செம்மண் நிலம் பயன் அடைவதற்கென்று அது போன்ற செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பிற்கான ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. பயன்பெறவிருக்கிற பகுதி, புதுக்கோட்டைக்கும் குடுமியா மலையிலுள்ள "கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையத்திற்கும்" அருகில் அமைந்துள்ளது. எனவே, இந்திட்டம் குடுமியாமலை பண்ணையின் ஒத்துழைப்புடன் நன்முறையில் செயல்பட முடியும். இத்திட்டத்திலும் 8,000 ஏக்கர் நிலம் அடங்கும். மேலும் கோவில்பட்டி திட்டத்துக்குக் கிடைக்கும் அதே அளவு நிதி ஒதுக்கங்கள் இத்திட்டத்திற்குக் கிடைக்கும்.

இந்த அடிப்படையில். ஹோசூர் வட்டத்தில் புன்செய்ப் பண்ணைத் திட்டம் ஒன்றைத் தொடங்குவது குறித்து இப்போது எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி

* 112 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 'டோபிகானா' கட்ட தற்போது சர்க்கார் உதவித்தொகை கொடுத்து வருகிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தமிழகத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 'டோபிகானா' (சலவைத் துறை) கட்ட சர்க்கார் உதவித்தொகை கொடுக்கவில்லை என்றாலும், பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் சலவைத் துறைகள் கட்டுவதற்கு நிதியுதவியளிப்பதற்கான திட்டம் சர்க்காரிடம் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சலவைத்துறை இல்லாத காரணத்தினால், ஊரிலுள்ள குளங்களில் சலவைத்தொழிலாளிகள் துணி துவைப்பதால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு சலவைத் துறை ஏற்படுத்த வேண்டுமென்ற லட்சியத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 2]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்.** தலைவரவர்களே. தற்போதுள்ள திட்டத்தின்படி பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் தான் சலவைத் துறை கட்டும் திட்டம் நீட்டப்பட்டிருக்கிறது. அதற்காக நகராட்சிகளுக்கு ரூ. 3 லட்சம் என்றும், பேரூராட்சிகளுக்கு ரூ. 2 லட்சம் என்றும் ரூ. 5 லட்சம் இந்த ஆண்டு ஒதுக்கிவைக்கப்பட்டு இருக்கிறது. அதற்குள் இந்தத் திட்டத்தை செய்ய உத்தேசித்து இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** தலைவரவர்களே, சேலம் நகராட்சி எல்லைக்குள் இருக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கு ஒரு டோபிகானா கட்டுவதற்கான திட்டம் இருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சேலம் நகராட்சி எல்லைக்குள் ஒரு சலவைத் துறை கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. இன்னொன்றும் கோரியிருக்கிறார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குள் டோபிகானா கட்ட வேண்டுமென்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு இருந்தது, இது வரையில் கட்டப்படவில்லை. இனியாவது கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சிதம்பரம், சேலம், திருப்பூர் நகராட்சிகள்தான் நிதி உதவி கோரி இருக்கின்றன. காஞ்சிபுரத்திலிருந்து எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister aware of the fact that a dhobi-kana constructed in Saidapet about 12 years ago, is in a dilapidated condition and it is not fit enough to be used as a dhobi-khana and if so, whether he is going to take any action to see that the dhobi-khana is improved and made usable for the dhobis in that area?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே. அந்த சலவைத்துறையைப் பற்றி அரசின் கவனத்திற்கு இது வரைக்கும் கொண்டு வரவில்லை. அது கொண்டு வரப்பட்டிருக்குமானால் கவனிக்கப்பட்டு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். செல்வராஜ் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 5 லட்சம் சலவைத் துறைகள் கட்டுவதற்காக ஒதுக்கி இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே நகராட்சிக்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது, மான்யமாகவும், கடனாகவும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, 50 சத விகிதம் மானியமாகவும் 50 சத விகிதம் கடனாகவும் அளிக்கப்படுகிறது.

[1971 ஜூலை 2

DR. H. V. HANDE : Sir, will the Hon. Minister be pleased to state whether he has gone round the dhobi-khanas in the Madras City after he became Minister? I have seen a number of dhobi-khanas and there are no proper facilities there. For instance, in places like Chetput, Washermenpet and Kosapet in my constituency, they do not have even drying facilities. So, will he give some hope to them in his reply to the question?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான் இது வரையில் அமைச்சரானதற்குப்பிறகு அவற்றைப் பார்க்கவில்லை. இதற்குப்பிறகு வேண்டுமானால் பார்த்து அதற்கு வேண்டிய பரிகாரம் தேடுகிறேன்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் சலவைத் துறை கட்ட அரசு முயற்சிக்குமா? அப்படி ஆவன செய்வதாக இருந்தால், இந்த ஆண்டே அந்த வேலையைத் தொடங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சின்னாளப்பட்டி பேரூராட்சி உதவி கோரியுள்ளது. அந்தக் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, அடையார் பகுதியில் ஒரு டோபிகானா கட்டுவதற்கான பூர்வாங்க வேலை தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு அந்த வேலை தொடரப்படவில்லை. அடையார் நகர்ப்புறப் பகுதி என்னுடைய தொகுதி என்ற காரணத்தால் சிறிது துரிதமாக அந்த டோபிகானாவைக் கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க அமைச்சர் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, பல பகுதிகளிலிருந்து இப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. சலவைத் துறைகள் ஒவ்வொரு இடத்திலும் கட்டித் தரவேண்டுமென்று இப்போது அங்கத்தினர்கள் ஆங்காங்கு வற்புறுத்தி வருகிறார்கள். இருக்கிற நிதிநிலையை ஒட்டி எல்லாக் காரியங்களையும் செய்து தர அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** தலைவரவர்களே, இந்தச் சலவைத் துறையை முனிசிபாலிடிக்கும், கார்ப்பரேஷனுக்கும் மட்டும் விரிவுபடுத்தினால் போதாது. அதைக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். கிராமங்களில் இருப்பவர்கள் குளம், குட்டைகளில் துணி துவைப்பதால், அந்தக் கிராமத்தின் சுகாதாரத்துக்கு இது முரணாக இருக்கிறது, என்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஒவ்வொரு கிராமத்திற்கும் சலவைத்துறை கட்டித்தர அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.



1971 ஜூலை 2]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்கள் அநேகமாக நகர்ப்புறங்களில் தான் இருக்கிறார்கள். கிராமப் பகுதியில் இருக்கும் மக்கள் அவர்களாகவே துணி துவைத்துக்கொள்கிறார்கள். அந்தவகையில் சுகாதாரக்கேடு வந்திருக்கலாம். எல்லா இடங்களிலும் சலவைத் துறை கட்டுவது சாத்தியமில்லை.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, சில சலவைத் துறைகள் எல்லாம், ஏற்கெனவே கட்டப்பட்டவை. அவைகள் எல்லாம் பாழடைந்து விட்டன என்று உறுப்பினர்கள் சொன்னார்கள், அமைச்சர் அவர்கள் கவனம் கொள்வார்களா என்று கேள்வி கேட்டார்கள். முதலில் கட்டுவதற்கு பாதி மான்யமாகவும், பாதி கடனாகவும் அரசாங்கம் உதவி கொடுத்தது. அப்படி மீண்டும் கொடுத்து சீர்படுத்த இயலுமா என்று கேட்டபோது, அதை கவனிக்கிறேன் என்று அமைச்சர் சொன்னதன் பொருள் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் சலவைத் துறை கட்டுவதற்காக மான்யமாகவும் கடனாகவும் தந்து இருக்கிறோம். அதை பராமரிக்கும் பொறுப்பு நகராட்சியையும், பேரூராட்சியையும் சார்ந்தது ஆகும். அதை பராமரிப்பது அரசின் கடமையில்லை.

**திரு. கே. ரங்கநாதன் :** தலைவரவர்களே, கோவை நகரில் டோபிகானா கட்டுவதற்கான உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, கோவை நகரிலிருந்து ஒரு கோரிக்கையும் வரவில்லை.

**திரு. சோ. கருணாநாதன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் டோபிகானா இல்லை. இருப்பது போதிய அளவு இல்லை. இன்னொன்று ஏற்படுத்த அரசு முன்வருமா என்று கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலிருந்தே அங்கே ஒரு சலவைத் துறை இருப்பதாகத் தெரிகிறது. சீர்படுத்தப்படுமானால் அது போதும். அதை சீர்படுத்துகிற ஏற்பாட்டுக்கு அரசு அந்த நகராட்சியோடு கலந்து ஆவன செய்யும்.

### சென்னிமலை காட்டு நிலங்கள்

*113 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னிமலை பிர்க்காவில் உள்ள 300 ஏக்கர் காட்டு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : (அ) தற்போது இல்லை.

(இ) வினா எழவில்லை.

**திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் வாழும் பொதுமக்கள் அந்தக் காட்டு நிலங்கள் நல்ல காடாக இல்லை என்று சொல்லி, விவசாயத்திற்கு அளிக்கவேண்டுமென்று கோரிக்கை ஏதாகிலும் தந்து இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : அது தான் தற்போது இல்லை என்று சொன்னேன். கோரிக்கை வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

* 114 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னிமலை பிர்க்கா காட்டில் ( Forest ) 50 ஏக்கர் நிலம் திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : இல்லை.

**திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1967-68-ம் ஆண்டில் மேற்படி காட்டிலிருந்து திருப்பூர் கூட்டுறவு பால் சங்கத்திற்கு நிலம் கொடுக்கப் பட்டிருக்கிறதா ? அதற்கான குத்தகை என்ன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : திருப்பூர் கூட்டுறவு பால் பண்ணைக்கு 27—3—1963-ல் 100 ஏக்கர் நிலம் குத்தகைக்கு விடப் பட்டிருந்தது. இன்னும் வாய்பாடி காட்டில் குமாரசாமி என்பவருக்கு 52 ஏக்கர் விடப்பட்டிருந்தது. அந்தக் குத்தகைகள் 1963-66 வரையில் அவை முடிந்து விட்டன. மறுபடியும் நீடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வி நேரம் முடிகிறது. இன்னும் ஐந்து நிமிஷம் நீடிக்க அவையின் அனுமதியைக் கோருகிறேன்.

### திருப்பூர் நகரை தொட்டுச் செல்லும் புது பஸ் வழித்தடங்கள்

* 115 வினா—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரை தொட்டு போகும் முறையில் 6-3-1967-க்கு பின்னர் 23—3—1971 முடிய எத்தனை வழித்தடங்களில் தனியார் பஸ் விடப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : திருப்பூர் நகரைத் தொட்டுப் போகும் முறையில் 6—3—1967-க்குப் பின்னர் 23—3—1971 முடிய இருபது உரிமங்கள் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



**திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொழிலாளி மக்கள் ஏறத்தாழ ஐந்து மைல் தூரத்திற்கு வந்து போகிறார்கள். ஆகவே, மேலும் அவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, இந்தப் புதிய உரிமங்கள் அவ்வப்போது அதிகம் துவங்கப்பட வேண்டும் என்று அரசு ஆண்டொன்றுக்கு 10 சதவிகிதம் அதிகப் படுத்த வேண்டும் என்று கூறி வருகிறது. ஆங்காங்கேயிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பொது மக்களுடைய நலன்களைக் கருதியும், போக்குவரத்து வசதியைக் கருதியும், சாலைகள் மேம்பாடு கருதியும், அந்தப் பகுதிக்கு வசதித் தேவையைக் கருதியும், புதிய ரூட்டுகளைத் தருகிறார்கள். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், பஸ் வைத்துக்கொண்டிருக்கிற முதலாளிகள், அந்தப் புண்ணியவான்கள் கோர்ட்டில் போய் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஆகவேதான் அதிகப்படுத்த முடியவில்லை. கோவையைப் பொறுத்தவரையில் 1967-68-ல் 809 பஸ்கள் ஓடின. இன்றைக்கு 1,115 பஸ்கள் ஓடுகின்றன. ஆகவே, போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : தலைவர் அவர்களே, புதிய ரோடுகள் எங்கு போடப்படுகிறதோ அங்கு அதிகப்படியான பஸ் ரூட்டுகள் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? அது மட்டுமல்லாமல், மாவட்டங்களில் இருக்கிற ஹைவேஸ் எஞ்சினியர்கள் மெட்டல் போட்ட ரோடுகளில்தான் பஸ் ரூட்டுக்கு பர்மிட் என்று கூறுகிறார்கள். மெட்டல் போடக் கூடிய வசதி பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு இல்லாததால், செங்கப்பி போட்டிருந்தாலே பஸ் விடலாம் என்று அரசாங்கம் அனுமதித்தால் நலமாக இருக்கும். அப்படி செங்கப்பி போட்ட ரோடுகளில் பஸ் ரூட் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, போதிய பேருந்து வழித்தடங்கள் உண்டாக்குவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று சொன்னேன். பஸ் ரூட்டுகளுக்கு உச்சவரம்பு வைத்து, அவசரச் சட்டம் வந்தபோது, புதிய வழித்தடங்களை உருவாக்கும் பிரிவும் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கப்பி போட்ட ரோடுகளில் பேருந்துகள் விடப்படுகின்றன. ஆனால் சாதாரண செம்மண் சாலைகளில் விடலாமா என்று கனம் உறுப்பினர் கேட்கிறார்கள். அங்கெல்லாம் ஜீப் பஸ்கள் விட வசதி செய்து கொடுத்திருக்கிறோம். வழித்தடங்கள் நல்ல முறையில் இருந்தால் தான் பேருந்துகளில் பயணிகள் பயணம் செய்ய வசதியாக இருக்கும். எனினும் அங்கத்தினருடைய யோசனையையும் பரிசீலிக்கலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Government think of introducing town buses in all municipalities in Tamil Nadu and will the Government also take over all the roads of the Highways Department wherein these buses are running?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, கேள்வியின் முதல் பகுதிக்கு பதில் அளித்து விட்டேன். புதிய பேருந்துகள் விடுவதில் உள்ள கஷ்டங்கள் அவர்களுக்கே தெரியும். சாலைகளையெல்லாம் அரசாங்கமே எடுப்பது என்பது பற்றி பொதுப் பணித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : இந்த திருப்பூரைச் சுற்றி ஒரு நாலு வருஷ காலத்தில் 20 பர்மிட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த 20 பர்மிட்டுகளில் 10 பஸ் களுக்கு மேல் எத்தனை பேர்களுக்கு பர்மிட் கொடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. பத்து பஸ்ஸுக்கு மேல் உள்ளவர்களுக்கு பர்மிட் என்றால், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 11 பேர்களுக்கும், ஒரு கம்பெனிக்கு 50-க்கு மேலும், ஆக 12 பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருப்பது இந்த சட்டத்தின் வரம்பிற்குள் வரும். அந்தக் கம்பெனி நேஷனலைஸ் செய்வதில் வந்துவிடும். மீதி 11 வழித்தடங்களில், காலம் முடிந் ததும், சட்டப்படி அது பிறருக்குக் கொடுக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி** : தலைவர் அவர்களே, திருப்பூரில் பஸ் ரூட் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனா லும், என்னுடைய தொகுதியில் கணபதிபாளையம் பஞ்சாயத்து மக்கள் பஸ்ஸுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் நடந்து செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். யாராவது முன் வந்தால், சர்க்கார் ரூட் பர்மிட் கொடுக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அப்படிக் கிராமப் புறங் களில் மக்களுக்கு வசதியாக செய்து தரவேண்டும் என்றுதான் புதிய பஸ் ரூட்டுகளைக் கொடுக்கிறோம். அரசாங்கமே நினைத்தால் கூட, மாவட்ட ஆட்சித் தலைவர், அதில் 'க்வாஸி—ஜுடிஷல்' ஆக, நீதிபதிபோல் செயல்படவேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருக் கிற பஸ் சொந்தக்காரர்கள் தங்களுக்கு பாதகம் வருகிறது என்று நீதி மன்றங்களுக்குச் சென்று தடை உத்தரவுகள் வாங்க வழி வகைகள் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது கொண்டு வந்திருக் கிற அவசரச் சட்டத்தின் மூலம் கிராம மக்கள் நன்மையடையும் வகையில் அமைக்கலாம் என்றுதான் செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உச்சவரம்புச் சட்டத்தால் கோவை மாவட்டத்தில் எந்த எந்த பஸ் கம்பெனிகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன; தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு கம்பெனிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : நான் ஏற்கனவே சொன்னதுபோல், கோவையில் உச்சவரம்பு சட்டத்தின் கீழ் 11 கம்பெனிகள் வருகின்றன. ஒரு கம்பெனி நாட்டுடைமைத் திட் டத்தின் கீழ் வருகிறது. இவை பாதிக்கப் பட்டிருக்கின்றன என்று இல்லை, அவர்களுடையதைப் பகிர்ந்தளிப்பது என்று தானி ல்லை. யார், யார் என்கின்ற விவரம் இப்பொழுது இல்லை.



**திரு. தோப்பூர் திருவேங்கடம்** : தலைவர் அவர்களே, ரூட் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில் ஓடுவதால், தனியார் அவற்றைச் சரிவர நடத்துவதில்லை. அவர்கள் கைவிட்டு விட்டால் அரசாங்கமே வேறு வகையில் அவற்றை எடுத்துச் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது. ஆனால் அரசாங்கம் இப்பொழுது அது பற்றி எந்தவிதமான ஆலோசனையோ அல்லது திட்டமோ வைத்திருக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அரசினர் தீர்மானம்.

### வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் "வகுப்பு II பிற உறுப்பினர்கள்" என்ற தலைப் பின் கீழ் ( h ) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் முடிவு செய்யும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்தெடுக்க முற்பட வேண்டும்' என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## 4. அறிவிப்புகள்.

### (அ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 6—7—1971. செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நிய மனத்தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 7—7—1971, புதன்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—7—1971, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 9—7—1971 வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. **1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

கோரிக்கை எண் 26—பாசனம்.

கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 1971-72-க்கான மானிய கோரிக்கை மீது வாக்கெடுப்பு இன்று 3-ம் நாள் விவாதம். இந்த விவாதத்தில் இன்றைக்கு மொத்தம் 20 மெம்பர்கள் பங்கெடுக்க வேண்டியிருக்கிறது. அமைச்சரையும் சேர்த்து 20 பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. கட்சித் தலைவர்கள் 3, 4 பேர்கள் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு மெம்பரும் 6 அல்லது 7 நிமிடம் பேசினால் தான் இந்த விவாதத்தை முடிக்க முடியும் என்பதாலே நேற்று ஒத்துழைப்பு தந்தது போல இன்றைக்கும் ஒவ்வொரு மெம்பரும் 5 அல்லது 6 நிமிடங்களுக்கு மேல் போகாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சி. வி. எம். அண்ணாமலை : சட்ட மன்ற பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அளவறிந்து உணவு அளிப்பது போல 6, அல்லது 7 நிமிடம் என்று அளித்து, உள்ள குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாத அளவிலே பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அருள் கூர்ந்து என் போன்றவர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு ஏற்பட்டான பிறகு தமிழகத்திலே அரிய சாதனைகள் பொதுப் பணித் துறையின் மூலம் இந்த அரசு செய்து காட்டியிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழகத்திலிருக்கிற ஏரிகளை சீரமைப்பதில் அது எடுத்துக்கொண்டிருக்கிற கவனத்தை நோக்குகிறபோது நிச்சயமாக இந்தப் பொதுப் பணித்துறையினுடைய செயலை, திறனை பாராட்டித் தீர வேண்டும். அதே நேரத்தில் பாசனத் துறைக்கு அது எவ்வளவு விரைந்து செயலாற்றி இருக்கிறதென்பதையும், அதன் மூலமாக இந்த நாடு நம்



மாநிலம் உணவுத் துறையில் பற்றாக்குறையிலிருந்து தன்னிறைவு பெற்றதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு மற்ற மாநிலங்களுக்கும் உணவு வழங்கக் கூடிய நிலையை அடைந்திருக்கிறதென்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இவ்வளவும் செய்திருக்கிற இந்தத்துறைக்கு தமிழக அரசு ஒதுக்கி இருக்கிற தொகை உள்ளபடியே போதுமா என்று பணிந்து மிக வினயத்தோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இருபது கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து விட்டு, அதில் சென்னை போன்ற நகரங்களுக்கு மேம்பாலம் போன்ற திட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவிட திட்டம் இடப்பட்டிருக்கிறது. கிராமத்து ஒன்றிய சாலைகளை இன்றைய தினம் பெருவழித்துறை பொறுப்பில் எடுத்துக்கொண்டால் அன்றி கிராமத்தின் சாலைகளுக்குத் தாய் இல்லாத் தன்மை தான் ஏற்படும். இணைப்புச் சாலைகள் கிராமங்களுக்கு இல்லாத தன்மையை மாற்றி கடந்த 4 ஆண்டுகளாக கிராம மக்களுக்கு பக்கத்து நகரங்களுக்குப் போவதற்கும், அவர்களாலே பயிர் செய்யப்பட்டு எடுக்கப்படுகிற உணவு தானியங்களை நகரங்களுக்கு கொண்டு வருவதற்கும் நல்ல பல சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சாலைகள் ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் பொறுப்பில் இருப்பது நல்லதல்ல.

வேளாண்மைத் துறையில் ஈடுபடுபவர்கள் உரம் ஏற்றிச் செல்வதற்கும், அவர்கள் பயிர் செய்கிற மணிகளை நகரங்களுக்குக் கொண்டு வருவதற்கும் நாம் நல்ல வசதிகளைச் செய்து தர வேண்டும். அதுபோல இணைப்புச் சாலைகள் இல்லாத ஒரு மைல் தூரத்தில் உள்ள ஒரு இடத்திற்கு 10 மைல் சுற்றிப் போகவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை என் தொகுதியில் இருக்கிறது. இந்தச் சாலைகளை நிர்வகிப்பதற்கும், சீரமைப்பதற்கும் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது, இதை வைத்து நாங்கள் என்ன செய்ய முடியும் என்று வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் என்னை கேட்டார்கள். ஆகையால் இது போன்ற சாலைகளை பெருவழித் துறை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பு மிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், நமது போற்றுதற்குரிய பெருந்தலைவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்பு இதே சட்டமன்றத்தில் அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்த காலத்திலும் கூறி வந்திருக்கிறார்கள்; காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தாமல் என்ற கிராமத்தில் 3,800 மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். அது மட்டுமல்ல, 5,500 ஏக்கர் நிலம் பாசனம் செய்வதற்கு நீர் தாக் கூடிய மிகப் பெரிய ஏரி தாமல் கிராமத்தில் இருக்கிறது. இன்றைய தினம் அது மேடிட்டு இருக்கிறது. ஒரு போகத்திற்கு முழுவதுமாக தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. வருகிற தண்ணீர் வரவுக்கால்வாயில் வருகிறபோது தடை பட்டு விடுகிறது. அங்கே உள்ள விவசாயிகள் தொல்லைப்

படுகிறார்கள். எதிர்க் கட்சியில் இருக்கிறபோது அண்ணா அவர்கள் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சராக வந்த போதும் அவர்களிடம் அங்குள்ள மக்கள் இதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்களும், அதை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகையால் இப்போது பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன், அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக மட்டும் அல்லாமல் அது ஒரு நியாயமான கோரிக்கை என்பதைக் கருதி முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏரியில் தண்ணீர் நிறைந்துவிட்டால் 11 மாதங்களுக்கு தண்ணீர் இருக்கும் என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் 4 அல்லது 5 மாதங்களுக்குத் தான் இருக்கிறது தண்ணீர். அப்படி என்று சொன்னால் அதற்குப் பிறகு பாசனத்திற்கு தண்ணீருக்கு விவசாயிகள் என்ன செய்வது ? ஏரி மேடிட்டு விட்டதால் தான் இந்த நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் அந்த ஏரியைத் தூர் எடுத்து பள்ளமாக்கித் தரவேண்டும் என்ற பொறுப்பு இந்த அரசிற்கு இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் நீண்ட நெடுங்காலமாக, காங்கிரஸ் ஆட்சியிலிருந்தே, அண்ணா அவர்களும் மற்றவர்களும் கூறிக்கூறி, பெரும் ஏமாற்றத்தை அப்பகுதி மக்கள் பெற்றிருக்கிறார்கள். பாசனத் திட்டத்தின் பெயரில் தொடங்கி செயல்படுகிற திட்டங்களைப் பார்க்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றில் மணலைத்தான் தற்போது பார்க்க முடிகிறது. ஆனால் ஆற்றுக்கு அடியில் நல்ல ஊற்று நீர் உள்ளது. அதையோ அல்லது தாமலுக்குப் பக்கத்தில் இருக்கிற 'வேகவதி' ஆற்றின் மேற்குப் பகுதியில் 'ப' வடிவத்தில் ஆழமான இடத்திலோ நல்ல காங்கிரிட் போட்டு இருபுறமும் கரைகள் அமைத்து தண்ணீர் தேக்கி, அதன் மூலம் 2000 ஏக்கருக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்று மறைந்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சரான பிறகும் இந்தக் கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இரண்டு ஆயிரம் கிராமங்களுக்கு பாசன வசதி செய்து தரக்கூடிய தண்ணீர் நீர் ஊற்றின் மூலமாக 2,000 கிராமங்கள் பயனடையும். இப்படிப்பட்டத் திட்டத்தை நிறைவேற்றினால் ஏறக்குறைய 20 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதியை நிரந்தரமாகப் பெறமுடியும்.

இதற்கான மதிப்பீட்டுச் செலவை ஒட்டு மொத்தமாக ஒரு பொறியாளரை கேட்ட போது 12 லட்சத்தில் நிறைவேற்ற முடியும் என்று சொன்னார்கள். ஆகவே மதிப்பு மிக்க பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக பொதுப் பணித்துறை அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருபது ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசன வசதியும் 2 ஆயிரம் கிராம மக்களுக்கு நிரந்தர குடி வாழ்க்கை உண்டாக்கித் தரத்தக்க சிறந்த ஒரு 'ப' என்ற வடிவத்தில் கான்க்கிரீட் போட்டு நீர்த்தேக்கத்தை உண்டாக்கி





அந்த வேகவதி ஆற்று நீரை பம்பக் கால்வாய் மூலமாக கொண்டு வந்து ஏரிகளுக்கு தரும் திட்டத்தை ஏற்படுத்தினால் அது ஒரு நல்ல திட்டமாக நன்மை பயக்கத்தக்க திட்டமாக அமைய ஏதுவாகும். இந்தத் திட்டத்தை கருத்தில் கொண்டு உடனடியாக செயல் படவேண்டும் என்று மிக பணிவாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

காஞ்சிபுரம்—பருந்தூர் என்ற எட்டு மைல் தொலைவில் உள்ள பம்பக் கால்வாயில் மழைக்காலங்களில் நீர் காட்டாறாக வீணாகி ஓடுகிற நேரத்தில் அந்த வழியாக ஓடுகிற பேருந்துகள் மாதக் கணக்கில் தடைப்பட்டு நின்று விடுகின்றன. இந்த வழியாக ஏறக்குறைய 40 பேருந்துகளுக்கு மேற்பட்டு செல்லுகின்றன. இந்தக் குறையை போக்குவதற்காக (1,50,000) ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாயில் திட்டமிடப்பட்ட மேலபாலம் கட்டி முடிக்கப்படாமலேயே அந்த திட்டம் கடப்பில் போடப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தையும் சேர்த்து தனியாக ஒரு பெரிய திட்டமாக போட்டு இதை எல்லாம் நிறைவேற்றித்தர வேண்டும் என்று மிக பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டில் 300 லட்சம் ரூபாய் கிராம ஊராட்சி ஒன்றிய சாலை சீரமைப்புக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 302 லட்சம் இதே காரியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டது. இரண்டு லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி வரவேற்கிறேன், மகிழ்ச்சி அடைகிறேன் என்றாலும் இன்றைய தினம் சாலை சீரமைப்புக்காக இந்தத் தொகை எந்த அளவு உதவி செய்யும் என்பதை நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இந்த கிராமப்புற மக்கள் கழக ஆட்சியின் பேரில் மட்டற்ற நம்பிக்கையை கொண்டுள்ளவர்கள். கிராமப்புற மக்கள் கழக ஆட்சியை உண்டாக்கியவர்கள். அப்படிப்பட்ட கிராம மக்களுக்கு போக்குவரத்து வசதியை தண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தர கழக அரசு கடமைப்பட்டு இருக்கிறது என்பதை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைப் பற்றி ஒரே நிமிடத்தில் கூறி முடித்துக் கொள்ளுகிறேன். நீண்ட காலமாக நம் முன்னோர்கள், முடியுடைய வேந்தர்கள் எல்லாம் இச்சாலை பராமரிப்பை மேலான வகையில் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். சாலையின் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்களை மட்டும் அல்ல சமுதாயத்திற்கு நாட்டு மக்களுக்கு அந்த சாலையை ஒட்டி இருக்கிற கிராம மக்களுக்கு பயன் தரக்கூடிய பலன் தரக்கூடிய மா, பலா, புளியன் போன்ற மரங்கள் வைத்திருந்தார்கள். தற்போது சாலையை விரிவுபடுத்தி அமைப்பதற்கான புதிய திட்டத்தின் கீழ் பல இடங்களில் பல மைல் தூரங்களுக்கு புளியமரம் போன்ற மரங்களை வெட்டப்படுகின்ற துர்ப்பாக்கியமான நிலை என்று கூற மாட்டேன்—ஆனால் அப்படிப்பட்ட நிலைமை ஒரு சில இடங்களில்

ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே புது மரங்களை உடனடியாக அதுவும் சாலை ஓரங்களில் இருக்கிற சமுதாய மக்களுக்கு பயன் தரும் வகையிலும் நிழல் தரும் வகையிலும் இருக்கின்ற மா, பலா புளிய மரம், ஆலமரம் போன்ற கனி வகை மரங்களையும் நிழல் தருகின்ற பயனைக் கொடுக்கின்ற புளியன் போன்ற மரங்களையும் புதிதாக சாலையின் இரு புறங்களிலும் வைத்து அதை பராமரிப்பதற்கு தனி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அது கிராம நெடுஞ்சாலை துறையானாலும் சரி தேசிய சாலையாக இருந்தாலும் நமது பொறுப்பு சாலையாக இருந்தாலும் இவைகளை எல்லாம் திட்டமிட்ட வகையில் செய்து தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. என். கிட்டப்பா :** பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகளை சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1967 லிருந்து 1970 முடிய பெய்த மழையின் சராசரி அளவு 892.5 மில்லி மீட்டராகும். 1963 முதல் 1966 பெய்த மழையின் சராசரி அளவு 947.6 மில்லி மீட்டராகும். மழை குறைந்திருந்தாலும் நமது அரசினாலும் அதைப்போலவே பொதுப்பணித்துறையை சேர்ந்தவர்களாலும் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரிய முயற்சிகளின் விளைவாக விவசாயத் துறையில் நல்ல நிலைமைகளை அரசு உருவாக்கி இருக்கிறது என்பதில் நாம் நிச்சயமாக மகிழ்ச்சி அடையக் கடமைப்பட்டு இருக்கிறோம். அதைப் போலவே மழை குறைவாக பெய்த நேரத்தில் நீரை மிக சிக்கனமாக விடவேண்டிய நேரத்தில் விட்டும் விட வேண்டாத நேரத்தில் விடாமல் தடுத்து நிறுத்தி வைத்தும் விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் தந்தும் சிறந்த முறையில் பொதுப்பணித்துறை செயல்பட்டுக் கொண்டு வந்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 350 லட்சத்தில் உருவாக்கப்பட்ட 97,350 ஏக்கராவுக்கு இடையறாத நீர்ப்பாசன வசதியும் 8,580 எக்கர் நிலங்கள் நீரில் மூழ்கி விடாமல் காக்கப்படும் வசதியும் செய்து கொடுக்க அரசு மேற்கொண்டு இருக்கும் திட்டங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நடந்த 4—5 ஆண்டுகளாக ஒரு போக சாகுபடி இருபோகமாகவும் இரண்டு போக சாகுபடி மூன்று போகமாகவும் விவசாயப் பெருங்குடி மக்களின் ஒத்துழைப்போடு நல்ல விளைச்சலை உருவாக்கிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். நமக்குள்ள அபாயம் கன்னட மாநிலத்தில் எவ்வளவு தான் பெரிதாக ஆகிக்கொண்டு வந்தாலும் இன்றைய தமிழக அரசு பொதுப்பணித்துறையின் மூலமாக ஏறத்தாழ 49 கோடி





ரூபாய்க்கு சிறப்பான திட்டத்தை காவிரி டெல்டாப் பகுதி பாசன வசதிக்காக போடப்பட்டு அதற்கான அனுமதியை கோரிக் கொண்டு இருக்கிறது. உலக வங்கியின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கும் இத்திட்டம் அங்கீகரிக்கப்படுவதற்காக டில்லியில் இருக்கிற நமது மத்திய சர்க்காருக்கு வைத்தும் இன்னும் அந்த அனுமதி வழங்கப்படாத சூழ்நிலையில் நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். அதைப் போராடிப் பெறுவதற்கு நமது அரசு பல நல்ல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்றாலும் அத்தகைய முயற்சிகள் வெற்றி அடைவதற்காக நம் அனைவரது ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டுவது மிக முக்கியமான கடமையாகும். என்பதை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்கே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த நமது மாண்புமிகு உறுப்பினர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் நாங்கள் வடக்கே இருக்கிறவர்கள், தெற்கே இருக்கும் மாவட்டங்களுக்கு பாசன திட்டங்கள் செய்து கொடுப்பதைப் போலவே வடக்கே இருக்கிற அவர்களுடைய மாவட்டத்திற்கும் செய்து தரவேண்டும் என்று நமது மாவட்டத்தைச் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் தெற்கே இருக்கிற மாவட்டத்தில் அதிலும் குறிப்பாக எங்கள் திருச்சி மாவட்டம் மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கும் உணவு அளிக்கக் கூடிய கருவியாக இருக்கிறது—மற்ற மாவட்டத்தை விட அதிக உற்பத்தி செய்யக் கூடிய மாவட்டம் என்ற அடிப்படையில் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. அரசு வடிகால் பிரச்னைகளைப் பற்றியும் பாசன வசதியைப்பற்றியும் பல நடவடிக்கைகள், திட்டங்கள் எடுத்துக் கொண்டுவந்திருக்கிற நிலைமை இருந்தபோதிலும் மிகக் குறிப்பாக ஏ கிளாஸ் சேனல்களை நான்கு அல்லது ஐந்தாண்டுக்கு ஒரு முறை வெட்டிச் சரி செய்ய வேண்டிய நடைமுறை இன்றைக்கு இருந்து வருகிறது. இதைப்பற்றி பல கருத்தரங்குகளிலும் பல நிலைகளிலும் அரசுக்கு எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம். என்றாலும் அதை வலியுறுத்துகின்ற வகையில் குறிப்பாக ஏ கிளாஸ் சேனல்களை ஒவ்வொரு வருஷமும் வெட்டித்தரவேண்டும் என்று தஞ்சைமாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

எங்களது மாயூரத்தைப் பொறுத்த வரையில் பாசன மதகுகள் பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டன. இப்போது சராசரி 30 சதவீதம் ஆயக்கட்டுகள் கூடி இருக்கிற நிலையில் அப்படிப்பட்ட ஆயக்கட்டுக்காரர்களுக்கு நீர்ப்பாசன 'வசதியை' அளிக்கக்கூடிய வகையில் மதகுகளை பதுப்பித்துத்தர வேண்டிய பொறுப்பை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக மாயூரம் தொகுதியில் மிக முக்கியமான பிரச்னை பொதுப்பணி அமைச்சர் அவர்களுக்கும் அத்துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் கடந்த

நான்காண்டு காலத்தில் இந்த சட்டமன்றப் பேரவையில் பல முறை வலியுறுத்திச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். அது என்ன வென்றால் எங்கள் பகுதியில் கரையே இல்லாத ஆறு ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது. பழவார் என்று ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு கரை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த கரை இல்லாத காரணத்தால் அந்தப் பகுதியில் வெள்ளக் காலங்களில் எந்த அளவு நெற்பயிர்கள் உள்ள பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் நாசம் அடையும் என்பதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களும் நேரிடையாக கண்டு இருக்கிறார்கள். இதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தச் சட்ட மன்றப் பேரவையில் கடந்த கூட்டத் தொடரில் எழுப்பி இருக்கிறேன். பழவாறில் கரை ஏற்படுத்தி தரும் முயற்சியில் நம் அரசு தீவிரமாக முயற்சி செய்து வருகிறது என்று கருதுகின்றேன். ஆகவே இத்திட்டத்தை நல்ல முறையில் முடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்த பழவாற்றின் மூலமாக ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய நஷ்டத்தை போக்குவதற்கு அந்த ஆற்றின் ஒரு மைல் தூரம் வடிகால் அமைக்கவேண்டும். மாயூரம் பகுதியில் சேந்தூர் வடிகால் திட்டத்திற்கு 120 லட்சம் ரூபாயும் ஜாரிவயலூர் கால் வாய் அமைப்பதற்காக 5 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்ததற்காக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நமது கழக அரசுக்கும் நான் மிகுந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள் கிறேன். மாயூரத்தில் 45 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு மேம்பாலம் கட்ட திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கான ஒப்பந்த புள்ளி விவரங்கள் கோரப்பட்டு பலரும் அதை உண்மைக்குப் புறம்பாக சொல்கிறார் என்று மாற்று கட்சிக்காரர்கள் எல்லாம் பல தடவை சொல்லியும் ஒரு 3 மாத காலமாக டெண்டர் பரிசீலனை செய்கின்ற நிலையில் இருக்கிறது. மூன்று, நான்கு ஆண்டுகளாக கட்டி முடிக்கப்படவேண்டிய அந்த மேம்பாலம் டெண்டர் வாங்கிய 3, 4 மாத காலம் ஆகிறது என்றால், அதை உடனடியாக நமது மாண்பு மிகு அமைச்சரவர்கள் நிச்சயமாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் தொகுதிக்கு ஒரு மேம்பாலம் போன ஆண்டு வழங்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

அதே போல் ஊராட்சி மன்றங்கள் பராமரித்து வருகின்ற சாலைகளை அரசாங்கமே மேற்கொண்டு, பொதுப்பணித்துறை மூலம் அதை பராமரித்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதற்கு முன் நடந்த நமது நிதிநிலை அறிக்கையிலே மணல்மேடு காட்டு மன்னார்குடிக்கு ஒரு பாலம் நமது அரசு கட்டித் தரவேண்டும் என்று கேட்டு இருந்தேன் மாயூரம் பகுதியில் மணல்மேட்டிலிருந்து காட்டுமன்னார்குடி போவதற்கு 45 மைல் சுற்றி சிதம்பரம் போய் அங்கிருந்து மறுபடியும் காட்டுமன்னார்குடி போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றி அமைக்க





வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஆ. கருப்பையா :** பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தை ஆதரித்து நான் சொல்ல வந்த சில கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன்.

இன்று நிதிநிலை அறிக்கையில் சேர்வலாறு திட்டத்திற்காக ஒப்புதலுக்காக டெல்லி சர்க்காரிடம் போயிருக்கிறது என்று கூறப் பட்டிருக்கிறது. சேர்வலாறு திட்டம் திருநெல்வேலி மாவட் டத்தில் உள்ள வட பகுதி வளமடைய ஒரு சிறந்த திட்டம் என்று கருதுகிறேன். அதற்காக டெல்லியினுடைய பதிலுக்கு காத்திருக் கிறோம் என்று நாங்கள் இதிலே பார்க்கும் பொழுது உண்மை யிலேயே இரண்டு மாநிலங்களுக்கு பொதுவான காவிரி நதியிலே ஹேமாவதி, அணைத்திட்டங்கள் என்று மைசூர் அரசு நம்மைக் கேளாமலேயே கட்டும் பொழுது, தமிழ்நாட்டிற்குள்ளே ஓடுகின்ற சேர்வலாறு திட்டத்திற்கு அவர்களுடைய ஒப்புதலுக்கு நாம் ஏன் அனுப்பவேண்டும் காத்திருக்க வேண்டும்? இப்போதுள்ள நிலை எனது மாவட்டத்தைப் பொறுத்தவரை பொதுப்பணி அமைச்சரவர்களுக்குத் தெரியும்.

எனது மாவட்டத்தில் வட பகுதி பூராவும் இன்றைக்கு 10 ஆண்டுகலமாகச் சரியான பருவ மழை இல்லாத காரணத்தால் குளங்கள் வரண்டு இருக்கின்றன. குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பதுகூட பெரிய கஷ்டமாக இருக்கிறது என்பது அவர் களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் முடிவடையுமானால் அங்கே மானூர், கங்கை கொண்டான் பகுதிகளில் இருக்கின்ற குடி தண்ணீர்ப் பஞ்சத்தை ஓரளவுக்குப் போக்க முடியும் என்பதற் காக காத்திராமல் உடனடியாக நாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் இந்தத் திட்டத்திற்கு டெல்லி சர்க்கா ரிடமிருந்து ஒப்புதலுக்காக காத்துக் கொண்டிருந்தால் டெல்லி சர்க்கார் உடனடியாக கொடுக்குமா என்று நாம் கேட் கின்றபொழுது நாம் சந்தேகப்படக் கூடிய நிலைமையிலே இருக்கிறோம். ஏன் என்றால் மக்களிடையே தி.மு. கழகம் வளர்ந்து இருக்கின்ற வளர்ச்சி அவர்களுக்குப் பொறாமையைக் கொடுக்கிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே நாமும் மைசூர் அரசு அப்பகுதியிலே அணை கட்டுவதைப்போல தமிழகத்திலே ஓடுகின்ற ஆற்றிலே டெல்லி சர்க்கார் அனுமதி இல்லாமலேயே திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் நம் பக்கம் ஆதரவாக நிற்கிறார்கள். நாம் யாருக்கும் பணிந்து நடக்க வேண்டியதில்லை. நமது நாட்டிலே நல்ல திட்டங்களுக்காக டெல்லியின் ஒப்புதலுக்காக காத்திராமல் உடனடியாகத் தொடங்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் தாம்பிரபரணி நதி ஓடுகிறது. அந்த நதி ஓடுவதால் என்னுடைய தொகுதியில் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பகுதிக்குப்போக அங்கே சிந்துபந்துறை பாலத்தைக் கடந்து தூத்துக்குடி போகின்ற வல்ல நாடு பாலம் வழியாக போகவேண்டியிருக்கிறது. இது 15 மைல். ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குப் போக சுற்றிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. தாம்பிரபரணியில் வெள்ளம் 3, 4 நாட்கள் போனால் இந்த 15 மைல் சுற்றி வந்து சேரவேண்டிய திருக்கிறது. ஆகவே சென்றிய ஆண்டு சட்டமன்றத்திலே இந்த வேலையை விரைவாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் காண வில்லை என்பதற்காக இங்கே அதை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். இந்த அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அங்கே 15 மைல் சுற்றாமல் இருப்பதற்கு ஒரு ஓடைப்பாலம் கட்டிக்கொடுத்தால் இரண்டு பகுதிக்கும் வண்டி மாடுகள், விவசாயிகள் போவதற்கு நல்ல ஒரு வளர்ச்சி ஏற்படும் என்பதற் காகத்தான் அதைக் கேட்டேன். ஏன் என்றால் திருநெல்வேலிக்கு மார்க்கெட்டுக்குப் போக சுமார் 25 மைல்கள் விவசாயிகள் சுற்றிக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. நாங்கள் சொல்கின்ற இடத் திலே பாலம் அமைந்தால் 6 மைலிலே அந்தப் பகுதிக்குப் போக வாய்ப்பும் வசதியும் ஏற்படும் என்பதற்காக தாம்பிரபரணி நதி யிலே ஒரு ஓடைப் பாலம் வேண்டும் என்று கேட்டிருந்தேன். இதிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக இப்பொழுது இந்த சேர்வலாறு திட்டத்தை விரைவுபடுத்தி மாறூர் குளங்கள் நிரம்ப வழி செய்யவேண்டும். மாறூர், கங்கைகொண்டான் பகுதியில் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கவேண்டும். தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க உள்ளாட்சி அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். அந்தத் திட்டம் மதுரையில் நடக்கவிருக்கிறது. அது திருநெல்வேலிக்கும் வரவேண்டும். குமாய்க் கிணறுகள் மூலம் உடனடியாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். நமது திருநெல்வேலியில் இதை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன். சேர்வலாறு திட்டம் கூடிய விரைவிலே முடிவடையுமானால் அங்கே வட பகுதி விவசாயிகளுக்கும் மக்க ளுக்கும் அவர்களுடைய நீண்டகாலக் கோரிக்கை பூர்த்தியாகும். அங்கப் பக்கத்திலே இருக்கிற பராக்கிரம பாண்டியன் குளத் திற்கு சரியான முறையிலே தண்ணீர் கிடைக்காத காரணத்தால் இன்னும் 300 ஏக்கராகூட சரியான முறையிலே சாகுபடிக்கு வளாக முடியவில்லை. சென்ற கூட்டத்திலே இதைப்பற்றி பேசி யிருக்கிறேன். அதைப் கூட இதிலே சரியான கவனம் செலுத்தப் படவில்லை. காரணம் சரியான இடங்களில் மடைகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.





அந்த வகையிலே வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வசதிகளைச் செய்து கொடுத் திருந்தால் 300 ஏக்கரா இன்றைக்கு நிலம் சாகுபடியின் கீழ் வந்ததைப் போல் இன்னும் அதிகமான நிலங்கள் சாகுபடியின்கீழ் வந்திருக்கும். இவைகளையெல்லாம அமைத்துக் கொடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள் கிறேன்.

**திரு. எம். செல்வராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொதுப்பணித் துறையின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, பொதுப்பணித் துறையிலே கடந்த ஆண்டு செய்த பெரிய பல பணிகளைப் பற்றி எடுத்துக்கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன். கூவம் சீரமைப்புத் திட்டம், வீராணம் குடிநீர்த் திட்டம் இந்த இரண்டும் வேகமாக இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. இது உள்ளபடியே பாராட்டுதற்குரிய ஒன்று ஆகும். அடுத்து, நெடுஞ்சாலை இலாகாவில் வேலை செய்கிறவர்கள் பொதுப்பணித் துறையிலே வேலை செய்கிறவர் கள், ஐந்து ஆண்டுகளுக்கு மேல வேலை செய்கிறவர்கள் Temporary Casual labour என்று இருந்தவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படவேண்டுமென்று அந்தந்த தொழிற் சங்கங்களின் கோரிக்கை இருந்ததை இந்த அரசு ஏற்று அவர்களை எல்லாம் நிரந்தரம் ஆக ஆக்கி இருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படி திட்டங்கள் இன்றையதினம் அந்தப் பொதுப் பணித்துறையின் மூலமாக நடைபெற்று வருவதால் அந்த இலாக்கா அமைச்சரை நான் பாராட்டக் கடமைப் பட்டவன்.

அடுத்து, தென் ஆற்காடு மாவட்டத்தில் என்னுடைய தொகுதி யிலே ஒரு சில குறைகளைச் சொல்லி, என்னுடைய தொகுதியான விருத்தாசலம் தொகுதியிலே ஏற்கெனவே இதே மாமன்றத்திலே நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்த நிதி நிலை அறிக்கையின் போது அந்தத் தொகுதியிலே உள்ள ஒரு சில குறைகளை எடுத்துச் சொல்லி வெல்லிங்டன் ரிசர்வாயர் ஒன்று நிறுவி அதுகள் பராமரிக்கப்படாமல் இருந்து, சமீபத்தில் நமது அமைச்சர் அவர் அந்த தொகுதிக்கு வந்தபோது, அங்கே விவசாயக் கருத்தரங்கு நடத்தி அவர்கள் அதை நேரடியாக பார்த்து, நாங்கள் அதை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில். அரசாங்கம் ஆக்க பூர்வ வேலைகளில் இறங்கி இருக்கிறது. எங்கள் தொகுதி ஏரியை அகலப்படுத்தவேண்டுமென்று எங்கள் தொகுதி வட்டார மக்கள் சொல்லி வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் அந்த ஏரியில் தூர் எடுக்கவேண்டும். மற்றும் ஏரிக்கரையின் உயரத்தை உயர்த்த வேண்டுமென்றும், அதற்காக ஒரு திட்டம் தீட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்து இன்றையதினம் அது நம் முடைய அரசாங்கத்தின் கவனத்தில் இருந்துகொண்டு வருகிறது. இதை எல்லாம் உடனடியாகப பரிசீலித்து அதில் நடவடிக்கை

எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கடந்த 40 ஆண்டுகளில் அந்த ஏரியில் முழுமையான தண்ணீர் இருந்தது கிடையாது. அந்த ஏரியின் மூலம் ஏறத்தாழ 24,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு தண்ணீர்ப் பாசனம் இல்லாத காரணத்தால் அந்த ஏரியின் மூலமாகப் பயன் அடைய நிலங்கள் ஏறத்தாழ 24,000 ஏக்கருக்கு மேல் வரி வஜா செய்து இருக்கிறது நமமுடைய அரசாங்கம். இப்படி நிலைமை இருக்கிறது. இதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாமுத்தாறு பிராஜெக்ட் இருக்கிறது. அந்த பிராஜெக்டில் 11 ஏரிகள் இருக்கின்றன. 11 ஏரிகளில் இப்போது 1 ஏரியில்தான் தூர் எடுக்கிறார்கள், மண் வாருகிறார்கள். பாக்கி 10 ஏரிகளில் வேலைகள் நடைபெறுகின்றன. இவைகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த 11 ஏரிகளின் மூலமாக ஏறத்தாழ 35,000 ஏக்கர்கள் பாசனத்தின் கீழ் வரும். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். புதிதாக எம்.எம்.டி. திட்டத்தின் கீழ் வருகிறதை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தில் இன்னொரு புதிய ஏரி 1,70,000 ரூபாய் திட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டியது இன்றைய தினம் சர்க்கார் கவனத்தில் இருக்கிறது.

மூதூர் கிராமத்தில் இன்னொரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இதுவும் இப்போது சர்க்கார் பரிசிலனையில் இருக்கிறது எனக் கருதுகிறேன்.

அடுத்து பழைய பட்டணம் கிராமத்தில் இப்போது ரூ. 15,000 அளவுக்கு ஏரி புதிதாக உருவாக்கவேண்டும், இதுவும் இன்றைய தினம் சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது. இவைகளை எல்லாம் உடனுக்குடன் முடித்துத் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் விருத்தாசலம் பக்கத்தில் இருக்கும் சர்க்கரை ஆலைக்கு ஒரு பாதை செல்கிறது. அந்தப் பாதையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதன் பயனாக அந்தப் பாதை மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதை நம்முடைய போக்குவரத்து அமைச்சரும், பொதுப்பணி அமைச்சரும் நேரடியாகப் பார்த்து இருக்கிறார்கள். அந்தப் பாதையை அகலப்படுத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சர்க்கரை மில்லுக்கு விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் செஸ் வரியை எந்தக் காரணத்தைக்கொண்டும் வேறு தலைப்புக்கு மாற்றாமல் அந்தந்த தலைப்பிலே வசூலித்து அந்தச் சாலையைச் செப்பனிட வேண்டும். ஏனென்றால் கரும்பு கொண்டு வரும் விவசாயிகளுக்கு நல்ல பாதை இருக்க வேண்டும் என்று. இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



இதோடு ஜில்லாவை இணைக்கும் பாசிகுளம் அருகில் ஒரு காஸ்வே கட்டித்தர வேண்டும், தஞ்சை மாவட்டத்தை இணைக்கின்ற காஸ்வே ஒன்றும் கட்டித் தரவேண்டும். உடனடியாக இவைகளை அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் ஏறத்தாழ 30 கிராமங்களுக்குப் போக்குவரத்து ஏற்படும் நிலையில் இருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பாசனத் துறை, பொதுப்பணித்துறை மானியத்தின் மீது எங்கள் கட்சியின் வெட்டுத் தீர்மானங்கள் மீது சில கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் நூற்றுக்கு எண்பது பேர் பாசனத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். ஆதலால் நீர்பாசனம் மிகவும் முக்கியமானதாகும்.

தமிழ்நாட்டில் இன்றைய வருமானத்தையும் ஜனத்தொகைப் பெருக்கத்தையும் நீர்ப் பாசனத்துக்கு வேண்டிய தேவையையும் எடுத்துக்கொண்டால் இன்று ஒதுக்கப்பட்ட தொகை, அரசால் திட்டப்பட்ட திட்டங்கள் போதுமானதாக இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அரசு பெரிய அணைகளைக் கட்டவில்லை. மாநில அளவிலே, மாவட்ட அளவிலே மக்களுக்கு வேண்டிய நீர்ப் பாசன வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் பாசன வசதி 1970-71-ம் ஆண்டிற்கான ஆய்வு உரையில் 23-ம் பக்கம் ரூபாய் 5 லட்சம் செலவழிந்தது என்று பாசன சிறப்புத் திட்டங்கள் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பட்டியலில் மாவட்ட ரீதியாக, திட்டங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன, கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அந்த மாவட்டத்திற்குத் திட்டங்கள் இல்லை. அந்த மாவட்டத்தின் கீழ் 'இல்லை' என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது போல் அடுத்த பக்கத்தில், 25-ம் பக்கத்தில் விவர அறிக்கை 2-ல் 1970-71-ல் அரசு ஒப்புதல் அளித்து சிறு பாசன சர்வே திட்டங்கள் சில எடுத்து, செப்பனிடுதல் போன்ற திட்டங்கள் அந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்ற ஒரு திட்டமும் கொடுக்கப்பட்டதாக இல்லை. அதில் அந்த மாவட்டத்

(திரு. மா. வெ. கரிவேங்கடம்—தலைமை)

தின் பெயரே இல்லை. ஆதலால் அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்காமல், நல்ல திட்டங்களை வகுத்து, ஆய்வு நடத்தி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆய்வுரையின் முதல் பக்கத்தில் "சிற்றாறு-பட்டணங்கால் திட்டம் முடியும் நிலையில் உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கூறிய வேலை முடிவடைவதற்கு முன் சில மிக

முக்கியமான காரியங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, நல்லூர், நட்டலாம், கிள்ளியூர், மிடாலம், கீழ்மிடாலம், கீழ்குளம், பைங்குளம் ஆகிய ரெவின்யூ கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் ஊர்களுக்கும் கிளைக் கால்வாய்கள் வேண்டும், கால்வாய்களை நீட்டித் தரவேண்டும், மடைகளை அமைத்துத் தரவேண்டும் என அதிகாரிகளுக்கும் அரசுக்கும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்த வண்ணம் இருக்கிறார்கள். ஆனால் அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில கால்வாய்களுக்கு சிமெண்ட் கான்கிரீட் செய்யப்பட வேண்டும். அதை விரைவில் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் சிற்றாறு-பட்டணங்கால் செல்லும் இடம் எல்லாம் மேடுபள்ளம் நிரம்பிய இடமாக இருக்கிறது. சில இடங்களில் மேடான பகுதிகளிலுள்ள மக்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, உயர்ந்த மட்டங்களில் உள்ள ஊர்களுக்கு 'லிஃப்ட் இரிகேஷன்' மூலம் பயிர் செய்ய தண்ணீர் வசதி அளிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றனர். முள்ளங்கனவிளை, செம்முதல் ஆகிய ஊர்களிலுள்ள மக்கள் விண்ணப்பத்திருக்கிறார்கள். அவர்களுடைய விண்ணப்பங்களுக்கும் அனுகூலமான முடிவு உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, நெய்யார் இடதுகரை சானலிலிருந்து ஒரு கிளைக் கால்வாயை ஏழுதேசப்பற்று கிராமங்களிலுள்ள கிராத்தூர் முதலான இடங்களுக்கு தண்ணீர் கிடைக்க, நெய்யார் இடதுகரை சானலில் ஒரு கிளைக்கால்வாய் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்கான காரியங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைனர் இரிகேஷனுக்கு இப்பொழுது கொடுக்கப்படுகின்ற தொகை போதுமானதாக இல்லை. எங்கள் விளவங்கோடு தாலுகாவில் ஏகதேசமாக 900 குளங்கள் இருக்கின்றன. அவைகள் பழுதடைந்த நிலையிலே காணப்படுகின்றன. மைனர் இரிகேஷனுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மழைக்காலம் வந்தபிறகு தான் ஒதுக்கப்படுகிறது. மழைக்காலத்தில் குளங்களை ஆழப்படுத்த வசதியில்லாமல் போய்விடுகின்றது.

அடுத்தபடியாக, பாசனக் கிணறுகளுக்கு மின்இணைப்பு கொடுப்பதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. கிணறுகளுக்கு மின் இணைப்பு உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, சாலை பராமரிப்பு பற்றியது. இந்த மாநிலத்தின் சாலைகள் பராமரிப்பு திருப்திகரமாக இல்லையென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பெரும்பாலான பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நிதிவசதி இல்லாத காரணத்தால் சாலைகளைப் பராமரிக்க இயலாத நிலையில் இருக்கின்றன. ஒரு ரோடில் பாலம் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதைச் செய்து முடிக்க இயலாதவாறு பல ஆண்டுகள் செல்கின்றன. ஆதலால் ஹைவேஸ் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும், பஸ் ரூட்டுகள் உள்ள சாலைகளை ஹைவேஸ் கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக ரோடு ஹைவேஸ் எடுத்ததாகத் தெரியவில்லை. பல சாலைகளை எடுத்துக் கொள்ளும்படி சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பஸ் ரூட்டுகள் இருக்கும் சாலைகளையும், முக்கிய சாலைகளையும், இதுதவிர முக்கியமான சாலைகளில் பாலங்கள் கட்டும் வேலைகளின் பொறுப்பையும் ஹைவேஸ் டிபார்ட்மென்டே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, திருவனந்தபுரம் நாகர்கோவில் கன்னியாகுமரி தேசீய சாலை இருக்கிறது. ஏகதேசம் 35 ஆண்டுகளுக்கு முன் சிமெண்ட் போடப்பட்ட சாலை. பழுதடைந்த இடங்களில் தார் போடுகிறார்கள். அப்படிச் செய்வதால் அந்த ரோடின் அழகே கெட்டுவிடுகிறது. ஆகவே, அதை சிமெண்ட் கான்க்ரீட் போடச் செய்ய மத்திய அரசை வற்புறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பல ரோடுகளுக்குப் பாலங்கள் இல்லாத குறை இருக்கின்றது. குழித்துறை ஆறில் ஞாறுமலைக்கடவு, திக்குறிச்சி ஆகிய இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டியது மிக அவசியம் மக்களின் நீண்டகால அபிலாஷை பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஏ.வி.எம். கால்வாயில் தூர் எடுக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும்.

இனயம்துறை, தூத்தூர்துறை, பூத்துறை முதலிய இடங்கள் கடல் அரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களாக இருக்கின்றன. அதன் ஆபத்தை எப்பொழுதும் மக்கள் எதிர்பார்த்து, பயந்துகொண்டே இருக்கிறார்கள். கேரளா மாநிலத்தில் கொல்லத்தில் நீண்ட கரையில் கடலரிப்பைப் போக்க கல் அடுக்கப்பட்டிருப்பதைப்போல கல் அடுக்குவதுதான் கடல் அரிப்பைத் தடுக்கும் சிறந்த மார்க்கமாகும். அதற்கான வழிவகைகளை வகுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. பி. கோபால்: மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டின் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கியமைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்கிக்கொள்கிறேன்.

[திரு. பி. கோபால்] [1971 ஜூலை 2

முதன் முறையாக, இந்த மாமன்றத்தில் எனது பேச்சினைத் துவக்குவதற்கு முன்பாக என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய எனது கோவை மேற்குத் தொகுதியில் வாழும் மக்களுக்குத் தங்கள் மூலமாகவும் இந்த மாமன்றத்தின் மூலமாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எங்கள் கழகத்தின் காவலரும், எங்களுக்கெல்லாம் தலைவரும், அரசின் முதல்வருமான கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு 1971-72-ம் ஆண்டின் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்த 1971-72-ம் ஆண்டின் மானியக் கோரிக்கையின் மீதான அறிக்கை இதுவரை எந்த மாநிலத்திலும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் நமது கழக அரசின் சாதனைகளைத் தன்னகத்தேகொண்டு திகழ்வது கண்டு, தமிழகத்து மக்களாகிய நாம் பூரிப்பும், புத்தெழுச்சியும் பெறுகிறோம்.

சிறப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையை உருவாக்கித் தந்து இந்த மாநிலத்தின் பெருமையைத் தெளிவாக உயர்த்திக் காட்டி உள்ளார்கள்.

எனது தொகுதியாகிய, கோவை மேற்குத் தொகுதியிலுள்ள ஒருசில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். கோவை நகரத்திற்கு உட்பட்ட நெடுஞ்சாலைகள் அனைத்திலும் நடைபாதையை விட்டுவிட்டு முழு அளவில் தார் ரோடாகப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தெற்குப் பகுதியில் உள்ள வாலாங்குளம் வறண்டு, நீண்ட நாட்களாகத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அந்த இடத்தில் தூர் எடுத்து 15 ஆண்டுகளாகிவிட்டன. அது பெரிய பகுதியாக இருப்பதாலும், அந்த இடத்திற்குத் தண்ணீர் வருவதற்கு வழி இல்லாத காரணத்தாலும் அதில் ஒரு பகுதியைக் குடிசை புனரமைப்பு செய்வதற்குக் கொடுத்தால் மிக்க வசதியாக இருக்கும் என்பதைப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாலாங்குளத்தின் ஒரு பகுதியில் கால்வாய் வெட்டி, மதகுகள் அமைத்து, விவசாயம் பாதிக்கப்படாமல், தண்ணீர் கிடைப்பதற்கு வழி வகுக்கலாம். அதிக மழை பெய்தால்தான் தண்ணீர் வருகிறது. வாலாங்குளம், முத்தண்ணன்குளம் பகுதிகளில் பல ஆண்டுகள் தண்ணீர் கிடையாது. அந்தப் பகுதிகளில் எல்லாம் குடிசைகளை அமைத்துக் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

அடுத்து, ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் ஆதரவோடு நல்ல ரோடுகளைப் போட வேண்டுமென்று திட்டங்கள் தீட்டப்பட்டன. அதற்கான வேலைகளை வேகமாகத் துவக்கி கோவை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 2] [திரு. பி. கோபால்]

ஐந்து லட்சம் மக்கள்தொகை கொண்ட வளர்ந்துவரும் கோவை நகரத்தில் போக்குவரத்து நெரிசலைப் போக்க அவினாசிசாலையில் ரயில்வே கேட் மேம்பாலம் கட்டும் திட்டம் இருக்கிறது. ரயில்வே கேட்டுகள் மூடப்படுவதால் முக்கால் மணிநேரம் காத்துக்கிடக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே தீட்டிய திட்டத்தின்படி பணியைத் துவக்கி போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக சிறுவாணித்திட்டம் பற்றி, இந்த மன்றத்தில் பலமுறைப் பேசப்பட்டு வந்தும் இத்திட்டத்தை இன்னும் நிறைவேற்றி வைக்கவில்லை. இதை நிறைவேற்றி வைக்கவில்லையென்று கோவை நகரத்து மக்கள் வேதனைப்பட்டுக்கொண்டு, கண்ணீர் சிந்தும் நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, சிறுவாணித் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமென்றால் நெல்லித்துறை குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டுகிறேன். இதனால் பத்து லட்சம் மக்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும். கோடை வந்துவிட்டால் ஏற்படும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை இத்திட்டத்தினால் ஒழிக்க இயலும் என்று பொறியியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக, கோவை நகராட்சி, சிங்காநல்லூர் நகராட்சி, மேலும் இதைச் சுற்றியுள்ள இடங்களுக்கும் விரிவுபடுத்தினால் நிரந்தரமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை நகரத்திலே பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பிரதான அலுவலகக் கட்டடம் இருக்கிறது. கோவை நகர மன்றத்திற்கு இடம் போதுமானதாக இல்லாமல் இருக்கிற காரணத்தினால் அந்தக் கட்டடத்தை கோவை நகரமன்றத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வளரும் கோவை நகரம் மாநகராட்சியாகின்ற நேரத்திலே பெரிதாகக் கட்டடம் கட்டுவதற்கும், பல அலுவலகங்கள் அமைப்பதற்கும் வசதியாக இருக்கும். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பன்முறை கோவை நகரத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். அவர்களுக்கு அங்குள்ள பிரச்சனைகள் எல்லாம் நன்கு தெரியும். எனவே அந்த நகரத்தின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரத்தில் உள்ள சாலைகள் சீரழிந்து இருக்கின்றன. இன்னும் சில சாலைகளையும் சீராக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கோவை நகரத்தினுடைய பிரச்சனைகளை மிக அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று தாழ்மையோடு, பேரவைத் தலைவர் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவர் அவர்களே, இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். பொதுவாக, பழைய கால்வாய்கள் என்று சொல்லப்படுகின்ற அமராவதி, காலிங்கராயன் கால்வாய் போன்றவற்றைத் துப்புரவுப் படுத்தவும் இரு மருங்கிலும் காரை பூசவும் திட்டங்கள் தீட்டியிருப்பது வரவேற்கத் தக்கதாகும். வீராணம் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கவேண்டுமென்று முயற்சி செய்கின்ற இந்த அரசை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை நகரத்திலே 35 லட்சம் ரூபாய் செலவிலே நீதிமன்றம் கட்டிக்கொடுத்திருக்கின்ற இந்த அரசை அந்த நகரத்தின் மக்கள் சார்பாகவும் வழக்கறிஞர்கள் சார்பாகவும் மனமாரப் பாராட்டி நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த தாராதனூர்—நெடுங்குளம் ஆகியவற்றின் இடையிலே உள்ள இரண்டு பாலங்களைக் கட்டுவதற்கு கடந்த ஆண்டு தீர்மானித்து இந்த ஆண்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து உண்மையாகவும் மனப்பூர்வமாகவும் பாராட்டையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே சிறப்பான அம்சம் என்னவென்றால் வேலை நிதி ஊதிய பணியாளர்கள் மாநாடு மூலமாகவும், சட்ட மன்ற உறுப்பினர்கள் மூலமாகவும், தங்களுடைய நிர்வாகிகள் மூலமாகவும், தங்களுடைய அமைப்புகள் மூலமாகவும் பல விண்ணப்பங்கள் கொடுத்திருந்தார்கள். அவர்களையெல்லாம் தற்பொழுது மாநில ஊழியர்களாக மாற்றியதோடு மட்டுமல்லாமல் மாநில ஊழியர்களுக்கு என்ன என்ன வசதிகள் உண்டோ, என்ன என்ன சலுகைகள் அத்தனை சலுகைகளையும் வழங்கியிருப்பது கண்டு உண்மையாகவே பெருமகிழ்ச்சியடைகிறோம். அதற்காக அந்தச் சமுதாயத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் மற்ற வசதிகளையும் அவர்களுக்கு வேகமாகவும் விரைவாகவும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகவும் அருமையாகவும் காவிரி நீர் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மைசூரிலுள்ள காவிரியின் கிளை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சுவர்ணவதி ஆகியவற்றில் பாசனத்திற்காகச் சில அணைகளைக் கட்ட மைசூர் அரசு முனைந்திருப்பதால் 'வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' வறண்டு விடுமோ என்ற அச்சத்தால் நம்முடைய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆவன



திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். நம்முடைய ஒப்புதலும் பெறாமல், மத்திய சர்க்காரின் ஒப்புதலும் பெறாமல் மைசூர் மாநிலம் இந்தவேலையில் இறங்கியிருக்கிறது 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், 1822-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஆகியவைகளுக்கு இந்தச் செயல் மாறுபட்டிருக்கிறது என்று மிகத் தெளிவாக இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் தெளிவாகச் சில திட்டங்களைப் பற்றி சுட்டிக்காட்டினார்கள். நானும் அதைப்பற்றிச் சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள ரஸ்தாக்களின் பராமரிப்புக் குறைந்திருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. மதுரையிலிருந்து குளமங்கலத்திற்கு 8 மைல் தூரம் இருக்கிறது. அந்தப் பாதையின் பராமரிப்பு பி. டபிள்யூ.டி. கன்ட்ரோலில் இருக்கிறது. அந்தப் பாதை குறுகியதாக இருப்பதால் சிடி பஸ்கள் செல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு அந்தப் பாதையில் விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் கவனித்து போக்குவரத்து ரஸ்தாக்களை வேகமாகவும் விரைவாகவும் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடைக்கானல்-பழனி குறுக்குப் பாதை இருக்கிறது அந்த ரஸ்தாவை ஏறத்தாழ 75 லட்ச ரூபாய் செலவில் நம்முடைய அரசு அமைத்துக்கொடுத்து இருக்கிறது அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு பூ. எட்டியப்பன்: தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுப்பணித் துறை மானியத்தின்மீது பேசும்பொழுது மக்களுக்கு நல்ல வாய்ப்பினைக் கொடுத்து நல்ல முறையிலே அமைத்திருக்கும் சீரிய திட்டத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரு சில குறிப்பிட விரும்புகிறேன்.

பாசனத்தைப்பற்றி ஏற்கெனவே நான் இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். விண்ணமங்கலத்திலிருந்து வட திண்ணனூர் வரையிலும் செல்லும் நீர்ப்பாசனக் கால்வாய்பற்றி அரசாங்கம் பரிசீலனைசெய்து தலைமைப் பொறியாளர் அவர்கள் மதிப்பீடு தயாரித்து—42 லட்சம் ரூபாய் என்று சொன்னேன், 42.50 லட்சம் ரூபாய் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் 12 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். கடந்த புயல் அடித்தபோதுகூட நிரம்பாத சில ஏரிகள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் தண்ணீர் நிரம்பி இருக்கக்கூடிய நிலைமையும் ஏற்படும். தவிர 3 போகம் சாகுபடி செய்யக்கூடிய நிலைமையும் உண்டாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற ஆண்டு நிறுத்தி வைத்த இந்தத் திட்டத்தை இந்த ஆண்டாகிலும் எடுத்துக்கொண்டால் வேலையில்லாத மக்களுக்கு வேலை கிடைக்கும்.

[திரு. பூ. எட்டியப்பன்] [1971 ஜூலை 2

என்னுடைய தொகுதி மிகவும் பின்னடைந்த பகுதி. எனவே பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு இதனால் அங்கே வேலை வாய்ப்புக் கிடைக்கும். விவசாய உற்பத்தியையும் அதிகப்படுத்த வாய்ப் பிருக்கிறது என்பதை மீண்டும் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பாசனத்தின் காரணமாகச் சுற்றுப்புறங் களில் ஒன்றிரண்டு போகங்கள் மட்டும் விளைவிக்கக்கூடிய நிலங்களை மூன்று போகம் தரும் நிலங்களாக மாற்றலாம். மேலும் ஏரியில் நீர் தங்கக்கூடிய நிலைமை இதனால் ஏற்படும். அப்பொழுது கிணறு களிலும் தண்ணீர் வற்றாமல், பாசனத்திற்குக் கிடைக்கக்கூடிய நிலைமையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை எங்கள் அனுபவபூர்வமாகத் தெரிவித்துகொண்டிருக்கிறோம்.

மேலும் இந்தப் பொதுப் பணித் துறை பற்றி எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் எடுத்துக் கூறினார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் சாலைகளைப் பராமரிப்பதற்குப் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், குறிப்பாகப் பஸ்கள் செல்லக் கூடிய இடங்கள் எல்லாவற்றையும் பொதுப்பணித்துறையே அந்தச் சாலைகளை எடுத்துக்கொண்டால் நல்லது, அவ்வாறு செய்தால் போக்குவரத்திற்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாது வசதியாக இருக்கும் என்று மீண்டும் நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளு கிறேன்.

பொணமல்லூர் தொகுதியையும், ஆற்காடு தொகுதியையும் இணைத்து சேயாறுக்குச் செல்லும் வகையில் வாழைப்பந்தல் சமீபமாக ஒரு ரோடு, பாலம் அமைக்க அரசாங்கத்திற்கு மதிப் பீடெல்லாம் தயாரித்து வந்திருக்கின்றது. அந்த வேலைகளை எடுத்துக்கொள்வதன் மூலமாக வாலாஜா தாலுக்காவையும், சேயாறு தாலுக்காவையும் ஒன்றிணைக்க முடியும். இந்தக்கரையிலே கொருக்காத்தூர் இருக்கிறது, அடுத்தகரையிலே வாழைப்பந்தல் என்ற கிராமம் இருக்கிறது. வாழைப்பந்தல் கிராமத்திலே இருப் பவர்கள் இந்த ஆற்றைக் கடந்து இங்கே வரவேண்டியவர்களாக யிருக்கிறார்கள். அதுபோல கொருக்காத்தூர் கிராமத்திலிருப்பவர் கள் வாழைப்பந்தல் கிராமத்திற்கு விவசாயம் செய்யும் நேரங்களில் செல்ல இருக்கிறார்கள். மழைக் காலத்தில் தண்ணீர் வரும்பொழுது ஏறத்தாழ 20 நாட்கள், 25 நாட்கள் வரையிலே அந்த ஆற்றிலே குறுக்கே கடந்துசெல்ல முடியாத நிலை இருப்பதால் உடனடியாக, அந்தப் பாலத்தை 2.42 இலட்சத்திலே தயாரித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த வேலையை இந்த ஆண்டிலே எடுத்துக் கொண்டால் நல்ல போக்குவரத்திற்கு வசதியாக இரண்டு தாலுக் காக்களையும் இணைப்பதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று மீண்டும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில் சில பஞ்சாயத்துக்களில் இந்தச் சாலைகளைப் போட்டுவிட்டு மீண்டும் மேலும் அதை நல்ல முறையிலே பராமரித்து அந்தக் கல்வர்ட்டுகளை நிர்மாணிக்க பஞ்சாயத்திலே போதிய வசதியில்லாமல் நீண்ட நாட் களாக அப்படியே இருக்கிறது. அந்தச் சாலைகளையெல்லாம்



1971 ஜூலை 2] [திரு. பூ. எட்டியப்பன்]

அரசாங்கம் கவனித்து செலவு செய்ய பிரத்தியேக அனுமதியின் பேரில் செப்பனிட்டுத் தந்தால், குறிப்பாக விவசாய நிலங்களுக்குச் செல்லும் சாலைகளுக்கெல்லாம் அப்படி நிறைவேற்றிக் கொடுத்தால் அவர்கள் மகசூலைக் கொண்டு வரவும் எரு, தழை முதலியவைகளை ஏற்றிச் செல்லவும் வசதியாக இருக்கும் என்று மீண்டும் பணி வன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, 1954-ஆம் ஆண்டு பெரணமல்லூர் கிராமத்திலே 504 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்குத் தலையின்மீதோ அல்லது கழுதை களின் மீதோ எருக்களை எடுத்துச் செல்வதும், அந்த மகசூலைக் கொண்டுவருவதுமாகயிருந்தார்கள். 1954-ஆம் ஆண்டு நான் அந்தப் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு நாங்கள் கிராமத்தில் கூட்டம் கூடி மக்களைக் கலந்து, 3 நாட்களிலே ஒரு சாலையை நஞ்சை நிலங்களுக்கு மத்தியில் உருவாக்கினோம். அதன் பயனாக ஒரு செண்ட் நிலம் 15 ரூபாய், 10 ரூபாய் என்று இருந்த நிலைமாறி இப்பொழுது 50 ரூபாய், 100 ரூபாய் என்று விலைமதிப் புள்ள நல்லதொரு வாய்ப்பு கிட்டியிருக்கிறது. எனவே விவசாயி கள் பெருவாரியாக இருக்கும் இடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. சே. சதாசிவம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக் கின்ற மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய தொகுதி யைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

திருச்சி ஜில்லாவிலே அரியலூர் தாலுக்காவில் ஒரு யூனியனும், உடையார்பாளையம் தாலுக்காவில் ஒரு யூனியனும் சேர்ந்து என்னுடைய தொகுதியாக இருக்கிறது என்னுடைய தொகுதி யின் நல்ல காரியங்களுக்கெல்லாம் இரண்டு தாலுக்காவிலுள்ள ஆபீசர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற நிலை யிலுள்ளேன் என்பதனையும், என்னுடைய தொகுதி பூராவுமே பொட்டல் மண் உள்ள பகுதி என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். யாரை அழைத்துச் சென்றாலும் காலையில் ஒரு டிரஸும், மாலையில் ஒரு டிரஸும் இருந்தால்தான் நல்ல நிலையில் இருக்கும், அந்த அளவிற்குப் பொட்டல் காடு, ரோடு வசதி மிகக் குறைவு. பஞ்சாயத்து யூனியனிலே நல்ல நிதி வசதியில்லாத காரணத்தால் ரோடுகள் சரிவர பராமரிக்கப்படவில்லை. சுருக்கமாகக் கூறினால் என்னுடைய தொகுதியில் 18 மைல் தூரம்தான் ரோட்டிற்குத் தார் போடப்பட்டிருக்கிறது. பாக்கியெல்லாம் பொட்டல் மண் ரோடாகத்தான் இருக்கிறது என்ற நிலையை அரசுக்குத் தெரி வித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது 10 மைல்களுக்கு மேற் பட்டு அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட மதிப்பெண் வைத்து அந்த தூரத்துக்கு மேல் இருக்கும் அந்தப் பாதைகளைப் பெரு வழித்துறையிலே எடுத்துச் சீர் செய்துகொடுத்தால் நல்லது.

பஸ்கள் பல பாகங்களிலே ஓடிக்கொண்டிருந்தாலும் பொட்டலின் நிலைமை கொஞ்சமும் மாறவில்லை. எனவே அவைகளை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது, தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து தென்னார்க்காடு ஜில்லாவிற்குப் போகவேண்டுமானால் கும்பகோனம், அணைக்கரை போன்ற ஊர்களைச் சுற்றியும், அல்லது திருச்சி, பெரம்பலூர் போன்ற ஊர்களைச் சுற்றிக்கொண்டும் வரவேண்டிய நிலையிருக்கிறது. இப்பொழுது திருமானூரில் அரசாங்கத்தால் கொள்ளிடத்தில் பாலம் கட்டும் வேலை நடந்துகொண்டு இருக்கிறது. அதைப் போலவே பெண்ணாடத்திற்குச் செல்வதற்கு வெள்ளாற்றிலே ஒரு பாலம் கட்டிக்கொடுத்தால் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து தென்னார்க்காடு ஜில்லாவிற்கு அரியலூர் வழியாகப் போகக் குறைந்த மைல் அளவிலே செல்ல வசதியாக இருக்கும். இதை உடனடியாக அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இப்பொழுது கொடுக்கூரிலிருந்து கிருஷ்ணுபுரத்திற்கும், செந்துறையிலிருந்து உடையார்பாளையத்திற்கும், உடையார்பாளையத்திலிருந்து அரியலூருக்கும் செல்ல சரியான பாதையில்லாமலிருக்கிறது. உடையார்பாளையத்திற்கு பக்கத்திலுள்ள பரணம், குமிழியம் போன்ற கிராமங்களிலிருந்து அரியலூர் காலேஜுக்குச் சென்றுவர வாய்ப்பிருக்கிறது. எனவே அரியலூரிலிருந்து ஆண்டிமடம் வழியாக உடையார்பாளையத்திற்குப் பாதை போட்டுக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பொன்பரப்பில் குடிக்காட்டிலிருந்து திட்டக்குடிக்குக் கிட்டத்தட்ட 15 வருஷ காலமாக ரோடுபோடப் பட்டிருந்தும், பெரியாக் குறிச்சி இரயில்வே லையனில் ரயில்வேகேட் போடுவதற்கான திட்டத்திற்கு மத்திய சர்க்கார் பணம் கட்ட வேண்டுமென்று சொல்லி மறுத்து வருகிறார்கள். ரோடு போடப் பட்டும் பொது மக்களுக்கு வசதியில்லை. எனவே அதைப்பற்றி மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டுமென தமிழக அரசு சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிமடத்திலிருந்து திருக்களப்பூர் செல்ல வேண்டுமென்றால், சரியான பாதை வசதி இல்லை. அங்கு ஒரு உயர்நிலைப்பள்ளிகூட இருக்கிறது, எந்த அதிகாரியாவது செல்ல வேண்டுமென்று சொன்னாலும், முன்னாலேயே சொல்லியனுப்பி, நீங்கள் அங்கு வந்திருந்து அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று சொன்னால் ஒழிய யாரும் அந்தக் கிராமத்திற்குப் போக முடியாது. ஆண்டி மடத்திற்கும் திருக்களப்பூருக்கும் இடையில் பெரும் ஓடை இருப்பதால் போக முடியாமலிருக்கிறது. எனவே அங்கு ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



உடையார்பாளையம் என்ற கிராமத்திலிருந்து 3 மைல் தூரம் இலையூர் என்ற கிராமம் இருக்கிறது. ஆனால் நடுவில் ஓடையிருப்பதால் உடையார்பாளையத்திலிருந்து இலையூர் வருவதென்றால் ஜெயங்கொண்டம் வந்துதான் வரவேண்டியிருக்கிறது. இதைப் பற்றியும் பஞ்சாயத்து யூனியன் அறிவித்திருக்கிறார்கள். எனவே அந்த ஓடையைக் கட்டிக்கொடுத்தால் 3 மைல் தூரத்தில் போக்குவரத்து செய்ய முடியுமென்றும் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் செந்துறையிலிருந்து கோடாலிக் கருப்பூருக்கு உடையார்பாளையம் வழியாகவும் பாதை அமைத்துக்கொடுத்தால் குறைந்த அளவு தூரத்தில் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே அங்கேயும் நல்ல ரோடு வசதியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதிக்காக ஒரு ஆறுகூடக் கிடையாது. ஒரு ஆற்றுப் பாசனம்கூட என்னுடைய தொகுதியில் கிடையாது. ஏரிகள்தான் இருக்கின்றன. இந்த ஏரிகளும் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் தான் இருக்கின்றன. பெரிய ஏரிகள் பஞ்சாயத்து யூனியனில் நிதி வசதியில்லாமையால் பராமரிக்கப்படவில்லை. ஆகையால் அந்தப் பகுதிக்குக் கோடிக்கணக்கில் இல்லையென்று சொன்னாலும் சில இலட்சக்கணக்கான ரூபாய்களாவது ஒதுக்கி அந்த ஏரிகளைப் பராமரிக்க ஆவன செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உப்பு ஓடைத்திட்டம், நீலாம்புரம் ஏரித்திட்டம், வங்காரம் ஏரித் திட்டம் ஆகிய திட்டங்கள் செந்துறை யூனியனில், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சர்வேயெல்லாம் முடிந்த பின்பும் இதுவரை நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட வில்லை. ஆகவே, உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டிமடம் யூனியனில் புதுக்குடி ஏரி நமது ஓடைத்திட்டம், ராங்கியம் ஏரித் திட்டம் போன்றவை சரிவரப் பராமரிக்கப் படாமல் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுத்துச் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மருவூர் கிராமத்தில் இருப்பது போன்று ஒரு அடி அகலமுள்ள ஆழக் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்தால் ஒவ்வொரு ஆழக் குழாய்க் கிணற்றின் மூலம் 50, 60 ஏக்கர் பாசன வசதி பெறமுடியும். அந்த ஆழக் குழாய்க் கிணறுகளைப் போட்டு இன்ன ரேட்டில் தீர்வை செலுத்த வேண்டுமென்று சொன்னால் கூட பொதுமக்கள் செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் கூட மக்கள் அந்தச் செலவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். விரைவில் அதனைச் செயற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று. இப்போது பெரியாகுறிச்சி கிராமத்தில் இருந்து பொன்பரப்பி, குடிக்காடு, சிருகளத்தூர், மருவத்தூர் வரை குடிதண்ணீர் கொண்டுவர ஒரு திட்டமிருக்கிறது. இதிலே உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களுக்கு முதல் தேவையாக இருக்கும் குடிதண்ணீரை குழாய்கள் மூலமாக சில லட்சம் ரூபாய் செலவு செய்து கொண்டு வந்தால் கிராம மக்கள் பயன்பெற முடியும். திராவிட முன்னேற்றக் கழக அரசை நம்பித்தான், திராவிட முன்னேற்றக் கழக அரசு தங்களுக்கு நன்மை செய்யும் என்று எதிர்பார்த்துத்தான் சென்ற மூன்று தடவைகளாக தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக் காரியங்களை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். மருதாசலம்** : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கோவை மதுக்கரை பிர்க்காவில் என்னுடைய தொகுதியில் இரண்டு குட்டைகளைக் கட்டி அந்தப் பகுதியைச் செழிப்படையச் செய்தமைக்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில் மதுக்கரையில் பாலத்துறையில் ஒரு பெரிய அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு 1962-ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டு ரூ. 6,00,000 சாங்ஷன் செய்யப்பட்டது. அது பற்றி சர்வே எல்லாம் செய்து முடிந்தபிறகு என்ன காரணத்தாலோ நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது அந்தப் பகுதியில் அணை கட்டுவதற்குப் பதிலாக ஒரு குட்டை கட்ட ரூ. 50,700 அனுமதிக்கப்பட்டிருப்பதாக பொதுப் பணித் துறை எஞ்சினியர் மூலமாக அறிந்தேன். ஏற்கனவே திட்டமிடப்பட்ட அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றினால் குறைந்தபட்சம் ஆயிரம் ஏக்கர் நிலம் வரை பாசன வசதி பெற முடியும். அந்த வகையில் அந்த அணைக்கட்டைக் கட்டித் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பேராளுமாம்பட்டி அணையில் இருந்து வேடப்பட்டி சுண்ணாம்பட்டு வழியாக கால்வாய் முத்தண்ணா குளத்திற்கு வருகிறது. அதில் 41 மதகுகள் இருக்கின்றன. அதில் 20 மதகுகள் மூலந்தான் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. 21 மதகுகள் மண்ணடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த மதகுகளைப் பாராமரிப்பு செய்து அந்தப் பகுதி விவசாயிகள் நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் போகும்படி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





குளமோ, வாய்க்காலோ இல்லாவிட்டாலும் அந்தப் பகுதியில் நொய்யல் நதித் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த நதி பேரூர் வழியாக வந்து கொண்டிருக்கும்போது அதிலே எந்த விதமான பராமரிப்பும் கிடையாது. 20 வருஷ காலமாக எந்த வித பராமரிப்பும் செய்யப்படாமல் இருக்கிறது. அந்த நதி பெருக்கெடுத்து வந்தால் இருபகுதியில் இருக்கும் தோப்புகள் செழிப்படைந்து நன்றாக இருக்கும். இந்த நொய்யல் நதியை மராமத்து செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வழுக்குப் பாறையில் அரசாங்கம் ஒரு பாலம் கட்டியிருக்கிறது. அது இன்றைக்குக் கண்காட்சிப் பாலமாகத்தான் இருக்கிறதே தவிர பயன்படுத்த முடியவில்லை. பாலத்தின் அந்தப் பக்கத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் தனிப்பட்ட சொந்தக்காரருடைய பூமியின் மேல் போக வேண்டும். அவர் விடமாட்டேன் என்று சொல்லுகிறார். பாலத்திலிருந்து அரை பர்லாங் தூரத்திற்குத்தான் தடம் வேண்டும். அந்தத் தடத்தை உடனடியாக எடுக்க பெருவழித்துறை எஞ்சினியருக்கு உத்தரவிட்டு வழி ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருவழித் துறையில் ரோடு வேலை செய்யக்கூடியவர்கள் ஐந்து வருஷம், பத்து வருஷமாக வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு காஷுவல் லீவ் சிக் லீவ் ஒன்றும் கிடையாது. அவர்களை என்றைக்கு வேண்டுமானாலும் போகச் சொல்லலாம், என்றைக்கு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அவர்களை நிரந்தரக் கூலிகளாக ஆக்கி அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பண்ணையில் வேலை செய்யும் ஏழை விவசாயக் கூலிகள் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்கு வேலை செய்கிறார்கள். வெளியிலே கொடுக்கும் மூன்று, மூன்றரை ரூபாயை அரசாங்கப் பண்ணையில் வேலை செய்யும் கூலிகளுக்கும் கொடுப்பதோடு கூட அவர்களை நிரந்தரக் கூலிகளாகவும் ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குனியாமுத்தூர் பள்ளிக் கட்டடம் கட்ட ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் மக்கள் 11,000 ரூபாய் வசூல் செய்து கல்வி இலாகாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ரூபாய்க்கு மேல் அவர்களால் வசூல் பண்ண முடியாத நிலை இருப்பதால் உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தை அரசாங்கமே கட்டித் கொடுப்பதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்குக் கல்வி வசதி செய்து தரவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மா. வெ. கரிவேங்கடம்).** இதைப் பற்றிக் கல்வி மானியத்தில் பேசும்போது கூறுங்கள்.

**திரு. என். மருதாசலம்** : இந்த மாதிரி நல்ல காரியங்களைச் செய்வதால் அந்தப் பகுதி மக்கள் நல்ல பயன் அடையமுடியும். ஆகையால் இந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. நா. நாச்சிமுத்து** : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பொதுப் பணி மானியத்தை வரவேற்றுப் பேசுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மற்ற மானியங்களின்மீது செலவு செய்யப்படுவது எப்படி இருந்தாலும் இந்த மானியத்தின் மூலம் செலவிடப்படுகின்ற பணம் ஏழை எளிய மக்களுக்கு நேரடியாகப் பயன்படுகிறது. சிறப்பாக சிறுபாசனத் திட்டத்திற்காக 252 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இந்தச் சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ஆறுவகை பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஊற்று நீர் மட்டத்தை உயர்த்துவதற்கென்று ஒரு வகை பணிக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். எங்கள் பகுதி ஒட்டன்சத்திரம் பகுதியைப் பொறுத்தவரையில் இந்த வகையான பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பல நூறு சதுர மைல் பரப்புள்ள அந்தப் பகுதியில் 1,500 ஏக்கருக்குக் குறைவாகத்தான் நஞ்சைப் பாசனம் இருக்கிறது. அப்படிப்பட்ட வறண்ட பகுதிகளில் இப்படிப்பட்ட திட்டங்களைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்தவரை பெரிய ஆறுகள் கிடையாது. சிறு சிறு காட்டு ஆறுகள்தான் இருக்கின்றன. இப்போதுள்ள பரப்பலாறு திட்டத்தில் கூட எங்கள் பகுதிக்கு கொஞ்சம் நீர்தான் வழங்கப்பட்டு பாசனத்திற்குப் பயன்படும் என்று அறிகிறேன்.

அதேபோல் மற்ற ஆற்றுத் திட்டங்களில்கூட எங்கள் தொகுதி பயனடையவில்லை என்று நான் கருதுகிறேன். இப்போது பழனிப் பகுதியில் எடுத்து வேலை செய்யப்படும் பாலாறு—பொறந்தலாறு திட்டத்தில் ஏற்கெனவே சர்வே செய்யப்பட்டபடி சண்முகா நதிக்கு வலது புறம் இருக்கும் நிலங்களுக்கு பாசனம் வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு ஏற்பட்ட சர்வேக்களில் அந்தப் பகுதி விடப்பட்டு, ஆற்றுக்கு மேல் பகுதியை மட்டும் பாசனத்திற்கு எடுத்துக் கொள்வதாகத் தெரிகிறது. ஆகவே, முன்பு செய்யப்பட்ட முறையிலேயே அந்த ஆற்றுக்கு கிழக்கே உள்ள பகுதிகளுக்கும் நீர் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரதமாநதி திட்டத்தின் மூலமாக, ஒட்டன்சத்திரம் பகுதிக்கு நீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஒட்டன் சத்திரம் பகுதியைப் பொறுத்தவரையில் இந்த சிறுபாசனத் திட்டத்தை செயல்படுத்தும்போது பல இடையூறுகள், நிர்வாகத்





துறையில் ஏற்படுகிறது. குறிப்பாக நான் பார்ப்பது இந்தத் தொகுதியில்தான் ஒரு வேலையை எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு டன் உணவு தான்யத்திற்கு இத்தனை ரூபாய் செலவழிக்கப்பட வேண்டும் என்று இருந்து, அதற்கு மேல் செலவழிக்கப்படுவதாக இருந்தால், அந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாது என்று கூறிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்றி விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்று எவ்வளவோ விலைவாசிகள் ஏறி இருக்கின்றன. அப்படி விலைவாசிகள் ஏறி இருக்கும் காலத்தில்கூட முன்பு போட்ட விகிதாசாரத்தையே கணக்கில் கொள்ளாமல் அந்த விகிதாசாரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இப்போது எஸ்.ஈ. அவர்களுக்கும், சி.ஈ அவர்களுக்கும், ஈ.ஈ. அவர்களுக்கும், ஏ.ஈ அவர்களுக்கும் இவ்வளவு ரூபாய்வரைதான் மதிப்பீடுகளை ஒப்பளிக்கலாம் என்று இருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தவேண்டும். தேவை இல்லாமல் அடிக்கடி சி.ஈ. ஆபீசுக்கு அதிமாக மதிப்பீடு கட்டுகளை அனுப்ப வேண்டியிருக்கிறது. இது காலதாமதத்தை ஏற்படுத்துகிறது. மேலும், இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும்போது, இன்ஜினீரிங் பகுதிக்கும், வருவாய்த்துறைப் பகுதிக்கும் மிகவும் தொடர்பு ஏற்படவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொடுத்தாலும் வருவாய்த்துறையில் இருப்பவர்கள் கன்கரன்ஸ் கொடுக்கவில்லை என்றால், அந்தத் திட்டங்கள் செய்யப்படாமல் வைக்கப்படுகின்றன.

நீண்ட நாட்கள் ஆகிவிடுவதால் விலைவாசிகள் ஏறி விடுகின்றன. அதனால் மறு மதிப்பீடுகள் போடவேண்டி இருக்கிறது. மறு மதிப்பீடு போட மறுபடியும் காலதாமதம் ஆகிறது. இப்படிப்பட்ட வீணான சிரமங்கள் தேவை இல்லாமல் அதிக அளவில் இருப்பதால், அதை நீக்க விரைவாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு நல்கிய தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* **திரு. க. பழனிவேலன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த 1971-72-க்கான பாசனத் துறை மான்ய கோரிக்கையை வரவேற்று என் தொகுதியின் சில கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் கூற விரும்புகிறேன்.

வரகூர் தொகுதியைப் பொறுத்தவரையில், வேப்பூர், ஆலத்தூர் ஆகிய ஒன்றியங்களை தன்னகத்தே அடக்கியதாகும். வேப்பூர் ஒன்றியத்தின் சிறப்பான பகுதி, வடக்கலூர் பிர்க்காவாகும். இந்தப் பகுதியில் பாசன வசதியை பெருக்குவதற்காக, இங்கே உள்ள 8 பொதுப்பணித் துறை ஏரிகளில் தூர் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த 20-25 ஆண்டுகாலமாக அந்த ஏரிகளில் தூர் எடுக்கப்படவில்லை. இந்த ஏரிகளில் தூர் எடுக்கப்பட்டால், அந்தப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு சுமார்

[திரு. க. பழனிவேலன்] [1971 ஜூலை 2

5000 ஏக்கர் நிலத்திற்கு நல்ல பாசன வசதி கிடைக்கும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தப் பகுதியில் உள்ள ஒகளூர் ஏரிக்கு மட்டும் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள தொழுதூர் அணையிலிருந்து ஒரு கண்வாய் மூலமாக தண்ணீர் வருகிறது. அத்தியூர், கீழமத்தூர், சீகூர், கைப்பெரம்பலூர், வயலூர் ஆகிய ஏரிகளுக்கு மழை நீரைத்தவிர வேறு வழியில்லை. அதனால் அந்தப் பகுதியில் இருக்கும் கிராம மக்கள் மழை காலங்களில் மணல் அணையைப் போட்டு ஏரிகளை நிரப்ப முயற்சி செய்து கொண்டு வருகிறார்கள். அந்த மணல் அணைகளும் வெள்ளத்தால் உடைந்து விடுகிறது. இதனால் அந்த மணல் அணையைக் கட்ட முயற்சி எடுத்த 100 ஆட்களின் உழைப்பு வீணாவதோடு, பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும் மழை நீரும் வீணாகப் போய்விடுகிறது. எனவே, தொழுதூர் அணையிலிருந்து புதிய கண்வாய் அமைத்து மேற்கூறிய ஏரிகளை நிரப்ப வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

வரகூர் தொகுதியில் பெரும்பாலும் ஓடைகள் தான் அதிகமாக இருக்கின்றன. ஆனைவாரி ஓடை, உப்பு ஓடை, நல்லோடை, பெருமத்தூர் ஓடை ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும். மேற்கூறிய ஓடைகளை எந்தெந்த இடத்தில் தேக்கினால் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரிகளை நிரப்பலாம் என்பதை எல்.எம்.ஐ.பி. திட்டத்தில் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனைவாரி ஓடையைத் தேக்கி பெரிய வெண்மணிக்குப் பக்கத்தில் சுமார் 600 ஏக்கர் புறம்போக்கு நிலங்களாக உள்ள கருங்குளத்து திடலில் ஏரி அமைக்கலாம். அல்லது குளப்பாடிக்குப் பக்கத்தில் ஏரி அமைக்கலாம். இந்தத் திட்டம் நிறைவேறினால் சின்ன வெண்மணி, பெரிய வெண்மணி, குளப்பாடி ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லோடையை குறும்பலூருக்குப் பக்கத்தில் தேக்கினால் சின்னாற்றில் வீணாக விழுகின்ற தண்ணீர் நன்னை ஏரி, வேப்பூர் ஏரி, கல்லைப்புத்திர ஏரி, ஓலைப்பாடி ஏரி ஆகிய ஏரிகளுக்கு பாசன வசதி பெருகி சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். ஆகவே, இந்தத் திட்டத்தையும் அரசு ஆய்வு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லூரிலிருந்து புறப்படும் உப்பு ஓடையில், ஒகளூர், அத்தியூர், ஆகிய பொதுப்பணித் துறை ஏரிகளின் வடிகால் நீரும், மழை நீரும் கலந்து ஓடி காளிங்கராயநல்லூர் கிராமத்துக்குப் பக்கத்தில் உள்ள சின்னாற்றில் வீணாக விழுகிறது. அந்த ஓடையை அத்தியூருக்கும், வயலூருக்குமிடையில் தேக்கி வடலூர் பொதுப் பணித் துறை ஏரியை நிரப்பினால் சுமார் 500 ஏக்கர் நிலங்களில்



1971 ஜூலை 2] [திரு. க. பழனிவேலன்]

மூன்று போக சாகுபடி செய்யலாம் என்பதையும் இந்த நேரத்தில் நான் பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல், சின்னோடையை காடூர் கிராமத்திற்குப் பக்கத்தில் தேக்கி அரியலூர் தாலுக்காவைச் சேர்ந்த பாலையூர், நம்மங்குனம், பழமலைநாதபுரம் ஆகிய ஏரிகளுக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் எடுத்து வருவதற்கு ஏற்பாடாகி வருகிறது. அந்த ஏரிகளிலிருந்து சுமார் 1 பர்லாங்கு தொலைவிலுள்ள என்னுடைய தொகுதியைச் சார்ந்த கிளியப்பட்டு ஏரிக்கும் சேர்ந்து கால்வாய் வெட்டினால், அதன் மூலம் சுமார் 300 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்க வழி செய்யலாம். ஆகவே இந்தத் திட்டத்தையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலத்தூர் ஒன்றியப் பகுதியில், நக்க சேலத்தில் ஒரு புதிய ஏரி அமைக்க வேண்டுமென்று 10 ஆண்டுகாலமாக அந்தப் பகுதி மக்கள் கோரி வருகிறார்கள். அதை நிறைவேற்றித் தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில் வேப்பூர் ஒன்றியத்தில் இருக்கும் சாலைகள் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. முக்கிய நெடுஞ்சாலைகளுக்கு இணைப்பாக இருக்கும் சாலைகளையாவது அரசாங்கம் சிறப்பு மான்ய திட்டத்தில் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குன்னம்-வயலப்பாடி, தேவையூர்-செந்துறை, வேப்பூர்-ஒகளூர் சாலை, பெண்ணக்குளம்-புதுவேட்டக்குடி ஆகிய சாலைகளை உடனடியாக சரளைக்கல் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் வரும் சாலைகள், அதற்கு அளிக்கப்படும் மான்யங்கள் குறைவாக உள்ளதால், அதைப் பராமரிக்கும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னம்—வயலப்பாடி (வழி வேப்பூர்) சாலையை மாநில நெடுஞ்சாலையில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலத்தூர் ஒன்றியத்தில், ஆலத்தூர்-அரியலூர் சாலைக்கு தார் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலமாத்தூர்-செந்துறை சாலையை கீழமாத்தூர், கோவிந்தாபுரம் வழியாக புதிதாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குன்னம்—கீழப்பழூர் சாலையை ஆதனூர், இலுப்பைக்குடி, சில்லக்குடி வழியாக புதிதாக அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பாலங்கள், அணைகள் போன்றவற்றை அமைப்பதில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சிரமமாக இருப்பதால், அரியலூர்-ஆலத்தூர் சாலையில், இலுப்பைக்குடிக்கும் பிளமிசைக்கும் இடையில் மருதை

யாற்றில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெண்ணக்கோணம்-புதுவேட்டக்குடி சாலையில் சின்னாற்றில் பாலம் கட்டித்தருவது மிகவும் அவசியமானது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம், வரகூர் தொகுதியிலுள்ள வடக்கலூர் பிர்க்காவில் உள்ள நன்செய் பகுதிகளில் விளையும் கரும்பு தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்திலுள்ள பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலைக்குக் கொண்டு போக திட்டக்குடி-மாத்தூர் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கலூர், வரகூர் பிர்க்காவில் விளைகின்ற நிலக்கடலை, எள், கம்பு ஆகிய தான்யங்கள் விற்பனைக்காக விருத்தாசலம் சந்தைக்குத் தான் செல்ல வேண்டும். வரகூர், வடக்கலூர் ஆகிய பிர்க்காக்கள் பெரும்பாலும் பாசன வசதி இல்லாத புஞ்செய், மானாவாரி நிலங்களையுடைய பகுதியாகையால், நெல், உளுந்து, பயிறு போன்ற உணவுப்பொருட்கள் விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய வட்டங்களிலிருந்து கொண்டு வரவேண்டியிருக்கிறது. வெள்ளாற்றின் வட கரையிலுள்ள மங்களூர் தொகுதியில் விளையும் சோளம், மிளகாய் விளைபொருட்களை விற்பனை செய்ய அரியலூர் சந்தைக்குத் தான் கொண்டு வரவேண்டும். பேருந்துகளின் போக்குவரத்தைப் பொறுத்தவரை இந்தப் பாலம் கட்டினால் தஞ்சாவூருக்கும் சென்னைக்கும் உள்ள தொலைவு கணிசமாகக் குறையும். இதற்கு ஏதுவாகும் வகையில் திருமானூரையும் (திருச்சி மாவட்டம்) விளாங்குடியையும் (தஞ்சை மாவட்டம்) இணைக்க கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படுகிறது. எனவே திட்டக்குடிக்கு அருகில் வெள்ளாற்றுப் பாலத்தை உடனடியாகக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. டி. வி. சம்பத் :** பேரவை மாற்றுத்தலைவரவர்களே, இந்த மான்யக்கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் தஞ்சை மாவட்டத்தில் கீழத் தஞ்சை பகுதியில் இந்த நீர்ப்பாசன—பொதுப்பணித் துறை எத்தகைய சிறப்பாக பணியாற்றி இருக்கிறது என்று என்னுடைய தொகுதி, மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். மாற்றுகட்சித் தோழர்களும் பாராட்டுகிற அளவுக்கு இந்த அரசு பொதுப்பணித் துறை சிறப்பாகச் செயலாற்றி இருக்கிறது.

சீர்காழி வட்டத்தில் உப்பனாற்றில் ஒரு மேம்பாடு திட்டத்திற்காக சுமார் ரூ. 2,04,000 இந்த ஆண்டு இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது. அதே போல சீர்காழி வட்டத்தில் வடிகால் வசதிக்காக—உப்பனாற்றின் மேம்பாட்டுக்கு ரூ. 4,65,000 இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டிருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். என்னுடைய





மாவட்டத்தில் அடிக்கடி ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பெய்யும் பேய் மழை காரணமாக கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, என் தொகுதியாகிய செம்பனார்கோவில் பகுதியில் கடல் நீர் புகுந்து விடுவதால், விவசாயத்தை அது மிகவும் பாதிக்கிறது. அந்தப் பகுதியில் கடல் நீர் புகுந்துவிடுவதால், கடலோரப் பகுதியாகிய பூம்புகாரிலிருந்து தரங்கம்பாடி வரையில் தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இரண்டு ஏரிகள் இருக்கின்றன, திருவாலி, பெருந்தோட்டம் என்று. இந்த இரண்டு ஏரிகளிலும் 40,000 ஏக்கர் வரையில் பாசனவசதி இருக்கிறது. அந்த ஏரிகளில் தனியார்கள் தங்களுக்குச் சொந்தம் இருப்பதாகச் சொல்லி, ஆங்கே ஆக்ரமித்துக் கொண்டு, உள்வாயில் விவசாயம் செய்து கொண்டு இருப்பதன் காரணமாக ஏரிகள் மேடிட்டுப் போயிருக்கின்றன. அதையும் இந்த அரசு கவனித்து, அந்த ஏரிகளை ஆழப்படுத்தவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும் என்று அங்கு வருகை தந்த அமைச்சரிடமும் சொல்லியிருக்கிறோம். அந்த ஏரிக் கரைகளில் தென்னங்கன்றுகளை வைத்துப் பயிர் செய்தால் அதனால் அதிக வருமானமும் வரும். அப்படி ஏரிகள் ஆழப்படுத்தப் படுவதால் அங்கே மீன்களை வளர்த்தால், அதனாலும் அதிக லாபம் கிடைக்கும்.

எங்கள் பகுதியில் உப்பனார் என்ற வடிகால் ஆறு இருக்கிறது. அதற்குப் பாலம் கட்டவேண்டும். முந்தைய அரசு கட்டமுடியாமல் விட்டு விட்டார்கள். இப்பொழுது நம்முடைய அரசுமீது மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதன் காரணமாக அந்தப் பாலத்தை பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் கூட, அடுத்த ஆண்டிலாவது கட்டித்தரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் என்னுடைய பகுதியில், பல இடங்களில் வடிகால் வசதியில்லாமல் குறைபாடாக இருந்ததால், அங்கெல்லாம் நம் அரசு தண்ணீர் வழங்கச் செய்திருக்கும் ஏற்பாடுகளை மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களால் அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவிக்கிறேன்.

இந்தத் திட்டத்திலே புதிய 9 நீர்ப்பாசன திட்டங்களுக்காக ரூ. 235 லட்சமும் குடிநீர் வாரியத்திற்காக ரூ. 18.43 கோடியும் ஒதுக்கியிருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இன்னும் குறிப்பாகச் சொன்னால், என்னுடைய தொகுதியான நன்னிலம் வட்டத்தில் வடிகால் அமைக்க ரூ. 136 லட்சம் ஒதுக்கி இருப்பதையும் வரவேற்கிறேன்.

அடுத்து, இந்த 'மாடர்னைசேஷன்' ஸ்கீம் என்கிற திட்டத்தை நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரும், மாண்புமிகு முதல் அமைச்சரும் மத்திய சர்க்காரோடு போராடி, அதற்காக திட்டக் கமிஷனில் அனுமதி வாங்க வேண்டும் என்று வேண்டுகோள் தெரிவிக்கிறேன்.

பஞ்சாயத்துக்குச் சொந்தமான சாலைகள் வசதிக் குறைவாக இருக்கின்றன. நான் இதற்கு முந்தைய கூட்டத்திலேயும் சொன்னேன். என்னுடைய தொகுதி ரோடுகள் பழுது அடைந்திருப்பதால், அங்கே மக்களுக்குப் போக்குவரத்து இல்லாமல் அவர்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள சாலைகளையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையினரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய நன்னிலம் தொகுதியில் ஓடும் ஆறுகளுக்கெல்லாம், 'எர்த் ஒர்க்', 'கல்வர்ட்', என்றெல்லாம் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், அது ஒரு கடைமடைப் பகுதியான தொகுதி, அந்தத் தொகுதியில் கண்ட்ராக்டர்கள் காலந்தாழ்த்தி வேலைகள் செய்வதால், தண்ணீர் வந்த பிறகு எந்த வேலையும் செய்ய முடிவதில்லை. சரியான காலத்தில் செய்வதில்லை, தண்ணீர் வருவதற்குள் வேலை முடியாததால், தடைபட்டுப் போகிறது. அப்படிப்பட்ட வேலைகளையெல்லாம், தண்ணீர் இல்லாத கோடைக்காலங்களில் விரைவாகச் செய்து முடிக்க வேண்டும். அதற்கு அரசு தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியில் வாஞ்சூர் போன்ற இடங்களில் ஒரு குடம் தண்ணீர் பத்து காசுக்கு வாங்கும் அவல நிலை இருக்கிறது. பனங்குடி போன்ற இடங்களுக்குக் குடிநீர் சேகரிப்பு நிலையங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில் திருமாளம், அம்பல் போன்ற இடங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள், ரூ. 6,000, ரூ. 8,000 பாக்கி இருப்பதாகச்சொல்லி அவதிப்படுகிறார்கள். காரணம் தண்ணீர் வரும் காலங்களில் வெள்ளம் வந்து பயிர்கள் மூழ்கிவிடுகின்றன. ஒரு ஏக்கருக்கு 4, 5 கலம் தான் வெள்ளாமை நடந்திருக்கிறது என்றெல்லாம் என்னிடத்தில் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, அந்தப் பகுதிகளில் வடிகால், பாய்ச்சல் சீரமைப்புச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கீழத் தஞ்சையையும் கொங்கராயஞ்சேரியையும் சேர்க்கும் பாலத்தை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நதி நீர் ஒப்பந்தத்திற்கு நம் அரசு





மேற்கொள்ளவிருக்கும் காரியங்களுக்கு என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எல்லாவிதமான ஒத்துழைப்பையும் தருவோம் என்று சொல்லி, சட்ட மன்ற விடுதியிலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது, அதையும் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். ஏ. அபுசாலி** : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், வெள்ளாற்றில் வெள்ளம் வருவதால் மீராளூர் பகுதியில் உடைப்பு எடுத்து, 10, 15 கிராமங்கள் பாழடைகின்றன. 10,000 ஏக்கருக்கு மேல் நிலங்களில் வருவாய் இல்லாமல், ஏழை எளிய மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறையும் உடனடியாக இந்த ஆண்டிலேயே தீர்க்க ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புவனகிரி தொகுதியில், பரங்கிப்பேட்டைப் பக்கத்தில், கடலூர் வரையில் கடலோரப் பகுதியில் 5, 6 கிராமங்கள் பெரிய கிராமங்களாக இருக்கின்றன. அந்தக் கிராம மக்கள் பஸ்ஸுக்கோ, அல்லது ஒரு ஹாஸ்பிடலுக்கோ வரவேண்டும் என்றால், நடந்தேதான் வரவேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு பஸ் வசதி செய்து கொடுக்காவிட்டாலும், வண்டி போகக்கூடிய அளவில் ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, சேத்தியாத் தோப்பிற்கு மேற்கில் அகர ஆலம்பாடி வரை 15, 16 கிராமங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு ரோடு வசதியே கிடையாது. அதைச் செய்து கொடுக்க வேண்டும். ரோடு போடும் இடத்தில், ஏற்கனவே இருந்த பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவர், யூனியன் மூலமாகப் போடவேண்டும் என்று போட்டதற்கு இணங்க, அவர்கள் தன்னுடைய நிலத்தில் ரோடு போகிறது, அப்படிப் போடக்கூடாது என்று தடுத்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். அந்த இடத்தைப் பார்வையிட்டு, ரோட்டைப் போட்டுதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் ஏரியில் தண்ணீர் எடுத்து, சென்னைக்குக் கொண்டு வரும்போது, காட்டுமன்னார்கோவில் தொகுதி, சிதம்பரம் தொகுதி, புவனகிரி தொகுதி ஆக மூன்று தொகுதியில் உள்ள 5 லட்சம் பேர்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க ஏரியை அகலப்படுத்திக் கொடுத்து, வழக்கம்போல், எங்களுக்கு கொடுக்க ஏரியை ஆழப்படுத்திக் கொடுத்து, வழக்கம்போல் எங்களுக்குத் தண்ணீரை வைத்துவிட்டு, மேற்கொண்டு உள்ள தண்ணீரைமட்டும் சென்னைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மிகத் தாழ்மையோடு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த காட்டுமன்னார்குடியிலிருந்து சிதம்பரம் போகும் ரோடு 16 மைல் இருக்கிறது. அந்த ரோடில் காலை 3½ மணியிலிருந்து இரவு 12 மணி வரைக்கும் பஸ் போக்குவரத்து இருக்கிறது. அதாவது தினசரி 136 சிங்கிள் ஓடுகிறது. ஒரு வண்டி போனால் மற்றொரு வண்டி வருவதற்கு இடமில்லாமல் இருக்கிற காரணத்தால் பெரிய இழப்பு, நஷ்டம் ஏற்பட்டு ஆக்ஸிடென்ட் நடக்கிறது. நேற்று முன் தினம் கூட ஒரு ஆக்ஸிடென்ட் நடந்து ஒருவர் இறந்து விட்டதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே அதை அகலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறையின் பாசனத் திட்டத்தின்கீழே சமர்ப்பிக்கப் பட்டிருக்கிற கோரிக்கைகளின் பெயரிலே சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலுள்ள எல்லா நதிகளிலும் இருக்கிற நீர்களைப் பாசனத்திற்குப் பயன்படுத்தி ஆகிவிட்டது என்ற அடிப்படையில் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பயன்படுத்தத் திட்டங்களை நிறைவேற்றினாலும் பல்வேறு பகுதிகள் இன்னும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால், போதுமான திட்டங்கள் இல்லாத காரணத்தால் எந்தப் பகுதிகள் பாசன வசதி கொடுக்கப்பட முடியாமல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் பல்வேறு விதங்களில் நாம் போடுகிற முதலீடுகள், விவசாயத் திட்டங்களில் நாம் போடுகிற முதலீடுகள் நல்ல முறையில் பயன்படாவிட்டால் எல்லாம் வீணாகி விடும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கோவை மாவட்டம் வரட்சிப் பகுதி நிறைந்த மாவட்டமாக இருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியார் திட்டம் பூர்த்தியாகி இருக்கிறது. அதில் 2 லட்சத்து 40 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கப்படுகிறது. அது போக பாக்கி இருக்கிற பகுதிகள் கிணற்றை நம்பி இருக்கிற பகுதிகள். மழை இல்லாத காரணத்தால் அந்தப் பகுதிகளிலெல்லாம் கிணறுகளை ஆழமாகத் தோண்டியும் தண்ணீர் இல்லாது விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு என்ன திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி இந்த அரசாங்கத்திற்குப் பல யோசனைகளைச் சொல்லி இருக்கிறோம். கேரள அரசாங்கத்தோடு பேசி பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைச் சுமுகமாகப் பேசி நிறைவேற்ற வேண்டுமென்று அமைச்சரிடம் கூறியிருக்கிறோம். ஆனால் அது சம்பந்தமாக கேரள அரசாங்கம், தமிழக அரசாங்கம் வரம்பு மீறிப் போய்விடும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. பாண்டியாறு-புன்னம்புழா கூடலூரில் உற்பத்தியாகி 'நிலாம்பூர்' வழியாகச் சென்று அரபிக்கடலில் போய் விழுகிறது. ஆனால் அதைக் கேரள அரசாங்கம் 5 ஆயிரம் ஏக்கருக்கு அணை கட்டி விவசாயம் செய்கிறார்கள். ஆனால் அந்தத் தண்ணீர் எங்களின் விவசாயத்திற்குத்





தேவையில்லை என்று அங்குள்ள விவசாயிகள் சொல்கிறார்கள். அந்தத் தண்ணீரைத் தமிழகம் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னால் ஏதோ காரணம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் இப்படிப்பட்ட பிரச்னைகள் தீர்வு காண முடியாமல் இருக்கிற காரணத்தால், இதன்மூலம் இந்தத் தேசத்தில் அது ஒரு புதிய பிரச்னையைக் கொண்டு வந்தால் அது எப்படித் தீரும் என்பதைப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட பிரச்னைகளில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தி காலதாமதம் இல்லாமல் எந்தெந்தப் பகுதிக்கு அந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படவேண்டும் என்று பார்த்து ஆவன செய்யவேண்டும். கேரள அரசாங்கம் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தினால் ஆட்சேபணை இல்லை. ஆனால் பயன்படுத்த முடியாவிட்டால் நம்முடைய பகுதியில் உற்பத்தியாகிற காரணத்தால் நாம் நம்முடைய விவசாயத்திற்கு அந்தத் தண்ணீரைக் கேட்பதற்கு நியாயம் இருக்கிறது. பறக்கிறதைப் பிடிக்கப்போய் இருக்கிறதை விட்ட கதை போன்று வராமல், தமிழகம் பாதிக்கப்படுகிற நிலைமை வராமல் இந்த இந்திய அரசாங்கம் அதைப் பார்த்துக்கொண்டு வந்தால் இந்த நிலைமைக்கு ஒரு அரசியல் சூழ்நிலையில் தீர்வு காண வேண்டி வரும் என்று சொல்லி, மத்திய அரசாங்கம் இதற்கு விரைவான ஒரு முடிவைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பொள்ளாச்சிப் பகுதியில் மழை அதிகமாக இருக்கக்கூடிய பிரதேசத்தில் நீர்ப்பாசனம் செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது. மழை அதிகமாக பெய்கிற காரணத்தால் அந்தத் தண்ணீரை வரட்சிப் பகுதிகளுக்குக் கொண்டு போங்கள் என்று அந்த விவசாயிகள் சொல்லுகிறார்கள். அதை அரசாங்கத்திடம் வேண்டுமென்றாலும் நாங்கள் சொல்லுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதை அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு மகஜர் மூலம் தெரிவித்து இருக்கிறேன். அந்தப் பல்லடம் பகுதிக்கு இந்தத் தண்ணீரைக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10,000 ஏக்கருக்கு விலக்களிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படி யாரும் என்னிடம் சொல்லவில்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 ஆயிரம் ஏக்கருக்கு விலக்கு செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் எனக்கு ஒரு ஆட்சேபணையும் கிடையாது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பொள்ளாச்சி விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு தீர்மானம் போட்டு என்னிடம் அனுப்பியிருக்கிறார்கள். அதன் பேரில் தான் நான் மகஜர் அளித்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது ஆளியாறு திட்டம் நிறைவேறியதன்மூலம் 20 ஆயிரம் ஏக்கருக்கு பி.ஏ.பி. கால்வாய்மூலம் பாசன வசதி கிடைக்கும். ஆனால் ஏற்கனவே போட்ட நிலத்திற்குத்தான் தண்ணீர் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வரட்சி மிக்க பல்லடம் பகுதிக்கு பி.ஏ.பி. வாய்க்கால்

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 2

மூலம் 1,000 ஏக்கருக்குப் பாசன வசதி செய்ய திட்டம் தீட்டியும் அத் திட்டத்தை நிறுத்தி விட்டு அதைத் தூரமாகக் கொண்டு போய்விட்டார்கள். அதையாவது செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***புலவர் சி. பழனிசாமி**: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் மான்ய கோரிக்கையின் பெயரில் என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்று என் தொகுதியில் ஏறத்தாழ 2 கோடியே 56 லட்சம் செலவில் பாலாறு-புரந்தலாறு அணை கட்ட திட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தால் பயன் அடையக்கூடிய ஏறத்தாழ பல ஆயிரக்கணக்கான விவசாயிகளின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய வரதமாநதி, பச்சை ஆறு, குதிரையாறு திட்டங்களாகும். இதில் வரதமாநதித் திட்டம் நீண்ட நெடுங்காலமாக, அதாவது ஏறத்தாழ 67 ஆண்டுகளாக, வெள்ளைக்காரன் ஆட்சிகாலத்திலிருந்தே இந்த அணைத் திட்டத்தைக் கட்டவேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்திக் கொண்டு வருவதாக என் தொகுதியிலுள்ள முதியோர்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

எனவே, இந்த வரதமாநதி அணைக்கட்டுப் பகுதியை கடந்த மாதம் 16-ஆம் நாள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை அழைத்துச் சென்று அங்கே அந்த இடத்தைப் பார்வையிடச் செய்தோம். அப்போது உடன் வந்திருந்த பொறியியல் வல்லுநர்கள் அவ்வணைக்கட்டைக் கட்டுவதற்கான நல்ல சூழ்நிலை இருப்பதாகக் கருத்துத் தெரிவித்தார்கள். ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கருக்குப் பயன்படக்கூடிய நல்ல விரிவான பாசனத் திட்டத்தைச் செய்து தரும்படி பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக்கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து இந்த அணைக்கட்டு பகுதியிலிருந்து இந்த பாப்பன்வாய்க்கால் பாசனம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் இந்த வாய்க்கால் இன்றைக்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே இந்த பாப்பன் வாய்க்காலை ஆழப்படுத்தியும் அகலப்படுத்தியும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு அந்த பாப்பான் வாய்க்காலில் மணல் சென்று விழுந்து விடாமல் குறுக்கு ஓடைகளுக்கு நீர் மட்டங்கள் கட்டிக் கொடுக்கவும் ஏற்கனவே இருக்கும் நீர் மட்டங்களை உயர்த்திக் கட்டிக் கொடுக்கவும் கேட்டுக் கொள்கிறேன். அந்த வாய்க்கால் பகுதியில் உள்ள 21 மடைகளுக்குச் 'சட்டர்கள்' போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் இரு கரைகளிலும் ஆக்கிரமித்து உள்ளவர்கள் மண்ணை வெட்டி வாய்க்கால் வழியில் போட்டு விடுவதால் நீர் ஓட்டம் இல்லாமல் தடைப்படுகிறது. ஆகவே, இரு கரைகளிலும் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.



1971 ஜூலை 2] [திரு. புலவர் சி. பழனிசாமி]

அடுத்து, என் தொகுதியில் குளங்கள் பல ஆண்டுகளாக வெட்டி எடுக்காமல் மேடாக இருக்கின்றன. பாப்பன்குளம், ஐயன்குளம், பெரியகுளம், பட்டிக்குளம் முதலியன கடந்த 17 ஆண்டுகளாக வெட்டி எடுக்கப்படாமல் மேடாக உள்ளன. இந்தக் குளங்களை வெட்டி எடுக்கவும் ஆழப்படுத்தவும், மதகுகளை எல்லாம் அமைத்து ஷட்டர் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்க அனுமதி இல்லாமல் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் ஆயில் இன்ஜின், விசை மோட்டார்கள் போன்றவற்றை வைத்து சிலர் தண்ணீர் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவு வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. சோ. கருணைநாதன்: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறைக்கான மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மேட்டுப்பாளையம்-கூனூர் சாலையில் இரு பக்கத்திலும் மரங்கள் நடவேண்டும். அப்படி நடுவது கண்ணுக்கு அழகு, சாலைக்கு உறுதி, போக்குவரத்துக்குப் பாதுகாப்பு. அதே நேரத்தில கூனூருக்கு அருகே காட்டேரியில் ஒரு பாலம் இடையூறாக இருக்கிறது. அதை உடனடியாகச் சீர்படுத்த வேண்டும். மழைக் காலத்தில் அப்பாதையில் நிலச்சரிவு ஏற்படுவதால் வாகனங்கள் செல்லுவதற்கு இடையூறாக இருக்கிறது. மேட்டுப்பாளையத்தில் இருந்து கோத்தகிரிக்குச் செல்லுகின்ற பாதையில் வாகனங்கள் திருப்பி விட வேண்டியிருக்கிறது. வண்டி சோலையிலிருந்து அரவேண் பாதை 10 மைல் அளவில் போடப்படும் என்றால் அங்கே உள்ளவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். அப்பாதையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கீழ்கோத்தகிரி—தெங்குமரஹாடா வரையிலும் உள்ள பாதை, அரவேண், மேட்டுப்பாளையம், பவானிசாகர் என்று 60 மைல் சுற்றிக்கொண்டு வருகிறது. கீழ்கோத்தகிரியிலிருந்து தெங்குமரஹாடா வரை குறுக்காக ஒரு 10 மைல் அளவில் ரோடு போட்டால் அங்குள்ளவர்களுக்கு வசதியாக இருக்கும். அதை ஆராய்ந்து அத்திட்டம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குஞ்சப்பனையில் இருந்து கீழ்கோத்தகிரி வரை செம்மனரை வழியாக. ஒரு 10 மைல் அளவில் ஒரு புதிய பாதை போட்டுக் கொடுத்தால் அங்கே வாழுகின்ற இருளர்கள், குறும்பர்கள், ஆதிவாசி மக்கள் இன்றைக்கு அவர்கள் விளைவிக்கின்ற பொருள்களை எல்லாம் போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால் மிகக் குறைந்த விலைக்கு விற்றுத் தீரவேண்டிய நிலைமை மாறி அவர்களுக்கு வசதி ஏற்படும். ஆகவே அந்தப் பாதையையும் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. சோ. கருணாநாதன்] [1971 ஜூலை 2

நெடுகுளா கிராமத்திலிருந்து நேர்கமபை, குருக்கத்தி செல்லும் பாதையில் பாலம் இல்லாத காரணத்தால் வாகனங்கள் சுற்றிக் கொண்டு போகவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு பாலத்தை கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேட்டுப்பாளையம்-கோத்தகிரி பாதையை அகலப்படுத்தி மீண்டும் தார் போட்டுச் சீராக்க வேண்டும். மின்சாரம் சம்பந்தப் பட்ட பெரிய இயந்திரங்களை எல்லாம் ஏற்றிச்செல்லுகிற வண்டிகள் அந்த வழியாகச் செல்ல வேண்டி இருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே அப்பாதையை விரிவு படுத்தி சீர் செய்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் கோத்தகிரியில் ஒரு பயணிகள் விடுதி இருக் கிறது. ஆனால் அதில் யாரும் வந்து தங்கும் அளவில் தகுதியுடைய தாக இல்லை. ஆகவே அங்கு ஒரு புதிய முதல் வகுப்புப் பயணிகள் விடுதி ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அப்போது தான் அங்கே அரசு அதிகாரிகளும் மற்றவர் களும் தங்கவும் அங்கே கோத்தகிரி சுற்றுவட்டாரத்திற்கு வந்து போகவும் ஏதுவாக இருக்கும். அதை ஆராய்ந்து இக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் கோத்தகிரி பகுதி நல்ல முறையில் வளருவதற் கான நல்ல திட்டங்கள் போடப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு காவிரி நீர்ப் பிரச்னைபற்றி பேசவேண்டிய எண்ணம் இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தால், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களே, நான் பேச நினைத்ததெல்லாம் அவர் பேச வேண்டும், பேசி காவிரி நீரோடு உறவாடவேண்டும், என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

**திரு. வீ. சுப்பிரமணியன்:** மாற்றுந் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையை வரவேற்று என் தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன்.

என் தொகுதியில் ஏறக்குறைய 12 ஊராட்சி மன்றங்கள் உள்ளன. அதில் உள்ள கிராமங்கள் இன்றைக்கு தீவு போலக் காட்சி அளிக்கும் நிலையை விளக்கிக் கூற ஆசைப்படுகின்றேன். அந்தக் கிராமங்கள் ஒரு புறம் கெடில நதியாலும் மற்றொரு புறம் காடுகளாலும் சூழப்பட்டு வெளி உலகோடு தொடர்பு இல்லாத வகையில் சாலை அமைப்பு இல்லாத காரணத்தால் அந்த கிராம மக்கள் மிகுந்த பின்னடைந்த நிலையில் தொடர்பு இல்லாமல் வாழ் கிறார்கள். ஏறக்குறைய 8 மைல்களுக்குள் உள்ள 12 ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்த கிராமங்களிலிருந்து நகரத்தை அடைய வேண்டும் என்றால் நடந்தே வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பின்னர்தான் உளுந்தூர்பேட்டையிலிருந்து, திருவெண்ணைநல்



1971 ஜூலை 2] [திரு. வீ. சுப்பிரமணியன்]

லூர்க்கு பெருவழிச்சாலை மூலம் நகரத்துக்குள் வர முடியும். அந்த சாலையும் வருடத்தில் ஆறு மாதம் பஸ் போக்குவரத்திற்கு சீரான நிலையில் இல்லாமல் இருக்கிறது. மழைக் காலங்களில் பள்ளங்களில் நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளது. அந்தச் சாலையை 70-ம் ஆண்டு உணவு உள்ளாட்சித் துறை அமைச்சர் பார்வையிட்டார். அதை சரிசெய்வதற்கான மதிப்பீடு கள்கூடப் போடப்பட்டன. அதற்குப் பின்னும் போக்குவரத்து துறை அமைச்சரும் பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் அவர்களும் அந்த சாலைகளின் நிலைமைகளை நேரில் பார்த்தார்கள். மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டும் கூட நிதிநிலை இல்லாத காரணத்தால் தள்ளிவைக்கப்பட்டது என்று அறிகிறேன். ஆகவே இவ்வாண்டிலாவது இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இந்தச் சாலைகளை ஏற்படுத்தி வழியில் சிறு பாலங்களை கட்டி பஸ் போக்குவரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது போலவே ஊராட்சி ஒன்றியங்களில் நிர்வகிக்கப்படும் சாலைகள் பஸ் போக்குவரத்திற்கு உகந்த முறையில் இல்லாத காரணத்தால் அவற்றை பெருவழித்துறையினர் ஏற்றுக் கொண்டு நல்ல முறையில் அமைப்பதற்கு அரசு வழி வகைசெய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுபோலவே ஊராட்சி ஒன்றிய அமைப்புகளில் உள்ள ஏரிகள் நிதிப் பற்றாக்குறையால் சரிவர கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அதை எல்லாம் பொதுப்பணித்துறை ஏற்று பழுது பார்த்து பாசனத்திற்கும் குடிதண்ணீருக்கும் மக்களுக்குப் பயன்பட வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது போன்றே வருத்த வாய்க்கால்களுக்கு முக்கியத்துவம் அளித்து அதைச் செப்பனிட வேலைகளை மேற்கொள்ளுகிறார்கள். கழிவு வாய்க்கால்களையும் செப்பனிட்டு செம்மைப்படுத்தினால் அதனால் நிலங்களுக்கு வாய்ப்பான நிலைமைகள் ஏற்படும். ஆகவே அதையும் அரசு கவனித்து கழிவு வாய்க்கால்களைச் செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு குறிப்பாக கிராமங் களில் உள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்கும் புதிய சாலைகள் போடு வதற்கும் நிறைய நிதிகளை ஒதுக்கி வருகிறது. ஊராட்சி ஒன்றியங் களைச் சேராத சாலைகளை பெருவழித்துறையினரே ஏற்று நடத்த வேண்டும். குறிப்பாக நான் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்றும்படியாக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுப்பணித்துறை அலுவலகத்தில் பொதுவாக மிகவும் தாமதம் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். பக்கசார்தனார் திருநாவலூர் பணிகள் அனைத்தும் திரும்பி வர வில்லை, தலைமைப்பொறியாளர் அலுவலகங்களில் காரியங்கள்

யிருந்த தாமதமாகிறது. தென் ஆற்காடில் நியமிக்கப்படவேண்டிய பொறியாளர் அவர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. அதனால் அங்கே 36 லட்ச ரூபாய் திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை. திட்டங்களை நிறைவேற்றினால் அதிக வாய்ப்புகள் வசதிகள் பெருக வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்து பொதுப்பணி அமைச்சரவர்கள் கொண்டு வந்த மானியக்கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், வணக்கம்.

**டாக்டர் ச. அ. சின்னராசு :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக்கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய வேண்டுதல்களை முன்வைத்துப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் அரூர் தொகுதி என்று சொன்னவுடனே மிகவும் வரட்சி நிறைந்த தொகுதி என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். வெள்ளையன் நம்மை ஆண்ட காலத்திலிருந்து அரூர் பகுதி வறட்சியாகத்தான் இருக்கிறது. அங்கே நீண்ட காலமாக இருக்கும் மதிகெட்டான் கால்வாய் தென் பெண்ணையாறு திட்டத்தின் கீழ் மொரப்பூர் மருதிப்பட்டி வழியாக வந்து வாணி ஆற்றிலே கலக்கும் திட்டம் கட்டினால் 10,000 ஏக்கரா நீர் வசதி பெறும். அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற கிணறுகளுக்குத் தண்ணீர் வருவதற்கு வசதியாகவும் இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு அந்தக் கால்வாய்த் திட்டத்தை எடுத்து முடிக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாப்பிரெட்டிப்பட்டி, முள்ளிக்காடு பகுதியிலே வாணி ஆற்றிலே அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று கருதுகிறேன். அந்த அணைத்திட்டம் எடுத்து முடிக்கப்பெற்றால் அங்கு சுமார் 10,000 ஏகரா விவசாயத்திற்கு வசதியாக இருக்கும். இது கடந்த 10 ஆண்டு காலமாகக் கேட்கப்பட்டு வருகின்ற கோரிக்கையாகும் என்பதை இந்த இடத்திலே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தத் திட்டத்திற்காக ஆவன செய்யும்படியும்—அது இப்பொழுது சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியரிடம் இருப்பதாகவும் அறிகிறேன்—ஆகவே, அதற்கு ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லாறுத் திட்டம், கோட்டப்பட்டி கிராமம் அரூர் தாலுக்காவிலே உள்ள திட்டம். அது ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருப்பதாய்த் தெரிகிறது. அது முடிவுற்றால் 10,000 ஏக்கரா சிறப்பற வாய்ப்பு இருக்கிறது. இந்த 3 திட்டங்கள் என்னுடைய தொகுதிக்கு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் செய்து தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொண்டு அவர் கொண்டு வந்த மானியக் கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.





DR. H. V. HANDE : Hon. Mr. Chairman, Sir, in support of the cut motions moved on behalf of the Swatantra Party, I wish to state the following. At the very outset I must express my gratitude to the Government for having improved the conditions of the Work-Charged Staff by way of provincialisation. For the past three or four years, we have been trying to press upon the Government that some sort of guarantee with regard to their conditions of service should be given and the present Government have now come forward to give it and I am grateful to the Government for that. At the same time, I would have been happier if they had also taken into consideration the number of grievances that the Graduate-Engineers and the diploma-holders have placed before the Hon. Minister. On one or two occasions I had the privilege of addressing them along with the Hon. Minister. I hope and trust that the several points that they had raised individually and collectively will be gone into at least by this Ministry and that the lot of the graduate-engineers and diploma-holders of the Public Works Department will be improved.

Then I want to make some observations regarding the Cauvery problem. Sir, to-day we have heard a very surprising news published in the newspapers also that Dr. K. L. Rao is ready with a compromise formula to solve the Cauvery problem. It is stated—

'While the details are not known and strict secrecy is being maintained over it, it is learnt that the new suggestions drawn up by Dr. K. L. Rao should find ready acceptance with the Tamil Nadu Government. The formula will be formally presented to the two Tamil Nadu Ministers who are expected to meet Dr. Rao on July 4 at the latter's invitation.'

I would be very happy if during his reply the Hon. Minister will tell us exactly what the compromise formula is..............

THE HON. THIRU S. J. SADIQ PASHA : We are not aware of any compromise formula. Only after meeting Dr. Rao, we will be aware of the formula. If it is in the interests of Tamil Nadu, we will accept it. Even if there is any slightest difficulty in accepting it, it would be placed before the Hon. Chief Minister. I can assure the hon. Member that we will not do anything which will go against the interests of Tamil Nadu.

DR. H. V. HANDE : The only point that I am trying to drive home is that in case they are ready with the formula, instead of waiting to know it on 4th July, it would be better if the contents of the formula are obtained through trunk-call. If the information is received before 1.30 p.m. to-day we can discuss it and if that is not possible we can discuss it tomorrow. If that is done, the Government would be armed with the sanction of the Assembly and that of the leaders of different political parties. Therefore, I would request the Hon. Minister to consider his point. I am glad that the Hon. Minister has given an assurance that the irrigation rights—the lower riparian rights—of the farmers of Tamil Nadu—would be proteced and I am grateful to him for that.

Then I come to the Cooum Project. I would like to say that the Cooum Project as originally envisaged in 1967 when Anna's Ministry was in power had been good. The original estimate was about Rs. 1 crore but later on it has been increased to about Rs. 2 crores. My fear is that by increasing the budget estimate in such a manner, it looks as if that before it is completely completed it would come to about Rs. 3 crores. In this connection, I wish to point out that I was particularly struck by the clear-cut and pin-pointed statement of the Hon. Chief Minister while laying the foundation for the expansion bridge at Adyar, that the Department should not over-estimate or under-estimate a scheme. That means that a number of such cases would have been brought to his notice. Even the previous Public Accounts Committee had referred to such cases of over-estimation or under-estimation of schemes. Therefore I want to know from the Hon. Minister for P.W.D. what steps he is going to take to see whether the misgivings expressed by the Hon. Chief Minister are justified or not, whether they are well-founded etc. He should see to it that such gross over-spending by the P.W.D. is removed.

Regarding the Cooum bridge, I have collected details from the papers given to us. I shall give one instance. The original expenditure was Rs. 1.2 lakhs. They divided it into 3 or 4 stages. I have taken out the figures from 1967 onwards. Even the speeches of the then previous P.W.D. Minister (now Chief Minister) is with me. The amount sanctioned was Rs. 32 lakhs. The expenditure during 1967–68 was Rs. 1.24 lakhs; in 1968–69 it was Rs. 5.24 lakhs; in 1969–70 it was Rs. 24.08 lakhs and during 1970–71 it was Rs. 19.49 lakhs. So, it will be seen as against the original sanction of Rs. 32 lakhs the expenditure was Rs. 50.05 lakhs. Probably the Hon. Chief Minister must have had this in mind when he was saying that the P.W.D. gave first a low figure and then inflated expenditure in revised estimates. I am sure that the Committee that will be formed will go into this question, fix responsibility against the officers concerned and take suitable action. I am sure Government would see to it that such over-spending is put an end to and not allowed to continue. The excess is Rs. 50.05—32.00 = Rs. 18.05 lakhs.

Then we come to stage II. The amount sanctioned was Rs. 62 lakhs. The amount spent during 1969-70 was Rs. 13.84 lakhs; the amount spent was Rs. 56.28 lakhs in 1970.71: the expenditure incurred on the second stage is Rs. 70.12 lakhs as against the original estimate of Rs. 62 lakhs. Thus Rs. 8.12 lakhs extra had been spent even on II stage. Probably the Hon. Minister for P.W.D. would take this point and give his reply.

I have read the speech of P.W.D. Minister during 1971-72. Even there I find there has been confusion. It is not as if I am making any charge against anybody. He says on page 6 as follows :—



"The expenditure incurred on the Cooum improvement scheme in 1970-71 is Rs. 75.77 lakhs and the total expenditure so far incurred is Rs. 1.207 lakhs. A revised estimate for the scheme costing Rs. 1.90 lakhs is under consideration of Government."

The very fact that there had been necessity for a revised estimate is there. That shows there has been some serious mismanagement somewhere, something wrong somewhere. I hope the Hon. Minister will try to find out where exactly the mistake had taken place.

I now come to roads. I have some misgivings here also. I hope the Hon. Minister will give proper consideration to what I say. Recently on 5th June 1971 the Tamil Nadu Government deputed the Secretary, P.W.D. and the Chief Engineer for discussion that took place in Delhi and in which Mr. Raj Bahadur, Central Minister presided. The Central Minister was addressing a two day meeting of State Public Works Secretaries and Chief Engineers. He pointed out that out of the Fourth Plan allocation of Rs. 418 lakhs for development of roads, only Rs. 66 lakhs had been spent during the first two years of the Fourth Plan. In other words, while on the one side we go on asking the Centre for proper allocation of funds, I do not understand how even the money allotted had not been properly spent by this Government. That is my misgiving. The Central Minister referred to some exceptions and the exceptions are Hariyana and Punjab and not Tamil Nadu. I expect a categorical reply from the Hon. Minister for P.W.D., what was the amount allotted under the head "Road Funds", what was the amount we spent and what was the amount we surrendered. I hope and trust he will give all those figures. Then Central Minister also expressed disappointment that progress had not been made by several States towards construction of rural roads. He requested the States to set apart 25 per cent of the total plan allocation towards rural roads. I want to know whether there is proper liaison between State and Centre in the matter of the construction of these roads, how much we have spent and how much we have surrendered. I think Government would make us available these figures.

Coming to P.W.D., I have again to point out that their 'performance ratio' is pathetic. The Hon. Minister had also expressed his concern. I can point out a number of cases of dissatisfaction. I hope and trust the Hon. Minister would give attention to what I say. Take my own constituency, Park Town. Even certain basic facilities are lacking in Moore Market. Certain facilities were there when the hon. Lady Member (Jothi Venkatachellum) was Minister. I had complained to the officials and even to the Minister about this but till today nothing had been done. The 'performance ratio' is pathetic. P.W.D. first pictures grandiose things but is there machinery to execute it properly? Mr. Manali Kandaswami is not here. As Chairman of the Assurance Committee he might agree with me that in 70 per cent of the

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 2

cases the performance had been very poor. I hope and trust the Hon. Minister would pull up the officials of the concerned department and see that 'performance ratio' is increased.

I now want to point out one fact. The hon. Member Mr. Bomman wanted me to say this on the floor of he House, since he did not get an opportunity to speak today. There is at present a controversy between Madras and Kerala regarding Pandiar-Punnampuzha. Already we had sunk some money and proceeded with some work. But because of the present controversy, all work had come to a standstill. It is not known whether we can proceed. I shall now give an alternative suggestion. Let us build a dam between 'Theppakadu' and 'Mudumalai'. Hon. Members coming from that area can also give their consideration to what I say. Bring Pandyar river water through a tube or tunnel to this dam and divert the water to Moyar power house. After taking enough water for power, let the surplus water be brought to Avinashi taluk. Originally it was thought to irrigate Avinashi. Let the controversy between Kerala and Madras be settled and let us win over this point. Convince them that we should get water. I hope and trust that the Hon. Minister would give serious consideration to what I say. By this arrangement, we would be benefitting the Avinashi taluk also and we could get some more power also

In the hope that the Hon. Minister would give serious consideration to the issues I have pinpointed and in the hope that he would give answer to all of them, I resume my seat.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப்பிரேரணைகளையெல்லாம் ஆதரித்துப் பேசும் வகையிலே ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். எல்லா மானியங்களுக்கும் 50 கோடி ரூபாய் செலவு செய்கிறது என்று குறிப்பிட்டார்கள். இது பொதுப்பணித்துறை மட்டும் அல்ல, பொதுப்பணத்தைச் செலவழிக்கக்கூடிய துறைகூட. ஆகவே, பொதுப்பணித்துறையில், பொதுப்பணத்தை எவ்வளவு ஜாக்கிரதையாகவும், கண்ணுங்கருத்துமாகவும் செலவழிக்க வேண்டுமென்பதில் அரசு அக்கறை காட்ட வேண்டும். குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு இப்போது இருக்கின்ற நிலையில் வேலைகள் ஓரளவுக்கு மிகக் குறைந்திருக்கின்றன. பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் கடந்த இருபதாண்டுகளாக ஆட்சி செய்தவர்கள் கட்டி முடித்துவிட்டார்கள். இப்போது சிறிய சிறிய குளங்கள், கிணறுகள், பூமிக்கடியிலே இருக்கும் தண்ணீரை எடுத்துப் பயன்படுத்துதல் போன்ற வேலைகள் தான் இருக்கின்றன. விவசாயத்திற்கு பூமிக்கடியில் இருக்கும் நீரை எடுத்துப் பயன்படுத்தலாமா, எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்பது போன்ற சிறிய வேலைகள்தான் இருக்கின்றன. பெரிய பெரிய வேலைகளையெல்லாம் அந்தக் காலத்திலே பல கோடி ரூபாய் செலவழித்து முடித்து விட்டார்கள். இப்போது போட்டிருக்கும்



1971 ஜூலை 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பத்துத் திட்டங்களையும் சேர்த்துப் பார்த்தால்கூட 235 லட்சம் ரூபாய்தான் வருகிறது. அதாவது 2½ கோடி ரூபாய்க்குத்தான் திட்டம் போட்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறையில் இருக்கின்ற குளங்கள், கண்மாய்கள் இவற்றைச் சரிபார்த்தலும் நீர்ப்பாசனத்துக்குப் புதிய வழிகளைக் கண்டுபிடித்தலும் தான் இப்போது இருக்கக்கூடிய வேலைகள்.

அடுத்தபடியாக, அகில இந்திய அரசியல்வாதிகளும் மற்றவர்களும், ஒரு முக்கியமான பிரச்சினையைப்பற்றிக் கூறி வருகிறார்கள். அதாவது கங்கையையும் காவிரியையும் இணைத்தால்தான் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதைப் பேசி வருகிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற ஆறுகளைப்பற்றிக் கவலைப்படாமல், கங்கையின் நீரை காவிரிக்குக் கொண்டுவர முடியுமா என்பதை முழுமையோடு சிந்தித்துப் பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கிடையில் அண்டை மாநிலமாகிய கேரளத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையிலே தோன்றி, குறுகிய தூரத்தில் ஓடி அரபிக் கடலில் விழும் தண்ணீரைத் திருப்பி தமிழகத்திற்குப் பயன்படுத்த முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். அண்டை மாநிலங்களுடன் பேசி, காவேரித் தண்ணீரை முழு அளவில் பெற முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆறுகளைப் பயன்படுத்திக்கொள்வதோடு, கங்கையையும் காவிரியோடு இணைக்க முடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். அண்டை மாநிலங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும்போது மிக ஜாக்கிரதையுடன் பேச வேண்டுமென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு, சிறுவாணி தண்ணீர் பற்றி கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கேரளத்திலேயும் அரசு மாறிக்கொண்டே இருக்கிறது. ஒப்பந்தம் வந்துவிட்டது என்கிறார்கள். பிறகு இல்லை, இல்லை. அதற்குள் கேரளத்திலுள்ள அரசாங்கம் மாறிவிட்டது என்கிறார்கள். இப்படியான சிக்கல் இருந்து கொண்டிருக்கின்றது.

மற்றொரு தகவலும் வந்தது. கேரளாவுக்கு பவானி நதியுடைய உரிமையும் இருந்தது இல்லை. பரம்பிக்குளம்-ஆளியாறு பற்றி நாம் பேசும்போது, மேல்பவானி தண்ணீர் வேண்டுமென்று கேரள அரசு கேட்டதாம், இவர்கள் கொடுத்துவிட்டார்களாம். இதற்கும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இதுவரை கேரளாவிற்கு இதுகுறித்த எந்தவித உரிமையும் இருந்ததில்லை.

அடுத்து, வீராணம் ஏரித் திட்டம், 21 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டமாகும். சென்னையினுடைய தண்ணீரைப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டுமென்று இவர்களுக்கு எண்ணமாம். இவர்கள் இந்த வீராணம் ஏரித் திட்டத்தில் காட்டியிருக்கிற அக்கறை மாதிரி, கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தில் நல்ல அக்கறை காட்டி

யிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். பல திட்டங்களைத் துருவித் துருவிப் பார்த்தால், சென்னையின் தண்ணீர் பஞ்சத்தைத் தீர்ப்பதற்கு கிருஷ்ணா-பெண்ணாறு திட்டம்தான் மிகச் சிறந்த திட்டமாகும் என்பது நன்கு விளங்கும். இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளாமல், வீராணம் ஏரியிலே போய் சிக்கிக் கொண்டார்கள். அதிலே சில கோளாறுகளும் இருக்கின்றன. இது வெறும் ஏரித்திட்டம் மட்டுமல்ல. வீராணம் ஏரித் தண்ணீரோடு, காவிரித் திட்டம் பிணைந்திருப்பதால்தான், காவேரித் தண்ணீர் சென்னைக்கு வருகிறது என்று சொல்லி, அதற்காக ஒரு பொம்மையும் வைத்து விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தைப்பற்றி அம்மையார் அவர்கள் கொஞ்சம் விளக்கம் கூறவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, எல்லாப் புள்ளிவிவரங்களும் அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. தெரிந்துகொள்ளட்டும். சட்டசபை அங்கத்தினராக இருந்த பொழுது பல திட்டங்களைக் கூறினார்களே . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே. இதில் சோமசிலா திட்டத்தை நிறைவேற்றித் தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்று ஆந்திரா தவித்துக் கொண்டிருக்கிறது. இது வரையில் நாம் எப்படித் தவித்துக் கொண்டிருக்கிறோமோ அது போல் தான் அவர்களும் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் ஆகவே தான், உடனடியாகச் செய்யக் கூடியதாக வீராணம் திட்டத்தை எடுத்துக் கொண்டோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** உடனடியாகச் செய்ய வேண்டுமென்று அரசு 21 கோடி ரூபாய் செலவழிக்கிறதே, சோமசிலா திட்டத்தை உருவாக்குவதற்கு ஏன் முயற்சி செய்திருக்கக்கூடாது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய மாநில சர்க்காரின் சார்பாக பணம் கொடுத்து, சோமசீலா திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கருதுகிறார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆந்திர மாநிலத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி, சீக்கிரம் செய்யுங்கள் என்று சொல்லியிருந்தால் நல்லது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் வருகிறதா, மண் வருகிறதா என்று தெரியவில்லை.

அடுத்தப்படியாக, கூவம் நதித் திட்டம். இதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. கோடையில் செய்யப்படுகின்ற வேலைகள் மழைக் காலத்தில் மறைந்துவிடு கின்றன. கரைகளில் வைத்த தென்னங்கன்றுகள்கூட மறைந்து போய்விடுகின்றன. இது ஏதோ 'கன்ட்ராக்ட்டர், பாரடைஸ்' மாதிரியாக இருக்கிறது. மிகக் குறுகிய காலத்தில் கூவம் நதித் திட்டத்தை முடிக்க வேண்டும்.





அடுத்தபடியாக, பக்கிங்காம் கால்வாயில் நல்ல அக்கறை காட்ட வேண்டும். அதன்மூலம் ஆந்திராவிலிருந்து பல சரக்குகள் போக்குவரத்துக்கு உபயோகப்படுகிறது, மத்திய அரசாங்கத்திடம் பேசி முடிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பேச்சுவார்த்தை நடத்தி நல்லபடியாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு அமைச்சர் அவர்கள் போகும்போதாவது பேச்சுவார்த்தை நடத்தி, துரிதமாகக் காரியங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இன்ஜினியர்ஸ், இன்ஜினியரிங் கிராஜுவேட்டுகளுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலும், இன்ஜினியர்களுக்கு பிரமோஷன் வாய்ப்புகள் மெதுவாக இருக்கின்றன. போதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு பல திட்டங்கள் உருவாகவில்லை ஒரு ஜே.இ. பத்து வருஷமாக இருந்தாலும் ஏ.இ. ஆக ஆவதற்கு வாய்ப்பு இல்லை. சேலம் உருக்காலை வந்தால் வேலைவாய்ப்பு இருக்கும் என்று சொல்கிறார்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்து, அவர்களுடைய குறைகளைப் போக்க வழிசெய்ய வேண்டும்.

அடுத்தபடியாக சம்பள குறைபாடும் அதிகமாக இருக்கிறது. பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டில் இருக்கும் டாக்டர்களுக்கு ஒரு சம்பளம். வெடர்னரி டாக்டர்களுக்கு ஒரு சம்பளம் என்ற அடிப்படையிலே இருக்கிறது. ஒரே கல்வி, தகுதி பெற்றிருந்தாலும் அவர்கள் சம்பளத்தில் வேறுபாடு இருக்கிறது. அவர்களுடைய குறைகளை தங்களுடைய குறையாக எண்ணி யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இருக்கிற ஒரு நல்ல அம்சத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஓர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்டில் ஐந்து வருஷம் சர்வீஸ் இருக்கிறவர்களையெல்லாம் பர்மனென்ட் செய்ய வேண்டுமென்று வழி செய்திருக்கிறார்கள் இது பாராட்டத்தக்கது. அவர்களுக்குக் குறையிருந்தால் அதைத் தீர்ப்பதற்கும் அரசாங்கம் முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, சாலைகள் பராமரிப்பு. பஸ் ஓடுகின்ற சாலைகளை துரிதமாக அரசு எடுத்துக் கொண்டால் நல்லது. பஞ்சாயத்து யூனியனால் மெட்டல் போடுவது முடியாது. நாம் கொடுக்கின்ற பணத்தைக் கொண்டு நகராண்மைக் கழகத்தால் செய்ய முடியாத நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கமே செய்யட்டும் என்கிறார். நகராண்மைக் கழகத்தாலேயே இந்த சாலை பராமரிப்பு நடத்த முடியவில்லையென்றால், பஞ்சாயத்து யூனியன் இதை எப்படிச் செய்ய முடியும் ? ஆகவே, பஸ் ஓடுகின்ற சாலைகளையெல்லாம் முடிந்தவரை அரசாங்கமே எடுத்து. மெட்டல் செய்து விட்டால் அதிகமான போக்குவரத்து செய்து தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 ஜூலை 2

அடுத்தபடியாக, சாலைகளின் இடையில் இருக்கின்ற பாலங்களை வெட்டி விடுகிறார்கள். பாலங்களும் வெட்டப்படுகின்றனவே தவிர, கட்டப்படுவதில்லை. இரவு நேரங்களில் அந்தப் பாலங்கள் வெட்டப் பட்ட இடங்களில் விளக்கு எரிவதில்லை. போக்குவரத்துக்கு இடைஞ்சல் இருக்கிறது. போகிறவர்கள் விழுந்து, எழுந்து, பத்து பேர் பலியானால்தான் அந்தத் துறைக்கு அதைப்பற்றிய எண்ணம் ஏற்படுகிறது. மேலும் மார்ச் 31-ம் தேதிக்குள் வேகம் வேகமாக பாலங்களை வெட்டுகிறார்கள். அந்த நிதியாண்டிற்குள் செலவு செய்ய வேண்டுமென்பதற்காக கண்ட்ராக்டர்களிடம் விடப்படு கிறது. இதற்குக் காரணம் என்ன? இம்மாதிரி செய்வது கேடானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிர, டிராங்க் ரோடிலே எல்லாம் பத்து கெஜம், இருபது கெஜத்திற்கு என்ற அளவில் பாலம் கட்டுவதற்காக வெட்டப்பட்டிருப்பதைப் பார்த் தால், உண்மையில் சாலை பராமரிப்பு இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட்டார் சாலை பரா மரிப்பு வேலையில் மிக மிக அக்கறையில்லாமல் இருக்கிறார்கள். மேலும் கட்டிடங்கள் எல்லாம் பழுது பார்க்கப்படுவதில்லை. பொதுக்கட்டிடங்கள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருக் கின்றன. கட்டிடங்களின் பராமரிப்பு குறைவாக இருக்கிறது, கொஞ்சம் செலவழித்து பழுதுபார்த்தாலும் பரவாயில்லை. ஏனெனில் லட்சக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து கட்டிடம் கட்டி, பழுது பார்க்காமல் நாசமாகக் கூடாது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரத்தில் மொபசல் பஸ் ஸ்டாண்ட் என்று ஒன்று இருக்கின்றது. அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை போய்ப் பார்த்துவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது பஸ் ஸ்டாண்டா அல்லது தொத்து நோய் களின் பிறப்பிடமா என்று எண்ணக்கூடிய விதத்தில் இருக்கிறது. சென்னை நகரத்திலேயே இந்த கதி என்றால், வேறு இடங்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. இந்த பஸ் ஸ்டாண்டை கட்டாயமாக ஒழுங்காகவும் துரிதமாகவும் சீர் செய்ய வேண்டும். அரசாங்கம் இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்திலே உள்ள பாலங்களின் கதி என்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஹாமில்டன் பிரிட்ஜ் கட்ட ஆரம் பித்து ஒரு ஆண்டு ஆகிறது. ஜூலையில் திறக்கப்போகிறோம் என்று செய்தி வந்தது. என்றைக்குத் திறக்கப் போகிறார்களோ தெரிய வில்லை. பாலங்கள் கட்டுகின்ற வேலையை கார்ப்பரேஷன் கையில் கொடுத்திருக்கிறோம். அதற்காக நாம் கடன் கொடுத்திருக்கிறோம். கட்டச் சொல்கிறோம். ஏன் காலதாமதம் ஆகிறது என்பதைப் பார்ப்பதில்லை. கடன் கொடுப்பதோடு நின்றுவிடாமல் அரசாங்கம் விரைவாக கட்டிமுடிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண் டால் ஹண்டக்கன்னி அம்மன் கோயில் பிரிட்ஜ், கல்யாணக்குப்



1971 ஜூலை 2] [திருமதி த. ந. அனந்தநாயகி]

போகின்ற பிரிட்ஜ், அடையாறிலே ஒரு குப்பத்திலிருந்து இன்னொரு குப்பத்திற்குப் போகின்ற முகத்துவார பிரிட்ஜ் என்று சொல்கின்றோமே அந்த பிரிட்ஜ்—அந்த பிரிட்ஜ் இப்பொழுது நடை பாதையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது, வண்டிகள் போக முடியாது. 100 அடி பாதைபோட வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் போட்டபாடில்லை. அதேபோன்று எண்ணூர் வரை 100 அடி பாதை போட வேண்டுமென்று சொல்கிறோம் இன்னும் போட வில்லை. கிழக்குக் கடற்கரை, மேற்குக் கடற்கரை சாலைகளும் அமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறோம் இன்னும் நட வடிக்கை எடுக்கப்படவில்லை நான் முன்னரே கூறியபடி பொதுப் பணித் துறைக்கு இதுதானே வேலை, எனவே சீக்கிரமாகச் செய்ய வேண்டும்.

சென்னையிலே எக்ஸ்டெண்டட் ஏரியாக்களில் வாட்டர் சப்ளை கிடையாது, டிரைனேஜ் வசதிகள் கிடையாது. தலைநகரில் குடி யிருக்கின்ற மக்களுக்கு குடிநீர் கிடையாது, வடிகால் வசதி கிடை யாது, சாக்கடை வசதி கிடையாது என்றால் அது வருந்தத்தக்கது. எனவே இதிலே உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். இல்லை யென்றால் அங்கே குடியிருக்கின்றவர்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதைப் பார்க்க வேண்டும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கழிவு நீரை பம்ப்செய்து பண்ணைகளுக்குப் பயன்படுத்தத் திட்டம் செய்தார்கள். வடசென்னையிலே கழிவுநீர் இருக்கின்ற நிலைமை யைப் போய்ப் பார்க்க வேண்டும் அமைச்சர் அவர்கள் வடசென்னை பேச்சே கெட்டுப் போய்விட்டது. காசிமேடு பகுதியிலே பார்த்தால் மூச்சே உள்ளே இழுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலை மையில் வாட்டர் அண்ட் சானிடேரி போர்டு என்றெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கமும் அந்த போர்டுகள் இருக்கின்றன என்று கவனிக்காமல் இருந்து, அந்த போர்டுகளும் கவனிக்காமல் இருந்துவிட்டால்—இரண்டு வீட்டு விருந்தாளியை யாரும் கவனிக்காததால் இறந்துவிட்டான் என்ற கதை மாதிரி ஆகிவிடும். ஆகவே இதைக் கவனிக்க வேண்டும்.

கிரவுண்ட் வாட்டரை வெளியில் கொண்டுவர வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோம். இதற்காக பல திட்டங்கள், அமைப்புகள் இருக்கின்றன. யுனைடெட் நேஷன்ஸ் டெவலப்மெண்ட் புரோ கிராம், கிரவுண்ட் வாட்டர் ரிசோர்சஸ் புரோகிராம், ரூரல் சென்ட்ரல் புரோகிராம் என்று பலவிதமான திட்டங்கள் மூலம் செய்யப்படுவ தால் ஓவர் லேப்பிங் வந்துவிடுகிறது. பலவித அமைப்புகள் தனித் தனியாகச் செய்வதால் கவனக் குறைவு ஏற்பட்டுவிடும். எனவே இவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்து, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

முக்கியமாக சில இடங்களிலே தரைப் பாலங்கள் கட்டுவதற்குக் கூட நாம் தயங்கிக் கொண்டிருக்கிறோம் சென்னை நகரத்திலிருந்து 10 மைல் தூரத்தில் திருவேற்காடு என்ற நல்ல ஸ்தலம் இருக்கிறது.

பட்டணத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள பாலம் ஒவ்வொரு வருடமும் உடைந்து விடுகிறது. அவ்வப்போழுது ரிப்பேர் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்தை அங்கே கட்டாமல் தள்ளிக் கொண்டுபோய், சில காரணங்களால் கட்டப்படுவதாகச் சொல்கிறார்கள், அந்தப் பாலமும் வருவதாகத் தெரியவில்லை. இங்கிருந்து போகின்ற மக்கள் மழை காலங்களில் போகமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அவர்கள் யாத்ரீகர்கள் செல்லக்கூடிய இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். யாத்திரை போவது சரியா, இல்லையா என்ற பிரச்சினை இல்லை. எனவே, திருவெண்காடு கோவிலுக்கு மக்கள் சிரமம் இல்லாமல் போகக்கூடிய முறையில் வசதியாக பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

பல உறுப்பினர்கள் பாலங்கள்பற்றிச் சொன்னார்கள். சில இடங்களில் சரியாக பாலங்கள் கட்டவில்லையென்றால், வெளி வட்டாரத்திலிருந்து நாங்கள் வெட்டப்பட்டு விடுவோம் என்ற நிலைமையில் பேசினார்கள். பழனிக்குப் பக்கத்திலே தாமரைக் குளம் என்ற அழகான ஊர் இருக்கிறது. இடையிலே ஒரு காட்டாறு. அங்கே உள்ளவர்கள் மருந்துக்காக அவஸ்தைப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த ஆற்றைக் கடப்பதற்குள் அங்கேயே ஆயுள் போய்விடும் என்ற நிலைமைதான் இருக்கிறது. எனவே சிறு சிறு தரைப் பாலங்களைக் கட்டினால் மக்களுக்கு வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் அந்த இடங்கள் எல்லாம் தீவுகள் ஆக இருக்கும். இதற்காக பஞ்சாயத்து யூனியன்கள் மானியங்கள் தருவார்கள் கடன் கொடுப்பார்கள் என்று எதிர் பார்த்தால் அவர்களுக்கு விமோட்சமே கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே இந்தத் தீவுப் படலங்களைத் தீர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

இந்தத் துறையிலே 50 கோடி ரூபாய் செலவழிக்க இருக்கிறார்கள். மைனர் போர்ட்டு முன்னேற்றத்தைக் கவனிக்க வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றாமல் மத்திய அரசு, மத்திய அரசு என்று சொல்லிக் கொண்டிருக்காமல் விரைவாக நிறைவேற்ற வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே தயாரிக்கப்பட்ட திட்டம் அது. இவையெல்லாம் கவனித்து வளர்ச்சியை இந்தத் துறையிலே காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவாதத்திலே சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நிதிக் கோரிக்கைகள் 26, 27, 28, 41, 42 இவற்றின் அடிப்படையிலே 51 கோடி ரூபாய் தரப்படுகிறது. அதரவு தருகின்ற எங்கள் கட்சியின் சார்பில் வெட்டுப் பிரேரணைகள் பற்றிப் பரிபூரணமாக நான் பேசமுடியாமல் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே வெட்டுப்



பிரேரணைகள் கவனிக்கப்படும் என்று நம்புகிறேன். சில முக்கியமான விஷயங்களைப்பற்றி மட்டும் நான் கூற விரும்புகிறேன். பொதுப் பணித் துறையின் பணி அதிகமாக ரோடு வசதிகளைச் செய்வது தான் என்று ஜனங்கள் மத்தியிலே எண்ணப்படுகிறது. ஏற்கனவே மத்திய அரசு நெடுஞ்சாலை நிர்வாகம் என்று அமைத்திருக்கிறது. தமிழகத்திலே மூன்றிற்கும் அதிகமான நெடுஞ்சாலைகள் போய்க்கொண்டிருக்கின்றன. நான்காவது திட்டத்திலே 41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த இரண்டாண்டுகளிலே இரண்டு கோடி ரூபாய்கூட கிடைக்காமல் இருக்கிறது என்று அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இந்த ஆண்டாவது 18 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால், அதைப் பரிபூரணமாக செலவழிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பிரபலமாக இருக்கக்கூடிய பாம்பன் பாலத்தைப் பொறுத்த வரையில் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. இங்கிருந்து ராமேஸ்வரத்திற்கு ரயில் மூலம்தான் போக வேண்டுமென்ற நிலைமையில்லாமல் பஸ் மூலமாகவும், கார் மூலமாகவும் போகலாம், நடந்து போகலாம் என்ற நிலைமை ஏற்படும்படி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்ற வேண்டும். இதனால் யாத்திரிகர்களுக்கு மட்டுமல்ல, அங்குள்ள மக்களுக்கும், மீனவர்களுக்கும் உறுதுணையாக இருக்க முடியும்.

ரோடுகள் எல்லாம் பஞ்சாயத்து ரோடுகள் என்றும், பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் என்றும் பிரித்திருக்கிறார்கள். எந்த எந்த இடங்களில் எல்லாம் பஸ்கள் போகின்றனவோ அவையெல்லாம் ஸ்டேட் ஹைவேஸ் என்று எடுத்துக்கொண்டால், ஓரளவுக்கு மெயின்டனன்ஸ், ரிப்பேர்ஸ் முதலியவற்றை நல்ல முறையில் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இராமேஸ்வரம் தீவைப்பற்றிப் பேசுகின்ற நேரத்திலே புயலின் காரணமாக தனுஷ்கோடி நம்மை விட்டுப் போய்விட்டது. பாம்பனிலிருந்து தனுஷ்கோடி வரையிலும் ரயில் போக்குவரத்து இருக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். தனுஷ்கோடி ஒரு சிறு துறைமுகமாக இருந்தது. ஓரளவுக்கு போய்விட்டாலும் ராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையிலுமாவது சீக்கிரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதையொட்டி சேது கால்வாய் திட்டமும் வருகிறது. 35 கோடி ரூபாய் செலவழிப்பதா அல்லது 55 கோடி ரூபாய் செலவழிப்பதா என்ற சர்ச்சையில் இறங்காமல், மண்டபத்திற்கு அருகாமையிலோ அல்லது ராமேஸ்வரத்திற்கு அருகாமையிலோ வாய்க்காலைத் தோண்டுவது பொருத்தமாக இருக்கும். அந்தக் காலத்திலே 100 மைல் நீளத்திலே சூயஸ் கால்வாயைத் தோண்டியிருக்கிறார்கள். அதன் மூலம் எவ்வளவு தூரம் சுற்றிக்கொண்டு போவது குறுகிப் போயிருக்கிறது என்பது தெரியும். கோஸ்டல் ஷிப்பிங், ஓஷன் கோயிங் ஷிப்பிங் இருந்தால் கொழும்பைச் சுற்றி வரவேண்டிய நிலையில்லாமல் தூத்துக்குடிக்குப் போவதற்கும்,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 2

இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பெருமை தேடித் தரத்தக்க வகையிலும் இருக்கும் என்பதால் மேலும் வற்புறுத்தி இதைச் [illegible].

மத்திய சர்க்கார் ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சொல்வது கட்டடங்களைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு கலெக்டர்கள், அல்லது சட்டம், அல்லது வைத்தியம் அல்லது [illegible] டெவலப்மெண்ட், போலீஸ் ஹவுஸிங் இப்படியாகப் பல பகுதிகளாக எல்லாவற்றுக்கும் பொதுப் பணித்துறைதான் பொறுப்பேற்றிருக்கிறார்கள். ஆனால் ரொம்பவும் காலதாமதமாகிறது. நான் அறிந்தமட்டில் தபால், தந்தி, இரயில்வே போன்றவைகள் அவரவர்கள் இலாக்காவினரே நடத்துகிறார்கள். அந்த இலாக்காவிற்குக் கொஞ்சம் பணம் ஒதுக்கி கட்டடங்களைக் கட்டுவது என்றால், அவர்களுக்கு நன்றாகப் புரியவும், கூடிய சீக்கிரம் செய்ய முடியும். உதாரணமாகச் சில காரியங்கள் நமக்கு வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அன்றிருந்த முதலமைச்சர் அவர்கள் மதுரையிலே இருக்கும் கோர்ட் புதிய கட்டடத்திற்குப் போக வேண்டுமென்ற காரணத்தால் ஏற்கனவேயிருந்த கட்டடம் இடிந்து விழுந்துவிடும் என்ற காரணத்தால் வெகுதுரிதமாக மதுரை கோர்ட் முடிந்தது. ஆனால் திருச்சி கோர்ட்டின் நிலைமை என்ன? எங்களுக்காக சேம்பர்ஸ் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்களே சென்னை வக்கீல்கள் அவர்கள் நிலைமை என்ன? அவைகளெல்லாம் துரிதமாகச் செய்யப்பட வேண்டுமென்றுதான் இந்த ஆலோசனையைக் கூறுகிறேன். தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம் அதற்காகச் சட்டமும் ஓரளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எந்தவிதமான வேலையாகயிருந்தாலும் காண்டிராக்ட் முறையிலே விடுவது என்பது நெப்போடிஸம் அண்ட் கரப்ஷன், இவற்றிற்கு இடம் தர ஆரம்பிக்கிறது. எனவே இப்படிப்பட்ட காண்டிராக்ட் முறையை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மைனர் போர்ட்ஸ் சம்பந்தமாக, அதுவும் இதிலே வருவதால் கூறுகிறேன். எங்கள் கட்சியின் சார்பிலே பேசிய திரு. எ. கே. சுப்பையா அவர்கள் ஏற்கனவே சொன்னார்கள், நாகப்பட்டினம் எப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. நாகப்பட்டினத்தைப் பொறுத்தவரையிலே இன்டர் மீடியட் போர்ட்டாக இருக்கிறது. பல வருஷங்களாக அதைப் பெரிய துறைமுகமாக ஆக்க வேண்டுமென்று கூறப்பட்டு வருகிறது. இந்தத் தடவைகூட அதற்காக என்று 1 இலட்சம் ரூபாய்கூட ஒதுக்கியதாகத் தெரியவில்லை. ஆகவே, நாகப்பட்டினத்தைப் பற்றி பாராமுகமாகயிருக்கும் போக்கை மாற்றி, இந்த ஆண்டிலேயே நாங்கள் சில ஏற்பாடுகள் செய்கிறோம் என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். கீழக்கரைக்கும், இராமேஸ்வரத்திற்கும் 12,000, 13,000 ரூபாய் ஒதுக்குகின்ற ஏற்பாடு வர



1971 ஜூலை 2] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வேற்கத்தக்கது. அதேபோல நாகப்பட்டினத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும். வெறும் 44,000 ரூபாய் மட்டும் ஒதுக்கினால் போதாது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மைனர் இர்ரிகேஷன் சம்பந்தமாக நல்ல விளக்கமான விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரேயொரு விஷயத்தை மாத்திரம் குறிப்பிட நான் விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்திலே அம்பாசமுத்திரத்திற்கருகில் கடனா நதித் திட்டம், ராமநதித் திட்டம் இருக்கிறது, 4, 5 வருஷ காலமாக இருக்கிறது. பெரிய சீர்திருத்தம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படை என்ன? ஏற்கெனவே கடனா நதித் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆயக்கட்டு 7,000 ஏக்கர்கள் உண்டு அதற்கு எப்படியாவது தண்ணீர் பாய வேண்டுமென்ற உத்தரவாதம் என்பதாகத் தான் கடனா நதித் திட்டத்தில் இருக்கிறது அதன் அடிப்படையில் மேற்கொண்டு 10,000 ஏக்கர்களுக்குப் பாய செய்திருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை இந்த ஆண்டின் இறுதிக்குள்ளேயே முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ராமநதித் திட்டத்திலும், ஏற்கனவே யிருக்கும் ஆயக்கட்டுகளின்படி 1,500 ஏக்கர்களுக்குப் பாய்கிறது. அதையும் உத்தரவாதம் கொடுத்து மேற்கொண்டு 500 ஏக்கர்களுக்குக் கிடைக்கும் திட்டம் அதுவும் இந்த ஆண்டிலேயே பூர்த்தியாக வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணைக்கட்டுத் திட்டத்தைப் புதுப்பிக்க சரியான ஏற்பாடுகள் செய்யப் பணமெல்லாம் ஒதுக்கியிருக்கிறார்கள். திருமங்கலம் தாலுக்காவிலுள்ள மக்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஷெட்யூல்ட் கண்மாய்கள் இருக்கின்றன, அதன் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். சிஸ்டம் வரக்கூடிய கண்மாய்களில் சிஸ்டத்தை விரைவு படுத்த வேண்டுமென்று கேட்கிறார்கள். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கலெக்டரைக் கேட்டால் மேலேயிருந்து வந்தால் நாங்கள் சர்வே செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதில் கொஞ்சம் கவனம் செலுத்தி எந்த அளவிற்கு அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்பட முடியுமோ, அந்த அளவிற்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே ஒர்க் சார்ஜ்டாக இருப்பவர்களை ரெகுலரைஸ் பண்ணிவிட்டார்கள் என்பது வரவேற்கத்தக்கது நாங்களும் வரவேற்கிறோம். இந்த நான் கோருவது பொதுப்பணித் துறையிலே இரண்டாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாட்டர் அண்ட் [illegible] போர்மன் கீழே வருகிறார்கள். அவர்கள் மதுரையிலே குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் வெகு [illegible]மாகக் கேட்டுக்கொண்டிருப்பது, இப்பொழுது பொதுப்பணித் துறையிலேயே தொடர்ந்து இருந்திருந்தால், ரெகுலரைஸ் ஆகியிருப்போம். ஆனால் பொதுப்பணித் துறையிலிருந்து ஒதுக்கப்பட்டு தனி இலாக்கா வந்திருப்பதால் நாங்கள் ஒர்க் சார்ஜ்டாக

இருக்க வேண்டுமா என்று கேட்கிறார்கள். அவர்கள் கேட்பதில் நியாயமிருக்கிறது. 10, 12 வருஷங்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். எனவே அவர்களையும் ரெகுலரைஸ் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எனக்குக் கிடைத்த விவரங்களின்படி, கேங்க் மஸ்தூர்கள், கேஷுவல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே கேஷுவல் தொழிலாளர்கள் நிரந்தர சம்பளமாக வேலை செய்ய வேண்டும். இங்கேகூடப் பார்க்கிறோம். ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத்திலும் பலர் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் கேஷுவலாக வேலை செய்கிறார்கள். ஆனால் தொடர்ந்து அவர்களை வைப்பதும், அவர்களுக்கு நிரந்தரத் தன்மையை ஏற்படுத்துவதற்கான ஒரு கருத்தோட்டம் நம் மத்தியில் இல்லாமலிருக்கிறது. அது வேண்டுமென்பதாக, நமது பெரும் தலைவர்களெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குச் சம்பள உயர்வை ஏற்படுத்த வேண்டும். நிரந்தரத் தொழிலாளர்களாகச் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஒர்க் சார்ஜ்ட் எஸ்டாபிலிஷ்மெண்டில், ஒரு குறிப்பிட்ட டேம் கன்ஸ்ட்ரக்ஷனில் வேலை செய்பவர்களை, அந்தத் தொழிலாளர்களுக்கு அங்கே வேலை முடிந்தபிறகு, அவர்களை ஒரு லிஸ்ட் எடுத்து, வேறு கன்ஸ்ட்ரக்ஷன் ஆரம்பிக்கும்பொழுது அங்கு அவர்களைக் கொண்டு போக வேண்டும். இந்த இடைக்காலத்திலே அவர்களுக்கு ஏதாவதொரு நிரந்தரமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். டாக் லேபர் போர்டிலே லிஸ்டெட் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்தால் அந்தக் காலத்தில் அவர்களுக்குக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படும் என்பதுபோல், ஒரு கன்ஸ்ட்ரக்ஷனிலே இருந்து விட்டு அடுத்த வேலைக்குப் போகும்வரை இடையிலே வேலையில்லாமலிருக்கும் காலத்தில், அவர்களுக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கப்படும் என்ற நிலையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆற்றுக் கால்வாயிலிருந்து கண்மாய்களுக்குத் தண்ணீர் வருவதில் தகராறு ஏற்பட்டுச் சில கிராமங்களில் வெட்டு, கொலை கூட நடக்கிறது. அப்படி சண்டை நடக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை நகரத்திலே மாடக்குளம் கண்மாய் என்றிருக்கிறது. அதற்கு ஆற்றுக்காலிலிருந்து தண்ணீர் வரவேண்டும். அப்படியிருக்கும் நிலையில் கண்மாயிலிருந்து பாசுபடி செய்பவர்களில் ஒரு கிராமத்திற்குத் தண்ணீர் கிடைத்து, வேறொரு கிராமத்திற்கு அறவே தண்ணீர் கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. இதனால் ஒரு கிராமத்திலிருப்பவர்களுக்கும், மற்றொரு கிராமத்திலிருப்பவர்களுக்கும் சண்டை வருகிறது. இடையிலே எங்களைப் போன்றவர்கள் பொதுவாக நிற்க வேண்டியிருக்கிறது. நாம் அவர்களுக்குத் தண்ணீர் தீர்வை போடலாம். மேற்கொண்டு பணம் வசூலிக்கலாம். அப்படி வசூல்





செய்து அரசே ஏற்றுக்கொண்டு, வேறு சில கண்மாய்களில் இருப்பதைப்போலச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்தப் பாலங்கள் கட்டுவதைப்பற்றிச் சொல்ல நினைக்கிறேன். அம்மையார் அவர்களும் சொன்னார்கள். பொதுவாகப் பாலங்களை ரிப்பேர் செய்வது என்பதில் டைம் நிர்ணயிக்க வேண்டும். சிறிய கல்வர்ட்ஸ்களாகயிருந்தால் 1 மாதத்திலே முடிக்க வேண்டுமென்றும், பெரிய கல்வர்ட்ஸ்களாகயிருந்தால் 3 மாதத்திலே கட்டி முடிக்க வேண்டுமென்றும் முடிவு செய்தால் தான் முடியும். அதைப்பற்றி பாராமுகமாகயிருந்தால் கண்டிப்பாக அது முடியாது. மதுரையிலே ஓவர் பிரிட்ஜ் போடப்படுகிறது. அது 10 வருஷங்களாக போட வேண்டுமென்று கேட்டுக் கேட்டு இப்பொழுதுதான் அந்த ஓவர் பிரிட்ஜ் வேலை ஆரம்பித்திருக்கிறது. அதை இந்த வருஷத்திற்குள் முடிக்க வேண்டும். அதேபோல திருநெல்வேலியில் போட வேண்டிய ஓவர் பிரிட்ஜையும் இந்த ஆண்டிற்குள்ளேயே முடிக்க வேண்டும்.

நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ்களில் டைவர்ஷனைக் குறைக்க வேண்டும். வெயில் காலத்திலேதான் நன்றாக வேலை செய்ய முடியும் என்றால், அதிகப்படியான பணியாளர்களை வைத்து விரைவில் பாலங்களைக் கட்டி முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சில சமயங்களில நமக்குச் சேர்ந்த நிலத்தை ஒதுக்கும்பொழுது கடைசியாக என்ன செய்வது என்று தெரியாமல் போகிறது. திருச்சி ஏரோடிரம் நிலம் இருக்கிறது, ஹவுசிங்கிற்காக என்று சொல்லி ஒதுக்கப்பட்டு, இப்பொழுது நமக்கு வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. அந்த இரண்டு ஏக்கரா நிலத்தையும் மத்திய சர்க்காரின் கீழ், பொதுப்பணித் துறையில் சிவில் பிரிவில் பணியாற்றுபவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் பயன்படுத்தினால், அவர்களுக்கு உதவி செய்தவர்களாவோம், அவர்கள் நம்மைப் பாராட்டுவார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. தர்மலிங்கம் அவர்களிடமும் சொல்லிருப்பதாக நான் அறிகிறேன். அதுபோன்ற ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை ஒரு விஷயம். சென்னை ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை இந்தியாவில் இருக்கும் பெரிய ஆஸ்பத்திரி. 2,000 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அது இப்போது ரொம்ப சுத்தமாக இருக்கிறது. அதற்காக இரண்டு கட்டடங்களைக் கட்டி முடித்திருப்பதாகக் கூறினார்கள். எட்டு மாடி கொண்ட கார்டியாலஜி பிரிவும், மல்டி ஸ்டோரிடு பில்டிங் ஒன்று நியூராலஜி பிரிவுக்கும் கட்டியிருக்கிறார்கள். வேறு எக்ஸ்டன்ஷன் இருந்தாலும் கட்டி முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 2

மதுரை நகரத்தைப் பொறுத்தவரை, சட்டமன்ற உறுப்பினர் திருப்பதி அவர்கள் சொன்னதுபோல் மருத்துவ மனை பெரிதாக வேண்டும். பெரிய கட்டடங்களை மருத்துவ மனைகளுக்காகக் கட்டுவதற்கு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கொஞ்சம் அதிக அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். அந்தந்த டிப்பார்ட்மெண்டுக்கு கட்டடம் கட்டுவதற்கு ஓரளவுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். குறிப்பாக, மருத்துவத் துறை, கல்வி ஆகிய இரண்டு துறைகளிலும் அந்த அதிகாரம் ஓரளவுக்காவது இருக்க வேண்டும்.

போலீசார் பலர் இன்று தங்களுக்குச் சரியான வீடுகள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரையில் உள்ள ரிசர்வ் போலீஸ் லைன் கூட வசதியற்ற நிலைமையில் இருக்கிறது. தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவை ஒருங்கே அமைந்து இருக்கும் வகையில் வீடுகளைக் கட்டித் தரவேண்டும். இது போன்ற விஷயங்கள் பற்றியெல்லாம் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறோம். ஒரு கண்மாய் பண்டாரம் இடைஞ்சலாக இருக்கிறது என்பன போன்ற வெட்டுப் பிரேரணைகள் எல்லாம் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் கவனித்து தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் விடுதலை செய்யப்பட்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருநெல்வேலியில் 1—7—1971-ம் நாள் காலை 10-15 மணி அளவில் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை, கோவில்பட்டி தொகுதி உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் அன்று பிற்பகல் 2.10 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார் என்று திருநெல்வேலி டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து தகவல் வந்திருப்பதை இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறை சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையில், சுமார் 41 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்லியதுபோல் பொதுப் பணித்துறைக்கு மானியமாக மொத்தம் ரூ. 51,73,00.500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறைக்காக என்றாலும் அது பொதுப் பணத்துறை என்கிறார்கள். இந்தப் பொதுப் பணத்துறை பாதுகாப்பாகச் செலவிடப் படும் என்பதையும் அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1971 ஜூலை 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமாகப் பேசியது அவரவர்கள் தங்களுடைய தொகுதிகளிலே செய்ய வேண்டிய பல காரியங்களைப் பற்றிதான். குறிப்பாக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் தொகுதி பற்றிச் சொல்லப்படுவதற்கெல்லாம் பரிகாரம் காண குழு நியமித்திருப்பதாகச் சொல்லிய காரணத்தாலும், சொல்லப்பட்ட காரியங்கள் நிறைவேற்றிக் கொடுக்கப் படும் என்ற நம்பிக்கை இருக்கும் காரணத்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தொகுதிப் பிரச்சினைகளைப் பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கும் பதில் சொல்ல முடியாவிட்டாலும் ஒருசில முக்கியமான கருத்துக்களைப் பற்றிப் பதில் சொல்ல விரும்புகிறேன். அதனால் மற்ற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று எண்ண வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறும் கோரிக்கைகளைப் பற்றி நம்முடைய அதிகாரிகள் குறிப்பெடுத்து இருக்கிறார்கள். சொல்லப்பட்ட ஒவ்வொரு கருத்தும், ஒவ்வொரு பிரச்சினையும் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு பொதுப்பணித் துறையில் முக்கியமாக மேஜர், மீடியம் Major Medium Irrigation ஸ்கீம்களுக்காக ரூபாய் 312.41 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்திற்கு ரூ. 288.40 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக ரூ. 252.55 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒதுக்கீடு செய்வதில் கடந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விடக் கொஞ்சம் அதிகமாகச் செலவழிந்திருக்கிறது. திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் அவ்வாறு செலவழிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காக ரூ. 202.18 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் செலவிடப்பட்ட தொகை 283.01 லட்சம் ரூபாய் ஆகும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை போதாது என்ற கருத்தை, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு 252.55 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது போதாது என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை 202.18 லட்சமாக இருந்தும் 283.01 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று தேவை ஏற்படும்போது, நிதியமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அதிகமான தொகையைச் செலவழிக்கும் ஏற்பாடுகள் அரசாங்கத்தின் மூலமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் போது சில முக்கியமான திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1971 ஜூலை 2

"பாசனத்தின் மேம்பாடு கருதி அரசு வகுத்துள்ள புதிய திட்டங்கள்-சின்னாறு, பரப்பலாறு, பாலாறு-பொரந்தலாறு, தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பா நதி, பொன்னணியாறு, பிளவுக்கல். பலியாறு. இவற்றிற்கு 1971-72-ல் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றுடன் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், சித்தாறு-பட்டணங் கால் திட்டம், கடானா நதித் திட்டம் வைகை கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஆகியவை சிறப்புடன் நடந்தேறுகின்றன. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக மொத்தத் தொகையாக ரூபாய் 608 லட்சமும், 730 சிறு பாசனப் பணிகளை நிறைவேற்றி முடித்திட 152 லட்சமும் ஒதுக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது பாசனத் திட்டங்கள் அனைத்தையும் படிப்படியாகப் புதுப்பித்து, கிடைக்கும் நீரை மேலும் சீரிய வழியில் சிக்கனமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு, அதில் ஒரு கட்டமாக, தாமிரபரணி பகுதியில் உள்ள கால்வாய்களில் சீர் திருத்தப்பணி நடந்து வருகிறது. அதேபோல, தஞ்சை மாவட்டத்துக் கால்வாய்களைச் சீர்படுத்த ஒரு வரைவுத் திட்டம் உலக வங்கியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும்கூட, மத்திய அரசின் அனுமதி அதற்கு இன்னும் கிடைக்கப்படவில்லை" என்று கூறியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் பேசிய உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் 49 கோடி ரூபாய்க்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தும், தஞ்சைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஏன் நடைபெறவில்லை என்று கேட்டார்கள். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தத் திட்டம் உலக வங்கியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும்கூட மத்திய அரசின் அனுமதி கிடைக்கப்படவில்லை. இதைப்பற்றி மத்திய அரசுக்குத் தெரிவித்து, வற்புறுத்தி இருக்கிறோம். அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த மன்றத்தில் பேசிய உறுப்பினர்கள் பலர் பஞ்சாயத்து ரோடுகளையும், பஞ்சாயத்து யூனியன் ரோடுகளையும் ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது போல் கடந்த ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 300 மைல்கள்தான் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் பெருவழித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டன. அது 500 மைல்களாக பிறகு உயர்ந்து, தற்போது ஆயிரம் மைல்கள் வரை ஆண்டு ஒன்றுக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை எடுத்துக் கொள்ளுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தொகுதியில் இருக்கும் ஒருசில பாதைகளை ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக, நான் அமைச்சர் என்ற முறையில்



1971 ஜூலை 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

உடனடியாக உத்தரவு போட முடியாது. டிஸ்ட்ரிக் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பிரையாரிடி கொடுக்கிற பாதைகளைத்தான் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் எவ்வளவு வேகமாகச் சொன்னார்களோ, அதே அளவில் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் சொல்லி அந்த திட்டங்களுக்கு பிரையாரிடி—முன் உரிமை வாங்கிக் கொடுப்பார்களேயானால், அரசாங்கம் ஏற்றுக் கொள்ள இருக்கின்ற ஆயிரம் மைல் சாலைகளில் சேர்த்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், 6 மேம்பால வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. திருச்சியில் ஒன்றும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மாயவரத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், செங்கல்பட்டில் ஒன்றும் ஆகிய 6 மேம்பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலைகள் இன்று தொடங்கி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் ராஜ் பகதூர் அவர்கள் சொல்லியதை படித்துக் காட்டினார்கள். தமிழகத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை விட, அதிகமாக நாம் செலவு செய்து இருக்கிறோம். மத்திய அரசு தமிழகத்திற்கு ரூ. 83 லட்சம் கடந்த ஆண்டு ஒதுக்கி இருந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை அந்த 83 லட்சம் ரூபாயைத் தாண்டி, ரூ. 152 லட்சம் செலவு செய்து இருக்கிறோம். நம்முடைய நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், நமக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு எதிலுமே ஒரு பெருமை உண்டு. எல்லாவற்றிலும் தமிழ் நாடு தான் முதலிடம் வகித்து வருகிறது என்று தெரியும். அதேபோல் நெடுஞ்சாலைத் துறையிலும் தமிழ் நாடு முதலிடம் வகிக்கிறது. ராஜ்பகதூர் சொல்லிய கருத்து தமிழ்நாட்டுக்கு என்று சொல்லப்பட்டது என்று கருத வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ரூரல் ரோடு ஓர்க்ஸ்க்கு செண்ட்ரல் கிராண்ட் கிடையாது. நேஷனல் ஹைவேஸ்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். நான் கூட ராஜ் பகதூரைப் பார்த்தபோது சொன்னேன். மத்திய அரசாங்கம் ரூரல் ரோடு டெவலப்மெண்ட் பணிகளுக்கும் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் ஆதித்தனார் அவர்களும், நானும்தான் சந்தித்து, ராஜ்பகதூர் சென்னைக்கு வந்திருந்த போது வலியுறுத்திக் கூறினோம். மத்திய அரசு, கடந்த காலத்தில் ரூரல் ரோடு டெவலப்மெண்ட்க்கு பணம் ஒதுக்கிக் கொண்டு வந்தது. ஆனால் இப்போது கொடுப்பது இல்லை. ஒரு நாட்டின் முன்னேற்றம் கிராமப்புற முன்னேற்றத்தில்தான் இருக்கிறது. பசுமைப்புரட்சி, வியாபார முன்னேற்றம் எல்லாம் இந்த கிராமப்புற முன்னேற்றத்தில்தான் இருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறை மிக நல்ல முறையில், திருப்திகரமான முறையில் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே அதற்காக நான் வருத்தப்படுகிறேன். தமிழ்நாடு தான் நெடுஞ்சாலைத் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இந்தியன் ரோடு காங்கிரஸ் மாநாடு நடைபெற்றதுபோது கூட, தமிழ்நாட்டில் தான் சாலைகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன என்று பாராட்டியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப்போல் இந்தியாவிலேயே எங்கும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய பெருமை இருந்தும்கூட, ஒரு சில உறுப்பினர்கள் நம்முடைய நெடுஞ்சாலை நல்ல முறையில் பணியாற்றவில்லை என்று சொல்லும் குற்றச்சாட்டை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கூவம் பிரச்சினைப் பற்றிக் கிளப்பினார்கள். நம்முடைய நோக்கம் எல்லாம் கூவத்தில் இருக்கும் துர்நாற்றம் போகவேண்டும். கூவத்தில் இருக்கும் கொசுக்கள் ஒழிய வேண்டும். கூவத்தை நல்ல முறையில் சீர்படுத்த வேண்டும் என்பதுதான். ஆனால் சில உறுப்பினர்களுக்கு கூவத்தில் இருக்கும் நாற்றம் போகக்கூடாது, கொசுக்கள் ஒழியக் கூடாது, அது அப்படியே இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள், கூவம் ஆற்றுத் திட்டம் சரியாக இல்லை, அது சரியாக சீர் படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்தி இருக்கிறார்கள். கூவம் சீரமைப்புத் திட்டம் பற்றி பல ஆண்டுகளாக பேசிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே பேசி இருக்கிறார்கள். மாநகராட்சியில் பேசியிருக்கிறார்கள். ஒவ்வொரு பேயர் வருகிறபோதும் பெரிய தலைவர்களை, முதலமைச்சர்களைப் பார்த்து இதுபற்றி பேசியிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : கூவம் ஆற்றிலே இருக்கும் கொசுக்கள் போக வேண்டுமென்று சொன்னார்கள். கூவத்திலே இருக்கிற கொசுக்கள் பூராவும் இப்போது ஊருக்குள் வந்து விட்டது. அரசு அதைப் போக்க ஏதாவது செய்தால் வரவேற்று இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா** : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கொசு மீது இருக்கும் அக்கறையைப் பாராட்டுகிறேன். (சிரிப்பு) இந்தக் கூவம் சீரமைப்புத் திட்டம் கடந்த காலத்தில் கவனிக்கப்படவில்லை. இந்தத் திட்டம் பற்றிய கட்டுகளை முன்பு இருந்த அரசு மூலையில் தூக்கிப்போட்டு விட்டது. நம்முடைய முதலமைச்சர் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய முயற்சி எடுத்தது. இன்று நடைமுறைக்கு வந்து இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் ரூ. 110 லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டதே. இப்போது 190 லட்சம் ரூபாய்க்கு ஆகியிருக்கிறதே, இதிலே தவறு இருக்கும் அல்லவா. அதிகாரிகள் அதற்கு பொறுப்புள்ளவர்களா என்று கேட்டார்கள்.





அந்தத் திட்டத்திலே எந்த விதமான குறைபாடும் இல்லை. அதிகாரிகள் ஒழுங்கான முறையில் பணியாற்றி வருகிறார்கள். சில வேலைகளில், சில திட்டங்களில் எஸ்டிமேட் போட்ட பிறகு மதிப்பீடுகள் மாறுவது வழக்கம்தான்.

எம்.எல்.ஏ. ஹாஸ்டலைப்பற்றிச் சொன்னார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டல் எப்படி முடிந்தது என்பது தெரியும். திரு. ஹாண்டே அவர்களுக்கும் தெரியும். அதுபற்றி இப்போது சொல்ல விரும்பவில்லை.

1948-ல் லோயர் பவானி அணைக்கட்டு திட்டத்திற்காக ரூ. 300 லட்சம் என்று போடப்பட்டது. ஆனால் ரிவைசுடு எஸ்டிமேட் போடும்போது ரூ. 1,034 லட்சம் என்று ஆகிவிட்டது. இதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது. அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று சொல்ல முடியுமா? முறையாக நடக்கவில்லை என்று சொல்ல முடியுமா?

1955-57-ல் புல்லம்பாடி அணைக்கட்டு திட்டம் போடப்பட்டது ரூ. 142 லட்சம் ஆகியது, பின்னாலே 206 லட்சம் ரூபாய் ஆகிவிட்டது. 1955–57-ல் புதிய கட்டளைக் கால்வாய் கட்டுவதற்காக 78 லட்சம் ரூபாய் என்று போடப்பட்டு, ரூ. 85 லட்சத்தில் முடிந்தது. வெட்டாறு பிராஜக்ட்க்கு ரூ. 61 லட்சம் என்று போடப்பட்டு ரூ. 87 லட்சமாக செலவு செய்யப்பட்டது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்காக ரூ. 3,500 லட்சம் என்று 1958-ல் போடப்பட்டு, வேலைகள் தொடங்கப்பட்டு, இது வரை ரிவைசுடு எஸ்டிமேட் படி ரூ. 6,800 லட்சம் செலவாகியிருக்கிறது. இப்படி எஸ்டிமேட்டுகள் உயர்ந்து கொண்டு போவதற்குக் காரணம் விலைவாசிகளின் உயர்வுதான். அதோடு தேவையான மாற்றங்கள் செய்யும்போது எஸ்டிமேட் உயர்வது இயற்கையாக இருக்கிறது. இதற்கு யார் மீதும் குற்றம் சொல்வது சரியல்ல.

**Dr. H. V. HANDE** : My point is that Cooum should be cleaned and there can be no two opinions on that. I only referred to what the Hon. Chief Minister had stated the other day while laying the foundation for the expansion bridge at Adyar. He had stated that the original estimate must be correct and should not far exceed. I mentioned the same thing.........

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி**: நான் அதை அதிகாரிகளுக்கு ஒரு அறிவுரையாகத்தான் சொன்னேன். கூடுமான வரையில் தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னேன். இந்த ரிவைசுடு எஸ்டிமேட் என்பது புதிதாக திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தபிறகுதான் ஏற்பட்டது இல்லை என்பதையும், பல்லாண்டுக் காலமாக இருக்கிறது என்பதையும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் எடுத்துக் காட்டினார்கள். கூடுமான வரையில் அந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை.

[1971 ஜூலை 2

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The sanctioned cost and the revised cost of the Cooum Improvement Works are as follows :—

| (1) | *Sanctioned cost.* (2) | *Revised cost.* (3) |
|---|---|---|
| | (RUPEES IN LAKHS) | |
| I Stage .. .. .. | 32.00 | 70.00 |
| II Stage .. .. .. | 62.00 | 108.00 |
| III Stage .. .. .. | 16.45 | 11.97 |
| Total .. | 110.45 | 189.97 |

The excess under the I stage is Rs. 38.00 lakhs and the excess under the II stage work is Rs. 46 lakhs. There is a saving of Rs. 4.48 lakhs under the III stage. A brief statement showing the reasons for the excesses under the I and II stages is given below :—

| *Name of work.* (1) | *Amount of excess.* (2) (RUPEES IN LAKHS.) | *Reasons.* (3) |
|---|---|---|
| I Stage : | | |
| (a) Construction of Regulator. | 10.19 | Redesigning and excess in tender rates. |
| (b) Inlet arrangements at Ennore for discharge of 150 cusecs of Coolant from Thermal Plant at Ennore. | 12.00 | Payment to Electricity Board for inlet arrangements at Ennore to discharge Coolant water from Thermal Plant to maintain better draft level in North B. Canal and also Cooum in City. |
| (c) Construction of Jetty. | 10·06 | Tender excess and extension of the length of Jetty by 50 per cent. |
| (d) Dredging and disposal of dredged materials at mouth. | 5.09 | — |
| II Stage. | | |
| (a) Channelisation of river. | 26·56 | Due to excess qnantity of earth work and increase in the area for lining and provision of walkways on reassessment of the area. |



1971 ஜூலை 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

| *Name of works.* (1) | *Amount of excess.* (2) (RUPEES IN LAKHS.) | *Reasons* (3) |
|---|---|---|
| (b) Beautification works. | 19.44 | Due to additional works such as construction of swimming and diving pool, Boat club, Dhobikhana, beautification of the area between Anna Samathi and construction of protection wall at Chinthadripet. |

அது மாத்திரமல்லாமல், குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்திருந்த மக்களுக்கு மாற்று வீடுகள் தந்திருக்கிறோம். அதனாலும் செலவு ஆகியிருக்கிறது. இந்த முறைகளில் அதிகச் செலவு ஆகியிருக்கிறது. வேறு தவறான வழிகளில் எதுவும் இல்லை. சில பத்திரிகைகளில் கூட எழுதியிருந்தார்கள். அதையும் பார்த்தேன். 'கூவம் ஆற்று சீரமைப்பினால் பயன் அடைந்தவர்கள் கண்ட்ராக்டர்கள்தான்' என்று. அம்மையாரும் அதையே சொன்னார்கள். எல்லா வேலைகளும் விதிமுறைகளுக்கு உட்பட்டு டெண்டர் விடப்பட்டுத்தான் செய்யப்படுகின்றன. எந்தவிதமான தவறுகளும் ஏற்படவில்லை.

இன்னொன்றையும் சொன்னார்கள். கூவம் சீரமைப்புத் திட்டம் மிக விரைவாக நடக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. அது விரைவாக முடியும் என்று நம்புகிறோம். கார்ப்பொரேஷன் ட்ரெயினேஜ் ஒர்க்குகளைச் செய்ய வேண்டும். கூவம் சீரமைப்புத் திட்டம் மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரைப்பற்றி அம்மையார் சொன்னார்கள். பிரிட்ஜ்கள் கட்டுவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்றார்கள். கால தாமதம் இல்லாமல் செய்யத்தான் முயற்சிக்கிறோம். நம்முடைய வேழவேந்தன் கூட பேசின் பிரிட்ஜ் வேலை துரிதமாக நடக்க வேண்டும் என்றார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நெடுஞ்சாலைத் துறையில் பணிகள் முடிந்துவிட்டன. ரெயில்வே துறையினர் தன்னுடைய வேலையைச் செய்ய வேண்டும். அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். சீக்கிரமாக நிறைவேற்றி வைக்கப்படும் என்று நம்புகிறோம்.

சென்னை நகரில் பல பாலங்களைப் பற்றிச் சொன்னார்கள். வாலாஜா பாலம் 22 லட்சம் ரூபாய், வெல்லிங்டன் பாலம் ரூபாய் 21 லட்சம், அடையாறு பாலம் ரூ. 58 லட்சம், பேசின் ப்ரிட்ஜ் பாலம் ரூ. 21 லட்சம், ஜெமினி ஃப்ளை ஓவர் ரூ. 45 லட்சம் ஆக, 167 லட்சம்

ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டு, அந்த வேலைகள் நடைபெறுகின்றன. நேஷனல் ஹைவேஸ் சம்பந்தப்பட்ட வரையில், மைசூருக்கும் சேலத்திற்கும் புதுப்பித்து அமைக்க டெண்டர் விடப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறது.

Economic and inter-State importance scheme என்ற தலைப்பின் கீழ், குளித்தலைக்கும் முசிரிக்கும் இடையே காவிரியில் ஒரு பிரிட்ஜ் அமைக்க ரூ. 80 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஈஸ்ட் கோஸ்ட் ரோடில் மிஸ்ஸிங் மேஜர் பிரிட்ஜ்கள் என்று 2 கோடியே 65 லட்சம் ரூபாயில் எடுக்கப்படும். இந்த வேலைகளுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து முழுப்பணமும் கிடைத்திருக்கிறது. வேலைகள் துவங்க ஏற்பாடுகள் செய்திருக்கிறது.

சென்ட்ரல் ரோட் பண்டிலிருந்து, பழனிக்கும், கொடைக்கானலுக்கும் இடையே 75 லட்ச ரூபாயில் அமைக்க டெண்டர் விடப்பட்டு துவங்கும் நிலையில் இருக்கிறது. அதோடு, ஆடலூரிலிருந்து, பண்ணைப்பட்டி பாச்சலூர் ரோடில் தாண்டிக்குடியைச் சந்திக்கவும் பாச்சலூரிலிருந்து வடக்காடு, ஒட்டன்சத்திரம் வரையில் ரூ. 25 லட்சம் அளவிலும் செய்ய இருக்கிறது.

ஆக, இந்த வேலைகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். சில உறுப்பினர்கள் ஆற்றுப் படுகை, குளத்துப் படுகை பற்றியெல்லாம் சொன்னார்கள். அனுமதியில்லாமல் தண்ணீர் எடுப்பதைப் பற்றியும் சொன்னார்கள். அரசு அனுமதியில்லாமல் பாசனத்திற்கு தண்ணீர் எடுப்பதைப்பற்றி கண்டுபிடிக்கப்பட்டு, உத்தரவுகளெல்லாம் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது இருக்கிற பிரச்சினை ஆக்ரமிப்பு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போது, சில நண்பர்கள் வராமல் இருந்தாலேயே நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

நெடுஞ்சாலையில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக, இருமருங்கிலும் குடிசைகளும், கடைகளும் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். தஞ்சையிலும், கோவையிலும், மாவட்ட அதிகாரிகள் சர்வகட்சித் தலைவர்களையும் அணுகி பேச்சுவார்த்தை நடத்தி, வேண்டிய நடவடிக்கை எடுக்க இருப்பதால் அதற்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர்கள் கருத்து. ஹைவேயில் உள்ள ஈ.ஈ., ஏ.இ. இவர்களுக்கு அதிகாரம் போதாது என்றார்கள். ஆக்ரமிப்பைத் தடை செய்யப் போனால், ரெவின்யூ இலாகாவில் டி.ஆர்.ஓ.-விடம் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார்கள் என்றார்கள். ஈ. ஈ.-க்கு அப்பீல் பவர் இருக்க வேண்டும் என்று தஞ்சையில் கருத்தரங்கில் சொல்லப்பட்டது. அந்த பிரச்சினையையும் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.



திரு. கிட்டப்பா அவர்கள் ஏ. கிளாஸ் சானல்களை சரிசெய்ய வேண்டும் என்றார்கள். அது குடிமராமத்து பிரச்சினை. நம்முடைய அரசு விசேஷ கவனம் செலுத்தி, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் ஏ. கிளாஸ் சானல்களுக்கு 10 லட்ச ரூபாய் கொடுத்து இருக்கிறது. இதைக் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற வாய்க்கால்களைச் சீரமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் பொதுப் பணித் துறை ஒத்துழைப்போடு செயல்படுவார்கள். குடிமராமத்து சரிவர செய்யப் பட்டால் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். தமிழ் நாடு பூராவும் இவற்றை பொதுப்பணித் துறை ஏற்றுக் கொள்வதன் மூலம், பஞ்சாயத்து யூனியன் மூலமாக, பொதுப் பணித் துறை செய்யலாமா என்கிற ஒரு பிரச்சினை இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அந்த முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அம்மையார் எஞ்சினியர்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற பிரச்சினையைக் கிளப்பினார்கள். இருக்கும் சிவில் எஞ்சினியர்கள் எல்லோருக்கும் வேலை கொடுத்தாகிவிட்டது. நெடுஞ்சாலைத் துறையில் அவர்கள் அமர்த்தப்பட்டு விட்டார்கள். மெகானிகல் எஞ்சினியர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும், மற்றபடி சிவில் எஞ்சினியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க பல திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

With a view to afford relief to the unemployed engineers, the Government have taken up execution of Tank Restoration Schemes and Comprehensive investigation of major and minor irrigation projects, in this State. The particulars of the engineers benefited by the above schemes are given below :—

| | |
|---|---|
| Formation of four divisions for tank restorations schemes sanctioned in July 1968. | 75 Engineering Graduates and Diploma holders. |
| Formation of one Investigation circle with headquarters at Tiruchirapalli with 10 divisions for investigation of major and minor irrigation schemes sanctioned in November 1969. | 210 Engineering Graduates. and 110 Diploma holders. |
| Execution of minor irrigation schemes in 1970. | |
| Modernisation of Vaigai Channel (Madurai district).<br>Thandarai Anicut scheme (Cheyyar in North Arcot district).<br>Ponnanier Scheme (Thirnchirappalli district).<br>Chinnar Scheme (Salem district).<br>Nandan Channel Schem (Tiruvannamalai in North Arcot district).<br>Palar Parappalar Scheme Madurai district). | 110 Engineers. |

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1971 ஜூலை 2

| | |
|---|---|
| Workcharged Establishment (in supervisory capacity). | 14 Engineering Graduates and 497 diploma holders. |

Besides the above the Government in the Labour Department have sanctioned a new Scheme in October 1970 for the training of unemployed technical personnel to afford relief to the unemployment problem to a considerable extent. The scheme contemplates the training of the following number of personnel during 1970-71 who will be paid stipend at the rates indicated against each category :—

| | | | |
|---|---|---|---|
| Degree holders | 600 | .. | Rs. 250/p.m. |
| Diploma holders | 1000 | .. | Rs. 150/p.m. |
| Craftsmen | 800 | .. | As payable under the Apprenticeship Act. |

The number of trainees absorbed under the above Schemes in the Public Works Department and the Electricity Board is furnished below :—

*Public Works Department*

Engineering Graduates (mechanical)—111.

Diploma holders—569.

Craftsmen—800.

*Electricity Board*

Engineering Graduates (electrical and mechanical)—145.

Diploma holders—150.

Craftsmen—200.

In addition to the above the following personnel are being trained in various works of Thermal Station on temporary casual labour basis :—

Engineering Graduates—200.

Diploma holders—256.

ஆகவே, வேலை வாய்ப்பளிப்பதற்காக இந்த அரசால் முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாண்டே அவர்கள் எஞ்சினியர்களுடைய குறைபாடுகளை, டிமாண்டுகளைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் கேட்டதில் மிக முக்கியமானது ஸ்டேட்டஸ், அதாவது கெஜடட் பதவி வேண்டும் என்பது. அது முக்கியமானது என்று வலியுறுத்தினார்கள். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள் ஜூனியர் எஞ்சினியர்கள் கெஜடெட்டாக இருப்பார்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அதுதான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கை. அது நிறைவேற்றப்பட்டுவிட்டது. அடுத்து, பே கமிஷன் மூலம் ஊதிய உயர்வும்



1971 ஜூலை 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கிடைத்திருக்கிறது. சூப்ரவைசர்களுக்கும் அதிகமான ஊதியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த அரசைப் பொறுத்தவரையில், அவர்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் நாகப்பட்டினம் துறைமுகம் பற்றியும் தூத்துக்குடி துறைமுகம் பற்றியும் குறிப்பிட்டார்கள் நாகப்பட்டினத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 14 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1968-ல் 8.2 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு இருக்கின்ற புள்ளி விவரக் கணக்குப்படி. துறைமுகம் இலாபகரமாக வருமானம் உள்ளதாக இருக்க, இரண்டு லட்சம் டன் கார்கோ இருந்தால்தான் 'எகனாமிக் ஸ்கீம்' வருவாய் வரும் திட்டமாக மேற்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் முடியும் என்ற நிலை இருக்கிறது. இன்று நிலை என்ன என்றால், 2 லட்சம் கார்கோ வரவில்லை. ஒரு லட்சம்தான் வருகிறது. எனவே அதைச் சீர்ப்படுத்த முடியாதென்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். பி.ப. 1-30

சேதுசமுத்திர திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அமைச்சர் திரு. ராஜ் பகதூர் அவர்களை வற்புறுத்தியிருக்கிறோம். அமைச்சர் ஆதித்தனாரும், நானும் திட்ட அமைச்சர் அவர்களிடமும் வற்புறுத்தியிருக்கிறோம். இதில் நல்ல முடிவு ஏற்படும் என்று நினைக்கிறேன்.

அடுத்து, குமாரசாமி அவர்கள் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் சர்ச்சை செய்ய விரும்பவில்லை. பாண்டியாறு—புன்னம்புழா 1965 ஒப்பந்தத்தின்படி, அந்த 24 டி.எம்.சி. தண்ணீரை உபயோகித்து மின்சாரம் எடுத்துக்கொண்டு அதன்பிறகு அப்படியே அந்த நீரைக் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்காமல் அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டதற்கு அவர்கள் ஒப்புதல் தர மறுக்கிறார்கள் நாம் நம்முடைய காச்மெண்டிலிருக்கிற தண்ணீரான 24 டி.எம்.சி.-யில் 14 டி.எம்.சி.-யைத்தான் கேரள அரசிடம் கேட்டோம். அவர்கள் இசைவு தரவில்லை. இது சம்பந்தமாக டாக்டர் கே. எல். ராவ் அவர்களையும் திட்டக்குழு உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்களையும் உதகமண்டலத்தில் சந்தித்துச் சொன்னோம். எனவே. இதில் எங்களுக்கு தீவிரமான அக்கறை இருக்கிறது. இந்த முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பக்கிங்ஹாம் கனலைப் பற்றி திரு வேழவேந்தன் அவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்களும் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்தத் திட்டம் பல ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசிற்கு 4¼ கோடி ரூபாய் திட்டம் ஒன்று அனுப்பப்பட்டு, அவர்களின் ஒப்புதலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும் கூட 42 லட்ச ரூபாயை நம்முடைய அரசு இந்தத் திட்டத்திற்காகச் செலவழித்திருக்கிறது. இப்போது

கூட மத்திய அரசிற்கு திட்டம் அனுப்பி இருக்கிறோம்; அதைச் சீர்ப்படுத்தி போக்குவரத்திற்குப் பயன்படுத்தலாம் என்று விளக்கி 20 லட்ச ரூபாய்த் திட்டம் ஒன்றை அனுப்பியிருக்கிறோம். இதுவரை ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

அடுத்து, கிரவுண்ட் டிவிஷனைப்பற்றி பேசினார்கள். நம்முடைய அம்மையார் அவர்களும் சொன்னார்கள். கோவார்டினேஷன் பிட்வின் யூ.என்.டி.பி. அண்ட் டிரக்டர் கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். இதை யூ. என். டி. பி. ஏற்கனவே பரிசீலனை செய்துவருகிறது. அதன் பரிசீலனை அறிக்கை இன்னும் வரவில்லை. அதற்கும் கிரவுண்ட் வாட்டர் டிவிஷனுக்கும் ஒன்றுக்கொன்று முரணான அறிக்கை கிடையாது. கிரவுண்ட் வாட்டர் டிவிஷன் சோதனையை ஆரம்பித்திருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு டிரக்டர் நியமித்து இருக்கிறோம். அதற்குத் தேவையான ஸ்டாப், எக்விப்மெண்ட் எல்லாம் கொடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான திட்டமாகும். அம்மையார் அவர்கள் சொன்னது போல பெரிய திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எனவே பூமிக்குள் இருக்கிற தண்ணீரைக் கொண்டுவர திட்டம் போட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

வொர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய அரசு 5 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வொர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டை எல்லாம் ப்ரொவின்ஷியலைஸ் ஆக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், இன்னும் பல உறுப்பினர்களும் சொன்னார்கள். ஒரு ப்ராஜெக்ட் வேலைக்கு ஆட்களை எடுத்த பிறகு அவர்களை வீட்டுக்கு அனுப்பக்கூடாது. மறு வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைய நிலை என்னவென்று சொன்னால், ஒரு குறிப்பிட்ட திட்ட வேலைக்கு ஆட்கள் எடுக்கப்படுகிறார்கள். அந்த வேலை முடிந்த பிறகு மற்ற திட்டங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். அதுவும் இல்லை என்று சொன்னால், வேலையிருந்தால் மற்ற இலாகாக்களுக்கு மாற்றப்படுகிறார்கள். ஆனால் அவர்களையெல்லாம் நிரந்தரமாக வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லாத நிலை இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களும், கோவை நகர சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு டெண்டர் அழைக்கப்பட்டு அது பரிசீலிக்கப்பட்டு வொர்க் என்ட்ரஸ்ட் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்படும். அதே போல பேரூர் சட்டமன்ற உறுப்பினர் வழுக்குப்பாறை பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது கவனிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.





அதேபோன்று, பேரணமல்லூர் உறுப்பினர் எட்டியப்பன் அவர்கள் அரணை-வாழைப்பந்தல் பாலத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்காக 2 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படவிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

கன்யாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த மாவட்டத்தில் நாம் பொறுப்பு ஏற்றபிறகு கடலோரப் பகுதிகளில் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். கடலோர தடுப்புச் சுவர் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் வெல்லிங்டன் ரிசர்வாயர் பற்றிச் சொன்னார்கள். அது ஏற்கனவே அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு அதற்கென்று 11 லட்ச ரூபாய் திட்டமொன்று இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். பழவாறுத் திட்டம் பற்றிச் சொன்னார்கள்.

An estimate for Rs. 9 lakhs for improvements to Pazhavaru has been received from the Chief Engineer and it is under consideration. என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காவிரி ஆற்றில் கழிவு நீர் வருவதுபற்றி சொன்னார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட சீப் எஞ்சினியர் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதற்கும் அனுமதி கொடுப்பதற்கு முன்பு கழிவு நீர் எப்படி அனுப்பப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை மீறியவர்களின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது கூட சீப் என்ஜினியர் அவர்கள் எந்த முறையில் அந்தக் கழிவு நீரை பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் சொல்ல காலம் இல்லாத காரணத்தால் அதை குறித்து வைத்திருக்கிறேன். நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக காவிரி ஆற்றுப் பிரச்சினை பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன் காவிரியைப் பொறுத்த வரையில், அதன் தண்ணீரைப் பங்கிட்டுக்கொள்ள தமிழகத்துக்கும் மைசூருக்கும் இடையே குறிப்பாக 1892 ஒப்பந்தமும், 1924 ஒப்பந்தமும் இதைக் கட்டுப்படுத்துகிறது. இந்த ஒப்பந்தத்தின்படி இரண்டு மாநிலங்களும் நடந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால்,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1971 ஜூலை 2

The Government of Mysore have taken up for execution without the prior consent of the Tamil Nadu Government the following irrigation projects on the tributaries of the Cauvery in Mysore :

The Hemavathi Reservoir Project

The Kabbini Reservoir Project

The Swarnavathy Reservoir Project

The Harangi Reservoir Project

A number of reservoirs under Clause 10 (xiii) of the 1924 agreement across the tributaries of the Cauvery not mentioned in Schedule ' A ' of the 1892 agreement.

எனவே முக்கியமாக, ஹேமாவதி, கபினி, சுவர்ணவதி, ஹாரங்கி ஆகிய 4 அணைகளை கட்டி முடிக்க திட்டம்போட்டு கட்டிக்கொண்டிருக்கிறார்கள் இவைகளை கட்டுவதற்கு அவர்கள் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் நடக்க வேண்டும்.

The Inter-State Agreements of 1892 and 1924, while permitting certain extensions of irrigation in Mysore east, at the same time, certain obligations on that Government to ensure that the irrigation interests of the lower riparian proprietor, Tamil Nadu, are not injured. With this end in view, these agreements stipulate certain prerequisites to be fulfilled by Mysore before that Government are permitted to commence work on irrigation projects across streams mentioned ni Schedule 'A' of the 1892 agreement. The conditions are :

(i) Under Clause II of the 1892 agreement Mysore shall not without the previous consent of the Tamil Nadu Government build these irrigation reservoirs.

(ii) Under Clause III of the 1892 agreement full information regarding the proposed work shall be furnished to the Tamil Nadu Government.

(iii) Again under Clause III of the 1892 agreement the consent of the Government of Tamil Nadu shall be obtained prior to the actual commencement of work.

(iv) Under Clause 10 (vii) of the 1924 agreement the impounding in the proposed reservoirs shall be "so regulated as not to make any material diminution in the supplies connoted by the gauges accepted in the rules of regulation for the Krishnaraja Sagara forming Annexure I to this Agreement. . . . .

(v) Under Clause 10 (viii) of the 1924 agreement "the Mysore Government further agree that full particulars and details of such reservoir schemes and of the impounding therein shall be furnished to the Tamil Nadu Government to enable them to satisfy themselves that the conditions in Clause (vii) above will be fulfilled. Should there arise any difference of opinion between the Tamil Nadu and Mysore Governments as to whether the said conditions are fulfilled in regard to any such scheme or schemes,





1971 ஜூலை 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

both the Madras and Mysore Governments agree that such difference shall be settled in the manner provided in clause (xv) below ".

எனவே இந்த கண்டிஷன்களுக்கு உட்பட்டுத்தான் மைசூர் மாநிலம் நடவடிக்கைகளை துவக்க வேண்டும். 1892 ஆண்டு 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி மாநிலத்தில் கட்டப்படுகின்ற திட்டங்களின் விவரங்களை தமிழ்நாட்டு அரசுக்கு தெரியப்படுத்தி, தமிழக அரசு திருப்தி அடைந்த பிறகு தான் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்படி இருக்கும்போது மைசூர் அரசு நம் சம்மதம் இல்லாமல் மத்திய அரசு அனுமதி இல்லாமல் வேலைகள் துவக்கியதால்தான் நமது முதலமைச்சர் 1968-ல் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோதும் அதைத் தொடர்ந்து முதலமைச்சராக ஆன பின்னும் பல கட்டங்களில் மைசூர் அரசோடு நாம் பேச்சு வார்த்தை நடத்தினோம். நமது முதலமைச்சர் மத்திய அமைச்சரான திரு. கே. எல். ராவோடும் மைசூர் முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீலோடும் பேசினார்கள். எந்த விதமான முடிவுக்கும் வரவில்லை மைசூர் அரசு. இந்த அணைகளைக் கட்டுவதால் நமக்கு பெரிய பாதகம் ஏற்படும் என்று கருதி அதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து இருக்கிறோம்.

This Government in their letter, dated 26th April 1969, sought the intervention of the Prime Minister in the matter of securing Mysore's compliance to the Inter-State agreement. It was pointed out that immediate cessation of work on these projects was necessary as the object of Mysore in executing these works unilaterally and in contravention of the Inter-State agreement could only be to present this Government with a *fait accompli* and secure their acquiescence to situations not permitted under the agreements and highly prejudicial to the irrigation interests of this State.

இந்தக் கடிதத்திற்கு ப்ரைம்மினிஸ்டர் பதில் . . .

The Prime Minister in her letter, dated 23rd August, 1969 stated that certain modification in the scope of the Hemavathi project had been suggested to Mysore and that their reply is awaited. The Prime Minister added இதுதான் முக்கியம்

That they were anxious that the Inter-State aspects should be settled satisfactorily before the Hemavathi Project is formally sanctioned and that the Union Minister for Irrigation and Power, had been requested to take a hand in amicably resolving the differences which had arisen over the Harangi, Kabbini and Swarnavathy Projects.

எனவே, ப்ரைம்மினிஸ்டர் அவர்கள் இண்டர் ஸ்டேட் ஆஸ்பெக்டை செட்டில் செய்த பிறகுதான் இந்தத் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று தெரிவித்து இருக்கிறது. அப்படி இருந்தும் மைசூர் மாநிலம் முன் அனுமதி இல்லாமலும் தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமலும் இந்த அணைகளைக் கட்டி வருகிறது.

In an effort to solve the dispute, the Government of India convened a conference of the officials of Tamil Nadu, Mysore and Kerala at New Delhi on the 27th and 28th January, 1970 in the presence of the Union Secretary for Irrigation and Power as a prelude to a conference of the State Chief Ministers on the 9th February, 1970. These discussions failed. . .

இதற்கு மேல் மத்திய அமைச்சரவைக்கு தெரிவிப்பதாகச் சொல்லி விட்டார்கள். இப்படி சொல்லி விட்ட பிறகு மறுபடி பேச்சு வார்த்தை இல்லாமல் போய்விட்டது.

Dr. K. L. Rao categorically stated that the talks have failed. In the press statement he has categorically stated that the talks have failed . . . .

எல்லாம் ஆகிவிட்டது. இப்போது ஹேமாவதியைப் போல கபினி திட்டம் என்று அணைக்கட்டுகளை கட்ட ஆரம்பித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** காவிரி நீர் பற்றி விவாதிப்பதற்காக ஒரு நாள் வைத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்கு இது பற்றி விவரமாகச் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லுவதைப் போல இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்கு ஒரு முழு நாள் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு நானும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் டில்லிக்கு போக இருக்கிறோம். சுமுகமான முடிவு ஏற்பட விரும்புகிறோம். அப்படி ஏற்பட ஒரு சூழ்நிலை உண்டானால் அதை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக்கொள்ள இருக்கிறோம்.

திரு. மாறன் அவர்கள் எழுதி இருக்கிறபடி, திரும்பிய திசை எல்லாம் நெல்மணி குலித்து, தென் குல பெண் அரைத்த மஞ்சளில் குளித்து, நடையினில் பாத கலையினை சேர்த்து, நறுமண மலரால் மேனியை மறைத்து, வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய காவிரிக்கு இன்னொரு மாநிலமும் உரிமை கொண்டாட முடியும் என்பது சிலருக்கு வியப்பாகவே இருக்கலாம். ஏனெனில் காவிரி தமிழரின் உயிரோடும் ஊனோடும் வரலாற்றோடும் பண்பாட்டோடும் கலந்து விட்ட ஒன்றாகும். அப்படிப்பட்ட உணர்ச்சிவசப்பட்ட பிரச்சினைக்கு நல்ல முடிவு ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆதரவை தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மானிய கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன், வணக்கம்.

THIRU K. T. K. THANGAMANI : I suggest that all the cut motions may be disposed of together, unless any hon. Member who has moved a cut motion demands that it should be put to vote.

MR. SPEAKER : I agree with the hon. Member Thiru K. T. K. Thangamani. All the cut motions are before the House. . . The cut motions are, by leave of the House. . .



THIRU K. T. K. THANGAMANI : What I suggested was this. Instead of taking up each cut motion, all the cut motions may be taken up together.

MR. SPEAKER : How can they be put together? They are different cut motions. That cannot be done.

THIRU J. JAMES : I am not pressing my cut motion to Demand No. 26.

The cut motion was, by leave, withdrawn.

THIRU K. T. K. THANGAMANI : I am not pressing my cut motion.

The cut motion was, by leave, withdrawn.

DR. H. V. HANDE : I am not pressing my cut motion.

The cut motion was, by leave, withdrawn.

The cut motion of THIRU M. SURENDRAN was deemed to have been withdrawn as he was not in his seat.

The cut motion of THIRU K. S. KOTHANDARAMIAH was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 10,96,10,900 under Demand No. 26—Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of THIRU A. SWAMIDHAS to Demand No. 27 was, by leave, withdrawn.

The cut motions of THIRU A. K. SUBBIAH and DR. H. V. HANDE were put and lost.

The cut motion of THIRU M. SURENDRAN was deemed to have been withdrawn as he was not in his seat.

The cut motion of THIRU K. S. KOTHANDARAMIAH was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 13,32,30,600 under Demand No. 27, Public Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of THIRU J. JAMES to Demand No. 28 was by leave, withdrawn.

The cut motion of THIRU N. MARUDACHALAM was deemed to have been withdrawn. as he was not in his seat

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,68,49,600 under Demand No. 28, Public Works—Establishment and Tools and Plant.

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of THIRU J. JAMES, THIRU K. T. K. THANGAMANI and DR. H. V. HANDE to Demand No. 41 were, by leave, withdrawn.

The cut motion of THIRU A. SUBRAMANIAM was deemed to have been withdrawn as he was not in his seat.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 9,83,81,800 under Demand No. 41—Capital Outlay on Irrigation.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motions of THIRU K. T. K. THANGAMANI, THIRU J. JAMES and DR. H. V. HANDE to Demand No. 42 were, by leave, withdrawn.

The cut motion of THIRU A. SUBRAMANIAM was deemed to have been withdrawn as he was not in his seat.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,92,93,600 under Demand No. 42—Capital Outlay on Public Works.'

The Demand was put and carried and the Grant was made.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

பி. ப. 1-54

### 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

'Nil'

B. *Reports, Notifications and Other Papers.*

* 75. Notification issued with G.O. Ms. No. 568, Labour, dated the 20th May 1971, in regard to an amendment to the Tamil Nadu Maternity Benefit Rules, 1967.

* 76. Notification issued with G.O. No. 1117, Revenue, dated the 17th April 1971 in regard to certain amendments to the Central Sales Tax (Tamil Nadu) Rules, 1957.

77. Notification issued with G.O. Ms. No. 1220, Revenue, dated the 24th April 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of loans granted by the Cardamom Board for development of Industry.

78. Notification issued with G.O. Ms. No. 1333, Revenue, dated the 3rd May 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of a sale deed executed in favour of Thiru V. Veerian, an Ex-serviceman.





79. Notification issued with G.O. Ms. No. 1371, Revenue, dated the 6th May 1971, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) *in respect of an endowment deed executed in favour of the* Nadar Mahajana Sangam S. Vellaichamy Nadar College Managing Board, Nagamalai, Madurai district.

† 80. A Review of the Irrigation in Tamil Nadu 1970-71 (Tamil).

† 81. A Review on the Road Development and Buildings Programme in Tamil Nadu 1970-71. (English and Tamil)

† 82. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on the Demands for Irrigation Grants 1971-72 (English and Tamil)

£ 83. Report of the Centre-State Relations Inquiry Committee headed by Dr. P. V. Rajamannar. (Tamil)

---

* Laid on the Table of the House on 1st July 1971.

† Despatched to Members on 30th June 1971.

£ Despatched to Members on 30th June 1971.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, ஜூலை 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 116, 117 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### *Moral instruction in Educational Institutions*

* 118 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to make moral instruction compulsory in all educational institutions in the State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு முடிய ஒழுக்கக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : ஒழுக்கக் கல்வியைக் கட்டாய பாடமாக்குவது, கல்விச்சாலைகளில் மாணவர்களிடையே அமைதியின்மை குறையவும் அதன்மூலம் கல்வியின் தரம் உயரவும் வழி வகுக்கும் என்பதாக அரசு கருதுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் வாரத்திற்கு ஒரு 'பீரியட்', மாரல் பீரியட்' என்ற முறையில் வைத்து, அப்பொழுது ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. அது தவிர, தமிழ், ஆங்கிலம் போன்ற பாடப் புத்தகங்களிலும் ஒழுக்கம் போன்றவைகளை வலியுறுத்துகின்ற அத்தகைய பாடப் பகுதிகள் பாடங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதுவும் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஒழுக்கக் கல்வியிலே மதத்தைப் பிரசாரம் செய்யும் சில அம்சங்கள் இருக்கின்றன என்பது அமைச்சருடைய கவனத்திற்கு வந்ததா? அப்படியானால் மதத் தலைவர்களும் மதச் சார்பற்றிருக்கும் தலைவர்களும் பகுத்தறிவை வளர்க்கக்கூடிய முறையில் செய்த காரியங்களெல்லாம் இந்த ஒழுக்கக் கல்வியில் இடம் பெறுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒழுக்கக் கல்வியைப் பயிற்றுவிக்கின்ற அத்தகைய முறையில் அவரவர்கள், யார் யாருக்கு எது எது சாதகமோ அதை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி, அந்தந்த சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறவர்கள் அந்தந்தச் சமயப் புத்தகங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டி ஒழுக்கத்தைப் போதிக்கிறார்கள். ஆகவே, முக்கியமான நோக்கம் ஒழுக்கக் கல்வியாக இருக்க வேண்டுமேயல்லாது, மதப்பிரசாரம் செய்வதாகவோ, மதத்திற்கு ஒருவரை மாற்றுவதாகவோ, ஒரு மதத்திற்கு ஒருவரை இழுப்பதாகவோ இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் ஒழுக்கக்கல்வி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒழுக்கக்கல்வி போதிக்கப்படுகிற காலத்தில் சமயச் சார்புடைய பல்வேறு கருத்துக்களை அவர்கள் மேற்கோள்கள் காட்டி எடுத்துச் சொல்வதாகச் சொல்கிறார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ். ஒழுக்கக் கல்வியோடுகூட, சிடிஸன்ஷிப் ட்ரெயினிங் என்ற பெயரில் மாணவர்களை நல்ல குடிமக்களாக ஆக்க ஒரு பயிற்சி பள்ளிக்கூடங்களில் முன்னால் அளிக்கப்பட்டு வந்தது இப்பொழுது இல்லை. சிடிஸன்ஷிப் டிரெயினிங் கொடுக்கக் கூடிய திட்டத்தை அரசு வகுத்து பள்ளிகளில் புகுத்த முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பாட நேரங்களில் தற்போது அது வகுக்கப்படவில்லை. 'எக்ஸ்ட்ரா-கரிகுலர் ஆக்டிவிடி' என்ற முறையில் பல இடங்களில் குடி உரிமை பற்றி எடுத்துச் சொல்லி, குடிமக்களை நல்ல பண்பாளர்களாக வளர்க்கும் முறையில் பல பள்ளிகளில் பயிற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. எம். செல்வராஜ்: ஒழுக்கக் கல்வி முறையைக் கற்றுத் தருவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இறுதித் தேர்வு நேரத்தில் மாணவர்கள் ஒழுக்கக் கல்வியில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது கணக்கிடப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது ஒழுக்கத்தைப் பற்றியோ மற்றவற்றைப் பற்றியோ கணக்கிடுவதற்காக வழிவகை இல்லை. அதைப் பயிற்றுவித்து மாணவர்கள் நன்மக்களாக வெளியே வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தான், அந்த அடிப்படையில் தான் செய்யப் படுகிறது. அதற்கென்று தேர்வோ, மதிப்பெண்களோ தரும் முறை வைக்கவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Since the ultimate aim of all religions is to make good citizens and good men, why not allow proper religious instruction in schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, முடிந்த முடிபாக அப்படி இருக்குமானால், அதே நோக்கம் மேற்கொள்ளப்



படுமானால் நன்றாக இருக்கும். ஆனால், புறவேடங்களைப்பற்றி அதிகமாகக் கவலை எடுத்து, அதை வற்புறுத்துகிற சூழ்நிலை ஏற்படுகிறபோது மதக் கல்வியைப் பொறுத்து பல்வேறு தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒழுக்கத்தை வளர்க்கும் அடிப்படையில் எந்த மேற்கோள்களை எங்கிருந்து எடுத்துக் காட்டினாலும் தவறு இல்லை. அன்பு நெறி, அற நெறி, அருள் நெறி இவை பரவ வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்படு கின்றவற்றைத் தடுப்பதற்கில்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: ஒழுக்கக் கல்வி வகுப்பில் திருக்குறள் போதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திருக்குறள் போன்ற இலக்கியங்களிலிருந்து கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. சில குறிப்பிட்ட பள்ளிகளில் எடுத்த எடுப்பிலேயே காலையில் ஒரு மணி நேரம் திருக்குறள் கருத்துக்களை போதித்து வருகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு குறள், ஒரு நாளைக்கு ஒரு அதிகாரம் போதித்து வருகிறார்கள்.

திரு. எஸ். முருகையன்: அமைச்சரவர்கள் 'பள்ளியிலே ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுகிறது' என்று சொன்னார்கள். ஒழுக்கக் கல்வியைப் போதிப்பதோடு நின்றுவிடாமல் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர் மன்றங்களிலேகூட அவர்களே ஒருவருக்கொருவர் பிரசாரம் செய்யவும் அதிலிருந்து சிறந்த முறையிலே பிரசாரம் செய்யக்கூடிய மாணவர்களுக்குத் தக்க பரிசு வழங்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வியின் நோக்கமே அறிவையும் ஆற்றலையும் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கிறது. ஆகவே, பாடங்களில் சொல்லப்படுபவைகளெல்லாம் மாணவர்களுக்கு ஒழுக்க உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஆங்காங்கு தனித்தனி மன்றங்கள் இருந்து அவைகளின் மூலமாகவும் சிறந்த அறிவுரைகள் சிறந்த விரிவுரையாளர்கள் மூலமாக வழங்கப்படுகின்றன. அப்படிச் சிறந்த விரிவுரையாளர்கள் சிறந்த விரிவுரைகள் வழங்கும்போது அவர்களெல்லாம் மாணவர்கள் எப்படி ஒழுக்க நிலையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையில் அறிவுரைகளை வழங்குகிறார்கள். மாணவர் மன்றங்கள், பல்வேறு பொது மன்றங்கள் இந்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

திரு. எம். தேவராசன்: சில புராண காலத்துக் கதா பாத்திரங்கள் தமிழ்க் கலாசாரத்திற்கு விரோதமாக உள்ளன. அவை நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எதை நீக்குவது, எதை வைப்பது என்ற திட்டவட்டமான குறிப்பு ஏதும் இல்லை.

[1971 ஜூலை 3

**திரு. நா. வீராசாமி:** ஒழுக்கக் கல்வி பொதுவாக கிறித்துவப் பள்ளிகளில்தான் முறையாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அரசாங்கப் பள்ளிகளிலும் நகராண்மைப் பள்ளிகளிலும் அதை அதிகமாக வற்புறுத்துவதில்லை. எனவே, அரசாங்கம் எல்லாப் பள்ளிகளிலுமே இந்த ஒழுக்கக் கல்வி கற்றுக் கொடுப்பதற்கும், பள்ளி இறுதித் தேர்வில இதற்கென்று மதிப்பெண்கள் ஒதுக்குவதற்கும் அரசாங்கம் நவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வாரத்திற்கு ஒரு பீரியட் 'மாரல் பீரியட்' என்று இருக்க வேண்டும் என்று எல்லா பள்ளிக்கூடங்களிலும் வற்புறுத்தப்பட்டு வருகின்றன. அந்தந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் எவ்வளவு அக்கறை, ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்து இந்த வகுப்புகள் நடந்து வருகின்றன. ஒழுக்கத்தைப் பொறுத்து மாணவர்களுடைய தன்மையை ஓரளவு 'அஸெஸ்' செய்யக்கூடிய தன்மையில் அறியக்கூடிய முறைகளை வகுக்கலாமா என்பதைப்பற்றி சைதாப்பேட்டையிலுள்ள நன்முறைப் பள்ளியில் (மாடல் ஸ்கூல்) சென்ற ஓர் ஆண்டுக்காலமாக ஒரு முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக மாணவர்களுக்கு 600 மதிப்பெண்கள் பல்வேறு பாடங்களுக்குத் தரப்படுகின்றன. மேற்கொண்டு 200 மதிப்பெண்கள் சேர்த்து, அதில் 50 எண்கள் காண்டக்ட் அண்டு காரக்டருக்கும், 50 எண்கள் லைப்ரரி ரீடிங்குக்கும், 50 எண்கள் கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ்க்கும், 50 எண்கள் கையெழுத்துக்கும் எக்ஸ்பிரஷனுக்கும் என்று நான்கு வகையாகப் பிரித்து, மாணவர்களுடைய நிலையை வளர்க்க ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு, ஓராண்டுக் காலமாக அது நல்ல முறையில் பயன்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் பத்துப் பள்ளிகளில் இந்த ஆண்டு பரீட்சார்த்தமாக நடத்தி, குறைபாடுகளைக் கண்டு அவற்றைக் களைந்துவிட்டு பள்ளிகளில் அந்த முறையைப் புகுத்தும் முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆனால், திட்டவட்டமாக உத்தரவு எதுவும் இடப்படவில்லை. பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஒழுக்கக் கல்வியின் அவசியத்தை நாம் எல்லோரும் உணர்வதால் ஒழுக்கக் கல்விக்கு ஒரு பாடத் திட்டத்தை ஏற்படுத்தி, அதைப் போதிப்பதற்கு ஆசிரியருக்கும் பயிற்சி அளிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதற்கென்று சிறப்புப் பயிற்சி தரவேண்டிய அவசியம் இல்லை. சான்றோர்கள், ஆன்றோர்கள் இலக்கியங்கள், நீதிநூல்கள் திரும்பத் திரும்ப இவற்றைத்தான் எடுத்துச் சொல்கின்றன. தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அக்கறை காட்டக்கூடிய பள்ளிகளில் இத் திட்டம் சிறப்பாக நடக்கின்றன. மற்ற இடங்களில் சிறப்பாக நடைபெறுவதில்லை. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சிறப்பாக நடைபெற என்ன செய்யலாம் என்பதைப் பற்றித்தான் இப்போது ஆரா ஒன்றிரண்டு இடங்களில் பரிட்சித்து வருகிறது.



1971 ஜூலை 3]

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஒழுக்கங்கள் அனைத்துமே திருக்குறளில் அடங்கியிருப்பதால் குறளையே பாடமாக ஆக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அநேகமாக எல்லா வகுப்புகளிலும், அந்த அந்த வகுப்பின் தரத்திற்கு ஏற்றவாறு திருக்குறள் சேர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. மா. சுப்பிரமணியன்:** பள்ளி இறுதி ஆண்டில் எலிஜிபிலிடி ஃபார் காலேஜ் கோர்ஸ் என்று போட்டு சர்டிபிகேட் தருகிறார்கள். ஆனால் 400 மார்க்குகளுக்கு மேல் வாங்கியவர்களைத்தான் பி.யு.ஸி.யில் சேர்த்துக் கொள்கிறார்கள். அப்படியின்றி எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ் என்று போடப்பட்டவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. சு. துரைசாமி:** கோவை பெரியபாளையம் பயோனியர்ஸ் மில் நடத்தும் பள்ளியில் ஆயிரம் மார்க் முறை என்ற அடிப்படையில் வகுத்துள்ள திட்டம் வெற்றிகரமாக நடப்பது அமைச்சர் அவர்களுக்கே தெரியுமே. அதை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** நான் முன்னே சொன்னது போல பாடங்களுக்கு 600, மற்ற நான்கு திட்டத்திற்கும் ஐம்பது, ஐம்பது என்று 200 மார்க் வைத்து 800 என்று இங்கே நடத்தப்படுகிறது என்றால் அங்கே மற்ற நான்குக்கும் நூறு, நூறு என்று வைத்து ஆயிரம் என்று அவர்கள் கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியும். அந்தப் பள்ளி சிறப்பாக நடக்கிறது. தலைமையாசிரியர் நான் அங்கே போயிருந்தபோது அந்த ரெக்கார்டுகளை எல்லாம் காட்டினார்கள். இப்படி எந்தப் பள்ளியில் தலைமையாசிரியர், மற்ற ஆசிரியர்கள் இதில் அக்கறை காட்டுகிறார்களோ அங்கெல்லாம் இது சிறப்பாக நடைபெறுகிறது. எப்படி எல்லா இடங்களுக்கும் இதை விஸ்தரிக்கலாம், ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் ஆகியோருக்கு அக்கறை ஏற்படச் செய்யலாம் என்பதுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தமிழ் நீதி நூல்களில்—பதினென் கீழ்க்கணக்கில் எல்லாம் அடங்கியிருக்கின்றன. ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, நீதிநெறிவிளக்கம் என்பதாக உள்ள இந்த நூல்களில் ஒவ்வொன்று ஒரு வகுப்பில் என்பதாக முழுவதும் வைத்து போதிக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நூல்கள் எல்லாம் வகுப்புக்கு ஏற்றபடி இப்போதே பாடநூல்களில் சேர்க்கப்பட்டு, போதிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் பரீட்சைக்கு என்று படித்து பரீட்சை

எழுதியவுடன் அப்படியே விட்டுவிடுகிற போக்கு இருப்பதனால் தான் பயன்படாதுபோகிற நிலை ஏற்படுகிறது. அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்வில் பயன்படுகிற அளவில் அவை மாணவர்கள் கருத்தில் எதிரொலிக்க எப்படிக் கண்காணிப்பது சிறப்பாக அமையும் என்பதுதான் பரிட்சிக்கப்பட்டு வருகிறது.

## தஞ்சை மாவட்டத்தில் புராதனக் கல்வெட்டுகள்.

• 119 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை பகர்வாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1967-க்குப் பின்னால் மூன்று ஆண்டுகளில் புராதனக் கல்வெட்டுச் சின்னங்கள் ஏதேனும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கோவிலடியிலும் வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்தும் கல்வெட்டுக்கள் மாநிலத் தொல் பொருள் துறையால் படியெடுக்கப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கலசத்தில் சோழர் காலக் கல்வெட்டும், மராட்டிய மன்னர் காலக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டிருப்பதை மத்திய அரசு தொல் பொருள் பிரிவினரும் கண்டுபிடித்துள்ளனர்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are a number of ancient ruins in our country including ancient burials in different parts of the state. But there is no prepared scheme to excavate all these things and to find out if these details about this civilisation are akin to Mohanjadaro and Harappa . . .

MR. SPEAKER: It must be in a question form. Please put it as a question.

THIRU K. S. KOTHANDARAMIAH: . .in the entire South India.. Unless excavations are done quickly, it is not possible to find out the details. May I request the Hon. Minister to say whether they are going to have a scheme to excavate . . .

MR. SPEAKER: You may ask whether there is any proposal to excavate. You can put it in that way in a question form.

THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Government envisage a scheme to expedite the excavation work in our State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வெட்டு ஆராய்ச்சியை மத்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், தமிழக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் நீண்ட நெடுநாளாக ஆராய்ந்து வருகிறார்கள். சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். பல்வேறு கோயில்கள், பாழ் இடங்கள் மண்டபங்கள், மலைகள், மலைக் குகைகள் ஆகியவற்றை ஆராய்ந்து ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளுக்கு படிமம் எடுத்திருக்கிறார்கள். ஐந்தாயிரம், ஆறாயிரம் கல்வெட்டுகளை அச்சிட்டு புத்தகமாகவே வழங்கியிருக்கிறார்கள். வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படுகிற வகையில் பல அரசர்கள், மக்களது பண்பாடுகள் ஆகியவற்றைக் கண்டறிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் நிதி வசதி தான் போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதை அதிகமாக்குகிற முயற்சியையும் அரசு செய்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தஞ்சாவூர் கோயில் கல்வெட்டில் எதிர் கால சமுதாய மாற்றங்கள் பற்றிய கல்வெட்டு இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எதிர்காலத் தன்மைகள் அவற்றில் இல்லை. கோவிலடியில் கிடைத்த 2 கல்வெட்டுகளை ஆராய்ந்ததில் ஒன்று தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனின் 18-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. அது கி.பி. 864-ஆம் ஆண்டு கல்வெட்டு—அது நுந்தாவிளக்கு எரிக்க பொன் அளிக்கப் பட்ட ஏற்பாட்டைப் பற்றியது.

இன்னொன்று நிருபதுங்கவர்மனின் 25-ஆம் ஆட்சி ஆண்டு—கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அது பாகேச் சூரர்களுக்கு உணவு அளிப்பதற்கு காசு அளிக்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது. வைதீஸ்வரன் கோவிலில் கிடைத்த 24 கல்வெட்டுகள் அந்த கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள், சொத்துக்கள் ஆகியவைகளைப் பற்றித் தெரிவிக்கின்றன. இந்தக் கல்வெட்டுகளின் மூலம் அந்த அந்தக்கால மக்களது பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்வதற்கு மிகமிக உதவியாக இருக்கிறது. உத்தரமேரூர் கல்வெட்டை எடுத்துப்பார்த்தால் அந்தக்காலத்து பஞ்சாயத்து முறை எப்படி இருந்தது, குடவோலை திட்டம் எப்படிச் செயல்பட்டிருக்கிறது, இப்போதிருக்கிற க்வாலிபிகேஷன், டிஸ்க்வாலிபிகேஷன் மாதிரி இன்னும் தீவிரமாக அந்தக்காலத்தில் எப்படி இருந்திருக்கிறது என்பது எல்லாம் தெரிகிறது. இப்படி அந்த அந்தக் கால மக்களுடைய பழக்கவழக்கங்கள், வரலாறுகளைத் தெரிந்துகொள்ள கல்வெட்டுகள் உதவியாக இருக்கின்றனவே தவிர எதிர் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற அளவில் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சியினர் நம்முடைய பழைய நாகரிகத்தையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதற்காக கல்வெட்டுகளைக் கண்டுபிடிக்கின்ற நேரத்திலும், பூமியைத் தோண்டி அரும்பெரும் பழம்பொருள்களைச் சேகரிக்கின்ற நேரத்திலும் புதையல் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறதே. அப்படி ஏதாவது புதையல் கிடைத்ததா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பூமிக்கு அடியில் இருந்து கண்டெடுக்கப்படும் பழம்பொருள்கள், அரும்பெரும் பொருள்கள் எல்லாம் புதையல்தாம். புதையல் என்பது மண்ணுகைவும் இருக்கலாம். பழைய காலத்திலுடைய

ஓடாகவும் இருக்கலாம். அண்மையில் யவனர்கள் பயன்படுத்திய மதுஜாடிகளும், ஓவியங்கள் வரைந்த பாத்திரங்களும் கிடைத்தன. மேலும் ரோமன் நாட்டினுடைய பொன் அணிகள் கிடைத்தன. இன்னும் பலப்பல பொருள்கள் அவ்வப்போது கிடைக்கின்றன. பூமியிலே புதைந்து கிடைந்து எடுப்பவை எல்லாம் புதையல் என்றுதான் பெயர். இவையெல்லாம் வரலாற்று ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அக்காலத்திய நிகழ்ச்சிகளைக் கண்டறிய துணை புரிகின்றன. இந்தமாதிரி புதையல்கள் எல்லாம் வரலாற்றுக்கும் மற்றவற்றிற்கும் பயன்படுகின்றன.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, வந்தவாசி தாலூக்காவில், தெள்ளாறு என்ற கிராமத்தில் நந்திவர்மன் கோயில் சிறப்பாக இருக்கிறது. அது சரியான முறையில் பாதுகாக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதைப் பாதுகாத்து, தக்க முறையில் ஆராய்ச்சி நடத்த இந்த அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சியினரின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தால் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள் வார்கள். அந்த இடம் பாதுகாக்கப்படவில்லையானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகளை மேற் கொள்வார்கள்.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் கோட்டையிலுள்ள கோவிலில் பூஜை செய்வதற்காக, பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு சுரங்கப் பாதை இருப்பதாக கல்வெட்டில் எழுதப்பட்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறதே. அந்தக் கல்வெட்டை ஆராய்ந்து அறிந்து, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மீண்டும் பூஜை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தமிழகம் முழு வதிலும் கல்வெட்டுகள் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் ஆராய்ச்சி நடத்துவதில் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை கவனம் செலுத்தி வருகிறது. அப்படிப்பட்ட 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களில் சுமார் 25 ஆயிரம் படி எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் அரும்பெரும் சிறப்புகள் எல்லாம் அடங்கியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனியாக போட வேண்டிய கேள்வி இது. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் அது பற்றி பரிசீலிக் கப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத் தில் கூடலூருக்கு அருகில் ஒரு பழைய கண்ணகி கோயில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா? அதிலுள்ள கல்வெட்டுக்களை அரசு ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்வெட்டு ஆராய்ச்சியில் அக்கறையுள்ள நண்பர்கள் இதுபற்றி குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையால் ஆராயப்பட்டு வருகிறது. மேலும், கல் வெட்டுக்களிலுள்ள எழுத்துக்களை யெல்லாம் படித்து அறிந்து கொள்வதற்காக சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஒருமாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. அந்தப் பயிற்சியை முடித்தவர்கள் கல்வெட்டு எழுத்துக்களை படித்தறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு வரலாற்றுத் துறை மாணவர்களும் தமிழ்த் துறை மாணவர்களும் இந்தப் பயிற்சியிலே ஈடுபட்டு, கல்வெட்டுக்களைப் பார்த்து, சிறந்த செய்திகளைத் திரட்டித் தருகிறார்கள். அவை யெல்லாம் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையால் ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, கல்வெட்டுக்களில் வட்ட எழுத்து, கண் எழுத்து முறையில் இருப்பதால், அவற்றை அரசு ஆராய்ந்தறியுமா? இப்படிப்பட்ட ஒரு கல்வெட்டு கோவைக்கு அருகில் பேரூரிலே இருப்பது அரசுக்குத் தெரியுமா? எகிப்திய பேரழகி கிளியோபாட்ரா. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி தஞ்சை மாவட்டத்தில் புராதனக் கல்வெட்டுகள் பற்றியது. நண்பர் காளி முத்து அவர்களின் வினாவையே அனுமதித்திருக்கக் கூடாது. கூடுமானவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக்கேள்வியை யொட்டியே துணை வினாக்களைக் கேட்க வேண்டும். மூலக்கேள்வியை விட்டு வேறு வழியில் வினா போனால் கேள்வி நேரம் போதாமல் இருக்கிறது. மூலக் கேள்வியிலிருந்து உறுப்பினர்கள் தடம் புரளாமல் இருக்க வேண்டும். மூலக் கேள்வியோ தஞ்சையைப் பற்றி; உறுப்பினர் அவர்கள் கேட்பதோ பேரூரைப் பற்றி. ஆகவே இந்த கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, இன்றையதினம் கோவில்களிலும், பிற இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்களில் செதுக்கிய எழுத்துக்களைப் படித்து மக்கள் புரிந்துகொள்ள முடிய வில்லை. ஆகவே அவற்றை யெல்லாம் நல்ல தமிழிலே மொழி பெயர்த்து அவற்றின் அருகிலேயே அமைக்க அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரும், கல்வெட்டு ஆராய்ச்சித் துறையினரும் அவற்றை யெல்லாம் ஆராய்ந்து புரிந்துகொள்ளக் கூடிய தமிழிலே மொழிபெயர்த்து வருகிறார்கள் என்று முன்பே குறிப்பிட்டேன். அந்த ஆராய்ச்சி இப்போது நடைபெற்று வருகிறது.

**திரு. கு. காமாட்சி :** தலைவர் அவர்களே, தஞ்சை பெரிய கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில், அந்தக் கோயிலின் சொத்து விவரம் எல்லாம் அடங்கியிருக்கிறதா? அப்படியெனின், அந்தச் சொத்துக்கள் எல்லாம் எங்கே இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய கல்வெட்டுகள் அடங்கிய விவரம் இருக்கிறது. அந்த விவரங்களை அறிந்து, அந்தச் சொத்துக்களைத் தேடி, அவையெல்லாம் யார் யார் கையில் இருக்கின்றன என்பதை அறிய வேண்டும்.

திரு. செ. பெருமாள் : தலைவர் அவர்களே, தஞ்சையில் செதுக்கி வைக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பிரகாரம், நடைமுறையில் நடைபெறுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரம் இல்லை.

*Sri Murugan Temple at Mettur*

* 120 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the temple of 'Sri Murugan' at Salem Camp, Mettur Township was demolished on 31st March 1970 under instructions from the Executive Officer, Mettur Township;

(b) if so, whether any action has been taken against the Executive Officer, Mettur Township, Mettur Dam; and

(c) whether the Deity was installed later on 7th April 1970 at the same place after obtaining injunction order from the District Munsif's Court, Sankaridrug?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மேட்டூர் நகரியம், பிரிவு 49 (புதியது)-ல் உள்ள முருகன் கோயிலை இடித்ததாக, முருக பக்தர்களின் புகாரின் பேரில், சேலம் மாவட்ட ஆட்சியாளரின் அறிக்கை கோரப்பட்டது. மாவட்ட ஆட்சியாளர் முருகன் கோயில் என்று பெயரிடப்பட்ட ஒரு குடிசை, மேட்டூர் நாகரியத்துக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள ஆக்ரமிப்பு ஆனதால், நகரிய கமிட்டியினரால் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதியில் அகற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வெளியேற்றத்தை எதிர்த்து பதிவு செய்யப்பட்ட வழக்கில் தற்காலிக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, ஆண்டவன் கோயிலை முச்சந்தியிலே நிறுவுவதும், அதற்குப் பிறகு அதை இடித்திருப்பதும் உண்மையா? அப்படிக்கட்டுவதும், இடிப்பதும், நாக்கும் கேவலம். ஆண்டவனுக்கும் கேவலம், ஆண்டவன் கோயிலைக் கட்டுவதற்காக இனிமேல் அறநிலைய மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்று கட்டளையிடுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது கோயில் அல்ல. குடிசைபோட்டு அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் குறிப்பிட்ட நபர் அப்படிச் செய்தார் என்று மாவட்ட அதிகாரியின் அறிக்கையில் காணப்



படுகிறது. அந்தக் கோயில் இடிக்கப்படவில்லை. போடப்பட்டிருந்த குடிசை பிரிக்கப்பட்டது. அந்தக் குடிசையின் உள்ளே உருவச் சிலை ஒன்றும் இல்லை. உள்ளே ஒரு படம்தான் மாட்டப்பட்டிருந்தது. அந்தவிதத்தில் கோயிலை எழுப்பி, அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. நகராட்சித் துறையினரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் உட்கார்ந்து பேசி, அதை அகற்ற வேண்டுமென்று சொன்ன பிறகுதான் குடிசை பிரிக்கப்பட்டது. கோயிலாக இருந்தாலும், அல்லது எதுவாக இருந்தாலும் அது டவுன் பிளானிங் சட்டவிதிமுறைகளுக்குட்பட்டு, அவர்களுடைய அங்கீகாரம் கிடைத்த பின்னர்தான் கட்ட வேண்டும். வீடு கட்டுவதாக இருந்தாலும் டவுன் பிளானிங் அங்கீகாரம் பெறவேண்டும். எல்லோரும் முறைப்படி நடந்து கொள்ள வேண்டும். அப்படிச் சட்டத்தை மீறுகிறவர்கள்மீதுதான் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆண்டவன் பெயரால் நடைபாதைகளிலும், நெடுஞ்சாலைகளிலும், இப்படிப்பட்ட மக்கள் உபயோகப்படுத்துகின்ற இடங்களில் எல்லாம் திடீர், திடீரென்று கோயில்கள் தோன்றுவது போன்ற தவறுகள் நடக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் கோயில்களை எழுப்பக் கூடாது என்று அரசு கண்காணிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோயில் மட்டுமல்ல, வீடும் வரக் கூடாது, மன்றமும் வரக்கூடாது என்கிற தன்மையில்தான் பணிகளைச் செய்து வருகிறோம். அவற்றையெல்லாம் அகற்றுகின்றபொழுது பொதுமக்கள் எல்லாம் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும். சென்னை நகராண்மைக் கழகத்தினர் அவற்றையெல்லாம் அகற்றுகின்றபோது, 'அப்படி அகற்றக்கூடாது' என்கிறார்கள். சிலசமயங்களில் பொதுமக்களும், பிரபலஸ்தர்களும் அதை அகற்றக் கூடாது என்கிறார்கள். ஒன்றைப் பொறுத்து மேலும் பல தவறுகளுக்கு இது காரணமாகிறது. நகராண்மைக் கழகத்தினரும் பொதுமக்களும் இணைந்து செயல்பட வேண்டும். மதுரையில் கமிஷனராக இருந்த திரு. ஜெனுய் என்பவர் இப்படிப்பட்ட நடைபாதை கோயில்களை எல்லாம் எடுத்ததன் பயனாகத்தான் மதுரை நகர வீதிகள் எல்லாம் அழகுற அமைந்தன. அதேபோல புதுக்கோட்டையிலே துணிவுமிக்க ஒரு திவான் சாலைகளிலே உள்ள இவற்றையெல்லாம் அகற்றியதன் காரணமாகத்தான் புதுக்கோட்டை நகர வீதிகள் எல்லாம் அழகாக அமைய வழி பிறந்தது. இம்மாதிரியான நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்களும், மாநகராட்சி உறுப்பினர்களும் நல்ல விதமாக ஒத்துழைத்தால் அத்து மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி பிறக்கும். இன்றைய தினத்தில் நாம் பார்த்தால், பழைய கோயில்கள் எல்லாம் ஒதுக்குப்புறமாகத்தான் அமைந்திருக்கின்றன. இடையிலே வந்தவர்கள் தங்களுடைய வியாபாரத்திற்கும் வருமானத்திற்கும் ஏற்ற வகையில் கோயில்களை

உருவாக்கியிருக்கிறார்கள். இப்படி நடைபாதை கோயில்களை ஏற்படுத்தி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்கள் மீது சென்னை மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### *Fourth Five-Year Plan*

* 116 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to address the Centre to modify the present Fourth Five-Year Plan in such a way as to provide more employment?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதிகப்படியாக வேலை வாய்ப்புக்கு வகை செய்யும் விதத்தில் பெரிய ஐந்தாண்டுத் திட்டமொன்றை நாம் செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மத்திய அரசு, திட்டத்திற்கான தனது நிதி உதவியை அதிகரிக்குமாறு நாம் கேட்டுள்ளோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு வேலைவாய்ப்பு சம்பந்தமாக எவ்வளவு பணம் நாம் கேட்டோம்? மத்திய அரசு எவ்வளவு ஒத்துக்கொண்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் நாம் நியமித்திருக்கக்கூடிய திட்டக் கமிஷனுடைய சிபாரிசுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாம் 1968-ஆம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோரியது 624 கோடி ரூபாய். மத்திய திட்டக் குழு அந்தத் திட்ட மதிப்பீட்டை 519.36 கோடி ரூபாயாகக் குறைத்து, திட்டத்திற்கான மத்திய உதவி 250 கோடி ரூபாய் என்று கூறி கடைசியாக 202 கோடி ரூபாய் என்று முடிவு செய்தது. இந்தத் தொகை அறவே போதாது என்று தமிழ் நாடு அரசின் சார்பாக நம்முடைய கருத்து தெரிவிக்கப்பட்டு உள்ளது. மாநிலத் திட்டக் குழுவினுடைய சிபாரிசுகள், அதனுடைய ஆய்வுகள் வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விபற்றி யோசிக்கப்படும்.

DR. H. V. HANDE : May I know the major heads under which they had reduced the initial plan outlay? May I know whether this reduction from Rs. 600 crores to Rs. 200 crores is only withholding of central assistance or they had reduced only a portion? Will the Hon. Minister give us details whether our protest note had been sympathtically considered by them? May I know whether any further reduction had been made during the current year? Will the Hon. Minister give us details?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மேலும் இதிலே குறைப்பதற்கு எதுவும் இருக்காது என்று கருதுகிறேன். தனித்தனித் தலைப்புகளிலே விவரங்கள் எவையெவை என்று கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கூறலாம்.



**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நம்முடைய மாநிலத் திட்டம் 624 கோடி ரூபாய் என்று கூறினார்கள். 624 கோடி ரூபாயும் மத்திய அரசு கொடுக்கிறதா ? மத்திய அரசு எந்த அளவுக்குக் கொடுக்கிறார்கள் ? எவ்வளவு எதிர்பார்க்கப்பட்டது ? கொடுக்கிறேன் என்று சொன்னது எவ்வளவு என்ற விவரங்களைக் கூற முடியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாம் கேட்டது 624 கோடி ரூபாய். மத்திய திட்டக் குழு திட்ட மதிப்பீட்டை ரூ. 519 கோடி அளவுக்குக் குறைத்தது. மத்திய உதவி ரூ. 250 கோடி என்று சொன்னார்கள். அதுவாவது வரும் என்று எதிர்பார்த்த நேரத்திலே 202 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். எந்த வகையிலே ஈடு செய்யப்படுகிறது என்று கேட்டார்கள், மாநிலத்தினுடைய ரிசோர்ஸஸ்ஸையும் வைத்துத்தான் செய்யப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நம்முடைய திட்டத் தொகை பூராவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறதா? அல்லது அவர்கள் ஒரு பகுதி, நாமும் ஒரு பகுதி என்று சேர்ந்து திட்டத் தொகை வகுத்துக்கொள்ளப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நம்முடைய மாநிலத்தினுடைய ரிசோர்ஸஸ்ஸை சேர்த்துத்தான் திட்டத் தொகை வகுக்கப்படுகிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாநில அரசு 600 கோடி கேட்டது என்று சொன்னார்கள். நாங்கள் இரண்டு பேரும் கேட்டது என்னவென்றால் 600 கோடி ரூபாயில் 400 கோடி ரூபாய் குறைத்து இருக்கிறார்கள். ஒரு பகுதியைக் குறைத்து நீங்கள் போடக்கூடியதைப் போட்டுக் கொள்ளுங்கள் என்றுதான் குறைத்திருக்கிறார்களா ? எந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் குறைத்திருக்கிறார்கள் ? எந்த அளவுக்கு நம்முடைய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். எல்லாம் சேர்ந்தது. மொத்தமான தொகை, அது என்றும் 250 கோடி அளவுக்கு அவர்கள் பங்கைக் குறைத்தார்கள் என்றும் சொல்லி விட்டார்கள். இந்தக் கேள்வி வேண்டியதில்லை. அவர்கள் சொல்லிவிட்டார்கள். மொத்தமான திட்டத் தொகை 600 கோடி என்று சொன்னார்கள். அதைக் குறைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இப்பொழுது கொடுக்க முன்வந்திருப்பது 202 கோடி என்றும் சொன்னார்கள். எனவே இந்தக் கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. என். இராசாங்கம் :** மத்தியத் திட்டக் குழுவின் சேர்ந்ததா ? அல்லது மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள் திட்டங்களோடு மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்களும் தனித் திட்டங்களா ?

[1971 ஜூலை 3

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மத்திய திட்டக் குழு திட்டங்களோடு சேர்ந்து திட்டங்களாகும் நிலைமை ஏற்படாது. நம்முடைய மாநிலத்தின் வாய்ப்புக் கூறுகள், வளங்கள் இவையெல்லாம் ஆராயப்பட்டு திட்டங்கள் வகுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Out of Rs. 519 crores fixed for the Fourth Five-Year Plan, what is the exact share expected of the State Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைப்பற்றி நான் இப்பொழுது முழுமையாக முடிவாகச் சொல்லுதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசுநாதர் சொன்னார். நாம் 624 கோடி ரூபாய் கேட்டோம். 519 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் கொடுத்து 250 கோடி ரூபாய் என்று சொல்லி, 202 கோடிக்குக் கொடுத்திருக்கிறார்களே இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? பல மாநிலங்கள் கேட்காமலேயே கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது நாம் கேட்டும் கொடுக்கவில்லையே ஏன்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கேளுங்கள் கொடுக்கப்படும் என்று இயேசுநாதர் தான் சொன்னார். இந்திரா காந்தி சொல்லவில்லையே. (சிரிப்பு)

**திரு. எம். தேவராசன்:** நம்முடைய மாநிலத்திலுள்ள மத்திய அரசு தொழில் நிறுவனங்களில் கண்டிப்பாக நம்முடைய மாநிலத்திற்கு வேலைவாய்ப்பில் முதலிடம் தரப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் மற்ற இடங்களிலும் வேலை வாய்ப்புத் தரப்படுவதில் நம்முடைய மாநிலத்திற்குத் தகுந்த இடங்கள் கிடைக்க வேண்டும் என்பதில் நம்முடைய மாநில அரசு கண்ணுங் கருத்துமாய் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனித் திட்டமாக எதாவது தயார் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்த அவையில் வைக்கப் பட்ட நிதிநிலை அறிக்கையில் இவையெல்லாம் சொல்லப் பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு நிதி ஒதுக்க பாபுலேஷன், ரிசோர்ஸஸ், எரியா ஆகிய மூன்றையும் கவனத்தில் வைத்து நிதி ஒதுக்குகிறார்கள். அப்படிக்கும் மற்ற



1971 ஜூலை 3]

மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நோக்கில் வஞ்சிக்கப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவே, நம்முடைய அரசு இதிலே ஏதாவது தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ஒதுக்கப்படவில்லை என்பது தான் நம்முடைய குற்றச் சாட்டு. அதற்காகத்தான் மத்திய அரசோடு தீவிரமாக வாதாடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மத்திய அரசு வேலை வாய்ப்பிற்காக மாநிலங்களுக்கு மானியத் தொகை கொடுக்கிறதா? நம்முடைய மாநிலத்திற்கு கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அண்மையிலே மத்திய அரசு கிராமாந்திர தீவிர வேலை வாய்ப்புத் திட்டம் என்பது போன்ற திட்டங்களுக்குப் பண ஒதுக்கீடு செய்திருக்கிறது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** ரூரல் எம்ப்ளாய்மெண்ட் ஸ்கீமின் அடிப்படையில் எவ்வளவு தொகையை மத்திய அரசு ஒதுக்கி இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நிதிநிலை அறிக்கையிலேயே அந்த விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு ஒதுக்கியிருப்பது 50 கோடி ரூபாய். நம்முடைய மாநிலத்திற்கு 1.6 கோடி ரூபாய்.

DR. H. V. HANDE: May I know from the Hon. Chief Minister whether similar reduction had been aken place in other States, whether their allocation had been reduced in such a dangerous manner or in a manner injurious to the States concerned? Will the Hon. Chief Minister let us know on what basis they have reduced this serious reduction? When some States had got their share, how is it that our State had been singled out for this reduction? Has this point been discussed? If so, will the Hon. Chief Minister give us the details?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் மாநிலங்களுக்கு என்று ஒரு கிரைட்டீரியா வகுத்துக் கொண்டார்கள். அதிலே இவ்வளவுதான் தரமுடியும் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு அதிகம் சேரவேண்டும் என்று நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்திற்கு நிதி ஒதுக்கம், இன்னும் மற்ற சிறப்பு நிதி ஒதுக்கங்கள் இவற்றில் மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நாம் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

*Buildings for Defence Department on Island grounds*

*117 Q.—THIRU A. SWAMIDHAS
THIRU D. S. A. SIVAPRAKASAM Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether he has raised objections to the construction of the Defence Complex on the Island Grounds in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

(அ) ஆம்.

(இ) தீவுத்திடலை வெற்றிடமாக வைத்திருக்க வேண்டியது இன்றியமையாததாய் இருப்பதால், அங்கு பாதுகாப்புத் துறையின் பயனுக்காகக் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு அனைத்தையும் கைவிடுமாறு மத்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கும், தலைமை அமைச்சர் அவர்களுக்கும் 14-4-71-ல் எழுதப் பட்டுள்ளது. அவர்களது பதில்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தத் தீவுத் திடலானது நகரத்தின் மத்தியில் இருக்கும் ஒரு முக்கியமான இடமாக இருப்பதால், எப்படி மாநிலத்திற்குச் சொந்தமான சில இடங்களை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கிறோமோ, அது போல இந்த இடத்தை மத்திய சர்க்கார் மாநில அரசுக்குக் கொடுக்கும்படியாக அரசு கேட்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது ஒரு நல்ல யோசனை. இதைப்பற்றி முன்பே மத்திய சர்க்காரோடு பேசுகிற நேரத்தில் பேசப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள பிரச்சினை இந்தத் தீவுத் திடலிலே அடிக்கல் நாட்டுவிழா ஒன்று நடத்தி கட்டடங்கள் கட்ட முயற்சி நடைபெற்ற நேரத்தில், கட்டடங்கள் எழுப்பக் கூடாது, ஏனென்றால் தீவுத் திடல் பெரிய மைதானமாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் திடல் சென்னை மாநகரத்தின் 'சுவாசப் பை' என்ற அளவிற்குப் பெயர் பெற்றிருக்கிறது, ஆகவே கட்டடம் கட்டக் கூடாது என்று மத்திய அரசுக்கு எழுதி யிருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Since this Government appreciates that there must be open spaces for the health of the City, is it a fact that the Government are not going to construct any buildings in these open spaces in the City or whether the State Government have already built some buildings in these open spaces in the City even without reference to the Corporation . . .

MR. SPEAKER: The question is about Island grounds.

THIRU K. M. SUBRAMANIAM: Have the Government themselves built any building in the Island grounds or just near the Island grounds without getting the approval of the Corporation or in any other open space in the City?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதைப்பற்றி எது என்று குறிப்பாகக் கேட்பார்களேயானால் நான் அதைப்பற்றிக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

DR. H. V. HANDE: This Island grounds problem has been periodically raised by the Central Government for the past 10 or 15 years. Periodically they used to threaten the State Government that they would start some building and periodically our State Government would protest. May I know from the Hon. Chief Minister what the exact position is, as far as this is concerned, and whether the Central Government have acceded to the request of the State Government and the final position in the matter? Will the Hon. Chief Minister be able to tell us the details?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 20—2—1971 தேதியிட்ட ஹிந்து பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஐலண்ட் கிரௌண்டில் கட்டடங்கள் கட்டுவதற்காக, முதலிலே ஒரு பகுதியிலே கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுவிழா நடந்ததாகச் செய்தி வந்தது. அதற்குப் பிறகு அந்த இடத்தை நானும், பொதுப்பணித்துறை அமைச்சரவர்களும் மற்றவர்களும் பார்த்தோம். அப்பொழுது கட்டடம் எதுவும் தோன்றவில்லை. அடிக்கல் நாட்டுவிழா நடந்ததாகத்தான் தகவல் வந்தது. அதற்கு மாநகராட்சியின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டுமே அது பெறப்பட்டதா என்று இராணுவ அதிகாரிகளைக் கேட்டபொழுது தங்களுக்குத் தகவல் தெரியாது என்று கூறிவிட்டார்கள். பத்திரிகையில் செய்தி வந்ததால் நாங்கள் மத்திய சர்க்காருக்கு உடனடியாகக் கட்டடங்கள் எழுப்புவது நிறுத்தப்பட வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து கடிதம் வந்ததாகப் பதில் வந்திருக்கிறது. வேறு எந்த விதமான பதிலும் வரவில்லை. நாம் எழுதியது 14—4—71-ல் இன்று பேசிக்கொண்டிருப்பது எந்தத் தேதி என்று தெரியும். ஆகவே, மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினால்கூட எவ்வளவு தாமதம் ஏற்படுகிறது என்றும், எந்தெந்த அதிகாரங்களை நாம் பெற வேண்டியிருக்கிறது என்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, மத்திய அரசுக்குச் சொந்தமாக இப்படி தீவுத்திடல் இருப்பதைப்போல் சென்னை நகரத்தில் வேறு எந்தெந்த இடங்கள் மத்திய அரசுக்குச் சொந்தமான இடங்களாக இருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக்கேள்வி போட்டால் விவரமான அறிக்கை சபையின் மேஜைமீது வைக்கப் படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிற கடிதத்தில் இந்த ஐலண்ட் கிரவுண்ட் சென்னையின் சுவாசப்பை என்று குறிப்பிட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கடிதம் எழுதி 3, 4 மாதங்கள் ஆனதால் வாசகங்கள் சரியாக ஞாபகம் இல்லை. ஆனாலும் சுவாசப் பையாக இருக்கிறது என்ற அந்தக் கருத்து அந்தக் கடிதத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, தலைமைச் செயலகத்திற்கு முன்புள்ள இடத்தில் பூங்கா அமைக்கப் பட்டிருக்கிறது. சுத்தப்படுத்த வேண்டும், அழகாக இருக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு மத்திய இராணுவ நிர்வாகம் தலையிட்டு இதைப் பூங்காவாக அமைக்கக்கூடாது என்று தெரிவித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அமைக்கக்கூடாது என்று தெரிவிக்கவில்லை. அங்கே அமைப்பதற்கும், அங்கே இருக்கின்ற புல் பூண்டுகளை அகற்றுவதற்கும் மத்திய இராணுவ நிர்வாகத்தின் அனுமதி பெற வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்காக எழுதிய கடிதத்திற்குப் பதில் இல்லை. பிறகு இராணுவத் துறையைச் சேர்ந்த முன்னாள் உதவி அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபொழுது அவர்களை அழைத்து வந்து காட்டினோம். அதற்குப் பிறகு அவர்கள் டெல்லிக்குச் சென்றார்கள். அதற்குப்பிறகு 2, 3 ஞாபகக் கடிதங்கள் எழுதிய பின்னர் ஒப்புதல் கிடைத்து புல் பூண்டுகள் செதுக்கப்பட்டன.

*Visit of Hon. Minister to Government Press*

*121 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether he visited the Government Press on or about 6th October, 1970; and

(b) if so, what his findings are?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ) ஆம். 5—10—1970-ஆம் நாளன்று அன்று சாலையிலுள்ள அரசுப் பாடப் புத்தக அச்சகத்திற்குச் சென்று பார்த்தேன்.

(இ) பொதுவாக மன நிறைவு அளிக்கும் வகையில் அச்சகம் செயல்படுவதை அறிந்தேன். என்றாலும்கூட மேலும் திறமை யாகச் செயல்பட த் தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்தேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த அச்சகத்தை விரிவுபடுத்தவும், இந்த அச்சகத்திலுள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் அரசின் ஆலோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதைப்பற்றி ஆலோசனையில் இருந்து வருகிறது.



*Workers of Kallakurichi Co-operative Sugar Mills*

*122 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a number of workers of the Kallakurichi Co-operative Sugar Mills were suspended about January-February-March, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) ஆம்.

(இ) அவர்கள் நெடுநாள் வேலைக்கு வாராததாலும் தீய நடத்தைக்காகவும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். வேலை நீக்கம் செய்யப்பட்ட 10 தொழிலாளர்களில் நால்வர் மீண்டும் நியமனம் செய்யப்பட்டனர். விசாரணைக்குப் பிறகு அறுவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டனர்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, அவர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதைஅமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வேலையிலிருந்து நீக்கப் பட்டதுதான் எடுக்கப்பட்ட நடவடிக்கை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அவர்கள் விசாரணையின் பொழுது, தாங்கள் நிறுத்தப்பட்டதாகவும், அவர்கள் தாங்களே வேலையிலிருந்து வேலைக்கு வாராமல் இருந்தது உண்மை அல்ல என்றும் தெரிவிக்கிறார்களே, அப்படியானால் அந்த ஆறுபேர்களைப் பற்றிப் புனராலோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த 6 பேரும் இது வரையில் எவ்வித அப்பீலும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Workers of Khadi Board under suspension*

*123 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether some of the workers of Khadi Board are still under suspension for the strike on 2nd October 1968; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 1968-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி அடையாள வேலைநிறுத்தம் செய்ததால் 70 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதுமல்லாமல்

மவுண்ட் ரோட்டில் இருந்த டெய்லரிங் யூனிட் குளோஸ் செய்யப்பட்டு 22 பேர்களுக்கு வேலையில்லாமல் போனதும், சமீபத்தில் சிலர் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் என்பதும், அந்த நேரத்தில் சங்கத்தின் காரியதரிசிகளான பெருமாள், வேதமூர்த்தி அவர்களும், ஹைகோர்ட் உத்தரவு பெற்றும்கூட வாசுதேவன் என்பவர் வேலைக்கு எடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது ஹைகோர்ட்டில் இருந்தது. ஆனால் எல்லோரும் ஹைகோர்ட்டில் வழக்குத் தொடரவில்லை. ஒருசிலர் வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால் எல்லோருக்கும் பொதுவான வழக்காயிருந்ததால், சம்பந்தப்பட்ட ஒருவருக்கும் வழக்கு முடியும்மட்டும் ஒன்றும் செய்ய முடியாமலிருந்தது. வேலையும் கொடுக்க முடியவில்லை. அந்த நிலை இருந்தது. ஏப்ரல் மாதம் 24-ம் தேதி, பொதுத்தேர்தல் முடிந்தபிறகு ஹைகோர்ட் தீர்ப்புக் கொடுத்தது. அதன்படி இந்த ஊழியர்கள் தொடர்ந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்தாலும், இந்த அரசு பெருந்தன்மையோடு அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொண்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பலரும் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது உண்மை. ஆனால்...

MR. SPEAKER : The question is whether they were under suspension.

திரு. கே. டி. கே. தங்கமணி: சங்கத்தின் தலைவரும், காரியதரிசியும் சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள், அவர்கள் இன்னும் அப்படி இருக்கிறார்களே, அதேபோல ஹைகோர்ட் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்ன சேல்ஸ் டெப்போ அசிஸ்டெண்ட் மேனேஜர், அடையாறு, வாசுதேவன் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாரா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, குறிப்பாக இன்னார் என்று கவனிக்க வேண்டுமென்றால் நான் மீண்டும் பார்க்கத் தயாராகயிருக்கிறேன். ஆனால் கோர்ட்டில் ஊழியர்கள் தொடர்ந்த வழக்கு அவர்களுக்குப் பாதகமாக, டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் அவர்கள் அந்த வழக்கைத் தொடர்ந்தார்கள் என்பதுபற்றி எந்தவிதமான பழிவாங்கலும் இல்லாமல், மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டார்கள் என்ற குறிப்புகள்தான் என்னிடம் இருக்கின்றன. குறிப்பாக வாசுதேவன் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால், தனியாகக் கவனிக்கலாம்.





### விவசாயிகள் நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள்

***124 வினா திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களை, சிறு விவசாயிகள் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி, பயிரிட்டுப் பயிரிட அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம்.

திரு. கே. ஏ. வகாப் : சிறு விவசாயிகள் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன ? அதற்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் அதிக பட்சவரம்பாக வைக்கப்பட்டிருக்கிறது ? எவ்வளவு பேர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதிக பட்சமான நிலம் இரண்டு ஹெக்டார். ஒரு ஹெக்டார் என்பது 2½ ஏக்கர். அதற்குக் குறைவாக உள்ளவர்கள் சிறு விவசாயிகள் என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசன சங்கங்கள் இன்றியமையாத தன்மையில் இருக்கின்றன. கடன்வசதி, ரிசர்வ் பாங்க், ஏ.ஆர்.சி. உலக வங்கி மூலம் பெற்று வழங்கப்படுகிறது. உலக வங்கியினர் 15 ஏக்கருக்கு ஒரு கிணறுதான் வெட்ட வேண்டுமென்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள். ஆகவே, சிறு விவசாயிகளை ஒன்று சேர்க்கும் தன்மையில் இதை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : புதிதாகப் பதிவு செய்யப்பட்ட நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிதி உதவி செய்யத் திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிதாக ஏற்படுகின்ற சிறு விவசாயிகளுடைய நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன்களில் ஐந்து சதவிகிதம் அவர்கள் பங்கெடுக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி 2½ சதவிகிதம் மட்டுமே பங்கெடுத்துக் கொண்டால் போதும் என்று செய்திருக்கிறோம்.

திரு. வ. ஆர். சுப்பையா: லிப்ட் இரிகேஷன் என்ற அடிப்படையில்தான் இது நடக்கிறது. லிப்ட் இரிகேஷன் கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்தால் நம்முடைய மாநிலத்திலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு அமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதிலே ரிசர்வ் வங்கியிலிருந்து அறிவுரை ஒன்று வந்தது. ஒவ்வொரு பிளாக்கிலும் பஞ்சாயத்து யூனியன் பகுதியிலும் ஒரு அமைப்பாளர் என்று

[1971 ஜூலை 3

ஏற்படுத்திக்கொள்ளும்படியாக கைடு லைன்ஸ் கொடுத்தார்கள். அதன்படி இப்போதுதான் அமைப்பாளரை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். உலக வங்கியினர் 800 அடிக்கு ஒரு கிணறு தான் வைக்கவேண்டுமென்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள். அது தான் சற்றுச் சங்கடமாக இருக்கிறது. அதையும் சமாளிக்க ஏற்பாடுகள் செய்து வருகிறோம். உலக வங்கியில் இருந்து 26 கோடி ரூபாயும், ஏ.ஆர்.சி. அதாவது ரிசர்வ் பாங்கு மறுநிதிக் கார்ப்பரேஷனில் இருந்து 31 கோடி ரூபாயும், நிலவள வங்கிமூலம் இந்தத் தடவை 22 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 79 கோடி ரூபாயும் அளவுக்குப் பண வசதி செய்து கொடுக்க முடியும். இதற்கு முன்ஏற்பாடுகள் எல்லாம் செய்த பிறகுதான் தொகையைக் கொடுக்க முடியும்.

**திரு. நா. இராசாங்கம்:** சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்கள் பொதுவாக நலிவி வருகின்றன. அதிலே தண்ணீர் போகின்ற இடம், தண்ணீர் இல்லாத இடம் என்று பார்த்துத் தண்ணீர் இல்லாத நிலங்களுக்கு முதலிடம் கொடுத்து, மழை பெய்தாலொழிய தண்ணீர் வசதி இல்லாத நிலங்களை சர்வே செய்து அதற்கு முதலிடம் கொடுத்து சிறு விவசாயிகள் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்களை ஏற்படுத்தி உதவி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** புஞ்சை நிலங்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** கோவை மாவட்டத்தில் கூட்டுறவு நீர்ப்பாசனச் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதிகப்படியான தொகை ஒதுக்கினால்தான் முடியும், கிணறு வெட்ட 30,000 ரூபாய் என்று கொடுப்பது போதாது. ஆகவே, அதை அதிகப்படுத்திக் கொடுப்பதோடு அதை மானியமாக வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கிணறு வெட்ட உச்ச வரம்பு 30,000 ரூபாய் அல்ல; 35,000 ரூபாய்வரை அளிக்கப் படுகிறது. அதற்குமேலும் 10,000 ரூபாய்வரை அளிக்கவும் வழி இருக்கிறது. இது கடனாகக் கொடுக்கப்பட்டு நிலைமைக்குத் தகுந்த மாதிரி 10, 12, 15 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள வழி செய்யப்பட்டிருக்கிறது. மானியமாகக் கொடுப்பது என்பது கூட்டுறவுத் துறையில் இல்லை.

**திரு. கே. ஏ. வகாப்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது 15 ஏக்கருக்கு ஒரு கிணறுதான் வெட்டவேண்டுமென்று உலக வங்கி நிபந்தனை விதித்திருப்பதாகக் கூறினார்கள். அது விவசாயிகளுக்குப் பாதகம் விளைவிப்பதாக இருப்பதால் அதற்கு விதிவிலக்கு வாங்கித் தேவையான இடத்தில் கிணறு வெட்ட ஏற்பாடு செய்யப்படுமா?



1971 ஜூலை 3]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உலக வங்கி பணம் கொடுக்கிறது. ஏ.ஆர்.சி., மறுநிதிக் கழகம் பணம் கொடுக்கிறது. பணம் கொடுக்கின்றவர்கள் நிபந்தனை விதிக்கிறார்கள். கூடிய வரையில் அந்த நிபந்தனைகளுக்கு விதிவிலக்குப் பெற முயன்று வருகிறோம். இதற்காக உலக வங்கியிடம் தூதுக்குழு போனார்கள். நமது நிதி இலாகாச் செயலாளரும், நிலவள வங்கியின் தலைவரும், இன்னொருவரும் சென்று பார்த்துப் பேசி இருக்கிறார்கள். பணம் கொடுக்கும் உலக வங்கியினர் நிச்சயமாக 800 அடிக்கு ஒரு கிணறுதான் வெட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். 800 அடி என்றால் 15 ஏக்கர்தான் வரும். 800-ஐ 800-ஆல் பெருக்கினால் 640,000 சதுர அடிகள் வரும். ஒரு ஏக்கருக்கு 44,000 சதுர அடி ஆகவே, 15 ஏக்கருக்கு ஒரு கிணறு என்ற வகையில்தான் அது அமைகிறது. அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. சொ. காவேரி மணியம்:** லிப்ட் இரிகேஷன் சொசைடி ஒரு கிராமத்திற்கு ஒன்றுதான் ஏற்படுத்த வேண்டுமென்று விதி இருக்கிறதா? மதுரை மாவட்டத்தில் லிப்ட் இரிகேஷன் சொசைடி எத்தனை பதிவாகி இருக்கிறது? எத்தனை சொசைடி களுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒரு கிராமத்திற்கு ஒரு சொசைடிதான் என்ற கட்டுப்பாடு இல்லை. மற்றத் தகவல் களுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்

*Subramaniyaswamy Temple at Tiuchendur*

*125 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Subramaniaswamy temple at Tiruchendur is facing danger from sea erosion; and

(b) if so, the action taken by this Government to save the temple from sea erosion?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) கடல் அரிப்பு காரணமாக திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு உடனடி ஆபத்து எதுவுமில்லை. கடற்கரை நெடுகப் பெரும் பாறைகளைக் குவித்துக் கடல் அலைகளைத் தடுக்க கோயில் அதிகாரிகள் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையெல்லாம் எடுத்து வருவதே அதற்குக் காரணமாகும். ஆனால், அங்கு காப்புச் சுவர் ஒன்று கட்டுவது மிக இன்றியமையாததென அறியப் படுகிறது.

(இ) கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் ரூ. 11.80 லட்சம் செலவில் காப்புக்கரை ஒன்றைக் கட்டுவதற்கான மதிப்பீடு ஒன்றைத் தூத்துக்குடி துறைமுகத்திட்ட தலைமைப் பொறி யாளர் தயாரித்துள்ளார். இது தொடர்பான செலவை ஏற்பதற்குரிய நிதிவாயில்களை எவ்வாறு பெறுவது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that this is one of the major tourist attractions in the South, and in view of the fact that the temple authorities are prepared to pay a contribution of Rs. 2 lakhs if the State and the Central Governments come forward to contribute about Rs. 8 or 9 lakhs, will the Hon. Minister be pleased to state whether this Government would get in touch with the Ministry of Tourism of the Government of India and also give sympathetic consideration to this problem? Also, may I know whether any expeditious measures have been taken to see that the erosion of sea water is stopped?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மத்திய அரசு துறைமுகங்களுடைய மேம்பாட்டு ஆலோசகர் ஆலயத்தைப் பார்வையிட்டு 11.80 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு தயாரித்திருக்கிறார்கள். மத்திய அரசிடம் அதற்கு உதவி கேட்கப்பட்டது. மத்திய அரசினர் கடலரிப்பைத் தடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகள் முற்றிலும் தமிழ்நாடு அரசாங்கந்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அறங்காவலர் குழுவினர் 15—9—70 அன்று தலைமையமைச்சர் கன்னியாகுமரி வந்தபோது நேரில் இதுபற்றித் தெரிவித்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் அதைப் பற்றிக் கவனித்து ஆவன செய்வதாக அறங்காவலர் குழுவினரிடத்தில் தெரிவித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது சம்பந்தமாக மேலும் மத்திய அரசை வலியுறுத்துவதாக இருக்கிறோம்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவரவர்களே. மனிதர்களுக்கு மனச்சங்கடம், ஆபத்து ஏற்பட்டால் ஆண்டவனிடம் துணையை நாடுகிறோம்.. ஆண்டவனுக்கு ஆபத்து ஏற்பட்டால் யார் துணையை நாடுவார் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

(பதில் இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது வேதாந்த விசாரணை !

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, மத்திய அரசிடம் உதவி கோரி கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்று காலதாமதம் செய்யாமல், பக்தர்களிடமிருந்து பணம் வசூல் செய்து அந்தப் பணியை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா ? அப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மதிப்பீட்டுத் தொகை அதிகமாக இருப்பதால் பக்தர்களிடமிருந்து வசூலான பணத்தில் இந்த ரூ. 11.80 லட்சத்தில் 25% அறங்காவல் துறையினரே ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் மீதித் தொகையைத் தான் மத்திய அரசிடம் கேட்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தக் கோவில் பாதுகாக்கப்படவேண்டியது மிக மிக அவசியம் என்று அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில், அங்கே வரக்



கூடியவர்களுக்குச் சில காட்டேஜ்கள் கட்டி இருக்கிறார்களே, அதனுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், திருச்செந்தூரிலே லட்சக் கணக்கான பக்தர்கள் தெய்வ வழிபாட்டுக்கு வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் கோவிலின் சுற்றுப்புறத்திலுள்ள அமைப்புகளைக் கெடுக்காமல் பாதுகாத்துக் கொள்ள, அந்த பக்தர்களுக்கு ஒரு வரி போட்டு அந்தக் காரியத்தைச் செய்ய முடியாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, வரி போடுவதைப்பற்றி யோசனை இல்லை. மத்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்ப்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். உதவிபற்றிய பதில் கிடைத்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. கவன ஈர்ப்பு.

**(அ) எண்ணூர் அனல் மின்சக்திக் கொதிகலன் அமைப்பில் பிலாய் கட்டுமான கம்பெனித் தொழிலாளருக்கு வேலைதர மறுத்ததும், சம்பளம் வழங்காமையும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு கே. டி. கே தங்கமணி அவர்கள் சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

Thiru K. T. K. THANGAMANI : I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the illegal action of Bhilai Construction Company in Ennore Thermal Boiler Construction by denying employment to 193 workers from 14th June 1971 and non-payment of salary for previous month resulting in unrest among them and hardship for workers.

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின்கீழ் வரும். எண்ணூர் அனல் மின் நிலையத்தைக் கட்டுவதற்கு பிலாய் கட்டுமானக் கம்பெனி ஒப்பந்தக்காரர்களாவர். இக்கம்பெனி 3 துணை ஒப்பந்த நிறுவனங்களைக் கொண்டு அதாவது திருவாளர்கள் கே. உமர்,

வி. அபூபக்கர், சி. மோயன் ஆகியோர்மூலமாக இந்தக் கட்டுமானப் பணியை நடத்தி வந்தது. இக்கட்டுமான வேலையில் பணியாற்றும் தொழிலாளர்கள், பிலாய் கட்டுமானக் கம்பெனிதான் தங்களது முக்கிய தொழிலதிபர் என்றும், பிலாய்க் கம்பெனி தொழிலாளர்களாகவே தங்களைக் கருத வேண்டுமென்றும் கூறி வந்தனர். சுமார் 200 பேர் கொண்ட கட்டுமானத் தொழிலாளர் எழுப்பிய சில கோரிக்கைகள் குறித்து நிர்வாகத்தினர் அத்தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் ஒன்றில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ல் கையொப்பமிட்டனர். 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதி முதல் பிலாய் கட்டுமானக் கம்பெனியின் முறையான தொழிலாளர்களாகவே இத்தொழிலாளர்கள் எடுத்துக்கொள்ளப்படுவர் என்று நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டனர். இதன்பிறகு, இந்த ஒப்பந்தம் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழாயினும் 12 (3) பிரிவின் கீழாயினும் கையொப்பமாகவில்லை என்ற காரணங்கள் காட்டி அது சட்டச் செயத்திறன் உடையதல்ல என்று தெரிவித்து இந்த ஒப்பந்தத்தை நிர்வாகத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர். பிலாய் கட்டுமானக் கம்பெனியாரால் கொடுக்கப்பட்ட பணி அட்டைகளும் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டதன் விளைவாகத் திரும்பப் பெறப்பட்டன. நிர்வாகத்தினர் 3 துணை ஒப்பந்தக்காரர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13-ஆம் தேதி அன்று முறித்துவிட்டனர். இதன் விளைவாக 193 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் தேதி அன்று சென்னை தொழிலாளர் நல அதிகாரி இருதரப்பினர்களையும் கூட்டி பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தப் பேச்சு வார்த்தையின் போது, அவரவர் கொண்டுள்ள கருத்துக்களுக்குப் பாதகமில்லாமலே, முன்பிருந்த நிலையே மீண்டும் நிலவவேண்டும் என்றும் தொழிலாளர் அனைவரும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும், 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதியிலிருந்து இயல்பான வேலை மீண்டும் தொடங்கி நடைபெற வேண்டும் என்றும், மே திங்களுக்கு சேரவேண்டிய ஊதியங்கள், 2 தவணைகளில் தொழிலாளருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற முடிவை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

24—6—1971 அன்று சென்னைத் தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையில் இந்த உடன்படிக்கை ஏற்பட்டபின்னர், தமிழ் நாடு மின்சார வாரியம், பிலாய் கட்டுமானக் கம்பெனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துவிட்டதாகத் தெரிகிறது. இதன் விளைவாக, இருதரப்பினரும் ஒப்புக் கொண்டபடி, 25—6—1971 அன்று வேலை மீண்டும் தொடங்கப்படாத நிலை உருவாகியுள்ளது. இது குறித்து மின்சார வாரியத்துடன் தொழிலாளர் நல அதிகாரி மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்திவருகிறார். பிலாய் கட்டுமானக் கம்பெனி நிர்வாகத்தினரும், ஒப்பந்தத்தை முறித்தது குறித்து மின்சார வாரியம் அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்த முறிவை ரத்து செய்வதற்கு வேண்டிய முயற்சி எடுத்து வருகின்றனர்.





**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், 24—6—1971-ஆம் தேதி அன்று லேபர் ஆபீசர் முன்னால் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகிற அதே நேரத்தில், அதன் பலருக்கு தொழிலாளர்களுக்கு இன்னும் ஊதியம் கொடுக்காமலும், அவர்கள் மீண்டும் வேலைக்குப் போக முடியாமலும், அப்படி வேலைக்குச் சேருவதானாலும்கூட இன்னும் 3 மாதம் ஆகும் என்று இருக்கும் நிலைமையில் பிலாய் கட்டுமானக் கம்பெனியோடு செய்த ஒப்பந்தத்தை மறுபடியும் எண்ணூர் கட்டுமானக் கம்பெனி செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருப்பதால், இந்தக் கட்டத்தில் விரிவாகச் சொல்லமுடியவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

(ஆ) மதுரையில் சில பஞ்சாலைகள் பல தொழிலாளர்களைத் தற்காலிகமாக வேலையிலிருந்து விடுவித்திருப்பதனாலும் ஓர் ஆலை ஒரு முறை மாற்றுப் பணியை நிறுத்திவிடுவதாக அச்சுறுத்துவதினாலும் ஏற்பட்டுள்ள நிலை.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I call the attention of the Hon. Minister for Labour to an urgent matter of definite public importance namely, the serious situation in Madurai following the heavy lay off in Madurai Mills, Meenakshi Mills Group, Mahalakshmi Mills in a concerted manner and a threat to close one shift in Meenakshi Mills causing enforced unemployment to Textile workers and impeding production.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, மதுரையிலுள்ள, மதுரை ஆலையில் 1971 ஜூன் திங்களில் பல தொழிலாளர்கள் வேலையில்லாமல் திருப்பியனுப்பப்பட்டார்கள். நாள் ஒன்றுக்கு மொத்தம் 470 தொழிலாளர்கள் வேலையில்லாமல் அனுப்பப்பட்டனர். நூல் ஏற்றுமதி நின்றுவிட்டதும், ஏற்றுமதிக்கான வாய்ப்பு குறைந்து விட்டதும், இருப்புகள் தேக்கமடைந்து உள்ளதுமே இதற்குக் காரணங்களாகும். இதற்கு முன்னர், சாதாரணமாக சராசரியாக நாள் ஒன்றுக்கு 250 தொழிலாளர்கள் மட்டுமே வேலையில்லாமல் அனுப்பப்பட்டனர். ஆலைத் தொழிலாளர்கள் மதுரை தொழிலாளர் நல அதிகாரியின் முன்னிலையில் இந்தப் பிரச்சினையை எழுப்பியுள்ளனர். இத்தகராறு குறித்து சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[திரு. என். வி. நடராசன்] [1971 ஜூலை 3

மதுரையிலுள்ள இத்தொழிற்சாலையிலுள்ள தொழிற்சங்கங்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற எல்லாத் தொழிற்சங்கங்களும், பல கோரிக்கைகளை எழுப்பி வேலை நிறுத்த நோட்டீசு ஒன்றையும் நிர்வாகத்தினருக்கு அனுப்பியிருந்தார்கள். இக்கோரிக்கைகளில் முக்கியமானவை :

1. இப்பொழுது 58 வயதில் ஓய்வு பெறுவதை மாற்றி 60 வயது வரை வேலை செய்ய அனுமதித்தல்.

2. வேலை செய்த ஆண்டு ஒன்றுக்கு 25 நாட்கள் ஊதியம் என்று இருக்கும் 'கிராஜுட்டி' திட்டத்தை மாற்றி ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாத ஊதியமாக, உச்ச வரம்பின்றி மாற்றி அமைக்க வேண்டும்.

3. 240 நாட்களுக்கு மேல் வேலை செய்து பயிற்சி பெறும் தொழிலாளர்களுக்கு (நிரந்தரமான தொழிலாளிகளைப் போல்) முழு ஊதியம் கொடுக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளின் பேரில் மதுரை தொழிலாளர் அலுவலர் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். ஆனால் அதில் வெற்றி கிட்டவில்லை. தொழிலாளர் அலுவலர், வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருந்த போதிலும் தொழிலாளர்கள் 2—7—1971 காலை முதல் சுமார் 8,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இன்று மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்போது மதுரையில் இருக்கக்கூடிய பல மில்களிலே ஒரே மாதிரியான நிலையில் முதலாளிகள் திட்டமிட்டு காரியங்கள் செய்து வந்தார்கள் என்றும், மதுரை மில்லைப் பொறுத்தவரையில் லே-ஆப்பில் தொழிலாளர்களை அனுப்பியதாலும், புதிதாக வேலைக்கு வந்த டெம்பரரி அப்பிரண்டிஸ் தொழிலாளர்கள் 5,000 பேருக்கு அதிகமாக, தினசரி வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு அபயம் கொடுக்கிற நிலையை வைத்துத்தான் பல மில்களிலே இருக்கும் தொழிற்சங்கங்கள் எச்.எம்.எஸ்., டி.எம்.கே; எல்லோரும் சேர்ந்து சென்ற மாதம் 1-ம் தேதி நோட்டீஸ் கொடுத்து அதன் அடிப்படையில் நேற்று வேலை நிறுத்தம் நடந்து இருக்கிறது. ஆகவே, அந்த வேலைநிறுத்தம் தொடர்ந்து நடக்குமானால் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதியாகிய 15, 16, 17, 21, 22 வார்டுகளில் உள்ள மக்களின் வாழ்வு பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தால் இதற்காக அங்கே உள்ள அதிகாரிகள் மாத்திரமல்லாமல், இங்கே இருக்கும் லேபர் கமிஷனர் இன்னும் அதிக அதிகாரங்களைக் கொடுத்து ஒரு அதிகாரியை அனுப்பி அந்தத் தகாறைத் தீர்க்க அரசு தலையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 3]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த அரசினுடைய கொள்கையே தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் ஏதாவது வேறுபாடு ஏற்பட்டால், அவர்கள் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்ற அடிப்படையைக் கொண்டதாகும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் தெரிவித்தது போல், இந்தப் பிரச்சினையை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

### 3. அறிவிப்புகள்.

### (அ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் பற்றிய மேலவைத் தலைவரின் செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்டமுன் வடிவுகள் சட்ட மேலவையில் 29—6—1971-ம் நாளன்று திருத்தங்களில்லாமல் நிறைவேற்றப்பட்டன என்று சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் வரப்பெற்றுள்ளது :—

(1) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1971).

(2) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1971).

மேலும், தமிழ் நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1971), 29—6—1971-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை என்றும் சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

### (ஆ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றொரு அறிவிப்பு. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்காக Madras University Senate ) கீழ்க்கண்ட எட்டு பெயர்கள் நியமனம் செய்யப்பட்டன :—

1. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா
2. திரு. ஏ. சுப்பிரமணியம்
3. திருமதி த. ந. அனந்தநாயகி
4. திரு. மணலி சி. கந்தசாமி
5. திரு. க. சுப்பு
6. திரு. துரைமுருகன்
7. திரு. என். கணபதி
8. திரு. முனு ஆதி

[பேரவைத் தலைவர்] [1971 ஜூலை 3

அவர்களில் திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமய்யா, ஏ. சுப்பிரமணியம், மணலி சி. கந்தசாமி, க. சுப்பு ஆகியோர் தங்கள் வேட்புத்தாள்களை திரும்பப் பெற்றுக் கொண்டதால், முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது நான்கு என்பதால், கீழ்க்கண்ட நான்கு வேட்பாளர்களும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் என நான் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திருமதி த. ந. அனந்தநாயகி
2. திரு. துரை முருகன்
3. திரு. என். கணபதி
4. திரு. முனு ஆதி

4. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதியைக் கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சார், இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 14—மருத்துவம்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் " கோரிக்கை எண் 14—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,04,70,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் " என்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the need to increase the number of seats in Medical Colleges and to change the procedure of selection of students for Medical Colleges, I move—

" That the allotment of Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical be reduced by Rs. 100 "



1971 ஜூலை 3]

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே. இராஜபாளையம், சேத்தூர் ஆகிய இடங்களில் புதிய மருத்துவ மனைகளைக் கட்டவேண்டும் என்பது பற்றி விவாதிக்க,

" கோரிக்கை எண் 14—மருந்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,04,70,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to appoint a High Power Committee to go into the entire working of the Government Ophthalmic Hospital at Egmore including that of the manner of admission, treatment and the follow-up of the post operation cases of the patients coming to the Ophthalmic Hospital, I move—

" That the allotment of Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical be reduced by Rs. 100 ".

THIRU A. SUBRAMANIAM : Sir, to discuss the hardship caused to the students who got admission in the Medical Colleges in 1970–71 by virtue of a verdict of the Supreme Court, I move—

" That the allotment of Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical be reduced by Rs. 100 ".

(ஆ) கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம்

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—" கோரிக்கை எண் 15—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,12,07,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் " என்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

THIRU N. DENNIS : Sir, to discuss the necessity to convert the Karingal Primary Health Centre in Kanyakumari district into a pucca hospital, I move—

" That the allotment of Rs. 13,12,07,600 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100 ".

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss about the need to provide drinking water facilities in slum areas, I move—

" That the allotment of Rs. 13,12,07,600 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100 ".

DR. H. V. HANDE : Sir, to discuss the need to improve the sanitary anl hygienic conditions of the slums in the State, I move—

" That the allotment of Rs. 13,12,07,600 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100 "

[1971 ஜூலை 3

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, பெரும்பான்மையான காப்பிக் கடைகள், டீக் கடைகள் சுத்தமாகப் பராமரிக்கப் படாத காரணத்தால் பல நோய்கள் பரவ ஏதுவாக இருப்பதால் இந்த நிலையைத் தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட,

"கோரிக்கை எண் 15-பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 13,12,07,600-க்கு ரூ 100 குறைக்க வேண்டும்" என்று பிரேரேபிக்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the need to open more Primary Health Centres in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 13,12,07,600 under Demand No. 15—Public Health be reduced by Rs. 100".

(இ) கோரிக்கை எண் 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல்—

"கோரிக்கை எண் 38-பொதுச்சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 26,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை அவை முன் வைக்கிறேன்.

**திரு. எ. சுமாமிதாஸ்:** தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் நகரம், இரணியல் பஞ்சாயத்து, நுள்ளிவிளை பஞ்சாயத்து முதலிய இடங்களுக்குக் குடிநீர் திட்டம் ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று பிரேரேபிக்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே. எல்லாத் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் 5 ஆண்டுகளில் வழங்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க,—

"கோரிக்கை எண். 38—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy. I move—

"That the allotment of Rs. 26,52,000 under Demand No. 38—Capital Outlay on Public Health be reduced by Rs. 100".



[1971 ஜூலை 3

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, குடி தண்ணீருக்காக கிராமங்களிலும், சேரிகளிலும் வெட்டப்படும் கிணறுகளுக்கான மதிப்பீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிட,—

"கோரிக்கை எண் 38—பொதுச்சுகாதார மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று பிரேரேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக் கின்றன.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்.** பேரவைத் தலைவர் அவர்களே. இந்த மானியக் கோரிக்கைகள் மீது கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகள் (*) எல்லாம் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புப் பதிவு ஏடுகளில் இடம் பெறும் என்பதை அவைக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்பொழுது ஏதாவது முன்னுரையாகப் பேசுவதாக இருந்தால் பேசலாம். அல்லது விவாதத்திற்குப் பிறகு பேசிக் கொள்ளலாம் என்றாலும் அப்படியே செய்யலாம்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது இயல்பாக முன்னுரை ஏதும் கூற வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் இந்த மானியக் கோரிக்கையினால் நாட்டில் நடைபெற்று வருகிற பணிகளையும் திட்டங்களையும் பற்றி அறிந்து வைத்திருக்கிறார்கள், அவைகளில் தொடர்பு கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இந்தத் துறையில் ஏற்பட வேண்டிய முன்னேற்றத்தைப் பற்றியும் வளர்ச்சி திட்டங்கள் பற்றியும் பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு நேரங் களில் இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாள் முதலாக என்னிடத்தில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதையும் நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டு இருக்கிறேன்.

இந்தத் துறையினுடைய முக்கியத்துவத்தைப் பற்றி தமிழக அரசு உணர்ந்து இருக்கிற காரணத்தாலேதான் நான் இப்போது புள்ளி விவரத்தைச் சொல்லாவிட்டாலும் அந்த புள்ளி விவரங்களை அறிந்து வைத்திருக்கிறீர்கள், உணர்ந்து இருக்கிறீர்கள் என்ற காரணத்தால் ஆண்டு தோறும் பொதுச்சுகாதார மருத்துவத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை மேலும் மேலும் அதிகமாக்கப் பட்டு இருக்கிறது என்பதையும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஏறத்தாழ 7 கோடி ரூபாய் மிகுதியாக ஒதுக்கப்பட்டு

* 420–473-ம் பக்கங்களில் முதல், இரண்டாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 3

இருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்றாலும் இந்தத் தொகையை எல்லாம் கூட இந்தத் துறையின் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவையாக இல்லை என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பற்றி மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதியில் உள்ள குறைகளையும், நாங்கள் விரும்புகிற சமுதாயத்தில் நல்ல நிலைமைகள் ஏற்பட நாட்டில் செய்ய வேண்டிய முன்னேற்றங்களையும் பற்றி எடுத்துச் சொல்லுகிற அதே நேரத்தில், இந்தத் துறையில் உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளில் பெரிய பொருளாதார வளர்ச்சியுடைய நாடுகளில் கூட அரசாங்கத்தின் கண்காணிப்பில் பொதுச்செலவில் தான் பெரும்பகுதியான வேலை. இத்துறைச் சம்பந்தப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்று பார்த்தும் ஆய்வுசெய்து கருதினால் [illegible] அரசாங்கம் நிறைவேற்றுகிற பொதுச் சுகாதார மருத்துவ காரியங்கள் என்று இருக்கின்றனவே அப்படி அரசாங்கம் [illegible] ஆற்றுகின்ற காரியங்களை விட தனியார் துறையின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள், பணிகள் அதிகம்.

பொருளாதார வளர்ச்சியில் முன்னேறி இருக்கின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாட்டிலும் கூட இது தான் இன்றைக்கும் இருந்து வருகிற ஒரு முறையாகும். மனிதன் தன்னுடைய உணவுக்கும் உடைக்கும் தன் உழைப்பையும் வருமானத்தையும் அடிப்படையாகக் கொண்டு எப்படி தன் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுகிறானோ அதைப்போல தான் தங்களுடைய சுகாதார மருத்துவ தேவைகளுக்கும் வெளிநாட்டு மக்கள், நாகரீக மக்கள், வசதியுள்ள மக்கள் பெரும்பகுதியினர் தங்கள் சுயமுயற்சியில்தான் தங்கள் வருமானத்தில் தான் நோய் தீர்த்துக் கொள்ள வேண்டிய கடமையில் இருக்கிறார்கள். அதைப்போலவே தங்களைச் சேர்ந்த சுற்றிச் சூழ்ந்து இருக்கிற சுகாதார முன்னேற்றத்தையும் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நம் நாட்டில் ஏழ்மை நிலை காரணமாகவும் அறியாமை நிரம்பி இருப்பதனாலும் வெளிநாட்டு செலாவணி கிடைக்க முடியாது என்ற அடிப்படை சூழ்நிலை காரணமாகவும் எல்லா வகையான மருத்துவ வசதிகளையும் தனியார் துறையின் மூலம் கிடைக்கப்பெற முடியாத சூழ்நிலை இருப்பதால் அரசாங்க மருத்துவ மனைகளின் சுமை பொறுப்பு, ஆற்ற வேண்டிய கடமை, ஒன்று பலவாக, மிக அதிகமான அளவு வளர்ந்து இருக்கிறது. இப்படி வளர்ந்து வருவதனால் ஏற்படும் நெருக்கடி காரணமாகக் கடமைகளை ஆற்றும்போது பல இடர்கள் ஏற்படுகின்றன என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பின் பெரும் அளவுக்குத் தகுந்தாற்போல், நிறைவேற்று



1971 ஜூலை 3] [திரு. க. அன்பழகன்]

கின்ற அளவு ஈடு கொடுப்பதாக இல்லை என்றாலும் தமிழக அரசு தன் முழு சக்திக்கு ஏற்ற அளவு எந்த அளவு இதற்காக நிதி ஒதுக்க முடியுமோ, செலவிட முடியுமோ அந்த அளவு செய்திருக்கிறது என்ற அடிப்படையை உள்ளத்தில் வைத்து மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக ஆளும் கட்சி எதிர்க் கட்சி என்ற நினைப்பில் விவாதங்கள் நடைபெறுமானால் இரண்டு பேரும் பொதுமக்களை மறந்து விடுகிறோம். நாம் பொது மக்களை மறந்து விட்டால் பொது மக்களும் நம்மை மறந்து விடுவார்கள். அதனால் ஏற்படுகிற விளைவு பொது மக்கள் தங்கள் பொறுப்புகளை மறந்து விடுகிறார்கள். எந்த நாட்டு மக்கள் தங்கள் பொறுப்புகளை உணருகிறார்களோ அந்த நாட்டில் தான் சுகாதார நிலைமைகள் செம்மையாக இருக்குமே தவிர எல்லாம் அரசாங்கம் கவனித்துக் கொள்ளும், நகரத்தின் சுகாதாரத்தை யாரோ காப்பாற்றுவார்கள், நகரத்தின் குப்பையை யாரோ எடுக்க வேண்டும், நமக்கு பொறுப்பு இல்லை என்கிற உணர்ச்சி, பல துறைகளில் குறைபாடுகளை வளர்த்து விடுகிறது. பொது மக்களுடைய சக்தி என்பது ஒரு அரசாங்கத்தின் சக்தியைப் போல 100 மடங்காகும். அரசாங்கம் ஒரு காரியத்திற்கு 10% செலவழிப்பதும் பொது மக்கள் 100-க்கு 1 சதவீதம் தங்கள் வருமானத்தில் இருந்து செலவழிப்பதும் சம எடை உடையதாகும். பொது மக்கள் பொறுப்புணர்ச்சியை நாம் தட்டி எழுப்பக் கூடிய விதத்தில் நாம் புதிய உத்வேகத்தை அவர்களுக்கு அளிக்கக் கூடிய விதத்தில் நமது மாண்புமிகு உறுப்பினர்களின் பேச்சு அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. இந்தப் பொதுச் சுகாதாரத்துறையில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் கடந்த 10-15 ஆண்டுகளாக பல்வேறு கடமைகளை திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். அதன் காரணமாக தமிழ் நாட்டில் மக்களுடைய சராசரி வயது 17 ஆண்டுகளுக்கு முன்னால், 20 ஆண்டுகளுக்கு முன்னால், 28 ஆக, 38 ஆக இருந்த வயது, எக்ஸ்பெக்டட் ஏஜ், ஏறத்தாழ 52 ஆக உயர்ந்து இருக்கிறது. மக்கள் நீடு வாழ, நீண்ட வாழ்நாள் பெற நம் சமூக சூழ்நிலையும் சுகாதாரத் துறையில் நிறைவேற்றுகின்ற திட்டங்களும். கொடிய தொத்து நோய்கள் வராதபடி இருக்க ஸ்மால்பாக்ஸ் தடுப்பு போன்ற திட்டங்கள். காலரா தடுப்பு திட்டங்கள், பிளேக் தடுப்பு திட்டங்கள், ஓரளவு காச நோய் தடுப்பிற்கான முயற்சிகள், ஓரளவு மலேரியா தடுப்பிற்கான முயற்சிகள், கொசு ஒழிப்பதற்கான திட்டமிட்ட முயற்சிகள், இன்னும் குடிதண்ணீர் வழங்கும் முயற்சிகள் இவை நடைபெற்று 20 ஆண்டு காலத்திற்கு முன்பு—ஏறத்தாழ 28-30 ஆண்டு ஆக இருந்த சராசரி வயது இன்றைக்கு 52 ஆண்டு ஆக உயர்ந்து இருக்கிறது என்பதை உள்ளபடியே மகிழ்ச்சியோடும் பொறுப்புணர்ச்சியோடும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மக்கள் நீண்ட நாள் வாழ்வது என்பது ஒரு நாட்டின் நல்ல சுகாதாரச் சூழ்நிலைக்கு அடையாளம். மக்கள் தொகை பெருக்கம் அதற்கு ஒரு எச்சரிக்கை. இந்த நாட்டில் மக்கள் தொகை பெருக்கம் மிகவும் வேகமாக இருக்கிறது. அகில இந்தியாவிலும் அப்படியே இருக்கிறது என்பதை உணர்ந்து இருக்கிறோம். இந்த மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தினால் ஒழிய நாம் போடுகிற திட்டங்கள் பல எதிர்பார்க்கின்ற அளவு பலன் தராது. ஒரு விருந்திற்கு 100 பேரை அழைத்து விட்டு, 50 பேருக்குச் சமையல் செய்துவைத்து, 75 பேருக்கு இலை போட்டு, 85 பேர் வந்திருந்தால், 10 பேரை எழுந்திருக்க வேண்டிச் சொல்வதைப் போல், சமுதாயத்தில் ஜனப்பெருக்கத்தின் வேகம் அதிகமானால் இட நெருக்கடி முதலான இக்கட்டான நிலை ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஆகவே மக்கள் தொகை கட்டுப்பாட்டின் அவசியத்தை நாட்டு மக்கள் உணர்ந்து ஆகவேண்டும்.

இது ஏதோ அரசாங்கத் துறையில் உள்ளவர்கள், இலாக்காவில் பணியாற்றுபவர்கள் தான் செய்ய வேண்டிய பணியாக கருதிவிடக் கூடாது. குடும்பக் கட்டுப்பாடு என்பது படித்தவர்களுக்கும், தலைவர்களுக்கும் உரியது அல்ல. அது ஏதோ ஏழைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்று கருதக்கூடாது. சட்ட மன்ற உறுப்பினர்களில் கூட குடும்பக்கட்டுப்பாடு விஷயத்தில் தாங்களே ஏதாவது முயற்சி எடுத்திருந்தால் கூட அதை எடுத்துச் சொல்வார்கள் என்றால் இந்த அவையில் உள்ள மற்றவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியாக, புது நம்பிக்கை ஏற்படுத்துவதாக அமையும் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன் .

. திருமணம் ஆகாத அங்கத்தினர்களைத் தவிர மற்றவர்கள் இதைப்பற்றிய கருத்துக்களை இங்கே தாராளமாக வெளியிடலாம் என்று கேட்டுக் கொண்டு, இந்த மக்கள் நலத்துறை, மருந்துவத் துறை, அதே போல் வளர்ச்சி திட்டங்களுக்கான மானியம், அவைகளைப் பற்றி கருத்துக்களை வெளியிடுகிறபோது எங்களுக்கு கருத்துரை வழங்குவது மட்டும் அல்ல, நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன் தருகின்ற வகையில் கருத்துக்களை கூறவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களை கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை அவை முன் வைக்கின்றேன்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே இந்த மருத்துவம், பொதுச் சுகாதாரம் மானியத்தின் மீது கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளை கூறிக்கொள்கிறேன்.

அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டத்தின் அடிப்படையின் கீழ் பல கோடிக் கணக்கிலே பணம் அதிகப் படுத்தபட்டிருக்கிறது என்று கூறினார்கள் ; இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஒன்றை இந்த இடத்திலே கூறிக்கொள்ள விரும்பு



கிறேன். அமைச்சருடைய உரை எங்களுக்கு நேற்று இரவு 9 மணிக்குத் தான் கிடைக்கப் பெற்றது. எந்த மானியம் வரும் பொழுதும், அதற்கு தக்க உரைகளையும், அதற்கு தக்கச் சான்றுகளையும் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படும் பொழுது, அது ஒரு தினத்திற்கு முன்னால் வந்தால் தான் அவைகளை எல்லாம் உறுப்பினர்கள் படித்துப் பார்த்து, ஆராய்ந்து பார்த்து பேச வாய்ப்பு ஏற்படும். அதை ஞாபகத்திலே வைத்துக்கொண்டு, அப்படி கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"மருத்துவம்" என்பது பல துறைகளை விட, பல மானியங்களை விட மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தமிழிலே மிக அழகாக "மக்கள் பொதுநலத் துறை அமைச்சர்" என்று அமைச்சர் அவர்களை குறிப்பிட்டிருக்கிறது. மக்கள் நலமாக இருந்தால் தான் இந்த நாடு வாழ முடியும் ; நாட்டிலே இருக்கின்றவர்கள் எல்லாம் சுகாதார முறையிலே இருந்தால் தான் இந்த நாட்டிற்கே ஒரு பெருமை உண்டு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த உரையிலே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள், இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் ஏராளமாக இருந்து அதை வரவேற்க வாய்ப்பு இருந்தாலும் கூட, இதிலே மிக அத்தியாவசியமானது வியாதி வருவதற்கு முன்னால் தடுக்கக் கூடிய முறைகள். அந்தத் தடுக்கக் கூடிய முறையைப் பார்க்கும் பொழுது, இந்த குடி தண்ணீர் திட்டம் முதலிடம் பெறுகிறது. பல வியாதிகள் தண்ணீர் மூலமாகவும், காற்று மூலமாகவும் பரவுவதை நாம் பார்க்கிறோம். சென்னை நகரிலேயே '17 காலன்ஸ் பெர் ஹெட்' என்ற அளவிலே தான் நாம் குடி தண்ணீர் கொடுக்கிறோம். கொடுக்க வேண்டியதிலே 50 பர்சன்டை கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. இந்தக் கணக்குப்படி நாம் 50 பர்சன்ட்டுக்கு கொஞ்சம் அதிகப்படியாக கொடுக்கிறோம். அந்த திட்டத்தின் அடிப்படையின் கீழ் கொடுக்கும் பொழுது, குறைகளை நிவர்த்தி செய்து தேவைகளை சரிக்கட்டுவார்கள் என்று கூறப் பட்டிருக்கிறது. எனவே, அதைச் சரிகட்டும் அளவிலே ஆவன செய்வதற்கு இப்பொழுது இருந்தே இந்த அரசாங்கம் ஆரம்பித்தால் தான் ஓரளவுக்கு நாம் சரி பண்ணக் கூடிய நிலைமை ஏற்படும். சில ஆண்டுகளுக்குள். நமக்கிருக்கக் கூடிய குறைந்த பணவசதியை அடிப்படையாகக் கொண்டு வியாதி தடுப்பு முறைகளை கையாளும் பொழுது, கிராமங்களை எடுத்துப் பார்ப்போமானால் கிராமங்களில் தான் இந்தக் குடி தண்ணீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியான ஸ்ரீரங்கத்தை பொறுத்தமட்டில், முருங்கப்பட்டு, கம்பரசம்பேட்டை, அனந்தநல்லூர், மனச்சநல்லூர் போன்ற இடங்களிலே கிணறு வெட்டப்பட்டு, பழுது அடைந்து, அங்கிருக்கும் மக்கள் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒரு பக்கத்திலே சுகாதாரத்திற்காக அதிகப் பணம் ஒதுக்குகிறோம், மறு பக்கத்திலே சிலவற்றை ஒழுங்காக

செய்யாததன் காரணமாக வியாதிகள் அதிகம் வர காரணமாக இருக்கிறோம். எனவே, இந்தக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் தரும் திட்டங்களைக் கொண்டு வருவதற்கு பல திட்டங்களை ஏற்படுத்தி இருந்தாலும் கூட, அதை எல்லாம் உடனடியாக பூர்த்தி செய்து, நாம் வெட்டிய கிணறுகளிலே தண்ணீர் வருகிறதா என்பதை பார்ப்பது கடமை ஆகும். அதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதன் பிறகு கிணறுகளை கட்டும் பொழுது, அதை கன்டிராக்டர்களிடம் கொடுப்பது மாத்திரமல்லாமல், அதற்கு பராமரிப்பு இல்லாததால் அந்தக் கிணறுகள் எல்லாம் இடிந்து விழுந்து, அதை உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்கள் நம்முடைய நாடு பூராவும் இருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட கிணறுகளை எல்லாம் பழுது பார்க்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு அடுத்தாற்போல், "ரிசர்ச் சென்டர்ஸ்", அதாவது ஆராய்ச்சி செய்யப்பட்டு, அதிலே வேலை நடப்பதை இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்து, பல காரணங்களினால் வியாதிகள் வருவதை கண்டுபிடித்து, அதற்கு தக்கவாறு மருந்து கொடுத்து மக்களை காப்பது முக்கியமான வேலை. அதை இந்த அரசு செய்வது கண்டு, நான் வரவேற்கிறேன்.

சித்த வைத்தியத்திலே கூட பல நல்ல முறைகள் இருக்கின்றன. இங்கே இருக்கக் கூடிய தமிழ் வைத்தியர்கள் பலர் மிக நல்ல முறையிலே பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் இந்த சபையிலேயும் வெளியிலேயும் அமைச்சர்களிடத்திலே மனு கொடுத்து, அவர்களுடைய சித்த வைத்தியத்தை முறைப்படி பராமரித்து, அதற்கு "ரிகக்னிஷன்" கொடுக்கும் வகையிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசாங்கமோ இந்த சித்த வைத்தியத்தைப் பற்றி எதுவும் கவனிப்பதாக இல்லை. காரணம், சித்த வைத்தியத் துறை என்பது தெற்குக்கே உரித்தான ஒன்றாகும். மத்திய அரசுக்கு ஆயுர்வேத வைத்தியம் மட்டும் தான் தெரியும். பல முறை சித்த வைத்தியத்தைப் பற்றி எடுத்துச் சொன்னாலும் கூட, ஆயுர்வேத வைத்தியத்தையும் சித்த வைத்தியத்தையும் போட்டு குழப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதைச் செய்ய முன்வர மாட்டார்கள். சித்த வைத்திய முறை மத்திய அரசாங்கத்திற்குப் புரியாத ஒன்று. அதை நாம் தான் செய்தாக வேண்டும். எனவே, இந்த சித்த வைத்தியர்களை பாதுகாப்பது நம்முடைய அரசாங்கத்தின் கடமை ஆகும். அதை இந்த அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்க மருத்துவ மனைகளிலே எல்லாம் படுக்கைகள் அதிகப்படுத்துவதாகவும் புதுக் கட்டடங்கள் கட்டப் போவதாக வும் கூறியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நான் வரவேற்கிறேன். Neurology பிளாக்கின் மேல் இன்னும் சில அடுக்குகள்





போடுவதாகக் கூறப்பட்டிருக்கின்றது. தண்ணீர்க் கஷ்டத்தை உத்தேசித்தும் அப்படி அந்த பிளாக்கின் மேல் கட்டிடம் இன்னும் எழுப்புவது சரியல்ல என்று கூறுவதோடு ஜெனரல் ஆஸ்பத்திரியிலே மேற்கொண்டு கட்டடம் எழுப்புவது அவ்வளவு நல்லது அல்ல என்றும் கூற விரும்புகிறேன். ஏறகனவே, ஜெனரல் ஆஸ்பத்திரியிலே எந்த இடத்திற்குப் போனாலும் கன்ஜஷென் ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். எனவே, தொடர்ந்து அங்கேயே நாம் கட்டடங்களைக் கட்டுகிறோம் என்றால், அது அவ்வளவு நன்றாக இருக்காது. அப்படிக் கட்டக் கூடாது என்று இங்கே வலியுறுத்தி சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, அடையாரிலே "போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்" வரவேண்டும் என்று சொன்னோம். அதற்கு "நியுகிளியசாக" சென்னையிலே இருக்கக் கூடிய மருத்துவ மனையிலே "டிபன்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் பிசியாலஜி அன்ட்டு அலைடு சயின்ஸ்" என்பவற்றை ஆரம்பித்தோம். அந்த இன்ஸ்டிட்யூட் கிடைக்கவிருந்தது தமிழ் நாட்டிற்கு, ஆனால் நம் நாட்டிலிருந்து அது எங்கேயோ போய்விட்டிருக்கிறது இன்றைக்கு. அமைச்சர் அவர்களே அடிக்கடி கூறுவார்கள், மத்திய அரசாங்கத்தினிடம் இருந்து கிடைக்கும் சில சலுகைகளை நாம் இழப்போமானால் அது நம் நாட்டிற்குத் தான் கஷ்டம், அவர்களுக்கில்லை என்று கூறி, அப்படிப்பட்ட நிலை தமிழ் நாட்டிலே வந்திருக்கிறது, தமிழ் நாட்டிற்கு "ஸ்டெப் மதர்லி டிரீட்மென்ட்டு" கொடுக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். அதை "அவாயிட்" செய்கின்ற நிலையிலே, அதாவது தடுக்கின்ற அளவிலே, நாம் நம்முடைய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். "டிபன்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் பிசியாலஜி அன்ட்டு அலைடு சயின்ஸ்" வேறு மாநிலத்திற்குச் சென்று விட்டது குறித்து வருத்தப்படுகிறேன். ஏற்கனவே அடையாரிலே இருக்கும் 300 ஏக்கர் நிலத்தில் போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட் ஏற்படுவதற்காக கட்டிடம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கம் பணம் கொடுக்கவில்லை என்று அப்பொழுது கூறினார்கள். இன்னமும் அப்படி கூறிக்கொண்டிருப்பதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் எதை வேண்டுமானாலும் கூறட்டும். இவைகள் எல்லாம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்குக் கூட கூறியிருக்கிறார்கள், பல திட்டங்களைத் தீட்டுவதற்கு உலகத் தமிழ் மாநாட்டு மூலியமாகக் கிடைத்ததையும் தமிழ் நாடு லாட்டரி சீட்டு மூலியமாகக் கிடைத்த பணத்தையும் 'டைவர்ட்' செய்ததாக. அப்படி இதற்கும் ஏதாவதொரு ஏற்பாட்டை செய்து, அமைச்சர் அவர்கள் இதற்கு என்று ஒரு தனி 'பன்ட்டை' ஏற்படுத்தினாலும் சரி, இந்த போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டை வேறு இடத்திலே பெற ஆவன செய்ய வேண்டும். அடையாரிலே இதை ஏற்படுத்தினால் நல்லது. அமைச்சர் அவர்களே கூட கூறியிருக்கிறார்கள், நம்முடைய டாக்டர்களை

வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டியதில்லை; அவர்கள் எல்லாம் இங்கேயே படித்து அந்த தேர்ச்சிகளின் பயன்கள் எல்லாம் நம்முடைய நாட்டிற்கு பயன்படும் வகையிலே இருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந்த வேண்டுமானால், இந்த போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டிலே எல்லா ஸ்பெஷலிஸ்ட்ஸும் வரும் அளவிலே ஏற்படுத்த வேண்டுமே தவிர, அதை விடுத்து இன்னும் ஜெனரல் ஆஸ்பத்திரியிலேயே இந்த கட்டடங்களை எல்லாம் கட்ட நினைக்கும் எண்ணத்தை இந்த அரசாங்கம் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி கட்டிக்கொண்டு போவது அவ்வளவு உசிதமில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

சென்னை அரசாங்க ஆப்தால்மிக் ஆஸ்பத்திரியிலே ஓ.பி. பிளாக்கிலே ஸ்பெஷல் வார்டு போடுவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். கண் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக போகிறவர்களுக்கு சிகிச்சை பெற எத்தனை மாதம் பிடிக்கிறது என்பது நமக்குத் தெரியும். எனவே, இந்த ஸ்பெஷல் வார்டு கட்டப்படுவதை நான் வரவேற்கிறேன்.

பல இடங்களிலே அரசாங்க மருத்துவ மனைகளிலே டாக்டர்கள் போஸ்ட் செய்யப்படாமல் இருக்கிறது. அதை நான் இங்கே குற்றச்சாட்டாக சொல்லவரவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளிலே, பொது மக்கள் அதனால் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காகத் தான் இதைச் சொல்லிக் கொள்கிறேன்.

பூந்தமல்லி Health Unit-ஐ எடுத்துக் கொண்டால் அங்கே ஒரு மெடிகல் ஆபிசரே இல்லை; உதவி மெடிகல் ஆபிசரும் இல்லாத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை சரிக்கட்டி, எங்கேயாவது டாக்டர்கள் வேகன்சி வரும்பொழுது, அங்கே உடனடியாக டாக்டர்களைப் போட்டு அந்தந்தப் பகுதி மக்களுக்குப் பணி செய்யும் அளவிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் "இர்ரிகேஷன்", தொழில் அபிவிருத்தி போன்றவைகளுக்கு எல்லாம் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கலாம். ஆனால், இவைகளை எல்லாம் புகுந்து செய்யக்கூடியவன் மனிதன் என்பதால், இந்தச் சுகாதாரத் துறை அவர்களுக்கு சிகிச்சை கொடுக்க எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் காரியங்களை அப்போதைக்கப்போது இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மருத்துவ கல்லூரிகளில் இப்போது 110 சீட்டுகளை இந்த ஆண்டு குறைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி மிகவும் கஷ்டமாக வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், 110 டாக்டர்களை நாம் உருவாக்கக்கூடிய அளவிலே இருக்கிறோம். பல ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கும்போது இந்த 110 பேர்களுக்கு மட்டும் இடமில்லாமல் போய்விடுமா? இதனால் 110 மாணவர்களுடைய உரிமை பாதிக்கப்படுகின்றது. ஏற்கனவே உயர்த்தப்பட்ட சீட்கள் அவை. அந்த சீட்கள் இன்றைக்கு குறைக்கப்படுவது அழகல்ல. இந்த ஆண்டு தமிழ் நாடு மெடிகல் அஸோஸியேஷன் எதைச்சொன்னாலும் சரி அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொள்வோம். ஆனால் சில சமயங்களில் அதிகாரிகள் 'மிஸ்லிடிங் கைடன்ஸ்' கொடுத்தால் அதைத் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டியது அமைச்சரின் பொறுப்பு. அவர்கள் எல்லோரும் நன்றாக படித்தவர்கள் 'எக்ஸ்பீரியன்ஸ்' வாய்ந்தவர்கள் என்பது எல்லாம் உண்டு. ஆனாலும் சில சமயங்களில் அரசாங்கத்தை திருப்திப்படுத்த நிலைமையைச்சமாளிக்க அவர்களுடைய சிபார்சுகள் வரும்போது அதைத் துருவிப் பார்க்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. வித் டியூ ரெஸ்பெக்ட் டு தி தமிழ் நாடு மெடிகல் அஸோஸியேஷன், அவர்களுடைய opinion படி ஒரு டாக்டர் 3,000 patients (நோயாளிகளுக்கு) என்று 'ரீச்' ஆகி இருக்கிறோமா? இல்லை. ஆகவே இந்த ஆண்டு அந்த சீட்டுக்களை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல. இவர்கள் தேர்வுபெற்று வெளியே வந்தால் வேலை வாய்ப்பு இந்த அரசு கொடுக்கவேண்டுமென்று பைண்டிங் இல்லை. ஆகையால் Medical Application Form-ல் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து தேறினால் அரசாங்கம் அவர்களுக்கு உத்தியோகம் கட்டாயமாக கொடுக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது என்று சொல்லிவிடலாம். ஆகவே, சீட்கள் உயர்த்திக் கொடுக்கப்படவேண்டும்.

திரு. ஹாண்டே ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார். அதை நான் ஆதரித்துப் பேசுகிறேன்.

'To discuss the en bloc failure of post-graduate students of Stanley Medical College for the last two years'

இந்த injustice தொடர்ந்து நடந்துவருகிறது. காரணம். 'complex between the Stanley Medical College, Kilpauk Medical College and the Madras Medical College' (General Hospital).

ஜெனரல் ஆஸ்பத்திரியிலே இருக்கின்ற டாக்டர்கள் தான் எல்லா விதத்திலும் திறமை வாய்ந்தவர்கள் என்று கூறுவதற்கில்லை. கிராமத்திலே இருக்கின்றவர்கள் கூட சாதாரணமாக சித்த ஆயுர்வேத வைத்தியர்களும் திறமை வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரி என்ற 'கிளாமர்' glamour வந்த காரணத்தால் எல்லோரும் அதே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். அந்த மெடிகல் காலேஜில் படித்தால்தான் பெரும் மதிப்பு என்று இவர்கள் 'சுப்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்' கருதுவது நல்லதல்ல. இந்த நிலை உருவாகாமல் இருக்க வேண்டும் Madras Medical College-இல் படிக்காதவர்கள் வேறு காலேஜிலே படித்தவர்களாக இருந்தால் பரீட்சையிலே பாஸ் செய்தாலும் Viva-voce and Practical-லே தொடர்ந்து பாஸ் பண்ண முடியவில்லை. இப்படிப்பட்ட நிலையை மாற்ற

'எக்ஸ்டெர்னல் எக்ஸாமினர்ஸ்' வந்தாலும் Chief ஆக, Chairman and other Members ஆக இருக்கிறவர்கள் தொடர்ந்து நம்முடைய மருத்துவ மனையைச்சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்துமாத்திரம் பொறுக்கி தேர்ந்தெடுக்கும் சூழ்நிலையில் போடுவோம்என்று ப்ராமினென்ஸ் கொடுத்துக்கொண்டே போனால் அதற்குத்தடை போட்டு மற்ற ஆஸ்பத்திரியிலும் 'காம்ப்பெக்ஸ் கிரியேட்' பண்ணமல் டாக்டர்களை Examinerகளாகப் போடுவதற்குப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய மருத்துவ மனை ஜெனரல் ஆஸ்பத்திரியிலே எத்தனையோ 'ஸ்பெஷாலிட்டி' இருக்கின்றன. அதிலே ஒரு சிறிய டிபார்ட்மெண்ட் தான் 'வென்ராலிஜி டிபார்ட்மெண்ட்' அங்கே ஒரு டாக்டர் போடப்பட்டும் அவர் அங்கு வந்து பல மாதங்கள் ஆன பிறகும் அவர் இன்னும் 'கன்பேர்ம்' செய்யப் படாமல் இருக்கிறார். காரணம் அவருக்கு, எம்.டி., எம்.எஸ். இல்லை என்று சொல்கிறார்கள். அவர் எம்.பி.பி.எஸ்., 'டிப்ளமா ஆப் M.P.H போஸ்ட் கிராஜுவேட் டிகிரி அல்ல என்று சொல்லி வருகிறார்கள். டிப்ளமா இருந்தாலும் அதை யுனிவர்சிடி அங்கீகரித்திருக்கிறது. டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் 'வைஸ் சான்சிலராக இருந்தபொழுது இதை செய்திருக்கிறார்கள். ஆனால் தற்போது இருக்கின்ற டாக்டருக்கு இந்த போஸ்ட் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை Ph.D பாஸ் செய்திருந்தாலும் அவருக்கு இந்த போஸ்ட் கன்பேர்ம் செய்யப்படவில்லை. 'ரீடர்' ஆக இருந்த பிறகுதான் அவர் ப்ரொபஸராகிறார். மெடிகல் ரூல்ஸ் பிரகாரம் ரீடராகவும் Professor ஆகவும் அவர் பொதுவாக 17 ஆண்டுகளாக நம்முடைய மாகாணத்திலே டாக்டர் வேலை பார்க்கிறார். அவர் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் கன்பேர்ம் செய்யப்படவேண்டும். அதைச் செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைரஸ் டிசீஸ்க்கென்று 'ஸ்பெஷல் மருந்து' கிடைக்கவில்லை என்று கேள்விப்பட்டேன். அந்த 'ஸ்பெஷல் மருந்து', expensive drug மக்களுடைய தேவைக்காகக் கிடைக்கச் செய்யவேண்டும். அதற்குப் பதிலாக வேறு மருந்து—இந்த மருந்தைப்போல் உள்ள equal therapeutic value மருந்து கொடுப்பதைவிட இதேமருந்தைக் கிடைக்கச் செய்யவேண்டும். அது நல்ல 'எஃபெக்டிவ் டிரக்' ஆக இருப்பதால் அதைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Now I want to mention a recent incident that has occurred in the General Hospital

19-ம் தேதி அன்று இரவு 10 மணி சுமார் முதலமைச்சர் ஏதோ அவசரமாக உடல் நிலை சரியில்லாமல் பொது ஆஸ்பத்திரிக்கு General Hospital யாரோ ஒருவர் முதலமைச்சருடைய பி.ஏ. என்று கூறி பொது ஆஸ்பத்திரிக்கு வருவதாக போன் செய்து அன்றைக்கு இரவு Casuality இல் வந்திருந்த



பேஷண்டுகள் ½ மணி நேரம் காத்துக்கொண்டிருந்தனர் சிகிச்சை பெறமுடியாமல்; ஆனால் முதலமைச்சர் மீது குற்றம் இல்லை, பி.ஏ. மீதும் குற்றமில்லை. ஆனால் அந்த போன் வந்த காரணத்தால் மற்ற வியாதியஸ்தர்கள் காஷுவாலிடி வார்டிலே கவனிக்கப்படவில்லை. டாக்டர்கள் இல்லாத காரணத்தால், டாக்டர்கள் முதலமைச்சருக்காக காத்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுவதைத் தடுக்க முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இதிலே முதலமைச்சரவர்களுக்கு உடல் நிலை சரியில்லை என்று யாரோ தவறான செய்தி கொடுத்திருக்கிறார்கள் என்பதை நானும் கேள்விப்பட்டேன். ஆனால் அவருடைய பி.ஏ. வோ மற்ற பணியாளர்களோ அவ்வாறு கொடுக்கமாட்டார்கள். ஆகவே, அம்மையாரவர்கள் அதை விளக்கமாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு அம்மையார் அவர்கள் கூறியதைப்போல முதல் அமைச்சருக்கே ஆபத்து என்றோ, அல்லது மற்ற அமைச்சர் யாருக்கேனும் ஆபத்து என்றோ செய்தி வந்தால், இனிமேல் உடனடியாகப் பரபரப்பு அடைவதற்குப் பதிலாக, திரும்ப அமைச்சர் அவர்களுடைய வீட்டுக்கே அவர்கள் போன் செய்து பார்த்துக்கொள்வது நல்லது என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அப்படி டாக்டர்களுக்கு திருப்பி போன் செய்து உண்மைத் தகவல் தெரிந்துகொள்வதற்கு உத்தரவு வேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக இருக்க வேண்டும்—நூறு ஆயுசாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்—நான் சொல்ல விரும்புவது எல்லாம் இப்படி எந்த V.I.P. க்கு எவ்வளவு அவசர கேசாக வருவதாக இருந்தாலும் மருத்துவமனை வந்து சேரும் வரையில் அங்குள்ள நோயாளிகள் யாரையும் கவனிக்காது காத்திருக்கச் செய்வது சரியல்ல—வயிற்று வலி என்று வருவான்—சாதாரண வலியோ, அபின்டிசிடிசோ என்று நாம் சொல்வதற்கில்லை. தேள்கடி, இப்பேற்பட்ட அவசர கேசுகள் Casuality க்கு வருகின்றன. ஆகையால் அமைச்சர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் உதவி செய்ய வேண்டியதும் அவசியம். இவர்கள் வருகிற வரையில் அங்குள்ளவர்கள் யாரையும் பார்ப்பது இல்லை என்று நிறுத்திவைப்பது கூடாது என்று உத்தரவிடும்படியாக இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிவிடுகிறேன். இன்றும் இருபது உறுப்பினர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். முடிவில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே, ஒரு உறுப்பினர் ஐந்தில் இருந்து ஏழு நிமிடங்களுக்குள் தம்

[1971 ஜூலை 3

உரையை முடித்துவிடவேண்டும். இப்போது பேசிய அம்மையார் அவர்கள் 25 நிமிடம் எடுத்துக்கொண்டார்கள். இவ்வளவு நேரம் அவர்களைப் பேச அனுமதித்தாலும் அவரது கட்சியைச் சேர்ந்த இன்னொரு பேச்சாளரின் பெயரை நீக்கிவிட்டேன். ஓர் உறுப்பினர் அதிகம் பேசுகிறார் என்றால் அவரது கட்சியைச் சேர்ந்த வேறு ஒரு உறுப்பினர் பேசும் சந்தர்ப்பத்தை இழக்கிறார். இரண்டு பேர்களின் பேச்சுக்குப் பதிலாக அவர் ஒருவரே பேசுகிறார் என்று பொருள். ஆகவே, குறிப்பிட்ட நேரத்திற்குள் பேச்சை முடித்து மற்றவர்களுக்கும் பேச வாய்ப்பளிக்க பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கையின் மீதும், மக்கள் நல மானியக் கோரிக்கையின் மீதும் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி கூறி, ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு அந்த நாட்டு மக்களின் உடல் நலத்தைப் பொறுத்தே இருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருப்பதன் காரணமாக, மருத்துவத் துறையில் பல சீரிய முன்னேற்றங்கள் ஏற்பட வழிவகை செய்திருக்கிறது. இருந்தாலும் மேல்நாடுகளின் புள்ளிவிவரங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில்—இங்குள்ள மருத்துவமனைகள், படுக்கை வசதிகள் ஆகியவற்றைப் பார்க்கிறபோது இன்னும் கூடுதலான மானியத்தை ஒதுக்கி இன்னும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ மானியக் கோரிக்கையிலே இப்போதிருக்கிற படுக்கை எண்ணிக்கை 20,452 என்பது 1974-இல் 24,478 ஆக அதிகரிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுவும் கூட நம்முடைய தேவைக்கேற்ப இல்லை. பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளானாலும், மாவட்டங்களில் உள்ள மருத்துவ மனைகளானாலும், இன்றையதினம் எந்த இடத்திற்குச் சென்றாலும் படுக்கை எண்ணிக்கை போதவில்லை. படுக்கை நூறு என்றால் நோயாளிகளின் எண்ணிக்கை 200 ஆகத்தான் எல்லா மருத்துவ மனைகளிலும் காண்கிற நிலையாக இருக்கிறது.

மருத்துவ கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் முன்பு 3 இருந்தது என்றால் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் 8 கல்லூரிகள் இருக்கின்றன. போன ஆண்டு 1,125 ஆக இருந்த மாணவர்கள் எண்ணிக்கையை 1,015 ஆக இவ்வாண்டு குறைத்திருக்கிறார்கள். இப்படி அரசாங்கம் 110 இடங்களைக் குறைத்திருப்பதுபற்றி பெரியதாக குறைப்படவேண்டியதில்லை. காரணம் இதை அரசாங்கம் செய்யவில்லை. அங்கத்துறை நிபுணர்களேதான் 200 இடங்களைக் குறைக்கவேண்டுமென்று பரிந்துரைக்கார்கள். அரசாங்கம் 110 இடங்களைக் குறைக்க அனுமதி அளித்திருக்கிறது. சாதாரண கலைக் கல்லூரிகளைப்போல அதிகமான மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பயிற்றுவிக்கலாம் என்பது முடியாத காரியம். பயிற்சி பெறுவதற்குப் போதுமான வகுப்பறைகள்,



1971 ஜூலை 3] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

மற்ற மற்ற பரிசோதனைக்கூடங்கள், சாதனங்கள் எல்லாம் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குத் தேவைப்படுகிறது. நிபுணர்களது பரிந்துரையின் மேல் 1,125 இடங்களை 1,015 ஆகக் குறைத்தாலும் மருத்துவக் கல்லூரியைவிட்டு வெளியேறுகிறவர்கள் அத்துறையில் திறமைமிக்கவர்களாக, ஆற்றல்மிக்கவர்களாக வெளிவர போதுமான கவனம் எடுத்துக்கொள்வதுதான் முக்கியம். கமிட்டி தலைவர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஐம்பது லட்சம் மக்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று சொல்கிறார்கள். மருத்துவக் கல்லூரியின் எண்ணிக்கையைவிட, மருத்துவக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையைவிட—மருத்துவக் கல்லூரியைவிட்டு வெளியேறுகிறவர்கள் எல்லாம் அத்துறையில் சிறந்த வல்லுநர்களாக, ஆற்றல் மிக்கவர்களாக, அறிவு பெருகி வரத்தக்க ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும். ஆகவே இந்த 100 இடங்களின் குறைவைச் சரிக்கட்ட சிறப்பான முறையில் சேர்க்கப்படுகிற மாணவர்களைத் தயார் செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மருத்துவத் துறையில் ஸ்பெஷலிஸ்டு கோர்ஸ் சம்பந்தமாக அரசு முக்கியத்துவம் காட்ட வேண்டும். பல மருத்துவப் பட்டதாரிகள் எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு மேல் படிப்புக்காக மேலைநாடுகளுக்கே போக விரும்புகிறார்கள். இங்கே பட்டமேல்படிப்புக்கு போதுமான வசதிகள் இல்லை. இதை மாற்றி—இங்கேயே பட்டமேல்படிப்புக்கு வசதி செய்துதர வேண்டும். தக்க சிறந்த ஆசிரியர்களை பயிற்றுவிக்க வேண்டும். என்னுடைய நண்பர்களே மேல்நாடு போயிருக்கிறார்கள். கேட்டால் இங்கு வசதியில்லை என்று குறைபடுகிறார்கள். அந்தக் குறை நீங்கும்வண்ணம் பட்டமேல்படிப்புக்கு இங்கேயே வசதிகள் பலவும் செய்துதரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதை அடுத்து சென்னை நகரில் உள்ள மருத்துவ மனைகளை மேம்படுத்துவதோடு நிற்காது, மாவட்ட ரீதியில், வட்ட ரீதியில் உள்ள மருத்துவ மனைகளையும் மேம்படுத்த போதுமான கவனம் செலுத்தப்படவேண்டும்.

இன்று கோவையை எடுத்துக்கொண்டால் கோவையில் மருத்துவக் கல்லூரியிருக்கிறது. அங்கு ஆஸ்பத்திரியும் இருக்கிறது. அதைத் தடுக்க நல்ல முறையில் விரிவுபடுத்தினால் தான், படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி மற்ற மற்ற சாதனங்களையும் பெருக்கினால்தான் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் வசதியாக இருக்கும். மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக என்து தொகுதியிலுள்ள சில நிலைமைகளைச் சொல்ல விரும்புகிறேன். கோபிசெட்டிப்பாளையம் அரசாங்க மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை 63 ஆக இருக்கிறது. அதை விரிவுப்படுத்தி 100 என்ற அளவிலாவது

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1971 ஜூலை 3

உயர்த்தித் தர வேண்டும். நோயாளிகளின் எண்ணிக்கை 130, 135 என்ற அளவில் இருக்கின்றனர். அவர்கள் தரையிலேயே படுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, 100 என்ற அளவில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

அடுத்ததாக, காசநோய் ஆஸ்பத்திரி ராமலிங்கனூர் என்ற பெயரில் தனியார் துறையில் நடத்தப்படுகின்றது. அதை அரசாங்கமே எடுத்து, விரிவுபடுத்தி, மக்களுக்கு உபயோகப்படும் வகையில் ஆக்கித்தர வேண்டும்.

கோபி வட்டத்தில் காசநோய், தொழுநோய் உள்ள வியாதியஸ்தர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தால் அதைக் கட்டுப்படுத்தக்கூடிய வகையில் திட்டம் போட்டு, அந்தப் பகுதிக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மொபைல் டிஸ்பென்ஸரியைப்பற்றியது. சென்னையில் ஸ்டான்லி, மதுரையில் உள்ளதைப்போல ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் ஒரு மொபைல் டிஸ்பென்சர் வைத்திருந்து, எங்கெங்கு வைத்திய வசதி தேவைப்படுகிறதோ அந்தப் பகுதிகளுக்கு உதவி செய்ய வேண்டும். மக்கள் நல்வாழ்வு வாழ மருத்துவத் துறை நல்ல பல பணிகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, இந்த மானியத்தை வரவேற்றுப் பாராட்டி உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சு. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த பல ஆண்டுக் காலமாக தமிழ்நாடு அரசாங்கம் மருத்துவத் துறையிலே செய்திருக்கிற அரிய காரியங்களைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் முதலிலே நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, திருப்பூர் நகரிலே அரிமா சங்கத்தின் சார்பாக கண் மருத்துவமனைக்காக கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளனர். அதை அரசாங்கம் ஒப்புக்கொண்டு மருத்துவ அதிகாரிகளை நியமித்துக் கொடுத்ததற்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் நகரத்தில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். கடந்த 62 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட மருத்துவ மனைதான் அப்படியே இன்றுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்தான் 'வைர விழா' கொண்டாடினோம். அந்த மருத்துவ மனை 36 படுக்கைகளைக் கொண்டதாகத்தான் இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அதை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே வலியுறுத்தியிருக்கிறேன். வரவு-செலவுத் திட்டத்திலும் சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் விளக்க குறிப்பிலும் அதை விரிவுபடுத்துவதற்கான ஓர் அறிவிப்பு இல்லாதது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.



1971 ஜூலை 3] [திரு. சு. துரைசாமி]

திருப்பூரில் மருத்துவ மனை வருவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகை தருகின்றபோது, அந்த ஊர் மக்கள் 3 லட்சம் ரூபாய் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். வேலை தொடங்கும் சமயத்தில் மேலும் 2 லட்சம் ரூபாய் தருவதற்கு இருக்கிறார்கள். ஆக மொத்தம் 5 லட்சம் ரூபாய் தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரில் விரைவிலே 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட இடம் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் இல்லை. ஆகவே, அதையும் விரைவிலே கட்டிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மங்கலம் என்கிற கிராமத்தில் இருந்த மருத்துவமனை நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே மூடப்பட்டது. மூடப்பட்ட மருத்துவ மனையை உடனடியாக திறந்து மக்களுக்கு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் நகரிலே இருக்கிற மருத்துவமனையில், இடைக்காலமாக ஒரு பல் டாக்டரைப் போட்டு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில், பொதுவாக மருத்துவமனையைப் பொறுத்தவரையில், மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சிறப்பான திட்டங்கள், சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் இல்லாத குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. எல்லாவகையான சிறப்பு வசதிகளையும் கொண்டதாக இந்த மருத்துவமனையை மாற்றக்கூடிய வகையில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்பநலத் திட்டத்தின் மூலமாக சென்னையிலும், சேலத்திலும் பயிற்சிநிலைய வேலை நடைபெற்று வருகிறது. கோவை நகரத்திலும் அந்தத் திட்டத்தில் ஒரு பயிற்சிநிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பல திட்டங்களையும், வரிசை, வரிசையாகச் சொல்லி, 'இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும்' என்று, உள்ளபடியே அவருக்கு இருக்கிற ஆர்வத்தின் காரணமாக இப்படிக் கூறுகிறார். சில திட்டங்கள் தமிழ் நாடு அரசாங்கத்தால் நிறைவேற்றக்கூடியவை, சில திட்டங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றக்கூடியவை. மத்திய அரசாங்கத்தின்கீழ்

வருபவை மாநிலத்திற்கு இரண்டு அல்லது மூன்று என்ற அளவிலே தான் இருக்கும். அங்கத்தினர் அவர்கள் எல்லாவற்றையும் பேசி, எதையும் நிறைவேற்றவில்லை என்று வருத்தப்படக்கூடிய நிலைமை இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, பொதுவாக இருக்கிற குறைபாட்டை நாங்கள் எடுத்துச் சொல்லுகிறோம். மத்திய அரசாங்கத்திலே வற்புறுத்தி அதையும் பெற்றுத்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

'தொழிலாளர் அரசாங்கம்' என்கிற காரணத்தால், தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ் தமிழ் நாடு 125 லட்சம் ரூபாய் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக செலவழிப் பதைப் பாராட்டுகிறேன். எல்லா தொழிலாளர் மக்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். கோவையில் இருக்கிற தொழிலாளர் மருத்துவமனையில் சிறப்புப்பட்டம் பெற்ற டாக்டர்கள் இல்லாத குறை இருக்கிறது. ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் எல்லா வசதி களோடும், சிறப்புப்பட்டம் பெற்ற டாக்டர்களை அமர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் நகரில் 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நீண்டகாலமாக மருத்துவமனை கட்ட இடம் பார்த்தும்கூட, வேலை இன்னும் தொடங்கவில்லை. 100 படுக்கைகள் கொண்டதாக மருத்துவமனை தொடங்க வழி செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள் திருப்பூர் நகருக்கு ஐந்து மைல் தொலைவி லிருந்து வந்து போகிறார்கள். தொழிலாளர்களுக்கு வைத்திய உதவி அளிப்பதற்காக 'மொபைல் வேன்' ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீருக்காக இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் முயற்சியைப் பாராட்டு கிறேன். திருப்பூர் நகரத்திற்கு 10 லட்சம் ரூபாயும், நடைமுதல் ஆண்டில் 22 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறோம். மேற்கொண்டு தொகை போதாத நிலை இருக்கிறது. நெல்லித் துறை நீர்த்திட்டத்தின்கீழ் குடிதண்ணீருக்கு வழி செய்ய வேண்டும். கோவை நகரம், சிங்கநல்லூர், சூலூர், பல்லடம் வழியாக குடிதண்ணீர் திட்டம் வருகிறது. பல்லடம் 1,200 அடி இருக்கிறது. திருப்பூர் 1,040 அடி இருக்கிறது. பல்லடத்திற்கும் திருப்பூருக்கும் எட்டு மைல் தூரம்தான் இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் திருப்பூர் நகரத்தின் தண்ணீர்ப் பஞ்சத்தை போக்குவதற்குப் பயன்படும்.

அடுத்தபடியாக பாதாளச் சாக்கடைத் திட்டம் சம்பந்த மானது, இதைத் திருப்பூர் நகரில் அமைக்க வழிவகை செய்ய வேண்டும்.





இறுதியாக ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல வேண்டு மென்று விரும்புகிறேன். மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் பல ஆண்டுகளாக கோவை மாவட்ட மக்களுக்குக் கிடைத்துவந்த சலுகை மறுக்கப்பட்டிருக்கிறது.

கோவையிலே இருக்கிற மருத்துவக் கல்லூரிக்கு கோவை, சேலம், நீலகிரி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்கள். சென்னை மருத்துவக் கல்லூரிக்கு வட ஆர்க்காடு, சென்னை நகரம். மதுரை கல்லூரிக்கு மதுரை, இராமநாதபுரம். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு திருநெல்வேலி என்ற அடிப்படையில் ஒவ்வொரு கல்லூரிக்கும் நான்கு மாவட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோவை, சேலம், நீலகிரி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங் களுக்கும் சேர்ந்து 100 பேர் விண்ணப்பிக்கிறார்கள். கோவை மாவட்டத்துக்காரர்களுக்கு அந்தக் கல்லூரியிலே இடம் கிடைக்கப் படுவதில்லை. கோவை மாவட்டத்திற்கு கடந்த பல ஆண்டுகளாக 55, 60 மாணவர்கள் என்ற அளவிலேதான் இடம் கிடைக்கிறது. கடந்த ஆண்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 30, 40 மாணவர்கள் என்றுகூடத் தேறவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பதுபற்றி கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கொண்டிருக்கிற தகுதி அடிப்படையில் தவிர, மாவட்ட ரீதியாக மாணவர்களைச் சேர்ப்ப தில்லை. மாவட்ட ரீதியில் யார் யார் தகுதியுடையவர்கள் என்பதைப்பற்றி, கோவை மாவட்டத்திலுள்ள இடத்தைப்பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் விண்ணப்பித்தார்களோ அங்கே எடுக்கப்பட்ட மாணவர்கள் மட்டும் சேர்க்கப்படுவார்கள் என்று நினைத்துவிடக் கூடாது. தமிழ் நாடு முழுவதும் ஒரே யூனிட் என்ற அடிப்படையில்தான் தேர்வு இருக்கும். அந்த எண்ணிக்கையைக் காட்டி, ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு என்று பிரிக்கச் சொல்லி மாணவர்களைச் சேர்க்கச் சொல்வது சட்டத்திற்குப் புறம்பானது. அப்படிப் பிரிப்பது சரியானது அல்ல என்று உயர்நீதிமன்றம் முடிவு கூறியிருக்கிறது. மாவட்ட அளவில் மாணவர்களைப் பிரிப்பது சரியானது அல்ல என்பதை உயர்நீதிமன்றமும், சுப்ரீம் கோர்ட்டும் சொல்லியிருக்கிறது. சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்க இயலாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, சட்டத்திலே இடையூறு இருந்தாலும், வட்டாரத்து மக்களுக்கும் வாய்ப்பு அளித்தால் நலமாக இருக்கும்.

மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் உழவர் பெருமக் கள் கல்லூரியில் சேருவதற்கு சில இடையூறுகள் இருக்கின்றன. பஞ்சாலையில் வேலை செய்பவர்கள், கைவண்டி

இழுக்கக்கூடியவர்கள், சலவைத் தொழில் செய்பவர்கள் கோவை மாவட்டத்தில் முதலி, கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் முற்போக்குச் சமுதாயத்தில் சேர்க்கப்பட்டு, கல்விச் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் தகுதிகளை நிர்ணயித்து, கல்விச் சலுகை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுவற்றை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும் என்று தமிழ்ப் பழமொழி ஒன்று இருக்கிறது. எழுப்பப்படுகின்ற சுவற்றிற்கு நல்ல கொத்தனாராக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு மானியக் கோரிக்கைகளின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல வியாதிகள் வறுமையையும் நோயையும் எதிர்நீச்சல் போட்டு இருக்கின்ற நேரத்தில் நம்முடைய அரசு பல நோய்களை ஒழிப்பதில் வெற்றி அடைந்திருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே யானைக்கால் போன்ற வியாதிகள், பைலேரியல் டிஸீசஸ் இன்னும் இருந்து கொண்டு இருக்கின்றன. மத்திய அரசு உதவி செய்தாலும்கூட அவை ஒழிக்கப்படவில்லை. எனவே, நம்முடைய அரசு இன்னும் நல்ல முறையிலே நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர்களுக்கே வேலையில்லாத நிலைமை நம்முடைய நாட்டிலே இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதுதான். டாக்டர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டால் அவர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று வேலை செய்வதற்கு இது வாய்ப்பாக இருக்கும். கிராமப்புறங்களுக்குப் போகாமல் நகரங்களிலேயே சுற்றிக்கொண்டிருக்கின்ற டாக்டர்களை கிராமப்புறங்களுக்குச் சென்று பணியாற்றச் செய்யவேண்டுமென்று நம்முடைய அரசை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர்கள் கருணையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதைப் போலவே அதிகாரிகளும் கருணையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரிக்குச் சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 110 மாணவர்களைக் குறைத்திருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதுதான். அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து நோய்கள் நிறைய இருக்கின்றன. எனவே நிறைய டாக்டர்களும் தேவைப்படு



கிறார்கள். இந்த நிலைமையில் பொருளாதாரம் இல்லை என்ற காரணத்தினாலேமட்டும் அந்த எண்ணிக்கையைக் குறைப்பது சரியில்லை. நோய்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து குறைக்கப்பட்டிருக்கின்ற 110 என்பதை இன்னும் அதிகப்படுத்தி 250 பேர்களைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி டாக்டர்கள் அதிகமாக இருந்தால் டாக்டர்களுக்கு மலேசியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அங்கெல்லாம் அவர்கள் சென்று பணியாற்ற முடியும். ரஷ்யா போன்ற நாடுகளுக்கு எல்லாம் அவர்கள் சென்று நுணுக்கங்களைக் கற்று வருவதற்கும் வாய்ப்புகள் இருக்கும். எனவே அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலுள்ள ஜெனரல் ஹாஸ்பிடல் பற்றி பேசப்பட்டது. முன்பு இருந்ததைவிட—சமீபத்திலே நான் அங்கு செல்ல நேரிட்டது—இப்பொழுது சுகாதாரமாகவும் சுத்தமாகவும் பிரைவேட் நர்ஸிங் ஹோம் மாதிரி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று மற்றும் நகரிலே உள்ள ஆஸ்பத்திரிகளும் விஸ்தரிக்கப் படவேண்டுமென்பதில் அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெனரல் ஹாஸ்பிட்டலில் ஸ்பெஷல் வார்டில் பெட்கள் குறைவாக இருக்கின்றன. பணத்தைக் கட்டி வருவதற்குப் பலர் தயாராக இருந்தாலும் கூட அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் வெயிட்டிங் லிஸ்டில் வைக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தக் குறையைப் போக்க ஸ்பெஷல் வார்டில் 200 படுக்கைகள் அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் பல அடுக்கு மாளிகை ஒன்று கட்டப்படவேண்டும். பக்கத்தில் உள்ள பொதுச் சிறைச்சாலை இடத்தைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்டவர்களை அணுகிப் பெற்று அந்த இடத்திலே இந்த ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தத் திட்டம் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பேசுவதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் அதில் பூரணமாக வெற்றி பெற்றிருக்கிறேன். 16 வருடங்களுக்கு முன்பு எனக்குத் திருமணமாகி சமீபத்திலே ஆறுமாதங்களுக்கு முன்புதான் ஒரு பெண்குழந்தை பிறந்து இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல பாராட்டையும் பரிசுகளையும் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். எப்படி 16 வருடங்கள் வரை குழந்தை பெறாமல் இருந்தேன் என்பது வேறு ரகசியம். தனியாகக் கேட்டால் சொல்கிறேன். இன்னும் 10, 15 ஆண்டுகளுக்கு இரண்டாவது குழந்தை பெறாமல் இருப்பேன். கல்யாணம் ஆகாத துரை முருகன் போன்றவர்களுக்கு தனியாகச் சொல்கிறேன்.

[திரு. கே. ஏ. வகாப்] [1971 ஜூலை 3

மேல் விஷாரத்தில் கோஷாப் பெண்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. எனவே, அங்கே ஒரு கோஷா ஆஸ்பத்திரி, அரசினர் மருத்துவ விடுதியை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இராணிப்பேட்டையிலும் இதற்காக ஒரு தீர்மானத்தைப் போட்டு சென்ற வாரம் அமைச்சரிடம் கொடுத்தோம். அங்கேயும் அரசினர் மருத்துவ விடுதி இல்லை என்ற குறை இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலே ஏதாவது ஒரு இடத்திலாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசியிலே உள்ள மருத்துவ மனையிலே பணியாற்றும் டாக்டர்களுக்கு குவார்ட்டர்ஸ் இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே அவர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சித்த, யுனானி வைத்திய முறைகளில் நம்முடைய அரசு காட்டுகின்ற அக்கறை பாராட்டத்தக்கது. யுனானி வைத்தியத்தின் பாரம்பரியத்தையெல்லாம் ஆராய்ந்து சித்தவைத்தியத்துக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் போன்று யுனானி வைத்திய முறைக்கும் கொடுத்து பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன். வணக்கம்.

* டாக்டர் ச. அ. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் முன் வைக்கலாம் என நினைக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்பதுபோல் பொதுச் சுகாதாரத்திலும் அது பின்தங்கி இருக்கிறது. உதாரணமாக அரூர் மருத்துவமனை வட்டத் தலைமை மருத்துவ மனையாக இருக்கிறது. எனக்குத் தெரிந்து கடந்த 20 ஆண்டுக்காலமாக 10 படுக்கைகள் தான் அங்கு இருக்கின்றன. அங்கே பணிபுரிகின்ற டாக்டர்களுக்கு குடியிருப்பு வசதிகள் கிடையாது. டாக்டர்கள் பணி ஒன்றைத்தவிர தொண்டுள்ளம் கொண்டும் டாக்டர்கள் இருக்கிறார்கள். மக்களுக்கு அவர்கள் நல்வாழ்வை வழங்குகிறார்கள். அப்படி வழங்குகின்றவர்களுக்கு நல்ல குடியிருப்பு வசதிகளைச் செய்துதர வேண்டும். டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரியில் 5 ஆண்டுகள் வரையில் நன்றாக வாழ்ந்துவிட்டு குடியிருப்பு இல்லாமல் கிராமங்களிலே அவர்கள் பணியாற்றுவது என்றால் சிரமமாகத் தான் இருக்கும். பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் ரூரல் ஹெல்த் சென்டர்ஸ் இவற்றில் பணிபுரிகின்ற டாக்டர்களுக்கும் இந்த வசதிகளைச் செய்துதர வேண்டும்.

அரூர் மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் இல்லை, கட்டட வசதிகளும் இல்லை. படுக்கை வசதிகளை 30 படுக்கைகள்



1971 ஜூலை 3] [டாக்டர் ச. அ. சின்னராசு]

கொண்டதாகச் செய்ய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எக்ஸ்ரே போன்ற லேபரட்டரி இன்வெஸ்டிகேஷன்ஸ் செய்ய வேண்டுமென்றால் 40 மைல் தூரத்திலுள்ள சேலத்திற்கோ அல்லது 30 மைல் தூரத்தில் உள்ள தர்மபுரிக்கோ தான் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்தச் சாதனங்களையெல்லாம் இங்கேயே செய்துதரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு அண்டைத் தொகுதியான ஊத்தங்கரை தொகுதியில் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனை இருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதை அரசினர் மருத்துவமனையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு அதை அப்படி எடுத்துக்கொள்ளவில்லை என்றால் மூடிவிடுவது என்று பஞ்சாயத்து யூனியனிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலே போதிய நிதிவசதி இல்லை. நான் அந்த மருத்துவமனையில் வேலை செய்து இருக்கின்றேன். எனக்குத் தெரியும். பேன்டேஜ் கிளாத் கூட கிடைப்பதில்லை. எனவே ஊத்தங்கரை பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனையை உடனடியாக அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொகுதி உறுப்பினர் திரு. கே. ஆர். கிருஷ்ணன் தலைமை மருத்துவமனையில் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் நான் இதைக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் கொங்கலேம்பு என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு கிராம மருத்துவமனை போட்டுத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, அரூர் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரையில் அதை விரிவாக்கிச் செயல்படவும், நல்ல படுக்கை வசதிகளும், கட்டிடங்களும் கட்டித்தர வேண்டுமென்றும், டாக்டர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு எனக்கு அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971-72-ம் ஆண்டு மருத்துவ மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதைத் தமிழக அரசு குறைத்துவிட்டது என்ற தொனியிலே சொன்னார்கள். இதற்கு விளக்கம் அளிக்கும் முறையிலே நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றார்கள். இந்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரைப்படி ஒரு மாணவருக்கு 10 படுக்கைகள் தேவைப்படுகின்றன.

அந்த முறையிலே நம்முடைய தமிழகத்திலே போதாக்குறையிருப்பதால் மாணவர்களைக் குறைக்கின்றோம் என்று சொன்னார்கள். ஆக வேறு வழியில்லாமல் தமிழக அரசு குறைத்திருக்கிறது. ஆனால் என்னுடைய சொந்தக் கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மருத்துவத்துறையிலே ஒரு மாணவருக்கு 10 படுக்கைகள் என்று இந்திய அரசாங்கம் சொன்னாலும், இண்டியன் மெடிகல் கவுன்சில் ஒரு மாணவருக்கு 5 படுக்கைகள் போதும் என்று சொல்லியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்பொழுது நிறைய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

மருத்துவக் கல்லூரிகளிலே சேர வரும் மாணவர்களில் பாதிப் பேர் ஏழைகளாக இருக்கின்றார்கள், பாதிப்பேர் 10,000, 20,000 நன்கொடையாகத் தருகிற அளவிற்கு வேறு மாநிலங்களிலேயுள்ள கல்லூரிகளில் விண்ணப்பம் செய்கிறார்கள். அப்படிப் பட்டவர்களெல்லாம் வேலையை எதிர்பார்த்து, அரசாங்க வேலையை எதிர்பார்த்து இந்த மனுவைப் போடுவதில்லை. நாம் முன்னாலேயே குறிப்பிட்டிருக்கிறோம், படிக்கின்றவர்கள் அத்தனைபேர்களுக்கும் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் இல்லை என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, நிறைய மருத்துவப் பட்டதாரிகளை உற்பத்தி செய்தால் கிராமத்திலேயுள்ள பலவிடங்களுக்குப் போட்டியின் காரணமாக அங்கே போய் தங்கி, மருத்துவ வசதி கிடைக்க வாய்ப்பிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப்படி 10 மெடிகல் கல்லூரிகளை இந்தியாவிலே ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரை தந்திருக்கிறது. ஆனால் இதுவரையில் 5 மருத்துவக் கல்லூரிகள்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்திலே இன்னுமொரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அந்தத் திட்டத்திலே இருக்கிறது. அதை சேலத்திலே அமைக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பரிந்துரைப்படி ஒரு டாக்டர் 5,000 மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மேலைநாடுகளில் 600 பேர்களுக்கு ஒரு டாக்டர் தேவைப்படுகிறது என்று மேலைநாட்டு நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது தமிழகத்திலே, குறிப்பாக இந்தியாவிலே பலவிடங்களிலே மருத்துவர்கள் இல்லாத நிலையிருக்கிறது. அந்த நிலையைப் போக்க நிறைய மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கெல்லாம் வேலைக்கு கியாரண்டி நாம் தருவதில்லை. அவர்கள் கிராமங்களிலே போய்ப் பணியாற்ற வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குக் கிராமங்களிலே பலவிடங்களில் மருத்துவ வசதி கிடையாது. எங்கேயாவது சிலவிடங்களிலே 10 மைல், 20 மைல் சென்று அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குச் செல்ல வேண்டும். அரசாங்கம் என்னவோ மருந்து அனுப்பினாலும் பலவிடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் மருந்துகளைத் தருவதில்லை. என்னுடைய தொகுதியிலே சில ஆஸ்பத்திரிகளில் அரசாங்கம் தருகின்ற



மருந்துகளை மக்களுக்குத் தருவதில்லை. ஒரு பாட்டிலிலே உள்ள மருந்தை, ஏதோ சர்வரோக நிவாரணி என்பதுபோலக் கலந்து தலைவலி என்றாலும் அந்த மருந்துதான், இடுப்பு வலி என்றாலும் அந்த மருந்துதான் என்று அதையே திருப்பித் திருப்பித் தருகிறார்கள். ஆனால் அவர்களது வீட்டிலே சென்று வைத்தியம் செய்துகொண்டால் தனியான முறையிலே கவனிக்கிறார்கள். இந்த நேரத்திலே இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே தயவு செய்து ஆனரரி போஸ்ட்டுகளை எடுத்து விடுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே படித்து விட்டு முழு நேரமும் வேலை செய்வதற்கு பலர் தயாராக இருக்கும்பொழுது இந்த ஆனரரி போஸ்டுகள் தேவையில்லை. அவர்களுக்கிருக்கும் தகுதியும், திறமையும் முழு நேரம் சம்பளம் வாங்கும் பலருக்கு இருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம்.

மேலும் இன்றைக்கு சென்னை நகரத்தைப் பொறுத்தவரையிலும் பல ஆஸ்பத்திரிகளிலே நல்ல நிர்வாகம் நடைபெறுகிறது என்று மாண்புமிகு முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். அது உள்ளபடியே வரவேற்கத் தக்க ஒன்றுதான். சென்னை நகரத்திலேயுள்ள தலைமை மருத்துவ நிலையத்தில் மிக நல்லமுறையில் திறமையாக நிர்வாகம் நடைபெற்று வருகிறது. ஆனால் அதே நேரத்தில், அதிக நோயாளிகளை நாம் அங்கே சேர்க்க முடியாத ஒரு நிலை ஏற்படுவதால் பல புதிய ஆஸ்பத்திரிகளைக் கட்டவேண்டும் அல்லது அதே ஆஸ்பத்திரியில் மேலும் பல கட்டடங்களைக் கட்டித்தீர வேண்டிய நிலை இருப்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இன்றைக்கு நடக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களின் நல்வாழ்விலே மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது. அதுவும் நமது நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள். எந்த அதிகாரி தவறு செய்தாலும் உடனடியாக என்னிடத்திலே சொல்லுங்கள், விசாரிக்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் நாங்கள் பல நேரங்களில் அவர்களிடத்தில் சொல்லாமல் அதிகாரிகளிடத்திலே சில காரியங்களைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஒரு வருந்தத் தக்க செய்தியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான காங்கேயத்தில் ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு தொழிலாளி அடிபட்டு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் பகல் இரண்டு மணியளவில் சேர்க்கப்பட்டார். ஆனால் மாலை 6 மணி வரையிலும் அவர் கவனிக்கப்படவில்லை. என்னிடத்திலே அதைப்பற்றிச் சொன்னார்கள். நான் அந்தத் தலைமை வைத்தியரைப் பார்த்து ஏன் கவனிக்கவில்லை, உடனடியாகக் கவனியுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் சொல்லுகிறார்கள்—எப்படியாவது இந்த அரசாங்கத்திற்கு ஒரு

கெட்ட பெயரை வாங்கித் தர வேண்டுமென்ற முறையிலே சிலர் நடந்து கொள்கிறார்கள், அதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்பதற்காக இந்தக் குறையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—ஏற்கனவே இருக்கின்ற டாக்டர்கள் போதவில்லை, உங்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசிடத்திலே சொல்லி அதிக டாக்டர்களைப் போடச் சொல்லுங்கள், எங்களால் கவனிக்க முடியாது என்று சொல்கிறார்கள். அந்த நோயாளி காலை 5 மணிக்கு இறந்துவிட்டார் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அத்தகைய நேரங்களில் மருத்துவ அதிகாரிகளின் கவனக்குறைவால் நடக்கின்ற இதுபோன்ற காரியங்களில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற இந்தக் குறை அரசாங்கம் வருந்தத்தக்க ஒரு குறையாகும். எனவே அந்தக் குறையைப்பற்றிச் சரியான புகார் தராமலிருந்தால் அந்தப் புகாரை எழுத்துமூலம் என்னுடைய துறைக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இதை நான் எழுத்துமூலம் அந்தத் துறையின் அதிகாரிக்கு ஏற்கனவே அனுப்பியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரேயொரு செய்தியைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சரவர்களுடைய உடல்நிலை கெட்டுவிட்டது என்று சொன்னதைக்கேட்டு தலைமை ஆஸ்பத்திரியிலே எல்லா வேலைகளும் தடையாகி விட்டது என்று சொன்னார்கள். அன்றைக்கு நானும் அந்த ஆஸ்பத்திரியிலே தான் ஒரு நண்பரைப் பார்க்கப் போயிருந்தேன். அன்றைக்கு எந்த வேலையும் தடைப்பட்டதாகத் தெரியவில்லை. டாக்டர்களெல்லாம் கொஞ்சம் உஷாராக இருந்தார்களே தவிர எந்த நோயாளியும் அங்கே கவனிக்கப்படாமல் இருக்கவில்லை. காரணம், காலையில் பட்ஜெட்டைச் சமர்ப்பித்தார்கள். அந்தப் பட்ஜெட்டைக் கேள்விப்பட்டு யாராவது பாதிக்கப்பட்டவர்கள் முதலமைச்சரவர்களைத் தாக்கியிருப்பார்களோ என்ற பயத்திலே அத்தனை பேரும் அவ்வளவு கவலையோடு இருந்தார்கள். காரணம், டெலிபோன் செய்தி என்னவென்றால் முதலமைச்சரவர்கள் சீரியசாக அடிபட்டு விட்டார்கள். உயிருக்கு ஆபத்தாகயிருக்கிறது என்று செய்தி வந்ததால் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதுவும் டீன் அவர்கள் முதலமைச்சரவர்களுக்குப் போன் செய்து, அப்படிப்பட்ட நிலை இல்லை என்றவுடன் அதை மாற்றிக்கொண்டார்கள் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடிககிறேன்.





* திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு சட்டமன்ற உதவித் தலைவரவர்களே, இந்த மருத்துவத் துறை மானியக் கோரிக்கையைப்பற்றிப் பேசும்பொழுது இந்தத் துறைக்குச் சென்ற ஆண்டைவிட கூடுதலாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். இருந்தபோதிலும், நம்முடைய தேவைக்கும் இன்றைக்கிருக்கும் வசதிகளுக்கும் கொஞ்சங்கூட ஒட்டோ, உறவோ இல்லாமல் இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவ வசதிகள் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தின் பெருவாரியான மக்களுக்கு எட்டாக் கனியாக இருக்கிறது என்பதை அமைச்சரவர்களும் ஒப்புக் கொள்ளுவார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால் ஆஸ்பத்திரிகள் போதுமானதாக இல்லை. ஆஸ்பத்திரிகளில் உள்ள படுக்கைகள் போதுமான அளவில் இல்லை. மருந்துகள் போதுமான அளவு இல்லை. போதுமான மற்ற வசதிகளும் இல்லை. இதன் காரணமாக மக்கள் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக, ஏழை எளிய மக்கள், கிராமப்புறத்து மக்கள் மருத்துவ வசதி கிடைக்காது அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் போக்க மருத்துவ வசதிகளை அதிகமாகப் பெருக்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

ஐயாயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமத் தொகுதிக்கு ஒரு மருத்துவமனை இல்லாவிட்டாலும் ஆரம்பச் சுகாதார நிலையமாவது அமைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். தற்போது ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையந்தான் வைத்திருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவது ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது. 1969-70-ல் 28 கட்டடங்கள் கட்டப்பட்டன. 1970-71ல் 18 கட்டடங்கள் கட்டப்பட்டன. 1971-72-ல் ஒரே ஒரு கட்டடந்தான் இதுவரை கட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலை இல்லாமல் இது ஏறுமுகமாகப் போகவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ வசதிகளைப்பற்றிச் சொல்லும்போது மருத்துவக் கல்லூரி இடங்களைப் பற்றிச் சொல்லியாகவேண்டும். மருத்துவர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்ளும் நிலையில் 110 இடங்களைக் குறைத்திருப்பது எவ்வகையிலும் நியாயமல்ல. அதிகாரிகள் என்ன சொன்னாலும் அமைச்சர் அவர்கள் மறு ஆய்வு செய்து எண்ணிக்கையைக் கூட்டாவிட்டாலும் ஏற்கனவே இருந்த நிலைமைக்கு ரெஸ்டோர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவர்கள் சிலர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகும் நிலை ஏற்பட்டது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி 24 மாணவர்கள் மீண்டும் இடம் பெற்றார்கள். ஆறுபேர் மீண்டும் இடம் இழந்து 18 பேர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அந்த 18 பேர் மார்ச் மாதத்தில் தேர்வு எழுத முடியவில்லை. செப்டம்பரிலாவது அவர்கள் தேர்வு எழுத வழி செய்து அவர்களுக்கு ஓராண்டு காலம் வீணாகிவிடாது பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி மறு பரிசிலனை யாக இரண்டாம் முறை நேர்முகத் தேர்வில் எடுக்கப்படாதவர் களைப்பற்றி . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் அதைப் பற்றிச் சொல்ல வில்லை; தேர்ந்தெடுக்கப்பட்ட 18 பேரைப் பற்றித்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இடம் பெற்ற 18 பேரைப் பற்றியவரை பல்கலைக் கழகத்தின் முறைப்படி நடக்கும். ஆறு பேரைப் பொறுத்தவரை மறு பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இடம் பெற்ற அதிர்ஷ்டசாலிகளைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, வைத்திய வசதிகளைப் பெருக்குவதோடு வைத்திய வசதி எல்லோருக்கும் மலிவாகக் கிடைக்கச் செய்யவேண்டும். நம் நாட்டில் இருப்பவர்கள் பணக்காரர்கள் அல்ல; பெரும்பாலும் ஏழை எளிய மக்கள்தான். அவர்களுக்கு மலிவாக வைத்திய வசதி கிடைக்கவேண்டும். டாக்டருக்கு ஃபீஸ், இஞ்செக்ஷனுக்கு ஃபீஸ் என்றால் ஏழை மக்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே நாட்டு வைத்தியத்திற்கு அதிக ஊக்கம் தரும் பிரச்சினை வருகிறது. நம்முடைய திட்டப் புத்தகத்தைப் பார்க்கும் போது நான்காவது திட்டத்திலே இதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே, இதுகாறும் செலவழிக்கப் பட்டது மூரணடு லட்சம் ரூபாய்தான். 1969-70-ல் ஒன்றுமில்லை. 1970-71-லே 1.59 லட்சம் ரூபாய். 1971-72-லே நாற்பதாயிரம் ரூபாய். அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதுபற்றி அரசு அக்கறை கொண்டு செயல்படும் என்று சொன்னார்கள். ஆனால் மதிப்பீட்டையும், செலவழிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கும்போது அந்த நல்லெண்ணம் பிரதிபலிக்கவில்லை. ஆங்கில மருத்துவர்கள் இதற்குத் தடைக் கற்கலாக இருந்தாலும், அந்தத் தடைகளை நீக்கி அமைச்சர் அவர்கள் நாட்டு மருத்துவத் துறைக்கு ஊக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஒவ்வொரு முனிசிபாலிடியிலும் ஒரு நாட்டு மருத்துவ மனையை ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியில் சர்க்கார்சம்பா குளத்தில் ஒரு மெடர்னிடி சென்டர் ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதனை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிங்காநல்லூரில் கஸ்தூரிபா காந்தி பெயரில் ஒரு பிரசவ விடுதி இருந்து வந்தது. அதற்கு மூடுவிழா நடந்து கொண்டிருந்தது. அதைத் திரும்பவும் நடத்த ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு அரசு ஒத்தாசை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நோய்வந்த பிறகு மருத்துவம் செய்வதைவிட நோய் வராமலே தடுத்துக் கொள்வது சிறந்தது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அந்த வகையில் நல்ல குடிநீர் வசதியை எல்லாக் கிராமங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்க நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் என்னுடைய தொகுதிக்கும், கோவை, பல்லடம் வட்டங்களுக்கும் பயன்தரும் நெல்துறை திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

* திரு. எஸ். முருகையன் : சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் தாக்கல் செய்திருக்கக்கூடிய மானியக் கோரிக் கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு 21 கோடி ரூபாயும், பொதுச் சுகாதாரத் துறைக்கு 13 கோடி ரூபாயும், பொதுச் சுகாதார மூலதனச் செலவுக்கு ஒரு சிறு தொகையும் ஆக 35 கோடி ரூபாயும் அமைச்சர் அவர்கள் மானியமாகக் கேட்டிருக்கிறார்கள். நோய்த் தீர்ப்புக்கு எவ்வளவு செலவழிக்கிறோமோ அதைவிட நோய்த் தடுப்பிற்குச் செல வழிக்கும் தொகை குறைவாக இருக்கிறது. நோயைத் தடுப்ப தற்குச் செலவிடப்படுகின்ற தொகை நோயைத் தீர்ப்பதற்குச் செலவாகின்ற தொகையைவிடக் குறைவாக இருந்தால் அது மக்கள் நல்ல முறையில் வாழ்கிறார்கள் என்பதற்குச் சிறந்த உதாரணமாக இருக்க முடியாது. அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு நோயைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சுகாதாரத் துறையில் செலுத்தப்படும் அக்கறை பலவகையாகப் பிரித்து செலவழிக்கப் படுகிறது. ஆங்காங்குள்ள உள்ளாட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் என்ற வகையிலே பரவலாகச் செலவழிக்கப்படுகிறது. மருந்துச் செலவு மட்டுந்தான் இதிலே கணக்கிடப்பட்டு காட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கணக்கை வைத்து முழுவதும் கணிக்க முடியாது. பரவலாகச் செலவழிக்கப்படுவதை எல்லாம் எடுத்து இதிலே காட்ட முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். முருகையன்:** மருத்துவத் துறைக்கும் ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகர மன்றங்களில் நிறையச் செலவழிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக, மருத்துவத் துறைக்குச் செலவழிப்பதைவிட பொதுச் சுகாதாரத் துறைக்கு அதிகமாகச் செலவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்றிய மருத்துவமனைகளில் ஐயாயிரம் ரூபாய்க்குத்தான் மருந்து வாங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. அந்த வகையிலே விதி அமைந்திருக்கிறது. பெரிய, பெரிய நகரங்களில்கூட இந்த மருத்துவ மனைகள் நடந்து வருகின்றன. ஆகவே, 10,000 ரூபாய் அளவுக்குச் செலவழிக்கலாம் என்று உத்தரவிட்டால் நல்லது.

பல கிராமப் பகுதிகளில் நரம்புச் சிலந்தி நோய் இருக்கிறது. குறிப்பாக, போளூர் வட்டத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அந்த வியாதியால் மக்கள் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கவனிக்க தனியான அலுவலர்கள் இருந்தாலும் அந்த நோய் சரியான முறையில் தீர்க்கப்படவில்லை. அந்தப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்தால் அந்த நோய் ஒழியக்கூடிய சூழ்நிலை ஏற்படும். போளூர் வட்டம் பூராவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் பிரசவ நிலையங்கள் கட்டியிருக்கிறார்கள். மிகவும் கஷ்டமான பிரசவங்களை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் போதுமான வாகன வசதி கிடையாது. அதையும் மீறி அங்கு எடுத்துச் சென்றாலும் சில வேளைகளில் சிலருக்கு ரத்தம் செலுத்தும் நிலை ஏற்படுகிறது. மாவட்டத் தலைமை மருத்துவ நிலையத்தில்தான் ரத்த சேமிப்பு நிலையம் இருப்பதால் இங்கு ரத்தம் கொடுக்க முடிவதில்லை. கூடுமான வரையில் அந்தந்த வட்ட தலைநகர்ப் பகுதிகளில் ரத்த சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களிலே மருத்துவமனைகள் நடத்துகிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களிலே நிதி வசதி சரியாக இல்லை. இந்த நிதி வசதி இல்லாததால் அவர்கள் நடத்தக் கூடிய மருந்தகங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடும்ப நலத் திட்டத்தில் இப்போது இருப்பதை விட, தீவிர கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டின் தேசியப்பிரச்னையாக இருக்கிறது. நாம் தொடர்ந்து எவ்வளவு செலவழித்தாலும் கூட போதிய பலன் இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக 3 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது பரவலாக குறைவாகத்தான் இருக்கிறது.

ஏராளமான சிப்பந்திகள் பிரச்சாரத்திற்காக போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் அதிகமாக அக்கறை எடுத்துக் கொண்டு பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆரம்ப சுகாதார நிலையங்களிலே குடும்பநல திட்டத்திற்காக ஒரு மருத்துவ அதிகாரியும் மற்ற நோயகளைக் கவனிக்கத் தனியாக ஒரு மருத்துவ அதிகாரியும் இருக்கிறார்கள். கூடுமான வரையில் இந்தக் குடும்ப நல திட்டத்திற்கான மருத்துவ மனைகளில் பெண் மருத்துவர்களை நியமிப்பது நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், அந்த மருத்துவ மனைகளில் ஆண்கள் மருத்துவர்களாக இருந்தால் கிராமத்து பெண்கள் அங்கே போவதற்கு கஷ்டப்படுகிறார்கள்.

ஆகவே, குடும்ப நல பிரச்சாரத்திற்கு ஒவ்வொரு மருத்துவ மனையிலும் பெண்களையே மருத்துவர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் போளூருக்கு அருகே எலத்தூர் என்ற இடத்தில் ஒரு தொழு நோய் மருத்துவ மனை இருக்கிறது. அதற்கு ஏறக்குறைய ரூ. 2 லட்சம் செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்தில் தொழு நோய் மருத்துவ மனை நடைபெற்று வந்தது. 1965-ல் புயல் அடித்த காரணத்தால், அந்த மருத்துவ மனையை தற்காலிகமாகப் போளூருக்கு மாற்றினார்கள். அதை மாற்றி கிட்டத்தட்ட 6-7 வருடம் ஆகியிருக்கிறது. அந்தக் கட்டடம் இப்போது வீணாக இருக்கிறது. அதே நேரத்தில் போளூரில் பிரசவ விடுதி இருந்த இடத்தில் தான் இந்த மருத்துவ மனையைக் கொண்டு போய் வைத்தார்கள். இப்போது அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் பிரசவத்திற்கு இது இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, இந்த தொழு நோய் மருத்துவ மனையை எலத்தூரில் அதற்கென கட்டப்பட்ட கட்டடத்திற்கு மறுபடியும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கு கட்டடம் கட்டித்தரப்படுகிறது. ஆனால், அதிலே பணிபுரியும் எல்லாச் சிப்பந்திகளுக்கும் கட்டடம் கட்டித்தரப்படுவதில்லை. மருத்துவ அதிகாரி, இன்னும் சில பேருக்குத்தான் கட்டித்தருகிறார்கள். ஆகவே, வீடுகள் இல்லாமல் கஷ்டப்படும் சிப்பந்திகளுக்கும் வீடுகள் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ஹெல்த் எஜுகேடர்கள் ஏறக்குறைய ரூ. 450 வரை சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். வேலை என்ன என்று கேட்டால், சுகாதார ஆய்வாளர்களை கண்காணிப்பது என்று சொல்கிறார்கள். அப்படிச் சுகாதார ஆய்வாளர்களைக் கண்காணிக்க வேண்டிய அவசியம் என்ன? தமிழ்நாடு பூராவும் 300 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அவர்கள் வேலை செய்யாமல் சம்பளம் வாங்குவதால், அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையில் கொஞ்சம் செலவை மட்டுப்படுத்தினால், இன்னும் கொஞ்சம் குடும்ப நல திட்ட வேலையை நன்கு செய்ய வசதியாக இருக்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். நகர மன்ற பகுதிகளில் உணவுக் கலப்படத்தை அங்கிருக்கும் சுகாதார ஆய்வாளர்கள் கண்டுபிடிக்கிறார்கள். குறிப்பிட்ட மாதம் 5 அல்லது

6 கேஸ்கள் அளவுக்குத்தான் எடுக்க வேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. இதைத் தளர்த்தி எந்த அளவுக்கும் எத்தனைமுறை வேண்டுமானாலும் எடுத்து அனுப்பலாம் என்று விதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எலத்தூர் தொழுநோய் மருத்துவ மனையை பொளூரிலிருந்து மீண்டும் எலத்தூருக்கு மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேத்துப்பட்டு மருத்துவமனை சென்ற ஆண்டுதான் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கே போதிய படுக்கை வசதிகள் இல்லை. இன்னும் 15 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து, மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகிய மானியங்களின் மீது சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துறை எவ்வளவு சிறந்த துறை என்று சொல்லத் தேவையில்லை. ஆளும் கட்சி அங்கத்தினர்களும் இந்தத் துறையில் இருக்கும் குறைபாடுகளை சுட்டிச்சுட்டிக் காட்டுகிறார்கள். இது மிகுந்த பொருத்தமான நிலை என்பதை நான் காணும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

முன் காலங்களில் கூறுவார்கள், நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று. எந்தத் தரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும், மனிதன் நோய் அற்று வாழ்வதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும், நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கும் இருக்கிறது, பொது ஸ்தாபனங்களுக்கும் இருக்கிறது. குறிப்பாக, நாம் சமதர்ம சமுதாயக் கொள்கையை கைக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, அரசாங்கம் இந்தத் துறையில் அதிக கவனம் செலுத்தவேண்டிய கடமை இருக்கிறது என்பதை நான் கூறாமலே இந்த அரசு ஏற்றுக் கொள்ளும்.

திரு. ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட ஒரு குழு சிறந்த சிபாரிசுகளை இந்தத் துறைக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறது. அத்தனை சிபாரிசுகளையும், உடனடியாக நிறைவேற்ற முடியாவிட்டாலும் கூட, அவற்றை படிப்படியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நிறைவேற்றப்பட்டால்தான் மக்களுக்கு தேவைப்படும் மருத்துவ வசதிகள் நிறைவேற்றப்படும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்று இருக்கும் நிலையில் பட்டிணங்களில் ஓரளவு மருந்து வசதி இருந்தாலும், கிராமங்களில் மருத்துவ வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. இதை மறுக்க இயலாது என்று கருதுகிறேன். நம் மாநிலத்தில் இருக்கும் ஏறத்தாழ 80 சதவிகித



கிராமங்களில் சரியானபடி மருத்துவ வசதி இல்லை. இன்று இருக்கும் வசதி, ஆரம்ப சுகாதார நிலையம் தான். இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ மனையாக மாற்றப்பட்டால் தான் மக்கள் நன்கு வசதி பெறுவார்கள். இன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பட்டதாரிகள் மருத்துவ அதிகாரிகளாக இருந்தாலும் கூட, தேவைக்கு போதிய மருந்து இல்லை என்று கூறும்போது நிச்சயமாக அந்த மருத்துவ மனை மக்களுக்கு நன்றாக உதவி செய்யாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். அதோடு, குறைந்த பட்ச மருந்துகள் தான் சப்ளை செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். பெட்கள் இல்லை. ஆகவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை ஹாஸ்பிடலாக மாற்றினால்தான் நல்லது. திரு. ஏ. எல். முதலியார் குழு கூட 3,000 ஜனத்தொகை உள்ள இடங்களில் ஹாஸ்பிடல் நிறுவ வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அந்தச் சிபாரிசின் அடிப்படையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவ மனைகளுக்கு தேவையான மருந்துகளும், தேவையான பெட்களும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இருக்கும் குறைபாடுகள் என்னவென்றால், மருத்துவர்கள் கிராமங்களுக்கு செல்ல மறுக்கிறார்கள் என்ற நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், நகரங்களில் படித்து பட்டம் பெற்ற பிறகு கிராமங்களுக்கு செல்லும்போது அங்கே அவர்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகிற பொருள்கள் கிடைப்பதில்லை. அப்படி நிச்சயமாக கிடைக்க வழி செய்தால் அவர்கள் அங்கே செல்வார்கள். ஆகவே. கிராமங்களுக்கு செல்லும் மருத்துவர்களுக்கு அரசாங்கம் அவர்களுக்கு தேவையானவைகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இருக்கும் இன்னொரு நிலை, தனியார் ஹாஸ்பிடல், அரசாங்க ஹாஸ்பிடல் என்று இரண்டு நிலை இருக்கிறது. தனியார் ஹாஸ்பிடலுக்கு அதிகமான மோகம் காணப்படுகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், தனியார் ஹாஸ்பிடலுக்கு சென்றால் சிறந்த மருந்துகள் கொடுக்கிறார்கள். அங்கு ஒவ்வொரு துறையிலும் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இருக்கிறார்கள். சிறந்த மருந்து வழங்கப்படுகிறது என்ற நிலை இருக்கிறது. உண்மையிலே நாம் பார்ப்போமானால், அரசாங்க ஹாஸ்பிடலில் சிறந்த நல்ல தரமான மருந்துகள் கிடைப்பதில்லை. தரமான மருந்துகளை அரசாங்கம் சாதாரணமாக வரவழைப்பது இல்லை. காரணம், டெண்டர் கோரி தான் மருந்துகள் வாங்கப்படுகின்றன. நல்ல தரமான மருந்துகளை தயாரிக்கும் கம்பெனிகள் குறைவான விலைக்கு டெண்டர் தர முன்வருவதில்லை. இந்த நிலை இருப்பதால் நல்ல மருந்து அரசாங்க மருத்துவ மனைகளில் கிடைப்பதில்லை. (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): ஒரே ஒரு நிமிடம் தான்.

[1971 ஜூலை 3

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் அரசாங்க மருந்துவ மனைகளில் தரமான மருந்துகள் தரப்படுவதில்லை என்று சொன்னார்கள். அதற்கு ஒரு நியாயம் இருக்கிறது. அரசாங்க மருத்துவ மனைக்கு இவ்வளவு தொகை தான் மருந்துகளுக்கு என்று ஒதுக்கி விடுகிறோம். அதற்குள்ளாகத் தான் மருந்துகள் வாங்க வேண்டும். பல நோயாளிகளுக்கு மருந்து அளிக்கவேண்டிய காரணத்தால் குறிப்பிடத்தக்க மருந்துகள்தான் வரவழைக்கப்படுகின்றன. தனியார் மருத்துவ மனைகளில் எவ்வளவு அதிகமான விலையில் மருந்துகள் இருந்தாலும் வாங்கித் தருகிறார்கள். அதற்கான பணத்தை மக்களிடமிருந்து பெற்று விடுகிறார்கள். தனியார் மருத்துவ மனையையும் அரசாங்க மருத்துவ மனையையும் ஒப்பிட்டுப் பேசுவது சரியாகாது. அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக மக்களுக்கு மருந்துகள் அளிக்கிறோம். இதை அங்கத்தினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, நமது நிதி நிலைதான் காரணம் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், இருக்கும் நிதி நிலையில் நல்ல தரமான மருந்துகளை வாங்கித் தருவதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியத்திற்கு ஏழு கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படிக் கூடுதலாக ஒதுக்கியிருந்தும் கூட, 110 இடங்களை மருத்துவக் கல்லூரிகளில் குறைத்திருக்கிறார்கள். அப்படிக் குறைக்கப் பட்டிருப்பதால் ஏழை மக்கள் தான் பாதிக்கப் படுகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிய வேண்டும். வசதி உள்ளவர்கள், பத்தாயிரம், இருபதாயிரம் என்று கொடுத்து வேறு மாநிலங்களுக்குச் சென்று இடம் பிடித்துக் கொள்வார்கள். ஆனால் நம் கல்லூரிகளில் இடங்களைக் குறைப்பதால், அவதிப்படுகிறவர்கள் நம்முடைய ஏழை மக்கள்தான் என்பதை அமைச்சருக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அதோடு கூட பி. பார்மஸி கோர்ஸில் கூட இடம் குறைக்கப் பட்டிருக்கிறது. அதே போல் எம்.எஸ்ஸி. பயாலஜி ஆஃப் மெடிஸின் என்ற பிரிவை நிறுத்தி வைத்திருப்பதாகவும் அறிகிறேன். எம். ஏ. டிக்ரி கிரிமினாலஜியில் தேறிய மாணவர்களுக்கு, 5, 6 ஆண்டுகளாக இன்னும் எந்த உத்தியோகமும் கொடுக்கப்படவில்லை என்றும் அறிகிறேன்.

கடைசியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தில், நாகர் கோவில் நகரசபை ரூ. 75 லட்சம் கடன் உதவி வேண்டும் என்று கேட்டு தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதனையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நாகர் கோவில் டி. பி. ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மேலும் படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும்.

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)



1971 ஜூலை 3]

**திரு. எம். தேவராசன்:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்களால் அவைமுன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மேல் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றையும் சொல்ல முன்வருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள்; உணவிலே கலப்படம் செய்வது இந்த நாட்டிலே சட்டங்கள் இருந்தாலும் பெரும் அளவில் நடைபெறுகின்றன. நான் குறிப்பிட விரும்புவது, இருக்கும் சட்டம் அவ்வளவு கடுமையாக இல்லை என்பதுதான். இன்றைக்குப் பல வழிகளில், கோர்ட்டிலே கேஸ்கள் வந்தாலும், தப்பிப் போகிறார்கள். எனவே இவற்றை ஒரு ஸெஷன்ஸ் கேஸாக மாற்றி, குறைந்த பட்சம் ஏழு ஆண்டுகளாவது தண்டனை தரவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் அந்தச் சட்டத்தின் கீழ் பிடிபடுபவர்கள் தப்பிக்க முடியாமல் செய்ய முடியும்.

அடுத்தபடியாக, குடும்பக் கட்டுப்பாடு திட்டம். அது இன்றைக்கு இன்றியமையாததாக இருக்கிறது. அந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறினால் தான், நாம் செய்யும் முயற்சிகள், எடுக்கும் நடவடிக்கைகள் நல்ல பயன் உள்ளவைகளாக இருக்கும். இங்கே சில திட்டங்கள் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கருச்சிதைவைக் குற்றமாகக் கருதுகிறோம். அந்தச் சட்டத்தைத் திருத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கருச்சிதைவு சட்டப்படி செல்லுபடியாகக் கூடியது என்று செய்ய வேண்டும். இதற்கு அமைச்சர் ஆவன செய்ய வேண்டும். அடுத்து, மணமாகும் வயதை ஆண்களுக்கு 25 என்றும், பெண்களுக்கு 20 வயது என்றும் உயர்த்தவேண்டும். குடும்ப நலக்கட்டுப்பாடு திட்டங்களை பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு நல்ல முறையில் எடுத்துக் கூறி அறிவு புகட்ட ஏற்பாடுகள் செய்தால், குடும்பநலத் திட்டம் வெற்றி கரமாக நடக்க முடியும். என்னுடைய கருத்தைப் பொறுத்த வரையில், நாம் பல திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறோம். உதாரணமாக பாலடாவில் 1.20 லட்சம் ரூபாய் செலவில் 10 படுக்கைகள் கொண்ட அரசாங்க மனை கட்ட ஏற்பாடு இருக்கிறது. அதற்காக நன்றி செலுத்துகிறேன். அதே போன்று குந்தாவில் முக்கியமாக மருத்துவத் தேவையிருக்கிறது. உதகைக்கும் குந்தாவிற்கும் 20 மைல் இருக்கிறது. அங்கே எந்த விதமான சௌகரியமும் கிடையாது. ஆகவே, அங்கே ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துத் தந்தால், மக்கள் மிகவும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். உதகமண்டலம் மலைப்பகுதியாக இருப்பதால், அங்கே மொபைல் டிஸ்பென்ஸரி வைத்து, வாரம் ஒரு முறை அந்தப் பகுதி களுக்குப் போய்வர ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். உதகை மருத்துவ மனையிலும் படுக்கைகள் குறைவாகவே இருக்கின்றன. அதையும் அதிகப்படுத்த வேண்டும். பொதுவாகவே நல்ல பல திட்டங்களைச்

செயலாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஆதரித்து முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருப்பதால், ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷத்திற்குள்ளாக முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, திரு. நரசிம்மன் :

* திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்துள்ள கோரிக்கைகளை வரவேற்று என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். தொற்று நோய்கள் கட்டுப் படுத்தப் பட்டிருக்கின்றன என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டிலிருந்து இன்றுவரையில், தொத்து நோய்கள் நல்ல முறையில் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்று புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. அதிலும், ப்ளேக், மலேரியா போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றன என்றாலும், கொசுக்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகள் ஒழிக்கப்படவில்லை. சட்டமன்ற விடுதியில் உள்ளவர்கள் இதை நன்றாக அறிவார்கள். நானும் ஒரு மாதகாலமாக உரிய அதிகாரிகளிடம் பெரிய பெரிய கொசுக்கள் இருக்கின்றன, அவற்றின் தொல்லை அதிகமாக இருக்கிறது என்று சொல்லிப் பார்த்து விட்டேன். மருந்தைத் தெளியுங்கள் என்று கேட்டேன். பலமுறை சொன்னேன். ஆனாலும், இன்று வரையில், யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு இப்பொழுது இளம்பிள்ளை வாதம் அதிகமாக இருக்கிறது. அதற்குத் தடுப்பு ஊசிகள் இருக்கின்றன என்றாலும். அதைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று மக்களிடம் விளம்பரம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் தடுப்பு ஊசிகளை அவர்கள் பயன் படுத்திக் கொள்வார்கள்.

என்னுடைய தொகுதியில் மேற்கு ஆரணி வட்டாரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தச்சூரில் இருக்கிறது. அதில் டாக்டர் இல்லை. டாக்டரைப் போட்டாலும், சில தினங்களில் லீவு போட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். அங்கே நிரந்தரமாக டாக்டர் இருக்கும் முறையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்த வட்டார அமைப்பு, ஆரணி நகரத்தைச் சுற்றி ஆரணி வட்டாரமும், அதைச் சுற்றி மேற்கு ஆரணி வட்டாரமும் உள்ளது. அந்த வட்டார எல்லை பெரியதாக இருக்கிறது. சுகாதார நிலையம் தச்சூரில் மட்டும் இருப்பதால் மக்களுக்கு அதிகப் பயன் அளிக்கவில்லை. அந்த வட்டாரத்தில் இன்னொரு ஆரம்ப சுகாதார நிலையத்தை குன்னத்தூரிலாவது அல்லது கண்ணமங்கலத்திலாவது அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்





நகர அமைப்புத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆரணி நகராட்சியில் மூன்று வளர்ச்சித் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 5, 6 ஆண்டுகளாகியும், ஒரு திட்டம் கூட இன்னமும் நிறைவேறவில்லை. ஏதாகிலும் ஒரு திட்டத்தை. குறிப்பாக. வண்டிப்பாளையம் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும், அதற்கு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்க 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தும், அது குறைந்த இலக்காக இருப்பதால், அதையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டம், ஆரணி தாலுகாவில் கடந்த ஒரு ஆண்டு காலமாக மழையே பெய்யவில்லை. குடிநீருக்கு மக்கள் மிக்க அவதிப்படுகிறார்கள். பெண்கள் குடங்களை எடுத்துக் கொண்டு, வயல்வெளிகளுக்குப் போய் தண்ணீர் இருக்கிறதா என்று பார்க்கும் நிலைதான் இருக்கிறது. அதனால் அவர்களுக்கும் தொல்லை, பயிரிடுவோரும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, கிணறுகளை ஆழப்படுத்த மானியங்களைப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க வேண்டும். ஏற்கனவே பஞ்சாயத்துக்கள், யூனியன்கள் இவர்களிடம் பணம் இல்லாததால், மானியமாகக் கொடுத்து, கிணறுகளை ஆழப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் குன்னத்தூர் கிராமத்தில் குடி நீர்த் திட்டத்திற்காக ஒரு கிணறு எடுத்து 3–4 ஆண்டுகள் ஆகின்றன. அக் குடிநீர்த் திட்டத்தை இன்னும் ஏன் நிறைவேற்றவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. அதைக் கொண்டு வரவேண்டும் என்று அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பாதாள சாக்கடைத் திட்டம். இரண்டாவது நிலை நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையிலாவது கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* திரு. பி. பொன். சொக்கலிங்கம் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பு பெற்றதற்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். நான் முதலில் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை பெற்றவன். ஆகவே மற்றவர்களுக்கு அளிக்கப்படும் நேரத்தைப் போல் எனக்கு அளிக்காமல் அதிக நேரத்தைத் தருமாறு . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. நா. வீராசாமி): அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஐந்து நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. பி. பொன். சொக்கலிங்கம் : இந்த மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில் சென்னை நகரில் உள்ள பெரிய மருத்துவ மனையில் இருக்கிற நிலையைப் போல் தமிழகம் பூராவும் மருத்துவ மனைகள் இருக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில்

கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னை நகரத்தில் உள்ள மருத்துவ மனைக்கு சட்டமன்ற உறுப்பினராக ஆன பின்பு இரண்டு மூறை செல்லுகின்ற வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். மருத்துவ மனை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதைப் பார்த்து விட்டு அதற்காக அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அதைப் போல மற்ற இடங்களிலுள்ள மருத்துவ மனைகளும் நல்ல முறையில் பராமரிக்கப் படுவதற்கு அதனுடைய இயக்குநர் மூலமாக நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்குக் கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்ளுகிறேன்.

குடும்ப நலத் திட்டத்தை இங்கே விரிவாக்க அதற்கான பண ஒதுக்கீடுகள் செய்து இருப்பதை வரவேற்கிறேன். நான் 12 ஆண்டு காலத்திற்கு முன்பு குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்டவன் என்றாலும் எந்த விதமான கை கால் கஷ்டமோ உடல் கோளாறோ இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த முறையை மன்றத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மக்கள் நல் வாழ்வு திட்டம் என்ற திட்டத்தை நம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் போாலே சிதம்பரம் தொகுதியில் கீரப்பாளையம் ஊராட்சி மன்றத்தில் அந்தத் திட்டத்தின் துவக்க விழாவை நடத்தினோம். அந்தத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற மக்கள் நோயற்ற வாழ்வு வாழவேண்டும் என்பதற்காக அந்தத் திட்டத்தை உருவாக்கினோம். அந்தத் திட்டத்திற்கான வழிவகைகளை சுகாதார அதிகாரிகளைக் கலந்தும் மருத்துவத் துறையில் இருக்கிற மற்றவர்கள் ஆலோசனையைக் கேட்டும் சிறந்த டாக்டர்கள் 20-25 மருத்துவர்களை ஆலோசனையைக் கேட்டு அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள மக்களிடத்தில் அன்றாடம் அங்கே உள்ள மருத்துவர்கள் செல்லவும் குறைபாடுகளைத் தீர்க்கவும் அந்த மக்களுக்கு எந்த எந்த நோய்கள் எப்படி எப்படி வருகிறது என்று குறிப்புகள் எடுத்து அதற்குத் தகுந்த மருந்து கள் தரப்படுகிறதா என்பதை அறிந்தும் இல்லையென்றால் அதற்கான நல்ல மருந்துகள் அந்த நோய்களுக்குத் தரப்படவுமான அப்படிப் பட்ட ஒரு திட்டத்தை அங்கே உருவாக்கினோம். அந்தத் திட்டம் நம் முதல்வர் அவர்கள் போாலே உருவாக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்குகிற இடங்களுக்கு இந்த மானியத்தில் ஒதுக்கப்படுகின்ற தொகையிலிருந்து இதை உள்ளடக்கி இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொஞ்சம் கூடுதலான நிதி வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக எங்கள் பகுதியில் சில திட்டங்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.





அடுத்து, சிதம்பரத்தில் நடராஜர் கோவிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இருக்கின்றன என்பதை அமைச்சர் பெருமக்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். நீண்ட நாட்களாக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை சிதம்பரத்திற்கு வேண்டும் என்று சொல்லி வந்து இருக்கிறோம். அதற்கான திட்டத்தையும் பண ஒதுக்கீட்டையும் இப்போது கொடுக்கப் பட்டிருக்கிற மானியக் கோரிக்கையில் இடம் பெறும் என்று நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் 100 படுக்கை கொண்ட மருத்துவ மனை சிதம்பரத்திற்கு என்று இந்தத் திட்டத்தில் இடம் பெறாதது கண்டு நான் என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72-க்கான மருத்துவ மானியக் கோரிக்கையின் மீது சில வார்த்தை களைக் கூற ஆசைப்படுகிறேன்.

இன்று மருத்துவத் துறையில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் தனியாக மருத்துவம் செய்வதை நிறுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும். பிரைவேட் ப்ராக்டிஸ் ஷூட் பி அபாலிஷ்ட். நாம் மருத்துவம் செய்து கொள்வதற்கு மருத்துவ மனைக்குச் சென்றால் வீட்டுக்கு வாருங்கள் என்று அவர்கள் சொல்லுகின்ற நிலைமை இருக்கிறது. ப்ரைவேட் ப்ராக்டிஸ் ஷூட் கோ.

இரண்டாவது, ஒவ்வொரு மருத்துவ மனையிலும், அறுவைச் சிகிச்சைக்கு என்று தியேட்டர்கள் இருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்குப் புதிதாகப் படித்துவிட்டு வருகிற மருத்துவர்கள் வருகிறார்கள். சிசேரியன் ஆப்பரேஷன் கூடத் தெரியாத மருத்துவர்களைக் கூட அப்படிப்பட்ட மருத்துவ மனைகளில் போட்டுவிடுகிறார்கள். ஆகவே எதற்கு எடுத்தாலும் மத்திய மருத்துவ மனைக்கு அதாவது மாவட்ட பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜ பாளையம், விருதுநகர் போன்ற இடங்களில் அறுவைக்கு வருகின்ற கேஸ்களை மதுரைக்கு அனுப்பி விடுகிறார்கள். அதனால் அங்கே எல்லாம் கூட்டம் அதிகமாகி விடுகிறது. வசதி குறைகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அறுவை சிகிச்சை தெரிந்த குறைந்த பட்சம் 2-3 ஆண்டுகளாவது அனுபவம் உள்ள மருத்துவர்களை நியமிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

அதைப் போல மருத்துவ நிலையங்களில் மாறுதல் செய்வதில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நிச்சயமாக மாற்றவேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும். இப்போது இருக்கிற எம்.என். ஒக்கள். ஸ்தலத்தில் இருக்கிற அரசியல்வாதிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டு அங்கேயே நீண்ட காலத்திற்கு இருப்பது என்ற தந்திரோபாயங்களைக் கொண்டு இருக்கிறார்கள். சில இடங்களில் இப்படிப்பட்ட நிலைமையை வைத்துக்கொண்டு மருத்துவர்களைக்

கூட மாறுதல் செய்கிறார்கள் இந்த எம்.என்.ஓ.-க்கள். சிவகங்கை சம்பவத்தைப்பற்றிக் கூட இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கிறது இப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வண்ணம் தடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே மூன்றாண்டுக்கு ஒரு முறை மாற்றுவது என்பது நிச்சயமான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இராஜபாளையம் மருத்துவ மனையைப் பற்றி இந்த மன்றத்தில் பல முறை சொல்லி வந்திருக்கிறேன். அம்மருத்துவ மனைக்கு சுற்றுச் சுவர் எழுப்பவேண்டும். பன்றிகளும் நாய்களும் உள்ளே வந்து விடுகின்ற நிலைமை இருக்கிறது. அந்தக் குறையை நீக்கி விடுவதாக, கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்றால் பன்றி, நாய்கள் மட்டும் அல்ல; இப்போது கழுதைகள்கூட உள்ளே நுழைந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே இதை உடனடியாகக் கவனித்து சுற்றுச் சுவர் எழுப்பவேண்டும்.

சேத்தூரில் ஒரு மருத்துவ மனை பற்றி டி.டி.ஸி. கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம். மருத்துவ மனையை அந்தப் பகுதியில் எற்படுத்த வேண்டும் என்று அந்தப்பகுதியில் உள்ள மக்கள் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே சேத்தூரில் யூனியன் மருத்துவ மனையாக அதை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் கூட தனியார் மருத்துவ மனை கட்டுகின்ற காரியத்தில் முன் வரவேண்டும் என்ற கருத்தில் பேசி இருக்கிறார்கள். ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது.. தனியார் முன் வரவேண்டும் என்றால் தனியார் செல்வாக்கு உள்ள பகுதிகளில் அது தானாக நல்ல விதத்தில் நடந்து விடுகிறது. சிங்கம் புணரியில் ஒரு மருத்துவ மனை வேண்டும் என்றால் அங்கே கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளவர்கள் உள்பட எல்லோரும் பணம் தருகிறார்கள். ஆனால் என் பகுதியில் நன்கொடை என்று கேட்டு வந்தால் வருவது இல்லை. அமைச்சர் மாதவன் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும் என்று சிலர் நன்கொடை தந்து விடுகிறார்கள். ஆனால் என்னைப்போன்றவர்களுக்கு எங்கள் தொகுதியில் நன்கொடை கொடுப்பது கிடையாது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் கவனம் செலுத்தி அரசாங்கம் மருத்துவ மனை ஏற்படுத்திதர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தனியார் துறை கவனித்துக்கொள்ளும் என்ற எண்ணத்தில் இருந்துவிட வேண்டாம் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பணக்காரர்கள். வசதி உள்ளவர்கள் மருத்துவம் செய்து கொள்ள பெரிய நகரங்களுக்கு செல்லும் வாய்ப்பு உடையவர்கள். ஆனால் ஏழைகளுக்கு அப்படிப்பட்ட சௌகரியங்கள் இல்லை. ஆகவே தனியார் கட்டித் தருகிறவரை காத்துக் கொண்டு இருக்கக் கூடாது.





ராஜபாளையம், சேத்தூர் போன்ற இடங்களுக்கு நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மருத்துவ நிலையங்களுக்கான காரியங்கள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த சுகாதார மருத்துவ மனைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் அவைகளில் மருந்துகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. அரசாங்கத்தால் மருந்துகள் அனுப்பப்படுகின்றன. ஆனால் மருத்துவ மனைகளில் மருந்துகள் இல்லை. அதே மருந்துகள் கடைத்தெருவில் விற்கப்படுகின்றன. கடைகளில் அரசாங்க மருந்துகள் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அங்கத்தினர் அவர்கள் துறைகளைச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு சொன்னால் கூடத் தவறு இல்லை. குற்றச்சாட்டைச் சொல்லுபவர் பொறுப்பான அங்கத்தினர். எந்த மருத்துவ மனையில் இருக்க வேண்டிய மருந்து எந்தக் கடைத்தெருவில் விற்கப்படுகிறது என்று அல்லாமல் பொதுவாகக் குற்றம் சாட்டினால் எல்லாப் பெண்களையும் எல்லா ஆண்களும் சந்தேகப்படுவது அல்லது எல்லா ஆண்களையும் எல்லாப் பெண்களும் சந்தேகப்படுவது என்ற ஒரு தவறான அடிப்படையில் வாதம் வளரும். குறிப்பிட்ட குற்றச்சாட்டைச் சொன்னால் இந்த இலாக்கா பொறுப்பேற்றுக் கொண்டு விசாரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்பொழுது ஸ்பெசிபிக்காக இன்னார் மருந்து விற்றார்கள் என்று சொல்லவேண்டும். பொதுப்படையான குற்றச்சாட்டைச் சொல்லுவது நல்லதல்ல.

**திரு. க. சுப்பு:** இப்படிப்பட்ட குற்றங்களைச் செய்பவர்கள் ஆதாரத்தை வைத்துக் கொண்டு செய்ய மாட்டார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடக்கும்பொழுது, அது சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் தெரிவிப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட தவறுகளும் இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தான் இதைச் சுட்டிக் காட்டினேன். தனிப்பட்ட முறையிலே யார் மீதும் குற்றம் சுமத்த வேண்டுமென்று நான் இதைச் சொல்லவில்லை.

உணவு கலப்படத் தடைச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது இந்த அவையிலே ஒரு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டம் இன்னமும் கடுமை ஆக்கப்பட வேண்டும் என்றார்கள். இப்பொழுது இருக்கிற சட்டமே கடுமையாகத் தான் இருக்கிறது. பாலிலே தண்ணீர் கலப்பவர்கள், அப்படித் தண்ணீர் கலக்கி விற்பவர்கள் தான் இந்தச் சட்டத்தின்படி தண்டனைக்குள்ளாகிறார்கள் அவர்கள் எல்லாம் ஏழையாக இருப்பதால் இந்த நிலைமை ஏற்படுகிறது. ஏற்கனவே, இந்தச் சட்டத்தின்படி அப்படிக் கலந்து விற்பவர்களுக்கு 1,000 ரூபாய் அபராதமும், 6 மாத ஜெயில்

தண்டனையும் கொடுக்கப்படுகிறது. அப்படி அபராதத்தின் மூலமாக ஒரு ஆண்டுக்கு இந்த அரசாங்கத்திற்கு வசூலான தொகை மாத்திரம் 4,11,792 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. எனவே, இந்த உணவு கலப்பட தடைச் சட்டம் ஏழைகளின் மீது சுமத்தப்படும் சட்டமாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பாலிலே தண்ணீர் கலப்பது என்பது மிகப் பெரிய குற்றமாக இருக்க முடியாது. எனவே, இந்த உணவுக் கலப்படத்தைத் தடுக்க வேண்டுமானால், இந்த அரசு வேறு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

திரு. எம். தேவராசன்: நான் சொன்னது அந்த மாதிரிப் பாலிலே நீரை கலந்து விற்கப்படுவதால், சிறிய குழந்தைகளும் நோயாளிகளும் பாதிக்கப்படுகிறார்கள் என்பது தான். எனவே தான் அந்தச் சட்டத்தைக் கடுமையாக்கவேண்டுமென்று சொன்னேன். இதை எல்லா உறுப்பினர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

* திரு. தொ. ப. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மக்கள் நல வாழ்வுத் துறை மானியத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்று, என்னுடைய கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு பசியும், பிணியும், பகையும் நீங்கி சிறந்த அரசாக இயங்க வேண்டும் என்ற அடிப்படையிலே. இந்த ஆண்டு ஒதுக்கப்படுகின்ற தொகை அதிக அளவிலே ஒதுக்கி சிறந்த முறையிலே நடத்த வேண்டும் என்று இந்த மானியத்தைக் கோரியதற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன். எனது போளூர் தொகுதியிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. போளூரிலிருந்து 1½ மைல் தூரத்திலே கட்டப்பட்டிருக்கிறது. அங்கே மருத்துவ அதிகாரிகளை நியமனம் செய்தால் அவர்கள் வந்து பணி புரிய மறுக்கிறார்கள். லேடி டாக்டர் போன்றவர்கள் அங்கே வந்து பணி புரிய மறுக்கிறார்கள், அதற்குக் காரணம் அந்த மருத்துவ மனையிலே போடப்படும் லேடி டாக்டர்களும், ஏனைய பெண் நர்சுகளும் தங்குவதற்கு வசதியாகக் குடியிருப்பு இல்லங்கள் கிடையாது. எனவே, அவர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டிக் தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே போல் எங்கள் போளூரிலே ஒரு எக்ஸ்ரே யூனிட்டுக்காக ஒரு இலட்சம் ரூபாய் இந்த அரசு கருணை கூர்ந்து ஒதுக்கியிருப்பதற்காக எனது தொகுதி மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போளூரின் மையத்திலே ஒரு ஆஸ்பத்திரி இருந்தது. அதைப் புதிதாகக் கட்டப்பட்ட இடத்திற்கு மாற்றப்பட்டு, இந்தக் கட்டிடம் அப்படியே இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே தொழு நோய் பிடித்தவர்களுக்கான மருத்துவமனை 2½ இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்டு அதிலே அது இயங்கி வந்தது.



இப்பொழுது அந்த மருத்துவ மனையைக் காலி செய்து பொது மருத்துவ மனையிலே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இது சம்மந்தமாக நாங்கள் அமைச்சரிடம் சொல்லி, மாவட்ட ஆட்சியாளரும், மாவட்ட மருத்துவ அதிகாரியும் வந்து விசாரணை செய்தார்கள். அந்த மக்கள் சொன்னார்கள், இங்கே இருந்த மருத்துவ மனை காலி செய்யப்பட்டதால், தொழு நோய் மருத்துவ மனையிலே இருக்கக் கூடியவர்கள் கஷ்டப்படுகிறார்கள்; மேலும் 2½ இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்ட அந்த மருத்துவ மனை பாழடைந்திருக்கிறது. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து தொழு நோய் மருத்துவ மனையை அந்தக் கட்டிடத்திலேயே துவங்குவதுதான் தொழு நோய் பிடிக்கப்பட்டவர்களை நல்ல முறையிலே பராமரிக்க உதவும் என்று இங்கே சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அப்படி காலி செய்யப்பட்டால் அந்த இடத்திலே ஏற்கனவே மகப் பேறு இல்லம் கட்டுவதற்காக ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக 10 படுக்கைகள் கொண்ட ஒரு இல்லமாக அதை நடத்தலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே, அதை உடனடியாகக் காலி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய சந்தவாசல் கிராமத்திலே சிறிய அளவிலே "ரூரல் டிஸ்பன்ஸரி" ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஊராட்சி ஒன்றியம் நிதி கொடுத்து, மருந்து வாங்கப்படுகிறது. அந்த நிதி குறைவாக இருப்பதால் போதிய மருந்துகள் வாங்க முடிவதில்லை. அந்த ஊரைச் சுற்றி 31 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே இருக்கிற அத்தனை பேர்களும் அங்கே வந்து தான் சிகிச்சை பெற முடியும் என்ற நிலைமை இருக்கிறது, எனவே, தொகை குறைவாக இருப்பதால் மருந்தைச் சரியாக வாங்கி டாக்டர்கள் எல்லா மக்களுக்கும் சிகிச்சை செய்ய முடியவில்லை. எனவே, பலர் அந்த டாக்டர்களிடம் தனியாகச் சென்று தான் சிகிச்சை பெறுகிறார்கள். எனவே, இதிலே அரசு நேரடியான கவனம் செலுத்தி, நிதியை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியிலே ஜவ்வாது மலைப் பகுதி இருக்கிறது. அங்கே 30,000 மக்கள் வாழ்கிறார்கள். அந்த மக்களுக்குச் சரியான வகையிலே சிகிச்சை அளிக்கக் கூடிய சுகாதார வசதி அங்கே இல்லை என்பது பெருத்த குறையாக இருக்கிறது. இந்தக் குறையை நாங்கள் மாவட்ட சுகாதார அதிகாரியிடம் சொல்லி, சென்ற மாதம் எல்லா டாக்டர்களையும் வரவழைத்து ஒரு மாநாட்டை அங்கே நடத்தினோம். அப்பொழுது அங்கிருக்கும் மக்களுக்கு எந்த அளவிலே சிகிச்சை அளிக்கலாம் என்று ஒரு முடிவு எடுத்தார்கள். அதன்படி 30,000 மக்களைக் கொண்ட அந்தப் பகுதியிலே தனியாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கி வைத்தால், அவர்களுக்கு சுகாதார வசதி செய்து கொடுக்க ஏதுவாக இருக்கும் என்று முடிவு செய்தார்கள். [illegible]

அரசு கவனத்தில் கொண்டு, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தைச் சமர்ப்பித்த சுகாதார அமைச்சரைப் பாராட்டி அமர்கிறேன்.

*திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மருத்துவ கல்லூரியிலே இந்த ஆண்டு 110 இடங்களை குறைத்திருக்கிறார்கள். அதுவும் வல்லுநர்கள் கருத்துரையின் பேரில், குறைக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார். இப்பொழுது இருக்கும் மருத்துவ கல்லூரியிலே இருக்கிற வசதியை வைத்தே இடத்தைக் குறைத்தோம் என்றார்கள். நிதி நிலை நமக்கு போதிய அளவு இல்லை; நிதி நிலை இருந்தால் வசதியை பெருக்க முடியும் என்றார்கள். நான் பொது விவாதத்தில் பேசிய போது ஒன்றைச் சொன்னேன, பண வசதி படைத்தவர்களிடம் 20,000 ரூபாய் விதம் நன்கொடையாக பெற்று 110 இடங்களை அவர்களுக்குக் கொடுத்தால், 22 இலட்சம் ரூபாய் வருமானம் வரும். அதற்கு சட்ட திட்டங்கள் எப்படி இருக்கிறதோ அது எனக்குத் தெரியாது. அதற்குரிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி, நமது நிதி வசதிகளை பெருக்கிக் கொள்ள அந்த 110 இடங்களை அந்த பண வசதி படைத்தவர்களுக்கு கொடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். "பிரவென்ஷன் இஸ் பெட்டர் தான் கியூர்" என்பதற்கேற்ப, பொதுவாக தொத்து நோய் பரவ காரணமாக இருப்பது குடி நீர். நல்ல குடி நீரை நாம் கொடுத்து விட்டோமானால், நோயே வராது. தமிழகத்தின் கிராமங்களிலே நல்ல குடி தண்ணீர் கிடையாது. கன்னியாகுமரி மாவட்டத்திலே கூட நல்ல குடி தண்ணீருக்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியின் சார்பாக 1965-லே கூட ஒரு திட்டத்தை நான் இந்த மன்றத்திலே சமர்ப்பித்தேன். அது உருவாக "எஸ்டிமேஷன்" அதாவது தயாரிப்பு வேலைகளை எல்லாம் பிறப்பித்தார்கள். ஆனால் அது என்ஜினியரிங் இலாகாவிலே அப்படியே முடங்கிக் கிடக்கிறது.

மாம்பழத்துறை என்ற இடத்திலே ஒரு அணை கட்டி, தேக்கிய நீரை அண்மையில் இருக்கிற தக்கலை நகர், கொளச்சல் நகர் ஆகிய நகரங்களுக்கும் அதற்கு இடைபட்ட கிராமங்களான வில்லுக்குறி, நுள்ளிவிளை, இரணியல் போன்ற பகுதிகளுக்கும் குழாய் மூலம் குடி நீர் வழங்கலாம். அந்தத் திட்டத்திற்கு என்று அன்றிருந்த இரணியல் ஊராட்சி மன்றம் கூட 5,000 ரூபாய் அரசாங்கத்திற்கு கட்டி வைத்திருக்கிறது. எனவே, இந்த அரசு அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றவேண்டும். நாம் இந்த குடி நீர் பிரச்சினையை தீர்க்க, கிணறு வெட்ட பணம் ஒதுக்குகிறோம். ஆனால், கிணறு வெட்டினாலும், நல்ல குடி நீர் கிடைப்பதில்லை. என்னுடைய தொகுதியிலே கூட 50 அடிக்குக் கீழே கிணறு தோண்டி விட்டாலும், அது உப்பு நீராக மாறிவிடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, நான் கூறிய அந்தத் திட்டம் மிக நல்ல திட்டம். மாம்பழத்துறையிலே மழைக் காலத்தில் தண்ணீர்





பாழாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை தேக்கி வைத்து, குடி நீர்த் திட்டத்திற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசாங்க மருத்துவ மனைகளிலே மிகுதியான பேர்கள் சிகிச்சைக்காக போகிறார்கள். சிந்தித்துப் பார்த்தால் அது அந்தந்த நேரத்திலே இருக்கிற டாக்டரைப் பொறுத்துதான் இருக்கிறது.

சாதாரணமாக தனியார் மருத்துவமனை டாக்டர்கள் ஒரு நாளில் 20, 25 பேர்களைப் பார்த்து மருந்து கொடுக்கிறார்கள். ஆனால் நாகர்கோவில் அரசாங்க மருத்துவ மனையில் ஒரு நாளில் ஒரு டாக்டர் 200, 300 பேர்களை பார்க்க வேண்டியிருக்கிறது. அதனாலே அந்த டாக்டர் சோர்வடைந்து விடுகிறார். ஆகவே, அங்கு டாக்டர்களை அதிகப்படுத்துவதோடு, படுக்கைகளையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்குளம் தாலூகா தக்கலை நகரத்தில் இருக்கின்ற ஆஸ்பத்திரி திருவிதாங்கூர் மன்னர் ஆட்சி காலத்திலே கட்டப்பட்ட கட்டிடம். அது பழைய கட்டிடம். அங்கே படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும். அந்த ஆஸ்பத்திரியில் லாபாடரி இல்லாத காரணத்தால் சிறுநீர், மலம், ரத்தம் ஆகியவை சோதனை செய்ய முடியவில்லை. அங்கே லாபாடரி இருந்தால் உடனடியாக சோதனை செய்து மருந்து கொடுக்க முடியும். அதற்காக லாபாடரி வசதி செய்து கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் அந்தப் பகுதியிலே பெரியம்மை நோய் பரவலாக இருந்து வருகிறது. அதைத் தடுக்க தக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் தடுப்பு மருந்து எல்லா மக்களுக்கும் கட்டாயமாக போடவேண்டும் என்று கேட்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத்துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்வதற்கு முன்னால் என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்தத் துறைக்காக பெரும் அளவு பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து வருகிறோம். குறிப்பாக மக்கள் நல்வாழ்வுத்துறையிலே செலவழித்திருக்கின்ற தொகையின் எண்ணிக்கையைப் பார்க்காமல், அதனால் எவ்வளவு மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்று கணக்குப்பார்க்கும் பொழுது, நம்முடைய கழக அரசின் சாதனையைப் பாராட்டுகிறேன். அண்மையில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்தின் போது சுகாதாரம் எந்த அளவுக்கு கவனிக்கப்பட்டிருக்கிறது என்றுபார்க்க வேண்டும். அதற்குப்பிறகு திருவாரூர் தேர் விழாவிலே சுகாதாரம் நன்கு கவனிக்கப்பட்டதற்கு இந்த அரசைப் பாராட்ட வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக பிரசாரத்திற்காக 300 பட்டாதாரிகளைச் சேர்த்திருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே திருச்சி பொது மருத்துவ மனைக்கு போதிய பெட்கள் இல்லை.

498 பெட்கள் இருக்கின்றன. இது குறைவாக இருக்கிறது. பெட்களை அதிகபடுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருச்சி நகராட்சியில் சுகாதாரக்கேடு அதிகமாக இருக்கிறது. அங்கே வடிகால் திட்டம் மாண்புமிகு அமைச்சரவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. அந்தத் திட்டம் முடிவுபெற 4 ஆண்டுகளாகும். அதற்கு 2 கோடிக்கு மேல் செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதைத் துரிதப்படுத்தி வெகு விரைவாக வடிகால் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே காவேரி நதி ஓடியும் திருச்சி நகரத்திற்குள்ளேயே குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறது. அதையெல்லாம் நகராட்சியின் மூலம் சுகாதாரப் பொறுப்பில் முடித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே மருத்துவ மனையிலே இரண்டு எக்ஸ்ரே கருவிகள் தான் இருக்கின்றன. இதிலே ஒன்று பழுதடைந்து பல மாதங்களாக கவனிக்கப்படாமல் இருக்கிறது. இப்போது தான் சரி செய்து இருக்கிறார்கள். அவுட் பேஷண்ட் டிபார்மெண்டுக்கு இன்னொரு கருவி எக்ஸ்ரே கருவி அனுமதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நதி பாய்கின்ற நகரிலே தண்ணீர் பஞ்சம் ஏற்படாதவாறு கவனிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, பாராட்டி இந்த அளவிலே விடை பெறுகிறேன்.

* திரு. த. சோணையா : மாண்புமிகு சட்டப் பேரவை உதவித் தலைவரவர்களே, மருத்துவ மானியக் கோரிக்கையை நான் வரவேற்று, அதிலேயுள்ள அம்சங்களைப் பாராட்டி மிகச்சீராகவும் சிறப்பாகவும் இருப்பதை வரவேற்றுப் பேசுகிறேன்.

மானாமதுரை ஒரு தாலுக்காவின் தலைநகரம். 25 ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் வருகின்ற அமைச்சர்கள் இடத்திலெல்லாம் தங்களுடைய ஆஸ்பத்திரியை அரசாங்க மருத்துவமனையாக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த நல்ல காரியத்தை அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய பெரும் கோரிக்கையாக இருக்கின்ற காரியத்தைச் செய்து தர வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அருகாமையிலே இடைக்காட்டூர் கிராமத்திலேயிருந்து அந்த ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும் வைகை நதியில் வெள்ளம் வந்தால் அவர்கள் நீந்திக்கொண்டுதான் வரவேண்டும், இப்படித் தான் வருகிறார்கள். பிரசவக் கேஸ்களாக இருந்தால் அவர்கள் வண்டியில் 3 மைல் வைகை ஆற்றைக் கடந்து வரவேண்டும்.





சுற்றி வந்தால் 10 மைல் இருக்கிறது. ஆகவே, அப்படி ஆஸ்பத்திரிக்கு செல்கின்ற வசதிக்காகவாவது, பிரசவக் கேஸ்களுக்காக அந்த நேரங்களில் வண்டிகள் போவதற்காக அந்த ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்புவனத்திலே ஒரு அரசாங்க மருத்துவமனையிருக்கிறது. அந்த மருத்துவமனைக்கு அந்த பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மக்கள் அனைவரும் வருகிறார்கள். விரிவாக படங்கள் எடுக்க அந்த ஆஸ்பத்திரியிலே ஒரு எக்ஸ்ரே கருவிகூட இல்லை. 14 பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த மக்களும் அங்கே வருகிறார்கள். அங்கே படுக்கை வசதியை அதிகப்படுத்துவதுடன், ஒரு எக்ஸ்ரே கருவியும் அந்த ஆஸ்பத்திரிக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கையிலே ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதற்கு எக்ஸ்ரே சாதனங்களுக்காக கட்டிடம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை நான் மிக மிகப்பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மேஜர் பஞ்சாயத்தாக இருந்த அளவிலே தான் இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரியிருக்கிறது. முனிசிபாலிடியான பிறகும் கூட அதே நிலைமையிலே தான் இன்னமும் இருந்து வருகிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு கூடுதல் படுக்கை வசதிகள் செய்து தரவேண்டும் என்று மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். திருப்புவனம் பகுதியில் கொசுவினுடைய தொந்தரவு மிகுதியாக இருக்கிறது. தஞ்சாவூரில் கொசு ஒழிப்புத் திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கொசு ஒழிப்புத் திட்டத்தை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மையமாக ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்ப நலத் திட்டம் இப்போது மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. முன்காலத்தில் இதை ஆதரிப்பவர்கள் அதிகம் இல்லாமல் இருந்தது. இன்றைக்கு மக்களே அந்தத் திட்டத்தை ஆதரிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே இந்த மானியத் தொகை மிகச் சிறப்பாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருப்பதால் நான் மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

பொதுவாக மருத்துவத்துறையிலும் சுகாதாரத் துறையிலும் இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நிதிநிலையை வைத்துக் கொண்டு, எவ்வளவு தாராளமாகப் பயன்படுத்தினாலும் நான்கு கோடி தமிழ்மக்களுக்கு மேல்நாட்டு முறைப்படி வைத்தியம் செய்ய முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதாகும். இருபதாயிரம் படுக்கைகள் இருக்கின்றன, 320 ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன,

[திரு. மணலி சி. கந்தசாமி] [1971 ஜூலை 3

இதைக்கொண்டு 4 கோடி மக்களுக்கு வைத்திய வசதி அளிக்க முற்படுகிறபோதுதான் பலவிதமான நெருக்கடிகள், கோளாறுகள், அங்கங்கே குறைபாடுகள், புகார்கள் எல்லாம் வருகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எத்தனையோ ஆயிரக்கணக்கான விவசாயிகள் கிராமங்களிலே வைத்திய வசதி கிடைக்காது புழுப்போல நோயினால் மடிந்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது மேல் நாட்டு வைத்திய முறை ஒரு பக்கம் இருக்க—இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்கு ஏற்ற வகையில்— தமிழ் நாட்டில் நீண்டநெடுங்கால பரம்பரையாக இருந்து வந்திருக்கிற வைத்திய முறையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தமிழ் நாட்டு வைத்திய முறையாகிய சித்த வைத்திய முறை நவீனமாக்கப்பட்டு, முறையாக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு, பல நூற்றுக்கணக்கானவர்களைப் பயிற்றுவிப்பதோடு, மருந்து தயாரிக்கும் நிலையங்களையும் ஏற்படுத்தி மருந்துகள் கிராமப்புறங்களுக்கு எல்லாம் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்தால்தான் நாட்டிலுள்ள பிரச்சினையைச் சமாளிக்க முடியும். நான் மேல்நாட்டு முறையில் குற்றங்குறை சொல்வதாக யாரும் நினைக்கக் கூடாது. மேல்நாட்டுமுறை விஞ்ஞான முறையில் பல சாதனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதை நம் நாட்டு முறையோடு இணைப்பதற்கு ஏன் முயலக் கூடாது என்றுதான் மருத்துவ நிபுணர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேல்நாட்டு வைத்திய முறை என்றால் பணம் அதிகமாகச் செலவழிகிறது. டாக்டர்களும் கொஞ்சங்கூட ஈவிரக்கம் இல்லாது பணம் பறித்துக்கொண்டே போகிறார்கள் என்பது எல்லாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு இதற்குப் பரிகாரம் டாக்டர்களை அங்கிருந்து இங்கு மாற்றுவதாலோ, இங்கிருந்து அங்கே மாற்றுவதாலோ, அவர் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்வதாலோ இத்தகைய பழக்கத்தை ஒழித்துவிட முடியாது. அவர்களுக்கே ஒரு தியாக உணர்ச்சி ஏற்பட்டாக வேண்டும். இன்றைய அவர்களது மனபான்மையில் மாற்றம் ஏற்பட்டு ஒரு புதிய கண்ணோட்டம், தேசிய பக்தி ஏற்பட்டுத் தீரவேண்டும். ஆகவே, இந்த மாமன்றத்தின் மூலமாக தங்கள் அனுமதி பெற்று மருத்துவத்துறை நிபுணர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். கோடிக்கணக்கான பாட்டாளி மக்கள், விவசாய மக்கள் மீது இரக்கம் காட்டி உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய வாய்ப்பைக் கொண்டு தொண்டுசெய்யக்கூடிய விதத்தில் பயன்படுத்த முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்வதைத்தவிர எனக்கு வேறு வழி கிடையாது.

அடுத்து, சித்தவைத்திய முறையைப்பற்றி வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்ப்பற்று, தமிழர் பண்பாட்டின் மீது பற்று ஆகியவை



1971 ஜூலை 3] [திரு. மணலி சி. கந்தசாமி]

கொண்டவர்கள்—அவரிடத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. சித்த வைத்தியத் துறையில் நானும் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து வருகிறேன். பல சுவடிகளை எல்லாம் சேகரித்து வைத்திருக்கிறேன். 1855-இல அச்சிடப்பட்ட புத்தகங்களை எல்லாம் கூடச் சேகரித்து வைத்து வருகிறேன். மேல்நாட்டு வைத்தியமுறை நிபுணர்கள் என்னைப் பரிகாசம் செய்வது கூட உண்டு. அவர்களுடனேயே பேசி இந்த முறையின் நன்மைகளை எடுத்து விளக்கியிருக்கிறேன். மிக உயர்ந்த மருந்துகள் எல்லாம் இதில் இருக்கின்றன. ஆனால் அரசாங்கத்தாரப்பில் இருந்து இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதுமானதாக இல்லை. இதற்காக டைரெக்டரேட் ஏற்படுத்தியிருக்கிறார்கள், பாளையங் கோட்டையில் ஒரு கல்லூரி இருக்கிறது. அரும்பாக்கத்தில் அண்ணா அவர்கள் பெயரால் ஒரு சித்த வைத்திய மருத்துவ மனை திறக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தவிர இன்னும் பெரிய அளவில் இதை கிராமங்கள்தோறும் பரப்புவதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனக்குள்ள சிறிய அனுபவத்தைக்கொண்டு சொல்ல முடியும். இப்போது சல்பரைப்பற்றிப் பேசுகிறோம். அந்த நூலில் கொடிய நோய்களைப்போக்க, தோல் வியாதியைப்போக்க கந்தகத்தை சுத்தப்படுத்தி பஸ்மம் செய்வதன் மூலம் எப்படி நிவாரணம் கிடைக்கிறது என்றெல்லாம் பேசப்பட்டிருக்கிறது. இன்னும் பாதரசத்தை சுத்தப்படுத்தி, பாஷாணத்தை சுத்தப்படுத்தி என்ன என்ன வியாதிகளைக் குணப்படுத்தலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது.. மேலும் குஷ்டத்தைப்போக்க ஒரு மருந்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய முயற்சியால் அந்த மருந்தைத் தயார் செய்து ஒன்றிரண்டு பேர்களுக்குக் கொடுத்தும் பார்த்தேன். எவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் நன்மை அடைந்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அதுவும் ரூ. 5, ரூ. 10-க் குஷ்டத்தைப்போக்க அந்த மருந்தைத் தயாரித்துவிடவும் முடிகிறது. அமைச்சர் அவர்களுக்கு அந்த மருந்து விவரத்தையும் சாம்பிளையும் கூட கொடுக்கிறேன். இந்த மருந்தைக் கொண்டு எத்தனையோ தொழுநோயர்களை குணப்படுத்திவிட முடியும்.

இதுபோன்ற சிறப்பான மருந்துகளை எல்லாம் கொண்ட சித்த வைத்திய முறையையும் இந்த அரசு நல்ல முறையில் வளர்ப்பதற்கு முன்வர வேண்டும். இதன் காரணமாக நான் முன்பே கூறியபடி மேல்நாட்டு வைத்திய முறைக்கு எதிரி அல்ல. அதன் மூலம் மட்டுமே 4 கோடி தமிழ் மக்களுடைய தேவை பூர்த்தி அடையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் வருடத்திற்கு 40 மாணவர்களைப் பயிற்றுவித்தால் போதாது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் சித்த வைத்திய முறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அத்துறையில் தொடர்ந்து ஆராய்ச்சிகள் பலவும் நடக்க வழியேற்படுத்த வேண்டும். அரும்பாக்கத்தில் இருந்து—ஓய்வு

[திரு. மணலி சி. கந்தசாமி] [1971 ஜுலை 3

பெற்ற நீதிபதி பலராமையா அவர்கள் இத்துறைக்கு சிறந்த தொண்டாற்றி வருகிறார்கள். இம்முறையை தமிழகம் நெடுகிலும் பரப்ப வேண்டும். மருந்து தயாரித்து, விற்பனை செய்கிற கூடங்களையும் ஏற்படுத்த வேண்டும். அடையாரில் உள்ள மருந்தகம் நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. அதுபோல பலவிடங்களில் ஏற்பட்டாக வேண்டும். நான் ஹங்கேரியில் உள்ள புடாபெஸ்ட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருந்திருக்கிறேன். மாஸ்கோவில் இருந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் நம்நாட்டு வைத்திய முறையைப் பாராட்டி அதை ஏன் நவீன முறைகளுக்கேற்ப அபிவிருத்தி செய்யாதிருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள்.

அடுத்தபடியாக சுகாதாரத் துறையைப்பற்றி வருகிற நோத்தில் இன்றைக்கு வைத்தியத் துறையிலும், சுகாதாரத் துறையிலும் நல்லவிதமான பிரசாரமே இல்லை. தீவிர சாகுபடிக்கு நல்ல முறையில் பிரசாரம் செய்கிறாகள், குடும்பநலத் திட்டத்திற்காக நல்ல முறையில் பிரசாரம செய்கிறார்கள். டாக்டர்கள் வாரத்திற்கு ஒருமுறை கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு சுகாதாரத்தைப்பற்றி, நோய் முறைகளைப்பற்றி, நோய்த் தடுப்பு முறைகளைப் பற்றி, பிரசாரம் செய்ய வேண்டும். சாதாரணமாக நீரைக் காய்ச்சிக் குடித்தாலே நோய் வராது என்பது எல்லோருக்கும் தெரியும். அதை எல்லோரும் செய்கிறார்களா? இல்லையே. டாக்டர்கள் வாரத்திற்கு ஒரு நாளைக்காவது பஞ்சாயத்துகளுக்கு, பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போய் அங்கே கூட்டங்களை நடத்தி, இன்னின்ன முறையில் நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ளலாம், இன்னின்ன முறைகளில் நோயாளிகள் நடந்துகொள்ள வேண்டும். இன்னின்ன முறைகளில் நோய் வந்த பிறகு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதையெல்லாம் சொலல வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காகச் செய்கின்ற முறையில் இதற்கும் நல்ல பிரசார ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வைத்தியத் துறையிலே புனிதத் தன்மை வேண்டும். டாக்டர்களுடைய பண்பாடு தமிழ் நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமாக இருக்க வேண்டும். தாங்கள் எவ்வளவு சம்பாதிக்க வேண்டுமோ சம்பாதிக்கட்டும். ஆனால், பண்பாட்டை மறந்துவிடாமல் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971-72-ம் ஆண்டுக்கான மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்



1971 ஜுலை 3] [திரு. சி.த. சிதம்பரம்]

கொள்கிறேன். நான் இந்த மானியத்தை வரவேற்று, பாராட்டு தெரிவித்து, வாழ்த்துக்களைத் தெரிவித்து என்னுடைய தொகுதியில் உள்ள சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காரைக்குடி 55 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட நகரம் என்பதை இந்த மாமன்றம் அறியும். அரசாங்கத்தின் சார்பிலே கடந்த ஆண்டிலே தமிழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னால், நகராட்சி மருத்துவ மனையாக இருந்ததை அரசாங்க மருத்துவ மனையாக ஆக்கி, புதிய கட்டிடத்திற்கு மாற்றியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது 48 படுக்கைகளுக்கு இடம் அளித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், 40 படுக்கைகளைத்தான் பெறக்கூடிய வகையில் இடம் இருக்கிறது. மேலும் 50 படுக்கைகளைக் கூடுதலாக ஆக்கித் தரும் முயற்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த தக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியிலே ஐந்தாறு கல்லூரிகள் இருக்கின்றன. மத்திய ரசாயன ஆராய்ச்சிக் கழகம் இருக்கிறது. தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. தேவைகள் மிகுந்திருப்பதால், அதிகமான படுக்கை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். பரிசுச் சீட்டுகளின் மூலம் வரக்கூடிய வருமானத்தில் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதன் மூலமாக இன்னும் அதிகமான பிளாக்குகளை கட்டித் தர வேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் சார்பில் நடத்தப்படுகின்ற மருத்துவமனைகள் வசதியில்லாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கல்லல் நாச்சியாபுரம், ஆத்தங்குடி, ஓ. சிறுவயல் முதலிய இடங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளை அரசாங்கத்தின் சார்பிலே ஏற்று நடத்த வேண்டும். ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் தேவையான மருந்துகள் இல்லை. டாக்டர்கள் யாரும் அங்கு வருவதற்குத் தயங்குகிறார்கள். டாக்டர்களே இல்லாமல் மருத்துவமனைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. ஆகவே, அந்த மருத்துவமனைகளையெல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடிக்கும் தேவகோட்டைக்கும் இடையில் சோமநாத புரத்தில் டி. பி. காச நோய் ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டிருக்கிறது. முகவை மாவட்டத்திற்கு இது ஒன்றுதான் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் இப்போது படுக்கை வசதியில்லாமல் இருக்கின்றது. ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றுமாக இரண்டு பிளாக்குகள் கட்டித்தர வேண்டும். மேலும் ஆரம்பத்திலேயே காச நோயைப் போக்கிக் கொள்வதற்கான வசதிகள் இல்லை. எல்லாவகையிலும் சிறப்புப் பெறுகின்ற அளவுக்கு கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்திக்

கொடுக்க வேண்டும். மேலும் டாக்டர்கள் தங்குவதற்கு வேண்டிய இடம் இல்லாததால் டாக்டர்கள் வருவதில்லை. ஆகவே, டாக்டர்களுக்கு க்வார்ட்டர்ஸ் கட்டித்தர வேண்டும்.

சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நல்ல சாலை வசதிகள் இல்லை. கிராமங்களிலிருந்து மருத்துவ வசதிக்காக போக வேண்டுமென்றால் 10 மைல், 15 மைல் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மித்திரவயல் என்ற கிராமத்தில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தித் தரவேண்டும். அந்தப்பகுதி மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத்தர நான் உதவியாக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் காரைக்குடி கோத்தான் மருத்துவமனைக்கு, செட்டிநாட்டு அரசர் அவர்கள் விரிவுபடுத்த இடத்தை நன்கொடை அளித்திருக்கிறார்கள். அவருக்கு இந்த மன்றத்தின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத் தலைமை மருத்துவமனை இராமநாத புரத்தில் அமைந்திருக்கிறது. நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. சத்தியேந்திரன் அவர்கள் 100 படுக்கையாக இருப்பதை 150 படுக்கைகளாக ஆக்கித்தர வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அரசாங்கம் அதை நல்ல முறையில் ஆராய்ந்து 125 ஆக ஆக்கித் தந்திருக்கிறது. இன்னும் அதை அதிகரித்து 150 என்று ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவமனையில் எல்லாவிதமான ஸ்பெஷலிஸ்டுகளும் இல்லை. தலைமை மருத்துவமனைக்குச் சென்று தான் நோயைப் போக்கிக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இராமநாதபுர மருத்துவமனையில் எல்லாவிதமான ஸ்பெஷலிஸ்டுகளையும் நியமித்து, மருத்துவமனை சிறப்புற அரசாங்கத்தின் சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை மருத்துவமனையில் தாய்-சேய் நல விடுதி இருக்கிறது. அங்கே பாத்ரூம் வசதி இல்லை, லெட்ரின் வசதி இல்லை. இருப்பது பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. அதை நல்ல முறையில் பராமரிப்பு செய்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். தவிர அந்த மருத்துவமனையின் தாழ்வாரத்தில் தட்டிகள் அடைக்கப்படாததால், மழைக்காலத்தில் தண்ணீர் உள்ளே வருவதற்கு சாதகமாக இருக்கிறது. ஆகவே, தட்டிகள் அடைக்கப்பட வேண்டும். தலைமை மருத்துவமனை எல்லா வகையிலும் சிறப்புற அமைய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் எதிர்க் கட்சித் தலைவர்கள் இருவர் பேச வேண்டியிருக்கிறது. அதற்குப் பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சை சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





DR. H. V. HANDE : Sir, on behalf of the Swathantra party we have given some cut motions. In support of them I want to say a few words.

For the first time we have given a record number of cut motions, 46 cut motions in all. I hope and trust the Hon. Minister and the department concerned will examine these cut motions and take necessary steps to see that the anomalies and short-comings that we have pointed out in these cut motions will be properly rectified. It does not mean that just because we have given 46 cut motions, it amounts to dissatisfaction with the department. It is true-just as the Hon. Minister has said in the beginning—that there should be proper co-ordination between the public and doctors and Government. Unless voluntary health organisations come up in several parts of the State, it will be very difficult for the department alone to do all things to the public, even with the best of intentions. I would even suggest that a few members of the Legislature can go and examine the same. There is a voluntary health service in Madras City. On an experimental basis they have started it. They are doing very good work. I would like to suggest that some of us may go and see it and examine how best it can be extended to different parts of our State and how to implemnet it in rural parts.

Sir, I will briefly touch a few points which I think the Government will properly examine. I hope that the Hon. Minister will not get a little upset or angry with me, if I point out different grievances. They are all departmental grievances. I do not even blame the Minister himself. I just want these grievances to be brought to the notice of the Government.

With regard to nurses, it is a very well-known fact that if the medical department has to properly function, the problems of nurses will have to be immediately attended to. I think even before 1967 I have mentioned about this time and again in the Legislative Council. The nurses are very poorly paid and they are poorly looked after. We have been neglecting the lot of nurses. That is important. The doctors prescribe medicines and even if there are medicines in the hospitals to be given, unless the nurses are given proper opportunities to work, they will be a failure. The only solution is, we must have a nurse-patient ratio. This has to be properly investigated. The nurses Association have also given certain suggestions—

One Head Nurse for 25 beds.

One Nursing Superintendent, Grade II, for 100 beds.

All the hospitals with over 300 beds should have a Nursing Superintendent, Grade I.

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 3

In the matter of nursing tutors the scale adopted by the Indian Nursing Council should be followed.

Twenty-five per cent of the posts in the Nursing School should be upgraded to Grade I.

These are the suggestions which I am trying to place before the Government. The amount of work they have to do, the quality of work they have to do, the difficult conditions under which they have to work are all very, very vast and very serious. In spite of all these things, though marginal advantages have been given according to the recent Pay Commission's recommendations, the whole thing has to be gone into *de novo*, and proper remedial measures will have to be instituted as far as the nurses are concerned.

Then, Sir, I wish to bring to the notice of the Government a few irregularities to which the Government must pay attention. I have mentioned, for instance, in my cut motion about the irregularities that are going on in the Government Ophthalmic Hospital. The Hon. Member Mrs. Jothi Venkatachalam may remember that in the Legislative Council I had given photo stat copies about the irregularities. It is a chronic disease. For a number of years it is going on. The main problem is this. The poor patients who go there do not get admission, unless they pay some amount. It has been a legacy for the past one or two decades. I have been persistently trying to remove it, but I have not succeeded. I have suggested in my cut motion 'please post a few C.I.Ds. and see what exactly happens there'. I can give a number of instances. I will quote one instance where a person was denied admission for cataract operation. The person was about to go away. On the way somebody who is a sort of liaison between the department inside and outside said 'why do you go away? I will try to help you'. He took a little money from him and then he was able to get admission. In spite of the fact that I had given a letter—it is a pathetic case because I followed it up and had it investigated—in spite of it, nothing could be done.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள கண் மருத்துவ மனையிலே அவ்வாறு இருக்கிறது என்று சொன்னால் உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் அதிக எண்ணிக்கையுள்ள நோயாளிகள் உடனடியாக மருத்துவம் பெற விரும்புகிறார்கள். மருத்துவம் பெற நான்கு நாட்கள், ஆறு நாட்கள், ஒரு வாரம் காத்திருந்து வைத்தியம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிக் காத்திருந்து வைத்தியம் செய்துகொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாத சிலர் வேறு வழிகளைக் கையாண்டு மருத்துவ வசதி பெற முயல்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு இரு சாராரும் முயலவேண்டும். பொது மக்களுக்கு இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாது இருக்க உறுப்பினர் அவர்கள் அறிவுரை கூற இந்தக் கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.



1971 ஜூலை 3]

DR. H. V. HANDE : Of course, it is because of lack of beds. My only submission is this. Strict instructions should be given by the department to the Superintendent there to see that a proper register is maintained and a perfect method is maintained. There is temptation. But in fact we are trying to do a lot of propaganda not to yield to these things. I would request the Hon. Minister now that he has given a partial explanation also—to have the matter investigated. If he assures me that, I am more than satisfied.

Then, Sir, with regard to the General Hospital—that of course is within my constituency and it is serving the whole State—there are certain irregularities that have been brought to my notice. For instance, take the Dean of the General Hospital. There are certain regulations, statutory rule itself that a Dean must have certain qualifications. The most important statutory obligation prescribed by the Indian Medical Council is that the Dean must have seven years' teaching experience as a Professor. I want the Hon. Minister to investigate whether it is there or not. I would not say anything further. Let it be investigated whether seven years' teaching experience as a Professor is there or not. In case, it is not there, what would happen? What would be the effect? Because the Indian Medical Council may come forward and say that it is not legal and there may be some difficulty with regard to recognition also. I do not want to say anything further, but let the Hon. Minister investigate the matter and satisfy himself. I have full confidence in him that if he investigates, he will do us justice.

Then, Sir, with regard to library, library books have been purchased without calling for quotations from various firms, I was given to understand. I have also checked it up. I request the Hon. Minister to investigate it.

Then, Sir, I come to purchase of drugs. Tender rules are not strictly adhered to in the matter of purchase of drugs. Even with regard to this point, I request the Hon. Minister to look into it.

Then, Sir, appointment of Grade IV servants. In this matter also there are certain extra considerations, just as I mentioned in the case of the Ophthalmic Hospital. There also, some C.I.Ds. may be posted.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I want to know whether the hon. Member is accusing the Dean or anybody in the College about appointing some person with bribe and they are getting bribe?

DR. H. V. HANDE : If the Hon. Minister wants me to explain it, I can explain. My charge is there is an extra consideration taken at the highest level, at the appointing level. I

request the Hon. Minister to just get the list of persons appointed and have the matter investigated because I have got this information with some authority. That is why I am placing this thing before this House. In case the Hon. Member thinks that a number of persons have to be called for, for an enquiry, I am prepared to come and give evidence with regard to that matter also.

Then Sir, there was a strike in the hospital, one day's hunger strike by the nurses. Suddenly an order was passed that instead of Rs. 55, Rs. 78 will have to be paid for the mess. Suddenly an order like that was passed. They went on one day's hunger strike. I would request the Hon. Minister to find out why that order was passed, while in other hospitals like Royapettah Hospital and Stanley Hospital, they had not passed an order like that.

Arrears of pay to Grade IV servants have been paid in all hospitals. The Hon. Chief Minister, a few months ago, had said that as regards the revision of scales of pay of N.G.G.Os. arrears of pay were paid to all persons. Except the General Hospital, in all hospitals the arrears were paid. But in the General Hospital Grade IV servants have not yet got their arrears of pay.

Then, Sir, I wish to refer to the drug position in hospitals. Whenever there is a serious case coming to the hospital, you should have all medicines ready in the hospital. But sometimes even ordinary medicines like Pheno Barbitone, Pethidine—it is required for heart diseases—Chloromphemicol, 25 paise per capsule—are not available. A proper indenting procedure is not adopted. There are so many instances where. . . .

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* அப்படிச் சில மருந்துகள் கிடைக்காத காரணத்தால்தான் அவ்வப்பொழுது டெண்டர்கள் மூலம் வாங்கமுடியாமல் தனியாக வாங்கப்படுகிறது. அதற்காக உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. தனியாக வாங்கினால் டெண்டர்கள் மூலம் வாங்கவில்லை என்று குற்றஞ்சாட்டுவதும் டெண்டர்கள் மூலம் வாங்கினால் அதையும் குற்றஞ்சாட்டுவதும் நல்ல டாக்டராக உள்ள அங்கத்தினர் அவர்கள் நிலைமையைப் பரிசீலிக்காதது ஆகும்.

DR. H. V. HANDE : I shall again explain. What I am saying is this. These medicines were not got because. . . .

MR. SPEAKER : You may be brief and need not elaborate. You may briefly state the points because the time is up.

DR. H. V. HANDE : Tender irregularities are different. It is not because of the powers that have been given to buy emergency medicines. It is an entirely different thing. This is an entirely different thing. I would not go further.



Then. Sir, many hospitals do not have basic amenities. like the surgical theatres. Recently information was given to us about the closing of surgical theatres in the medical college hospital at Thanjavur. There are about 10 operation theatres, out of which some have been closed even from the beginning itself because of want of staff, nurses, etc. Nearly two or three theatres were not functioning. Now we are told that another 4 or 5 theatres are not functioning because of titanus. This titanus can be avoided, if proper steps are taken to see that the theatres are air-conditioned if necessary, or dust is prevented and proper sterilisation methods are adopted. Similarly is the case with regard to the Royapettah Hospital. Surgical theatres will have to be properly looked into. (Mr. Speaker sounded the gong). I will just finish in two or three minutes. I am the only member speaking in my party.

With regard to certain irregularities in the administration, even with regard to higher post, in the case of the post of the Director of Medical Education, the highest post itself, normally what is the procedure? As soon as an incumbent occupies the post, he has to declare his date of birth, five years immediately after he occupies the post. I have information on authority that a declaration of a change in the date of birth has been brought out after the 54th year of the incumbent's occupation of that particular post. I request the Hon. Minister to examine that also.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Dr. Hande has expressed views about the higher authorities, difference in age particulars etc., which came to his notice. Only when the concerned person was due to retire, his age had to be verified. It was found that according to his horoscope the date was different. Therefore the Government after due consideration of the merits of the matter, approved of it.

DR. H. V. HANDE : Then, Sir, I come to the E.S.I. Hospital. When a doctor is posted in that hospital, he is supposed to be there for 4 years but during those four years he is not allowed to get himself qualified for higher examinations like M.D. and M.S. Doctors should be very useful and they would have to look after patients efficiently. So, I request that the relevant rules should be changed so that they can qualify themselves for the higher examinations.

Then I come to the Medical College Hospital situated in my constituency. The students are not able to read now because opposite the Hostel there is the M.U.C. ground where an exhibition is going on. It is more exhibitionism than exhibition. As a lot of noise is created due to that exhibition, the students are not able to read their lessons. I have brought this matter to the notice of the higher authorities. As their examination is fast approaching, they feel sore about it. I request the Hon. Minister to look into the matter and do the needful.

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 3

Then I want to refer to a matter which may colleague, Thiru Guruswamy wanted me to bring to the notice of the Hon. Minister. In Andipatti there are about 60,000 persons and out of them about 25,000 persons live in the hilly areas. For about 60 sq. miles there is no hospital run by the Government. There is one Primary Health Centre which is not run properly. Even petitions have been sent to the Hon. Minister and I request him to look into the matter.

Before I wind up, I want to make a last minute appeal which would also help the Government. I request the Hon. Minister to appoint a Consultative Committee which can meet periodically and elicit our views. It is not possible within the limited time allotted to us, to express all our views now. I have taken care to refer to only important points which I hope and trust the Hon. Minister will look into.

Thank you, Sir.

MR. SPEAKER: The hon. Member, Thirumathi Anandanayaki will speak. She has been allotted five minutes.

* THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I want at least seven minutes.

தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில முக்கியமான கருத்துக்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முதலில் எங்கள் ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த எல்லோருமே இடங்கள் குறைக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்திருக்கிறோம். இடங்களை அதிகரிப்பதற்கு வேண்டிய பணம் இல்லை என்று சொன்னாலும்கூட, பிற மாநிலங்களில் பணத்திற்காக மருத்துவக் கல்லூரிகளை நடத்துகிறார்களே அதைப்போல, இங்கும் நாம் கொடுக்கக்கூடிய இடங்களில் ஒரு பர்செண்டேஜ் வைத்து, அவைகளுக்கு நன்கொடை கொடுத்து இடம் பெற வசதியைத் தேடித்தந்தால்தான் அதன் மூலம் இந்த வசதிகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்க ஆஸ்பத்திரிகளைப் பார்க்கும்பொழுது கட்டாயம் திறமை அதிகரிக்க வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் கூட அரசாங்க ஆஸ்பத்திரிகளை விட்டுவிட்டு வேலூர் ஆஸ்பத்திரிக்குப் போவதைச் செய்தித்தாள்களில் பார்க்கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இன்னும் அதிகமாக திறமையை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது என்பதுதான். காரணம், அவர்களைக் குறை சொல்லியும் பயனில்லை. முன்பு பேசிய அங்கத்தினர்கள் சொல்லியதுபோல், நர்சுகள் குறைவு, டாக்டர்களின் எண்ணிக்கை



1971 ஜூலை 3] [திருமதி த. ந. அனந்தநாயகி]

குறைவு, பேஷண்டுகளின் எண்ணிக்கை அதிகம். இப்படிப் பார்க்கும் பொழுது ஆயிரக்கணக்கான பேஷண்டுகளுக்கு டாக்டர்கள் தங்களுடைய மருத்துவத் திறமையைக் காட்டுவது என்பது அவ்வளவு சாதாரணமாக முடியக்கூடிய காரியமாகயில்லை.

அடுத்தபடியாக, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இன்றைக்கிருக்கும் கவர்ன்மெண்ட் டாக்டர்களெல்லாம் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்று நாம் கண்டிப்பாக சொல்லவேண்டும். அதற்காக இழப்பு ஏற்பட்டாலும் அதை அரசாங்கம் கொடுக்கலாம், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அரசாங்க டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று செய்தால்தான் பிரைவேட் டாக்டர்களுக்கும் வாய்ப்பிருக்கும். இல்லையென்றால் அங்கேயும் வேலை கெட்டு, இங்கேயும் வேலைக் கெட்டுப் போகும், நல்ல மருத்துவத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே, அரசாங்க டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக்கூடாது என்று போட்டு அதற்கான இழப்புத் தொகையையும் அரசாங்கம் கொடுக்கமுன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஹானரரி டாக்டர்களை வைக்கவே கூடாது. அரசாங்கத்திலேயே அனுபவம் மிக்கவர்கள் இருக்கும் பொழுது அவர்கள் எதற்காக இருக்கவேண்டும்? ஹானரரியாக வேலை பார்க்கிறோம் என்று சொல்லி பேஷண்டுகளை எடுத்துச் செல்வதற்குத்தான் அரசாங்க ஆஸ்பத்திரிகளை இடமாக வைத்திருக்கிறார்களே தவிர உண்மையாகவே, திறமையாக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிறார்களா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஆகவே, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் உள்ள நிபுணர்களுக்கு இன்னும் சம்பளத்தை அதிகமாகக் கூட்டுங்கள், ஆனால் ஹானரரி டாக்டர் என்று சொல்லிக்கொண்டு பேஷண்டுகளை வீட்டுக்கு வரச்சொல்லி ட்ரீட்மெண்ட் செய்வது முறையல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதரைஸ்ட் மெடிகல் அட்டெண்டெண்ட் என்று போட்டு மத்திய அரசு பணம் கொடுக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்களிடம் பணம் பெற வழியிருக்கிறது. அதில் பல தவறுகள் நடக்கின்றன. மருந்து கொடுப்பதிலே தவறுகள் ஏற்படுகின்றன, பில்கள் கொடுப்பதிலே தவறுகள் ஏற்படுகின்றன. எனவே, ஆதரைஸ்ட் மெடிகல் அட்டெண்டெண்ட் திட்டத்திலே மத்திய சர்க்காரோடு பேச்சு நடத்தி அதற்கென்று தனியாக டாக்டர்களைப் போட்டு இந்தக் காரியங்களைச் செய்ய ஏதாவது செய்ய முடியுமா என்று சிந்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அப்கிரேடிங் ஆஃப் மெடிகல் காலேஜ். இப்பொழுது இரண்டு இலாகாக்கள் வந்திருக்கின்றன. பிஸியாலஜி அண்ட் பேக்டீரியாலஜி என்று சொல்கிறார்கள். அவைகள் எல்லாவற்றையும் சிறப்பாக மேல்படிபிற்கேற்ற அளவில் அப்கிரேட் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்,

பல்லாண்டுகளாகக் கேட்டுக்கொண்டு வரப்படுகிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் கூறியது போல் வந்த சலுகையையும் நாம் விட்டுவிட்டோம். இந்த இரண்டுக்குக் கூட அனுமதி வரவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே, இதை ஆரம்பித்தவுடன் சங்கடங்கள் ஏதேனும் வருமா என்று தெரியவில்லை. எனவே, மீண்டும் பேச்சு நடத்தி போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷனை என் தொகுதியாகிய அடையாற்றில் ஆரம்பித்தால் மிக மிக வரவேற்கத் தக்கது என்று கூறிக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருந்தது. அது கைவிடப்பட்டது.

ஒரு ஜெனரல் ஹாஸ்பிடல் தென் சென்னைக்கு அவசியம் தேவைப் படுகிறது. இப்பொழுதுள்ள ஆஸ்பத்திரியில் போதிய எண்ணிக்கையில் படுக்கை வசதிகள் இல்லாமல் பாயிலே படுத்திருக்கிறார்கள், தரையிலே படுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது உண்மையிலேயே அங்கு வைத்தியம் செய்கிறார்களா அல்லது வேறு ஏதாவது செய்கிறார்களா என்றே தெரியவில்லை. எனவே குறைந்தது ஜெனரல் ஹாஸ்பிடல் ஃபார் சவுத் மெட்ராஸ் ஆரம்பித்தால் நல்லது. ஏனென்றால் வாலண்டரி ஹெல்த் சென்டர் இருந்தாலும் போதவில்லை. வடசென்னைக்கு ஸ்டேன்லி ஆஸ்பத்திரி இருக்கிறது. சென்ட்ரல் மெட்ராஸ் என்று எடுத்துக் கொண்டேமானால் ஜெனரல் ஹாஸ்பிடல் இருக்கிறது. ஆனால் சவுத் மெட்ராஸுக்கு ஒன்றுமேயில்லை. சவுத் மெட்ராஸுக்கு ஒரு ஆஸ்பத்திரி உடனடியாக, கட்டாயம் தேவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக முக்கியமான சில நோய்களுக்கு மிகக் குறைவான வசதிகள் தான் இருக்கின்றன. காச நோய்க்கு என்று எடுத்துக்கொண்டால் 618 பெட்கள்தான் இருக்கின்றன. காச நோய்க்காரர்களுக்கு. ஏழைகளுக்கு ஆஸ்பத்திரியில் இடம் கிடைப்பதற்குள் அவர்களுக்கு அடுத்த உலகத்திலே. சீட் கிடைத்தாலும் கிடைக்குமே தவிர இங்கே பெட் கிடைக்காது.

அதேபோல் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலும் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அங்கு ஆள் அனுப்புவது கஷ்டமாகயிருக்கிறது. சாதாரணமாக பைத்தியக்காரர்களை அனுப்பினால் எடுக்கமாட்டேனென்கிறார்கள். காரணம் போலிசார் மூலம் பைத்தியங்கள் வந்தால் எடுப்பார்கள் போலிருக்கிறது. எனவே அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. லாட்டரி சீட்டிலிருந்து வரும் பணத்தைக்கொண்டாவது இதற்கு வழி செய்ய வேண்டும். தென் மாவட்டங்களுக்காவது தனியாகக் கட்டாயம் வேண்டும். ஏனென்றால் மதுரை, திருநெல்வேலியிலிருந்தெல்லாம் இங்கே வருகிறார்கள். அவர்களைப் பார்க்கும்பொழுது பரிதாபமாக இருக்கிறது. எனவே, பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில் அதிக வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, தொழுநோயைப்பற்றி எடுத்துக்கொண்டால், லெப்ரஸி கிளினிக் செங்கற்பட்டில் இருப்பதாகவும், அங்கு புதிதாக எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள் என்றும் அறிகிறேன். எனவே, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியிலிருந்து அதற்கு பணத்தை ஒதுக்கலாம் அல்லது லாட்டரி சீட்டு பணத்திலிருந்தாவது கொஞ்சம் ஒதுக்க முன்வரலாம். அதைக் குறைந்த காலத்தில் தீர்க்க சித்த வைத்தியப்படி முயற்சி செய்ய முடியுமா என்று சிந்தித்துக் குறைந்த காலத்தில் இதற்கு மருந்தை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தால் நல்லது.

சித்த, யூனானி, ஆயுர்வேதக் கல்லூரியை பாளையங்கோட்டையில் ஆரம்பித்திருப்பது சரியல்ல. எங்களுடைய கட்சிக்காலத்திலே ஆரம்பித்திருக்கலாம் இருந்தாலும் கூட அது சரியல்ல. சரியென்று சொல்வது நியாயம் அல்ல. சித்த, யூனானி, ஆயுர்வேதிக்கிற்கு ஸ்டூடண்ட்ஸ் கிடைப்பது இல்லை. இருக்கின்ற கொஞ்சம் பேருக்கும் வசதியில்லை. ஆகையால் பாளையங்கோட்டையில் பேஷண்டுகள் கிடைப்பதும் குறைச்சல். முன்பு அரும்பாக்கம், கீழ்ப்பாக்கத்திலே இருந்தது. மீண்டும் அரும்பாக்கத்திற்குக் கொண்டு வந்து இங்கே அண்ணா நகரிலே கட்டப்பட்டிருக்கிறது. அதை விஸ்தரித்து ஆராய்ச்சி நடத்த முன்வந்தால் உண்மையான ஊக்கத்தோடு முன் செல்ல வழி பிறக்கும் என்று நினைக்கிறேன்.

ஸ்பெஷல் வார்டுகள் கிடைப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. ரொம்பச் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தில் கட்டுவதற்குப் பணம் இல்லை என்று சொன்னாலும்கூட தனிப்பட்ட நபர்கள் யாரேனும் முன் வந்தால் அதைப் பயன்படுத்திக்கொள்ள முன்வரலாம். அவருடைய பெயரைப்போட்டு, விளம்பரம் செய்யலாம். அதற்கு வழி செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

கடைசியாக, மெடிகல் காலேஜ்களுக்கு ஸ்டூடண்ட்ஸ் பொறுக்கும் முறை பற்றிக் கூற விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்னேன். கேரளாவில் மாணவர்கள் பெறுகின்ற மார்க்குகளை உடனே வெளியில் ஒட்டிவிடுகிறார்கள். பரிட்சை எழுதியதில் பெற்றமார்க். 'விவா வோசி' மார்க். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இவ்வளவு என்றெல்லாம் அறிவித்து விடுகிறார்கள். நாமும் அந்த முறையைக் கையாள வேண்டுமென்று நான் சொன்னபோது அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்தில் கேட்டால் மாணவர்கள் பெற்ற மார்க்குகளைக் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். நீதிமன்றத்தில் சும்மா ஒருவன் சென்று மார்க்குகளைக் கேட்டுவிட முடியுமா? ஆயிரம் ரூபாய் செலவழித்தால்தான் முடியும். நீதிமன்றத்தில் வக்கீல்களை வைத்து அதற்காகச் செலவு செய்து தான் மார்க்குகளைப் பெற முடியும் என்ற நிலை இல்லாமல் மாணவர்கள் மன நிறைவு பெறும் வகையில் அவர்கள் பெற்ற மார்க்குகளை வெளியிலே ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

தற்போது இதய நோய் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பெரிய பெரிய ஆஸ்பத்திரிகளில் கூட இதய நோய் சிகிச்சைக்கான கருவிகள் இல்லாமல் இருக்கின்றன. ஸ்டான்லி மெடிகல், மெட்ராஸ் மெடிகலிலேயே அதற்கான கருவிகள் இல்லை. இதய நோய் ஏற்பட்டவர்களைக் கவனிப்பதில் சற்றுக் காலதாமதமானாலும் ஆள் போய்விடும் நிலைமை ஏற்படும். ஆகவே, அதற்கு அவசியமான கருவிகளை இறக்குமதி செய்தாவது வைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றின் மானியங்களின் மீது இந்த அவையினுடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், ஆளும் கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்து 20 நண்பர்கள் உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். பொதுவாக, இந்த மானியத்தை வரவேற்று இந்த மானியத்திற்கு இன்னும் எவ்வளவு அதிகம் தேவை என்ற கருத்தைப் பேசியதற்காக, என் சார்பாகப் பேசினார்கள் என்று எடுத்துக் கொண்டு, நான் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

முப்பத்திநான்கு கோடி ரூபாய்க்கு இங்கே பலவகை மானியங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் தொகுத்துப் பார்த்தால் அது [illegible] 34 கோடி ரூபாய் பெறும் என நம்புகிறேன். முப்பத்திநான்கு கோடி ரூபாயிலே செய்யப்படுகிற காரியங்களிலே வருகிற குறையை, அவர்கள் பேசிய திட்டங்களை எல்லாம் கருதிப் பார்க்கும்போது அது 68 கோடி ரூபாய் திட்டமாக இருப்பதை அவர்களே எண்ணிப் பார்த்து நாம் அவற்றில் பெரும்பாலானவற்றை உடனடியாகச் செய்ய முடியாது என்பதை உணருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

குறைகளாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, அந்தக் குறைகள் நிர்வாகத் துறையிலே உள்ள குறைகளாக இருக்குமானால், பொறுப்பு உடையவர்கள் நிறைவேற்றாத காரணத்தால் ஏற்பட்ட குறைகளாக இருக்குமானால் கடமை தவறியவர்களால் ஏற்பட்ட குறைகளாக இருக்குமானால் அவைகளைத் திருத்த நடவடிக்கையை எவ்வளவு விரைவாக எடுக்கக் கூடுமானாலும் நிச்சயமாக எடுப்பேன் என்று தெரிவிக்கிறேன்.

இந்த மானியத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்த திரு. சுவாமிதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிக அதிகமான அளவு பெரியம்மை இன்றையதினம் பரவியிருக்கிறது என்று தெரிவித்தார்கள். உடனே இலாகாவுக்குத் தெரிவித்தபோது, இதுவரை பெரியம்மை நோய் ஏற்பட்டிருப்பதாக ஒரு ஆதாரமும் இல்லை என்ற கருத்தையும், சிக்கன் பாக்ஸ் என்ற அந்த வகையான



தட்டம்மை அல்லது சின்ன அம்மை என்று சொல்லப்படுகிற அந்த வகையான அம்மைகள்தான் இருக்கின்றன என்றும், சாதாரணமாக பெரியம்மைக்குப் போடப்படுகிற தடுப்பு ஊசி அதைத் தடுப்பதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தப் பெரியம்மை இல்லாதபோது பெரியம்மை என்று எண்ணிக் கொண்டு அதனால் அச்சம் அடைய வேண்டாமென்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்குகின்றபோது திருமதி ஜோதி அம்மையார் அவர்கள்—அவர்களே, ஒரு காலத்தில் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர்கள்—தொடங்கிய காரணத்தால் அதற்காக ஒரு வகையில் மகிழ்ச்சியடைகிறேன். முடிக்கிறபோது இதய நோயில் போய் முடித்தார்கள் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள். நான் உள்ளபடியே தெரிவிக்க விரும்புகிற கருத்து என்று எண்ணுகிறேன்—இதய நோய் வருவதற்கே காரணம் பல பேருக்கு வருகிற கோபம், ஆத்திரம். ஆத்திரப் படுவது, கோபப்படுவது அரசியல் காரணமாக ஏற்படுவது கூட குறைய வேண்டும். உள்ளபடியே ஆத்திரப்படுபவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுவதை நம்புகிறேன்.

சென்னையில் இருக்கும் பொது மருத்துவ மனையில் கூட இதய நோய் தீர்க்க பெரும் அளவுக்கு உதவும் என்பதற்காக அப்படிப் பட்ட நோய் வருகிறபோது உடனடியாகக் கவனிப்பதற்கான மொபைல் வசதி—போக்குவரத்து வசதியோடு சேர்ந்த ஒரு அமைப்பு தேவைப்படுகிற காரணத்தால் அதை ஏற்படுத்த இன்டென்சிவ் கார்டியாலஜி பகுதியில் உள்ளவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று மாதம், ஆறு மாத காலத்தில் நன்கொடையாக 'ஒரு 'வான்' தருவதற்கு இந்தச் சென்னை மாநகர ஷெரிஃப் அவர்கள் முனைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறுமானால் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுடைய வீட்டிற்கே சென்று கவனித்து அவர்கள் அதிகம் பாதிக்கப்படாமல் கவனிக்க வாய்ப்பு ஏற்படும். கார்டியாலஜி பகுதியிலே இது கவனிக்கப்பட்டு வருவதாலும், 24 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு கருவிகள் வாங்கப்படுகிற நிலைமை இருப்பதால் மறுபடியும் சென்னையில் மருத்துவ மனையில் விரிவுபடுத்துவது என்பது மெல்ல மெல்லத்தான் விரிவுபடுத்த முடியும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு கூட மதுரை மருத்துவக் கல்லூரியில் மூன்றாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்த மாணவர் சென்ற ஆண்டு இதய நோய்க்கு ஆளான காரணத்தால், அங்கு போதுமான மருத்துவப் பாதுகாப்பு இல்லையென்ற காரணத்தால், அவருடைய நிலைமையின் பரிதாபத்தின் காரணமாக அவர் சென்னையிலேயே சேர்க்கப் படுவதற்கு இந்த இலாகாவால் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதிலே, அடிப்படையான காரணம் தேவையான மருத்துவ வசதி வழங்கப்

படவேண்டுமென்பதுதான். சென்னையிலே அந்தத் திட்டம் விரைவாக நிறைவேற முயற்சி இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அவசியமாக, அவசரமாகச் சொன்ன செய்திகள் பற்றித் தெரிவித்துவிட்டு அடுத்து நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—இந்தச் சுகாதாரத் துறைக்கும் மருத்துவத் துறைக்கும் 1966-67-ல் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 16,75,00,000 ஆகும். அதற்குப் பின்னர் 1970-71ல் மிக அதிகமாக விரிவடைந்து 26 கோடி, 27 கோடி அளவுக்கு உயர்ந்து இந்த ஆண்டு 34 கோடியாக உயர்ந்திருக்கிறது.

இதற்கு முன்னாலே எல்லாம் மொத்தம் பட்ஜட்டில், அரசாங்கத்தினுடைய வரவு செலவுத் திட்டத்தில் 6.3 அளவுக்குத்தான் விழுக்காடு இந்தச் சுகாதாரத் துறைக்குச் செலவழிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 8.4 விழுக்காடு இருந்தது. இந்த ஆண்டு 9.5 விழுக்காடாக ஆகி இருக்கிறது. இதனுடைய தேவைகளைக் கருதி பெருமுயற்சி எடுத்துக் கொள்கிற முதலமைச்சர் அவர்களால் அடுத்த ஆண்டு 10 விழுக்காடாக ஆக்க முடியும் என்று நம்புகிறேன். ஆக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும் உணர்ந்திருக்கிறேன். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்த வரையிலே எவ்வளவுதான் செலவழித்தாலும் மக்களுடைய எண்ணிக்கைப் பெருக்கம் காரணமாக ஏற்படும் விளைவை முன்னாலேயே நினைவூட்டி இருக்கிறேன். மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைத் தடுப்பது மாத்திரமல்லாமல் இந்தப் பொறுப்பைப் பங்கிட்டுக் கொள்ள வேறுபல துறைகளைச் சேர்ந்துள்ளவற்றையும் கொண்டு வந்தாக வேண்டியிருக்கிறது.

இந்தத் துறையில் எதை எடுத்துக் கொண்டாலும் மும்முனைப் போராட்டமாக நடத்தப்பட்டால் தவிர, இந்தத் துறையை நிச்சயமாகப் பயனுள்ள அளவுக்கு வளர்க்க முடியாது. மருந்துவம் என்று எடுத்துக் கொண்டு அலபதி வைத்தியத் துறையை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகின்றவர்கள் அந்தத் துறை டாக்டர்கள் மட்டும் வளருவதால் பல்வேறு முறைகளுக்கு இடம் கிடைக்காது என்பதை உணரவேண்டும். சித்த மருத்துவத்துறை நசித்துப் போய்விடும், ஆயுர்வேதம் கவனிப்பாரற்றுப் போய்விடும், யூனானி கேட்பாரற்றுப் போய்விடும். ஓமியோபதி அகதியாகும். எனவே, அரசாங்கத்தின் சார்பாக இந்த ஒரு துறையை மட்டும், இன்றைக்குக்கூட நூற்றுக்கு 93 பங்கு அலபதி துறையிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தும் இயல்பான நிலைமை இருக்கிறது. நாமாகத் தேடிக் கொண்டது, நாம் கைவிட முடியாத ஒன்றாக வளர்ந்திருக்கிறது, அவசியமாக இருக்கிறது. மற்றத் துறைகளில் சேர்ந்து செயல்படும் டாக்டர்களின் எண்ணிக்கை குறைந்து போகிறது என்ற காரணத்தால் கடந்த இரண்டு ஆண்டுகளாக சித்த மருத்துவத்தில் பி.ஐ.எம். பட்டம் பெற்றவர்கள் ஆண்டுக்கு 30 பேர் வெளியில் வருகிறார்கள். இப்போதே 30 பேருக்கு வேலை



கொடுக்கும் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். வருகிற ஆண்டிலும் 30 பேர் வருவார்கள் என்பதை எண்ணி இன்னொரு துறை வளர்ச்சி அடையாது ஒரே துறையை மட்டும் வளரவிடுவது சரியாக இருக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

டாக்டர்-பேஷண்ட் ரேஷியோ, நோயாளிக்கும் டாக்டர்களுக்கும் இடையே இருக்கும் விகிதாச்சாரம் எண்ணிக்கை 5,000—6,000-மாக இருக்கவேண்டுமென்றும், அது 10,000—12,000 மாக இருக்கிறது என்றும் இங்கே கூறினார்கள். மேல் நாட்டிலே 600 பேருக்கு ஒரு டாக்டர் என்ற விகிதாச்சாரம் இருக்கிறது. இதைச் சொல்பவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். அறிஞர்களை வைத்துத்தான், பட்டதாரிகளை வைத்துத்தான், டாக்டர் ஏ. எல். முதலியார் போன்றவர்களை வைத்துத்தான் நிபுணர்களை வைத்துத் தான் இந்த விகிதாச்சாரம் கணக்கிடப்பட்டிருக்கிறது.

கிராமங்களிலே இருக்கும் சித்த வைத்தியரைப் பற்றியோ, நல்ல ஹோமியோபதி டாக்டர்கள் பல பேர் திறமையாகப் பணியாற்றும் நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டோ சொல்லவில்லை. இன்று தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஹோமியோபதி டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் படிக்காதவர்கள் என்று யாராவது சொன்னால், அவர்களுக்கு நோய் வருகிறபோது, அதை குணமாக்க அவர்களால் முடியும் என்பதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். ஹோமியோபதி மருத்துவத்தால் கெடுதல் ஏற்படுவது இல்லை. சில பேருக்கு நன்மை ஏற்படாமல் இருக்கிறது. அந்த மருத்துவ முறை ஒரு தனித்தன்மை உடையது. இதைத் தெரிந்தவர்களால்தான் பாராட்ட முடியும்.

சித்த மருத்துவ முறை நல்ல தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி எடுத்துச் சொன்ன கருத்தை நான் போற்றி வரவேற்கிறேன். சித்த வைத்தியம் எவ்வளவோ தத்துவ முறையில் வளர்ந்தது என்றாலும், அலோப்பதி வைத்தியத்தின் வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெற முடியவில்லை. தனித் தன்மையைக் காட்ட வேண்டுமானால் இருக்கிற சித்த வைத்தியர்கள் பிழைப்பதற்கு, வாழ்வதற்கு இடம் அளித்தாக வேண்டும். இதையெல்லாம் கணக்கில் எடுத்துப் பார்த்தால் உள்ளபடியே இந்த விகிதாச்சாரம் குறைந்து விடும் என்ற அச்சத்திற்கு இடமில்லை.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். வைத்திய முறைகளில் மூன்று வித வைத்திய முறைகள் இருக்கின்றன. அல்லோபதி முறை மேல்நாட்டு முறை என்று சொல்லலாம். சித்தவைத்தியம் ஆயுர்வேதம், யூனானி போன்ற வளர்ந்த தத்துவ முறைகள் இருக்கின்றன. அதேபோல், ஹோமியோபதி, நாச்சுரோபதி என்று இன்னும் பல முறைகள் இருக்கின்றன. இவைகளெல்லாம் உணவு பழக்க வழக்கங்களைக்

கட்டுப்படுத்துவதன் மூலம் செய்கிறார்கள். இந்த மூன்று முறைகளும் பலவேறு இடங்களில் நாட்டில் இடம் பெற்று இருக்கின்றன. இன்னும் நல்ல வகையில் அவை முன்னேற நாட்டில் ஊக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரமான முறையில் மக்கள் வாழ்வதற்கு மூன்றுவிதமான முறைகள் இருக்கின்றன. ஒன்று, சுகாதார சூழ்நிலையை நன்கு நல்ல மக்கள் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். இரண்டு, நோய் வராமல் தடுக்கும் பாதுகாப்பு முறைகள், அதற்கான ஊசிகள் இவற்றைப் போட்டுக் கொள்ளவேண்டும். இந்தத் தடுப்பு ஊசிகள் மூலமாக, குழந்தைகளுக்கு வரும் பாலியோ நோய், குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான் நோய், இன்னும் மற்ற நோய்கள் வராமல் தடுக்கலாம் என்று சொல்கிறார்கள். இந்த ஊசிகளை மூன்று முறை போட்டுக்கொண்டால்தான் நோய் வராது இருக்கும் என்று சொல்கிறார்கள். அந்தத் தடுப்பு ஊசிகள் இப்போது கையாளப்பட்டு வருகின்றன. அவைகள் இன்னும் விரிவாகக் கையாளப்படவேண்டும். ஒரு குழந்தைக்கு ஒரு நாள் ஊசி போட்டுக்கொண்டவுடன் மறுநாள் வருவதில்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பழக்கத்தை விட்டு, மக்கள் இந்தத் தடுப்பு ஊசிகளைத் தவறாமல் போட்டுக்கொள்ளும் பழக்கம் வர வேண்டும்.

மூன்றாவதாக, மருந்து, நோய்த் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளுதல், இவற்றைத் தவிர நம்முடைய நாட்டு மக்கள் உணவுப் பழக்கத்திலும் மாற்றம் செய்து கொள்ளவேண்டும். அவர்களுக்கு ஏற்படுகிற நோய்க்குத் தக்கவாறு உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொண்டால்தான், அந்த நோயைத் தடுக்க முடியும். நம்முடைய நாட்டிலுள்ள மக்கள் உணவுப் பழக்கத்தில் மிகவும் குறைந்த சத்துள்ள உணவையே உட்கொள்கிறார்கள். சத்துள்ள உணவை உட்கொள்ளும் பழக்கத்தை அவர்கள் மேற்கொள்ளவில்லை, வசதிபடைத்தவர்கள்கூட அந்தப்பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. தவறான பழக்கம் நம்மிடையே ஓட்டுகிற அளவுக்கு, நல்ல பழக்கங்கள் நம்மிடத்தில் வருவதில்லை. இயந்திரத்தில் அரைப்பதால் அரிசியில் சத்து போய், அந்த அரிசியைக் களைவதால் அதிலுள்ள பி வைடமின் போய், கஞ்சி வடிப்பதால் அதிலுள்ள எஞ்சியிருக்கும் சத்தும் போய், நம்முடைய சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, அமைச்சராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, சக்கையைத்தான் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறோம். அரிசியில் கிடைக்கும் சத்தைத் சாப்பிடுகிறபோது ஏற்படுகிற உடல் ஊட்டம் இதனால் தடைப்படுகிறது. குழந்தைகளுக்குப் போதுமான பால் கொடுக்க முடிவதில்லை. பழம், பால், முட்டை சேர்த்துக்கொள்வதில்லை. குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு சேரவில்லை என்று சொன்னால், அவர்கள் எப்படி உடல் ஊட்டம் உள்ளவர்களாக இருக்க முடியும்? ஆனால் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு



ஒரு வேளை சத்துள்ள உணவளிக்கும் திட்டத்தை, கேர் நிறுவனத்தின் உதவியோடும், அரசின் செலவிலும் இந்த அரசு செய்து வருகிறது. நம்முடைய சமுதாயம் சத்துள்ள உணவை உட்கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டால் தான் நோயற்ற வாழ்வு வாழ முடியும் என்பதை சுகாதார இலாகா பிரசாரம் செய்யவேண்டும்.

இங்கே பேசுகிறபோது ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். நோயாளிகளின் தேவைக்கு ஏற்ப, நர்ஸ்களின் எண்ணிக்கை இல்லை என்று சொன்னார்கள். உண்மை என்று ஒப்புக்கொள்கிறேன். இன்று நோயாளிகள் அனுமதிக்கும் எண்ணிக்கை 5 விழுக்காடு என்றால், நாளை அது 10 விழுக்காடாக மாறுகிறது. நோயாளிகளின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 25 விழுக்காடாகப் பெருகுகிறது. நோயாளிகள் பெருகும் அளவுக்கு நர்ஸ்கள் நியமிக்க முடியாது. நர்ஸ்கள் நியமிக்கிற அளவுக்கு படுக்கைகள் இருக்கவேண்டும். படுக்கையில் பாதி பேரும், பாயில் பாதி பேரும் இருக்கிறார்கள். படுக்கைகளை எந்த அளவில் பெருக்க வேண்டுமோ அந்த அளவில் பெருக்குகிறோம். நோயாளிகள் இன்று அதிகமான அளவில் மருத்துவ மனைகளில் கவனிக்கப் படுகிறார்கள். ஒரு காலத்தில் 500 வெளி நோயாளிகள் ஒரு மருத்துவ மனையில் கவனிக்கப்பட்டார்கள் என்றால், இன்று 750 நோயாளிகள் கவனிக்கப்படுகிறார்கள். 1,000 நோயாளிகள் கவனிக்கப்பட்டு வந்த இடத்திலே, இன்று 1,500 நோயாளிகள் கவனிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமையைக் குறைக்கும் வகையில் பல இடங்களிலே புதிய சிறிய மருத்துவமனைகள் ஏற்படுத்துகிறோம். இது ஒரு வகையில் அந்த நிலைமையைக் கட்டுப் படுத்துகிறது.

மாவட்ட மருத்துவ மனைகளில் எல்லாம் சித்த மருத்துவ முறையில் பயின்று வந்த பி.ஐ.எம். பட்டதாரிகளுக்கு வேலை அளிக்கும் வகையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இதிலே 300 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். இதனால் ஒரு மருத்துவ மனைக்கு 1,500 பேர் செல்கிறார்கள் என்று சொன்னால், 300 பேர் சித்த வைத்திய முறைக்கு அனுப்பப் படுவதால் 1,200 பேர் மற்ற வைத்திய சிகிச்சை பெறுகிறார்கள். இப்படி எல்லாம் முயற்சிகள் எடுத்து நோயாளிகளுக்கு வசதி செய்து கொடுக்கிறோம். ஆனாலும், பேஷண்ட்-நர்ஸஸ்-டாக்டர்கள் விகிதாச்சார இடைவெளி பெருகித்தான் வருகிறது. ஒன்று நீண்டு கொண்டே போனால், மற்றொன்று குறைந்து விடுகிறது. இந்த பிரபோர்ஷனைச் சரி செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நிதிப் பற்றாக்குறையை அரசாங்கம் தாங்குவது போல், ஏழை மக்கள் தாங்கிக்கொள்வது போல், நோயாளிகள் மருத்துவ மனையில் உள்ள சில கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளவேண்டும். நர்ஸ்கள் நோயாளிகள் ஒன்றுக்கு 10 என்பதை 15 அளவாகத்

தாங்கிக் கொள்ள முன்வர வேண்டும். டாக்டர்கள் நோயாளிகள் ஒன்றுக்கு 100 என்பதை 150 ஆக, 200 ஆகத் தாங்கிக்கொள்ள முன்வர வேண்டும். இப்படி சமுதாயச் சுமையைப் பங்கிட்டுக் கொள்வதன் மூலம் நிலைமையை சரிக் கட்ட முடியும். ஒரு தலையில் இருக்கும் சுமையை மட்டும் இறக்க முடியாது, என்று அங்கத்தினர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று சொல்கிற போது, நாம் வசதி இருக்கிறதா நிதிநிலை அறிக்கையில் என்று பார்த்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. மருத்துவ மனைகளில், குறிப்பாக, கல்லூரிகளில் இருக்கும் மருத்துவ மனைகளில் மட்டும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அளவுக்கு செலவு செய்யப்படுகிறது. கல்லூரிகளில் நடத்தப்படும் மருத்துவ மனைகளை விரிவுபடுத்தி மக்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், அரசாங்கம் மிகவும் கஷ்டத்தைத் தாங்கிக் கொள்கிறது. இதையெல்லாம் அரசாங்கம்தான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது தத்துவ முறைப்படி அது மிகவும் நியாயமான வாதமாகும். சில முறைப்படி அரசாங்கம் மக்களுடைய முன்னேற்றத்திற்கு செய்கிறது. மக்கள் தருகிற வரிப்பணத்திலிருந்துதான் சில திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டிய காரணத்தால் அரசாங்கம் தனியாக நின்று அவற்றை நிறைவேற்றுகிறபோது முழு அளவுக்கு நிறைவேற்றமுடியாமல் போய்விடுகிறது என்று சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். வெளிநாட்டு பாதிரிமார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இன்றைய காலை அலுவல்களை இத்தோடு முடித்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, இன்னும்
பி. ப. 1-30 அரை மணி நேரம் அவையின் நடவடிக்கைகளை நீட்டிக்க வேண்டும் என்று தங்கள் மூலம் அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் மட்டும் தனியாக நின்று செயல்படுத்துகிறார்கள் என்றால், ஒரு அளவுக்குத்தான் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும். முழு அளவில் செய்வதில் காலதாமதம் இருக்கிறது. அந்த நிலையில், வெளிநாட்டுப் பாதிரிமார்கள், தனிப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், முன்னணியில் இருந்து மிகப் பெரிய சமூகத் தொண்டு செய்கிறார்கள். அப்படி பெரம்பூருக்குப் பக்கத்தில், கடந்த இருபது ஆண்டுக்காலமாக, அங்கேயே தங்கி, ஒரு பெரியவர் தொழு நோய் வந்தவர்களுக்குத் தொண்டு செய்து, அங்கே 300 குடும்பங்களையும், அனாதையாக விடப்பட்டவர்களையும் காப்பாற்றி வருகிறார்கள். அதற்குப் பெயர் தயா சதனம் என்பது. அந்தப் பெயருள்ள இல்லம் 300 குழந்தைகள் கொண்ட குடும்பங்கள், 120 அனாதைகள் இவர்களைக் காப்பாற்றி வருகிறது. அந்தப் பெருந்தொண்டை நிறைவேற்றிவருகிறார்கள். அப்படித்



தமிழ்நாட்டில் 20, 30 இடங்களில் வெளியார் நடத்தும் மருத்துவ மனைகள் இருக்கின்றன. அவர்களுடைய தொண்டு உணர்ச்சியைப் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட தொண்டு செய்வதை நாட்டில் பெருக்கினால்—தமிழ் நாட்டில் இருக்கும் இக்கட்டான பிரச்சனைகளைக் கவனத்தில் கொள்ள விரும்புகிறேன்—மக்களுடைய தேவைகளை இன்னும் 10 ஆண்டுக்காலத்தில் சந்திக்க முடியும். அப்படிச் சந்திக்க அரசாங்க முயற்சியினாலும் உள்ளாட்சிகளுடைய முயற்சிகளினாலும் செய்வது ஒரு புறமிருக்க ‘ப்ரைவேட் ஏஜன்ஸிஸ்’ தனிப்பட்ட அமைப்புகள் மூலமும் செய்யப்பட வேண்டும்.

அவர்கள் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி நடத்த பெரும் ஊக்கத்தோடு முன்வரவேண்டும். செல்வம் உள்ளவர்கள் செய்யலாம் என்று எதிர்பார்க்க முடியும். சொல்லலாம், செல்வம் உள்ளவர்கள் சிலருக்குத்தான் கட்டுப்பட்டவர்கள், மற்றவர்களுக்குக் கட்டுப்படமாட்டார்கள் என்று. எல்லா செல்வர்களையும் நான் எதிர்பார்க்கவில்லை. நல்ல உள்ளம் படைத்த செல்வர்களை நல்ல பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு மருத்துவ மனை நிறுவ மூன்று முதல் ஐந்து லட்சம் ரூபாய் வரை வேண்டியிருக்கிறது. ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அங்கே உள்ள டாக்டர்களுக்கு இல்லங்கள் கட்டித் தருவதற்கு ஒன்று அல்லது ஒன்றேகால் லட்சம் ரூபாய் வேண்டும். யாராவது நன்கொடை தர முன்வந்தால், அவர்களுடைய பெயரிலேயே மருத்துவ மனையை நிறுவி, அரசாங்கம் இடம் தந்து கூட மருத்துவ மனையைக் கட்டிக்கொடுத்து, அவருடைய பெயரை என்றைக்கும் நிலைநாட்ட முயற்சிக்கும். அவர்கள் மூலமாக வேறு மக்களுக்குப் பெரும் நன்மைகள் கிடைக்கும். அந்த வகையில் முன்வருவோரை வரவேற்க விரும்புகிறேன்.

அதே போல். மற்றொன்று, இங்கே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்ற திட்டம் சென்னையிலே அடையாற்றிலே, டாக்டர் சஞ்ஜீவி என்பவருடைய முயற்சியால், நன்கொடையால், ஒத்துழைப்பால், சிறந்த மருத்துவ மனையாக விளங்கி வருவதோடு, அந்த மக்கள் நலக்காப்பு இயக்கம் என்ற அமைப்பு மூலமாக அந்த வட்டார மக்கள் கிராம மக்கள் இவர்களில் 10 20 பேர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 ரூபாய் வருமானம் என்றால் 50 காசு சந்தா என்றும், 200 ரூபாய் வருமானம் என்றால் ஒரு ரூபாய் சந்தா என்றும், 500 ரூபாய் வருமானத்திற்கு 2, 3 ரூபாய் சந்தா என்றும் அந்த முறையை ஏற்படுத்தி, வீடுதோறும் சென்று கவனிக்க டாக்டரை நியமித்து, 1,000 குடும்பங்களைக் கவனிக்க முயற்சி எடுத்திருக்கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் பொதுமக்கள் உணவைத் தேடிக் கொள்வது போல், உடையைத் தேடிக் கொள்வது போல், முடிந்த அளவுக்கு குடியிருப்பைத் தேடிக் கொள்வது போல், முடிந்த அளவுக்கு

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 3

உடல் நலத்தையும் பாதுகாத்துக்கொள்ள ஒரு விழுக்காடு அளவாவது இன்றியமையாதது. அதைக் கடமையாகச் செய்ய வேண்டும். நூறு ரூபாய் சம்பாதிக்கிறோம் என்றால் அதில் ஒரு ரூபாய் போடுவதில் இழப்பு ஒன்றும் இல்லை. ஆனால் பெறுவது ஏராளம். எனவே அந்த வகையில் செயல்படவேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஈ.எஸ்.ஐ. யில் அப்படி முறையிருக்கிறது என்று சொல்கிறார்கள், வரவேற்கிறேன். அது அரசாங்கத்தின் ஆதரவும் பெரு முயற்சியும் சேர்ந்து நடைபெறுகிறது. ஆனால் நான் சொல்கிற திட்டத்திற்கு அரசாங்கத்தின் தயவே தேவையில்லை, அரசாங்க டாக்டர்கள் தேவையில்லை. நாமாகவே அதை நிறைவேற்ற முடியும். சென்னையிலே நிறைவேற்றி நடப்பதை ஆதரித்துவிட்டு. அதேபோல சட்ட மன்ற உறுப்பினர் திரு. பொன்சொக்கலிங்கத்தினிடத்தில், சிதம்பரத்திலுள்ள முக்கியமான டாக்டர் ரங்கசாமி அவர்களின் உறுதுணையோடு அப்படிப்பட்ட திட்டத்தை சிதம்பரத்திலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்களும் அண்மையில் அந்தத் திட்டத்தைத் துவக்கிவைப்பார்கள் என்று நம்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், இன்னும் பொதுமக்களோடு தொடர்பு உள்ளவர்களும் இப்படிப்பட்ட இயக்கத்தை நடத்தினால், நலமாக இருக்கும்.

நம்முடைய கிராம மக்கள் மூன்று உண்மைகளை உணர்ந்தே ஆக வேண்டும். ஒன்று உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொள்ளாத வரையில் உடல் நலத்தைக் காப்பது முடியாது. இரண்டாவதாக, தவறான தீங்கான பழக்கங்களால் நோயை வரவழைத்துக் கொள்வது. தீங்கான பழக்கங்கள் என்ன என்பதை நான் விளக்க விரும்பவில்லை சொன்னாலே உறுப்பினர்களுக்குப் புரியும். மூன்றாவதாக, பெரியவர்கள் தங்களுக்கு உடல் நலம் குறைந்த காலத்தில் மருந்து தேடுகிறார்கள். ஆனால் தங்கள் குழந்தைகளுக்கு உள்ள உடல் நலம் பற்றி மறந்தே விடுகிறார்கள். 'டெபிஸிட் டயட்' காரணமாக ஏற்படும் விளைவுகள் தமிழ் நாட்டில் ஐந்து லட்சம் குழந்தைகள் கண் பார்வையில் கெடுதல் அடைகிறார்கள் என்று கண் பார்வைத் துறையில் நிபுணரான டாக்டர் வெங்கடசாமி அவர்கள் தெரிவித்தார்கள். ஐந்து லட்சம் குழந்தைகளுக்கும் ஒரு ஆண்டுக்குத் திட்டமிட்டு, மாவட்டத்திற்கு 20,000 என்ற அளவிலாவது மருத்துவ வசதி செய்யாத வரையில், ஐந்து லட்சம் குழந்தைகளும் கண் கெடுவார்கள். மருத்துவ வசதி செய்தால்தான் இந்த ஐந்து லட்சம் குழந்தைகளும் கண் குருடு ஆகாமல் தப்புவார்கள். இல்லையென்றால் கண் குருடு ஆகும் நிலை தான் பத்து ஆண்டில் வரலாம் என்றும் சொன்னார்கள்.

சென்னையில் உயர் நிலைப் பள்ளிகளில் 10, 12 வயது உள்ள குழந்தைகள் விரலில் புண் ஏற்பட்டிருந்தால், காயம் இருந்தால், இடித்துவிட்டது அதனால் வந்த புண், காயம் என்பார்கள். அதைப்



1971 ஜூலை 3] [திரு. க. அன்பழகன்]

பரிசோதனை செய்து பார்க்க வேண்டும், ஏன் புண்கள் காயங்கள் வருகின்றன என்று. அவை தொழுநோய்ச் சின்னங்களாக இருந்தால் அதைத் தடுக்க வேண்டும், அதற்கு முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு டாக்டர் தெரிவித்தார். இப்படி எல்லாவற்றையும் சேர்த்து வைத்துப் பார்த்தால், சமுதாயம் முழுமையில நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவுப் பழக்கத்தில், திட்டமிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். வைத்திய வசதியையெல்லாம் மக்கள் தாங்களே முன்னோடியாக இருந்து, நிறைவேற்றும் திட்டங்களை வரவேற்கவேண்டும், வரவேற்குமாறு செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதையொட்டி, சொல்ல விரும்புகிறேன் குடிநீர்த் திட்டம் பற்றி குடிநீர்த் திட்டம் நாடெங்கும் நிறைவேற்றப் படவேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. கடன் தருவதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. தமிழ் நாடு வாட்டர் அண்ட் ட்ரெய்னேஜ் போர்டு என்று ஏற்படுத்தியிருக்கிற அமைப்பின் மூலம், தனிப்பட்ட பஞ்சாயத்துக்கள், ஊராட்சி மன்றங்கள், குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஆராயப்பட்டு எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் பார்த்து இத்தனை ஆண்டுக்காலத்தில் கடனைத் தரலாம் என்று கணக்கிட்டு, பற்றாக்குறை உள்ள ஊராட்சியாக இருந்தால், அதற்கு பத்தில் ஒன்று அல்லது ஐந்தில் ஒன்று கிராண்டாகவும் வழங்கி மிச்சம் இருக்கிறதை கடனாகவும் கொடுக்க திட்டம் நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. எந்த ஒரு திட்டத்தையும், ஒரு ஆண்டு காலத்தில், எந்த அரசும் நிறைவேற்றிவிட முடியாது. எனவே, இதை நான் வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம், பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம் என்றாலும், எடுக்கும் அளவுக்குக் கொண்டுவரவில்லை என்றார்கள். பல்வேறு ஊராட்சித் திட்டங்கள் எடுக்கப் படவில்லை என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் உடனடியாகப் பரிசிலனை செய்ய முடியாவிட்டாலும், திரு. முருகையன் குறிப்பிட்ட போளூர் வட்டத்தில் நரம்புச் சிலந்தி வியாதியைத் தடுக்க குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றினால் தான் முடியும் என்பதை, இந்த நரம்புச் சிலந்தி வியாதியைப் பொறுத்தவரையில் இலாகாவினரைக் கொண்டு உடனடியாக கவனித்து, என்ன செய்யமுடியும் என்று பார்க்கிறேன்.

பெரும்பாலான திட்டங்கள் உள்ளாட்சி மன்றங்களில் தொடங்கப் பட்டு, அரசுக்கு அனுப்பப் பட்டு, அவை பரிசிலிக்கப் பட்டு இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள வாட்டர் போர்டுக்கு அனுப்பப் பட்டு, அவர்கள் புள்ளிவிவரங்கள் சேகரித்து, ஏற்றுக் கொள்ளப் பட்டதற்குப் பின்னால், கடன்கள் வழங்கப்பட்டு, திட்டங்கள் துவங்கும்.

[திரு. க. அன்பழகன்] [1971 ஜூலை 3

எனவே, இந்தக் குடிநீர் திட்டத்திற்காகப் பல நண்பர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஆராயப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்திட்டங்களுக்கு ஊராட்சி மன்றங்கள் நல்ல ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் அருகே மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்று இதைப் பரிசிலிக்கக் கூட பணம் இல்லை என்று சொன்னார்கள். இன்னும் ஒன்று இதை நிறைவேற்ற வசதி இல்லை என்று பதில் சொல்லி இருக்கிறது. இன்னும் ஒன்று பத்மனாபபுரமோ ஏதோ ஒன்று இன்னும் பதில் எழுதவில்லை. ஆகவே, இதைக்கூட ஏற்றுக் கொள்ளாதபோது, அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாது. அரசாங்கமும் இந்தக் கடனை வாங்கித் தான் தருகிறது. 30 ஆண்டுகாலத்தில் திருப்பித்தர வேண்டும். தகுந்த அளவு வட்டி விகிதத்தில் என்று சொல்லுகிறபோது அந்தக் குடிநீர்ப் பயனை பெறுகிற மக்கள் பொறுப்புணர்ச்சியோடு முன் வந்தால்தான் நிறைவேற்ற முடியும்.

அதைப் போலத்தான் மருத்துவ மனைகள் ரூரல் டிஸ்பென்சரீஸ் மாவட்ட ஆட்சிக் காலத்தில், பஞ்சாயத்து யூனியன் காலத்தில் துவக்கப்பட்ட மருத்துவ மனைகள் சரியாக நடத்தப்படவில்லை. டாக்டர்கள் இல்லை, மருந்துகள் இல்லை, போதுமான ஆட்கள் இல்லை, கட்டிடம் இல்லை. இவற்றை எல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் கேட்டார்கள். இன்றைக்கு இது ஒரு புதிய குறையாகச் சொல்லப்படவில்லை. 10 ஆண்டுகாலமாக இருந்து வருகிற கருத்து இது. ஆண்டுக்கு 10 மருத்துவ மனைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் புதிய மருத்துவ மனைகள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகின்றேன், பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகின்ற மருத்துவ மனைகள்கூட பெரிய மருத்துவ மனையாக இருந்தால் எட்டாயிரம் ரூபாய் ஆண்டு தோறும் கிராண்ட் வழங்கப்படுகிறது. மற்றச் செலவுகளை ஏற்றுக்கொண்டாலும் 8,000 ரூபாய் தருகிறோம். இன்னும் சில மருத்துவ மனைகளுக்கு 5,000 ரூபாய் தருகிறோம். சில ரூரல் டிஸ்பென்சரிகளுக்கு 1,500 ரூபாய் வழங்கப்படுகிறது. சில ஊராட்சி ஒன்றியங்கள் போட்டு அனுப்பும் தீர்மானங்கள் பேரில் சில மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ளுகிறது.

சில வீடுகளில் நிறையக் குழந்தைகளைப் பெற்றுவிடுகின்ற பெண்கள் நாத்தனாரைப் பார்த்து, மைத்துனியைப் பார்த்து, மாமியாரைப் பார்த்து குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதைப் போல இன்றைய தினம் மருத்துவ மனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஊராட்சி மன்றங்களின் வருமானத்திலிருந்து எட்டில் ஒரு பங்காவது சுகாதாரத் துறைக்குச் செலவழிக்க



1971 ஜூலை 3] [திரு. க. அன்பழகன்]

வேண்டும் என்று வசதி இருக்கின்றபோது அந்த அடிப்படையில் செலவு செய்யாமல் இருக்கின்ற நிலைமை, அதே போல 1½ ரூபாய் செஸ் வரி போடலாம் என்று அதிகாரம் இருந்தாலும் 1½ ரூபாய் போடாமல் 1 ரூபாய் விதித்து விட்டு மருத்துவ மனைக்குச் செல வழிக்காமல் இருக்கின்ற நிலைமை எல்லாம் இருப்பதால்தான் இன்றைக்கு மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறபோது நாங்கள் எடுத்துக்கொள்ளாமலும் இல்லை. எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதற்கு எங்களுக்கும் சக்தி இல்லை. ஒவ்வொன்றாக எடுப்போம், முறையாக எடுப்போம். மேலும் இந்த 10 ஆண்டுக் காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெரும் அளவு, 383 என்று கருதுகிறேன் . . . 374 ஒன்றியங்களில் பல இடங்களில் மருத்துவ மனைகள் தோன்றி இருக்கின்றன. அவைகளில் சில ஏற்கனவே தோன்றி இருக்கின்ற காரணத்தால் அப்பகுதியில் உள்ள கிராம மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தும் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மருத்துவ மனைகளில் போதுமான மருந்து அளிக்கப்படுவதில்லை. ஐயாயிரம் ரூபாய்க்குத்தான் மருந்துகள் வழங்கப்படுகின்றன என்று சொன்னார்கள். ஏற்கனவே அவைகளுக்கு 4,500 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன. இன்றைய தினம் அந்த 6,000 ரூபாய் 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருந்துகள் முறைப்படி அரசாங்கத்தால் வழங்கப் படுகின்றன.

இதைத் தவிர அங்கே இருக்கிற டாக்டர்களுக்கும் உதவியாக இருக்கிற மற்றவர்களுக்காகவும் செலவழிக்கிற தொகை 25,000 ரூபாய். ஆகவே ஒரு ஆண்டிற்கு 35,000—40,000 ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் 374 ஏறத்தாழ—எண்ணிக்கையில் சிறு வித்தியாசம் இருக்கலாம்—அதற்கான பேப்பரைப் பார்த்துப் படித்துக்காட்டுகிற அளவு உங்கள் நல்ல நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால், கருத்தில் தவறு இருக்கலாகாது என்ற அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். 374 இடங்களில் இப்படிப்பட்ட விரிவு செய்யப்பட்ட ஆரம்ப மருத்துவ மனைகள் இயங்கி வருகின்றன. எந்த இடத்தில் அரசாங்கம் எடுத்துக்கொண்டாலும் தொடர்ந்து அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்கான புதுச் செலவுகள் ஏற்பட்டு திரும்பத் திரும்ப செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்ற காரணத்தால் பெரும் அளவு மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்காக என ஆரம்பிக்கப்பட்ட கட்டடங்கள் முடிகிற கட்டத்தில் உள்ள கட்டடங்கள் எண்ணிக்கை 99. காண்ட்ராக்ட் விடப்பட்ட நிலையில் உள்ள கட்டடங்கள் 129. காண்ட்ராக்டிற்கு விடக் கூடிய கட்டத்தில் உள்ளவை 27. இன்னும் 24 இடங்களில், 'சைட் நாட்

அவையிலப்பில்'. ஐந்து ஏக்கரா நிலம் அந்த ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக வழங்கப்படாத காரணத்தால் அவை தீர்மானிக்கப் படாமல் இருக்கின்றன. இவைகளில் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஏற்படுத்தப்படுகின்ற அமைப்பும் சேர்ந்திருக்கிறது.

இன்னும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆரம்பச் சுகாதார நிலைய கட்டடத்திற்காகச் சென்ற ஆண்டு அதிகம் செலவழிக்கவில்லை என்று யாராவது கருதினால் அது சரியானது அல்ல. இந்த ஆண்டு கூட 20 பிரைமரி ஹெல்த் செண்டருக்காக 36 லட்சம் ரூபாய் கட்டடங்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போல ஒரு அங்கத்தினர் ஒரு குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்கூட ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். அந்த ஒன்றியத்திலிருந்து 5 ஏக்கரா நிலமும் தரவில்லை, அதற்கான கட்டடங்களும் தரவில்லை, 10 ஆயிரம் ரூபாய் முன் பணமும் தரவில்லை. இந்த இரண்டும் இல்லாத நிலையில் அரசாங்கம் இதைப்பற்றிப் பரிசீலிப்பதற்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சித்த மருத்துவ வளர்ச்சிக்காக அரசாங்கம் ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள கோவில்கள் ஒரு சித்த மருத்துவ நிலையத்தை அந்தக் கோவிலின் சார்பாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட கோவில்களில் சில முன் வந்திருக்கின்றன. அறநிலைய ஆணையாளரோடு பேசியபோது விரைவில் தஞ்சை மாவட்டத்தில் 20 இடங்களுக்குக் குறையாமல் சித்த மருத்துவ நிலையங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதாக அந்தவகையில் கோவில்கள் முன் வந்து இருப்பதாகத் தெரிவித்தார்கள். மற்ற இடங்களில் 10 பேராவது முன் வருவார்கள். பல இடங்களில் அப்படிப்பட்ட சித்த மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன். சித்த ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் திருநெல்வேலி பாளையங்கோட்டையில் ஆராய்ச்சி நடத்தப் பட்டு வருகிறது. தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருந்து எடுக்கப் பட்ட ஏட்டுச்சுவடிகளில் இருந்து சித்த வைத்திய முறைகளுக்கான பல விவரங்களைத் தொகுத்து எனக்குப் பேராசிரியராக இருந்த திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஒரு நூலாக எழுதிக்கொண்டு வருகிறார். அதை விளக்கமாக எழுதும் வகையில் சென்னையில் அரசாங்கத்தின் சார்பாக ஒரு சிறந்த டாக்டர் அந்த நூலுக்குத் தெளிவுரை எழுதும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இதை விரிவு படுத்தும் வகையில் சித்தமுறைக்குப் புத்துயிர் அளிப்பதற்காகத் தமிழக அரசு ஒரு ஆலோசனைக் குழு அமைத்திருக்கிறது. அதிலே திரு. மணலி கந்தசாமி அவர்களும் அண்மையில் இடம் பெற்றிருக் கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இதை மேலும் விரிவு படுத்தும் முயற்சி செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.



சென்னையில் அல்லோபதி முறையில் நவீன ஆராய்ச்சிகள் செய்யப்படும்போது அவைகளில் இருந்து கிடைக்கும் விவரங்கள் சித்த மருத்துவ ஆராய்ச்சியை பாளையங்கோட்டையில் செய்யப் படும் ஆராய்ச்சியை வலிவுபடுத்தும், ஒழுங்குப்படுத்தும் என்ற நிலைமை வருகிறபோது சென்னையில் ஒரு கல்லூரி ஏற்படுத்த முடியும். அது திருநெல்வேலியில் இருக்கவேண்டும் என்றால் அது பட்டப்படிப்பாக இல்லாமல் டிப்ளமா கோர்ஸாக வைத்துக் கொண்டு அதிலே சேர்ந்தவர்களைக் கொண்டு சென்னையில் பட்டப்படிப்பு ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறோம், எதிர்ப்பு இல்லாமல் இருந்தால்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எங்கள் ஆதரவு உண்டு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** திருமதி அனந்தநாயகி ஆதரவு எந்த அளவு பயனளிக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், அவருடைய ஆதரவு உள்ளபடியே பயன் தரும் என்று நம்புகிறேன். நல்ல காரியங்களை அவர்கள் கெடுக்காமல் இருந்தாலேயே நாட்டிலே வளர்ச்சி தானாக ஏற்படும். (சிரிப்பு)

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** நல்ல காரியங்களைக் கட்டாய மாகக் கெடுக்க மாட்டோம் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தக் கல்லூரி ஏற்படுத்த அதுவும் செலவு ஏற்படும் பொழுது அரசாங்கம் 5 அல்லது 7 லட்சம் ரூபாயை ஒதுக்கியும்கூட, சில நேரங்களிலே அவைகள் எல்லாம் இடையூறாகவே மாறியிருக்கிறது. எனவே, அதற்காக பழனியில் உள்ள தேவஸ்தானத்தையும், அங்கிருக்கும் அறநிலைய காவலர் களையும் அணுகி அந்த பழனி கோயில் பெயரையே வைத்து அந்த மருத்துவ நிலையத்திற்கான கட்டடம் எழுப்புகிறோம், நீங்கள் தரும் தொகையைத் தரவேண்டும் என்று கேட்டிருந்தோம். அவர்கள் வாய்மொழியாக 5 இலட்சம் ரூபாய் அளிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னையில் உள்ள இந்திய சித்த மருத்துவ மனையுடன் ஒட்டி இது ஏற்படவேண்டும். அதற்குப் பக்கத்திலேயே கல்லூரி அமைந்து விரிவுபடுத்த அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. எனவே, நல்ல முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படும், இதனால் பயன் ஏற்படும் என்று நம்புகிறோம்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொன்னதைப் போல், "மிக நல்ல மருந்துகள்" என்று அவர்கள் கண்டறிந்தவற்றை, அதாவது குஷ்ட நோய்க்கு என்று ஒரு நல்ல மருந்திருக்கிறது. என்று சொன்னார்கள். மேலும், அந்த நோயாளிகளுக்குக் கண் குருட்டுத்தனம் ஏற்படுவதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள்.

குஷ்ட நோய் பரவுவதைப் பார்த்தால், அது தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலே இருக்கும் மக்களிடத்திலே 10 பேருக்கு ஒருவர், 20 பேருக்கு ஒருவர் அல்லது

இருவர் பாதிக்கப்படும் அளவிலே இருக்கிறது. அந்த நோய்க்கு தெளிவான மருந்திருக்கிறது என்று சொல்ல முடிவதில்லை. குஷ்ட நோயிலே பல வகைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். எனவே, திரு. கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொன்ன மருந்து பற்றி உடனடியாக அரசாங்கத்திற்கு மருந்து விளக்கத்தை அனுப்ப வேண்டும். மேலும், இதுபற்றி அவர்கள் பத்திரிகைகளிலே அருமையான உண்மைகளை எழுதி, மக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல், சித்த மருத்துவத்திற்காக ஒரு மசோதா திருமதி ஜோதி அம்மாள் அவர்கள் அமைச்சராக இருந்த பொழுது, கொண்டுவரப்பட்டது. இந்த சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யூனானி வைத்தியம் ஆகியவற்றின் மீது முதலிலே மத்திய அரசாங்கம் ஒரு ஆலோசனை தெரிவித்திருந்தது. ஆனால், இங்கே அதற்கு மாறாக 'மாற்று ஆலோசனை' தெரிவித்திருந்தார்கள். எனவே, அது பற்றி எல்லாம் தனித்தனியாகக் கொண்டு வரவேண்டும் என்றார்கள். அதற்காக ஒரு பொறுக்குக் குழுவும் அமைக்கப்பட்டது. ஆனால், அந்த ஒரு பொறுக்குக் குழு தொடர்ந்து பணியாற்ற முடியாமல் நின்று விட்டது. மறுபடியும் மத்திய அரசாங்கத்திலே தனித்தனியாக அந்த வைத்திய முறைகளுக்கு ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே, அதே முறையிலே தமிழ் நாட்டிலே ஒரு மசோதாவை சித்த மருத்துவத்திற்காகக் கொண்டு வருவதாக இருந்தால், அது போதுமானது. "ஆல் இண்டியா ரிஜிஸ்ட்டிரேஷன்" என்ற முறையில் தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் அந்தச் சட்டத்தின்படி பதிவு செய்து கொள்ளலாம் என்றிருக்கிறது. அப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டுமானால், நிச்சயமாக இந்த அவையில் கொண்டு வர முயற்சி எடுப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்படி இல்லையென்றால், அடுத்த தொடர் கூட்டத்திலேயாவது அதற்கான மசோதாவைக் கொண்டு வர முடியும் என்று நம்புகிறேன்.

ஹோமியோபதி மருத்துவ முறையைப் பற்றி, இந்தத் தொடர் கூட்டத்திலே ஒரு மசோதா கொண்டு வரப்படும். அந்த ஹோமியோபதி மருத்துவ முறை முறைப்படுத்தப்படவில்லை, அதற்காக ஒரு கல்லூரி ஏற்படுத்தப்படவில்லை என்று பலரும் தெரிவித்திருக்கிறார்கள் இந்த அவையிலே. இவை எல்லாவற்றையும் விட நான் ஒன்றை சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த அரசாங்கம் மக்களுக்காக, ஏழைகளுக்காக, தொழிலாளர்களுக்காக எவ்வளவு இடையூறுகள் இருந்தாலும் அவற்றை எல்லாம் கடந்து சென்று பணியாற்ற என்றைக்கும் தயாராக இருந்து வந்திருக்கிறது. அப்படியே, இன்னும் தொடர்ந்து பணியாற்றும். அப்படிப் பணியாற்றும் பொழுது, சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித் துறைகளிலே உறுப்பினர்களாக இருப்பவர்களும் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தர



வேண்டும். அரசியலுக்கு அப்பாற்பட்டு, நாட்டு மக்களின் பெரும் துன்பத்தைத் துடைக்கின்ற ஒரு தீவிர பணியைதான் இந்தத் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் துறைக்கு உங்கள் ஒத்துழைப்பு இருக்குமானால், எந்த அளவுக்குக் கிராமத்து மக்களுக்கு நன்மைசெய்ய முடியுமோ அந்த அளவுக்கு நன்மை செய்ய முயற்சி எடுத்துக் கொள்வோம் என்று இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலே ஒன்றுதான், இந்த ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்திலே கீரப்பாளையம் பஞ்சாயத்து ஒன்றியத்திலே முதலமைச்சர் பிறந்த நாளையொட்டி "மக்கள் நலத் திட்டம்" என்ற ஒரு இன்டென்சிவ் ஸ்கீமை அங்கே உள்ள ஒன்றியத்திலே பணியாற்றுகின்ற டாக்டர்களும், சுகாதார அலுவலர்களும் சேர்ந்து ஏறத்தாழ 87,000 மக்களுக்கு, அவர்கள் குடியிருக்கின்ற 90 கிராமங்களிலே வீடு வீடாகச் சென்று, அம்மக்களைச் சந்தித்து, அவர்கள் வயது, உடல் நிலை, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நோய்கள் பற்றிய புள்ளிவிவரங்களை எடுப்பது போன்ற காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி, முதல் இரண்டு மாதத்திலே புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, அடுத்த இரண்டு மாதங்களிலே அந்தந்த நோய்க்காகச் சிகிச்சை தருவது, அதற்கு அடுத்த இரண்டு மாதங்களிலே பெரிய மருத்துவ மனைகளுக்கு அவர்களைப் பரிசீலனைக்கு அனுப்புவது போன்று மக்களிடத்திலே அன்பு கொண்டு நல்ல உறவு அவர்களிடத்திலே கொள்ளும் விதத்திலே ஒரு திட்டத்தை டாக்டர்கள் மூலமாக இன்றைக்கு நிறைவேற்ற நாங்கள் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் ஒரு விதத்திலே "வாலண்டரி சர்வீஸ்" தான். அந்தத் திட்டத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரைச் சேர்ந்தவர்கள் என்றாலும்கூட, அவர்கள் மக்களிடம் உள்ள அன்பு உணர்ச்சியின் காரணமாகவே இந்தப் பணியை ஏற்க முன் வந்திருக்கிறார்கள். எனவே, அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்தப் பணி தொடங்கி ஒரு மாத காலம் ஆகிறது, அது இன்னும் முடியவில்லை. இன்னும் 2, 3 மாத காலத்திற்குள்ளே இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, பிறகு அந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களிலே பரப்ப முயற்சி எடுப்போம்.

கடைசியாக, நேரம் அதிகம் ஆவதால், நான் உள்ளபடியே நினைவில் வைத்ததைத்தான் இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். குறிப்புகளை எடுத்துப் பேசவில்லை நான். அப்படி பேசியதால், இங்கே உள்ள உறுப்பினர்கள் நான் அவர்களுடைய கருத்துக்களையோ, ஆலோசனைகளையோ, எண்ணங்களையோ, கைவிட்டு விட்டதாக யாரும் நினைக்க வேண்டாம். எல்லாவற்றையும் நான் நிச்சயமாகப் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவற்றை எல்லாம் பரிசீலித்து இந்த அரசாங்கத்தின் சக்திக்கு ஏற்ப நல்ல திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று சொல்லிக் கொள்கிறேன். மற்றும், இங்கே பல்வேறுவிதமான வெட்டுத் தீர்மானங்களைத்

தந்திருக்கிறீர்கள். 'வெட்டுத் தீர்மானம்' என்பதன் பொருள் எனக்கு நன்றாகத் தெரியும். வெட்டுத் தீர்மானத்தின் மூலம் ஏதாவது ஒட்டுப் பணம் நம் நோகுகிக்குக் கிடைக்காதா என்பது தான் உங்கள் நோக்கமாக இருக்கும். எனவே, உறுப்பினர் அவர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை அருள் கூர்ந்து வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி தேர்விற்கான முறை பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே எல்லாம் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று திரும்பத் திரும்ப இங்கே சொன்னார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அந்தக் கல்லூரிகளிலே ஒதுக்கப்பட்ட இடம் 1025 ஆகத்தான் இருந்தது. அதுவே பிறகு 1125 ஆக உயர்த்தப்பட்டது, அதுவும் நெருக்கடியான விண்ணப்பங்கள் அதிகமாக வந்தன என்பதால்தான் அதைச் செய்திருக்கிறார்கள். இங்கே. அதிலே மாணவர்களைச் சேர்ப்பது பற்றி அகில இந்தியாவில் சொல்லப்பட்ட கருத்து, ஒரு மருத்துவக் கல்லூரிக்கு 100 மாணவர்கள்தான் இருக்க வேண்டும் என்பது. இன்றைக்கு இங்கே 6 கல்லூரிகளிலே 150 பேரும், அதற்கு மேலும் இருக்கிறார்கள். 100 மாணவர்கள் இருந்தால்தான் அந்த ஆசிரியர்கள் வகுப்பறையிலே பாடம் நடத்துவது மாத்திரமல்லாமல், முன் அறிவு சிகிச்சை நடத்தும் பொழுது 6 பேர், 4 பேர் என்று சேர்ந்து கொண்டு கவனிப்பார்கள். ஆகவே, சரியாக மாணவர்கள் பயிற்சிபெற முடிவதில்லை. அதேபோல் ஆசிரியர்களும் நல்ல முறையிலே பயிற்சி தர முடிவதில்லை. இது முதற் காரணம்.

இரண்டாவது காரணம், டாக்டர் எ.எல். இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையிலே அமையப்பெற்ற கமிட்டி 1962-ஆம் ஆண்டு சொல்லியிருப்பது, 'போஸ்ட் கிராஜுவேட் கல்லூரி' எதுவாக இருந்தாலும் அதிலே 75 மாணவர்களுக்கு மேல் ஒரு ஆண்டிலே சேர்க்கக் கூடாது என்பதுதான். சென்னையிலே உள்ள சென்னை மருத்துவக் கல்லூரியும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியும் மதுரையிலே இருக்கும் மருத்துவக் கல்லூரியும் போஸ்ட் கிராஜுவேட் கல்லூரிகள் ஆகும். ஆயினும், அங்கே சேர்க்கப்பட்டிருப்பது 200 பேர் ஒரு ஆண்டுக்கு. எனவே, அங்கே மாணவர்களுக்கான பயிற்சித் தரம் குறைகிறது. எனவே, தமிழகத்திலே இது சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழு பல்வேறு காரணங்களை ஆராய்ந்து 1025 சீட்டுகளை 600 ஆகக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்பொழுதே நாங்கள் சொன்னோம். அப்படி எல்லாம் குறிப்பிடுவதைத் தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று சொன்னோம். வேலை வாய்ப்பு எல்லோருக்கும் தரத் தேவையில்லை, ஆனாலும் இந்த அரசு கல்வித் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லி, 200 மாணவர்களைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, தமிழ் நாட்டு மக்களின் விருப்பங்கள் புறக்கணிக்கப்படாமல் இருக்கும்



நிலைமையிலே, 200 மாணவர்கள் சேர்க்கப்பட்ட 4 கல்லூரிகளிலே—3 போஸ்ட் கிராஜுவேட் கல்லூரியிலே 30 வீதமும், ஒரு கல்லூரியிலே 25-ம் ஆக மாணவர்களைக் குறைத்திருக்கிறோம். அதேபோல், 200 மாணவர்கள் சேர்க்கப்பட்ட தஞ்சாவூர் கல்லூரியிலே 25 பேரைக் குறைத்திருக்கிறோம். இப்பொழுது செய்திருக்கும் இந்தக் காரியம் நம் நாட்டு மாணவர்களின் தேவையை மனதிலே வைத்தும், ஆலோசனை சொன்னவர்களை அலட்சியம் செய்யாமல் வேலை வாய்ப்போடு கல்வியின் தரமும் உயர வேண்டும் என்ற காரணத்திற்காக அதை எல்லாம் செய்து இருக்கிறோம். நம் டாக்டர்களின் பெருமையை அகில உலகிற்கும் அறிவிக்கும் என்பதாலும், டெல்லியிலே இருக்கக் கூடிய "ஆல் இந்தியா இன்ஸ்டியூட் ஆப் மெடிகல் ஸயன்ஸஸ்" எப்படிப்பட்ட தரத்திலே நடைபெறுகிறதோ அந்தத் தரத்தை நம் டாக்டர்களும் அடைய இந்த எண்ணிக்கைக் குறைவு உதவி செய்யும் என்பதாலும், மற்றும், "காம்படிடிவ் ஸ்பிரிட்" என்ற ரீதியிலே தமிழ் நாட்டு டாக்டர்களும் தங்களுடைய தரத்தை உயர்த்திக் காட்டும் பரவலான தேவையை மனதில் கொண்டும்தான் இவற்றைச் செய்திருக்கிறோம். எனவே, இதை எல்லாம் நாங்கள் நல்ல எண்ணத்துடன் தான் நிறைவேற்றியிருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மற்றும், 20,000 ரூபாய் கொடுக்கும் மாணவர்களை மருத்துவக் கல்லூரியிலே சேர்த்துக் கொள்ளலாம், இதனால் இந்த அரசாங்கத்தின் நிதிநிலையும் உயரும் என்று சொன்னார்கள். அப்படி நாம் 20,000 ரூபாய் கொடுக்கும் மாணவர்களை 100 பேர் என்று கட்டுப்படுத்த முடியாது. அப்படி ஒத்துக் கொள்ளுகின்ற கொள்கைக்கு நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும், பணம் கொடுப்பவர்கள் எல்லாம் படிக்கலாம் என்ற ஒரு தத்துவத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி என்றால், டாக்டராக ஒரு ஏழை கூட வரமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே, பணம் கொடுக்கின்ற 100 பேருக்கு இடம் தந்து, 1,000 பேருக்கு நாம் இடமில்லை என்று மறுக்க முடியும். அந்த நேரத்திலே, சில மாணவர்கள் வீடு வாசலை விற்றுவிட்டு 20,000 ரூபாய் கொடுத்து விடுவார்கள். பிறகு வியாபார முறையிலே மற்ற மாநிலங்களிலே நடைபெறுவதைப் போல் இங்கே நடைபெறுவதை, ஜனநாயகக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. அதுவும் இந்தச் சமுதாயத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ளாது. (கை தட்டல்).

அது மட்டுமல்லாமல், இங்கே உள்ள உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். மருத்துவக் கல்லூரியிலே சேருவதற்கு எப்படியோ தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறவர்கள், ஏதோ தயவு தாட்சண்யத்திற்காகத் தங்களுடைய வசதியைப் பெறுவதை நான் குற்றமாகக் கருத மாட்டேன். ஆனால் அப்படிப்பட்ட முயற்சிகள் எங்கள்

நினைவுக்குக் கொண்டு வரப்படுமானால், அரசு அந்த மாணவர்களை அந்தத் தவறான முயற்சியில் வெற்றி பெறாமல் இருக்கக் கூடிய கடமையை நிறைவேற்றும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். தோல்விகரமான முயற்சியில் ஈடுபட்டு, மாணவர்களிடையே மனத் தாங்கல் ஏற்படும் அளவுக்கு இடையிலே தரகர்கள் வளரும் அளவுக்கு ஓர் நிலை ஏற்படக்கூடாது என்பதை எல்லா உறுப்பினர்களும், எல்லா பொது மக்களும் உணர்ந்து இதிலே ஒரு கண்காணிப்போடு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு
பி.ப. 2-00 கிறேன். இந்த மருத்துவத் துறை மூலமாக மக்களுக்குப் பணி யாற்றுவதற்கு நான் இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் எண்ணங்களை எல்லாம் நிறைவேற்ற நான் முழு அளவு உறுதி பூண்டிருக்கிறேன் என்று சொல்லி, இந்த மானியங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் விவாதம் முடிவுற்றது.**
வெட்டுப் பிரேரணைகளை பிரேரேபித்திருக்கிற உறுப்பினர்கள் **அவர்களுடைய வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்துகிறார்களா ?**

**(சிறிது நேரத்திற்குப் பிறகு)**

ஒருவரும் வற்புறுத்தவில்லை எனக் கருதுகிறேன்.

All the cut motions to Demand No. 14 were, by leave, withdrawn.

MR. SPEKER : The question is :

" That the Government be granted a sum not exceeding Rs. 21,04,70,800 under Demand No. 14—Medical. "

The Demand was put and carried, and the Grant was made.

All the cut motions to Demand No. 38 were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :

" That the Government be granted a sum not exceeding Rs. 13,12,07,600 under Demand No. 15—Public Health. "

The Demand was put and carried, and the Grant was made.

All the cut motions to Demand No. 38—were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :

" That the Government be granted a sum not exceeding Rs. 26,52,000 under Demand No. 38—Capital Outlay on Public Health. "

The Demand was put and carried, and the Grant was made.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் திங்கட் கிழமை (5—7—1971) காலை 9 மணி அளவில் கூடும்.**

பி. ப. 2-04 **பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.**



### 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

137. Notification issued with G.O. Ms. No. 289, Co-operation, dated the 5th June 1971, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

138. Notification issued with G.O. Ms. 788, Home, dated the 18th March 1971, in regard to an amendment to the Suppression of Immoral Traffic in Women and Girls (Tamil Nadu) Rules, 1958. [Laid on the Table of the House under section 23 (4) of the Suppression of Immoral Traffic Women and Girls Act, 1958 (Central Act 104 of 1958).]

139. Notification issued with G.O. Ms. No. 892, Public (Services-A), dated the 24th March 1971, in regard to the inclusion of the Ministerial posts in the offices of the National Cadet Corps Unit in the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

140. Notification issued with G.O. No. 1111, Revenue, dated the 17th April 1971, in regard to exemption from liability to sales tax in respect of the sales in the exhibition train organised by the Indian Rail exhibition in Tamil Nadu. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### B. *Reports, Notifications and other Papers.*

84. Notification issued with G.O. Ms. No. 1067, Revenue, dated the 13th April 1971, in regard to remission of stamp duty in respect of a sale deed to be executed by the Tamil Nadu Khadi and Village Industries Board.

85. Notification issued with G.O. Ms. No. 1291, Revenue, dated the 29th April 1971, in regard to remission of stamp duty in respect of the sale deeds executed by the repatriates from Burma and Ceylon for the purchase of plots.

86. Notification issued with G.O. Ms. No. 1349, Revenue, dated the 5th May 1971, in regard to remission of stamp duty on the instruments of transfer of debentures by Tamil Nadu State Housing Board.

@ 87. The Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 12 of 1971) (with Annexure).

@ 88. The Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971).

@ Despatched to Members on 1st July 1971.

# இணைப்பு I.

[342-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## மருத்துவத் துறை

### கோரிக்கை 14—மருத்துவம் 1971-72.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், "கோரிக்கை 14—மருத்துவம்" என்பதன்கீழ் ரூ. 21,04,70,300-க்கு மேற்படாத ஒரு தொகையை அரசிற்கு வழங்குமாறு வேண்டுகிறேன்.

### கொள்கை.

குடியாட்சியின் இறுதி வெற்றி நாட்டு மக்களின் இனிய உடல் நலனைப் பொறுத்துள்ளதால், மருத்துவப் பணிகளை மேன்மேலும் செவ்விய முறையில் நிறைவேற்றுவதற்காக அரசு இடையறாது முயன்று வந்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் மருத்துவப் பணிகளை விரிவுபடுத்துவதும், சிறந்த மருத்துவ வசதிகளைப் பெருமளவில் எல்லா மக்களுக்கும் எளிதில் கிடைக்கச் செய்வதும், மருத்துவப் பட்டதாரிகள், செவிலியர், மருந்து கலப்பவர்கள் போன்ற துணைப் பணியாளர்களின் வேலையளவையும், அவர்களது தரத்தையும் உயர்த்துவதும், குடும்ப நலத் திட்டத்தைப் பரப்புவதும், நாட்டு மக்களின் உடல் நலனைப் படிப்படியாகப் பேணி வளர்ப்பதும் இந்த அரசின் பொது நோக்கங்களாய் இருந்து வந்துள்ளன.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவப் பணிகளுக்கும் மருத்துவக் கல்விக்கும் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 248 லட்சமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீடு ரூ. 459 லட்சமாக இருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீடு ரூ. 644 லட்சமாயிருந்தது.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் 359 மருத்துவ மனைகள், மருந்தகங்களைச் செயல்படச் செய்யவும், 1974-க்குள் மொத்தம் 24,478 படுக்கைகளுக்கு மருத்துவ மனைகளில் வகை செய்யவும் நாட்டங்கொண்டுள்ளது. 1969-70-ல் 336 மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் இயங்கி வந்தன. இவைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 20,452 ஆகும். 1970-71-ல் 347 மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஏற்படுத்தவும் 21,223 படுக்கைகளை ஏற்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. 1971-72-ல் உத்தேசித்துள்ள திட்ட நிதி ஒதுக்கத்தைக் கொண்டு, 355 மருத்துவ மனைகள், மருந்தகங்கள் தொடங்கப்படுமெனவும், 21,893 படுக்கைகள் பயனுக்குக் கொண்டுவரப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.







இம்மாநிலத்தில் பிறப்பு, இறப்பு விதங்கள், ஆயுட்கால நீடிப்பு விதம் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைக் காட்டுகிற பின் சேர்க்கப்பட்ட அட்டவணை, திட்ட வேலையாக பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக, மக்களின் பொது உடல் நல நிலை முன்னேற்றமடைந்து வருவதைத் தெளிவாக விளக்குகிறது.

| ஆண்டு. | குழந்தை இறப்பு விதம் ஆயிரத்திற்கு | | மகப்பேற்றில் மகளிர் இறப்பு விதம் (ஆயிரத்திற்கு) | பிறப்பில் ஆயுட்கால நீடிப்பு | |
|---|---|---|---|---|---|
| | ஆண். | பெண். | | ஆண். | பெண். |
| 1941 | 180.3 | 161·1 | 9·1 | 35·03 | 36·19 |
| 1951 | 123·1 | 113·9 | 5·8 | 36·22 | 37·23 |
| 1961 | 91·5 | 87·2 | 3·6 | 41·09 | 39·24 |
| 1968 | 63·7 | 59·0 | 2·6 | 52·0 | 50·1 |

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் சுகாதாரத் துறையில் மனதில் பதியும் வகையான முன்னேற்றம் சந்தேகமின்றி ஏற்பட்டிருக்கையில் சில குறைபாடுகளும் உள்ளன. இவை இது வரையில் தவிர்க்கப்படாததற்கு முக்கிய காரணம், நிதிவாயில்கள் தொடர்ந்து இக்கட்டான நிலையில் இருந்து வருவது ஆகும். ஏனெனில், கிடைக்கக்கூடிய நிதி வாயில்களை ஒப்பு நோக்கின், இது தேவைகள் மிகுதியாக உள்ள ஒரு துறையாகும். எனவே, சுற்றுப்புறச் சுகாதாரம், நிறுவன மருத்துவக் கவனிப்பு, மருத்துவத் துணை மருத்துவப் பணியாளர்கள் பயிற்சி, தொற்று நோய்க் கட்டுப்பாடு ஆகியவற்றில் மேம்பாடுகள் போன்ற உயரிய முன்னுரிமை பெற்ற தவிர்க்க முடியாத தேவைகளுக்கும், வரையறுத்த அளவிற்கேயுள்ள நிதிவாயில்களுக்கும் இடையே சமன் காண்பது மிகவும் அவசியமாகிறது. ஒதுக்கப்பட்ட நிதி வாயில்களுக்குள், குடும்பநலத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிப்பது அவசியம் ஆகிறது. ஏனெனில், பொருளாதார மேம்பாட்டின் பலன்கள் கட்டுப்படுத்தப்படாத மக்கள் பெருக்கத்தினால் வீணாவதை அனுமதிக்கக் கூடாது.

கிடைக்கிற வாயில்களுடன் ஒப்பு நோக்குகையில், கடந்த பதினைந்து ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம் அதிகமாயிருப்பினும், நிறுவன மருத்துவ வசதிகளைப் பொறுத்த வரையில், குறிப்பாக, கிராமப் பகுதிகளில் போதியதாகச் சொல்வதற்கில்லை.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்பது இவ்வரசின் கொள்கையாகும். இம்மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஓர் ஆரம்ப சுகாதர நிலையம் உள்ளது. ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையமும் 6 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாகும்.

## மருத்துவப் பட்டப் படிப்பு பாடமுறை.

திட்டக் காலங்களில் மருத்துவக் கல்வி குறித்து கணிசமான அளவிற்கு வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.

| | இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை. | திட்டகால முடிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| முதல் திட்டம் .. .. | 3 | 300 |
| இரண்டாம் திட்டம் .. .. | 5 | 600 |
| மூன்றாவது திட்டம் .. .. | 8 | 1,025 |
| 1966–71-ம் ஆண்டுத் திட்டம் .. | 8 | 1,125 |

சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையில் இந்திய அரசு நியமித்துள்ள சுகாதார ஆய்வு திட்டக்குழு கீழ்க்கண்ட பரிந்துரையைச் செய்துள்ளது. மருத்துவக் கல்விக்குப் போதிய வசதிகள் செய்ய வேண்டுமாயின், ஒவ்வொரு 50 லட்சம் மக்கள் தொகைக்கும் ஒரு மருத்துவ கல்லூரி இருக்க வகை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மருத்துவக் கல்லூரிகள் கிடைக்கிற விதத்தில், அந்த மருத்துவக் கல்லூரிகள் பரவலாக ஒதுக்கப்படுவதற்கு வகை செய்யப்பட வேண்டும். அவ்வாறு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டால் தான் அந்த மாநிலத்தில் மாணவர்கள் மருத்துவப் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்க வழி ஏற்படும். நாட்டில் மருத்துவக் கல்லூரிகள் நியாயமான முறையில் சமமாகவும் பரவலாகவும் ஒதுக்கப்படும்பொருட்டு பல்வேறு மாநிலங்களுக்கு அக்கல்லூரிகளை ஒதுக்குவது குறித்து முடிவு செய்வதில், மாநிலங்களின் மக்கள் தொகையையும் ஏற்கெனவேயுள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையையும் அக்குழு சீர்தூக்கிப் பார்த்தது. நாட்டில் தற்போது மொத்தம் 92 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் 9 மருத்துவக் கல்லூரிகள் இம்மாநிலத்தில் உள்ளன. 8 மருத்துவக் கல்லூரிகள் அரசு மருத்துவக் கல்லூரிகளாகும், 9-வது மருத்துவக் கல்லூரி தனியார் மருத்துவக் கல்லூரியாகும். 8 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1,125 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.





| மருத்துவக் கல்லூரியின் பெயர். (1) | இருக்கைகளின் மொத்த எண்ணிக்கை. (2) |
|---|---|
| சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 200 |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 200 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 100 |
| மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. .. | 200 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. .. | 200 |
| செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 50 |
| திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி .. | 75 |
| கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் .. | 100 |
| மொத்தம் .. | 1,125 |

தமிழ் நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதுபற்றிப் பரிசீலனை செய்யும் வல்லுநர் குழு, தற்பொழுது சில மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையே தொடர்ந்து இந்த ஆண்டிலும் ஏற்றுக் கொண்டால், பாடமுறையையும், பயிற்சியையும் அது பெரிதும் பாதிக்குமெனக் கருதுகிறது. எனவே, தற்காலிக நடவடிக்கையாக, சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 200-ஐக் குறைக்கக் (அதாவது, 1,125-லிருந்து 925-ஆகக் குறைத்தல்) கருதியது. சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 30-ஐயும், மதுரை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் 25-ஐயும் அரசு குறைத்துள்ளது. இதனால் 1,015 இடங்கள் தற்போது கீழ்க் கண்டவாறு உள்ளன :—

| கல்லூரியின் பெயர். (1) | இடங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை .. .. | 170 |
| 2 ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை .. | 170 |
| 3 கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை .. | 100 |
| 4 மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை .. .. | 175 |
| 5 தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் .. | 175 |
| 6 கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் | 100 |
| 7 திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி | 75 |
| 8 செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 50 |
| மொத்தம் .. | 1,015 |

[1971 ஜூலை 3

சென்னை மாநகரில் மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலிருந்தும் வருகிற ஒரு எம்.பி.பி.எஸ். மாணவர்க்கு பயிற்சி அளிக்க அரசுக்கு ஆகும் தோராயச் செலவு 32,200 ரூபாய்.

வெளியூர் மருத்துவக் கல்லூரிகளில், மருத்துவக் கல்லூரிகளிலிருந்தும் மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவ மனைகளிலிருந்தும் வருகிற ஒரு எம்.பி.பி.எஸ். மாணவர்க்கு பயிற்சி அளிக்க அரசுக்கு ஆகும் தோராயச் செலவு 25,800 ரூபாய்.

### பல் மருத்துவப் பட்டப்படிப்பு.

1953-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் மருத்துவ பிரிவில் பல் மருத்துவப் பட்டப்படிப்பு ஒன்று தொடங்கப்பட்டது. இதில் ஆண்டுதோறும் 15 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். பல் மருத்துவப் பிரிவுக்குப் போதிய அளவு இட வசதியின்மையால், தனிப்பட்ட கட்டிட தொகுதி ஒன்று ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்டது. இதனால் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1963 முதல் 45 ஆக உயர்த்தப் பட்டது. இதுவரை 1970 டிசம்பர் முடிய இந்த நிறுவனத்திலிருந்து 255 பேர் பல் மருத்துவப் பட்டம் பெற்றுள்ளனர்.

### மருந்து தயாரிப்போர் பட்டப் படிப்பு.

1939-ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதன் முதலாக மருந்து தயாரிப்பு இரண்டாண்டுப் பட்டப் படிப்பு தொடங்கப் பட்டது. மருந்து தயாரிக்கும் துறையில் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக, இந்தப் படிப்பு 1950-ம் ஆண்டில் 3 ஆண்டுப்படிப்பாக மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின்னர் இப்படிப்பின் கால அளவு மேலும் ஓராண்டுக் காலம் நீடிக்கப்பட்டது. எனவே இப்போது இப்படிப்பின் கால அளவு 4 ஆண்டுகளாகும். இப்படிப்பில், 1939-ஆம் ஆண்டில் 12 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க, இப்போது 35 பேர் சேர்க்கப்படுகின்றனர். மருந்து தயாரிக்கும் பட்டப்படிப்பு 1963-ஆம் ஆண்டு முதல் மதுரையிலுள்ள மதுரை மருத்துவக் கல்லூரியிலும் தொடங்கப்பட்டது. இதில் 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.

வேலைவாய்ப்பு வசதிகள் மிகவும் குறைவாகவுள்ள காரணத்தால், கீழ்க்கண்ட பாடமுறைகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வல்லுநர் குழு பரிவுரை செய்தது



1971 ஜூலை 3]

### பல் மருத்துவப் பட்டப் படிப்பு.

தற்போது சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 45. சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 25 சதவீதம் தாற்காலிகமாக குறைக்கும்படி குழு பரிவுரை செய்துள்ளது. (அதாவது 45-லிருந்து 35 ஆகக் குறைக்க.)

### மருந்து தயாரிப்போர் பட்டப் படிப்பு.

| (1) | மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு I-வது ஆண்டு (2) | மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு II-வது ஆண்டு (3) |
|---|---|---|
| 1 சென்னை மருத்துவக் கல்லூரி .. | 35 | 15 |
| 2 மதுரை மருத்துவக் கல்லூரி .. | 35 | 15 |
| | 70 | 30 |

மூன்றாண்டு கால அளவிற்குக் கீழ்கண்டவாறு, சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க குழு பரிவுரை செய்தது.

| | |
|---|---|
| முதல் ஆண்டு இரண்டு கல்லூரிகளில் .. .. .. | 50 |
| இரண்டாவது ஆண்டு இரண்டு கல்லூரிகளில் .. .. .. | 10 |
| | 60 |

இதன் விளைவாக நிலைமை கீழ்க்கண்டவாறு இருக்கும்:—

| (1) | மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு முதல் ஆண்டு. (2) | மருந்து தயாரிப்போர் பட்டப்படிப்பு இரண்டாம் ஆண்டு (3) |
|---|---|---|
| 1 சென்னை மருத்துவக் கல்லூரி .. | 25 | 5 |
| 2 மதுரை மருத்துவக் கல்லூரி .. | 25 | 5 |
| | 50 | 10 |

முதலாவது ஆண்டு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்./பி.டி.எஸ்./பி.பார்மஸி படிப்பு ஆகியவற்றிலும் இரண்டாவது ஆண்டு பி.பார்மஸி படிப்பிலும் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான மேற்படி செயற்குறிப்புகளுக்கு அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

மருந்தியல் பட்டதாரிகளிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க "கிங்" ஆய்வுச்சாலை King Institute விரிவான திட்டங்களைத் தயாரிப்பதற்காக, இயக்குநர், கிண்டி, சென்னை மருத்துவக் கல்லூரித் தலைவர், மருந்துப் பொருள்கள்

உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி, சம்பந்தப்பட்ட பேராசிரியர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மேலும், மருந்து கட்டுப்பாட்டுத் துறையில், 45 மருந்துகள் ஆய்வாளர் பதவிகளுக்கும், 5 முதுநிலை மருந்துகள் ஆய்வாளர் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

### பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி.

தமிழ்நாட்டிலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் அண்மை ஆண்டுகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை விரைந்து அதிகரித்துள்ளதால், ஆசிரியர்களின் பயிற்சிக்காக வசதிகளைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் பல்வேறு மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், படிப்புகளில் பட்டப் படிப்பு, தகுதிப் பட்டயப் படிப்பு உட்பட பல்வேறு சிறப்புத் துறைகளில் தற்பொழுது சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 750 ஆக உள்ளது. ஆனால், இம் மாநிலத்தில் முழுமையான பட்ட மேற்படிப்பு நிறுவனம் வளர்ச்சியடைந்தாலொழிய, கொடுக்கப்படும் பயிற்சியின் தரத்திலும், மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிப் பணியின் தரத்திலும் நமது மாநிலம் அதிக முன்னேற்றம் அடைய இயலாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சென்னை, அடையாறில் இத்தகைய நிறுவனத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அடிப்படை மருத்துவ அறிவியல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் ஒரு பிரிவை ஏற்படுத்தும் பணியை சென்னை பல்கலைக் கழகம் எற்கெனவே நிறைவேற்றி வந்துள்ளது. இத்தகைய பட்ட மேற்படிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இந்திய அரசு நிதிவுதவியளிக்க முன்வராத காரணத்தால், மாநில நிதியிலிருந்து கிடைக்கக்கூடிய குறைந்த அளவு நிதி வசதியுடன் சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியை பட்ட மேற்படிப்பு நிலையம்—ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்தவும், தரமுயர்த்தவுமான செயற்குறிப்பு ஒன்று பரிசிலனையிலுள்ளது. ஆனால், பட்ட மேற்படிப்பு மருத்துவத் துறைகளை அமைப்பதற்கான மத்திய அரசின் திட்டத்தின்கீழ், அரசு 1970-71-ல் சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் உயிர்வேதி இயல் bio-chemistry உடல் அமைப்பில் Physiology துறைகளை அரசு தரமுயர்த்தியுள்ளது. தற்பொழுது நமது மாநிலத்தில் இல்லாத டி.எம். (இருதய நோய் இயல்) Cardiology டி.எம். Nephrology சிறுநீர் நோய் இயல், டி.பி.எம்., உணவுக் குழாய் நோய் இயல் Gastro Entrology உயர் தனிச்சிறப்புப் பாடமுறைகள் போன்ற மேலும் சில பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளைப் புகுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு மேல் பயிற்சிகள் எல்லாவற்றிலும் பயிற்சியளிப்பதற்கு சென்னையிலுள்ள நிறுவனத்தில் ஒன்றிலாவது வசதிகள் பெற்றிருக்க வேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும். இதனால், நமது மாநிலம், உயர் பட்டங்கள் பெறுவதற்காக எவரையும் பிற நாடுகளுக்கு, அல்லது பிற மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படாது.



### குற்றவியல், குற்றம் சார்ந்த மருத்துவ இயலில் தகுதிப் பட்டயப் பாடமுறை.

மாநில அரசின் காவல்துறை, சட்டத் துறை, சிறைச்சாலைகள் துறை, மருத்துவத் துறைகளின் நலனுக்காக சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியல் சார்ந்த மருத்துவ இயலில் ஓர் ஆண்டு தகுதிப் பட்டயப் பாடமுறை நடத்தப்பட்டு வருகிறது. இப்பாடமுறை சென்னைப் பல்கலைக்கழகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இப்பாட முறையில் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

### குற்றவியல், குற்றம் சார்ந்த மருத்துவ இயலில் எம்.ஏ., பட்டப் பாடமுறை.

1965-ஆம் ஆண்டிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரியில் குற்றவியல் சட்டம் சார்ந்த மருத்துவ இயலில் எம்.ஏ. பட்டப் பாடமுறை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வகுப்புக்கும் ஆண்டுதோறும் 8 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். குற்றம் சார்ந்த மருத்துவ இயலில் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக, சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் குற்றம் சார்ந்த மருத்துவ இயல் துறையைத் தரம் உயர்த்தவும் குற்றம் சார்ந்த மருத்துவ இயலில் எம்.டி. பட்டப் படிப்பைக் கொண்டு வரவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### மருத்துவ ஆராய்ச்சி.

நாட்டு மக்களின் நல்லுடலுக்கும், நல்வாழ்விற்கும் மருத்துவ ஆராய்ச்சி அதிக அளவில் வாய்ப்பளிக்கின்றது. எனவே, இம் மாநிலத்தில் 1944-ஆம் ஆண்டு மாநில மருத்துவ ஆராய்ச்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இது மருத்துவ அறிவியலிலும், மருத்துவக் கலையிலும் ஆராய்ச்சி செய்ய ஊக்கமளிக்கிறது. இம் மாநிலத்தில் ஆராய்ச்சியைத் தொடங்கவும், வளர்க்கவும், ஒருங்கிணைக்கவும் ஏற்புடைய மருத்துவ நிறுவனங்களுக்குச் சிறு அளவில் மானியம் வழங்குவதுடன் நோய் கூறுகளை ஆய்வதற்கும், அவற்றைத் தடுப்பதற்கும், அவற்றின் காரணங்களையும், தீர்வுகளையும் அறிவதற்கும் உதவி செய்கிறது. இதற்காக ஆண்டுதோறும் இக் குழுவிடம் மொத்தமாக ரூ. 50,000 மானியம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பல ஆராய்ச்சித் திட்டங்கள் பெறப்படுவதால், இத்திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்க இந்த மானியத் தொகையான ரூ. 50,000 போதுமானதாக இல்லையென்று உணரப்பட்டது. எனவே, 1968-லிருந்து இந்த மானியத் தொகை ஆண்டுதோறும் ரூ. 50,000 என்பதிலிருந்து ரூ. 65,000 ஆக அரசால் உயர்த்தப்பட்டது.

மருத்துவக் கல்லூரிகளில் ஒவ்வொரு துறையிலும் படுக்கை சார்ந்த மருத்துவ முறைப்படிபிற்கு முற்பட்ட துறைகளிலும் Pre-clinical departments படுக்கை சார்ந்த மருத்துவ முறைப் பாட

துறைகளிலும் ( clinical departments ) தேவைப்படுவனவற்றிற்கு வகை செய்து கொடுப்பதற்காக, மருத்துவக் கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் மத்திய ஆராய்ச்சி நிலையம் இருக்க வேண்டுமென்றும், தொடர்பான துறைகளின் வசதிகளைத் தொகுப்பதன் மூலம் ஆராய்ச்சிப் பிரிவுகள் அமைக்கப்படலாமென்றும், இந்திய மருத்துவ மன்றம் 1964-ஆம் ஆண்டில் பரிவுரை செய்தது. இந்த பரிவுரைக்கிணங்க, சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் தேவையான பணியாளர்கள், கருவிகள் முதலியவற்றுடன், மத்திய ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் மற்றொரு மத்திய ஆராய்ச்சிப் பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.

### கண் விழி விறைப்பு நோய்க்கான தனி மருந்தகம் Glancoma clinic தொடங்குதல்.

முதிர்ந்த வயதில் கண் தெரியாது போவதற்குக் கண் விழி விறைப்பு நோயே முக்கிய காரணமாகும். இந்தியாவில் 25 சத விதத்துக்கு மேற்பட்ட மக்கள் குருடாவதற்குக் காரணமும் இது தானென்று தெரிகிறது. மதுரை மருத்துவக் கல்லூரியில் கண் விழி விறைப்பு நோய் சிகிச்சை குறித்த கட்புல விளக்க நிலையம் ஒன்றை இத் திட்டம் பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்காக நிறுவத் தமிழ் நாடு அரசு ஏற்பளித்துள்ளது.

ஐக்கியநாடுகள் பொது நலப் பணியின் உடனுழைப்புடன் மதுரை மருத்துவக் கல்லூரியின் கண்விழி விறைப்பு நோய் சிகிச்சைக்கான தனி மருத்துவ மனையைத் தொடங்குவதற்கான திட்ட அறிக்கை யொன்றைத் தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு அனுப்பி இத்திட்டத்தை P.L. 480 திட்டமாகச் செயல் படுத்த இந்திய அரசின் இசைவைக் கேட்டுள்ளது.

இந்திய அரசின் இசைவை எதிர்பார்த்து மதுரை மருத்துவக் கல்லூரியின் கண் நோய் சிகிச்சைத் துறையில் கண் விழி விறைப்பு நோய்ப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கான செயற்குறிப்பிற்கு ஒப்புதலளித்து இத் திட்டத்திற்காகக் கூடுதல் பணியாளர் சிலரை நியமிக்கவும் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மதுரை அரசு எர்க்ஸ்கின் மருத்துவ மனையில் தொடங்கத் திட்டமிட்டுள்ள கண் விழி விறைப்பு நோய்ப் பிரிவுக்காக கட்டடங்கள் கட்ட ரூ. 49,000 செலவிட ஒப்புதலளிக்கப்பட்டது.

### ஆர்பர் நச்சு நோய் ஆராய்ச்சிப் பிரிவு Arbour Virus Research Unit

பூனாவிலுள்ள நச்சுநோய் ஆராய்ச்சிப் பிரிவின் உடனுழைப்புடன் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ஆர்பர் நச்சு நோய் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.





சென்னையிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் ஆர்பர் நச்சு நோய் எந்த அளவுக்குத் தோன்றியுள்ளது என்பதைக் கண்டறிவதே இந்த ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். எல்லா காய்ச்சல் நேர்வுகளையும் வாலாயமாகப் பரிசிலனை செய்வதன் மூலம் மேற்சொன்ன ஆய்வு நடத்தப்படுகிறது. பிற நோய்கள் பற்றிய பரிசீலனை இதன்கீழ் வாராது. சிறுவர்களிடையே டெங்கு ஹெமரோஜிக் வகைக் காய்ச்சலும், ஜப்பானிய வகையைச் சேர்ந்த பி.என்.ஸி. பாலிடிஸ் காய்ச்சலும் எந்த அளவுக்குப் பரவியுள்ளதென்பதையும் இப் பிரிவே ஆய்ந்தறிய வேண்டியுள்ளது.

### பயிற்சி—இயங்கு ஊர்தி மருத்துவ மனைகள்.

கிராமப் பகுதிகளில் மக்களுக்குப் பொதுவான, அடங்கல் சிகிச்சை குறித்து மருத்துவ மாணவர்களுக்கும், மருத்துவப் படிப்பு முடித்துப் பயிற்சி பெறுபவர்களுக்கும் நடைமுறைப் பயிற்சியளிப்பது மிகவும் அவசியமாகும். அதே சமயத்தில் இதுவரை புறக்கணிக்கப்பட்ட கிராம மக்களுக்குக் குடும்ப நலத் திட்டம் உட்பட சுகாதார வசதிகளைச் செய்துகொடுப்பதும் நமது நோக்கமாகும். இந்த நோக்கத்துடன் மருத்துவ வசதியுடன் கூடிய இயங்கு ஊர்தி மருத்துவ மனை பயிற்சி நிலையம் ஒன்று தேவையான கூடுதல் பணியாளர்களுடனும் கருவிகளுடனும் தொடங்கப்பட்டு மதுரையிலுள்ள மருத்துவ கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, சித்தரஞ்சன் இயங்கு மருத்துவ மனையென அழைக்கப்படும் இயங்கு ஊர்தி மருத்துவ மனை ஒன்றையும் தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. இது சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ மனை குடியானவர்களின் வீடுகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சை அளிக்கின்றது. நமது மக்கள் தொகையில் 80 சத விதத்திற்கு மேற்பட்டவர்கள் குடியானவர்கள் ஆவர் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மேலும், கிராமங்களில் சாதாரணமாகப் பரவிவரும் நோய்களை நேரடியாகக் கண்டறிந்து அவற்றின் காரணங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பினையும் நமது மருத்துவப் பட்டதாரிகளும் அவர்களது பேராசிரியர்களும் இதனால் அடைகின்றனர்.

### சென்னையிலுள்ள மகளிர்—சிறுவர்க்கான அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையை மருத்துவ கல்வி நிறுவனமாக மாற்றுதல்.

சென்னை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தராகிய டாக்டர் A.L. முதலியார் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட மருத்துவ கல்விக் குழுவின் பரிவுரையின்மேல் மகளிர்—சிறுவருக்கான அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையை மருத்துவக் கல்வி நிறுவனமாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

### இதய நோய் காப்புக்கான பிரிவு ஒன்றை நிறுவுதல்.

இதய நோய்களினால் இறப்பு ஏற்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நெஞ்சு வலி ஏற்பட்ட முதல் சில மணி நேரங்களிலேயே பலர் இறந்து விடுகின்றனர். அவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் அத்தகைய நோயாளிகளை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். இந்த நோக்கத்துடன் நவீனக் கருவிகளுடன் கூடிய இதயக் கவனப் பிரிவு ஒன்றை அரசுப் பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. இதய நோய்களினால் வருந்தும் நோயாளிகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படும்.

இதய நோய்—காப்புப் பிரிவு ஒன்று அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் அவசியமான பணியாளர்களுடனும், கருவிகளுடனும் ஏற்கெனவே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

### ஹவுஸ் சர்ஜன்களுக்குப் பயிற்சி

1970-ஆம் ஆண்டுக்கான ஹவுஸ் சர்ஜன்களின் (பயிற்சி மருத்துவர்களின்) ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 565-லிருந்து 630 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1970-ஆம் ஆண்டில், இதுவரை கட்டாயமான சுழல் முறை ஹவுஸ் சர்ஜன் பணிபுரிய 422 கட்டாய சுழல் முறை ஹவுஸ் சர்ஜன்கள் அனுமதியளிக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| சென்னை மருத்துவக் கல்லூரி | 77 |
| ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி | 146 |
| கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி | 33 |
| மதுரை மருத்துவக் கல்லூரி | 97 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி | 63 |
| ஊதியமின்றி | 1 |

கட்டாயச் சுழல் முறை ஹவுஸ் சர்ஜன்களுக்கு அளிக்கப்பட்டு வந்த ஊதியத் தொகை 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 150-லிருந்து ரூ. 175-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### முதுநிலை ஹவுஸ் சர்ஜன்கள்.

1970-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட முதுநிலை ஹவுஸ் சர்ஜன்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| அரசுப்பொது மருத்துவ மனை, சென்னை | 138 |
| அரசு ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை | 31 |
| அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை | 2 |
| அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை | 3[illegible] |





| | |
|---|---|
| அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை | 5 |
| அரசுத் தலைமையிட மருத்துவ மனை, கோயம்புத்தூர் | 13 |
| தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை | 4 |
| மொத்தம் | 226 |

1970-ஆம் ஆண்டில் இதுவரை ஒப்பளிப்பு வழங்கப்பட்ட முதுநிலை ஹவுஸ் சர்ஜன்களின் எண்ணிக்கை 226 ஆகும்.

முதுநிலை ஹவுஸ் சர்ஜன்கள் ஒவ்வொருவரும் பயிற்சிக் கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 120 செலுத்த வேண்டும்.

### வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்.

**மருத்துவப் பட்டதாரிகள்.**—(i) வேலையற்றிருக்கும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு வெளியூர்களில் வேலை வாய்ப்பளிக்கும் நோக்குடனும், கிராமப் புறங்களில் தனித் தொழில் நடத்த உதவும் பொருட்டும் நாட்டுப்புற மருத்துவ மனைகளில் பணியாற்ற ஆண்டொன்றுக்கு 100 மருத்துவப் பட்டதாரிகள் வீதம் ஒவ்வோராண்டும் உதவியாளர் நிலை Assistantship பயிற்சியளிக்கும் திட்டத்தை (அரசு) உருவாக்கியுள்ளது. பயிற்சியாளர்கள் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் வெளியூர்களிலுள்ள பிற மருத்துவ மனைகளுடன் இணைக்கப்பட்டு, அங்கு குறையாசப் பணி புரியும் மருத்துவ அதிகாரியின் எல்லாப் பணிகளிலும் உதவி புரிவர். ஒவ்வொரு பயிற்சியாளரும் திங்களொன்றுக்கு ரூ. 300 பயிற்சி உதவித் தொகை பெறுவர். துறையிலுள்ள குறையான காலியிடங்களுக்கு நியமிக்கப்படுவதில் உதவியாளர் நிலை பயிற்சி முடித்த பட்டதாரிகள் முதலிடம் பெறுவர்.

(ii) மருத்துவப் பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும் நோக்குடன் ஒரு உதவி மருத்துவருடன் இயங்கும் வட்டத் தலைமையிட மருத்துவ மனையல்லாத பிற மருத்துவ மனைகளிலும், அரசு மருந்தகங்களிலும் கூடுதல் உதவி சர்ஜன் ஒருவரையும், இரண்டு உதவி சர்ஜன்களுடன் நடைபெறும் வட்ட மருத்துவ மனையல்லாத மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவ மனைகளிலும் மூன்றாவது உதவி சர்ஜன் ஒருவரையும் நியமிக்க அரசு ஒரு திட்டத்தை முடிவு செய்துள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் 50 உதவி சர்ஜன்கள் வேலை வாய்ப்புப் பெறுவர்.

(iii) பல் மருத்துவப் பட்டதாரிகளிடையே வேலையில்லாதத் திண்டாட்டத்தை நீக்கும் பொருட்டு வட்ட மருத்துவ மனைகளில் பதினொரு பல் மருத்துவப் பிரிவுகளைத் தொடங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒவ்வொரு பல் மருத்துவப் பிரிவும் பல் மருத்துவ உதவி சர்ஜன் ஒருவர், செவிலி ஒருவர், செவிலியர்

உதவியாளர் Nursing orderly இவர்களால் நடத்தப்படும். மேசை, நாற்காலி போன்ற சாதனங்களும் பிற சாதனங்களும் வாங்கும் பொருட்டு ஒவ்வொரு பல் மருத்துவப் பிரிவுக்கும் தொடரா இனமாக ரூ. 10,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**செவிலியர்.**—மருத்துவ மனைகளுக்குச் செவிலியர் பணி வசதிகளை அதிகரிக்கும் நோக்குடனும், பயிற்சி பெற்ற செவிலியர்க்கு மேலும் வேலை வாய்ப்பளிக்கும் பொருட்டும் கீழே குறிப்பிட்டுள்ளபடி கூடுதல் செவிலியர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அரசு கருதியுள்ளது.

மருத்துவக் கல்லூரியுடன் இணைந்திராத மருத்துவ நிறுவனங்கள்.

| | |
|---|---|
| லீவ் ரிசர்வ் பதவிகளாக .. .. .. .. | 10 பதவிகள், |
| ஒப்பளிப்பு வழங்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கைக்கு மேல் நெருக்கடி அதிகமாகியதால் பணிச்சுமை அதிகரித்ததன் காரணமாக அப் பணிச்சுமையை சமாளிக்க .. | 10 பதவிகள். |
| செவிலியரின் எண்ணிக்கை படுக்கைகளின் எண்ணிக்கை ஆகியவற்றிடையே தற்போதுள்ள விகிதாசாரத்தை தளர்த்துவதற்காக .. .. .. .. .. | 10 பதவிகள். |
| பொதுவாக வேலை அதிகரித்துள்ளது குறித்து .. .. | 155 பதவிகள். |

மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ நிறுவனங்கள்.

| | |
|---|---|
| விடுப்பு ரிசர்வ் பதவிகளாக .. .. .. .. | 10 பதவிகள். |
| ஒப்பளிப்பு வழங்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கைக்கு மேல் நெருக்கடி அதிகமாகியதால் பணிச்சுமை அதிகரித்ததன் காரணமாக அப்பணிச் சுமையை சமாளிக்க .. .. .. .. .. .. | 10 பதவிகள். |

## கட்டடப் பணிகள்.

“ மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள் ” என்ற திட்டத்தின் கீழ் அரசு கீழ்க்காணும் கட்டடப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மருத்துவக் கல்லூரிகளுக்கு மேம்பாடுகள் :—

1. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியிலுள்ள விசையேற்றத்திற்கு மின்னிணைப்பளித்தல்.

2. சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் மாணவிகள் ஓய்வு அறையை மேம்பாடு செய்தல்.

3. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் நோய்க் குறியியல் பிரிவின்மேல் முதல் மாடி ஒன்றைக் கட்டுதல்.

4. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் புதிய பகுதி குறியியல் Pathology நுண்ணுயிரியல் Bacteriology பகுதியின் மேல் ரூ. 8.75 லட்சம் செலவில் முதல் இரண்டு, மூன்றாவது மாடிகளைக் கட்டுதல்.



அரசு முன்னரே ஒப்பளிப்பு வழங்கியுள்ள கீழ்க்காணும் பணிகள் நடந்தேறி வருகின்றன :—

1. சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனையில் இரசாயன, சமூக, தடுப்பு மருந்து ஆய்வுக் கூடங்களை விரிவு படுத்துவதும், விரிவுரை கூடங்கள் இரண்டைக் கட்டுதலும்.

2. சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் வாயு தயாரிப்புக் கிணறு ஒன்றை அமைத்தல்.

## மருத்துவ கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளுக்கும், மாநகரிலுள்ள அரசு மருத்துவ மனைகளுக்கும் மேம்பாடுகள்.

மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகள், மாநகரிலுள்ள அரசு மருத்துவ மனைகள் ஆகியவற்றிற்கு மேம்பாடுகள் என்ற திட்டத்தின் கீழ் அரசு கீழ்க்காணும் பணிகளை நிறைவேற்ற ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

1. சென்னை, அரசு கண் நோய் மருத்துவ மனையில் ரூ. 8.75 லட்சம் செலவில் புதிய புறப்பணியாளர் பிரிவின்மேல் தனி வார்டுகள் அமைப்பதற்காக இரண்டாவது மாடி அமைத்தல்.

2. மதுரை, அரசு எர்க்ஸ்கின் மருத்துவ மனையில் ரூ. 1.30 லட்சம் செலவில் 16, 17 தனி வார்டுகளிடையே வார்டுகளை இணைக்கும் தாழ்வாரங்களைக் கட்டுவதன் மூலம் கூடுதலான வார்டு ஒன்றைக் கட்டுதல்.

3. சென்னை, சிசு நல நிலையம்—சிறுவர்களுக்கான மருத்துவ மனையில் ரூ. 4 லட்சம் செலவில் தாய்மார்களின் ஆலோசனைக்கான அரும் பொருட்காட்சி ஒன்றை அமைத்தல்.

4. சென்னை, இராயப்பேட்டை மருத்துவ மனையில் ரூ. 2.50 லட்சம் செலவில் தொற்று நோய் பிரிவு ஒன்றை அமைத்தல்.

5. சென்னை, சிசு நல நிலையம்—சிறுவர்களுக்கான மருத்துவ மனையில் ரூ. 2.10 லட்சம் செலவில் மருத்துவவாயு முதலியவற்றை வழங்குவதற்கான மத்தியத் தொகுப்பு முறை.

6. மதுரையில் ரூ. 2.57 லட்சம் செலவில் தொற்று நோய் மருத்துவ மனையில் காலரா சிகிச்சை பிரிவு ஒன்றைக் கட்டுதல்.

7. தஞ்சாவூர், இராஜா மிராசுதார் மருத்துவ மனையில் ரூ. 4.50 லட்சம் செலவில் மகப்பேறு-அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்றையும் பேறுகாலப் பிரிவு ஒன்றையும் கட்டுதல்.

1969-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கட்டடப் பணிகளை மேற்கொள்ளவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

1. மதுரை, எர்ஸ்கின் மருத்துவ மனையில் கண் நோய் மருத்துவத் துறையில் கண் விழி சேமிப்பு நிலையம், விழி வெண்படல ஒட்டு முறை, கண் விழித்திரை அகற்றுதல் பிரிவுக்கான கட்டடங்களை ரூ. 5.50 லட்சம் செலவில் கட்டுதல்.

2. சென்னை, மகளிர்-சிறுவர்களுக்கான அரசு மருத்துவ மனையில் ரூ. 5.77 லட்சம் செலவில் மகளிர் நோய், மகப்பேறு நிலையத்திற்கான கட்டடங்களைக் கட்டுதல்.

கீழே குறிப்பிட்டுள்ள பணிகளில் 1-வது இனத்தைத் தவிர ஏற்கனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள பணிகள் நிறைவேறி வருகின்றன. 1-வது இனத்திலுள்ள பணி ஏற்கெனவே முடிந்து விட்டது :—

1. சென்னை, அரசுப் பொது மருத்துவ மனையில் நரம்பு நோய் சிகிச்சைப் பிரிவை அமைத்தல்.

2. சென்னை, அரசுப் பொது மருத்துவ மனையில் தற்போதுள்ள நரம்பு நோய்ப் பிரிவுக்கு மேல் கூடுதலாக 4 மாடிகளைக் கட்டுதல்.

3. சென்னை, இராயப்பேட்டை மருத்துவ மனையில் மூன்றடுக்கு புதிய கட்டிடத்தின் மேல் கூடுதலாக இரண்டு மாடிகளைக் கட்டுதல்.

4. சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவ மனையில் அறுவைக் கூடத்தைக் குளிர் சாதனம் பொருந்தியதாகச் செய்தலும் அதற்கான பொறிகளை அமைப்பதற்கான அறைகளைக் கட்டுதலும்.

## புதிய மருத்துவக் கல்லூரிகள் திட்டம்.

திருநெல்வேலி, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகள் இத் திட்டத்தின் கீழ் வருகின்றன :—

இந்த மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும் எம்.பி.பி.எஸ். பாட முறைக்கான மாணவர்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டைப் போலவே முறையே 75, 50, 100- ஆகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

செங்கற்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகளில் முறையான எம்.பி.பி.எஸ். பாட முறையில் சேர்க்கப்பட்ட முதல் தொகுதி மாணவர்கள் 1970 டிசம்பர் திங்களில் இறுதி எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பை முடித்தனர். தற்போது கட்டாய ஹவுஸ் சர்ஜன் பயிற்சி பெற்று வருகின்றனர். கோயம்புத்தூர் மருத்துவக் தொடங்கப்பட்டதால் இக் கல்லூரியிலிருந்து முதல் தொகுதி மாணவர்கள் 1971 டிசம்பர் திங்களில் இறுதி எம்.பி.பி.எஸ். தேர்வை எழுதுவார்கள்.

1965 ஜனவரித் திங்களில் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் தொடங்கப்பட்ட 18 திங்கட்கால அளவினதாகிய சுருக்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பாடமுறை முடிவடையும் தறுவாயிலுள்ளது சுருங்கிய எம்.பி.பி.எஸ். பாட முறைக்கான கடைசித் தொகுதி மாணவர்கள் 1970 ஜூலைத் திங்களில் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் 1971 டிசம்பர் திங்களில் தங்களது படிப்பை முடித்துக் கொள்வர்.



செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி முறையான எம்.பி.பி.எஸ். பாட முறைக்காகத் தொடக்கத்தில் மாணவர்களுக்காக மட்டுமே தொடங்கப்பட்டது. ஆனால் 1970-71-ஆம் கல்வி ஆண்டிலிருந்து செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் மாணவிகளும் சேர்க்கப்பட்டனர். இவ்வாறாக இப் புதிய மருத்துவக் கல்லூரிகள் மூன்றிலும் மாணவ, மாணவியர் சேர்ந்து கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். பாடமுறை கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் முதன்முதலாக 1970–71-ஆம் கல்வியாண்டிலிருந்து தொடங்கப்பட்டது. மாநில மருத்துவக் கல்லூரிகள் மாணவர்கள், வேறெங்கும் அதாவது தமது முதல் எம்.பி.பி.எஸ். பாட முறைக்காகத் தனிப்பட்ட கலைக் கல்லூரிகளுக்கு போக வேண்டிய தேவையில்லை. கலைக் கல்லூரிகளில் புதுமுக வகுப்புகளில் இதனால் அதிக இடங்கள் ஒதுக்க முடிந்துள்ளது.

## கட்டடங்கள்.

திருநெல்வேலி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிகளுக்காக கட்டடங்கள் கட்டும் பணி குறித்த 4 நிலைகள் முடிக்கப்பட்டு விட்டன. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கான 3 நிலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் அடுத்த நிலைக் கட்டடப் பணி நடந்தேறி வருகின்றது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்காக ரூ. 90 லட்சத்துக்கு மேற்பட்ட செலவில் கட்டடங்கள் கட்டும் பணியை மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்காக ரூ. 55 லட்சம் செலவில் கட்டடங்கள் கட்டும் பணிக்காக இதுவரை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்காக ரூ. 60 லட்சம் செலவில் கட்டடம் கட்டும் பணியை மேற்கொள்ள இதுவரையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அடுத்த நிலைக்கான கட்டடங்கள் குறித்த பணிக்கு நாளடைவில் ஒப்பளிப்பு வழங்கப்படும்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கான கட்டடப் பணி குறித்து ரூ. 180 லட்சமும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்காக ரூ. 136.05 லட்சமும் கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்காக ரூ. 175 லட்சமும் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டங்களின்கீழ்க் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டப்படும். உடனடியாகத் தேவைப்படும் கட்டடங்களுக்கு முதலிடமளிக்கப்படும். அதுவும் அரசிடமுள்ள நிதி வாயில்களைப் பொறுத்துத் தான் மேற்கொள்ளப்படும்.

## இந்திய மருத்துவ முறை.

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவ முறை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையைச் சேர்ந்த நாட்டு மருந்துப் பிரிவு ஆகியவை சமீபகாலம்

வரை மருத்துவக் கல்வி இயக்குநரின் ஆளுகையில் இருந்து வந்தன. இந்திய மருத்துவ முறை இடையீடின்றி வளர வகை செய்யும் பொருட்டும், இது குறித்து வந்த முறையீடுகளுக் கிணங்கவும் அரசு நாட்டு மருத்துவ முறைக்கென்றே தனியாக இயக்குநர் அகம் ஒன்றை அமைத்துள்ளது. நாட்டு மருத்துவ முறை இயக்குநர் 1—6—1970 அன்று பொறுப் பேற்றுக்கொண்டார்.

இந்திய மருந்து முறைகளைக் கவனிப்பதற்கெனத் தற்போது தனி இயக்குநர் அலுவலகம் ஒன்று உள்ளது. மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் தலைமையின்கீழ் ஆலோசனை குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.

அரும்பாக்கத்தில் கடந்த ஆண்டு கட்டப்பட்டு வந்த நூறு படுக்கைகள் கொண்ட நாட்டு மருந்து முறை மருத்துவ மனையின் கட்டிட வேலை தற்போது முடிந்துள்ளது. இம் மருத்துவ மனை 1970-ம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. நமது பெருமதிப்பிற்குரிய மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவாக இம் மருத்துவ மனைக்கு "அறிஞர் அண்ணா அரசினர் நாட்டு மருந்து மருத்துவ மனை" எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை இந்திய மருந்து முறைக் கல்லூரி சித்த மருந்து முறைகளில் பி.ஐ.எம். படிப்புக்கு ஆண்டொன்றுக்கு 30 மாணவர்கள் வீதம் தொடர்ந்து சேர்த்துக் கொண்டு வருகின்றது. இது வரையில் 51 பி.ஐ.எம். பட்டதாரிகள் இக் கல்லூரியிலிருந்து தேறியுள்ளனர். கீழே விவரித்துள்ளவாறு, இந்த மருத்துவர் களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு அரசு தேவையான நடவடிக்கைகள் எடுத்துள்ளது :—

( ) பி.ஐ.எம். தகுதிபெற்ற 20 மருத்துவர்கள் அரசினர் மருத்துவ மனைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ii) சென்னையிலுள்ள சேப்பாக்கம் அலுவலக வளவுகளில் சித்த மருந்தகம் ஒன்று திறக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

(iii) ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் அல்லது அதற்குக் கூடுதலாக வருவாய் உள்ள கோயில்களால் சித்த மருந்தகங்கள் திறக்கப்படும்.

(iv) ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சி மன்றங்களும் நாட்டு மருந்து மருந்தகங்களைத் திறக்கத் திர்மானிக்கும் பொழு தெல்லாம், அவைகளைச் சித்த வைத்திய மருந்தகங்களாகத் திறக்குமாறு ஆலோசனை கூறும்படி கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் நகராட்சிகள் நிர்வாகத் துறை இயக்குநரும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

**மருந்துகள் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிலையம்.**

1969-ம் ஆண்டு இறுதியில் துவக்கப்பட்ட மருந்துகள் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிலையம், சென்னை மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த தாவர நூல் மற்றும் இரசாயனத் துறைகளிலும், சென்னை



மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருந்தாக்கவியல் மருந்து மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஆகிய துறைகளிலும் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, 1970-71-ம் ஆண்டில், ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடர்ந்து செயல்பட்டது. முழு வளர்ச்சி பெற்ற மருந்துகள் சார்ந்த இரசாயன ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று தொடர்ந்து தொடங்கப்படுவதற்கு முன்னால் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு, இந்த முன்னோடித் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

**குடும்பநலத் திட்டம்.**

தமிழ் நாட்டில் குடும்பநலத் திட்டம் நன் முறையில் முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது.

**வாசெக்டமி அறுவை சிகிச்சை.**

45 முழுநேர நிலையான பிரிவுகளையும், 14 இயங்கும் பிரிவு களையும் சேர்த்து தற்பொழுது 642 ஏற்பளிக்கப்பட்ட குடும்பநல அறுவைச் சிகிச்சை மருத்துவ மனைகள் (அரசினர் மற்றும் தனியார் மருத்துவ மனைகளைச் சேர்த்து) இருக்கின்றன. 1969-70-ம் ஆண்டில், 97,718 வாசெக்டமி அறுவைகள் நடத்தப்பட்டன. 1970-71-ம் ஆண்டில் 52,243 வாசெக்டமி அறுவைகள் நடத்தப் பட்டுள்ளன.

**பெண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சை**

கருத்தடை அறுவை சிகிச்சையை மேற்கொள்ள அதிக அளவில் பெண்கள் முன் வருகிறார்கள் என்பதைக் கவனிக்கு மிடத்து மகிழ்ச்சி தருவதாக உள்ளது. 1969-70-ம் ஆண்டில் 14,437 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1970-71-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கருத்தடை அறுவை சிகிச்சைகள் 18.750 ஆகும். இந்தக் கருத்தடை அறுவைச் சிகிச்சைகளில் பெரும்பாலானவை அரசினர் மருத்துவ மனைகளில் நடத்தப்பட்டுள்ளன. இவை மகப்பேறு ஆனவுடன் நடத்தப் பட்டன.

**வட்டாரக் குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்கள்.** Tubectomy

தமிழ் நாட்டில், மூன்று வட்டார குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு அரசினரால் நடத்தப்படுகின்றன; இவற்றில் சென்னையில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும் உள்ளது. மூன்றாவது பயிற்சி நிலையம் மதுரை மாவட்டம் காந்தி கிராமத்தில் இருக்கிறது. இது, கிராம நல மற்றும் குடும்ப நலத் திட்ட நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

எழும்பூரில் ரூ. 5,00 லட்சம் செலவில் வட்டாரக் குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையத்திற்கான தனிக் கட்டிடம் ஒன்று கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மூலப் பணிகள் யாவும் முடிக்கப் பட்டுள்ளன. கூடுதல் இட வசதி அளிப்பதற்குரிய செயற்

குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. மேலும், சேலம், காந்தி கிராமம் ஆகிய இடங்களில் வட்டார குடும்ப நலத் திட்டப் பயிற்சி நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

**பேறுகாலத்துக்குப் பின்னர் மேற்கொள்ளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம்** Post Partum Programme

பெரிய பேறுகால மருத்துவ மனைகளில் மகப்பேற்றுக்காக பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்பொழுது, குடும்பநலத் திட்ட நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவது அல்லது தொடங்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்தைச் செயல் படுத்த தெரிந்தெடுக்கப்பட்ட மருத்துவ மனைகள், மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் மேற்பட்டப்படிப்பு மாணவர் களுக்கும், செவிலியர்களுக்கும், ஏனைய மருத்துவத் துறைப் பணியாளர்களுக்கும் குடும்பநலத் திட்டம் பற்றிக் கற்பிக்கும் பணியில் முழுமையாகப் பங்கு கொள்ள வேண்டும். ஒன்பது அரசினர் மருத்துவமனைகளில் பேறுகாலத்துக்குப் பின்னர் மேற்கொள்ளும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. (சென்னை மாநகரத்தில் நான்கும், தஞ்சாவூரில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும், திருநெல்வேலியில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றும்.)

குடும்பநலத் திட்டத்தின் வெற்றி பெரும்பாலும் மக்கள் மன முவந்து பங்கு கொள்வதனையே சார்ந்திருக்கிறது. கல்வி கற்பித்தல், தூண்டுதல், "அளவான சிறிய குடும்பக் கொள்கையை" ஏற்றுக் கொள்ள மக்கள் மனத்தில் விழிப் புணர்ச்சியை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம்தான் இதனை எய்த முடியும். சுவர் விளம்பரங்கள், நாடகம், வில்லுப்பாட்டு, பேருந்து விளம்பரப் பலகைகள், பொருட்காட்சி, திரைப்படத் துண்டு விளம்பரங்கள், அனைத்து இந்திய வானொலியின் ஒலிப்பரப்புகள், கருத்தரங்குகள், மறு பயிற்சி முகாம்கள், கலந்துரையாடல், குடும்பநலத் திட்ட விளம்பரம், திரைப்படம் முதலிய பலவழிகளில் குடும்ப நலத் திட்டம் குறித்து மக்களுக்கு அறிவு புகட்டப்படுகிறது.

**மும்முரத் திட்டம்.**

மக்கள் தொகை பிரச்சினையைத் தீர்ப்பதில் உண்மையான சாதனையைப் புரிந்திட, தொடக்கத்தில், ஒவ்வொரு மாநிலத் திலும், மக்கள் தொகை நெருக்கமுள்ள மாவட்டங்களில் ஒன்றில், மும்முரப் பணியைத் தொடங்கிட வேண்டும் என்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்தது. அதன்படி, தேவைப்படுகின்ற கூடுதல் பணியாளர்களோடு, கோயம்புத்தூரில் குடும்ப நல மும்முரத் திட்டப் பணியை மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், பல்நோக்கு வண்டி, திரைப்படம் காட்டும் சாதனம் முதலிய கூடுதல் கருவிகளுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அண்மையில் இத் திட்டம், வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங் களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.



**குடும்பநலத் திட்டத்தை செவ்விய முறையில் செயல்படுத்து வதற்கான ஏற்பாடுகள்.**

1970-ம் ஆண்டு ஜூன் திங்களில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துரைகளின்படி சோதனை ஏற்பாடாக, ஒரு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் குடும்பநலத் திட்டப் பணி யாளர்களை ஓராண்டுக் காலத்திற்கு வைத்திருக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு குடும்பநலத் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காகவே மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**கட்டிடத் திட்டங்கள்.**

வரையறுக்கப்பட்ட ஒரு அமைப்பில் கிராம குடும்பநலத் திட்ட நிலையங்களுக்கும், துணை நிலையங்களுக்கும், இந்த நிலையங்களில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கும் கட்டிடங்களைக் கட்டு வதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இம் மாநிலத்தில், ரூ. 288.15 லட்சம் செலவில், 374 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் கிராமக் குடும்ப நலத்திட்ட நிலையம் மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு ஆகியவைகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 143 இடங்களில் கட்டிடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில், கட்டிடப் பணி வெவ்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது. ரூ. 138.24 லட்சம் செலவில், 1,153 இடங்களில் குடும்பநலத் திட்டத் துணை நிலையக் கட்டிடங்கள், பணியாளர்கள் குடி யிருப்புகள் ஆகியவை கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 122 இடங்களில் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில், பணி முன்னேறி வருகிறது. 1970-71-ம் ஆண்டில் குடும்பநலத் திட்டங்களுக்கான கட்டிடங்களுக்கு மொத்தம் ரூ. 1,45,34,655 செலவு செய்யப்பட்டுள்ளது; இன்னும் சரிக்கட்டப்படாமலிருக்கிற ரூ. 15.00 லட்சம் இத் தொகையில் அடங்காது.

**மாவட்ட வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், மற்றும் ஏனைய மருத்துவ மனைகளுக்கான மேம்பாடுகள்.**

*1970–71-ம் ஆண்டுக்கான கட்டிடத் திட்டம்.*—கூடுதல் மருத்துவ வசதிகள் அளிக்கும் பொருட்டு, 1970-71-ம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியது :—

| திட்டங்கள். | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
| --- | --- |
| 1. பாலடாவில் (நீலகிரி மாவட்டம்) 10 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனை ஒன்று கட்டுதல். | 1.20 |

[1971 ஜுலை 3

| திட்டங்கள். | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 2. மேட்டுப்பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகளுக்கு இட வசதியளிக்க புதிய புறப்பிணியாளர் பகுதி மீது முதல் மாடி கட்டுதல். | 0.90 |
| 3. நாகப்பட்டினம் (தஞ்சாவூர் மாவட்டம்) அரசினர் தலைமையிட மருத்துவ மனையில் 8 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு ஒன்று கட்டுதல். | 0.20 |
| 4. ஈரோடு (கோயம்புத்தூர் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 80 படுக்கைகளுக்கு இடமளிக்க முதல் மாடி ஒன்று கட்டுதல். | 2.60 |
| 5. ஜலகண்டபுரம் (சேலம் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல். | 1.08 |
| 6 பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல். | 1.80 |
| 7. பழனி (மதுரை) அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட தொற்றுநோய் பகுதி ஒன்றைக் கட்டுதல். | 1.21 |
| 8. வளவனூர் (தென் ஆர்க்காடு) அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகளுக்கான மகப்பேறு பகுதி ஒன்று கட்டுதல். | 0.35 |
| 9. இராமநாதபுரம் மாவட்டம் பண்ணைக்குளத்தில் அரசினர் மருத்துவ மனைக்கான புதிய கட்டிடங்கள் கட்டுதல். | 1.25 |
| 10. மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் சவக்கிடங்கு கட்டுதல். | 0.12 |
| 11. கோயம்புத்தூர் மாவட்டம், ஜல்லிப்பட்டி அரசினர் மருத்துவ மனையில் சிறு அறுவைச் சிகிச்சை கூடத்துடன் 6 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல். | 0.50 |
| 12. செங்கற்பட்டு மாவட்டம், வள்ளிபுரம் அரசினர் மருந்தகத்தில் மகப்பேறு அறை ஒன்று கட்டுதல். | 0.07 |
| 13. சேலம் தலைமை மருத்துவ மனையில் ஆட்கள், படுக்கைகள் செல்லப் ப்யன்படும் விசை ஏணி அமைத்தல். | 0.76 |



1971 ஜுலை 3]

| திட்டங்கள். | மதிப்பீட்டு செலவு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 14. சேலம் மாவட்டம், நாமக்கல் அரசினர் மருத்துவ மனையில் 39 படுக்கைகள் கொண்ட பகுதிகள் உள்பட கூடுதல் கட்டிடங்களைக் கட்டுதல். | 6.80 |
| 15. வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை அரசினர் மருத்துவ மனையில் நவீன மகப்பேறு மற்றும் அறுவை சிகிச்சைக் கூடம் ஒன்று கட்டுதல். | 1.70 |
| 16. கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் அரசினர் மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றைக் கட்டுதல். | 1.00 |
| 17. திருச்சிராப்பள்ளி மாவட்டம், வலையப்பட்டி அரசினர் பாப்பாயி ஆச்சி மருத்துவ மனையில் சவக் கிடங்கு பகுதி ஒன்று கட்டுதல். | 0.15 |
| 18. இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூரில் 38 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவ மனை ஒன்றைக் கட்டுதல். | 10.00 |
| 19. சேலம் மாவட்டம், ஓமலூர் அரசினர் மருத்துவ மனையில் 8 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றைக் கட்டுதல். | 0.42 |
| 20. தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையில் புதிய புறப்பிணியாளர் பகுதியைக் கட்டுதல். | 1.50 |
| 21. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அரசினர் மருந்தகத்தில் 32 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றைக் கட்டுதல். | 2.00 |
| 22. அரசினர் மருத்துவ மனைகளில் எக்ஸ்கதிர் பகுதிகள் கட்டுதல். (1) ஆத்தூர், சேலம் மாவட்டம்; (2) சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டம்; (3) திருமங்கலம், மதுரை மாவட்டம்; (4) விழுப்புரம், தென் ஆர்க்காடு மாவட்டம்; (5) உத்தமபாளையம், மதுரை மாவட்டம். | 1.85 |
| 23. சேலம் மாவட்டம், கொமாரபாளையம் அரசினர் மருத்துவ மனையில் 12 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றைக் கட்டுதல். | 1.60 |
| 24. வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் அரசினர் மருத்துவ மனையில் மருந்தக ஆய்வுக்கூடம் ஒன்று கட்டுதல். | 0.17 |

[1971 ஜூலை 3

| திட்டங்கள். | மதிப்பீட்டு செலவு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 25. இராமநாதபுரம் மாவட்டம், வத்திராயிருப்பு அரசினர் மருத்துவ மனையில் 8 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றைக் கட்டுதல். | 0.48 |
| 26. மதுரை மாவட்டம், பழனி அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பகுதி ஒன்றைக் கட்டுதல். | 0.22 |
| 27. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசினர் மருத்துவ மனையில் சவக்கிடங்கு பகுதி ஒன்று கட்டுதல். | 0.15 |
| 28. வட ஆர்க்காடு மாவட்டம், செங்கத்தில் 38 படுக்கைகள் கொண்ட அரசினர் மருத்துவ மனை ஒன்று கட்டுதல். | 7.30 |
| 29. மதுரை மாவட்டம், கம்பத்தில் 32 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவ மனை ஒன்று கட்டுதல். | 6.00 |
| 30. தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூரில் 70 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவமனை ஒன்று கட்டுதல். | 10.90 |
| 31. தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவ மனையில் 3 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல். | 0.45 |
| 32. மதுரை மாவட்டம், பட்டிவீரன்பட்டி அரசினர் மருத்துவ மனையில் 6 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதி ஒன்று கட்டுதல். | 1.15 |
| 33. தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையில் 32 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல். | 2.00 |

1971-72-ம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள மருத்துவ மனைகளில் கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. காஞ்சிபுரம் தலைமையிட மருத்துவ மனையில் இரட்டை அறுவை சிகிச்சைக்கூடம் கட்டுதல்.

2. நாகப்பட்டினம் அரசு தலைமையிட மருத்துவ மனையில் மகப்பேறு பகுதி ஒன்று கட்டுதல்.

3. வேலூர் தலைமையிட மருத்துவ மனையில் "சாய்தளப்பாதை" ( Ramp ) அமைத்தல்.



1971 ஜூலை 3]

4. நாகர்கோயில் தலைமையிட மருத்துவ மனையில் மருத்துவ, மற்றும் அறுவைச் சிகிச்சை சேமிப்புக் கிடங்கு கட்டுதல்.

5. திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவ மனையில் குளிர்ப் பதன கிடங்கு வசதிகளுக்கு வகை செய்தல்.

6. தருமபுரி மாவட்டம், ஹோசூரில் புதிய அரசு மருத்துவ மனை கட்டுதல்.

7. தென் ஆர்க்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவ மனையில் புறப்பிணியாளர் பகுதி, பகுதிகள் முதலியன கட்டுதல்.

8. திருச்சிராப்பள்ளி மாவட்டம், பஞ்சப்பட்டி அரசு மருந்தகத்தில் பகுதி ஒன்று கட்டுதல்.

9. திருச்சிராப்பள்ளி மாவட்டம், கீழநிலை அரசு மருந்தகத்தில் 8 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல்.

10. தஞ்சாவூர் மாவட்டம், கருப்பன்அம்பலம் அரசு மருந்தகத்தில் 10 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல்.

11. மதுரை மாவட்டம், பண்ணைக்காடு அரசு மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சைக்கூடம் மற்றும் பகுதி கட்டுதல்.

12. தென்னார்க்காடு மாவட்டம், பண்ணுருட்டி அரசு மருத்துவ மனையில் 8 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல்.

13. உதகமண்டலம் அரசு தலைமையிட மருத்துவ மனையில், நீராவிச் சலவை நிலையம் கட்டுதல்.

14. கன்னியாகுமரி மாவட்டம், அருமனை அரசு மருத்துவ மனையில் புதிய பகுதி ஒன்று கட்டுதல்.

15. வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம், அரசினர் மருத்துவ மனையில் 40 படுக்கைகள் கொண்ட பகுதி ஒன்றும் நிர்வாகப் பகுதி ஒன்றும் கட்டுதல்.

16. இராமநாதபுரம், அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் துணி அறை கட்டுதல்.

17. திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் முதன்மை மருத்துவச் சேமிப்பு அறைமீது முதல் மாடி கட்டுதல்.

18. திண்டுக்கல்லில் உள்ள மதுரை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் எண்நோய் துறை ஒன்று தொடங்குதல்.

19. மாவட்ட மற்றும் வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் செவிலியர் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

20. தூத்துக்குடி, உதகமண்டலம், தருமபுரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மாவட்டப் பொதுச் சுகாதார ஆய்வுக் கூடங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுதல்.

[1971 ஜூலை 3

21. கோயம்புத்தூரில் பொதுநல ஆய்வுக்கூடத்துக்குச் சுற்றுச் சுவர் கட்டுதல்.

22. பல்வேறு அரசினர் மருத்துவ மனைகளில் நவீன சமையல் அறைகள் கட்டுதலும், முன்னரே உள்ளவற்றைப் பழுது பார்த்தலும்.

23. உதகமண்டலம், அரசு தலைமையிட மருத்துவ மனையில் கைதிகளுக்கான பிரிவு ஒன்று கட்டுதல்.

24. கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம், அரசு மருந்தகத்தில் புறப் பிணியாளர்த் தொகுதி ஒன்று கட்டுதல்.

25. திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை, அரசு ராணி மருத்துவ மனையில் மருந்து பண்டக அறை ஒன்று கட்டுதல்.

26. திருநெல்வேலி மாவட்டம். தென்காசி, வட்டத் தலைமையிட மருத்துவ மனையில் மகப்பேறு அறை கட்டுதல்.

### வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளையும், மருத்துவர்களையும் மாநில அரசின் ஆளுகையின் கீழ்க் கொண்டுவருதல்.

கிடைக்கிற நிதி வசதிக்குட்பட்டு, படிப்படியான திட்டத்தின் கீழ் இம் மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரும் பணித் திட்டங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இச் செயற் குறிப்புக்காகும் கணிசமான தொடர் செலவு அரசால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ரூ. 4.27 லட்ச மொத்தச் செலவில் கீழ்க்கண்ட நிலையங்களை மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.

(1) ஊராட்சி ஒன்றிய மருந்தகம். கமுதி, இராமநாதபுர மாவட்டம்.

(2) ஊராட்சி ஒன்றிய மருந்தகம், காட்டுப்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(3) ஊராட்சி ஒன்றிய மருந்தகம், இளையாங்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

(4) ஊராட்சி ஒன்றிய மருந்தகம், கோடிக்கரை, தஞ்சாவூர் மாவட்டம்.

(5) ஊராட்சி ஒன்றிய மருந்தகம், வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்.

(6) கிராமப்புற மருந்தகம், குழிக்கரை, தஞ்சாவூர் மாவட்டம்.

(7) கிராமப்புற மருந்தகம், சாதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.



1971 ஜூலை 3]

### தொழு நோய்த் தடுப்புத் திட்டம்.

தமிழ்நாட்டில் சில பகுதிகளில் தொழுநோய் மிகுந்து காணப் படுகிறது. 1969-ம் ஆண்டிற்கு முன்பு கிராமப்புற பகுதிகளில் வசித்த 266 லட்சம் மக்களில் 83 லட்சம் மக்கள் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் அதிகமான 24 லட்சம் மக்கள் தொகைக்கு இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ வசதியளிப்பதற்காக நான்கு தடுப்புப் பிரிவுகளுக்கும், 44 ஆய்வு—கல்வி—சிகிச்சைப் பிரிவுகளுக்கும், அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், துணை நிலையம் ஒன்றையும் தரம் உயர்த்தியுள்ளது. குறுகியகால அளவிற்குள் இம் மாநிலத்தில் தடுப்புத் திட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்திற்காக, 1971-72-ஆம் ஆண்டில் 7 தொழு நோய் தடுப்புப் பிரிவுகளைத் தொடங்கவும் 6 தொழு நோய் துணை நிலையங்களின் தரத்தை உயர்த்தவும், கருதப்பட்டது. இதனால் மேலும் கூடுதலாக 34.2 லட்சம் மக்கள் மருத்துவ வசதி பெற முடியும்.

முக்கியமான நகரங்களிலும் மாநகரங்களிலும் காணப்படும் பிச்சைக்காரர்களை ஒழிக்கும் தொடக்கத் திட்டமாக, தொழு நோயால் அவதிப்படும் பிச்சைக்காரர்களுக்கு புது வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன், 1971 ஏப்ரல் மாதம் முதற்கொண்டு செயல்படுவதற்காக 3 காப்பு, மறுவாழ்வு இல்லங்கள் தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பல பாகங்களிலும் அண்மையில் தொழுநோய், பிச்சைக்காரர்களுக்கு மேலும் 3 காப்பு இல்லங்கள் அமைக்க அரசு கருதியுள்ளது.

மூன்று மாவட்டங்கள் (செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு) பயனடையும் வகையில் ஒரு விரைவு திட்டத்தை வகுக்க அரசு திட்டமிட்டுள்ளது. தொழுநோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் தொழு நோயால் பீடிக்கப்பட்டுள்ள கிராமப்புறப் பகுதிகள் முழுவதையும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதன் முதல்படியாக அவ்வாறு செய்யக் கருதப்பட்டுள்ளது.

### காசநோய் தடுப்புத் திட்டம்.

காசநோய்த் தடுப்புத் திட்டம் ஒரு தேசியத் திட்டமாகவே எடுத்துக் கொள்ளப்படுகிறது. காசநோய் தொற்று கண்டுள்ள நேர்வுகளைக் கண்டு பிடித்து அந்த நோயாளிகளுக்கு அவர்களது இல்லங்களிலேயே பயனுள்ள முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் காசநோய்த் தொற்றினை இயன்ற விரைவில் குறைப்பதும், சிறார்களுக்கு பி.சி.ஜி. ஊசி குத்துவதன் மூலம் இந் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதும் நமது நோக்கமாகும்.

மூன்றும் திட்டக் காலத்திலிருந்து அடங்கல் முறை காச நோய்ப் பணிக்கான நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது "மாவட்டக் காச நோய்த் திட்டம்" எனப் பெயர் பெறும். இத் திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். காசநோய்த் தனி மருத்துவ மனைகளை அமைப்பதற்கும், அவற்றின் தரத்தை

உயர்த்துவதற்கும் மத்திய அரசின் உதவி அளிக்கப்படுகிறது. மாவட்ட காசநோய்த் திட்டத்தைச் செயல்படுத்தும் மாவட்டத்திலுள்ள 1 முதல் 1.5 மில்லியன் மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய்த் தனி மருத்துவ மனை ஒன்று அமைக்கப்படுகிறது. மாவட்ட காச நோய்த் திட்டத்திற்காக சாதனங்கள், அதாவது எக்ஸ் கதிர் இயந்திரம், நுன் பெருக்கிக் கருவி வண்டிகள் (ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 வண்டிகள்) உட்பட ஆய்வுச் சாலைக்கு வேண்டிய எல்லா சாதனங்களும் ரூ. 1 லட்சத்தில் "யூனிசெஃப்" நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இந்தத் தொடரா செலவைத் தவிர, பணியாளர்களுக்குச் சம்பளம், படிகள், சில்லரைச் செலவுகள் போன்ற தொடர் செலவுக்காக வருடம் ஒன்றுக்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்து. இச் செலவு மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 14 மாவட்டங்களிலும் மாவட்ட காச நோய்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாவட்ட காச நோய்த் திட்டத்தின் முக்கிய அங்கமாகச் செயல்படுவது மாவட்ட காசநோய் நிலையமாகும். காசநோய்த் தடுப்புத் திட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டுள்ள மாவட்ட பொதுச் சுகாதார நிலையங்கள் அனைத்திலும் இது ஒன்றுதான் சிறப்புத் தன்மை வாய்ந்ததாகும். காசநோய்த் தடுப்புத் திட்டத்தைப்பற்றி பெங்களூர் தேசிய காச நோய் நிலையத்தில் பயிற்சி பெற்று, காசநோய் மருத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்று ஒரு உதவி அறுவை சிகிச்சையாளராக உள்ள மாவட்ட காசநோய் அதிகாரி, மாவட்ட காச நோய்த் திட்டத்தைத் திட்டமிட, செயல்படுத்த மற்றும் மேற்பார்வையிட முழுப் பொறுப்புடையவராவார். இத் திட்டத்தின் முன்னேற்றம் பற்றி இவர் மேல் அதிகாரிகளான மாநில காச நோய் அதிகாரி, சுகாதாரப் பணிகள்-குடும்ப நலத் திட்டத் துறை இயக்குநர், சுகாதாரப் பணிகள் தலைமை இயக்குநர், புது டில்லி ஆகியோருக்கு அறிவிப்பார். மிகவும் அஞ்சத்தக்க நோயான "காசநோய்க்கு" எதிராகப் போராடி வெற்றி காண்பதற்காக இவருக்கு, பயிற்சி பெற்ற சிறந்த பணியாளர்கள் அடங்கிய ஒரு தொகுதி, அதாவது, புள்ளி விவர உதவியாளர் ஒருவர், மருத்துவ சிகிச்சை அமைப்பாளர், ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவர், கதிர்வீச்சு இயந்திரத்தை இயக்குபவர் ஆகியோர் உதவுகின்றனர். தேர்வுதர சுகாதார ஆய்வாளர் ஒருவர் (குழுத் தலைவர்), ஏழு சுகாதார ஆய்வாளர்கள் (தொழில் நுட்பப் பணியாளர்கள்) அடங்கிய பி.சி.ஜி. ஊசி குத்தும் குழு ஒன்று, மாவட்ட காசநோய் அதிகாரியின் கண்காணிப்பின்கீழ், தடுப்பு பி.சி.ஜி. ஊசிக் குத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. மாவட்டத்திலுள்ள பிற நிலையங்கள் அனைத்திலும் நோய் கண்டு பிடிப்பு, சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட காசநோய் நிலையம் இந்தப் பணிகளை மேற்கொள்வதுடன் மாவட்ட காசநோய் விவரப் பட்டியலை வைத்து வருகிறது;



பிற சுகாதார நிலையங்களின் காசநோய்த் தடுப்புப் பணிகளை ஒருங்கிணைக்கிறது; பி.சி.ஜி. பணிக்கு ஏற்பாடு செய்து பொதுவாக அதை மேற்பார்வையிடுகிறது; பயனளிக்கத்தக்க பதிவு—அறிக்கை முறையைப் பேணி வருகிறது. ஒவ்வொரு மாவட்ட காசநோய் அதிகாரியின்கீழ் சராசரி 50 துணை நிலையங்களுள்ளன. காச நோயாளிகளுக்கு அங்கு இலவசமாக நோய்க் குறிகள் கண்டறியப் படுவதுடன், சிகிச்சை வசதிகளும் உள்ளன. தமிழ் நாட்டில் 753 காசநோய்த் துணை நிலையங்கள் உள்ளன.

### மாவட்ட காசநோய்த் திட்டத்தின்கீழ் சுகாதாரக் கல்வி பிரச்சாரம்.

தமிழ்நாட்டில், காசநோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் இரண்டு விளம்பரப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவிலும், விளம்பர அதிகாரி ஒருவர் (அரசிதழ் பதிவு பெற்றவர்) திரைப்பட இயந்திரத்தை இயக்கும் பணியாள், ஏவலாள், வலவர் ஒருவர் ஆகியோர் அடங்கியுள்ளனர். ஒரு பிரிவு இம் மாநிலத்தின் வடக்குப் பகுதியிலும், இன்னொரு பிரிவு தெற்குப் பிரிவிலும் செயல்பட்டு வருகிறது.

### புற்றுநோய்த் தடுப்புத் திட்டம்.

ஒப்புக்கொள்ளப்பட்ட செயல் திட்டத்தின்கீழ் காஞ்சீபுரம், புற்று நோய்த் தடுப்புத் திட்டத்திற்காக ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 20,000 டாலர் அதாவது ரூ. 1,50,000 மானிய நிதி உதவியாக உலக சுகாதார நிறுவனம் அளிக்கிறது.

1969–70 ஆம் ஆண்டின் மானியமாக உலக சுகாதார நிறுவனத்தால் ரூ. 1,50,000 தொகை (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம்) அளிக்கப்பட்டது.

காஞ்சீபுரம், புற்றுநோய் நிலையத்தில் செல் ஆராய்ச்சிப் பணிக்கு உபயோகப்படும் சாயப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகச் செலவழித்த ரூ. 3,175.27 தொகையை புது டில்லியிலுள்ள உலகச் சுகாதார நிறுவனம், திரும்பக் கொடுத்தது.

காஞ்சீபுரம், அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையத்துக்காக செல் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ள அடையாறு, புற்றுநோய் நிலையத்துக்கு இரசாயனப் பொருட்களையும், சாயப் பொருட்களையும் வழங்குவதற்காக செலவழித்த ரூ. 4,400-ஐ திரும்பக் கொடுக்க வேண்டுமென்று, புதுடில்லி, பொதுச் சுகாதார நிறுவனத்தின் வட்டார இயக்குநருக்கு எழுதப் பட்டுள்ளது.

புற்றுநோயைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிக்க வசதிகளைப் பெற்றிராத சில மாவட்டங்களுக்கும் புற்றுநோய்த் தடுப்பு திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டமொன்று அரசின் ஆலோசனையில் உள்ளது.

[1971 ஜூலை 3

### குருதி சேமிப்பு நிலையங்கள்.

தமிழ்நாட்டின் எல்லா மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும், சில பெரிய வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் குருதி சேமிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம்.

தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர. இம் மாநிலத்திலுள்ள எல்லா முக்கிய தொழிற்சாலைகள் பகுதிகளிலும் வேலை செய்யும் மக்களுக்குப் பயன் விளைவிப்பதற்காகத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. 3,84,600 குடும்பங்களிலுள்ள 15 லட்சம் மக்கள் இத் திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். இத் திட்டத்தின்கீழ், சாதனங்களுடன் கூடிய இரண்டு தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் ஒன்று சென்னை மாநகரிலும், மற்றொன்று கோயம்புத்தூரிலும் பணி புரிந்து வருகின்றன. அவற்றில் முறையே 625, 300 படுக்கைகள் உள்ளன. நொன்னூற்றி ஏழு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களும் (நிலையானவை, இயங்குபவை) இத் திட்டத்தின் கீழ்ப் பணிபுரிந்து வருகின்றன. கூடுதலாக, மூன்று தொழிலதிபர்கள் பயன்பாட்டு மருந்தகங்களும், மூன்று பகுதி நேர தனி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

2. முன்னூறு படுக்கைகளுடன் கூடிய புதிதாகக் கோயம்புத்தூரில் கட்டப்பட்ட தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனை 31—8—1970 முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இத் திட்டத்தின் கீழ், 1970, ஜூலைத் திங்களில் தூத்துக்குடி, விக்ரமசிங்கபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்ட குடும்பங்களிலுள்ள நபர்களுக்கு மருத்துவ வசதிகள் நீட்டிக்கப்பட்டன. இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகர் நகராட்சி எல்லைக்குள் அடங்காத பக்கத்திலுள்ள பகுதிகளுக்கு 27—9—1970 முதற்கொண்டு மருத்துவ வசதி அளிக்க இத் திட்டம் மேற்கொண்டும் விரிவுபடுத்தப்பட்டது. முதன் முறையாக இத்திட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், வடலூர், நெல்லிக் குப்பம் ஆகிய இடங்களில் 31—10—1970 முதற்கொண்டு மருத்துவ வசதி அளிக்க செயல்படுத்தப்பட்டது. 13—1—1971 அன்று பொன்னேரி வட்டம், மீஞ்சூரில் புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. 13—4—1971 முதல் மதுரையில் 202 படுக்கைகளுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனையைத் தொடங்க அரசு தீர்மானித்துள்ளது.

3. இத் திட்டத்தினால் அடையும் பலனை விரிவுப் படுத்தவும், இந்தச் சமூக நலத் திட்டத்தின் கீழ் நிறைய பகுதிகளும், நிறைய பணியாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் மருத்துவ வசதி பெற வசதி செய்யவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. எனினும், தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்தினால் மருத்துவ வசதிச்



1971 ஜூலை 3]

செலவுக்கு உச்சவரம்பு 1—4—1970 முதற்கொண்டு கொண்டுவந்ததனால் இந் நோக்கம் முழுவதும் அடைய முடியவில்லை. அரசு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பணியாளருக்கும் வருடம் ஒன்றுக்கு மருத்துவ வசதி ரூ. 50 உச்சவரம்பு செலவில்தான் அளிக்க வேண்டுமென்று தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் வரையறுத்துள்ளது. தமிழ் நாடு அரசுத் தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் அமைந்த மாநில பிரதிநிதிக் குழு, மருத்துவ வசதி குறித்த உச்சவரம்பை விட்டு விட வேண்டுமென்று இந்திய அரசை வேண்டிக் கொண்டு கொடுத்த முறையீட்டின் விளைவாக, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் உச்சவரம்பை மாற்றியமைத்து, ஒவ்வொரு குடும்பத்துக்கும் வரையறுக்கப்பட்ட அளவு மருத்துவ வசதிக்காக ரூ. 50 என்ற அளவையும், நீட்டிக்கப்பட்ட மருத்துவ வசதிக்காக ரூ. 54 என்ற அளவையும், மருத்துவ மனையில் தங்கியிருக்கும் வசதியுடன் கூடிய மருத்துவ வசதி அளிக்க ரூ. 64 என்ற அளவையும் வரையறுத்தது. ஆயினும் குறிப்பிட்ட ஒரு ஆண்டில் ஒரு மாநிலத்தில் செலவான தொகை மேலே குறிப்பிட்ட உச்சவரம்பு அளவைவிட அதிகமாக இருந்தால், சம்பந்தப்பட்ட மாநிலத்தால் அந்த அதிகப்படியான செலவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அந்த அதிகப்படியான செலவில் ஒரு பகுதியைக் கூட கழகம் ஏற்காது. இந்த உச்சவரம்பின் காரணமாக மருத்துவ வசதிக்காகப் பகிர்ந்து கொள்ள வேண்டிய செலவிற்கு மேற்பட்டு ரூ. 125 லட்சம் கூடுதல் செலவை இவ்வரசு ஏற்க வேண்டி வரும். மருத்துவ வசதி அளிப்பதால் ஏற்படும் செலவை திருத்த உச்சவரம்புத் தொகைக்குள் கட்டுப்படுத்துவது சாத்தியமாகுமா என்பது பரிசீலனையிலுள்ளது.

### தமிழ்நாட்டில் மருத்துவ வசதிகளை விரிவாக்குவதற்கான சிறப்பு நல நிதித் திட்டங்கள்.

சிறப்பு நல (பரிசுச் சீட்டு) நிதியிலிருந்து தமிழ்நாட்டில் மருத்துவ வசதிகள் அளிக்கவும், அவ் வசதிகளைப் பெருக்குவதற்கும் அரசு 1970—71-ம் ஆண்டில் ரூ. 75 லட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. கிராமப் புறப் பகுதிகளில் ரூ. 50 லட்சமும், மாநகரத்தில் ரூ. 25 லட்சமும் செலவிடப்படவிருக்கிறது.

சிறப்பு நல (பரிசுச்சீட்டு) நிதியின்கீழ்த் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கும்போது கீழ்க்கண்ட கொள்கைகள் நினைவில் கொள்ளப்பட்டன.

இத் திட்டம் பகுதியிலுள்ள ஏராளமான ஏழை மக்களுக்கு பயன்தரக் கூடியதாக இருக்க வேண்டும். கட்டிடங்கள், சாதனங்கள் முதலியன நிலையான தன்மையைச் சார்ந்ததாகத் தொடங்கப் படும் பணிகள் இருக்க வேண்டும். இவை பொதுமக்களின் தேவைக் கேற்ப இருக்க வேண்டும். மருத்துவ நிறுவனங்களை விரிவாக்குதல் மேம்படுத்துதல் போன்ற பணிகள் குறித்த கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்படுவதாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மாநகர மருத்துவ மனைகள்.

### 1. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை.

இம் மருத்துவ மனையிலுள்ள ஏராளமான பிரிவுகள் பழைய கொட்டகைகளில் இருப்பதால், கூடுதலாக 100 நோயாளிகளுக்கு இடவசதி அளிப்பதற்காக ரூ. 3.7 லட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 2. இராஜா சர் இராமசுவாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.

இந்த மருத்துவ மனையில் மகப் பேறுக்காக வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருவதால், படுக்கைகள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. ஐம்பது கூடுதல் படுக்கைகளுக்கென சிறு அலமாரிகள், கட்டில்கள் ( ) சாதனங்கள் ஆகியவற்றை ரூ. 30,000 செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 3. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை.

ரூபாய் 1.5 லட்சம் செலவில் தொழில் ஈடுபாட்டு மருத்துவச் சிகிச்சைக் கொட்டகைகள் நான்கினைக் கட்டுவதற்கும், புற நோயாளி தொகுதியில் ஒரு நடமாடும் எக்ஸ்கதிர் பிரிவு ரூ. 50,000 செலவில் அமைப்பதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 4. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை, சென்னை.

முப்பது படுக்கைகளுடன் மகப்பேறு பிரிவு (மகப்பேறு அறை படுக்கைகளுடன் கூடிய பிரிவு) ஒன்றை ரூ. 2.5 லட்சம் செலவில் கட்டுவதற்கும், எல்லாச் சாதனங்களுடன் கூடிய முடநோய் இயற்கை முறை மருத்துவ சிகிச்சையளிக்கும் பிரிவு ஒன்றை ரூ. 1 லட்சம் செலவில் கட்டுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

### 5. இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை.

வாய் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக 32 படுக்கைகளுடன் கூடிய (16 ஆண்களுக்கு 16 பெண்களுக்கு) புற்றுநோய்ப் பிரிவு ஒன்றை ரூ. 2.5 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நோய் அனேகமாக ஏழை மக்களிடையே உள்ளது.

### 6. அரசு பொது மருத்துவமனை, சென்னை.

புற்றுநோய், தொழுநோய். காசநோய்ப் பிரிவுகளை மேம்படுத்த, 150 படுக்கைகளுடன் கூடிய பிரிவு ஒன்றை ரூ. 4 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.





### 7. கஸ்தூரிபாய் காந்தி மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை.

இந்தியாவில் உள்ள மகப்பேறு மருத்துவ மனைகளில், இந்த மருத்துவ மனையில்தான் அதிக அளவுக்கு குழந்தைகள் பிறக்கின்றன. உரிய காலத்துக்கு முன் பிறந்த குழந்தைகளையும் முழுவளர்ச்சியடையாத குழந்தைகளையும் கவனித்துக் கொள்வதற்கு வசதி செய்வதற்காக ஒரு பிரிவை அமைக்கும் தேவை நீண்டகாலமாக உணரப்பட்டு வந்துள்ளது. ரூ. 2 லட்சம் செலவில் இப் பிரிவைக் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 8. அரசினர் மகளிர்-சிறுவர் மருத்துவமனை, சென்னை.

ரூபாய் 2 லட்சம் செலவில் புறப்பிணியாளர் பிரிவு ஒன்று கட்டப்படுவதற்கும், 50 படுக்கைகளுடனும், சாதனங்களுடனும் கூடிய தாய்-சேய் பிரிவு ஒன்று ரூ. 2.5 லட்சம் செலவில் கட்டப்படுவதற்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மாநகரத்தில் உள்ள தனியார் மருத்துவ மனைகள்

### 9. புற்றுநோய் நிலையம், அடையாறு.

கூடுதல் மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 1.5 லட்சம் கருணை மானியமாக வழங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 10. சுயேச்சை சுகாதாரப் பணிகள், அடையாறு.

தேவையான சாதனங்களுடன் 10 சிறிய தொடக்க சுகாதார நிலையங்களை நடத்த ரூ. 50,000 தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## கிராமப்புறப் பகுதிகள்.

### 11. ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனை, தஞ்சாவூர்.

சருமவியாதி, பாலினத் தொழுநோய், நரம்பிசிவுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இடவசதியளிக்க இரட்டை வார்டு ஒன்று ரூ. 2 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 12. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

கீழ்க்கண்டவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது :—

1. ரூபாய் 2.5 லட்சம் செலவில் 20 படுக்கைகளுடனும், அறுவை சிகிச்சை அறையுடனும் கூடிய விபத்து முதற் சிகிச்சைப் பிரிவு ஒன்று.

2. ரூபாய் 1.3 லட்சம் செலவில் 20 படுக்கைகளுடன் கூடிய நரம்பியல் பிரிவு ஒன்று கட்டுதல்.

3. ரூபாய் 1.2 லட்சம் செலவில் கூடுதல் நீராவி சலவைச்சாலை சாதனங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்தல் (மொத்த செலவு ரூ. 5 லட்சம்).

[1971 ஜூலை 3

**13. வட்டத் தலைமையிட மருந்தகங்கள்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி, திருமயம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருந்தகங்களில் 20 படுக்கைகளுடைய பிரிவுகள் கட்டுவதற்கும் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு, பாபநாசம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் மொத்தச் செலவு ரூ. 3 லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**14. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கான எக்ஸ் கதிர்ப் பிரிவுகள்.**

20 படுக்கைகள் அதற்கு மேல் எண்ணிக்கையுள்ள படுக்கைகளுடன் கூடிய கீழ்வரும் 10 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பிரிவு ஒன்றுக்கு ரூ. 1 லட்சம் செலவில் எக்ஸ் கதிர்ப் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது:—

1. அரக்கோணம்.
2. போளூர்.
3. கள்ளக்குறிச்சி,
4. ஒசூர்.
5. உத்தமபாளையம்.
6. உசிலம்பட்டி.
7. சாத்தூர்.
8. நன்னிலம்.
9. மாயூரம்.
10. சீர்காழி.

இவை கூறி, இம் மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்குமாறு வேண்டுகிறேன்.

## இணைப்பு—II.

கோரிக்கை எண் 15—மக்கள் நலம், 1971–72.

[33–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 15—மக்கள் நலம், 1971–72.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை எண் 15—"மக்கள் நலம்" என்பதன் கீழ் ரூ. 13,12,07,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

**கொள்கை.**—சமுதாயத்தினர் திண்ணிய உடல் நலம் பெறுவதற்கும் பெற்ற நலத்தைப் பேணி வளர்ப்பதற்கும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது சுகாதாரத் துறையின் பொறுப்பாகும்.



1971 ஜூலை 3]

2. பொதுச்சுகாதாரம், தொற்று நோய்களைத் தடுத்தல்—கட்டுப்படுத்துதல் பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல் பதிவு முறையை மேம்படுத்துதல், சுகாதார முறைகளைப்பற்றி மக்களுக்கு அறிவுறுத்துதல், சிறந்த தாய்-சேய் நலப்பணிகளை அளித்தல், மேலும் பல ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்குதல் முதலிய இன்றியமையாத பணிகளை இத்துறை கவனித்து வருகிறது.

3. இறப்பு விகிதம் குறைந்துள்ளதே இத்துறையின் திறமைக்குத் தக்கதொரு சான்றாகும். சுகாதார நலத் திட்டங்கள் பல மிகத் திறம்பட நிறைவேற்றப்பட்டுள்ளன. சுற்றுப்புற சுகாதாரம் குறித்து, குறிப்பாக திருவிழாக்காலங்களில் சிறப்பாக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள் பதிவு முறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் விரைவாக முன்னேறி வருகின்றன. சுகாதாரத் துறையின் சிறப்புக்கூறுகள் பற்றித் தற்போது நான் விளக்க முற்படுகிறேன்.

### I. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

4. (i) **வாந்திபேதி.**—கொள்ளை நோய் ஒழிப்பு இயல் ஊர்திப் பிரிவுகள் ஆறும், வாந்திபேதி தடுப்புக் குழுவும் தஞ்சாவூரில் தொடர்ந்து செயலாற்றி வருகின்றன. மொத்தமாகச் சொல்லுமிடத்து முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் 1970-ஆம் ஆண்டில் வாந்திபேதி நோய் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இம்மாநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளில் வாந்திபேதி நோய் பற்றிய தகவலைப் பின்வரும் விவர அட்டவணையில் காணலாம் :—

| ஆண்டு. | | | நோயினால் பாதிக்கப்பட்டவர். | நோயின் காரணமாக இறந்தவர். |
|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) |
| 1968 | .. | .. | 6,700 பேர். | 620 பேர். |
| 1969 | .. | .. | 5,460 ,, | 634 ,, |
| 1970 | .. | .. | 1,414 ,, | 277 ,, |
| 1971 (31-5-1971 வரை) | | | 659 ,, | 79 ,, |

(ii) **பெரியம்மை.**—பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டம் 1964 மார்ச் திங்களில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் படிப்படியாக அம்மை குத்தும் பணி முனைப்பாக நடைபெற்றது.

பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் நான்கு ஆண்டுகளில் செய்த பணியை நிலைப்படுத்தும் பணி நான்காம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு 28-2-1970 அன்று முடிக்கப்பட்டது. இத்திட்டம் 1970-71-ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டதோடு 1971-72-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[1971 ஜூலை 3

பெரியம்மை ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் செய்யப்பட்டுவரும் பணி, இந்நாட்டிலேயே மிகச் சிறந்ததெனப் போற்றப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளாக (1969-70 ஆண்டுகளில்) நமது மாநிலத்தில் பெரியம்மை நோய் இல்லை. 1970-ம் ஆண்டு முழுவதும் 0.14 வயதுத் தொகுதியினருக்கு முதல் தடவை அம்மை குத்தும் பணியை முனைப்பாகச் செயல்படுத்துவதில் சுகாதாரப் பணியாளர்கள் ஈடுபட்டனர். 1970-ஆம் ஆண்டில் அவர்கள் 14,33,011 பேருக்கு முதல் தடவை அம்மை குத்தினர். 11,95,987 பேருக்கு மறுமுறை அம்மை குத்தினர். 1971-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் திங்கள் வரை முதல் தடவை அம்மை குத்தப்பட்டவர்கள் மறுமுறை அம்மை குத்தப் பட்டவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | முதல் தடவை அம்மை குத்தப்பட்டவர்கள் | மறுமுறை அம்மை குத்தப்பட்டவர்கள் |
|---|---|---|
| ஜனவரி .. .. .. | 80,980 | 1,28,756 |
| பிப்ரவரி .. .. .. | 1,01,372 | 2,93,476 |
| மார்ச் .. .. .. | 1,20,779 | 3,91,989 |
| ஏப்ரல் .. .. .. | 1,12,027 | 3,13,485 |
| மொத்தம் .. | 4,15,158 | 11,27,706 |

1971–72-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இப்பணிக்காக ரூ. 18.24 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, 1970-71-ஆம் ஆண்டில் ரூ. 27.10 லட்சம் செலவிடப்பட்டது. நடப்பாண்டில், 0-14 வயது தொகுதியினருக்கு முதல் தடவை அம்மை குத்தும் பணி முனைப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்று சுகாதாரப் பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

(iii) **பிளேக்.**—முந்தைய ஆண்டுகளைப்போல், 1970-ஆம் ஆண்டிலும் இம்மாநிலத்தில் "பிளேக்" நோய் காணப்படவில்லை. கடந்த ஆண்டுகளில் "பிளேக்" நோய் பெரிதும் பரவிய பகுதிகளில் சிறப்புப் பணியாளர்கள் தொடர்ந்து செயலாற்றினர். போதிய அளவு இரசாயனங்களும் சாதனங்களும் வாங்கப்பட்டு பிளேக் நோய் தடுப்புப் பணியில் பயன்படுத்தப்பட்டன.

(iv) **மலேரியா.**—மலேரியா கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று இம் மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. மலேரியா, கொசுக்களினால் பரவும் நோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து இக் கழகம் கவனிக்கிறது. மத்திய வட்டார மலேரியா ஒழிப்பு அமைப்புகளும் உள்ளன. இவற்றுடன் சிறந்த ஆய்வுக்கூடங்கள் உள்ளன; அங்கு பயிற்சி, ஆராய்ச்சி, வசதிகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. இக்கழகம் இம்மாநிலத்தில் 1945-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. முதலாம் ஆண்டுத் திட்டக் கால அளவில் செயல்படுத்தப்பட்ட மலேரியா கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டம் 1958-59 முதல் மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டமாக மாற்றப்பட்டது. குறிப்பிட்ட கால அளவிற்கு இம்மாநிலத்தில்



1971 ஜூலை 3]

டி.டி.டி. மருந்து தெளித்தல், வீடுவீடாகச் சென்று மலேரியா நோய் கண்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தல், அதன் பின்னர் கண்காணிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாகும்.

நோயை ஒழிக்கும் பணியை மேற்கொள்ளும் வகையில் 1959-60-ம் ஆண்டில் தமிழ் நாடு முழுவதிலும் டி.டி.டி. மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1960-61, 1961-62-ஆம் ஆண்டுகளில் எல்லாப் பிரிவுகளிலும் இத்தெளிப்புப் பணி தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் நிலையாக அதாவது செயல்முனைப்புக் கண்காணிப்பு நிலையாக, மருந்து தெளிப்பதுடன் கண்காணிப்புக் குழுக்கள் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீடுதோறும் சென்று நோய் கண்டவர்களை முனைந்து கண்டுபிடித்து அவர்களுக்கு மலேரியா தடுப்பு மருந்துகளைக் கொண்டு சிகிச்சையளிக்கின்றனர். இதன்மூலம் கண்காணிப்புப் பணிகள் 1960–61 முதல் நிறைவேற்றப்பட்டன. மருத்துவ நிலையங்களிலும் சமூகப் பணிச் சங்கங்கள் மூலமாகவும் கண்காணிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1962–63-ம் ஆண்டில் மருந்து தெளிப்புப் பணி 23 பிரிவுகளில் கைவிடப்பட்டது. 1964–65-ல் சுமார் 15 பகுதிகளிலும், 1965–66-ல் 9.25 பகுதிகளிலும் கண் காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 24.25 பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1966–67-ல் மேலும் 4.5 பகுதிகளில் கண்காணிப்பு நிலை தொடங்கப் பட்டது. இவ்வாறாக மொத்தம் 28.75 பகுதிகளில் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது. 32-க்கு மேற்பட்ட பிரிவுகளில் எஞ்சிய சில பகுதிகளில் இதற்கு முந்திய நிலையில் மேற்கொண்ட பணிகளே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1969–70-ல் செலவிடப்பட்ட தொகை, 1970–71-ல் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை, 1971–72-ல் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| (a) செயல் நிலையை அடைந்தவை, செயல் நிலையை அடையாதவை ஆகியவற்றின் கீழ் 1969-70ல் செலவான தொகை .. .. .. .. .. | 128·57 |
| (b) செயல் நிலையை அடைந்தவை, செயல் நிலையை அடையாதவை ஆகியவற்றின்கீழ் 1970-71-ல் திருத்த மதிப்பீடு .. .. .. .. | 166·05 |
| (c) செயல் நிலையை அடைந்தவை, செயல் நிலையை அடையாதவை ஆகியவற்றின்கீழ் 1971–72-ல் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. | 170·30 |

(v) **யானைக்கால் நோய்.**—செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், வட ஆர்க்காடு மாவட்டங்களில் செங்கற்பட்டு, சிதம்பரம், கும்பகோணம், வேலூர் ஆகிய இடங்களைத் தலைமை

யிடங்களாகக் கொண்டு, யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டப் பிரிவுகள் நான்கு உள்ளன. ஒவ்வொரு பிரிவும் தோராயமாக 3 லட்சம் மக்கள் தொகை உடைய பகுதிகளில் செயல்பட்டு வருகிறது.

தாழ்வான பகுதிகளைச் சீராக்கி கழிவு நீரை அகற்றும் வகையில் வடிகால் அமைத்தல் போன்ற சிறு பொறியியல் பணிகளை மேற்கொள்வதோடு தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் முறையாகக் கொசு ஒழிப்புப் பணியை இப்பிரிவுகள் கவனித்து வருகின்றன. 5 முதல் 15 வயது வரையிலுள்ள பள்ளி செல்லும் சிறுவர்களிடையே யானைக்கால் நோய் பரவியுள்ளது பற்றிய ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

இதனால் மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவு ரூ. 5.80 லட்சமாகும். ஆனால் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் மருந்துகள் வகையில் ஆண்டொன்றுக்கு ரூ. 1.2 லட்சம் முதல் ரூ. 1.7 லட்சம் பெறுமான மருந்துகள் இந்திய அரசினால் உதவியாக அளிக்கப்படுகின்றன.

நான்காம் திட்டக்கால அளவில், அதாவது 1969-70 முதல் 1973-74 வரையில், படிப்படியானதொரு திட்டத்தின்கீழ் யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு தேசியத் திட்டத்தைச் சீரமைப்பதென்று திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு சீரமைப்பு செய்வதினால் ஏற்படும் கூடுதல் செலவை இந்திய அரசு ஏற்கும்.

## II. சரும நோய் ஒழிப்புத் திட்டம்.

5. யாஸ் என்பது மேகநோய் அல்லாத ஒரு சரும நோயாகும். இந்நோய் மேகநோயைப் பரப்புகிற நுண் கிருமிகளைப் போன்ற கிருமிகளினால் பரப்பப்படுகிறது. இந்நோய் நேரடித் தொடர்பினால் மக்களிடையே பரவுகிறது. ஒரு சில நேர்வுகளில் இந்நோய் ஈக்களினால் மறைமுகமாகப் பரப்பப்படுகிறது. கிருமிகள் இந்நோய் வரக்கூடியவர் உடலில் நுழைந்து முட்டையிடுகின்றன. 3 முதல் 5 வார கால அளவில் கிருமிகள் வளர்ந்து பரு, கொப்புளம் முதலியவை தோன்றுகின்றன. நைவுப்புண் ஏற்பட்ட 6 வாரங்களுக்குப் பிறகு சினப்புகள் தோன்றுகின்றன. இதுதான் யாஸ் நோய் பரவத் தொடங்குவதற்கு அடையாளமாகும். இந்நோய் பின்னர் பல நிலைகளில் பரவத் தொடங்கி சருமத்தின் நிறத்தையே மாற்றி சருமத்தையும் எலும்புகளையும் கூடப் பாதிக்கின்றது.

இந்த நோய் அறவே சுகாதாரமற்ற பகுதிகளில் மக்களின் அறியாமையினாலும், வறுமையினாலும் பரவுகின்றது. சமூகப் பொருளாதார நிலைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களிடையே, பெரும்பாலும் அரிசனங்களிடையே காணப்படுகிறது. இந்நோய் பெரும்பாலும் மதுரை மாவட்டத்திலும், திருச்சி, தருமபுரி மாவட்டங்களின் ஒரு பகுதியிலும் காணப்படுகிறது. மதுரை, திருச்சி மாவட்டங்களில் இந் நோய் பரவுவதைத் தடுக்க திட்டம்





ஒன்று தற்போது செயல்பட்டு வருகிறது. திண்டுக்கல்லில் உள்ள சிறப்புச் சுகாதார அதிகாரியின்கீழ்ச் செயல்படும் இப் பிரிவில் அவருக்கு உதவியாக பழனி, பெரியகுளம், கரூர் ஆகிய இடங்களில் 3 சுகாதார இன்ஸ்பெக்டர்கள் பணிபுரிகின்றனர்.

தருமபுரியில் யாஸ் ஒழிப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு 1971 ஜூன் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது.

1970-71-ம் ஆண்டில் இந் நோய் கண்டவர்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆய்வு செய்யப்பட்ட கிராமங்கள். | பரிசோதனை செய்யப்பட்ட நபர்கள். | நோயால் பாதிக்கப்பட்டவர்கள். | சிகிச்சையளிக்கப்பட்ட கிராமங்கள். | சிகிச்சையளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | இது குறித்து சிறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டவர்கள். |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 754 | 59,452 | 410 | 126 | 284 | 310 |

## III நரம்புச் சிலந்தி நோய்த் தடுப்புத் திட்டம்.

6. நரம்புச் சிலந்தி தொற்று நோய் 'சைகிலாப்ஸ்' என்னும் புழுவால் பரவக்கூடியதாகும். தமிழ்நாட்டில் படிக்கட்டுகளை உடைய கிணறுகள், குட்டைகள் ஆகியவற்றிலிருந்து நீர் எடுத்துப் பயன்படுத்தக்கூடிய பகுதிகளில் இந்நோய் தோன்றி பரவுகிறது. தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்நோய் நிலவி வருகிறது. நரம்புச் சிலந்தி நோயால் பாதிக்கப்பட்ட பகுதி 6 மண்டலங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டலமும் பூச்சியியல் உதவியாளர் தலைமையிலான ஒரு பிரிவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

தொற்று நோய் பரவியிருக்கும் கிராமங்களில் உள்ள குடிநீர் வாயில்கள் அனைத்திலும் நீரில் கரையு D.D.T. மாவையும், தண்ணீரையும் தகுந்த விகிதாசாரத்தில் கலந்து 5 முதல் 6 வாரங்களுக்கு ஒருமுறை தெளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இந் நோய் அதிக அளவில் பரவுவது தடுக்கப்படுகிறது.

இவ்வாறு குடிநீர் வாயில்களில் மருந்து கலக்கப்படுவதுடன் கூட, நரம்புச் சிலந்தி நோயால் பாதிக்கப்பட்டவர் அனைவருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டன. நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 சதவீத கார்பாலிக் நீர்மத்தில் தோய்த்த பஞ்சால் சுத்தம் செய்யப்பட்டு கட்டு கட்டப்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எரிச்சல் ஏற்படுவதுடன் இரண்டாவது தடவையாக இந்நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.

நேரிடப் பணியாளர்களால் சுகாதாரக் கல்வி முனைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவர்கள் கிராமங்களுக்குச் சென்று குடிநீர் நிலைகளிலும், பள்ளிகளிலும், பிற கூட்டங்களிலும்

கிராமவாசிகளுக்கு அறிவுரை வழங்குகின்றனர். "சைகிளாப்ஸ்" நரம்புச் சிலந்திப் புழு எவ்வாறு நோயைப் பரப்புகிறது என்பதும் நெருக்கமான கண்களை உடைய துணியை இரண்டாக மடித்து அதைக் கொண்டு தண்ணீரைக் காய்ச்சி வடிகட்டி அருந்துதல் மூலம் இந்நோய் பரவுவதைத் தடுக்கலாம் என்பது குறித்தும் கிராமவாசிகளுக்குச் செய்முறை விளக்கம் செய்து காட்டப்படுகின்றன. பெருமளவு துண்டு விளம்பரங்கள், மடிப்புகள், விளம்பரத் தாள்கள் அச்சிடப்பெற்று பணியாளர்களிடம் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் இவற்றைக் கிராமங்களில் கிராமவாசிகளுக்குக் கொடுக்கின்றனர். படிகளை உடைய கிணறுகள், சிறு ஏரிகள் முதலியவை இருக்கும் பகுதிகளில் நரம்புச் சிலந்தி நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறந்த வழி அந்நீர் வாயில்களில் இரசாயன மருந்துகளைக் கலப்பதேயாகும். நீர் அதிக அளவில் இருக்கும் பெரிய ஏரிகளில் இவ்வாறு திறம்பட மருந்து கலப்பது கடினமாகும். அதே சமயத்தில் அந்நீரில் கலப்பதற்கு மருந்தும் அதிக அளவு தேவைப்படும். எனவே, இது நடைமுறையில் இயலாத ஒன்றாகும். எவ்வாறேனும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மருந்து இத்தகைய ஏரிகளில் கலந்தால், நரம்புச் சிலந்தி நோய் பரவுவது கணிசமான அளவுக்குக் குறைகிறது. ஆனால், இக் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி வைத்து அங்கிருந்து பைப்புகள் மூலம் தூநீர் வழங்கப்பட்டால் அதுவே இந்நோயை முற்றிலும் தடுப்பதற்குரிய சிறந்த வழி ஆகும்.

1970-71-ஆம் ஆண்டில், 13,195 கிராமங்கள், சிற்றூர்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவற்றில் 45 கிராமங்களில் இந்நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இப் பகுதிகளில் 432 பேர்களுக்கு இந்நோய் கண்டுள்ளதாகத் தெரிய வந்தது. இவர்கள் அனைவருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

## IV கருங்காய்ச்சல் (காலா ஆஜார்) கட்டுப்பாட்டுத் திட்டம்

7. கருங் காய்ச்சல் Kala Azar என்பது கிருமிகளால் ஏற்படுகிற நோயாகும். இந்த நோய் கண்டவர்களுக்குத் தொடர்ந்து காய்ச்சல் வரும். ஈரல், குடல் வீக்கம் ஏற்படும். இக் கிருமி மேற்பரப்பில் உள்ள இரத்தத்தில் எப்போதாவது காணப்படுகிறது. இந்நோயைக் கண்டறிவதற்கு ஜெல், சோப்ரா முதலிய சோதனைகள் நடத்தப்படுகின்றன. ஈரலிலிருந்து அல்லது இதய எலும்பிலிருந்து நீரெடுத்து சோதனை செய்வதும் பயனளிக்கும். இந்த நோய் மணல் ஈ Sand Fly என்ற கிருமியால் பரப்பப்படுகிறது. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு டீ.டீ.டி. D.D.T. மருந்து தெளித்ததன் பலனாக இம் மாநிலத்தில் இந்நோய் குறைந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிலருக்கு இந்நோய் கண்டுள்ளதாக தெரிய வருகிறது.

இத் திட்டம் 1969 முதற்கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது. இராமநாதபுரத்தில் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. நோய்க்கிருமியில் உதவியாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி





வரும் இப்பிரிவில் மூன்று சுகாதார இன்ஸ்பெக்டர்களும், ஆய்வுக்கூட உதவியாளர் ஒருவரும், 15 களப்பணி உதவியாளர்களும் உள்ளனர். களப்பணிக்காக ஜீப் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நோய் பரவலாக இருக்கக்கூடிய பகுதிகளில் நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிவதும், மணல் ஈ என்ற கிருமிகளைச் சேகரிப்பதும் முக்கியமான பணிகளாகும். இந்த நோய் எந்த அளவுக்குப் பரவியுள்ளது, இக் கிருமிகள் எந்த அளவுக்குப் பெருகியுள்ளன என்பதைக் கண்டுபிடிப்பதே இதன் நோக்கமாகும். இந் நோய் கண்டுள்ள நோயாளிகள் சிகிச்சையளிக்கப்படுவதற்காக அண்மையிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

1970-71-ஆம் ஆண்டில் 3,166 கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டன. 24 பேர்களுக்கு இந்நோய் கண்டிருப்பதாகத் தெரிய வந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந் நோய் ஆங்காங்கு பரவக்கூடிய பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்ட பிறகு, 1971-72-ஆம் ஆண்டில் தேவையானால், மணல் ஈக்கள் பெருகுவதைத் தடுக்கும் வகையில் வீடுகளில் டீ.டீ.டி. மருந்து தெளிக்கப்படும்.

## V ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

8. மக்களுக்குத் தடுப்பு மருத்துவப் பணியும் சிகிச்சை மருத்துவப் பணியும் அளிப்பதற்காகவும் நாளடைவில் சமுதாயத்தினரின் சுகாதாரம் மேம்படவும் சுற்று வட்டார அளவில் அமைக்கப்பட்ட பல்நோக்கு நிலையமே ஆரம்பச் சுகாதார நிலையமாகும். ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கீழ்க்காணும் பணிகளை ஆற்றி வருகின்றன :—

(1) மருத்துவப் பாதுகாப்பு;

(2) பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்கள் சேகரிப்பு முறையை மேம்படுத்துதல் ;

(3) தாய், சேய் நலப் பணிகள்:

(4) குடும்ப நலத் திட்டம்;

(5) தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல்;

(6) சுற்றுப்புற சுகாதாரம்;

(7) பள்ளி சுகாதாரப் பணிகள்;

(8) சுகாதாரக் கல்வி; ,

9. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும், ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் திறப்பதே அரசின் கொள்கையாகும். மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள வட்டாரங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது. இம் மாநிலத்தில் 374 வட்டாரங்கள் உள்ளன.

கீழ்க்காணும் 7 வட்டாரங்களில் வட்டாரத்துக்கு இரண்டு வீதம் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன

| மாவட்டத்தின் பெயர். | வட்டாரத்தின் பெயர். | ஆரம்பச் சுகாதார நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மதுரை .. .. | 1 அத்தூர் .. .. | ஆத்தூர் சின்னாளப்பட்டி |
| வட ஆர்க்காடு .. | 2 துரிஞ்சிபுரம் .. .. | மங்கலம் நார்த்தாம்பூண்டி |
| வட ஆர்க்காடு .. | 3 கீழ்பெண்ணாத்தூர் .. | வேட்டவலம் கீழ்பெண்ணாத்தூர் |
| கோயம்புத்தூர் .. | 4 மொடக்குறிச்சி .. | கணபதிபாளையம் மொடக்குறிச்சி |
| கோயம்புத்தூர் .. | 5 கொடுமுடி .. | கீழநல்லி சிவகிரி |
| கோயம்புத்தூர் .. | 6 வெள்ளக்கோவில் .. | முத்தூர் வெள்ளக்கோவில் |
| கோயம்புத்தூர் .. | 7 தூக்கநாயக்கன் பாளையம. .. | தூக்கநாயக்கன் பாளையம் காசிபாளையம் |

1970-ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இம் மாநிலத்தில் 343 ஆண்டில் 22 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 1–1–1971 முதல் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வந்தன. 1970-ஆம் 31–3–1971 வரை ஆரம்பச் சுகாதார நிலையங்களும் திறக்கப் பட்டன. இவ்வாறாக 31–3–1971 அன்று 375 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்திற்கான குறிக்கோள் அளவு 381 ஆரம்பச் சுகாதார நிலையங்களாகும்.

10. அரசுக் கட்டிடங்களில் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முதலியவை பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| அரசுக் கட்டிடங்களில் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை | 121 |
| ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்களில் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை. | 41 |
| வாடகையற்ற கட்டிடங்களில் அல்லது உள்ளாட்சி மன்றங்களால் வாடகை செலுத்தப்படும் கட்டிடங்களில் செயல்படும் ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை. | 185 |
| அரசினால் வாடகை செலுத்தப்படும் கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை | 28 |





47 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணியாளர்களுக்காக குடியிருப்புக்களைக் கட்டவும் அரசு 1969-70 முதல் 1971-72 வரை அனுமதி வழங்கியது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு | பணியாளர் குடியிருப்புகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1969–70 .. .. .. .. | 28 |
| 1970–71 .. .. .. .. | 18 |
| 1971–72 .. .. .. .. | 1 |
| மொத்தம் .. | 47 |

11. மேற்சொன்ன, ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்சொன்ன 47 ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த செலவுத் தொகை சுமார் ரூ. 82.80 லட்சமாகும். ஆரம்பச் சுகாதார நிலையம், பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்காகும் செலவு ரூ. 1.80 லட்சமாகும்.

## VI மகப்பேறும் குழந்தை நலனும்

12. (i) பிற்பட்ட பகுதித் திட்டம்.—மகப்பேறு, குழந்தை நலப் பணிகளை நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள கிராமப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்காக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது, பின்தங்கிய பகுதிகள் திட்டத்தின்கீழ் மகப்பேறு, குழந்தை நலப் பணிகள் தொடங்கப்பட்டன. பத்தொன்பது முதன்மை நிலையங்களும், 76 கிளை நிலையங்களும் உள்ளன. முழுச் செலவும் மாநில அரசால் ஏற்கப்படுகின்றன.

(ii) நகர்ப்புறப் பகுதிகள்.—தற்போது, நகராட்சியில் 71 மகப்பேறு இல்லங்களும், 233 மகப்பேறு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கு ஆகும் தொடர் இனச் செலவில் நான்கிலொரு பகுதிக்கு நிகரான அரசினர் மானியத்தை அவை பெறுகின்றன.

(iii) ஊராட்சி ஒன்றியப் பகுதிகள்.—தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, மக்கள் தொகையில் ஒவ்வொரு 10,000 பேருக்கும் ஒன்று என்ற வீதத்தில், வளர்ச்சி வட்டாரம் ஒன்றுக்குப் பத்து நிலையங்கள் என்ற உயர் வரையறைக்கு உட்பட்டுப் பேறு கால நிலையங்களைத் திறப்பது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் பேணி வளர்க்கப்படும் மகப்பேறு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,817 ஆகும். அவற்றுக்கு ஆகும் தொடர் இனச் செலவில் மூன்றில் இரண்டு பங்குக்கு நிகரான அரசு மானியத்தை அவை பெறுகின்றன.

## VII சுகாதாரப் பார்வையாளர்கள் பயிற்சி

13. சுகாதாரப் பார்வையாளர்களுக்கு பொது சுகாதாரத் துறை தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. இருவகை பயிற்சிப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. அவை, (i) முறையான பயிற்சி—இப் பயிற்சி 18 மாதங்களுக்கு நடத்தப்படுகிறது; (ii) ஒருங்கிணைந்த பயிற்சி—இப் பயிற்சி 30 மாதங்களுக்கு நடத்தப்படுகின்றது : முறையான பயிற்சி, ஒருங்கிணைந்த பயிற்சி இவ்விரண்டிலொன்றில் பயிற்சி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 பயிற்சி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### பள்ளி மருத்துவச் சோதனை.

14. 1965-இல், தெரிந்தெடுத்த 12 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயல்படுத்துவதற்காக இத்திட்டத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஒவ்வோராண்டிலும், 6—11 வயது தொகுதியில் உள்ள பிள்ளைகளில், பள்ளி செல்லும் குழந்தைகளான, ஏறக்குறைய 2,000 குழந்தைகளுக்கு மருத்துவச் சோதனை நடத்த வேண்டும்.

1970-ல் 40,000-மும், அதற்கு மேற்பட்டதுமான மக்கள் தொகையுடைய பெரிய நகரங்களுக்கு இரண்டு பள்ளி மருத்துவப் பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டன; இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு திருச்சிராப்பள்ளி , கோயம்புத்தூர் நகராட்சிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த நகரப் பகுதிகளுக்கு இரண்டு மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்; ஏறக்குறைய 10,000 குழந்தைகளின் பள்ளிச் சுகாதாரப் பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்பு அவர்களிடம் விடப்பட்டுள்ளது.

பள்ளி மருத்துவச் சோதனைத் திட்டம், 1970-இல், மேலும் 6 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டில் மொத்தம் 14,554 மாணவர்கள் சோதனை செய்யப்பட்டனர் ; அவர்களுக்குத் தேவையான சிகிச்சையளிக்கப்பட்டது. 1970-ல் மொத்தம் 20,723 மாணவர்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டு, மருத்துவ சிகிச்சை பெற்றனர்.

### மகப்பேறு, குழந்தை நலம்-துணை உணவூட்டும் திட்டம்

15. இந்தத் துணை உணவூட்டும் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசுக்கு உதவி செய்துவந்த யூனிசெஃப் நிறுவனம் தனது உதவியை நிறுத்திக்கொண்டதால், இந்தத் திட்டத்திற்கு வேறு நிறுவனத்திடமிருந்து தொடர்ந்த உதவியைப் பெறுவதற்காக சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு "கேர்" நிறுவனம் உதவியளிக்க முன்வந்தது. புதிய திட்டத்தின்படி, "சோளம்-சோயா மொச்சை-பால்-மாவு" corusoin milk எனப்படும் ஒரு புதிய வகைப் புரதம் செறிந்த உணவு "சாலட் எண்ணெய்" salid oil முதலியன தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் வழங்கப்படவிருக்கின்றன. இத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 3,300 உணவு நிலையங்கள் கொண்டுவரப்பட்டு, நாள்தோறும் ஏறத்தாழ 1.20 லட்சம் பேர்கள் பயன் பெறுவர்.



## X குழந்தைகளுக்கு நோய் தடுப்பு ஊசி குத்தும் திட்டம்.

16. இத்திட்டம் 1964-இல் தொடங்கப்பட்டது. தொண்டை அடைப்பான், கக்குவான், இசிவு நோய் போன்ற சாதாரணமாகக் காணப்படும் சில நோய்கள் வராமல் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி குத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படும். கைக்குழந்தைகள் உட்பட, 5 வயதும் அதற்குக் கீழும் உள்ள வயதுத் தொகுதியைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மூன்று நோய்களைத் தடுப்பதற்கான ஊசி போடப்படுகிறது; (ஒரு வயதுக்குட்பட்ட) கைக்குழந்தைகள் சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றன. தொடக்கத்தில், இத்திட்டம் 142 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயற்படுத்தப்பட்டு வந்தது : தற்போது 375 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1970-ஆம் ஆண்டில், மொத்தம் 93,195 பள்ளிக் குழந்தைகளுக்கு மூன்று தடவை (முழுமையாக) மூன்று நோய்களைத் தடுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டது.

1971-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைப்பற்றிய விவரம் பின்வருமாறு :—

| மாதம். | தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 7,643 |
| பிப்ரவரி | 8,968 |
| மார்ச் | 8,458 |
| ஏப்ரல் | 8,167 |
| மொத்தம் | 33,239 |

31-12-1970 முடிய ஆன செலவு ரூ. 64,895 ஆகும்; 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 0.50 லட்சம் ஆகும்.

## XI சுற்றுப்புறச் சுகாதாரம்

17. இத்திட்டத்தின் குறிக்கோள், பள்ளி செல்லும் இளஞ்சிறார் சுகாதார வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கக் கற்றுத் தருவதாகும். இத்திட்டம், பள்ளிகளில், குடிநீர்க் கிணறு, கழிப்பறை-சிறுநீர் ஒதுக்கிடம் ஆகியனவற்றை ஏற்படுத்தித்தர வகை செய்கிறது. 1970-ம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக

[1971 ஜூலை 3

ஏனைய மாவட்டம் ஒவ்வொன்றிலும் 10 பள்ளிகள் விதம் 120 பள்ளிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த ரூ. 4 லட்சம் தொகை ஒப்பளிப்புச் செய்யப்பட்டது.

இத்திட்டத்தை, மக்கள் நல்வாழ்வுத் துறையினரும், கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் இணைந்து நிறைவேற்றுவர்.

XII சந்தைகளும், திருவிழாக்களும்

18. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும், 600 பெரிய, சிறிய விழாக்கள் நடைபெற்றன. அவ்விழாக்கள் அனைத்திற்கும் போதுமான சுகாதாரத் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

XIII பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்கள்

19. பிறப்பு, இறப்பு, கைக்குழந்தைகள் இறப்பு, பேறுகால இறப்பு, இறந்து பிறக்கும் குழவிகள் ஆகியவற்றைப் பதிவு செய்தலை மேம்படுத்துவதற்கு முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ; இவை அனைத்துத் திட்டப் பணிகள், பொதுநலத் திட்டங்கள் ஆகியவற்றின் விளைவு குறித்து ஆய்வு செய்வதற்கான அடிப்படை புள்ளிவிவரங்களைப் பெறும் பொருட்டே மேற்கொள்ளப்படுகின்றன. பிறப்பு-இறப்புப் புள்ளி விவரத் தகவல்கள் தற்போது இயந்திரத்தினுதவியால் தொகுக்கப்பட்டு வருகின்றன.

20. கீழ்க்காணும் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன :—

(1) முன்னோடிப் பதிவுத் திட்டம் Sample Registration Scheme

(2) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திர முறையில் அட்டவணைப் படுத்தும் பிரிவு ஒன்றை நிறுவுதல்; மாநில அளவில் பிறப்பு-இறப்புப் புள்ளி விவர அலுவலக அமைப்பில் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

(3) மாவட்ட நல அதிகாரிகளின் அலுவலகங்களில் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்.

(4) உள்ளாட்சி மன்றங்களின் புள்ளிவிவரப் பிரிவுகளில் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்—

(அ) 5 லட்சமும் அதற்கு அதிகமும் மக்கள் தொகை யுள்ள நகரம் (சென்னை மாநகர்).

(இ) 1 லட்சம் முதல் 5 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்கள் (8 பெரிய நகராட்சிகள்).



1971 ஜூலை 3]

(1) முன்னோடிப் பதிவுத் திட்டம் (Sample Registration Scheme —மாநில அளவிலும், தேசிய அளவிலும் கிராமப் பகுதிகளில் பிறப்பு-இறப்பு விகிதங்கள் குறித்த நம்பத்தக்க மதிப்பீடுகளைக் கண்டறிவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்: இது, தொடர்ந்து பதிவு செய்தல், தெரிந்தெடுத்த பகுதிகளில் மதிப்பீட்டாய்வு செய்தல் ஆகியவை இணைந்தவோர் ஏற்பாடாகும். இத்திட்டம் இம் மாநிலத்தில் 150 கிராமங்களில் நடந்தேறி வருகிறது. 1968-இல் தொடங்கிய இத்திட்டம், 1970-லும் தொடர்ந்தது. இதுவரை, நான்கு அரையாண்டு மதிப்பீட்டாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் செவ்வனே செயல்பட்டு வருகிறது; இது தொடர்ந்து செயல்படும்.

(2) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திர முறையில் அட்டவணைப்படுத்தும் பிரிவு ஒன்றை நிறுவுதல்; மாநில அளவில் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரப் பிரிவில் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்தல்.—மாநிலத் தலைமையிடத்தில் உள்ள இயந்திர முறையில் அட்டவணைப்படுத்தும் பிரிவு, தொடர்ந்து செயல்பட்டது. பிறப்பு-இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள் இயந்திரத்தின் உதவியால் தொகுக்கப்பட்டு, அடையாளமிடப்பட்டு, கோக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டு, அட்டவணைப்படுத்தப்பட்டன.

(3) மாவட்ட சுகாதார அதிகாரியின் அலுவலகத்தில் உள்ள புள்ளி விவரப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.—மாவட்ட அளவில் பதிவு செய்யும் முறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் எல்லா மாவட்டங்களிலும் புள்ளி விவர உதவியாளர்கள் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் அவரவர்களுடைய மாவட்டங்களில் எல்லா இடங்களிலும் சுற்றுப் பயணம் செய்கின்றனர். வட்டார அளவில் பிறப்பு-இறப்பு குறித்து தொடக்கப் பதிவாளர்களான கிராமத் தலைவர்களுக்கு அவர்கள் பயிற்சி அளிக்கின்றனர்.

(4) உள்ளாட்சி மன்றப் புள்ளி விவரப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.

(a) ஐந்து லட்சமும், அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சி மன்றம் (சென்னை மாநகரம்).—சென்னை மாநகராட்சியில் பதவியில் அமர்த்தப்பட்ட உதவி சுகாதார அதிகாரி ஒருவர், புள்ளி விவரவல்லுநர், புள்ளிவிவர உதவியாளர், மற்றும் ஏனையோர், இம்மாநகரத்தில் பதிவு செய்யும் பணியை மேம்படுத்துவதற்காகத் தொடர்ந்து பணிபுரிகின்றனர். நோய்கள் குறித்து அனைத்து நாடுகள் வகைப்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(b) 1 முதல் 5 லட்சம் மக்கள் தொகை கொண்ட உள்ளாட்சி மன்றங்கள்.—1961 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 1 லட்சத்துக்கு அதிகமான மக்கள் தொகை கொண்டுள்ள மாநிலத்தின் எட்டு பெரிய நகராட்சிகளில் புள்ளி விவர உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நகராட்சி சுகாதார

அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணி புரிகின்றனர். இவர்கள் அவரவர் பணிபுரியும் நகராட்சிகளில் பிறப்பு-இறப்பு பதிவு செய்யும் பணியை மேம்படுத்துவதற்குப் பொறுப்புள்ளவர்களாவர்.

நான்காம் ஐந்தாண்டு திட்டக் காலத்தின்போது மக்கள் பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களை மேம்படுத்தவும், வலுப் படுத்தவும் இந்திய அரசு ரூ. 13.2 லட்சம் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மாதிரிப் பதிவுத் திட்டம் Model Registration Scheme

21. பிணப் பரிசோதனை செய்வதன்மூலம் இறக்க நேர்ந்ததன் உண்மையான காரணத்தைக் கண்டுபிடிப்பதும், இறந்தவர்கள் எந்தச் சூழ்நிலையில் இறக்க நேர்ந்தது என்பது பற்றியும் அறிவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் 34 தொடக்க சுகாதார நிலையங்களில் இத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

## XIV சுகாதாரக் கல்விக் கழகம்.

22. கடந்த 10 ஆண்டுகளாக இக் கழகம் ஒரே சீராக வளர்ந்து வந்துள்ளது. இது கீழ்க்கண்ட திட்டங்களை வகுத்து, நிறைவேற்றி வருகிறது :—

(1) தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்கு சுகாதாரக் கல்வியில் பணியிருப்புப் பயிற்சி அளித்தல் ;

(2) பொதுச் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆய்வுகள் சர்வேக்கள்;

(3) சுகாதாரக் கல்வி வெளியீடுகளைத் தயாரித்தலும், வழங்குதலும்;

(4) பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியவற்றை நடத்துதல்.

அண்மையில், சுகாதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு ஒன்றும், மாணவர் சுகாதாரக் கல்விப் பிரிவு ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளன. பணியில் இருந்துகொண்டே பயிற்சி பெறும் பயிற்சிப் பிரிவு ஒன்றுக்கும் ஒப்பளிப்பு வழங்சப்பட்டுள்ளது.

23. இதுவரை பணியில் இருந்து பயிற்சி பெறும் 21 தொகுதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1970 மார்ச் திங்களில் சுகாதாரக் கல்வி பரப்புநர், சுகாதார அதிகாரிகள் கருத்தரங்கு ஒன்று மாநில சுகாதாரக் கல்விக் கழகத்தால் நடத்தப்பட்டது. கருத்தரங்கிலே கலந்து கொண்ட மாநிலத்திலுள்ள மாவட்ட மருத்துவ அதிகாரிகள், மாவட்ட சுகாதார அதிகாரிகள், சுகாதாரக் கல்வி பரப்புநர்கள் ஆகியோர் தற்போதைய சுகாதாரக் கல்வி கோட்பாடுகள், தொழில் நுட்ப உத்திகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொண்டனர்.





சுகாதாரக் கல்விக் கழகம் முறையாகப் பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. சுகாதாரக் கல்விக் கழக ஆய்வுப் பிரிவு பணியிலுள்ளபோதே பயிற்சி பெறும் திட்டங்களை வகுத்துள்ளது. இதைத் தவிர, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக சில தனி ஆய்வுகளை இது நடத்துகிறது.

### சுகாதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.

24. பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு சுகாதாரத்தில் பயிற்சி அளிப்பதற்காக இந்தப் பிரிவு அமைக்கப் பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் அவரவருடைய நிறுவனங்களில் பயிற்சி பெறும் எல்லா ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்க முடியும். ஒரு சமயத்தில் இப் பிரிவில் பயிற்சியளிப்பதற்காக, இம் மாநிலத்திலுள்ள 30 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில், ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளர் தொகுதியும் சுமார் 20 முதல் 30 ஆசிரியர்களைக் கொண்டிருக்கும். பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். ஒவ்வொரு ஆண்டும் நான்கு பயிற்சிகள் அளிக்கப் படும். இது தவிர, சுகாதாரக் கல்வி குறித்து இப்பிரிவு பணிக்களரி, கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்து நடத்தும்.

1971-ஆம் ஆண்டில் சுமார் 80 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சுகாதாரக் கல்வி பயிற்சிப் பிரிவு.

25. தொடக்க சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவப் பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் சுகாதாரக் கல்வியில் சரியான பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் சுகாதாரம், துப்புரவு குறித்து கிராம மக்களுக்குக் கற்பிக்க முடியும்.

## XV பொதுச்சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி.

26. கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளையும் ஒன்று சேர்த்து பூவிருந்தவல்லி பொதுச் சுகாதார நிறுவனம் அமைக்கப் பட்டுள்ளது :—

(1) சுகாதாரப் பிரிவு, பூவிருந்தவல்லி.

(2) மறுபயிற்சி நிலையம், பூவிருந்தவல்லி.

(3) ஆராய்ச்சி-செயல் திட்டம்.

கிராமப்புற மக்களின் சுகாதார நிலைமைகளை எவ்வாறு முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகம் மேம்படுத்த முடியுமென்பதை, பூவிருந்தவல்லி, சுகாதாரப் பிரிவு புலப்படுத்துகிறது. மகப்பேறு, சிசு நலன், துப்புரவு, சுகாதாரக் கல்வி, குடும்பநலத் திட்டம், மக்கள் பிறப்பு-இறப்புப் பதிவுகள் முதலிய முறையான பொதுச் சுகாதாரப் பணிகள் அனைத்திலும் இப்பிரிவு பங்கெடுத்துக் கொள்கிறது.

[1971 ஜூலை 3

பூவிருந்தவல்லியிலுள்ள மறு பயிற்சி நிலையம் 1954, பிப்ரவரித் திங்களில் தொடங்கப்பட்டது. தங்களுடைய அலுவல்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக ஆரம்பச் சுகாதார நிலையத்தில் பணி புரியும் மருத்துவர்கள், துணைச் சுகாதாரப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணிகளில் இந்நிலையம் மறுபயிற்சி அளிக்கிறது. 90-வது பயிற்சித் தொகுதி இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி-செயல் திட்டம், சுகாதார வாழ்க்கை நிலைமைகளைப் பற்றி மக்களின் அறிவு குறித்தும், மனப்பான்மை குறித்தும் ஆய்வு செய்கிறது. பள்ளிகளில் சுகாதாரக் கழிப்பிடங்களுக்கும் நீர் வழங்கு வசதிக்கும் வகை செய்வதற்கான திட்டம், நிறைவேற்றப்படுவதற்காக ஆராய்ச்சி-செயல் திட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## XVI ஊட்டச் சத்து ஆய்வுச்சாலை.

27. மக்களிடையேயுள்ள ஊட்டச் சத்துக் குறைவைத் தடுக்கவும், கட்டுப் படுத்தவும் நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான விஞ்ஞான அறிவையும், தகவல்களையும் வழங்கும் நோக்கத்துடன் இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட ஊட்டச் சத்து ஆய்வுச் சாலை ஆய்வு நடத்துகிறது. 1970-ம் ஆண்டில் சென்னை, பட்டினப்பாக்கத்தில் வசிக்கும் அரசுப் பணியாளர்களின் ஊட்டச் சத்துத் தரத்தை அறிவதற்காக சமூக-பொருளாதார ஆய்வு நடத்தப்பட்டது. வேளச்சேரி தொடக்கச் சுகாதார நிலையத்தில் சிறூர் பள்ளிகளிலும், ஆரம்ப பள்ளிகளிலும் பயிலும் 3—12 வயது சிறுவர்களின் ஊட்டச் சத்துக் குறைவையும் மாலைக் கண் நோயையும் தவிர்ப்பதற்கென நண்பகல் உணவுடன் கீரைக் கூட்டு வழங்கும் ஒரு திட்டத்தை ஊட்டச் சத்து ஆய்வு சாலை மேற்கொண்டுள்ளது. பள்ளிச் சிறுவர்கள் இந்தப் புதிய உணவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஆய்வுச் சாலையில் செய்யும் பகுப்பாய்வுப் பணிகளைத் தவிர, ஊட்டச் சத்து ஆய்வுச் சாலை பொருட்காட்சிகள், கருத்தரங்குகளில் பங்கு கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. 1970-ஆம் ஆண்டில், செஞ்சிலுவைச் சங்க பொன் விழா சம்பந்தமாக மங்களபுரத்தில் நடந்த குடிசைப் பகுதி ஊட்டச் சக்திப் பொருட்காட்சியில் ஊட்டச் சக்தி ஆய்வுச் சாலை பங்கெடுத்துக் கொண்டது.

சுகாதாரத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உடல் நல ஆய்வாளர்களுக்குரிய முறை உணவுப் பயிற்சி வகுப்புகள் சத்துணவு ஆய்வுக்கூடம் நடத்துகின்றது. அவர்கள் பணியிருப்புப் பயிற்சியும் பெறுகிறார்கள்.

பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உணவுப் பொருள்களைப் பாகுபடுத்தி ஆய்ந்து உணவுச் செய்முறை குறிப்புகள் தயாரித்தல், பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகியவற்றின் மூலம் இந்த ஆய்வுக் கூடம் தொடர்ந்து பயனுள்ள பணிகளைச் செய்து வரும்.



1971 ஜூலை 3]

## XVII உணவுப்பொருள் கலப்படத்தைத் தடை செய்தல்.

28. கிண்டி, கிங் நிறுவன ஆய்வுக் கூடத்தில் பாகுபாட்டாய்வாளர் உதவியுடன் இம் மாநிலத்தில் 300 (சென்னை மாநகரைத் தவிர) உள்ளாட்சி மன்றங்கள் 1954-ஆம் ஆண்டு உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ், பேரளவில் மாதிரி எடுத்துப் பாகுபாட்டு ஆய்வு நடத்துவதற்கான ஆய்வுக் கூட வசதியைப்பெருக்கும் பொருட்டு, கோயம்புத்தூரில் ஒரு ஆய்வுக் கூடம் 1970 டிசம்பர் திங்கள் 3-ம் நாள் செயல்படத் தொடங்கியது. கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனையிலிருந்து வருகின்ற பால் மாதிரிகளை இந்த ஆய்வுக் கூடம் இப்போது பகுத்து ஆய்கின்றது. இந்த ஆய்வுக் கூடம் வேறு வகை உணவுகள் பற்றிய ஆய்வுகளையும் நாளடைவில் மேற்கொள்ளும்.

இச் சட்டத்தின் கீழ் 1970-ல் எடுக்கப்பட்ட 18,498 உணவுப் பொருள் மாதிரிகளில் 4,351 உணவுப் பொருள் மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. உணவில் கலப்படம் செய்த குற்றங்களுக்காக 3,695 வழக்குகள் தொடரப்பட்டன. வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 4,16,793 ஆகும்.

## XVIII நகரமைப்புத் திட்டங்கள்.

29. நகரங்கள், மாநகரங்களின் சீரான வளர்ச்சிக்கும், அவற்றின் அழகைக் காக்கவும், சமுதாயத்தில் சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்கவும் நகரமைப்புத் திட்டம் மிகவும் இன்றியமையாதது. 1920-ஆம் ஆண்டு நகரமைப்புச் சட்டம் தமிழ் நாட்டில் நடைமுறைக்கு வந்து 50 ஆண்டுகளாகிறது. தொழில் நுட்பவியல் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்வு குறிக்கோளுக்கும் இணையாக, மக்களின் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்தும் ஓர் ஏற்பாடாக, திருத்தியமைக்கப்பட்ட நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா மாநிலச் சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பட்டு, இணை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத் துறையின் தலைவர் நகரமைப்புத் திட்ட இயக்குநர் ஆவார். இவருக்கு உதவியாக, நகரமைப்புத் திட்ட இணை இயக்குநர் உள்ளார். இவர் தொழில் நுட்ப முறையில் தகுதி பெற்ற ஓர் அதிகாரியாவார். இத்துறை திறமையுடன் பணி புரிய இம் மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் அதாவது சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் 8 வட்டார அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டாரத் திட்டங்கள், பெருந் திட்டங்கள், விரிவான வளர்ச்சித் திட்டங்கள், பொதுவான ஆய்வுத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக 4 அலுவல் வழிக் கோட்டங்களும் நிறுவப்

பட்டுள்ளன. இத்துடன், நெடுஞ்சாலைத் துறை ஒத்துழைப்புடன் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பயணிகள்-பயணப் பொருட்கள் போக்குவரத்துத் திட்டம் தயாரிப்பதற்காக கூடுதலாக ஒரு கோட்டமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டார அலுவலகமும் நகரமைப்புத் திட்டத் துணை இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது. ஒவ்வொர் அலுவல் வழிக் கோட்டமும் (தனி) துணை இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது.

இத்துடன், நிர்வாகப் பிரிவுகளுக்குத் துணையாக பெரும்பாலான நகராட்சிகளில் நகரமைப்புப் பணியாளர்களும் பணி புரிகின்றனர். பொதுவாக, நகரமைப்புத் துறை ஆலோசனையின் படியும், அது வழி காட்டுகின்ற முறையிலும் தொழில் நுட்ப நகரமைப்புப் பணியாளர்களின் உதவியுடன் நகரமைப்புத் திட்டங்களை நகராட்சிகள் தயாரிக்கின்றன. இத் திட்டங்கள் துறையினால் ஏற்பளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதற்காக, அரசு அனுமதியைப் பெறுகின்றன. தற்போது நகரமைப்புத் துறை, மாநிலம் முழுவதுமான 8 வட்டாரங்களுக்கு வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. நகர் மயப் போக்கையும், சீரான கிராம, நகர்ப்புற வளர்ச்சியின் அவசியத்தையும் நோக்கமாகக்கொண்டு வட்டாரத் திட்டங்கள் தயாரிக்க வேண்டிய அவசியம் நன்கு உணரப்பட்டுள்ளது.

நகராட்சிப் பெருந்திட்டம், வட்டாரத் திட்டம் ஆகியவை உட்பட, இத்துறையின் பொதுவான திட்டங்களின் மீதான செலவிற்காக 1971–72-ல் மொத்தமாக ரூ. 28.87 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரங்கள், மாநகரங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெருக்கடிப் பிரச்சினைகள் இத் துறையின் நாட்டத்தை பெரிதும் ஈர்த்து வந்துள்ளன. இனி வரும் ஆண்டில், மாநிலத்திலுள்ள பல்வேறு மாநகரங்கள், நகரங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

இணை பொறுக்குக் குழுவின் பரிசீலனையில் உள்ள தமிழ் நாடு நகர்ப்புற அமைப்பு அடங்கல் மசோதா, சட்டமாக இயற்றப்பட்ட பின்னர், வட்டார திட்டம், பெருந் திட்டம், புதிய நகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு சட்டச் செயல் திறன் வழங்கும். 1970-71-ல் நகரமைப்புத் துறை எட்டு நகரங்களுக்கான வரைவு பெருந் திட்டங்கள் தயாரித்தது. மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களுக்கான வரைவுப் பெருந் திட்ட ஆய்வு, தயாரிப்பு தொடர்பான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

1971-72-ல் மேலும் 8 நகரங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தின் பல்வேறு உள்ளாட்சி மன்றங்களில் சுமார் 680 விரிவான நகரமைப்புத் திட்டங்கள் உள்ளன. அவை தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற பல்வேறு நிலைகளில்



உள்ளன. விரிவான நகரமைப்புத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்கு திட்டத்தின்கீழும் அரசு கடன் வழங்குகிறது. 1971-72-ல் 16 நகரமைப்புத் திட்டங்களை அறிவிக்கவும், 16 நகரமைப்புத் திட்டப் பணிகளுக்கு திட்டங்கள் தயாரிக்கவும், 8 திட்டங்களை இறுதி ஒப்பளிப்புக்கு அனுப்பவும் இத்துறை திட்டமிட்டுள்ளது. நகரமைப்புத் திட்டங்களுக்காக உள்ளூர் மன்றங்களுக்குக் கடன் வழங்குவதற்காக 1971-72-ல் ரூ. 5 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இயக்குநர் அலுவலகத்தில் 1970-71-ல் ஓர் ஆராய்ச்சிப் பிரிவு அமைக்கப்பட்டது. இக் குழு சில ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. சென்னை மாநகருக்கான பயணிகள்-பயணப் பொருட்கள் போக்குவரத்து ஆய்வுக் கோட்டம், ஆய்வுப் பணியை மேற்கொண்டு சேகரித்த புள்ளி விவரங்கள் திட்ட ஆணைக் குழுவின் கணக்கிடும் இயந்திரப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. 1971–72-ல் இத் திட்டம் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மாநகரின் பெரும் போக்குவரத்துப் பெரு வழிகள் பற்றிய அறிக்கை முடிக்கப்பட்டு அது 1971-72-ல் பெரும்போக்குவரத்து முறையைப் பற்றி இரயில்வே அதிகாரிகள் சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ள இயலும் வகையில் திட்ட ஆணைக் குழுவைச் சேர்ந்த பெருநகர் குழுவின் மூலமாக இரயில்வே அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பயணிகள்-பயணப் பொருள்கள் போக்கு வரத்துத் திட்டப் பணிகளுக்காக 1971-72-ல் ரூ. 4.39 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்திலிருந்து, போதிய தொலைவிற்குள் அமைந்துள்ள நகரங்களாகிய செங்கற்பட்டு, திருவள்ளூர், கும்முடிப்பூண்டி ஆகிய மூன்று நகரங்களுக்கும் பெருந்திட்டங்கள் தயாரிப்பதற்கான தனித் திட்டமொன்று 1970-71-ல் சென்னை மாநகரின் நெரிசல் குறைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நகரங்களுக்கான பெருந்திட்டங்கள் 1971-72-ல் செயல்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. 1971-72-ல் இத்திட்டங்களுக்கு ரூ. 10 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

துறை அளவிலும், நகராட்சி அளவிலும் நகரமைப்புத் துறையில் தேர்ச்சிபெற்ற பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக, வல்லுநர்கள் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் நுட்ப நிறுவனங்களில் அளிக்கப்படும் நகரமைப்பு சிறப்புத் தகுதியுடைய பட்ட மேற்படிப்பு, பட்டய மேற்படிப்பு பெற நகரமைப்புத் துறையிலுள்ள பணியாளர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் நிதியுதவி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக 1971–72-ல் ரூ. 0.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகரமைப்புப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றவும் துறையின் தேவையைச் சரிக்கட்டவும், இயக்குநர் அலுவலகப் பணியாளர்களை சென்னை, டில்லி ஆகிய இடங்களுக்கு நகரமைப்பில் மேற்படிப்பு பெற முகமையில் அனுப்பியிருக்கிறார்கள்.

## XIX சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்கள்.

30. 25 லட்சம் மக்கள் தொகைக் கொண்ட இம்மாநகருக்காக நாளொன்றுக்குச் சென்னை மாநகராட்சி சுமார் 420 லட்சம் காலன் நீர் மட்டுமே வழங்க முடிகிறது. பொதுச் சுகாதாரத் தரங்களின்படி குறைந்த அளவு தலைக்கு 25 காலன் தண்ணீராவது தேவையாய் இருக்க, தற்போது தண்ணீர் வழங்கப்படும் வீதம் தலைக்கு சுமார் 17 காலன் அளவே ஆகும். மக்களின் தேவையை நிறைவு செய்வதற்குத் தற்போதைய குடிநீர் வழங்கல் முறை போதுமானதாகவே இல்லை. எனவே, ரூ. 320 லட்சம் செலவு மதிப்பீட்டில் நீர் வழங்கல் முறையை மண்டல அடிப்படையில் மாற்றியமைப்பதற்கு அடங்கல் திட்டங்களை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. சுமார் ரூ. 200 லட்சம் மதிப்புடைய பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. தியாகராயநகரில் ரூ. 78 லட்சம் செலவு மதிப்பீட்டில் தனியே தலைப்புப் பகுதி வேலைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகருக்குத் தேவைப்படும் குடிநீர், சோழவரம் ஏரி, புழலேரி, பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரம் ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது. இத்தகைய ஏரிகள் அனைத்தின் மொத்தக் கொள்திறன் அளவு 560 கோடி கன அடியாக இருந்த போதிலும் ஆவியாகப் போவது, கசிவது போகப் பயன்படும் கொள் அளவு இதைவிடக் குறைவாகவே இருக்கிறது. புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் கொள்திறனை உயர்த்துவதற்காக ரூ. 24.59 லட்சம் செலவு மதிப்பீட்டில் இவற்றின் நீர் மட்டங்கள் முறையே 2 அடி, 4 அடி உயர்த்தப்பட்டன. பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் கொண்டு செல்வதற்கென மூடப்படாத காரைப்பூச்சுக் கால்வாய்கள் ரூ. 85 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்போது பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வரும் 55 கோடி கன அடி நீரைக் குடிநீர் காரியங்களுக்காக பாதுகாக்கப்படும் வகையில் புழலேரி, சோழவரம் ஏரிகளின் கீழுள்ள 7,500 ஏக்கர் நன்செய் ஆயக்கட்டு முழுவதையும் கையகப்படுத்துமாறு அரசு ஆணையிட்டது. நிலத்தை கையகப்படுத்திய பின்னர், நன்செய் நிலத்தின் மதிப்பில் 50 சதவீதம் வசூலித்துக்கொண்டு " புன்செய் நிலமாக " மேற்படி நஞ்சை நிலங்களை அதன் மூல ஆயக்கட்டுதாரர்களுக்கே திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.



31. இம் மாநகரின் தற்போதைய கழிவுநீர் அகற்றும் ஏற்பாடு அதிகரித்து வரும் நகர மக்களின் தற்போதைய தேவைக்குப் போதுமானதாக இல்லாததோடு மட்டுமின்றி தற்போதைய தேவைக்கு ஈடுகொடுக்கமுடியாத நிலையில் உள்ளது. சென்னை மாநகராட்சியிடம் இதற்கான அடங்கல் வேலைத்திட்டங்கள் உள்ளன. இதன்படி சென்னை மாநகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் நீர் இறைக்கும் நிலையங்கள் கொண்ட ஒரு தொகுதி அடங்கியுள்ளது. சென்னை மாநகருக்கு வெளியே கழிவு நீரைக்கொண்டு சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இதன் மூலம் கழிவுநீர் அகற்றப்படுகிறது. பணிகள் பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகின்றன. இவ்வேலைத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

32. சென்னை மாநகராட்சி குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் வேலைத் திட்டங்களுக்கு பாதி கடன், பாதி மானியம் வழங்கும் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1971 ஜூலை 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 126 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**திரு. எம். செல்வராஜ் :** தலைவர் அவர்களே, நடைமுறைக் கேள்வி யொன்றை எழுப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் யாருமே இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இருக்கிறவர்களையே எதிர்க்கட்சியினராக ஆக்கிக் கொண்டு பதில் சொல்லுகிறேன்.

### *Scheme for Blood Donation in Police Department*

*126 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any scheme for blood donation has been introduced in the Police Department; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** (அ) ஆம்.

(இ) காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலால் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி மாநிலத்தில் எல்லாப் பகுதியிலும் உள்ள மாவட்ட மருத்துவ அதிகாரிகளும் சென்னை மாநகரிலுள்ள மருத்துவ நிறுவனங்களின் தலைவர்களும் விருப்பமுள்ள காவலர்கள் குறித்து, அவர்களின் இரத்தத்தின் வகைபற்றி சோதனைகள் நடத்துவர். காவல்படையில் உறுப்பினர் ஒவ்வொருவரது மருத்துவ வரலாறு குறித்த குறிப்பேட்டில் இந்தச் சோதனைகளின் முடிவுகள் பதிவு செய்யப்படும். குறிப்பிட்ட ஒரு பிரிவு இரத்தம் ஏதாவது ஒரு மருத்துவமனைக்கு அவசரமாகத் தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி, அதே பிரிவு இரத்தம் உள்ள சில காவலர்களை மருத்துவமனைக்குத் தேவைப்படுமளவு இரத்ததானம் செய்ய அனுப்புவார்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அப்படி ரத்த தானம் செய்ய போலீஸ் அதிகாரிகளோ அல்லது போலீஸ்காரர்களோ முன்வரும்போது அதற்கான கட்டணம் அதிகமாக இல்லை. இதன் காரணத்தால் அவர்கள் அதிகமான பேர்கள் ரத்த தானம் செய்ய மறுக்கிறார்களா ? இந்த அரசாங்கம் ரத்த தானம் கொடுக்க முன் வருகிறவர்களுக்குக் கட்டணத்தை இப்பொழுது உயர்த்தியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே 7 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 10 ரூபாய் தரப்படுகிறது. விருப்பம் இருந்தால்தான் காவல் துறையில் உள்ள அவர்கள் ரத்த தானம் கொடுக்க அனுப்பப்படுகிறார்கள். விருப்பம் இல்லாதவர்கள் அனுப்பப்படுவதில்லை. கூடுமானவரையில் அவர்கள் இதை ஒரு நல்ல காரியமாகக் கொண்டு இதிலே ஈடுபடுகிறார்களே அல்லாமல் இதிலே மறுக்கிறார்கள் என்பதற்கு அதிக சான்றுகள் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், ரத்த தானம் வழங்குவது, மிகவும் உபயோகமான ஒன்றாக இருப்பதோடு, ஆபத்து நிலையிருப்பவர்களைப் பாதுகாக்கின்ற ஒரு பணியாகவும் இருப்பதால், நல்ல ஆரோக்கியம் உள்ள அனைவரும் ரத்த தானம் தர வேண்டும் என்று கட்டாயப்படுத்த விதிமுறைகள் ஏதாவது உண்டாக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேட்பதோ தானம்! அதில் கட்டாயப்படுத்துவது முடியாது.

**திரு. எம். தேவராசன்:** இத்தகைய ரத்தம் காவல் துறையினருக்கு மட்டுமே பயன்படுத்தப்படுமா? அல்லது, எல்லாப் பொதுமக்களுக்கும் அந்த ரத்தம் பயன்படுமா?

**மாண்புமிகு திரு. மு கருணாநிதி :** எல்லாப் பொதுமக்களுக்கும் அந்த ரத்தம் பயன்படுத்தப்படுகிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, ரத்த தானம் செய்கின்ற காவல் துறையிலுள்ள ஊழியர்களுக்கு, கூடுதலாக ரத்த தானம் அவர்கள் செய்யும் நேரத்தில், பதவி உயர்வு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'ரத்த தானம் செய்தார்' என்று அவர்களுடைய குறிப்பேடுகளில் குறிக்கப்படுகிறது. அவர்களுடைய பதவி உயர்வதற்குப் பல்வேறு நல்ல காரணங்கள் இருந்தால், இதுவும் ஒரு காரணமாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

**திரு. சோ. கருணைநாதன் :** கொடுக்கப்படுகிற ரத்தத்திற்குப் பணம் தரும் காரணத்தால் 'தானம்' என்ற வார்த்தையை நீக்கிவிட்டால் என்ன?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த ரூபாய் அவர்களுக்குக் கட்டணமாகக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் ரத்தத்தை அளித்த காரணத்தால், மறுபடியும் ஊட்டச் சத்து மிகுந்த உணவுகளை அவர்கள் உட்கொள்ளுவதற்குத் தரப்படுகிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** கடந்த ஆண்டு எத்தனை போலீஸ் அதிகாரிகள் ரத்த தானம் கொடுத்திருக்கின்றார்கள் என்பதைக் கூற முடியுமா ? மிகக் குறைவாகக் கொடுத்திருப்பார்களானால் அவர்கள் மேலும் ரத்த தானம் செய்யும் வகையில் அவர்களை ஊக்குவிக்கும் திட்டம் ஏதாவது அரசு வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுவரையில் குறிப்பிட்ட ரத்தப் பிரிவுள்ள காவலர்களை மருத்துவ மனைகளுக்கு அனுப்பி இருக்கிறோம் என்றுதான் காவல்துறையிலிருந்து குறிப்புகள் அளித்திருக்கிறார்கள். இனிமேல் எத்தனை பேர் ரத்தம் கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் வைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, அப்படிப்பட்ட விவரங்களைப் பேணி வரவேண்டும் என்று தலைமைப் போலீஸ் அதிகாரி அவர்கள் காவல் துறையினர் அனைவருக்கும் இப்போதே சர்க்குலர் அனுப்பியுள்ளார்.

**திரு. கா. காளிமுத்து :** காவல் துறையிலுள்ளவர்கள் ரத்த தானம் தருவது குறித்துத் திட்டம் இருப்பதுபோல் மற்ற துறையிலுள்ளவர்களும் ரத்த தானம் செய்வது குறித்துத் திட்டம் ஏதாவது உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காவல் துறையினர், சிறைச்சாலைகளில் கைதிகளாக இருப்போர் இவர்களைப் பொறுத்து இப்பொழுது ரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. மற்றப்படி, தனித்தனி துறைகளாகப் பிரிக்கப்படவில்லை. அனைவரும் பொதுமக்களாகக் கருதப்பட்டு அவர்கள் யாரும் தாராளமாக ரத்த தானம் செய்யலாம் என்று வேண்டப்படுகிறார்கள். ஓராண்டில் இப்படிப்பட்டவர்கள் சுமார் 40,000 பேருக்கு மேற்பட்டவர்கள் ரத்த தானம் செய்வதிலே ஈடுபடுகிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** போலீஸ் துறையில் ரத்த தானம் செய்யத் தகுதியுள்ளவர்கள் யார் யார் என்று ஆராய்ந்து நிச்சயிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபோல் யார் யார் என்று ஆராய்ந்து நிச்சயித்து வைக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படுகிற நேரத்தில் அந்தப் பிரிவுள்ள ரத்தம் உள்ளவர்கள் தேவை என்று மருத்துவ மனையிலிருந்து குறிப்பு அனுப்பப்பட்டால் அவர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** சிறைக் கைதிகள் ரத்த தானம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி சிறைக் கைதிகள் ரத்த தானம்

கொடுத்தால் அவர்களுடைய தண்டனைக் காலத்தின் ஒரு பகுதி வஜா செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மூன்று மாதங்களுக்கொரு முறை அப்படி ரத்த தானம் கொடுக்கும் கைதிகளுக்குப் பதினைந்து நாட்கள் தண்டனை குறைக்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, விபத்துக்குள்ளானவர்களுக்கு இப்படிப்பட்ட ரத்தம் பயன்படுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. இந்த ரத்த தானம் செய்யக்கூடியவர்களிடமிருந்து எடுக்கும் ரத்தம் அரசாங்க மருத்துவ மனைகளில் உள்ள நோயாளிகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறதா? அல்லது, பிரைவேட் நர்ஸிங் ஹோம் நடத்துகிறவர்கள் கேட்டாலும் இது வழங்கப்படுகிறதா ? அப்படியென்றால், அவர்களுக்கு என்ன கட்டண விகிதத்தில் கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி.

### *Assault on students in Washermanpet*

*127 *Q*.—Thiru N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of students were assaulted in Washermanpet in February, 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) தியாகராயர் கல்லூரி மாணவர்கள் சிலர் மீது திடீர்த் தாக்குதல் செய்தது குறித்த புகார் ஒன்று 25—2—1971 ராயபுரம் காவல் நிலையத்தில் பெறப்பட்டது. சில மாணவர்களால் பெண்கள் சிலர் தாக்கப்பட்டனரென்ற எதிர் வழக்கு ஒன்றும் பெறப்பட்டது. இவ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை நடத்தப்பட்டது. ஆனால், மேலும் நடவடிக்கை எடுப்பது அவசியமில்லையெனக் கருதப்பட்டது.

### மாவட்டந்தோறும் அரசு அச்சகம்.

*128. வினா—திரு. நா. வீராசாமி,
திரு. தி சி. ஆ. சிவப்பிரகாசம்,
டாக்டர் எச். வி. ஹாண்டே,
திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அரசாங்க அச்சுக்கூடம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு அச்சகம் ஒன்று அமைப்பது குறித்த கருத்து எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை. எனினும் ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் அரசு அச்சகம் ஒன்று அமைப்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பேர்ப்பட்ட அரசாங்க அச்சக்கூடத்தை அமைப்பது என்ற அடிப்படையில் தென்னாற்காடு மாவட்டத்திலும், விருத்தாசலத்திலும், சேலத்திலும் தொடங்கினார்கள். அந்த அடிப்படையில் மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** அதற்கான நிதி வசதி ஏற்பட்டவுடன் கனம் உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். செல்வராஜ் :** தற்சமயம் மாவட்டங்களில் இருக்கிற அச்சுக்கூடத்திற்கு சென்னையில் இருந்தே ஆட்களை அனுப்புகிறார்கள். அப்படியின்றி அந்த அந்த மாவட்டங்களில் உள்ளவர்களையே தேர்ந்தெடுப்பதன் மூலம் அந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரும் முறையில் இனி அரசு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இது போன்ற யோசனைகளைப் பலர் கூறியிருக்கிறார்கள். அவைகளை அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** அரசாங்க அச்சுக்கூடங்களில் அரசாங்க வேலையைத் தவிர வேறு வேலை செய்யப்படுகிறதா? அரசாங்க வேலைகளைச் செய்வதற்கு இவை போதுமானதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அரசாங்க வேலைகளைச் செய்வதற்கே இப்போதுள்ள அரசு அச்சகம் போதுமானதாக இல்லை. அதை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** கோயம்பத்தூர் மாவட்டத்தில் அரசாங்க அச்சுக்கூடத்தை விரிவுப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கோவையில் உள்ள அச்சகமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியநாயகன் பாளையம்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அது மத்திய அரசுக்குச் சொந்தமான அச்சகம்.

[1971 ஜூலை 5

**திரு. எஸ். முருகையன் :** அரசாங்க வேலைகள் வெளியார் அச்சகத்திற்கும் கொடுத்துச் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** தரப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் சேலத்தில் அரசாங்கக் கிளை அச்சகம் ஏற்படுத்தப்பட்டபோது சென்னையில் இருந்து அந்த இடத்திற்கு அனுப்பப்பட்ட அச்சு இயந்திரங்களில் ஒன்று காணாமல் போய்விட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** அரசாங்க அச்சகத்தில் எஸ்.எஸ்.எல்.சி.-க்கு மேல்படித்தவர்களாக இருக்க வேண்டும், தனியார் அச்சகத்தில் 6 மாதமாவது பயிற்சி பெற்றவராகத்தான் இருக்க வேண்டும் சேருவதற்கு என்று விதி போட்டிருக்கிறார்களே, இதுசம்பந்தமாக அப்படியில்லாது எஸ். எஸ். எல். சி. படித்தவர்களாக இருந்தால் போதும் நேரிடையாகச் சேருவதற்கு என்று செய்வதற்கு யோசிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, பைண்டர், கம்பாசிடர் வேலைக்கு எட்டாவது வகுப்பில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் என்றும், ப்ரூப் ரீடர் வேலைக்கு எஸ்.எஸ்..எல்.சி. வரை கல்வி பயின்றிருக்க வேண்டும் என்பது விதி. பைண்டர், கம்பாசிடர்களுக்குக் கொஞ்ச காலத் தேர்ச்சியாவது இருந்தால்தான் அவர்கள் உடனே வேலை செய்ய முடியும் என்பதனால் குறிப்பிட்ட வேலைகளைத் தெரிந்தவர்களாகயிருக்க வேண்டும் என்ற விதிமுறை போடப்பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** பெரியநாயகன் பாளையத்தில் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இயங்கி வருகிற அச்சகம் மத்திய அரசின் வேலைகளைச் செய்கிறதா? மாநில அரசின் வேலைகளையும் செய்கிறதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மத்திய அரசின் வேலைகளைச் செய்கிறது.

**திரு. கு. காமாட்சி :** திருச்சி அரியமங்கலத்தில் இருக்கிற அச்சுக் கூடத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுபற்றிய குறிப்பு இல்லை.

**திரு. கா. காளிமுத்து :** சிவகாசியில் அமைந்துள்ள அரசு அச்சுக்கூடத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 5]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் சொல்வது போல சிவகாசியில் அரசு அச்சுக்கூடம் இருப்பதாக எனக்குத் தெரிந்த வரையில் இல்லை.

**திரு. எம். செல்வராஜ் :** வெளி மாவட்டங்களில் உள்ள அரசு அச்சுக்கூடம் தனியார் கட்டடங்களில் இருக்கின்றன. அவற்றுக்கு வாடகை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சொந்தக் கட்டடங்களைக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் சொல்வது முற்றிலும் உண்மை. விருத்தாசலத்தில் உள்ள அரசு அச்சகம் தனியார் கட்டடத்தில் இருக்கிறது. நானே நேரில் பார்த்தேன். இருக்கக்கூடிய இடத்திற்கு வாடகை மிக அதிகம் தான். சொந்தக் கட்டடம் கட்ட நிதிவசதி கிடைத்தவுடன் ஆவன செய்யப்படும்.

**திரு எம். தேவராசன் :** தமிழகத்தில் மொத்தம் எத்தனை அரசு அச்சுக் கூடங்கள் இருக்கின்றன. உதகையில் இல்லை என்றால் அங்கே ஆரம்பிக்க ஏதேனும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தமிழகத்தில் கவர்ன்மென்ட் சென்டிரல் ப்ரஸ், மவுண்ட்ரோடு, சென்ட்ரல் ஜெயில் ப்ரஸ், ஹைக்கோர்ட் ப்ரஸ், சேலத்தில் கிளை அச்சகம், திருச்சியில் கிளை அச்சகம், விருத்தாசலத்தில் கிளை அச்சகம், புதுக்கோட்டையில் கிளை அச்சகம், தங்கசாலை சென்டிரல் ப்ரஸ் ஆகியவை உள்ளன. நிதி வசதி கிடைக்கும்போது உதகையிலும் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. கா. காளிமுத்து :** சிவகாசி அரசு அச்சகம் அமைச்சர் குறிப்பில் இல்லாமைக்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சிவகாசியில் அரசு அச்சகம் இல்லாததினால்.

**திரு. எஸ். முருகையன் :** விருத்தாசலத்தில் உள்ள அரசு அச்சகம் தனியார் கட்டடத்தில் இருக்கிறது, வாடகை அதிகம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வாடகை குறைவாக இருந்தால் வாடகைக் கட்டுப்பாடு அதிகாரிக்கு வீட்டுக்காரர்கள் எழுதி உயர்த்திக்கொள்கிறார்களே, அப்படி வாடகை அதிகமாக இருப்பதால் அதை அதிகாரிகளுக்கு எழுதி குறைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் பார்த்தாகி விட்டது. விரைவிலே அந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டிய நிலைமையில் இருப்பதால் உறுப்பினர் கூறுவதுபோன்ற பிரச்சினைக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. தேவேந்திரன் :** தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டமாகிய தஞ்சை மாவட்டத்தில் ஒரு அரசு அச்சகம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அரசு அச்சகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிதிவசதி பெருகியவுடன் கவனிக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** மாநில அரசின் அச்சுப்பணிகள் தனியார் அச்சகங்களில் கொடுப்பதற்குப் பதிலாக மத்திய அரசு அச்சகத்திற்குக் கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** மத்திய அரசுக்குச் சொந்தமான அச்சகங்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு இருக்கின்றன? மத்திய அரசு அவைகளைத் தமிழக அரசிடம் ஒப்படைத்துவிட்டு, தமிழக அரசின் மூலமாகத்தான் தங்களுடைய வேலைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தீவிரமான முயற்சிகளை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மூலக்கேள்விக்கு அப்பாற்பட்ட துணைக் கேள்வியாக இது இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, 50 லட்சம் ரூபாய் மூலதனத்திற்கு மேலேயுள்ள அச்சகங்களையெல்லாம் அரசு தேச உடைமையாக்க எண்ணியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இப்போதைக்கு அப்படி ஒன்றும் எண்ணம் இல்லை.

*Recommendations of Road Transport Wage Board*

*129 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the award of the Road Transport Wage Board has been implemented in full in the State—

(b) if not, the reasons therefor; and

(c) the steps taken for making the benefit available to the workers covered?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) & (இ) சாலைப் போக்குவரத்து நிறுவனங்களுக்கான ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை இதுவரை இம் மாநிலத்தில் 105 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் செயல்படுத்தியுள்ளன.

(உ) ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று எஞ்சிய நிர்வாகங்களையும் வற்புறுத்துமாறு துறை அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இத் தொழிலின் தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர் சங்கக் கூட்டம் ஒன்று



19—6—1971 அன்று நடந்தது. அக் கூட்டத்தில் போக்குவரத்துத் தொழில் நிறுவனங்களின் தொழிலதிபர்களை ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை ஆகஸ்ட் மாதம் முதல் தேதிக்குள் செயல்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்தினுடைய முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள். மற்றவர்களிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லை. ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் பரிவுரைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இல்லாவிட்டால் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் அந்த பரிவுரைகளை அமல் நடத்தவில்லையென்றால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எத்தகைய நடவடிக்கையாக இருக்கும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, ரோட் டிரான்ஸ்போர்ட் ரெகமண்டேஷன்கள் பலவற்றை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகா அமல் நடத்தவில்லை யென்று கூறப்படுகிறது. அதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் பரிவுரைகளை அமல் நடத்தவில்லை யென்றால், மற்றவற்றிற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ, அந்த நடவடிக்கை மற்ற நிறுவனங்களின் மீதும் எடுக்கப்படும். ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகா இத் திட்டத்தை ஏற்கனவே நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட் வேஜ் போர்டு மாதிரியாக வேறு பல வேஜ் போர்டுகளின் சிபாரிசுகளை அந்தந்த அமைப்புகள் ஏற்றுக்கொள்ளாமல் பல்வேறு சிக்கல்களை உண்டாக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இம் மாதிரியான சிபாரிசுகளைக் கட்டாயமாக அமல் நடத்த வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'இந்தப் பிரச்சினை' என்று குறிப்பிட்டு எழுதியனுப்பினால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, சாலைப் போக்கு வரத்து வாரியத்தின் பரிந்துரைகளில் முக்கிய அம்சங்கள் என்னென்ன ? அதை, சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** : தலைவர் அவர்களே, அதற்கான விளக்கங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*Purchase tax on human hair*

* 130 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that this Government has imposed a purchase tax on the export of human hair; and

(b) whether the Government is aware of any attempts by the exporters to export human hair through other States?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : (அ) அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்கீழ் எந்த ஏற்றுமதிக்கும் விற்பனை வரியிலிருந்த விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப்படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7ஏ பிரிவின்கீழ், கொள் முதல் வரி விதிக்கப்படும்.

(இ) வணிகர்கள் மனித முடியை வேறு மாநிலங்களுக்கு அனுப்பி அங்கிருந்து ஏற்றுமதி செய்த நேர்வு எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா** : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாகக் கொள்முதல் வரி எவ்வளவு விதிக்கப்படுகிறது ? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. கே. ஏ. வகாப்** : தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக அந்நியச் செலாவணி நிறையக் கிடைப்பதால், கொள்முதல் வரியிலிருந்து, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, நான் முன்பு படித்த விடையைச் சரியாகக் கவனித்திருந்தால், உறுப்பினர் அவர்களுக்கு விளங்கியிருக்கும். அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்கீழ் எல்லா ஏற்றுமதிக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப்படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால், தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 7-ஏ பிரிவின்கீழ், கொள்முதல் வரி விதிக்கப்படும். 23—4—1971-ம் தேதியன்று உயர்நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பில்கூட வரி விதிக்க உரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் கொள்முதல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படாது.



**திரு. கே. என். குமாரசாமி** : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பழனியில் மனித முடி ஏராளமாக இருக்கின்றது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அதை ஏற்றுமதி செய்கிறது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அரசாங்கத்திற்கு உட்பட்டதா ? அல்லது பிரைவேட் கார்ப்பரேஷனா ? அந்த கார்ப்பரேஷன் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கும் விற்பனை வரி போடுவதற்கும் அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. நா. வீராசாமி** : தலைவர் அவர்களே, மனித முடியிலிருந்து அழகான டோப்பாக்களை எல்லாம் அம்பத்தூரில் உள்ள 'விக் பாக்டரியில்' தயார் செய்து நல்ல விலையில் விற்கிறார்கள். இதற்கு நல்ல விலைகூடக் கிடைக்கிறது, நல்ல கிராக்கியும் இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு வரி மூலம் என்ன வருமானம் கிடைக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, அதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்கிற விவரம் தற்போது இல்லை. ஆனால் 'விக் பாக்டரி' தொழிலாளர்களுடைய போராட்டத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அது திரும்பவும் திறக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தத் தொழிற்சாலை சீக்கிரத்தில் திறந்தால், தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும், நமக்கும் வருமானம் கிடைக்கும்.

**திரு. எம். சுரேந்திரன்** : தலைவர் அவர்களே, மனித முடி நமது மாநிலத்தில் எங்கெங்கு கிடைக்கிறது ? வருஷத்திலே எவ்வளவு கிடைக்கிறது ? அதனால் பெறக்கூடிய வருமானம் எவ்வளவு என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. எம். தேவராசன்** : தலைவர் அவர்களே, மனித முடிக்கு எந்த நாட்டில் தேவை அதிகமாக இருக்கிறது ? அதற்கான காரணம் என்ன என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, காரணம், மனித முடியால் டோப்பாக்கள் செய்கிறார்கள். எந்த நாட்டில் தேவை அதிகமாக இருக்கிறது என்கிற விவரக் குறிப்பு இல்லை.

## Conference of Commercial Tax Officers

* 131 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to hold a conference of Commercial Tax Officers to review the working of the department; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :**

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள வர்த்தகக் கழகங்கள், வணிக வரி விதிப்பது சம்பந்தமாக சில ஆலோசனைகளைக் கூறுவதற்காக வியாபாரிகளைக் கொண்ட அங்கம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே, இதை அனுமதிக்க மறுக்கிறேன்.

## மாநில வக்ப் போர்டு

* 132 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முஸ்லீம் வக்ப் போர்டு எப்போது கலைக்கப்பட்டது ?

(இ) இது கலைக்கப்பட்டதன் காரணம் என்ன ?

(உ) புதிய அங்கத்தினர்களைக் கொண்ட வக்ப் போர்டு எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) அரசு வக்ப்போர்டு நிர்வாகம் சரிவர இயங்காததால் 20—11—1967-ல் கலைக்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு அரசு வக்ப் போர்டு 24—5—1971-ல் மீண்டும் அமைக்கப்பட்டுவிட்டது.

திரு. கே ஏ. வகாப் : தலைவர் அவர்களே, மீண்டும் அமைக்கப் பட்டிருக்கிற வக்ப் போர்டில், விதிகளில் குறிப்பிட்டிருப்பதுபோல, சட்டசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலே இருக்கின்ற விதிகள் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? அல்லது அமைக்கப்பட்ட வக்ப் போர்டிலிருந்து யாராவது ராஜினாமாச் செய்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, அமைக்கப்பட்ட வக்ப் போர்டின் விதிமுறைகளுக்குட்பட்டு அம் மாதிரியான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைக்கப் படவேண்டுமென்று குறிப்பில் கூறவில்லை. அவர்களும் இருக்கலாம்



என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது அரசாங்கம் மாற்றியமைத்த வக்ப் போர்டிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்திருக்கிறார்கள். ஒருவர் திரு. எம். எம். பீர் முகம்மது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மேலப்பாளையம். மற்றவர் வடகரை திரு. பக்கீர், தஞ்சாவூர்.

திரு. எஸ். முருகையன் தலைவர் அவர்களே, இப்போது நியமிக்கப்பட்ட வக்ப் போர்டில் எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம்களும் இடம் பெற்றிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, அரசியல் கட்சி அடிப்படையிலிருந்து மட்டும் நியமிக்கப் படுவதில்லை. பொதுவாக நல்ல உறுப்பினர்களை அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலும், வக்ப் போர்டு சரியாக, நல்ல முறையில் இயங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வக்ப் போர்டு முஸ்லீம்களுடைய சொத்துக்களை, அவர்களுடைய கல்வி சம்பந்தமான விஷயங்கள், மற்ற அம்சங்களைப் பாதுகாக்கிறது என்று கருதுகிறேன். அமைக்கப்பட்ட வக்ப் போர்டிலே என்னென்ன அடிப்படையிலே மெம்பர்களை நியமனம் செய்கிறார்கள் ? அல்லது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவர் அவர்களே, வக்ப் போர்டில் 11 உறுப்பினர்கள் நியமனம் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அதற்குச் சில விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளுக்குட்பட்டு இன்னின்னவர்களை நியமிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : அமைக்கப்பட்டிருக்கிற வக்ப் போர்டில் இருந்து ராஜினாமாச் செய்தவர்களுக்குப் பதிலாக யாராவது நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru S. J. SADIQ PASHA : இதில் உள்ளவர்கள்.

Moulvi Saw Bhuhari, Madras.

Thiru M. M. Peer Mohammed, Ex-M.L.A., Melapalayam.

Dr. Amiruddin Ahmed, Tiruchirappalli.

Thiru M. S. Abdul Khader, Ex-Mayor of Madras.

Thiru Vadagarai Bucker, Thanjavur.

Thiru A. A. Rasheed, Ambur.

Thiru S. Mohamed Ali, Retired Superintending Engineer (Electricity Board), Coimbatore.

Thiru Peer Mohamed Ali Khan (Shia), Madras.

Thiru Mohamed Heena, Madurai.

Thiru M. A. Kaleek, Panruti.

Thiru Mohamed Galeen, Keelakarai.

இதிலே Vadagarai Bucker and M. M. Peer Mohammed ராஜினாமாச் செய்ததாலே Gulam Mohideen and Kalakadai Jinna ஆகியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். தேவராசன் :** இந்த வக்ப் போர்டிலிருந்து ராஜினாமா செய்தவர்கள் எந்தக் காரணத்திற்காகச் செய்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் காரணங்களை அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** வக்ப் போர்டிலிருந்து ராஜினாமாச் செய்வது சம்பந்தமாக முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சில அபிப்பிராயங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். முஸ்லீம் சமுகத்திற்கு அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் பிரதிநிதிகள் என்பதை அரசு ஒப்புக்கொள்கிறதா? அந்தக் கட்சியில் இல்லாத முஸ்லீம்களும் பிரதிநிதிகள் என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதுபற்றி மேலவையிலே ஒரு பிரச்னை வந்தபோது நான் பதில் சொல்லியிருக்கிறேன். குறிப்பிட்ட முஸ்லீம் மக்கள் முஸ்லீம் லீக்கிலே பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள். முஸ்லீம் லீக்கிலே இல்லாத முஸ்லீம்களும் பல் வேறு கட்சிகளிலும் இருக்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** வக்ப் போர்டு போன்ற மத சம்பந்தமான எல்லா போர்டுகளையும் கலைத்து எல்லாவற்றையும் அரசு நேரடியாக நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீண்டநாட்களாக இருந்து வருகிற ஒரு சில மரபுகளில் அரசு தலையிட்டு சில மத நம்பிக்கை கொண்டவர்களை அரசு புண்படுத்த விரும்பவில்லை. இவற்றிற்கெல்லாம் தக்க காலம் பழுத்து வரவேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்ற பொழுது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக ஒரு போர்டு ஏற்படுத்துவது நியாயந்தானா ? அதிலே இந்துக்களையும் சேர்த்துக் கொள்வதற்குச் சட்டம் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்துக் கோயில்களில் முஸ்லீம்கள் டிரஸ்டிகளாக ஆவதில்லை. அதுபோலவே முஸ்லீம் மதத்திலே முஸ்லீம்கள் மாத்திரம் வக்ப் போர்டிலே இருக்க வேண்டுமென்று இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, இந்த வக்ப் போர்டிலே குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் போடப்பட வேண்டுமென்று விதி ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படியொன்றும் விதியில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் முஸ்லீம்களை இந்துக் கோயில்களில் நியமிப்பதில்லை என்று சொன்னார்கள். இந்துக்கள் முஸ்லீம் கோயில்களுக்குப் போகிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது போன்ற வாரியங்களை நியமிப்பதற்கும் கோயில்களுக்குச் செல்வதற்கும் உள்ள வேறுபாட்டை உறுப்பினர் அவர்கள் அறிய வேண்டும்.

* 133 வினா **திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, வக்ப் சொத்துக்களின் தற்போதைய மதிப்பு என்ன ?

(இ) வக்ப் பணத்தைக் கொண்டு ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட இருப்பது உண்மையா ?

(உ) எந்த ஊரில், எவ்வளவு தொகையில் கட்டப்பட இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) 1955-ம் ஆண்டு வக்ப் ஆணையாளரால் ஆய்வு செய்யப்பட்டதற்கு இணங்க வக்ப் சொத்துக்களின் மதிப்பு ரூ. 11.03,48,382 ஆகும். தற்போதைய அங்காடி மதிப்பை கணக்கில் கொண்டு பார்த்தால், இந்த சொத்தின் மதிப்பு 10 மடங்கு அதிகமாக இருக்கும்.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த ஏறக்குறைய நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை நிர்வகிக்கின்ற அந்த ஸ்தாபனம் திறமையாக இருக்க வேண்டுமென்று அரசு கருதுகின்ற காரணத்தினாலே வக்ப் போர்டு நியமிக்கப்பட்டது. சென்ற காலத்திலே தனி அதிகாரிகள் பொறுப்பில் அவை இருந்தபொழுது பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அரசு அறியுமா ? அதைத் திருத்த என்ன நடவடிக்கைகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவான குற்றச்சாட்டாக இருக்கிறது. ஏதாவது தவறுகள் இருந்தால் அதைப்பற்றிய விவரங்கள் என்ன என்று சொல்ல வேண்டும், அதுதான் சட்டமன்றத்தின் மரபு. பொதுவாகச் செய்திருக்கிறார்கள், என்றால் அதற்கு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியாது. ஏதாவது குறிப்பிட்ட தவறு இருந்தால் சொல்லுங்கள். இந்தத் துணை வினா அனுமதிக்கப்படவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த வக்ப் போர்டின்கீழ் இருக்கின்ற சொத்துக்கள் எல்லாம் எதற்கெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன? இந்துக்கள் அறநிலையச் சொத்துக்கள் கல்வி போன்ற சமூக நல வளர்ச்சிக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது. அதே போல் இந்தச் சொத்துக்களையும் அப்படிப்பட்ட காரியங்களுக்கும் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரிலிஜியஸ் அன்ட் சாரிட்டபிள் பர்ப்பஸில் எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் பட வேண்டுமென்று ஏற்கனவே பத்திரங்களில் எழுதி வைக்கப் பட்டிருக்கிறதோ, அப்படிப்பட்ட காரியங்களுக்குத்தான் பயன் படுத்தப்படுகிறது. அந்த முறையிலேதான் வக்ப் போர்டும் செய்து வருகிறது.

திரு. கோவை செழியன் : வக்ப் போர்டு சார்பில் சென்னை நகரத்திலே ஏதாவது கல்லூரிகள் நடத்தப்படுகின்றனவா ? அப்படியானால் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையில் நடத்தப் படவில்லை. மதுரையில் நடத்தப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : முஸ்லீம்களின் மதச் சார்புள்ள வக்ப் போர்டு இந்துக்களின் அறநிலைய போர்டுகள் இரண்டும் இரண்டாக இருக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இருக்கின்ற பணம் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பணம் ஒன்று சேரலாம் ; மனம் ஒன்று சேருவது இல்லையே, என்ன செய்வது ?

திரு. நா. வீராசாமி : கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் வக்ப் போர்டுக்குச் சொந்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வக்ப் போர்டுக்குச் சொந்தமான நிலங்கள் இந்துக் களால் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்னமேயிருந்தே பயன் படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. அவர்கள் அதிலே பல கட்டடங்கள் எழுப்பியிருக்கிறார்கள். அவற்றைக் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் இந்துக்கள் அங்கே பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் பரிசீலனை செய்து ஏற்கனவே கட்டடங்கள் கட்டப்பட்டுள்ள நிலங்களுக்கு உரிய கட்டணத்தை வாங்கிக் கொண்டு உரிமையாக்கிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வக்ப் போர்டின் சொத்துகள் அதிகமாக இருந்தாலும் நாம் வருமானத்தைத்தான் பார்க்க வேண்டும். வருமானம் குறைவாகத்தான் வருகிறது. ஆறு சதவீதம்தான் வருகிறது. நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே வாடகைக்கோ குத்தகைக்கோ விடப்பட்டுவிட்ட காரணத்தினாலே



வருமானம் குறைவாகத்தான் வருகிறது. முன்னாலேயே அப்படிச் செய்யப்பட்ட காரணத்தினால் வருமானம் குறைந்ததாக வருகிறது. இதிலே ஜாதி மதப் பிரச்சினை ஒன்றுமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆறு சதவீதம் தான் வாங்கப்படுகிறது என்று சொன்னார்கள். சிறிய பள்ளிவாசல்கள் எல்லாம் கஷ்டப்படுகின்றன. எனவே ஆறு சத வீதம் என்பதை இன்னும் குறைக்க ஏதாவது எண்ணம் உண்டா ? அல்லது சிறிய பள்ளிவாசல்கள் போன்றவற்றிற்கு அரசாங்கம் மானியம் கொடுத்து உதவ முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆறு சதவீதம் என்பதுவே குறைந்த வருமானம் என்று நான் சொல்லும்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் குறைக்க வேண்டுமென்று சொல்வது நியாயமல்ல. அரசாங்கம் மத சம்பந்தமாக மானியம் எதுவும் கொடுப்பதில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : வக்ப் போர்டு பணம் முஸ்லீம் ஆர்பனேஜஸ் இருக்கின்றனவே அவற்றிக்குக் கொடுக்கப்படு கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுவாக தர்ம சம்பந்தமான காரியங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முன்னாலே மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வருகின்ற வருமானத்தை அனுசரித்துச் சில ஆர்பனேஜஸுகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா : வக்ப் போர்டு சொத்துக்கள் 10 மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் வருமானம் மட்டும் ஆறு சதவீதம் மட்டும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வருமானத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் உடனடியாகத் தீவிரமான நடவடிக் கைகளை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவ்வளவு சாதாரணமான காரியமல்ல அது. 100 கோடிக்குச் சொத்து இருந் தாலும் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ கொடுக்கப்பட்டிருக்கிறது. முனிஸிபல் வரி, கிஸ்தி போக 6 சதவீதம்தான் கிடைக்கிறது. வருமானத்தைப் பெருக்க வக்ப் போர்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் என்று நினைக் கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட் : வக்ப் போர்டு சொத்துக்கள் ரிலிஜியஸ் அன்ட் சாரிட்டபிள் பர்ப்பஸுக்கு என்று பயன்படுத்தப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, சாரிட்டீஸ் என்ற அடிப்படையில் அனாதைகளைப் பராமரித்தல், குஷ்டரோகி ஆஸ்பத்திரிகள் கட்டுதல், மருத்துவ மனைகள் கட்டுதல் போன்ற வற்றிக்குப் பயன்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தும் அதில் அடங்கும்.

**திரு. எம். செல்வராஜ் :** நம்முடைய அமைச்சர் அவர்கள் மதிப்பு உயர்ந்திருக்கிறது, வருமானம் உயரவில்லை என்று சொன்னார்கள். மதிப்பு உயர்ந்திருக்கும்போது வருமானம் படிப் படியாக உயரத்தானே செய்யும், என்ன காரணத்தால் வருமானம் உயரவில்லை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பத்து கோடி என்று சொன்னது 'புக் வால்யு'. இன்றைய மார்க்கட் நிலவரப்படி பத்து மடங்கு அதிகமாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. பத்தாயிரம் ரூபாய்க்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தால், அந்தக் குத்தகையை ஏற்றுவது சுலபமான காரியம் அல்ல. இப்போது அமைக்கப்பட்ட போர்டு அந்தக் காரியங்களைச் செய்யும் என்று நம்புகிறேன்.

*Visit of Atomic Team from Japan to Tamil Nadu*

* 134 *Q.*—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any Atomic Team from Japan came to this State on or about the 28th January 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) ஆம். டாக்டர் ஹோரோ இனோ தலைமையில் ஜப்பானிய நாட்டு அணு சக்தித் தொழில் பிரதிநிதிக் குழுவினர் 1971-ம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதத்தில் இந்நாட்டிலுள்ள அணுசக்தித் துறையைப் பார்வையிட்டனர். இக்குழு 1971 ஜனவரி 23-ம் நாளன்று சென்னை அணுமின் சக்தித் திட்டத்தைப் பார்வையிட்டது. அணுசக்தித் துறையில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தை அவர்கள் ஆராய்ந்து அறிந்துகொள்ளவும் இருதரப்பாருக்கும் இடையே பயனுள்ள விவாதங்களை நடத்தவும் அணுசக்தி ஆணைக்குழுத் தலைவரின் அழைப்பின் பேரில் இக்குழு இந்தியாவிற்கு வருகை தந்தது.

**திரு. எ. சுவாமிதாஸ் :** ஜப்பானில் இருந்து வந்த அணு ஆராய்ச்சிக் குழுவினர் தங்கள் கருத்தை இந்த அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மத்திய அரசிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த ஆண்டு அந்த ஆராய்ச்சிக் குழு எங்கெல்லாம் சென்றது ? அணு உற்பத்தி செய்வதற்குத் தேவையான மோனசைட், இல்மினைட் போன்ற பொருள்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் கிடைக்கின்றன. அங்கு இந்தக் குழுவை அனுப்பி பரிசீலனை செய்யப்பட்டதா?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** எங்கெங்கு சென்றார்கள் என்ற தகவல் இல்லை. தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் கட்டப்படும் அணுமின் நிலையத்தைப் பார்வையிட்டார்கள். இதனை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சமீபத்தில் இரண்டாவது அணு மின் நிலையத்தை ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள்.

**திரு. என். டென்னிஸ் :** இந்திய வன விலங்குகள் வாரிய வல்லுநர் குழு தமிழ்நாட்டில் வேறு ஏதாவது வனவிலங்குகள் உய்விடங்களைப் பார்வையிட்டனரா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அவர்கள் முதுமலையைப் பார்வையிட்டனர். வேடந்தாங்கல், முண்டத்துறை, கோடிக்கரை ஆகிய இடங்களையும் பார்வையிட்டனர்.

**திரு. எம். தேவராசன் :** முதுமலை வன விலங்குகள் உய்விடத்தைக் காண போதுமான இடவசதி கிடையாது. பண்டிப்பூர் காடுகளில் உள்ளது போல் சிறு சிறு வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சோ. கருணைநாதன் :** இக் குழுவினரால் ஏதேனும் ஆலோசனைகள் வழங்கப்பட்டனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏற்கெனவே சொன்னேன். அவர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** முதுமலைக் காடுகளில் சட்டவிரோதமாக வேட்டையாடுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் அநேக விலங்குகள் அழிந்து கொண்டு வருவதால், அமைச்சர் அவர்கள் அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்படி யாராவது இருந்தால் உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** இந்த வன விலங்குகளைப் பாதுகாக்க நம்முடைய அரசாங்கம் நிறைய செலவு செய்கிறது. முதுமலையிலுள்ள வனவிலங்கு காட்டுக்குப் போகிறவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் தற்போது வசூலிப்பதில்லை. இங்கே 'ஸூ' -வுக்கு போனால் கூட கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, அங்கே வருபவர்களிடமிருந்து ஏதாவது கட்டணம் வசூலிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அவ்வாறு கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற ஆலோசனை இப்போது இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** முதுமலைக் காட்டிலுள்ள வன விலங்குகளை மக்கள் சென்று பார்ப்பதற்கு எந்த முறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பல பேர்கள் போய் பார்த்திருப்பார்கள். போவதற்கு முன்னால் குறிப்பிட்ட அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற்றுப் போக வேண்டும். அவர்கள் ஜீப் கார்கள் வைத்திருக்கிறார்கள். உள்ளே சாலை போடப்பட்டிக்கிறது. சாலை வழியாகச் செல்லும்போது தண்ணீர் குடிக்க வருகின்ற மிருங்களைக் காணலாம்.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த வன விலங்குகளைப் பாதுகாக்க அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது ? அந்தச் செலவைச் சரிக்கட்ட அதன்மூலம் ஏதாவது வருமானத்தைப் பெற அரசு வழிவகை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கு விவரம் என்னிடத்தில் இல்லை. வருவாயைப் பற்றிச் சொன்ன யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** முதுமலைக் காட்டிலுள்ள விலங்குகள் மைசூர் மாநிலத்திற்குப் போய்விடுகின்றன என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முதுமலைக் காட்டிலுள்ள வன விலங்குகள் மைசூரில் உள்ள பண்டிப்பூருக்குச் சென்று விடுவதும், பண்டிப்பூர் மிருகங்கள் முதுமலைக்கு வந்துவிடுவதும் இப்போது இருக்கிற முறையாகும்.

**திரு. கோவை செழியன் :** நம்முடைய தமிழகக் காடுகளில் இப்போது சிங்கங்கள் காணப்படுவதில்லை. ஆதிகாலத்தில் தமிழகத்தில் சிங்கங்கள் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இனிமேல் வேறு நாடுகளில் இருந்து சிங்கங்களை இறக்குமதி செய்தாவது சிங்கங்களை வளர்க்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்தியாவில் சிங்கங்கள் இல்லை, சிறுத்தைப் புலிதான் இருக்கிறது. சிறுத்தைப் புலி தமிழகத்திலும் இருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** முதுமலைக் காட்டில் காட்டெருமைகள் வெக்கை நோயால் இறந்து விட்டன என்று சொல்லப்படுகிறது. இப்போது ஏதாவது தோன்றி இருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நோயால் சில காட்டெருமைகள் இறந்தது உண்மை. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், கொடைக்கானல், அழகர் கோயில், பாபநாசம், வால்பாறை, முதுமலை ஆகிய இடங்களில் காட்டெருமைகள் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. வகாப் :** ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் காட்டு மிருகங்களைக் காண்பதற்கு உயரமான கோபுரங்களைக் கட்டி





அதிலிருந்து பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்து மிருகங்களைப் பார்க்க காட்சிக் கூடங்கள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முதுமலையில் தெப்பக்காடு என்ற இடத்தில் பார்வைக்கூடம் கட்டப்பட்டிருக்கிறது. இன்னொன்று கட்ட உத்தேசம் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** முதுமலை காட்டில் இருக்கக்கூடிய விலங்குகள் மைசூர் மாநிலத்திற்குச் சென்றுவிடுவதும், அங்கிருந்து இங்கு வருவதும் முறையாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் அந்த இரண்டு விலங்குகளும் காதலித்துக் குட்டிகளைப் போட்டிருந்தால், அந்தக் குட்டிகள் இப்போது எங்கே இருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்கு அந்த இரண்டு காதலர்களையும் கண்டு பேச வேண்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** தமிழகக் காடுகளில் முள்ளம்பன்றிகள் எந்தெந்தக் காடுகளில் அதிகமாக இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதைப் பற்றி முழு விவரங்கள் கிடையாது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோடிக்கரைப் பகுதியில் முள்ளம்பன்றிகள் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்க முடியும்.

**திரு. எம். தேவராசன் :** முதுமலைக் காடுகளில் புலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறதே, அதை அதிகப்படுத்தும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுவாக வன விலங்குகளைப் பாதுகாத்து ஒவ்வொரு மிருக இனங்களையும் அதிகப்படுத்த பொதுத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனையில் முடிவு செய்யப்பட்டு சீக்கிரத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கோவை செழியன் :** காங்கேயம் தொகுதியில் ஊதியூர் மலையில் ஏராளமான முள்ளம்பன்றிகள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுவாக வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. சுடுவதற்குத் தடை இருக்கிறது. மலையில் ஒதுக்கக் காடுகளில் இருக்குமானால் சட்டப்படி பாதுகாக்கப்படவேண்டியது பாதுகாக்கப்படும்.

**திரு. கா. மு. கதிரவன் :** தமிழகத்தில் வெள்ளைப் புலி எங்காவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தகவல் இல்லை.

[1971 ஜூலை 5

**திரு. சோ. கருணைநாதன் :** முதுமலைக் காட்டிலுள்ள மிருகங்களை மற்ற நாட்டினர் விரும்பிக் கேட்டிருக்கிறார்களா? அனுப்பப் பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுவாக யானைகள் தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. சமீபத்தில் கூட இந்திய அரசின் வேண்டுகோளுக்கேற்ப ஜப்பான் நாட்டுக்கு யானை அனுப்பப்பட்டிருக்கிறது.

*Visit of Expert Committee to Wild Life Sanctuary at Mudumalai.*

* 135 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Expert Committee of the Indian Wild Life Board of the Union Government visited the Mudumalai Wild Life Sanctuary during February 1970; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) ஆம். இந்திய அரசு அமைத்த இந்திய வன விலங்குகள் வாரியத்தின் வல்லுநர்க் குழு, 31—1—1970 முதல் 3–2–1970 வரை முதுமலை வனவிலங்கு உய்விடத்திற்குச் சென்று பார்வையிட்டது. வனவிலங்குகளைச் சீரிய முறையில் பாதுகாப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய இக் குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, முதுமலைக் காடுகளிலே சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தாலும், அதே நேரத்தில் அங்கே போய்ப் பார்க்கிற பிரயாணிகளுக்கு தக்க பாதுகாப்பு இல்லாததாலும் பல பேர் அச்சத்திற்கு உள்ளாகி அங்கே போகாமல் இருக்கிறார்கள். துஷ்ட மிருகங்கள் வசிக்கும் பகுதிகளில் மறைந்து நின்று பார்க்கும் சூழ்நிலையில் ஒரு உயர்ந்த கூடாரம் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே கூறினேன், தெப்பக்காட்டில் ஒரு உயர்ந்த கூடாரம் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே ஏறிப் பார்த்தால் மிருக சஞ்சாரத்தைப் பார்க்க முடியும். இரண்டாவது கூடாரம் ஒன்று கட்டுவது அரசின் ஆய்வில் இருக்கிறது. போகிற பிரயாணிகள் தங்குவதற்காக இரண்டு இடங்களில் விடுதிகள் கட்டப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு 25 லட்சம் ரூபாய் செலவில் செல்வி லாட்ஜ் என்று ஒன்று தெப்பக்காட்டில் கட்டப்பட்டு இருக்கிறது. விடுதிகள் கட்டவும், பார்வைக் கூடங்கள் கட்டவும் அரசு ஆலோசித்து வருகிறது.



1971 ஜூலை 5]

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, வரகூர் மலைப் பகுதியில் வன விலங்குகளைப் பார்க்கும் வகையில் பார்வைக்கூடம் கட்ட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், முதுமலைக் காடுகளிலே மிருகங்களைப் பார்க்கச் செல்பவர்கள் பல நேரங்களில் மான்களை மட்டும் பார்த்து விட்டு வரவேண்டியிருக்கிறது. சில நேரங்களில் தான் யானைகளைக் காண்கிறார்கள். மற்ற எந்த மிருகங்களும் தென்படுவது இல்லை. மற்ற மிருகங்களையும் பார்வையாளர்கள் பார்க்கும் வகையில் அரசு ஏதேனும் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கிட்டத்தட்ட 40 மைல் சுற்றளவில் இருக்கிறது, அந்தக் காடு. வன விலங்கைப் பார்க்கச் செல்பவர்கள் பொறுமையாக பல மணி நேரம் காத்து இருந்தால் தான் மான், யானைக் கூட்டங்களைக் காண முடியும். சிறுத்தை, புலிகளைப் பார்க்க வேண்டுமானால், யானை மேல் ஏறி பல மணி நேரம் காத்து இருந்தால் தான் பார்க்க முடிகிறது என்று சொல்லுகிறார்கள்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, முதுமலை காட்டில் யானை மீது ஏறிச் சுற்றிப் பார்ப்பதற்கு இப்போது உதகையில் ரிசர்வ் செய்ய வேண்டியிருக்கிறது. அதை மாற்றி, தயவு செய்து முதுமலைக் காட்டிலேயே ரிசர்வ் செய்ய அரசு ஏற்பாடு செய்தால், மிகவும் வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கு, அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நல்ல யோசனை.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, ஆப்பிரிக்கா காடுகளில் மரங்களில் ஓட்டல்கள் கட்டுகிறார்கள். அது மாதிரி முதுமலைக் காட்டில் மரங்கள் மீது ஓட்டல்களைக் கட்ட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது அங்கத்தினரின் நல்ல யோசனை.

**திரு. சோ. கருணைநாதன் :** தலைவரவர்களே, முதுமலைக் காட்டில் எத்தனை வகையான மிருகங்கள் இருக்கின்றன? மேல் நாடுகளிலிருந்து ஏதாவது மிருகங்கள் கொண்டு வர அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, பிற காடுகளிலிருந்து மிருகங்களைக் கொண்டு வரும் குறிப்பு ஏதும் இல்லை. பொதுவாக, தமிழ்நாட்டு காடுகளில் சிறுத்தை, புலி, யானை, மான்கள் (பல்வேறு விதமான மான்கள்), இருக்கின்றன. அது அல்லாமல், உறுப்பினர் ஒருவர் சொல்லியதுபோல், முள்ளம் பன்றி, பறவை இனங்கள் இருக்கின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியிலே உள்ள கோடியக்கரை காட்டிலே நல்ல விதமான மிருகங்கள் இருக்கின்றன. வன விலங்கு சரணாலயம் ஒன்றை அங்கே ஏற்படுத்த அரசு முடிவு எடுத்து இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இப்போதே இருக்கிறது. முண்டத்துறை, கோடியக்கரை என்ற பகுதியில் சரணாலயம் ஒன்று மிருகங்களைப் பாதுகாக்க இருக்கிறது. அதை விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, முதுமலையில் ஒரு யானை இரண்டு குட்டி போட்டதே, தாயும் சேயும் நலமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நலம் தானா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நலம்தான்.

THIRU K. S. KOTHANDARAMIAH : In Danganikota forests there are a number of wild elephants and they enter the villages near the forests and destroy the crops very frequently. People there are always under fear. May I know from the Hon. Minister for Forests whether any steps would be taken to provide some wire fence or walls-like thing and see that animals do not enter the fields and destroy the crops?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, பொதுவாக, வேலி போட்டு மிருகங்கள் வெளி வாமல் தடுக்கிற முறை கிடையாது. முதுமலைக் காட்டில் இருக்கும் மிருகங்கள் பயிர்களை பாழ்படுத்துகிறது என்பது உண்மைதான். அவ்வப்போது மனிதர்களைச் சேதப்படுத்தும் சூழ்நிலை இருக்குமானால், அந்த நேரத்தில் மட்டும் மிருகங்களைச் சுடுவதற்கு உத்தரவு போட்டு இருக்கிறோம்.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, ஆப்பிரிக்கா போன்ற சில நாடுகளில் யானைகள் தனியாக இருக்க சில அமைப்புகள் இருக்கிறது. அது போல், தமிழகத்திலும் யானைகள் காதலிக்க தனியே அமைப்புகள் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(பதில் இல்லை).

**திரு. மு. பழநி வேலன் :** தலைவரவர்களே, தமிழகத்தில் குள்ள நரிகள் எந்தப் பகுதியில் அதிகமாக வசிக்கின்றன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, குள்ள நரிகள் மலைப் பகுதிகளில் தான் இருக்க வேண்டுமென்பதில்லை. நாட்டுப் பகுதிகளில் உள்ள காடுகளில்கூட அவைகள் இருக்கின்றன. தென் ஆற்காடு மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் அவை அதிகமாக இருக்கின்றன.



**திரு. சோ. கருணாநாதன் :** தலைவரவர்களே, காட்டு எருமைகள் எல்லாம் வியாதியால் பீடிக்கப்பட்டு சில இறந்து விட்டன என்று சொன்னார்கள். அந்த வியாதி பரவுவதற்குக் காரணம் கிராமத்திலுள்ள மேய்வதற்காக செல்லும் மாடுகள் மூலமாகத் தான் பரவுகிறது என்று சொல்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தனியாக ஒரு மருத்துவரை அனுப்பி ஆலோசனை கேட்டு இருக்கிறோம். ஒரு ஆண்டுக்கு முன்பு இது போன்ற காட்டு எருமைகளுக்கு வியாதி பீடிக்கப்பட்டு இருந்தது. இப்போது, அந்த வியாதி அங்கே இல்லை.

**திரு. எஸ். வடிவேலு :** தலைவரவர்களே, காட்டில் இருக்கும் பட்சிகளிலே நாரை என்று ஒரு இனம் இருக்கிறது. அது மனிதனுக்கு பல் வேறு விதமான வியாதிகளைப் போக்குவதற்கு உபயோகப்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட அந்த நாரைகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நாரை என்ற பறவை இனங்கள் வேடந்தாங்கலில் இருக்கிறது. அவை எதற்குப் பயன்படும் என்று தெரியாது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, முதுமலைக் காடு எத்தனை மைல் பரப்பளவு கொண்டது. அந்தக் காட்டில் வாழும் மிருகங்களுக்கு வியாதி ஏற்பட்டால் அரசாங்கம் அதற்குச் சிகிச்சை அளிக்கிறதா ? அல்லது அதற்கு ஏற்படுகிற வியாதி அப்படியே முற்றிபோய் அந்த மிருகங்கள் இறந்துவிடுகின்றனவா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, கிட்டத்தட்ட 40 மைல் சுற்றளவில் இருக்கும். காட்டு மிருகங்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாது. ஒரு முறை காட்டு எருமைகளுக்கு வியாதி வந்தது. அப்படி வந்த நேரத்தில் ஒரு மருத்துவரை அழைத்து ஆலோசனை கேட்கப்பட்டது. சில இடங்களில் ஆங்காங்கு மருந்து தெளிக்கப்பட்ட பிறகு அந்த வியாதி இப்போது இல்லை.

**திரு. கே. என். குமாரசுவாமி :** தலைவரவர்களே, 2 குட்டி போட்ட யானை நலமாக இருக்கிறது என்று சொன்னார்கள். குட்டி போட்ட யானைகளுக்கு விசேஷ சலுகை ஏதேனும் அரசாங்கம் கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 4 மாதங்களுக்கு விசேஷ சலுகை அளிக்கப்படுகிறது. எந்த விதமான வேலைகளுக்கும் எடுத்துச் செல்லப்படாமல் வைத்து இருப்பார்கள். அதற்குப் பிறகு தான் மரம் தூக்குவதற்கு அழைத்துச் செல்வார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, முதுமலைக்காடு சுமார் 40 மைல் சுற்றளவு இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே மிருகங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் காரணத்தால், மற்ற பாதுகாப்பு இல்லாத இடங்களில் இருக்கும் மிருகங்களுக்கும் ஒரு வேண்டுகோள் விட்டு, அங்கே வந்து தங்குவதற்கு வசதியாக இருக்கிறது என்ற முறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சமயத்தில் மனிதர்களுக்கு விடுகிற வேண்டுகோளே கேட்கப்படுவதில்லை. அப்படியிருக்கும் பொழுது மிருகங்கள் நாம் விடுகிற வேண்டுகோளை எந்த அளவுக்குக் கேட்கும் என்று பார்க்க வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, மான்களைச் சுடுவதற்குச் சில இடங்களில் அரசாங்கம் அனுமதித்து இருக்கிறது. அப்படிச் சுடுவதால் அந்த இனம் அழிந்து வருவதால், கூடுமான வரை பெண் மான்களையாவது சுடாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பெண் மான், ஆண் மான் என்று இல்லை. சில இடங்களில் சுடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சரணலயம் இருக்கும் பகுதியில் யாருக்கும் சுடுவதற்கு அனுமதி வழங்குவதில்லை.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, முதுமலைக் காடுகளில் வாழும் முள்ளம்பன்றி கரி மூல நோய்க்குச் சிறந்த மருந்து என்று சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, எனக்கு அதைப்பற்றித் தெரியாது. பொதுவாக பன்றிக் கரி நல்லது என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். வட ஆற்காடு மாவட்டத்தில் போலீஸ் இலாகாவில் . . .

MR. SPEAKER : It is not a point of order. The hon. Member is raising a different matter.

### (2) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1971-72-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு ஐந்தாம் நாள். மானியக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,63,15,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற கோரிக்கையை இப் பேரவை முன் வைக்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் செய்யப்பட்ட பஞ்சாயத்து பிரிவினையைப்பற்றி விவாதிக்க, நான் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை இந்த மன்றத்தின் முன் பிரேரேபிக்கிறேன்.

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,63,15,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 7,63,15,300 under Demand No. 23—Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

**திரு. கே. என். குமாரசுவாமி :** ஊராட்சி பெரும்வழித் தடங்களை எல்லாம் ஊராட்சி ஒன்றியம் எடுத்துக் கொள்ளுவது பற்றி விவாதிக்க,

"கோரிக்கை எண் 23— சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,63,15,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss about the drawbacks in the working of the Community Projects in Dharmapuri district, I move—

'That the allotment of Rs. 7,63,15,300 under Demand No. 23—Community Development Projects, etc. be reduced by Rs.100.'

### (ஆ) கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,27,21,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற கோரிக்கையை இப் பேரவை முன் வைக்கிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss policy I move—

'That the allotment of Rs. 4,27,21,200 under Demand No. 29—Public Works—Grant-in-aid be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE : Sir, to discuss the utilization of UNICEF Aid for provision of drinking water to villages, I move—

'That the allotment of Rs. 4,27,21,200 under Demand No. 29 —Public Works—Grant-in-aid be reduced by Rs. 100.'

*　　*　　*　　*

திரு. கே. சுப்பு : கோவில்பட்டி, துறையூர் சாலையை உடனே அரசு எடுத்துக் கொள்வது பற்றி விவாதிக்க.

"கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,27,21,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை மீது இங்கே வைக்கப்பட்டிருக்கிற விளக்க உரைகளை@ இந்தப் பேரவை நடவடிக்கை குறிப்பிலே சேர்த்துக் கொள்ளுமாறு முதலில் நான் கேட்டுக் கொள்கிறேன். முக்கியமான சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் துறை பல்வேறு துறைகளையும் உள்ளடக்கிய வகையில் மக்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பணிகளையும் சமுதாய வளர்ச்சி பற்றிய பணிகளையும் ஏற்று வருகிறது. குறிப்பாக, உள்ளாட்சித் துறை இன்னும் சொல்லப் போனால் . . .

*　　*　　*　　*

ஊர் மக்களின் நலன்களையும், ஊர் மக்களின் வசதி வாய்ப்புகளைச் செய்து தருகின்ற பணிகளையும், ஊர் வளர்ச்சி பற்றிய கருத்துக்களையும் ஆய்ந்து ஆவன செய்பவைகளையும், ஊர்ச் சபைகளே மேற்கொள்ள வேண்டும் என்பது தமிழகத்திற்குப் புதிதானதல்ல என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வழிமுறைகளைப் பார்க்கும்பொழுது நமக்குத் தெரிகிறது. சங்க இலக்கியங்களிலே கூட இதற்கு நல்ல பல சான்றுகள் கிடைக்கின்றன. தமிழகத்தின் மூவேந்தர் ஆட்சி காலத்திலே கூட பல கல் வெட்டுகளின் மூலமாக நாம் ஒன்றை அறிகிறோம்; அதாவது ஊர்ச்சபைகள் ஊர் மக்களின் நலன்களிலே அக்கறை கொண்டு

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

@ 572–609-ம் பக்கங்களில் முதல் இரண்டாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.





பணியாற்றி வந்தது என்பதுதான் அது. அதற்குப் பிறகு இது மேலும், மேலும் வளர்ந்து, இப்பொழுது ஊராட்சி மன்றங்கள் என்றும், ஊராட்சி ஒன்றியங்கள் என்றும், நகராட்சி மன்றங்கள் என்றும் மாறி மக்களுக்கு வசதி வாய்ப்புகளை செய்வதிலே, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதிலே, பெரும் பொறுப்புகளையும், கடமைகளையும் ஏற்றுக்கொள்வதை நாளுக்கு நாள் நாம் உணருகிறோம். எனவே, உள்ளாட்சித் துறை பணிகளும், கடமைகளும் நாளுக்கு நாள் விரிவு அடைந்து வரும் நிலையில், அதனுடைய செயல்களும் விரிவு அடைந்து வருவதை நாம் காண்கிறோம்.

மற்றத் துறைகள் தனித்தனியாக இயங்குகின்ற தன்மை பெற்றிருந்தாலும், இந்த உள்ளாட்சித் துறை மட்டும் மற்றைய துறைகளை அணைத்துக்கொண்டும், மற்றைய துறைகளுடைய உதவிகளைப் பெற்றுக்கொண்டும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உள்ளாட்சித் துறை பொதுவாக பொது நிர்வாகத் துறையையும், கல்வித் துறையையும், மருத்துவத் துறையையும், பொது சுகாதாரத் துறையையும், வேளாண்மைத் துறையையும், விலங்கின வளர்ப்புத் துறையையும், நீர்ப்பாசனத் துறையையும், இப்படிப் பல்வேறு துறைகளின் பணியை ஏற்று அவைகளோடு ஒத்துழைப்புப் பணிகளை ஆற்றவேண்டிய நிலையிலே இருக்கின்றது. ஆகவே எல்லாத் துறைகளும் இதிலே இணைக்கப்படுகின்றன. ஆகவேதான் எல்லாத் துறைகளிலேயும் இருக்கின்ற ஆணைகளை நிறைவேற்றி இந்தத் துறையின் ஆணைகளையும் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க அளவிலே இந்தத் துறை நாளுக்கு நாள் விரிவு அடைந்து, செழுமைப்படுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

இப்பொழுது தமிழகத்தைப் பொறுத்தமட்டில், ஊராட்சி மன்றங்கள் 12,651-ம், பேரூராட்சி மன்றங்கள் 592-ம், ஊராட்சி ஒன்றியங்கள் 374-ம், நகராட்சிகள் 94-ம், நகரியங்கள் 12-ம் மாநகராட்சிகள் 2-ம் இருக்கின்றன. எனவே, திட்டங்களின் செலவு நாளுக்குநாள் பெருகக்கூடிய அளவிலே நிலைமைகள் வளர்ந்து கொண்டு வருகின்றன. எனவே, 1970-71 திருத்த மதிப்பீட்டிலே இருந்த செலவினத்தைவிட, இவைகளுக்கு ஓரளவுக்கு அதிகப்படி செலவு செய்வதற்காக இப்பொழுது வரவு-செலவுத் திட்டத்திலே நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிதி ஆண்டின் மானியக் கோரிக்கையிலே 71 கோடியே 90 இலட்சம் ரூபாய் நாம் பெற்று இந்தத் துறைக்கான பணிகள் நடைபெறுகின்றன என்றாலும், இந்தத் துறை எல்லாத் துறைகளையும் அரவணைத்துக் கொள்வதன் மூலம் நிதிகள் அதிகம் தேவைப்படுகின்றன. சமுதாய வளர்ச்சிக்கான திட்டங்களை ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் சேர்ந்து கடந்த ஆண்டு ஆற்றிய பணிகளுக்கான செலவு 64 கோடியே 44 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு அதுவே 71 கோடியே 93 இலட்சமாக பெருகியிருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டை விட 7 கோடியே 49 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஆகின்ற நிலையில் இம் மாநிலத்தின் எல்லாத் துறைகளையும்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜுலை 5

இணைத்து செயல்படும் வகையிலே இத்துறை பணிகளை ஆற்றிக் கொண்டு வருகின்ற தன்மையை நாம் நன்றாகக் காணலாம்.

இப்பொழுது, இந்தத் துறை ஆற்றி வருகின்ற பல்வேறு பணிகளிலே மிகச் சிறப்பாக இருக்கும் சில பணிகளை நான் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியைப் பெருக்குகின்ற பெரும் பொறுப்புகளை ஊராட்சி மன்றங்கள் மேற்கொண்டிருக்கின்றன. ஆரம்பப் பள்ளிகளை பொறுத்தமட்டில், மாநகராட்சிகள், நகராட்சிகளிலே இருக்கின்ற துவக்கப் பள்ளிகளை நீக்கி, ஊராட்சி ஒன்றியங்களின் கீழே நடப்பவை 27,000 துவக்கப் பள்ளிகள். இதிலே ஊராட்சி ஒன்றியங்களிலே நடப்பவை மட்டும் 21,700 துவக்கப் பள்ளிகள். மற்றும் 6,000-த்து சில்லரை பள்ளிகள் தனியார் பள்ளிகளாக நடக்கின்றன. 40 இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்களை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு ஊராட்சி மன்றங்களுக்கு ஏற்படுகிறது.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் ஆண்டுக்கு ஆண்டு கல்விக்காக செலவழிக்கப்படுகின்ற தொகை விரிவாகி வருவதைப் போல், ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக துவக்கப் பள்ளிகளுக்காக செலவழித்த தொகை 27 கோடியே 42 இலட்சம் ரூபாய் கடந்த ஆண்டு மட்டும். ஆகவே, இந்த ஆண்டு செலவினத்திலே 32 கோடியே 53 இலட்சம் ரூபாய் துவக்கப் பள்ளிகளுக்காக செலவழிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக, கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், அரசு மானியமாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு பணிகளிலே, உயர் துவக்கப் பள்ளிகளைத் துவக்குவது போன்றவற்றிற்கு, 87 சதவிகிதப் பங்கைப் போடுகிறது. மீதி 13 சத விகிதத்தை ஊராட்சி ஒன்றியங்கள் தாங்கிக் கொண்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்கக் கல்விச் செலவு கூட சென்ற ஆண்டு 3 கோடியே 92 இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு 4 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செலவழிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வேறு பல வசதிகளைப் பெருக்க இத்துறை பல பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற்கென 326 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1970 டிசம்பர் 31-ந் தேதி முடிய 4,090 மேல் நிலை நீர்த் தொட்டிகள் ; 62,300 குடிநீர்க் கிணறுகள்; 22,506 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட இணைப்புச் சாலைகள் மற்றும் 14,050 பள்ளிக் கட்டடங்கள் போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 21,000 சில்லரைப் பள்ளிக்கூடங்களில், 14,050 பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடம் இருக்கிறது. 7,000 சில்லரைப் பள்ளிக்கூடங்களுக்கு சொந்தக் கட்டடம் இல்லை. அந்த முயற்சிக்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கிற திட்டத்தின்கீழ் 900 அல்லது 1,000 பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடம் கட்ட முயற்சி எடுக்க, அதிகமான தொகைகளை ஒதுக்க இருக்கிறது.



1971 ஜுலை 5] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

குடிநீர் வழங்கும் பொறுப்பை மேற்கொண்டிருப்பதில், குடிநீர் வாரியம் என்று தனியாக அமைக்கப்பட்டு, அதற்காக தனி அதிகாரிகள் அமைக்கப்பட்டு, விரைவாக, முழுமையாக அதுபற்றி ஆராய்ந்து அறியவும், யூனிஸெப் மூலம் கிடைக்கும் உதவியைக் கொண்டும், 8,850 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு, 1976-77-க்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சாலைகளைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே இருந்த முறை சரியில்லை என்று, அந்த முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. சாலைகள் பராமரிப்புக்காக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் எண்ணிக்கை அளவில் ஆளுக்கு 40 காசு என்ற அளவில் தரப்பட்டது. வாழும் மக்களுக்கும் வேண்டிய சாலைகளுக்கும் நேரிடைப் பொருத்தம் இல்லாததால், சில பல சாலைகள் பராமரிப்பில் கஷ்டங்கள் ஏற்பட்டன. சிலபல ஒன்றியங்கள் நிதி வசதி பெற்று இருப்பதால், அவற்றிற்கு அதிகம் நிதி கொடுக்க வேண்டாம் என்றும், ஆளுக்கு 40 காசு ஒதுக்கும் முறையை மாற்றி சாலை பராமரிப்பு செவ்வனே நடைபெறுவதற்கு சென்ற ஆண்டு மாற்றம் செய்யப்பட்டது. மொத்தத்தில் கணக்குப் போட்டு, ஆள் ஒன்றுக்கு 18 காசு தரும் வேறொரு வகையில், மூன்று வகையாகச் சாலைகளைப் பிரித்து, சாதாரணச் சாலைகள், கடற்கரை, கழிமுகப் பகுதிகளில் வண்டல் மண் படிந்த சாலைகள், இன்னும் மலைச் சாலைகள் என்று மூன்று வகையாகப் பிரித்து, சாதாரணச் சாலைக்கு மைலுக்கு 600 ரூபாய் என்றும், கடற்கரை, கழிமுகப் பகுதிகளில் உள்ள சாலைகளுக்கு மைலுக்கு 800 ரூபாய் என்றும், மலைச் சாலைகளுக்கு அதிகச் செலவு ஆகும் என்பதால், அவற்றிற்கு 1,500 ரூபாய் என்றும் பணம் ஒதுக்கும் முறை வகுக்கப்பட்டது. இதன் மூலம் கஷ்டம் நீக்கப்படும் என்று இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சத்து உணவுத் திட்டமும் 10 வட்டாரங்களில் நிறைவேற்றப்படுகிறது. விரைவாக இது நடைபெற வேண்டும் என்று இந்திய அரசு உதவி அளித்திருக்கிறது. இன்னும் குழந்தைகள் காப்பகங்கள் தேவைக்கேற்ப நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 47 வட்டாரங்களில் 1,000 காப்பகங்களில் 1,20,000 குழந்தைகள், 3 முதல் 5 வயது வரை உள்ளவர்கள், பாலூட்டுத் தாய்மார்கள் 120 பேர் என்றும் அந்த முறையில் உணவு அளிக்க 'கேர்' நிறுவனம் மூலம் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 180 அகங்கள் அண்ணல் காந்தி அடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாந் தேதி முதல் செயல்படவிருக்கிறது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சத்து உணவுப் பொருள்களை ஐந்தாண்டுக் காலத்தில், 87,50,000 ரூபாய் செலவில் கொடுத்துதவ 'கேர்' நிறுவனம் இசைந்திருக்கிறது. ஒரு காப்பகத்திற்கு 7,000 ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதில் 6,500 ரூபாயை கேர் நிறுவனம் ஏற்றுக் கொள்ள இசைந்திருக்கிறது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 5

வேலை வாய்ப்பு அளிப்பதில், இந்திய சர்க்காரால் உதவி அளிக்கப்பட்டு, பத்து, பத்து வட்டாரங்கள் என்று மேற்கொள்ளப் பட்டு, 1,000 பேர்களை வேலை வாய்ப்புக்கு எடுத்துக் கொண்டு 100 நாளைக்கு வேலை கொடுக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கருவிகளுக்காக பத்து இலட்சம் ரூபாயும், மற்றவைகளுக்கு 2½ லட்சமும், ஆக 12½ லட்சம் ரூபாய் ஒவ்வொரு இடத்திற்குத் தரும் முறை நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதுவும் போதாது என்ற வகையில் மேற்கொண்டு பல திட்டங்கள் இந்தத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கைக்கு இணங்க, மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் மேற்கொண்டு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி ஒவ்வொரு மாவட்டத் திலும் மேற்கொண்டு 10, 10 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கலாம் என்று நிச்சயித்து, இந்திய அரசால் கொடுப்பது 10, 10 வட்டாரம் என்றும், நாமே செய்துகொள்வது 10, 10 வட்டாரங்கள் என்றும், ஆக 20, 20 வட்டாரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற் கொள்ளலாம் என்ற அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுப்புற வேலைவாய்ப்புத் திட்டம் இந்திய அரசின் எண்ணங் களுக்கு இணங்க, சாலைகளை மேம்படுத்த, ஊராட்சிகளை மேம் படுத்த, குடிநீர் சீரமைப்புக்காக என்று பல்வேறு வகைகளிலும் செயல்படுத்தப்படும்.

சென்ற ஆண்டிலிருந்து, கிராமப் பணிகள், இணைப்புச் சாலை கள், மகப்பேறு நிலையங்கள், தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் கட்டடங்கள் கட்டுவது, குடிநீர் பணிகள் ஆகியவை மேற்கொண்டு வருகிறோம். இந்த வகையில் 94 நகராட்சி மன்றங்களும் பணியாற்றி வருகின்றன. நான்கு நகரியங்களும் அந்த வகையிலேயே பணி புரிகின்றன. அவைகள் 17½ கோடி அளவில் பல்வேறு வரிகள் மூலம் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. எங்கு பார்த்தாலும் நகராட்சி மன்றங்களால் குடி நீர் வசதிகள் விரைவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. குடிநீர் வாரியம் குடிநீர், கழிவு நீர் பாதாளச் சாக்கடை அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. இவையெல்லாம் விளக்கமாகக் குறிப்புக்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குடிசை மாற்று வாரியம் சிறப்பான பணிகளை மேற்கொண்டிருப் பதை பேரவை அறியும். அதற்காக இந்த ஆண்டு மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாற்பது கோடி அளவில் ஏழு ஆண்டுக் காலத்தில் நிறைவேற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. அதற்கு மாண்புமிகு திரு. அரங்கண்ணல் தலைவராக இருந்து பணியாற்றி வருவது பேரவைக்குத் தெரியும்.

நகரங்களின் தேவைகள், மாநகரங்களின் தேவைகள், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முழுப் பொறுப்பும் ஊராட்சி மன்றங்கள் கைகளில் அமைகின்றது. நிறைவேற்ற நிதி வசதிகளைப் பெருக்குவதில் கோளாறுகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்



1971 ஜூலை 5] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பினர்கள் அறிவார்கள். இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புகள் 10, 12 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டன. இந்தப் பத்தாண்டுக் காலத்தில் இவற்றின் பணிகளைக் கண்காணித்து, எப்படி எப்படி சீர்திருத்தி அமைத்தால் செம்மையாக இயங்க முடியும் என்பது எல்லாம் சொல்லப்பட்டு வருகிறது. இந்தப் பத்தாண்டு பனிரெண் டாண்டுக்கால அனுபவத்தில் இன்றைய அமைப்புக்களில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன, எப்படி எப்படி அவற்றைச் சீர்திருத்தி அமைக்கலாம், எப்படிச் செய்தால் நோக்கம் சிறப்புற நிறைவேறும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக் கிறது. ஆங்காங்கு பணிபுரியும் பணியாளர்கள், அதிகாரிகள் இவர்களையெல்லாம் நூற்றுக்கு நூறு பயன்படுத்தி, ஊராட்சிகள் வளர்ச்சி அடையமுடியும் என்ற முறையில் குற்றங்குறைகள் இருந் தால் அவற்றை நீக்கி, சீர்படுத்தி அமைக்கலாம் என்பதை ஆராய நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிற்கு அரசு கோரிக்கை விடுத்திருக் கிறது. நிர்வாகச் சீர்திருத்தக் குழு தாங்கள் ஆராய்ந்திருக்கிற கருத்துக்களைக் கூறுவார்கள். சீர்திருத்தக் குழுவிற்கு எடுத்துக் கூறும் வகையில், அதற்குப் பயன்படும் வகையில், இந்த மன்றத் திலே உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பேரவை உறுப்பினர்கள் பலர் ஊராட்சி ஒன்றியங்களில் அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார் கள். அவர்கள் நடைமுறையில் உள்ள சிக்கல்களை ஆய்ந்து அறிந் திருப்பர். அந்தச் சிக்கல்களை எந்த எந்த வகைகளில் தவிர்க்க லாம், எந்த வகையில் இதன் நல்ல நோக்கத்தை நிறைவேற்றலாம் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்கின்ற சிறந்த பரிந் துரைகளைத் தந்தால், அந்த வகைகளில் அரசு முயற்சிகள் எடுக்கவும், நிர்வாகச் சீர்திருத்தக் குழு அவற்றின் மேல் ஆராய்ந்து தன் கருத்துக்களைச் சொல்லவும் உதவிகரமாக இருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் நிதிப் பற்றாக்குறையைச் சரிப்படுத்துவதற்கும், சாலை வசதிகளைப் பெருக்குவதற்கும் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்தால் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக அமையும்.

மற்றொன்று, ஆசிரியர்களைப் பொறுத்தது. ஆசிரியர்களை மாற்றுவது பற்றி பல கேள்விகளை எழுப்பி வருகிறார்கள். ஆசிரியர் களை மாற்றுகின்ற பல்வேறு கட்டங்கள் மாறி ஒரு கட்டத்திற்கு வந்திருக்கிறது. ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரம் ஒவ்வொரு ஒன்றியத்திலும், அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கின்ற 'அப் பாயிண்ட்மென்ட் கமிட்டி' என்று சொல்லப்படுகின்ற வேலைக்கு அமர்த்தும் குழுவிடம் அளிக்கப்பட்டிருந்தது. அதிலே ஊராட்சி ஒன்றியத் தலைவர், துணையர் போன்றோர் இடம் பெற்றிருந்தார்கள். பிறகு அங்கேயிருக்கின்ற ஒரு உறுப்பினர், ஆக மூன்று பேரும்

சேர்ந்து ஆசிரியர்களை நியமித்தார்கள். பின் அதிலே மாற்றம் செய்கின்ற வகையில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையர், பி. டி. ஓ. என்ற நிலை ஏற்பட்டது. அந்த முறையிலேயும் சில குளறுபடிகள் இருக்கின்றன என்று தெரிவித்த நிலைமையில் அந்தக் குழுவில் ஆர்.டி.ஓ.-வும் சேர்க்கப்பட்டு, ஆர்.டி.ஓ., ஊராட்சி ஒன்றியத் தலைவர், பி. டி. ஓ. ஆகியோர் இடம் பெற்றார்கள். அதற்குப் பிறகு —மூன்றாவது கட்டமாக—சட்டமன்ற உறுப்பினரும் அதிலே இடம் பெற வேண்டுமென்ற முறையில் அவரும் சேர்க்கப்பட்டார். இந்த முறையிலும் தவறுகள் இருக்கின்றன என்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவரின் கருத்தை ஆர். டி. ஓ. கேட்பதில்லை என்றும், மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்கும்போது ஊராட்சி ஒன்றியத்தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஒன்று சேர்ந்துவிடுகிறார்கள் என்றும், ஆர். டி. ஓ. அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதில்லையென்றும் பலர் சொன்னார்கள். இத்தகைய குறைபாடுகளின்றி, எத்தகைய முறையில் அவற்றை திருத்தியமைக்கலாம் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை கூறினால், அவ்விதம் செய்வதற்கு வழிவகை ஏற்படுத்த முடியும். அவற்றையெல்லாம் அனுபவம் உள்ளவர்கள் எடுத்துச் சொல்லவேண்டும். அதன்மூலம் சங்கடங்கள் ஏற்படக்கூடாது.

பொதுவாக ஒரு எண்ணம் உண்டு. ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும், நல்ல ஆசிரியராக இருந்து, தவறு எதுவும் செய்யாமல், சிறந்த பணிகள் ஆற்றுகிறார் என்றால், ஒரு ஊரை விட்டு அந்த ஆசிரியரை மாற்றவேண்டிய அவசியமில்லை என்பது என்னுடைய எண்ணம் ஆகும். தனியார் நடத்துகின்ற துவக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் ஒரு ஆசிரியர் 35 ஆண்டுக் காலம் ஒரு ஊரிலேயே இருந்து அந்தப் பள்ளியிலேயே பணியாற்றுகிறார். தொடர்ந்து ஒரே ஊரிலே தலைமை ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இந்தத் துறையிலே ஆற்றலும், மக்களுடைய அன்பும், செல்வாக்கும், நல்லெண்ணமும் பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வேறு பல துறைகளில் இருப்பதைப் போல் மூன்றாண்டு காலத்திற்கு ஒரு தடவை மாற்றினால் அந்தத் துறை செம்மையாக இருக்கும் என்பதல்ல.

ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் அனுபவம், திறமையைப் பொறுத்தும் சில மாறுதல்கள் அமைகின்றன. மற்றொன்று, பதவி உயர்வின் காரணமாக ஆசிரியர் ஒருவரை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மூன்றாவது, கணவன், மனைவி இருவரும் தனித்தனியாக இருக்கின்ற நிலையில் ஒன்று சேர்க்கவேண்டும் என்ற முயற்சி நடக்கும்போது, அதற்காக வென்று மாறுதல் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மற்றொன்று ஒரு ஆசிரியர் அங்கேயிருப்பதன் காரணமாக அங்கு உள்ள பள்ளி, ஊர் ஒற்றுமைக்கு, மாணவர்களின் நலனுக்கு உகந்த தல்ல என்ற நிலைமையில் அவரை மாற்றவேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. இந்த நான்கு முறைகளையும் கடைப்பிடிக்கின்ற





காரணத்தால் அதிகத் தகராறுகள் ஏற்படுவதில்லை. இன்னும் இந்தத் துறையிலே அனுபவம் பெற்றவர்கள் யோசனை சொன்னால் அதை அரசு ஆராய்ந்து பார்த்து தக்க ஒரு முடிவை எடுப்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்ற பரிந்துரைகள் இந்தத் துறையை வளப்படுத்தவும், சீர்படுத்தவும், செம்மைப்படுத்தவும் பயன்படும் என்ற நோக்கத்தில் அவற்றை வழங்குமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஊராட்சி நிறுவனங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பித்து பேசுகின்றபோது, பழைய காலத்திலிருந்தே, ஊராட்சி அமைக்கின்ற முறையிலே, ஊர் மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களுக்கென்று ஒரு ஆட்சியை அமைத்து தங்கள் கிராமத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கின்ற முறையில் அவற்றை உருவாக்கினார்கள் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில் பார்ப்போமானால், ஊரிலே இருக்கின்ற மக்கள் தங்களுக்குப் பிடித்தமானவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, அவரின் தலைமையில் கிராம ஆட்சி நடந்து வந்திருக்கிறது. அவ்வாறு அமைக்கப்பட்டு நடைபெறுகின்ற கிராம வளர்ச்சித் திட்டமானது இன்றைய தினம் பூரண சுதந்திரத்தோடு செயல்படவேண்டுமென்று சகலரும் விரும்புகிறார்கள்.

இன்றைய தினம் கிராம வளர்ச்சித் துறையாகிய பஞ்சாயத்து நிர்வாகமும் ரெவினியூ நிர்வாகமும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒன்றோடொன்று கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டு சுதந்திரமாக செயல்படுவது தடைபட்டு வருகிறது என்பதை அனுபவ ரீதியில் பார்க்க முடிகிறது. ஆகவே கிராம வளர்ச்சித் துறை தனியாகச் செயல்படுகின்ற முறையில் நம்முடைய அரசாங்கம் தீர ஆலோசனை செய்து அந்தத் துறையைத் தனித்து இயங்குகின்ற முறையில் ஏற்படுத்துவது மிக உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்களை மாற்றுகின்ற விஷயத்தில் அந்தக் கமிட்டி—அட்ஹாக் கமிட்டிக்கு தலைவராக ஆர்.டி.ஓ. இருக்கிறார்கள் என்று. அவர் சொல்லுகின்றபடி தான் நடந்து கொள்ளவேண்டுமென்கிற நிலைமை காரணமாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியத்தின் தலைவருக்கும், நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்ற பி. டி. ஓ.-க்கும் இன்றைய தினம் மாறுபட்ட கருத்து இருப்பதன் காரணமாக, சில மாற்றங்களில் தவறுகள் ஏற்படுகின்றன. இவ்விதம் ஆர்.டி.ஓ. தன்னுடைய இஷ்டத்திற்குத்தான் மாற்றுவேன் என்று குறுக்கிடுவதன் காரணமாக பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மாவட்டக் கலெக்டர் எல்லாவற்றிற்கும் அதிபதியாக இருந்து கொண்டிருக்கிறார். ஆகவே ரெவினியூ நிர்வாகம் தனியாக இருக்க வேண்டும்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1971 ஜூலை 5

தஞ்சையிலே ஒரு விவகாரம் நடந்து கொண்டிருக்கிறது. ரெவினியூ இலாகாவில் இருக்கின்ற சிப்பந்திகளுக்கும் பஞ்சாயத்திலே இருக்கின்ற சிப்பந்திகளுக்கும் சில விஷயமாக ஒருவரை ஒருவர் எதிர்த்து இன்றைய தினம் 'அஜிட்டேஷன்' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கண்டன ஊர்வலம், பொதுக்கூட்டம் போடுகிறார்கள். இம்மாதிரியான காரியங்கள் செய்வதன் மூலமாக இன்றைய தினம் அரசாங்கத்தால் செய்யவேண்டிய பல நல்ல காரியங்கள் செய்யமுடியாமல் தடைப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் தனித்து இயங்குவதன் மூலமாகத்தான் அந்தத் துறையைச் சீர்படுத்த முடியும். காவல் துறையைத் தவிர, மற்ற துறைகளிலே எடுக்கப்படுகின்ற ஒரு முடிவை நிறைவேற்றுகின்ற அமைப்பாக பஞ்சாயத்து நிர்வாகம் அமைந்திருக்கிறது. இவ்வாறு அபிவிருத்தி வேலைகளைச் செய்கின்ற ஒரு துறையைத் தனித்து, சுதந்திரமாக இயங்கச் செய்வதுதான் கிராம வளர்ச்சிக்கு ஏற்றதாக அமையும்.

குடிதண்ணீர் வழங்குவது சம்பந்தமாக சார்புந்தப்பட்ட நிர்வாகங்களுக்கு போதுமான அதிகாரம் இல்லை. அதுமாத்திரமல்ல, குடிநீர் வழங்குகிற முறையில் அவர்களிடம் நிதி வசதி போதுமானதாக இல்லை. இன்றைய தினம் கிராமங்களுக்கும், கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கும்தான் அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும். அவர்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். கிராமப்புற மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் நாட்டின் எல்லாப் பகுதியினரும் ஆரோக்கியமாக வாழமுடியும். அந்த முறையில் பார்க்கும்போது 'குடிநீர் வழங்கும் திட்டம்' என்று சொல்லி நாம் இன்றைய தினம் செய்கின்ற வசதிகள் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஓவர் ஹெட் டாங்கு மூலம் மக்களுக்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கின்ற முறையில், நிறைய அவர்களுக்கு நிதி வசதி செய்து தரவேண்டும். அது போல் சாலைகளை எடுத்துக் கொண்டாலும் கூட, ஒரு நிலத்தைச் சாலை போடுவதற்கு எடுக்க வேண்டுமென்றால், நிலச் சொந்தக்காரர்கள் ஆட்சேபிக்கிறார்கள். அதையும் மீறி எடுத்துத் தருவதற்கு ரெவினியூ அதிகாரிகளிடம் கேட்டால் அவர்கள் இதற்கு ஒத்துழைப்பதில்லை. அந்த நிலையிலே மக்களுக்கு வசதி செய்ய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அதிகாரம் இல்லாத வகையில் பஞ்சாயத்து அமைகிறது. ஆகவே அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன் சகல சாலைகளையும் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதிகமான நிதிவசதியையும் செய்துதர வேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்துச் சாலைகளைப் பராமரிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்வது மிகமிக உதவிகரமாக இருக்க முடியும். (மணி அடிக்கப்பட்டது) இத்துடன் என் உரையை நான் நிறுத்திக்கொள்கிறேன்.



1971 ஜூலை 5]

திரு. மு. இரத்தினசபாபதி: சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்துறை மானியத்தின் மீது கருத்துத் தெரிவிக்க அனுமதி அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

இன்று ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அமைப்பாக இருந்து வருகின்றன. இப்போதுள்ள அமைப்பு மக்களால் முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டு கொண்டுவரப்பட்டதல்ல. 1950-ம் வருஷச் சட்டப்படியும், 1958-ம் வருஷத்திய கிராமப் பஞ்சாயத்து சட்டப்படியும் இவைகள் ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட வேண்டும் என்பதாக அரசினால் மக்களிடத்து திணிக்கப்பட்டதே தவிர மக்கள் அப்போது இதை பேரார்வத்தோடு வரவேற்கவில்லை. ஆனால் நாளுக்கு நாள் இந்த அரசு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மக்களுக்குப் பலப்பல வசதிகளைச் செய்து கொடுக்க முற்பட்டவுடன் இதன் அவசியத்தையும், நன்மையையும் உணர்ந்து மக்கள் இப்போது இதற்கு பேராதரவு கொடுக்கிறார்கள். ஆனால் அளவுக்கு மீறிய தேவைகளை அவர்கள் கூற முற்பட்டாலும், உடனடியாக செய்து கொடுக்கக்கூடிய காரியங்களை அவர்களுக்குச் செய்துதர அரசும் பலப்பலவகையில் முன்வந்தாகவேண்டும்.

இன்றைக்கு முக்கியமாக சாலை வசதிகள், குடிதண்ணீர் திட்ட வசதி, ஆரம்பப்பள்ளி வசதி ஆகிய முக்கிய வசதிகளை நாம் இந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செய்து கொடுக்கிறோம். இதற்காக பல முறைகளில் அரசு பண உதவி அளித்தாலும்—எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஈக்வலாகத்தான் கொடுக்கிறார்கள். ஆனால் பரப்பளவு, ஜனத்தொகை ஆகியவற்றில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் ஈக்வலாக இருக்கிறதா என்றால் இல்லை. மக்கள் தொகை அதிகமாகவும், பரப்பளவு குறைவாகவும், வருமானம் அதிகமாகவும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. மக்கள் தொகை குறைவாக, பரப்பளவு அதிகமாக உள்ள ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் வருமானக் குறைவினால் சாலைவசதிகளை சரியான முறையில் கவனிக்க முடியாத நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன.

அதைப்போல குடிப்பதற்கு தண்ணீர் வசதி செய்துகொடுக்க முடியாத நிலையில் கூட இவை இருக்கின்றன. இன்று அமைச்சர் அவர்கள் கூறுகிற நேரத்தில் யுனிசெப் உதவியுடன் சுமார் 8,850 குழாய்க்கிணறுகளை கிராமங்கள்தோறும் ஏற்படுத்தி குடிதண்ணீர் வசதி அளிக்கும் திட்டம் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று கூறினார்கள். உண்மையில் இது கிராம மக்களுக்கு நல்ல திட்டமாக இருந்தாலும்—புத்தூர், விளாத்திகுளம், ஆகிய பகுதிகளில் கீழுள்ள நீர் மோசமாக இருக்கிறது. எந்த இடத்தில் கிணறுகள் தோண்டினாலும் மக்கள் குடிப்பதற்கு வசதியற்ற உப்புத் தண்ணீர், கசப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. ஆகவே ஐந்து

[திரு. மு. இரத்தினசபாபதி] [1971 ஜூலை 5

மைல், பத்துமைல் தள்ளி வைப்பாற்றின் கரையில் இருந்துதான் பைப்மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்தாகவேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தின் மூலம் இந்தப் பகுதிகளுக்கு பயன் கிடைக்காத காரணத்தினால் வேறு வகையில் இந்த இடத்திற்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் சாலை வசதிகளை எடுத்துக்கொண்டால்—விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியப்பகுதி 200 மைல் சுற்றளவு கொண்டதாக இருக்கிறது. 51 ஊராட்சிகள் இருக்கின்றன. கிராம மக்களுக்கு ஊருக்கு ஊர் கூடச் சாலை போட்டுத்தர முடியாத நிலை இருக்கிறது. 12 ஆண்டுகளாக இந்தக் குறை இருந்தும் கேட்டால் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நிலங்கள்—அவர்கள் இனமாகச் சாலை போடக் கொடுப்பதற்கு முன்வர மறுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒருசில நிலப்பிரபுக்கள் கையில் இப்படி நிலம் அகப்பட்டிருப்பதால் சாலை போட்டுத்தருவதற்குத் தேவையான நிலத்தை கட்டாய ஆர்ஜித முறையில் எடுத்து ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் பத்து கிராமங்கள் சாலை வசதியின்றி இருக்கின்றன. புத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் பல கிராமங்கள் அப்படி இருக்கின்றன. (மணி அடிக்கப்பட்டது) ஆகவே இப்படி ஊராட்சி ஒன்றியங்களினால் மக்களுக்கு நல்ல பயன் விளையக்கூடிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAN : Mr. Speaker, Sir in this vast subject I am confining my speech to the Slum Improvement in the City of Madras. Sir, before 1967, I think 6,000 plots have been developed by the Government and given either on lease or on hire purchase system. Since then, the policy has been considerably changed and house construction or tenement construction has been started. Unfortunately, according to the report given here only about 2,100 tenements have been constructed in this vast city since 1967 where there are more than 9 lakhs of people living in slums according to the report submitted by the Collector of Madras. Now, Sir, I am very happy that this Government are taking some efforts to solve this problem. But many mistakes are creeping in. I have represented to the Slum Clearance Board. Identification photos are being taken. Many people who are not living in the slums creep into these photos.

Of course, there is another method which I can suggest to the Government. When the Housing Board was operating and when the Housing Board was about to improve the slums, they have given identity cards to those people who have been living in those slums. These identity cards are still there. Apart from these identity cards, ration cards are also held by the people who are living in the slums. If those ration cards are taken into account,



1971 ஜூலை 5] [Thiru K. M. Subramanian]

I think we can get the right people, correct people who are living in the slums, instead of taking photos of unsocial elements—I do not mean the Board getting some people squeezed into those photos.

Sir, I am very happy to note that 50 per cent of the entire amount due for this purpose is given as loan by the Central Government and 37-1/2 per cent is given as grant. Only 12-1/2 per cent is spent by the State Government but they have got to do a lot of work. Now, instead of each estimate being sent and then getting money, Central Government have agreed to give block grants and block loans. So, if we spend about Rs. 4,000 on a slum tenement, actually 50 per cent grant is given to the slum-dweller as subsidy. But actually the selling price to the slum dweller should be 50 per cent of the cost price because the Central Government is giving 50 per cent as loan as it can be passed on as a loan to the slum dweller but the 50 per cent which is given as grant should ultimately go to the slum-dweller as subsidy.

In this connection, I wish to point out that even in England after the Second World War when there was a great rush for houses, a sum of £100 was given as a sort of subsidy to everyone who wanted to build houses or build flush out or bath room if they did not have money. As this is a most urgent matter, I hope this Government also will give serious attention to that aspect of the matter. I am sure the Slum Clearance Board also will give preference to the Slum dwellers on the production of identity cards in regard to this matter. Nobody would object to the extra tenements being given to other deserving people.

In the Madras City there are a large number of industrial houses and I will speak about it when the Industries Demand comes up for discussion. But, would suggest that if we deduct houses built for industrial workers, I think there is ample scope for housing the rest of the population. In this connection I have to point out that the previous housing body, the City Improvement Trust catered first to the lower income groups but gradually they gave attention to the Middle Income Groups and then to the Higher Income Groups. I am sure the new body and the Government which talks about Socialism will give their entire attention at least for the first 5 or 10 years to the housing of the slum-dwellers. There are also certain classes of people who are living in houses having 10 portions and they are as bad as slum-dwellers and they must also be provided with such tenements after providing for the slum-dwellers.

Thank you, Sir.

(திரு. நா. வீராசாமி தலைமை)

* திரு. கே. ரங்கநாதன் : தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கே. ரங்கநாதன்] [1971 ஜூலை 5

கோவை நகரில் குடிதண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறது. ஒருநாள் விட்டு ஒரு நாளைக்குத்தான் தண்ணீர் கொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது. அந்த அவல நிலையைப் போக்குகின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பல ஆண்டுக் காலமாகவே நாங்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துக் கொண்டிருக்கிறோம். சிறுவாணி அணை கட்டுவதன் மூலமாக குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆகவே, சிறுவாணி அணை கட்டும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணி அணை கட்டுவதற்குக் காலதாமதமாகிறது. கேரள அரசாங்கத்தால். கோவை நகரிலே வாழ்கின்ற மக்களில் 100-க்கு 20 பேர் கேரளாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் காட்டியாவது அந்த அணை கட்டுவதற்கு அனுமதி பெற்று, கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை நகரமைப்புச் சட்டம் சரிவர அமல் படுத்தப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக எங்கே பார்த்தாலும் குடிசைகளும், கோயில்களும், கடைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. என்னுடைய தொகுதியில் இருக்கிற வட்டாரங்கள் பதினெட்டில் கிட்டத்தட்ட 9 வட்டாரங்களில் சாலை வசதிகள் நல்லபடியாக இல்லை. அதற்குக் காரணம் கேட்டால், இன்னும் லே-அவுட் சாங்ஷன் ஆகவில்லை என்று கோவை நகராட்சி சொல்கிறது. இருபதாண்டுக் காலமாக அந்தப் பகுதிகளில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து கோவை நகராட்சி சாலை, சாக்கடை, மின்சார விளக்கு போன்ற காரியங்களுக்காக வரிகளை வசூலித்து வருகிறது. ஆனால் இந்த வசதிகள் எல்லாம் அந்தப் பகுதிகளில் செய்து கொடுக்கவில்லை. கேட்டால், அரசாங்கம்தான் செய்ய வேண்டும், லே-அவுட் சாங்ஷன் ஆகவில்லை என்கிறார்கள். கோவை போன்ற நல்லதொரு நகரத்தில் இப்படிப்பட்ட பகுதிகள் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இதிலே கவனம்செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாப்பநாயக்கன்பாளையம், காந்திபுரம் போன்ற பகுதிகளில் சாலை வசதிகளும், சாக்கடை வசதிகளும் இல்லை. இருபது ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினை நம்முடைய அரசு வந்த பிறகாவது தீர்க்கப்படும் என்று அங்குள்ள மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 5] [திரு. கே. ரங்கநாதன்]

நகரமைப்புத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும். எங்கே பார்த்தாலும் குடிசைகள் போடப்படுகின்றன. எங்கே பார்த்தாலும் குடிசைகளும், கோயில்களும், கடைகளுமாக சாலைகள் எல்லாம் இருந்து வருகின்றன. ஆகவே, நகர அமைப்புத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இந்தச் சபை முன்னால் வைத்திருக்கின்ற மானியங்களின்மீது அளிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் எல்லாம் ஜனங்களுடன் மிக நெருக்கமான தொடர்புகள் கொண்டு, அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்கக்கூடிய அமைப்புகள் என்று சொல்லலாம். அதிலே அவரவர்கள் செய்ய வேண்டிய பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற வேண்டும். அதற்குத் தக்க நிதிவசதிகள் இருந்தால் அந்தக் காரியங்களைச் செவ்வனே நடத்த முடியும். நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற பல பஞ்சாயத்து அமைப்புகளை எடுத்துக்கொண்டால், நிலப்பரப்பு விஸ்தாரமாக, ஜனத்தொகை குறைவாக இருக்கிற பல பகுதிகளாக அமைந்திருக்கின்றன. ஜனத்தொகையையும் ஒரு அளவுக்கு கட்டுப்படுத்தி, இதைப் புனர்பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துச் சட்டம் 1958-ல் ஏற்பட்டது. ஒவ்வொரு சட்டமும் உருவாக்கப்பட்டு செயலுக்கு வந்த பின்னர், 10 வருடங்களுக்குப் பின்னர் அதைப் புனர்பரிசீலனை செய்வது மிகவும் அவசியம். குறிப்பாக, பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்டவரை ஒவ்வொரு நாளும் ஜனத்தொகை வளர்ச்சி, ஜனங்களின் தேவை இவைகளெல்லாம் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. ஜனங்களுக்கு வேண்டிய சாலை வசதி, சாக்கடை வசதி, விளக்கு வசதி, தண்ணீர் வசதி, சுகாதார வசதி போன்ற நல்ல காரியங்கள் தேவைப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆகவே, அந்தக் காரணத்தால் நிலைமைகளை அனுசரித்து, அந்தச் சட்டத்தை புனர்பரிசீலனை செய்வதும், மாற்றுவதும், திருத்துவதும் அவசியமாகிறது.

அடுத்தபடியாக, பல பஞ்சாயத்துக்கள் கிராமப் பஞ்சாயத்திலிருந்து நகரப் பஞ்சாயத்தாக மாறியிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலுள்ள வனவாசி என்கிற பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்தாக மாறிய காரணத்தால், அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு பல வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பஞ்சாயத்தின் சிப்பந்திகளுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சௌகரியங்களைச் செய்துகொடுக்க போதுமான நிதிவசதி இல்லை. மீண்டும் கிராமப் பஞ்சாயத்தாக மாற்ற இருக்கிறார்கள், கிராமப் பஞ்சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக

[திரு. எம். சுரேந்திரன்] [1971 ஜூலை 5

மாற்ற வேண்டுமென்றால், அதற்கான நிதிவசதியை ஒதுக்கித் தர வேண்டும். அதையும் விரைவாக ஒதுக்கித் தர வேண்டும். இது போன்ற பல பஞ்சாயத்துக்கள் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன.

அடுத்தபடியாக, கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கும் சரி, நகரங்களில் இருக்கின்றவர்களுக்கும் சரி, நல்ல குடிதண்ணீர் அளிக்கப் போகிறோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறோம். குடிதண்ணீர் என்பது எளிதான முறையில் கிடைக்க வேண்டும். மேலும் அதை இலவசமாகவே கொடுக்க வேண்டுமென்றால், அதில் தவறு இல்லை. மனிதனை ஆரோக்கியமாக வைத்திருப்பது அரசாங்கத்தின் கடமையாகும். குடிதண்ணீருக்கு விலை கொடுப்பதே அவசியமில்லை. குடிதண்ணீர் வழங்குவதற்காக அதிகமான கட்டணத்தை வசூலிக்கின்ற நிலைமையும் இருக்கிறது. ஒன்றை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் நகரத்தைப் பொறுத்தவரையில் குடிநீருக்காக என்று இப்பொழுது கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மூன்றுலே இலவசமாக இருந்ததை இப்பொழுது குறைந்தபட்சம் ஐந்து ரூபாய் செலுத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இலவசமாகக் கொடுத்துவந்த அளவையும் உயர்த்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு படியாகப் பார்க்கிறபோது ஐந்து ஆறு மடங்கு இப்பொழுது உயர்த்தியிருக்கிறார்கள் என்ற புகார் எழுப்பப்பட்டு அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. காரணம் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள், 28 லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறோம், அந்தக் கடனைக் கட்டுவதற்காகப் பணம் வேண்டியிருக்கிறது என்று வாதம் செய்கிறார்கள். கடன் வாங்கி மூன்று வருடங்கள் கழித்துத்தான் அதைத் திருப்பி அளிக்கவேண்டும். அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அது ஜனங்களுக்குப் பயன்பட்ட பிறகுதான் கட்டணம் வாங்க வேண்டுமே தவிர திடீரென்று 4, 5 மடங்கு என்ற அளவிலே வாங்குவது சரியானதல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஜலகண்டபுரம் என்ற பகுதி இருக்கிறது. அங்கே ஜனத்தொகை மிகுதியாக இருக்கிறது. மேட்டூரிலிருந்து சேலத்திற்குச் செல்கின்ற குடிநீரின் ஒரு பகுதி அந்தப் பகுதிக்குச் செல்கிறது. அது போதவில்லை. அதிகப்படியாக குடிநீர் வேண்டுமென்று அங்கே எவ்வளவோ நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவுச் செலவுத் திட்டத்திலே பல காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் குறைவாக இருக்கிறது. பல பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டால் குக்கிராமங்களுக்கு எல்லாம் ரோடுகள் போடவேண்டுமென்ற உணர்வும் முயற்சிகளும் மக்களுடையே அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. தலைக்கு இவ்வளவு என்ற



1971 ஜூலை 5] [திரு. எம். சுரேந்திரன்]

கணக்குப்படி இவர்கள் கொடுக்கின்ற பணம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்ற குறையும் இருக்கிறது. அதையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பாலமலை என்ற பகுதி இருக்கிறது. அங்கே ரோடுகளே இல்லாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் ரோடு போட வேண்டுமென்றால் ஒரு மைலுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்ற நிலை இருக்கிறது. எனவே அந்தப் பஞ்சாயத்துக்களால் அதைச் செய்ய முடியாது. எனவே அரசாங்கம் தனியாக இதிலே கவனம் செலுத்தி ரோடு போட்டுக் கொடுக்கவேண்டும்.

பாதைகள் போடுகின்ற நேரத்திலே ஒவ்வொரு கிராமத்திற்கும் பஸ் வரவேண்டுமென்ற ஆவலோடு மக்கள் இருக்கிறார்கள். பஸ் முதலாளிகளும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பாதைகள் சரிவரப் பராமரிக்கப்படுவதில்லை. பாதைகளைச் சரிவரச் செப்பனிட்டுக் கொள்ள பஞ்சாயத்து யூனியன்களிடம் பணம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பஸ் போவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற ரோடுகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டோ அல்லது ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக்கொண்டோ செப்பனிட்டுச் சரிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ந. நாச்சியப்பன்: தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டுக்கென சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி வளர்ச்சி அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளராக இல்லாமல் தனியாக ஊராட்சி வளர்ச்சி அலுவலர் என்று மாவட்டத்திற்குத் தனியாக ஒருவரை நியமித்து அவர் நிர்வாகத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களையும் ஊராட்சிகளையும் செயல்படச் செய்தால் நல்லது என்பதால் அந்த வகையிலே நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியாக உள்ள துவக்கப் பள்ளிகளுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு விரைவுத் திட்டம் மேற்கொண்டுள்ளதை வரவேற்கிறேன். அரசு முயற்சி எடுத்து அவற்றை விரைவிலே நிறைவேற்றிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கராபுரம் தொகுதியில் கல்வராயன் மலை என்ற பகுதி இருக்கிறது. ஜாகிர்தார்கள் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். வழக்கு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது, வழக்கு முடிந்தவுடன் ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்துவதைக் கவனிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சங்கராபுரம் பகுதியுடன் சேர்ந்த பகுதியாகும். ஏதேதோ காரணங்களைச் சொல்லி அவர்கள் வழக்குகளைத் தொடர்ந்துகொண்டு இருக்கின்ற காரணத்திலே

[திரு. ந. நாச்சியப்பன்] [1971 ஜூலை 5

அங்கேயிருக்கின்ற ஏறத்தாழ 50 ஆயிரம் மக்கள் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து எந்தவிதமான பலனையும் அடையமுடியாமல் மோசமான நிலைமையிலே இருக்கிறார்கள். எனவே அந்த மக்கள் பயனடைய ஊராட்சி ஒன்றியத்தை விரைவில் ஏற்படுத்த அரசு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியங்களிலே இருக்கின்ற கால்நடை மருத்துவ மனைகள், இன்னும் மற்ற மருத்துவ மனைகளில் மருந்துகள் கிடைக்காமல் மக்கள் துன்புறுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே ஊராட்சி ஒன்றியத்திலே வருகின்ற வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை வைத்திய வசதிக்கு ஒதுக்க வேண்டுமென்ற திட்டத்தை மேற்கொள்ளவேண்டும்.

தமிழகத்திலே 36,000 சிறிய நீர்ப்பாசன ஏரிகள் இருக்கின்றன. அவற்றிலே 24 ஆயிரம் ஊராட்சி ஒன்றியங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஏரிகளிலே மீன் வளர்ப்பதை அரசின் மூலமாகவோ அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவோ மேற்கொண்டால் ஒன்றரை கோடி ரூபாய் முதல் 2 கோடி ரூபாய் வரையில் வருமானம் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூகக் கல்வி நிலையங்கள் என்ற பெயரால் 2 ஆயிரம் 3 ஆயிரம் ரூபாய் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்படுகிறது. எந்த நோக்கத்திற்காகக் குறிப்பிட்டு ஒதுக்கப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படாத முறையில் சில பத்திரிகைகளை மட்டும் வாங்கி ஒருவர், இருவர் படிப்பதற்காக என்றே நடத்தப்படுகின்றது. அதேபோன்று மகளிர் மன்றங்கள் என்ற பெயரால் இருக்கக்கூடியவற்றில் உள்ள தையல் மெஷின்கள் செயல்படாமல் இருப்பதையும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட திட்டங்களுக்குப் பணம் ஒதுக்காமல் நல்ல வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே வசூலிக்கவேண்டிய வரிகளைக் கிராம அதிகாரிகள் வசூலிக்கவேண்டுமென்ற முறையில் அரசாங்கம் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறது. ஊராட்சி மன்றத்தில் பார்ட் டைம் கிளார்க் நியமித்து இருக்கிறார்கள். அத்தனை கிராமங்களுக்கும் ஒரே தொகையை கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கிறார்கள். உதாரணமாக எடுத்துக்கொண்டால் 200 ரூபாய் 300 ரூபாய் வரி வசூலிக்கப்படுகின்ற கிராமங்களில்கூட அரசின் சார்பிலே 500 ரூபாய் ஊதிய உயர்வு கொடுக்கிறோம். இதை மாற்றி ஊராட்சி மன்றத்திற்கு ஒரு எழுத்தர் என்ற முறையிலே நியமித்துக்கொள்ள அனுமதி கொடுத்து அதற்காகச் சர்க்கார் 50 ரூபாய் அல்லது 60 ரூபாய் என்ற அளவிலே மானியம் வழங்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்த எழுத்தரே நல்ல முறையிலே வரிகளை விரைவாக வசூலிக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 5] [திரு. ந. நாச்சியப்பன்]

சில ஊராட்சி மன்றங்கள் இரண்டு மூன்று ஊர்களைக் கொண்ட ஊராட்சி மன்றமாக இருக்கிறது. இரண்டு மூன்று மைல்கள் தூரம் உள்ள கிராமங்கள் எல்லாம் ஊராட்சி மன்றத்திலே இருக்கிறது. அப்படியில்லாமல் 500 மக்களுக்கு மேலே உள்ள கிராமமாக இருந்தால் அதைப் பிரித்துத் தனி ஊராட்சி மன்றமாக ஏற்படுத்த வேண்டும். இதில் சில சட்டப் பிரச்னைகள் இடையூறாக இருந்தாலும் அதையெல்லாம் மாற்றியமைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியக்கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையிலே கால்நடை வளர்ச்சித் துறை அண்மையிலே திருத்தியமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் அந்தப் பணி விரிவாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்திலே ஆறு ஏழு கிளைநிலையங்களைத் துவக்க அரசு அனுமதி அளித்திருக்கிறது. ஆனால் ஒருசில ஒன்றியங்களில் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்களாக இருக்கிறவர்கள் சில செல்வாக்குப் பெற்றவர்கள் குறிப்பிட்ட வட்டார மையப் பகுதிகளைத் தேர்ந்தெடுக்காமல் அவர் அவர்களுக்கு வேண்டியவர்களுடைய இடங்களைத் தேர்ந்தெடுத்து கிளை நிலையங்கள் துவக்கியுள்ளார்கள். இதனால் இத்துறை எதற்காகத் திருத்தியமைக்கப்பட்டதோ அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட முடியாமல் போகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல் ஊராட்சி ஒன்றிய வரிகளை வசூல்செய்வதற்குக் கிராமத் தலைவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த வரிகள் சரியாக வசூலிக்கப்படவில்லை. இதைக் கண்காணிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இப்போது நம்முடைய அரசு ஊராட்சி ஒன்றியங்களில் கடன்கள், ஊராட்சி ஒன்றிய வரிகள், நிர்வாகப் பணிகளைப் பார்ப்பதற்காக டெபுடி தாசில்தார் தகுதியில் 100 பேர்களை நியமித்திருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. என்றாலும் அந்த எண்ணிக்கையை அதிகரித்து எல்லா வட்டாரங்களுக்கும் அப்படிப்பட்ட துணை தாசில்தார்களை நியமிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்நல ஊழியர்கள் குறிப்பிட்டு, வரையறுக்கப்படாமல் தங்கள் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஊர்நல ஊழியர்கள் இன்னின்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்று வரையறுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு உதவித் திட்டத்தின் அடிப்படையில் கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம் பரவலாகச் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து வட்டாரங்களைத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அதிலும் சில மாவட்டங்களில் சிறப்புத்

திட்டங்கள் இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தை அமல் செய்ய முடியாத நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதில் மொத்தத்தில் பத்து வட்டாரங்களை அந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டாலும் பின்னடைந்திருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு பேசிய உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய பின்தங்கிய கிராமச் சாலைகள் வளர்ச்சி பெறாமல் இருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிபட்ட வசதிகள் பெறாத ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இந்த கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தை அமல்படுத்தினால் அந்தப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த உதவிகரமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்வதோடு சிறப்புத் திட்டம் இருக்கும் பகுதிகளிலும் கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தைப் பின்தங்கியிருக்கும் வட்டாரங்களுக்குத் தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிக அளவு ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியத்திற்கும், குறைந்த அளவு ஊராட்சிகளைக் கொண்ட ஒன்றியத்திற்கும் ஒரே அளவாகத்தான் இருக்கிறது. 60 ஊராட்சிகளுக்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் பணியாளர்களின் குறைவு காரணமாகப் பணிகளைத் துரிதமாகச் செய்ய முடியாத நிலைமை இருப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலம் தொகுதியில் நல்லாடை என்ற பகுதியில் ஆர்டிஷியன் வெல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வரும் தண்ணீர் ஏராளமாக வீணாகிக் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள் 50 ஏக்கர் வரை பயிரிட்டிருக்கிறார்கள். ஊராட்சிகளில் குடிதண்ணீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணத்தில் குடிநீர் வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நல்லாடையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஆர்டிஷியன் வெல்லிலிருந்து ஐந்தாறு கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதோடு பாசனத்திற்கும் பயன்படுத்த முடியும் என்ற காரணத்தால் அதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தரங்கம்பாடி கடற்கரைப் பகுதி. கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் குடிதண்ணீர்த் திட்டம் வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து வந்திருந்தும் அந்தத் திட்டத்தை செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம் மிக அதிகச் செலவாவதன் காரணமாகச் செயல்படுத்த முடியாமல் இருப்பதை அரசு அனுதாபத்துடன் கவனித்துக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையால் வாடிக்கொண்டிருக்கும் மக்களுக்குத் தண்ணீர் வசதி உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியத்தை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

1967-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் உள்ளாட்சித் துறையில் ஈடுபட வேண்டுமெனபதற்காகவும், பொதுப் பணியில் ஈடுபட்டுக் கிராம முன்னேற்றத்தை அதிகமாக்க வேண்டுமென்பதற்காகவும் சேரணியைத் துவக்கினார்கள். இந்தச் சேரணியால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனையால் கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் 1,119 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1,292 ஏரிகள், கால்வாய்கள் தூர் எடுக்கப்பட்டுள்ளன. 823 இணைப்புச் சாலைகள் போடப்பட்டுள்ளன. 1,500 ஏக்கர் நிலத்திற்குப் பூச்சி மருந்துகள் அடிக்கப்பட்டுள்ளன. 500 ஏக்கர்களில் கழனி திருத்தி விளைநிலம் ஆக்கப்பட்டுள்ளன. ஆகவே, அண்ணா அவர்கள் எப்படி ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கி இந்த நாட்டிலே நல்ல முன்னேற்றத்தை, நல்ல தொண்டர்களை உருவாக்கித் தந்தார்களோ அதே போல் மத்திய அரசு கிராமவேலை வாய்ப்பு விரைவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி ஊதியத்தோடு நல்ல தொண்டர்களை இந்த நாட்டுக்கு உருவாக்க இருக்கிறது.

இந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமக்கே உரிய பாணியில், தமக்கே உரிய ஆற்றலில், இந்த மாநிலத்தின் நிதியிலிருந்து ஒருகோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருப்பது கிராமங்களில் நம்முடைய முதலமைச்சருக்கு எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறது என்பதையும், கிராமங்களில் வேலையற்றோர் நிலையைப் போக்க எந்த அளவுக்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் காட்டுவதாக அமைந்திருப்பதால் அது பாராட்டுக்குரியதாகும்.

நம்முடைய உள்ளாட்சித் துறை நல்ல முறையில் சீர்படுத்தப்படவேண்டுமென்பது நீண்ட நாளைய கோரிக்கை என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகு உள்ளாட்சித் துறை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று இந்த நாட்டில் ஏராளமான குரல்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இந்த அமைச்சரவை உள்ளாட்சித் துறையை நிச்சயமாகச் சீர்படுத்த வேண்டும். ஊழல்கள் களையப்பட்டுக் குறை பாடுகள் போக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சட்டமன்ற அங்கத்தினர்கள் ஆணித்தரமாக எடுத்து வைத்தார்கள் என்பதை இந்த மாமன்றம் மறந்திருக்க முடியாது.

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் அவர்களும் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள். சங்க காலத்தில் சோழ

நாடு உள்ளாட்சித் துறையில் சீரோடும், சிறப்போடும் எந்த அளவுக்கு இருந்ததோ, எந்த அளவுக்கு ஊர் நன்மைக்காக அரும்பாடு பட்டதோ அதை மனதில்கொண்டு சோழ நாட்டின் இரு கண்களாக விளங்கும் கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும் உள்ளாட்சிச் சட்டத்தை திருத்தி அந்தத் துறையைச் சீர்படுத்த பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருப்பதற்காகப் பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் நான் ஒரு தாழ்மையான வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், நாவலர் அவர்களிடத்திலும் விடுக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் அவர்களும், குறிப்பிட்ட துறையில் பங்கேற்றிருக்கின்ற செயலாளரும் மற்ற அதிகாரிகளும் கருத்தில் கொள்ள வேண்டுமென்பதற்காக நான் சில சான்றுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் துறைச் சட்டத்தை ஒருமுறை புரட்டிப் பார்த்தால் 1958-ம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தில் ஏராளமான குறைபாடுகள், ஓட்டைகள் இருப்பது தெரியும். இதை அடைப்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சி அமைச்சர்களும் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள். சட்டத்தில் உள்ள சிலபல குறைபாடுகளைப்பற்றி அரசாங்கத்தின் ஆணைமூலமாக அறிவிக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் ஏடுகள் வாயிலாகத் தெளிவாகும். ஆகவே, சட்டத்தைத் திருத்துமுன் இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றிச் சட்ட நிபுணர்களை வைத்து அரசு ஆலோசித்து என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றி இந்த மாமன்றத்தில் வைத்து விவாதிக்கப்பட்ட பிறகு இறுதி வடிவம் எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் சீர்கெட்டிருக்கிறது என்பதை இந்த நாடும் நாமும் நன்றாக அறிவோம். அந்தந்தத் தொகுதியில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சாதாரண உறுப்பினர் பதவிதான் இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தில் அந்த தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் இருக்கிற ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல பொறுப்பும், நல்ல கடமை உணர்வு இருக்கிற அளவுக்குப் பதவிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். பொதுமக்கள் சாலை வேண்டுமென்றால் சட்ட மன்ற உறுப்பினரைக் கேட்கிறார்கள், குடி தண்ணீர் வேண்டுமென்றால் சட்ட மன்ற உறுப்பினரைக் கேட்கிறார்கள், மருத்துவ வசதி வேண்டுமென்றால் சட்ட மன்ற உறுப்பினரைக் கேட்கிறார்கள், ஆனால் இதைச் செய்யும் அதிகாரமோ சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் துளி கூட இல்லை என்பது தெரியும். வருங்காலத்தில் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் விதிகளைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு அரசியல் அமைப்புகளில் இருப்பவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராகவும், சட்ட மன்ற உறுப்பினராகவும் இருப்பதால், ஒரு கட்சியைச் சார்ந்தவர் சட்டமன்ற உறுப்பினராகவும், இன்னொரு கட்சியைச் சார்ந்தவர் வேறு ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கும்போது, மக்களுடைய தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்கிறேன் எனது தொகுதியைச் சேர்ந்த புணவாசிப்பட்டி ஒன்றியத்தின்மூலம் ஒரு சமுதாயக் கிணறு வெட்ட 1970-ல் அரசு மூலம் ஆணையிடப்பட்டது. இன்றுவரையில் செயல்படவில்லை. காரணம், பொறுப்பில் இருக்கிறவர்கள் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பதால் பொது மக்களின் தேவையைக் கருத்தில் கொள்ளாமல் அரசியல் நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் . . . (மணியடிக்கப்பட்டது)





* **திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு தலைவரவர்களே, உள்ளாட்சி அமைச்சர் இந்த அவைமுன் வைத்துள்ள மானியத்தின் மீது என் கட்சியின் சார்பில் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரம் குறைவாக இருப்பதால் ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பொதுப்படையாக சொல்வது என்றால், மாநிலம் முழுவதிலும் பல ஊர்களிலும், கிராமங்களிலும் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உதாரணமாக, நான் வந்திருக்கும் தொகுதியான கூடலூர் தொகுதியில், கிராமங்களில், குடிநீர் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்த இடத்தில் ஏற்கெனவே மலேரியா வியாதி அடிக்கடி பரவி வந்துகொண்டிருந்தது, இப்போது இல்லாமல் இருக்கிறது. குடிநீர் கிடைக்காததால் மக்கள் பெரும் தொல்லையடைகிறார்கள். கூடலூர் போன்ற மலைப் பிரதேசங்களுக்குக் குடி தண்ணீர் வசதி கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யூனிசெப் உதவியுடன் குடி தண்ணீர் வழங்குவது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது பற்றி விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம்கூட இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள். அதற்கு பதில் அளிக்கும்போது, எந்தெந்த இடங்களில் இந்த குடிதண்ணீர் வசதி இந்த நிறுவனத்தின் உதவியுடன் செய்யப்பட்டது என்பதை அமைச்சர் தெரிவிப்பார் என்று பார் என்று கருதுகிறேன்.

மற்றுமொரு முக்கியப் பிரச்னை, இந்த சாக்கடைப் பிரச்னை, உதகையை எடுத்துக்கொண்டால் 25,000 பேருக்கு என்று போடப்பட்ட சாக்கடைத் திட்டம் இன்று 55,000 ஜனத்தொகையான பிறகும் அபிவிருத்தி செய்யவில்லை. தண்ணீர் பர்ஸ்ட் ஆகி வெளியே வந்து விடுகிறது. இதனால் சுகாதாரக் கேடுகள் வருகின்றன. உதகை நகரசபை மிகவும் பொருளாதாரத்துறையில் கஷ்டப்படுவதால் அவர்கள் அதை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் அதற்கு மானியமோ, கடனோ கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய பெரிய

நகரங்களில் சாக்கடைக் குழாய் போட்டு இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் அந்த வசதி இல்லை. ஆகவே, இந்த மாதிரிப் பெரும் நகரங்களில் போடும் சாக்கடைக் குழாய்கள் போன்று கிராமங்களுக்குப் போட அரசாங்கத்திற்குப் பண வசதி இல்லையென்றாலும், கிராமங்களில் செப்டிக் டாங்க் கட்டித் தந்தால் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடிசை வாரியம் அமைந்திருப்பதை வரவேற்கிறேன். இந்த வாரியம் புதிய வீடுகளை கட்டித் தரும்போது, ஏற்கெனவே குடி இருக்கும் மக்களை அதிகத் தூரத்திற்கு அப்புறப்படுத்திவிடாமல், பக்கத்திலே உள்ள இடங்களில் வீட்டை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படும் பல பள்ளிகளுக்கு கட்டடம் இல்லை. சில பள்ளிக்கூடங்களில் கூரைகூட கிடையாது. நல்ல பண வசதி இல்லையென்றால், நல்ல சுவர்களாகக் கட்டி. கூரை மட்டும் போட்டு, அந்தப் பள்ளிக்கூடங்களை அங்கே வைக்கலாம். எங்கள் ஊரைப்போன்ற இடங்களில் நல்ல பள்ளிக்கூடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இந்த பஞ்சாயத்து ரோடுகளை எடுத்துக் கொண்டால், சரிவர அவை பராமரிக்கப்படுவதில்லை. எங்கள் தொகுதி மலைப்பிரதேசம். இந்த இடங்களில் சில கிராமங்களுக்கு ரோடு வசதியே கிடையாது. யாருக்காவது சீக்கு வந்து விட்டால் 40-50 மைல் நடந்துதான் வரவேண்டும். மாட்டு வண்டி கட்டிக் கொண்டுகூட வரமுடியாது. அப்படிப்பட்ட கிராமங்களுக்கு மாட்டு வண்டி போகும் அளவுக்காவது ரோடு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொகுதிக்கே, ஒரே ஒரு ஆஸ்பிடல் தான், கூடலூர் ஆஸ்பிடல்தான். ஆகவே, அங்கே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்பு ரோடுகள் இந்த ஆண்டிலேயே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இந்த ஆண்டில் செய்ய சாத்தியமில்லை என்றாலும், அடுத்த ஆண்டிலேயாவது நிச்சயமாகச் செய்து முடித்துத் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. எம். முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1971-72-க்கான உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது என் கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

எப்படி நாம் மத்திய சர்க்காரிடம் அதிகாரம் நிறையக் குவிந்து கிடக்கிறது. அதனால் சர்க்கார் ஏதும் செய்ய முடியவில்லை என்று சொல்கிறோமோ, அதுபோல், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தலைவர்களும், மற்ற ஊராட்சி மன்றத் தலைவர்களும், அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிறைய அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்ற வதந்தி நிலவி வருகிறது. ஊராட்சி





ஒன்றியத் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்கள் தரவேண்டுமென்பது நல்ல கருத்துதான். அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமான அதிகாரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூராட்சி மன்றத்திலுள்ள நிர்வாக அதிகாரிகள் லீவில் செல்லும்போது, தங்களுடைய பொறுப்பை, பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியின் கையில் ஒப்படைத்துவிட்டு, பேரூராட்சித் தலைவருக்குத் தெரிவிக்காமலேயே சென்று விடுகிறார்கள். இப்படிச் செய்வதால் அவர்கள் அந்த மன்றத்தின் தலைவரை அவமதிப்பதோடு, அவரைத் தேர்ந்தெடுக்க மக்களையும் அவமதிப்பதுபோல் ஆகிறது. மேலும், பஞ்சாயத்துகளிலே ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், கோட்ட பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்பப்படுகிறது. அவர்கள் அதிலே ஏதேனும் கொரி போட்டுத் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இதனால், பஞ்சாயத்து நிறைவேற்றிய தீர்மானம் அமல்படுத்த முடியாமல் போகிறது. இது பஞ்சாயத்துத் தலைவரையும், மெம்பர்களையும், அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களையும் அவமதிப்புச் செய்வதுபோல் இருக்கிறது. ஆகவே, என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், இப்படிப் பஞ்சாயத்திலிருந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கோட்ட பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்பும்போது, கொரி போடாமல். அமல்படுத்த அனுமதி வழங்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மனித சமுதாயத்திற்கு முக்கியமாக வேண்டியிருப்பது காற்று. சுவாசம் இல்லாவிட்டால் என்ன செய்ய முடியும். அதேபோல் முக்கியமாக இருப்பது குடிக்கத் தண்ணீர். இன்று குடிநீர்ப் பிரச்சினை முக்கியமானதாக இருக்கிறது. இந்த அரசு உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மற்ற அலுவல்களைக்கூட ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு ஆண்டுக் காலத்திற்கு ஒத்திவைத்துவிட்டு, குடிநீர்த் திட்டத்தை இந்த ஆண்டிலேயே செய்தால் நன்மையாக இருக்கும். சில கிராமங்களில் குடிக்கத் தண்ணீரே கிடையாது. இந்த நிலையில் பொதுமக்கள் அவதிப்படுகிறார்கள். குடிக்கவே தண்ணீர் இல்லை. குளிப்பது எப்படி முடியும். ஆகவே, அரசு ஆணையிட்டு, குடிநீர் கொடுப்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் ஒப்புதல் கொடுத்து, ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு குடம் தண்ணீர் என்றாவது கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மற்றபடி பஞ்சாயத்துத் தேர்தல் நடக்கும் போது, பஞ்சாயத்து தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுப்பது மிகவும் உசிதமாக இருக்கும். அப்படித் தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும்போது, அரிசனங்களுக்கு என்று சொல்லி சில இடங்களை ஒதுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், இன்றைக்கு

[திரு. எம். முத்தையா] [1971 ஜூலை 5

பஞ்சாயத்துக்களில் அரிசனங்கள் ஒன்றிரண்டு பேர்கள்தான் வர முடியும். அநேகமாக வரமுடியாமலே இருக்கும். ஒதுக்கீடு முறை இருந்தால்தான், சாதாரணமாக சட்ட மன்றத்திலே ஒதுக்கீட்டு முறையில் வந்திருப்பதுபோல், அங்கேயும் வரமுடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இணைப்பு ரோடுகள் தேவைப் படுகின்றன. அவற்றைப் போட அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வசதி இல்லையென்றால், அப்படி இணைப்பு ரோடுகள் ஊராட்சி ஒன்றியமே போட வேண்டும், யூனியனில் ரோடு போட தீர்மானம் போட்டு சர்வே செய்ய ரெவின்யூ டிபார்ட்மென்டுக்கு அனுப்பி அவர்கள் ரோடு சம்பந்தமாக சர்வே செய்ய வேண்டும் என்று இருக்கிறது. சர்வே செய்வது பஞ்சாயத்து அதிகாரிகளால் முடியாது. ரெவின்யூ அதிகாரிகள் குறிப்பிட்ட காலத்தில் சர்வே செய்வதில்லை. ஆகவே, அந்த தீர்மானத்தின்படி திட்டம் நிறை வேற்ற முடியவில்லை. ஆகவே, சர்வே அதிகாரம் யூனியனுக்கே வேண்டும். அப்படி இல்லாததால்தான் ரோடுகள் போட முடியாமல் இருக்கிறது. இல்லையென்றால் அவை இரண்டு பெண்டாட்டிக்காரன் நிலையில்தான் இருக்கின்றன என்று கூறி அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறு கிறேன்.

* **திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை மீது எங்கள் கட்சியால் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள வேறு பாடு நீங்க வேண்டும். நகரங்களுக்கு உள்ள வசதிகளையெல்லாம் கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டும். கிராம மக்களின் பொருளா தார நிலை உயர வேண்டும். அந்த உயர்ந்த நோக்கத்தோடு ஊராட்சி வளர்ச்சிக்குப் பெரும் தொகைகள் செலவிடப்பட்டு வருகின்றன. அந்த அரிய பணியை நிறைவேற்றுவதில் குறைகள் இருக்கின்றன. அவை ஈடேறவில்லை. திருப்தியாக இல்லை. ஊராட்சிப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள், தேசத்தின் வளர்ச் சியில் தங்களுக்கும் பங்கு உண்டு, தங்களுக்கும் கடமை உண்டு என்கின்ற பொறுப்புணர்ச்சியோடு தங்கள் தங்கள் பணிகளைச் செய்ய அவர்களை ஊக்குவிக்கும்வகையில் செயல்படவேண்டும். கண்காணிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான், உள்ளாட்சித் துறை பயனுள்ளதாக இருக்கும். திட்டங்களின் பயன்களை மக்கள் அனுபவிக்க முடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உண்மையான ஜனநாயகம் பஞ்சாயத்து மட்டத்தில் தொடங்க வேண்டும். யூனியன்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும். பஞ்சாயத்துச் சட்டத்தின்மூலம் யூனியன் களுக்கு இருக்கும் அதிகாரத்தைக் கூட்டவேண்டும். பல சர்க்கார் உத்தரவுகள்மூலம் பல அதிகாரங்கள் யூனியன் தலைவர்களுக்குக்



1971 ஜூலை 5] [திரு. என். டென்னிஸ்]

கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் பஞ்சா யத்துச் சட்டத்தில் இடம் பெறவில்லை. அதனால் சர்க்கார் உத்தரவு கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன, கையாளப்படாமல் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி, அதிகமான அதிகா ரங்களைத் தலைவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்போல யூனியன் தலைவர் தேர்தலும் நேரிடையாக நடத்த வழிவகை செய்ய வேண்டும். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஊராட்சிகளுக்கு ரோடுகளைப் பராமரித்தல் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு லோக்கல் ரோட்ஸ் கிராண்ட் (உள்ளூர் சாலைகள் மானியம்) கொடுக்கப்படுகிறது. ஆனாலும், பஞ்சாயத்துச் சாலைகளைப் பார்த்தால், நிதி வசதி இல்லாததால், பஞ்சாயத்துச் சாலைகள் பரா மரிப்பு இல்லாமல் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் ரோடு களுக்கு லோக்கல் ரோட்ஸ் கிராண்ட் கொடுப்பதுபோல பஞ்சாயத்து ரோடுகளுக்கும் பராமரிப்புக்கு ஒரு மானியம் சர்க்கா ரால் கொடுக்கப்படவேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத் தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று நகரப் பஞ்சாயத்து சாலைகளுக்கு டஸ்ட்லெஸ் சர்பேஸ்-க்காக மாநிலம் பூராவுக்கும் ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது. மாநிலத்தில் 374 யூனியன்களும் அதைப் பங்கிட்டுப் கொண்டால், ஒவ்வொன்றுக்கும் 1,872 ரூபாய் கிடைக்கும். கிள்ளி யூர் பஞ்சாயத்து யூனியனில் ஆறு நகரப் பஞ்சாயத்துக்கள் இருக் கின்றன. இந்த மானியத்தைப் பங்கிட்டுக் கொண்டால், ஒவ்வொன்றுக்கும் ரூ. 322 சொச்சம் கிடைக்கும். ஆகவே, டஸ்ட்லெஸ் சர்பேஸ்க்காக கொடுக்கப்படும் ஏழு லட்சம் ரூபாயும் சாலைகளுக்குப் பயன் தரும்வகையில் இருக்காது. லோகல் ரோட்ஸ் கிராண்ட் விஷயமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அதை மலைப் பிரதேசமாகக் கருதிக் கூடுதலான தொகை கள் கொடுக்கப்படவேண்டும்.

பாலம் கட்டுவதற்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பணம் இல்லாததால், பாலம் கட்டும் வேலைகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். பஸ் ரோடுகளையும் ஹைவேஸில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ரூரல் மேன் பவர், அப்ளைட் நூட்ரிஷன் ப்ரோகிராம் போன்ற திட்டங்கள் பிற்பட்ட வட்டாரங்களுக்குக் கொண்டுவர வேண்டும். குடிநீருக்காகக் கொடுக்கப்படும் பணம் போதாததால் அதிகமாகக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கடந்த பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன் 46 நகரப் பஞ்சாயத்துக்கள் இருந்தன. அவசர அவசரமாக தேர்தலுக்கு

முன் அங்கே. 64 நகரப் பஞ்சாயத்துக்களாகவும் பஞ்சாயத்துக்களாகவும், 224 கிராமப் பஞ்சாயத்துக்களாகவும் பிரிக்கப்பட்டன. அதனால் புதுப் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கள் செயல்படாத நிலையில் இருக்கின்றன. ரோடுகளைப் பராமரிக்க, மிட்டே மீல்ஸ் கொடுக்க, மின்சாரக் கட்டணம் கட்ட. இவைகளைச் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. கன்னியாகுமரிக்கு முன்பு இருந்ததுபோல் நகரப் பஞ்சாயத்துக்களுக்கு மேச்சிங் கிராண்டும் தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 யூனியன்கள் இருக்கின்றன. ஆனால், மற்ற மாவட்டங்களில் ஒரு பஞ்சாயத்து யூனியன் பகுதி ஜனத்தொகையைப் பார்த்தால். ஏகதேசம் 50,000 ஜனங்கள் இருக்கின்றனர். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1971-ம் ஆண்டு ஸென்ஸஸ் படி, ஒரு பஞ்சாயத்து யூனியன் பகுதியில் 1¼ லட்சம் மக்கள் தொகையிருக்கும். மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், எங்கள் மாவட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு மடங்கு மக்கள் கூடுதல் வரும். அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடுதல் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. சுருளிவேல் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களையும், என் தொகுதியில் உள்ளாட்சித் துறையினர் ஆற்ற வேண்டிய சில பணிகளையும் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சி பொறுப்பு ஏற்றதும், தான் எதிர்க்கட்சியில் இருந்தபோது ஊராட்சித் தேர்தல்கள் எந்த அடிப்படையில் நடக்க வேண்டுமென்று சட்ட மன்றத்திலேயும், வெளியிலேயும், தன்னுடைய கொள்கையாகப் பிரகடனப்படுத்தி வந்ததோ அந்தக் கொள்கையையே முதல் கட்டமாகச் சென்ற ஆண்டு நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தல்களில் ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொதுமக்களே நேரிடையாக தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பைப் பொது மக்களுக்கு அளித்து தேர்தல் காலங்களில் பணமும் சாதியும் தலைவிரித்து ஆடுவதை ஒரு அளவோடு அரசு கட்டுப்படுத்தி இருக்கிறது. அதே பணியைத் தொடர்ந்து வருகிற தேர்தலின்போது ஊராட்சி ஒன்றியத்தின் பெரும் தலைவர் தேர்தலையும் வாக்காளப் பெருமக்கள் தாங்களே நேரிடையாகப் பெரும் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை ஊராட்சி வரிகளை வசூலிக்க வருவாய்த்துறை அலுவலர்களான கர்ணம், நாட்டாண்மைக்காரர்களிடத்திலும் அந்தப் பொறுப்பு விடப்பட்டிருந்தது. அதனால் ஏராளமான வரி பாக்கிகள் பல ஊராட்சி மன்றங்களிலே தேங்கி நிற்கக்கூடிய நிலை ஏற்பட்டது.



அதை நிவர்த்தித்து ஊராட்சி மன்றங்களின் நிதி நிலையை அபிவிருத்தி செய்வதற்கு 100 அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஊராட்சி மன்றங்களுக்கு இருக்கக்கூடிய பற்றாக் குறையை நீக்க ஊராட்சி மன்றங்கள் எந்த அளவுக்கு வீட்டு வரி வசூலிக்கிறதோ அந்த அளவுத் தொகையை அரசு மானியமாக அந்த ஊராட்சி மன்றங்களுக்கு அளித்து வருகிறது. ஆனால் இந்த வசதி வாய்ப்புப் பேரூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதில்லை. இதன் காரணமாகப் பெரும்பாலான பேரூராட்சி மன்றங்கள் தங்களுடைய அலுவலர்களுக்கு ஊதியத்தைக் கொடுக்கக்கூடிய நிலையில்லாமல் பரிதவிக்கக்கூடிய காட்சியை நாம் காண்கிறோம். இந்த சூழ்நிலையில் பேரூராட்சி மன்றங்களால் எத்தகைய நற்பணிகளையும் மேற்கொள்ள முடியாத ஒரு அவல நிலை இருக்கிறது. எனவே பேரூராட்சி மன்றங்கள் எந்த அளவுக்கு வீட்டு வரி வசூலிக்கிறதோ அந்த அளவுக்கு அரசு மானியத் தொகை அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் இருக்கக்கூடிய எல்லாப் பள்ளிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சரித்திர ஏடுகளில் படிக்கக் கூடிய சகாரா பாலைவனத்தின் நிலை இருக்கிறது. ராமகிருஷ்ணாபுரம், புதுக்கோட்டை என்ற பல கிராமங்கள் பாலைவனப் பிரதேசத்தில் மக்கள் இருப்பதுபோன்ற ஒரு நிலையிலே இருக்கிறது. 25 ஆண்டுக் காலத்தில் எந்தக் கிராமங்கள் எந்தவித வசதியையும் பெறவில்லை. சின்னமனூர் ஊராட்சி மன்றத்தில் அடங்கியுள்ள பிரதேசத்தில் சாலை வசதிகள் இல்லை. எனவே, அரசு சின்னமனூர் ஊராட்சி மன்றத்தில் அடங்கிய பிரதேசத்தில் சாலைகள் மிக அவசரத் தேவையாக இருப்பதால் உடனடியாக அதற்கு அவசர உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போடிநாயக்கனூரில் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் ஏராளமான இலவம்பஞ்சு விளைகிறது. அதைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தித் தலையணைகள், மெத்தைகள் தயாரித்து நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போடிநாயக்கனூரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்துக்கு அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நகராட்சிக்கு அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. சுருளிவேல்] [1971 ஜூலை 5

கடைசியாக மத்திய அரசு உதவியைமட்டுமே நம்பியிராமல் மாநில அரசு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் தொகை ஏறத்தாழ 15,000 கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும் வண்ணம் ஏற்பாடு செய்திருப்பதற்கு நான் என்னுடைய பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள உள்ளாட்சித்துறை மானியங்களின் கோரிக்கையின் பேரில் என்னுடைய ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, உள்ளாட்சித் துறையில் இயங்குகின்ற ஊராட்சி ஒன்றியங்கள் 20 ஆண்டுக் கால சர்க்கார் ஆட்சியில் எப்படிச் செயல்பட்டன, 1967-க்குப் பிறகு எந்த அளவுக்கு அவை திருத்தி அமைத்துச் செப்பனிடப் படுகின்றன என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறபோது நம்முடைய தமிழக அரசைப் பொது மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், இன்னும் சில ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற குறைகளை நாம் தீர்த்தாக வேண்டும். குறிப்பாக ஊராட்சி மன்றங்கள் மூலமாகத்தான் மக்களுக்கு என்ன சலுகைகள் இந்த அரசால் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய முடியும். ஆகையால், பொது மக்கள் ஊராட்சி மன்றங்களின் பயன்களைப் புரிந்துகொள்வதற்கு அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதிய வாகன வசதிகள் எல்லாம் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற மேல் மலையனூர் ஒன்றியத்தில் நான்கு ஆண்டுக் காலமாக ஜீப் இல்லை. தமிழக அரசு போடுகிற திட்டங்களை எல்லாம் பொது மக்களிடத்தில் சென்று எடுத்துச் சொல்வதற்கும் அதிகாரிகள் பல கிராமங்கள் போவதற்கும் வாகன வசதி இல்லாமல் இருக்கிறது. தமிழகத்தில் இருக்கிற 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஜீப் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை நம்முடைய தமிழக அரசு மறந்திருக்க முடியாது. எப்படியாவது இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்குக் காலாகாலத்தில் வாகன வசதியாவது, அப்படி இல்லாதபோது ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து அவர்கள் ஜீப் வாங்கிக் கொள்வதற்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

யூனியன் அதிகாரிகளுக்கு, அவர்கள் 1958-ல் போட்டிருக்கக் கூடிய சட்டப்படி பணி ஆற்ற வேண்டியிருக்கிறது. அந்த விதிகளை மாற்றி அவர்கள் நன்றாகச் செயல்படுவதற்கான விதிகளை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால், குறிப்பாக ஒரு எஸ்டிமேட்டைத் தயாரிக்கவேண்டுமானால் யூனியன் என்ஜினியர்களுக்கு உள்ள பவர்—அவர் கொடுக்க வேண்டிய எஸ்டிமேட் 3,000 ரூபாய்க்குத்தான் போடக்கூடிய ஒரு



1971 ஜூலை 5] [திரு. ரா. ரா. முனுசாமி]

விதி இருக்கிறது. அதை உடனடியாக மாற்றி அந்த யூனியன் என்ஜினியர்களுக்கு 5,000 ரூபாய்வரை எஸ்டிமேட் போடவும், 5,000 ரூபாய்வரை சாங்ஷன் பண்ணவும் தமிழக அரசு உத்தரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், அங்கே இருக்கின்ற ஒரு ஏ. இ.க்கு இருக்கும் அதிகாரம் 10,000 ரூபாய்வரைதான் அவர் எஸ்ட்டிமேட் தயார் செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அதற்கு மேற்கொண்டு தயார் செய்ய வேண்டுமானால், டீ. இ. யை அவர் அணுக வேண்டியிருக்கிறது. ஒரு வட்டத்திற்கு ஒரு ஏ. இ. என்றிருக்கிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 3, 4 ஊராட்சி ஒன்றியங்களுக்கு எஸ்ட்டிமேட் தயாரிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. 10,000-க்கு மேல் சென்றால் அவர் மேற்கொண்டு டீ.இ.-யைச் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, யூனியன் ஏ.இ. அவர்களுக்கு இப்பொழுது இருக்கும் விதியை இந்த அரசாங்கம் விட்டுவிட்டு, அவர் 20,000 ரூபாய் வரை எஸ்டிமேட் போட அவர்களுக்கு தமிழக அரசு உத்தரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு அடுத்து டீ. இ. 25 ஆயிரம் ரூபாய்க்கு தான் எஸ்டிமேட் போடலாம். அதை மாற்றி 50 ஆயிரம் ரூபாயாகப் போட வேண்டும்.

அடுத்தாற்போல், ஊராட்சி ஒன்றியங்களிலே குடி தண்ணீர் தட்டுப்பாடு இருக்கிறது. ஆனால், 1967-க்குப் பிறகு அந்தத் துறையிலே இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு கவனம் செலுத்தி வருகிறது என்பதைப் பார்க்கும்பொழுது, பொது மக்கள் எல்லாம் நம்முடைய அரசைப் பாராட்டுகிறார்கள். ஆனால், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு குடி தண்ணீருக்கு இந்த அரசாங்கம் பணம் ஒதுக்கும் பொழுது, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தங்களுடைய பங்குத் தொகையை செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி இந்த மன்றங்களிலே பங்குத் தொகை போட முடியாத நிலைமை ஏற்படும் பொழுது, அதன் கீழ் உள்ள கிராமங்களிலே குடி தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. எனவே, அதை உடனடியாக மாற்ற, ஊராட்சி ஒன்றியங்களிலே நேரடியாக குடி தண்ணீர் கிணறுகளை இந்த அரசாங்கம் செப்பனிட்டுத் தர வேண்டும்.

அதற்கு அடுத்தாற்போல், ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்புச் சாலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரோடு போடுவதற்காக ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். இந்த ஆண்டு 71 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த பணம் போதுமா என்றால், அது போதாது என்று தான் சொல்லிக் கொள்வேன். இன்றைக்கும் பல கிராமங்கள் சாலைகளினால் இணைக்கப்பட வில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு இன்னமும் அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. சி. மணலி கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சமுதாய வளர்ச்சி திட்டம் பல முனைகளிலே வேலை செய்யும் திட்டமாக இருப்பதால், மாவட்ட கலெக்டரின் கீழே இருக்கக் கூடிய ஒரு இலாகாவாக அது இல்லாமல், மற்ற இலாகாக்களைப் போல் இது தனித் துறையாக இயங்குகின்ற நிலைமை ஏற்படுமானால், இதிலே இப்பொழுது இருக்கும் பல சிக்கல்களை தவிர்க்க முடியும். சமீபத்திலே கூட தஞ்சையிலே இந்த ரெவின்யூ ஸ்டாப் இந்த அபிவிருத்தி சிப்பந்திகள் கலெக்டர் கீழே வேலை பார்ப்பதிலே பூசல் எழுப்பியிருக்கிறார்கள். கிளர்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது அவர்களால் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே, இந்த அபிவிருத்தித் துறையை ஏன் தனித் துறையாக விரிவுபடுத்தக் கூடாது இந்த அரசாங்கம் என்று கேட்டுக்கொள்கிறேன். அது பற்றி மாண்புமிகு நாவலர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

அதற்கு அடுத்தாற்போல். இன்றைக்கிருக்கும் ஜனநாயக அமைப்பிலே கூலி வேலை செய்பவர்கள் எல்லாம் பஞ்சாயத்து தலைவர்களாக வந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே மட்டும், 40, 50 பேர் பஞ்சாயத்து தலைவர்களாக வந்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி தலைவர்களாக பணிபுரிய வேண்டுமானால், தாங்கள் பிழைக்கவேண்டிய வழியை விட்டுவிட வேண்டியிருக்கிறது. அப்படி இருக்கும் பொழுது, இப்படிப்பட்ட தலைவர்களுக்கு அந்தந்த பஞ்சாயத்தினுடைய தீர்மானத்தின்படி குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுக்கக் கூடாதா? அது பற்றி ஒரு பரிந்துரை இந்த சர்க்காரிடமிருந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் நடைபெறும் பொழுது அந்தந்த மாவட்டத்தின் கலெக்டர் தான் அதற்கு தலைமை வகிக்க வேண்டும் என்பது ஜனநாயக நாட்டிலே பொருந்தாத ஒன்றாகும். இப்படி நான் சொல்லுவதன் மூலம், கலெக்டரின் மதிப்பையோ, அல்லது அவருடைய பொறுப்புகளையோ குறைத்து மதிப்பிடுவதாக யாரும் கருதவேண்டாம். அப்படி நானும் கருதவில்லை. அது மாற்றப்படவேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. அந்த கூட்டத்தை கலெக்டர், ஒரு பஞ்சாயத்து தலைவர், ஒரு சட்டசபை உறுப்பினர் ஆக இந்த மூவரும் சேர்ந்து நடத்துவது என்பது நல்லது. இப்படி ஒரு மாற்றத்தைக்கொண்டு வருவது, இந்த ஜனநாயகத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் சில பொது இடங்களுக்கு நிலங்கள் தேவைப்படும் பொழுது அந்த ஊரிலே இருக்கக் கூடிய மக்கள் அதற்கு பணம் கொடுத்து பல உதவிகள் செய்ய முன் வந்தால், அந்த ஊரிலே இருக்கும் ஏகபோக நில அதிபர்கள் இதற்கு தடை போடுகிறார்கள். இதற்கு காரணம், நிலங்களும், மனைக் கட்டுகளும் ஏகபோகமாக ஒரு சிலர் கையிலே இருப்பதால் தான். எனவே, சில



பெரிய மனிதர்களின் உதவியால் தான் அப்படி நிலங்களை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் ஊர் நன்மைக்காக நிலம் கொடுக்க மறுக்கிறார்கள். அத்தோடு, நான் சொன்னவர்களுக்கா நீங்கள் ஓட்டு போட்டீர்கள் என்று கேட்கிறார்கள். இதைத் தவிர்க்க, அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களிலே நிலத்தை கட்டாய ஆர்ஜிதம் செய்யக் கூடிய அதிகாரம் சர்க்காருக்கு இருந்தால் தான், அந்த ஊரிலே ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது அல்லது மற்ற பல கட்டடங்களை கட்டுவதற்கான நிலைமை ஏற்படும் என்று இந்த சமயத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய ஊரிலே ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. அதற்கு மூன்று வருஷமாக நிலம் பெற முயற்சி இருந்தாலும், இடம் கிடைப்பதில்லை. காரணம், அந்த நிலங்கள் எல்லாம் 2, 3 பேர்கள் கையிலே இருக்கின்றன. 3,000 அல்லது 4,000 ரூபாய் வசூலித்து கொடுத்தாலும், கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். எனக்கு ஓட்டு போட்டாயா, என்னுடைய மகனுக்கு ஓட்டு போட்டாயா எலெக்‌ஷனிலே என்கிறார்கள். எனவே, "கட்டாய ஆர்ஜிதம்" செய்யும் அதிகாரத்தை இந்த சர்க்கார் அப்படிப்பட்ட இடங்களிலே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நிதி ஒதுக்கும் பொழுது, ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் இருக்கும் பின் தங்கிய பிரதேசங்களுக்கு முக்கிய இடம் தரும் வகையிலே இன்றைக்கு ஒரு நடைமுறை வகுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு ஊருக்கு பல சௌகரியங்கள் இருக்கும் பொழுது, அந்த ஊருக்கே இன்னும் பல சௌகரியங்களை செய்து கொள்ளும் நிலைமை இருக்கிறது. காரணம், செல்வாக்கு படைத்தவர்கள் அங்கே பஞ்சாயத்து தலைவராக வந்திருக்கிறார் என்றால், எங்கள் ஊருக்குத் தான் ரோடுகளை போட்டுக் கொள்ளுவேன் என்ற நிலைமை இருக்கிறது. ஆனால், மற்ற பின் தங்கிய பிரதேசங்களிலே அப்படிப்பட்ட ரோடு வசதியோ லைட் வசதியோ அல்லது குடிநீர் வசதியோ இல்லாமல் இருப்பதை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட கிராமங்களில் கவனிக்கப்படவில்லை. இதை சர்க்கார் உணர்ந்து, அப்படிப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலிலே வசதி செய்யப்படக்கூடிய அளவிலே திட்டம் இடவேண்டும், அதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மீன் வளர்ப்பு தொட்டிகளை கட்டுதல் சம்மந்தமாக, குளம், குட்டைகள் அதிகமாக இருக்கும் கிராமங்களிலே இப்படி தொட்டிகளை கட்டத் தேவையில்லை. அங்கே அநாவசியமாக சிமெண்ட்டையும், கல்லையும் போட்டு கட்டுகிறார்கள். சில இடங்களிலே அப்படிப்பட்ட தொட்டிகளிலே மீனே இருப்பதில்லை. இதற்கு என்று ஒரு கான்டிராக்ட். 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாயிக்கு கான்டிராக்ட், எனவே, குளம் குட்டைகள் இருக்

கும் ஊரிலே இப்படி மீன் தொட்டிகளை கட்டுவது அர்த்தமற்றது என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக, பஞ்சாயத்துக்களிலே கட்சி அரசியலை விட்டுவிட்டு, காரியங்களை ஆற்றவேண்டும். ஒரு இடத்திலே ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் ஒரு கட்சியாக இருக்கலாம், அங்கே இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர் வேறு கட்சியாக இருக்கலாம், அதற்காக காரியங்களை ஆற்றும் பொழுது முரண்பாடு வரவேண்டும் என்ற நிலைமை இருக்கக் கூடாது. எனவே, எல்லோரும் நல்ல எண்ணத்துடன் பிரச்சினைகளை கவனத்தில் கொண்டால், இந்த வேறுபாடு எல்லாம் மறைந்து விடும் என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே, என்னுடைய அனுபவத்திலே இருந்து சொன்னவற்றை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் கவனித்து காரியங்களை ஆற்ற வேண்டும். நிதி ஒதுக்கிடுவதிலே கூட வேறுபாடு காட்டப்படுவதாக என்னிடம் சிலர் சொன்னார்கள்.

என்னுடைய தொகுதியிலே இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த ஒன்றியங்களிலே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த ஒன்றியங்களுக்கு அதிகமான பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எனவே, நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது எல்லா ஒன்றியங்களின் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வளவு தான் நான் சொல்ல விரும்புவது. நன்றி

**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை மனதார வரவேற்று, எங்களுடைய வட்டாரத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை சுட்டிக்காட்டுகின்ற வகையிலே என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விழைகின்றேன்.

தமிழகத்தின் இரண்டாவது பொற்காலம் என்று சொல்லப்படுகின்ற ராஜராஜ சோழன் காலத்திலே இருந்து கிராம சுய ஆட்சியின் அடிப்படையிலே ஊர் ஆட்சி மன்றங்கள் மக்கள் ஆட்சி முறைகளுக்கு ஏற்ற முறையிலே சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதை நாம் காணுகிறோம். ஊராட்சி தான் மக்கள் ஆட்சியின் ஆணி வேர் என்பார்கள். நாட்டின் ஜீவ துடிப்பே கிராமங்களில் தான் இருக்கிறது என்று மறைந்த காந்தி அடிகள் கூறியிருக்கிறார்கள். அந்த மகாத்மா காந்தி கனவு கண்ட ராம ராஜ்யத்தை தென்னாட்டு காந்தி அண்ணா அவர்களின் வழி வந்த அவர்களுடைய தம்பிமார்கள் உருவாக்கும் அளவிலே இந்த மானியக்கோரிக்கை அமைந்திருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். அதுவும், நடந்து முடிந்த ஊராட்சி தேர்தல், அதற்கென்று தனி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, நடந்து முடிந்திருப்பது, வரவேற்கத் தக்க ஒன்றாகும், இதை ஜனநாயக விற்பன்னர்கள் நிச்சயமாக





பாராட்டுவார்கள். இந்நாட்டு மக்கள் ஒரு ஜனநாயக தேர்தலிலே தேறியிருக்கிறார்கள் என்பதை நடந்து முடிந்த தேர்தல்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்த மானியக் கோரிக்கையில் ஊராட்சி மன்றங்களின் தலைமையிடங்களில் எல்லாம் வானொலிப் பெட்டிகள் இல்லாத நிலையில்லை என்ற அளவுக்கு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பாராட்டத்தக்க அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குச் சென்று சிகிச்சை செய்துகொள்வதற்கு ஏற்ற வகையில் அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த ஊருக்கும் சுற்றியுள்ள சிற்றூர்களுக்கும் வேண்டிய இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவில்லை.

பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல் குடிநீர் பற்றாக்குறை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இருக்கிறது. சிவகாசி, ஸ்ரீவல்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் பற்றாக்குறை மிக மோசமான நிலையில், பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. பொதுக் கிணறுகளிலும் குடிநீர் இல்லை. 100-க்கு 95 சதவிகித பொதுக்கிணறுகளில் குடிநீர் இல்லை. தனியாருக்குச் சொந்தமான கிணறுகளுக்குச் சென்று, வெகு தூரம் நடந்து சென்று குடிநீர் கொண்டுவருகிறார்கள். தண்ணீர் என்பது தாராளமாகக் கிடைக்கிறதென்பதைத்தான் ஒரு மரபுச் சொல்லாகச் சொல்லுவார்கள். பணம் தண்ணீர் போல் செலவாகிறது என்பார்கள். ஆனால், என் தொகுதியில் பணத்தைக் காட்டிலும் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டிய நிலையிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலம், பணம் செலவழித்து கிணறுகளை ஆழப்படுத்துவதன் மூலம் மட்டும் குடி-நீர்ப் பற்றாக் குறையைத் தீர்த்து விடமுடியாது. கிணறுகளை ஆழப்படுத்தினாலும் தண்ணீர் கீழே கீழே போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, குழாய்க் கிணறுகள் அமைக்கின்ற திட்டம் வகுக்கப்படவிருக்கின்றன என அறிகிறேன். அந்தத் திட்டத்தை அமுல்படுத்தினால், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் போன்ற பகுதிகளில் குடிநீர் பற்றாக் குறையைத் தீர்க்க முடியும், அதனைச் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சாலை அமைப்புகள் ஒவ்வொரு கிராமத்தையும் இணைக்கின்ற அளவிற்கு இருக்கவேண்டும். இப்போது பல ஊர்களுக்கு ஒழுங்கான சாலை வசதிகள் இல்லை. இன்னும் பல சாலைகளில் பாலங்கள் இல்லாத நிலையிருக்கிறது. பெரிய கொல்லப்புறம் என்ற ஊர் சாத்தூர் ஒன்றியத்தில் இருக்கிறது. அந்த ஊருக்குச் செல்லவேண்டுமானால் ஒரு ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த ஊருக்கு ஒரு பொதுக்கூட்டத்திற்குப் போகும்போது அந்த ஆற்றில் தண்ணீர் வந்து விட்ட காரணத்தால், மிகக் குறுகலான அணைக்கட்டின் மேல் நடந்து

செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சாத்தூர் சட்டமன்றத் தொகுதியின், மாண்புமிகு உறுப்பினர் அழகுத் தேவர் அவர்கள் கூட ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று விட்டு திரும்பும்போது. ஆற்றில் தண்ணீர் வந்துவிட்ட காரணத்தால் ஊருக்குத் திரும்ப முடியாமல், 2, 3 நாள் அந்த ஊரிலேயே தங்கிவிட்டார்கள். அந்த அளவுக்கு சாலைப் போக்குவரத்து மோசமான நிலையில் இருக்கிறது.

இந்த மானியக் கோரிக்கையில் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இருப்பவர்கள் வேலைவாய்ப்பின்மை காரணமாக கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் சென்று, அங்கே நகரங்கள் வீக்கமாகவும், கிராமங்கள் எலும்புக்கூடாக ஆகிக்கொண்டு வருகின்ற நிலைமை கண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். இனிமேல் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்லும் நிலைமை இல்லாமல் நகரங்களிலுள்ள மக்கள் கிராமங்களுக்குச் செல்கின்ற அளவில் வேலை வாய்ப்புத் திட்டங்கள் நிலையை உருவாக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும். கிராமப்புறப் பகுதிகளில் வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற ஒரு திட்டத்தை விரைவில் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கல்வி, உயர்தொடக்கக் கல்விக்கூடங்களில் மதிய உணவுத் திட்டம் செயல்படுவது பாராட்டுக்குரிய ஒன்று தான். ஆனால், அந்தத் திட்டம் ஆசிரியர்களுடைய வேலையை, மாணவர்களுடைய கல்வியைப் பாதிக்கின்ற அளவிற்கு, அதற்கென்று ஒரு தனிக் கணக்கு எழுதி, சமையல் போன்ற வேலைகளில் மாணவர்களைப் பயன்படுத்தவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் பூவிருந்தவல்லியில் இருப்பது போல், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மையச் சமையல் கூடத்தை அமைக்கவேண்டுமென்று கூறி, இந்த மானியக் கோரிக்கையை மனதார ஏற்று, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Chairman, Sir, I rise to offer my opinion on the Demand relating to the Community Development Projects, etc., moved by the Hon. Minister for Local Administration.

While speaking on this Demand, I wish to say that there are many welcome features. Before I refer to them, I wish to make a submission. Sir, the time allotted to hon. Members is very limited and I request the Government through the Chair that the Chair may accept that the speech made by the Hon. Minister may be accepted as read because the Hon. Minister takes much of the time with the result that the Members are deprived of the time to speak.

Sir, the most important thing relates to Mahalir Manrams. Now though the objective is one Mahalir Manram for one panchayat with the maximum of 30 per block, we should give due regard and



importance to the various Mahalir Manrams that are now functioning. The allotment for each Manram is to the tune of Rs. 4,000. The sum of Rs. 4,000 is a very meagre amount considering the activities of these Manrams. If we take the districts of Ramanathapuram, Salem, North Arcot and Tiruchirappalli into consideration, they are functioning very well and I request the Hon. Minister to increase the amount. We have to find out the real work that is done by these Manrams, particularly the activities connected with sewing machines. I understand that the Mahilar Manram should also collect 50 per cent of the amount to match with the 50 per cent grant. But I find that in many cases in rural areas they are unable to collect this 50 per cent. In this connection, I wish to point out that in the case of the Village Works Programme the 25 per cent contribution by the people is waived. So I request the Government that with regard to the Mahalir Manrams also, the 50 per cent should be reduced or waived. Otherwise, it will be very difficult to carry out the various programmes conducted through these Manrams. I also suggest that the various departments and the Government should also see that the products that are produced by these Manrams which are of quality and marketing value are utilised by them.

Then I come to the Harijan Welfare Schools and the Mid-day Meals Programme. This is a very important programme concerning the downtrodden community. Though the mid-day meal programme is a welcome feature—it has been in vogue for many decades—the food that is being supplied to 40,000 children in the slum areas is of mal-nutritious value than nutritious value. Let it not be misunderstood that I am criticising the Government. I understand their difficulties well. In this connection, I wish to point out that the food which is supposed to be cooked for their welfare, is cooked the previous night and brought to the schools the next morning at 11 a.m. That food becomes stale and would create so many endemics and epidemics and also so many other diseases. So, I request the Government to take serious steps to see that the food is cooked the same day and then distributed to the children in the Harijan Welfare Schools. Digging of wells and construction of link roads have been spoken of by many hon. Members. I do not want again to go into details. I hope Government will consider all those minimum necessities of the vilage-folk.

There is the Slum Clearance Board. I welcome it. The clearance of slums has been a problem of the previous Government and the present Government, for many years. Not only of Government, this has been a problem of the public too. I would like to offer a suggestion. There is a scheme to put up many—storeyed buildings at a cost of many lakhs of rupees for slum dwellers. Are these going to benefit the slum people? That is the problem. If that is going to benefit the slum people I wish to point out one important thing. On the Marina it is said they are going to put up buildings for fishermen and other backward

communities. Government had been kind enough to erect some buildings. It is said some people had also come. Let me tell our experience. The previous Government constructed quarters for fishermen in Santhome and the quarters were not occupied by them. They are unwilling to move from where they are. The Chairman of Slum Clearance Board, Thiru Rama Arangannal is here. The other day during question—hour the Hon. Chief Minister said it would be better that these people are accommodated where they are. If that is done, let me say it would become a menace to society. I should say that if the fishermen are going to be located in the places where they are, in the Marina, then there would be a menace. The children of the fishermen would be creating a lot of nuisance and the beauty of Marina would be definitely spoiled. We are having the finest beach possible and we should preserve its beauty.

Perhaps you may remember, Sir, that in 1953 the Hon. Leader of the Opposition in the Council, Dr. A. L. Mudaliar put up a valiant fight and vehemently opposed the issue and said that no building, irrespective of whether residential or institutional, should come opposite the Marina Beach. This is one of our beauty spots and it should be preserved. Many people came forward to purchase land opposite the Marina at that time and it was emphatically rejected. Now I find that the slum dwellers, fishermen and others are going to be accommodated where they are. If that is done their children would only spoil the beauty of Marina and the nuisance that would be created by them would be terrible. They should be comfortably accommodated at some other place. With our experience of Santhome, we can't be definite that they would occupy the quarters built by them for their use.

I want the Slum Clearance Board and the Housing Board to consider the matter deeply and sincerely recommend that in giving special extra privilege to any particular community, the welfare of the other communities should be taken into consideration. Let it be a Slum Clearance Board and not a Political Clearance Board.

In the 'magalir manram' through primary health centres contraceptives are being supplied under family planning programme. I wish to say that the contraceptives that are being supplied there are not being used or misused by village women for want of proper instruction by para—medical officers. Large quantities of contraceptives are being distributed for which much money is being spent. Recently I had a report from Siddha doctors that there is a specific Sidda medicine which is very effective so far as family planning is concerned. I request Government to take this into consideration in consultation with eminent Siddha doctors and try to popularise this Siddha medicine in the "mathar sangams". Thank you.





* திரு. க. பழனிவேலன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று, ஊராட்சி ஒன்றியங்களைப்பற்றி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் அதிகப்பொறுப்புக்களை நிறைவேற்றி வருகிறவர்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் தான். இன்றைய தினம் அந்த அலுவலர்களே இரண்டு பிரிவுகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆணையாளர், கணக்கர் (அக்கவுண்டெண்ட்), மேலாளர் (மேனேஜர்) இரண்டு எழுத்தர்கள்தான் அரசு அலுவலர்கள், இவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்திற்குள் மாற்றுதல் செய்யலாம். ஒன்றிய அலுவலர்கள் (யூனியன் ஸ்டாப்) ஒன்றிய நியமனக்குழுவினால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பதால் சரியான முறையில் வேலை செய்வதில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் எல்லா அலுவலர்களையும் அரசு தன்கீழ்க் கொண்டு வந்து நியமனம் செய்வதோடு எல்லோரும் நல்லமுறையில் வேலைசெய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட அளவில் மாற்றல் செய்ய அதிகாரம் அளிக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அந்தப் பகுதியில் மையமான இடத்தில் அமைவது வழக்கமாக இருக்கிறது. சாலை போக்குவரத்து சரியான முறையில் இல்லாததால் பக்கத்து இடங்களில் குடியிருக்கிற அலுவலர்கள் நேரத்தில் அலுவலகத்திற்கு வர முடியாத நிலையும், அதனால் வேலை பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள அலுவலர்களுக்கு அரசாங்கமே குடியிருப்பு கட்டித் தர ஆவன செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் சீனப் படையெடுப்பின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டது என்று அறிகிறேன். இந்தத் திட்டத்தை வரும் ஆண்டிலாவது மீண்டும் தொடங்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து ஊராட்சி ஒன்றியங்களைத் தரம் பிரிக்கும்போது (க்ளாசிபிகேஷன் ஆப் பஞ்சாயத்து யூனியன்) நிலவரி அடிப்படையில் தரம் பிரித்து வருகிறார்கள். பின்தங்கிய நிலைமையில் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களும் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் பின்தங்கிய நிலைமையையும் மனதில் கொண்டு சில சலுகைகளை இவற்றுக்குத் தனியாக அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் கால்நடை வளர்ச்சி அலுவலர்கள், எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுவதை வரவேற்கிறேன். கால்நடை மருத்துவர் (வெட்டர்னரி டாக்டர்ஸ்), வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் மிக அதிகமான பகுதிக்குச் சென்றுவர வேண்டியிருப்பதால் இவர்களுக்கு அரசாங்கமே

[திரு. க. பழனிவேலன்] [1971 ஜூலை 5

மோட்டார் சைக்கிள் முழு மானியமாகவோ அல்லது பாதி மானியம் பாதி கடன் என்ற அடிப்படையிலோ வாங்கித் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து இ. ஓ. ரெவின்யூ வரி வசூலைக் கண்காணிக்கவும் பஞ்சாயத்து இடங்களில் ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்றவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சரியான முறையில் கடமையை ஆற்ற முடியவில்லை என்பது ஊராட்சியில் உள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே ஆக்கிரமிப்பைப் பொறுத்தவரையில் உடனடியாக அகற்ற தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் வேறு ஏதாவது வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல காலரா வரக்கூடிய பகுதிகளில் யுனெசெப் உதவியுடன் கூட குழாய்க்கிணறுகளை அமைத்து, குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நரம்புச் சிலந்தி நோயினால் பாதிக்கப்படுகிற உடையார்ப்பாளையம், பெரம்பலூர் போன்ற வட்டாரங்களுக்கும் இந்தச் சலுகையை விஸ்தரிக்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து சாலைகளைப் பொறுத்தவரையில் உள்ளூர் சாலைகள் மானியம் சாதாரண பகுதி, கடற்கரைப் பகுதி, மலைப் பகுதி, கழிமுகப்பகுதி என்று பிரித்து ரூ. 600, ரூ, 800, ரூ, 1,500 என்ற அடிப்படையில் ஒரு மைலுக்கு மானியம் அளிக்கிறார்கள். களர் மண், களிப்பு மண் ஆகிய பகுதிகளில் சாலை போடுவதற்கு மிகுந்த செலவாகிறது. ஆகவே இந்தப் பகுதிகளுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது ஆசிரியர்களுக்கு அவப்பெயரைத் தேடிக் கொடுக்கும் திட்டமாக இருக்கிறது. ஊராட்சிகள் தர வேண்டியதையும், வசூலிக்க வேண்டியதையும் பரிசு சீட்டு திட்டத்தின் மூலமாகக் கிடைக்கும் நிதியிலிருந்து தர வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு அவப்பெயர் ஏற்படாமல் நடைபெற ஒரு குறிப்பிட்ட தொகையை பரிசு சீட்டு நிதியிலிருந்து எடுத்து வழங்க வேண்டும்.

அடுத்து சமூகக் கல்வியைப் பொறுத்தவரையில், எல்லா ஊராட்சிப் பகுதிகளுக்கும் வானொலிப் பெட்டி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவற்றைப் பழுதுபார்க்க கோட்ட அளவில்தான் ரேடியோ இன்ஸ்பெக்டர் ஒருவர் இருக்கிறார். அவர் பரந்த அளவில் எல்லா இடங்களிலும் சென்று பழுது பார்க்க முடியவில்லை. ஆகவே, ரேடியோ பெட்டிகளை ஊராட்சிகளே பழுதுபார்த்துக்கொள்ள வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 ஜூலை 5]

*திரு எம். ஆர். கண்ணன் : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இன்றைய மானியங்களை வரவேற்று, எனது தொகுதி மக்களுடைய வேண்டுகோளை இந்தச் சபை முன் வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, சென்னைவாழ் மக்கள் தமிழக அரசைப் போற்றி வருவதற்கான முக்கிய காரணங்களாக இருப்பவை வீராணம் திட்டம், கூவம் திட்டம், குடிசை மாற்று வாரியம் இவை மூன்றும் மிகமிக இன்றியமையாத திட்டங்களாகும். நமக்கெல்லாம் தெரியும், 1967 வரைக்கும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் மத்தியிலும், மாநிலத்திலும் இருந்து வந்தது. அவர்களுக்கு இந்த மூன்று பிரச்சினையிலும் எண்ணம் ஏற்பட்டதோ, என்னவோ, நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சி நடைபெறவில்லை. 1959-லே மாநகராட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றி, பொறுப்பை ஏற்றதற்குப் பின்னர் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதுவரை காங்கிரஸ் கட்சியின் கையில்தான் மாநகராட்சியின் நிர்வாகம் இருந்தது. சென்னையிலுள்ள நிலைமைக்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகிறார்கள். 1946-லேதான் சென்னை புறநகர் பகுதிகள் சென்னையுடன் சேர்க்கப்பட்டன. எக்ஸ்டெண்டெட் ஏரியாக்களுக்கு—புறநகர்ப் பகுதிகளுக்கு—1959 வரையில் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படாமல் இருந்தன. 1959-60 வரைக்கும் கிட்டத்தட்ட 15, 16 ஆண்டுகள் அப்படியே இருந்தன. 1959-லே கழகம் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர்தான் புறநகர் பகுதிகளுக்கு சாக்கடை வசதி, விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவையெல்லாம் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை சென்னைவாழ் மக்கள் மறக்க மாட்டார்கள். அப்படி அவர்கள் செய்ததனால்தான் சென்னையில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சிறிதுகூட இல்லாமல் போனதற்குக் காரணம். புறநகர்ப் பகுதிகளில் அபிவிருத்தி வேலை செய்துதான் சென்னையுடன் சேர்த்திருக்க வேண்டும். ஆனால், எந்தவித அபிவிருத்தி வேலைகளையும் காங்கிரஸ் ஆட்சி செய்யவில்லை. அவர்கள் செய்தது எல்லாம் பெரும் பணக்காரர்களுக்கு சலுகை செய்தார்களே தவிர, வேறு எதுவும் இல்லை. இங்கே பேசிய அம்மையார் அவர்கள் தவறாகச் சொல்கிறார். சென்னை நகரத்தின் நிலைமைக்கு தமிழக அரசுதான் பொறுப்பு என்று. அவர் கூற்று சரியானது அல்ல.

எனது தொகுதியிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாய், என்னுடைய தொகுதியில்தான் ஆரம்பிக்கிறது. அதை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே விளக்கமாகப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். பக்கிங்ஹாம் கால்வாயை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அடுத்து பேசின் பிரிட்ஜ் கன்ஸ்ட்ரக்ஷன். இது சில ஆண்டுக் காலமாக நடந்து வருகிறது. அந்தப் பகுதியில் போகிற வண்டிகளையெல்லாம் வால்டாக்ஸ் ரோடு பக்கமாகத் திருப்பிவிடுவதன்

காரணமாக விபத்துக்கள் ஏற்பட்டு, ஒன்றிரண்டு பேர் உயிர் இழந்ததற்கும் காரணமாக இருந்திருக்கிறது. மேலும் கத்திவாக்கம் ஹைரோடில் குடிசைகளைப் போட்டு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயில் ரீஃபைனரி, இண்டியன் ஆயில் போன்ற பகுதிகளுக்குச் செல்லுகின்ற இந்த ரோடு, அகலமாக இருக்கவேண்டும். இதை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு தேவைப்படுவதால், இந்த ரோடை அகலப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

அடுத்தபடியாக என்னுடைய பகுதியில் கிருஷ்ணப்ப நாயக்கன் குளம் என்று ஒன்று இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அதில் தண்ணீர் இருந்தது. இப்போது தண்ணீர் இல்லை. முன்னர் அந்தக் குளம் உபயோகத்தில் இருந்தது. இப்போது வெளிக்குச் செல்வதற்குத்தான் பயன்படுகிறது. சிலர் அந்தக் குளத்தை அசுத்தப்படுத்தி வருகிறார்கள். ஆகவே, நகராட்சி அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியை ஒரு மார்க்கெட்டாகவோ, அல்லது பார்க்காகவோ மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்டையார்பேட்டை ரயில்வே கேட், எந்த் அபிவிருத்தி வேலையை எடுத்துக்கொண்டாலும் வட சென்னை புறக்கணிக்கப்படுகிறது. தென் சென்னையில் அபிவிருத்தி வேலைகள் உடனுக்குடன் செய்யப்படுகின்றன. ஏனெனில் மந்திரிமார்களும், மற்றும் அதிகாரிகளும் தென் சென்னைப் பகுதியில்தான் இருக்கிறார்கள். வட சென்னை தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. ஆகவே, வட சென்னை புறக்கணிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். தண்டையார்பேட்டை ரயில்வே கேட், குறிப்பாக மேற்கே இருப்பவர்கள் கிழக்கே காலரா ஆஸ்பிட்டலுக்கும், கிழக்கிலுள்ள தீயணைப்பு வண்டிகள் மேற்கிலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு அவசர காலங்களில் வரவேண்டுமென்றால், ரயில்வே கேட் திறக்க அரை மணி, முக்கால் மணி நேரம் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அவசரத்திற்கு கிழக்கேயிருந்து மேற்கேயும், மேற்கேயிருந்து கிழக்கேயும் வர ரயில்வே கேட் தடையாக இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு ஓவர் பிரிட்ஜ் அல்லது கீழ்பாலமோ கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் கட்டடங்கள் எல்லாம் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

இன்னும் கவர்ன்மெண்ட் பிரஸ் க்வார்ட்டர்ஸ் இருக்கிறது. அவற்றையெல்லாம் நல்ல முறையில் கவனிக்கவேண்டும். இந்த ஆட்சியின் கொள்கைகளை, செயல்களை மக்கள் மனமார வரவேற்கிறார்கள். ஆட்சியின் திட்டங்களை செயல் முறைப்படுத்தும்போது, அதிகாரிகளாக இருப்பவர்கள், அருள்கூர்ந்து, 'இந்தப் பகுதியில் தாங்கள் இருந்தோம், தங்கள் காலத்தில் இன்னின்ன வளர்ச்சிப் பணிகளைச் செய்தோம், இன்னின்ன அபிவிருத்திகளைச் செய்தோம்" என்று எண்ணத்தக்க வகையில் காரியங்களை ஆற்ற





வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து, தங்கள் பகுதி வேலைகளைச் செவ்வனே செய்ய வேண்டும். இவர்களைக் கண்காணிப்பதற்கு ஏதோ ஒன்றிரண்டு பேர்களை நகரசபையோ, சர்க்காரோ வைத்திருக்கலாம். ஒவ்வொருவரையும் கண்காணிப்பது என்பது இயலாது. அப்படிக் கண்காணிக்க வேண்டுமென்றால் அதற்கே அதிக அதிகாரிகளை நியமிக்க வேண்டும். ஆகவே, அதிகாரிகளாக இருப்பவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து, நாணயமாக நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிசை மாற்றுவாரியம். இப்பொழுது குடிசைகளை மாற்றுகிறார்கள். குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் எனது தொகுதியில் அதிகமாக எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள். அங்குள்ள மக்கள் தனித்தனியான வீடுகள் கேட்கிறார்கள். சில இடங்களில் அது முடியும். பல இடங்களில் அது முடியாது. அப்படிப் பார்த்தால் சென்னை நகரத்தில் எல்லோருக்கும் தனித்தனி வீடு கட்ட இடம் கிடைக்காது. குடிசைகளை மாற்றி வீடுகளாகக் கட்டித் தரும்போது சின்ன இடமாக இருந்தாலும், போதுமான நல்ல முறையில் பவுண்டேஷன் வசதிகள் செய்து தர வேண்டும். இப்பொழுது சின்னக் குடும்பமாக இருந்தாலும், வருங்காலத்தில் பெரிய குடும்பமாக வளர்ச்சியடையக் கூடிய நிலையில் இருக்கிறது. நாம் இடத்தை அகலப்படுத்துவதற்கு வசதியில்லை. கட்டடம் மேல் நோக்கிதான் செல்ல வேண்டும். ஆகவே, கட்டடத்தை அமைக்கும்போது நல்லகெட்டியான முறையில் பவுண்டேஷன் அமைத்தால் மேலும் மேலும் கட்டடங்களை உயர்த்திக்கொண்டு செல்ல வழி பிறக்கும். கூடுதலாக கட்டடத்திற்கு ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் என்று ஆனாலும்கூட, பவுண்டேஷனை நல்ல முறையில் அமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே எம்.எல்.ஏ.-க்கள் பங்கு பெறுகிறார்கள். அந்தப் பகுதியின் அபிவிருத்திக்காக அவர்கள் குறிப்பிட்ட ஆலோசனைகளை லோகல் அதாரிட்டிக்குச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சென்னையிலுள்ள எங்களுக்கு எல்லாம் அம்மாதிரியான வாய்ப்பு இல்லை. சென்னையின் பெருவாரியான பணிகளை கார்ப்பரேஷன் செய்கிறது. பகுதிகளின் குறைபாடுகளை, அபிவிருத்திப் பணிகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் கார்ப்பரேஷன் கவுன்சில் கூட்டங்களில் கலந்து கொள்ள பிரதிநிதித்துவம் பெற வேண்டும். இதைப்பற்றி லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டர் அவர்களிடம் கூறியிருக்கிறோம். அவர்களும் செய்வதாகச் சொன்னார்கள். சென்னை நகர எம்.எல்.ஏ.க்கள் கார்ப்பரேஷனில் பிரதிநிதித்துவம் பெற வகை செய்ய வேண்டும். கார்ப்பரேஷன் என்ன என்ன அபிவிருத்திகளைச் செய்கிறதோ அதன் விவரங்களை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்ப வகை செய்ய வேண்டும். தவறு செய்தால் அதைச் சட்டமன்றத்திலே எடுத்துக்காட்டுவார்கள். என்ற அச்சமும் அதிகாரிகளுக்கு இருக்கும். வேலையும் நன்றாக

[திரு. எம். ஆர். கண்ணன்] [1971 ஜூலை 5

நடைபெறும். ஆகவே, கார்ப்பரேஷனில் பிரதிநிதித்துவம் வகிக்க வகை செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்ற நல்ல நிலைமைகளையெல்லாம் செய்கிற நேரத்தில் நம்முடைய அமைச்சர்கள் 'நாங்கள் சாமான்யர்கள்' என்று குறிப்பிடுகிறார்கள். நான்கு கோடி மக்கள் இவர்களுடைய பின்னால் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு வலிவு இருக்கிறது. ஏதோ அமைச்சர் தங்களைத் தாங்களே குறைபட்டுக் கொள்வது போல 'நாங்கள் சாமான்யர்கள்' என்று சொல்கிறார்கள். அதை மக்கள் தவறாக உணர்ந்துகொள்கிறார்கள். இப்படியெல்லாம் நாங்கள் அமைச்சர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறோம், அமைச்சர்கள் இவ்வாறு குறைப்பட்டுக்கொள்கிறார்களே என்று மக்கள் நினைக்கிறார்கள். ஃபார் இன்பர்மேஷன் ஸேக், ஏதோ ஓரிரு டிகிரி படித்துவிட்டு, இரண்டு, மூன்று பங்களாக்களும், கார்களும் வைத்திருப்பவர்கள்தாம் செல்வாக்குள்ளவர்கள் என்று சொல்ல முடியாது. நாம் அந்த அளவுக்குப் படிக்கவில்லையென்று அந்தக் குறைபாடு இருக்கலாம். ஒரு துறையிலே ஸ்பெசிபிக் நாலேட்ஜ் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எடுத்துச் சொல்லும்போது புரிந்துகொள்கிறோம். பர்ட்டிகுலர் சப்ஜெக்டில் டிகிரி வாங்கிவிட்டு, கார் வைத்துக்கொண்டு, பங்களாக்களில் இருப்பவர்கள்தாம் பிரபுக்கள், அவர்கள்தான் ஆட்சிக்கு வர வேண்டும். அவர்களைத்தாம் மக்கள் மதிப்பார்கள் என்று நம்முடைய அமைச்சர்கள் எண்ண வேண்டாம். நமக்கு மனித சக்தி தவிர வேறு எந்த சக்தியும் தேவையில்லை. இந்த அரசின் கொள்கைகளைப்பற்றி தமிழக மக்கள் பாராட்டி வருகிறார்கள். இவற்றைப்பற்றி அன்பர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள்.

அடுத்து, நாம் அபிவிருத்திப் பணிகளைச் செய்யும்போது சில சில தவறுகள் ஏற்படலாம். அதற்கு அமைச்சர்கள் பொறுப்பு அல்ல. அதைக் கவனிக்கிற அதிகாரிகள்தாம் பொறுப்பு. முரண்பட்ட கொள்கையாக ஏதாவது இருந்தால் அதிகாரிகள் எடுத்துச் சொன்னால், திருத்திக்கொள்ளலாம். அதிகாரிகள் இப்படிப்பட்டவைகளை தைரியமாக எடுத்துச்சொல்லலாம். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதற்காகவே இங்கே இருக்கிறோமே தவிர, சுயநலத்திற்காக அல்ல. காரியங்களை மேற்கொள்கின்றபொழுது அனுபவ வயது, அனுபவ அறிவுகூட வேண்டும். நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். மக்களுடைய நல்வாழ்விலே ஈடுபடும்போது, நாங்கள் பெரியவர்கள் நீங்கள் பெரியவர்கள் என்ற அளவிலே இருக்கக்கூடாது. மக்களுடைய தொண்டிலே கட்சி வித்தியாசம் காட்டக்கூடாது என்பதைத்தான் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு இருக்கிற முதல் எல்லாம் அது ஒன்றுதான். அந்த ஒரு முதலை வைத்துக்கொண்டு தான் மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகிறோம். இந்த அரசு மக்களுக்கு நல்ல பல பணிகளைச் செய்துவருகிறது. தொடர்ந்து



1971 ஜூலை 5] [திரு. எம். ஆர். கண்ணன்]

செய்துவரும் என்று சொல்லி எனக்குப் பேச வாய்ப்பினை நல்கிய தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது நான் பேச நிற்கிறேன். இங்கே பேசிய மதிப்புமிக்க நண்பர்கள் பலர் மானியத்தை ஆதரிக்கிறேன் என்று இனிமையாகச் சொல்லி விட்டு பிறகு குளம் இல்லை, பாதை இல்லை, ஆஸ்பத்திரி இல்லை, ரோடு இல்லை, தண்ணீர் வசதி இல்லை என்று சொல்வது எனக்கு விசித்திரமாக இருந்தது. அதை ஒப்புக்கொள்வதோடு எங்களுடைய குறைகளையும் எடுத்துக் கூறுகிறோம் என்ற எண்ணத்தோடுதான் அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் கிராமத்திலே பிறந்தவன். தலைநகரிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமமும் எனக்கு நன்றாகத் தெரியும். மரியாதைக்குரிய முதல்வர் அவர்களுடைய தஞ்சை மாவட்டம், மிக வறட்சியாக உள்ள இராமநாதபுரம் மாவட்டம் மற்ற மாவட்டங்கள், ஒவ்வொரு கிராமம்பற்றியும் நான் நன்றாக அறிவேன். கிராமங்கள் வளர்ச்சியடைந்திருக்கின்றன என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் பூரண வளர்ச்சி அடைந்து இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

நான் இராமநாதபுரம் மாவட்டத்திலே ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன், எம்.எல்.ஏ.-வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு சென்றிருந்தேன். அங்கே டோலியிலே தூக்கிச் சென்றார்கள் என்னை. காரணம் அங்கே சரியான பாதையில்லை, மணற் பாதை. தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அது வண்டற்பகுதி. பாதையில்லை, வரப்பிலே செல்ல வேண்டியிருந்தது. ஊருக்கும் பாதைக்கும் உள்ள தொடர்பு கிட்டத்தட்ட இரண்டரை மைல் இருந்தது. இதுபோன்று தமிழ் நாடு முழுவதும் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன். எந்தக் குளத்தில் குளிக்கிறார்களோ அதே நீரைத் தான் குடித்துக்கொண்டும் இருந்தார்கள். இப்பொழுதும் அது சில கிராமங்களிலே இருக்கிறது. அதேமாதிரி நிலையால்தான் நோய் வளர்கிறது. எல்லா மதிப்பு மிக்க நண்பர்களும் பேச்சிலே குடிநீர் பற்றிய பேச்சு மிகவும் அழுத்தமாகப் பேசப்பட்டது. நானும் அமைச்சர் அவர்களிடம் அதையே கூறுகிறேன். நாற்பது வருஷங்களுக்கு முன்பு நான் பார்த்த அலிபாதுஷா நாடகம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அரசர் செலவினங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது ஏடும் பேரேடும் உதைத்துக்கொண்டிருக்கும் பொழுது மேலே சில செலவினங்களைப்பற்றி ஏன் பேசுகிறீர் என்று கேட்டாராம் அமைச்சர். இங்கே இவ்வளவு பணம் என்று

ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். முதலீடு என்று சொல்லிவிட்டார்கள் அமைச்சர் அவர்கள். படிப்படியாகத்தான் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். நம்முடைய விண்ணப்பமும் இதுதான் அதை ஒப்பியும்தான், அதை மனதிலே வைத்து நாம் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறோம்.

கிராமங்கள்தான் ஆரம்ப அரசியல் பள்ளிக்கூடங்கள், அது மட்டுமல்ல அவைதான் ஆரம்ப சுகாதாரப் பள்ளிக்கூடங்கள். அங்கே பயிற்சி பெறுவதற்கு உள்ள சந்தர்ப்பத்தை நாம் மக்களுக்கு உண்டாக்கிக் கொடுக்கவேண்டும். அங்கேயிருந்துதான் தலைநகருக்கு வருகிறார்கள். நான் கிராமத்திலே பிறந்தவன். சென்னையிலே ஹார்பர் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். இவ்வாறு கிராமங்களிலிருந்து வருகிறவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தவேண்டும், அவர்களுக்கு கிராமங்களிலேயே அனுபவமும் ஏற்படுமாறு செய்து அந்த அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுக்க சர்க்கார் முயல்கிறது என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் பொருளாதாரம் தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள், அது உண்மை.

உணவு விஷயமும் பேசப்பட்டது. மக்களிடமிருந்து வசூல் செய்தும் சர்க்காரிடமிருந்து டோட்டும் இருபிரிவுகளாகப் பெற்று உணவு போடப்படுகிறது. வாத்தியார்களுக்கு இது பெரிய வேலையாக இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்றெல்லாம் பார்த்து கணக்கு எழுதி வைத்து இருக்கிறார்கள். இதை மாற்றி சர்க்காரே செய்யவேண்டும். இதனால் அவர்களுடைய சுமையும் குறையும், எழுதிக்கொண்டிருக்கின்ற புள்ளிவிவரக் கணக்குகளும் குறையும்.

குடிசை வாரியம், இதைப்பற்றி நாங்கள் ஒரு கூட்டத்தில் அண்மையில் பேசினோம். கிராமங்களிலே மட்டும் வாய்க்கால் வசதி இல்லாமல் டிச் வசதியில்லாமல் இருக்கிறது என்பதல்ல. தலைநகரிலும் இருக்கிறது. தலைநகரின் உட்பகுதியிலே பார்த்தால் அந்தக் குறைபாடு இருக்கிறது. வாரியத் தலைவர் அவர்கள் இதற்குக்காரணம் நெருக்கடிதான் என்று சொன்னார்கள். நான் தேர்தலின்போது ஒவ்வொரு முடுக்குக்கும் சென்று பார்த்ததில் புழுக்கள் கூடியிருப்பதைப்போன்றுதான் மக்கள் இருக்கிறார்கள். அதற்குப் பரிகாரமாகத்தான் இந்த வாரியத்தை அமைத்திருக்கிறார்கள். அதனுடைய மறுமலர்ச்சியில் எதிர்காலத்தில் இவற்றையெல்லாம் சுத்தமாக ஆக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். அந்தத் திட்டத்தை என்னிடம் காட்டினார்கள், நான் பார்த்தேன், மிக்கமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டவுன் புறங்கள் வளர்ச்சியடைவதால் கிராமங்களிலிருந்து டவுனுக்கு வருகிறார்கள். கிராமங்களைப் பராமரிக்கும் வேலை போதாது. தயவுசெய்து சர்க்கார் அவர்களுக்குக் குடிநீர் வசதி குளங்கள் வசதி செய்து கொடுக்க வேண்டும். குளங்கள் தமிழகத்தில் பல இருக்கின்றன, பல நூறு என்றுகூடச் சொல்லலாம், அவையெல்லாம் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் தண்ணீர் தேக்கமுடியவில்லை. குளங்களைத் தூர் எடுத்து தண்ணீர் தேக்கினால் வீண் விரையமாகின்ற தண்ணீர் தேக்கப்படுமானால் விவசாயத்திற்கும் மக்களுடைய சுகாதாரத்திற்கும் அது பயன்படும்.



அரிசனங்களுக்கும் கிணறுகள் வசதி செய்துகொடுக்கப்பட்டிருப்பது உண்மை. மற்றவர்கள் குளிக்கும் குளங்களில் அவர்கள் குளிப்பதற்கு உரிமையில்லை. இப்படித் தூர் எடுக்கும் குளங்களில் சில குளங்களைக் கிராமங்களில் அவர்களுக்கு என்று ஒதுக்கி வைப்பது நல்லது. அவர்களை நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாகச் செய்வதுதான் முதல் படியாக இருக்க வேண்டும். அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று விரும்புகிற நாம் இதைப் பற்றிச் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் குறிப்பிடுவது கிராமங்களில் உள்ள அரிசனங்களைக் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்களுக்குக் குடிநீர் வசதி, குளிக்கும் வசதி இவற்றை நிச்சயம் செய்து கொடுக்கவேண்டும். அதற்கான திட்டத்தை சர்க்கார் செய்யும் என்று கூறி இந்த மானியத்தை நான் வரவேற்கிறேன் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் குடிசை வாரியம் சம்பந்தமாக மரியாதைக்குரிய உறுப்பினர்கள் பேசிய சில கருத்துக்களுக்கு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சபையின் ஆரம்பத்திலேயே எனது அருமை நண்பர் சுரேந்திரன் அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணை மீது இங்கே சிறிய நிகழ்ச்சி நடைபெற்றது எல்லோருக்கும் கவனம் இருக்கும். நண்பர் சுரேந்திரன் அவர்களையே கூப்பிட்டு என்ன குறை குடிசை மாற்று வாரியத்தில் என்று கேட்டேன். முதலமைச்சர் அவர்கள், குற்றங்கள் இருந்தால் உறுப்பினர்கள் கூறலாம். குறைகள் இருந்தால் குடிசை வாரியம் திருத்திக் கொள்ளும் என்று சொன்னார்கள். அதை நான் மனதார வரவேற்கிறேன். குறைகள் இருக்குமானாலும், குற்றங்கள் இருக்குமானாலும் இந்தச் சபையில் மட்டுந்தான் பேசவேண்டுமென்பது அல்ல; தனிப்பட்ட முறையில் என்னிடத்தில் சுட்டிக்காட்டுவார்களானால் அதற்கு நான் பெரிதும் நன்றியுடையவனாக இருப்பேன். ஏனென்றால் குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டிருப்பதே ஒரு பெரிய மனிதாபிமானப் பிரச்சினை என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

குடிசை மாற்று வாரியத்தில் பணியாற்றுகிற அதிகாரிகள், எஞ்சினியர்கள் அவ்வளவு பேரும் எந்த அளவுக்குச் சுறுசுறுப்போடும், வேகத்தோடும் பணியாற்றுகிறார்கள் என்பதை சென்னை

மாநகரத்தில் இருப்பவர்கள் அனைவரும் உணரக்கூடும். வேகமாக என்பதோடு மட்டுமல்லாமல் கூடிய அளவு சிக்கனமாகவும் பணி யாற்றுகிறார்கள். ஐந்து எஞ்சினியர்கள் இருக்குமிடத்தில் மூன்று பேர் அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு சிக்கனமாகச் செயல்பட்டு வருகிறது.

நண்பர் சுரேந்திரன் அவர்களைக் கேட்ட நேரத்தில் அவர்கள் சொன்னார்கள்—'நான் டாக்சியில் போய்க் கொண்டிருந்தேன். டாக்சிக்காரர் சொன்னார். ஒவ்வொரு குடிசைப் பகுதியிலும் ஃபோட்டோ எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லி ஃபோட்டோ எடுக்கும் நேரத்தில் யார் யாரையோ போட்டோ எடுக்கிறார்கள். அதைச் சுட்டிக் காட்டத்தான் இப்படி வெட்டுப் பிரேரணை கொடுத்தேன்' என்று சொன்னார்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் இந்தப் புகைப்படம் எடுப்பது சம்பந்தமாகக் குறிப்பிட்டார்கள். ஃபோட்டோ எடுப்பது இன்றையதினம் ஒவ்வொரு குடிசைப் பகுதியிலும் சொந்தக்காரர், வாடகைதாரர் இருவரையும் எடுக்கிறார்கள். அதோடு அவர்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரிக்கிறார்கள். 'சோஷியோ எகனமிக் சர்வே' என்ற முறையில் அந்தப் பணி நடக்கிறது. அந்தப் பணி மகத்தான பணி, பெரிய பணி. அந்த மக்கள் எந்தக் கிராமத்தில் இருந்து வந்தார்கள், எப்படி அந்த ஏழை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை குழந்தைகள் இருக் கின்றன, வருமானம் என்ன, தொழில் என்ன, மாடு, கன்று, ஆடு, கோழி இவை எல்லாம் வைத்திருக்கிறார்களா என்ற எல்லா விவரங் களையும் சேகரித்துவிட்டு அவர்களுடைய குடும்பத்தை வைத்து ஃபோட்டோ எடுக்கிறார்கள். எதிர்காலத்தில் கிராமங்களிலிருந்து சென்னைக்கு அதிகமாக வந்துவிட்டால் யார் என்ன என்று கண்டு பிடிக்க இந்தப் புகைப்படங்கள் உதவும் என்பது கருத்து. புகைப் படம் எடுக்கும்போது மாமன், மைத்துனன், பக்கத்தில் இருப்பவர் கள் எல்லோரையும் நிற்க வைத்து இவ்வளவு பேரும் இந்த வீட்டில் தான் இருக்கிறார்கள், படம் எடுங்கள் என்று சொல்லுகிறார்கள். 400, 500 குடிசைகள் இருக்கும் பகுதியில் 30 அலுவலர்கள் சேர்ந்து சென்று விவரங்களைச் சேகரிக்க முற்படும்போது அங்கு வருகின்ற எதிர்ப்புகளைச் சமாளிப்பதே கடினம். குடிசை வாரியத்தின் கொள்கை அந்த மக்கள் என்ன சொல்கிறார்களோ அமைதியாக அதைக் கேட்டுக் கொண்டு, அவர்களுக்கு அனுசரணையாக இருந்து கேட்டுக் கொண்டு, வந்த பிறகு செய்ய வேண்டிய நேரத்தில் கெடுபிடியாகச் செய்ய வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். அந்த வகையில் யார் யார் வந்து புகைப்படம் எடுக்க வேண்டு மென்று சொன்னாலும் அவர்களைப் புகைப்படம் எடுக்க வேண்டு மென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியில் இருந்து புகைப்படம் எடுத்து விட்டு இன்னொரு பகுதியில் புகைப்படம் எடுக்கும்போது ஏற்கெனவே புகைப்படம் எடுக்கப்பட்டவர்கள் மறுபடியும் இன்னொரு பகுதியில் எடுக்கும்போது நிற்க முடியாது. நின்றாலும் கண்டுபிடித்துவிட முடியும்.





அதோடு, 1957 முதல் இன்றுவரை சென்னை மாநகரத்தில் இருக்கும் வோட்டர் லிஸ்டை வைத்துக் கொண்டு, ஐந்து ஆண்டு லிஸ்டை வைத்துக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்டவர் எந்த இடத்தில் இருந்தால், அங்குள்ள வோட்டர் லிஸ்டில் அவர் பெயர் காணப்பட்டதா என்பதை செக் பண்ண ஸ்க்ரூட்டினி செக்ஷன் வைத்திருக்கிறோம். தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பக்டர் மற்ற அதிகாரிகளைக் கொண்டு 'ஸ்க்ருட்டினி' செக்ஷன் அவற்றையெல்லாம் கவனிக்கிறார்கள். குறிப்பிட்ட ஒருவருடைய பெயர் சரியாக இருந்து கடந்த 15 ஆண்டுகளிலே அந்தப் பகுதி யிலே இருந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டால் கடைசியாக ரேஷன் கார்டு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க இன்னொரு அதிகாரி இருக்கிறார். அவர், அந்தக் குறிப்பிட்ட நபர் அந்த இடத்தில் இருப்பவர்தான் என்று உறுதியாகத் தெளிவு படுத்திய பிறகு அங்கே உறுதியாக இருப்பவர்களின் பட்டியலைத் தயாரித்து அந்தக் குறிப்பிட்ட பகுதியில் பொதுவான இடத்தில் வைத்து விடுகிறார்கள். அவ்வாறு வைத்த பிறகு இவர் இல்லை, அவர் இல்லை என்ற புகார்கள் வருமானால்—புகார்கள் ஏராளமாக வரு கின்றன—அந்தப் புகார்களைப் பற்றி உடனடியாகக் கவனிக்க தலைவருடைய நேரடிப் பார்வையின் கீழ் செயலாளருடைய நேரடிப் பார்வையின் கீழ் உள்ள அதிகாரிகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் கிடையாது. விஜிலென்ஸ் செல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் சென்று புகார்களைப் பற்றி விசாரித்து வருகிறார்கள். இப்படி நல்ல முறையில் புதிதாக யாராவது பெயரைச் சொல்லிப் புகுந்துவிடக் கூடாது என்பதற்காக தக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

இப்போது எடுக்கப்படும் புகைப்படங்கள் இன்னொரு வகை யிலும் பயன்தரும் வகையில் இருக்கிறது. இவர்களுக்கு குடி யிருப்புகள் கட்டிக் கொடுக்கும் நேரத்தில் 10 ரூபாய், 15 ரூபாய் வாடகை வாங்கப்படுகிறது என்பது தெரியும். ஒருசிலர் அந்த டெனமெண்டை 2,000 ரூபாய்க்கு விற்று விட்டுப் பக்கத்தில் போய் இன்னொரு குடிசை போட்டுக் கொள்ளுகிறார்கள். புகைப்படம் எடுக்கப்பட்ட பிறகு அந்த குடியிருப்புகளில் குடியிருப்பவர் களுக்கு பாஸ்புக் போன்று புகைப்படத்தை ஒட்டி யார் யார் குடி யிருக்கிறார்கள் என்பதற்காக வழங்கிவிடுகிறார்கள். அதைப் பரிசீலிக்கச் செல்லுகிறவர்களோ அல்லது வாடகை வசூலுக்குச் செல்லுகிறவரோ பில் போடுவதற்கு முன்னால் உரியவர் இருக்கிறாரா என்று பார்த்து அப்படி உரியவர் இல்லாவிட்டால் மறுநாளே அந்த வீட்டை வாரியம் எடுத்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு குடிசை வாரியம் முடிவெடுத்திருக்கிறது.

வீட்டுப் பிரச்சினையைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். இது ஒரு பெரிய பிரச்சினை. தமிழக அரசைப் பொறுத்தவரை உணவு, உடை, வீடு இம்மூன்றும் மக்களுக்குக் கிடைக்க கவனம் செலுத்தி வருகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். சென்னை

மாநகரத்தில் வீடுகள் கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது, கிராமப் பகுதிகளில் எல்லா இடங்களிலுமே வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது அரசின் திட்டம். அதற்கென்று இருக்கிற ரூரல் ஹவுசிங் ஸ்கீமுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்த்தால் நம்மால் அந்தக் காரியங்களை நிறைவேற்ற முடியாது என்பது தெரியும். ஒரு சில லட்சம் ரூபாய்தான் 375 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சேர்த்து ஒதுக்கப்படுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் பிளானிங் கமிஷனைப் போட்டிருப்பது அனைவருக்கும் தெரியும். அதன் முக்கியமான பிரச்னையாக வீடு கட்டும் திட்டமும் இருக்கிறது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே நமக்கு நன்றாகத் தெரியும். பம்பாயை விட, டெல்லியை விட, கல்கத்தாவை விட நமக்கு இருக்கிற வேலைகள், பொறுப்புகள், அதிகமானவை. பம்பாய் மாநகரத்தைப் பொருத்தவரை சுமார் ஒன்பது லட்சம் வீடுகள்தான் தேவை. அங்கு இருப்பது 4½ லட்சம் வீடுகள். அங்கே தேவைப்படுவது 4 லட்சம் வீடுகள் அளவுக்குத்தான். கல்கத்தாவை எடுத்துக் கொண்டால் 6½ லட்சம் வீடுகள் தேவைப் படுகின்றன. 4½ லட்சம் வீடுகள் எற்கனவே இருக்கின்றன. ஆக, இரண்டு லட்சம் வீடுகள் கட்டினால் போதும். டெல்லியில் 6¾ லட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. ஏற்கெனவே 3½ லட்சம் வீடுகள் இருக்கின்றன. மேற்கொண்டு 3 லட்சம் வீடுகள் கட்டினால் போதும். ஆனால் சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் இருக்கின்ற வீடுகளோ 1¼ லட்சம் தான். கிட்டத்தட்ட 4 லட்சம் வீடுகள் கட்ட வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண் டிருக்கிறோம். எவ்வளவு வேகமாக முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு வீடுகளைக் கட்டி வருகிறது என்ற பட்டியலைப் பல முறை எடுத்துச் சொல்லியாயிற்று.

வீட்டு வசதி வாரியம் ஒரு பக்கம் வேலைகளைச் செய்கிறது. மத்திய தர மக்கள், அவர்களுக்குக் கீழே உள்ள வசதியற்றவர் களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறது. 1967-ம் ஆண்டு வரை வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக 10,033 வீடுகள்தான் லோ இன்கம், மிடில் இன்கம் எல்லாம் சேர்த்து கட்டப்பட்டன. செலவு செய்தது 16 கோடி ரூபாய். இருபது ஆண்டு காலக் கணக்கைச் சொல்லுகிறேன். ஆனால் 1967-ல் இருந்து 71-க்குள் நான்கு ஆண்டுக் காலத்தில் 13,400 வீடுகள் லோ இன்கம், மிடில் இன்கம் என்ற முறையில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செலவு 17 கோடி ரூபாய். இருபது ஆண்டு காலத்தில் 16 கோடி ரூபாய், நான்கு ஆண்டு காலத்தில் 17 கோடி ரூபாய். வருகிற 1971-72ம் ஆண்டில் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய், செலவில் 7,600 லோ இன்கம், மிடில் இன்கம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வீட்டு வசதி வாரியம் திட்ட மிட்டிருக்கிறது. வாரியத் தலைவர் அவர்கள் அரசு தரும் பணத்தை



மட்டும் நம்பி இராமல் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும், மத்திய சர்க்கார் அமைத்திருக்கும் ஹவுசிங் போர்டு கார்ப்பரேஷன் மூலமாகவும் பணத்தைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அதேபோல் குடிசை வாரியத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளை விட 10 மடங்கு அதிகமாக இன்றையதினம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றது என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நண்பர் திரு. கே. எம். எஸ் அவர்கள் பேசுகிற நேரத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அரசாங்கத்திலிருந்து கடனாகவும், மான்யமாகவும் தொகைகள் பெறுகிறோம். ஆகவே, வீடுகளைக் குறைந்த வாடகைக்கு அளிக்கலாம் என்று கேட்டார்கள். இன்றைக்கு அந்த குடியிருப்புகளுக்கு வசூலிக்கப்படும் வாடகை மிகக்குறைவு. ஒவ்வொரு குடியிருப்பும், 3 அடுக்கு மாடி, 4 அடுக்கு மாடி என்று கட்டியிருக்கிறோம். 3-வது மாடி, 4-வது மாடியில்கூட தண்ணீர் மேலே வருவதற்கான முறையில் வசதிகள் செய்து தந்து இருக்கிறோம். ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார மீட்டர் பொருத்தி யிருக்கிறோம். ஆனால் வசூலிக்கப்படுகிற வாடகை 15 ரூபாய் தான். இப்படி நம்முடைய அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் மொத்தமாக வசூலிக்கப்படவேண்டிய வாடகை கிட்டத்தட்ட ரூ. 40-50 நிதி அமைச்சர் அவர்கள் திருத்துகிறார்கள். ரூ. 55 வாங்க வேண்டும். ஆனால் குடிசை வாழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இன்று ரூபாய் 15 வாங்கிக்கொண்டு வருகிறோம். திரு. கே. எம். எஸ் ஒரு யோசனை சொன்னார்கள். ரூபாய் 2 கோடி மான்யம், ரூ. 2 கோடி கடன் என்று சொல்வதற்குப் பதிலாக ரூ. 4.5 கோடி என்று மொத்தமாக கொடுத்து விட்டால், அதை வைத்து பல கோடி ரூபாய்கள் பெருக்கிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். ரூபாய் 5 கோடி பணத்தைக் கொடுத்துவிட்டால் டில்லியில் அதை வைத்து ரூ. 25 கோடி சம்பாதித்து இருக்கிறார்கள். குடிசை வாரியத்தைப் பொறுத்தவரையில் சில இடங்களில் தவணை முறை யில் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை போட்டு இருக்கிறோம். திருமதி. ஜோதி அம்மாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார் கள். அது இந்த அரசுக்கு உடன்படாத கருத்து. அழகான மெரினா இருக்கிறது. அங்கே வாழ்கிற மீனவப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் இன்றைய தினம் அங்கேயே குடி இருப்பு கட்டிக் கொடுக்கிறீர்கள். அவர்களுக்கு எல்லாம் அங்கேயே குடியிருப்பு கட்டிக்கொடுக்காமல் அவர்களை எல்லாம் வெளியேற்றி விடக் கூடாதா என்று கேட்டார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வெளியேற்றப்பட வேண்டு மென்று சொல்லவில்லை. அதே இடத்தில் வீடு கட்டிக்கொடுப்பதை விட வேறு இடத்தில் கட்டிக்கொடுப்பது நல்லது என்று தான் சொன்னேன். மீனவர்கள் குடியிருப்பு மெரினாவில் இருப்பது

அவ்வளவு நல்லதல்ல. மீனவர்களை மட்டும் பார்த்தால் முடியாது, மற்ற மக்களும் நம் நாட்டு மக்கள் தான். அவர்களுடைய நன்மையையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் எத்தனை முறை நான் அலைந்து இருக்கிறேன் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னொரு இடத்திற்கு அவர்களை கொண்டு செல்லச் சொல்கிறார்கள். மீனவப் பெருங்குடி மக்களை வெளியேற்ற வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், அவர்கள் சொல்கிற பதில் எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மீனவர்களைக் கேட்டால் நாங்கள்தான் சென்னையில் 1,000—2,000 ஆண்டுகளாக இருக்கிறோம்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதற்கு மற்றவர்களை வெளியேற்றி விடலாம். அவர்களுக்குத்தான் ஒரு க்ளேம் இருக்கிறது என்று சொன்னால், அவர்களை வெளியேற்றுவதை விட மற்றவர்களை வெளியேற்றி விடலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** திருமதி ஜோதி வெங்கடாசலம் போன்ற வசதியானவர்கள் தாம்பாம் அருகில் செல்ல முன் வருவார்களானால் முன்மாதிரியாக இருக்கும். நாம் வசதியாக வாழவேண்டுமென்று கருதுகிறோம். ஏழைகள் எப்படியாவது போகட்டும் என்று கருதும் குணம் எப்படித் தான் காங்கிரஸ்காரர்களுக்கு வந்ததோ தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குடிசை வாரியத்தின் தலைவர் மீனவர்களுக்கு, அம்மையார் அவர்கள் சொன்னது போல், மெரினா கடற்கரையில் வீடுகள் அமைக்கக்கூடாது என்று கூறியதற்கு அளித்த பதிலாகும். அதைத் தவறாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. மீனவர்களுக்கு மாத்திரம் தான் இந்த அரசு இருக்கிறதா என்று ஜோதி அம்மையார் கேட்டது முறையல்ல. மீனவர்கள் இதைக் கேட்டால் உள்ளபடியே வருத்தப்படுவார்கள். அவர்கள் அவசரத்தில் பேசுகிற நேரத்தில் அது தவறாக வந்து விட்ட வார்த்தையாகும். போசுகிறபோது, புண்படுத்துகிற வார்த்தை எது, பண்படுத்துகிற வார்த்தை எது என்று தெரியாமல் பேசிவிட்டார்கள். கடற்கரை ஓரத்தில்தான் மீனவர்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுடைய தொழில் எல்லாம் கடற்கரையில்தான் இருக்கிறது. கடலை நம்பி வாழ்கிறார்கள், அவர்களைக் கொண்டு போய்ப் பொது இடத்தில் வைத்து விட்டால், மீனவர்களுக்கு நாம் செய்யும் பாதகமான காரியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அவர்கள் கூறியது போல், குடியிருக்கும் இடம் தூய்மையாக இருக்கவேண்டும் அழகாக இருக்க வேண்டும் என்பதிலே குடிசை வாரியம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. எங்கெங்கு குடிசைப்பகுதி இருக்கிறதோ அங்கெல்லாம் நம்முடைய செய்தித் துறை தயாரித்த படத்தை காண்பிக்கிறோம். அதிலே எப்படி குழந்தைகளை வளர்ப்பது, எப்படி அதை அழகுற வைத்திருப்பது என்று சொல்லிக்கொடுக்கும் வகையில் படங்கள் ஒவ்வொரு குடிசைப்பகுதியிலும் காட்டப்படுகின்றன. அவர்களுக்கு நல்ல ஒழுங்கையும், ஒழுக்கத்தையும் இதன் மூலம் பிரசாரம் செய்கிறோம். முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் இந்த மெரினா கடற்கரையில் குடிசைப்பகுதி இருக்கிற காரணத்தால், அந்த நொச்சிக்குப்பம் பகுதியை, குடிசை வாரியம் மிகவிரைவில் நல்ல வீடுகள் உள்ள பகுதியாக மாற்றி விடும்.



இன்னொரு உறுப்பினர் கண்ணன் அவர்கள் சொன்னார்கள். நல்ல அஸ்திவாரம் போட்டு அந்த வீடுகளைக் கட்டவேண்டும். இப்போது 3, 4 அடுக்கு என்று போட்டு கட்டுகிறோம். நாளை 6, 7 அடுக்கு போடவேண்டிய சூழ்நிலை வரலாம், என்று சொன்னார்கள். அதற்கான ஏற்பாட்டை வைத்துதான் இப்போது அஸ்திவாரம் போட்டு வருகிறோம். அதோடு மட்டுமல்ல, அவருக்குக் குறை வேண்டாம், அவருடைய தொகுதியில் இந்த ஆண்டு 300-க்கு மேல் குடியிருப்புகள் கட்ட குடிசை வாரியம் தீர்மானித்திருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக ஓரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். திரு. ஹாண்டே அவர்கள், பூங்கா நகர், ஜோதி அம்மாள் நகர், அன்பழகன் நகர் என்று அங்கிருக்கும் மக்கள் வாழ்கிற பகுதியில் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடம் ஜெனரல் ஹாஸ்பிடலுக்கு பக்கத்திலே உள்ள பாலத்திற்கு அடியில் இருக்கிறது. அதைக் காங்கிரஸ்காரர்கள் ஜோதி அம்மாள் நகர் என்றும், முன்னேற்றத்துக் கழகத்துக்காரர்கள், அன்பழகன் நகர் என்றும் சொல்கிறார்கள். சமீபத்தில் சென்று கொண்டிருந்த இரண்டு கார்கள் விபத்துக்குள்ளாகி 10-15 பேர் விபத்துக்கு உள்ளானார்கள். அந்த இடத்தில் உள்ளவர்களை நல்ல இடத்தில் வாழச் செய்ய முயற்சிகள் எடுத்து வருகிறோம். சரியான இடம் கிடைக்கவில்லை. இது பற்றி நேற்று கூட கல்வி அமைச்சர் அறையிலே பேசினோம். நேப்பியர் பூங்காவில் கொஞ்சம் இடம் ஒதுக்கி வைக்கலாம் என்று உத்தேசித்து இருக்கிறோம். இப்படிப்பட்டவர்கள் கண்ட கண்ட இடங்களில் குடிசை போட்டு இருந்தால், அவர்களை எல்லாம் நல்ல இடத்திற்கு கொண்டு போய் வைப்பதில் குடிசை வாரியம் இந்த 3½ மாதத்திற்குள் கிட்டத்தட்ட 12 பகுதிகளில் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அவர்களுடைய விருப்பத்தின்பேரில்தான் இட மாற்றங்களைச் செய்கிறோம்.

குடிசை வாரியம் ஆற்றி வருகிற பணிகளை பொருத்த வரையில் எந்த அளவுக்கு ஏழைகளுக்கு நல்லது செய்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். மீனவப் பெருங்குடி மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டித் தந்து நல்வாழ்வு கொடுத்து இருக்கிறோம். வீடுகளைக் கட்டு

வது மட்டுமல்ல, 300 குடியிருப்புகள் என்று சொன்னால் ஒரு மருந்தகம் ஏற்படுத்திக் கொடுக்கிறோம். பார்க் வசதி செய்து தருகிறோம். பள்ளிக்கூடம் கட்டித் தருகிறோம். சமூகக் கூடங்கள் அமைத்துத் தருகிறோம். இப்படி திட்டமிட்டு காரியங்களை இந்தக் குடிசை வாரியம் ஆற்றி வருகிறது. அங்கே வாடுகிற மீனவர்கள், கைத்தறி நெசவாளர்கள் குடிசைப் பகுதிகள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலனிகளாக, ஐடியல் காலனிகளாக மாறவேண்டுமென்பது குடிசை வாரியத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. அந்த வாரியம் செவ்வனே நடைபெற நல்லுரைகளும், நல் ஆலோசனைகளும், ஏதாவது குற்றம் குறை இருக்குமானால், அதை இந்த மன்ற உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். எந்தவிதமான பிரதிபிரயோசனமும் எதிர்பார்க்காமல், ஒரு பதவியை வகிக்கிறோம் என்ற எண்ணம் இல்லாமல், ஒரு சமூகப் பணி, எங்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் மனதில் வைத்து இருந்த பணி. அந்தப் பணியை செவ்வனே செய்ய வேண்டுமென்று ஆசையோடு பணியாற்றிக் கொண்டு இருக்கிறேன். அதற்காக உங்களுடைய ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் எக்ஸ்ப்ளனேஷன், சார், குடிசை வாரியத் தலைவர் கூறும்போது, போட்டோ எடுப்பதில் தவறுகள் ஏற்படா என்று கூறினார்கள். நான் கேள்விப்பட்டது என்னவென்றால், குடிசைகளில் வாழாதவர்கள் சான்றிதழ்கள் பெற 500 ரூபாய் கொடுத்தால் கிடைக்கிறது என்று பேசப்பட்டது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் சுரேந்திரன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், சான்று இதழ்கள் தனிப்பட்டவர்களால் வழங்கமுடியாது. அப்படி யாராவது ஏமாற்றினார்கள் என்பதை என்னிடம் தெரிவித்தால், அப்படிப் பட்டவர்மேல் கிரிமினல் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறோம். சான்றிதழ்கள் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு, நானே ஒவ்வொன்றாகப் பார்த்துப் பரிசீலனை செய்து கையெழுத்துப் போடுகிறேன். ஆகவே, அதில் அச்சம் தேவை இல்லை. அதை மற்றவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே பல வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு, பல அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, அதிகமாக மக்களோடு அதிகத் தொடர்பு கொண்டு இருக்கும் இலாகா இந்த இலாகா. கிராமாந்தரங்களில் வாழும், லட்சக்கணக்கான மக்களோடு, அவர்களுடைய அன்றாட வாழ்வோடு தொடர்பு கொண்டது இந்த இலாகா. நகரங்களிலும், மற்ற இடங்களிலும் உள்ள மக்களுக்கு உதவிகள் செய்யும் அளவில், ஊக்கம் அளிக்கும் அளவில், இந்த இலாகா பல காரியங்களைச்





செய்து வருகிறது. என்னுடைய உரையிலே குறிப்பாக ஒன்றிரண்டு காரியங்களை மட்டும் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

சென்னை மாநகராட்சியில் மூன்று வருஷத்திற்கு ஒரு முறையாக தேர்தல்கள் நடக்கிறது. அதை ஐந்து வருஷமாக மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஆலோசித்து வருவதாக நான் நம்பகமாக அறிகிறேன். மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்பதை, மற்றைய சட்டங்களில் அப்படி இருக்கும் போது, இதை மாற்ற வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன். இந்த மாதிரி ஆயுள் காலத்தை நீடிப்பது, ஜனநாயகத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பானது என்கிற குற்றச்சாட்டைக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி பல கருத்துக்களையும் பல உறுப்பினர்களும் கூறினார்கள். அவற்றையெல்லாம் நல்ல முறையில் பரிசீலித்து, குடிசைவாழ்மக்கள் நன்மைகளை அடையும் வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும். பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். குடிசைப் பகுதிகள் மாநகராட்சிப் பகுதி மட்டுமின்றி, ஏனைய பகுதிகளிலும் இருக்கின்றன. குறிப்பாக நகரங்களிலும், கிராமங்களிலும், மிகவும் பின்தங்கியவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருப்பதற்கு இடம் இல்லாமல் இருப்பதால், அவர்களுடைய தேவையைப் பொறுத்துச் செய்ய அரசாங்கம் என்னென்ன வழிவகைகளைச் செய்ய இருக்கிறது என்பதை வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், லெவல் எடுத்து, வீடில்லாதவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க என்ன திட்டம் இருக்கிறது என்பதையும் விளக்க வேண்டும். அதேமாதிரி, மற்ற நகரங்களில் எந்தவகையில் கையாளப் போகிறார்கள் என்பதையும் விளக்க வேண்டும்.

பொதுவாக ஏழை மக்களோடு அதிகமாகத் தொடர்பு கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் நிலைமைகளை எடுத்துக்கூறினார்கள். இன்று மாவட்ட வளர்ச்சிக் கழகம் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இந்த மன்றங்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்கு நான்-அபிஷல் தலைவர் இருக்க வேண்டும் என்பதை எல்லாக் கட்சி உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். அந்த அளவில் சட்டத்தைத் திருத்தி, அதை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த உத்தியோகப் பற்றற்றவர்கள் ஜனநாயகப் பண்புடையவர்களாக இருப்பதால், அவர்கள் தலைவராக இருக்கும் வகையில் விரைவில் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மிகுந்த அதிகாரங்கள், குவியலான அதிகாரங்கள் இருக்கின்றன. வேலைப் பளுவு அதிகமாக இருப்பதால், இதற்குப் போதிய அளவில் கவனம் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வேலையினால் கஷ்டமும், சங்கடமும் ஏற்படுகிறது என்ற கருத்து நிலவுகிறது. குறிப்பாக நாமெல்லாம் உள்ளாட்சியில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள். உள்ளாட்சி எங்கேயிருக்கிறது என்கிற ஐயப்பாடு வந்துவிடுகிறது. இதை அரசாங்கத்தின் ஒரு இலாகாவாகக் கருதுகிறார்களே தவிர, ஜனநாயகம் மலரவில்லை. ஜனநாயக முறைப்படி மாற்றி நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். இன்னும் ரோடுகளைச் செப்பனிடுவதில், இணைப்புச் சாலைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும். அதே மாதிரி, உற்பத்தி பெருகக்கூடிய திட்டங்களுக்கு வளர்ச்சிப் பணியில் முதலிடம் கொடுக்க வேண்டும். அப்படியானால்தான், துன்பத்திலும், தொல்லையிலும் துவண்டு கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கு புனர்வாழ்வு ஏற்பட முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இணைப்புச் சாலைகளுக்கு அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் நில ஆர்ஜிதம் சம்பந்தமாக பல கஷ்டங்கள் இருக்கின்றன. துரிதமாக நிலங்களைக் கையகப்படுத்த அதிகாரிகள் உடந்தையாக இருக்க வேண்டும். இன்றைக்கு இருக்கும் சட்டத்திலே ரோடுகள் போட இந்தக் கஷ்டத்தின் காரணமாக பல ஊராட்சி ஒன்றியங்கள் கஷ்டப்படுகின்றன. அதைப் பற்றி அதிகமாக இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் பலரும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைத் திருத்தி, அதிக அதிகாரங்களை ஒன்றியத்திற்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் ஊராட்சி மன்றங்கள் முனைந்து இருக்கின்றன. பஞ்சத் துயர் தணிப்பு என்ற தலைப்பில் பல இடங்களில் பாதுகாக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டிகள் அமைத்திருக்கிறார்கள். ஆனால், உண்மையான நிலை என்னவென்றால், மேல் தொட்டிகளெல்லாம் இயங்காத நிலையில் இருக்கின்றன. பழுது அடைந்திருக்கின்றன. குறிப்பாக எங்கள் ஜில்லாவில் பலவிடங்களில், பல கிராமங்களில் இந்த மாதிரியான நீர்த் தொட்டிகள் செயலற்று இருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு முன்பு பப்ளிக் ஒர்க்ஸ் செக்ரடரியாக இருந்த உயர்திரு திருமலை அவர்கள் எங்கள் ஜில்லாவில் இதை ஆராய வந்தார்கள். அதன் பிறகு சர்க்காருக்கு ஒரு அறிக்கையும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணி செய்ததில் பல குற்றங்கள், கோளாறுகள் இருக்கின்றன; இதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இது ஒரு பகுதியில் மட்டுமல்லாமல், ஜில்லாப் பிரச்சினை மட்டுமல்லாமல், இது எல்லா விடங்களிலும் இருக்கிறது. எல்லா மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டிருப்பதால், உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்





என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு எத்தனை வாரியங்கள் அமைத்தாலும் போதாது. குறிப்பாக குடிநீருக்காக மாநகராட்சிகளில் பல நல்ல முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி, மற்ற நகரங்களிலும் துரிதமாக வேலைகள் செய்ய வேண்டும். கோயம்புத்தூரில் தண்ணீர்த் தட்டுப்பாடு என்று கூறினார்கள்.

சிவகாசி போன்ற பகுதிகளில் தண்ணீர் இல்லாத அவல நிலை இருக்கிறது, என்ற கருத்துக்களையும் எடுத்துச் சொன்னார்கள். நான் வருகின்ற பட்டணத்திலும் இருக்கும் நிலையைச் சொல்லுகிறேன். நாகர்கோவில் பட்டணத்தில் குடிநீருக்குக் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அங்கே ஒரு சிறு வாட்டர் ஒர்க்ஸ் ஆரம்பமாகி, இப்பொழுது செயலற்று இருக்கிறார்கள். ஆங்காங்கு காலாகாலத்தில் தண்ணீர் இல்லாததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ரிஸர்வாயரில் தண்ணீர் இருந்தாலும், வாட்டர் வருகின்ற மெயின் கொள்ளளவு குறைவாக இருப்பதால், அதை விஸ்தரிக்க பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆயுள் காப்பு நிலையத்திலிருந்து லோன் கேட்டு, முனிசிபல் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுகாறும் அது கிடைக்கவில்லை. அந்த லோன் கிடைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் குடிநீருக்கு மிகவும் கஷ்டமாக இருப்பதால் மேட்டுப்பகுதியில் வாழ்கிறவர்களுக்கு இவ்வளவு மணிதான் என்று மணிக்கணக்கில் ஒவ்வொரு நாளும் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரிக் கஷ்டங்கள், துன்பங்கள், தொல்லைகள் தீர துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாதிரி கிராமப்புறங்களில் இருக்கும் பல இடங்களிலும் குடிநீருக்குக் கஷ்டமாக இருக்கிறது. குறிப்பாக அப்படிப்பட்ட பல பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் பற்றிய பட்டியலைத் தொகுத்துக் காட்ட வேண்டும் என்று நினைக்கவில்லை.

ஊராட்சி மன்றங்களில் மின்சார விளக்குகள், தெரு விளக்குகள் இவற்றில் பல்புகள் ப்யூஸ் ஆகிவிட்டால், வேறு வாங்கி அமைக்க ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு அதிகாரம் இல்லாத நிலை இருக்கிறது. சாதாரணமாக கிராமத்தில் இருப்பவர்களுக்குத் தேவையாக இருக்கும் சிறிய காரியத்தைச் செய்யவும் இந்தத் தலைவர்களுக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, அதிகப்படியான அதிகாரம் வழங்கப்பட்டால், பெருத்த கஷ்டங்கள், மனவருத்தங்கள் ஏற்படும் தன்மை இராமல் போகும். அந்த நிலையில் இந்தக் கஷ்டங்களைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஆரம்பப் பள்ளிகளில் நடப்பது பற்றிச் சொல்லும் போது, சென்னை மாநிலத்தில் அவை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இருக்கின்றன, அதற்கு அரசாங்கம் 87 சதவீதமும், ஒன்றியங்கள்

13 சதவீதமும் நிதி உதவி செய்யப்படுவதாக அமைச்சர் கூறினார்கள். எங்கள் ஜில்லாவில் ஒரு கஷ்டமான நிலை இருக்கிறது. அங்கே இருக்கும் ஆரம்பப் பாடசாலைகளெல்லாம், அரசாங்கப் பாடசாலைகளாக இருக்கின்றன. அங்கே அரசாங்கப் பாடசாலைகள் துவங்கப்பட்டது 1946-ல். சர். சி. பி. ராமசாமி அய்யர் எங்கள் ராஜ்ஜியத்திற்கு திவானாக இருந்தபோது, கட்டாயக் கல்வி முறையை அமுலாக்கினார்கள். அப்பொழுது பள்ளிக்கூட ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாக, பப்ளிக் சர்வீசில் தேர்ந்தெடுத்து இன்றைக்கு முழு நிர்வாகமும் இலாகாவின் கையில் இருக்கிறது.

இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் நிர்வாகத்தை மாற்றி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுப்பது என்றால் அது மிகவும் சங்கடமான நிலைமை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 6,000-க்கு மேலான ஆசிரியர்கள் இதிலே பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் ஏகோபித்த குரலிலே இதை மாற்றக் கூடாது, ஊராட்சி ஒன்றியத்தின் கீழே கொண்டு வரக் கூடாது என்று ஊர்வலம் நடத்தக்கூடிய அளவில் கிளர்ச்சி செய்தார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் கீழ் இந்த ஆரம்பக் கல்வி இருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. 87 சதவீதம் அரசாங்கத்தின் செலவிலும், 13 சதவீதம் அரசாங்கம் அல்லாதவர்களிடத்திலும் இருக்கும்போது எப்படி அவர்கள் சிறப்பாகப் பணி ஆற்ற முடியவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 13 சதவீதம் ஒதுக்கியுள்ள இடங்களில் நியமனங்களில் ஊழல்கள் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. எந்த அளவில் இந்த அமைப்புகள் உள்ளன என்பதை நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. அந்தப் பகுதியிலே இருந்து வருகிற சட்டசபை உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இதை முழுமையாக ஒப்புக்கொள்வார்கள் என்றே நான் கருதுகிறேன்.

இங்கே பல நல்ல திட்டங்களை எல்லாம் ஒருங்கிணைத்து அவைகள் நல்ல முறையிலே செயலாற்ற நல்ல வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. மாதர் நல இலாகா, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம், மதிய உணவுத் திட்டம் இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து இவை கலெக்டருடைய முன் பார்வையில் ஒரு தனி இலாகாவாக மாற்றுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

ஒரு சங்கடமான நிலை பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகச் செலவுகள் அதிகமாக இருக்கிற காரணத்தால் வளர்ச்சிப் பணிக்குப் போதிய நிதி இல்லாத நிலை இருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு எல்லாம் பல கிளாசிபிகேஷன் முறையிலே அவைகளைத் திருத்தி அமைத்து அவைகளுக்குத் தக்கபடி நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வேண்டிய





நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு நல்ல காரியங்கள் செய்வதற்கு முடியும்.

இன்னும் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தைத் திருத்துவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அது இல்லாமல் இருந்தால் கட்சி மனப்பான்மையும் அரசியல் காழ்ப்புணர்ச்சியும் ஏற்படுகிற தன்மையைப் பார்க்கிறோம். பொதுவாக என்னுடைய பகுதியிலே உள்ள யூனியனிலே தலைவரை மாற்ற வேண்டுமென்ற அரசியலார் தலையீடு இருந்து கொண்டு வருகிறது. தலைவரை எப்படியாவது மாற்றிவிடவேண்டுமென்பதற்காகப் பல குற்றச்சாட்டுகளைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே குற்றம் செய்தவர்களாய் இருந்தால் தண்டிக்க வேண்டியதுதான். ஆனால் கட்சிக் கண்ணோட்டத்தில் நோக்கக்கூடிய அடிப்படை இருந்தால் இந்த அரசு உடனடியாகத் தலையிட்டு அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளை எல்லாம் தவிர்ப்பதற்கு அரசாங்கம் சட்டத்திலே வழிமுறைகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கிற எல்லா இடங்களிலும் நல்ல சிகிச்சை பெறுவதற்கு போதிய வசதிகள் செய்ய வேண்டும். மருந்துக்குப் பதிலாக ஏதோ மிக்சர் என்று கொடுக்கிறார்கள். எனவே இதற்காக வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்து சீர் அமைப்பு பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

எங்கள் ஊராட்சியில் தற்போது பஞ்சாயத்துகளை எல்லாம் சீர் அமைத்திருக்கிறார்கள். முன்பு 64 பஞ்சாயத்துகள்தான் இருந்தன. இப்போது 234 பஞ்சாயத்துக்களாக மாற்றி அமைத்திருக்கிறார்கள். சிறு சிறு பஞ்சாயத்துகளாக மாற்றியதன் காரணமாக அவைகள் சரி வர இயங்காத நிலையில் இருக்கின்றன.

உதாரணத்திற்கு தச்சம்பரம்பு என்ற கிராமப்புற பஞ்சாயத்தைப் பற்றிச் சொல்லலாம். 400 ஓட்டர்கள்தான் இருக்கிறார்கள். மண்டே மார்கட் என்ற பகுதி பக்கத்தில் இருக்கிறது. அது டவுன் பஞ்சாயத்து ஆக்கப்படவில்லை. போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. சப் ரிஜிஸ்திரார் ஆபீஸ் இருக்கிறது. சப் மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது. ஆனால் சுமார் 30 ஏக்கர் சொந்தம் உள்ள ஒரு தனிப்பட்டவர் அதிலே தலைவராக வருவதற்காக அரசியல் காரணத்தால் அந்தமாதிரியான ஒரு பஞ்சாயத்தை உருவாக்கியிருக்கிறார்கள். வருவாய் மிகக் குறைவு. ஒரு வயபிள் யூனிட்டாகக்கூட இல்லை. தக்கலை ஊராட்சி ஒன்றியத் தலைவராக அவர் இருக்கிறார். இப்போது வேண்டுமானாலும் இந்த விபரங்களை எந்த சட்டசபை உறுப்பினரும் வந்து விசாரித்துப் பார்த்துக்

கொள்ளலாம். 400 ஓட்டர்களுக்கு ஒரு பஞ்சாயத்து. 9,000 பேர் உள்ளவர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியம் இல்லை. இந்த மாதிரியான விஷயங்களை புனர்பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பஞ்சாயத்துகளை எல்லாம் வயபிள் யூனிட்டாக ஆக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பொருளாதார அடிப்படையிலே வளர்ச்சி பெறுவதற்கு இவைகள் அமைய வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், நீதித்துறையிலே இவைகளுக்கு சிறு சிறு அதிகாரங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போது நான் கிராமப்புறங்களிலே இருக்கிற சிறு சிறு வழக்குகள் அவ்வப்போது பைசல் செய்யப்படும்.

விருதுநகரிலே ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு இணை ஊராட்சி அதிகாரி தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு இப்போது அந்த கேஸ் விசாரணையில் இருப்பதால் அதைப்பற்றி நான் இப்போது எடுத்துக் கூற விரும்பவில்லை. ஆனால் அது ஒரு வேளை உண்மையாக இருந்தால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடை பெறாமல் இருக்க அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறு அதிகாரிகள் மேல் இருந்தால் அவர்களைக் கண்டிப்பதுடன் இருப்பது கூடாது. அவர்கள் மேல் தவறு இல்லாமல், அந்தப் பெரிய மனிதர்கள் மேல் தவறு இருந்தால் அவர்களையும் விட்டு வைக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சிப் பணிக்கு பணம் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வழங்கும் வகையில் கொள்கை அளவில் இந்த மானியக் கோரிக்கைகளுக்கு முழுக்க, முழுக்க ஆதரவு அளித்திருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய உரையின் மூலமிருந்து அறிந்துகொண்டேன். இன்னும் பல வசதி வாய்ப்புக்களைப் பெருக்க வேண்டுமென்ற கருத்துக்களை அவரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதன்மூலம் உள்ளாட்சித்துறையின் இன்றியமையாத தன்மையை உணர்ந்து அவர்கள் கோருவதுபோலவே அரசும் உள்ளாட்சித் துறையின் வசதிகளை பலப்பல வகையில் பெருக்கி வந்திருக்கிறது. இருந்தும் போதுமானதாக இல்லை என்கிற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அந்த அந்தப் பகுதி விளக்கங்களை எடுத்துச்சொல்லி வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதற்கான விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தத்துறை மேலும், மேலும் வளர்ந்து சீரிய பணிகள் பலவற்றை ஆற்ற அரிய பல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் ஆகியவற்றின் வசதி, வாய்ப்புகளைப் பெருக்குவதற்காக நிதிவசதி அதிகமாக்கப் படவேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால் ஓரளவுக்கு நிதி வசதி ஆண்டுக்கு ஆண்டு பெருக்கப்பட்டு, கூட்டப்பட்டே வந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம். 1966-67 இல் 17 கோடியே 48 லட்சமாக இருந்து படிப்படியாக உயர்த்தப்பட்டு சென்ற ஆண்டு 1970-71 இல் ரூ. 65.26 கோடியாக ஆயிற்று, அதுவும் இந்த ஆண்டு 1971-72-க்கு ரூ. 71.92 கோடியாக்கப்பட்டிருக்கிறது; இருந்தாலும் ஊராட்சி ஒன்றியங்களின் செலவினங்களும் வளர்ந்து வருகின்றன. முடிந்த அளவுக்கு இதனுடைய தேவையை நிதிவசதிக்கு ஏற்ற வகையில் பெருக்க அரசாங்கமும் விரும்புகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசிய கருத்துக்களை எல்லாம் வைத்துக்கொண்டு பொதுவான சில அம்சங்களை முதலில் குறிப்பிட்டு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கங்கே உள்ள கிராமங்களின் தேவைகள் கவனிக்கப்படாது, நாம் கடந்த பல வருஷங்களாக தொடர்ந்து முயன்று முயன்று அந்தத் தேவைகளை நிறைவேற்றி வைத்துக் கொண்டு வருகிறோம். நம்முடைய நிதிவசதி பெருகுமானால் மேலும் பற்பல திட்டங்களைத் தீட்டலாம். சில பகுதிகள் தனியாகக் கவனிக்கப்படுவதற்கான அடிப்படை நியாயங்களை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அந்த நியாயங்களின் அடிப்படையில் தீட்டுகிற திட்டங்களை நிறைவேற்றி வைக்க போதுமான அளவுக்கு நிதிவசதி இல்லை என்ற அடிப்படையில்தான் ஆண்டுக்கு ஆண்டு ஓரளவு நிதிவாய்ப்புகளைப் பெருக்கி, ஒதுக்கிக்கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை, அவற்றின் பணி வளர்ந்துகொண்டே போகிற காரணத்தினால்—இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புக்கள் சீர்திருத்தி அமைக்கப்படவேண்டும்—அதை நல்லமுறையில் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்கிற அடிப்படையில்தான் இதுவிஷயம் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிற்கு விடப்பட்டுள்ளது. அந்த வகையில் உறுப்பினர்களின் சீரிய பரிந்துரைகள் அனைத்தும் பரிசீலனைக்குப் பயன்படுவனவாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்த்து ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனத் தொகை, 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட வருமானம் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் பேரூராட்சிகளாக மாற்றப்பட்டு அங்கே தனியாக நிர்வாக அதிகாரி நியமிக்கப்படுகிறார்கள். மற்ற இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களே நிர்வாக அதிகாரி பொறுப்பை உடையவராக—தங்களுடைய நிதிவசதி வாய்ப்புகளுக்கேற்ப ஓய்வு நேர ஊழியர்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்தப் பணிகளை ஆற்றி வருகிறார்கள். இதில் சங்கடங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் பல்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1971 ஜூலை 5

வேறு ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்த்து அவை எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு நிர்வாக அதிகாரியைப் போடுவது பொருந்துமா என்று பார்க்க வேண்டும். இதனால் பல சிக்கல்கள் உண்டாகும் என்றே நான் கருதுகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள கல்வி செதியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மொத்தத்திலே 82 கோடி ரூபாய் கல்விக்காக இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கிறது என்றால் அதிலே 40 சத வீதம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களுக்கே செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தத்தில் 87 சத வீதம் அரசாங்கமே ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்வி மானியமாக அளிக்கிறது. பாக்கி 13 சத விதத்தைத்தான் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நிதிவாயில்களின் மூலம் பெற வேண்டியிருக்கிறது. இந்த 13 சத விதம் அவர்கள் 6 துறை வாயிலாகப் பெற வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக, ஒன்று ஸ்பெஷல் டி.ஏ. கிராண்டு மூலமாகவும், 2 சப்ளிமெண்டரி எஜுகேஷனல் கிராண்டு மூலமாகவும், 3. லாண்டு ரெவின்யூ அசெஸ்மெண்டு மூலமாகவும், 4. லோகல் எஜுகேஷன் கிராண்டு மூலமாகவும். 5. லோகல் செஸ், செஸ் சர்சார்ஜ் மூலமாகவும். 6. சர்சார்ஜ்—மாச்சிங் கிராண்டு—ஈட்டு மானியம் என்பதன் மூலமாகவும் இந்த ஆறு துறைகளின் மூலமாகப் பெறவேண்டியிருக்கிறது. அரசினர் தருகின்ற 87 சதவீதம் அவர்களுக்கு அவ்வப்போது போய்ச் சேர்ந்து விடுகிறது. ஆனால் இந்த 6 துறைகளின் மூலம் வர வேண்டிய பணம் அவ்வப்போது வராத காரணத்தினால் பல ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்களுக்குக்கூட திங்கள்தோறும் ஊதியம் வழங்க முடியாத நிலை இருப்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள். ஆகவேதான் இதுபற்றி எல்லாம் ஆராய்ந்து அரசுக்கு பரிவுரை வழங்க அமைக்கப்பட்ட விசேட கமிட்டி—பஞ்சாயத்து எஜுகேஷன் பைனான்ஸ் என்குவயரி கமிட்டி—சிலபல யோசனைகளை அரசாங்கத்திற்கு அளித்திருக்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு 6 வகையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்விக்காக அளிக்கப்படுகிற உதவியை மாற்றி இரண்டுவகையாக நிதி ஆதாரம் அளிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். லாண்டு ரெவின்யூ அசெஸ்மெண்டில் தலைக்கு 1 ரூபாய் என்பதற்குப் பதிலாக ஜனத்தொகை தலைக்கு ரூபாய் 6 வீதமும், மீதிச் செலவை ஊராட்சி ஒன்றியங்களை எ. 50 சதவீதம், பி. 60 சதவீதம், சி. 70 சதவீதம், டி. 80 சத வீதம் என்று நான்குவகையாகப் பிரித்து அளித்துவந்த உதவிக்கு—இதையே 6 வகைப் பிரிவாக்கி 60 சத வீதம் முதல் 95 சத வீதம் வரை செலவைப் பகிர்ந்துகொள்ளலாமெனவும் சொல்லியிருக்கிறார்கள். இதன்படி பணவசதி குறைந்த ஒன்றியங்கள் அதிக மானியம் பெற வாய்ப்பு ஏற்படும். இக்கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறை செயல்படுத்தப்படுமானால் ஊராட்சி ஒன்றியங்களில் கல்வித்துறையில் எவ்வித சிக்கலும், நெருக்கடியும் ஏற்படாது போகலாம்.



1971 ஜூலை 5] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

குடிதண்ணீர் வசதியை எடுத்துக்கொண்டாலும் இந்த அரசு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மக்களுக்கு குடிக்க நல்ல குடி தண்ணீர் கிடைக்கும்படிச் செய்யவேண்டும் என்பதில் முதல் நாட்டம் கொண்டதாக இருக்கிறது. இதற்காக பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இப் பேரவையில் கேள்வி ஒன்றுக்கு விடையிறுக்கும்போது நான் குறிப்பிட்டபடி யுனிஸெப் உதவியுடன் குடி தண்ணீர் வசதி இல்லாத—காலரா நோய் அதிகம் பரவிக்கொண்டிருக்கிற—பகுதிகளில் 8,850 குழாய்க் கிணறுகள் எடுப்பதுபற்றியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக ஒரு தலைமை டிவிஷன் ஈரோடில் அமைக்கப்பட்டு, ஈரோடு, சேலம், திருச்சி, மதுரை போன்ற இடங்களில் துணைக்கோட்டங்கள் அமைக்கப்பட்டு ஆங்காங்குள்ள நிலைமைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆண்டுதோறும் காலராவினால் மக்கள் பாதிக்கப்படுகிற 528 இடங்களிலும், மிகுந்த வறட்சி நிலைமை நீடிக்கும் பகுதிகளிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். வரண்ட பகுதிகளிலே குழாய்க் கிணறுகளை அமைத்து குடிநீர்ப் பற்றுக்குறையைத் தீர்க்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொராண்டும் 1770 குழாய்க் கிணறுகள் வீதம் 8,850 குழாய்க் கிணறுகள் ஐந்து ஆண்டுகளிலே நிறுவப்பட வேண்டும் என்று ஒரு திட்டம் இருக்கிறது. இது, தனி குடிநீர் வாரியமாக அமைக்கப்பட்டு, அதுவும் பல்வேறு பிரச்னைகளை ஆராய்ந்து வருகிறது. ஆயுள் காப்பீட்டு கழகத்திலே இருந்து கடன் வாங்கவும், வேறு பல வகைகளிலே கடன்கள் வாங்கி குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றும் இன்னும் ஓராண்டிலே நம் மாநிலத்தின் முக்கியமான ஊர்களிலே இந்தக் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டு அதற்கான காரியங்களிலே இந்த அரசு ஈடுபட்டு வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட, குழாய் மூலம் தண்ணீர் வழங்க 5 கோடி ரூபாயும், கிணறுகள் வெட்ட 2 கோடியே 50 இலட்சம் ரூபாயும், வரட்சிப் பகுதியிலே குடிநீர் தருவதற்கு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டது. 1969-70-ல் ரூ. 119.95 இலட்சமும், 1970-71-ல் ரூ. 145.70 இலட்சமும் செலவழிக்கப்பட்டு, 1971-72-ல் 163 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இது தவிர, ஒரு கோடி ரூபாயிலே தனி சிற்றூர் குடி நீர்த்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. எனவே, மக்கள் முதலிலே குடி நீர் பெறச் செய்யவும், சாலை வசதிகளைப் பெறச் செய்யவும் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. எனவே எல்லா ஊர்களிலே இருக்கும் மக்களும் எல்லா வசதிகளைப் பெறுவதற்கு வேளாண்மைத்துறை முன்னேற்றத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் ஆவன செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன், குறைந்தது 500 மக்கள் வாழும் இடத்திலே ஒரு துவக்கப் பள்ளி இருக்கவேண்டும். 2½ மைல் சுற்றுவட்டாரத்தில் ஒரு உயர் துவக்கப் பள்ளி இருக்கவேண்டும், 5 மைல் சுற்றுவட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கவேண்டும் என்ற

நிலைமையிலே திட்டமிட்டு காரியங்களை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. அதைத் தவிர பல கிராமங்களுக்குப் பயன்படுகின்றவகையில் மருந்துகள் நிறையத் தரப்படவேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்களே அந்தப் பணியை மேற்கொண்டு பணிகளை செய்துவருகின்றன. எனவே, படிப்படியாக பல ஊர்களுக்கு குடி நீர்வசதிகிடைக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கழிவு நீர் அகற்றுகின்ற திட்டம், நிதி நிலையைப் பொறுத்து, சில நகரங்களிலேதான் அது செயல்படுத்தப்படுகிறது. குடி நீர் வழங்குவதற்காக ஆகும் செலவைக் காட்டிலும், கழிவு நீர் அகற்ற அதாவது ட்ரைனேஜ் ஸ்கீம் கொண்டுவர, அதைப்போல் ஐந்து பங்கு செலவு செய்தால்தான் நிறைவேற்ற முடிகிறது. நகரங்களுக்கு குடி நீர் வழங்க எவ்வளவு பணம் ஒதுக்குகிறோமோ அதைவிட 5 பங்கு அதிகமாக ஒதுக்கினால்தான் கழிவு நீரை அகற்ற திட்டம் கொண்டு வர முடிகிறது. எனவே நகர்ப்புறங்களிலேதான் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற சிற்றூர் பகுதிகளுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நமக்கு நிதி வசதி ஏற்படுகின்ற காலத்திலேதான் அவற்றை மேலும், மேலும், மேற்கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு பற்றி நான் முதலிலேயே சொன்னேன். முன்பு இருந்த முறை மூலமாக இந்த ரோடுகளைச் சரியாக பராமரிப்புச் செய்ய முடியவில்லை என்றும், இன்னும் அதிகமாகச் சாலை பராமரிப்பிற்காக பணம் ஒதுக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பங்கள் பல வந்ததற்குப் பிறகு, 18 காசு ஆள் ஒன்றுக்கு என்று ஒதுக்கப்பட்டு சாதாரணச் சாலைகள் என்றால் மைல் ஒன்றுக்கு 600 ரூபாய் என்றும், கடற்கரை அல்லது வண்டல் மண் பகுதி என்றால் ரூ. 800 என்றும், மலைப் பகுதிச் சாலை என்றால் ரூபாய் 1,500 என்ற ரீதியிலே 1970-71-லே 119.13 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது; இதே அளவுத் தொகை இந்த ஆண்டும் வழங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வகுத்துக் கொடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருக்கிறது. அதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் இங்கே கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே இதை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியும் என்ற ஒரு முடிவு செய்து, அரசாங்கத்திற்கு அவர் மூலம் வருமானால் அதன் மீது தக்க முடிவுகளை மேற்கொள்ளலாம் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய ஊராட்சி ஒன்றியங்களைச் சீர்திருத்தி அமைத்தல் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 46 பேரூராட்சி மன்றங்கள், 1 நகரியம், 9 ஊராட்சி ஒன்றியங்கள், ஒவ்வொரு ஒன்றியத்திலும் 4 லிருந்து 6 வரை பேரூராட்சி மன்றங்கள் என்றிருந்தது. தமிழகத்திலுள்ள மற்ற மாவட்டங்





களிலே இருந்த முறைக்கும், அந்த மாவட்டத்திலே இருந்த முறைக்கும் வேறுபாடு இருந்தது. காரணம், அந்த மாவட்டம் திருவிதாங்கூர்-கொச்சிப் பகுதியிலே இருந்து நம் மாநிலத்திற்கு வந்ததால், அங்கிருந்த நிலைமை நீடித்து வந்தது. மற்ற மாவட்டங்களுக்கு ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்தையும் கொண்டு வர வேண்டுமென்றும், மக்களின் அடிப்படைத் தேவைகளை எளிதாக நிறைவேற்றவும் தான் அங்கே ஒன்றியங்கள் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. அப்படிச் செய்ததற்கான காரணம், மாவட்ட ஆட்சித் தலைவரின் யோசனையின் பேரிலும், மாவட்ட வளர்ச்சிக் குழுவின் ஒருமனதான ஒப்புதல் பேரிலும்தான் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி 46 பேரூராட்சி மன்றங்களை 64 பேரூராட்சி மன்றங்களாகவும், 224 ஊராட்சி மன்றங்களாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** பஞ்சாயத்து யூனியன்களை மாற்றி அமைப்பது என்றால், அதன் பொருளாதார அடிப்படையிலே அமைத்திருந்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது மாற்றி அமைத்திருப்பதைப் பார்த்தால் பல நகர, கிராமப் பஞ்சாயத்துக்கள் அங்கே ஏற்படும் எஸ்டாபிலிஷ்மென்ட் சார்ஜைக்கூடச் சமாளிக்க முடியாமல் இருக்கிறது. அப்படி இருக்கிறது அவைகளின் வருவாய் நிலைமை. ஏதோ ஒரு சில ஊராட்சி மன்றங்கள்தான் நல்ல வருவாயைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அவைகளின் வருவாய்க்கு பொறுத்த நிலைமையில் அவைகளை மாற்றி அமைத்துக் கொடுத்தால் போன்றும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உறுப்பினர் கூறுவது போன்று மாறுபட்ட நிலைமைகள் வேறு பல இடங்களிலே உண்டு. அவற்றை எல்லாம் மாற்றி அமைக்கும் பொழுது, தனித்தியங்கும் தன்மை, சேர்ந்தாற்போல் அமையும் பாங்கு, மக்கள் எண்ணிக்கை, நிதி வசதி, ஒரு ஊராட்சி மன்றம் இரண்டு ஒன்றியங்களிலோ அல்லது இரண்டு தொகுதிகளிலோ வராமல் இருத்தல், இயற்கையாக அமையும் எல்லை இவைகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் பிரிக்கப்படுகிறது. அப்படி ஏதாவது குறைபாடுகள் இருக்குமானால் அவைகளை எல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் முன் கொண்டு வருவதன் மூலம் அவற்றை நீக்கி, நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான காரண காரிய விளக்கங்கள் இருக்குமானால், அங்கேயே அதை எடுத்துச் சொல்லி செய்து கொள்ள முடியும். ஆனால், மற்ற மாவட்டங்களிலே இருக்கும் நிலைமைக்கு ஒத்தவாறுதான் இது பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதிலே மாவட்ட வளர்ச்சிக் குழு அதன் ஒப்புதலைக் கொடுத்ததாயும், அதன் பேரில்தான், அவை பிரிக்கப்பட்டன என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள் ஆனால், மாவட்ட வளர்ச்சி

மன்றத்திலே இந்த நிலை பற்றிய குறிப்பு அஜண்டாவிலே இல்லாமலேயே "சப்ளிமென்டரி அஜண்டாவாகப்" புகுத்தப்பட்டு கடைசியாக அங்கே இருந்த உறுப்பினர்கள் அத்தனைபேரும் வெளிநடப்பு நடத்திய நிலைமைக்குப் பிறகு, அந்த முடிவினை எடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஏகமனதான ஒப்புதல் பெற்றதாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

"The Collector placed it before the District Development Council and the Council unanimously agreed to the proposal of reorganisation of the Panchayat set up".
அந்த வகையிலே வந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. மேலும்

"The Director of Rural Development recommended the proposal to the Collector". என்று கூறப்பட்டிருக்கிறது. அதைத்தான் இங்கே நான் எடுத்து விளக்கினேன். அந்த முறையிலேதான் நடைபெறவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்து மதுரை மாநகராட்சி மன்றத்தின் நிலைமையையும், சென்னை மாநகராட்சி மன்றத்தின் நிலைமையையும், குடிசை மாற்று தன்மைகளையும் பற்றியது. குடிசை வாரியத்தின் தலைவர் அவர்கள் இதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்லி இருப்பதால், இதுபற்றி நான் விளக்கம் கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மாநகராட்சி ஆயுட்காலத்தை 5 ஆண்டுகளாக ஆக்க வேண்டும் என்று சிலர் கூறிக்கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது இருப்பதைப் போல் மூன்று ஆண்டுகளாக இருப்பதிலே என்ன தவறு என்று குறிப்பிட்டார்கள். ஏற்கனவே, ஊராட்சி மன்றங்களின் ஆயுட் காலமும், ஊராட்சி ஒன்றியங்களின் ஆயுட் காலமும் 5 ஆண்டுகளாக மாற்றப்பட்டிருக்கிறது. சட்டமன்றம், பாராளுமன்றத்தின் ஆயுட் காலமும் 5 ஆண்டுகளாகத்தான் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் ஊராட்சி ஒன்றியங்களின் மன்றங்களிலேயும், நகராட்சி மன்றங்களிலேயும், மாநகராட்சியின் ஆயுட் காலத்தை 5 ஆண்டாக நீடிக்க வேண்டும் என்ற கருத்துக்கள் அவ்வப்பொழுது தெரிவிக்கப்பட்டது. இது அரசாங்கத்தின் ஆலோசனையிலே இருந்து வருகிறது. அதைப் பற்றி முடிவு எடுத்து. பிறகு இந்த மன்றத்திலே தெரிவிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மற்றும், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் இருக்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் மணலி கந்தசாமி அவர்களும், திரு. எ. கே. சுப்பையா அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது ஒரு





குறிப்பிட்ட காரியம் நடத்துகின்ற மன்றமாக இல்லை. பெரும்பாலும் அது ஆலோசனை கூறும் மன்றமாக இருப்பதாலும், மற்றும் அங்கே கேட்கப்படுகின்ற ஐயப்பாடுகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பதாலும், அப்படிச் சொல்லும் பதில்களின் பரிந்துரைகளை ஏற்று நடத்த வேண்டியவரும் ஆட்சித் தலைவராக இருப்பதாலும், பல்வேறு துறைகளை இணைக்கின்ற குறிப்புகள் அவரிடம் இருப்பதாலும், அவரது தலைமையின் கீழ்தான் இந்த மன்றம் செயல்படவேண்டும் என்று பல தடவை சொல்லப்பட்டு, அது பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே. எல்லாவற்றையும் நேரடியாகக் கவனித்து ஒருங்கிணைக்கும் பாலமாகவே கலெக்டர் அவர்கள் விளங்குகிறார்கள். அதை விடுத்து. வேறு ஒருவரைத் தலைவராக ஆக்கும்பொழுது, கூட்டத்தை ஆட்சேபித்து நடத்தத்தான் அது பயன் தருமே தவிர, உறுப்பினர்கள் எழுப்புகின்ற வினாக்களுக்கு பதில் சொல்லக் கூடிய நிலைமை இருக்காது. எனவே, மாவட்ட வளர்ச்சி மன்றம் தனியாக இயங்குகின்ற நிர்வாக அமைப்பாக இல்லை என்பதை உறுப்பினர்கள் அறிய வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத் தலைவரை மாவட்ட ஆட்சித் தலைவர் பக்கத்தில் உட்கார வைப்பதில் தகராறு இல்லை. இருந்தாலும் பல முறை ஆராய்ந்து அந்த முறையை வைத்திருக்கிறார்கள்.

அடுத்து இணைப்புச்சாலைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு விளக்கமான முறையில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு 'ரயில்வே செஸ் பண்டு' மாவட்டங்களுக்கு இருக்கின்ற காரணத்தால் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அவற்றைப் பற்றி முடிவு எடுத்தபிறகு, அவற்றைச் செலவு செய்து இணைப்புச் சாலைகள் அமைத்தால் பற்றிய காரியங்களை செய்ய அரசு முயற்சி செய்யும் என்று குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பல்புகள் எரியவில்லை என்று சொன்னார்கள். பல்புகளை இப்போது மின்சார வாரியம் போடுகிறது, அந்தப் பொறுப்பை அவர்களிடம் விட்டிருக்கிறோம். ஓரளவிற்கு இந்தப் பணியை நல்ல முறையில் செய்து வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 3 பல்புகள் மாற்றவேண்டும். சில இடங்களில் மாற்றப்படாமல் அதற்கான தொகையை வசூலித்துக்கொள்கிறார்கள் என்று கூறப்பட்டு வருகிறது. மின்சாரக் கட்டணத்தை மட்டும் வசூலித்துக் கொண்டு பல்புகள் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்று கூறப்பட்டது. தற்போது மின்சார வாரியம் பஞ்சாயத்துக்களிடமிருந்து 25 வால்ட்ஸ் பல்பு ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 1.75-ம், 40 வால்ட்ஸ் பல்புக்கு 2.50-ம், 60 வால்ட்ஸ் பல்புக்கு 3.50-ம், 100 வால்ட்ஸ் பல்புக்கு ரூபாய் 5-ம், டுவின் லைட்ஸ் 20 வால்ட்ஸ்க்கு 5 ரூபாயும், சிங்கிள் 40 வால்ட்ஸ்க்கு 5 ரூபாயும், டுவின் லைட்ஸ் 40

வால்ட்ஸ்க்கு 8 ரூபாயும் வசூலிக்கிறது. ஆகவே, பல்புகள் எவ்வளவு வேண்டுமோ அதை மட்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுத்து விட்டு, மின்சாரக் கட்டணத்தை மின்சார வாரியமே வசூலித்துக் கொள்ளலாமா என்ற யோசனை இருக்கிறது. ஆகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் அந்தக் குறைபாடு நீங்கும் என்று நான் கருதுகிறேன்.

நேரம் அதிகம் ஆகிவிட்ட காரணத்தால் ஒவ்வொரு உறுப்பினரும் எழுப்பிய பிரச்னைகள் குறித்தும் அதிகம் விவரிக்க முடியவில்லை. திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் மகளிர் மன்ற நிலைமைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மகளிர் மன்றத்திற்கு தற்போது கிட்டத்தட்ட 4,000 ரூபாய் வீதம் 30 மகளிர் மன்றங்கள் ஒவ்வொரு பிளாக்கிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது. அவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ரூபாய் 4 ஆயிரத்தில் இருந்து ரூபாய் 6,400 ஆக உயர்த்த வேண்டுமென்ற குறிப்பு இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் தொகையை ஏற்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறேன். மற்றும் 10 ஆயிரம் மகளிர் மன்றங்களுக்கு இப்போது தையல் பொறிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. 6 மகளிர் மன்றங்களுக்கு ஒரு பயிற்சி ஆசிரியை நியமிக்கப்படுகிறார்கள். ஒரு சில பிளாக்குகளில் நிதி வசதியில்லாத காரணத்தால் இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள், அங்கும் விரைவில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதுகிறேன். தையல் இயந்திரத்துக்காக உள்ள 50 சதவிகித கட்டணத்தை நீக்கவேண்டும் அல்லது கைவிடவேண்டும் என்று மாண்புமிகு அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட கோரிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு இது வரை வரவில்லை என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை வந்தால் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிய உணவுத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆசிரியர்களே செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆங்காங்கிருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து ஒரு சமையல் காரரை அமர்த்திக்கொள்ளலாம், அரசாங்கம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளும் என்று இப்போது கூறப்படுகிறது. பல இடங்களில் அப்படித்தான் செய்கிறார்கள். ஆசிரியர்கள் மேற்பார்வையிடுகின்ற பொறுப்பை பொதுநலத் தொண்டு என்ற அளவில் செய்து வருகிறார்கள். மதிய உணவுத் திட்டத்தைச் சீர்படுத்தி அதனை வழங்குகின்ற பணியை 'கேர்' நிறுவனத்தார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் செங்கற்பட்டு மாவட்டத்தில் 30 மையச் சமையல் கூடங்கள் கட்டப்பட்டன. இன்னும் சில பல ஆண்டுகளில் 374 ஒன்றியங்களிலும் இது போன்ற மையச் சமையல் கூடங்கள் கட்டப்பட்டுவிடும். செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் இது நிறைவேற்றப்





பட்டு, தென் ஆற்காடு மாவட்டத்தில் நிறைவேற்றுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்தடுத்து மற்ற மாவட்டங்களிலும் மேற்கொள்ளும்போது இந்தக் குறைபாடு நீங்கும்.

தற்போது அரசாங்கம் 6 காசு, ஊராட்சி மன்றங்கள் 2 காசு, பொதுமக்கள் 2 காசு என்ற முறையில் நாம் செலவு பண்ணுகிறோம். 'கேர்' நிறுவனம் 6 கோடி ரூபாய் வரையில் செலவு செய்கிறார்கள். நாம் செலவழிப்பதை விட மூன்று மடங்கு அவர்கள் செலவு செய்கிறார்கள். மாணவ மாணவியருக்குத் தேவையான அளவுக்கு எல்லா வைட்டமின்களும் சேர்ந்த சத்துணவாகக் கொடுக்கிறார்கள். அதை வேறு பல இடங்களுக்கும் விரிவுபடுத்துகின்ற முயற்சியிலும் அரசு கவனம் செலுத்தும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை அவரவர்கள் தொகுதிகளில் உள்ளவை பற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு திரு. சுரேந்திரன் அவர்கள் வனவாசி பேரூராட்சியை ஊராட்சி மன்றமாக மாற்றப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். அதுபற்றி தற்போது ஒன்றும் தெரியவில்லை. அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதோடு குடிநீர் விகிதம் ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டவேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது எந்த நிலையில் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மற்றும் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களையும் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆகவே, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகின்ற முறையில் வெட்டுத் திருத்தங்களைக் கொடுத்துவிட்டு, நிதி வசதியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு, 100 ரூபாய் வெட்டவேண்டுமென்று சொல்லுவது பொருந்தி வராது. ஆகவே, வெட்டுத் திருத்தங்களை பின்வாங்கிக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையின் பணிகள் செம்மையுடன் நடைபெறுவதற்கு உதவியாகயிருந்த இந்த அவையின் உறுப்பினர்களுக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும், நகராட்சி மன்றத் தலைவர்கள், மாநகராட்சி மன்றத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும், இந்த அவையின் உறுப்பினர்களுக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்."

**திரு. எம். ஆர். கண்ணன்:** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் சென்னையைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்களும் கலந்து கொள்ள

வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதைப்பற்றி அரசின் கருத்து என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எம்.எல்.ஏ.-க்கள் மாநகராட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றால், பிறகு அவர்கள் மேயர் சட்டமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று கோரக்கூடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

கோரிக்கை 28-க்கு திரு. ஏ. சுவாமிதாஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. கே. என். குமாரசாமி அவர்களும் தங்களுடைய இருக்கைகளில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

THIRU K. S. KOTHANDARAMIAH : I am not pressing my cut motion.

The cut motion was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 7,63,15,300 under Demand No. 23—Community Development Projects".

The Demand was put and carried, and the Grant was made.

The cut motion of Thiru James to Demand No. 29 was, by leave, withdrawn.

As Dr. H. V. Hande and Thiru K. Suppu were not in their seats, the cut motions moved by them were deemed to have been withdrawn.

MR. SPEAKER : The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 4,27,21,200 under Demand No. 29—Public Works—Grants-in-aid".

The Demand was put and carried, and the Grant was made.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவோடு முடிவுறுகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.





## 3. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*—'Nil'.

*B. Reports, Notifications and Other Papers.*

89. Notification issued with G.O. Ms. No. 1293, Revenue, dated the 29th April 1971 in regard to remission of stamp duty, in respect of mortgage deeds and agreements to be executed by the State Government servants working in the Tamil Nadu Small Industries Development Corporation, Limited, Madras.

90. Notification issued with G.O. Ms. No. 1095, Revenue, dated the 16th April 1971, in regard to remission of stamp duty and registration fees chargeable in respect of the mortgage deeds to be executed by the Agriculturists to whom the Tamil Nadu Agro Industries Corporation sanction loans for purchase of oil engines, pumpsets, etc.

91. Notification issued with G.O. Ms. No. 1334, Revenue, dated the 4th May 1971, in regard to remission of stamp duty in favour of the "Ram Seetha Educational Trust".

@92. Policy note on Demand 14—Medical (1971–72) (English and Tamil).

@93. Policy note on Demand 15—Public Health (1971–72) (English and Tamil).

@94. Speech of Hon. Thiru K. ANBAZHAGAN, Minister for Public Health while moving the Demand 38—Capital Outlay on Public Health (1971–72) (English and Tamil).

£95. The performance Budget of the Health Services and Family Planning Department for the year 1971–72.

£96. The performance Budget of the Medical Education Department for the year 1971–72.

£97. Report of the Backward Classes Commission, Tamil Nadu (Volume I, II and III) (English and Tamil).

&98. Note on the Demand No. 29—Public Works—Grants-in Aid Development (English and Tamil).

&99. Note on the Community Development and Panchayat Development (English and Tamil).

&100. Financial supplement to Demand under Community Development 1971–72 (English and Tamil).

&101. Note on the Housing in Tamil Nadu 1970–71 (English and Tamil).

---

@ Despatched to Members on 2nd July 1971.
£ Laid on the Table of the House on 3rd July 1971.
& Despatched to Members on 3rd July 1971.

[1971 ஜூலை 5

## இணைப்பு 1.

[502-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 23 (1971–72)

"கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்கள்—உள்ளூர் மேம்பாட்டுப் பணிகள்—ரூ. 7,63,15,300."

### சட்டப் பேரவையில் வைக்கப்படும் குறிப்பு.

### 1. முன்னுரை.

முதல் நிலை, இரண்டாம் நிலை என இரண்டு நிலைகளில் சமுதாய வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. முதல் நிலை வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுக் காலத்தில் ரூ. 12 இலட்சம் மைய உதவி பெறத் தகுதி பெற்றது. முதல் நிலையில் ஐந்தாண்டுகளை முடித்த வட்டாரம், இரண்டாம் நிலை வட்டாரமாக மாறுகிறது. அதற்கு 5 ஆண்டுக் காலத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. 10 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர், ஒவ்வொரு வட்டாரமும் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரமாகக் கருதப்படுகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் சமுதாய வளர்ச்சித் திட்ட அமைப்பிலிருந்து உதவி பெறத் தகுதியுடையனவல்ல. முதல் நிலை வட்டாரங்கள் தமிழ்நாட்டில் ஒன்றும் இல்லை. இம் மாநிலத்தில் 1971-72-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை வட்டாரங்கள் 128-ம், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் 246-ம் செயல்படும்.

பல்வேறு திட்ட வேலைகளுக்குக் கிடைக்கும் நிதிகள் ஒருங்கு திரட்டப்பட்டு உருவாக்கப்படும் ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான வரவு-செலவுத் திட்ட வரம்பிற்குள், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குள்ள வேலைத் திட்டங்கள் அனைத்தும் இயன்ற இடங்களில் பொதுமக்களின் நன்கொடையும் பெற்று நிறைவேற்றப்படுகின்றன. மொத்தச் செலவுத் தொகையில் இரண்டாம் நிலை வட்டாரங்களுக்காகும் செலவினம் மட்டும் "சமுதாய வளர்ச்சி" என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களில் பல்வேறு வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காகும் செலவினம் அதனதன் வளர்ச்சித் தலைப்பிலும் குறிப்பிட்டுக் காட்டப்படுகின்றன. ஒவ்வோராண்டும் பெருவாரியான வட்டாரங்கள் இரண்டாம் நிலையைக் கடந்தவைகளாக மாறுகின்றன. எனவே "சமுதாய வளர்ச்சித்" திட்டத்தில் பற்று வைக்கப்படும் செலவினம் சீராக குறைந்து அதற்குச் சரியான செலவினம் தொடர்புள்ள வளர்ச்சித் தலைப்புகளில் அதிகரிக்கும். ஊராட்சி ஒன்றியங்களின் ஓராண்டுப் பணிகளை, இன்னோராண்டுப் பணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், 374 வட்டாரங்கள் முழுவதிலும் எல்லாத் தலைப்புகளுக்கும் ஆன மொத்தச் செலவைப் பரிசீலனை செய்யவேண்டுமேயன்றி, "சமுதாய வளர்ச்சித்" திட்டத் தலைப்பிலுள்ள செலவை மட்டும் கருத்தில் கொள்ளக் கூடாது.



1971 ஜூலை 5]

12,651 ஊராட்சிகள், 592 பேரூராட்சிகள், மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கென, 1971-72-ஆம் ஆண்டைய நிதி நிலையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 71.93 கோடியிலிருந்து ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயற்படுகிறதென்பது தெளிவாகும். இப்பேரவையில் கோரியுள்ள ரூ. 763.15 இலட்சமானது, ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களினாலும் செலவு செய்யப்படும் தொகையில் ஒரு சிறு பகுதியைத்தான் குறிக்கிறது. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படும் ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய புள்ளி விவரங்கள், இக்குறிப்புரையுடன், பேரவை முன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை இணைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ள பணிகள் பற்றிய ஆய்வும், கிராம மக்களிடையே பெருகிவரும் தேவைகளை நிறைவேற்ற 1971-72-ஆம் ஆண்டில் இவ்வரசு மேற்கொள்ளவிருக்கும் சிறப்புத் திட்டங்கள் பற்றிய கோரிக்கைகளும் இக் குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகம்.

#### (அ) அமைப்பு.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் வட்டாரம் நீங்கலாக மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகளில் 1958-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது நடைமுறையிலுள்ளது. ஜாகீர்தாரர்கள் செய்துகொண்ட முறையீட்டின் பேரில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த தடையாணையினால் ஜாகீர் பகுதிகளை ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின் கீழ், அரசு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லையாதலால் கல்ராயன் குன்றுகள் பகுதியில் ஊராட்சிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஜாகீர் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டு, இப் பகுதிக்கும் இச் சட்டமானது விரிவுபடுத்தப்படும். தமிழ்நாடு முழுவதிலும் 12,651 ஊராட்சிகள், 592 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் உள்ளன. இவை அனைத்தும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கியுள்ளன. நகராட்சிகள் சட்டத்தின் கீழ் நகரியங்களாக மாற்றுதற்குரிய முன்னேற்பாடாகச் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கத்திவாக்கம், மாதவரம் என்ற இரண்டு பேரூராட்சிகள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி முதற்கொண்டு நகராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன.

[1971 ஜுலை 5

### (ஆ) ஊராட்சித் தேர்தல்கள்.

1970-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் 12,651 ஊராட்சிகளுக்கும், 592 பேரூராட்சிகளுக்கும் சாதாரணத் தேர்தல்கள் நடைபெற்றன. சற்றேறத்தாழ 190 இலட்சம் வாக்காளர்கள் இத் தேர்தலில் வாக்களித்தனர். சட்டப் பேரவை வாக்காளர் பட்டியலைத் தவிர்த்து, இத் தேர்தல்களுக்கெனவே தனி வாக்காளர் பட்டியல் இல்லங்கள் தோறும் சென்று கணக்கெடுத்து, 1958-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 20 (2) இன் கீழ் வெளியிடப்பட்டது. இப்படித் தனி வாக்காளர் பட்டியல் தயாரித்தது தமிழ்நாடு வரலாற்றிலேயே இஃது ஒரு முதல் நிகழ்ச்சியாகும். ஊர் அல்லது நகரிலுள்ள வாக்காளர்கள், முதன் முறையாக இரகசிய வாக்கெடுப்பு மூலம், ஊராட்சித் தலைவர் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பிருந்த ஊராட்சிகள், 64 பேரூராட்சிகள், 224 ஊராட்சிகளாகவும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் முன்பிருந்த ஆறு ஊராட்சிகள், 4 பேரூராட்சிகள், 6 ஊராட்சிகளாகவும் திருத்தியமைக்கப்பட்டன. மாநிலத்தின் மற்ற பகுதிகளில் உள்ள ஊராட்சி முறையைப் போலவே இங்கும் இருக்க வேண்டுமென்பதற்காக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி உறுப்பினர்களும், ஊராட்சித் தலைவர்களும் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ஆம் நாளன்று பதவி ஏற்றுக் கொண்டனர்.

## 3. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

### (அ) நிர்வாக அமைப்பு வளர்ச்சி.

வட்டார நிர்வாக அமைப்பு முறையைச் சீர் செய்யும் எண்ணம், சிறிது காலமாக அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள நிர்வாகச் சீர்திருத்தங்கள் வருமாறு:—

(1) கால்நடை வளர்ச்சித் துறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் துணை நிலையங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருப்பதன் விளைவாக கால்நடை வளர்ச்சி அலுவலர்களின் எண்ணிக்கையும் பெருமளவில் உயர்ந்துள்ளது. இது வட்டார நிர்வாகத்தில் ஒரு முக்கியப் பெரிய மாற்றமாகும். இந்தச் சீர்திருத்தத்தின் விளைவாக, ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை துணை நிலையங்கள் உள்ளனவோ அத்தனை கால்நடை வளர்ச்சி அலுவலர்கள் இருப்பார்கள். இதனால் கால்நடை வளர்ச்சி அலுவலர் ஒரு கட்டுக்கோப்பான பகுதியைத் தம் பொறுப்பில் பெற்று, அங்கு எல்லா வகையான துறை அலுவல்களையும், வளர்ச்சிப் பணிகளையும் செம்மையுற மேற்கொள்ள முடிகிறது.



1971 ஜுலை 5]

(2) இதுவரை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்களின் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவிக்கு மட்டுமே உயர்வு பெற முடிந்தது. வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பதவியுயர்வு வாய்ப்புகளைக் கூட்டுதற்கும், ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தைத் திறம்படச் செய்தற்கும் இடமளிக்கும் வகையில் ஊராட்சி வளர்ச்சித் துறையைத் திருத்தியமைக்கும் பணியின் முதற்செயலாக, 47 கோட்ட ஊராட்சி அலுவலர்கள் பதவிகளைத் தேர்வு நிலை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பதவிகளாக அரசு உயர்த்தியுள்ளது.

(3) வட்டாரப் பகுதிகளில் கடன்களை வசூலித்தல், ஊராட்சி வரிகளை வசூலித்தல், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களை நிர்வகித்தல், நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்றல் போன்ற பல்வேறு வேலைகள் அண்மைக் காலமாகப் பெருகிவிட்டன. இவ்வாறு அதிகரித்துள்ள வேலையைத் தற்போது வருவாய்ப் பிரிவிலுள்ள அலுவலர்களால் சமாளிக்க இயலவில்லை. அதனால் இவ்வேலைகளை மட்டுமே கவனிக்கத் தனி அலுவலர்களை ஒன்றியங்களில் நியமித்தால், வேலையில் தரம் உயரும் என்பதற்காக 100 (நூறு) துணை வட்டாட்சியர் (Deputy Tahsildars) பதவிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. அப்பதவியிலுள்ளோர் வளர்ச்சி அலுவலர் (வருவாய்) என அழைக்கப்படுவர். இதனால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை போதுமான அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(4) 1967-ஆம் ஆண்டு ஏப்ரலில் நீக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் இரண்டாம் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவியை அரசு, 1970-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் நாள் முதல் மீண்டும் புதுப்பித்துள்ளது. அவருடைய பதவிப் பெயர் விளக்குவது போன்று, இந்த நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி), ஊராட்சி வளர்ச்சித் தொடர்பான அன்றாட அலுவல்களைக் கவனிப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவி வருகிறார். மேலும் அவர்கள் வட்டார ஆய்வு அலுவலர்களாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் செயலாளர்களாகவும் இருந்து வருகிறார்கள். எனவே மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (ஊராட்சி வளர்ச்சி) பதவியை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று பெயரிட்டழைக்க அரசு முடிவு செய்துள்ளது.

### (ஆ) பயிற்சித் திட்டம்.

ஊர் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் பயிற்சிக் கிளையொன்றை இத்துறை பெற்றுள்ளது. ஊராட்சி நிறுவனங்களுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பல்வேறு வளர்ச்சித் துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

[1971 ஜூலை 5

கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன :—

(1) சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம்.

(2) தொழிற்கூடப் பிரிவு அமைந்த ஊர் வளர்ச்சிப் பயிற்சி நிலையங்கள்.

**சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம், பவானிசாகர்.**

இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன :—

**(அ) ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கான பயிற்சி**—ஊராட்சி நிறுவனங்களின் பின்னணி, அவற்றின் செயல்முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரின் பங்கு ஆகியவை பற்றி விளக்கும் முறையில் 10 நாட்களுக்கு இப்பயிற்சி நடைபெறும்.

**(ஆ) பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்களுக்குரிய பயிற்சி.**—இஃது, ஊராட்சிக் கொள்கையைப்பற்றி அரசு அலுவலர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்து, ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியைக் காணும் வழிவகைகளைக் கற்பிக்கும் 15 நாள் பயிற்சியாகும்.

**(இ) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய வேலைப்பயிற்சி.**—தங்களுடைய பணிகளில் பயிற்சி பெற, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு இரண்டு திங்களுக்கு இப்பயிற்சியளிக்கப்படுகிறது.

**குறிப்பிட்ட பணிக்குரிய பயிற்சிகள்.**

தேசிய சேவைப் படை அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட பணிக்கெனப் பயிற்சியளித்தல், சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் போன்றவைகட்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**ஊர் விரிவாக்க நிலையம்.**

இம் மாநிலத்தில் ஐந்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் உள்ளன :—

(1) டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).

(2) பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

(3) பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).

(4) ச. வி. நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்).

(5) கிருட்டிணகிரி அணை (தர்மபுரி மாவட்டம்).



1971 ஜூலை 5]

இந்நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன :—

**முன் சேவைப் பயிற்சி.**—ஊர் நல உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஈராண்டுப் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கட்கு விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்வதைக் கற்றுத் தருவதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு பயிற்சி நிலையத்துடனும் ஒரு பண்ணையும், பால் பண்ணை அலகும் இணைக்கப்பட்டுள்ளன.

**தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர் நல உதவியாளர்களுக்கு வேளாண்மையில் ஓராண்டுத் தீவிரப் பயிற்சி.**—ஊர் நல உதவியாளர்களின் திறமையைச் சிறப்பாக வேளாண்மைத் துறையில் மேம்படுத்துதற்கென, வேளாண்மை வளர்ச்சிப் பட்டச் சான்றிதழ் பயிற்சி ஓராண்டுக்குத் தரப்படுகிறது. அனுபவம் பெற்ற ஊர் நல உதவியாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதுவரை 291 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**தொழிற்கூடக் கிளைகள்.**—ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் தற்போது தொழிற்கூடக் கிளைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற்கூடக் கிளையிலும் 10 பேர்களுக்குத் தச்சுத் தொழிலிலும் 10 பேர்களுக்கு கருமார்த் தொழிலிலும் ஓராண்டுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

**1970-71-ஆம் ஆண்டில் மூன்று தொழிற்கூடக் கிளைகள் "உற்பத்திப் பயிற்சி நிலையங்" களாக உயர்த்தப்பட்டுள்ளன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.**

**குறிப்பிட்ட பணிக்குரிய பயிற்சித் திட்டங்கள்.**

(அ) வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வளர்ச்சி அலுவலர்கள் போன்றோர்க்குரிய அமோக விளைச்சல் முறைப் பயிற்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய அளவைப் பயிற்சி போன்றவைகள் தேவைக்கும் அவசியத்திற்குமேற்ப நடத்தப்படுகின்றன.

(ஆ) மகளிர் நலத் துறையைச் சேர்ந்த பால சேவிகைகளுக்கும், மகளிர் இணைப் பணியாளர்களுக்கும் ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

(இ) சீரணித் தொண்டர்கள் இந்நிலையங்களில் 14 நாட்களுக்குப் பயிற்சி பெறுகின்றனர்.

(ஈ) சமூக நலப் பணியாளர்களுக்கு வானொலிப் பெட்டிகளைச் செப்பனிட்டுச் சீராக்கும் பயிற்சியும், வானொலி பெட்டிகளைத்

[1971 ஜூலை 5

தயாரிக்கும் பயிற்சியும் ச.வி. நகரத்திலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முதல் பயிற்சிக்கு 28 பேர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ளனர்.

பல்வேறு நிலைகளிலுள்ள வட்டார அலுவலர்களும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்புகொண்டுள்ள அலுவல் சார்பற்றவர்களும், தங்களுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் நன்கு நிறைவேற்ற இப் பயிற்சித் திட்டங்கள் பெருந் துணை புரிந்துள்ளன.

### (இ) கருத்துரைக் குழுக்கள்.

நிர்வாகம்-பணிகள், உற்பத்தித் திட்டங்கள், நலப்பணித் திட்டங்கள் பற்றிய மாநில அளவிலான மூன்று கருத்துரைக் குழுக்கள், ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்கின்றன. திட்டங்களை செயற்படுத்தும்போது அதன் செயல் வேகத்தைத் தடுக்கும் நடைமுறைப் பிரச்னைகளுக்குக் கருத்துரைக் குழுக்கள் தந்த ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காணப்படுகின்றன.

### (ஈ) பொருளாதார, உடலுழைப்புச் சாதனைகள்.

இத் தலைப்பின்கீழ்க் கோரியுள்ள தொகையின் அளவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் வேகத்தினைப் பிரதிபலிக்கிறது. இக் கோரிக்கையின்கீழ் 1969-70-இல் செலவுத் தொகை ரூ. 607.92 இலட்சமாகும். 1970-71-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 682.34 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது. 1971-72-க்காகக் கோரப்படும் தொகை ரூ. 763.15 இலட்சமாகும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளூர் "செஸ்" மேல் வரியை விதித்துள்ளன. இதிலிருந்து 1970-71-இல் கிடைத்த வருவாய் ரூ. 355.44 இலட்சமாகும். உள்ளூர் செஸ் மேல் வரியை ஊராட்சி ஒன்றியங்கள் விதிப்பதினால், அதற்கான இணை மானியத்தை ஒன்றியம் அரசிடமிருந்து பெற முடியும். 1969-70-இல் செஸ் மேல் வரி இணை மானியமாக ரூ. 334.40 இலட்சத்தை அரசு அளித்துள்ளது. 1970-71-க்குத் திருத்திய மதிப்பீடு ரூ. 355.44 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1971-72-க்கான நிதி நிலை மதிப்பீடு ரூ. 401 இலட்சம். 365 ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கேளிக்கை வரி, காட்சி வரி மீது, மேல்வரி விதித்துள்ளன. இந்த வகையில் 1970-71-க்கான வருவாய் ரூ. 104.80 இலட்சமாகும்.



1971 ஜூலை 5]

1970-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் இருந்தவாறு சில வேலைத் திட்டங்கள் பற்றிச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் வருமாறு :—

| | 1967 | 1968 | 1969 | 1970 |
|---|---|---|---|---|
| இணைப்புச் சாலைகள் .. .. (கிலோ மீட்டர்) | 17,136 | 20,224 | 20,736 | 22,506 |
| மேல்நிலை நீர்த தொட்டிகள் .. (எண்ணிக்கை) | 2,240 | 2,506 | 2,817 | 4,090 |
| குடிநீர்க் கிணறுகள் .. .. (எண்ணிக்கை) | 47,900 | 52,100 | 54,768 | 62,300 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) | 18,185 | 18,220 | 18,272 | 18,531 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் உள்ள உயர் தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) | 3,275 | 3,252 | 3,246 | 3,207 |
| சொந்தக் கட்டடங்களிலுள்ள பள்ளிகள் (எண்ணிக்கை) | 10,555 | 11,619 | 12,310 | 14,050 |

வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அரசு செலவழித்துள்ள தொகைபற்றிய விவரங்களைக் கீழ்க்கண்ட புள்ளி விவர அறிக்கை காட்டுகிறது :—

| வேலைத் திட்டத்தின் பெயர். | 1967–68 (செலவுக் கணக்கு). | 1968–69 (செலவுக் கணக்கு). | 1969–70 (செலவுக் கணக்கு). | 1970–71 (திருத்திய மதிப்பீடு). | 1971–72 (நிதிநிலை மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| வேளாண்மை .. | 81·14 | 83·75 | 74·93 | 85·00 | 85·00 |
| கால்நடை வளர்ச்சி | 26·48 | 21·90 | 23·35 | 23·25 | 23·25 |
| மீன்வளம் .. .. | 3·73 | 3·66 | 2·53 | 4·25 | 4·65 |
| இணைப்புச் சாலைகள் | 110·40 | 67·63 | 93·82 | 110·00 | 110·00 |
| குடிநீர் வழங்கல் .. | 118·49 | 146·01 | 142·83 | 145·80 | 163 70 |
| பள்ளிக் கட்டடங்கள் | 42·16 | 33·64 | 48·71 | 52·60 | 52·60 |
| சமூகக் கல்வி .. | 9·53 | 12·13 | 18·88 | 15·00 | 15·00 |
| மகளிர், குழந்தைகள் நலம். | 16·94 | 6·67 | 14·93 | 14·64 | 17.00 |
| கிராமக் கலை, கைத் தொழில் திட்டம். | 28·48 | 11·40 | 16·00 | 16·00 | 15·00 |

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை மேலே காட்டியுள்ள புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1971-72-ஆம் ஆண்டிற்கு அநேகமாக எல்லாத் தலைப்பின் கீழும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 5

## 4. பணிகள் குறித்த வேலைத் திட்டங்கள்.

### அ. ஊர்ப்பணிகளின் திட்டம்.

ஊர்ப் பணிகள் மானியங்களில் கிடைக்கும் நிதிகளைக் குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட வேண்டும். 1970-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாளைய நிலவரப் படி, செய்து தரப்பட்டுள்ள வசதிகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | மேல்நிலை நீர்த் தொட்டிகள் .. .. | 4,090 |
| 2. | கிணறுகள் .. .. .. .. .. | 62,300 |
| 3. | அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டா) | 22,506 |
| 4. | பள்ளிக் கட்டடங்கள். (கட்டப்பட்டவை) .. | 14,050 |

1971-72-க்கான நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப்பணிகள் வேலைத் திட்டத்திற்கென ரூ. 526.30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசனங்கள், மீனவர்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினருக்குக்கென்றே மேற்கொள்ளப்படும் ஊர்ப்பணிகளுக்கு மக்கள் நன்கொடைத்தொகை செலுத்தப்பட வேண்டுவதில்லை. இம்மாதிரியான நேர்வுகளில் குடிநீர் வழங்குவதற்கென 15 சத வீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சத வீதமும், அரிசன நலத் துறை மானியத்திலிருந்து நன்கொடையாக அளிக்கப் படுகிறது. ஊர்ப்பணிகள் மானியத்தில் 20 சதவீதத் தொகை அரிசனங்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினர் நன்மைக் கெனச் செய்யப்படும் பணிகளுக்கென்றே ஒதுக்கப்படவேண்டும்.

### "யூனிசெஃப்" உதவியுடன் குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

குடி நீர் வழங்கும் திட்டத்திற்கு முக்கிய முதலிடம் அளித்திருந்தும்கூட, இப்பெரும் பிரச்சனையின் ஒரு பகுதியைத்தான் இதுவரையில் நம்மால் தீர்க்க முடிந்துள்ளது. இப்பிரச்சனையை விசாலமான எதிர்காலக் கண்ணோட்டத்துடனும், மிகப் பெரிய அளவிலும் சமாளிப்பதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குடிநீருக்குத் தொல்லையுறும் பற்றாக்குறை இடங் களுக்கெனக் "குடிநீர் வழங்கல் சிறப்புத் திட்டம்" ஒன்றினை உருவாக்கி, நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமையும் உள்ளது. குடிநீர் பற்றாக்குறை ஊர்களையும் "காலரா" நோயினால் பாதிக்கப்படும் ஊர்களையும் கண்டறிந்து, அங்குள்ள மக்களுக்கு நிலையாகக் குடிநீர் வழங்கத் தக்க வசதிகளை ஏற்படுத்தித்தருவதற்குத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊர்ப்பணிகள்) ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்கியுள்ளார். தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊர்ப்பணிகள்) தொகுத்த இவ்வேலைத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்திலுள்ள பாறை நிலப் பகுதிகளிலுள்ள குடிநீர்ப் பற்றாக் குறை ஊர்களிலும் "காலரா" நோயினால் பாதிக்கப்படும் ஊர் களிலும் "யூனிசெஃப்" உதவியைக்கொண்டு, ஐந்தாண்டு



1971 ஜூலை 5]

களுக்குள்ளாக 8,850 குழாய் கிணறுகளை நிறுவுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. துளையிடும் கருவிகள், மற்றும் இதர கருவிகளை "யூனிசெஃப்" அளித்து உதவும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவி, அவற்றைப் பேணுதற்காகும் செலவு ரூ. 2.71 கோடியாகு மென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அலுவலர்களுக்கும், கருவிகளை எடுத்துச் செல்வதற்கும் ஏற்படும் செலவு இதில் அடங்கவில்லை. இத்திட்டம் படிப்படியாக 1971-72-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்படும். ஒவ்வோராண்டும் 1,770 குழாய்க் கிணறுகள் நிறுவப்படும். 1971-72-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் இதற் கென ரூ. 55 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

### (ஆ) சாலைகள் பராமரிப்பு.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென "உள்ளூர் சாலைகள் மானியம்" என்றதொரு மானியம் ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகிறது. இச்சாலைகள் மானியமானது ஆளொன்றுக்கு 18 காசுகள் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலையானது சாதாரணமானதா, கடற்கரைப் பகுதிகளா அல்லது கழிமுகப் பகுதிகளில் அமைந்தனவா அல்லது மலைப்பாதைகளா என்று வகைப்படுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் ஒவ்வொரு மைலுக்கும் முறையே ரூ. 600, ரூ. 800, ரூ. 1,500 என்ற வகையில் வழங்கப்படுகிறது. 1971–72-ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங் களுக்கு அளிக்கப்பட வேண்டிய மானியத் தொகை ரூ. 119.32 இலட்சமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் புழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்க பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, 'அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. 1971-72-ஆம் ஆண்டின் நிதிநிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (இ) சிறிய நீர்ப்பாசனம்.

இம் மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் சுமார் 24,000 சிறிய நீர்ப்பசன வாயில்கள், பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டு களுக்கு ஒரு முறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப் படையில் பராமரிப்புத் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டி லிருந்து, ஒவ்வோராண்டும், அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டிற்காக நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 57.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 5

### (ஈ) கிராமக் கலைகள் கைவினைப் பொருள்கள், தொழில் திட்டம்.

ஊர்ப்புறங்களில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதற்கென, கிராமக் கலைகள், கைவினைப் பொருள்கள், தொழில் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுவதற்கு, தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியம் ஒன்றியங்களுக்கு உதவி செய்கிறது. கிராமக் கைவினைஞர்களுக்கும், வாணிகம் செய்ய முனைபவர்களுக்கும் பணிமனை வசதிகள் செய்து தர வாரியம், யோசனை கூறியுள்ளது. கீழ்க்கண்ட தொழிற்பேட்டைகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| திட்டத்தின் பெயர். | நிலையம் உள்ள இடம். |
|---|---|
| 1. நூற்பு, நெசவிற்காக மூன்று கதர் தொழிற் பேட்டைகள். | திருப்பூர், பெருமாநல்லூர், காரமடை. |
| 2. கதர், தையல், பூப்பின்னல் தொழில் .. | திருப்பூர். |
| 3. கதர் தொழிற்பேட்டை .. .. .. | இடையன்வலசு. (ஒட்டன் சத்திரம் வட்டாரம், மதுரை மாவட்டம்.) |

மேற்கண்ட பேட்டைகளோடுகூட, கிராமக் கலைகள், கைவினைப் பொருள்கள், தொழில்கள் திட்டத்திலுள்ள நிதிகளிலிருந்து, ஐந்து கிராமத் தொழிற்பேட்டைகளை, மூன்று கிராமத் தொழில் திட்டப் பகுதிகளிலும் நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐந்து கிராமத் தொழிற் பேட்டைகளில் இரண்டு பேட்டைகள், ஸ்ரீபெரும்புதூர்த் திட்டப் பகுதிகளில் சிறு வாணிகம் செய்பவர்களின் நன்மைக்கென நிறுவப்படும். விசைத்தறிக்கான இரண்டு கிராமத் தொழிற்பேட்டைகளும் ஓமலூர்த் திட்டப் பகுதியில் பலகண்டபுரத்தில் ஒன்றும், தாரமங்கலத்தில் ஒன்றுமாக நிறுவப்படும். பல்வேறு வகைப்பட்ட , கிராமத் தொழில்களுக்கேற்ற கொட்டகைகளை அமைப்பதற்குரிய கிராமத் தொழிற்பேட்டையொன்றை நாங்குனேரித் திட்டப் பகுதியிலுள்ள வள்ளியூரில் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 5. உற்பத்தித் திட்டங்கள்.

### (அ) வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்.

மாநிலம் முழுமைக்குமாக ஒரே மாதிரியான திட்டத்தின் அடிப்படையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கென எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ. 2 இலட்சம் வேளாண்மை மானியமாகத் தரப்பட்டது. இதற்கு இணையாக ஊராட்சி ஒன்றியங்கள் ரூ. 50,000-ஐ நன்கொடையாக அளித்தன, வேளாண்மை, கால்நடை வளர்ச்சிப்



1971 ஜூலை 5]

பெருக்கத் திட்டங்கள் அப்போது, 'இன்றியமையாத் திட்டங்கள்' 'விருப்பத் திட்டங்கள்', குறிப்பிட்ட பகுதிக்குரிய 'சிறப்புத் திட்டங்கள்' என்று தொகுக்கப்பட்டிருந்தன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் 1967-ஆம் ஆண்டில் முடிவுற்றது. நான்காம் திட்டம் இன்னும் முழுமையான உருப் பெறாததால் ஒவ்வோராண்டிற்கும் ஒதுக்கப்படும் தொகையைக் கொண்டு இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முன்பெல்லாம் இம்மானியத்தில் 'சிறப்புத் திட்டங்களுக்' கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் பயன்படுத்தச் சில குறிப்பிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வந்தன. குறிப்பிட்டத் திட்டங்களுக்குத்தான் இத்தொகையைச் செலவழிக்க வேண்டுமென்று கூறுவது, உள்ளூர் நிலைமைக்கு உகந்ததாயில்லையென்று அனுபவ வாயிலாகத் தெரிந்துள்ளது. மேற்கண்ட கூறுபாடுகளைக் கருத்திற் கொண்டு, வேளாண்மைத் துறை இயக்குநர், கால்நடை வளர்ச்சி இயக்குநர் மற்றும் மீன் வளர்ச்சி இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து இம்மானியத்தை 1971-72-இல் செலவழிப்பதற்குரிய வழிமுறைகளை ஊர் வளர்ச்சி இயக்குநர் உருவாக்கியுள்ளார். சில கோட்பாடுகளுக்குட்பட்டு, மாவட்ட வேளாண்மை அலுவலருடனும் கால்நடை வளர்ச்சி உதவி இயக்குநருடனும் கலந்தாலோசித்து, 'இதர திட்டங்கள்' என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குரிய கோரிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடையே தந்து விடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டிற்கென்று ஆணையிட்டுள்ளபடி கீழ்கண்ட திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும்.

### வேளாண்மை.

1. வேளாண்மைக் கிடங்குகளைக் கட்டுதல்.

2. ஊராட்சித் தோட்டங்களை உண்டாக்கிப் பராமரித்தல்.

3. மாவட்ட வேளாண்மை அலுவலருடன் கலந்தாலோசித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றம், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் கூடிய இதர திட்டங்கள்.

### கால்நடை வளர்ச்சி.

1. கால்நடை மருந்தகங்களைக் கட்டல்.

2. கால்நடை அறுவை மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டல்.

3. கால்நடை வளர்ச்சி உதவி இயக்குநருடன் கலந்தாலோசித்து, ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றம், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் கூடிய இதர திட்டங்கள்.

[1971 ஜூலை 5

(ஆ) மீன் வளம்.

மீன் வளத்தைப் பெருக்குதற்கு வாய்ப்புக்கள் உள்ளனவென்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள வட்டாரங்களில் மட்டுமே இத் திட்டம் நிறைவேற்றப்படும். இவ்வகை வட்டாரங்களில் கீழ்க்காணும் திட்டங்கள் 1969-70-ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப் படுகிறது :—

1. மீன் வளர்ப்புப் பண்ணைகளைப் பாதுகாத்தலும், செயற் படுத்தலும்.

2. மீன் முட்டைகளை வழங்குதல், பங்கிடுதல்.

3. ஏரிகளைப் புதுப்பித்தல்.

6. சமூக நலப்பணிகள்.

(அ) தொடக்கக் கல்வி.

ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள பெரிய வளர்ச்சிப் பணிகளில் ஊர்ப்புறங்களில் தொடக்கக் கல்வியை மேற்கொண் டிருப்பது ஒன்றாகும். 1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 ( ) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றியப் பகுதி களில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும்.

ஒன்றியப் பகுதிகளில் 27,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் (தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 21,700 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களின் நேரடிக் கட்டு பாட்டிலும் எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாகவும் உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,16,500 ஆசிரியர்கள் பணியாற்றி, 40,60,000 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு வருவாய் ஊரிலும் பள்ளி உள்ளது. 300 பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட எல்லா ஊர்களுக்கும் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன என்று இங்குக் கூறுவது மிகையாகாது.

ஆண்டுக்காண்டு தொடக்கக் கல்விக்காகும் செலவு படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்கண்ட வரவு செலவுத் திட்டத்தி லிருந்து அறியலாம் :—

| | | | |
|---|---|---|---|
| 1970–71 | .. | .. | ரூ. 27·42 கோடி. |
| 1971–72 | .. | .. | ரூ. 32·53 கோடி. |

தொடக்கக் கல்விக்காகும் செலவில் பெரும் பகுதி—அதாவது 87 சதவீதமான, ரூ. 28.39 கோடியை அரசு சட்டபூர்வமில்லா மானியங்களாக வழங்குவதன் மூலம் ஏற்றுக் கொள்ளுகிறது. எஞ்சியுள்ள ரூ. 4.14 கோடியை (சுமார் 13 சதவீதம்) ஊராட்சி ஒன்றியங்கள் திரட்டிக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களால்



1971 ஜூலை 5]

தொடக்கக் கல்விக்கென உள்ளூரிலேயே திரட்டப் பெறும் நிதிகளும் கீழ்க்கண்டவாறு உயர்ந்து வந்துள்ளன :—

1969-70 ரூ. 373 இலட்சம்.

1970-71 ரூ. 392 இலட்சம்.

1971-72 ரூ. 414 இலட்சம்.

தொடக்கக் கல்வியில் ஊராட்சி நிறுவனங்கள், தங்களுக்குள்ள பொறுப்புக்களை முன்னேற்ற உணர்வுடன் அணுகி வருகின்றன வென்பதற்கு இது மிகப் பெரிய சான்றாகும். கூடுதலான செலவுக்குப் பொறுப்பேற்று, அண்மையில் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை அரசு உயர்த்தியுள்ளது.

தொடக்கக் கல்வியைப் பொறுத்துள்ள பல்வேறு தொகைகள், மானியங்களைக் கணக்கிடவேண்டிய அவசியத்தை முன்னிட்டு, கல்விக்கென ஒரு தனிக் கணக்கை (ஊராட்சி நிதி வைப்புக் கணக்கு III), ஊராட்சி ஒன்றியங்களில் 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் துவக்கிக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. தொடக்கக் கல்விக்குரிய தொகைகள் இத் தனிக் கணக்கில் கணக்கிடப்படுகின்றன.

பள்ளிகளில் அதிகமான மாணவர்களைச் சேர்த்தல், பள்ளி வசதிகளை விருத்தி செய்தல், ஆசிரியர்களுக்கு வசதிகள் செய்து தருதல் ஆகியவற்றிற்கு ஒன்றியத் திட்டங்களாக அரசு மேற் கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு 1970-71-இல் ஒதுக்கப்பட்டுள்ள தொகை வருமாறு :—

(அ) கருவிகள்.—(1) ரூ. 7.36 இலட்சம் ; ரூ. 1,000 வீதம் 282 உயர் தொடக்கப்பள்ளிகளுக்கும் ரூ. 300 வீதம் 1,515 தொடக்கப் பள்ளிகளுக்கும்.

(2) 6—11 மற்றும் 11—14 வயது பிரிவிலுள்ளவர்களுக்கென்று கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க முன்மானியமாக ரூ. 7.32 இலட்சம்.

(ஆ) துப்புரவு வசதிகள்.—ரூ. 4 இலட்சம் (ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பள்ளிகளுக்கு ரூ. 3,330 வீதம்).

(இ) ஆசிரியர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுதல்.—ரூ. 5 இலட்சம். இதுகாறும் 1,370 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(ஈ) பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.—ரூ. 52.60 இலட்சம்; 21,700 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சுமார் 14,100 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மொத்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இது 67 சதவீதமாகும். கடந்த ஆண்டு களின் சாதனையைக் கொண்டு மதிப்பிடுகையில் ஆண்டொன்றிற்கு சுமார் 900 முதல் 1,000 வரை கட்டடங்கள் கட்டப்பட்டு வந்திருப் பதை அறியமுடியும். பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தர விரைவுத் திட்டமொன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது. வருங் காலத்தில் பள்ளிகள் நிலையான கட்டடங்களில் இயங்குவதோடு,

காலப்போக்கில் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங்களிலேயே செயற்படும்.

1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், தொடக்கக் கல்விக்குக் கூடுதலான நிதியளிக்க வேண்டிய தேவை பெருகியுள்ளது. எனவே ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தற்போதைய நிதி நிலை, அதிகாரங்களைப் பற்றி முழுவதுமாக ஆராய வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்தது. அதற்கேற்ப அலுவலர், அலுவலர் அல்லாதோரை உள்ளடக்கி, ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு, ஊராட்சிக் கல்வி நிதி நிலை விசாரணைக் குழு ஒன்றை அரசு நியமித்தது. கல்வித் தொடர்புள்ள ஊராட்சி நிதியின் பல்வேறு கூறுகளைப் பற்றி இக்குழு ஆய்ந்தது. இக்குழுவின் அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### மதிய உணவுத் திட்டம்.

ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால், அவற்றின் துணைகொண்டு நாட்டை உருவாக்கும் நற்பணியான இம் மதிய உணவுத் திட்டத்தை அரசால் சீராகச் செயற்படுத்த முடிகிறது. 30,863 தொடக்கப் பள்ளிகளில் (தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள்) மதிய உணவு அளிக்கப்படுகிறது. அரிசன நலப்பள்ளிகளிலுள்ள மாணவர்களையும் சேர்த்து 18 இலட்சம் மாணவர்களுக்கு, ஆண்டில் 200 நாட்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 198 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மதிய உணவின் சத்தூட்டத் தன்மையைக் கூட்டுதற்குரிய பொருள்களையளிக்கக் "கேர்" நிறுவனம் முன்வந்துள்ளது. 1969-70-ஆம் ஆண்டில் "கேர்" நிறுவனம் ரூ. 6.02 கோடி மதிப்புள்ள பொருள்களை வழங்கியுள்ளது. 10 காசுகளுக்கு மேலும் செலவழித்துச் சத்துள்ள, சுவையான உணவை உள்ளூர் குழுக்கள் தயாரித்துக் கொள்ளலாம். நான்காம் ஐந்தாண்டுக் காலத்தில் முதல் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படும் ஏழை மாணவர்கள் இத்திட்டத்தில் கொணரப்படுவார்கள். 1969-70-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களையும் சேர்த்து, 1970-71-ஆம் ஆண்டில் 1.34 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மதிய உணவுத் திட்டத்திற்கென 1970-71-ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு ரூ. 20.66 இலட்சமாகும்; (கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான ரூ. 12.66 இலட்சமும் மைய சமையற்கூடத் திட்டத்திற்கான ரூ. 8 இலட்சமும் இதில் அடங்கும்.)

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேக்காடு என்னும் ஊரில் "கேர்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1967-68-இல் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பெற்ற மையச்



சமையற்கூடத் திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்துள்ளது. சேக்காட்டில் அமைந்துள்ள மையச் சமையற்கூடத் திட்டம் வெற்றிகரமாக இயங்கியதைக் கண்ட "கேர்" நிறுவனம், மேலும் 30 நிலையங்கள் 1969-ஆம் ஆண்டில் துவங்க முன் வந்தது. அரசு இவ்வுதவியை ஏற்றுக்கொண்டு, 1969-70-இல் 30 நிலையங்களைத் தொடங்க ஆணை பிறப்பித்தது. 1970-71-ஆம் ஆண்டில் மேலும் 30 நிலையங்களை வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் துவக்க ஆணையிடப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் மேலும் 30 மையச் சமையற்கூடங்களைத் திறக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது. "கேர்" நிறுவனத்தின் துணைக்கொண்டு மதிய உணவுப் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்கு 10 வட்டக் கிடங்குகளை அமைக்கும் யோசனை பரிசீலனையிலுள்ளது.

கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமாயின், அது தொடக்கக் கல்வி நிலையிலிருந்துதான் துவக்கப்பட வேண்டுமென்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதைக் கருத்திற்கொண்டு, தொடக்கக் கல்வியைச் சிறக்க செய்யப் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

### (ஆ) சுகாதாரப் பணிகள்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.**—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட ஒரு பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்பு சிகிச்சையளிப்பதிலும் நோய்ச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். ஒரு வட்டாரத்திற்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் வீதம் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 188 நிலையங்கள் செயற்பட்டன. 1966–69-இல், 129 நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டன. இன்றளவில் 375 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 331 நிலையங்களில் இயங்கி வருகின்றன.

"யூனிசெஃப்"புடன் செய்து கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின் விளைவாக, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்தும் "யூனிசெஃப்" உதவியைப் பெறுதற்குத் தகுதி பெற்றுள்ளன. சில வரம்புகளுக்குட்பட்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள் வழங்குவதை "யூனிசெஃப்" மேற்கொண்டுள்ளது. இதுவரை 193 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முழு உதவியையும், 21 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒரு பகுதி உதவியையும் பெற்றுள்ளன. 102 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள், "மைக்கிராஸ்கோப்", குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றை அளிப்பதற்குரிய கோரிக்கைகள் "யூனிசெஃப்"புக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறம்பட இயங்குவதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தாய் சேய் நல நிலையங்கள்.

தாய் சேய் நலப்பணிகளைத் தங்கள் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத் திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் 2/3 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களின் 10-க்கும் மேற்பட்ட தாய் சேய் நல நிலையங்களைப் படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய் சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,819 ஆகும்.

### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.

மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் செலவுகளுக்கு ஊராட்சி ஒன்றியக் குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நிர்வகிப்பதற்கு, ஒவ்வொரு மருந்தகத்திற்கும் ரூ. 5,400-ஐ அரசு அளிக்கிறது.

### குடும்ப நலத் திட்டம்.

குடும்ப நலத் திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின் கீழ் இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. இவ்வட்டாரங்கள் அனைத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பயிற்சி முகாம்கள் (குடும்ப நலத் திட்டம்) ஒவ்வோராண்டும் நடத்தப்படுகின்றன.

திட்டத்தின்படி, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் ரூ. 30 வீதம் மருந்தகம் அரசிடமிருந்து பெறலாம். ஒன்றியங்களால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள அறுவை சிகிச்சையாளரிடம் அனுப்பப்படும் ஒவ்வோர் அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10-ஐ ஈட்டு மானியமாக ஒன்றியக் குழுக்கள் பெறலாம். அறுவை சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவிற்கும் ஒன்றியப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவிற்குமாகவே இத்தொகை அளிக்கப்படுகிறது. 1974-ஆம் ஆண்டில் பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே குறிக்கோளாகும். வெவ்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பல்வேறு நலத் திட்ட முறைகளிலும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.





### மாநில அரசால் பின்பற்றப்படுவதற்குரிய திருத்தியமைக்கப்பட்ட திட்டம்.

கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு குடும்ப நலத் திட்ட இலக்கைத் துரிதமாக அடைய வேண்டியுள்ளது :—

(அ) மாவட்டக் குடும்ப நலத் திட்டச் சுகாதார அலுவலர் ஒருவர், அறுவை மருத்துவர் இருவர், மாவட்ட விரிவுப் பணி அறிவு பரப்புநர் ஒருவர் (முன்பு மாவட்டக் குடும்ப நலத் திட்ட அலுவலராயிருந்தவர்), புள்ளி விவர உதவியாளர் போன்றவர்களைக் கொண்ட மாவட்டக் குடும்ப நலத் திட்டப் பிரிவு.

(ஆ) இயங்கும் அறுவைச் சிகிச்சைப் பிரிவும், இயங்கும் மருந்தகப் பிரிவும்.

(இ) ஒவ்வொரு 50,000 பேர்களுக்கு ஒரு நகரக் குடும்ப நலத் திட்டப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று மைய அரசு யோசனை கூறியதற்கு மாறாக, ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன; மேலும் சென்னை மாநகரில் மூன்று மருத்துவ மனைகளிலும் இப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) வட்டார நிலையில் கிராமக் குடும்ப நலத் திட்ட நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மைய அரசு யோசனை கூறியதற்கு மாறாக, வட்டாரத் தலைமையிடம், வட்டாரத் தலைமையிடமில்லாத இடங்களில் 85 கிராமக் குடும்ப நலத் திட்ட நிறுவனங்களை அரசு திறந்துள்ளது. மேலும் 375 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் கிராமக் குடும்ப நலத் திட்டப் பிரிவைத் தொடங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### (இ) சமூகக் கல்வி.

1969-70-ஆம் ஆண்டு முதல் சமூகக் கல்வி வேலைத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு :—

(1) சமூகக் கல்வி நிலையங்கள்.
(2) வானொலிப் பெட்டிகள்.
(3) தகவல் நிலையங்கள்.
(4) பள்ளி வேலைகள்.
(5) விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, விழாக் கூட்டங்கள்.
(6) தேசிய நாட்களைக் கொண்டாடுதல்.
(7) பலவகை.

1971-72-ஆம் ஆண்டிற்குரிய வேலைத் திட்டங்கள் வருமாறு :—

(1) சமூகக் கல்வி நிலையங்கள்.
(2) கிராம நூலகங்கள்.
(3) விளையாட்டுகள்.

[1971 ஜூலை 5

(4) தகவல் நிலையங்கள்.

(5) அருகிலுள்ள மாவட்டங்களுக்கு உழவர்கள் சுற்றுலாச் செல்லல்.

தற்போது 12,900 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர், நடைமுறைத் தகவல்களின் மீது விருப்பப்படி விவாதிக்கும் ஒரு நிலையமாக, இவை அமைக்கப்பட்டுள்ளன. ஊரிலேயுள்ள பள்ளி ஆசிரியர்கள் அல்லது இதர கல்வியறிவு பெற்றவர்கள் இதன் அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் செயல்திறமிக்க திட்டமொன்று தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டுவிட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டதனால், இத்திட்ட வேலைகள் தற்போது ஊர்கள், சிற்றூர்களுக்குக்கூட விரிவாக்கப்படுகின்றன. இதற்கென ஊராட்சி ஒன்றிய வாரியாக ஒதுக்கப்பட்டத் தொகையைத் தவிர்த்து 1969-70-ஆம் ஆண்டில் ஊர்கள், சிற்றூர்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகளை நிறுவுவதற்கு அரசு ரூ. 5,17,000 ஒதுக்கியுள்ளது. 1970-71-ஆம் ஆண்டிற்கென மேலும் ரூ. 2.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டைப் பயன்படுத்திச் சுமார் 2,943 வானொலிப் பெட்டிகள் கூடுதலாக நிறுவப்படும். 1971-72-ஆம் ஆண்டிற்கென மொத்த மானியமாக ரூ. 5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஊர்ப்புறங்களில் 5,000 வானொலிப் பெட்டிகளை அமைப்பதற்கு இவ்வொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும், ஆக்கப்பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, விவாதிக்கும் குழுக்களாகச் செயற்படுகின்றன. இதுவரை 5,000 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்குவிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்கு, "டிரான்சிஸ்டர்" வானொலிப் பெட்டிகள், சுழற்கேடயங்கள் ஆகியவை ஆண்டுதோறும் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன. மாநில அளவிலான சிறந்த கிராம வானொலி மன்றத்திற்கும் சுழற்கேடயம் அளிக்கப்படுகிறது. தவிர, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகும் செய்திகளை உள்ளடக்கும் சிற்றேடொன்று திங்கள் தோறும் வானொலி மன்ற உறுப்பினர்களின் நன்மைக்கென செய்தி நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.



1971 ஜூலை 5]

அரசால் மேற்கொள்ளப்படும் ஆக்கபூர்வமான வளர்ச்சிப் பணிகள் பற்றிய அறிவும் செய்தியும் உட்புறங்களிலுள்ள ஊர்களில் வசிக்கும் மக்களுக்குக்கூட எட்டுதற்கு இச்செயல்கள் மிகவும் துணை செய்து நாட்டை உருவாக்கும் நற்பணியில் மக்கள் பங்கு பெறவேண்டுமென்ற ஒரு நல்லுணர்வை ஏற்படுத்தியுள்ளது.

(ஈ) மகளிர், குழந்தைகள் நலம்.

ஊர்ப்புறங்கள் அனைத்திலும் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்த எண்ணிக்கையாக 30 மன்றங்கள், 1962-63-ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவப்பட்டுள்ளன. மனப்போக்கு மாறுதற்குரிய முக்கிய அங்கமாக இம் மன்றங்கள் செயற்படுகின்றன. இம் மன்றங்களில் குடும்ப வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக் கருத்தடைக் கருவிகளைக் கையாள வேண்டுமென்றும், சிரமமான காலங்களில் உதவுதற்கெனச் சேமிக்க வேண்டுமென்றும், மூட நம்பிக்கைகள், சாதி உணர்வுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் மகளிர் அறிவுறுத்திப் பின்பற்றச் செய்யப்படுகின்றனர். 2—3 இலட்சம் கிராம மகளிர் பங்கு பெறும் 13,224 மகளிர் மன்றங்கள் உள்ளன. அங்கு மகளிர், முன்னேற்றமான வாழ்க்கை முறையைக் கற்றுப் பின்பற்றப் பழகுகின்றனர். இந்த 13,224 மகளிர் மன்றங்களில் 10,082 மன்றங்களுக்கு 50 சத வீதம் அரசு நன்கொடை மூலம் தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. 300 மகளிர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. வட்டாரத்திற்கு ஒன்று வீதம் சுமார் 359 மகளிர் கேட்பு மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம் மன்றங்கட்கு மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுதற்கென ரூ. 4,000 அளிக்கப்படுகிறது.

7. சிறப்புத்திட்ட வேலைகள்.

(அ) கிராம ஆள்வலத் திட்டம்.

சமுதாயச் சொத்துக்களை உருவாக்கி, அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதற்கும் வேளாண்மை வேலையில்லாக் காலங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் கிராமப் பகுதிகளில் கிராம ஆள்வலத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை விருத்தி செய்தல், சிறிய சாலைகள் அமைத்தல், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களைப் பண்படுத்தல், சமுதாயக் கிணறுகளைத் தோண்டுதல், விறகுகளுக்காகப் பயன்படும் மரங்களை வளர்த்தல், சிறிய கழிவு நீர்ப்பாதைகளை அமைத்தல், சீராக்குதல் போன்றவை கிராம ஆள்வலத் திட்ட வேலைகளில் அடங்குவனவாகும். இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில் 72 வட்டாரங்களில் இத் திட்டம் செயற்படுகிறது. சுமார்

ரூ. 4 இலட்சம் வரை முதலீடு செய்து சுமார் 4 முதல் 5 ஆண்டுகளாக இத் திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றிய வட்டாரங்களை, இத் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, அவ்விடங்களில் பின் தங்கிய வட்டாரங்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பது தற்போதைய கொள்கையாகும். அதன் மூலம் நன்மைகள் பரவலாகக் கிடைக்க வழி ஏற்படுகிறது. அதற்கேற்ப, 1969-70-ம் ஆண்டில் 42 பழைய வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் வேறு 42 வட்டாரங்கள் சேர்க்கப்பட்டன. 1970-71-ம் ஆண்டில் மேலும் 24 வட்டாரங்கள் நீக்கப்பட்டு அவ்விடங்களில் 24 புதிய வட்டாரங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில் ஒரு வட்டாரத்தை நீக்கி, அதற்கு மாறாக இன்னொன்றைச் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் நிதி, திட்டச் சாதனைகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | செய்யப்பட்ட செலவு. (ரூ. இலட்சத்தில்.) | ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு. (வேலை நாட்கள் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1966-67 .. .. .. | 52·43 | 17·26 |
| 1967-68 .. .. .. | 40·70 | 15·72 |
| 1968-69 .. .. .. | 50·89 | 18·49 |
| 1969-70 .. .. .. | 40·65 | 14·91 |
| 1970-71 .. .. .. | 50·00 | 16·54 |

1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இத் திட்ட வேலைகளுக்கென ரூ. 32.11 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சத்துணவுத் திட்டம்.

“ யூனிசெஃப் ” நிறுவனம், மாநில அரசு ஆகியோரின் உதவியுடன் 1962-63-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் முதன் முறையாகச் சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. நல்ல உடல் நலத்துடன் வாழ, உள்ளூரிலேயே சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஊர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதே இத் திட்டத்தின் பரந்த நோக்கமாகும். இம் மாநிலத்திலுள்ள 7 ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களே இத் திட்டத்தை நிறைவேற்ற முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ் வட்டாரங்களில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்ணுற்ற பின்னர், சுயதேவைகளை, அவசியம் எழும்போதெல்லாம் வேளாண்மை மானியத்தை பயன்படுத்தி நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய அடிப்படையில் இத் திட்டம் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் இவ்வட்டாரங்களிடமே ஒப்படைக்கப்பட்டன. 1966-67-இல் இரண்டாவது கட்டமாகத் தொடங்கப்பட்ட இரண்டு வட்டாரங்கள் 1971-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளில் ஐந்தாண்டுகளுக்குரிய செயல்களை முடித்துள்ளன. இவ்விரண்டு வட்டாரங்களிலும் புகுத்தப்பட்ட திட்ட வேலைகள், வருங்காலத்தில் நிறைவேற்றப்படுதற்கென ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்படும். அவ்வாறே சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரிய நாயக்கன்பாளையம் வட்டாரங்களும் அவற்றில் திட்ட வேலைகளை 31—3—1971-இல் முடித்துள்ளன. (இந்த வட்டாரங்களில் சத்துணவுத் திட்டம் தாமதமாகத் துவக்கப்பட்டதால், மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்குமாறு, இந்திய அரசிற்கு எழுதப்பட்டுள்ளது).





கீழ்க்கண்ட வட்டாரங்களில் அவற்றிற்கு எதிரே குறித்துள்ள ஆண்டுகள் தொடக்கம், இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது :—

| வட்டாரம். | தொடங்கப்பட்ட ஆண்டு. |
|---|---|
| 1 எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்) .. .. | 1969-70 |
| 2 திருவரங்குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) .. | 1969-70 |
| 3 ஆலங்காயம் (வட ஆற்காடு மாவட்டம்) .. .. | 1970-71 |
| 4 அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்) .. .. | 1970-71 |
| 5 போகலூர் (இராமநாதபுரம் மாவட்டம்) .. | 1970-71 |
| 6 அரூர் (தர்மபுரி மாவட்டம்) .. .. .. | 1970-71 |
| 7 கொடைக்கானல் (மதுரை மாவட்டம்) .. .. | 1970-71 |
| 8 குறிஞ்சிப்பாடி (தென் ஆற்காடு மாவட்டம்) .. | 1970-71 |
| 9 மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) .. .. | 1970-71 |
| 10 மோகனூர் (சேலம் மாவட்டம்) .. .. .. | 1970-71 |

சத்துணவுத் திட்டத்தை 1971-72-இல் விரிவாக்க, 5 வட்டாரங்களை இந்திய அரசு, தமிழ் நாட்டிற்கு ஒதுக்கியுள்ளது. 1966-67-ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் நான்காம் திட்டச் சத்துணவுத் திட்ட வட்டாரங்கள், வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 34,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு மைய அரசின் சிறப்பு உதவியைப் பெறும். இத்தோடு கூட மாநில அரசின் நன்கொடை ரூ. 51,000, யூனிசெஃப் உதவி ஆகியவையும் சேரும்.

நடப்பாண்டிற்கு (1971-72) சத்துணவுத் திட்டத்திற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டத் தொகை ரூ. 11.03 இலட்சமாகும்.

### (இ) கிராமத் தொழில்கள் திட்டம்.

கிராமப்புறங்களில், கிராமத் தொழில்கள், சிறிய தொழில்கள் வளர்ச்சியடைதற்கு ஊக்கமளிப்பதற்செனவே, ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நான்குனேரி ஆகிய இடங்களில் கிராமத் தொழில்கள் திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பின்மை அதிகமாக உள்ள பகுதிகளைத் தெரிந்தெடுத்து, அங்குக் கிராமத் தொழில்களையும், சிறுரகத் தொழில்களையும் தீவிரப்படுத்துவதற்காகத் தொழில்

நுணுக்கங்களையும் முறைகளையும் உருவாக்கி, அவற்றைக் கையாண்டு போதிய அனுபவம் அடைவதே கிராமத் தொழில்கள் திட்டங்களின் நோக்கமாகும். உள்ளூர் கைவினைஞர்களுக்கும், உழவர்களுக்கும் தொழில் செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்காகப் பொது வசதிப் பணி நிலையங்கள் நடத்துதல், உள்ளூர் மக்களின் தேவையையொட்டிப் பொருள்களைத் தயாரிப்பதற்காக அரசுத் துறையினால் கண்காணிக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல் ஆகியன இவற்றின் தொடக்க காலப் பணிகளாம். எதற்காக இவை தோற்றுவிக்கப்பட்டனவோ, அப் பணிகளை இவை செய்து முடித்துவிட்டதனால், அரசுக் கண்காணிப்பிலுள்ள 16 பொது வசதிப் பணி நிலையங்களை வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களுக்கு அளிப்பதென்று அரசு முடிவு செய்து, அதற்கென்று "டெண்டர்களை"க் கோரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூடுதல் தொகை வந்த ஐந்து நிலையங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பொது வசதிப் பொறியியல் பட்டறையில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சி தவிர, மாநிலத்திலுள்ள ஏனைய எல்லா பயிற்சிப் பிரிவுகளும் மூடப்பட்டு விட்டன. கிராமத் தொழில்கள் திட்ட "ஏஜென்சி"களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள கிராமக் கலை, கைவினைப் பொருள்கள் தொழில் திட்டத்திலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி, ஸ்ரீபெரும்புதூர்த் திட்டப் பகுதியில் இரண்டும், ஓமலூர் பகுதியில் இரண்டும், நான்குனேரியில் ஒன்றுமாக ஐந்து கிராமத் தொழிற் பேட்டைகளைத் தொடங்கஅரசு அனுமதி அளித்துள்ளது. தனியார்கள் தொழில்களைத் தொடங்குதற்குப் போதிய வசதிகளை அளிப்பதற்கே இவை நிறுவப்படுகின்றன. திட்ட அலுவலர்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன், திட்டப் பகுதியிலுள்ள ஒவ்வொரு சிறு ரகப் பிரிவிற்கும் கூடுதலாக ரூ. 5,000, தளர்த்தப்பட்ட விதிகளின் கீழ், "ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா"வினால் இந்திய அரசு வாயிலாக, நிதியுதவியளிக்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 1970-இல் இத் திட்டம் தொடங்கப் பெற்றது. டிசம்பர் 1970 வரை 238 பிரிவுகளுக்கு ரூ. 7,13,565 வரை நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் அளிக்கக் கூடிய உதவித் தொகையை ரூ. 5,000-லிருந்து ரூ. 15,000-க்கு உயர்த்தும் ஒரு யோசனை இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்திய அரசு அணுகப்பட்டுள்ளது. இப்போது செயற்படும் மூன்று திட்டங்களையும் மாவட்ட முழுவதற்கும் விரிவாக்கி 1—4—1974 முதல் தொடங்கும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் இரண்டு கிராமத் தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்க இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

### (ஈ) குழந்தைகள் நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

குழந்தைகள் நலனிலுள்ள எல்லா அம்சங்களையும் தழுவி, குழந்தைகள் அனைவருக்கும்—சிறப்பாக 0 முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் (மகப்பேறுக்கு முந்தைய காலம் உட்பட)



நன்மை பயக்கும் ஒரு செயல் விளக்கத் திட்டம் இம் மாநிலத்திலுள்ள பூவிருந்தவல்லி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முழு உதவி அடிப்படையில் இத் திட்டத்தை இந்திய அரசு வழங்கியுள்ளது. தானே முன்வந்து பணியாற்றும் கிராம நிறுவனங்களும், உள்ளாட்சிகளும் நல்கும் மனமுவந்த ஒத்துழைப்பு, அயராத தொண்டுள்ளத்தின் கூட்டுறவுடன், குறைந்த செலவில் குழந்தைகளுக்கு நிறைந்த பயன் அளிக்க முடியும் என்பதே இத் திட்டத்தின் கருத்தாகும். இத் திட்டத்தில் 50 குழந்தைகள் காப்பகங்கள், 10 குழந்தைகள் ஓய்வு நிலையங்கள், மற்றும் 2 மகப்பேறு மருத்துவ நிலையங்கள் இருக்கும். இத் திட்டத்திற்கு 1968-ல் ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 2.70 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (உ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலையில் ஒன்றும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இரண்டு பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் செயற்படுகின்றன. இந்த வட்டாரங்களில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காகவே நடத்தப்படுவனவாகும். 'போக்குவரத்து', "குடி நீர் வழங்கல்" ஆகிய அம்சங்களையொட்டி இப்பகுதித் தேவைகள் விரிவான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காகச் செய்யப்படும் பணிகளுக்கு நன்கொடைகள் ஏதும் திரட்டப்படுவதில்லை. வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கிராமக் கலை, கைவினைப் பொருள்கள், கல்வி ஆகிய பிரிவுகளின் கீழ்ச் செய்யப்படும் பணிகள் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. 1971-72-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 12.91 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஊ) கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டம்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மையை ஒழிப்பதற்காக, கிராமப் பணிகள் சிறப்பு வேலைத் திட்டம் என்ற ஒரு புதிய வேலைத் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இணைப்புச் சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்கும் பணிகளை நிறைவேற்றுதல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். இக் காரியங்களுக்காக, 1970-71-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத் தொகையில் 25 சதவீதம் அரிசனக் குடியிருப்புகளில் உள்ள வேலைகளுக்கென நன்கொடைத் தொகை செலுத்த வேண்டிய அவசியமின்றி ஒதுக்கப்பட்டது. உள்ளூர்த் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பல்வேறு வட்டாரங்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக, 1970-71-இல் ஒதுக்கப்பட்ட நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்

பட்டது. குடிநீர் வழங்கும் பணிகளுக்காக வசூலிக்கப்படும் நன்கொடைத் தொகை 25 சதவீதமாகும். எஞ்சியுள்ள 75 சதவீதம் கிராமப்பணிகள் சிறப்பு வேலைத் திட்டத்திலுள்ள நிதிகளிலிருந்து செலவிடப்படும். இணைப்புச் சாலைகளுக்கென ஏ, பி, சி, டி ஆகிய வட்டாரங்களிலிருந்து முறையே 50 சதவிகிதம், 40 சதவிகிதம், 30 சதவிகிதம், 20 சதவிகிதம் நன்கொடைத் தொகை வசூலிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டடங்கள் கட்ட, தொடக்கப்பள்ளிக்கு ரூ. 4,000 உம் உயர் தொடக்கப் பள்ளிக்கு ரூ. 6,000-உம் குறைந்த அளவு நன்கொடைத் தொகையாக இருக்க வேண்டும். மகப்பேறு நிலையங்களுக்கு 33-1/3 சதவிகிதம் நன்கொடை விகிதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு நடப்பாண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8: 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் முன்னிலைப் பள்ளிக் குழந்தை கட்டு உணவளித்தலும், குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.

குழந்தைகள் காப்பகங்கள்.

மாநிலத்திலுள்ள 47 வட்டாரங்களில் 1,000 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. காப்பகம் ஒவ்வொன்றிலும் முன்னிலைப்பள்ளிக் குழந்தைகள் (3—5 வயதுள்ள), கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் கொண்ட 120 பேர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கப்படுகிறது. இதனால் நாளொன்றுக்கு 1,20,000 பேர் பலன் பெறுகின்றனர். "கேர்" நிறுவன ஒத்துழைப்புடன் இத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. புரதமும் இதர சத்துக்களும் அடங்கியுள்ள உணவுகள் போதிய அளவில் குழந்தைகட்குக் கிடைக்காததன் காரணமாக அவர்களுக்கு உடல் நலக் குறைவுடன் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு, பிற்காலத்தில் அவர்களின் அறிவு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கெனவே ஆண்டில் 300 நாட்களுக்குக் குழந்தைகள் காப்பகங்களில் உணவளிக்கப்படுகிறது.

மொத்தமுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களில் 515 உணவளிக்கும் நிலையங்கள் நிலையம் ஒவ்வொன்றிலும் 40 பேர் பயனடையும் வகையில், 38 வட்டாரங்களில் 1971-ஆம் ஆண்டு சனவரி பொங்கல் நன்னாளில் திறக்கப்பட்டன. 1971-ஆம் ஆண்டு மார்ச் முதற்கொண்டு இவ்வெண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்பெற்றது. ஒவ்வொரு நிலையத்திலும் 40 பேர் பயன்பெறக்கூடிய முறையில் மேலும் 292 நிலையங்கள் 1971 ஏப்ரல் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று திறக்கப்பட்டன. இன்னும் இரண்டு திங்கள்களில் இங்கும் 120 பேர், நிலையமொன்றுக்குப் பயனடைவரென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்படுத்த எண்ணிய 1,000 நிலையங்களில் இன்னும் எஞ்சியுள்ள 193 நிலையங்களும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் (1971-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள்) துவக்கப்படும்.



சத்துள்ள உணவுப் பொருட்களை ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 87.50 இலட்ச செலவில் தருதற்குக் "கேர்" நிறுவனம் இசைந்துள்ளது. கட்டடத்திற்குரிய நிலங்கள் பெரும்பாலும் மக்களால் நன்கொடையாகத் தரப்படுகின்றன.

இந்நிலையங்களை நிர்வகிக்க வட்டாரங்களிலுள்ள கிராம சேவிகைகளுக்குப் போதிய பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. "கேர்" அளிக்கும் உணவு பொருள்களைக்கொண்டு பல்வகை உணவுகளைத் தயாரித்தல், பாதுகாத்தல் மற்றும் சமைக்கும்போதும், உணவைப் பறிமாறும்போதும் துப்புரவைக் கடைப் பிடித்தல் போன்றவற்றிற்குத் தேவையான சிறப்புப் பயிற்சிகள் டி. கல்லுப்பட்டியிலும், பவானிசாகரிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையத்திலும் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற கிராம சேவிகைகள், பாலசேவிகைகளுக்கும், ஆயாக்களுக்கும் பயிற்சி அளிக்கின்றன. அனுமதிக்கப்பட்ட வடிவில் ஒவ்வொரு காப்பகமும் ரூ. 7,000 செலவில் கட்டப்படுகிறது. "கேர்" நிறுவனம் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உதவிப் பணமாக ரூ. 6,500 தருகிறது. எஞ்சிய தொகையை மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

1971-72 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 13.76 இலட்சமாகும்.

ஊர்ப்புறங்களில் கவனிப்பற்றுள்ள முந்நிலைப் பள்ளிச் சிறார்கள், கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உடல் நலத்தைப் பேண இத் திட்டம் பெரும் துணை செய்யும் என உறுதியாகக் கூறலாம்.

9. சீரணி.

அறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற சீரணி, இன்று தமிழ்நாட்டில் சேவையுணர்வு பெற்ற ஓர் இன்றியமையா இயக்கமாய் வளர்ந்துள்ளது. இச் சீரணி சமுதாய நல விழிப்புணர்ச்சியுடன், புதிய சமூக அமைப்பை உருவாக்கத் தன்னலமற்றுப் பணிபுரியும் இயக்கமாகும். வளர்ச்சித் திட்டப் பணிகள் அனைத்திலும் சீரணி இயக்கம் தன் சேவைகளைத் தந்து வலிவிலும் உருவிலும் பெரிதாக வளர்ந்துள்ளது. சீரணி உறுப்பினர்கள் ஊதியம் எதுவுமின்றி, அரசு தரும் கருவிகளையும் துணைப் பொருள்களையும் கொண்டு தங்கள் ஓய்வு நேர வேளைகளில் ஏரிகளைச் செப்பனிடல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சாலைகளைச் சீர்ப்படுத்துதல், தரிசு நிலங்களை விளை நிலங்களாக்குதல், முதியோர் கல்வி, தீண்டாமை போன்ற சமுதாயக் கேடுகளைக் களையப் பரப்புரையாற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். தொடங்கிய காலத்திலிருந்து நான்காண்டுகளுக்குள்ளாக சீரணித் தொண்டர்கள் ஆற்றியுள்ள சாதனைகளை நடுநிலையோடு நோக்கும்போது, எந்த நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இது துவக்கப்பட்டதோ, அது பொய்த்துவிடவில்லையென்று உறுதியாக நம்பலாம்.

[1971 ஜூலை 5

1967-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் 1971-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ம் நாள் முடிய உள்ள காலத்தில் இவ்வணியினர் எடுத்து முடித்துள்ள பணிகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் .. .. | 1,119 |
| 2. | ஏரிகள், கால்வாய்கள் தூர் எடுத்தல் .. .. | 1,292 |
| 3. | இணைப்புச் சாலைகள் அமைத்தல் .. .. .. | 823 |
| 4. | பூச்சி மருந்துகள் அடித்தல் (ஏக்கர்) .. .. | 1,500 |
| 5. | தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கல் (ஏக்கர்) .. | 500 |
| 6. | வெள்ளை பூசப்பட்ட பள்ளிகள் .. .. .. | 13,523 |
| 7. | பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்ப் பலகைகள் .. | 2,562 |
| 8. | காய்கறித் தோட்டங்கள் .. .. .. .. | 3,224 |
| 9. | இதர பணிகள் (அவையாவன : பள்ளிச் சுவர்களில் திருக்குறள் எழுதியது; வீதிகளைச் சுத்தம் செய்தது; பள்ளிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தியது, திருவள்ளுவர் உருவப் படங்களை வைத்ததும் போன்ற செயல்கள்). | 10,778 |
| 10. | நாளொன்றுக்கு ஒரு முறையாவது கோதுமை உணவைக் கொள்ள வேண்டுமென்று தூண்டிய மையால் அதைப் பின்பற்றும் மக்கள். | 7,02,146 |

ரூ. 41,56,178 அரசு உதவியுடன் ரூ. 1,10,14,549 மதிப்புள்ள வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சீரணித் திட்டத்தில், இம் மாநிலத்தில் சுமார் 534 சீரணி அறிவகங்கள் உள்ளன. சீரணி அறிவகங்களைச் செயற்படுத்துதற்கு ரூ. 49,000-உம் மாவட்ட தலைமையிடங்களில், சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்க ரூ. 2,79,000-உம் 1970-71-ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் தற்போது 44,524 சீரணித் தொண்டர்கள் உள்ளனர். சீரணித் தொண்டர்களிடையே ஒழுங்குணர்ச்சியை வளர்ப்பதற்கென மாவட்டங்களில், 3,600 தொண்டர்களுக்கு 7 நாட்கள் தீவிரப் பயிற்சியளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தவரை 985 தொண்டர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. வட்டார நிலையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 50 சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.

மைய அரசின் நிதிஉதவியுடன் 356 சீரணித் தொண்டர்களுக்கு, ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் 10 குழுக்களாக, குழு ஒன்றுக்கு 12 நாட்கள் விதம் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இங்கு, தீவிர வேளாண்மை முறை கால்நடை வளர்ச்சி, கிராமங்களில் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளல் போன்ற வற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

சென்னை மாநகரிலுள்ள சேரிகளில் வாழும் ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் சத்துள்ள உணவுகளை வழங்கும் திட்டத்தில் 400 சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். இத் திட்டத்தால் சுமார் 40,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.



1971 ஜூலை 5]

10. கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம்.

மாநிலத்திலுள்ள மாவட்டம் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவாக 1,000 பேர்களுக்கு வேலையளிக்க "கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம்" ஒன்றினை மைய அரசு வகுத்துள்ளது. உடலுழைப்பும், உற்பத்தியும் இரண்டறக் கலந்து பல்வகைப்பட்ட கிராமத் திட்டங்கள் வாயிலாகக் கூடுதலான வேலை வாய்ப்புகளை உண்டாக்கும் வகையில் இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் கீழ்க்கண்டவையாக இருக்க வேண்டுமென்று இந்திய அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது :—

(அ) பெருந்திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளைநிலங்களாக்குதல், ஊராட்சி நிலங்களைத் திருத்துதல் போன்றவை.

(இ) கழிவுநீர் வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நில நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்களை அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண் வளப் பாதுகாப்பு அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

ஒருவருக்கு ஒரு திங்களுக்கு ரூ. 100-க்கு மேற்படாத ஊதியமாக ஆண்டில் கூடுமானவரை 300 நாட்களுக்குத் தொடர்ச்சியாக வேலையளிப்பதையே இத் திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இது முழு அளவிலான மைய உதவித் திட்டமாகும். நான்காம் திட்ட காலத்தில் எஞ்சிநிற்கும் 3 ஆண்டு களில் இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இத் திட்டத்தைச் செயற்படுத்த, மாவட்டத்தை ஒரு பிரிவாக மைய அரசு எடுத்துக்கொண்டு, ஒரு மாவட்டத்திற்கு ஓர் ஆண்டிற்கென ரூ. 12.50 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. ஒதுக்கப் பட்டுள்ள ரூ. 12.50 இலட்சத்தில் ரூ. 10 இலட்சம் உழைப்பவர் களுக்கும், ரூ. 2.50 இலட்சம் பொருள்கள், கருவிகளுக்குமாக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணிகள் நிறைவேற்றப்பட்ட வுடன் அவை மாநில அரசால் பேணிவரப்படும்.

மாவட்ட அடிப்படையில் மைய உதவி வழங்குவதற்கு மாறாக, வட்டார அடிப்படையில் உதவி வழங்க வேண்டுமென்று மைய அரசை இம் மாநில அரசு கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலாக 10 வட்டாரங்களில் இத் திட்டத்தைச் செயற்படுத்த மாநில நிதியிலிருந்து ரூ. 1 கோடியை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் இத் திட்டம் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய

[1971 ஜூலை 5

மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மேலும் 10 வட்டாரங்களுக்கு விரிவாக்கப்படும். கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் இத்திட்டம் எல்லா வட்டாரங்களிலும் செயற்படுத்தப்படும்.

### 11. வருங்கால வாய்ப்பு நிலைகள்.

நிர்வாக இயந்திரத்தைத் திருத்தியமைப்பதற்காகச் சில முயற்சிகள் செய்யப்பட்டிருப்பினும், ஊராட்சி வளர்ச்சித் துறையை இன்னும் வலுப்படுத்த வேண்டிய அவசியம் உணரப்படுகிறது. எனவே இத்துறையைத் திருத்தியமைக்கும் பிரச்சினையை மாநில நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைச் செயற்படுத்துவதில் காணப்படும் குறைகளைக் களைய, சட்டத்தையே மிகவும் விரிவான முறையில் பரிசீலனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதி வடிவம் பெற்ற சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுக் காலப்போக்கில் சட்டப் பேரவையின் முன்னர் வைக்கப்படும்.

ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக்கொண்டு, தொடக்கக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியம் அளிக்கப்படுவதில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் நடைமுறை, மாற்றப்பட்டுத் திருத்தம் பெறும்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்ட"-மானது, மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பின்மையை ஓரளவுக்குக் களையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. உடலுழைப்பும், உற்பத்தியும் இரண்டறக் கலந்த பல்வகைப்பட்ட கிராமத் திட்டங்கள் வாயிலாக கூடுதலான வேலைவாய்ப்புகளை உண்டாக்கும் வகையில், இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கிராம மக்களின் நன்மைக்குரிய சமுதாயச் சொத்துக்களை இத் திட்டம் உருவாக்கி இவ்வழியில் மேலும் பல புதிய முயற்சிகள் உருவாக வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

சீரணித் தொண்டர்களின் தன்னலமற்ற பணி வளர்ச்சியும், கிராமப் பணிகள் சிறப்புத் திட்டமும், அத்துடன் ஊர்ப்புறங்களை மின் மயமாக்கும் திட்டமும் ஆகிய இவைகள் ஒன்று சேர்வதன் மூலம், தமிழ் நாட்டிலுள்ள ஊராட்சிகள் அனைத்திலும் அடிப்படை வசதிகள் பெருகி வருவதும் ஊர்ப்புறப் பொருளாதார வளர்ச்சி விரைவுபட்டு வருவதும் நன்கு புலனாகின்றன.

ஊர்ப்புறங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியில் அரசையும் மக்களையும் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக்கியுள்ளது சமுதாய வளர்ச்சி அமைப்பின் நிலை பெற்ற சாதனையாகும். மேலும் மக்களின் ஆர்வத்தைத் தூண்டு



1971 ஜூலை 5]

வதிலும், அவர்களின் வழிபடுத்தப்படாத சக்திகளை முறைப்படுத்துவதிலும் சமுதாய வளர்ச்சி நிர்வாகம் மிகப் பெரும் துணை புரிந்துள்ளது.

## இணைப்பு II

[28-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை.

### கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்.
### உதவி மானியங்கள் ரூ. 4,27,21,200.

### கொள்கை விளக்கக் குறிப்பு

இது 1971-72-க்குரிய ரூ. 4,27,21,200-க்கான கூட்டு மானியக் கோரிக்கையாகும். இக் கோரிக்கை நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சென்னை மாநகராட்சி, மதுரை மா நகராட்சிக் கழகம், குடிசைப் பகுதிகளை மாற்றும் வாரியம், ஆகியவற்றுக்குக் கீழ்க்காணும் திட்டங்கட்கு உதவி மானியங்கள் வழங்க வகை செய்கிறது. அவை :—

நகர்ப்புறங்களில் நீர் வழங்கல்—கழிவு நீர் அகற்றல் திட்டம் குடிசைப் பகுதிகளை மாற்றி அவற்றை மேம்படுத்தும் திட்டம்; ஊர்ப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் பெருகியுள்ள வாழ்க்கை வசதிகட்கும் நல்வாழ்வு நிலைமைகளுக்கும் ஏற்ப உள்ளாட்சி மன்றங்களில் சாலைப் போக்குவரத்தைப் பேணி, மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் தொடர்புடையன.

### ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சாலை வசதி.

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னர், ஊர்ப்புறச் சாலை மேம்பாட்டிற்காக ஒவ்வோர் ஆண்டும் அரை மானிய அடிப்படையில் ஊராட்சிகளுக்கு நிதிகள் வழங்கப்பட்டு வந்தன. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் செயற்படுத்தப்பட்டதன் விளைவாக சட்டத்திற்குட்பட்டதும், உட்படாததுமான மானியங்கள் ஊராட்சிகட்கு அளிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு 1961-62-லிருந்து இம் மானியங்கள் நிறுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அல்லாத ஊர்ப்புறச் சாலைகளை ஊராட்சிகளே பேணி வருவதால், இதற்கு, உள்ளூர்ச் சாலை மானியம் பொருந்தாது. எனவே, செலவில் பாதியை மானியமாக வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவது ஊர்ப்புறச் சாலைகளைச் சீரான நிலையில் வைத்திருக்க ஊராட்சிகளுக்கு ஊக்கம் அளிக்குமென்பதால், இத் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு முடிவு செய்தது. அதற்கேற்ப முதற்படியாக பேரூராட்சிகளில் உள்ள சாலைகளுக்குத் தூசு

படியாத மேற்பரப்பை அமைப்பதற்காக 1968-69, 1969-70 ஆண்டுகளில் ஒவ்வோராண்டும் ரூ. 5 இலட்சமும், 1970-71-ல் ரூ. 6 இலட்சமும் பேரூராட்சிகளுக்கு அரை மானியமாக வழங்க ஒதுக்கப்பட்டன. 1971-72-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கு ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 131-ஆவது பிரிவின்கீழ், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் உள்ளூர்ச் சாலை மானியம் எனப்படும் சட்டப்படியான மானியம் வழங்கப்படுகிறது. மக்கள் தொகையில் ஒருவருக்கு 40 காசு விதம் இது கணக்கிடப்பட்டது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கும், அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாலைகளின் நீளத்தையொட்டி உள்ளூர்ச்சாலை மானியம் கணக்கிடப்பட்டு அளிக்கப்பட வேண்டுமென்று பல ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடமிருந்து அண்மை ஆண்டுகளில் முறையீடுகள் வந்தன. இதையொட்டி ஆள் ஒருவருக்கு 40 காசுகள் விதம் கணக்கிடப்பட்டு வந்த உள்ளூர்ச் சாலை மானியம், திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்தது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையில் ஆள் ஒருவருக்கு 18 காசு விதமும், அத்துடன் ஊராட்சி ஒன்றியம் பேணிவரும் அச்சாலைகள் கடற்கரை அல்லது கழிமுகப் பகுதிச் சாலைகள், மலைச் சாலைகள், சாதாரணப் பாதைகள் என்பனவற்றின் அடிப்படையில் முறையே மைலுக்கு ரூ. 800, ரூ. 1,500, ரூ. 600 விதம் அளிக்கவும் முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன அடிப்படையில் 1970-71 முதல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 119.31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இயற்கைக் கேடுகளான வெள்ளம், மழை, புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட கட்டிடங்கள், சாலைகள் ஆகியவற்றைச் செப்பனிட, அவற்றின் இன்றியமையாமை, அவசரத்தன்மை, தொடர்புள்ள ஊராட்சி ஒன்றியத்தின் நிதிநிலை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, சிறப்பு மானியங்களை அரசு அவற்றுக்கு வழங்கி வருகிறது. இத் தலைப்பின் கீழ் 1968-69, 1969-70 ஆண்டுகட்கு முறையே ரூ. 13,97,800-ம், ரூ. 19,76,000-ம் மானியமாக வகுத்தளிக்கப்பட்டன. 1970-71-ம் ஆண்டிற்குரிய இறுதி மானியம் ரூ. 2,400 ஆகும் 1971-72-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இச் செலவிற்கு ரூ. 100 அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### ஊராட்சி ஒன்றியங்களின் இணைப்புச்சாலைகள்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இரண்டாம் நிலை கடந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்புச் சாலைகளுக்காக ரூ. 72.16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம், "37. சமுதாய





வளர்ச்சித் திட்டம் முதலியன" என்பதன் கீழ் இரண்டாம் நிலை வட்டாரங்களுக்கு ஒதுக்கிய தொகையை ஒப்பதாகும்.

### நகராட்சி சாலைகளும், பாலங்களும்

நகராட்சிகளுக்கு அவற்றின் மேற்பார்வையிலுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு, மானியங்கள் வழங்கிவருகிறது. மக்கள் நெரிசல் அதிகமாயுள்ள பகுதிகளில் பொதுமக்களின் உடல் நலத்தைக் கருதி, நகராட்சி நகர்ச் சாலைகளில் தூசு படியா மேற்பரப்பை அமைப்பதற்கு ஒவ்வோராண்டும் நிதி வழங்குவது என்பது அரசின் கொள்கையாகும்.

ஒவ்வொரு நகராட்சிக்கும் சாலைகளில் தூசுபடியாத மேற்பரப்பை அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஓர் ஆண்டில் இத் திட்டத்திலிருந்து இரண்டு வேலைகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளலாம். நகராட்சிகளில் சாலைகள் மேற்பரப்பைத் தூசுபடியாமல் அமைக்கும் வேலைக்கென அரசு அவ்வேலையின் செலவில் பாதியை மானியமாக வழங்குகிறது. செலவின் மறு பாதியைத் தொடர்புடைய நகராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும், அல்லது இதற்கென அரசிடமிருந்து கடன்பெற்று அச்செலவை ஈடுகட்ட வேண்டும். 1971-72-ல் இந்தக் கோரிக்கையில் சாலைகளின் மேற்பரப்பை தூசுபடியாமல் அமைப்பதற்கு நகராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கென ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோரிக்கை 47ன் கீழ்ச் சாலை வேலைகளுக்காகவும், பால வேலைகளுக்காகவும் நகராட்சிகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காக 1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 13,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பான நேர்வுகளில், நகராட்சிப் பகுதிகளுக்குள் பாலங்கள் கட்ட நகராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. இக்கொள்கையையொட்டி 1971-72-ம் ஆண்டுக்கு இக் கோரிக்கையில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. குன்னூர், உதகமண்டலம் நகராட்சிகளுக்கும் கோடைக்கானல் நகரியத்திற்கும் சாலைகளைப் பேணத் தொடர் மானியங்கள் வழங்கவும், ஸ்ரீ ரங்கம் நகராட்சிக்கு முன்னாள் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகம் தரவேண்டிய சுங்க இழப்பீட்டுக்கான மானியம் வழங்கவும், ரூ. 25,300 ஒதுக்கப்பட்டுள்ளது. பெரு மழை, வெள்ளம் காரணமாக சீரழிந்த சாலைகளைச் செப்பனிடுவதற்குத் தேவையான, போதிய மானியங்கள் வழங்கப்படுகின்றன.

1970-71ல் சாலைகளைப் பேணுதற்காக ஒரு குறித்த மானியமாக ரூ. 10 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

### சென்னை மாநகராட்சி.

சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோராண்டும் அதற்கு அரசு கணிசமான நிதி வழங்கி வந்துள்ளது. 1970-71-ல் (திட்டத்திற்குட்பட்ட, திட்டத்திற்குட்படாத) மானியமாக ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1971-72-ம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலுள்ள எல்லாப் பெருஞ்சாலைகளையும் இப்போது நெடுஞ்சாலைகள் துறை பேணி வருகிறது. நெடுஞ்சாலைகள் நீங்கலாக, மாநகரில் பேருந்துகள் ஓடும் சாலைகள் மேம்படுவதற்காக அரசு உதவியளித்து வந்துள்ளது. 1971-72-ல் சென்னை மாநகராட்சி ஆணையர், பேருந்துகள் ஓடும் சில முக்கிய சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கான செயற் குறிப்பை அனுப்பினர். எனவே இதற்கெனச் சென்னை மாநகராட்சிக்கு மானியமும் கடனும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தியாகராயநகரில் துரைசாமி சாலையில் ஒன்றும், கண்ணம்மாப் பேட்டையில் மற்றொன்றுமாக இரண்டு சுரங்கப் பாதைகளை அமைப்பதற்கும் நிதி உதவியளிக்க 1971-72 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் குறுக்கே நுங்கம்பாக்கத்திலுள்ள மன்றோ பாலத்தை அகலப்படுத்தவும், டாக்டர் நடேசன் சாலையிலுள்ள ஆறில்டன் பாலத்தைப் புதுப்பித்துக் கட்டவும், பேர்ப்புல் சாலையைக் கோட்டூருடன் இணைக்க அடையாற்றின் குறுக்கே ஒரு புதுப் பாலம் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நகர்ச் சாலைகளைச் செப்பனிடும் பணிகளுக்காகவும் சாலைப் பணிகளுக்கான சாதனங்கள் வாங்கவும் மானியமும் கடனுதவியும் பெற வழி வகுக்கப்பட்டுள்ளது.

### சென்டேஜ் கட்டணங்கள்.

தொழிலாளர் அரசாங்க காப்புறுதிக் கழகத்தின் கட்டிடங்களைப் பொதுப்பணித்துறை கட்டுவதற்காக அக்கழகம் சென்டேஜ் கட்டணத்தைச் செலுத்த உதவி-மானியமாக ரூ. 95,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் திட்டங்கள்.

நீர் வழங்கல் கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கு இக்கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படித் திட்டங்கள் பொதுச் சுகாதாரப் பொறியியல் நகராட்சிப் பணிகள் துறையால் நிறைவேற்றப்படுகின்றன. இத் திட்டங்களுக்காக மானியம் வழங்கும் பொருட்டு 1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.82,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



பொதுவாக, நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் அவற்றின் நீர் வழங்கும் திட்டங்களையும் கழிவுநீர் அகற்றும் திட்டங்களையும் நிறைவேற்றக் கடன்கள் வழங்கப்படுகின்றன. எனினும், சிறப்பு நேர்வுகளில் இத்திட்டங்களை நிறைவேற்றும் செலவின் ஒரு பகுதியை ஈடுகட்ட அவைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்கள் செயற்படுத்தும் நீர்வழங்குத் திட்டங்கள் தன்னுதவிப்பு அடிப்படையில் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றன. அவ்வாறிருந்தால் இத்திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்கொண்டு, இவற்றைப் பேணி வருவதற்கான ஆண்டுச் செலவுகளையும், இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான ஆண்டுத் தொகையையும் ஈடுகட்டுவதுடன், எதிர்காலத்தில் இத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு ஒரு வைப்பு நிதியை எழுப்புவதற்கும் அவர்களால் இயலும்.

நீர் வழங்கும் திட்டங்கள் 72 நகராட்சிகளிலும், 12 நகரியங்களிலும், 10,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 26 ஊராட்சிகளிலும் உள்ளன. 13 நகராட்சிகளிலும், 10 ஊராட்சிகளிலும் நீர் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 13 நகராட்சிகளிலும், 5 நகரியங்களிலும், 2 ஊராட்சிகளிலும், கழிவு நீர் அகற்றும் பகுதித் திட்டங்கள் உட்படக் கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் உள்ளன. ஐந்து நகராட்சிகளில் கழிவு நீர் அகற்றும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நிறைவேற்றப்பட்டுவரும் நீர்வழங்கல், கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள், மானியங்கள் வழங்கப் போதுமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளில் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் பல்வேறுபட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு, நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல், திட்டங்களை நிறைவேற்றக் கடனுதவி செய்துள்ளது. தனியார் திட்டங்களுக்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவினத்தில் 2/3 பங்கை ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனாக வழங்குகின்றது. முதல் தொகுதியில் 26 திட்டங்களும், இரண்டாம் தொகுதியில் 28 திட்டங்களும் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவி பெற்று வருகின்றன. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இத்திட்டங்களுக்குத் தொடர்ந்து கடனுதவி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் நிதியுதவியை இன்னும் அதிகமான உள்ளாட்சி நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### குடிசை மேம்பாடு/ குடிசை மாற்றும் திட்டம்.

குடிசை மேம்பாடு/மாற்றும் திட்டம் 1956-57 இல் சென்னை மாநகரில் புகுத்தப்பட்டுப் பின்னர் 3-வது திட்டக் காலத்தில் வெளியூர்ப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகள் இரண்டு வகைகளில் நிறைவேற்றப்படுகின்றன. 800 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரை உள்ள மேம்பாடுற்ற திறந்தவெளி மனைகளில் 300 ச. அடி உயர்த்தப்பட்ட அடித்தளம் அமைக்கப்பட்டு, அத்துடன் ரூ. 252 பெறுமான குடிசை அமைப்புப் பொருள்களும், தன்னுதவி அடிப்படையில் குடிசைப் போட்டுக் கொள்வதற்காக ரூ. 32.50 ரொக்க மானியமும் வழங்கப்படுகின்றன. வாரியம், ஒவ்வொரு மனையிலும் ஒரு குளியல் அறையையும், நீரடிக் கழிப்பிடத்தையும் அமைத்துப் பேணி வருகிறது. மனையில் தெரு விளக்கு, சாலைகள், நீர் வழங்கு வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, மரம் நடுதல் முதலிய எல்லா வசதிகளும் முறையாகச் செய்து கொடுக்கப் படுகின்றன. குடிசைகளை மேம்படுத்துவதில் இது ஒரு முறை ஆகும். மற்றொரு முறை, இடத்திற்கேற்றபடி உறைவிடங்களையும் ஒரு மாடி அல்லது பல மாடி கட்டிடங்களையும் கட்டுவதன் மூலம் மேம்பாடு செய்வதாகும். கட்டப்பட்ட ஒவ்வோர் உறைவிடத்திலும் 120 ச. அடி பரப்பளவுக்குத் தாழ்வாரமும், 84 ச. அடி கொண்ட சமையல் அறையும், 16 ச. அடி கொண்ட குளியல் அறையும், 12 ச. அடி உள்ள கழிப்பிடமும் அமையும்.

மேம்படுத்திய திறந்தவெளி வீட்டு மனை ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 11 வாடகை விதித்து வாங்க இந்திய அரசு அனுமதித்திருந்தாலும் மாநில அரசு முடிவு செய்துள்ளபடி, சென்னையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 3 மட்டுமே வாடகையாக வாங்கப்படுகிறது. குடியிருப்புகளின் வகைகளுக்குத் தக்கவாறு, குடியிருப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 முதல் ரூ. 30 வரை வாடகை நிச்சயிக்கப்பட்டுள்ளது. குடிசைகளில் வாழ்வோர் இந்த வாடகையைக் கொடுக்க இயலாத நிலையில் இருப்பதைக் கருதி, மாநில அரசு மேலுதவித் தொகை கொடுக்க எண்ணி, வாடகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 எனக் குறைக்க முன் வந்துள்ளது.

1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை இத்திட்டத்திற்குக் கிடைத்து வந்த உதவி முறை வருமாறு: இந்திய அரசிடமிருந்து, திட்டத்திற்காகும் செலவில் 50 சதவிதம் கடன். திட்டச் செலவில் 37½ சதவிதம் இந்திய அரசிடமிருந்து மேலுதவி; திட்டச் செலவில் 12½ சதவிதம் மாநில அரசிடமிருந்து மேலுதவி 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மாநில அரசுகளுக்கு இந்திய அரசு வட்டாரக் கடனாகவும் வட்டார மானியமாகவும் உதவியை வழங்கிவருகிறது. ஆகவே, அத் தேதியிலிருந்து கடனும், மேலுதவித் தொகையும் மாநில அரசாலேயே ஏற்கப்படுகின்றன.

குடிசை மாற்றுத் திட்டம் தொடங்கிய நாள் முதற்கொண்டு அது தொடர்பாகத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் செய்துள்ள வேலை விவரங்கள் வருமாறு :—





**சென்னை மாநகர்.**

சென்னை மாநகரில் குடிசை மேம்பாடு/குடிசை மாற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்த, பணி முந்துரிமை வரிசை குறிக்கப்பட்ட குடிசைகளின் விரிவான பட்டியலுக்கு, அரசு, 1964 சூனில் ஒப்புதலளித்தது.

சென்னை மாநகரில் இப்பட்டியலில் உள்ள 491 குடிசைப் பகுதிகளில் இதுவரையில் ஏறத்தாழ 100 குடிசைப் பகுதிகளை மட்டுமே மேம்பாடு செய்ய/மாற்றிவிடச் சென்னை மாநகர் வட்டங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. தற்போது சுமார் 72 அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் உள்ளன; இதில் சுமார் 85 குடிசைப் பகுதிகளுக்கான திட்டமும், நடைபாதை வாழுநர்க்கான திட்டமும் அடங்கும். இத் திட்டங்களை நிறைவேற்றுவதுடன், முந்துரிமை வரிசை எண் 90 வரையில் சுமார் 30 இனங்களைச் சேர்ந்த பகுதிகளுக்காகத் திட்டங்கள் வகுத்தல், நிலம் கையகப்படுத்தல், உரிமை மாற்றுதல், மற்றவர்களிடம் ஒப்படைத்தல் ஆகிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்சொன்னவற்றுடன் முந்துரிமை வரிசை எண் 91 முதல் 200 வரையில் குடிசைப் பகுதிகளை ஆராய்ந்து, பணி மேற்கொள்ள மாநில வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை தொடங்கியுள்ளது. இப்போதுள்ள 72 திட்டங்கள், 10,900 திறந்தவெளி மேம்படுத்திய மனைகளை வழங்கவும், 21,224 குடியிருப்புகளை ஏற்படுத்தவும் நோக்கம் கொண்டதாகும். இதுவரையில் 7,081 திறந்தவெளி மேம்படுத்திய மனைகள் வழங்கப்பட்டுள்ளன ; 8,100 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. ஏறத்தாழ 2,000 குடியிருப்புகள் பல நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

இவற்றோடு, தீயினால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ்வோரைக் குடியமர்த்த, வீட்டு வசதி வாரியத் திட்டப் பகுதிகளில், வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகரில் இதுவரை 2,267 தீப்பற்றாக் குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இப்பணிக்கு மாநகர்த் தீதுயர்த் தணிப்பு நிதியிலிருந்து அரசு ரூ. 22.30 லட்சம் வழங்கியுள்ளது.

**மதுரை வீட்டு வசதிப் பிரிவு.**

மதுரையில் மூன்று திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 92 சீர் செய்யப்பட்ட காலி மனைகளை வழங்குவதும், 128 குடியிருப்புகளை அமைத்துக் கொடுப்பதும் அத்திட்டங்களின் நோக்கமாகும். திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ஏறத்தாழ ரூ. 8,07,800 ஆகும். இதுவரையில் 80 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[1971 ஜூலை 5

## கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு.

### (1) கோயம்புத்தூர்.

கோயம்புத்தூரில் 5 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; ரூ. 138.07 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,759 குடியிருப்புகள் கட்டுவதற்கு இத் திட்டங்கள் செயற்படுகின்றன. இதுவரையில் 2,053 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### (2) சேலம்.

சேலத்தில் 6 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; ரூ. 32.09 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 528 மேம்படுத்திய காலி மனைகள் வழங்கவும், 216 குடியிருப்புகள் கட்டவும் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இதுவரையில் 528 மேம்படுத்திய காலி மனைகள் வழங்கப்பட்டு, 216 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சேலத்தில் இப்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பைக் கோயம்புத்தூர் வீட்டு வசதிப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

## திருச்சிராப்பள்ளி வீட்டு வசதிப் பிரிவு.

திருச்சிராப்பள்ளியில் 3 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 657 குடியிருப்புகளை ரூ. 26,54,760 மதிப்பீட்டுச் செலவில் கட்டுவது இத் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரையில் 581 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## பொது.

மாநிலத்தில் உள்ள குடிசைப் பிரச்சினைகளின்மீது தனிக் கவனமும் அக்கறையும் காட்டும் வகையில், தமிழ்நாடு அரசு, அண்மையில் தனியானதொரு குடிசை மாற்று வாரியத்தை நிறுவியுள்ளது. இவ்வாரியத்திற்குச் சட்ட முறையிலான அதிகாரங்களை வழங்க, தமிழ் நாடு அரசு, 1971 சனவரியில், 1971 ஆம் ஆண்டைய தமிழ் நாடு குடிசை மேம்பாடு/மாற்றல் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. இவ்வவசரச் சட்டம், சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தினால் அகற்றப்பட்டது. அது 1971ஆம் ஆண்டைய தமிழ் நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு/மாற்றல்) சட்டம் எனப் பெயர் பெறும். அது குடியாட்சித் தலைவரின் ஒப்புதலை 2—5—1971 அன்று பெற்று, தமிழ்நாடு அரசிதழில் 4—5—1971 அன்று வெளியிடப்பட்டது. சென்னை நகரில் உள்ள எல்லாக் குடிசைகளையும் படிப்படியான திட்டத்தால், 40 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 7 ஆண்டுகளுக்குள் மாற்றுவதெனத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. சென்னையில் இதுவரையில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் செய்துவந்த குடிசை மாற்ற வேலையை, இப்போது குடிசை மாற்று



1971 ஜூலை 5]

வாரியம் எடுத்துக்கொண்டுள்ளது. மற்றப் பகுதிகளில் இவ்வேலையைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியமே கவனித்து வருகிறது. சமூக பொருளாதார நிலைகளை ஆராய, குடிசை மாற்று வாரியம் ஒரு திட்டமிடுதல்-புலனாய்வு செய்தல் குழுவை அமைத்துள்ளது. ஒவ்வொரு குடிசை வாழ்நருக்கும் குடும்பத்தின் நிழற்படத்துடன் கூடிய அடையாளச் சான்றுடனை அனுமதிச் சீட்டு வழங்கப்படும். தீவிர உணர்வோடு குடிசை மாற்றும் திட்டத்தை மேற்கொள்வதும், குடியிருப்புகளை மிகப்பெரிய அளவில் கட்டுவதும் இந்த வாரியத்தின் தலையாய நோக்கமாகும். தொடக்கமாக, குடிசை அகற்றும் வாரியம் சென்னை நகரில் மூன்று இடங்களில் இடைத்தங்கல் குடியிருப்புகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. புதிதாகக் கட்டப்படும் குடியிருப்புகளில் குடி அமர்த்தப்படுவதற்கு முன்பு, குடிசை வாழ்வோர், அவற்றில் தற்காலிகமாக இடம் பெறுவர். இவ்விடைத்தங்கல் குடியிருப்புகள் இறுதியாக அந்தப் பகுதியைச் சுற்றி வாழுகிற குடிசை வாழ்வோருக்காகப் பயன்படுத்தப்படும்.

1970-71இல் குடிசை மாற்றும் செலவுகட்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டது. இத்தொடுகை தமிழ் நாடு நல நிதி (பரிசுச் சீட்டு) யிலிருந்து ரூ. 50 இலட்சம் குடிசை மாற்றும் பணிக்கென ஒதுக்கப்பட்டது. 1971-72-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை தமிழ் நாடு நல நிதி (பரிசுச் சீட்டு) யிலிருந்து தரப்படும் ரூ. 150 இலட்சத்தையும் உள்ளடக்கியதாகும். குடிசை மாற்றும் பணிக்காகும் இத்தொகையை ரூ. 4 கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | |
|---|---|
| Consid. Cl. ... ... | Consideration of clauses of Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. ... ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.H. Dis/H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. ... ... ... | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

**Second Session of the Fifth Legislative Assembly under the Constitution of India**

---

**1st, 2nd, 3rd and 5th July 1971**

---

Volume V (Nos. 1–4).


PAGES

A

ABDUL JABBAR, THIRU V. M.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation, ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 58–60

ABUSALI, THIRU M. A.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation, ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 265–266

AGRICULTURE—
Dry-farming in Hosur, starting ... ... 225–226
Kudumiamalai Agricultural Research Station, details ... ... ... ... ... 205–209

ALAGARSAMY, THIRU S.—
Arrest and release (Ann.) ... ... ... ... 288

PAGES

A—*cont.*

ANANDANAYAKI, THIRUMATHI, T. N.—
Budget (Revised), 1971-72, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works-Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... . .
Capital Outlay on Public Works ... ... ... 276-282 292
Medical ... ... ... ...
Public Health ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 338, 396-400 413
Wrong statement in the House (Privilege matters) 29, 30-31

ANBAZHAGAN, THIRU K.—
Budget (Revised), 1971-72, Voting:
Medical ... ... ... ... ...
Public Health ... ... ..
Capital Outlay on Public Health ... ... ... 338,399, 340, 341-344, 351, 355, 356, 357, 366, 367, 379, 392, 393, 394, 395, 400-418

ANIMAL HUSBANDRY—
Mudumalai Wild Life Sanctuary, Expert Committee's view ... ... ... ... ... 496-500

ANNAMALAI, THIRU C. V. M.—
Budget (Revised), 1971-72, Voting:
Irrigation ... ... ...
Public Works—Works ... ... ... ... 234-238



PAGES

A—*cont.*

ANNAMALAI, THIRU C. V. M.—*cont.*
Budget (Revised), 1971-72, Voting—*cont.*
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ...
Capital Outlay on Public Works ... ... ... 234-238

ARANGANNAL, THIRU RAMA—
Budget (Revised), 1971-72, Voting:
Community Development Projects—Public Works Grants-in-Aid ... ... ... 547-554

ARCHAEOLOGY—
Ancient epigraphical finds, Thanjavur district ... 314-318

ATOMIC POWER—
Atomic Team from Japan, visit ... ... ... 492-496

B

BILL(S)—
General Sales Tax (Second Amendment) Bill, 1971:
Message from Legislative Council ... ... 337
Industrial Establishments (National Festival Holidays) Amendment Bill, 1971: ... ...
Int. ... ... ... ... ... ... ... 338
Madurai City Corporation Bill, 1971:
Message from Legislative Council ... ... 337
Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971:
Message from Legislative Council ... ... 337

BLOOD—
Donation Scheme, of Police Department ... ... 475-478

BOMMAN, THIRU K. H.—
Budget (Revised), 1971-72, Voting:
Community Development Projects—Public Works Grants-in-Aid ... ... ... ... 523-524

C

CALLING ATTENTION—
Ennore Thermal Boiler Construction, denial of employment and non-payment of salary to workers 333-335
Mills at Madurai, lay-off and threatened closure of one shift. ... ... ... ... ... 335-337

PAGES

C—*cont.*

**CHAIR—**

**Announcements—**

Agricultural University, election to Board of Management ... ... ... ... 233–234

Arrest and release of Thiru S. Alagarsamy ... 288

**Madras University Senate, election to ... 337–338**

Obituary reference—

Rajagopalaswamy Naicker, Thiru R. ... ... 1

Russia's Soyuz—II Cosmonauts ... ... ... 205

Rulings and Observations—

**Adjournment Motions :**

*Attack on workers of Sankari Cement Factory*—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Hon. Chief Minister 34

*Police Lathi charge on the workers of Chandra Mills, Coimbatore*—

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the statement made by the Hon. Chief Minister ... ... ... ... 36

*Allegations* :

Should be specific and not general ... ... 379, 489

*Debate*—

*Time limit* :

Members should confine their speeches to the time allotted to them. If they exceeded the time limit, it was an encroachment on the other Members' rights and privileges ... 41–42

*Privilege Matter* :

*Alleged furnishing of wrong information to the House by Thirumathi T. N. Anandanayaki*—

On 1st July 1971, a Member raised a matter of privilege against another Member Thirumathi T. N. Anandanayaki that whereas she had stated in the House that there was firing in Sankari Cement Factory and had connected a Minister with it, there was really no firing there then and that thus the Member had furnished wrong information to the House and had attributed motives to another member and thus and thereby the Member had committed breach of privilege.



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matter—*cont.*

Alleged furnishing of wrong information to the House by Thirumathi T. N. Anandanayaki —*cont.*

Thirumathi T. N. Anandanayaki stated that she made the statement on the basis of a telegram received by her; she was also told that one of the Ministers had substantial interest in the Company; if she had used the term 'firing', it might have been due to a slip of the tongue; however, she had no *mala fides* and she did not mean or intend to cast any aspersion on any member.

The Chair held that on the facts as admitted there was a *prima facie* case of breach of privilege, but however accepting the explanation given by the Member ruled that the matter might be dropped ... ... ... 25–32

*Questions and Answers* :

*Supplementary Questions* :

*Relevancy* :

Supplementaries should relate to the main question ... ... ... ... 14, 317, 486.

**CHIDAMBARAM, THIRU C. T. :**

Budget (Revised) 1971–72, Voting :

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... ... 388–390

**CHINNARAJU, DR. S. A. :**

Budget (Revised), 1971–72, Voting :

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... . 272

PAGES

C—*Cont.*

CHINNARAJU, DR. S. A.—*cont.*

Budget (Revised), 1971-72, Voting—*cont.*

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... 360-361

CHINNASAMY, THIRU A. :

Budget, 1971-72, Voting :

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 50-52

CHOKKALINGAM, THIRU P. PON. :

Budget, 1971-72, Voting :

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... 375-377

CIGARETTE—

Unit (State-owned), Establishment ... ... 10-12

COLLEGES—

Homeopathic Colleges, starting ... ... 210-214

CONFERENCES—

Commercial Tax Officers ... ... ... 486

CO-OPERATIVES—

Handicraft Marketing Society, appointment of officials as Directors ... ... ... 12-13

Sales Society, Tiruppur ... ... ... ... 13-14

Union Buildings, irregularities in construction... 14-16

Waste lands, reclamation by forming Small Farmers Irrigation Co-operative Societies ... 329-331



PAGES

D.

DEFENCE—

Department, objection to use of Island Grounds ... 324-326

DENNIS, THIRU, N. :

Assault on students, Washermanpet ... ... 478

Budget (Revised), 1971-72, Voting :

Community Development Projects ... ...

Public Works—Grants-in-aid ... ... ... 526-528

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ... ... 245-247

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... ... 239

Educational Institutions, moral instruction ... 309-314

Kallakurichi Co-operative Sugar Mills workers' suspension ... ... ... ... ... 327

Mudumalai Wild Life Sanctuary, Expert Committee's view ... ... ... ... 496-500

Statues in Madras City, sanction of Police guards ... 218-220

DEVARAJAN, THIRU M. :

Budget (Revised), 1971-72, Voting :

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... ... 373-374

DEVENDIRAN, THIRU A. :

Budget (Revised), 1971-72, Voting :

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ... ... 263-265

D—*cont.*

DHARMALINGAM, THIRU A. P. :
Agricultural University, election to Board of Management (M) ... ... ... ... 233

DHOBIKHANAS—
Construction in panchayats, Government financial assistance ... ... ... ... ... 226-229

DURAI MURUGAN, THIRU :
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 55-58

DURAISAMY, THIRU S. :
Budget (Revised), 1971-72, Voting :
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 354-358
Bus route permits to private operators during 1967-71 touching Tiruppur Town, number issued ... 230-233
Co-operative Sugar Mill, establishment at Perur ... 4-9
Forest lands in Chennimalai, bringing under cultivation ... ... ... ... ... ... 229-230
Forest lands in Chennimalai firka, lease to Tiruppur Co-operative Milk Farm ... ... ... 230
Tiruppur Co-operative Sales Society ... ... 13-14

E

EDUCATION—
Educational Institutions, moral instruction ... 309-314

ELECTRICITY :
Ennore Thermal Boiler Construction, denial of employment and non-payment of salary to workers (C.A.) ... ... ... ... ... 333-335



E—*cont.*

EMPLOYEES—
Central Government, demonstration at Madras ... 16-18

ETTIAPPAN, THIRU P.—
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 251-253

F.

FINANCIAL BUSINESS—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects ... ...
Public Works-Grants-in-Aid ... ... ... ... 500-570
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 234-306
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 338-418

FIVE-YEAR PLAN—
Fourth—Modification ... ... ... ... 320-323

FOREST(S)—
Lands in Chennimalai, bringing under cultivation ... ... ... ... ... 229-230
Lands in Chennimalai firka, lease to Tiruppur Co-operative Milk Farm ... ... ... ... 230

G.

GANAPATHY, THIRU T. —
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works-Works ... ... ... ...

PAGES

G—*cont.*

GANAPATHY, THIRU T.—*cont.*
Budget (Revised), 1971-72, Voting—*cont.*:
Public Works—Establishment and Tools and Plant Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... 68 71

GANESAN, THIRU S.—
Budget (Revised), 1971-72, Voting:
Community Development Projects ... ...
Public Works—Grants-in-Aid ... ... ... 519-521

GOPAL, THIRU K. P.—
Budget (Revised) 1971-72, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works-Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 85-87

GOPAL, THIRU P.—
Budget (Revised), 1971-72, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works-Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 247-249

GOVERNMENT PRESS—
Starting in each district ... ... ... 478-482
Visit of Minister for Labour ... ... ... 326

GURUSAMI, THIRU N. V.—
Budget (Revised) 1971-72, voting:
Irrigation, Public Work, Public Works—Establishment and Tool sand Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 72-73

H.

HAIR—
Human, purchase tax ... ... ... ... 484-485



PAGES.

H—*cont.*

HANDE, DR. H. V.—
Budget (Revised), 1971-72, Voting:
Community Development Projects—
Public Works—Grants-in-aid ... ... 501, 502
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... 38, 39, 40, 41, 273-276, 293
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... 339, 340, 391-396
Commercial Tax Officers' Conference, holding ... 486
Co-operative Union Building, irregularities in construction ... ... ... ... ... 14-16
Government Press, starting in each district ... 478-482
Human hair, purchase tax ... ... ... 484-487
Scarcity and cholera-affected villages, provision of drinking water with UNICEF assistance and sinking of tube wells ... ... ... ... 220-223
Sri Murugan Temple at Mettur, demolition ... 318-320
Subramaniyaswamy Temple, Tiruchendur ... ... 331-333

I.

ISLAND GROUNDS—
Use by Defence Department, objection ... ... 324-326

J.

JAMES, THIRU J.—
Budget (Revised), 1971-72, Voting:
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 501
1971-72, voting:
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 38, 40, 41, 52-55
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 370-372

PAGES

J—*cont.*

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 536-538, 551, 552
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 344-351

K.

KALIMUTHU, THIRU K.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 534-536

KANDAPPAN, THIRU S.—
Wrong Statement of Thirumathi T. N. Anandanayaki in the House (Previlege Matter) ... 25-27

KANDASAMI, THIRU Manali, C.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... 532-534
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 340, 385-338

KANNAN, THIRU M. R.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 541-545

KARUNAINATHAN, THIRU J.—
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 269-270

KARUNANIDHI, THIRU M.—
Budget (Revised) 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 552



PAGES

K—*cont.*

KARUNANIDHI, THIRU M.—*cont.*
Budget (Revised), 1971-72, Voting—cont.
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 278, 293
Police interference and lathi charge on striking workers of Coimbatore Chandra Mill (A.M.) ... 36-38
Sankari Cement Factory, attack on women workers (A.M.) ... ... ... ... ... 33-34
Wrong statement in the House (P.M.) ... ... 29, 30

KARUPPIAH, THIRU A.—
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 241-243

KADHER BATCH *alias* VELLAICHAMY, THIRU—
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... .. ... ... 64-67

KAVERIMANIAM, THIRU C.—
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 250-257

KITTAPPA, THIRU N.—
Ancient epigraphical finds, Thanjavur district ... 314-318
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... .. ... 238-241
Chief Minister's State Relief Fund, amount accrued ... ... ... ... ... 19-22

PAGES

K—*cont.*

KITTAPPA, THIRU N.—*cont.*
Dhobi Khanas in panchayats, Government financial assistance for construction ... ... 226–229
Foreigners' statues in Madras City, removal ... 214–218

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Budget (Revised), 1971–72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 501, 570
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... 39
67–68
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 340

KOVAI CHEZHIYAN, THIRU—
Budget (Revised), 1971–72, Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 361–364

KRISHNAMOORTHY, THIRU V. (Tiruchirappalli)—
Budget (Revised), 1971–72, Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 383–384

KUMARASAMY, THIRU K. N.—
Budget (Revised), 1971–72, Voting :
Community Development Projects ... ...
Public Works—Grants-in-Aid ... ... 501
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 266–268

L.

LABOUR—
Ennore Thermal Boiler construction, denial of employment and non-payment of salary to workers (C.A.) ... ... ... ... ... 333–335
Kallakurichi Co-operative Sugar Mills, workers' suspension ... ... ... ... ... 327



PAGES

L—*cont.*

LABOUR—cont.
Khadi Board, workers' suspension ... ... 327–328
Mills at Madurai heavy lay-off and threatened closure of one shift (C.A.). ... ... ... 335–337

LANDS—
Forest lands in Chennimalai, bringing under cultivation ... ... ... ... ... ... 229–230
Forest lands in Chennimalai firka, lease to Tiruppur Co-operative Milk Farm ... ... ... 230
Waste lands, reclamation ... ... ... 329–331

LIQUOR—
Wine Factory, Dharmapuri district ... ... 1–2

M

MARIMUTHU, THIRU A. R.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 62–64
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 340, 341

MARKET(S)—
Kothawal Market, shifting ... ... ... 223–224

MARUDHACHALAM, THIRU N.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 40,
256–258
Co-operative Sugar Mill, establishment at Perur 4–9

MEENAKSHISUNDARAM, THIRU M.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 81–83

PAGES

M—*cont.*

MOHIDEEN, THIRU Thiruppur A. M.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 545-547

MOTIONS—
Ad. Motions :
Police interference and lathi charge on the striking workers of Coimbatore Chandra Mill ... 35-36
Sankari Cement Factory, attack on women workers 32-34
Agricultural University, election to Board of Management ... ... ... ... ... ... 233

MUNUSAMY, THIRU R. R.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 530-531

MURUGAIYAN, THIRU S.—
Budget (Revised) 1971-72, Voting :
Medical, Public Health, Capital Outlay on Public Health ... ... ... ... ... 367-370

MUTHIAH, THIRU M.—
Budget (Revised), 1971-72, Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... 524-526
Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... ... 79-81
Community wells sunk in Aranthangi ... 233

N.

NACHIAPPAN, THIRU N.—
Budget (Revised), 1971-72. Voting :
Community Development Projects, Public Works—Grants-in-Aid ... ... ... ... ... 517-519



PAGES

N—*cont.*

NACHIAPPAN, THIRU N.—*cont.*
Budget (Revised), 1971-72, Voting :
Irrigation, Public Works—Works
Public works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation Capital Outlay on Public Works ... ... ... ... 60-62

NACHIMUTHU, THIRU N.—
Budget (Revised) 1971-72, Voting :
Irrigation, Public Works—Works Publis Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works ... ... ... ... 258-259

NAGALINGAM, THIRU P.—
Budget 1971-72, Voting :
Irrigation, Public Works—Works
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works ... ... ... 90-91

NARASIMHAN, THIRU A. C.—
Budget (Revised), 1971-72, Voting :
Medical ... ... ... ...
Public Health ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 374-375

NATARAJAN, THIRU N. V.—
Ennore Thermal Boiler construction, denial of employment and non-payment of salary to workers (C.A. St.) ... ... ... ... 333-335
Industrial Establishments (National Festival Holidays) Amendment Bill, 1971 ... ... 338
Mills at Madurai—Heavy lay-off and threatened closure of one shift (C.A. St.) ... ... 335, 336, 337

PAGES

N—*cont.*

NEDUNCHEZHIAN, THIRU V. R.—

Budget (Revised), 1971–72, Voting :

Community Development Projects—Public Works —**Grants-in-aid.** ... ... ... ... **501,502**-509–560 569

O

OBITUARY REFERENCES—

**Rajagopalaswamy Naicker, Thiru R.** ... ... **1**

Russia's Soyuz-II Cosmonauts ... ... 205

P.

**PALANIAPPAN, DR. S. M.**

**Budget (Revised), 1971–72, Voting :**

Medical ... ... ... ...

Public Health ... ... ... ...

**Capital Outlay on Public Health** ... ... ... **352–354**

PALANISAMY, PULAVAR, C.—

**Budget (Revised), 1971–72, Voting :**

**Irrigation**

**Public Works—Works**

**Public Works—Establishment and Tools and** Plant ... ... ... ... ... ...

**Capital Outlay on Irrigation**

Capital Outlay on Public Works ... ... 268–269

PALANISAMY, THIRU N.K.—

Cigarette unit (State-owned), establishment ... 10–12

**Foreigners' statues in Madras City, removal** ... **214–218**

Fourth Five-Year Plan, modification ... ... 320–323

**Homeopathic Colleges, starting** ... ... ... **210–214**

PALANIVELAN, THIRU K.—

**Budget (Revised), 1971–72, Voting :**

**Community Development Projects** ... ...

Public Works Grants-in-Aid ... ... ... 539–540

**Irrigation**

**Public Works—Works**

Public Works—Establishment and Tools and Plant.

**Capital Outlay on Irrigation**

Capital Outlay on Public Works ... ... 259–262



PAGES.

P.

PAPERS LAID ON THE TABLE.

**Agricultural Produce Markets Act, 1959, notifications** **92**

**Backward Classes Commission, Report** ... ... **571**

**Capital Outlay on Public Health Demand, Minister's speech** ... ... ... ... **571**

Central Sales Tax (Tamil Nadu) Rules, 1957, notification ... ... ... ... ... 306

**Centre-State Relations Inquiry Committee, Report** **307**

**Community Development and Panchayat Development Demand, Note** ... ... ... ... **571**

**Community Development, Financial Supplement to Demand** ... ... ... ... ... ... **571**

**Co-operative Societies Act, 1961, Notification** ... **419**

**Demands for Irrigation Grants, 1971–72, Speech by Minister for Public Works** ... ... ... **307**

General Sales Tax Act, 1959, Notification ... **419**

**Health Services and Family Planning Department,** Performance Budget, 1971–72 ... ... 571

**Holidays (Stay of Execution Proceedings) (Tamil** Nadu Amendment) Bill, 1971 ... ... ... 419

Housing Board, Notification re. transfer of debentures ... ... ... ... ... ... **419**

Housing in Tamil Nadu, Note ... ... ... **571**

**Indian Stamp Act, 1899, Notifications** .. ... **306–307**

**Industries department, 1971–72, performance Budget** ... ... ... ... ... ... **92**

Irrigation, 1970–71, Review ... ... ... 92

**Irrigation in Tamil Nadu, 1970–71, Review** ... **307**

Khadi and Village Industries Board Act, 1959, Notification ... ... ... ... .... **92**

**Khadi and Village Industries Board, Notification** re. sale deeds ... ... ... ... ... 419

**Madras City Civil Court (Amendment) Bill, 1971** **419**

**Maternity Benefit Rules, 1967, Notification** ... **306**

**Medical Demand, Policy Note** ... ... ... **571**

**Medical Education Department, Performance Budget, 1971–72** ... ... ... ... **571**

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Ministerial posts in the offices of the National Cadet Corps Unit—Inclusion in Commission's purview—Notification ... ... ... ... ... 419
Mortgage deeds executed by agriculturists, notification re. remission of stamp duty ... ... 571
Motor Vehicles Taxation Act, 1931, notification 92
Panchayats Act, 1958, notification ... ... ... 92
Public Health Demand, Policy Note ... ... 571
Public Works—Grants-in-Aid Demand, note ... 571
Ram Seetha Educational Trust, notification re. remission of stamp duty ... ... ... ... 571
Repatriates from Burma and Ceylon, Notification re. sale deeds ... ... ... ... ... 419
Road Development and Buildings Programme in Tamil Nadu, 1970–71, Review ... ... .. 307
Small Industries Development Corporation employees, notification re. remission of stamp duty ... ... ... ... ... ... 571
Suppression of Immoral Traffic Women and Girls Act, 1958, Notification ... ... ... 419

POLICE.

Blood Donation Scheme ... ... ... ... 475–478

POLYTECHNIC(S)

Puthur Srinivasa Subbaraya Polytechnic near Sirkali, taking over by Government ... ... 224–225

PONNAPPA NADAR, THIRU R.

Budget (Revised), 1971–72, Voting :

Community Development Projects ... ... 554–560
Public Works—Grants-in-Aid ... ... 565–566

PRIMARY HEALTH CENTRE.

Namakkal, construction of building .. ... 209–210

PRIVILEGE MATTER—

Wrong statement of Thirumathi T. N. Anandanayaki in the House ... ... ... ... ... 25–32



R

PAGES

RANGANATHAN, THIRU K—

Budget (Revised), 1971–72, Voting :

Community Development Projects, Public Works Grants-in-Aid ... ... ... ... ... 513–515

RATHINASABAPATHY, THIRU M.—

Budget (Revised), 1971–72, Voting :

Community Development Projects Public Works —Gratns-in-Aid ... ... ... ... 511–512

RICKSHAW(S)—

Cycle Rickshaw Pullers' Association, requests for abolition of licensing system ... ... ... 22–25

RELIEF FUND—

Chief Minister's State Relief Fund, amount accrued and amount spent ... ... ... ... 19–22

S

SADASIVAM, THIRU S.—

Budget (Revised), 1971–72, Voting :

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 253–256

SADIQ PASHA, THIRU S. J.—

Budget (Revised), 1971–72, Voting :

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 38, 39, 40, 41, 88–89, 273, 288–304

PAGES

S—*cont.*

SAMPATH, THIRU T. V.—

Budget (Revised), 1971-72, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 262–263

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Central Government Employees at Madras, demonstration ... ... ... ... ... ... 16–18
Government Press, visit of Minister for Labour .. 326
Kudumiamalai Agricultural Research Station, details ... ... ... ... ... ... 205–209
Police Department, Blood Donation Scheme ... 475–478
Primary Health Centre, Namakkal, construction of building ... ... ... ... ... ... 209–210

SARATHY, THIRU M. P.—

Government Press, starting in each district ... 478–482

SELVARAJ, THIRU M.—

Budget (Revised), 1971-72, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 243–245

SIRAIMEETTAN, THIRU I. K.—

Budget (Revised), 1971-72, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 73–75



PAGES

S—*cont.*

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Government Press, starting in each district ... 478–482
Island grounds, objection to use—by Defence Department ... ... ... ... ... 324–326

SONIAH, THIRU T.—

Budget (Revised), 1971-72, Voting:

Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ..
Capital Outlay on Public Health ... ... ... 384–385

SOUNDARAPANDIAN, THIRU P.—

Budget (Revised), 1971-72, Voting:

Community Development Projects Public Works —Grants-in-Aid .. ... ... ... 521–523

SRINIVASAN, THIRU T. P.—

Budget (Revised), 1971-72, Voting:

Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 380–382

STATUES—

Foreigners' statues in Madras City, removal ... 213–218
Madras City, sanction of Police guards ... ... 218–220

STUDENTS—

Assault at Washermanpet ... ... ... ... 478

SUBBIAH, THIRU A. K.—

Budget (Revised), 1971-72, Voting:

Community Development Projects, Public Works —Grants-in-Aid ... ... ... ... 509–510
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ..
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 39, 42–46

PAGES.

S—*cont.*

SUBBIAH, THIRU A. R.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ..
Capital Outlay on Public Works ... ... ... 87–88, 89–90

SUBRAMANIAM, THIRU A.—
Budget (Revised), 1971–72, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 40, 41
Medical ... ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ...
Public Health ... ... ... ... ... 339, 365–367

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget (Revised), 1971–72, Voting :
Community Development Projects, Public Works —Grants-in-Aid ... ... ... ... 512–513

SUBRAMANIAM, THIRU V.—
Budget (Revised), 1971–72, Voting—*cont.* :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...
270–272

SUGAR—
**Co-operative Sugar Mill, establishment at Perur** ... **4–9**
**Mills, North Arcot district** ... ... ... ... **9–4**



PAGES

S—*cont.*

SUPPU, THIRU K.—
**Budget (Revised), 1971–72, voting :**
Community Development Projects—Public Works —Grants-in-aid ... ... ... ... 502
Medical ... ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... ... 339, 377–380

SURENDRAN, THIRU M.—
Budget (Revised), 1971–72, voting :
Community Development Projects, Public Works—Grants-in-aid ... ... ... 515–517
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 38–39

SURULIVEL, THIRU M.—
Budget (Revised), 1971–72, voting :
Community Development Projects, Public Works —Grants-in-Aid ... ... ... ... 528–530

SWAMIDHAS, THIRU A.—
Atomic Team from Japan, visit ... ... ... 492–496
Budget (Revised), 1971–72, voting :
Community Development Projects, Public Works —Grants-in-aid ... ... ... ... 501–565
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 39, 75–79
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ...
Capital Outlay on Public Health ... ... 340, 382–383

PAGES

S—*cont.*

SWAMIDHAS, THIRU A.—*cont.*

Cycle Rickshaw Pullers' Association, request for abolition of licensing system ... ... ... 22–25

Island grounds, objection to use—by Defence Department ... ... ... ... ... 324–326

T

TAXES—

Purchase tax on human hair ... ... ... 484–485

TEMPLES—

Sri Murugan Temple at Mettur, demolition ... 318–329

Subramaniyaswamy Temple, Tiruchendur ... 331–333

THANGAMANI, THIRU K. T. K.—

Budget (Revised), 1971–72, Voting:

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ... ... 38, 40, 41, 282–288

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ... 339

Capital Outlay on Public Health ... ... ...

Ennore Thermal Boiler construction, denial of employment and non-payment of salary to workers (C.A.) ... ... ... ... ... 333–335

Khadi Board Workers, suspension ... ... 327–328

Mills at Madurai, heavy lay off and threatened closure of one shift (C.A.) ... ... ... 335–336

Police interference and lathi charge on striking workers of Coimbatore Chandra Mill (A.M.) ... 35–36

Road Transport Wage Board, recommendations ... 482–484

Sankari Cement Factory, attack on women workers (A.M.) ... ... ... ... ... ... 32–33

THOPPUR THIRUVENGADAM, THIRU—

Sugar Mills, North Arcot district ... ... ... 3–4



PAGES

T—*cont.*

TRANSPORT—

Bus route permits to private operators during 1967–71 touching Tiruppur Town, number issued ... 230–233

Road Transport Wage Board, recommendations ... 482–484

U

UNIVERSITY—

Agricultural University, election to Board of Management (Ann.) ... ... ... 233–234

Agricultural University, election to Board of Management (M) ... ... ... ... 233

V.

VADIVELU, THIRU S.—

Puthur Srinivasa Subbaraya Polytechnic near Sirkali, taking over by Government ... ... 224–225

VEERASAMY, THIRU N.—

Government Press, starting in each district ... 478–482

VELLADURAI, THIRU A.—

Budget (Revised), 1971–72, voting:

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ... 83–85

VENKATASAMY, THIRU B.—

Dry-farming in Hosur, starting ... ... ... 225–226

Kothawal Market, shifting ... ... ... ... 223–224

Wine factory, Dharmapuri district ... ... 1–2

VEZHAVENDAN, THIRU K.—

Budget (Revised), 1971–72, voting:

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ... 46–50

PAGES

W

WAHAB, THIRU K. A.—

Budget (Revised), 1971–72, voting:

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Capital Outlay on Public Health ... ... 358–360

Handicrafts Marketing Co-operative Society, appointment of officials as Directors ... ... 12–13

Wakf Board, dissolution and reconstitution ... 486–489

Wakf Board, utilisation of funds ... ... ... 489–492

Waste lands, reclamation ... ... ... ... 329–331

WAKF BOARD—

Dissolution and reconstitution ... ... ... 486–489

Utilisation of funds ... ... ... ... ... 489–492

WATER-SUPPLY—

Scarcity and cholera affected villages, provision of drinking water with UNICEF assistance and sinking of tube wells ... ... ... ... 220–

63259